தமிழ் வெளியிட்டுக் கழக வரிசை எண்—84

இந்தியாவின் பொருளாதார வளர்ச்சி-II

(THE ECONOMIC DEVELOPMENT OF INDIA-II)

ஆசிரியர்

வீரா ஆன்ஸ்ட்டி,

சர் ஏர்னஸ்ட் கேஸல் ரீடர், வாணிகத் துறை,
லண்டன் பல்கலைக் கழகம்.

தமிழாக்கம்

G. சிதம்பரம், M.A., M.Litt.,

விரிவுரையாளர், பொருளாதாரத் துறை,
பச்சையப்பன் கல்லூரி, சென்னை

தமிழ் வெளியீட்டுக் கழகம்
தமிழ்நாடு - அரசாங்கம்
எம். புக்தவ்

பொருளடக்கம்

பக்கம்

13. வெளிநாட்டு வாணிபம், வாணிபக் கைக்கோள் இவற்றின் போக்கு ... 1
14. நிதி அமைப்பும் நிதியியல் நடவடிக்கைகளும் ... 54
15. பாங்கியலும் செலாவணி முறையும் ... 115
16. மக்களின் செழுமை ... 162
17. முடிவுரைகள் ... 218
18. பொருளாதார வளர்ச்சி (1929–1939) ... 244
பின் இணைப்பு G ... 392
அட்டவணைகள் ... 396
துணை நூல்கள் பட்டியல் ... 414
கலைச் சொற்கள் (தமிழ்—ஆங்கிலம்) ... 420
,, (ஆங்கிலம்—தமிழ்) ... 424
பொருள் குறிப்பு அகரவரிசை ... 427

படங்கள்

6. 1864–65-க்குப் பிறகு பிரிட்டிஷ் இந்தியாவின் வாணிபம் ... 3
7. இந்திய வாணிபத்தின் போக்கில் இருந்த மாறுதல்கள் ... 8
8. 1913–14-க்குப் பிறகு பிரிட்டிஷ் இந்தியாவின் இறக்குமதி ஏற்றுமதி வாணிபம் ... 11
9. 1900–1919 காலத்தில், இந்தியாவில் பண்டத் தொகுப்புகளின் விலைக் குறியீட்டு எண்கள் ... 197
10. 1929–30-க்கும் 1938–39-க்கும் இடைக்காலத் தில் பிரிட்டிஷ் இந்தியாவின் இறக்குமதி ஏற்றுமதி வாணிபத்தின் மதிப்பு ... 262
11. 1913–14-க்கும் 1938–39-க்கும் இடைக்காலத் தில் பிரிட்டிஷ் இந்தியாவின் இறக்குமதி ஏற்றுமதி வாணிப அளவின் குறியீட்டு எண்கள் ... 263

பாகம் II

13. வெளிநாட்டு வாணிபம், வாணிபக் கைக்கோள் இவற்றின் போக்கு

§ 1. இந்திய வெளி நாட்டு வாணிபத்தின் இயல்பும் போக்கும்

பத்தொன்பதாம் நூற்றாண்டில் வெளிநாட்டு வாணிபத்தின் போக்கு ; போர்க்காலத்தில் ; 1918 ஆம் ஆண்டுக்குப் பின்னர்—இயல் பிலும் போக்கிலும் அண்மையில் ஏற்பட்ட மாறுதல்களும் இன்றைய நிலைமையும்—இந்தியாவுடனிருந்த பிரிட்டிஷ் வாணிபம் குறைந்ததன் காரணங்கள்—முடிவுகள்—பொன் வெள்ளிக் கட்டிகளில் வாணிபம்—எல்லைப்புற வாணிபம்—கடல் வாணிபம்.

§ 2. வாணிபக் கைக்கோளும் (Commercial Policy) சுங்கவரிக் கொள்கையும்

பத்தொன்பதாம் நூற்றாண்டில் வாணிபக் கைக்கோள் ; தடை யிலா வாணிபக்காலம் ; 1894 ஆம் ஆண்டில் வருவாய்த் தீர்வைகளை (revenue duties) மீண்டும் விதித்தல்—போர்க்காலத்தில் நிதி நடவடிக் கைகள்—போருக்குப்பின் சுங்கவரிகளில மாற்றம்—ஆறு சுங்கவரிப் பட்டியல்கள்—நிதித் தனியாட்சி உரிமை—இந்திய நிதி ஆணைக்கழகம்—'பேதங்காட்டும் தொழிற்காப்பு' முறையைக் கையாளுதல்—சுங்கவரிக் கழகத்தின் வேலை—சுங்கவரிகளில் சிறு மாறுதல்களும், சமனுக்கு ஆயத்தீர்வையும், ஏகாதிபத்திய சலுகை முறையும், ஏற்றுமதித் தீர்வைகளும்—வாணிபப் புலனுய்வு ; இந்திய வாணிப ஆணையாளர் ; வாணியத்தை வளர்க்க மற்ற நடவடிக்கைகள்.

§ 3. வாணிபக் கைக்கோளும் எதிர்காலமும்

சுங்கவரிகளைப்பற்றிய கருத்துவேறுபாடுகள்—இந்தியச் சூழ்நிலை—இந்தியாவின் பொருளாதாரக் குறிக்கோள்—விவசாயத்தையே நம்பி வாழ் வதால் ஏற்படும் கேடுகள்—தடையிலா வாணிபத்தை ஆதரிக்கும் வாதம் ; சிற்றிளந் தொழில்களுக்குப் பாதுகாப்பு—தொழில் வளர்ச்சிக்குத் 'தொழிற் காப்பு'க் கொள்கை வழிகோலாதென்ற முடிவு—சுங்கவரிகளிலிருந்து கிடைக்கும் வருவாயின் முக்கியத்துவமும் தொழில் வளர்ச்சிக்காக அதிகப்படியாகச் செலவிடுவதன் அவசியமும்.

§ 1. இந்திய வெளிநாட்டு வாணிபத்தின் இயல்பும் போக்கும்

பொருளாதார 'மந்தம்' (depression) தோன்றிய 1929ஆம் ஆண்டிற்கு முந்திய காலத்தை, பொருளாதார மாற்றமுள்ள காலமாகக் கருதலாம். இக் காலத்தில், மற்றெல்லாத் துறைகளை யும்விட வெளிநாட்டு வாணிபத்துறையில்

மாறுதல்கள் தோன்றின. பதினைந்தாம் நூற்றாண்டிலேயே வெளி நாட்டு வணிகர்கள் இந்தியாவுடன் தொடர்புகொண்டிருந்தார்கள். ஆனால், இந்த வாணிபத் தொடர்பு நேராக இல்லாதிருந்தது.[1] கிழக்கிந்தியத் தீவுக் கூட்டத்திலிருந்து, ஆங்கிலக் கிழக்கிந்தியக் கம்பெனியார் டச்சுக்காரர்களால் வெளியேற்றப் பட்ட பிறகுதான், மேலைநாடுகளுடன் இந்திய வர்த்தகம் நேரிடையான முறையில் அமைந்தது. இங்கிலாந்தின் 'மெர்க்கன்டலிச'க் (mercantilism) கொள்கை தடையாக இருந்தாலும்,[2] பதினேழாம் நூற்றாண்டின் பிற்பகுதியிலும் பதினெட்டாம் நூற்றாண்டிலும் இந்திய ஏற்றுமதிகளுக்கு இருந்த ஐரோப்பியத் தேவை மிகவும் உயர்ந்தது. ஆனால், இந்திய வெளிநாட்டு வாணிபத்தின் அளவையும்[3] இயல்பையும் முற்றிலும் மாற்றக்கூடிய பெரு மாறுதல்கள் பத்தொன்பதாம் நூற்றாண்டில்தான் தோன்றின. இங்கிலாந்தில் ஏற்பட்ட தொழிற்புரட்சியும், போக்குவரத்துச் சாதனங்களில் ஏற்பட்ட (இந்தியாவிலும் அயல்நாடுகளிலும்) அபிவிருத்தியுமே இம் மாறுதல்களுக்குக் காரணங்களாகும்.


பத்தொன்பதாம் நூற்றாண்டின் இந்திய வெளிநாட்டு வாணிபத்தின் பொதுவான போக்குத் தெளிவானதே. அதைப்பற்றிய சிறிய விளக்கம் இங்குத் தரப்பெறும். ஆனால், 1900-க்குப் பிறகு வாணிபப்போக்குப் பலவகைகளிலும் மாற்றியமைக்கப்பெற்றது என்பதில் கருத்து வேறுபாடு இருக்கிறது. ஆகையால், இக் காலத்தைப்பற்றிய தெளிவான விளக்கம் அவசியமாகும்.


பத்தொன்பதாம் நூற்றாண்டின் தொடக்க காலத்தில், சாயப் பொருள்கள், வெடியுப்பு, நுட்பமான வேலைப்பாடுள்ள பருத்தி, பட்டுத் துணிகள் இவைகளே இந்தியாவின் முக்கிய ஏற்றுமதிகளாக இருந்தன. இவைகளுக்குப் பதிலாகப் பொன், வெள்ளிக் கட்டிகளையும், கம்பளங்களையும், புதுமையான சாமான்களையும், பலவகையான 'செய்வினை முடிந்த பண்டங்களையும்' இந்தியா இறக்குமதி செய்தது. இங்கிலாந்தின் பருத்தி ஆலைத்தொழிலும் இதற்கு முன்னர் நல்ல வளர்ச்சியடைந்திருந்தது. இருபது

[1] ஐரோப்பிய வணிகர்கள் பொன், வெள்ளிக் கட்டிகளையும், சில பண்டங்களையும் இந்தியாவுக்கு ஏற்றிச்சென்று,இந்திய உற்பத்திகளுடன் (குறிப்பாகப் பருத்தி ஆடைகள்) மாற்றிக்கொண்டனர். இவைகளைக் கிழக்கிந்தியத் தீவுகளுக்கு எடுத்துச்சென்று இவற்றிற்குப் பதிலாக வர்சனைத் திரவியங்களை (சீனப் பண்டங்களையும்) வாங்கினர். வாசனைத் திரவியங்களுக்கு ஐரோப்பாவில் உடனடியான தேவையிருந்ததால், அந்நாட்டிற்கு எடுத்துச் சென்று விற்பனை செய்தனர். வாணிபம் இந்த முறையில் இருந்ததால்தான் நேராக இல்லை என்று குறிப்பிடப் பெற்றது.

[2] P.A. Thomas, 'Mercantilism and the East India Trade'.

முப்பது ஆண்டுகளுக்குப் பிறகு இங்கிலாந்தின் பருத்திப் பொருள்கள், ஐரோப்பியச் சந்தையிலிருந்து இந்தியத் துணிகளை அகற்றிய துடன், தூரக்கிழக்குச் சந்தைகளையும் ஆக்கிரமிக்கத் தொடங்கின.





படம் VI.— 1864–65 க்குப்பிறகு பிரிட்டிஷ் இந்தியாவின் வாணிபம்.

(1) தனியார் கணக்கிலும், அரசாங்கக் கணக்கிலும் பண்டங்களின் வாணிபம்.

(2) தனியார் கணக்குமட்டும். இக்காலம் முழுவதிலும் பர்மாவின் வாணிபம் சேர்க்கப்பட்டுள்ளது. Reviews of Trade.

பத்தொன்பதாம் நூற்றாண்டில் ஆலைகளின் உற்பத்தியான பொருள்கள் பலவும் ஒன்றன்பின் ஒன்றாக இந்தியாவில் புகுந்து, உள்நாட்டுக் கைத்தொழிற் பொருள்களை நலியவைத்தன.

இதுவரை, இங்கிலாந்தில் ஏற்பட்ட தொழிற்புரட்சியும், அப் புரட்சியின் ஆரம்ப காலத்தில் போக்குவரத்துச் சாதனங்களில் ஏற்பட்ட அபிவிருத்தியுமே வாணிகத்தைப் பாதிக்கும் முக்கியக் காரணங்களாக இருந்தன. ஆனால், பத்தொன்பதாம் நூற் றாண்டின் பிற்பகுதியில், இந்திய உற்பத்தி முறைகளில் ஏற்பட்ட

மாறுதல்களினால் இந்திய வெளிநாட்டு வாணிபம் அடிப்படையான மாறுதலடைந்தது. இந்திய உற்பத்தி முறைகளில் ஏற்பட்ட மாறுதல்களுக்கு, இரயில்வேக்கள் அபிவிருத்தியடைந்ததும், நீராவிக் கப்பல்கள் உபயோகத்திற்கு வந்ததும், சூயஸ் கால்வாய் திறக்கப்பெற்றதுமே காரணங்களாகும். உணவுப் பண்டங்களையும், தோட்டச் சாகுபடிகளையும் (காப்பி, தேயிலை போன்றவை), மூலப்பொருள்களையும் விற்பனை செய்வதற்காகவும் ஏற்றுமதிச் செய்வதற்காகவும் உற்பத்திசெய்யும் வழக்கம் வளரத் தொடங்கியது. வெகுகாலமாகவே அரிசி குறைந்த அளவில் ஏற்றுமதி செய்யப்பெற்றுவந்தது. ஆனால், இப்பொழுது உலக வாணிபத்தில் அரிசி ஒரு முக்கிய இடம்பெற்றுள்ளது. சூயஸ் கால்வாய் (1869-ல்) திறக்கப் பெற்றது பெரிய அளவில் கோதுமையை ஏற்றுமதி செய்வதற்கு ஏதுவாக இருந்தது. 1880 வாக்கில் இந்திய ஏற்றுமதிகளில் கோதுமை முக்கியப் பொருளாகவும் இருந்தது. தேயிலை, காப்பி, தோல், பதனிட்ட தோல், எண்ணெய் வித்துகள் இவைகளின் ஏற்றுமதியும் விரைவாக வளர்ச்சியடைந்தது.

ஆனால், பருத்தி, சணல் இவைகள் முன்னர் செய்வினை முடிந்த பண்டங்களாக ஏற்றுமதியானதற்குப் பதிலாக இப்பொழுது கச்சாப் பொருள்களாகவே அதிக அளவில் ஏற்றுமதியாயின. 1860-லிருந்து 1869 வரை லங்காஷயரில் ஏற்பட்ட பருத்திப் பஞ்சம் இந்தியப் பஞ்சு ஏற்றுமதியை வெகுவாக ஊக்குவித்ததுடன் பம்பாயில் புதிதாகத் தொடங்கப்பெற்ற பருத்தி ஆலைக்குப் பஞ்சு கிடைக்காத நிலைமையையும் ஏற்படுத்தியது.[1] பம்பாய் ஆலைத்தொழில் சிறிது காலத்தில் மீட்சியுற்று நல்ல வளர்ச்சியும் அடைந்தது. இங்கிலாந்துச் சந்தை இழக்கப்பெற்றாலும், ஐரோப்பாவிலும் ஜப்பானிலும் விற்பனை செய்வதற்குப் புதிய இடங்கள் கண்டுபிடிக்கப்பெற்றதால் கச்சாப் பருத்தியின் ஏற்றுமதி தொடர்ந்து அதிகரித்தது.

ரஷ்யாவின் சணலை[2] டண்டீ (Dundee) நகரம் விற்பனை செய்வது கிரிமியன் போரினால் (Crimean War) தடுக்கப்பெற்றது. இதனால் இந்தியக் கச்சாச் சணல் பெருமளவில் ஏற்றுமதியாயிற்று. 19ஆம் நூற்றாண்டின் இறுதிக் காலத்தில் சணல் பண்டங்களின் ஏற்றுமதி, கச்சாச் சணலைவிடப் பெருமளவில் அதிகமாக இருந்தது. பொன், வெள்ளிக் கட்டிகளின் இறக்குமதியும் முன்னிருந்த

1 [illegible] பருத்தியின் விலை அதிகமாக உயர்ந்ததால் பம்பாய் ஆலைத்தொழில் தாற்காலிக [illegible] வுக்குள்ளாகியது.

2 [illegible] அத்தியாயத்தைப் பார்க்கவும்.

அளவில் தொடர்ந்து இருந்தது.[1] ஆனால், 19ஆம் நூற்றாண்டின் இறுதிக் காலத்தில் செய்வினை முடிந்த பண்டங்களே முக்கிய இறக்குமதிகளாக இருந்தன. பருத்தித் துணிகள், இயந்திரங்கள், ஆலைச் சாதனங்கள், எல்லாவகையான உலோகப் பொருள்கள், மற்றும் பலவகையான சில்லறைச் சாமான்கள் இவைகளே முக்கிய இறக்குமதிகளாக இருந்தன. மாரிஷியஸ் (Mauritius), ஜெர்மனி, ஆஸ்டிரியா இவைகளிலிருந்து சர்க்கரையும், அமெரிக்க ஐக்கிய நாடுகளிலிருந்தும் ருஷ்யாவிலிருந்தும் பெட்ரோலியமும் (முக்கியமாக வெளிச்ச உபயோகத்திற்கு) அதிகமாக இறக்குமதியானது மேலே கூறிய பொது விதிக்கு விலக்காகும். இவ்வாறு இந்தியா பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதிக் காலத்தில் உணவுப் பண்டங்களையும், மூலப்பொருள்களையும், தோட்டச் சாகுபடிகளையும் ஏற்றுமதி செய்யும் நாடாகவும், தேவையான துணிகளில் பெருமளவிற்கும், பல செய்வினை முடிந்த பண்டங்களுக்கும் இறக்குமதியை நம்பிய நாடாகவும் இருந்தது. இந்திய வெளிநாட்டு வாணிபத்தின் அளவு மிகவும் பெருகியது.[2] ஆனால், கலநுட்பமான கைத்தொழில் பொருள்களையும், 'சிறப்புப் பொருள்களையும்' ஏற்றுமதி செய்துவந்த நிலை போய், முன்னேற்றமடைந்த மேனாடுகளுக்குத் தேவையான உணவுப் பொருள்களையும், மூலப்பொருள்களையும் ஏற்றுமதி செய்யும் நாடாக இந்தியா ஆயிற்று.[3]

இந்தியா, மூலப்பொருள்களை உற்பத்தி செய்து, செய்வினை முடிந்த பொருள்களுக்குப் பிற நாடுகளை நம்பி வாழும் தாழ்வான நிலையில், நிரந்தரமாக இருக்க நேரிடும் என்று அரசியல் தலைவர்கள் அஞ்சினர். விவசாயத்தையும், தொழிலையும் சமமாக

1 பொன், வெள்ளி இரண்டையும் பெருமளவில் இந்தியா பல நூற்றாண்டுகளாக இறக்குமதி செய்துவந்தது. இந்தியா, 'விலையுயர்ந்த உலோகங்கள் குவியுமிடம்' என்பது ஒரு பழமொழியாக இருந்தது. பொன், வெள்ளிக் கட்டியின் இறக்குமதியில் பெருமளவு, பயனற்ற முறையில் பதுக்கிவைக்கப்பட்டிருக்கிறது என்றும் கூறப்படுகிறது. இத்தகைய பதுக்கல்கள் ஓரளவுக்கு மிகைப்படுத்தப்பெற்றது (உண்மையில் பதுக்கல்கள் இருந்தன) என்றும் கலைப்பொருள்கள் செயவதற்கும், நாணயமாற்றுக உபயோகிப்பதற்கும் உண்மையில் பெருமளவு தேவைப்பட்டது என்றும் எண்ண இடமிருக்கிறது. (P. P. Pillai, 'Economic Conditions in India', pp. 270–272, 300). கிழக்கிந்தியக் கம்பெனியாருக்கு, இந்தியாவில் உடனடியாக விலையாகும் பொருள்கள் கிடைப்பது கடினமாக இருந்தது. ஆதலால், இறக்குமதிக்கும் ஏற்றுமதிக்கும் உள்ள வித்தியாசத்தை நாணயமாகவோ, பொன், வெள்ளிக் கட்டிகளாகவோ கொடுக்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது. பண்டங்களில் இறக்குமதியைவிட ஏற்றுமதி மிகுதியாக இருக்கும் நிலை 1931–32 வரை தொடங்காதிருந்தது. அதற்குப் பிறகு பொன்னை ஏற்றுமதி செய்ய வேண்டியிருந்தது. (18ஆம் அத்தியாயத்தைப் பார்க்கவும்.)

2 படம் VI-ஐயும், XVI, XVIIஆம் அட்டவணைகளையும் பார்க்கவும்.

3 வாணிபப் போக்கை மாற்றும் அளவுக்கு இந்தியாவின் புதிய ஆலைத் தொழில்கள் ரண்டும் (பருத்தி, சணல்) வளர்ச்சியடைந்திருக்கவில்லை.

வளர்ச்சி செய்வதற்கும், துணியையும் மற்றச் செய்வினை முடிந்த பண்டங்களையும் குறைந்த அளவில் இறக்குமதி செய்வதற்கும் ஏதுவான ஒரு கொள்கையைக் கையாள வேண்டுமென்று அவர்கள் கிளர்ச்சி செய்தனர். அந்நிய அரசாங்கத்தார் கையாண்ட கொள்கை இந்தியாவை, மேனாடுகளின் உற்பத்திகளை விலையாக்க ஒரு வசதியான சந்தையாகவும், அவைகளுக்குத் தேவையான உணவுப் பொருள்களையும் மூலப்பொருள்களையும் விளைவிக்கும் ஒரு மூலமாகவும் ஆக்கும் என்று அவர்கள் கருதினர். இங்கிலாந்துடன் உள்ள அரசியல் தொடர்புதான் இந்திய வாணிபம் நலிந்ததற்கு முக்கியக் காரணம் என்றும் அவர்கள் குற்றஞ்சாட்டினர்.

பத்தொன்பதாம் நூற்றாண்டில் கையாளப்பெற்ற கொள்கையைப் பொறுத்தவரையில் இக் குற்றச்சாட்டுகள் உண்மையானவைதாம். இங்கிலாந்தின் தடையிலா வாணிபக் கொள்கையை (free-trade policy) இந்தியாவுக்கு அனுசரித்ததும், லங்காஷயர் ஆலை முதலாளிகளின் எண்ணத்திற்காகச் சுங்கவரிக் கொள்கையை மாற்றியதும், மேலே விவரிக்கப்பெற்ற மாறுதல்களுக்குக் காரணமாயிருந்தன என்பதில் ஐயமில்லை. ஆனால், நூற்றாண்டின் இறுதிக்காலத்தில் ஆங்கிலேய இந்திய அரசாங்கங்கள் இரண்டினுடைய நோக்கங்களிலும், கொள்கைகளிலும் ஒரு பெரியமாறுதல் ஏற்பட்டது. நாட்டு மக்களின் அறிவு வளர்ச்சியுற்றதால், சமூகப் பொருளாதார வளர்ச்சி வேண்டும் என்ற கடமையுணர்ச்சி தோன்றலாயிற்று. அரசியல் அமைப்புச் சீர்திருத்தங்களையும் நிருவாகச் சீர்திருத்தங்களையும் அரசாங்கம் மேற்கொண்டதும், பஞ்ச நிவாரணத்திற்காகவும் தடுப்புக்காகவும் இரெயில்வேக்களையும், பாசன வசதிகளையும் விரிவுபடுத்தக் கையாளப்பெற்ற நடவடிக்கைகளும் இக் கருத்தை வலியுறுத்துகின்றன. பிரிட்டிஷ் நலன்களைப் பாதுகாப்பதற்காக இந்திய வளப்பொருள்களை நேரிடையாகச் சுரண்டும் எந்த நடவடிக்கையும் நூற்றாண்டின் இறுதிக்காலத்தில் கடும் எதிர்ப்புக்குள்ளாயிருக்கும். ஆனால், ஆக்கமான பொருளாதாரக் கொள்கை ஒன்று இல்லாததால், வாணிப வளர்ச்சியின் போக்கு மாறுதலடையாமல் இருந்தது.

இருபதாம் நூற்றாண்டின் முதல் பதினைந்து ஆண்டுகளில் இந்தியாவின் வெளிநாட்டு வாணிபத்தில் நல்ல செழிப்பு இருந்தது; ஆனால், அதன் இயல்பில் மாற்றம் அதிகமில்லை.[1] இறக்குமதி, ஏற்றுமதி இரண்டும் ஒருமுகமாகவும் விரைவாகவும் அதிக

[1] இக் காலத்தில் பொதுவான விலைமட்டம் உயர்ந்தால் சிறிது தள்ளுபடி செய்ய வேண்டும். ஆனால், வாணிப வளர்ச்சி மற்றவைகளைவிட அதிகமாக இருந்தது.

தன. ஆனல், முன்போலவே மொத்த ஏற்றுமதியின் அளவும் மதிப்பும் இறக்குமதிகளைவிட மிகுதியாக இருந்தன.[1]

இந்தியா இங்கிலாந்துக்கு ஆண்டுதோறும் 'செலுத்துகள்' (payments) செய்யவேண்டியிருந்தது, வேண்டியுமிருக்கிறது. இதற்குப் பதிலாக, எந்தப் 'புலனுகும் இறக்குமதியும் (visible imports) செய்யப்படாததால் இந்தியாவின் ஏற்றுமதிகள் இறக்கு மதிகளைவிட மிகுதியாக இருந்தன. இந்தியாவின் செலுத்துகள் பின்வரும் செலவினங்களால் எழுந்தன. இந்தியாவுக்குக் கடனுகக் கொடுக்கப்பெற்றதும், இந்தியாவில் முதலிடப்பெற்றதுமான தொகையின் வட்டி, கப்பல் கூலி,[2] இந்திய வாணிபத்துக்குச் செய்யப்பெற்ற வாணிபப் பணிகளின் செலவு [ஈட்டுறுதி, தரகு (insurance, brokerage) போன்றவை], இங்கிலாந்துடனுள்ள அரசியல் தொடர்பினுல் ஏற்படும் அரசாங்கச் செலவு.[3] இச் செலுத்துகளுக்குப் பதிலாக இந்தியாவுக்குப் பயன் கிடைத்ததா இல்லையா என்பது தனியாகப் பின் இணைப்பு (எ)-ல் விளக்கப் பெற்றுள்ளது.

இந்தியா மற்ற நாடுகளைவிட இங்கிலாந்துடன் அதிக அளவில் வாணிபத்தைத் தொடர்ந்து செய்துவந்தாலும்,[4] இக் காலத்தில்தான் அமெரிக்க ஐக்கிய நாடுகளும், ஜப்பானும் இந்திய வாணிபத்தில் முதல்முறையாக முக்கியப் பங்குகொள்ள ஆரம்பித்தன. மத்திய ஐரோப்பாவுடனும் இந்தியாவின் வாணிபத் தொடர்பு அதிக அளவில் பெருகியது. இத் தொடர்பினுல் இந்தியாவின் உணவுப் பண்டங்களும், மூலப்பொருள்களும் அதிகமாக ஏற்றுமதி செய்யப்பெற்றன. இதற்குப் பதிலாகக் குறைந்த விலையுள்ள, இந்தியாவிலேயே உற்பத்தி செய்யக்கூடிய பண்டங்கள் இறக்குமதியாயின.[5] இதன் காரணமாக அரசியல் அவநம்பிக்கையும் அதிகரித்தது.


1 இதுதான் இந்தியாவின் 'சாதக வாணிபக் கொடுப்பல் நிலை' (favourable balance of trade) என்றழைக்கப்படுகிறது. 'சாதகம்' என்ற சொல், இறக்கு மதியைவிட ஏற்றுமதி மிகுதியாக இருந்தது என்ற நனித்தன்மையான பொருள்படும். இந்தியாவுக்குச் சாதகமாக இருந்தது என்பதன்று. இந்த நிலை இந்தியா சுதந்திரம் அடைவதற்கு முன்னிருந்தது.

2 இறக்குமதிகளின் மதிப்புக் கப்பல் கூலியை உள்ளடக்கியும் ஏற்றுமதிகளை உள்ளடக்காமலும் இருந்தது.

3 இந்திய அலுவலகச் செலவுகள் (India Office expenses), ஆங்கில அதிகாரிகள் விடுமுறையில் செல்லும்போது ஆகும் செலவு, ஓய்வூதியம் (pensions), பணிக்கொடை (gratuity) போன்றவை.

4 VII ஆம் படத்தைப் பார்க்கவும்.

5 ஜெர்மனி, ஆஸ்டிரியா நாடுகளுக்கு அரிசியையும், எண்ணெய் வித்துகளையும், கச்சாப் பருத்தியையும் இந்தியா அனுப்பியது. அதற்குப் பதிலாக பீட் சர்க்கரையையும், பலவகையான மலிவுப் பண்டங்களையும் (இரும்புச் சாமான்கள், பருத்தித் துணிகள் உள்பட) பெற்றது.



படம் VII.—இந்திய வாணிபத்தின் போக்கில் இருந்த மாறுதல்கள்.

[1] பிரிட்டிஷ் இந்தியாவில் தனியார் கணக்கில் இருந்த பண்ட வாணிபத்தின் அடிப்படையில் (பொன், வெள்ளி, அரசாங்கச் சரக்கு இருப்பு இவைகள் நீங்கலாகவும், ஆனால், மறு ஏற்றுமதி உள்படவும்) இந்த அட்டவணை தயாரிக்கப்பட்டுள்ளது. இந்திய வெளிநாட்டு வாணிபத்தின் பெருமளவும் பிரிட்டிஷ் இந்தியத் துறைமுகங்கள்மூலமாக நடைபெறுவதால் இந்திய வாணிபத்தின் மொத்த அளவும் இதில் அடங்கியுள்ளது எனலாம். ஐந்தாண்டுச் சராசரிகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. 'பிற நாடுகளிலிருந்து' எகிப்து முற்றிலும் நீக்கப்பட்டுள்ளது. சீனு என்பது ஹாங்காங்கை உள்ளடக்கியதன்று. ஹாங்காங்கின் வாணிபம் 'ஆங்கில ஏகாதிபத்தியத்தின் பிற நாடுகள்' என்ற தலைப்பில் சேர்க்கப்பட்டுள்ளது.

போர்க்காலத்தில் வாணிபத்தில் ஏற்பட்ட ஏற்ற இறக் கங்களிலிட (fluctuations) போரிஞல் உண்டான நிரந்தர மாறுதல்களிலேயே இங்கு ஆராய விரும்புவதால், போர்க்காலத்தின் வாணிபப் போக்கை விவரமாக விளக்கவேண்டிய அ வ சி ய மில்லை.[1]

போர் மூண்டதும் வாணிபம் தற்காலிகமாகத் தடைப் பட்டது. எதிரி நாடுகளுடன் வாணிபம் நிறுத்தப்பட்டதால் ஏற்பட்ட நட்டத்திற்கு, இந்தியப் பண்டங்களுக்குப் போரிஞல் தேவை அதிகரித்தது ஓரளவுக்கு ஈடுசெய்தது.[2] சில பண்டங் களுக்கு உடனடியான தேவை இருந்ததாலும், பண்டங்களை அனுப்பக் கப்பல் வசதிகள் குறைந்ததாலும் வாணிபக் கட்டுப் பாடு அவசியமாயிற்று. இக் கட்டுப்பாடு முதலில் இங்கிலாந்து அரசாங்கத்திலிருந்தும், பின்னர் இந்திய அரசாங்கத்திலிருந்தும் ஏற்பட்டது.[3] இக் கட்டுப்பாட்டின் நோக்கங்கள் பின்வருமாறு: உணவுப் பண்டங்களும் போர்க் கருவிகளும் எதிரி நாடுகளுக்குச் செல்வதைத் தடுப்பது; போருக்குத் தேவையான பொருள் களின் உற்பத்தியையும் ஏற்றுமதியையும் ஊக்குவிப்பது; இந்தியாவில் உடனடியாகத் தேவைப்பட்ட பொருள்களின் (நிலக்கரி போன்றவை[4]) ஏற்றுமதியைத் தடுப்பது; இந்தியாவின் தொழில் உற்பத்தியை ஊக்குவிக்கவும் கப்பல் இடத்தைச் சிக்கன மாக்கவும் இறக்குமதிகளைப் பொதுவாகக் குறைப்பது. போர் முடிந்ததும், ஒவ்வொரு பொருளிலிருந்த கட்டுப்பாடும் அவ்வப் போது நீக்கப்பெற்றது.

போரிஞல் ஏற்பட்ட விளைவுகள் பின்வருமாறு: 1914–15-ல் இறக்குமதி, ஏற்றுமதி இரண்டினளவும்[5] வெகுவாகக் குறைந்தன;

[1] S. G. Panandikar, 'Some Aspects of the Economic Consequences of the War for India'.

[2] குறிப்பாகச் சணல், பருத்தித் துணிகள், இரும்பு எஃகுச் சாமான்கள், துத்தநாகம், வெடியுப்பு, கோதுமை போன்றவைகளுக்கு (9ஆம் அத்தியாயத்தைப் பார்க்கவும்).

[3] பிரிட்டிஷ் அரசாங்கம் கப்பல் இடத்தைச் சிக்கனம் செய்தது. சான்றிதழ் (certified) பெற்ற பண்டங்களை மட்டுந்தான் ஐரோப்பாவிற்குக் கொண்டுவர அனு மதித்தது. அவசியம் தேவையான பண்டங்களை இந்தியாவில் வாங்குவதற்கு ஒரு 'கட்டுப்பாட்டு அதிகாரி' (Controller) தனியாக நியமிக்கப்பெற்றார். 'பண்டங்களின் ஏற்றுமதி இறக்குமதிச் சட்டத்தின்' கீழ், வெளிநாட்டு வாணிபத்தையும், சரக்குகளை உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் அனுப்புவதையும் அரசாங்கம் 1916-ல் கட்டுப்பாட்டுக் குள்ளாக்கியது.

[4] 10ஆம் அத்தியாயத்தைப் பார்க்கவும்.

[5] இறக்குமதியையும், ஏற்றுமதியையும் அதற்கு முந்திய ஆண்டு விலையின் அடிப் படையில் மறு கணக்குச் செய்வதன்மூலம், வாணிபத்தின் அளவில் ஏற்பட்ட மாறுதல் மதிப்பிடப்பெற்றது. (Annual Review of the Trade of India) VIIIஆம் படத்தைப் பார்க்கவும்.

ஆனால், 1915–16-லும் 1916–17-லும் ஏற்றுமதிகளின் அளவு 1914–15-லிருந்ததைவிட உயர்ந்தாலும், இறக்குமதிகளின் அளவு குறைந்தது. அதற்குப் பிறகு, போர் முடியும்வரை இறக்குமதி, ஏற்றுமதி இவ்விரண்டின் அளவும் (volume) தொடர்ந்து குறைந்துவந்தது (ஏற்றுமதி இறக்குமதியைவிடச் சிறிது நிலையாக இருந்தாலும்). ரெயில்களிலும் ஆறுகளிலும் ஏற்றிச் செல்லப்பெற்ற சரக்குகளின் அறிவிப்புகள், ரெயில்வே கம்பெனிகளுக்குக் கிடைத்த அதிகப்படியான வருவாய், பதிவு செய்யப்பெற்ற பங்கு முதலீட்டுக் கம்பெனிகளின் (joint stock companies) எண்ணிக்கை இவைகளிலிருந்து உள்நாட்டு வாணிபம் வெகுவாக வளர்ந்தது (குறிப்பாக 1916-க்குப் பிறகு) என்று அறிகிறோம். மொத்த ஏற்றுமதிகளின் மதிப்பில் 'செய்வினை முடிந்த பண்டங்களின்' வீதம் 1913–14-ல் 23·1 சதவீதமிருந்தது. 1917–18-ல் அது 31 சதவீதமாக உயர்ந்தது.[1] இதிலிருந்து இந்தியத் தொழில்கள் எந்த அளவுக்கு ஊக்குவிக்கப்பெற்றது என்பது தெளிவாகிறது. 1918-க்குப் பிறகு இந்த வீதம் குறைந்தது. ஆனால், போருக்குமுன் இருந்த நிலைக்குக் குறையவில்லை. 1938–39-ல் அது 29 சதவீதமாக இருந்தது. இதனால், செய்வினை முடிந்த பண்டங்கள் நிரந்தரமாக அதிக அளவில் ஏற்றுமதியானது என்பது தெரியவருகிறது.[2]


1918–19ஆம் ஆண்டில் வாணிபம் நிலையாக இல்லை. ரூபாயின் நாணயமாற்று மதிப்பில் (exchange value) உண்டான திடீர் ஏற்றம்,[3] முன்னேக்கிய வாணிப பேரங்களை (forward commercial transaction) நிலைகுலைய வைத்தது. 1918ஆம் ஆண்டின் இலையுதிர் காலத்தில், நாடு முழுவதும் பருவமழை தவறியதுடன் நச்சுக்காய்ச்சல் கொள்ளை நோயும் தோன்றியது. போர் நிறுத்த ஒப்பந்தத்தினால் 'ஊக வாணிபம்' (speculation) (ரூபாயின் நாணயமாற்று மதிப்பு உயர்ந்ததால் ஏற்பட்ட) உச்சநிலை அடைந்தது. ஆனால், 1919–20-ல் ஏற்பட்ட 'பொருளாதார வீக்கத்'தினால் (boom) வாணிபம் பழைய நிலையிலேயே இருந்தது. இந்தியாவில் (அயல்நாடுகளில் இருந்ததைப்

[1] அரசாங்கம், தல ஆட்சித்துறை இவைகளின் கடன் பத்திரங்களைவிட ஆலைத் தொழில்களின் கடன் பத்திரங்களின் விலைகள் எங்கும் உயர்ந்தது இங்குக் குறிப்பிட வேண்டும் (Annual Review of the Trade of India, 1917–18).


[2] உற்பத்தியான பண்டங்கள் என்று வகைப்படுத்தியதில் சில மூலப்பொருள்களுக்கும் உற்பத்தியான பொருள்களுக்கும் இடையான நிலையில் உள்ளவை. அவைகள் செய்வினை முடிந்த பண்டங்கள் அல்ல. ஆனால், பாகுபாட்டின் அடிப்படை மாற்றப்பெற்றதால் மேலே கூறிய வகையில் மாறுதல் இருந்தது என்று முடிவுகொள்ளலாம்.

[3] 15ஆம் அத்தியாயத்தைப் பார்க்கவும்.

1913–14க்குப் பிறகு பிரிட்டிஷ் இந்தியாவின்
இறக்குமதி, ஏற்றுமதி வாணிபத்தின் மதிப்பு
(தனியார் வாணிபம்)



1913–14ல் நிலைய விலைகளின் அடிப்படையில்,
பிரிட்டிஷ் இந்தியாவின் இறக்குமதி
ஏற்றுமதி வாணிபத்தின் மதிப்பு(3)
(தனியார் வாணிபம்)



படம் VIII. 1913–14க்குப் பிறகு பிரிட்டிஷ் இந்தியாவின்
இறக்குமதி, ஏற்றுமதி வாணிபம்.

(1) மறு ஏற்றுமதிகள் நீங்கலாக.

(2) தனியார் கணக்கு, அரசாங்கக் கணக்கு இரண்டும் சேர்ந்தது.

(3) 1915–16-க்கும் 1918–19-க்கும் இடைக்கால ஆண்டுகளுக்கு அதிகாரபூர்வமான மதிப்பீடுகள் வெளியிடப்படவில்லை. படத்தில் குறிப்பிட்டுள்ளவை உத்தேசமான வையே. அண்மைக்காலத் துப் புள்ளிவிவரங்கள், 18ஆம் அத்தியாயத்தில் கொடுக்கப் பட்டுள்ளன.

போலவே) 1920ஆம் ஆண்டு மார்ச்சு மாதம் சூழ்நிலை மாறியது. விலைகள் சரியத் தொடங்கின; நாணயமாற்று வீதம் குறைந்தது. ஏற்றுமதிகள் குறைந்தன; 'மந்தமும்' (slump) இடையூறாக நிகழ்ந்தது. புள்ளிவிவரங்கள் உடனே கிடைக்காததால், மந்தத்தின் கொடுமை 1921ஆம் ஆண்டின் முடிவு வரை தெரியவில்லை. மந்தத்திற்கு முன்னர் கட்டளையிடப் பெற்ற இறக்குமதிகள் மந்தம் தோன்றியபின் தொடர்ந்து வந்து கொண்டிருந்தன. ஆகையால், மொத்த வாணிபத்தின் அளவும் மதிப்பும் 1919–20-ல் இருந்ததைவிட, 1920–21-ல் அதிகமாக இருந்தது. 1920–21-லும் பின்னர் 1921–22-லும் இயற்கையான வாணிபக் கொடுப்பல் நிலை (balance of trade), தலைகீழாக மாறியது. ஏற்றுமதிகளைவிட இறக்குமதிகளின் மதிப்பு அதிகமாக இருந்ததுடன் 1920–21ஆம் ஆண்டில் பொன், வெள்ளிக் கட்டி இனங்களில் நிகர ஏற்றுமதியும் இருந்தது.[1] மந்தத்திற்கு முன் (நாணயமாற்று உச்சநிலையிலிருந்தபொழுது) உயர்ந்த விலையில் கட்டளையிடப்பெற்ற இறக்குமதிகள் (குறிப்பாகப் பருத்தித்துணிகள்) பெருமளவில் வந்திறங்கின. வர்த்தகர்களுக்கு இவற்றை இலாபகரமான விலையில் (விலைகளும் நாணயமாற்று வீதமும் இப்பொழுது குறைந்துவிட்டதால்) விற்பதற்கு வழியில்லாததால், இறக்குமதிகள் துறைமுகங்களிலேயே குவியத் தொடங்கின. இறக்குமதியாளர்களில் பலரும் சரக்குகளை எடுத்துக்கொள்ள மறுத்தனர்; தங்களுடைய பொறுப்புகளை மறுதலித்தனர்; தங்களுடைய டிராஃப்டுகளையும் ஏற்க மறுத்தனர்.[2] இறக்குமதியாளர்கள் இவ்வாறு செலுத்த மறுத்த தொகை 1921ஆம் ஆண்டில் 30 மில்லியன் பவுன்கள் என்று கணக்கிடப்பெற்றது.

ஐரோப்பிய பாங்கர்கள், பிரிட்டிஷ் கப்பல் கம்பெனியார்கள், இறக்குமதியாளர்கள், வணிகர்கள், இவர்களின் கூட்டு முயற்சியால் இந்த நெருக்கடி ஒருவாறு சமாளிக்கப்பெற்றது. தேவையில்லாத சரக்குகளை இவர்கள் எடுத்துக்கொண்டனர். மொத்தத்தில், இந்திய வாணிப அமைப்பும் நிதி அமைப்பும் மந்தத்தின் கொடுமையைச் சிறந்த முறையில் எதிர்த்துநின்றன எனலாம்.

[1] VI, VIII படங்களைப் பார்க்கவும். 1922–32-ல் 'வாணிபக் கொடுப்பல் நிலை' பழைய நிலையை அடைந்தது. 1920-ல் மழை குறைந்ததால், ஏற்றுமதிகள் பாதிக்கப் பெற்றன. 1921–22-ல் ஏற்றுமதி உணவுப் பண்டங்களின் உபரியும் குறைந்தது. 1921-ல் ஆஸ்திரேலியாவிலிருந்து 400,000 டன்கள் கோதுமை இறக்குமதி செய்ய வேண்டியிருந்தது.

[2] 'நாணயமாற்றை' 1 ரூ—2 ஷில்லிங் வீதத்தில் நிருவகிப்பதாக அரசாங்கம் வாக்களித்தது. ஆனால், அதை நிறைவேற்றவில்லை என்பதுதான் அவர்களுடைய வாதம் (15ஆம் அத்தியாயத்தைப் பார்க்கவும்).

ஆனல், தேங்கிய சரக்குகளே அப்புறப்படுத்துவதற்கு முன்புதான் இந்த நிலே இருந்தது. அரசியல் கிளர்ச்சி (இக் கிளர்ச்சியால் ஒத்துழையாமை இயக்கம் தோன்றி, பிரிட்டிஷ் பண்டங்கள் கட்டுமானமாக வெறுக்கப்பெற்றன) இருந்த சூழ்நிலேயை மேலும் சிக்கலடையச் செய்தது. அதனுடன், இந்தியப் பண்டங்களே இறுக்குமதி செய்த நாடுகளுக்கு 'வாங்குந் திறனில்லே' (purchasing power). நாணயமாற்று நிலேயாக்கப்பெற்று, ஐரோப்பாவில் போர் இழப்பீடுகள் (war reparations) நிர்ணயிக்கப்பெறும் வரை வாணிபம் பாதிக்கப்பெறும் என்ற கருத்து நிலவியது.

மந்தம் 1920–22ஆம் ஆண்டில் கொடுமையாக இருந்தது. அதற்குப் பின் இந்தியா மீட்சியுற்றது. 1927–28-ல் வாணிபத்தின் அளவு போருக்கு முன்னிருந்ததைவிட அதிகமாக இருந்தது. உலகெங்கும் நிலவிய மந்தத்தின்போது (1929-ல் தோன்றியது) வாணிபத்தின் போக்கில் ஏற்பட்ட மாறுதல்களே 18ஆம் அத்தியாயத்தில் காணலாம்.

தேவையான துணிகளில் பெருமளவுக்கும் (துணித்தேவை போருக்கு முன்னிருந்ததைவிட இப்பொழுது குறைவு) பெரும் பான்மையான இயந்திரங்களுக்கும், இரும்பு, எஃகுச் சாமான்களுக்கும், மற்றும் தொழிலுக்குத் தேவையான பல கருவிகளுக்கும் இந்தியா இனியும் இறக்குமதிகளேத்தான் எதிர்பார்த்திருக்கிறது. பர்மாவின் மண்ணெண்ணெயில் பெரும் பகுதி இந்தியாவிலேயே பயன்படுகிறது. இதையன்றி மண்ணெண்ணெயையும், பெட்ரோலேயும், சர்க்கரையையும் தொடர்ந்து இறக்குமதி செய்து வருகிறது. இந்தியா இறக்குமதிகளின் இயல்பில் ஏதாவது மாறுதல் இருந்தால், அம் மாறுதல் பத்தொன்பதாம் நூற்றாண்டில் ஏற்பட்டதற்கு நேர்மாறுனதாக இருந்தது என்பது இங்குக் குறிப்பிடவேண்டும். எடுத்துக்காட்டாக, போருக்கு முன்னர் மொத்த இறக்குமதிகளில் செய்வினே முடிந்த பண்டங்கள் 76·6 சதவீதம் இருந்தது; ஆனல், 1938–39-ல் இவைகள் 62·0 சதவீதம்தான் இருந்தன. செய்வினே முடிந்த பண்டங்களின் இறக்குமதிகளில் பலவும், உயர்ந்த எண்ணிக்கையுள்ள நூல், சிறந்த தரமுள்ள ஆலேத் துணிகள், இயந்திரங்கள், ஆலேத் தொழிற்கருவிகள், இரெயில்வே தளவாடங்கள், பலவகையான உலோக உற்பத்திகள் போன்று இந்தியாவில் உற்பத்தி செய்ய முடியாதவைகளாகவே இருந்தன.[1] தொழிற்காப்புத் தீர்வைகள்

[1] போர்க்காலத்தில் இயற்கையான இறக்குமதிகள் தடைப்பட்டதால், இந்தியா சில பொருள்கள் இல்லாமல் காலங்கழிக்கவேண்டியிருந்தது; அல்லது ஜப்பான் அமெரிக்க ஐக்கிய நாடுகள் போன்ற புதிய நாடுகளிலிருந்து தருவிக்கவேண்டியிருந்தது. இதிலிருந்து பல பண்டங்களே இந்தியாவால் உற்பத்தி செய்ய முடியவில்லே என்பது தெளிவாகிறது.

(protective duties) விதிக்கப்படுவதற்கு முன்னருங்கூட, இறக்கு மதிகளுடன் உள்நாட்டு உற்பத்திகள் போட்டியிட நேரிட்டதால், உள்நாட்டு உற்பத்திகளே இலாபமடைந்தன. எடுத்துக் காட்டாக, இந்தியப் பருத்தி ஆலைத் தொழிலும், இரும்பு எஃகுத் தொழிலும் நல்ல வளர்ச்சியடைந்தன. செய்வினை முடியாத முக்கியப் பண்டங்களின் இறக்குமதி, இந்திய உற்பத்திகளுடன் போட்டியிட வருவதில்லை. இப் பண்டங்களில் உள்ள பற்றாக் குறையைப் பூர்த்தி செய்யவே இறக்குமதியாகின்றன.

செய்வினை முடிந்த பண்டங்களின் ஏற்றுமதியில் இருந்த உயர்வு, இந்திய ஏற்றுமதிகளில் ஏற்பட்ட குறிப்பிடத்தக்க மாறுதலாகும்.[1] சணல், தோல், கம்பளம், உலோகங்கள், தாவர எண்ணெய் இவைகளில் செய்வினை முடிந்த பண்டங்களின் ஏற்றுமதி மிகவும் உயர்ந்தது. மெழுகு வகை, மிகனேட் (micanite), மோனசைட் (monazite) இவைகளின் ஏற்றுமதியும் அதிகரித்தது.

பருத்தி நூல், சாய வகைகள், கச்சாப் பட்டு, பட்டுத் துணி இவைகளில்தான் முக்கியமாக ஏற்றுமதிகள் குறைந்தன. இந்தியப் பருத்தி நூலுக்கும், முறுக்கிய நூலுக்கும் வெளி நாடுகளில் ஜப்பானுடைய போட்டி எழுந்தது. செயற்கைச் சாயங்கள் கையாளப்பெற்றதால் இந்தியச் சாயங்களுக்குத்தேவை குறைந்தது. கச்சாப் பட்டு, பட்டுத் துணிகள் இவைகளின் தரம் நம்பிக்கையானதாக இல்லாததால் அவைகளின் ஏற்றுமதிகள் குறைந்தன. சீனாவுடன் வாணிபத் தொடர்பு வேண்டுமென்றே குறைக்கப்பெற்றதால் அபின் ஏற்றுமதியும் வெகுவாகக் குறைந்தது.[2] இவ்வாறு மேற்கூறிய ஒவ்வொரு பொருளும் ஒவ்வொரு முக்கியக் காரணத்தால் பாதிக்கப்பெற்றது. ஆனால், இந்திய முக்கியப் பொருள்களே விலையாக்குவதில் (வெளிநாடுகளில்) 1929ஆம் ஆண்டுவரை எவ்வித இடையூறும் இல்லை. இந்தியப் பேரளவுத் தொழில்கள்[3] (large-scale industries) உள்நாட்டுச் சந்தையையே நம்பியிருந்தாலும், இவற்றின் செய்வினை முடிந்த பண்டங்களின் ஏற்றுமதியும் நல்ல முன்னேற்றமடைந்தது. இருப்பினும், இந்திய ஏற்றுமதி வாணிபம் சிலவகைகளில் திருப்திகரமாக இல்லை. எடுத்துக்காட்டாக, தோல், பதனிட்ட தோல்[4] போன்ற பல பொருள்களும், கச்சாப் பொருள்களாகவே

1 XVII ஆம் அட்டவணையைப் பார்க்கவும்.

2 14ஆம் அத்தியாயத்தைப் பார்க்கவும்.

3 பருத்தி, இரும்பு, எஃகு, ரசாயனம், தோல், சிமிட்டித் தொழில்கள் போன்றவை.

4 தோல் ஏற்றுமதி ஓர் ஆண்டில் அதிகமாக இருந்தால், அந்த ஆண்டில் அறுவடை குறைவாயிருந்தது என்பதற்கு அறிகுறியாகும். தீவனம் இல்லாததால் கால்நடைகள் கொல்லப்பெற்றன.

ஏற்றுமதியாகின்றன. இதற்குப் பதிலாக, இவைகளிலிருந்து, செய்வீனை முடிந்த பண்டங்கள் தயாரித்து ஏற்றுமதி செய்யலாம். எண்ணெய் வித்துகளை ஏற்றுமதி செய்வதால் இந்தியாவுக்கு மிகவும் அவசியமான தாவர எண்ணெயும், கால்நடைத் தீவனங்களும், செயற்கை உரங்களும் கிடைக்காமல் போகின்றன. ஆதலால், இத்தகைய பொருள்களை ஏற்றுமதி செய்வது தவறாகும்.

ஆனால், உணவுத் தானியங்களைப் பெருமளவில் ஏற்றுமதி செய்வதைக் கண்டிப்பது[1] பொருந்தாததாகும்.[2] உணவுத் தானியங்கள் ஏற்றுமதியாவதால், மழையில்லாத ஆண்டுகளில் அவசியமில்லாமல் விலை உயர்கிறது என்றும், மழையுள்ள ஆண்டுகளிலும்கூட இடையிலுள்ளவர்கள் இலாபமடைகிறார்களே அன்றிக் குடியானவர்கள் பயனடைவதில்லை என்றும் நகர்ப்புற வாசிகள் கருதினர். ஆனால், மொத்த உணவு உற்பத்தியில் ஏற்றுமதியின் அளவு மிகக்குறைவாக இருந்தாலும், அதைத் தடை செய்வது, விவசாயிகளுக்கு அதன்மூலம் கிடைக்கும் இலாபத்தை இல்லாமற்செய்கிறது. அப்படித் தடை செய்வதால் நாட்டிற்குள் கிடைக்கக்கூடிய உணவுப் பொருள்களின் அளவு அதிகரிக்காது என்றும் விவசாயிகள் கருதினர். உணவுப் பண்டங்களின் ஏற்றுமதி தடை செய்யப்பெற்றால், விவசாயிகள் தங்களுடைய நிலங்களில் உணவுத் தானியங்களைக் குறைத்துக்கொண்டு, அதற்குப் பதிலாகப் பருத்தி போன்ற வர்த்தகப் பயிர்களை (commercial crops) சாகுபடி செய்யத் தொடங்குவார்கள். மழையுள்ள காலத்தில் ஏற்றுமதிமூலம் கிடைக்கும் இலாபம் விவசாயிகளுக்கு மழையில்லாத காலத்தில் சமாளிக்க உதவுகிறது. ஏற்றுமதியினால் இடையிலுள்ளவர்கள் பயனடைகிறார்கள் என்பது உண்மையென்றாலும், அதில் ஒரு சிறிதளவாவது குடியானவர்களுக்குக் கிடைக்காமல் போகாது. உணவுத் தானியங்களின் உற்பத்தி ஊக்குவிக்கப்பெறுவதால் 'நுகர்வோர்களும்' (consumer) பயனடைகிறார்கள். இக் காரணங்களால் சாதாரண ஆண்டுகளில் உணவு ஏற்றுமதி செய்வது பயனுடையதாகும். பற்றாக்குறையான காலங்களில், பாதிக்கப்பெற்ற தொகுதிகளில் பயிர்கள் மாற்றம் பெறும். ஆதலால் 'தடையில்லாப் போட்டி' (free

[1] இந்தியாவின் உணவு உற்பத்தி அனைத்தும் இந்தியாவிலேயே தேவைப்படுவதால், உணவுத் தானியங்கள் ஏற்றுமதி செய்வதை முழுதும் தடைசெய்ய வேண்டுமென்று யோசனை தரப்பெற்றது. (E. L. Price, 'Indian Legislative Economics')

[2] பருவமழை உள்ள ஓர் ஆண்டில் 70-லிருந்து 80 மில்லியன் டன் உணவுத் தானியங்களை இந்தியா உற்பத்தி செய்தது. அவற்றில் நான்கு மில்லியன் டன் (இரண்டு மில்லியன் டன் அரிசி, ஒரு மில்லியன் டன் கோதுமை, மற்றத் தானியங்கள் ஒரு மில்லியன் டன்) ஏற்றுமதி செய்தது. பர்மாவிலிருந்து வந்த அரிசியே, பெரும்பான்மையும் ஏற்றுமதியாயிற்று. பற்றாக்குறையுள்ள ஆண்டில் இந்த அரிசி உள்நாட்டுத் தேவைக்குப் பயன்பெற்றது.

competition) கூட நிலவினால், பற்றாக்குறையுள்ள காலத்திலும் ஏற்றுமதியைத் தடைசெய்வது அவசியமற்ற ஒன்றாகும். தற்போதைய முறையில் ஏற்றுமதியாளர்களும் பெரிய வர்த்தகர்களும் சிறு வர்த்தகர்களுக்கும்; சிறு வர்த்தகர்கள் குடியானவர்களுக்கும் முன் பணம் கொடுக்கிறார்கள். இந்த முறையினால் மழையில்லாத ஆண்டுகளிலும் உணவுத் தானியங்கள் ஏற்றுமதியாகின்றன. ஆகையால், பற்றாக்குறையுள்ள ஆண்டுகளில்,[1] அரசாங்கம் உணவுத் தானியங்களின் ஏற்றுமதியைத் தடை செய்ய வேண்டும் அல்லது மட்டுப்படுத்தவாவது வேண்டும். அப்படிச் செய்தால் அரசாங்கத்தின் கொள்கை போற்றத்தக்கதாயிருக்கும்.

கடந்த காலத்தில் நாட்டின் சில பகுதிகளில்மட்டுமே கோதுமை ஒரு முக்கிய உணவுப் பொருளாக இருந்ததால், கோதுமையை ஏற்றுமதி செய்வதற்கு வலுவான காரணங்கள் இருந்தன. விலை குறைவான, ஆனால், தரக்குறைவில்லாத அரிசி, கம்பு, கேழ்வரகு, சோளம் போன்ற தானியங்களை உணவுக்காக வைத்துக்கொண்டு, கோதுமையை ஏற்றுமதி செய்வதால் இந்தியாவுக்கு இலாபமாகவே இருக்கும். ஆனால், தற்காலத்தில் இந்தியாவின் பல பகுதிகளிலும் கோதுமை உணவாகப் பயன்படுவதால், கோதுமையை இறக்குமதி செய்யவேண்டியிருக்கிறது. நல்ல பருவ மழையுள்ள காலத்தில்தான் கோதுமையைப் பெருமளவில் ஏற்றுமதி செய்யமுடிகிறது.[2] முக்கிய உணவுத் தானியங்கள், தேயிலை இவைகளை இந்தியா போருக்கு முன்னிருந்ததைவிட இப்பொழுது அதிக அளவில் உபயோகிக்கிறது. ஆனால், மூலப் பொருள்களின் நுகர்வு உயரவில்லை. இவ்வுண்மையைப் பின்வரும் பட்டியலிலிருந்து அறியலாம். சீன-ஜப்பான் போர்க்காலத்தைத் தவிர மற்ற ஆண்டுகளில், மொத்த ஏற்றுமதிகளில் கச்சாப் பருத்தி, சணல் இவைகளின் வீதம் உயர்ந்தது. இந்தியாவின் சிறப்புப் பொருள்களுக்கு (குறிப்பாகப் பருத்தி, சணல், தேயிலை) வெளிநாட்டுத் தேவை எப்பொழுதும் இருக்கும் என்று கொள்ளலாம்.

மொத்த ஏற்றுமதியில் உணவுத் தானியங்களின் விகிதம் போர்க்காலத்தில் மிகவும் குறைந்திருந்ததை இங்குக் குறிப்பிட வேண்டும். இவ் விகிதம் போருக்குப்பின் அதிகரித்தாலும்

1 1918-க்கும் 1922ஆம் ஆண்டுக்கும் இடைக்காலத்தில் செய்ததைப் போல.

2 1921ஆம் ஆண்டில்தான் முதன்முறையாகக் கோதுமை பெருமளவில் இறக்குமதியாயிற்று. 1921–22, 1928–29, 1931–32, 1932–33 இவ்வாண்டுகளில் கோதுமையில் நிகர இறக்குமதியிருந்தது. ஆனால், 1937–38, 1938–39 இவ்வாண்டுகளில் நிகர ஏற்றுமதி அதிகமாக இருந்தது.

போருக்கு முன்னிருந்த நிலையை அடையவில்லை. இதுவரை உள் நாட்டு உற்பத்திப் பொருள்களிலொன்றாக இருந்த அரிசி, பர்மா பிரிவினைக்குப்பிறகு இறக்குமதி இனமாக ஆகிவிட்டது. இதனால். உணவுப்பண்டங்களை நிகர ஏற்றுமதி (net export) செய்து வந்த இந்தியா, இப்பொழுது நிகர இறக்குமதியாகச் செய்யவேண்டிய நிலையை அடைந்துள்ளது. ஆனால், பர்மா பிரிவினைப் பட்டியலி லுள்ள இனங்களில் அரிசியைத் தவிர மற்றவைகளை பாதிக்க வில்லை. இந்தியா பல ஆண்டுகளாகச் சிறிதளவு அரிசியை ஏற்றுமதி செய்துவந்தாலும், இதைவிட அதிகமான அளவை (ஆண்டுக்கு ஒரு டன்னிலிருந்து இரண்டு டன்கள்வரை) பர்மாவிலிருந்து இறக்குமதி செய்யவேண்டியிருந்தது. பட்டியல் இவ் வுண்மையை அறிவிக்காததால் தெளிவற்றதாகும். மக்கட் பெருக்கம், நுகர் வில் (consumption) உயர்வு, பர்மா பிரிவினை ஆகிய இக் காரணங் களால் உணவுத் தானியங்களை நிகர ஏற்றுமதி செய்யும் நாடாக இருந்த இந்தியாவின் நிலை மாறியது. மக்களுக்குச் சாதாரண

மொத்த உற்பத்தியின் சதவீதம்[1]

பயிர்கள்	போருக்கு முன் 1 சராசரி	போர்க் காலத்தில் சராசரி	போரின் பிற்காலத்தில் சராசரி	1925–26; 1929–30-ல் சராசரி	1930–31; 1934–35-ல் சராசரி	1935–36 சராசரி	1937–38 சராசரி 2
அரிசி	9	5	5	7	6	5	0·9
கோதுமை ...	14	9	3	2	0·5	0·1	4
ஆளிவிதை ...	73	63	59	60	53	43	49
கடுகு	23	8	19	9	6	2	3
எள்ளு	25	8	6	5	2	0·2	2
வேர்க்கடலை ...	35	12	19	23	21	19	17
தேயிலை	96	89	95	90	86	78	77
கச்சாப் பருத்தி ...	56	51	61	65	61	57	47
கச்சாச் சணல் ...	51	31	48	45	49	60	62

[1] Annual Reviews of the Trade of India-விலிருந்து தொகுக்கப்பெற்றது.

[2] பர்மா பிரிவினையான பிறகு.

உணவை அளிப்பதற்கு பர்மாவிலிருந்து அரிசியை இறக்குமதி செய்யவேண்டியிருக்கிறது. இதுதான் இன்றைய உண்மையான நிலவரமாகும். மக்கள்தொகை இதே வேகத்தில் அதிகரித்தாலும் அல்லது மக்களின் வாழ்க்கைத்தரம் உயர்த்தப்பெற வேண்டுமானாலும் இந்தியாவின் உணவுப் பொருள்களை, உள்நாட்டின் உற்பத்திமூலமாகவோ அல்லது இறக்குமதி மூலமாகவோ உடனடியாக அதிகரிக்கவேண்டும்.

இந்திய வாணிபத்தின் இயல்பைவிட அதன் போக்கு (direction), சமீபகாலத்தில் அடிப்படையான மாறுதலடைந்துள்ளது.[1] ஜெர்மனி, ஆஸ்டிரியா, ஹங்கேரி, ஜப்பான், அமெரிக்க ஐக்கிய நாடுகள் இவைகளுடன் அதிகப்படியான வாணிபம்; சைனா,[2] ருஷ்யா இவைகளுடன் குறைந்த வாணிபம். இவைகளே 1900-க்கும் 1914-க்கும் இடையே ஏற்பட்ட இந்திய வாணிபத்தின் சிறப்புகளாம். 1914ஆம் ஆண்டுக்குப்பின் இந்திய வாணிபத்தின் சிறப்பியல்புகள் பின்வருமாறு: இந்திய வாணிபத்தில் ஜப்பான், அமெரிக்க ஐக்கிய நாடுகள் இவைகளின் பங்கு அதிகரித்தது; இங்கிலாந்து, சைனா,[3] ஹாங்காங், ஃபிரான்சு; இவைகளின் பங்குகளில் மாறுதல்கள் ஏற்பட்டன; ஜெர்மனியுடன் நடந்த வாணிபம் போர்க்காலத்தில் குறைந்து, பின்னர் மீட்சியுற்றது. இந்தியாவுக்குப் பொருள்களை ஏற்றுமதி செய்யும் முக்கிய நாடுகள், இங்கிலாந்து (முன்னிருந்ததைவிட இப்பொழுது குறைவாக இருந்தாலும்,)[4] ஜப்பான், ஜெர்மனி, அமெரிக்க ஐக்கிய நாடுகள், இத்தாலி இவைகள் ஆகும். இங்கிலாந்திலும், ஜப்பானிலும், அமெரிக்க ஐக்கிய நாடுகளிலும், ஜெர்மனியிலும், ஃபிரான்சிலும், இத்தாலியிலும் இந்தியப் பண்டங்கள் நல்ல விற்பனையாயின.

வெவ்வேறு நாடுகளுடன் இந்தியர் கொண்டுள்ள வாணிபத் தொடர்பு, இந்தியாவின் தன்னிறைவு நிலைமையும் (self-sufficiency) தொழில் வளர்ச்சியும் வெவ்வேறு அளவுகளில்

[1] VII ஆம் படத்தைப் பார்க்கவும்.

[2] VII ஆம் படத்தில். ஹாங்காங்குடன் இருந்த வாணிபம், 'மற்றப் பேரரசு நாடுகளுடன்' இருந்த வாணிபத்தில் இணைக்கப்பெற்றுள்ளது. ஆகையால், இந்திய-சீன வாணிபம் எந்த அளவுக்குக் குறைந்தது என்று இப் படத்திலிருந்து அறிய முடியாது.

[3] சைனா, ஹாங்காங், ஃபிரான்சு இவைகளுடனிருந்த வாணிபம் குறைந்தது. இங்கிலாந்துடனிருந்த வாணிபமும் 1914-லிருந்து மிகவும் குறைந்தது. ஆனால், ஒட்டாவா (Ottawa) ஒப்பந்தத்திற்குப் பிறகு மீட்சியுற்றது.

[4] பிரிட்டிஷ் பண்டங்களுக்கு இந்தியா ஒரு சிறந்த சந்தையாகவே இன்னும் இருக்கிறது.

பாதிக்கிறது. இக் கண்ணோட்டத்தில் நோக்கினால், இந்திய-இங்கிலாந்தின் வாணிபத் தொடர் மிகவும் விரும்பத்தக்கதாயுள்ளது. காரணம், இங்கிலாந்திலிருந்து இறக்குமதியாகும் பல பண்டங்களும், இந்திய உற்பத்திகளுடன் போட்டியிடுவதில்லை என்பதுடன் இந்தியாவின் தொழில் வளர்ச்சிக்குத் தேவையாகவும் இருக்கின்றன. அப்படிப் போட்டியிருந்தாலும், இந்தியப் பண்டங்களே இலாபமடைகின்றன. மேலும், இந்திய உற்பத்திகளில் பலவும், வருவாய்த் தீர்வைகள் (revenue duties) மூலமாகவோ அல்லது 'தொழிற்காப்புத் தீர்வைகள்' மூலமாகவோ உதவி பெறுகின்றன. வாழ்க்கைக்கு இன்றியமையாத உணவுப் பொருள்களும்,[1] உள் நாட்டிலேயே பயன்படக்கூடிய மூலப் பொருள்களும் இந்தியாவிலிருந்து இங்கிலாந்துக்கு ஏற்றுமதியாவதில்லை இந்தியாவிலிருந்து ஏற்றுமதியாகும் தோல், பதனிட்ட தோல் இவற்றின் பெருமளவை இங்கிலாந்து இறக்குமதி செய்கிறது.[2] இந்தியத் தாவர எண்ணெய்க்கும் முக்கிய இறக்குமதி நாடாகவும் இருக்கிறது. இந்திய ஏற்றுமதிகளின் இங்கிலாந்தின் பங்கு, போருக்கு முன்னிருந்ததைவிட ஒட்டாவா ஒப்பந்தத்திற்குப் பிறகு (1932-ல்) அதிகரித்தது.

இதே காரணத்தினால் பிரிட்டிஷ் பேரரசின் மற்ற நாடுகளுடன் உள்ள இந்திய வாணிபத் தொடர்பும் மிகவும் விரும்பத்தக்கதாயுள்ளது. ஆனால், இவ் வாணிபத்தின் அளவு மிகவும் குறைவாகவே இருந்தது. உற்பத்தியாகும் பொருள்களில் (பருத்தி, சணல், பொருள்கள் முக்கியமாகவும்), தேயிலை, சிறிதளவு அரிசி, சாயங்கள், தாவர எண்ணெய்கள் இவைகளையும் இந்தியா டொமினியன் நாடுகளுக்கு அனுப்புகிறது. இதற்குப் பதிலாக மோட்டார்கார்கள் போன்ற உற்பத்தியான பொருள்களையும், இரயில்வே தளவாடங்களையும் (ஆஸ்திரேலியாவிலிருந்தும் கானடாவிலிருந்தும்), நிலக்கரியையும் (தென் ஆஃப்பிரிக்காவிலிருந்தும் ஆஸ்திரேலியாவிருந்தும்) இந்தியா பெறுகிறது. வெப்பமண்டல நாடுகளுக்கு (சிலோன், மலேயா, கென்யா போன்றவை) அரிசி, பருத்தித் துணிகள், சணல் பண்டங்கள் இவைகளை இந்தியா அனுப்புகிறது. இதற்குப் பதிலாக இந்த நாடுகளிலிருந்து

[1] அரிசி போன்றவை. இங்கிலாந்துக்கு அரிசி ஏற்றுமதியாவதில்லை. இங்கிலாந்துக்கு ஏற்றுமதியானவைகளில் கோதுமை ஒரு முக்கிய உணவுப்பொருளாக இருந்தது.

[2] 1926–27-ல், பதனிட்ட மாட்டுத்தோலின் மொத்த ஏற்றுமதியில் 97 சதவீதத்திற்குக் குறைவில்லாமலும், பதனிட்ட ஆட்டுத்தோல் 81 சதவீதமும் இங்கிலாந்துக்கு ஏற்றுமதியாயின.

சில சிறப்புப் பொருள்களைப் (உகாண்டா பருத்தி போன்ற மூலப் பொருள்களையே) பெறுகிறது. ஜாவாவிலிருந்து மிகுதியான சர்க்கரையை இறக்குமதி செய்கிறது. மற்ற வகையில் இந்தியா-ஜாவா வாணிபத் தொடர்பு, ஆங்கிலேயக் குடியேற்ற வெப்ப நாடுகளுடன் இருந்ததைப்போலவே இருந்துவந்தது. இந்தியா இன்று தனக்குத் தேவையான சர்க்கரையைத் தானே உற்பத்தி செய்துகொள்கிறது.

அமெரிக்க ஐக்கிய நாடுகளுடன் நடைபெற்ற வாணிபமும், ஏறக்குறைய டொமினியன் நாடுகளுடன் இருந்ததைப்போலவே இருந்தது. அமெரிக்காவிலிருந்து இறக்குமதியான முக்கியப் பண்டங்கள். உலோகப் பொருள்களுக்கான எண்ணெய்,[1] இயந்திரங்கள், மோட்டார்கார்கள், இரும்பு, எஃகுசாமான்கள், புகையிலை முதலியனவாகும். இவைகள் (புகையிலை நீங்கலாக) யாவும், இந்தியாவின் தொழில் வளர்ச்சிக்கு உடனடியாகத் தேவைப்படுகின்றன. ஆனால், அமெரிக்காவில் இந்தியச் சணல், தோல், பதனிட்ட தோல் இவைகள் கச்சா நிலையில்தான் விரும்பப் பெறுகின்றன என்று தோன்றுகிறது.

ஐரோப்பா (குறிப்பாக ஜெர்மனி) பலவகையான சில்லறைச் சாமான்களை அனுப்பியது. இவற்றை இந்தியாவே உற்பத்தி செய்யக்கூடும். ஆயினும், இதற்குப் பதிலாகப் பெருமளவு அரிசி,[2] கச்சாப் பருத்தி, கச்சாச் சணல், பதனிடப்படாத ஆட்டுத்தோல், மாட்டுத்தோல், எண்ணெய் வித்துகள் இவைகளை இந்தியாவிலிருந்து பெற்றது. ஐரோப்பாவில் மூலப்பொருள்களே அதிகம் விரும்பப்படுகிறது.

ஜப்பானுக்கு ஏற்றுமதியாகும் பண்டங்களில் பெருமளவு (சாதாரணமாய் 80 சதவீதத்திற்கும் மேலாக) கச்சாப் பருத்தியாகும். இந்தியப் பொருள்களுடன் போட்டியிடும் தன்மையுடைய உற்பத்திப் பொருள்களே அங்கிருந்து இறக்குமதியாகின்றன. ஜப்பானின் நேர்மையற்ற இப் போட்டிக்கு எதிராக எழுந்த கூக்குரல், இந்திய சமீபகால வாணிபச் சரித்திரத்தின் சிறப்பியல்புகளில் முக்கியமானதொன்றாகும். ஆனால் 1931–32

1 1926–27-ல் மண்ணெண்ணெய், மசகிடும் எண்ணெய் (lubrication oil) இவைகளின் இறக்குமதியில் 70 சதவிகிதத்தை அமெரிக்க ஐக்கிய நாடுகளிலிருந்தும் எரிபொருள் எண்ணெய் இறக்குமதியில் 77 சத விகிதத்தை பர்சியாவிலிருந்தும் இந்தியா பெற்றது. (Moral and Material Progress of India, 1926–27, p. 197).

2 ஐரோப்பாவில் இறக்குமதியாகும் அரிசியில் ஒரு பகுதி உணவாகவும், ஒரு பகுதி சாராயத்தையும் (spirit), கஞ்சிப் பசையை உற்பத்தி செய்யவும் பயன்படுகிறது.

வரை, ஜப்பானுக்கு இந்திய ஏற்றுமதியின் மொத்தம் மதிப்பு இறக்குமதியின் மதிப்பைவிட அதிகமாக இருந்தது என்பதை மறந்துவிடக்கூடாது. தான் விளைவிக்கும் பருத்தி முழுவதையும் தானே பயன்படுத்த முடியாதவகையில், மிகுதிப் பருத்தியினை விற்க இந்தியாவுக்கு ஒரு சந்தை தேவைப்படுகிறது. இதற்கு ஜப்பான் மிகச்சிறந்த சந்தையாக வாய்த்தது. 1334ஆம் ஆண்டில் இந்தியாவுக்கும் ஜப்பானுக்கும் ஒரு வாணிப ஒப்பந்தம் ஏற்பட்டது. இந்த ஒப்பந்தத்தின்படி இந்தியாவிலிருந்து ஜப்பானுக்கு ஏற்றுமதியாகும் கச்சாப் பருத்தியின் அளவுக்கு ஜப்பானியத் துணிகள் இந்தியாவில் இறக்குமதி ஆக்கலாம் என்ற வீதப் பங்குமுறை (quota) நிர்ணயிக்கப் பெற்றது.[1]

ஆங்கிலேயப் பண்டங்களின் விலைகள் உயர்வாக இருந்தன. அதனுடன் ஜெர்மனி, ஜப்பான், அமெரிக்க நாட்டு வணிகர்களும் சிறந்த விற்பனை முறையைக் கையாண்டனர். இதனால் ஆங்கிலேயர்களின் பண்டங்களின் விற்பனை இந்தியாவில் குறைந்தது.

முதல் உலகப் போருக்குச் சிறிதுகாலத்திற்கு முன், ஜெர்மானிய வணிகர்கள் இந்தியச் சந்தையைக் கைப்பற்றுவதற்குப் பெருமுயற்சி எடுத்துக்கொண்டனர். இந்த நோக்கத்துடன் இந்திய மக்களுக்குத் தேவையான பண்டங்களை அவர்களுடைய சக்திக்கு ஏற்ற விலையில், ஆங்கிலேய வணிகர்கள் போட்டியிட முடியாத வழிகளில் விற்பனை செய்தனர்.[2] ஜெர்மானியப் பண்டங்களின் தரம் ஆங்கிலேயப் பண்டங்களைப்போன்றிருக்கவில்லை.

1 1920–29-க்கு இடையில், பெருமளவு கச்சாப் பருத்தியை, ஜப்பான் அமெரிக்காவிலிருந்து தருவிக்கத் தொடங்கியது. (11ஆம் அத்தியாயத்தைப் பார்க்கவும்). பர்மிய அரிசியிலும் பெருமளவு ஜப்பானுக்கு ஏற்றுமதியாகி வந்தது. ஆனால், இவ் வாணிபத்திற்கு ஜப்பான் தடை விதித்தது (Indian Trade Journal, April 5, 1928, p. 63). சீன ஜப்பானியப் போரினால் 1936–39-க்கு இடையில் இந்திய ஜப்பானியர்களுக்குள் நடந்துவந்த வாணிபம் வெகுவாகக் குறைந்தது. 1934-ல் செய்துகொண்ட இந்திய ஜப்பானிய வாணிப ஒப்பந்தம் திருத்தப்பெற்றது. ஆனால், அதில் முக்கிய மாற்றமெதுவுமில்லை. இதைப்பற்றி 18ஆம் அத்தியாயத்தில் விரிவான விளக்கம் தரப்பெறும்.

2 ஜெர்மானிய வணிகர்கள் பண்டங்களைக் குறைந்த விலையில் விற்றதுடன், கடன் வசதிகளையும் அதிகமாக அளித்தனர். இந்திய மக்களின் விருப்பு, வெறுப்புகளை அறிந்துகொள்வதிலும் மிக்க அக்கறை செலுத்தினர். எடுத்துக்காட்டாக ஆங்கிலேய வணிகர்கள், தங்களுடைய பண்டங்களுக்கு அடக்கவிலையைக் (சுட்டுறுதிச் செலவு, கப்பல் தூக்குக்கூலி இவைகளை உள்ளிடாமல் f.o.b.) குறிப்பிட்டனர். ஆனால், ஜெர்மானிய வணிகர்கள் நிகர விலையைக் (மேற்கண்டவைகளை உள்ளிட்டு c.i.f.) குறிப்பிட்டனர். இதனால் மற்றச் செலவுகளைக் கணக்கிடவேண்டிய தொல்லை வாடிக்கைக்காரர்களுக்கு இல்லை. (**Report on the Conditions and Prospects of British Trade in India, 1919, p. 10**).

ஆனால், இந்தியாவில் தரத்திற்கு அதிக அக்கறை செலுத்தப் பெற்றதாகத் தெரியவில்லை.[1]

போர்க்காலத்தில் அமெரிக்க, ஜப்பானிய வாணிப நிறுவனங்கள் இந்தியாவில் கிளைகளை நிறுவியதுடன், இந்திய மக்களுடன் நெருங்கிய தொடர்புகொள்ளவும் முயற்சி செய்தனர். நியூயார்க், சான்ஃபிரான்சிஸ்கோ, பாஸ்டன் போன்ற துறைமுகங்களிலிருந்தும், ஜப்பானிலிருந்தும் நேரிடையான கப்பற் போக்குவரத்து ஆரம்பிக்கப்பெற்றது. சரக்குகளுக்கு விற்பனையைப் பெறுவதற்கு வணிகப்பிரதிநிதிகளும் அனுப்பப்பெற்றனர். இந் நிறுவனங்கள் இந்தியச் சந்தையின் இயல்பைத் தெளிவாக அறிந்துகொள்வதற்கு முயற்சி எடுத்துக் கொண்டதுடன், வாணிப விளம்பரத்திலும் மிகுந்த அக்கறை காட்டினர்.[2]

ஜெர்மானிய வணிகர்களின் முறையைப் பின்பற்றி, ஜப்பானியர்களும் மிகவும் மலிவான பண்டங்களை (ஆனால் வலுவில்லாத) இந்தியாவில் புகுத்தினர். 1911ஆம் ஆண்டின் கணக்கெடுப்புப்படி இந்தியாவில் இருந்த ஜப்பானிய ஆண்களின் எண்ணிக்கை முப்பத்திரண்டுதான். ஆனால், 1919-ல் அவர்களின் எண்ணிக்கை இரண்டாயிரத்திலிருந்து மூவாயிரம் வரை பெருகியிருந்தது. இந்திய மொழிகளைக் கற்பதில் ஜப்பானிய ஏஜெண்டுகள் வல்லவர்களாக இருந்தனர். இதனால், நாடெங்கும் ஜப்பானியக் கிடங்குகள் நிறுவப்பெற்றன. எல்லாவகையான ஜப்பானிய பண்டங்களை விற்பனை செய்வதையும், கச்சாப் பருத்தியை வாங்குவதையும் இக் கிடங்குகள் ஒன்றாக இணைத்துச் செய்தன.

ஆங்கில வணிகர்களும், இந்திய வணிகர்களும் புதிய போட்டியாளர்களைக் கண்டு வெகுண்டு, தங்களுடைய வழக்கமான

[1] பண்டங்களின் தரம் எப்படியிருந்தாலும், வாளிலையாலும், பூச்சித் தொல்லையாலும் அவைகள் வெகு சீக்கிரமே பழுதடைகின்றன. வீட்டுக் கூரைகளையும், ஆடைகளையும், வீட்டுச் சாமான்களையும் இந்திய மக்கள் ஆண்டுக்கு ஒரு முறை புதுப்பிக்க வேண்டியிருக்கிறது. ஆகவே, விலை குறைவான பொருள்களும், பகட்டான பண்டங்களும் உடனடியாக விலையாகின்றன. உயர்தரப் பண்டங்களை வாங்குவது நாளாவட்டத்தில் இலாபகரமாக இருந்தாலும், இந்திய மக்கள் மலிவான பண்டங்களையே சாதாரணமாக விரும்புகின்றனர். 'வலுவில்லாத குடிசைகளைப் புதுப்பிப்பதற்கும் பழுதுபார்ப்பதற்கும் ஆகும் நேரத்திலும் செலவிலும் பாதியை நிரந்தரமான வலுவுள்ள கட்டடங்கள் கட்டுவதில் பயன்படுத்தினால், ஆண்டுதோறும் கோடிகணக்கான ரூபாய்கள் பொருளாதார வளர்ச்சிக்குச் செலவிட உதவும்' (Round Table, June 1925, p. 536). சிக்கனமற்ற செலவுக்கு இன்னும் ஓர் எடுத்துக்காட்டாகும். தங்களுடைய சொந்த ஊருக்குப் போய்வர விடுப்புப் (leave) பெறுவதற்காக, உறவினர் ஒருவர் இறந்து விட்டார் என்று சாக்குச் சொல்வது பம்பாய் ஊழியர்களிடையே ஒரு சாதாரண வழக்கமாகும். இந்தச் சாக்குடன் 'என்னுடைய வீடு விழுந்துவிட்டது' என்ற சாக்கையும் அவர்கள் மாற்றி மாற்றி உபயோகித்துவந்தனர்.

[2] **'Report on the Conditions and Prospects of British Trade in India', 1919, p. 13.**

வாணிப முறைகளை மாற்றிக்கொள்ளவேண்டிய அவசியத்தை உணர்ந்தனர். இந்தியத் தொழில் நிறுவனங்களில் பலவும், நியூ யார்க், மான்செஸ்டர் போன்ற நகரங்களில், கிளைக் கிடங்குகளைத் திறந்தன.[1] ஆங்கிலேய நிறுவனங்களும் இந்தியாவில் தங்க ளுடைய கிளைகளை நிருவகித்தன.

வெளிநாட்டு உற்பத்தியாளர்களுக்கும், இந்திய வியாபாரி களுக்கும் இடையிலுள்ள தரகர்களை நீக்கி, நேரிடையான தொடர்பு கொள்வதற்கான அறிகுறிகள், பல வாணிபங்களிலும் தோன்றின. ஆனால், குறிப்பிட்ட ஒருசில நிறுவனங்கள்தாம் பண்டங்களைப் பகிர்மானம் செய்வதிலும், விளம்பரம் செய் வதிலும் நூதன முறைகளைக் கையாண்டுவருகின்றன.

வாணிப விளம்பரத்தை இந்திய வணிகர்கள் முற்றிலும் அசட்டை செய்கிறார்கள்.[2] வாணிபத்தில் புதிய முறைகளைக் கையாளாவிட்டால் (குறிப்பாக வாணிப விளம்பரத்தில்) இந்திய வணிகர்கள் நிச்சயம் தீங்கிழைக்கப்படுவார்கள்.[3]

இந்திய வாணிபத்தின் போக்கு பத்தொன்பதாம் நூற் றாண்டின் முடிவுகாலத்திலிருந்து தலைகீழாக மாறியுள்ளது என்பது மேற்காணும் விளக்கத்திலிருந்து தெளிவாகும். ஆனால், வாணிபப்போக்கில் ஏற்பட்ட மாறுதல் வாணிபத்தின் இயல்பை மாற்றவில்லை. இந்தியா, மூலப்பொருள்களை அயல்நாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதால், உள்நாட்டிலேயே தயாரிக்கக்கூடிய உற்பத்திப் பொருள்களுக்கு இறக்குமதியை நம்பி வாழ்கிறது என்று கூறுவது இனியும் உண்மையாகாது. இந்திய அரசாங் கத்தின் வாணிபக் கைக்கோளில் ஏற்பட்ட மாறுதல்களையும், அதன் விளைவுகளையும் அடுத்த பிரிவில் காணலாம்.

இந்திய வாணிபத்தின் விளக்கத்தை முடிக்கும் முன், பொன், வெள்ளிக் கட்டிகளில் வாணிபம், எல்லை வாணிபம், உள்நாட்டுக்

[1] Ibid.

[2] அண்மையில் இந்திய வாணிப ஆணையாளரின் சிபார்சுகள் அதிகரித்திருப்பதால், அவர் இந்திய ஏற்றுமதியாளர்களுக்குப் பெரிதும் உதவியுள்ளார்.

[3] பொருட்காட்சிச் சாலைகளில் அலங்கரிக்கப்படுவதைத்தவிர, மற்றபடி இந்தியப் பண்டங்கள் விளம்பரம் செய்யப்படுவதேயில்லை. விளம்பரத்திற்கு ஏற்ற இடங்களைத் தேர்ந்தெடுப்பதில், இந்தியர்கள் எந்தவித அக்கறையும் காட்டுவதில்லை. விற்பனை இடங்கள் மிக நெருக்கமாக இருப்பதுடன், வாங்குவோரின் கண்ணைப்பறிக்கும் வழியில் சில்லறை விற்பனைப் பண்டங்களை அழகாக ஒழுங்குபடுத்தி அமைப்பதற்கான முயற்சி எப்போதும் செய்யப்படுவதில்லை. இந்த நிலைக்குப் போதிய இடவசதியில்லை என்பதோடு பின் வருபவைகளும் காரணங்களாகும். சாதாரணமாக இந்திய வியாபாரிகளிடம் போதிய மூலதனம் இருப்பதில்லை; கல்வியறிவு குறைவாகவுள்ளது; 'நிர்ணயமான விலை' என்று குறிப்பிட்டிருந்தாலும் பண்டங்களைப் பேரம் பேசும் பழக்கம் இருப்பதால் பண்டங் களின்மேல் குறிப்பிட்டுள்ள விலைக்கு மதிப்பில்லாமல்போகிறது.

கடற்கரை வாணிபம் (coasting trade) இவைகளைப்பற்றிய சிறிய விளக்கம் அவசியமாகிறது.

இந்தியா, சாதாரணமாகப் பொன், வெள்ளிக் கட்டிகளை நிகர இறக்குமதி செய்துவந்தது என்று முன்பே கண்டோம். போருக்கு முன் இவ்வினத்தில் சராசரி இறக்குமதி (ஐந்தாண்டின் சராசரி) 38·8 கோடி ரூபாய் மதிப்புள்ளதாயிருந்தது. போரின் முடிவு காலத்தில் பொன், வெள்ளிக்கட்டிகள் எந்த விலையிலும் கிடைக்காததால், போர்க்கால நிலைமையின் சராசரி 3·17 கோடி ரூபாயாக இருந்தது. 1920–22-க்கு இடையில் ஏற்பட்ட வாணிப நெருக்கடியின்போது, 'வாணிபக் கொடுப்பல் நிலை' மாற்றமடைந்தது. இக் காலத்தில் சிறிது 'நிகர ஏற்றுமதியும்' இருந்தது.[1] இதன்விளைவு இந்தியாவுக்குப் பல ஆண்டுகளுக்குப் பொன், வெள்ளிக் கட்டிகள் கிடைக்காமல் போயிற்று. 'வாணிபக் கொடுப்பல் நிலை' மீட்சியடைந்ததும், நிகர இறக்குமதி 1924–25-ல் உச்சநிலை அடையும்வரை (94·0 கோடி) உயர்ந்து கொண்டே வந்தது. அதன் பிறகு, நிகர இறக்குமதி குறைந்து கொண்டே வந்து, இங்கிலாந்து 1931-ல் பொன் மதிப்புத் திட்டத்திலிருந்து (gold standard) விலகும்போது, போருக்கு முன்பிருந்த பழைய நிலையை அடைந்தது. அதன் பிறகு பெருமளவில் பொன் ஏற்றுமதியாகவேண்டியிருந்தது.[2]

பத்தொன்பதாம் நூற்றாண்டில், வடஎல்லைப் பகுதிகளில் இந்தியா செய்துவந்த நிலவாணிபத்தின் கணக்குகள் முற்றுப்பெறவில்லை. ஆனால், கிடைத்த கணக்கிலிருந்து, 1900–01-ல் ரூ. 14·5 கோடியாக இருந்த அவ் வாணிபம் 1924–25-ல் ரூ. 33 கோடியாக உயர்ந்தது என்று தெரியவருகிறது. கணக்குகளைப் பதிவு செய்யும் முறை மாற்றப்பெற்றதால், அதற்குப் பின்னரான கணக்குகளை ஒப்பிட்டுப் பார்ப்பதற்கு ஏதுவாக இல்லை. நில வாணிபத்தின் முக்கிய இறக்குமதிகள் பின்வருபவை: உணவுத் தானியங்கள், பருப்புவகைகள், உலோகங்கள், உலோக உற்பத்திகள், பழங்கள், காய்கறிகள், வித்துகள், கச்சாப்பட்டு, உரோமங்கள், கால்நடைகள் ஆகும். முக்கிய இந்திய ஏற்றுமதிகள் பின்வருபவை: பருத்தித் துணிகள் (பெரும்பான்மையும் மறு ஏற்றுமதி செய்யப்பெற்றவை), உலோகங்கள், உலோக உற்பத்திகள், சர்க்கரை, தேயிலை, உப்பு, வாசனைத் திரவியங்களாகும். சாதாரணமாக நில வாணிபம், கடல் வாணிபத்தில் ஐந்து சதவிகிதமாக இருந்தது.

[1] VIII-ஆம் படத்தைப் பார்க்கவும்.

[2] 18-ஆம் அத்தியாயத்தைப் பார்க்கவும்.

பல துறைமுகங்களுக்கிடையே (பர்மாவுக்கும் இந்தியாவுக்கும் இடையில் உள்ளதும்)[1] நடந்த உள்நாட்டுக் கடல் வாணிபம், வெளிநாட்டு வாணிபத்திலிருந்து தனியாகப் பிரிக்கப்பெற்றுப் பதிவாயிற்று.

1913–14ஆம் ஆண்டில் இவ் வாணிபத்தின் மதிப்பு ரூ. 118·6 கோடியாக இருந்தது. ஆனால், தற்போது இந்தியாவுக்கும் பர்மாவுக்கும் இடையே உள்ள வாணிபத்தின் புள்ளிவிவரங்கள் கிடைக்கின்றன. இதன் மதிப்பு ரூ. 20·1 கோடியிலிருந்து (போருக்கு முன்னிருந்த ஐந்தாண்டுக்குச் சராசரி) 1936–37-ல் ரூ. 45·8 கோடியாக உயர்ந்துள்ளது. இவ் வாணிபத்தில் பர்மிய அரிசி, எண்ணெய், தேக்குமரம் இவைகளுக்குப் பதிலாகச் சணல் பண்டங்கள் (வங்காளத்திலிருந்து), பருத்தித் துணிகள் (பம்பாயிலிருந்தும் சென்னையிலிருந்தும்), இரும்பு, எஃகு சாமான்கள் (பீஹாரிலிருந்து) போன்றவை மாற்றிக்கொள்ளப் பெற்றன.

§ 2. வாணிபக் கைக்கோளும் சுங்கவரிக் கொள்கையும்

பத்தொன்பதாம் நூற்றாண்டின் இரண்டாம் பகுதியில் இந்திய அரசாங்கத்தின் பொருளாதாரக் கொள்கை, இங்கிலாந்தில் கையாளப்பெற்ற தலையிடாக் கொள்கையையே (laissez-faire principles) முற்றிலும் சார்ந்திருந்தது என்பதை முன்னரே கண்டோம். இக் கொள்கையில் தீவிர நம்பிக்கையிருந்த காலத்திலும் கூட, குறைந்த ஓர் அளவில்தான் இக் கொள்கை இந்தியாவில் அனுசரிக்கப்பெற்றது. அரசாங்கத்தின் பஞ்சத் தடுப்புக் கொள்கையும், வருவாய் உடனடியாகத் தேவைப்பட்டதுமே இதற்குக் காரணமாகும். நாட்டில் இரயில்வேக்களையும், பாசன வசதிகளையும் மேம்படச் செய்ததால், உற்பத்தியிலும் வாணிபத்திலும் ஏற்பட்ட விளைவுகளை முன்னரே ஆராய்ந்தோம்.[2] இனி வாணிபக் கைக்கோளைச் சேர்ந்த ஓரிரு இனங்களைப்பற்றியும் சுங்கவரிகளைப்பற்றியும் விளக்கம் காணவேண்டும்.

சிப்பாய் கலகத்திற்குப் பிறகு, அதிக அளவில் வருவாய் தேவைப்பட்டதால் சில இறக்குமதி வரிகளை விதிக்கவும், முன்னரே உள்ள ஏற்றுமதி வரிகளை நீடிக்கவும் வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது. ஆனால், நிதி நிலைமை அபிவிருத்தி அடைந்த

[1] பழங்காலத்தில் இது (பர்மாவுக்கும் இந்தியாவுக்கும் இடையேயிருந்த வாணிபம்) வெளிநாட்டு வாணிபமாக இல்லை. ஆனால், பர்மா பிரிவினைக்குப் பிறகு வெளிநாட்டு வாணிபமாகிவிட்டது.

[2] 6, 7ஆம் அத்தியாயங்களைப் பார்க்கவும்.

தும் இவைகள் படிப்படியாக நீக்கவும் குறைக்கவும் பெற்றன. லங்காஷயரில் (Lancashire) ஏற்பட்ட கிளர்ச்சியின் காரணமாக 1882ஆம் ஆண்டில் 'முற்றிலும் தலையிடா வாணிபக் கொள்கை' கையாளப்பெற்றது. வருவாய் திரட்டவும் (சில இனங்களில்), நிகர்வை (consumption) மட்டுப்படுத்தவும் (சில இனங்களில்), போர்க்கருவிகள், புகையிலை, குடிவகைகள்[1] இவைகள் உள்ளிட்ட சில பொருள்களின்மேல் குறைந்த அளவு ஏற்றுமதித் தீர்வைகள் விதிக்கப்பெற்றன. பல பொருள்களின்மேலிருந்த ஏற்றுமதித் தீர்வைகள் விலக்கப்பெற்றன.[2] ஏஞ்சிய இறக்குமதித் தீர்வையுள்ள பண்டங்களுக்கு 'ஆயத் தீர்வைகள்' (excise duties) விதிப்பதன்மூலம் ஈடு செய்யப்பெற்றது.

'தடையிலா வாணிபம்' தொடர்ந்து 1894ஆம் ஆண்டுவரை கையாளப்பெற்றது. அப்பொழுதிருந்த நிதி நிலைமை[3] புதிய தீர்வைகளுக்கு அவசியத்தை ஏற்படுத்தியதால், ஐந்து சதவீதம் பொதுவான இறக்குமதித் தீர்வை விதிக்கப்பெற்றது.[4] முதலில் பருத்தித் துணிகள் வரியில்லாப் பட்டியலில்தான் இருந்தது. ஆனால், அதை விட்டுவைத்தால் தேவையான வருவாயைத் திரட்ட முடியாது என்று விரைவிலேயே உணரப்பெற்றது. ஆகவே, 1894ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தில், பருத்தித் துணிகள், பருத்தி நூல் (yarn) இவையிரண்டின்மீதும் 5 சதவீதத்திற்கு இறக்குமதித் தீர்வை விதிக்கப்பெற்றது. லங்காஷயரில் இது பரபரப்பை உண்டாக்கியது. இப் புதுக் கொள்கை, தங்களுடைய முக்கியத் தொழிலை மிகவும் பாதிக்கும் என்று அங்குள்ளவர்கள் கருதினர்கள். முடிவில், இந்திய ஆலைகள் தயாரித்த இருபது எண்ணிக்கையும் அதற்கு மேலான தரமும் உள்ள எல்லாவகை நூலின்மீதும், நாடறிந்த ஐந்து சதவீத 'சமனுக்கு ஆயத்தீர்வை' (countervailing excise duty) விதிக்கப்பெற்றது. ஆனால், இது லங்காஷயரையோ அல்லது இந்தியாவையோ திருப்திபடுத்துவதாக இல்லை.

பருத்தி ஆடைகளை (அவைகள் எங்கு உற்பத்தியானாலும் சரி) அதிக விலை கொடுத்து வாங்கும் சக்தி இந்திய மக்களுக்கு

1 இந்தப் பட்டியலில் பெட்ரோலியம் (1888-ல்) சேர்க்கப்பெற்றிருந்தது.

2 அரிசியின்மேல் இருந்த தீர்வைதான், பத்தொன்பதாம் நூற்றாண்டில் முடிவு காலத்திலிருந்த ஒரே ஏற்றுமதி வரியாகும்.

3 குறிப்பாக ரூபாயின் நாணயமாற்று மதிப்பில் ஏற்பட்ட வீழ்ச்சி. (14, 15ஆம் அத்தியாயங்களைப் பார்க்கவும்.)

4 ரெயில்வே தளவாடங்களும் இயந்திரங்களும் வரியின்றி அனுமதிக்கப்பெற்றன. இரும்பு, எஃகு பண்டங்களில் ஒரு சதவீதத் தீர்வைதான் விதிக்கப்பெற்றது.

இல்லை என்று லங்காஷயர் வியாபாரிகள் வாதிட்டார்கள். அதேநேரத்தில், தங்களுடைய தொழில் மிகவும் நலிவுறுகிறது என்று இந்திய உற்பத்தியாளர்கள் முறையிட்டார்கள். ஆகவே, 1886ஆம் ஆண்டில் பருத்தித் துணிகளின் இறக்குமதித் தீர்வை ஐந்து சதவீதத்திலிருந்து 3½ சதவீதமாகக் குறைக்கப்பெற்றது. இந்திய ஆலைகள் நெய்த துணிகளின் மீதிருந்த ஆயத்தீர்வையும் 3½ சதவீதத்திற்குக் குறைக்கப்பெற்றது. இந்தியக் கைத்தறித் துணிகள் ஆயத்தீர்வையிலிருந்து விலக்குப்பெற்றன. பருத்தி நூல் இறக்குமதித் தீர்வை யில்லாமலே அனுமதிக்கப்பெற்றது. பருத்தி நூலின்மீதுள்ள ஆயத்தீர்வையும் நீக்கப்பெற்றது. இம் மாறுதல்களால் கரடுமுரடான சுதேசித் துணிகள் எல்லாத் தீர்வைகளிலிருந்தும் விலக்குப்பெற்றன. ஆனால், இறக்கு மதியான எல்லாத் துணிகளும், இந்திய ஆலைகளால் உற்பத்தி செய்யப் பெற்றவைகளும், ஒரேமாதிரியாக 3½ சதவீத வரிக்கு உள்ளாயின. நல்ல தரமுள்ள துணிகளை நெய்வதற்கு இந்தியக் கைத்தறி நெசவாளர்கள், இறக்குமதியான நூலையே உபயோகித்தனர். ஆதலால், நூலிலிருந்த இறக்குமதி வரியை நீக்கியது லங்காஷயர் ஏற்றுமதியாளர்கள், இந்திய நெசவாளர்கள் இருவருடைய நலனையும் ஒரே வகையில் பாதுகாப்பதாக இருந்தது. உதவித்தொகை பெற்றுவந்த சர்க்கரையின்மேல் 1898ஆம் ஆண்டில் 'சமனுக்கு வரி' ஒன்று விதிக்கப்பெற்றது. இருபதாம் நூற்றாண்டின் முதல் பத்தாண்டு காலத்தில் சுங்கவரிகளில் சிறு மாறுதல்கள் செய்யப்பெற்றன.[1] இதைத்தவிர, போர் தொடங்கி இரண்டு ஆண்டுகள்வரை, சுங்கவரிகளில் எந்தவித மாற்றமும் இல்லை. இந்தியச் சுங்கவரிக் கொள்கையின் அடிப்படைத் தத்துவம் பின்வருமாறு: வருவாய்க்காக, பொதுவாகக்குறைந்த அளவில் இறக்குமதித் தீர்வையை விதிக்கவேண்டும்; உடனடியாகத் தேவைப்படும் பொருள்களுக்கு 'விலக்கோ' அல்லது வரிக் குறைப்போ அளிக்கவேண்டும்; சில பண்டங்களின் இறக்குமதியை மட்டுப்படுத்தவேண்டும்; அல்லது அப் பண்டங்களுக்கு உயர்ந்த தீர்வைகளைத் தாங்கும் சக்தியிருக்கிறது என்று அரசாங்கம் கருதினால் (மதுவகைகள், புகையிலைபோன்ற பண்டங்கள்) அவைகளின்மீது உயர்ந்த தீர்வைகளை விதித்தல்வேண்டும்.

1 சீனாவுக்கு ஏற்றுமதியான அபினியின் அளவு குறைந்ததால் வருவாய் நட்டம் ஏற்பட்டது. இதற்கு ஈடுசெய்ய, மதுவகைகள், புகையிலை, வெள்ளிக்கட்டி, பெட்ரோலியம் இவைகளின்மீதிருந்த வரியை அரசாங்கம் உயர்த்தியது (14ஆம் அத்தியாயத்தைப் பார்க்கவும்). புகையிலை வரியின்மூலம் கிடைத்த வருமானம் குறைவாக இருந்ததால், அதன்மீதுள்ள தீர்வைகளை அரசாங்கம் 1911ஆம் ஆண்டில் மறுபடியும் குறைத்தது. உதவித்தொகை பெற்றுவந்த சர்க்கரையின்மீதிருந்த தீர்வை 1902ஆம் ஆண்டில் உயர்த்தப்பெற்றது. ஆனால், பிரஸ்ஸல்ஸ் சர்க்கரை ஒப்பந்தத்தின்படி (1903) சர்க்கரைத் தீர்வை ஒவ்வொரு நாட்டிலும் நீக்கப்பெற்றது. இதனால் சர்க்கரையை மிகுதியாக ஏற்றுமதிசெயயும் நாடுகளில் சர்க்கரை உற்பத்திக்குக் கொடுக்கப்பெற்றுவந்த உதவித்தொகை கைவிடப்பெற்றது.

இருபதாம் நூற்றாண்டின் ஆரம்ப காலத்தில் கர்சான் பிரபுவின் (Lord Curzon) நிருவாகத்தில் அதற்கு முன்னிருந்ததை விட ஆக்கமான 'வாணிபக் கைக்கோள்' கையாளப்பெற்றது. அவர் அரசாங்கத்திற்கும், வாணிப உலகுக்கும் நெருங்கிய தொடர்பை ஏற்படுத்தினர். 1905ஆம் ஆண்டில் தொழில், வாணீபத்துறை ஒன்று தனியாக நிறுவப்பெற்று, அதனிடம் தொழில், வாணிபம் சம்பந்தமான அரசாங்கப் பணிகள் ஒப்படைக்கப்பெற்றன.[1]

போர்க்காலத்தில் இந்திய வணிகர்களின் நலன்கள் பாதுகாக்கப்பெறவில்லை. ஆனால், வருவாய் உடனடியாகத் தேவைப்பட்டதால் புதிய வரிகளை விதிக்கவேண்டிய அவசியம் ஏற்பட்டது. இதனால் நிலைமை முழுவதும் மாற்றியமைக்கப் பெற்றது.

போர் சில மாதங்களுக்குத்தான் நீடிக்கும் என்ற எண்ணம் இருந்தவரையில், அரசாங்கம் நிதிபற்றிய நிரந்தரமான மாறுதல் எதுவும் செய்யவில்லை. ஆனால், கூடிய விரைவிலேயே வருவாயைப் பெருக்கத் தீவிர நடவடிக்கைகளை மேற்கொண்டாக வேண்டும் என்ற நிலை ஏற்பட்டது. ஆகவே, அரசாங்கம் 1916ஆம் ஆண்டில் பொதுவான இறக்குமதித் தீர்வையை ஐந்து சதவீதத்திலிருந்து ஏழரை சதவீதத்திற்கு உயர்த்தியது. பருத்தித் துணிகளின் இறக்குமதித் தீர்வையும் ஆயத்தீர்வையும் மாறுதலடையாமல் மூன்றரை சதவீதத்திலேயே இருந்தன. இதனுடன் தீர்வையில்லாப் பண்டங்களின் எண்ணிக்கையும் குறைக்கப் பெற்றது. சர்க்கரைத் தீர்வையும் ஆயத்தீர்வைக்குரிய பண்டங்களின்மீதிருந்த தனித் தீர்வைகளும் உயர்த்தப்பெற்றன. தேயிலை, சணல் இவற்றில் ஏற்றுமதித் தீர்வைகள் விதிக்கப் பெற்றன. 1917ஆம் ஆண்டில் இறக்குமதியான பருத்தித்துணிகளின்மீதிருந்த தீர்வை 3½ சதவீதத்திலிருந்து 7½ சதவீதத்திற்கு உயர்த்தப்பெற்று, சணலின்மீதிருந்த ஏற்றுமதித் தீர்வையும் இருமடங்காக ஆக்கப்பெற்றது.

'சமனுக்கு ஆயத்தீர்வை' முன்னிருந்ததைப்போல் 3½ சதவீதத்திலேயே விடப்பெற்றதால், சுங்கவரிக் கொள்கையில்

[1] அப் பணிகள் பின்வருமாறு : புள்ளிவிவரங்களையும் தகவல்களையும் திரட்டி வெளியிடுதல், தொழிற்சட்டமியற்றுவதை மேற்பார்வையிடல் (தொழிற்சாலை சட்டம், சுரங்கச் சட்டம் போன்றவை), வாணிப நிருவாகம் செய்தல் (தபால் நிலையம், ரெயில் வேக்கள், தந்திநிலையங்கள், துறைமுகங்கள், கப்பல் போக்குவரத்து, சுங்கவரிகள் இவைகள் உள்ளிட்ட பலவும்), 1905ஆம் ஆண்டில் தனி அதிகாரத்துடன் தொடங்கப் பெற்ற 'ரெயில்வே கழகமும்', 'சுங்கவரித்துறையும்' தொழில் வாணிபத் துறையின் மேற் பார்வையிலும் கட்டுப்பாட்டின்கீழும் வைக்கப்பெற்றன. ஆனால், 'சீர்திருத்தங்களுக்கு'ப் பின்னர் இவைகள் தனித்தியங்க அனுமதிக்கப்பெற்றன.

முக்கிய மாற்றம் இக் கட்டத்தில்தான் தோன்றியது. 1919ஆம் ஆண்டில் தோலின்மீதும், பதனிட்டதோலின்மீதும் ஓர் ஏற்றுமதித் தீர்வை விதிக்கப்பெற்றது. தோலின்மீது விதிக்கப்பெற்ற அதிகப்படியான ஏற்றுமதித் தீர்வை இரண்டு முக்கிய நோக்கங்களைக்கொண்டிருந்தது. ஒன்று, அரசாங்கத்திற்கு வருவாய் கிடைப்பதோடு இந்தியாவிலுள்ள தோல் பதனிடும் தொழில்களின் நலன்கள் இத் தீர்வையால் பாதுகாக்கப்பெறும் என்பதும்; மற்றொரு நோக்கம், அதேநேரத்தில் இத் தீர்வை ஏகாதிபத்தியச் சலுகை (imperial preference) முறையினை வளர்க்கும் அங்கேயே பதனிடப்பெற்ற தோலுக்கு, இந்திய அரசாங்கம் ஏற்றுமதித் தீர்வையில் மூன்றில்இரண்டு பங்கு தள்ளுபடி[1] செய்து கொடுத்தது. அதன்மூலம் சலுகைமுறை வளரும் என்று எதிர் பார்க்கப்பட்டது.

1920ஆம் ஆண்டில் ஏற்பட்ட வாணிப நெருக்கடியின் போதும், அதற்குப்பின் ஏற்பட்ட மந்தத்தின்போதும் அரசாங்கத்தின் நிதிநிலைமை இக்கட்டுக்குள்ளாகியது. இதனால், 1921ஆம் ஆண்டில் இறக்குமதித் தீர்வை உள்ளிட்ட பொதுவான இறக்குமதிக் கட்டணத்தை மறுபடியும் 7½ சதவீதத்திலிருந்து 11 சதவீதத்திற்கு உயர்த்தியது. ஆனால், பருத்தி ஆயத்தீர்வை மாறுதலடையாமல் 3½ சதவீதத்திலேயே இருந்தது. சர்க்கரையின்மீதும், பல போகப் பொருள்களின்மீதும் இருந்த தீர்வைகளை முறையே 15 சதவீதத்திற்கும், 20 சதவீதத்திற்கும் உயர்த்தியது. 1922ஆம் ஆண்டில் இறக்குமதிக் கட்டணம் மறுபடியும் 15 சதவீதத்திற்கு உயர்த்தப்பெற்றது. ஆனால், இறக்குமதியான பருத்தித்துணிகளின்மீதிருந்த 11 சதவீதத்தீர்வையை அரசாங்கம் அம் மட்டத்திலேயே விட்டு வைத்தது. அதே நேரத்தில் இறக்குமதியான நூலின்மீது 5 சதவீதத் தீர்வையை விதித்தது. (1896ஆம் ஆண்டுவரை நூல் வரியின்றி இறக்குமதியாயிற்று.). சர்க்கரையின்மீதிருந்த தீர்வையை 15 சதவீதத்திலிருந்து 25 சதவீதத்திற்கு உயர்த்தியது; பல போகப் பொருள்களின்மீது இருந்த தீர்வைகள் 20 சதவீதத்திலிருந்து 30 சதவீதத்திற்கு உயர்த்தியது; மேலும் இறக்குமதித் தீர்வைகளும் ஆயத் தீர்வைகளும் (தீப்பெட்டி, மண்ணெண்ணெய் இவற்றின் தீர்வைகள்) சிறிதளவு ஏற்றம்பெற்றன.

[1] ஏற்றுமதித் தீர்வை, இங்கிலாந்தினுடைய 'மறு ஏற்றுமதி வாணிபத்திற்கு (entrepot trade) இடையூருக இருந்தது. ஆனால், அத் தீர்வையால் இந்தியத் தோல் பதனிடும் தொழிலுக்கும் அதிகப் பயன் இல்லை. ஆகவே அத்தீர்வை, 1923ஆம் ஆண்டில் 10 சதவீதத்திலிருந்து 5 சதவீதத்திற்குக் குறைக்கப்பெற்றது. ஏகாதிபத்திய நாடுகளுக்குத் தள்ளுபடி செய்துகொடுக்கும் வழக்கமும் கைவிடப்பெற்றது.

இவ்வாறு 1922ஆம் ஆண்டில், வெவ்வேறு அளவில் தீர்வைகளுக்குள்ளாயிருந்த ஆறுவகைப் பொருள்கள் இருந்தன.[1]

முதற்பிரிவு தீர்வையின்றி அனுமதிக்கப்பெற்ற பொருள்களைக் கொண்டிருந்தது. இவற்றின் விலையை அதிகரிப்பது தீமையாகும் அல்லது இப் பொருள்களின் கள்ளக்கடத்தலைத் தடுக்கமுடியாது என்பதுமாகும். ஆங்கிலப் பேரரசு நாடுகளுக்கு ஏற்றுமதியாகி என்ற கருத்தில்தான் இவைகள் தீர்வையின்றி அனுமதிக்கப் பெற்றன.[2]

இரண்டாவதாக, பின்வரும் பண்டங்கள் அடங்கிய ஒரு பிரிவு இருந்தது. இப் பிரிவில் வந்த பண்டங்களின்மேல் ஒரு தனிக் கட்டணத் தீர்வை விதிக்கப்பெற்றது. ஆனால், இத் தீர்வை 'தொழிற்காப்புத் தீர்வை' ஆகாது. மேற்பிரிவின் பண்டங்கள்: சர்க்கரை,[3] செயற்கைச் சர்க்கரைவகை (saccharine), மீன், எல்லாவகை மதுபானங்கள், உப்பு[4] (உற்பத்தித் துறைகளின் உபயோகத்துக்கு அல்லாதவை), புகையிலை, நிலக்கரி, சுட்ட நிலக்கரி (coke), 'பேடென்ட்' எரிபொருள் (patent fuel), உலோக எண்ணெய்கள், பருத்தி நூலும், முறுக்கிய நூலும், [விலை மதிப்பின் படி 5 சதவீதம் (ad valorem)] பருத்தித் துணிகள் [விலை மதிப்பின்படி (ad valorem) 11 சதவீதம்], சில போர்த்தளவாடங்கள், இராணுவக் கருவிகள், தீப்பெட்டிகள் முதலானவை ஆகும்.

மூன்றுவதாக, $2\frac{1}{2}$ சதவீதத் தீர்வைக்குள்ளான ஒரு பிரிவு இருந்தது. இப் பிரிவில் உணவுத் தானியங்களும், பருப்பு வகைகளும், சில இயந்திர வகைகளும் அடங்கியிருந்தன.

[1] இத் தீர்வைகள் 1931ஆம் ஆண்டுவரை எந்தவித மாறுதலுமின்றி கடைமுறையிலிருந்தன. சில பண்டங்களின்மீது விதிக்கப்பெற்ற தொழிற்காப்புத் தீர்வைகளும், தீர்வைகளிலிருந்த சில சிறு மாறுதல்களும் இக் கூற்றுக்கு விலக்காகும்.

[2] இப் பிரிவில் இருந்த பொருள்கள் உற்பத்தித் துறைகளின் உபயோகத்துக்கான உப்பு, தோல், பதனிட்ட தோல், உலோகச் சாயத்தில் பலவும், செதுக்கப்பட்டதும் செதுக்கப்படாததுமான விலையுயர்ந்த கற்கள், கச்சாப் பருத்தி, கம்பளம், ஊரங்கள், காகிதம் செய்வதற்கான பொருள்கள், இவை போன்ற சில மூலப்பொருள்கள், உடுப்புகள் போன்ற (ஒருபடித்தான உடைபோன்றவை) உற்பத்தி செய்யப்பெற்ற பொருள்கள், போர்க்கருவிகள், இராணுவச்சாமான்கள், விவசாயக் கருவிகள், பண்ணைச் சாதனங்கள், உடலுழைப்பாலும், கால் நடையாலும் இயக்கப்பெறும் சில இயந்திரங்கள் (உதாரணமாக, தண்ணீர் எடுப்பது, சர்க்கரை ஆலை) முதலியனவாகும். இந்திய நாணயங்களும், தங்க, வெள்ளி நாணயங்களும், தங்கக் கட்டிகளும் தீர்வையில்லாப் பட்டியலில் இருந்தன. 1920ஆம் ஆண்டின் 'செலாவணிக் குழுவின்' சிபாரிசின் மேல் வெள்ளிக் கட்டிகளிலிருந்த தீர்வை 1920-ல் நீக்கப்பெற்றது.

[3] அதன் தரத்திற்கு ஏற்றுற்போல் பலவித கட்டணங்கள் விதிக்கப்பெற்றன.

[4] 1931ஆம் ஆண்டுவரை, உள்நாட்டில் தனியார் தொழிலால் உற்பத்தியான உப்பில் உள்ள 'ஆயத்தீர்வை' கட்டணத்திற்குச் சமமாக இறக்குமதித் தீர்வை நிர்ணயிக்கப்பெற்றது.

நான்காவதாக, தண்டவாளங்கள், இரயில்வே தளவாடங்கள், எஞ்சின்கள், பெட்டிகள் உள்ளிட்ட சிலவகை இரும்பு, எஃகு பொருள்களில் 10 சதவீத வரி விதிக்கப்பெற்றது.

ஐந்தாவதாக, ஒரு 15 சதவீதப் பொதுக்கட்டணம் பல பண்டங்களின்மேலும் விதிக்கப்பெற்றது. உடனடியாகத் தேவைப்பட்டதும் போகப் பொருள்கள், ஏறக்குறைய எல்லாப் பண்டங்களிலும் இக் கட்டணம் விதிக்கப்பெற்றது. பின்வரும் பண்டங்கள் இப் பிரிவில் அடங்கியிருந்தன. உணவு, குடிக்கும் பொருள்களில் ஏறக்குறைய அனைத்தும் (முன்னர் குறிப்பிட்டவை நீங்கலாக), மிருக எண்ணெய், தாவர எண்ணெய், உலோக எண்ணெய், கச்சாத்துணிகள் (முன்னர் குறிப்பிட்டவை நீங்கலாக), எல்லா இரும்பு, எஃகு பொருள்கள் (10 சதவீதப் பட்டியலில் குறிப்பிட்டவை நீங்கலாக), இவைகளும் உடை, போர்த் தளவாடங்கள், ராணுவக் கருவிகள், ரசாயனப் பொருள்கள், மருந்துகள், 'கட்லெரி'ப் பண்டங்கள் (cutlery), இரும்புச் சாமான்கள், சாயங்கள், நாற்காலி மேஜை வகைகள் கண்ணாடிச் சாமான்கள், மண்பாண்டங்கள், தோல் சாமான்கள், மற்ற வகையில் குறிப்பிடப்படாத இயந்திரங்கள், 'மற்றவகையில் குறிப்பிடப்படாத' நூலும் துணிகளும் போன்ற எல்லா உற்பத்தியான பண்டங்களும்.

ஆறுவதாக, மோட்டார் கார்கள், மற்ற வாகனங்கள், தின் பண்டங்கள், கட்லெரிக் சாமான்கள், இரும்புச் சாமான்கள், உலோகச் சாமான்கள் (சுவர்க்கடிகாரங்களும் கைக்கடிகாரங்களும் உள்ளிட), உயர்தர நூல், துணிகள் போன்ற போகப் பொருள்கள் அடங்கியிருந்தன. இவைகளின் மேல் 30 சதவீதத் தீர்வை விதிக்கப்பெற்றது.

இதற்கிடையில் வெளிநாடுகளில் அதிகம் தேவைப்பட்ட பண்டங்களின்மேல் வரியும், ஏற்றுமதித் தீர்வையும் விதிக்கும் கொள்கை பரவலாக்கப்பெற்றது. வருவாய் கிடைப்பதுடன் குறிப்பிட்ட தொழில்களுக்கும் வாணிபத்திற்கும் ஆதரவு கிடைக்கும் என்பதுதான் இக் கொள்கையின் நோக்கம். 1922ஆம் ஆண்டுவாக்கில் கச்சாச் சணல், உற்பத்தியான சணல், தோல், பதனிட்ட தோல், அரிசி, தேயிலை இவைகளில் ஏற்றுமதித் தீர்வைகள் இருந்தன. அதனுடன் தேயிலை, கச்சாச் சணல், உற்பத்தியான சணல், அரக்கு இவைகளின்மேல் வரியும் குறைந்த அளவில் விதிக்கப்பெற்றது. இத்தகைய வரிவழி கிடைக்கும் தொகை இப் பொருள்களின் உற்பத்தியையும் பகிர்வையும் அபிவிருத்தி செய்யப் பயன்படும். முடிவாக 1929ஆம் ஆண்டில் ஒரு 'மத்தியப் பருத்திக் குழு' (Central Cotton Committee)

அமைக்கப்பட்டபொழுது, ஏற்றுமதியான பருத்தியிலும் இந்திய ஆலைகளில் உபயோகமாகும் எல்லாப் பருத்தியிலும், 400 பவுண்டு கொண்ட ஒரு பாரத்திற்கு 4 அணா விகிதம் மேல்வரி விதிக்கப் பெற்றது.[1]

ஏற்றுமதித் தீர்வைகள் உயர்ந்ததால் இந்த வகையில் சுங்கங்களிலிருந்து கிடைக்கும் வருவாய் அதிகரித்தது. போருக்குமுன் ரூ. 10 கோடியாக இருந்த இவ் வருவாய் 1923–24ஆம் ஆண்டில் ரூ. 38·98 கோடிக்குக் குறையாமல் இருந்தது. இத் தீர்வைகளில் சில 'தொழிற்காப்பு' அளிப்பதாகவும் இருந்தன.

சற்றுமுன் விவரிக்கப்பெற்ற சுங்கவரிப் பட்டியல் 1931ஆம் ஆண்டுவரை[2] பெரிதும் மாறுதலடையாமல் நடைமுறையிலிருந்தது. ஆனால், 1921ஆம் ஆண்டிற்குப் பிறகு நிதிக் கொள்கையில் ஒரு தலைகீழ் மாற்றம் இருந்தது. இதனால், 'தொழிற் காப்பு' அளிக்கும் தீர்வைகளை விதிக்க நேரிட்டது.

தொழிற்காப்புப் பிரச்சினையைப் பொதுவாகவும், பருத்தியில் சமனுக்கு ஆயத்தீர்வையைக் (countervailing cotton excise) குறிப்பாகவும் தெளிவாகப் போர் முடிந்தவுடன் ஆராயுமவரை, பருத்தி வரிகளை மாற்றுமல் இருக்கவேண்டும் என்று 1916ஆம் ஆண்டில் கருதப்பெற்றது.[3] இந்திய நிதிக்கொள்கை பிரிட்டிஷ் அரசாங்கத்தால் தீர்மானிக்கப்படும்வரை இந்தியாவுக்கும் இங்கிலாந்துக்கும் இடையே உள்ள தொடர்பு வலுப்பெற ஏதுவில்லை என்பது எல்லோரும் அறிந்தது. ஆகையால், 'இந்திய அரசாங்கம் மசோதாவை' (Government of India Bill) பரிசீலனை செய்ய 1919ஆம் ஆண்டில் நியமிக்கப்பட்ட 'தெரிந்தெடுத்த கூட்டுக் குழு' (Joint Select Committee) இந்தியாவுக்கு நிதித்தனியாட்சி உரிமை கொடுப்பதைச் சிபாரிசு செய்யத் தயங்கவில்லை. 1921ஆம் ஆண்டில் இராச்சிய சபாவில் பிரரேபிக்கப்பெற்ற 'நிதிபற்றிய தனியாட்சி உரிமை' (fiscal autonomy) என்ற தீர்மானத்தைத் தொடர்ந்து, 1921ஆம் ஆண்டு சூன் 30ஆம் தேதியில் 'இந்திய மந்திரி' ஒரு கடிதம் அனுப்பினார். அக் கடிதத்தில் 'நிதித் தனியாட்சி உரிமை'யை அவர் முற்றிலும் ஒப்புக் கொண்டார். இதற்குப்பின் சிறிதுகாலத்தில் 'இந்திய நிதி ஆணைக் கழகம்' (Indian Fiscal Commission) நியமிக்கப்பெற்ற செய்தியை இந்திய அரசாங்கம் வெளியிட்டது.

[1] அண்மையில் இந்த மேல்வரி பாரத்திற்கு 2 அணாவாகக் குறைக்கப்பெற்றது.

[2] 1931ஆம் ஆண்டுக்குப் பின் ஏற்பட்ட மாறுதல்களுக்கு 18ஆம் அத்தியாயத்தைப் பார்க்கவும்.

[3] 1916ஆம் ஆண்டில் ஹார்டின்ச் பிரபு (Lord Hardinge) இந்த நோக்கத்துடன் ஓர் அறிக்கைவிட்டார். (Round Table, March 1923, p. 370.)

இந்த ஆணைக்கழகத்திற்கு 'இந்திய அரசாங்கத்தின் சுங்க வரிக் கொள்கையை (ஏகாதிபத்தியச் சலுகை உட்பட) ஆராயவும் .....அதற்கான சிபாரிசுகளைச் செய்யவும்' அதிகாரம் கொடுக்கப் பட்டது.

இந்தியப் பொருளாதாரச் சூழ்நிலையைப் பொறுத்தவரையில் நாட்டின் அளவுக்கும், மக்கள் தொகைக்கும், இயற்கை வளங் களுக்கும் ஏற்றாற்போல் தொழில் வளர்ச்சி பெருகவில்லை என்று இந்திய நிதி ஆணைக்கழகம் கருதியது. கழகத்தின் அறிக்கையில், தொழிலையும், வர்ணிப வளர்ச்சியின் சமீபகாலப் போக்கையும் அரசாங்கக்கொள்கையில் அண்மையில் ஏற்பட்டமாறுதல்களையும் பற்றிய விளக்கம்தான் இருந்தது. உற்பத்திச் செலவு, குறிப்பிட்ட தொழில்களில் ஒரு தீர்வை இடுவதால் ஏற்படும் விளைவுகள், இவைகளைப்பற்றிய முனைப்பான ஆராய்ச்சி ஒன்றுமில்லை.[1]

கழகத்தின் பெரும்பான்மையினரின் அறிக்கை (Majority Report) தெளிவில்லாத ஒரு தொழில்காப்புக் கொள்கையைச் சிபாரிசு செய்து, அக்கொள்கையைத் தேர்ந்தெடுத்த சில தொழில் களுக்கு, 'பேதங்காட்டும்' (Discrimination) வகையில் கையாள வேண்டுமென்று கூறியது.[2]

'தொழிற்காப்பு உரிமை கோரும் தொழில்களை ஆராய் வதற்கும், தொழிற்காப்புத் தீர்வைகள் விதிக்கப்பெற்றால் அவற்றால் உண்டாகும் விளைவுகளை ஆராய்வதற்கும் ஒரு 'சுங்க வரிக் கழகத்தை' (Tariff Board) நிறுவி, தொழில்களைத் தேர்ந்தெடுக்கவும், அதற்கான சிபாரிசுகளைச் செய்யவும் அக்கழகத் திற்கு உரிமைகள் வழங்கப்பெறவேண்டுமென்றும் இந்திய நிதி ஆணைக்கழகத்தின் அறிக்கையில் கண்டிருந்தது.

பருத்தி ஆலைகளின் வளர்ச்சியை, பருத்தி ஆயத்தீர்வை அதிகம் தடை செய்யவில்லை என்று கருதினாலும், அத் தீர்வையைக் கழகம் ஒருமுகமாகக் கண்டித்தது. பருத்தி ஆயத்தீர்வை

[1] கழக அறிக்கையைப்பற்றிய கருத்துகளுக்கு Round Table, March 1923; The Economic Journal, March 1923; Asiatic Review, April 1923 and October 1923 இவைகளைப் பார்க்கவும்.

[2] தொழிற்காப்புக் கொள்கையின்மூலம் நாட்டில் விரைவான தொழில் வளர்ச்சியை உண்டாக்க வேண்டுமென்று கூறி ஐந்து அங்கத்தினர்கள், 'மாறுபாட்டுக் குறிப்பைத்' (Minute of Dissent) தந்தனர். கழகம் சிபாரிசு செய்த முறையில் அதிக கால தாமதம் இருக்குமென்றும், கழகம் தந்த முடிவுப்படி நடைமுறையில் இங்கிலாந்துடன் போட்டியிடாத தொழில்களுக்குமட்டுந்தான் தொழிற்காப்புக் கிடைக்கும் என்றும் இவர்கள் அஞ்சினர். சுங்கவரிக் கழகம் இத்தகைய அச்சங்களுக்கு இடந்தரவில்லை. ஆனால், கடந்தகாலத்தில் கையாளப்பெற்ற தவறான கொள்கையினால் அரசாங்கத்தின் மீதிருந்த ஐயப்பாடுகள்தாம் அதிகமாயின.

இந்தியாவுக்குத் 'தீங்கிழைத்தது என்பதைவிட. அவமதிப்புச் செய்தது'[1] என்று கூறுவது முற்றிலும் பொருத்தமானதே. இந்தியாவில் இத் தீர்வை பலத்த எதிர்ப்பைத் தூண்டியது இயற்கையேயாகும்.

அடுத்தபடியாக, 'இந்திய நிதி ஆணைக்கழகம்', நிபந்தனைக் குட்பட்ட ஏகாதிபத்தியச் சலுகை முறையை (conditional imperial preference)சிபாரிசு செய்தது. இதன்படி இந்தியா இங்கிலாந்துக்கு, ஒரளவுச் சலுகையைக் கைம்மாறு இன்றிக் கொடுக்கவேண்டும். ஆனால், பேரரசின் மற்ற நாடுகளைப் பொறுத்த அளவில் அந் நாடுகளிலிருந்து இந்தியாவுக்குச் சம மதிப்புள்ள சலுகைகள் கிடைத்தால்தான், இச் சலுகையைக் கொடுக்கவேண்டும்.

விற்பனை முற்றுரிமை, சலுகைகள், உதவித்தொகை (Subsidy), கொடைகள் போன்ற உரிமைகளை அரசாங்கம் வழங்கும்போது பின்வரும் நிபந்தனைகளையும் விதிக்கவேண்டுமென்று கழகம் சிபாரிசு செய்தது: கம்பெனிகள் ரூபாய் மூலதனத்துடன் இந்தியாவில் நிறுவப்பெற்று, பதிவு செய்யப்பெற்றிருக்கவேண்டும்; நெறியாளர் கழகத்தில் (Board of Directors) நியாயமான அளவுக்கு இந்தியர் இருக்கவேண்டும்; அரசாங்கச் செலவில் இந்திய இளைஞர்களுக்குப் பயிற்சி அளிக்கப் போதிய வசதிகள் அளிக்கப்பெற வேண்டும், இத்தகைய சிபாரிசுகளை அரசாங்கம் உடனடியாகக் கையாண்டது.[2] அரசாங்க ஒப்பந்தங்களுக்கு (Contracts) 'ஒப்ப அறிவிப்புகளை' (tenders) ரூபாய்க் கணக்கில் கோருவது என்று 1931ஆம் ஆண்டில் இந்தியப் பண்டகசாலைத் துறை முடிவு செய்தது. இம் முடிவு, இந்தியாவில் நிறுவப்பெற்ற கம்பெனிகளை ஊக்குவிப்பதாக இருந்தது. ஆயினும், இந்தியா தன்னுடைய மேன்மையான இயற்கை வளங்களை முழு அளவுக்கும் பயன்படுத்திக் கொள்ளவேண்டுமானால், அதற்கு வெளிநாட்டு நிதியுதவி இன்னமும் தேவைப்படுகிறது.[3]

[1] Dr. Gilbert Slater, Asiatic Review, March 1923, P. 265.

[2] மாகாணங்களில், 'தொழிலுக்கு அரசாங்க உதவிச் சட்டங்களின்' கீழ், தொழில்களுக்கு நிதியுதவி அளிக்கப்படுவதற்குமுன் இத்தகைய நிபந்தனைகள் விதிக்கப்படுகின்றன. இதைப்பற்றிய விளக்கத்திற்கு 'Proceedings of the Indian Economic Association', 1923, p. 6-ஐப் பார்க்க.

[3] வெளிநாட்டு மூலதனம் இந்தியாவில் நுழைவதன்மூலம் வெளிநாட்டவருக்கு இந்தியாவில் வாணிப முற்றுரிமை கிடைக்கிறது. இத்தகைய உரிமை நாட்டைச் சுரண்டுவதற்கு வசதியாக அமைகிறது. நிருவாகத்துறை, தொழில்நுட்பத்துறை போன்ற பதவிகளுக்கு, வெளிநாட்டு நிறுவனங்கள் இந்தியர்களைவிட வெளிநாட்டவர்களையே அதிகம் விரும்புகின்றன. இலாபங்கள் வெளிநாட்டுக்குச் சென்றுவிடுவதுடன் இந்தியாவின் வருமானங்களும் வற்றிவிடுகின்றன. இவ்வாறான பலவகை அச்சங்கள் இந்தியர் மனத்திலிருந்தன. ஆகையால் இந்தியாவில் வெளிநாட்டு மூலதனத்தைத் தடையின்றி அனுமதிப்பதற்கு மிகுந்த அளவில் எதிர்ப்பு இருந்தது.

ஆணைக்கழகம் மனத்தில் கொண்டிருந்த முக்கிய சுங்கவரிக் கொள்கைகளைப் பின்வருமாறு கூறலாம்; மூலப்பொருள்களையும், இயந்திரங்களையும் வரியின்றியும், பாதி உற்பத்தியான பண்டங்களைக் குறைந்த கட்டணத்திலும் அனுமதிக்கவேண்டும்; ஆராய்ச்சிகளை ஊக்குவிப்பதற்காகவும், தொழிலமைப்பை அபிவிருத்தி செய்வதற்காகவும் தற்போது இருக்கும் ஏற்றுமதி வரிகள் அதே அளவில் நீடிக்கவேண்டும்; 'தொழிற்காப்பு' அளிப்பதாயிருந்தால் பின்வரும் மூன்று நிபந்தனைகளையும் திருப்தி செய்யும் தொழில்களுக்குத்தான் அளிக்கவேண்டும்: (i) இந்தியாவில் தொழிலுக்குத் தேவையான அனுகூலங்கள் இருக்கவேண்டும், (ii) தொடக்ககாலத்தில் தொழிற்காப்பு' அளிக்கப்படாவிட்டால் வளரமுடியாததாக அத்தொழில் இருக்கவேண்டும், (ii) நாளாவட்டத்தில் அரசாங்க உதவியில்லாமல், தானாகவே நல்ல இலாபத்துடன் உற்பத்தி செய்யக்கூடிய ஒன்றாக அத் தொழில் இருக்கவேண்டும்.

முடிவாக ஆணைக்கழகம், 'தொழிற்காப்பு' பற்றிய சில முக்கியக் குறிப்புகளைத் தந்தது. அவையாவன: 'தொழிற்காப்புத் தீர்வைகளால் மக்களுக்கு ஏற்படும் பளு மிகக்குறைவாக இருக்கவேண்டும்; கப்பல் கட்டணத்தில் தள்ளுபடி (rebate) செய்து கொடுப்பதால் ஏற்படும் இடையூறுகள், 'டம்பிங்' (dumping), நாணயமாற்று வீழ்ச்சி இவைகளால் ஏற்படும் தீமைகள், உதவித் தொகையுடன் இந்தியாவில் இறக்குமதியாகும் பொருள்களினால் விளையும் தீமைகள் இவைகள் அனைத்தையும் தீவிரமாக ஆராய்ந்து முடிந்தவரை இவைகளை நீக்கவேண்டும்; தனியார் இறக்குமதிகளைப்போலவே அரசாங்க இறக்குமதிகளிலும் தீர்வைகள் விதிக்கவேண்டும்.[1]

இந்திய அபிப்பிராயம் சந்தேகக் கண்ணோட்டத்துடனமையினும், இந்த அறிக்கைக்கு மொத்தத்தில் நல்ல வரவேற்பு இருந்தது. தெளிவாக எண்ணும் சக்தி இந்தியாவில் உள்ள 'நுகர்வோர்களுக்கு' இல்லை. அவர்களுடைய கருத்தை எடுத்துக்கூற ஒரு பிரதிநிதியும் இல்லை. ஆனால், இந்திய மக்களின் கவனம் திரும்பினால் தொழில் நலன்களை முக்கியமாகவும், விலைமட்டத்தையும், விவசாய நலன்களையும் சாதாரணமாகவும் கருதும் எந்த நடவடிக்கைகளையும் அவர்கள் முழு பலத்துடன் எதிர்ப்பார்கள்.[2]

[1] இந்த யோசனை நடைமுறையாக்கப் பெறவில்லை.

[2] விவசாயக் கருவிகளில் 'தொழிற்காப்பு'த் தீர்வைகள் விதிக்கவேண்டும் என்ற மசோதாவைப்பற்றி (இந்த மசோதா தோற்கடிக்கப்பெற்றது) சட்டசபையில் 1924-ல் கடந்த விவாதத்தைப்பார்க்கவும். (அத்தியாயம் 7)

ஆணைக்கழகத்தின் யோசனைகளில் பலவற்றையும் அரசாங்கம் ஏற்றுக்கொண்டாலும் வருவாய்நோக்கம்முதலிடம்பெற வேண்டும் என்ற உண்மையை வலியுறுத்தியது. வருவாய் நோக்கங்களைப் புறக்கணித்தது ஆணைக்கழகத்தின் பலவீனம் என்று கொள்ளலாம். தேயிலையிலிருந்த ஏற்றுமதித் தீர்வையையும், இயந்திரங்கள், நிலக்கரி, தோல், பதனிட்ட தோல் போன்ற பண்டங்களிலிருந்த இறக்குமதித் தீர்வையையும் நீக்கவேண்டுமென்று கழகம் எளிதாகச் சிபாரிசு செய்துவிட்டது. இதனால் ஏற்பட்ட சுமார் மூன்றுகோடி ரூபாய் நட்டத்தை ஈடு செய்வதற்கான வழிகளைக் கூறக் கழகம் எந்தவித அக்கறையும் காட்டவில்லை.[1] நாட்டில் நிருமாணத் திட்டங்களை உருவாக்குவது உடனடியாகத் தேவைப்படுவதால் வருவாய் நோக்கங்களுக்கு மேலும் அதிக கவனம் செலுத்தியிருக்கவேண்டும்.

நிதிக்கழகச் சிபாரிசின்படி ஒரு 'சுங்கவரிக் கழகம் (Tariff Board) நியமிக்கவும், பேதங்காட்டும் தொழிற்காப்புக் கொள்கையைக் கையாளவும் ஒரு தீர்மானத்தை 1923ஆம் ஆண்டு ஜூலை 10ஆம் தேதி சட்டசபை நிறைவேற்றியது.[2]

சுங்கவரிக் கழகம் எஃகுத் தொழிலையும், எஃகினை மூலப் பொருளாக உபயோகிக்கும் பல தொழில்களையும் முதலில் விசாரணைக்கு எடுத்துக்கொண்டது. 1924ஆம் ஆண்டின் 'எஃகுத் தொழில் 'தொழிற்காப்புச்சட்டப்படி' (Steel Industry Protection Act of 1924) அரசாங்கம் இத்தொழிலுக்கு, தொழிற்காப்பு, சுங்கத் தீர்வைகளை விதித்து, 'அரசாங்கக் கொடையையும் (bounty) அளித்து வந்தது. பின்னர் அதிகப்படியான உதவித் தொகையை அளிக்கவேண்டிய அவசியம் ஏற்பட்டு, இந்த உதவியைக் 'கொடை' (bounty) உருவத்தில் கொடுத்து வந்தது. தொழிற்காப்புத் தீர்வைகள், புதிய அடிப்படையில் 1929ஆம் ஆண்டில் திருத்தியமைக்கப்பட்டவரை நீடித்தன. இவைகளை நாம் முன்னரே ஆராய்ந்தோம். 1927ஆம் ஆண்டுவாக்கில் அரசாங்கக்கொடைகள் நிறுத்தப்பெற்று, ஆங்கிலேய எஃகுச் சாமான்கள்மேல் தொழிற்காப்புத் தீர்வைகள் விதிக்கப்பெற்றன. இவ்வகையில், அரசாங்கம் அளித்த தொழிற்காப்பு, எஃகுத் தொழில் மிக நெருக்கடியான காலத்தைக் கடக்க உதவியாக இருந்தது. எஃகுத் தொழில் 1934ஆம் ஆண்டுவாக்கில் (1927-ல்

[1] Fiscal Commission, Minute of Dissent.

[2] Resolution of the Government of India (Department of Commerce), No. 378, July 10, 1923.

விதித்த தீர்வைகள் காலாவதியாகும்பொழுது) அரசாங்க உதவியை நாடாது என்று கருதினர்கள்.[1]

காகிதம், காகிதக்குழம்பு, சிமெண்டு, மக்னீஷியம் குளோரைடு (magnesium chloride), பருத்தி ஆலை, தீப்பெட்டி, நிலக்கரி, உலோக எண்ணெய், ஒட்டுப்பலகை (plywood), தேயிலைப் பொட்டணம் தயாரிக்கும் தொழிற்சாலை போன்ற பல தொழில்களிலிருந்து வந்த விண்ணப்பங்களைச் சுங்கவரிக் கழகம் விசாரணை செய்தது. எஃகை மூலப்பொருளாக உபயோகிக்கும் பல தொழில்களுக்கு அளிக்கப்பெற்ற துணைத்தொழிற்காப்பை, (supplementary protection) நீடிக்கவேண்டும் (1927ஆம் ஆண்டுக்குப்பிறகும்) என்றுவந்த கோரிக்கைகளைக்கழகம் தனியாக விசாரணை செய்தது. 'விசாரணைக்கு வந்த, ஒவ்வொரு கோரிக்கையிலும் துணைத்தொழிற்காப்பை நிறுத்திவிடக் கழகம் முடிவு செய்தது.[2]

தொழிற்காப்புக் கோரியவைகளில் (எஃகும் அது சம்பந்த மானதொழில்களும் நீங்கலாக) பருத்தி ஆலை, நிலக்கரி, உலோக எண்ணெய் போன்ற தொழில்களே மிகுதியாக இருந்தன. நிலக்கரித் தொழிலுக்கோ அல்லது உலோக எண்ணெய்த் தொழிலுக்கோ தொழிற்காப்பு அவசியமில்லை என்று சுங்கவரிக்கழகம் முடிவு செய்தது. இதை நாம் முன்னரே கண்டோம்.[3] பருத்தி ஆலைத் தொழிலின்மேலும் 'தொழிற்காப்புத் தீர்வை' குறைந்த அளவில்தான் உயர்த்தப்பெற்றது. மற்ற எல்லாத் தொழில்களும் வளர்ச்சியின் தொடக்க நிலையில்தான் இருந்தன. சிமெண்டுத் தொழிலின் உற்பத்தி, உள்நாட்டுத் தேவைக்கு மிகுதியாக இருந்தது என்றும், மக்னீஷியம் குளோரைடு தொழிலோ[4] அதற்குத் தேவையான இயற்கை அனுகூலங்களைப் பெற்றிருக்க வில்லை என்றும் கழகம் கருதியது. ஆகவே, இவ்விரண்டு தொழில்களுக்கும் தொழிற்காப்பு சிபாரிசு செய்யமுடியாத

[1] 10ஆம் அத்தியாயத்தைப் பார்க்கவும். ஆனால், இந்த எண்ணம் நிறைவேற வில்லை. 18ஆம் அத்தியாயத்தையும் பார்க்கவும்.

[2] உதாரணம்: எஃகுக்கம்பி, கம்பி ஆணி, மின்திறம் பாய்ச்சிய இரும்புச் சாமான்கள் (galvanized hardware), ரெயில்வே வாகன்கள், கப்பல் கட்டும் தொழில்கள். V. the Reports of the Tariff Board on each of these industries; the Indian Trade Journal, July 22, 1926 (Wire and Wire nails), ibid. March 1. 1928 (Railway Wagon and Wire Industries), and ibid., July 8, 1926 (Galvanized Hardware). கப்பல் கட்டும் தொழிலின் நிலைமையையும், கோரிக்கைகளையும்பற்றிய விளக்கத்திற்கு (உள்நாட்டுப் போக்கு வரத்துக்காகக் கட்டப்படும் கப்பல்கள்) Moral and Material Progress of India, 1926-27, பக்கம் 190 ஐப் பார்க்கவும்.

[3] 10, 11ஆம் அத்தியாயங்களைப் பார்க்கவும்.

[4] சிறிது காலத்திற்குப் பிறகு தீர்வை விதிக்கப்பெற்றது.

நிலையில் இருந்தது. காகிதம், காகிதக் குழம்பு இவைகளின் தொழிற்சாலைகளில் நடக்கும் ஆராய்ச்சிக்கு 'அரசாங்கக்கொடை' (bounty) அளிக்கப்படவேண்டுமென்று கழகம் சிபாரிசு செய்தது. ஆனால், அரசாங்கம் 'அரசாங்கக் கொடை' அளிப்பதற்குப் பதிலாக, சில காகிதவகைகளில் தொழிற்காப்புத் தீர்வையிட விரும்பியது.[1] இறக்குமதியான தீப்பெட்டிகளும், உள்நாட்டில் உற்பத்தியான தீப்பெட்டிகளும் ஒரேவிலையாக இருந்ததால் மக்கள் இறக்குமதியான தீப்பெட்டிகளையே விரும்பினர். ஆதலால் தீப்பெட்டித் தொழிலின் கோரிக்கையை ஆதரித்து, தீப்பெட்டியின்மேல் ஒரு குரோசுக்கு (gross) ரூ. 1-8-0 ஆக இருந்த வருவாய் வரியைத் (revenue duty) தொழிற்காப்புத் தீர்வையாக மாற்ற வேண்டுமெனக் கழகம் முடிவுசெய்தது.[2] இந்த யோசனையை அரசாங்கம் ஏற்றுக்கொண்டது. ஒட்டுப்பலகைத் தொழிலுக்கும் (plywood) தேயிலை தயாரிக்கும் (tea chest) தொழிலுக்கும், தொழிற்காப்பு அளிக்க அரசாங்கம் முடிவு செய்தது. ஆனால் இந்தத் தொழிற்காப்பு, சுங்கவரிக் கழக சிபாரிசு முறைக்கு மாறுபட்டதாக இருந்தது.[3]

இந்தியத் தொழில்களுக்குத் தேவையான மூலப்பொருள்களின்மேலுள்ள இறக்குமதித் தீர்வைகளைக் குறைத்தால், இந்தியப் பண்டங்கள் இறக்குமதியானவைகளுடன் போட்டியிட ஏதுவாக இருக்கும் என்று கூறிப் பல விண்ணப்பங்கள் சுங்கவரிக் கழகத்திற்கு வந்தன.[4] இக் கோரிக்கைகளில் பலவும் விசாரணை செய்து முடியாமல் இருந்தன. ஆனால், சுங்கத்தீர்வைகளில் தேவையான மாறுதல்கள் முன்னரே செய்யப்பெற்றிருந்தன. உதாரணமாக, இறக்குமதியான கந்தகத்தில் இருந்த 15 சத விகிதத் தீர்வை நீக்கப்பெற்றது.[5] மேலும், இந்தியத்தோல் பட்டைதயாரிக்கும் தொழிலின் உற்பத்திச் செலவை, மற்ற

[1] Indian Trade Journal October 1, 1925; May 26, 1927; July 7, 1927; and September 29, 1927,

[2] தீப்பெட்டியின் மேலிருந்த இறக்குமதித் தீர்வை கடந்த ஐந்து ஆண்டுகளாக இருந்த அதே அளவில்தான் இப்பொழுதும் நிலைத்தது, ஆனால் இதுவரை ஒரு வருவாய்த் தீர்வையாக (revenue duty) இருந்தஅத்தீர்வை இப்பொழுது ஒரு தொழிற்காப்புத் தீர்வையாக மாற்றப்பட்டது. இதனால் வருவாய் குறைந்தது. அரசாங்கத்தின் முக்கிய நோக்கம் வருவாய் பெறுவதாக இருந்தால், தீர்வையைக் குறைத்திருக்கவேண்டும். ஆனால், இந்தத் தொழிலுக்குத் 'தொழிற்காப்பு' அளிப்பதாக முடிவு செய்யப்பெற்றதால், கட்டணம் அதே அளவில் நீடிக்கலாம். V. Report of the Tariff Board on the Match Industry, and Times, September, 1928.)

[3] Report of the Tariff Board on the Plywood and Tea Chest. Industry, and the Indian Trade Journal February, 23, 1928.

[4] சுங்கவரிக் கழகத்திற்கு 1925ஆம் ஆண்டில் வந்த விண்ணப்பங்களின் பட்டியலை Gazette of India, March 28, 1925.ல் பார்க்கவும்.

[5] V. Report of the Tariff Board on the Removal of the Import Duty on Sulphur, 1924.

நாடுகளிலிருப்பதுடன் சமனுக்குவதற்கு சுங்கவரிக் கழகம் செய்த சிபாரிசுகளிற் சிலவற்றை அரசாங்கம் ஏற்றுக்கொண்டது ஆனால், அத் தொழிலின் மூலப்பொருள்களின்மேலுள்ள தீர்வையைக் குறைப்பதைவிட, 'செய்வினை முடிந்த பொருளின்' மேல் தீர்வையிட அரசாங்கம் விரும்பியது.[1] இறக்குமதியாகும் துத்தநாகத்திலுள்ள 15 சதவீதத் தீர்வையை நீக்கவேண்டும் என்று இந்திய கால்வனைஸிங் கம்பெனி (Galvanizing company) செய்த கோரிக்கையை சுங்கவரிக்கழகம் ஆதரித்தது.[2] ஆனால், இந்தக் கோரிக்கை 1927-ல் அரசாங்கத்தின் பரிசீலனைக்கு வந்தபொழுது, கடையப்பெறுத துத்தநாகத்தின்மேலுள்ள தீர்வையைமட்டும் நீக்குவது என்று முடிவு செய்யப்பெற்றது.[3]

பல ரசாயனத் தொழில்களைச்[4] சுங்கவரிக் கழகம் விசாரணை செய்ததின் பிறகு, 1931ஆம் ஆண்டில் பல கனரக ரசாயனங்களிலும் 'தொழிற்காப்புத்' தீர்வைகள் இடப்பெற்றன. ஆனால், 1933ல் அவைகள் மறுபடியும் நீக்கப்பெற்றன. மக்னியம் குளோரைடு (magnesium chloride) தொழில் நல்ல வளர்ச்சியுற்றிருந்ததால் அதில் தீர்வை நீடிக்கப்பெற்றது.[5]

இவ்வாறு சமீப மந்தகாலம்வரை ஒரு சில தொழில்கள்தாம் தங்களுடைய 'தொழிற்காப்புக் கோரிக்கைகளை' நிரூபித்தன. ஆனால், பல தொழில்கள் தாங்கள் உபயோகிக்கும் இறக்குமதிப் பொருள்களிலிருந்த 'வருவாய் வரியைக்' (Revenue duty) குறைக்கவேண்டுமென்று கோரின.[6] தற்போது நிலவும் உயர்ந்த

---

[1] V. Report of the Tariff Board on the Camel Hair, Cotton and Canvas Ply Belting Industry, 1927, and the Indian Trade Journal, February 16, 1928.

[2] V. Repot of the Tariff Board on the Removal of the Duty on Spelter and the Enhancement of the Duty on Imported Galvanized Hardware, 1926; the Indian Trade Journal, July 8, 1926; and the Indian Budget, 1927-28.

[3] Indian Trade Journal, July 26, 1928.

[4] இவைகள்: சுந்தகாமிலம், ஹைட்ரோகிளோரிக் அமிலம், நைட்ரிக் அமிலம், மாங்கனீஸ் சல்பேட்டு, இரும்பு சல்பேட்டு, பொடாஷ் அலுமினியம், அலுமினிய உப்பு, சோடியம் உப்பு, துத்தநாகக்குளோரைடு, செப்புச்சல்பேட்டு, கிளாபருடைய (Glauber's) உப்புத் தொழில்கள்.

[5] Indian Trade Journal, July 26, 1928.

[6] சுங்கவரிக் கழகம் கையாண்ட விசாரணைமுறை போற்றக் கூடியதாக இருந்தாலும், விசாரணைக்கான உண்மையான தகவல்களைக் கழகம் பெறமுடிந்ததா வென்பது சந்தேகத்திற் குரியதாகும். சாதாரணமாக ஒரு சரட்சியங்களின் உதவியால்தான் கழகம் விசாரணையை நடத்தியது. அதனால், முழு விவரங்களையும் அறிய வாய்ப்பில்லை. உலோக எண்ணெய்த்தொழிலின் விசாரணையை இத்தகைய இடையூறுகள் பாதித்தன. பொறியியல் தொழில்(Engineering Industry)உள்நாட்டில் கடும் போட்டியிருந்ததால் அவைகள் தொழில்நுட்பமும், நிதிபற்றியதுமான இரகசியங்களை வெளியிட அஞ்சின. ஆகையால் உற்பத்திச் செலவு, போட்டி இவைகளைப்பற்றிய சான்றுகளைப் பெறுவது கடினமாக இருக்கிறது என்று சுங்கவரிக் கழகமே ஒப்புக்கொண்டது.

தீர்வைகள், பர்மா நலன்களைப் பாதிக்கின்றன என்று பர்மா 'வர்த்தகக் கழகம்' (Chamber of Commerce) முறையிட்டதை இங்குக் குறிப்பிட வேண்டும். அரிசி, தோல், பதனிட்ட தோல் இவைகளிலிருந்த ஏற்றுமதித் தீர்வைகளையும், எஃகின் மேலிருந்த தொழிற்காப்புத் தீர்வையையும் (இத் தீர்வையினால் வங்காளமும் பீஹாரும் பலனடைய, பர்மா தண்டிக்கப்படுகிறது என்று கருதப்பெற்றது)[1] அந்நாடு வன்மையாகக் கண்டித்தது. இதனால் தெரியவருவது என்னவென்றால், பரவலான தொழிற் காப்பின்மூலம் பலனடையும் அளவுக்கு இந்தியாவில் பொருளாதார வளர்ச்சி அதிகரிக்கவில்லை என்பதாகும். அப்படிச் செய்வதால் 'நுகர்வோர்'களுக்குத்தான் பெருத்த நட்டம் ஏற்படும். இக் கருத்தினைத் தொடர்ந்து ஆராய்வதற்கு முன்னர் சுங்கவரிகளில் ஏற்பட்ட ஒரு சிறு மாறுதல்களையும், வாணிப வளர்ச்சிக்கு ஊக்கம் தரவும் உதவிபுரியவும் அரசாங்கம் மேற்கொண்ட நடவடிக்கைகளையும் கவனிப்போம்.

1924ஆம் ஆண்டில் குடியானவர் உபயோகத்துக்கான விவசாயக் கருவிகளில் சில, வரியில்லாப் பட்டியலில் சேர்க்கப் பெற்றன. இறக்குமதியாகும் தானியங்களின்மேலும், பருப்பு வகைகளின்மேலுமிருந்த 2½ சதவீதத் தீர்வை 1925-ல் நீக்கப் பெற்றது. இறக்குமதியாகும் மோட்டார் சாராயத்தின்மேல் (motor spirit) இருந்த தீர்வையும் குறைக்கப்பெற்றது. விசைத் தறிக் (power loom) கருவிகளின்மேலிருந்த தீர்வையும் 2½ சதவீதத் திற்குக் குறைக்கப் பெற்றது. 1926ஆம் ஆண்டில் எந்த விதமுக்கிய மாறுதலும் ஏற்படவில்லை. ஆனால் 1927ஆம் ஆண்டில் மோட்டார்கார்களின்மேலிருந்த இறக்குமதித் தீர்வை 30 சதவீதத்திலிருந்து 20 சதவீதமாகவும், டயர்களின்மேலிருந்த தீர்வை 20 சதவீதத்திலிருந்து 15 சதவீதமாகவும் குறைக்கப்பெற்றன; தேயிலையின்மேலிருந்த ஏற்றுமதி வரி நீக்கப்பெற்றது;[2] இறக்குமதியாகும் ரப்பர் விதைகளின்மேலும், ரப்பர் மரத்துண்டுகளின் மேலும் இருந்த தீர்வை நீக்கப்பெற்றது; செக்குகளின்மேலும் (cheques), நாணயமாற்று உண்டியல்களின்மேலுமிருந்த முத்திரை வரி நீக்கப்பெற்றது. செல்வினை முடியாமல் இறக்குமதியாகும் புகையிலையிலிருந்த தீர்வை பவுண்டுக்கு ரூ. 1-லிருந்து ரூ. 1-8-0 ஆக உயர்த்தப்பெற்றது. 1928, 1929ஆம் ஆண்டுகளில் ஒரு சில மாற்றங்களே இருந்தன. மோட்டார்கார்களிலும் வாணிபத்துக்குப் பயன்படும் வாகனங்களிலுமிருந்த தீர்வை

[1] Times, October 26, 1928, 'Burma and India'.

[2] தேயிலைத் தொழிலின் வருமானவரி அடிப்படையை மாற்றி, இதற்கு ஈடு செய்யப் பெற்றது.

குறைக்கப்பெற்றதால், அவைகளின் இறக்குமதி, முறையே 16 சதவீதமும் 35 சதவீதமும் உயர்ந்தது. இவ்வாறு தீர்வை யிடுவதிலுள்ள மாற்றங்கள் யாவும் தீர்வைகளைக் குறைப்ப தாகவே இருந்தன என்பதை இங்குக் குறிப்பிடவேண்டும்.

பருத்தி ஆலைத் துணிகளிலிருந்த சமனுக்கும் ஆயத்தீர்வை (countervailing excise) 1925ஆம் ஆண்டில் தற்காலிகமாகத் தள்ளிவைக்கப்பெற்று 1926ஆம் ஆண்டில் நிரந்தரமாக நீக்கப் பெற்றது என்று மேல் ஒரு சந்தர்ப்பத்தில் கண்டோம்.[1] இங்கும் இதைப்பற்றிய விளக்கம் தேவைப்படுகிறது.

இந்தப் பிரச்சினை போருக்குப் பிறகு கவனிக்கப்பெறும் என்று ஹார்டிஞ்ச் பிரபு (Lord Hardinge) 1916ல் அறிவித்தார். அதற்குப் பிறகு சமனுக்கும் ஆயத்தீர்வையை' அகற்றவேண்டு மென்ற கோரிக்கை அவ்வப்போது எழுந்தது. இத் தீர்வையைக் 'கூடிய விரைவில்' அகற்ற வேண்டு மென்று சட்டசபை 1924-ல் ஒரு தீர்மானத்தை நிறைவேற்றியது. 'இத் தீர்வையைப்பற்றி வருத்தம் தெரிவிக்காத வெள்ளையர் இந்தியாவில் யாரும் இல்லை. இத்தீர்வை இந்தியப் பருத்தித் தொழிலுக்கு அதிகத் தீங்கிழைக்கவில்லை; ஆனால், அரசாங்கத்திற்கு இது அரசியல் தீங்கிழைத்ததில் ஐயமில்லை' என்று நிதிமந்திரி சர். சார்லஸ் இன்ஸ் (Sir Charles Innes) கூறினார்.[2] அரசாங்கம் கொடுத்த வாக்குறுதி காப்பாற்றப்படாததற்கு நிதி நெருக்கடியே முழுக்காரணமாகும்; வரவு செலவுத்திட்டத்தில் பற்றுக்குறைகள் தொடர்ச்சியாக இருந்த காலத்திலும்கூட, பருத்தி ஆலைத் தொழில் ஈடில்லா வளம் பெற்றிருந்தது என்று அவர் தொடர்ந்து குறிப்பிட்டார்.[3] பருத்தி ஆலைத் தொழிலில் பின்னர் மந்தம் ஏற்பட்டபோது,[4] பம்பாய், அகமதாபாத் ஆலை முதலாளிகள், ஆயத்தீர்வையை நீக்க வேண்டுமென்று அரசாங்கத்திடம் முறையிட்டனர். ஆகவே 1925ஆம் ஆண்டில் இத் தீர்வை தள்ளிவைக்கப்பெற்றது. ஆனால், 1926ஆம் ஆண்டு நிதிச்சட்டத்தில் இது நிரந்தரமாக நீக்கப்பெற்றது.

இந்திய நிதி ஆணைக்கழகம், நிபந்தனைக்குட்பட்ட ஏகாதி பத்தியச் சலுகை முறையைப்பற்றிக் கொடுத்த சிபாரிசுகளை

[1] 11ஆம் அத்தியாயத்தைப் பார்க்கவும்.

[2] Times, September 25, 1924.

[3] பருத்தித் துணிகளில் இருந்த இறக்குமதித்தீர்வை உயர்த்தப்பட்டபோது, ஆயத் தீர்வைமட்டும் 30 சதவீதத்திலேயே விடப்பட்டது. ஆகையால், பருத்தி ஆலைத் தொழிலுக்கு ஏற்பட்ட பளு ஒன்றும் அதிகமில்லை.1920-21-லும், 1921-22-லும் பருத்தி ஆயத்தீர்வையிலிருந்து கிடைத்த ஆண்டு வருவாய் ரூ. 2 கோடிக்குச் சற்றுக் குறை வாகவே இருந்தது.

[4] 11ஆம் அத்தியாயத்தைப் பார்க்கவும்.

நடைமுறைக்குக் கொண்டுவர, 1932 வரை எந்தவிதத் தீவிர முயற்சியும் எடுக்கப்பெறவில்லை. 1916ஆம் ஆண்டில், பிரிட்டிஷ் பேரரசுக்குள் (British Empire) பதனிடப்பட்ட தோலுக்கும், பிரிட்டிஷ் எஃகுச்சாமான்களுக்கும் இந்தியாவால் சலுகை காட்டப்பெற்றது. ஆனால், 1923ஆம் ஆண்டில் இச் சலுகை முறை நிறுத்தப்பெற்றது.[1] இந்த நடவடிக்கைமட்டும்தான் இத்துறையில் இதுவரை எடுத்துக்கொண்ட ஒரே முயற்சி.

ஏகாதிபத்தியச் சலுகை முறையால், சலுகை பெற்ற நாடுகளின் விற்பனை அதிகரிக்கும்; அதேநேரத்தில் இறக்குமதி செய்யும் நாடுகளும் தங்களுடைய இறக்குமதிகளைக் குறைந்த கட்டணத்தில் (சலுகை முறையில்) பெறும். ஆகவே சலுகை பெற்ற நாடுகள், இறக்குமதி செய்யும் நாடுகள் இரண்டுமே பயனடையும் என்பதுதான் ஏகாதிபத்தியச் சலுகை முறைக்கு ஆதரவான பொருளாதார விளக்கமாகும். இந்த நன்மைகளுக்கு எதிராகப் பின்வரும் தீமைகளும் ஏற்படும் என்பதை நினைவிற் கொள்ள வேண்டும்: (i) உயர்ந்த கட்டணப் பண்டங்களுக்குப் பதில் குறைந்தகட்டணப் பண்டங்கள் இறக்குமதியாவதால் வருவாயில் நட்டம் ஏற்படும். (ii) சலுகைபெறுத பண்டங்களின் விலைக்கு ஏற்றபடி சலுகை பெற்ற பண்டங்களின் விலையும் நிர்ணயிக்கப்படுவதால் தங்களுடைய விற்பனை அதிகரிப்பதன்மூலம் சலுகை பெற்ற நாடுகள் இலாபமடைகின்றன. ஆனால் இறக்குமதி செய்யும் நாடுகளில் உள்ள நுகர்வோர்கள் அதிக விலை கொடுக்கவேண்டியிருப்பதால், அந்நாடுகள் தற்காலிக நட்டத்திற்கு உள்ளாகின்றன.[2] நேரிடையான கப்பற்போக்கு வரத்தும், சலுகை முறைக்கு உட்பட்ட நாடுகளிடையே வாணிபமும் ஊக்குவிக்கப்பெறுவதை, சலுகை முறையால் கிடைக்கும் ஒரு மறைமுகப் பயனுக்கக் கருதலாம். மேலும், சலுகை முறையினால் கிடைக்கும் நிகரப் பயன்கள் அந்தந்த நாட்டின் சூழ்நிலையைப் பொறுத்துத்தான் இருக்கின்றன. மூலப்பொருள்கள் ஏற்றுமதி செய்யும்நாடுகளை, அப் பொருள்களை இறக்குமதி செய்யும் நாடுகள் சாதாரணமாகத் தடையின்றி அனுமதிக்கின்றன. ஆகவே, சலுகை முறையினால் மூலப் பொருள்கள் ஏற்றுமதி செய்யும் நாடுகளைவிட, செய்வினை முடிந்த பொருள்களை ஏற்றுமதி செய்யும் நாடுகள்தாம் அதிகமாகப் பயன் பெறுகின்றன. இந்திய ஏற்றுமதிகளில் பெருமளவும் சலுகை முறை நடைமுறைக்கு வருவதற்கு முன்னரே, தடையின்றி

[1] இந்த அத்தியாயத்தின் முற்பகுதியைப் பார்க்கவும்.

[2] Report of the Indian Fiscal Commission, 1921–22, P. 127.

அனுமதிக்கப்பெற்றதால் சலுகை முறையால் இந்தியாவுக்குக் கிடைத்த பயன் மிகக்குறைவு [1]

பிரிட்டிஷ் பேரரசின் மற்ற நாடுகளுக்கு இந்தியாவினால் கிடைத்த பயன்கள் மிகக்குறைவு. உற்பத்தியாளர்களுக்கு அளிக்கப்படும் சலுகை நுகர்வோர்களையோ அல்லது அரசாங்கத்தின் வருவாயையோ பாதிக்கத்தான் செய்யும்.

டொமினியன் நாடுகளுடன்வாணிபத்தொடர்பு ஏற்படுத்திக் கொண்டால், இந்தியப் பருத்தித் துணிகள் சணல் உற்பத்திகள், தேயிலை இவைகள் சலுகை முறையால் இலாபமடையும். குடியேற்ற நாடுகளிலிருந்து வரும் நிலக்கரி, மோட்டார்கார்கள், இரயில்வே தளவாடங்கள், மற்றும் பல செய்வினை முடிந்த பொருள்கள் இவற்றின் விற்பனைமூலம் டொமினியன் நாடுகளும் இலாபமடையும். ஆனால், அரசியல் நோக்கங்கள் இதற்கு ஏதுவாக இல்லை. வெளிநாடுகளில், குடியேறிய இந்தியர்கள் நடத்தப் பட்டவிதம், இந்தியாவில் அவநம்பிக்கையையும், வெறுப்புணர்ச்சியையும் தூண்டியது. மேலும் அரிய முயற்சிகளின்மூலம் கிடைத்த நிதிசுயாட்சி உரிமையும், சலுகைமுறைக் கொள்கையால் பாதிக்கப்பெறும் என்று கருதப்பெற்றது. இத்தகைய அரசியல் சூழ்நிலையால், இந்தியா ஒரு முன்னேற்றமான சலுகை முறையைக் கையாளாது என்பது தெளிவாக இருந்தது.[2]

மொத்தத்தில் ஏகாதிபத்தியச் சலுகை முறையினால் அதிக நன்மையும் கிடைக்காது; அதிகத் தீமையும் ஏற்படாது. ஆனால், அதைக் கையாளாவிடில் இந்தியாவுக்குப் பெருத்த நட்டம் ஏற்படும் என்ற கருத்து நிலவியது.

இந்தியாவின் ஏற்றுமதியில் பெருமளவு உணவுப் பொருள்களாகவும், மூலப்பொருள்களாகவுமே இருப்பதால் மற்ற நாடு

1. பல நாடுகளில், இந்தியாவின் உணவுப் பொருள்களும் மூலப்பொருள்களும் சாதாரணமாகத் தடையின்றியும், சணலும் பருத்தித்துணிகளும் தடையின்றியோ அல்லது குறைந்த கட்டணத்திலோ அனுமதிக்கப்படுகின்றன. தேயிலை, புகையிலை, காப்பி போன்ற பொருள்களுக்கு இங்கிலாந்து 1919-ல் காட்டிய சலுகையினால் கிடைத்த பலன் மிகக் குறைவாகத்தான் இருந்தது. இதை நோக்கும்பொழுது தோட்ட உற்பத்திகளுக்கும் (plantation products) சலுகை முறையினால் அதிகப் பலனிருக்காது என்பது தெளிவாகிறது. (Annual Review of the Trade of India, 1926-27, p. 8). இந்தியாவின் போட்டி நாடான சிலோனுக்கு சலுகை கிடைத்ததால், தேயிலையைப் பொறுத்தவரையில் சலுகை முறையால் இந்தியாவுக்கு யாதொரு பயனுமில்லை. புகையிலையின்மேல் 'அளவுக்கேற்ற தீர்வை' (specific duties) முறை கையாளப் பெற்றதால், மலிவான இந்தியப்புகையிலைக்குத் தீமைதான் விளைந்தது. சலுகை முறையினால் காப்பி உற்பத்தியும் வளர்ச்சியடையவில்லை.

2 Economic Journal, March 1923, 'The Indian Fiscal Commission,' by F. Lavington.

களுடன் பேரம் பேசும்சக்தி இந்தியாவுக்கு இல்லை. இந்த இடர்ப் பாட்டைத் தவிர்க்க மூலப்பொருள்களின்மேலும் ஏற்றுமதித் தீர்வைகள் விதிக்கவேண்டுமென்று, பல சந்தர்ப்பங்களில் யோசனை தரப்பட்டது. அவ்வாறே ஏற்றுமதித் தீர்வையும் விதிக்கப்பெற்றது. ஆனால், ஏற்றுமதிகளின் தீர்வை விகிதத்தால் ஏற்றுமதி செய்யும் நாட்டுக்கே தீங்கிழைப்பதாக முடிகிறது.[1]

விற்பனை முற்றுரிமை இருந்தால் ஒழிய ஏற்றுமதித் தீர்வை 'நுகர்வோரை'விட உற்பத்தியாளரைத்தான் அதிகமாகப்பாதிக்கும்; ஆகவே அத்தகையகொள்கைக்குஆதரவு தரமுடியாது என்று நிதி ஆணைக் கழகம் முடிவு செய்தது. இந்த முடிவும் ஒரு சரியான முடிவேயாகும். அதனுடன் கூட, இத்தகைய தீர்வைகள், பொருள்களை இறக்குமதி செய்யும் நாட்டின் மனக்கசப்பையும் உண்டாக்குகின்றன.

வாணிபம் சம்பந்தமான புள்ளிவிவரங்களையும் செய்திகளையும் சேகரிப்பதற்காகவும், அரசாங்கத்திற்கும் வாணிப உலகுக்கும் நெருங்கிய தொடர்பை உண்டாக்குவதற்காகவும் வாணிபப் புலனுய்வுத்துறை ஒன்று 'வாணிபத்துறையின்' ஒரு தனிப்பிரிவாக நிறுவப்பெற்றது.[2] வாணிபம்பற்றிய தகவல்களை இத்துறை தருகின்றது. 1918ஆம் ஆண்டுக்குப் பிறகு இலண்டனில் ஒரு 'வாணிப ஆணையாளர் அலுவலகம்' (Trade Commissioner's Office) திறக்கப்பட்டு, அங்கு ஒரு வாணிப ஆணையாளரும் நியமிக்கப்பெற்றார்.

இங்கிலாந்திலும் ஐரோப்பாக் கண்டத்திலும் இந்திய ஏற்றுமதியாளர்களின் நலன்களை மேன்மையுறச் செய்வதே, வாணிப ஆணையாளரின் முக்கியப் பணியாகும். இதைப் போலவே, 'வெளிநாட்டு வாணிபத்துறை'யின் (Department of Overseas Trade) இந்தியப்பிரிவு இங்கிலாந்தில் ஏற்றுமதியாளர்களின் நலன்களை இந்தியாவில் மேன்மையுறச் செய்கிறது.[3] ஐரோப்பியச் சந்தைகளில் (அமெரிக்காவிலும்) புதிய வாணிபத் தொடர்பு கொள்ள விரும்பும் இந்திய வர்த்தகர்களுக்கு இந்திய

[1] உதாரணமாக 1860-ல், வெடியுப்பு ஏற்றுமதியில் இந்தியா தீர்வை விதித்தவுடன், மற்ற நாடுகளில் இதன் உற்பத்தி அதிகரித்தது. அத்தீர்வை 1867-ல் நீக்கப்பெற்றது. ஆனால், அதற்குள் அத்தொழில் இந்தியாவில் நிரந்தரமாகப் பாதிக்கப்பெற்றது.

[2] 1914ஆம் ஆண்டில் 'தெறியாளர், புள்ளி விவரத்துறை' (Director of Statistics) என்று ஒருவர் தனியாக நியமிக்கப்பெற்றார். ஆனால் அரசாங்கத்தின் செலவைக் குறைப்பதற்காக அப்பதவி 1922-ல் நீக்கப்பெற்றது.

[3] V.Annual D.O.T. Reports on the Prospects and Conditions of British Trade in India.

வாணிப ஆணையாளர் உதவிபுரிகிறார்; இந்திய உற்பத்தியாளர்களுக்குப் பயன்படும் (தொழில்நுட்பங்கள் போன்றவை) செய்திகளைத் தருகிறார்; ஐரோப்பிய, அமெரிக்க நாடுகளின் வாணிபக் கொள்கையிலும், வாணிப அமைப்பிலும் அவ்வப்போது ஏற்படும் மாறுதல்களை அறிந்து, இந்திய வாணிபத்தை அவைகள் எந்த வகையில் பாதிக்கும் என்றும் ஆராய்கிறார்.[1]

இந்தியப் பொருள்களை எந்த நாடுகளில் எளிதாக விற்கலாம், அவைகளுக்கு எந்த நாடுகளிலிருந்து போட்டி ஏற்படலாம் என்பதை முன்கூட்டி அறிந்து அறிவிப்பதன்மூலம், இந்திய உற்பத்தியாளர்களுக்கு ஆணையாளர், பேருதவியாக இருக்கிறார். 'ஏகாதிபத்தியக் கப்பல் போக்குவரத்துக்குழு', 'ஏகாதிபத்தியப் பொருளாதாரக் குழு', 'வாணிபக் கழகத்தின் ஆலோசனைக் குழு,' 'வெளிநாட்டு வாணிபத்துறையின் ஆலோசனைக்குழு', 'பேரரசு நாடுகளின் பருத்தி ஆட்சிச் செற்குழு'[2] போன்ற பல வாணிபக் குழுக்களில், அவர் அங்கத்தினராக இருப்பதால் இந்திய நலன்களைப் பேணவும் மேன்மையுறச் செய்யவும் முடிகிறது.

இந்தியாவின் வாணிப விளம்பரங்களையும் அவரே மேற்கொள்ளுகிறார். ஆனால், இந்திய உற்பத்தியாளர்கள், வாணிபர்கள் இவர்களின் தனிப்பட்ட விளம்பரங்களை அவர் மேற்கொள்வதில்லை. பிரிட்டிஷ் பேரரசு நாடுகளின் கண்காட்சிகளிலும் பிரிட்டிஷ் தொழிற் கண்காட்சியிலும் இந்தியப் பிரிவை அமைத்து அக்கண்காட்சிகளில் பங்கெடுத்துக்கொண்டார்.

பேரரசு நாடுகளினுடைய உற்பத்திப் பொருள்களின் கண்காட்சியிலும், ஏகாதிபத்திய நாடுகளின் பொருள்களை விளம்பரம் செய்யும் நோக்கங்கொண்ட எல்லா இயக்கங்களிலும் அவர் பங்குகொள்கிறார். பத்திரிகைகளுக்கு எழுதுவதுடன், இந்திய வெளியீடுகளையும், பேரரசு வெளியீடுகளையும் தயாரிப்பதற்கு அவர் உதவியாக இருக்கிறார். ஆணையாளருக்கு உதவியாக, 1926ஆம் ஆண்டில் 'வாணிப விளம்பர அதிகாரி' ஒருவர் நியமிக்கப்பெற்றார்.[3] ஆணையாளர் அலுவலகப் பணியாளர்களின் எண்ணிக்கையும், மற்ற வசதிகளும் அதிகரிக்கப்

[1] Reports on the Work of the Indian Trade Commissioner published in 1920, 1922, 1924, 1926, 1928, et seq.

[2] இப்பொழுது தனித் துணைக்குழு ஒன்றும் இருக்கிறது.

[3] Moral and Material Progress of India, 1926-27, p. 209. இப்பதவி பின்னர் நிரந்தரமாக்கப்பெற்றது.

பெற்றன.[1] வட ஐரோப்பா, தென் ஐரோப்பா இவைகளில் இந்திய வாணிப நலன்களை மேன்மையுறச்செய்ய, முறையே ஹாம்பர்க், மிலான் என்னுமிடங்களில் அண்மையில் வாணிப ஆணையாளர்கள் நியமிக்கப்பெற்றனர். அயல்நாடுகளில் இந்திய வாணிபத்தை வளர்க்கும் நோக்குடன் சமீபத்தில் ஒரு இந்திய வர்த்தகக் கழகம் (Chamber of Commerce) இலண்டனில் தொடங்கப்பெற்றுள்ளது. இதுவரை அதில் நூறு அங்கத்தினர்கள் சேர்ந்திருப்பதாகவும், இங்கிலாந்தில் வாணிபம் செய்யும் ஒவ்வோர் இந்தியத் தொழில் நிறுவனமும் அதில் சேர்ந்துள்ளதாகவும் தெரிகிறது.[2] இந்தியப் பண்டங்களில் சில வற்றின் தரம் குறைவாக இருந்ததாலும், கலப்படம் அதிகமாக இருந்ததாலும்,[3] வெளி நாடுகளில் இவைகளின் விற்பனை குறைந்தது மட்டுமன்றி விற்பனை விலையிலிருந்து விவசாயிகளுக்குக் கிடைத்த வருமானமும் மிகக் குறைவாக இருந்தது. மாகாண அரசாங்கங்களும் வர்த்தக சங்கங்கள் பலவும் இத்தகைய பிரச்சினைகளைத் தீர்க்க, பல நடவடிக்கைகளை மேற்கொண்டன.[4] பருத்தி வாணிபத்தை சீர்திருத்தவும் ஒருமைப்படுத்தவும் பருத்தி வாணிபர்கள் ஒரு 'மத்தியக் குழுவை' ஏற்படுத்தினர்கள். மற்றவர்களும் இதைப் பின்பற்றுவதே சிறந்த முறையாகும். 'மத்தியப் பருத்திக் குழு' தேவையான நிதியையும் நிருவாகத் திறமையையும் பெற்றிருந்ததென்றும் ஒருமைப்படுத்தும் செயலில் தலைசிறந்த தொண்டு செய்து வருவதாகவும் எல்லோராலும் பாராட்டப்பெற்றது.[5] சணல், கோதுமை, அரிசி, எண்ணெய் வித்துகள் போன்ற மற்ற வாணிபத் துறைகளிலும் இம்மாதிரி முறையைக் கையாளவேண்டுமென்று யோசனை கூறப்பெற்றது,

எதிர்காலத்தில் இந்தியப் பண்டங்களின் விற்பனையை ஏகாதிபத்தியக் கூட்டுறவின்மூலம் பெருக்கலாம். இந்த நோக்கத்துடன் 1926ஆம் ஆண்டில் 'ஏகாதிபத்திய விற்பனைக் கழகம்'

[1] இந்திய அலுவல்கள் அனைத்தையும் கவனிப்பதற்காக அல்டுவிச் (Aldwych) என்னுமிடத்தில் மையமாக ஒரு கட்டடம் கட்டப்பெற்றது. இந்தியாவுடன் வாணிபத் தொடர்பு கொண்ட வர்த்தகர்கள் அமர்ந்து எண்ணங்களையும் கருத்துகளையும் பரிமாறிக் கொள்வதற்காகத்தான் இக் கட்டடம் நிருமாணிக்கப்பெற்றது.

[2] Times, June 23, 1928, 'Indian Trade Abroad.'

[3] இவைபற்றிய விவரங்கள் பின்னர் ஆராயப்படுகின்றன.

[4] உதாரணமாக, நெய்யில் கலப்படத்தைத் தடுப்பதற்கு 1917-ல் வங்காளத்திலும் பர்மாவிலும் சட்டங்கள் இயற்றப்பெற்றன. பம்பாய் மாகாணத்தில் 'விற்பனையாகும் பருத்தியின் தரத்தை உயர்த்த 'பம்பாய் பருத்தி டிரான்ஸ்போர்ட் சட்டம்' உதவியாக இருந்தது. (Moral and Material Progress of India., 1926–27, p. 131). 'பாங்கு விசாரணைக்குழு'வின் சிபாரிசின்மேல் விற்பனைமுறையில் அபிவிருத்தி இப்பொழுது ஊக்குவிக்கப்படுகிறது.

[5] Times Trade and Engineering Supplement, February 20, 1926.

(Empire Marketing Board) ஒன்று அரசாங்க உதவித் தொகையுடன் இங்கிலாந்தில் நிறுவப்பெற்றது. பொருளாராய்ச்சி, பொருளாதார ஆய்வுகள், விளம்பரம் முதலியவைகளை வளர்ப்பதற்கு உதவித் தொகையைக் கொடுத்து, இவற்றின்மூலம் இந்தியப் பண்டங்களின் விற்பனையையும் ஏகாதிபத்திய நாடுகளின் விற்பனையையும் ஊக்குவிக்கும் முயற்சியில் இக்கழகம் முனைந்திருக்கிறது.[1] டொமினியன் நாடுகளிலிருந்து ஒத்துழைப்பு இல்லாததால் இக் கழகம் 1933ஆம் ஆண்டில் மூடப்பெற்றாலும், இதனுடைய பணிகள் மற்ற நிறுவனங்களுக்கு மாற்றிக்கொடுக்கப் பெற்றன.

§ 3. வாணிபக் கைக்கோளும் எதிர்காலமும்

இதுவரை இந்திய வாணிபத்தின் சமீபகாலப் போக்கையும், குறிப்பாக வாணிபத்தின் அளவு, தன்மை, வாணிபத் தொடர்பு இவைகளில் போரினால் உண்டான விளைவுகளையும், மற்றும் வாணிபக் கைக்கோளில் ஏற்பட்ட புரட்சியையும் ஆராய்ந்தோம். மிகுந்த அளவில் மூலப்பொருள்களை ஏற்றுமதி செய்வதையும் தொழிலுக்குத் தேவையான பொருள்களை இறக்குமதி செய்வதையுமே இந்தியா மேலும்மேலும் சார்ந்திருக்கிறது; இங்கிலாந்தின் தொடர்பு இந்தியாவின் தொழில் வளர்ச்சிக்கு இடையூறாக உள்ளது; வாணிபக் கைக்கோளை உருவாக்குவதில், அரசாங்கம் இந்திய நலத்தையும் விருப்பத்தையும் புறக்கணிக்கிறது. இவை போன்ற கூற்றுகள் இனியும் உண்மையாகா. இருப்பினும், அரசாங்கம் முன்னேற்றமான கொள்கையைக் கையாண்டுவருகிறது என்றால், கொள்கையையும் குறிக்கோளையும் கவனத்தில் கொண்டு ஆழ்ந்து ஆராய்ந்து அதன்பிறகு கையாண்டு வருகிறது என்பது பொருளன்று. அதற்குமாறாக சந்தர்ப்பச் சூழ்நிலையால் இத்தகைய கொள்கை அரசாங்கத்தின்மீது படிப்படியாகத் திணிக்கப் பெற்றுள்ளது என்பதையும் ஒத்துக்கொள்ளவேண்டும். அதோடு கூட இதுவரை இந்தியப் பொருளாதாரப் பிரச்சினை முழுவதும் ஒன்றுகக்கவனத்திற்கு எடுத்துக்கொள்ளப்பெறவில்லை. இதனால் கொள்கையில் இணைப்பும்[2] பொருத்தமும் இல்லை என்பதும்,

[1] V. Anstey. V, 'The Trade of the Indian Ocean', chap. viii, p. 212.

[2] நிதி ஆணைக்கழகத்தின் பெரும்பான்மையோர் அறிக்கை, 'தொழிற்காப்புத் தீர்வைகளை (protective duties) விதிப்பதால்மட்டும் நாம் விரும்பிய அளவுக்குத் தொழில்வளம் கிடைத்துவிடாது' என்றும், இத்தகைய பிரச்சினைகளில் ஒவ்வொரு தொழிலின் நலன்களைவிட, நாட்டின் முழுமையான பொருளாதாரத்தை முதன்மையாகக் கருதவேண்டும் என்றும் குறிப்பிடுகிறது. அவ்வறிக்கையைத் தொடர்ந்து கல்வி, தொழிற்பயிற்சி, தொழிலாளி இடப்பெயர்ச்சி (mobility of labour), இரயில் தீர்வை இவை சம்பந்தமாக அரசாங்கம் மேலும் எடுக்கவேண்டிய நடவடிக்கைகளை வலியுறுத்துகிறது.

இக் கொள்கை நாட்டை நிதிநெருக்கடிக்கு உள்ளாக்கியிருக்கிறது என்பதும் நியாயமான முறையீடுகளே. வாணிபக் கைக்கோள் நல்லெண்ணத்துடன் உருவாக்கப்பெற்றதுதான். இருந்தாலும் மேலேகுறிப்பிட்ட குறைபாடுகளால், அரசாங்கத்திற்கும் வாணிப சமூகத்தினருக்குமிடையே இருந்த பிணைப்பை இறுக்கிக்கொள்வதற்கு அரசாங்கம் எடுத்துக்கொண்ட நடவடிக்கைகளின் முழுப் பயனும்கிடைக்கவில்லை. மேலும், 'பேதங் காட்டும் தொழிற் காப்பு'க் (discriminating protection) கொள்கையும் சொல்லப் போனால்அரைகுறையான பயனைத்தான் தந்துள்ளது. 1931ஆம் ஆண்டுவரை அரசாங்கம் கையாண்ட வாணிபக் கைக்கோளின் தரத்தையும் விளைவுகளையும் இங்கு ஆராய்வோம்.

பின்னர் இதை அண்மைக் காலத்திய வாணிபக் கைக் கோளுடன் ஒப்பிடலாம். இதற்குமுன், பேதங்காட்டும் தொழிற் காப்புக் கொள்கையைக் கையாண்ட சூழ்நிலை அனுகூலமாக இல்லை என்பதை மறந்துவிடக்கூடாது. வாணிபத்தைச் சீர்குலைய வைத்த உலகெங்கும் நிலவிய குழப்பமும் மேற்கூறிய நிதி நெருக்கடிகளும், அரசியல் அவநம்பிக்கையால் எழுந்த எண்ண வேறுபாடுகளுமே இதற்குக் காரணங்களாகும்.

இரண்டாவதாக, 'பேதங்காட்டும் தொழிற்காப்பின்' தகுதி தத்துவார்த்த காரணங்களைமட்டும் பொறுத்ததன்று; இந்தியாவின் பொருளாதாரக் குறிக்கோளை அடைவதற்குச் சிறந்தது எனக் கருதப்பெறும் கொள்கையையும் கைக்கோளைக் கையாண்ட சூழ்நிலையையுமே அது பொறுத்திருக்கிறது.

இந்தியாவின் குறிக்கோள், பொருளாதார வளர்ச்சி முழுமையானதாக இருக்கவேண்டுமென்பதுதான். அதாவது விவசாயமும் தொழில் வளர்ச்சியும் சமநிலையுடையதாக நாடு தன்னிறைவுநிலை அடைவதற்கு ஏதுவாக இருக்கவேண்டும் என்பதில் இந்தியாவின் எண்ணம் ஒருமுகமாக இருக்கிறது.[1]

விவசாயத்தையே நம்பி வாழும் இன்றைய நிலை ஐயமின்றிக் கேடுடையதாகும். குறிப்பாகப் போர்க்காலங்களில் இராணுவ உதவிக்கும், பொருளாதார சாதனங்களுக்கும் வெளி உலகை

[1] இந்திய மக்கள் பொருளாதாரப் பிரச்சினைகளில் அக்கறை காட்டத் தலைப்பட்டதிலிருந்து, இந்தியாவின் ஏற்றத்தாழ்வான பொருளாதார வளர்ச்சி கண்டிக்கப்பட்டு வருகிறது. நாட்டில் பெரும்பான்மையான மக்கள் விவசாயத்தையே நம்பி வாழ, தொழில்கள் குறைவாகவும் நிலக்கரி, இரும்பு, எஃகு போன்ற ஆதாரத்தொழில்கள் பின் தங்கிய நிலையிலுமிருக்க, உணவுப் பொருள்களும் மூலப்பொருள்களும் ஏற்றுமதியாகி, செய்வினை முடிந்த பண்டங்கள் இறக்குமதியாகும் நிலையிருந்தால், அந்த நிலையை ஏற்றத்தாழ்வான பொருளாதார வளர்ச்சி எனலாம்.

நம்பியிருந்தால் நாட்டுக்குத் தீங்கு ஏற்படும். பொருளாதாரத் துறையில் அயல்நாட்டை எதிர்நோக்குவது அரசியல் அடிமைத் தனத்திற்கும் அடிகோலுகிறது. பெரிதும் விவசாயத்தையே நம்பி வாழ்தல், நாட்டைப் பொருளாதாரத் துறையில் பின் தங்கிய நிலையிலேயே இருக்கச்செய்வதுடன் புதிய உற்பத்தி முறைகளைக்கையாளுவதற்கும், தொழிலாளி இடப்பெயர்ச்சிக்கும் சமூக முன்னேற்றத்திற்கும், தொழில் திறனை வளர்ப்பதற்கும் பெருந்தடையாக உள்ளது. தொழிலக வேலைகள் மக்களின் பல் வேறுபட்ட திறமைக்கும் இயல்புக்கும் ஏற்றவாறு அதிக வாய்ப் புகளை அளிப்பதுடன், நாட்டின் சாதனங்களைப் பெருக்குவதற்கும் உதவுகின்றன.[1]

. தொழிலாளர்கள் ஒருவரோடு ஒருவர் நெருங்கிப் பழகவும், தங்களுடைய கருத்தைப் பரிமாறிக் கொள்வதற்கும் தொழி லகங்கள் வாய்ப்பளிக்கின்றன. இதனால், மக்களிடையே அறிவுத் திறன் வளர ஏது இருக்கிறது. இந்தியாவில் மாற்று வேலை களுக்கு வாய்ப்பிருந்திருந்தால், எல்லாவற்றையும்விடச் சிறந்த தொழிலை மேற்கொள்ளும் எண்ணம் மக்களிடையே வளர்ந் திருக்கும்; பொருளாதார நோக்கமும் (Economic motive) வலுப் பெற்றிருக்கும். தலைமுறைக்குத் தலைமுறை நிலத்தைப் பங்கிட்டுக் கொள்வதும், பரம்பரைச் சொத்தை விடாமல் அதையே முற்றிலும் நம்பி வாழ்வதும், இதனால், கடன் தொல்லையை வர வரழைத்துக்கொள்வதும், லேவாதேவிக்காரர்களின் பிடியில்

[1] இக் கருத்துக்கு எதிராக, சிலர் வாதிடுகிறார்கள். தொழிலகங்களில் வேலை வாய்ப்புகள் அதிகரிப்பதால் உணவுப் பொருள்களின் உற்பத்தி பெருகாது, ஆகவே, இந்தியப் பொருளாதாரச் சாதனங்களும் அதிகரிக்காது என்று அவர்கள் கூறுகிறார்கள். வேளாண்மை குறையும்பொழுது குடியானவர்கள் தங்களுடைய உடைத் தேவைகளைக் குறைத்துக்கொள்வதால், 19ஆம் நூற்றாண்டில் ஏற்பட்ட பஞ்சங்களின்போது நெச வாளர் சமூகம்தான் முதலில் பாதிக்கப்பெற்று நிவாரணம் தேடினார்கள் என்பதைத் தங்களுடைய கருத்துக்கு மேற்கோளாகக் காட்டுகிறார்கள். இக் நிகழ்ச்சி உண்மையில் நடந்தது என்றாலும் அதற்காகக் காட்டும் காரணம் பொருத்தமானதன்று. இந் நிகழ்ச்சிக்கு முக்கியக் காரணம், நெசவாளர்கள் தங்களுடைய சரக்குகளை விற்பனை செய்யப் பஞ்சத்தால் தாக்குண்ட குடியானவர்களையோ அல்லது அருகிலுள்ள தொழிற் பகுதிகளையோ மட்டும் நம்பி வாழ்ந்ததுதான். இத் தொகுதியில் உள்ளவர்களும் தங்களு டைய பொருள்களை விற்பனை செய்யப் பஞ்சத்தால் பாதிக்கப்பெற்ற அதே தொகுதி யிலரைத்தான் நம்பியிருந்தனர். இதற்குப் பதிலாக, பெரிய நகரங்களுக்கும் தொலைவி லுள்ள தொகுதிகளுக்கும் விற்பனை செய்வதற்கோ அல்லது ஏற்றுமதி செய்யும் நோக்கத்துடனோ, நெசவாளர்கள் பெருமளவில் சரக்குகளை உற்பத்திசெய்திருந்தால், நெசவாளர் வாழும் பகுதிகளில் வேளாண்மை குறைவதால் விற்பனையோ அல்லது கூலிகளோ குறைந்திருக்கா. மாற்று வேலைகளுக்கு வாய்ப்பு இருந்திருந்தால் (alternative occupations) பஞ்சத்தால் பாதிக்கப்பெற்ற பகுதிகளின் துயரத்தை வெகுவாகக் குறைத்திருக்கலாம். (V. Moral and Material Progress of India, 1911–12, p. 272). குடியானவர் ஒருவர் இறந்து அவர் விட்டுச்செல்லும் நிலத்தை மைந்தர்கள் அனைவரும் பங்கிட்டுக்கொண்டால், கிடைக்கும் சிறிதளவு நிலத்தைக் கொண்டு ஒவ்வொருவரும் நலிந்த வாழ்க்கைதான் நடத்த முடியும். இதற்குப் பதிலாக, மைந்தர்களில் ஒருவர் மட்டும் விவசாயத்தை மேற்கொள்ள, மற்றவர்கள் தொழிற் சாலைகளில் ஏதாவது வேலைக்கமர்ந்தால் ஒவ்வொரு குடும்பத்தின் பொருளாதார நிலையும் மேன்மையுடையதாக இருக்கும் என்பதில் ஐயமில்லை.

நிரந்தரமாகச் சிக்குண்டு, தங்களுக்கு இருக்கும் சிறிதளவு சுதந்திரத்தையும் இழப்பதும் இன்று இந்திய விவசாயிகளின் வாழ்க்கையில் சாதாரணமாகக் காணப்படுபவை. மாற்று வேலைகளுக்கு வாய்ப்பிருந்தால் இவை அனைத்துக்கும் முடிவு கட்டியிருக்கலாம்.[1]

ஆகையால் இந்தியாவில் தொழிலையும் விவசாயத்தையும் சிறந்த முறையில் சமனுக்க வேண்டுமென்பதற்கும், தன்நிறைவு நிலையை (self-sufficiency) அடைய வேண்டுமென்பதற்கும் வலியுறுத்தும் காரணங்கள் பல உள்ளன. இத் துறைகளில் அரசாங்கத்திற்குள்ள இடையூறுகளைக் கருத்தில் கொண்டு, இன்னல்களை எதிர்த்து நிற்கும் திறனைடு[2] குறிக்கோளை மேற்கொண்டால் வாணிபக் கைக்கோள் சம்பந்தப்பட்ட பல்வேறு சீர்திருத்தங்களின் தகுதியையும் முக்கியத்துவத்தையும் சீர்தூக்கிப் பார்ப்பது எளிதாக இருக்கும். இதனால், விரும்பிய பலனைத் தொழிற்காப்பு வரிகளால்[3] மட்டும் அடையமுடியும் என்றோ அல்லது தன்நிறைவு என்ற குறிக்கோள் வெளிநாட்டு வாணிபத்தை மிகக் குறைந்த அளவுக்குச் சுருக்கவேண்டுமென்று குறிக்கிறது என்றோ எண்ணிவிடக் கூடாது. தடையிலா வாணிபக் கொள்கை பன்னூட்டுக் கூட்டுறவை ஆதாரமாகக் கொண்டது. ஒவ்வொரு நாடும் தன்னுடைய தராதரப் பயனுடைய (comparitive advantage) உற்பத்தித் துறைகளை ஒரு முகப்படுத்தி, தன்னுடைய சிறப்புப் பொருள்களின் (specialities) நுகர்வுபோக, மிஞ்சியதை

[1] முற்றிலும் விவசாயத்தை நம்பிவாழும் ஒரு நாட்டை, விவசாயமும் தொழில் வளர்ச்சியும் சமமான வீதத்தில் வளரும் நிலைக்கு மாற்றவேண்டுமானால், அந் நாட்டின் வளர்ச்சிக்கட்டத்தில் தொழிற்காப்புத் தீர்வைகளை விதிக்கவேண்டியது மிக அவசிய மாகும். தொழிற்காப்புத் தீர்வைகளை விதிக்காவிட்டால் அந் நாட்டின் 'சிற்றிளந் தொழில்கள்' (infant industries), வளர்ச்சியடைந்த நாடுகளின் போட்டியால் அழிய நேரிடும் என்பது 'லிஸ்டு' (Frederick List) என்பவருடைய கொள்கையாகும். இந்தியாவின் தொழிற்சக்திக்கும், தொழிற்சாதனைகளுக்கும் உள்ள இடைவெளிதான், லிஸ்டினுடைய கொள்கை இந்தியாவில் முழுமனத்துடன் கையாளுவதற்குக் காரணமாக இருந்தது எனலாம். (Asiatic Review, April 1923, 'Protection of India,' by Dr. Gilbert Slater).

[2] எடுத்துக்காட்டாக இத்தகைய இன்னல்கள் அமெரிக்காவில் இருப்பதைவிட இந்தியாவில் மிகமிக அதிகம். அமெரிக்காவுக்கு, கேவலமான வாழ்க்கைத் தரத்தில் தலைமுறை தலைமுறையாக உழன்று அதைத் தங்களுடைய விதிப்பயன் என்று கருதும் மக்களையும், கல்வியறிவு இல்லாத குடியானவர்களையே பெரும்பான்மையாகவும் கொண்ட சமுதாயத்துடன் ஈடுபாடு கொள்ளவேண்டிய அவசியம் ஏற்படவில்லை. அமெரிக்க வாழ்க்கைத்தரத்திற்குக் குறைந்த வாழ்க்கைத்தரமுள்ள மக்கள் கூட்டமொன்று அமெரிக்காவை ஆக்கிரமித்தால் நேரிடக்கூடிய இன்னல்களை அமெரிக்கா நன்குக அறியும்! மேலும், இந்தியாவின் எரிபொருள், மின்சக்திச் சாதனங்கள் மக்கள் தொகையுடன் ஒப்பிட்டால் குறைவாகத்தான் உள்ளன.

[3] மேற்கூறிய குறிக்கோளை அடைவதற்கான ஒரேவழி தொழிற்காப்புச் சுங்கங்களை விதிப்பதுதான் என்ற கருத்து கடந்த காலத்திலிருந்தது. பொருளாதாரக் கொள்கையின் இப் பகுதிக்குப் பொருத்தமில்லாத ஒரு முக்கியத்துவமும் கொடுக்கப்பெற்று வந்தது.

மற்ற நாடுகளின் சிறப்புப் பொருள்களின் மிகுதிக்கு மாற்றிக் கொண்டால், உழைப்பையும் (labour)மூலதனத்தையும் மிக அதிக இலாபகரமான வழியில் பயன்படுத்தலாம் என்பது இக் கருத்தின் சாரமாகும். பொருளாதாரத் துறையில் பின்தங்கிய ஒரு நாடு, குறிப்பிட்ட தொழில்களுக்குப் பாதுகாப்பளித்துச் செயற்கை முறையில் வளர்ப்பதைவிட, பொருளாதார முன்னேற்ற நாடு களுடன் தடையற்ற தொடர்புகொண்டு வாணிபம் செய்வது, அதிகப் பயனுடையதாக இருக்கும். தொழிற்காப்புக் கொள்கை உழைப்பையும் மூலதனத்தையும் அதிகப் பயன் தரக்கூடிய துறை களிலிருந்து குறைந்த பயன் தரக்கூடிய துறைகளுக்கு மாற்றி விடுவதோடல்லாமல், நிறமையற்ற நிருவாகத்தை ஊக்குவித்து விலையேற்றத்தினால் பொதுமக்களையும் பாதிக்கிறது;[1] அதனுடன் அரசியல் லஞ்ச ஊழல்களைப் பெருக்கி, பெருத்த இலாபமடையும் டிரஸ்டுகளும் (trusts), விற்பனை முற்றுரிமையாளர்களும் (monopolies) வளர்ச்சியடைய வழிசெய்து கொடுக்கிறது.

ஆனால், தொழிற்காப்புக் கொள்கைக்கு ஆதரவளிப்பவர்கள் பின்வருமாறு வாதிடுகிறார்கள்: நாடு தன்னிறைவு நிலையை அடைய வேண்டும் என்ற குறிக்கோளும் தொழிற்காப்புச் சுங்க வரிக் கொள்கையும்[2] எப்பொழுதும் ஒன்றோடு ஒன்று இணைந்தே இருக்கின்றன. தொழிற்காப்புக் கொள்கைக்கு எதிரான உள்ள வாதங்களில் பலவும் பொருளாதார நியதியை மீறியவையாகும் சிற்றிளந் தொழில்களுக்குத் தொழிற்காப்பு அளிக்கும் ஒரு சட்டம் நாளாவட்டத்தில், தடையிலா வாணிபக் கொள்கையைவிட அதிகச் செல்வத்தை அளிக்கும் உணவுப் பொருள்களையும், மூலப் பொருள்களையுமே மிகுதியாக உற்பத்தி செய்வதும், பொருள்வள முன்னேற்றத்தில் மிக உயர்ந்த நிலையிலுள்ள இங்கிலாந்துடன் நெருங்கிய தொடர்பு கொண்டதுமான இந்தியாவுக்கு இக்கூற்று முற்றிலும் பொருந்தும். தடையிலா வாணிபக் கொள்கையைக் கடைப்பிடித்தால், இந்தியா ஒரு நாளும் தொழில் வளர்ச்சியை அடைய முடியாது.

[1] தொழிற்காப்புக் கொள்கை, இந்தியாவில் துய்ப்போர் (consumers) அனை வரையும் பாதிக்கிறது என்பதும், பேரளவுத் தொழில்களில் ஈடுபட்டுள்ள ஒரு சிறு வகுப்பினரை மட்டுமே பயனடையச் செய்கிறது என்பதும் வெளிப்படையானவை. இக் கொள்கையை வாணிபத்துறையிலும் தொழில்துறையிலும் ஈடுபட்டுள்ளவர்கள் மட்டுமே ஆதரிக்கிறார்கள். துய்ப்போர் பொருள்களுக்கு அதிக விலை கொடுப்பதைத் தவிர்க்க முடியாது என்றும் இவர்கள் கருதுகிறார்கள்.

[2] இந்தியா தன்னிறைவு நிலையை அடையவேண்டு மென்பதிலும், முழுமையான பொருளாதார வளர்ச்சியைப் பெறவேண்டுமென்பதிலும் நாட்டில் கருத்து ஒருமுகமாக இருந்தது. இக் கருத்தை அடிப்படையாகக் கொண்டு எழுந்ததுதான் தொழிற்காப்புக் கொள்கையைக் கையாளவேண்டுமென்ற கோரிக்கை. (V. P. A. Wadia, 'The True Basis of Protection in India' Economic Journal, June 1924; and the Proceedings of the Indian Economic Association, 1923, p. 5).

இதிலுள்ள இடையூறு என்னவென்றால் சரியான காலத்தில் சுங்கவரிகளை விதித்தால்தான் தொழிற்காப்புக்கொள்கை பயனுடையதாக இருக்கும். சம்பந்தப்பட்ட தொழில்கள் இறக்குமதியுடன் போட்டியிடக் கூடிய அளவுக்கு வளர்ச்சி அடைந்து, தங்களைத் தாங்களே வளர்த்துக் கொள்ளும் நிலையை அடைந்த பிறகு தொழிற்காப்புச் சுங்கவரிகளை விதிக்கவேண்டும். அவ்வாறு செய்தால்தான் தொழிற்காப்புத் தீர்வைகள் துய்ப்போர்களுக்குப் பெரும்பளுவாக இருக்கா; தொழில் வளர்ச்சியையும் குறிப்பிட்ட அளவுக்குத் துரிதப்படுத்த முடியும்.

இந்தியத்தொழில்களில் ஒன்றிரண்டு விலக்கிக மற்றவைகள் இந்த நிலையை அடையவில்லை யென்றும், நாட்டைத் தொழில் மயமாக்குவதற்குத் தொழிற்காப்புக்கொள்கை ஒரு ராச பாதையாக அமையாது என்றும் சுங்கவரிக் கழகத்தின் ஆய்வுகள் அறிவிக்கின்றன. இந்தியாவில் வருவாய் நோக்கந்தான் முக்கியத்துவம் பெற்றுள்ளது. 1914 முதல் 1931 ஆம் ஆண்டு வரை சுங்கவரி அமைப்பில் ஏற்பட்ட மாறுதல்களினால் தொழிற்காப்பு விளைவுகளை விட வருவாய் விளைவுகள்தாம் அதிகமாக இருந்திருக்கின்றன.[1]

ஏகாதிபத்தியச் சலுகை முறை(Imperial preference)தொழிற் காப்புக் கொள்கை இவை சம்பந்தமான பல வாதங்களை மேலே விளக்கினேம். 1931ஆம் ஆண்டுக்குப் பின்னர் நடந்த நிகழ்ச்சிகளின் சூழ்நிலையில் இவ் வாதங்களை இப்பொழுது மறுபடியும் ஆராயலாம். வரவு செலவுத் திட்டத்தைச் சமனுக்கும் நோக்கத்துடன் 1931ஆம் ஆண்டில் விதிக்கப்பெற்ற புதிய வரிகளும், இங்கிலாந்து தொழிற்காப்புக் கொள்கையையும் ஏகாதிபத்தியச்சலுகை முறையையும் கையாண்டதும், ஜப்பானுக்கும் இங்கிலாந்துக்கு மிடையே நடந்த வாணிப ஒப்பந்தங்களும் இவற்றில் அடங்கியவையாகும்.

வருவாய்த் தீர்வைகளுக்கு உட்பட்ட எல்லா இறக்குமதிகளின் மீதும் 1931 ஆம் ஆண்டில் விதிக்கப்பெற்ற புதிய வரிகள் உண்மையில் பல தொழில்களுக்கும் போதுமான அளவுக்கு தொழிற்காப்பை அளித்தன. இதைச் சுங்கவரிக் கழகம் பரிசீலனை செய்யவில்லை. இங்கிலாந்து, தொழிற்காப்புக் கொள்கையைக்

[1] 14ஆம் அத்தியாயத்தைப் பார்க்கவும். எஃகு, எஃகு சம்பந்தமான தொழில்களுக்கு அளிக்கப்பெற்ற அரசாங்கக்கொடைகள் (bounties) கூட அரசாங்க வருவாய்க்கு நேரிடையான பளுவாக அமையவில்லை. காரணம், இறக்குமதியான எஃகுப் பொருள்களின்மீது விதிக்கப்பெற்ற தீர்வைகள் இவற்றிற்கு ஈடு செய்தன.

கடைபிடிக்கத் தலைப்பட்டதும், 1932 ஆம் ஆண்டில் நடந்தேறிய ஒட்டாவா ஒப்பந்தங்களும் இந்தியாவுக்கிருந்த ஏகாதிபத்தியச் சலுகை முறையின் முக்கியத்துவத்தையே மாற்றிவிட்டன. இங்கிலாந்து தடையிலா வாணிபக் கொள்கையைக் கையாண்டுவந்த பொழுது, ஏகாதிபத்தியச் சலுகை முறையினால் இந்தியாவுக்குக் கிடைத்த பயன் மிகக் குறைவுதான். ஆனால், இங்கிலாந்து தொழிற்காப்புக் கொள்கையைக் கையாளத் தொடங்கியதும் ஏதாவது சலுகை ஏற்பாடு இருந்தாலன்றி இந்தியப் பண்டங்கள் இங்கிலாந்தில் நுழைய முடியாது என்ற நிலை ஏற்பட்டது.

இதற்கிடையில் சுங்கவரிக் கழகம் மேலும் பல விசாரணைகளை மேற்கொண்டது, 1932ஆம் ஆண்டில் நடந்தேறிய ஒட்டாவா ஒப்பந்தம் சலுகை முறையை மேலும் விரிவடையச் செய்தது. தொழிற்காப்புத் தீர்வைகளைப் பரவலாக்குவதற்கும், புதுப்பிப்பதற்கும் சுங்கவரிக் கழகத்தின் விசாரணைகள் உதவியாயிருந்தன. இந்தியா, ஜப்பானுடனும் இங்கிலாந்துடனும் வாணிப ஒப்பந்தங்கள் செய்துகொண்டது. இவ்வொப்பந்தங்கள் வாணிபக் கட்டுப்பாட்டின் புதிய முறைகளை இந்தியாவில் புகுத்தியதுடன், இந்திய வாணிபத்தையும் வாணிபத் தொடர்பையும் நிலைப்படுத்த உதவியாயிருந்தன.

மேற்கூறிய முக்கிய நடவடிக்கைகளை அத்தியாயம் xvii-ல் விரிவாக ஆராயலாம். தற்காலிகமாகக் கையாண்ட தேர்ந்தளிக்கும் தொழிற்காப்புக் கொள்கைக்கும் (discriminating protection), சோதனை முறையில் கையாண்ட சலுகை முறைக் கொள்கைக்கும் பதிலாக அரசாங்கம், 1931ஆம் ஆண்டுக்குப் பின்னர், பொதுவான தொழிற்காப்புக் கொள்கையையும் சலுகை முறையையும் கையாண்டது என்பதை மட்டும் இங்குக் குறிப்பிட்டால் போதும்.

14. நிதி அமைப்பும் நிதியியல் நடவடிக்கைகளும்

§ 1. முன்னுரை

நிதியியல் அமைப்பினாலும், நிதிக் கொள்கையினாலும் பொருளாதார வளர்ச்சியில் ஏற்பட்ட மாற்றங்கள்—இந்தியாவில் தனித்தன்மை வாய்ந்த நிதி இடையூறுகள்—அத்தியாயத்தின் தொகுப்பு முறை.

§ 2. நிதிக் கட்டுப்பாடு

1860–1921-ல் இந்திய வரவு செலவுத்திட்டக் கட்டுப்பாடு—சீர்திருத்தங்களுக்கு முன்னர் மத்திய மாகாண அரசாங்கங்களுக்கு இடையே இருந்த தொடர்புகள்—நிதி அமைப்பில் சீர்திருத்தங்களால் ஏற்பட்ட மாறுதல்கள்—மத்தியக் கட்டுப்பாட்டிற்கு உட்படுத்தப்பெற்ற இனங்கள்—ஒதுக்கிவைக்கப்பெற்றதும் (reserved) மாற்றிக்கொடுக்கப் பெற்றதுமான (transfered) மாகாண இனங்கள்—1921ஆம் ஆண்டுக்குப் பின்னர் மத்திய, மாகாண வரவு செலவுத்திட்டங்களின்மேல் உண்டான கட்டுப்பாடு.

§ 3. அரசாங்க நிதிச்சாதனங்களும் (Resources) செலவும்

19ஆம் நூற்றாண்டிலும், 1920–21ஆம் ஆண்டு வரையிலும் இருந்த முக்கிய வரவு செலவு இனங்கள்—வருவாய்: நிலவருவாய் (Land revenue), அபின், வரிவிதிப்பு, அரசினர் வர்த்தகத் தொழில்துறை (commercial undertakings), சில்லறை வரவுகள் (miscellaneous receipts), நாணயமாற்றம்—செலவு: கடன்பணிகள் (Debt services), இராணுவப்பணிகள், வரிவசூல், வர்த்தகப்பணிகள் (commercial services), சிவில் பணிகள் (civil services), பஞ்சத்தடுப்பும் நிவாரணமும், மாகாணச் சரிக்கட்டல்கள் (provincial adjustments)—சீர்திருத்தங்களுக்குப் பின்னர் கையாளப் பெற்ற புதிய முறைக் கணக்குகள்—1925–26, 1913–14, இவ்விரு ஆண்டுகளின் வரவு செலவு இனங்களை ஒப்பிடல்.

§ 4. அரசாங்க நிதிநிலைமையிலும் நிதிக்கொள்கையிலும் அண்மைக் காலத்து நடவடிக்கைகள்.

19ஆம் நூற்றாண்டிலும், 20ஆம் நூற்றாண்டின் ஆரம்ப காலத்திலும் நிதிபற்றிய குறிப்பிடத்தக்க நிகழ்ச்சிகள்—கர்சான் பிரபுவின் நிதிக் கொள்கை—போர்க்காலத்திலும், போருக்குபின்னரும் நிதி நிலைமை—மாகாண செலுத்துகள்—எதிர்கால நிதி நிலவரம்.

§ 5. சுருக்கமும் முடிவும்

இந்தியாவின் தடைப்பட்ட பொருளாதார வளர்ச்சிக்கு நிதி நெருக்கடி ஒரு முக்கியக்காரணம்—அண்மைக்காலத்தில் சாதனங்களில் அபிவிருத்தி—ஆள் குறைப்பா அல்லது உற்பத்தியாக்கும் செலவா? (productive expenditure)—நடைமுறையில் கையாளக்கூடிய சீர்திருத்தங்கள்.

§ 1. முன்னுரை

'கையிருப்பு (credit) இல்லாத ஒரு மனிதன், சிறகில்லாப் பறவை போன்றவன் ஆவான்; அவன் விண்ணில் பறக்க முனைந்தால் கீழே வீழ்ந்து இறக்க நேரிடும்'.[1]

அரசாங்கச் செலவும், நிதிச்சாதனங்களும், அரசினர் வர்த்தகத்துறைகளின் (Commercial undertakings) நடவடிக்கைகளைக் கையாளும் முறையும், ஒரு நாட்டின் பொருளாதார வளர்ச்சியின் வேகத்தையும், அதன் போக்கையும் பாதிக்கின்றன என்பது தெளிவான தொன்றாகும். எந்த ஓர் அரசாங்கத்தின் கொள்கையும் அதனிடம் இருக்கிற அல்லது இருக்கக்கூடிய நிதிச்சாதனங்களைப் பொறுத்துத் தானிருக்கிறது. தனியார் தொழில் (private-enterprise), அரசினர் தொழில் (public enterprise) இவற்றின் வளர்ச்சி, மூலதனத்தையும் செலாவணியையும் அதிக அளவில் திரட்டுவதற்கும் பெருக்குவதற்கும், தேவையான சக்தியையும் கருவிகளையும் அவைகள் தங்களிடம் கொண்டிருக்கின்றனவா, இல்லையா என்பதைப் பொறுத்துத் தானிருக்கிறது. ஆகவே இந்தியாவில் நிதிமுறை, பணமுறை (monetary system) இவைகளின் அமைப்புப் பற்றியும் வளர்ச்சி பற்றியும், பொருளாதார வளர்ச்சிக்கும் மேற்கூறியவைகளுக்கும் உள்ள தொடர்பு பற்றியும் இங்கு விளக்கம் தரப்பட வேண்டும். நிதி அமைப்பையும் நிதிக் கொள்கையையும், இவற்றின் விளைவுகளையும் இவ்வத்தியாயத்திற் காண்போம். பாங்கித் தொழில் முறையையும் (Banking system) பணமுறையையும் அடுத்த அத்தியாயத்தில் விளக்குவோம்.

பொது நிதியை (Public funds) எழுப்புவதிலும், செலவிடுவதிலும் ஓர் அந்நிய அரசாங்கத்தின் பணிஒருபோதும் எளிதன்று. அதுவும், இந்தியா போன்ற நாட்டில் அப்பணி மேலும் சிக்கலாகிறது. காரணம் சமூக, மத சம்பந்தமான வழக்கங்களிலும், நிலையங்களிலும் தலையிடும் எந்தச்சீர்திருத்தங்களும், சட்டத்தையும் ஒழுங்கையும் பேணுவதற்குப் பெருந்தடையாக வுள்ளன. ஆகவே,

[1] கீழை நாட்டுப் பழமொழி.

பிரிட்டிஷ் அரசாங்கம் கையாண்ட நிதிக்கொள்கை, அவர்கள் ஆட்சி இந்தியாவிற்கு வருமுன் நிலவிய முறையையே முற்றிலும் தழுவியிருந்தது. மேலும், சமூக, பொருளாதாரத்துறைகளில் ஆக்க வேலைக்கான கொள்கையைக்[1] கையாளுவதற்கு நிதி நெருக்கடி ஒரு தடங்கலாக இருந்தது. ஒருபுதிய ஆட்சி முறையை நிருவகிப்பதற்குத் தேவையான நிதியை, மக்களுக்குப் பெரும் பளுவர்க இல்லாமலும், அரசியல் வகுப்பினரின் வெறுப்பு உணர்ச்சியைத்தேடிக்கொள்ளாத வகையிலும், நலிந்தவாழ்க்கை நடத்தும்குடியானவர்களையே பெருவாரியாகக் கொண்ட மக்கள் தொகையினரிடமிருந்து திரட்டுவதில் அரசாங்கம் சொல்லொணு இன்னல்களை அனுபவித்தது.

இந்தியாவில் போகப் பொருள்களின் (luxuries) மேல் வரி விதித்தால் அது மக்களின் ஒரு சிறுபான்மையினரைத்தான் பாதிக்கிறது. ஆதலால் எதிர்ப்பைத் தூண்டும் என்பதோடல்லாமல், இத்தகைய வரிகள் மூலம் மொத்த நிதியின் ஒரு பெரு மளவைப் பெறுவதுஎன்பதும் இயலாத செயலாகும். செல்வர்கள் மேல் விதிக்கப்பெறும் நேர்முகவரி (direct taxation) மூலம் கிடைக்கும் நிதியும், இதைப் போன்று குறைந்த அளவாகவே இருக்கும். இந்தியா போன்ற நாடுகளில் இத்தகைய நேர்முக வரியை எல்லா வகுப்பினர்கள் மேலும் விதிப்பது (இந்த வரியின் இயல்பால், இதை ஒத்தி வைக்கவோ, தவிர்க்கவோ அல்லது புரட்டல் (shifting) செய்யவோ முடியாது) என்பது, கட்டாயம் கொடுமை விளைவிப்பதாகவே முடியும். ஏழை மக்கள்மேல் மறைமுகமான வரியைத்தான் (indirect taxation) விதிக்கலாம். ஆனால், மக்களில் பெரும்பாலோரும் தங்களுடைய தேவைகளைத் தாங்களே உற்பத்தி செய்துகொள்வதால், மறைமுக வரியை உப்புப் போன்ற மிக அவசியமான பண்டங்களின்மேல் தான் விதிக்க நேரிடும். இத்தகைய வரிகளும் நேர்முக வரிகளைப் போன்றே பளுவாக அமையும் என்பதனை விளக்க வேண்டிய அவசியமில்லை. இந்த நூற்றாண்டின் துவக்க காலம்வரை அரசாங்கத்தின் வரி பெருமளவும் பயிர்செய்யும் குடியானவர்களிடமிருந்து ஒரு பகுதியும், குத்தகைக்கு நிலம் விடுபவர்களிடமிருந்து ஒரு பகுதியுமாக வசூலிக்கப்பெற்ற நிலவருவாயே (இந்த நிலவருவாய் வரிவிதிப்பு என்று வகைப்படுத்தப்பட்டுள்ளதோ, இல்லையோ). அதனுடன் கூட, இன்றியமையாப் பொருள்கள் (necessities) மீதுள்ள மறைமுக வரிவிதிப்பு மூலமும் கிடைத்தது. அதற்குப்

[1] ஒரு சுதேச அரசாங்கமானல் மேனாட்டு நிருவாக முறையைக் கையாள முயன்றிருக்காது. மேலும், அரசுப்பணியாளர்கள் (officials) கட்டாயம் திறக்குறைவும் லஞ்ச ஊழல்களும் கொண்டவர் ஆயினும், அவர்களின் பணிகளைக் குறைந்த செலவில் பெற்றிருக்கும்.

பின்னர் வர்த்தகத் தொழில் துறை (commercial undertakings) மூலம் நிகர வருவாய்க்குப் பெருந்தொகை கிடைத்தது. நிலவருவாயையே நம்பி இருப்பதால் மற்றொரு இன்னலுக்கும் ஆளாக வேண்டியிருக்கிறது. பருவ மழை உறுதியில்லாதிருப்பதால் ஆண்டுதோறும் இந்தியாவின் நிதிச் சாதனங்கள் பெரிய ஏற்றத் தாழ்வுகளுக்கு இடமாகவேண்டியிருக்கின்றன. மேலும், பஞ்சத் தடுப்புக்கும் நிவாரணத்திற்கும், நிதி அதிக அளவில் தேவைப் படும்போதுதான், நிலவருவாயும் வெகுவாகக் குறைந்து விடுகிறது.[1] மிக அண்மையில்தான் இத்தகைய இடையூறுகளில் பலவற்றையும் தவிர்க்கக் கூடிய வழிகள் கையாளப்பட்டு வருகின்றன.

பின்வரும் பக்கங்களில் நிதிக்கட்டுப்பாடுபற்றி முதலில் ஆராய்வோம். அதைத்தொடர்ந்து அரசாங்கத்தின் முக்கிய நிதிச் சாதனங்கள் பற்றியும்,செலவைப் பற்றியும்,இவைகளின் முக்கியத் துவத்தில் அண்மையில் ஏற்பட்ட மாறுதல்கள் பற்றியும் காண லாம். பின்னால், நிதி நிலவரங்கள், நிதிக்கொள்கை இவைகள் பற்றி 19ஆம் நூற்றாண்டின் முடிவிலிருந்து காலவரிசைப்படி அமைந்த ஒரு குறிப்பும் தரப்படும். அதைத்தொடர்ந்து, நிதி நட வடிக்கைகளின் பொதுவான போக்கைப் பற்றியும், அப் போக் கினால் 1929ஆம் ஆண்டு துவங்கிய மந்த (depression) காலம் வரை, பொருளாதார வளர்ச்சியினால் ஏற்பட்ட விளைவுகள் பற் றியும் பிறிதொரு குறிப்பைக் காணலாம்.

§ 2. நிதிக் கட்டுப்பாடு

இந்தியாவில் சிப்பாய்க் கலகத்திற்குப் பின்னர் அனுசரிக்கப் பெற்ற நிருவாக முறையும், நிதி முறையும் எந்தவித மாறுதலு மின்றி, 1921 ஆம் ஆண்டுவரை நடைமுறையில் இருந்து வந்தன. அந்த ஆண்டில்தான் '1919 ஆம் ஆண்டின் சீர்திருத்தங்களின்மூலம் ஏற்பட்ட மாறுதல்கள்' நடைமுறைக்கு வந்தன. 1858 ஆம் ஆண்டுச்சட்டப்படி நிதி, நிருவாகம் சம்பந்த மான எல்லாஅதிகாரங்களும் தலைமைக் கவர்னர்வசம்(Governor-General) இருக்க வேண்டும் என்று ஏற்பாடாயிற்று. ஆனால், இவ் வதிகாரங்கள், இந்திய மன்றத்துடன் (Council of India) கூட் டாக இயங்கும் 'இந்தியா மந்திரி' (Secretary of State) யின் முடிவான கட்டுப்பாட்டிற்கு அடங்கியவை ஆகும். தலைமைக் கவர்னர், அரசால் (Crown) நியமிக்கப் பெற்றவர். ஆட்சி

[1] சாதாரணமாக பற்றுக்குறை உள்ள தொகுதிகளில் அரசாங்கம் நிலவரியைத் தள்ளிக்கொடுக்கவோ, ஒத்திவைக்கவோ செய்கிறது.

மன்றதின் (Executive Council) உறுப்பினர்களே நியமிக்கும் பொறுப்பு அவரைச் சார்ந்தது. சட்டமியற்றும் வேலையில் தலைமைக் கவர்னருக்கு உதவியாக ஒரு சட்டசபை இருந்தது. ஆனால் ஆரம்பத்தில், அச் சபைக்கு நிதிபற்றிய பிரச்சினைகளில் எந்தவித அதிகாரமும் இல்லை. 1892 ஆம் ஆண்டுவரை அச் சபை, நியமிக்கப்பெற்ற உறுப்பினர்களையே கொண்டிருந்தது.[1]

1860 ஆம் ஆண்டில்தான் இந்தியாவின் முதல் வரவு செலவுத் திட்டம் தாக்கல் செய்யப்பெற்றது. அது முதற்கொண்டு 1892ஆம் ஆண்டு வரை, நிதி அறிக்கையைப் பற்றி எந்தவித விவாதமும் சட்டப் பேரவையில் (Legislature) அனுமதிக்கப் பெறவில்லை.[2] மேலும், வரவு செலவுத்திட்டத்தைத் தாக்கல் செய்ய வேண்டும் என்ற நிர்ப்பந்தம்கூட இல்லை. 1862 ஆம் ஆண்டில் நிறைவேறிய சட்டம், சட்டப் பேரவையின் அங்கத்தினர்களுக்கு வரவு செலவுத் திட்டத்தைப் பற்றி விவாதிக்கும் உரிமையைக் கொடுத்தது. ஆனால் திட்டம் சம்பந்தமான நடவடிக்கைகளைப் பிரேரேபிக்கவும், அதன்மேல் ஓட்டெடுக்கவும் அங்கத்தினர்களுக்கு உரிமை கொடுக்கப்படவில்லை.

வரவு செலவுத்திட்டத்தை இந்திய சட்டப் பேரவையின் விவாதத்திற்குப் பிறகு, இந்தியா மந்திரிக்குச் சமர்ப்பித்துப் பின்னர் அவரால் இங்கிலாந்திலுள்ள பாராளுமன்றத்திற்குத் தாக்கல் செய்யப்பெற வேண்டும். இவ்விதம் தாக்கல் செய்வது ஒரு வழக்கமான சடங்காகவே இருந்து வந்தது. மேலும், இந்தியா அலுவலகத்தின் (India Office) செலவினங்களும், இந்தியா மந்திரியின் சம்பளமும் பிரிட்டிஷ் அரசாங்கத்தின் பெயரில் இல்லாமல், இந்திய அரசாங்க வருவாயின்கீழ்க் கணக்கிடப் பெற்று வந்த காரணத்தால், தனிப்பட்ட இனங்களின் மேல் வாக்கெடுப்பு நடைபெறவில்லை. புதிய செலவினம் எதற்கும் இந்திய மந்திரியின் அனுமதியைப் பெற வேண்டியிருந்ததால் நடைமுறையில் நிதிபற்றிய முழுஅதிகாரமும் அவரிடமே இருக்கலாயிற்று.

1909 ஆம் ஆண்டில் நிறைவேறிய 'இந்தியக் கவுன்சில் சட்டம்', இந்திய நிலையை மாற்றியமைத்து, மத்திய,

[1] இச் சபையில் அரசுப்பணியாளர் அல்லாதவர்களே (non-officials) அங்கத்தினர்களாகலாம் என்று, 1892ஆம் ஆண்டில் இந்தியக் கவுன்சில் சட்டம் விதித்தது. இவ்விதி எப்பொழுதும் கடைப்பிடிக்கப் பெற்றது. 'இதனால் மன்றங்களின் அமைப்பில், தேர்தல் என்ற சொல்லே கவனத்துடன் நீக்கியிருந்தாலும், அங்கத்தினர்களைத் தேர்ந்தெடுக்கும் முறை அனுசரிக்கப் பெற்றது' (Sir C. Ilbert, The Government of India, p. 107).

[2] 1873ஆம் ஆண்டுமுதல் 1876ஆம் ஆண்டுவரை, வரவு செலவுத்திட்டம் சட்ட மன்றத்தில் (Legislative Council) தாக்கல் செய்யப்பெறவில்லை.

மாகாண சட்டமன்றங்களில்[1] தேர்தல் முறையையும் உண்டாக்கியது. அதனுடன் அச்சட்டம் வருவாயினங்களையும், செலவினங்களை தனிப்பிரிவுகளாகப் பிரித்து, (சிபாரிசுசெய்யும் முறையில்) தீர்மானங்களைப் பிரேரேபிக்கவும், 'விவாதத்திற்கு உரியவை'[2] என்னும் இனங்களின்மேல் வாக்கெடுக்கவுமான உரிமையை இந்தியச் சட்டப்பேரவைக்குக் கொடுத்தது. ஆனால், அரசாங்கம் இத்தீர்மானங்களுக்கு ஏற்ப நடவடிக்கை எடுக்கவேண்டும் என்ற வலுக்கட்டாயம் இல்லை. ஆகவே, நிதிபற்றிய முழு அதிகாரமும் முன்பு போலவே, 'இந்திய மந்திரி'யின் வசமே இருந்து வரலாயிற்று. இந்த நிலை, 1921ஆம் ஆண்டில் சீர்திருத்தங்கள் உருவாக்கப்பெறும் வரை நிலைத்திருந்தது.

இச் சீர்திருத்தங்கள், நிதிக்கட்டுப்பாட்டை, ஜனநாயக முறைப்படி இல்லாவிட்டாலும், பிரதிநிதித்துவ முறையிலாவது முதன்முதலாகத் தொடங்கி வைத்தன. இத்தகைய பிரதிநிதித்துவக் கட்டுப்பாடும்கூட, அதிகாரத்தையும் பொறுப்பையும் மாகாண அரசாங்கங்களுக்குக் கொடுப்பதன் மூலம் கைவரப் பெற்றது. சீர்திருத்தங்களால் ஏற்பட்ட மாறுதல்களின் இயல்பினைப் புரிந்து கொள்வதற்கு, சீர்திருத்தங்களுக்கு முன்னர் மத்திய அரசாங்கத்திற்கும், மாகாண அரசாங்கங்களுக்குமிடையே நிலவி வந்த தொடர்பை ஆராயவேண்டியது அவசியமாகிறது.

சிப்பாய்க் கலகத்திற்குப் பின்னர் நாட்டு நிருவாகத்தின் பெருமளவையும், மாகாண அரசாங்கங்களே ஏற்று நடத்தி வந்தன. என்றாலும், மிகச்சிறிய செலவினங்களுக்கு மாகாண அரசாங்கங்கள் மத்திய அரசாங்கத்தின் அனுமதியைப் பெற வேண்டியிருந்தது. இந்த முறை ஒரு பக்கம், மத்திய மாகாண அரசாங்களுக்கிடையே ஒய்வில்லாப் பூசலுக்கும், மாகாண நிருவாகங்களில் மத்திய அரசாங்கத்தின் தலையீட்டுக்கும் காரணமா

[1] 1909ஆம் ஆண்டுக்குப் பிறகு மாகாணச் சட்டமன்றங்களில் தேர்தெடுக்கப்பெற்ற அங்கத்தினர்கள் பெரும்பான்மையோரும், மத்திய சட்டசபையில் அரசுப்பணியாளர் பெரும்பான்மையோருமா யிருந்தனர். இந்த நிலை, 1919ஆம் ஆண்டின் சீர்திருத்தங்கள் அனுசரிக்கப்பெற்றவரை நீடித்தது. மத்திய, மாகாண ஆட்சி மன்றங்களுக்கு இந்தியர்களை அங்கத்தினர்களாக நியமிக்கும் கொள்கை 1909ஆம் ஆண்டில் கையாளப் பெற்றது.

[2] பின்வரும் இனங்கள் விவாவதத்திற்கு உரியவை அல்ல என்று விலக்கப் பெற்றன : வருவாயில் : சுங்கவரிகள், தீர்வையில் உள்ளவரிகள், கப்பம், முத்திரை வரிகள், கட்டணங்கள்; செலவில் : கடன்பணிகள், இரயில்வேக்கள், மாகாணச் செலவுகள், ஓய்வூதியம், தற்காப்பு, இராணுவசம்பந்தமான சில வேலைகள், ஒப்படைப்புகள் (assignments), நட்டஈடு (compensations), அரசியல் செலவுகள். இவை நீங்கலாக மற்ற எல்லா முக்கிய இனங்களும் விவாவதத்திற்கு உரியவை ஆகும். (C.N.Vakil, Financial Developments in Modern India, P.6).

யிருந்தது; மற்றொரு பக்கம், மாகாண அரசாங்கத்தாரிடமிருந்து அதிகப்படியான நிதியைக் கேட்டு வந்தார்களே ஒழிய, அந்நிதியைத் திரட்ட வேண்டிய பொறுப்பு அவர்களுடையது அன்றுதலால், மாகாண வீண் செலவுக்கு ஊக்கமளிப்பதாகவும்இருந்தது.

இந்த நிலை, மேயோ பிரபு அவர்களை 1870ஆம் ஆண்டில் அதிகாரப் பரவலாக்குத் திட்டத்தை[1] (decentralisation) உருவாக்கத்தூண்டியது. இத் திட்டத்தின்படி, சில குறிப்பிட்ட பணிகளும். அப்பணிகள் சம்பந்தமான முழுப் பொறுப்பும் மாகாணங்களிடம் ஒப்படைக்கப் பெற்றன. மாகாண அரசாங்கத்தின் வருவாய், அரசாங்கப் பணிகளுக்காகக் கிடைக்கும் வரவுகளையும் மத்திய அரசாங்கத்திடமிருந்து கிடைத்த ஆண்டு உதவித் தொகையையும் கொண்டிருந்தது. 1877ஆம்[2] ஆண்டுக்குப் பின்னர் இந்த உதவித் தொகைகள் ஆண்டுக்கு ஒரு முறையில்லாமல் ஐந்தாண்டுக்கு ஒருமுறையாக மாற்றப்பெற்றன. அதனுடன், மாகாணங்களுக்கு அதிகப் பொறுப்பைக் கொடுத்து, அதன் மூலம் நிருவாகத்தில் சிக்கனத்தையும், திறமையையும் வளர்க்கும் நோக்கத்துடன் நிலையான ஓர் உதவித்தொகையை அளிப்பதற்குப் பதிலாக மாகாணங்களுக்குச் சில வருவாயினங்களை ஒதுக்கி, அவ்வினங்கள் மூலம் கிடைக்கும் வருவாய் அம்மாகாணங்களுக்கே கொடுக்கப் பெற்றன. இவ்வருவாய் 'ஒப்படைக்கப் பெற்ற வருவாய்' (Assigned Revenues) என்றழைக்கப்பெற்றது. முடிவில் மாகாண அரசாங்கங்களின் வரவும் செலவும் 'சரிக்கட்டும் ஒப்படைப்பு' ((Adjusting assignment) என்னும் முறையால் ஈடு செய்யப் பெற்றது. இந்த முறைப்படி நிகர வரவிலும் செலவிலும் எதிர்பார்த்ததற்குமேல் ஏற்படும் மாற்றத்தை (மாற்றம் உபரியாலும் சரி அல்லது பற்றுக்குறையாலும்சரி) மத்திய, மாகாண அரசாங்கங்கள்[3] சமமாகப் பங்கிட்டுக் கொள்ளவேண்டும். மாகாண அரசாங்கங்கள் செய்த நிருவாக மேம்பாட்டின் மூலம் கிடைத்த அதிக வருவாயில் ஒரு பங்கை, மத்திய அரசாங்கத்திற்கும் கொடுக்கும் நோக்கத்துடன், 1882–83ஆம் ஆண்டிற்குப்

[1] உண்மையில், நிருவாகப் பரவலாக்கல் என்னும் திட்டத்தின் ஒரு சிறுபாகம்தான் நிதிப் பரவலாக்கல் என்பதாகும்.

[2] மத்திய, மாகாண அரசாங்கங்களுக்கிடையே நடந்த ஒப்பந்தங்கள் மாகாண நிர்ணயங்கள் என்றழைக்கப் பெற்றன. இந்த ஒப்பந்தங்கள் 1877ஆம் ஆண்டில் எல்லா மாகாணங்களிலும் ஒரே முறையில் அனுசரிக்கப் பெறவில்லை. ஒப்பந்தங்களின் விவரங்கள் மாகாணத்திற்கு மாகாணம் மாறுதலுடையனவாயிருந்தன. 1877ஆம் ஆண்டிற்குப் பிறகும் கூட சில ஒப்பந்தங்கள் நிறைவேறின. (Vide C. N. Vakil, Financial Developments in Modern India' pp. 28,29).

[3] Vide B.R. Ambedkar, The Evolution of Provincial Finance in British India, p. 83.

பிறகு சில நிதி மூலங்களை மத்திய, மாகாண அரசாங்கங்கள்[1] பங்கிட்டுக் கொண்டன.

ஏறக்குறைய எல்லா மாகாணங்களும், தங்களுடைய தேவைக்காகப் பின்வரும் இனங்களை வைத்துக்கொண்டன: (1) மாகாணக் கட்டணங்கள் (முழுவதும்); (2) நீதி மன்றங்கள், சிறைகள், போலீஸ், கல்வி, மருத்துவப் பணிகள், உள்நாட்டுக் கடல் துறைப்பணிகள், விஞ்ஞானத் துறைகள், ஓய்வூதியத் தொகைகள், சிறுபாசன வேலைகள், சில மாகாண இரயில்வேக்கள், சில பெரும் பாசன வேலைகள், கட்டடங்கள், சாலைகள், எழுது பொருள் துறை (Stationery Department) முதலியன; (3) முத்திரைவருவாயில் நான்கில் மூன்று; (4) தீர்வையில் உள்ள வரிகள், காடுகள், பத்திரப் பதிவு இவைகளில் பாதி; (5) நிலவரியில் அவ்வப்போது மாறுதலுக்குரிய ஒரு பகுதி (சாதாரணமாக கால்பங்கு); (6) ஆயத்தீர்வையில் கால் பங்கு (வங்காளமும், பர்மாவும் அரைப் பங்கை நிறுத்திக் கொண்டன.)[2] மாகாணங்களுக்கு, மத்திய அரசாங்கத்தின் ஒப்புதலின்றி, வரியமைப்பையோ அல்லது வரி விதிப்பு, நிருவாகம் இவை சம்பந்தமான விதிகளையோ மாற்றும் உரிமை இல்லை.

செலவினங்களைப் பொறுத்த அளவில், பின்வரும் இனங்களின் பொறுப்புப் பெரும்பாலும் மாகாண அரசாங்கங்களைச்சார்ந்தது: (i) அரசாங்கப் பணிகளிலிருந்து கிடைத்த வருவாய் முழுவதையுமோ அல்லது அதில் ஒரு பங்கையோ, ஒருமாகாண அரசாங்கம் பெற்றுவந்தால், அப்பணிகளின் செலவும் மாகாண அரசாங்கத்தையே சேரும்; (ii) வரி வசூலுக்கு ஆகும் செலவில் ஒரு பகுதி; (iii) பஞ்ச நிவாரணச் செலவுகள்; (iv) சில அரசியல் செலவுகளும், சில்லறைச்செலவுகளும்.[3]

சுங்கவரிகள், உப்பு, தபால், தந்தி இரயில்வேக்கள், இராணுவ வரவுகளில் சில, சில மாகாணங்களிலிருந்து (குடகு, ஆஜ்மீர், வடமேற்கு எல்லை மாகாணம் போன்றவை) வர வேண்டிய செலுத்துகள் ஆகியவைகளை மத்திய அரசாங்கமே நேரிடையாக வசூல் செய்தது; இராணுவம், இந்தியக் கப்பல்துறை, சில இராணுவப் பாதைகள், இரயில்வேக்கள், தபால்-தந்தி, நாணயச்சாலை, இவைகள் சம்பந்தமான செலவினங்கள் மத்திய அரசாங்கத்தின்

[1] அரசாங்கப் பணிகளிலிருந்து கிடைக்கும் வருவாய் முழுவதையுமோ அல்லது அதன் ஒரு பாகத்தையோ, மாகாண அரசாங்கங்கள் தங்களுடைய உபயோகத்திற்காக நிறுத்திவைத்துக் கொண்டன.

[2] Vide Moral and Material Progress of India, 1901–02; p. 126.

[3] Vide Moral and Material Progress of India, 1901–02, P. 126.

நேரிடைப் பார்வையிலிருந்தன. எல்லா வகையான அரசியல் செலவுகளும், மத்திய அரசாங்கத்திற்கு ஆண்டாண்டு செலுத்துகள் செய்து வந்த மாகாணங்களின் நிதிப் பொறுப்பும் மத்திய அரசாங்கத்திடமே இருந்தன.[1] நாளா வட்டத்தில் மாகாணங்களுக்கு உபரிகள் கிடைத்தால், அவ்வுபரிகள் அந்தந்த மாகாணங்களின் கணக்கிலேயே சேர்க்கப் பெற்றன. ஆனால், நெருக்கடி காலத்தில் அவற்றை எடுத்துக்கொள்ளும் உரிமை மத்திய அரசாங்கத்திற்கு இருந்ததுடன், சட்டபூர்வமான முழுப் பொறுப்பும் மத்திய அரசாங்கத்திடமே[2] இருந்து வரலாயிற்று.

மேற்கூறிய முறையில் பெருங்குறைபாடுகள் இருந்தன. மாகாண நிதி நிர்ணயங்களில் (Provincial Settlements) அவ்வப்போது திருத்தங்களும், மாற்றங்களும் ஏற்பட்டதால், மாகாண நிதியமைப்பில் ஒரு தொடர்ச்சி இல்லாமல் போயிற்று. மத்திய அரசாங்கத்திற்கும், மாகாண அரசாங்கங்களுக்கும் இடையே அடிக்கடி தர்க்கங்கள் எழுந்தன. மாகாண நிதி நிர்ணயத்தின் ஆரம்ப ஆண்டுகளில், சிக்கனத்தைக் கையாளுவது பயன்தரக் கூடியதாக இருந்தது. இருந்தாலும், அடுத்த நிர்ணயத்தில் தங்களுக்குக் கிடைக்க கூடிய பங்கு எங்கே குறைந்துவிடுமோ என்பதைத் தவிர்ப்பதற்காக, நிர்ணய காலத்தின் கடைசி ஆண்டுகளில் அவசரமாக அவசியமற்ற செலவு செய்யும் போக்கு மாகாணங்களிடம் இருந்தது. இதனால் பண விரயம் ஏற்பட்டது. இச்சிக்கலை நிவர்த்திப்பதற்காக 1904ஆம் ஆண்டிலும் 1912ஆம் ஆண்டிலும் (இக்காலங்களில் நிர்ணயங்கள் நிரந்தரமாக்கப் பெற்றன)[3] சில சீர்திருத்தங்கள் செய்யப்பெற்றன. இச் சீர்திருத்தங்களினாலும், மாகாண அரசாங்கங்களுக்கு அதிகமான உரிமையும் பொறுப்பும் கிடைத்தன. ஆனால், கடன் வாங்கவும், மத்திய அரசாங்கத்தின் அனுமதியின்றிப் புதிய வரிகளை விதிக்கவும் உரிமையும் இன்றும் மாகாண அரசாங்கங்களுக்குக் கிடைக்கவில்லை.

இவ்வாறு, 'அதிகாரப் பரவலாக்கல்' என்னும் திட்டம், நடைமுறையில் திட்ட அதிகாரப் பரவலாக்கலாயில்லாமல், நிருவாகப் பரவலாக்கலாகவே இருந்து வரலாயிற்று. இதனால், 1921ஆம் ஆண்டில், சீர்திருத்தங்கள் நடைமுறைக்கு வரும்

[1] Vide Moral and Material Progress of India, 1901–02, Pp. 125, 126

[2] V.B.R. Ambedkar, The Evolution of Provincial Finance in British India, p. 157

[3] கடும் பஞ்சம் நிலவிய காலங்களில்தான் மாகாண அரசாங்கங்களுக்கு, மத்திய அரசாங்கம் நிதியுதவி அளிக்க வேண்டு மென்றும், போர்க்காலங்களிலும், நிதி நெருக்கடி காலங்களிலும்தான் மத்திய நிதிக்கு, மாகாணங்கள் செல்லுகள் செய்ய வேண்டு மென்றும், இக்காலத்தில் ஓர் உடன்பாடு இருந்தது.

வரையில், நிதி அதிகாரம் பெரும்பாலும் மத்திய அரசாங்கத் தாரிடமே இருந்து வந்தது. இருப்பினும், நிதி அதிகாரத்தை ஒரு குறிப்பிட்ட நிதி யதேச்சையாளர்கள், தங்களிச்சைப்படி பிரயோகித்து வந்தனர் என்று கூறுவது பொருந்தாது. உண்மையில் இந்த யதேச்சையாளர்களின் அதிகாரம், நாட்டில் அமைதியை நிலைநாட்டவும், கடும் எதிர்ப்பைத் தவிர்ப்பதற்கு அரசாங்கம் எடுத்துக்கொண்ட நடவடிக்கைகளாலும், வெகு வாகக் குறைக்கப்பட்டிருந்தது. நாட்டின் நிதிக் கொள்கை, நடைமுறையில் ஒரு பழமைக் கொள்கையாகவே இருந்துவந்தது. தன்னுடைய ஆட்சிக்குட்பட்ட நாடுகளின் வரிச்சுமையை, ஓர் அந்நிய ஆட்சி பளுவற்றதாக வைத்திருக்க வேண்டியது மிக மிக அவசியம் என்பது கிரோமர் பிரபுவின் (Lord Cromer) அசைக்க முடியாத நம்பிக்கை. இக்கருத்தை முற்றிலும் தழுவியே, இந்திய அரசாங்கத்தின் நிதிக்கொள்கை உருவாக்கப்பெற்றது என்று கருத இடமுண்டு.

1919ஆம் ஆண்டில் உருவாக்கப்பெற்று, 1921ஆம் ஆண்டில் நடைமுறைக்கு வந்த சீர்திருத்தங்களினால் பின்வரும் மாறு தல்கள் ஏற்பட்டன: அரசாங்கப் பணிகள் அனைத்தும் மத்திய, மாகாண அரசாங்கங்களுக்கு இடையே பொருத்தமான முறையில் 'மறுபங்கீடு' (redistribution) செய்யப்பெற்றன. மாகாண இனங்கள், ஒதுக்கப்பெற்ற இனங்கள் (reserved matters) என்றும், மாற்றிக்கொடுக்கப் பெற்ற இனங்கள் (transfered matters) என்றும் இருவகைகளாகப் பிரிக்கப்பெற்றன. இவ்விரு இனங்களில் பின்னவை, மாகாணச் சட்டப் பேரவையின் மக்கள் தேர்ந் தெடுத்த பிரதிநிதிகளுக்குப் பொறுப்புள்ளவர்களும், கடமைப் பட்டவர்களுமான மந்திரிகளிடம் ஒப்படைக்கும் நோக்கத்துடன் தான், இவ்வாறு பிரிக்கப்பெற்றன. பொறுப்புள்ள சட்டப் பேரவைக்குட்பட்ட அரசாங்கத்தை உருவாக்குவதில், இந்த ஏற் பாடு முதற்படியாக அமையும் என்று கருதியதுடன், காலப்போக் கில் மேலும் பல இனங்களும் 'மாற்றிக் கொடுக்கப்பெற்ற இனங் களின் பட்டியலில் சேர்க்கப்பெறும் என்றும் எதிர்பார்க்கப் பட்டது.

இராணுவத் தற்காப்பு, அரசியல் பிரச்சினைகள், இரயில் வேக்கள், தபால் தந்தி, சுங்கம், வருமானவரி, உப்புவரி, செலா வணி, அரசாங்கக் கடன், சுரங்கங்கள், மத்தியப்போலீஸ், புள்ளி விவரங்களையும் பதிவுகளையும் சேகரித்தல், வர்த்தகத் தொழில் களில் சில, மாகாணப்பட்டியலில் சேர்க்கப்பெறுத இனங்கள்[1]

[1] முழுப்பட்டியலையும், 1920ஆம் ஆண்டின் Indian year Book என்ற நூலில் காணலாம். பருத்தி ஆயத்தீர்வை இரத்தாகும் வரை ஒரு மத்திய இனமாக இருந்தது.

என்பன யாவும் மத்திய அரசாங்கத்தின்கீழிருந்தன. ஒதுக்கி வைக்கப்பெற்ற மாகாண இனங்கள் பின் வருபவைகளாகும்: பாசனம், நிலவருவாய்[1], பஞ்ச நிவாரணம், காடுகள் (பம்பாய் மாகாணம் நீங்கலாக), நீதி நிருவாகம், போலீஸ் நிருவாகம், தொழில் சம்பந்தமான சில அலுவல்கள் (தொழில் நிருவாகம், தொழிலாளர் தகராறுகள் உள்பட), இன்னும் பல வகையான சில்லறை இனங்கள்.

மாற்றிக் கொடுக்கப்பெற்ற மாகாண இனங்களில் பின்வருபவை அடங்கியிருந்தன: தல சுயாட்சி; மருத்துவ நிருவாகம், சுகாதாரம், துப்புரவு; கல்வி; சாலைகள், டிராம் போக்குவரத்து; விவசாயம், மீன்துறை[2]; ஆயத்தீர்வை; மற்றும் பலவகையான சில்லறை இனங்கள்.[3]

[1] 1919ஆம் ஆண்டின் சீர்திருத்தங்களின்படி நிலவருவாய் ஓர் ஒதுக்கம் பெற்ற இனமாக இருந்தது என்பதோடல்லாமல், இவ் வரிவிதிப்பின் முறையும் மற்ற வரிகளிலிருந்து மாறுபட்டிருந்தது. ஆயத்தீர்வை போன்ற மற்ற வரிகளின் கட்டணங்கள் மாகாண முழுவதிலும் ஒரே நிலையில் இருந்தன. இவ்வரிக் கட்டணங்கள் நிதியறிக்கையிலும் சேர்க்கப்பட்டிருந்தன. ஆனால் நிலவரியின் கட்டணத்தை நிர்ணயிக்கும் பொறுப்பு நிருவாகத்துறையின் முடிவுக்கு விடப்பட்டது. ஒரு குறிப்பிட்ட மாவட்டத்தில் நிலத்தீர்வை நடந்தால், நிலத்தீர்வை அதிகாரி நிலவரிக் கட்டணத்தைப் பற்றித் தன்னுடைய யோசனைகளை முதலில், அப்பகுதியிலுள்ள தல்லமை நிருவாக அதிகாரிக்கு அனுப்புகிறார். இந்த அதிகாரி, தன்னுடைய குறிப்புகளுடன் ஆட்சி மன்றத்திற்கு (Executive Council) அனுப்புகிறார். இந்த யோசனைகள் ஒருபொழுதும் சட்ட மன்றத்திற்கு (Legislative Council) வருவதில்லை. ஒரு சட்ட மன்றம், நிலத்தீர்வையின் கட்டணத்தை மாற்ற விரும்பினால் அதனால் செய்யக் கூடிய காரியம், விரும்பிய மாற்றத்தைச் சிபாரிசு செய்து ஒரு தீர்மானம் நிறைவேற்றி அத்தீர்மானத்தை 'ஆட்சி மன்றத்திற்கு' அனுப்பிவைக்கலாம். நிலவருவாயை மாகாணச்சட்ட மன்றங்களின் மேற்பார்வையிலிருந்து நீக்கியிருப்பது உண்மையில், மாகாண நிதியின் 40 முதல் 50 சத வீதத்தொகையை, எந்தவிதப் பிரதிநிதித்துவக் கட்டுப்பாட்டுக்கும் உட்படாமல் செய்கிறது என்று அம்பேத்கார் அவர்கள் சுட்டிக் காட்டியிருக்கிறார். (B.R.Ambedkar, The Evolution of Provincial Finance in British India). தேர்தல் பலம் பெருவாரியாக நகர மக்கள் கையில் இருக்கும் வரையில், கிராம நலன்களை, நகர்ப் புறச் செல்வாக்குப் புறக்கணித்து விடுவதைத் தடுப்பதற்காகத்தான் நிலவருவாய், சட்ட மன்றத்தின் அதிகாரத்திலிருந்து நீக்கிவைக்கப் பெற்றது. இந்த முறையில் மாற்றம், முதலில், 'பஞ்சாப் நிலவருவாய்ச் சட்டத்தின்' மூலம் ஏற்பட்டது. இச்சட்டம், நிலவரி விதிப்பதில் அரசாங்கத்திற்குள்ள சட்ட பூர்வமான அதிகாரத்தை விவரித்து, அதிக பட்சம் வசூலிக்கக் கூடிய நிலவரி, நிலத்தின் நிகர மதிப்பில் மூன்றில் ஒரு பங்குக்கு மேற்படக் கூடாது என்று வரையறுத்து, ஒருமுறை விதித்த வரிவிதிப்பு குறைந்தது நாற்பது ஆண்டுகளுக்கு நடைமுறையில் இருக்க வேண்டுமென்று கட்டுப் படுத்தி, நிலத் தீர்வையை மாற்றும் பொழுது (Resettlement) உயர் மட்டங்களையும் திட்டவட்ட மாக்கியது. நிலவரியின் முழு அடிப்படையும் 1935ஆம் ஆண்டில் நிறைவேறிய சட்டத்தினால், முற்றிலும் மாற்றியமைக்கப் பெற்றது. மாகாண சுயாட்சி கொடுக்கப் பட்டதால் உண்டான பொருளாதார விளைவுகளை 18ஆம் அத்தியாயத்திற் காணலாம். ஆனால், மாகாண சுயாட்சியை அளித்தது, நிலவரி உரிமை (Land tenure) நிலவருவாயமைப்புப் போன்ற சீர்திருத்தங்களுக்கு முன்பிருந்த தடைகளை அகற்றியதுடன், நாட்டின் விவசாய வளர்ச்சிக்குப்பெருந்துணையாகவும் இருக்கும் என்றுமட்டும் இங்குக் குறிப்பிடலாம்.

[2] அஸ்ஸாம் மாகாண மீன்துறை மாற்றப்பெறவில்லை.

[3] முழுப்பட்டியலையும், 1920ஆம் ஆண்டின் Indian Year Book, p. 661 என்ற நூலில் காணலாம். சீர்திருத்தங்கள் நடைமுறைக்கு வந்ததும், மாகாணம் ஒதுக்கி வைக்கப்பெற்ற இனங்களிலும், மாற்றிக் கொடுக்கப்பெற்ற இனங்களிலும் சில மாறுதல்கள் ஏற்பட்டன.

திருத்தப் பெற்ற அரசியலமைப்பின்படி, மத்திய அரசாங்கத்தின் வரவு செலவுத் திட்டம், மத்திய சட்டப்பேரவையின் (Central Legislature) அங்கங்களாகிய சட்டசபை (Legislative Assembly), இராச்சியசபை (Council of State) ஆகிய இருமன்றங்களிலும் நிறைவேற வேண்டும். இவ்விரு மன்றங்களிலும், மக்கள் தேர்ந்தெடுத்த உறுப்பினர்கள் பெருவாரியாக இருந்தனர். கடன் செலவுகள், சம்பளம், ஓய்வூதியம், சட்டத்தால் நிர்ணயிக்கப் பெற்ற செலவு, அரசியல், ராணுவ, மத சம்பந்தமான முக்கிய செலவினங்கள் நீங்கலாக, மற்றைய செலவினங்கள் அனைத்தும் விவாதத்திற்கும், வாக்கெடுப்புக்கும் உரியவைகளாகும். மேற்கூறிய செலவினங்கள் யாவும் இன்னும் நிருவாகத் துறையின்[1] அதிகாரத்தின்கீழ் இருந்து வரலாயிற்று. மேலும், தலைமைக் கவர்னருக்கு[2] இருந்த சான்றளிக்கும் (Certification) அதிகாரம் என்னும் ஒரு தனியுரிமை, சட்டப் பேரவைக்கு நிதி மசோதாவின் மேலிருந்த அதிகாரத்தை வெகுவாகக் குறைத்தது. நிதிபற்றிய எல்லா யோசனைகளும் நிருவாகத் துறையிலிருந்தே, அதாவது 'தலைமைக் கவர்னரின் மன்றத்திலிருந்தே' (Governor-General-in-Council) புறப்பட்டன. இம் மன்றம், நியமிக்கப் பெற்ற அங்கத்தினர்களையே கொண்டிருந்ததால், மத்திய சட்டப் பேரவைக்குப் பொறுப்பில்லை.

மாகாணங்களிலோ, கடன் செலவு, சில அதிகாரிகளின் சம்பளங்கள், ஓய்வூதியம், சட்டத்தால் நிர்ணயிக்கப் பெற்ற சில செலவினங்கள் இவைகள் சம்பந்தமான நிதி யோசனைகளை, மாகாண சட்டப்பேரவைக்குத் தாக்கல் செய்ய வேண்டும் என்கிற நிர்ப்பந்தம்கூட இல்லை. இச் செலவினங்கள், மத்திய அரசாங்கத்தின் 'குறிப்பிட்ட சில விலக்கான இனங்கள்' (Excepted specified items) என்பவைகளுக்கு ஒப்பானவையாகும். ஆனால் மாகாண மொத்தச் செலவில், இத்தகைய மாகாண இனங்களின் வீதம், மத்திய அரசாங்கத்திலிருந்த வீதத்தைவிடக் குறைவாகவே இருந்தது. அதுவும், மத்திய அரசாங்கத்திற்கு, மாகாண அரசாங்கங்கள் செல்லும்[3] செய்யும் முறை நின்ற பிறகு,

[1] 1919-ஆம் ஆண்டின் இந்திய அரசாங்கச் சட்டம், பிரிவு 67 A (3)ஐப் பார்க்கவும். விவாதத்திலிருந்து நீக்கப்பெற்ற இனங்கள் சாதாரணமாக, மத்திய அரசாங்கத்தின் மொத்தச் செலவில் பாதிக்குமேல் இருந்தன.

[2] தலைமைக் கவர்னர், தம்முடைய கடமைகளை நிறைவேற்றுவதற்கு குறிப்பிட்ட ஒரு செலவினம் அவசியம் என்று சான்றளித்தால், நிதி மசோதாவின் ஒரு பிரிவையோ அல்லது அது முழுவதையுமோ திருப்பிக்கொணர்ந்து, சட்டமாக நிறைவேற்றும் உரிமை அவருக்கு இருந்தது.

[3] இவைகளை, சட்டப்பேரவைக்குத் தாக்கல் செய்யவேண்டிய அவசியமில்லை.

இச் செலவினங்கள் மேலும் குறைந்து விட்டன. மற்ற நிதி சம்பந்தமான எல்லா யோசனைகளும் மாகாண மன்றங்களுக்குத் தாக்கல் செய்யப்பெற வேண்டும். ஆனால், தலைமைக் கவர்னருக்குச் சான்றளிக்கும் அதிகாரம் உண்டு. இவர் தம்முடைய பணிகளை நிறைவேற்றுவதற்கு அவசியம் என்று உணர்ந்தால்,[1] 'ஒதுக்கப் பெற்ற' இனங்கள் சம்பந்தமான செலவுக்கு இந்த அதிகாரத்தை உபயோகிக்கலாம். மாற்றிக் கொடுக்கப் பெற்ற இனங்களிலும் கூட, 'மாகாணத்தின் பாதுகாப்பிற்கும் அமைதிக்கும், ஒரு குறிப்பிட்ட அரசாங்கத் துறையை நடத்துவதற்கு' அவசியம் என்று தலைமைக் கவர்னர் உணர்ந்தால்[2] அச் செலவினங்களுக்கு அதிகாரம் அளிக்கும் உரிமையும் அவருக்கு இருந்தது. இதைப் போன்ற, அவசியம் ஏற்பட்டால் நிதி மசோதா முழுவதற்கும் சான்றளிக்கும் உரிமையும் அவருக்கிருந்தது.

சீர்திருத்தங்களில் இருந்த நிதிபற்றியஏற்பாடுகளைச் செயலாக்குவதற்கு, மத்திய அரசாங்க நிதியையும், மாகாண அரசாங்கங்களின் நிதிகளையும் வெவ்வேறுகப் பிரிக்கவேண்டிய அவசியம் ஏற்பட்டது.[3] வருவாயினங்கள், செலவினங்கள் இவைகளில் மத்திய அரசாங்கத்திற்கும், மாகாண அரசாங்கங்களுக்கும் முன்னர்ப் பொதுவாக இருந்த தலைப்புகள் நீக்கப்பெற்றன. இத் தலைப்புகளில், சிலவற்றை முற்றிலும் மத்திய இனங்களாகவும், மற்றவை முற்றிலும் மாகாண இனங்களாகவும் ஆக்கப்பெற்றன. தொடக்க காலத்தில், இப்புதிய ஏற்பாடு மத்திய அரசாங்கத்திற்குப் பெருநிதி நட்டத்தை ஏற்படுத்தியது. இந் நட்டத்தை. ஈடு செய்வதற்காக, மாகாண இனங்களின் செல்லுகளுக்கு அவசியமில்லை[4] என்னும் அளவுக்கு, மத்திய அரசாங்கத்தின் நிதி வளர்ச்சியடையும் வரை, மாகாண அரசாங்கங்கள் செல்லுகள் செய்யவேண்டுமென்று ஏற்பாடாயிற்று.

கீழ்க்காணும் பொருள்கள் வருவாய்கள் மூலம் மத்திய அரசாங்கத்திடம் ஒப்படைக்கப்பெற்றன: அபின், உப்பு, சுங்க வரிகள், வருமான மேல்வரிகள், கப்பங்கள், மத்திய அரசாங்கத் துறைகளின் வரவுகள், நில வருவாய், பாசனம், ஆயத் தீர்வை, முத்திரை, பதிவு, காடுகள், மாகாணத் துறைகளின் வரவுகள்

[1] 1919ஆம் ஆண்டுச் சட்டத்தின் பிரிவு 72 Dஐப் பார்க்கவும்.

[2] 1919ஆம் ஆண்டுச் சட்டத்தின் பிரிவு 72 D (2) b ஐப் பார்க்கவும்.

[3] 1919ஆம் ஆண்டுவரை வரவுசெலவுத் திட்டத்தில், மத்திய அரசாங்கம், மாகாண அரசாங்கம் இவையிரண்டின் வரவு செலவுகளும் அடங்கியிருந்தன. மத்திய அரசாங்கக் கணக்குகள் திட்டத்தில் தனியாகக்காட்டப் பெற்றிருந்தன.

[4] Vide Meston Report of 1919, p. 396.

முதலியன மாகாண அரசாங்கங்களிடம் ஒப்படைக்கப்பெற்றன. கடன் வாங்கவும்[1] புதிய வரிகள் விதிக்கவும்[2] மாகாணங்களுக்குச் சில அதிகாரங்கள் கிடைத்தன. மேலும், அந்தந்த மாகாண எல்லைக்குள் வசூலிக்கப்பெறும் வருமான வரியில் பெருக்கம் இருந்து, அப் பெருக்கம் வருமான வளர்ச்சியால் ஏற்பட்டிருந்தால், அப் பெருக்கத்தில் ஒரு பங்கு அம் மாகாண அரசாங்கத்தைச் சாரும்.

இச் சீர்திருத்தங்களின்படி, இந்தியா அலுவலகத்தின் (India Office) செலவுகள் பிரிட்டிஷ் நிதிக்கு மாற்றியமைக்கப் பெற்றன. இதனால் ஒரு முக்கிய மாறுதலும் ஏற்பட்டது.[3] இந்த ஏற்பாடு இந்தியப் பிரச்சினைகளை விவாதிக்கவும், தாக்கிப்பேசவும் இங்கிலாந்திலுள்ள பார்லிமென்டுக்கு ஒரு வாய்ப்பைக் கொடுத்தது. இவ் விவாதங்களில், அரசாங்கத்திற்கெதிராக வாக்கெடுப்பு நடந்தால், மந்திரிசபையின் வீழ்ச்சிக்குக்காரணமாகு மாதலால், நடைமுறையில் இவைகள் பயனற்றனவாயிருந்தன.

ஆகவே, மாற்றிக் கொடுக்கப்பெற்ற மாகாண இனங்களைப் பொறுத்த வரையில்தான், நிதி அதிகாரத்தின் மூலம் செயலாற்றும் 'பொறுப்புள்ள அரசாங்கத்தை' இந்தியா பெற்றிருந்தது. இவ் வினங்களைப் பற்றிக்கூட கருத்து வேறுபாடுகள் இருந்தன. மாகாண நிதியமைப்பில் அடங்கிய இனங்களின் தராதர முக்கியத்துவத்தை மாற்றுவதற்கு, மாகாணங்களுக்கு முழு அதிகாரமும் இருக்கவேண்டும். அதில்லாமல், மாகாண நிதியின் ஒருபகுதியில் மட்டும் அதிகாரம் இருந்தால், 'மாற்றிக் கொடுக்கப்பெற்ற இனங்க'ளின் மேலிருந்த அதிகாரமும் பயனற்றதாகும் என்று குறை கூறப்பட்டது. இந்த நிலை, கல்வி, சுகாதாரம் போன்ற ஆக்க வேலைகளுக்கு, அரசாங்கம் அதிகப் படியான செலவு செய்வதற்குத் தடங்கலாக இருக்கும் என்று கருதினர்கள். உண்மையில் வரிகளை உயர்த்தினாலன்றி மாகாணத் திட்டங்களை நிறைவேற்ற முடியாது. ஆனால், அரசியலில் பலம் கொண்டவர்கள் வரிகளை உயர்த்துவதற்கு எதிர்ப்பாக

[1] சில குறிப்பிட்ட காரணங்களுக்காக மட்டும், மத்திய அரசாங்கத்தின் அனுமதியுடனே அல்லது இந்தியா மந்திரியின் அனுமதியுடனே, தங்களுடைய நிதிகளின் அடமானத்தின் பேரில் மாகாணங்கள் கடன் வாங்கலாம். 1925ஆம் ஆண்டில் 'மாகாணக் கடன் நிதி' ஒன்றும் நிறுவப்பெற்றது.

[2] மாகாணங்கள் விதிக்கக்கூடிய புதியவரிகளின் பட்டியலுக்கு C. N. Vakil, Financial Developments in Modern India, p. 50 ஐப் பார்க்கவும்.

[3] முன்னர் இந்தியா அலுவலகத்தின் கவனத்தின்கீழ் இருந்த சில பணிகள், புதிதாக அமைக்கப் பெற்ற 'தூதுவர் ஆலயத்திற்கு' (High Commissioner Office) மாற்றப் பெற்றன. இப் பணிகளுக்கான செலவு இந்தியக் கணக்கிலேயே சேர்க்கப்படுகிறது.

இருந்தனர். நாட்டில் தேசியக்கட்சியின் வளர்ச்சியும் சீர்திருத்தங்களும், பொதுமக்களின் எண்ணத்திற்கு அரசாங்கம் செவி சாய்த்தாக வேண்டும் என்கிற அவசியத்தை உண்டாக்கின. நிதிக் கொள்கையைப் பொறுத்த அளவில், பொதுமக்களிக் எண்ணம் இங்கிலாந்தில் உள்ளதைப் போல இந்தியாவிலும் சக்தி வாய்ந்ததாக இருந்தது. இருந்தாலும், மத்திய அரசாங்கத்தின் வரவு செலவுத்திட்டம், ஜனநாயகக் கட்டுப்பாடு[1] ஒருபுறமிருக்க, இன்னும் பிரதிநிதித்துவக் கட்டுப்பாட்டுக்கு உட்பட்டதாக அமையவில்லை.

§3. அரசாங்க நிதிச் சாதனங்களும் செலவும்

அரசாங்கத்தின் நிதி நிலைமை, நிதிக்கொள்கை, கையாண்ட கொள்கையினால் ஏற்பட்ட விளைவுகள், 1935ஆம் ஆண்டுவரை இருந்த நிதி நிலவரம் இவற்றை நாம் அறிந்துகொள்ள வேண்டுமானால், அரசாங்கத்தின் நிதிச் சாதனங்கள், செலவு இவற்றின் இயல்பையும் போக்கையும் ஆராயவேண்டும்.

19ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில், அரசாங்கத்தின் வருவாயினங்களிலும், செலவினங்களிலும், இவைகளின் தராதர முக்கியத்துவத்திலும், தற்காலிக ஏற்றத் தாழ்வுகளையன்றி பிற மாற்றங்கள் வெகு குறைவாகவே இருந்தன.[2] அரசாங்கத்தின் நிதியமைப்பில் சில தனித் தன்மையான இயல்புகள் இருந்தன. குறிப்பாக, நிதிச் சாதனங்கள் நெகிழ்ச்சியற்ற (Inelastic) தன்மை உடையனவாக இருந்தன; புதிய சாதனங்களைத் தேடிப் பிடிப்பதும் எளிதாக இல்லை. இதனால் ஏற்பட்ட நிதி நெருக்கடி, இரயில்வேக்கள், பாசனவேலைகள் போன்ற பயன்தரும் பொதுப் பணிகளை அரசாங்கம் மேற்கொள்வதை முற்றிலும் தடுக்காவிட்டாலும், குறைப்பதாக இருந்தது. வரவுசெலவுத்திட்டத்தின் இயல்பிலும் பெரிதும் மாற்றமில்லை.

இதற்கு மாறாக, இந் நூற்றாண்டின் தொடக்கத்திலிருந்து ஏறத்தாழ முதல் உலகப் போருக்குப்பின்னர், நிதியமைப்பில் அடிப்படையான மாறுதல்கள் தோன்றின. பத்தொன்பதாம் நூற்றாண்டின் நிலையைப் பிரதிபலிக்கும் ஓர் ஆண்டின் கணக்

[1] இந்தியாவில் வாக்காளர்களின் எண்ணிக்கை மிகக் குறைவாக உள்ளது என்பதை மறந்துவிடக் கூடாது. 24·7 கோடி கொண்ட மக்கள் தொகையில், 0·74 கோடி மக்களே வாக்காளர்களாக இருக்கிறார்கள்.

[2] 1882ஆம் ஆண்டு முதல் 1894ஆம் ஆண்டுவரை, தடையிலா வாணிபக்கொள்கை (Free Trade) கையாளப் பெற்றதால், சுங்க வருமானம் குறைந்தது. இங் நிகழ்ச்சி ஒரு விலக்காகும்.

குகளை, நிதிநடவடிக்கையின் போக்கை அறிவிக்கும் பிந்திய ஆண்டுகளின் கணக்குகளுடன் ஒப்பிட்டுப் பார்த்தால், 19ஆம் நூற்றாண்டின் நிதிநிலைமையைப்பற்றியும், 1921ஆம் ஆண்டுவரை அனுசரிக்கப் பெற்ற மாற்றங்களைப்பற்றியும் ஒரு தெளிவான கருத்தைப் பெறலாம். இந்த நோக்கத்துடன், 1891–92, 1901–02, 1911–12, 1920–21[1] இவ் வாண்டுகளுக்கான முக்கிய வருவாயினங்களும் செலவினங்களும் தயாரிக்கப் பெற்றுள்ளன. இவைகளை XVIIIஆம் அட்டவணையில் காணலாம்.

நாம் முன்னர்க் கூறிய பல காரணங்களால்[2], மத்திய அரசாங்கத்தின் 1921ஆம் ஆண்டுக்கு முந்திய கணக்குகளையும், பிந்திய கணக்குகளையும் ஒப்பிட்டுப் பார்ப்பது முடியாத செயலாகும். சீர்திருத்தங்களுக்குப் பின்னர் ஏற்பட்ட மாறுதல்களைப் புரிந்து கொள்வதற்கு, மத்திய அரசாங்கக் கணக்குகளையும், மாகாண அரசாங்கக் கணக்குகளையும் ஆராய்ந்து, அவற்றை ஒன்றுக இணைத்துப் பார்க்க வேண்டியது அவசியமாகிறது. 1920–21ஆம் ஆண்டு வரையிலான கணக்குகளை ஆராய்ந்த பின்னர் அதனைக் காண்போம்.

கவனத்திற்குரிய ஆண்டுகளின் (1891–92 முதல் 1920–21 வரை கணக்குகளில், ஆறு வருவாய்த் தலைப்புகள் இணைக்கப் பெற்றுள்ளன. அவையாவன : (1) நிலவருவாய் ; (2) அபினி ; (3) வரி விதிப்பு ; (4) வர்த்தகத் தொழில் துறைகள் ; (5) பலவகையான சில்லறை வரவுகள்; (6) நாணய மாற்றம் என்பனவாகும்.

நிலவருவாய் மிக முக்கியத்துவம் பெற்றிருந்தது. இதற்குக் காரணம், சமீப காலம்வரை அது மொத்த வருவாயின் பெரு மளவைக் கொடுத்தது என்பது மட்டுமல்ல. நாட்டின் நிருவாகத் துறையில் நிலவரி ஒரு முக்கிய அங்கம் வகித்ததும், நிலத்தீர்வை, வரிவிதிப்பு இவைகள் பற்றி நாட்டில் எழுந்த வாக்குவாதங்களும், அரசாங்கச் செலவுக்கு விவசாய வகுப்பினர் செலுத்தும் பங்கில் நிலவரி ஒரு முக்கிய இனம் என்பதும், நிலவருவாயின் முக்கியத்துவத்திற்குக் காரணங்களாயிருந்தன.

பிரிட்டிஷ் இந்தியாவில், தற்காலிகமாகவோ அல்லது நிரந்தரமாகவோ அவ்வப்போது நடைமுறைக்கு வந்த ஜமீன்தாரி முறை (Zamindari System), அயன்குடி முறை (Ryotwari System), கூட்

[1] நம்முடைய நோக்கம் முதலீடு, வரவுகள் பற்றிய விவரங்களைவிட, நிதியமைப்பின் பொருளாதார விளைவுகளை ஆராய்வதே என்பதால் அட்டவணை XVIIIலும் வாசகத்திலும், வருவாய், செலவு சம்பந்தமான ' நிகர எண்களே ' கையாளப்பெற்றுள்ளன.

[2] இவ்வத்தியாயத்தின் முற்பகுதியைப் பார்க்கவும்.

டுக் கிராம முறை (Joint Village System) போன்ற பல வகையான நிலத் தீர்வைகளை முன்னரே விளக்கியுள்ளோம்.[1] நில வரியின் அடிப்படையும் கட்டணமும் மாவட்டத்திற்கு மாவட்டம் மாறுபட்டு இருந்தமையால், அவற்றைப் பற்றிய எந்தவிதமான பொது விதிகளையும் கூற முடியாது. ஆனால் நிலத் தீர்வை மாற்றம் செய்யப்பெற்ற பொழுதெல்லாம் (Re-settlement), கட்டணத்தைக் குறைப்பதற்கான அறிகுறிகள் இருந்தன என்று மட்டும் கூறலாம்[2].

1793ஆம் ஆண்டில் நடந்த நிரந்தர நிலத்தீர்வையின்படி, நிலவரி, நிலவாரத்தில் 90 சதவீதமாக நிர்ணயிக்கப் பெற்றது. தொடக்க காலத்தில், இது பெரும் பளுவாக இருந்தது ; இதனால் பல நிலஉடமைகளும் கைமாறின. ஆனால், நாட்டில் அமைதி நிலைநாட்டப் பெற்றதாலும், விவசாயப் பொருள்களின் விலைகள் உயர்ந்ததாலும் நாளாவட்டத்தில், நிலத்தின் மதிப்பும் உயர்ந்தது. ஆகவே, நிலவாரங்களும் உயர்த்தப் பெற்றன. நிலத்திலிருந்து ஜமீந்தார்களுக்கும் நல்ல வருமானம் கிடைக்கலாயிற்று. நிரந்தர நிலத்தீர்வை செய்யப்பெற்ற பகுதிகளிலிருந்து, 1900ஆம் ஆண்டில் அரசாங்கத்திற்குக் கிடைத்த நில வருவாய் ரூ. 4 கோடிக்கும் குறைவாக இருந்தது. ஆனால், அதே பகுதிகளில் நிலவாரங்கள் ரூ. 16½ கோடிக்குக் குறையாமலிருந்தன[3].

தற்காலிகமாக நிலத்தீர்வை செய்யப் பெற்ற பகுதிகளில் நிலவரிக் கட்டணம் அவ்வளவு உயர்வாக நிர்ணயிக்கப் பெறவில்லை. 19ஆம் நூற்றாண்டின் இடைக்காலத்தில், நிலவரிக் கட்டணம் நில வருமானத்தில் அல்லது நில வாரத்தில் 50 சதவீதம் என்பது சாதாரண வழக்கமாக இருந்தது. 19ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் பல இடங்களிலும், கட்டணம் இதைவிடக் குறைவாகவே இருந்தது. ஆனால், இவற்றில் இன்னும் மாவட்டத்திற்கு மாவட்டம் மாறுதல்கள் காணப்படுகின்றன[4]

[1] இந்நூலின் முதற்பாகத்தைப் பார்க்கவும்.

[2] குறிப்பிட்ட சில செழிப்பான மாவட்டங்களில் கட்டணங்கள் உயர்த்தப்பெற்றன. மொத்தத்தில் மாகாணங்களை நோக்கினால், கட்டணங்கள் குறைக்கப்பெற்றன.

[3] Government Resolution, East India (Land Revenue) ;Cd. 1089, 1902, p.82.

[4] பஞ்சாப் மாகாணத்தில், நிலத்திலிருந்து வரும் நிகர வருமானத்தில் 20 சதவீதம் நிலவரியாக இருக்கிறது என்று டார்லிங் (Darling) என்பவர் மதிப்பிடுகிறார். (Vide The Punjab Peasant in Prosperity and Debt, pp. 10, 248). டாக்டர் ஸ்லேடர் (Dr. Slater) என்பவர் சென்னை மாகாணத்தின் நிலவருவாயை மதிப்பிட்டிருக்கிறார். இந்தியாவில் மற்றெல்லா இடத்தையும்விட, இங்கு நிலவருவாய் மொத்த உற்பத்தியில் 4 சதவீதம் அதிகமாக இருக்கிறது என்று அவர் குறிப்பிடுகிறார். ('Proceedings of the East India Association', Asiatic Review, March 1923, p. 283). பிள்ளை அவர்கள் (Mr. Pillai) நிலவரியின் நிகழ்ப்பாடு (Incidence) தலைக்கு, ஆண்டுக்கு 11 அணா முதல் (வங்காளத்தில்) 5 ரூபாய் 6 அணாவரை (கீழ் பர்மாவில்) மாறுகிறது என்று கூறுகிறார்.

நிலவரிக் கட்டணம் குறையத் தொடங்கினாலும், விவசாயத்தில் அபிவிருத்தி ஏற்பட்டதாலும், புதிய நிலங்கள் சாகுபடியின் கீழ்க் கொண்டுவரப் பெற்றதாலும் மொத்த நிலவருவாய் பெருகிற்று. வரிப்பளு (நிலவரி உள்பட)[1] அதிகமாக இருப்பதால், பிரிட்டிஷ் ஆட்சியில் நாட்டின் செழிப்புக் குறைந்து விட்டது அல்லது திருப்திகரமாக வளரவில்லை என்று பிரிட்டிஷ் ஆட்சியை எதிர்ப்பவர்கள் வாதாடுகிறார்கள். நிலவரி, செழிப்பான ஆண்டுகளில் மக்களுக்குக் கிடைக்கும் உபரி வருமானத்தை விட்டு வைப்பதில்லை; வறட்சி ஆண்டுகளிலோ பிழைப்புக்குத் தேவையான ஊதியம் கூட அவர்களுக்குக் கிடைப்பதில்லை என்பது அன்னாரின் வாதம். இதனால் மூலதனத்தைத் திரட்டவோ அல்லது தலா வருமானத்தை உயர்த்தவோ முடியாமல் போகிறது என்று அவர்கள் கருதுகிறார்கள். அரசாங்கத்தை ஆதரிப்பவர்களோ, நிலவரி ஒரு 'வாரமே' தவிர வரியில்லை; ஆகவே, அது உற்பத்திச் செலவில் சேராது; குடியானவர்களின் செழிப்பையும் அது பாதிக்காது என்று எதிர்வாதம் புரிகிறார்கள். இந்த வரியை அரசாங்கத்திற்குச் செலுத்தாவிட்டால், இங்கிலாந்திலுள்ளதைப் போல வாரம் வசூலிப்பவர்களுக்குப் போய்ச் சேருமே யன்றி, சாகுபடி செய்யும் விவசாயிகளுக்குப் பயனளிக்காது என்பது இவர்களின் வாதம். இந்த நிலவரி பிரிட்டிஷ் அரசாங்கத்தாரால் புதிதாகப் பூனயப் பெற்றதல்ல என்பதை எல்லோரும் ஒப்புக் கொள்ளுவார்கள். மேலும், சராசரி நிலவரிக் கட்டணம் பிரிட்டிஷ் ஆட்சி இந்தியாவுக்கு வருவதற்கு முன் இருந்ததைவிட, இப்பொழுது குறைவாகத்தானிருக்கிறது என்று அவர்கள் எடுத்துக் காட்டுகிறார்கள். மேலும் தொடர்ந்து, பிரிட்டிஷ் ஆட்சியில் குடியானவர்களின்மீது விரும்பிய அளவுக்கு இல்லாவிட்டாலும், ஒரு அளவுக்காவது உயர்ந்திருக்கிறது; நிலவரியை வரிவிதிப்பு என்ற தலைப்பில் சேர்த்துக் கொண்டாலும் கூட, உலகின் மிகக் குறைந்த வரியுள்ள நாடுகளில் இந்தியா ஒன்றாக இருக்கிறது என்றும் அவர்கள் கூறுகிறார்கள். இந்த இருவகை முரண்பாடான கருத்துகளினால்தான், நிலவரி ஒரு 'வரியா' அல்லது 'வாரமா' என்கிற முடிவில்லா வாதம் எழுந்தது.

நிலவரி வசூலிப்பதில், அரசாங்கத்திற்குச் சட்டபூர்வமான உரிமை இருக்கிறது என்பதை யாரும் மறுக்க முடியாது. ஆனால், அது சமுதாய நலனுக்குத் தீங்கிழைப்பதாக இருந்தால், அதை நீடிப்பதில் எந்தவித நியாயமும் இல்லை.

[1] உப்பு வரி தவிர மற்றைய 'மறைமுக வரிகள்' (Indirect taxation) ஏழை மக்களை அவ்வளவாகப் பாதிப்பதில்லை. ஆகவே, நிலவரி பெரும்பளுவாகக் கருதப்படுகிறது.

நிலவரி ஒரு 'வரியா' அல்லது 'வாரமா' என்ற கேள்விக்கு இறுதியான பதிலளிப்பது முடியாத செயலாகும். அப்படி ஒரு பதில் கொடுக்க முடிந்தாலும், அஃது நிலவரியை ஆதரிக்கவோ, அல்லது எதிர்க்கவோ போதுமான காரணமாகாது. வரியென்று எல்லோரும் சாதாரணமாக ஒப்புக்கொள்ளும் பொருளில், நிலவரி ஒரு வரியாகாது என்பது தெளிவாகும். பேடன் பவல் அவர்கள் (Mr. Baden - Powel) 'வரியென்பது ஒவ்வொரு ஆண்டிலும், பாராளுமன்றத்தால் விதிக்கப்படும் சுமை[1]; வரவு செலவுத் திட்டத்திற்கு ஏற்றாற்போல இதை மாற்றவும், நீக்கவும், புதிதாக விதிக்கவும் பாராளுமன்றத்தால் முடியும்' என்று விளக்குகிறார். நிலவரி, இந்த விளக்கத்தின் கீழ் வராவில்லை. ஆனால், நிலச்சுவான்தாரர்களுக்குக் கிடைக்கும் வருமானத்தில் ஒரு பகுதியை, நிலவரியென்று அரசாங்கத்திற்கு மாற்றிக் கொடுப்பதால், அது ஒரு வரியின் சாயலைப் பெறுகிறது.

ஆனால், வாரத்தை வசூலிப்பவர்கள் நிலத்தின் உரிமையாளர்களாக இருப்பதால், வாரம் என்று சாதாரண வழக்கில் குறிக்கும் பொருளில், நிலவரியை ஒரு வாரமாகக் கருத முடியாது. இந்தியாவில் நடைமுறையிலிருக்கும் பல்வேறு நில உரிமை முறைகளையும் ஆராய்ந்து பார்த்தால், ஜமீந்தாரி முறையும், கூட்டுக் கிராம முறையும் உள்ள மாவட்டங்களில், பிரிட்டிஷ் அரசாங்கம் நிலத்தின் உரிமையாளர் என்ற தகுதியைப் பெறவில்லை என்பதும், அயன்குடி முறை உள்ள மாவட்டங்களில் நில உரிமையாளர் என்ற நிலையைப் (அதுவும் சில நிபந்தனைகளுக்கு உட்பட்டுத்தான்) பெற்றிருக்கிறது என்பதும் தெளிவாகும். இதை பேடன் பவல் அவர்கள் தெளிவாக விளக்கியிருக்கிறார்[2]. வங்காளம், வட சென்னை, அயோத்தி இவற்றிலுள்ள ஜமீன்தாரி மாவட்டங்களிலும், ஐக்கிய மாகாணம், மத்திய மாகாணம், பஞ்சாப் ஆகியவற்றில் கூட்டுக் கிராம முறையுள்ள மாவட்டங்களிலும், நிலத்தின் உடைமை, நிலம் யார்வசம் உள்ளதோ அவர்களைச் சாரும் என்று பிரிட்டிஷ் அரசாங்கம் திட்டவட்டமாகக் கூறியிருப்பதை அவர் எடுத்துக் காட்டியிருக்கிறார். மேலும், கூட்டுக் கிராம மாவட்டங்களில் ஏதேனும் விலக்குகள் குறிக்கப்பட்டிருந்தால், அவ் விலக்குகள் குத்தகைக்கு நிலம் வைத்திருப்பவர்கள், மற்று வாரதாரர்கள் போன்றவர்களின் உரிமைகளைப் பாதுகாப்பதற்காக இருக்குமேயன்றி, அரசாங்கத்தின் உரிமையை நிலைநாட்டக் குறிப்பிடப்பட்டிருக்காது என்பதையும் அவர் விளக்குகிறார்.

[1] and [2] "Is the State the Owner of all Land in India? ('Asiatic Quarterly Review, July 1894—p 18).

அயன் குடி முறையுள்ள மாவட்டங்களில், அரசாங்கம் காலி நிலங்களிலும் தரிசு நிலங்களிலும் ஓரளவு 'எஞ்சிய உரிமையைத்' (Residuary right) தன்வசம் வைத்துக் கொண்டது. ஆயினும், நில வரி செலுத்தத் தவறினாலன்றி, குடியானவர்களை நிலத்திலிருந்து வெளியேற்றும் அதிகாரம் அரசாங்கத்திற்கு இல்லை. ஆகவே, 'அரசாங்கத்தின் நில உரிமை இந்தியாவின் எல்லாப்பகுதிகளிலும் நிலவவில்லை; எஞ்சிய பகுதிகளிலும் இவ்வுரிமை குறிப்பிட்ட வரம்புக்கு உட்பட்டே நிலவியது' என்று பேடன்பவல் அவர்கள் கூறுகிறார்.[1] இருப்பினும், நிலவரி நிலத்தைத் தங்களிடம் வைத்திருப்பதற்காக நிலச்சுவான்தாரர்கள் செலுத்தும் கட்டணமாக இருப்பதாலும், இவர்கள் கட்டணத்தைச் செலுத்தத் தவறினால் தங்களுடைய நில உரிமையை இழக்கநேரிடுவதாலும், நிலவரி வாரத்தின் சாயலைப் பெறுகிறது எனலாம். நிலவரி என்பது, 'வாரத்தின்மேல் விதிக்கப்படும் ஒருவரி' என்று கூறுவது எல்லாவற்றையும்விடப் பொருத்தமாக இருக்கும்[2]. இந்தியாவில், குடியானவர்களில் பெரும்பாலோரும் நிலவுரிமையாளர்களாகவே இருப்பதால், அவர்களுக்குச் சேரவேண்டிய ஒரு வருமானம் அரசாங்கத்தைப்போ யடைகிறது என்பதும் மறுக்கமுடியாத உண்மையாகும். இக் கூற்றை ஒப்புக் கொண்டாலும், நிலவருவாயைக் கொண்டு அரசாங்கம் செய்யும் செலவினால் நாட்டுக்குக் கிடைக்கும் நன்மைகளையும், நிலவரியைக் குறைப்பதினாலோ அல்லது நீக்குவதினாலோ மக்களின் வருமானம் பெருகுவதால் கிடைக்கக் கூடிய பலன்களையும் ஒப்பிட்டுப் பார்க்கவேண்டும். அதோடு, அரசாங்கத்தின் நிருவாகத்துறையில் சிக்கனங்களைக் கையாளுவதற்கான வழிகள் என்ன என்பதையும், நிலவரியை நீக்கினால் அரசாங்கத்தின் வருவாயை எந்தவழியில் ஈடுசெய்யலாம் என்பதையும், அவ்வாறு வருவாயை நிரப்பப் புதிய வழிகளைக் கையாண்டால், மக்களின் நலத்தை இவைகள் எவ்வாறு பாதிக்கும் என்பதையும் நன்றாகத் துருவிப் பார்க்கவேண்டும். அதில்லாமல், நிலவரியை நீக்கவேண்டும் அல்லது மிகவும் குறைக்க

[1] Asiatic Quarterly Review, July 1894, p. 18.

[2] நிலவரி, 'ஆண்டாண்டுக்கு விதிக்கப்படும் ஒரு சுமை' அல்ல; ஆகவே அது ஒரு வரியின் விளக்கத்தின்கீழ் வரவில்லை என்று எதிர்ப்புக் கூறலாம். பேடன்பவல் அவர்கள், இவ்வாதம் அனைத்தும் வெறும் கற்பனை; கீழை நாட்டு முறைகளை மேலை நாட்டு அச்சுகளுக்குள் திணிக்க முயன்றதின் விளைவு என்று கூறுகிறார். (V. Quarterly Review, p.18.) ஆனால் 1924–25ஆம் ஆண்டின், இந்திய வரிவிதிப்பு விசாரணைக் குழு (The Indian taxation Enquiry Committee) தந்துள்ள விளக்கத்தை ஏற்றுக் கொண்டால் நிலவரியை, வாரத்தின் மேல்வரியாகக் கருதலாம் (tax on rent). அக் குழுவின் விளக்கம், 'வரிகள் என்பன, பொதுச் செலவுக்காக, ஒரு சமுதாயத்தின் அங்கத்தினர்களால், அச்சமுதாயத்தை ஆளும் மன்றத்திற்கு, எந்தவித உறுதியுமளிக்கப் பெற்ற பிரதிபலனின்றி, செலுத்தப் பெறும் கட்டணங்கள்' என்பதாகும். நிலவரியில், 'வாரத்தின் சில இயல்புகளும், வரியின் சில இயல்புகளும் இருக்கின்றன' என்று அக் குழு குறிப்பிட்டிருக்கிறது.

வேண்டும் என்னும் அவசர முடிவுக்கு வருவது பொறுத்தமற்ற தாகும். இவை அனைத்தையும் ஆராய்ந்து பார்ப்பதில் பல இடையூறுகள் உள்ளன. குறிப்பாக, நிலவருவாய் முழுவதையுமோ அல்லதுஅதன் ஒருபாகத்தையோ, நிலவரிசெலுத்துபவர்களிடமே திரும்பக் கொடுப்பதால் ஏற்படும் விளைவுகளை மதிப்பிடுவதும், நிலவருவாய் மூலம் கிடைக்கும் வருமானத்தைக் கொண்டு அரசாங்கம் செய்யும் செலவின் மதிப்பை அளவிடுவதும், நிருவாகத்தில் சிக்கனங்களைக் கடைப்பிடிப்பதாலோ அல்லது நிலவரிக்குப் பதிலாகப் புதியவரிகள் விதிப்பதாலோ நாட்டின் செழிப்பில் ஏற்படும் விளைவுகளை மதிப்பிடுவது எளிதான செயலன்று. இருப்பினும், பொதுவான சில முடிவுகளைக் கூறலாம்.

ஜமீன்தாரி மாவட்டங்களில் நிலவரிகள் நீக்கப் பெற்றால் (அல்லது வெகுவாகக் குறைக்கப் பெற்றால்) பயனடைபவர்கள் ஜமீன்தாரர்களே அன்றி உண்மையான குடியானவர்கள் அல்லர். நில உரிமையாளர்கள் என்ற முறையில், இந்த ஜமீன்தாரர்கள் அனைவரும் ஒருவேலையுமின்றி, பிறரை உறிஞ்சி வாழும் ஒரு வகுப்பினரே ஆவர். தங்களுடைய வருமானத்தை விவசாய மேம்பாட்டுக்காகச் செலவிடுவது என்பது இவர்களிடையே மிகவும் அரிது. நிலவரியை நீக்கி இவர்களுடைய வருமானத்தைப் பெருக்குவது என்பது, சிக்கனமற்ற ஒரு செயல் என்பதோடு, முறையானதுமன்று. அயன்குடி முறையும், கூட்டுக்கிராம முறையும் வழக்கத்தில் உள்ள மாவட்டங்களில், நிலவரி செலுத்த வேண்டியவர்கள், சில இடங்களில்தான் விவசாயம் செய்யும் குடியானவர்களாக இருக்கிறார்கள். இம் மாவட்டங்களில், நேரிடையாக விவசாயம் செய்யாமல், நிலத்தைக் குத்தகைக்கு விட்டு வாரம் ஈட்டுவோர்களின் வருமானத்தைப் பெருக்குவதும் நியாயமற்றதாகும். குறிப்பிட்ட சில இடங்களில் தான், நிலவரி நீக்கப் பெறுவதால் குடியானவர்கள் உண்மையான பயனடைவார்கள். இக் குடியானவர்கள் தங்களுடைய வருமான மிகுதியை எந்தவழியில் செலவழிப்பார்கள்? வருமான மிகுதியின் பெருமளவையும் நிலையான நில மேம்பாட்டுச் செயலுக்கும், விவசாயக் கருவிகளையும், நூதன உற்பத்தி முறைகளையும் கையாளுவதிலும் செலவிட்டால், மிகுந்த பயனுடையதாக இருக்கும் என்பதில் ஐயமில்லை. ஆனால், கடந்தகால அனுபவத்திலிருந்து நோக்கினால், குடியானவர்களின் வருமான மிகுதியினால், ஒருபகுதி சாதி சமயச் சடங்குகளின் அதிகச் செலவிற்கும், மற்றொரு பகுதி மக்கட் பெருக்கத்தினால் விழுங்கப் பெற்றும் விரைய மாக்கப்படுமே தவிர, வாழ்க்கைத்தரத்தை உயர்த்துவதற்கோ அல்லது விவசாய

முறையை அபிவிருத்தி செய்வதற்கோ பயன்படாது என்பது தெளிவாகும்.

இவற்றையெல்லாம் நோக்கும்பொழுது, நிலவரியை நீக்குவதாலோ, அல்லது வெகுவாகக் குறைப்பதாலோ, எதிர்பார்க்கக் கூடிய அரசாங்கச்செலவு முறையைவிட, நில வருவாயிலிருந்து கிடைக்கும் வருமானத்தைக் கொண்டு அரசாங்கம் இப்பொழுது செய்யும் செலவுமுறை, பொதுவாக நாட்டிற்கும், குறிப்பாகப் பெரும்பான்மையான மக்களுக்கும் பயனுடையதாக இருக்கும் என்று தோன்றுகிறது. இதனால், இப்பொழுது நடைமுறையிலிருக்கும் நிலவரிமுறையே மிகச் சிறந்தது என்று கருதமுடியாது. நிலவரியின் 'நிலைப்பாட்டையும்' (Incidence), நிலவரியை நிர்ணயிக்கும் முறையையும் திருத்தியமைக்க எல்லா முயற்சிகளையும் எடுத்துக் கொள்ளவேண்டும். நிலவரிக் கட்டணம், காரணமின்றி உயர்வாக இருக்கிறது என்று அரசாங்கமே ஒப்புக்கொண்டு, பல சந்தர்ப்பங்களிலும் குறைத்திருக்கிறது. நிவவரியை இன்னும் குறைப்பதற்கும், வரிப்பளுவை நிரவலாக்குவதற்கும் அவசியம் இருக்கிறது.

இப்பொழுது நடைமுறையிலிருக்கும் நிலையில், நிலவரியின் அடிப்படையிலும், வரிக் கட்டணத்திலும் உறுதியும், ஒழுங்குமில்லை என்று, 1924–25 ஆம் ஆண்டின் 'இந்திய வரி விதிப்பு விசாரணைக் குழு'[1] குறிப்பிட்டிருக்கிறது. மேற்கூறிய குறைபாடுகளை அகற்றும் நோக்கத்துடன், இக் குழு சில சிபாரிசுகளைத் தந்தது. இச் சீர்திருத்தங்களையன்றி, விவசாய வருமானத்திலும் வரி விதிக்க வேண்டும். அல்லது 'வழியுரிமைத் தீர்வை' (Succession duty) விதிக்கவேண்டும், அல்லது இவ்விரண்டையும் சேர்த்துக் கையாள வேண்டுமென்றும் அறிவித்தது. எதிர்காலத்தில், சிறு நிலச்சுவான்தார்களின் நிலையையும் உயர்த்தி, அதே நேரத்தில் அரசாங்கத்திற்குத் தேவையான வருவாய் கிடைக்கும் வழிகளையும் கையாள வேண்டுமானால், நடைமுறையில் நடக்கக் கூடிய ஒரே திட்டம், இப்பொழுது இருக்கும் அடிப்படையிலேயே பிரிட்டிஷ் இந்தியா முழுவதற்கும் ஒரு நிரந்தர நிலத்தீர்வை[2] செய்து, அதனுடன் தொழில் வருமானம், வர்த்தக

1 'இந்திய வரிவிதிப்பு விசாரணைக் குழு' இந்திய வரிமுறை முழுவதையும் ஆராய்ந்து அறிக்கை வெளியிட்டது. நிலவரியையும் இந்த ஆய்வில் சேர்த்துக் கொள்ளும்படி அரசாங்கம் கேட்டுக் கொண்டது. குழுவின் அறிக்கை, இந்திய வரி இனங்களின் பூர்வாங்கம், இயல்புகள், நிலைப்பாடு பற்றிய பல உண்மைகளை விளக்குகிறது. ஆனால் இக்குழு இப்பொழுதுள்ள வரிமுறையில் எந்தவித அடிப்படையான மாறுதல்களையும் சிபாரிசு செய்யாமல், குறிப்பிட்ட சில இனங்களில் சிறு மாறுதல்களை மட்டும் சிபாரிசு செய்தது.

2 'வரிவிதிப்பு விசாரணைக்குழு' இத்தகைய யோசனையை, கவனத்திற்கு எடுத்துக் கொள்ளவில்லை.

வருமானங்களைப் போலக் குறிப்பிட்ட அளவுக்கு மேலான விவசாய வருமானத்திலும், வருமானவரி விதிப்பதேயாகும்.

18ஆம் நூற்றாண்டின் முடிவுகாலத்தில் வங்காள ஜமீன்தாரர்களுக்கும் (சில சென்னை ஜமீன்தாரர்களும்) கிழக்கிந்தியக்கம்பெனியாருக்கும் நடந்த ஒரு பேரத்தை (அதாவது நிரந்தர நிலத்தீர்வையை) ஏன் ஒரு பிரதிநிதித்துவ அரசாங்கம்[1] தொடர்ந்து காப்பாற்றவேண்டும் என்று எண்ணலாம். மேலும், நிலவருவாய் மத்திய அரசாங்கக் கட்டுப்பாட்டின் கீழிருந்த பொழுது ஒரு மாகாணத்தைவிட மற்றொரு மாகாணத்தில் அதிகக் கட்டணம் விதிக்க முடியவில்லை. ஆனால், இப்பொழுது ஒரு மாகாண இனமாக இருப்பதால், ஒவ்வொரு மாகாணமும் தன்னுடைய தேவைகளுக்கு ஏற்ற முறையைக் கையாளுவதிலும், நிலவருவாய் மாகாணப் பொதுச்செலவுக்கான ஒரு நிதிச்சாதனம் என்று கருதுவதிலும் எந்தவிதத் தவறுமில்லை. ஒவ்வொரு மாகாணமும் தனக்கேற்ற முறையையும், வரிக்கட்டணத்தையும் நிர்ணயித்துக் கொள்ளலாம். இத்தத் தத்துவம் பஞ்சாப், ஐக்கிய மாகாணம், பம்பாய் போன்ற மாகாணங்களில் அரசாங்கத்திற்கு நிலவருவாயில் உள்ள அதிகாரத்தை வரையறுக்கும் சட்டங்களின் மூலம் (முறையே 1927, 1928, 1939ல்) கையாளப் பெறுகின்றது.

அட்டவணையின் அபினி[2] என்ற தலைப்பில், அபினி தயாரித்தல், ஏற்றுமதிக்கான அபினி விற்பனைகள் இவற்றிலிருந்து அரசாங்கத்திற்குக் கிடைக்கும் வரவுகள் அடங்கியிருக்கின்றன. ஆனால், அபினியையும் மற்ற மருந்துகளையும் உள்நாட்டில் விற்பனை செய்வதற்காகச் சிறு வியாபாரிகளுக்கு வழங்கப்படும் விற்பனை உரிமை (License) மூலம் கிடைக்கும் வருவாய் இதில் அடங்கவில்லை. இவ் வருவாய் ஆயத்தீர்வை என்ற தலைப்பில் வருகிறது. பிரிட்டிஷ் இந்தியாவில் அபினி பயிர் செய்வதும், ஏற்றுமதி செய்வதும் அரசாங்கக் கட்டுப்பாட்டின்கீழ் இருந்துவந்தன; இன்னும் இருந்து வருகின்றன. அபினி தயாரிப்பு அரசாங்கத்தின் ஒரு 'முற்றுரிமை யாகும்' (Monopoly). சுதேச அரசுகளில் பயிராகும் 'மால்வா அபினி' (Malwa Abin) என்னும் வகை, சுதேச அரசுகளிலிருந்து

[1] பிரதிநிதித்துவ அரசாங்கம் அமைக்கப் பெற்றபொழுது.

[2] அபினி என்னும் இனம் வரிவிதிப்பு என்னும் தலைப்பில் சேர்க்கப் படவில்லை, காரணம், அபினியிலிருந்து கிடைக்கும் வருமானம், உள்காட்டு துகர்வோரிடமிருந்து கிடைப்பதில்லை; அபினி தயாரிப்பதில் அரசாங்கத்திற்குள்ள முற்றுரிமை மூலமாகவோ அல்லது அயல் நாடுகளுக்கு ஏற்றுமதியாகும் விற்பனையின் மூலாமகவோதான் கிடைக்கிறது.

வெளியேற வேண்டுமானால் இந்திய அரசாங்கத்திற்கு, உயர்ந்த கட்டணங்கள் கட்டித்தான் வெளியேற முடியும். 19 ஆம் நூற்றாண்டில் அபினி மூலம் அரசாங்கத்திற்குக் கிடைத்த வருவாய் பெருகி வந்தது. ஆனால், சீனாவுக்கு ஏற்றுமதியான அபினியை, முதலில் மட்டுப்படுத்திப் பின்னர் முழுவதும் தடைப்படுத்தும் எண்ணத்துடன் 1907ஆம் ஆண்டில் அரசாங்கம் கையாண்ட கொள்கையும், எல்லா அபினி ஏற்றுமதியையும்[1] கட்டுப்படுத்தி, நாளாவட்டத்தில் மருத்துவச் செயல்களுக்கும் விஞ்ஞானச் செயல்களுக்கு மட்டும் குறைப்பதற்காக 1923ஆம் ஆண்டில் கையாண்ட கொள்கையும், அபினி ஏற்றுமதி, அபினி வருவாய்[2] இரண்டையுமே குறைத்தன. 1936 ஆம் ஆண்டில் மருத்துவ, விஞ்ஞானச் செயல்கள் நீங்கலான மற்றவைகளுக்கு அபினி ஏற்றுமதி முற்றிலும் தடுக்கப்பெற்றது. தற்பொழுது அபினி மூலம் கிடைக்கும் வருவாய் மிகச் சொற்பமே.[3]

'வரிவிதிப்பு' என்ற தலைப்பில், பின்வரும் ஏழு முக்கிய இனங்களும் அடங்கியிருக்கின்றன. அவையாவன; உப்பு[4] ஆயத்தீர்வை, மாகாணக் கட்டணங்கள், சுங்க வரிகள், தீர்வையிலுள்ள வரிகள், பதிவு செய்தல், வில்லைகள் முதலியனவாகும். 'வில்லைகள்', 'பதிவு' இவற்றின் மேலுள்ள வரிகள், மற்ற நாடுகளைப் போலவே இந்தியாவிலும் விதிக்கப்படுவதால் அவற்றைத் தனியாக விளக்க வேண்டிய அவசியமில்லை. சுங்க வரிகளைப் பற்றியும் முன்னர் ஒரு சந்தர்ப்பத்தில் விளக்கியிருக்கிறோம் ஆகையால் இங்கும் விளக்கத்திற்கு எடுத்துக்கொள்ள வேண்டியதில்லை[5].

உப்பின்மேல் விதிக்கப் பெற்றுள்ள இறக்குமதித் தீர்வை, ஆயத் தீர்வை இவையிரண்டின் மூலமாகவும் அரசாங்கத்திற்கு வருவாய் கிடைக்கிறது. 19ஆம் நூற்றாண்டில் 1879ஆம் ஆண்டு-

[1] ஜெனிவா ஒப்பந்தம் (Geneva Convention) மருந்து வகைகளை ஏற்றுமதி செய்வதில் சில நிபந்தனைகளை விதித்தது. ஒப்பந்தத்தில் அங்கத்தினர் என்ற முறையில், தன்னுடைய சர்வ தேசக் கடமைகளை நிறைவேற்றுவதற்காக, அபினி ஏற்றுமதியின் முழுப்பொறுப்பையும் 1923ஆம் ஆண்டில் இந்திய அரசாங்கம் ஏற்றுக்கொண்டது.

[2] 1891–92ஆம் ஆண்டில், அபினி மூலம் ரூ 6·14 கோடி வருவாய் கிடைத்தது. சீனாவுக்கு அபினி ஏற்றுமதியைத் தடைப்படுத்தும் கொள்கை, அபினி ஏற்றுமதி முற்றிலும் தடைசெய்யப்படும்வரை ஏற்றுமதியை ஊக்குவிப்பதாக இருந்தது. அபினி ஏற்றுமதியினால் கிடைத்த வருவாய் 1920–21ஆம் ஆண்டில் ரூ 2·30 கோடியாகவும், அண்மையில் ரூ 0·50 கோடியாகவும் குறைந்துவிட்டது.

[3] இந்திய சுதேச அரசுகளில் பாப்பிச்செடி பயிர் செய்வதைத் தடுக்க, சுதேச அரசுகளுடன் இந்திய அரசாங்கம் ஓர் ஒப்பந்தம் செய்துள்ளது. (Times, May 28 and 30, 1928).

[4] உப்பு இறக்குமதியால் கிடைக்கும் வருவாய் 'சுங்கவரிகள்' என்னும் தலைப்பின் கீழ் வராமல், உப்பு என்னும் தனித் தலைப்பின்கீழ் வருகிறது.

[5] அத்தியாயம் XIII § 2ஐப் பார்க்கவும்.

வரை இந்தத் தீர்வைகள் மாகாணத்திற்கு மாகாணம் மாறுத லடைந்தன. உப்பின் மேலுள்ள தீர்வைகள் 1879ஆம் ஆண்டில் இந்தியா முழுவதிலும் சமஞக்கப் பெற்று (82 பவுண்டு கொண்ட ஒரு மணங்குக்கு ரூ. 2–8-0 வீதம்), அந் நூற்றாண்டின் முடிவு வரை ஏறக்குறைய அதே நிலையில் இருந்து வந்தன.

உப்புவரி ஏழை மக்கள்மேல் பெரும் பளுவாக இருக்கிறது என்ற காரணத்தாலும், மக்களின் பொருளாதார நிலை தாழத் தாழ உணவைப் பாடம் செய்துவைக்க அவர்களுக்கு அதிகமான உப்பு தேவைப்படுகிறது என்பதாலும், நீண்ட காலமாகவே உப்பு வரிக்குக் கடும் எதிர்ப்பு இருந்தது. ஆனால், அரசாங்கத்தின் நிதி நிலைமை திருப்திகரமாக இல்லாததால் பெரும்பான்மையான மக்கள் செலுத்தக் கூடிய ஒரு வரியை விதிக்க வேண்டியது அவசிய மாயிற்று; உப்பு ஒன்றுதான் எல்லோருக்கும் தேவைப்படும் வரி விதிக்கப்படக் கூடிய பொருள் என்ற எண்ணமும் உப்புவரிக்கு ஆதரவளிப்பதாக இருந்தது.

உப்பு வரியைப்பற்றிய வாதத்தின் உண்மை, நில வரியை, மக்களால் அரசாங்கத்திற்குச் செலுத்தப்பெறும் கட்டாயக் கட்டணமாகக் கருதலாமா கூடாதா என்பதைப் பொறுத்துத்தானிருக்கிறது. உப்பு வரியை அவசியம் என்று ஒப்புக் கொண்டாலும், உப்பு வரியின் கட்டணம் முறையானதா என்பது சந்தேகத்திற்குரியதாகும். உப்பு வரியின் கட்டணத்தில் ஏற்பட்ட ஒரு மாற்றத்திற்கு முன்னும் பின்னும் நுகரப் பெற்ற உப்பின் அளவுகளை ஒப்பிட்டுப் பார்த்தால், கட்டணம் உயர்ந்தபொழுது 'நுகர்வில்' குறிப்பிடக்கூடிய அளவுக்குத் தாழ்ச்சியும், கட்டணம் குறைந்த பொழுது நுகர்வில் அதிகரிப்பும் இருந்தன என்பது தெரியவருகிறது. இதிலிருந்து, மக்களில் பெரும்பான்மையோர், தங்களுக்குத் தேவையான அளவு உப்பை வாங்கும் சக்தியற்றிருந்தனர் என்பதை அறியலாம்.

20ஆம் நூற்றாண்டின் தொடக்க காலத்தில், அரசாங்க நிதி நிலைமை அபிவிருத்தி அடைந்ததும், உப்புவரி படிப்படியாகக் குறைக்கப்பெற்று, 1907ஆம் ஆண்டில் மணங்குக்கு ரூ. 1–0–0 ஆக நிர்ணயிக்கப் பெற்றது. 1916ஆம் ஆண்டில், பலத்த எதிர்ப்பிற்கிடையில் ரூ. 1–4–0 ஆக உயர்த்தப்பெற்றது. வரவு செலவுத் திட்டத்தில் தொடர்ச்சியாகப் பற்றுக் குறைகள் ஏற்பட்டதால், அரசாங்கம் 1922ஆம் ஆண்டில் வரியை ரூ. 2–8–0 ஆக உயர்த்த முடிவு செய்தது. இம் மசோதாவை, சட்டசபை 1922ஆம் ஆண்டிலும், பின்னர் 1923ஆம் ஆண்டிலும் நிராகரித்து விட்டது. இத்

தறுவாயில் இராச்சிய சபா (Council of State), அரசாங்க மசோதாவை ஆதரித்ததால், மசோதா மறுபடியும் சட்ட சபைக்குச் சென்றது. வைசிராய், தன்னுடைய சான்றளிக்கும் அதிகாரத்தை உபயோகித்ததால், தீர்வை அரசாங்கம் விரும்பிய அளவுக்கு உயர்த்தப் பெற்றது. ஆனால், மறு ஆண்டிலேயே (பலத்த விவாதத்திற்குப் பிறகு) தீர்வை மீண்டும் ரூ. I–4–0 ஆகக் குறைக்கப் பெற்றது.

ஒத்துழையாமை இயக்கம் உச்ச நிலையிலிருந்த இந்த நேரத்தில், வரியின் உயர்ந்த கட்டணத்திற்கிருந்த கடும் எதிர்ப்பு எந்த அளவுக்கு உண்மையானது, எந்த அளவுக்கு அரசாங்கத்தைத் தாக்குவதற்கு ஒரு கருவியாகப் பயன்படுத்தப் பெற்றது என்பதைத் தீர்மானிப்பது கடினமாகும். வரியின் உயர்வால் ஏற்பட்ட பளுவைச் சற்று மிகைப்படுத்தியிருக்கலாம். ஆனால், இந்த வரி மக்களெல்லோரையும் பாதிக்கிறது என்பது உண்மையாதலால், அவசரமான நிதி நெருக்கடி ஏற்பட்டால் ஒழிய, வரியை உயர்த்தியிருக்கக் கூடாது.

இந்தியாவுக்குத் தேவையான உப்பை உள்நாட்டிலேயே உற்பத்தி செய்வதற்கான நடவடிக்கைகளை அரசாங்கம் மேற்கொள்ள வேண்டுமென்றும், இப் பிரச்சினையை சுங்கவரிக் கழகத்தின் பரிசீலனைக்கு அனுப்ப வேண்டுமென்றும், இந்திய வரிவிதிப்பு விசாரணைக் குழு சிபாரிசு செய்தது. ஆகவே, மத்திய வருவாய்த் துறைக் கழகம் (Central Board of Revenue) இப் பிரச்சினையைப் பற்றி ஓர் அறிக்கை வெளியிட்டது. அவ்வறிக்கை, இருபதாண்டுக் காலத்தில் வங்காள மாகாணத்தின்[1] தேவையில் பெருமளவையாவது, உள்நாட்டு உற்பத்தி பூர்த்தி செய்யுமா என்பதே சந்தேகத்திற்குரியது என்றும், வங்காள மக்களில் பெரும்பான்மையோர் இறக்குமதியாகும் வெள்ளையுப்பையே பெரிதும் விரும்புகிறார்கள் என்றும் குறிப்பிட்டது.

சுங்கவரிக் கழகம், உப்பைப் பொறுத்த அளவில் இந்தியா 'தன்னிறைவு' (self sufficiency) நிலையை அடைவதற்கான வழிகளைச் சிபாரிசுசெய்து, ஓர் அறிக்கையை 1930ஆம் ஆண்டில் வெளியிட்டது. 1931ஆம் ஆண்டில் இறக்குமதியான உப்பின் மேல் அதிகப்படியான தொழிற்காப்புத் தீர்வை[2] விதிக்கப் பெற்றது.

[1] உப்பு இறக்குமதி செய்வதில் வங்காளம் ஒரு முக்கியப் பகுதியாகும்.

[2] 1931ஆம் ஆண்டில், வரவு செலவுத்திட்டத்தைச் சரிக்கட்டுவதற்காகச் சில 'துணைத் தீர்வைகள்' (Supplementary duties) விதிக்கப் பெற்றன. இதனால் ஆயத் தீர்வையும், இறக்குமதி வரியும் மணங்குக்கு ரூ 1–9–0 ஆக உயர்த்தப் பெற்றன. 1931ஆம் ஆண்டில் விதிக்கப்பெற்ற இறக்குமதிவரி முதலில் 4½ அணாக்களாக இருந்தது; ஆனால் அதற்குப் பிறகு 2½ அணாக்களாகக் குறைக்கப் பெற்றது.

சுங்கவரிக் கழகம் செய்த சிபாரிசுகளின்மேல், அரசாங்கம் எடுத்துக் கொண்ட நடவடிக்கை இது ஒன்றுதான்.

ஆயத்தீர்வையிலிருந்து கிடைத்த வருவாயில் பின்வரும் இனங்கள் அடங்கியிருந்தன: 'நாட்டுச் சாராயம்' (Country Spirit); ஐரோப்பிய முறைப்படி இந்தியாவில் தயாரிக்கப்பெற்ற சாராயம்[1]; சணல்; மருந்துகள் இவற்றின் உற்பத்தியும், விற்பனையும்; அபினி, சில்லறை வியாபாரம்.

மது வகைகளைப் பொறுத்தவரையில், மிகக் குறைந்த குடிகளிடத்திருந்து, நிறைந்த வருவாயைத் திரட்டுவதே முக்கிய நோக்கமாக இருந்து வந்தது. இந் நூற்றாண்டின் தொடக்கத்திலிருந்தே ஆயத் தீர்வையின் கட்டணம் உயர்ந்து கொண்டே வந்தது. இதேபோன்று இறக்குமதியாகும் மதுபானங்களிலும், மருந்து வகைகளிலும் இருந்த தீர்வைகளும் உயர்ந்தன. விற்பனை உரிமை பெற்ற கடைகளின் எண்ணிக்கையும் குறிப்பிடத்தக்க அளவுக்கு குறைக்கப்பட்டிருந்தது. இவையெல்லாம் இருந்தும் குடிப் பழக்கத்தைக் குறைப்பது[2] கடினமாக இருந்தது. ஆயத் தீர்வை மூலம் கிடைத்த வருவாய் 1920-21ஆம் ஆண்டுவரை படிப்படியாக உயர்ந்து கொண்டே யிருந்தது. கள்ளத்தனமாகக் குடிப்பதை ஊக்குவிக்காமலிருக்க எந்த அளவுக்கு முடியுமோ அந்த அளவுக்குத் தீர்வைகள் உயர்த்தப் பெற்றன. மதுவிலக்குக் கொள்கையை, செலவு காரணமாகவும், செயலாக்குவதிலுள்ள இடையூறுகள்[3] காரணமாகவும் 1937ஆம் ஆண்டுவரை அரசாங்கம் தள்ளிப்போட்டு வந்தது. ஆனால், நிலக்கரிச் சுரங்கத் தொகுதிகள், நகர்ப்புறச் சேரிகள் போன்ற குறிப்பிட்ட சில தொகுதிகளைத் தவிர இந்தியாவின் மற்ற இடங்களில் 'குடிப்பேய்', மேனாடுகளில் உள்ளதைப்போல் அவ்வளவு பரவலாக இல்லை.[4]

'மாகாணக் கட்டணங்கள்' என்பன நிலத்தின்மேல் விதிக்கப் பெற்ற 'மேல்வரி' (cess) யாகும். 1878ஆம் ஆண்டில் தொடங்கப் பெற்ற பஞ்சத் தடுப்புத் திட்டத்திற்குத் தேவையான நிதியைத்

[1] இறக்குமதியாகும் சாராயத்திலிருந்து கிடைக்கும் வருவாய் சுங்கவரிகள் என்ற தலைப்பில் சேர்க்கப் பெற்றுள்ளது.

[2] Report of the Excise Committee of the Bombay Government 1922-23.

[3] ஒவ்வொரு மகுவாச் செடியும் (Mahua plant), பணமரமும் மது உடனே கிடைப்பதற்கு ஏதுவாக இருக்கின்றன. மேலும், கள்ளத்தனமாக மதுவைக் காய்ச்சுவதையும் வடிகட்டுவதையும் தடுப்பது முடியாத காரியமாகும்.

[4] முகம்மதியர்கள் மது அருந்துவதை, அவர்களது மதம் அனுமதிக்கவில்லை,

திரட்டுவதற்காக இக் கட்டணங்களை அரசாங்கம் விதித்தது.[1] நடைமுறையில் இக் கட்டணங்கள் நிலவரியை உயர்த்தியதால், குடியானவர்களுக்கு இவைகள் மேலும் பளுவாயிருக்கின்றன என்ற உண்மையை அரசாங்கம் ஒப்புக்கொண்டது. 20ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் நிதிநிலைமை சற்று திருப்திகரமானதும், அரசாங்கம் நாளாவட்டத்தில் இம் மேல்வரிகளைக் குறைத்து, முடிவில் நீக்கியது.

'தீர்வையிலுள்ள வரிகள்' இந்தியாவில் அனுசரிக்கப்பெற்ற வருமான வரியினுளடங்கும். அரசாங்கம் இவ் வரியை முதன் முதலாக 1861ஆம் ஆண்டில் விதித்தது. பிறகு 1873ஆம் ஆண்டு முதல் 1877ஆம் ஆண்டு வரை இவ் வரிகள் ரத்தாயின; அரசாங்கம் 1878ஆம் ஆண்டில் மறுபடியும் புதுப்பித்து. வியாபாரிகளுக்கு மட்டும் அனுசரித்தது. 1886ஆம் ஆண்டில் விவசாய வருமானம் நீங்கலான மற்றெல்லா வருமானங்களும் இவ் வரிக்குள்ளாயின. தற்பொழுது ஆண்டுக்கு ரூ. 500-க்கு மேற்பட்ட[2] விவசாயமில்லாத எல்லா வருமானங்களின்மேலும் விதிக்கப்படும் வரி வருமான வரியாக ஆகிவிட்டது. 1903ஆம் ஆண்டில் வருமான வரி செலுத்தவேண்டிய குறைந்த வருமானம் ரூ. 1,000-க்கு உயர்த்தப்பெற்றது.

1916ஆம் ஆண்டில், அரசாங்கத்திற்கு அதிகப்படியான வருவாய் தேவையானதால், படிப்படியாக உயரும் 'வளர்வீத முறையைக்' (progressive principie) கையாண்டது. அதன்படி ரூ. 1,000-க்கும் ரூ. 5,000-க்கும் இடையிலுள்ள வருமானங்கள் பழைய கட்டணப்படியும் (அதாவது 2 சதவீதம் அல்லது ரூபாய்க்கு மூன்று தம்படிகள்); ரூ. 5,000-க்கும், ரூ. 10,000-க்கும் இடையிலுள்ள வருமானங்கள் ரூபாய்க்கு 6 தம்படிகளும்; ரூ. 10,000-க்கு ரூ. 25,000-க்கும் இடையிலுள்ள வருமானங்கள் ரூபாய்க்கு ஒன்பது தம்படிகளும்; ரூ. 25,000-க்கு மேற்பட்ட வருமானங்கள் ரூபாய்க்கு ஓர் அணாவும் வருமானவரி செலுத்தின. அதற்கு அடுத்த ஆண்டில் ரூ50,000-க்கு மேலான வருமானங்களின் மேல் ஒரு 'வருமான மேல்வரி' (super-tax) ஒன்று விதிக்கப்

[1] இந்த மேல்வரிகள் கட்டணத்திலும் விதிப்பு முறையிலும், மாகாணத்திற்கு மாகாணம் மாறுதலுடையனவாயிருந்தன; ஆனால், மேல்வரிகள் எப்பொழுதும் நிலவரியுடனேயே வசூலிக்கப் பெற்றன.

[2] ரூ. 500க்கும் ரூ. 2000க்கும் இடையிலுள்ள வருமானங்கள் 2 சதவீதமும், ரூ. 2000-க்கு மேற்பட்ட வருமானங்கள் 2½ சதவீதமும் வருமான வரியாகச் செலுத்தின.

பெற்றது. 1920ஆம் ஆண்டில் வருமான வரிவிதிப்பின் அடிப்படையையே அரசாங்கம் திருத்தியமைத்தது. 1921-ம் ஆண்டில் வளர் வீதக் கட்டணங்களை உயர்த்தியது. இதற்கிடையில் (1919-ம் ஆண்டில்) வருமானவரி செலுத்தவேண்டிய குறைந்த வருமான மட்டமும் ரூ. 2,000 ஆக உயர்த்தப்பெற்றது.[1]

இந்திய வரிவிதிப்பு விசாரணைக் குழு, இந்திய வருமான வரியை மேல் நாடுகளில் நடைமுறையிலிருந்தவைகளுக்கு ஒப்பாகச் செய்யும் நோக்கத்துடன், பல யோசனைகளையும் ஆராய்ந்த பிறகு, தற்போதைய முறை இந்தியச் சூழ்நிலைக்கு மிகவும் பொருத்தமாக இருக்கிறது என்று முடிவு செய்தது. இந்திய வருமான வரியில், சார்ந்திருப்பவர்களுக்கு (dependents) எந்தவிதச் சலுகைகளும் அளிக்கப்பெறவில்லை. இந்திய வருமான வரியில் விலக்குமட்டம் (level of exemption) உயர்வாக இருப்பதற்கு இது ஈடு செய்வதுடன், சார்ந்திருப்பவர்களுக்குச் சலுகை காட்டுவதால் உண்டாகும் குழப்பமும்[2] குறைகிறது என்று விசாரணைக்குழுவினர் கருதினர். வருமானங்களை, ஈட்டப்பெற்ற வருமானங்கள் (earned incomes), என்றும் ஈட்டப்பெறுத வருமானங்கள் (un-earned incomes) என்றும், இருவகைகளாகப் பிரிப்பது இப்போதைய நிலையில் அவசியமில்லை; ஒருவேளை விவசாய வருமானங்களையும் வருமான வரியின்கீழ்க் கொண்டு வரும்பொழுது அவசியமாகலாம். 1939ஆம் ஆண்டில், வருமான வரியை அரசாங்கம் முற்றிலும் புதியமுறையில் திருத்தியமைத்தது. அதுவரை வருமான வரியமைப்பில் சிறு மாறுதல்களே ஏற்பட்டன. 1939ஆம் ஆண்டுச் சட்டப்படி வருமான வரியில் பழைய 'படிமுறைக்குப்' (step system) பதிலாக (அதாவது வெவ்வேறு வருமானங்களுக்கும் வெவ்வேறு கட்டணம் விதித்தல்), 'பலகை முறை'யை (slab system) (அதாவது வருமானத்தின் ஒவ்வொரு கட்டத்திற்கும் ஒரு தனிக் கட்டணம் விதித்தல்) அரசாங்கம் கையாண்டது;[3] அதனுடன் வருமான வரிபற்றிய

[1] 1919ஆம் ஆண்டில் அரசாங்கம் அமித இலாபங்களில் (excess profits) ரூ. 50 சதவித வரி விதித்து, 1920ஆம் ஆண்டில் அதை ரத்து செய்தது.

[2] இந்தியாவில், 'கூட்டுக் குடும்ப முறை' (Joint family system) சாதாரண வழக்கமாயிருப்பதால், சலுகைகளைத் தீர்மானிப்பது என்பது மிகக் கடினமாகும்.

[3] ரூ. 2000-க்கும் 3000-க்கும் இடையிலுள்ள வருமானங்களுக்கு 3 சதவீதமும், ரூ. 3,000-க்கும் ரூ. 5,000-க்கும் இடையிலுள்ள வருமானங்களுக்கு 5 சதவீதமும்; ரூ.5000-க்கும் ரூ. 7000-க்கும் இடையிலுள்ள வருமானங்களுக்கு 8 சதவீதமும் என்று வரி விதிப்பது படிமுறையாகும். ஒரு வருமானத்தில், ரூ. 2,000-லிருந்து ரூ. 3,000 வரை உள்ளதற்கு 3 சதவீதம், ரூ. 3,000-லிருந்து ரூ. 5,000 வரை உள்ளதற்கு அதற்குமேல் 2 சதவீதம், ரூ.5000–7000 வரை உள்ளதற்கு அதற்குமேல் 2 சதவீதம் என்று விதிப்பது பலகை முறையாகும்.

முறையீடு செய்துகொள்வதற்குத் தீர்ப்பு மன்றம் (Appelate tribunal) ஒன்றையும் நிறுவியது. இச் சட்டம் நிறைவேறுவதற்குமுன், வருமானவரி அதிகாரிகள் யார்மேல் வருமானவரியை விதிக்கிறார்களோ, அவர்கள் மட்டுமே கணக்குகளைச் சமர்ப்பித்து, வரிகளையும் செலுத்த வேண்டியிருந்தது. ஆனால், 1939ஆம் ஆண்டின் சட்டப்படி, விலக்குமட்டத்திற்குமேல் வருமானம் பெறுபவர்கள் தாங்களாகவே கணக்குகளைச் சமர்ப்பிக்கவேண்டுமென்ற புதிய முறை நடப்புக்கு வந்தது.[1]

வருவாயின் நான்காவது முக்கியத் தலைப்பான 'வர்த்தகத் தொழில்துறைகள்' என்பன தபால், தந்தி, இரயில்வேக்கள், பாசனம் இவைகளின்மூலம் அரசாங்கத்திற்குக் கிடைக்கும் நிகர வருமானத்தைக் (ஏதாவது இருந்தால்) கொண்டதாகும். 19ஆம் நூற்றாண்டின் முடிவுவரை, இத் துறைகள் எல்லாவற்றையும் ஒன்றாக இணைத்துக் கணக்கிட அரசாங்கத்திற்கு நட்டமாகவே இருந்தது; இரயில்வேக்களில் உண்டான பற்றாக்குறைகள்தான் இதற்கு முக்கியக் காரணமாகும். இரயில்வேக்கள் முதன்முறையாக 1898-99ஆம் ஆண்டில்தான் நிகர வருமானத்தைக் கொடுத்தன. இந்த ஆண்டுக்குப் பிறகு தொழில்துறைகள் இலாபகரமானதாக இருந்தன. அண்மையில் ஏற்பட்ட மந்தகாலம் வரை, இத் துறைகளின்மூலம் கிடைத்த இலாபம், மக்களை வருத்தாத வகையில் அரசாங்க வருமானத்தை அதிகரித்தது.[2]

சீர்திருத்தங்களுக்கு முன்னர் பலவகையான சில்லறை வரவுகள் என்பன பெரும்பாலும் நாணயம் அடிப்பதின்மூலம் கிடைத்த இலாபத்தைமட்டுமே கொண்டிருந்தன. 1893ஆம் ஆண்டில் நாணயச் சாலை மூடப்பட்டபொழுது, ரூபாய் நாணயம் ஓர் அடையாள நாணயமாக (token coin) மாறியது.[3] இந் நூற்றாண்டின் தொடக்கத்தில் நாணயச்சாலைகள் மறுபடியும் திறக்கப்பெற்றதும், நாணயம் அடிப்பதன்மூலம் கிடைத்த இலாபம் பெருவாரியாக இருந்தது.

வருவாயினத்தின் கடைசித் தலைப்பு நாணயமாற்றம் என்பதாகும். அரசாங்கத்தின் நாணயமாற்றுச் செயல்கள், குறிப்பிட்ட சில ஆண்டுகளில் மட்டுந்தான் நிகர வருமானத்தைக் கொடுத்தன. மற்ற ஆண்டுகளில் நாணய மாற்றம் நிகர நட்டமாகவே இருந்தது. அரசாங்கம், இந்தியாவில் செலுத்தப்பெற்ற

[1] Indian Year Book, 1939, p. 797-ஐப் பார்க்கவும்.

[2] இரயில்வேக்கள், பாசன வேலைகள் மூலம் கிடைத்த வருவாயை முன்னரே ஆராய்ந்துள்ளோம். இந் நூலின் முதற் பாகத்தில் அத்தியாயங்கள் 6, 7-ஐப் பார்க்கவும்.

[3] 15ஆம் அத்தியாயத்தைப் பார்க்கவும்.

வரவுகளிலிருந்து, அரசாங்கக் கணக்கில் இலண்டனில் அவ்வப் போது ஸ்டெர்லிங் நாணயத்தில் பட்டுவாடாக்கள் செய்ய வேண்டியிருந்தன. அரசாங்கத்தின் இந்த நடவடிக்கையால் எழுந்ததே நாணயமாற்றுச் செயல்களாகும். அவ்வப்போது நிலவும் 'நாணயமாற்று வீதப்படி' (rate of exchange) ஒவ் வொருநடவடிக்கைக்கும் தேவையான ஸ்டெர்லிங் நாணயத்தைப் பெறுவதற்கு எத்தனை ரூபாய்களைக் கொடுக்கவேண்டும் என்று கணக்கிடுவதற்குப் பதிலாகத் தேவையான ஸ்டெர்லிங் தொகைக், அத் தொகையைச் செலாவணி மாற்றுமதிப்பு வீதத்தில் (par of exchange) வாங்கியதுபோலக் கணக்கில் பதியப்படும். ஒரு குறிப் பிட்ட ஸ்டெர்லிங் தொகையை வாங்குவதற்குக் கொடுக்க வேண்டிய ரூபாய்களில் 'செலாவணி மாற்று மதிப்பு' வீதத்திற் கும், அவ்வப்போது நிலவும் மார்க்கெட்ட வீதத்திற்கும் வேறு பாடு இருக்கும். அரசாங்கத்தின் ஓராண்டு நடவடிக்கையினால் உண்டாகும் மொத்த வேறுபாடுதான். நாணயமாற்றத்தினால் உண்டான இலாபம் அல்லது நட்டம் என்ற தலைப்பில் தனி இனமாகப்பதிவாகியது.[1] ஓர் ஆண்டில் ரூபாயின் ஸ்டெர்லிங் விலை (rupee price of sterling) 'செலாவணி மாற்று மதிப்பு வீதத்திற்கு மேலேயிருந்தால் (அதாவது செலாவணி மாற்று மதிப்பு வீதம் 1 ரூ. = 1ஷில்லிங், 4 பென்ஸ் ஆக இருக்க, மார்க்கெட்டு வீதப்படி 1 ரூபாய், 1ஷில்லிங் 4 பென்சை வாங்க முடியாதபொழுது) நாணய மாற்றம்மூலம் நட்டமும், விலைகுறைவாக இருந்தால் இலாபமும் கிடைத்தன. இப்படியாக, ரூபாயின் மதிப்பு நிலையாக இருந்த பொழுது, நாணய மாற்றம்மூலம் கிடைத்த இலாப நட்டம் குறைவாகவும், ரூபாயின் மதிப்பில் பெருத்த மாறுதல்கள் இருந்த காலத்தில் அதிகமாகவும் இருந்தன. எடுத்துக்காட்டாக, 1873ஆம் ஆண்டிலிருந்து ஏறக்குறைய அந்த நூற்றாண்டின் முடிவுவரை, தங்கத்தின் ரூபாய் மதிப்புத் தொடர்ச்சியாகக் குறைந்து கொண்டே வந்ததால், ஆண்டாண்டுக்கும் நாணய மாற்றம் மூலமாகப் பெருத்த நட்டம் ஏற்பட்டது. 20ஆம் நூற் றாண்டின் தொடக்க ஆண்டுகளில் ரூபாயின் மதிப்பு ஏறக்குறைய நிலையாக்கப் பெற்றபொழுது, நாணயமாற்றம்மூலம் ஏற்பட்ட நட்டம் குறைந்து விட்டது.

1917ஆம் ஆண்டில் ஸ்டெர்லிங்கின் ரூபாய் மதிப்பு (sterling value of the rupee) திடீரென்று உயர்ந்தது. இந்திய வரவு செலவுத் திட்டம், 1 ரூபாய்க்கு, 1 ஷில்லிங் 4 பென்ஸ் என்ற அடிப் படையிலேயே இருந்ததால், அரசாங்கத்திற்கு மிகுந்த இலாபம்

[1] Moral and Material Progress of India, 1901–2, p. 140.

கிடைத்தது. 1920ஆம் ஆண்டில், அதிகாரபூர்வமான (Official) செலாவணி மாற்று மதிப்பு ரூபாய்க்கு 2 ஷில்லிங்காக[1] உயர்த்தப் பெற்று, இந்த வீதம் வரவு செலவுத் திட்டத்திலும் கையாளப் பெற்றது. அரசாங்கக் கணக்குகளும் முன்னர் இருந்ததைப் போல, 'ஸ்டெர்லிங்' அடைப்படையிலில்லாமல், ரூபாயின் அடிப் படையில் மாற்றியமைக்கப்பெற்றன. ஆனால், மார்க்கெட்டு நிலவரப்படி இந்திய ரூபாயின் மதிப்புக் குறையத் தொடங்கிய தால் அரசாங்கத்திற்குப் பெருத்த நட்டம் ஏற்பட்டது.[2] புள்ளி விவரம், மற்றும் வரவு செலவுத் திட்டம்பற்றிய செயல்களுக்கு, பழைய 1 ரூ = 1 ஷில்லிங் 4 பென்ஸ் என்கிற வீதத்திற்கு 1922–23 ஆம் ஆண்டில் அரசாங்கம் திரும்பும்வரை இந்த நிலை நீடித்தது. அடுத்த ஆண்டில் நாணயமாற்றத்தின் இலாப நட்டத்திற்கான தனித் தலைப்பை அரசாங்கம் கைவிட்டது. அதற்குப் பதிலாக, ஒவ்வொரு தலைப்பின்கீழும் நாணய மாற்றத்தினால் உண்டாகும் வித்தியாசத்திற்குத் தகுந்த முன்னேற்பாடு செய்யப் பெற்றது.[3] 1925ஆம் ஆண்டில், புள்ளி விவரம் மற்றும் வரவு செலவுத் திட்டத்திற்கான செயல்களுக்கு, செலாவணி மாற்று மதிப்பு 1ரூ. = 1 ஷில்லிங் 6 பென்ஸாகக் கையாளப் பெற்றது. 1927ஆம் ஆண்டில் நாணயமாற்று மதிப்பு 1 ரூ. = 1 ஷில்லிங் 6 பென்ஸ் என்ற வீதத்தில் சட்டபூர்வமாக நிர்ணயிக்கப்பெற்றது.

இப்பொழுது, கணக்குகளின் செலவினத்தின் பக்கம் கவனத்தைத் திருப்பலாம்.[4] செலவினத்தின் முக்கியத் தலைப்பு களின் இயல்பு தெளிவானதால் அதைப்பற்றிய விளக்கம் இங்குத் தேவையில்லை. பெரிய இனங்களில் சிலவற்றின் பூர்வாங்க விளக்கம் இப்போதைய நோக்கத்திற்கு அப்பாற்பட்டதாகும்.

செலவினத்தில் ஏழு முக்கியத் தலைப்புகளைக் காணலாம்.[5] அவையாவன: கடன் பணிகள், இராணுவப் பணிகள், நிலவரி வசூலிப்பு, வர்த்தகத் தொழில்துறைகள், சிவில் பணிகள், பஞ்ச நிவாரணமும் தடுப்பும், மாகாணச் சரிக்கட்டல்கள் முதலியன வாகும்.

[1] முதலில் 2 ஷில்லிங் பொன்னுகளும், பின்னர் 2 ஷில்லிங் ஸ்டெர்லிங்காகவும் மாற்றப்பெற்றது.

[2] 15ஆம் அத்தியாயத்தைப் பார்க்கவும்.

[3] வரவு செலவுத் திட்டக் கணக்குகள், 1921–22க்குப் பிந்திய ஆண்டுகளில், புதிய முறையில், ஆனால் இயற்கையான முறையில் திருத்தியமைக்கப்பெற்றன. இந்த மாறுதலினாலும், மத்திய நிதிகளும், மாகாண நிதிகளும் தனித்தனியாகப் பிரிக்கப்பட்ட தாலும் 1920–21ஆம் ஆண்டுக்கு முன்னரும், பின்னருமான கணக்குகளை ஒப்பிட்டுப் பார்ப்பது மேலும் கடினமாகியது.

[4] 15ஆம் அத்தியாயத்தைப் பார்க்கவும்.

[5] XVIIIஆம் அட்டவணையைப் பார்க்கவும்.

இராணுவப் பணிகள், நிலவரி வசூலிப்பு, சிவில் பணிகள் இவைகளுக்கான செலவின் இயல்பை விளக்கவேண்டிய அவசிய மில்லை; வர்த்தகத் தொழில் துறைகள்பற்றிய விளக்கத்தை வருவாயினத்தின்கீழ் முன்னரே கண்டோம்; மாகாணச் சரிக்கட்டல்களும் முன்னரே விளக்கப்பெற்றன.[1] ஆகவே, பஞ்ச நிவாரணமும் தடுப்பும், கடன் பணிகள் என்னும் இவ்விரு இனங்களைப்பற்றித்தான் விளக்கம் தரப்படப்படல்வேண்டும்.

1878ஆம் ஆண்டு வரை, பஞ்ச நிவாரணத்திற்குத் தேவை யான நிதியைத் தனியாகத் திரட்டவேண்டியிருந்தது; அல்லது வரவு செலவுத் திட்டத்தில் உபரி ஏதேனும் இருந்தால் பஞ்ச நிவாரணத்திற்கென்று அது செலவிடப்பட்டது. ஆனால் நாட்டில் பஞ்சங்கள் அடிக்கடி தோன்றியதால், இவைகளைத் தடுப்பதற்கும் நிவாரணமளிப்பதற்கும் ஒரு நிரந்தர ஏற்பாடு செய்வது அறி வுடைமையாகும் என்று அரசாங்கம் தீர்மானித்தது. இதனால், பஞ்ச நிவாரண நிதி என்று ஒன்றைத் தனியாகத் தொடங்கியது. இந்நிதிக்கு, ஆண்டொன்றுக்கு ஒரு குறிப்பிட்ட தொகையை ஒதுக்கி, கிடைத்த தொகையிலிருந்து. பஞ்ச நிவாரணச் செயல் களுக்கும், பஞ்சத்தினால் மக்களுக்கு விளைந்த கடன்களைக் குறைப் பதற்கும் தவிர்ப்பதற்கும் அரசாங்கம் செலவிட்டது.

அரசாங்கம், நிதி நெருக்கடிக்குள்ளாகியதால், தொடக்க காலத்தில் இந்நிதியை, அதைத் தோற்றுவித்த காரணத்திற்காகச் செலவிட முடியவில்லை. 1881ஆம் ஆண்டில் அரசாங்கம் இத் திட்டத்தைத் திருத்தியமைத்தது. அதன்படி, ஆண்டுக்குக் கிட்டத்தட்ட ரூ. 1·5 கோடியை ஒதுக்கி, அதைப்பஞ்ச நிவாரணம், பஞ்சத் தடுப்பு, கடன்களைத் தவிர்த்தல் போன்ற செயல்களுக்கு உபயோகித்தது.

அரசாங்கக் கடன்கள் என்னும் இனம், ஒரு பகுதி இந்தியா வில் எழுப்பப்பெற்ற ரூபாய்க் கடன்களையும், மற்றொரு பகுதி இங்கிலாந்தில் எழுப்பப்பெற்ற ஸ்டெர்லிங் கடன்களையும் கொண்டதாகும். இந்த இருவகைக் கடன்களையும் இராணுவச் செலவுக்காகவும், நிருவாகச் செலவுக்காகவும், இரயில்வேக்கள், பாசனம் போன்ற பயன்தரும் பொதுவேலைகளுக்காகவும் அரசாங்கம் திரட்டியது. இராணுவ, நிருவாகச் செலவுக்கான கடன்கள் சாதாரணக் கடன்கள் அல்லது உற்பத்தியாக்காக் கடன்கள் (non-productive debts) அல்லது பயனில் சுமைக்

[1] 14ஆம் அத்தியாயத்தைப் பார்க்கவும்.

கடன்கள் (dead-weight debts) என்றும், ஆக்க வேலைக்கான கடன்கள் உற்பத்தியாக்கும் கடன்கள் (productive debts) என்றும் அழைக்கப்பெற்றன. உற்பத்தியாக்கும் கடன்கள்மூலம், அரசாங்கம் மேற்கொள்ளும் பணிகளிலிருந்து வட்டியையும், 'கடன் கழிவு நிதியின்' (sinking fund) செலவையும் ஈடு செய்யும் வருவாய் கிடைக்குமானால், இக் கடன்களை அரசாங்கச் செலவாகக் கருதவேண்டியதில்லை. இப் பணிகளிலிருந்து செலவு போக நிகர வருமானமும் கிடைக்கலாம்.

19ஆம் நூற்றாண்டில் நடந்த எல்லைப்புறப் போர்களும், உள்நாட்டுப் போர்களும், சிப்பாய்க் கலகமும் அரசாங்கத்திற்கு முன்னிருந்த உற்பத்தியாக்காக்கடன்களை மேலும் அதிகமாக்கின.[1] ஆனால், 19ஆம் நூற்றாண்டின் இறுதியில், இத்தகைய கடனின் பெரும் பகுதியும் அடைக்கப்பெற்று, இந்தியாவின் பயனில் சுமைக்கடனும் வெகுவாகக் குறைக்கப்பெற்றது.[2]

ஆகையால், 19ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில், நாட்டின் மொத்தக் கடன் அதிகரிக்கத் தொடங்கியது. ஆக்க வேலைக்காக அரசாங்கம் மேற்கொண்ட செலவே அதற்குக் காரணமாகும். பயனில் சுமைக் கடனும் மறையத்தொடங்கியது.[3] முதல் உலகப் போர் மூளாதிருந்தால், உண்மையில் இந்தக் கடன் முற்றிலும் மறைந்திருக்கும். இப் போர், புதிய உற்பத்தியாக்காக் கடன்களை எழுப்பவேண்டிய அவசியத்தை உண்டாக்கியது. போர்க்கடன்களினால் ஏற்பட்ட பளுவைப் பின்னர் கவனிப்போம்.[4]

இதுவரை, முக்கியச் செலவினங்களில் ஒவ்வொன்றின் இயல்பையும் ஆராய்ந்தோம். இனி, இவ்வினங்களின் தராதர முக்கியத்துவத்தையும், இவைகளால் உண்டான மாறுதல்களையும் சுருக்கமாகக் கவனிப்போம்.

19ஆம் நூற்றாண்டில் அரசாங்க வருவாயில், நிலவரி ஒரு மிக முக்கியமான இனமாக இருந்தது. 1891-92ஆம் ஆண்டில்

[1] நியாயமாக இங்கிலாந்தினுடைய கணக்கில் சேர்க்கவேண்டிய செலவுகளை, இந்தியாவின் தலையில் கட்டுகிறார்கள் என்னும் முறையீட்டுக்கு, இத்தகைய உற்பத்தியாக்காக் கடன்கள் காரணமாயிருந்தன. இம் முறையீடு பொருத்தமானதா இல்லையா என்பது ஒருபுறமிருக்க, 19ஆம் நூற்றாண்டின் முடிவுவரை இத்தகைய பெரும் செலவுகள் இந்தியாவின்மேல் அமர்த்தப்படவில்லை.

[2] பயனில் சுமைக் கடன்களுக்கான வட்டிச்செலவு 1891-92ஆம் ஆண்டில் ரூ. 3·60 கோடியாகவும், 1901-02ஆம் ஆண்டில் ரூ 1.73 கோடியாகவும் இருந்தது. 1911-12 ஆம்ஆண்டில் அச் செலவு ரூ. 0.88 கோடிதானிருந்தது.

[3] பயனில் சுமைக்கடன் குறைந்ததனால் கிடைத்த நிதியைக்கொண்டு, அரசாங்கம் உற்பத்தியாக்கும் செலவுகளை அதிகரித்தது.

[4] இதே அத்தியாயத்தின் பிற்பகுதியைப் பார்க்கவும்.

அரசாங்கத்தின் நிகர வருவாயில், நிலவரி 40 சதவீதத்தைக் கொடுத்தது. வரிவிதிப்பின் ஏழு தலைப்புகளின்மூலமாகவும் ஓர் ஆண்டில் கிடைக்கும் வருவாயைவிட, நிலவருவாய் அதிகமாக இருந்தது. அரசாங்க வருவாயில் தனிப்பட்ட முக்கிய இனங்களில், நிலவரிக்கு அடுத்தபடியாக உப்பு இரண்டாவது இடத்தையும், அபினி மூன்றுவது இடத்தையும் வகித்தன. இவைகளுக்குப் பிறகு, 'முத்திரை வில்லைகள்', 'மாகாணக் கட்டணங்கள்' முதலியன வந்தன. அக்காலத்தில் சுங்கவரிகளிலிருந்து கிடைத்த வருமானம் மிகக் குறைவாகவே இருந்தது.[1] வர்த்தகத் தொழில்துறை நடவடிக்கைகள், அரசாங்கத்திற்கு நிகரத்தில் நட்டத்தையே கொடுத்தன. இவ்வாறு இந்திய அரசாங்கத்தின் நிதி மூலங்கள், குறைவாகவும் நெகிழ்ச்சியற்றதாகவும் (inelastic) இருந்தன. மொத்த வருவாயின் பெரும் பங்கையும் சாதாரண மக்களிடமிருந்தே அரசாங்கம் வசூலித்தது.

அரசாங்கத்தின் மொத்தச் செலவில், 1891-92ஆம் ஆண்டு, இராணுவப் பணிகள் 41 சதவீதமும், சிவில் பணிகள் 37 சதவீதமும் இருந்தன. கடன் பணிகள் வெகுவாகக் குறைக்கப்பட்டிருந்தன; வர்த்தகத் தொழில்துறைப் பணிகளின் சுமையும் குறையத் தொடங்கியது.

வர்த்தகத் தொழில்துறைகள், இக்காலம் வரை செலவினமாக இருந்ததுபோக, 1901-02ஆம் ஆண்டில் வரவினமாக மாறின; சுங்கவரிகளும் இந்த ஆண்டில் உயர்ந்தன. 1894ஆம் ஆண்டிலும் பின்னர் 1896ஆம் ஆண்டிலும் வரிமுறையில் ஏற்பட்ட மாறுதல்களால் கடன் பணிகள் மேலும் குறைந்தன. இவை நீங்கலாக வரியமைப்பின் பொதுவான நிலையில் மாற்றமெதுவுமில்லை.

1901-02-க்கும் 1920-21-க்கும் இடையில், அரசாங்கத்தின் மொத்த வருவாயும், அபினி, மாகாணக் கட்டணங்கள் நீங்கலான மற்ற இனங்களிலிருந்து கிடைத்த வருவாயும் குறிப்பிடத்தக்க அளவுக்கு வளர்ந்தன; ஆனால், வருவாயினங்களின் தராதர முக்கியத்துவத்தில் ஓர் அடிப்படையான மாறுதலிருந்தது.[2] வர்த்

[1] 1882-1894ஆம் ஆண்டுகளுக்கு இடைக்காலத்தில், 'தடையிலா வாணிபம்' நிலவியது என்பது நினைவிருக்கலாம்.

[2] வருவாய், செலவு இவ்வினங்களின் தராதர முக்கியத்துவத்தைப்பற்றிப் பின்னர் விரிவாக விவாதிக்கவிருப்பதால், அவைபற்றி ஒரு சிறு குருக்கம்தான் இங்குத் தரப்படுகிறது. 1925-26ஆம் ஆண்டில் இருந்த நிலையையும், 1913-14ஆம் ஆண்டில் இருந்த நிலையையும் இந்த அத்தியாயத்தின் பிற்பகுதியில் ஒப்பிட்டுப் பார்க்கலாம்.

தகத் தொழில் துறைகளிலிருந்து (இவற்றுள் இரயில்வேக்கள் தாம் மிக முக்கியமானவை) 1901ஆம் ஆண்டில் ரூ. 1·7 கோடி வருமானம் கிடைத்ததற்குப் பதிலாக, 1911–12ஆம் ஆண்டிலும் பின்னர் 1920–21ஆம் ஆண்டிலும் ரூ. 7 கோடி வருமானம் கிடைத்தது.

பொதுவாக வரிவிதிப்பின் பல இனங்களிலும், குறிப்பாக ஆயத் தீர்வை சுங்க வரிகள், வருமானவரி முதலியவற்றிலும் குறிப் பிடத்தக்க அளவு வளர்ச்சியும் இருந்தது. சுங்கவரிகளிலிருந்து கிடைத்த வருவாய், மற்றெல்லா இனங்களையும்விட அதிகமாகப் பெருகியது. முதல் உலகப் போரினால் சுங்கவரிகளை உயர்த்த வேண்டிய அவசியம் ஏற்பட்டது. ஆகவே, 1916ஆம் ஆண்டில் தொடங்கி, இறக்குமதி வரிகளை அரசாங்கம் படிப்படியாக உயர்த் தியது. இதனால் 1901ஆம் ஆண்டில் ரூ. 5·6 கோடியைக் கொடுத்த சுங்க வருவாய், 1920–21ஆம் ஆண்டில் ரூ. 30·9 கோடியாகப் பெரு கியது.[1] நிலவருவாயின் வளர்ச்சி மற்ற இனங்களைவிடக் குறை வாகவே காணப்பட்டது.

இவ்வாண்டுகளில் அரசாங்கச் செலவிலிருந்த ஏற்றம் போரி னால் உண்டானது என்பது தெளிவாகும். போர், இராணுவப் பணிகளையும[2] கடன் பணிகளையும்[3] அதிகமாக்கியதோடல்லாமல் அரசாங்கத்தின் நாணயமாற்றுச் செலவையும்[4] உயர்த்தியது. வரிவசூலிப்பதற்கான செலவிலும், சிவில் பணிகள்[5] சம்பந்தமான செலவிலும் பெருமளவுக்கு உயர்வு இருந்தது.

முன்னர் மத்திய அரசாங்கத்தின் கணக்கிலிருந்த பல இனங்கள், சீர்திருத்தங்களுக்குப் பின்னர் மாகாணக் கணக்கு களுக்கு மாறியதுடன், மத்திய அரசாங்கத்தின் கணக்கமைப்பும் மாறுதலடைந்தது.

[1] அத்தியாயம் 13-ஐப் பார்க்கவும்.

[2] 1901–02-ல் ரூ. 24–24 கோடியாக இருந்த நிகரஇராணுவச் செலவு, 1920–21ஆம் ஆண்டில் 87·38 கோடியாக உயர்ந்தது.

[3] கடன் பணிகளின் நிகரச் செலவும் ரூ 1·73 கோடியிலிருந்து (1901–02.ல்), ரூ 12·07 கோடியாக (1920–21.ல்) உயர்ந்தது.

[4] நாணயமாற்றுச் செலவைப்பற்றி அடுத்த அத்தியாயத்தில் விரிவாக ஆராய்வோம்.

[5] இவ் வினங்களிலிருந்த ஏற்றத்திற்குப் பல காரணங்களைக் கூறலாம். நாட்டில் கல்வி, போலீஸ், மருத்துவம், விஞ்ஞானம் போன்ற நிருவாகத் துறைகள் நிரந்தரமாக விரிவாக்கப் பெற்று வந்ததையும், போர்க்காலத்தில் அரசாங்க நடவடிக்கைகள் பெருகி யதையும், விலைவாசிகளும் சம்பளங்களும் உயர்ந்ததையும் முக்கியக் காரணங்களாகக் கூறலாம். இந்தியாவின் மக்கள் தொகை பெரியதாயினும், இவர்களில் பெரும்பாலோ ரும் கல்வியறிவு அற்றவர்களாக இருப்பதாலும், மக்களின் சராசரி வருமானம் குறைவாக இருப்பதாலும் வரிவசூலிப்பதில் இன்னல்கள் இருந்தன. இருப்பினும் வரிவசூலிப் பதற்கான செலவு இங்கிலாந்திலிருந்ததைவிட, இந்தியாவில் ஒரு சிறிதளவுதான் அதிக மாக இருந்தது என்று 1901–02ஆம் ஆண்டில் கணக்கிடப்பட்டது.

1921ஆம் ஆண்டில் மத்திய அரசாங்கத்தின் வருவாய் நான்கு முக்கியத் தலைப்புகளாகப் பிரிக்கப்பெற்றது.[1] அவையாவன: (i) சுங்கவரிகள், வருமானவரி, உப்பு, அபினி, இதர (Other) இனங்கள்; (ii) வர்த்தகத் தொழில் துறைகள்; (iii) செலாவணியும் நாணயச்சாலையும்; (iv) மாகாணங்களின் செல்லுகள்.[2] இவற்றுள் கடைசியும் புதியதுமான மாகாணங்களின் செல்லுகள் என்னும் இனத்தை இங்கு விளக்கத்திற்கு எடுத்துக்கொள்ளலாம். சீர்திருத்தங்கள் இந்திய வருவாயை மறுவிநியோகம் செய்து, மத்திய அரசாங்கத்தின் நிதியையும் மாகாண அரசாங்கத்தின் நிதியையும் தனித்தனியாகப் பிரித்தன. இந்த ஏற்பாட்டினால் மத்திய அரசாங்கம் ரூ. 9.38 கோடி நட்டத்திற்கு உள்ளாகியது என்று மதிப்பிடப்பெற்றது. இதனால் எழுந்ததுதான் மாகாணச் செல்லுகள் என்னும் இனமாகும். மத்திய அரசாங்கத்தின் வருவாய், எதிர்பார்த்த அளவுக்கு அபிவிருத்தியடைந்து, இனியும் மாகாணச் செல்லுகளுக்கு அவசியமில்லை என்னும் நிலையை அடையும்வரை, மத்திய அரசாங்கத்தின் பற்றுக்குறையைப் போக்க, மாகாணங்கள் செல்லுகள் செய்யவேண்டுமென்ற திட்டம் நடைமுறைக்கு வந்தது.[3]

மத்திய அரசாங்கத்தின் செலவு எட்டு முக்கியத்தலைப்புகளின் கீழ் வந்தது. அவையாவன: (i) வர்த்தகத் தொழில்துறைகள்; (ii) வருவாயின்மேல் கணக்கிடப்பெற்ற காடுகளும், மற்றைய முதலீடுகளும்; (iii) கடன் பணிகள்; (iv) சிவில் நிருவாகம்; (v) செலாவணியும் நாணயச்சாலையும்; (vi) சிவில் வேலைகள்; (vii) பலவகையான சில்லறைச் சிவில் வேலைகள்; (viii) இராணுவப் பணிகள். அட்டவணை XIX-ல்[4] கொடுக்கப்பட்டுள்ள எண்களிலிருந்து, 1921-22ஆம் ஆண்டு முதல், மேற்கூறிய தலைப்புகளில் ஏற்பட்ட முக்கிய மாறுதல்களை எளிதாக அறியலாம். ஆனால், இம் மாறுதல்கள், அரசாங்கத்தின், வருவாய் மூலங்

[1] அட்டவணை XIXஐப் பார்க்கவும்.

[2] இத் தலைப்பு கடைசியாக 1926–27-ல் காணப்பட்டது.

[3] இந்த அத்தியாயத்தின் பிற்பகுதியைப் பார்க்கவும்.

[4] வரவு செலவுத் திட்டங்களில் வெளியிடப்படும் கணக்கு முறையை முற்றிலும் பின்பற்றி அட்டவணை XIX- ஐத் தயாரிக்கவில்லை. வருவாய்மேல் கணக்கிடப்பெற்ற காடுகளும் மற்றைய முதலீடுகளும் என்பது வரவு செலவுத் திட்டங்களில், 'பலவகையான சில்லறைச் செலவு' என்னும் தலைப்பின்கீழ் சேர்க்கப்படுகிறது. ஆனால், அட்டவணை XIX-ல் இந்த இனம் 'வர்த்தகத் தொழில் துறைகள்' என்னும் தலைப்பின் கீழ் வருகிறது. இதைப் போன்றே 'செலாவணியும் நாணயச் சாலையும்' என்ற தலைப்பு, அட்டவணையின் செலவுப் பக்கத்திலிருந்து நீக்கப்பட்டுள்ளது. 1921–22ஆம் ஆண்டிலும் அதற்குப் பிற்பட்ட ஆண்டுகளிலும் இந்த இனத்திலிருந்து நிகரவருவாய் கிடைத்ததால், இத்தலைப்பு 1921–22-க்கான வரவு செலவுத் திட்டத்தி காணப்படுகிறது. அட்டவணை XIX-ல், இந்த இனத்தின் நடவடிக்கைகளை நிகர வருவாயிலிருந்தும் செலவிலிருந்தும் கழித்திருக்கிறோம்.

களையும். செலவினங்களையும்பற்றிய முழுத் தகவல்களையும் விளக்குவதாக இல்லை. இவைகளைப்பற்றி மேலும் தெளிவான கருத்தைப் பெறுவதற்காக, வருவாய், செலவு இவ்விரண்டு இனங்களின் முக்கியத் தலைப்புகளையும் ஒன்றாக இணைத்து, அட்டவணைகள் XX-லும், XXI-லும் காட்டப்பெற்றுள்ளன. இவற்றுள், 1921–22-க்கும் 1933–34-க்கும் ஆன இடைக்காலத்தின் மத்திய, மாகாண அரசாங்கங்களின் முக்கிய வருவாய் மூலங்களையும், செலவினங்களையும் அட்டவணை XX காட்டுகிறது.[1]

1913–14ஆம் ஆண்டுக்கான விவரங்களையும் 1925–26ஆம் ஆண்டுக்கான விவரங்களையும் XXIஆம் அட்டவணை காட்டுகிறது. முதல் உலகப் போருக்கு[2] முன்னர் நிலவிய விலைவாசிகளின் அடிப்படையில் தயாரிக்கப்பெற்ற 1925–26ஆம் ஆண்டின் விவரங்களையும் இந்த அட்டவணையில் காணலாம்.

இவ்வரும் விளக்கம் இரண்டு முக்கியநோக்கங்களைக்கொண்டதாகும். வருவாயினங்களிலும், செலவினங்களிலும் 1921ஆம் ஆண்டுமுதல் ஏற்பட்ட முக்கிய மாறுதல்களை விளக்குவது முதல் நோக்கமாகும். 1925–26, 1913–14 இவ்விரு ஆண்டுகளுக்கான மொத்தக் கணக்குகளை, அவ்வவ்வாண்டு நிலவரப்படியும், பணமதிப்பிலிருந்த மாற்றங்களுக்குத் தகுந்தாற்போல, கணக்குகளைத்

[1] அட்டவணை XX-ஐ இயன்றவரை எளிதாக்குவதற்காகப் பலவையான சில்லறை இனங்கள் அதில் சேர்க்கவில்லை. அட்டவணையின் நோக்கம், நிதிநிலைமையின் முழு விவரங்களையும் கொடுப்பதை விட, முக்கிய வரவு செலவு இனங்களை ஒன்றாக இணைத்துக் கொண்டுவருவதுதான். XX, XXIஆம் அட்டவணைகளில் காணும் 1925–26ஆம் ஆண்டின் மொத்த வருவாயையும் செலவையும் நாம் ஒப்பிட்டுப் பார்த்தால், XXIஆம் அட்டவணையில் உள்ள மொத்தக் கூட்டுத் தொகையில், XXஆம் அட்டவணையின் கூட்டுத்தொகை, 96 சதவீதத்திற்குக் குறையாமலிருக்கிறது என்பதைக் காணலாம். ஆகையால் அட்டவணை XX-ல், எல்லா முக்கிய இனங்களும் அடங்கியிருப்பதுடன், மொத்தத் தொகையில் பெருமளவும் அடங்கியிருக்கிறது. மத்திய அரசாங்கக் கணக்குகளில், இதுவரை இரட்டைபாட்சி முறை அனுசரிக்கப் பெறுத மாகாணங்களின் வருவாயும் செலவும் அடங்கியிருக்கின்றன என்பதை மறந்துவிடக்கூடாது. பா ன் அரசுகள் (Shan States) தாம் முதன்முறையாக இரட்டைபாட்சி வரவு செலவுத்திட்டத்தை (Dyarchy Budget), 1923–24ஆம் ஆண்டில் கையாண்டது. இதன் கணக்குகள் அட்டவணையில் சேர்க்கப்பெறவில்லை. இடவசதி இல்லாத காரணத்தால் 1934–35 முதல் 1936–37 வரைக்குமான கணக்குகளைச் சேர்க்கவில்லை. பர்மா மிகவிலையானதாலும், மாகாண சுயாட்சி நிறுவப்பெற்றதாலும் 1936–37ஆம் ஆண்டுக்குப் பிறகு நிதிமுறையின் அடிப்படையே மாறுதலடைந்தது. இவ்வாண்டுகளுக்கான விவரங்களை 18-ஆம் அத்தியாயத்தில் காணலாம்.

[2] 1914ஆம் ஆண்டு ஜூலை மாத விலைவாசிகளை 100 எண்களில் எடுத்துக் கொண்டால், 1925ஆம் ஆண்டில், கல்கத்தாவின் 'மொத்த விலைக்குறியீட்டு எண்கள்' (Wholesale index number) 159 எண்களாக உயர்ந்தன. 1925ஆம் ஆண்டை, விலைவாசிகள் சம்பந்தமான எல்லாவிவரங்களும் கிடைக்கக் கூடிய அடிப்படை ஆண்டாக (Base year) 1929ஆம் ஆண்டில் எடுத்துக் கொள்ளப்பெற்றது. நாட்டின் பொருளாதார நிலையில் 'வீக்கம்' (Boom) அல்லது 'மந்தம்' (Depression) போன்ற ஏற்றத்தாழ்வுகள் உள்ள ஆண்டுகளைத் தவிர்ப்பதற்காகத்தான் நாமும் அதே ஆண்டை எடுத்துக் கொண்டோம். பொருளாதார மந்தத்தினால் ஏற்பட்ட நிதிவிளைவுகளை அத்தியாயம் 18-ல் காணலாம்.

திருத்தியமைத்து ஒப்பிட்டுப் பார்ப்பது இரண்டாவது நோக்க மாகும்.

அட்டவணை XX-ல் மூன்று முக்கியப் பிரிவுகளைக் காணலாம். அவையாவன: (i) நில வருவாய், (ii) வரிவிதிப்பு, (iii) வர்த்தகத் தொழில்துறைகள் என்பவையாகும். 1925–26ஆம் ஆண்டில் நிலவரியிலிருந்து ரூ. 32,67 இலட்சமும், வரிவிதிப்பிலிருந்து ரூ. 100,98 இலட்சமும், வர்த்தகத் தொழில் துறைகளிலிருந்து ரூ. 10,06 இலட்சமும் நிகர வருமானங்களாகக் கிடைத்தன. 1901-02ஆம் ஆண்டில் இவ்வினங்களிலிருந்து முறையே ரூ. 26,26, ரூ. 29,31, ரூ. 1.72 இலட்சமும் கிடைத்தன.

இந் நூற்றாண்டின் தொடக்கத்திலிருந்து, அரசாங்கத்தின் நில வருவாய்க் கொள்கையில்[1] எந்தவிதப் பெரிய மாறுதலுமில்லை. மேலும் நிலவரியின் சராசரிக்கட்டணம் குறைந்ததாகத் தோன்றினாலும், நிலவரியிலிருந்து கிடைத்த நிகர வருமானம் 1901-02ஆம் ஆண்டிலிருந்ததைவிட, 1925–26ஆம் ஆண்டில் ரூ. 6,41 இலட்சமும் அதிகமாகவே இருந்தது. ஆனால், 1901–02ஆம் ஆண்டில் மத்திய அரசாங்கத்தின் நிகர வருவாயில் 42 சதவீதமாக இருந்த நிலவரி, 1925–26ஆம் ஆண்டில் 21 சதவீதமாகக் குறைந்துவிட்டது.

விலைகளில் இருந்த மாற்றங்களுக்குக் கழிவு செய்துகொண்டு, 1913–14, 1925–26 இவ்விரு ஆண்டுகளுக்கான வரவு செலவுகளை ஒப்பிட்டுப் பார்த்தால், நிலவரியின் பளு குறைந்திருப்பதாகத் தோன்றுகிறது. மாகாணக் கட்டணங்களின்மூலம் (உண்மையில் இவைகள், நிலத்தின்மீது விதிக்கப்பெற்ற ஒரு மேல்வரியே யாகும்) கிடைத்த நிதியும், மாகாணச்செயல்களுக்கே செலவிட அனுமதிக்கப்பெற்றது. இதைப்போன்றே உப்புவரியின் பளு[2], 1913–14 ஆம் ஆண்டில் இருந்ததைவிட இப்பொழுது குறைவாக இருப்பதாகத் தோன்றுகிறது. ஆகவே நர்ட்டின் தாழ்நிலையிலுள்ளோர் தம்மை வருத்தும் இரண்டு முக்கிய வரிகளின் பளுவிலிருந்து விடுவிக்கப்பெற்றனர்.

[1] அரசாங்கத்தின் நிலவருவாய்க் கொள்கை, 1902ஆம் ஆண்டின் 'அரசாங்கத் தீர்மானங்களில்' (i.e. East India (Land Revenue), cd 1089–(1902) தெளிவாகத் தொகுக்கப்பட்டிருக்கிறது. இந்தத் தீர்மானத்தைக் கர்ஸான் பிரபு (Lord Curzon) எழுதினார் என்பது ஒரு வெளிப்படையான இரகசியம். (Vide Lord Curzon in India, Vol. 1. p. 172). விவசாயத்தில் ஏற்படும் ஏற்றத்தாழ்வுகளுக்குத் தகுந்தாற் போல, நிலவரியிலும் நெகிழ்ச்சி இருக்கவேண்டிய அவசியத்தை அவர் மிகவும் வற்புறுத்தினார். அறுவடை குறைவான காலத்தில் நிலவரியை நீக்குவதற்கான விதிகளை, அரசாங்கம் 1905ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் ஒரு தீர்மானத்தின்மூலம் நிறைவேற்றியது.

[2] உயர்ந்த கட்டணங்கள் விதிக்கப்பெற்றதால், உப்பு வரியிலிருந்து கிடைத்த வருவாய் 1923–24ஆம் ஆண்டில் உச்ச நிலையை அடைந்து, பின்னர்க் கட்டணங்கள் குறைக்கப்பெற்றதால் மீண்டும் குறைந்தது.

'வரி விதிப்பு' என்ற தலைப்பில் ஒன்றான சுங்க வரிகள் மூலம் கிடைத்த வருமானம் 1920–21ஆம் ஆண்டிலிருந்து பெருகிவந்தது குறிப்பிடத்தக்கதாகும். 1020–21ஆம் ஆண்டில் ரூ. 30,95 இலட்சமாக இருந்த இவ்வருமானம், 1925–26ஆம் ஆண்டில் ரூ. 46,69 இலட்சத்திற்குக் குறையாமலிருந்தது. 1911–12ஆம் ஆண்டில், அரசாங்க நிலவருவாயில் மூன்றிலொருபங்காக இருந்தநிலைபோய் இப்பொழுது ஒரு முக்கிய மூல நிதியாக ஆகிவிட்டது.[1] மேலும், 1913–14ஆம் ஆண்டில், அரசாங்க நிகர வருவாயில் ரூ. 13·8 சதவீதத்தைக் கொடுத்த இவ்வரிகள் 1925–26ஆம் ஆண்டிலும் ரூ. 31·5 சதவீதத்திற்குக் குறையால் கொடுத்தது.

இக் காலம் வரை, இந்தியாவில் கையாளப்பெற்ற வரிகளுள் சுங்க வரிகளின்மூலம் கிடைக்கும் வருவாய்தான் மிகுந்த நெகிழ்ச்சியுடையதும் பயன்தரக்கூடியதுமாகும். இருந்தாலும், சுங்கவரிகளின் பளுவை மறந்தும் செல்வந்தர்களிடமிருந்து நீக்கி;

[1] கீழ்க்காணும் அட்டவணை 1924–25ஆம் ஆண்டின் 'இந்திய வரிவிதிப்பு விசாரணைக் குழுவால்' தொகுக்கப்பெற்றது. இந்த அட்டவணை, அரசாங்க வருவாயினங்களின் தராதர முக்கியத்துவத்தில் ஏற்பட்ட மாறுதல்களைச் சுவையான படமாக்கிக் காட்டுகிறது.

வரியின் தலைப்பு	மொத்த வரிவருவாயில் சதவீதம்				
	1883–84	1893–94	1903–04	1913–14	1923–24
நிலவரி	53·15	46·71	42·76	35·42	20·75
சுங்கவரிகள்	2·98	3·27	9·21	12·99	24·30
ஆயத்தீர்வை	25·07	26·51	24·97	23·92	21·67
வருமானவரி	1·31	3·39	2·92	3·52	12·30
நடவடிக்கைகளும் கட்டணங்களும் (Transactions and fees)	9·47	9·59	9·39	10·89	9·03
சான்றுத்தீர்வைகள் (Probate duties)				0·18	0·15
தல வரிவிதிப்பு	8·01	10·53	10·75	14·08	11·80
	100	100	100	100	100

ஏழை வகுப்பினர்மேல்[1] சுமத்தாமல் இருக்கப் போதுமான கவனமும் முன்னேற்பாடும் தேவை. இந்தியாவின் நிதிமூலங்களில் சுங்கவரிகள் இத்தகைய ஒரு முக்கிய அங்கத்தை வகிக்கிறது என்கிற உண்மை, 'தொழிற்காப்புத் தீர்வை'களை விதிப்பதின் மூலம் நாட்டில் தொழில்களை வளர்க்கமுடியும் என்னும் முன்னேற்றகரமான கொள்கையைக் கடைப்பிடிப்பதற்கு ஏதுவாக அமைந்திருக்கிறது. நிதியைத் திரட்ட வேறு வழிகள் இல்லாமல் அரசாங்கக் கடமைகளை நிறைவேற்ற அதிகப்படியான வருவாய் தேவைப்படும் நிலை ஏற்பட்டால் சுங்கவரிகள் பெருத வியாக இருக்கும் என்கிற உண்மையை, 'இந்திய சுங்கவரிக் கொள்கை மறந்துவிடக் கூடாது'.

நாட்டில் குடிப்பழக்கத்தைக் குறைக்கவேண்டுமென்ற கொள்கையை அரசாங்கம் கடைப்பிடித்து வந்தாலும், 1920–21ஆம் ஆண்டுவரை 'ஆயத் தீர்வை'மூலம் கிடைத்த நிகர வருவாய் விரைவாக உயர்ந்தது. அந்த ஆண்டுக்குப் பிறகு ஆயத்தீர்வையின் வருமானம் குறையத்தொடங்கியது. இதற்குப் பல காரணங்களிருந்தன. அவற்றுள், நாட்டில் ஏற்பட்ட பொருளாதார மந்தமும் மந்தத்தினால் மக்களின் வாங்குந் திறன் (Purchasing Power) குறைந்ததும், மக்களின் சக்தி, பொறுமை, சட்டத்திற்குக் கீழ்ப்படியும் எண்ணம் இவைகளையும் மீறிய வரிகளும் முக்கியக் காரணங்களாகும். மேலும், வரிகளை ஏமாற்றும் பழக்கமும் சாதாரணமாகிவிட்டது.[2]

போருக்குப்பின்னர் உண்டான பொருளாதார வீக்கத்தினால் 1920–21ஆம் ஆண்டில் வருமான வரியிலிருந்து கிடைத்த நிதி, மட்டுக்குமிஞ்சிய அளவுக்கு உயர்ந்திருந்தது. அதன் பிறகு மந்தத்திற்கு ஏற்றாற்போலக் குறைந்தது. இருந்தாலும், 1916ஆம் ஆண்டில் வளர்வீத முறை கையாளப் பெற்றதாலும், அந்த ஆண்டிலும் அதைத்தொடர்ந்தும் கட்டணங்கள் உயர்த்தப் பெற்றதாலும், 'நேர்முக வரிவிதிப்பு', நிதி முறையில் ஒரு முக்கிய இடத்தை வகிக்கத்தொடங்கியது. உயர்ந்த விவசாய வருமானங்களையும் வருமான வரியின்கீழ்க் கொண்டுவந்தால், வருமான வரியிலிருந்துகிடைக்கும் வருவாயில் பெருக்கத்தினை எதிர்பார்க்கலாம். விவசாய வருமானங்கள் விடுவிக்கப்பட்டிருக்கும் வரை, தொழில்,

[1] அண்மையில், குறிப்பாகச் சர்க்கரையின்மேல் இடப்பெற்ற உயர்ந்த வரியினால், இப்படியொரு திருப்பம் ஏற்பட்டிருக்கிறது என்று 'வரிவிதிப்பு விசாரணைக்குழு' கருதியது. இதனால் சர்க்கரை, மூலப்பொருள்கள், மற்ற உற்பத்திச் சாதனங்கள் இவைகளின் மேலிருந்த வரியைக் குறைக்கும்படி சிபாரிசு செய்தது.

[2] Vide Report of the Taxation Enquiry Committee, p. 188; Vide also the Report of the Bombay Excise Committee, 1922–23. ஆயத்தீர்வையின் வருமானம் 1929ஆம் ஆண்டிலிருந்து மேலும் விரைவாகக் குறைந்தது.

மற்றும் வர்த்தக வருமானங்களின்மேல் தற்பொழுதிருக்கும் கட்டணத்தை உயர்த்துவது நியாயமாகாது. மேலும், இதிலிருந்து எதிர்பார்க்கப்படும் அதிகவருமானம் உற்பத்தியாளர்களின் செழிப்பையும் வாணிபச்சமூகத்தினரின் செழிப்பையுமே பொறுத்திருக்கும்.[1]

முக்கிய வர்த்தகத் தொழில் துறைகளின் நிதி விளைவுகளை முன்னரே சற்று விளக்கமாக ஆராய்ந்தோம். 1921-22ஆம் ஆண்டு இந்தத் துறைகளுக்கு மிகவும் மோசமான ஆண்டாக இருந்தது. 'இரயில்வேக்களும்', 'பாசனமும்' பெரிய நிகர நட்டத்தைக் காண்பித்தன. அதன்பிறகு 1930ஆம் ஆண்டுவரை ஒரு குறிப்பிடத்தக்க நிகர வருமானம் கிடைத்து வந்தது. 1930-ல் உலகெங்கும் நிலவிய 'மந்தம்' இந்தியாவைப் பாதிக்கத் தொடங்கியதும் இரயில்வே போக்குவரத்து வெகுவாகக் குறைந்தது.

வர்த்தகத் தொழில்துறைகளிலிருந்து கிடைத்த மொத்த வருவாய், முக்கிய பாசனத் திட்டங்களின் நிதிமதிப்பின் உண்மையான நிலையை விளக்குவதாக இல்லை. காரணம், வருவாயிலிருந்து செய்யப்பெற்ற மூலதனச் செலவுகளில் (capital expenditure) 'உற்பத்தியாக்கும்' பாசன வேலைகள் மட்டுமின்றி கப்பலோட்டு இயல் (navigation), கட்டுக்கரை (embankment), வடிகால் (drainage) போன்ற வேலைகளும் சேர்க்கப்பட்டிருந்தன. இவற்றுள் பலவும் நேரிடையான வருவாயைக் கொடுப்பனவல்ல. ஆதலால் பாசனம், வடிகால் இந்த வேலைகளில் செலவிடப்படும் மூலதனத்திலிருந்து கிடைக்கும் சராசரி இலாபம் 5லிருந்து 6 சதவீதம்வரை இருக்கிறது என்று கணக்கிடப் பட்டிருக்கிறது. அதற்கு மாறாக, 'உற்பத்தியாக்கும்' பாசன வேலைகளை மட்டும் எடுத்துக் கொண்டால் அதைவிட அதிகமான வருமானம் கிடைப்பதாகக் காட்டலாம்.[2]

மற்றொருவகையில், ஒவ்வொரு மாகாணத்திற்குமான கணக்குகளைத் தனியாக ஆராய்ந்தால்[3] உதாரணமாக 1921-22-லிருந்து 1928-29வரையில், பஞ்சாப், ஐக்கியமாகாணம் இவ்விரண்டு மாகாணங்களில் மட்டுமே நிகர வருவாய் கிடைத்தது. 1925-26ஆம் ஆண்டில் எல்லா மாகாணங்களையும் சேர்த்தால் ரூ. 1·31 கோடி நிகர வருவாய் கிடைத்தது. ஆனால், பஞ்சாப் ரூ. 3·42

[1] 1931ஆம் ஆண்டுக்குப் பிறகு இவர்களின் செழிப்பில் ஏற்பட்ட மாறுதல்களுக்கு அத்தியாயம் 18-ஐப் பார்க்கவும்.

[2] Triennial Review of Irrigation in India 1936-39, p. 3.

[3] அட்டவணை V-ஐப் பார்க்கவும்.

கோடிக்கும் ஐக்கியமாகாணம் 10 இலட்சத்துக்கும் குறைவில்லாத நிகர வருவாயைப்பெற, சென்னை ரூ. 83 இலட்சங்களும், பம்பாய் ரூ. 52 இலட்சங்களும், வங்காளம் ரூ. 31 இலட்சங்களும், மத்திய மாகாணம் ரூ. 26 இலட்சங்களும், பர்மா ரூ. 25 இலட்சங்களுமான நிகர நட்டத்தைக் காட்டின. 1938-39ஆம் ஆண்டில் பஞ்சாப், பட்டியலில் முதல் அங்கம் வகித்தது. ஆனால், மற்ற மாகாணங்களின் வரிசைமுறை பெரிய மாறுதலடைந்தது.

இரயில்வேக்களும், பாசனவேலைகளும் 1930ஆம் ஆண்டுவரை அதிக வருவாயைக் கொடுத்தன. என்றாலும், அவற்றின்மேல் செய்யப்படும் செலவிலிருந்து கிடைக்கும் வருமானம் அதிகரிக்கும் என்ற எண்ணத்தில், மேலும் மேலும் அதிக வருவாயை அவைகளிடமிருந்து எதிர்பார்க்கக் கூடாது. அவற்றிலிருந்து கிடைக்கும் இலாபங்களின் மூலம் அரசாங்கத்தின் வருவாயை அதிகரிக்க வேண்டும் என்று எதிர்பார்ப்பதைவிட, கட்டணங்களைக் குறைப்பதற்கு அதன் மூலம் உற்பத்தியையும், வாணிபத்தையும் பெருக்கவும் மக்களின் மேலுள்ளபளுவைக்குறைக்கவும், அவற்றைப் பயன்படுத்த வேண்டும்.

காடுகளிலிருந்து கிடைத்த நிகர வருமானம் 1220-21-ல் ரூ. 1·66கோடியிலிருந்து 1925-26-ல் ரூ. 2·16 கோடியாக உயர்ந்தது. ஆனால் இவ்வினத்திலிருந்து கிடைக்கும் வருமானத்தின் பெரு மளவைக் காடுகளை அபிவிருத்தி செய்வதில் செலவிடுவதுதான் சிறந்த கொள்கை என்று எண்ணவிடமிருக்கிறது[1]. காடுகளிலிருந்து கிடைக்கும் நிகர வருமானத்தில் 50 சதவீதத்தை பர்மா மட்டும் கொடுக்கிறது என்பதை இங்குக் குறிப்பிட வேண்டும்.[2]

விலைவாசிகளின் மாற்றத்தைக் குறிப்பாக கவனத்திற் கொண்டு, 1925-26-க்கும் 1913-14-க்கும் ஆன வருவாய் எண்களை நாம் ஒப்பிட்டுப்பார்த்தால், அரசாங்கத்தின் தேவைகள் (நிதி) வெகுவாக அதிகரிக்கவில்லை என்பதும், அதிகமாகக் கிடைக்கும் வருவாயின் பெருமளவு சுங்கவரிகளிலிருந்தும், வருமான வரியிலிருந்தும் (அதாவது 'போகப் பொருள்கள்' மேலும் செல்வந்தர்கள் மேலும் விதிக்கப்பட்ட அதிக வரியிலுமே) கிடைக்கிறது என்பதும் தெளிவாகும்.

மத்திய அரசாங்கம், மாகாண அரசாங்கங்கள் இவற்றின் செலவை அட்டவணை XXI-ல் ஐந்து முக்கியத் தலைப்புகளின்

[1] அத்தியாயம் 7-ஐப் பார்க்கவும்.

[2] 1925-26-ல் கிடைத்த ரூ. 2·16 கோடி மொத்த வருவாயில் பர்மா ரூ. 1·21 கோடியைக் கொடுத்தது.

கீழ்க் காணலாம். (i) இம்பீரியல் கடன்பணிகள்; (ii) இராணுவப் பணிகள் (iii) சிவில் வேலைகள்; (iv) சிவில் நிருவாகம்; (v) பஞ்ச நிவாரணம் என அவை ஐந்தாகும்.

1925-26ஆம் ஆண்டில், அவை அனைத்திலும் இராணுவப் பணி பெரிய இனமாக இருந்தது. அதனுடைய நிகரச் செலவு ரூ. 56.00 கோடியாகவும் இருந்தது. அடுத்தபடியாக ரூ. 56·48 கோடியுடன் சிவில் நிருவாகம் (பொது நிருவாகம், நீதி, போலீஸ், சிறை, ஓய்வூதியம்,[1] கல்வி, மருத்துவம், சுகாதாரம், விவசாயம், தொழில், விஞ்ஞானத்துறைகள், துறைமுகங்கள், துறைமுக வழிகாட்டுவதற்கான ஊதியம் (Pilotage) இவை அனைத்தும் உட்பட) வந்தது. இதைத் தொடர்ந்து கடன் பணிகள் (ரூ. 14.12 கோடி), சிவில் வேலைகள் (8. 95 கோடி), பஞ்ச நிவாரணம் (ரூ. 1. 15 கோடி) முதலியன வந்தன.

இராணுவக் கடன் பணிகளுக்கும், சிவில் நிருவாகத்தின் பல இனங்களுக்கும் ஆன செலவைப் போருக்கு முன்னிருந்த கணக்குகளுடன் ஒப்பிட்டால், மிக அதிகமாகும். ஆனால், சிக்கனத்தைக் கையாள வேண்டுமென்று நாட்டில் எழுந்த கூக்குரலாலும், 1922–23ஆம் ஆண்டின் 'இன்ச்கேப் ஆட்குறைப்புக் குழு' (Inchcape retrenchment committee) செய்த சிபாரிசுகளினாலும், கடந்த சில ஆண்டுகளில் இச் செலவுகள் வெகுவாகக் குறைக்கப்பெற்றன. முன்னைவிட முற்போக்கான பொருளாதாரக் கொள்கையினைக் கையாண்டுவந்ததால், கல்வி, விவசாயம், தொழில், சுகாதாரம் போன்ற மறைமுகமாக உற்பத்தியாக்கும் செயல்களிலும், கலாச்சார நடவடிக்கைகளிலும் அரசாங்கம் அதிகமாகச் செலவிடும் என்று எதிர்பார்க்கலாம். ஆனால், அரசாங்கம் நிதி நெருக்கடிக்குள்ளாகியதால், இதற்கான அறிகுறிகள் ஏதுமில்லை.

இராணுத்திற்கான நிகரச் செலவு 1901–02ஆம் ஆண்டிலிருந்து (1901–02-ல் அது ரூ. 24·24 கோடியாக இருந்தது.) முதல் உலகப்போர் மூண்ட வரை அதிகரிக்கவில்லை. பிறகு அது விரைவில் வளர்ந்து, 1920–21ஆம் ஆண்டில் ரூ. 87·38 கோடியாகவும்[2], மத்திய அரசாங்கத்தின் நிகரச் செலவில் 51 சதவீதமாகவும் இருந்தது. இதன்பிறகு, "இன்ச்கேப்

[1] ஓய்வூதியம் சிவில் நிருவாகச்செலவைச் சேர்வதால், ஓய்வூதியத்தை இத் தலைப்பில் சேர்த்திருக்கிறேன். ஆனால், அரசாங்கக் கணக்கில் இது பலவகையான சில்லறைச் செலவு என்ற தலைப்பில் சேர்க்கப்பெற்றுள்ளது.

[2] மிக அதிகமான இச் செலவுக்கு ஆப்கன் போரே முக்கியக் காரணமாகும்.

ஆட்குறைப்புக் குழு'வின் தூண்டுதலின் பேரில், 1925–26ஆம் ஆண்டில் ரூ. 56.00 கோடியாகக் குறைக்கப்பெற்றது. அதுவரை அரசாங்கம் பல சிக்கன வழிகளைக் கையாண்டது. விலைவாசிகளிலுண்டான மாற்றங்களுக்குக் கழிவுசெய்து பார்த்தால், தற்காப்பிற்கான ஆண்டுச்செலவு 1913–14-லிருந்ததைவிட 1925–26ஆம் ஆண்டில் ரூ. 3. 64 கோடிதான் உயர்வாக இருந்தது என்பதும், 1913–14ஆம் ஆண்டின் மொத்தச் செலவில் 42·6 சதவீதமாக இருந்ததற்குப் பதிலாக 1925–26ஆம் ஆண்டில் 38·6 சதவீதந்தான் இருந்தது என்பதும் தெரியவரும். கடற்படையின் செலவு, இதுவரை பிரிட்டிஷ் கடற்படைக்கு ஆண்டாண்டுக்குச் செலுத்தப்பட்டது 100,000 பவுன் (ஸ்டெர்லிங்கு)களாகவே இருந்தது. இந்தியாவில் 'தற்காப்புக்கான' மொத்தச் செலவு ஓர் ஆண்டில் தலைக்கு ரூ. 2–க்கும் குறைவாகவே இருந்தது. இது பிரிட்டனில் உள்ளதில் இருபதில் ஒன்றாகும். [1]

சிவில் நிர்வாகத் துறையில், ஒருபுறம் சிக்கனமும் ஆட்குறைப்பும் கையாள வேண்டுமென்றும், மற்றொரு புறம் மறைமுகமாக உற்பத்தியாக்கும் செயல்களிலும், கலாச்சார நடவடிக்கைகளிலும், அதிகப்படியான செலவு செய்ய வேண்டுமென்றும் ஒரு போரே நடந்தது. இந்தத் துறையிலும் 'இன்ச் கேப் குழுவின்' சிபாரிசின்மேல் செலவு குறைக்கப்பட்டது. ஆனால், பிந்திய ஆண்டுகளில் கல்வி, விவசாயம் தொழில்கள், சுகாதாரம் இவைகளில் ஆன அதிகச் செலவு (மொத்தச் செலவை நோக்கும்போது) இதற்கு ஈடு செய்தது.

கீழே தந்துள்ள அட்டவணை, 1925–26ஆம் ஆண்டில் கலாச்சார நடவடிக்கைகளிலும் மறைமுகமாக உற்பத்தியர்க்கும் செயல்களிலும், மத்திய அரசாங்கமும் மாகாண அரசாங்கங்களும் செய்த நிகரச் செலவைக் காட்டுகிறது:

(1)	கல்வி	மொத்தச் செலவு	ரூ. 11·21 கோடி
		நிகரச் செலவு	ரூ. 10·53 ,,
(2)	மருத்துவமும் சுகாதாரமும்	மொத்தச் ,,	ரூ. 5·40 ,,
		நிகரச் ,,	ரூ. 4·90 ,,
(3)	விவசாயம்	மொத்தச் ,,	ரூ. 2·23 ,,
		நிகரச் ,,	ரூ. 1·78 ,,
(4)	தொழில்கள்	மொத்தச் ,,	ரூ. 1·48 ,,
		நிகரச் ,,	ரூ. 1·28 ,,
(5)	விஞ்ஞானத் துறைகள்	மொத்தமும் நிகரமும் ,,	ரூ. 0·84 ,,

[1] பிரிட்டிஷ் கடற்படைக்குச் செய்யப்பெற்ற வருடாந்தரச் செலுத்துதல், 1938-ல் நீக்கப்பட்டது.

மத்திய, மாகாணவரவு செலவுத் திட்டங்கள் உபரியைக் காட்டும்வரை, மேற்கண்ட துறைகளின் செலவில் பெரிய அதிகரிப்பை எதிர்பார்ப்பதற்கில்லை என்பது தெளிவாகும். மேலும் 1925–26வரை, மத்திய மாகாண அரசாங்கங்கள் இந்த மகிழ்ச்சிக்குரிய நிலையை அடையவுமில்லை என்பதை நாம் பின்னர்க் காண்போம். ஆனால், இத்தகைய துறைகளில் அரசாங்கச் செயல்கள் உடனடியாக அதிகரிக்கவேண்டும் என்பதில் ஐயமில்லை.

இத் துறைகள் ஒவ்வொன்றிலும், எந்த மாகாணம் அதிகமாகச் செலவழிக்கிறது என்று ஆராய்வது சுவாரசியமாக இருக்கும். ஆனால், இவைகளை உண்மையாக ஒப்பிட்டுப்பார்க்க வேண்டுமானால் மாகாணங்களின் மக்கள்தொகையையும் நினைவில் கொள்ளவேண்டும். 1925–26–ல், கல்வி சம்பந்தப்பட்டவரை பம்பாய் மாகாணம் மிக அதிகமாகச் செலவு செய்தது. அதைத் தொடர்ந்து சென்னை, ஐக்கிய மாகாணம், பஞ்சாப், வங்காளம் முதலியன வந்தன. சென்னை, மருத்துவம் மற்றும் சுகாதாரக் காரியங்களுக்கு அதிகமாகச் செலவுசெய்தது. இதைத்தொடர்ந்து வங்காளம், ஐக்கியமாகாணம், பம்பாய், பர்மா, பஞ்சாப் இவைகள் ஆகும். தொழில்கள், விஞ்ஞானத்துறைகள்[1] இவைகளிரண்டிலும் சென்னையே முதலிடம் வகித்தது. வங்காளம், ஐக்கிய மாகாணப், பீஹார், ஒரிஸ்ஸா, பஞ்சாப் முதலியவை தொழில்களுக்காக அதிகச்செலவு செய்யும் மற்ற மாகாணங்களாகும். ஆகவே, மறைமுகமாக உற்பத்தியாக்கும் செயல்களை வளர்ப்பதில், 'இருளடைந்த' (Benighted) சென்னை மாகாணம் அதிகமாகக் கவனம் செலுத்தியது என்று தெரியவருகிறது.

அட்டவணை XX–ல் மத்தியஅரசாங்கக் கடன்பணிகள் மட்டுமே (வருவாயின்மேல் இவைகள் மட்டுந்தான் 'பயனில் சுமைக்கடனை' இருக்கின்றன என்ற காரணத்தால்) சேர்க்கப் பெற்றுள்ளன.[2] போரினால், நிகர வட்டிச்செலவு உயர்ந்து கொண்டே போய் 1924–25–ஆம் ஆண்டில் ரூ. 15·27 கோடியில் உச்சநிலையை அடைந்தது. அதன்பிறகு 1929–30ஆம் ஆண்டு வரை, அவைகள் சற்றுக் குறைக்கப்பெற்றன. 1924–25ஆம் ஆண்டிலும் கூட இவைகள், தலைக்கு 9½ அணாவாகத்தான்

[1] மாகாணச் செலவில் இது ஒரு சிறு இனம் (சென்னையுள்பட).

[2] மாகாணக் கடன் கணக்குகள் மிகவும் குழப்பமானவை. இவைகளை மத்திய அரசாங்கக் கடன் பணிகளோடு ஒப்பிட்டுப் பார்க்கக் கூடிய வகையில் தயாரித்துக் கொடுப்பது முடியாத செயலாகும். மேலும், மாகாணங்களின் நிரந்தரக் கடன்கள் ஏறக் குறைய உற்பத்தியாக்கும் செயல்களுக்காகவே எழுப்பப் பெற்றன. ஆதலால் 'பயனில் சுமைக்கடன்' என்ற தலைப்பில், இவைகளைச் சேர்க்கக் கூடாது.

இருந்தன.[1] இந்தியாவின் சராசரி தலா வருமானத்தை நோக்கும்பொழுது, தலைக்காம் வட்டிச்செலவு விரும்பத்தகாத அளவுக்கு உயர்ந்திருந்தாலும், பொருளாதார முன்னேற்ற மடைந்த நாடுகளுடன் ஒப்பிட்டுப் பார்க்கும்பொழுது மிகக் குறைவாகவே இருந்தது. விலைவாசிகளில் இருந்த மாற்றங் களுக்குக் கழிவுசெய்து 1913–14–க்கும் 1925–26–க்கும் ஆன நிகரச் செலவுகளை ஒப்பிட்டுப் பார்த்தால், மொத்தத்திலுண் டான அதிகரிப்பில், பெரும் பகுதியும் 'பயனில் சுமைக்கடனால்' உண்டானது என்று தெரியவரும்.

சிவில் பணிகளுக்கான செலவிலோ, அல்லது பஞ்ச நிவாணத்திற்கான செலவிலோ எந்த விதமான குறிப்பிடத் தக்க மாறுதலும் இல்லை. இவ்விரண்டு இனங்களின் செலவும் சற்றே குறைந்தது.

§ 4. அரசாங்க நிதிநிலைமையிலும், நிதிக் கொள்கையிலும் அண்மைக்காலத்து நடவடிக்கைகள்

அரசாங்கத்தின் நிதிநிலைமையும் நிதிக் கொள்கையும் பற்றிய காலமுறைப்படி அமைந்த விளக்கத்தையோ அல்லது விவரங்களையோ கொடுப்பதற்கான முயற்சியில்: நாம் முனைய வில்லை. ஆனால், அண்மைக் காலத்தில் நடந்த மாறுதல்களையும், தற்போதைய நிலைமையையும் புரிந்துகொள்வதற்குக் கடந்த கால நிகழ்ச்சிகளில் முக்கியமானவற்றைப்பற்றி அறிந்து கொள்ளவேண்டியது அவசியமாகும்.

19ஆம் நூற்றாண்டின் வரவு செலவுத் திட்டங்களிலிருந்த பொதுவான இயல்புகளை முன்னமே விளக்கினோம். சிப்பாய்க் கலகத்திற்குப் பிறகு அரசாங்கத்தின் நிதிநிலைமை இக்கட்டான நிலையிலிருந்தது. ஆனால், சிறிது காலத்தில், நாட்டில் அமைதி நிலைநாட்டப் பெற்றதாலும், மற்ற நாடுகளுடன் இந்தியாவின் தொடர்பு பெருகியதாலும் (குறிப்பாக சூயஸ் கால்வாய் திறக்கப்பெற்றதும், கடல் போக்குவரத்திலுண்டான அபிவிருத் தியும், நாட்டில் பொதுவேலைகள் அதிகரித்ததும் இதற்கு முக்கியக் காரணங்களாகும்), உற்பத்தியிலும் வாணிபத்திலும் பெருக்கமிருந்ததாலும், காலப் போக்கில் நிலைமை திருப்திகரமாக மாறியது. இதனால் மறைமுக வரிவிதிப்பு, நிலவரி, நேர்முக வரி விதிப்பு (நேர்முக வரிவிதிப்பு ஒருமுக்கிய இனமாக இல்லாவிட்

[1] இது 1921ஆம் ஆண்டின் மக்கள் தொகைக் கணக்கெடுப்பை (அதாவது 24·7 கோடி) அடிப்படையாகக் கொண்டது. உண்மையில் மக்கள் தொகை 1924–25ஆம் ஆண்டில் சற்று அதிகமாகவே இருந்தது.

டாலும்) இவைகளின் மூலம் அரசாங்கத்திற்குக் கிடைத்த வருவாய் பெருக்கமடைந்தது. இவ் வருவாயின் பெருக்கம் அரசாங்கத்தின் மூலதனப் பொறுப்புகள், கடன் பணிகள், பொதுவேலைகளை விரிவாக்குதல், மறைமுக வரி விதிப்பைக் குறைத்தல் போன்ற செயல்களுக்குச் செலவிட ஏதுவாக இருந்தது.

சென்ற நூற்றாண்டின் கடைசி இருபத்தைந்தாண்டுகளில், எதிர்பாராத பல நிகழ்ச்சிகள் அரசாங்க நிதிநிலைமையின் வளர்ச்சியைத் தடைப்படுத்தின. 1873ஆம்[1] ஆண்டு முதல் ரூபாயின் நாணயமாற்று மதிப்புப் படிப்படியாக வீழ்ச்சியுற்றதும், நாட்டில் தொடர்ந்து வந்த கடும் பஞ்சங்களும் இவற்றுள் குறிப்பிட வேண்டியவையாகும். 1893ஆம் ஆண்டில் நாணயச் சாலைகள் மூடப்பெற்றன; சில செலவாணிச் சீர்திருத்தங்களும்[2] நடைமுறைக்கு வந்தன; 1894ஆம் ஆண்டிலும் பின்னர் 1969ஆம் ஆண்டிலும் இறக்குமதி வரிகள் மீண்டும் விதிக்கப்பெற்றன. இது போன்ற நடவடிக்கைகளால் நிதிநிலைமை கொஞ்சம் அபிவிருத்தியடைந்தது. முன்பிருந்த பற்றுக் குறைகளுக்குப் பதிலாக, 1896ஆம் ஆண்டிலிருந்து ஆண்டாண்டுக்குச் சிறு உபரிகள் கிடைக்கலாயின. 19ஆம் நூற்றாண்டின் முடிவிலும் 20ஆம் நூற்றாண்டின் தொடக்கத்திலும் நிலைமை வெகுவாக அபிவிருத்தியடைந்தது. இரயில்வேக்கள் மூலம் இலாபம் கிடைத்ததாலும் 1900ஆம் ஆண்டிற்குப் பிறகு நாட்டில் நல்ல அறுவடை இருந்ததாலும் பற்றுக்குறைக்குப் பதிலாக, வரவு செலவுத் திட்டத்தில் உபரிநிலை ஏற்பட்டது. முதல் உலகப் போர் மூளும் வரையில் ஒவ்வோர் ஆண்டும் (1907-க்கும் 1909-க்கும் இடையிலுள்ள ஆண்டுகள் தவிர[3] சராசரி ரூ. 4 கோடியிலிருந்து ரூ. 5 கோடி வரை) உபரி கிடைத்தது. உலகச் சந்தையில் இந்திய ஏற்றுமதிகளின்[4] விலை உயர்ந்ததிலுல் (குறிப்பாக 1904ஆம் ஆண்டுக்குப் பிறகு) இந்தியா மிகு பயனடைந்தது.

[1] நாணயமாற்று மதிப்பு வீழ்ச்சியடைந்ததால், 'அகச் செல்லுகள்' (Home Charges) செய்வதற்குத் தேவையான ஸ்டெர்லிங்குகளை வாங்குவதற்கு, அரசாங்கம் ரூபாய்க் கடன் எழுப்ப வேண்டியிருந்தது.

[2] இந்தச் சீர்திருத்தங்கள் 1898ஆம் ஆண்டில் ரூபாயின் 'நாணயமாற்று மதிப்பை' 'செலாவணிமாற்று மதிப்பு'க்கு (அதாவது 1 ரூ. = 1 ஷில்லிங் 4 பென்னாக) உயர்த்தியது. அதன் பிறகு இந்த வீதத்தில் மாற்றமில்லாமல் காப்பாற்றப்பட்டது. அத்தியாயம் 15-ஐப் பார்க்கவும்.

[3] 1907ஆம் ஆண்டில் இந்திய விவசாயம் மிகவும் நாசமடைந்தது; அமெரிக்காவில் ஒரு பெரிய வாணிப நெருக்கடியும் உண்டாயிற்று. இந் நிகழ்ச்சிகள் இந்தியாவின் வாணிபக் கொடுக்கல் நிலையில் தற்காலிக மாற்றத்தை உண்டாக்கி, செலாவணிக் குழப்பங்களையும் விளைவித்தன.

[4] அத்தியாயம் 16-ஐப் பார்க்கவும்.

கர்ஸான் பிரபு,[1] உற்பத்தியாக்கும் செலவை அதிகரிக்கவும்[2] பிற்போக்கு நிலையிலுள்ள மாவட்டங்கள்மீதும்[3], மக்களின்மீது முள்ள வரிச்சுமையைக் குறைப்பதற்குமான ஒரு கொள்கையைத் தன்னுடைய ஆட்சியில் கையாண்டார்.

கர்ஸான் பிரபு ஓய்வு பெற்றதும், 1907–8ஆம் ஆண்டிலும் 1908–9ஆம் ஆண்டிலும் வரவு செலவுத் திட்டத்தில் பற்றுக்குறைகள் எழுந்தன. ஓர் உரமற்ற கொள்கையை அரசாங்கம் கையாளுவதற்கு இப் பற்றுக் குறைகள் காரணமா யிருந்தன. வாணிபமும் நிதிநிலைமையும் மீட்சியுற்ற பிறகும்கூட,[4] கர்ஸான் பிரபு கையாண்ட உற்பத்தியாக்கும் செலவுக் கொள் கைக்குப் பதிலாக, ஓர் உற்பத்தியாக்காச் சிக்கனக் கொள்கை தான் கடைப்பிடிக்கப்பட்டது. இக் கொள்கையினால் அரசாங் கத்தினுடைய ஆக்கவேலைக்கான பொருளாதாரச் செயல்களும், சமூகச் செயல்களும் வெகுவாகக் குறைந்தன. ஆயினும் பொது மக்களின் மீதிருந்த வரிச்சுமை வெகுவாகக் குறைக்கப்பட்டி ருந்தது. இதற்குமுன் எப்பொழுது மிருந்ததைவிட, இப் பொழுது நிதிநிலைமை திருப்திரமாக இருந்தது.

போர் மூண்டதும் இந்தியாவில் நிதிபற்றிய ஒருபீதி உண்டா கியது; ஆயினும் விரைவில் அது நீங்கியது. இதைத்தொடர்ந்து வந்தகாலம் நிதிநிலைமையிலும், மற்றத் துறைகளிலும் கவலைக் கிடமானதாக இருந்தது. இராணுவ, நிருவாக சம்பந்தமான எல்லாச் செலவினங்களும் வெகுவிரைவில் பெருகி, 1914–15-லும் 1915–16-லும், வரவுசெலவுத் திட்டங்களில் பற்றுக்குறைகளை உண்டாக்கின. சில மாதங்களில் போர் முடிந்துவிடும் என்று நினைத்தபொழுது, அதிகப்படியான செலவை அரசாங்கம் தற் காலிகக் கடன்கள்மூலம் சமாளித்தது. ஆனால், 1915–16ஆம்

[1] 1899ஆம் ஆண்டிலிருந்து 1906ஆம் ஆண்டுவரை வைசிராயாக இருந்தார்.

[2] எடுத்துக்காட்டாகப் பாசனவேலைகளுக்கும், பொதுவேலைகளுக்கும், தனி உதவித் தொகைகளையும், கல்வி, சுகாதாரம் இவற்றை வளர்க்க அதிகப்படியான உதவித் தொகைகளையும் அரசாங்கம் அளித்தது. 'நிருவாகத்திறமை என்பது நிதிமுதலீட்டின் மறுபெயரே' (Lord Curzon in India vol. i. p. 145).

[3] பற்றுக்குறை இருந்த பகுதிகளில் சுமார் ரூ. 2 கோடிக்கான நிலவரி பாக்கியை அரசாங்கம் தள்ளுபடி செய்தது; ஏழைமக்களுக்கு ஆதரவளிக்க உப்பு வரியைக் குறைத்தது; திண்டாடும் மத்திய வகுப்பினருக்கு உதவும் நோக்கத்துடன் வருமான வரியின் விலக்குநிலையை உயர்த்தியது; மேலும், மாகாண நிர்ணயங்களை, மாகாணங் களுக்கு அனுகூலமான முறையில் (1905ஆம் ஆண்டில்) திருத்தியமைத்ததுடன், நிலத்தின்மீதிருந்த மேல்வரியையும் சில இடங்களில் குறைத்தது.

[4] 1901–02-க்கும் 1911–12-க்கும் இடையிலுள்ள பத்தாண்டுகாலத்தில் நிகரவருவாய் 31·8 சதவீதம் உயர்ந்தது. இதற்கெதிராக 1881–82-க்கும் 1891–92-க்கும் உள்ள இடைக் காலத்தில் 10 சதவீதமும் 1891–92-க்கும் 1901–02-க்கும் இடையில் 15 சதவீத மும்தான் இருந்தன.

ஆண்டின் முடிவில் அதிகப்படியான வரி விதிக்கவேண்டிய அவசியத்தை உணர்ந்தது. இதனால், சுங்கவரிகளும், உப்புவரியும் வருமான வரியும் உயர்த்தப்பெற்றன. இவைகளை முன்னமே விளக்கினேம்.[1]

நல்ல பருவ மழையிருந்ததாலும், இரயில்வேக்களின் மூலம் அதிகமான வருமானம் கிடைத்ததாலும், போரினால் இந்தியப் பொருள்களுக்குத் தேவைப்பாடு அதிகரித்ததாலும், உள்நாட்டு வாணிபம் செழிப்படைந்ததாலும் 1916ஆம் ஆண்டின் முடிவில் இந்தியாவின் பொருளாதாரநிலை மேன்மையடைந்தது. 1916–17ஆம் ஆண்டின் வரவு செலவுத் திட்டத்தில் ஒரு சிறிய உபரியும் கிடைத்தது. இந்த நேரத்தில், பிரிட்டனின் நிதிநிலைமை பெரிய நெருக்கடிக்குள்ளாகியது. இந்தியாவில் இருந்த திருப்தி கரமான நிலைமை, 1917ஆம் ஆண்டின் முடிவில் பிரிட்டனுக்கு £10 கோடி 'போர்க்கொடை' செலுத்துவதற்குக் காரணமாகக் காட்டப்பட்டது. இந்த ஏற்பாடு, வட்டிச் செலவு, கடன் கழிவு நிதியின் பணிகள்[2] இவைகளுக்கான அரசாங்கப் பொறுப்புகளை மேலும் அதிகமாக்கின.

இக் காலத்தில் இந்தியாவின் இறக்குமதிகளைவிட ஏற்று மதிகள் மிகஅதிகமாக இருந்தன.[3] ஆனால் இலண்டனிலிருந்து இந்தியாவுக்குப் பொன்னை அனுப்பமுடியவில்லை. இக் காரணங் களினால் இந்திய அரசாங்கத்தின்வாங்குந்திறன் நாளாவட்டத்தில் படிப்படியாக இந்தியாவிலிருந்து இலண்டனுக்கு மாறியது. இதனால், நிதிச்சாதனங்களைப் பொருத்தமான முறையில் இலண்ட னுக்கும் இந்தியாவுக்குமிடையே எவ்வாறு விநியோகிப்பது என்கிற பிரச்சினை எழுந்தது. தனிப்பட்ட வர்த்தகர்கள் இந்தியாவில் பணம் செலுத்துவதை ஏதுவாக்கும் நோக்கத் துடன், இலண்டனில் 'கவுன்சில் உண்டியல்கள்' (Council Bills) £3·3 கோடிவரை விற்கப்பட்டன. இதனால், இங்கிலாந்திலுள்ள இந்தியப் 'பொன் இருப்புகள்' (gold reserves) உயர்ந்தன. ஆனால் இந்தியாவிலுள்ள 'இருப்புகள்' மேலும்மேலும் குறைந்தன. இந்த இக்கட்டைப் போக்குவதற்காகப் பெருமளவில் இலண்டனில் வெள்ளியை வாங்கி, நாணயமடிப்பதற்காக இந்தியாவுக்கு ஏற்று மதி செய்யப்பெற்றது. இந்தியாவில், அரசாங்கம் வெளியிட்ட

[1] அத்தியாயம் 13–ஐப் பார்க்கவும்.

[2] ரூ. 50,000-க்கு மேற்பட்ட வருமானங்களில் ஒரு 'மேல்வரி', சுங்கவரிகளில் அதி கரிப்பு, இரயில்வே கட்டணங்களில் அதிகமான வரி இவைகளின்மூலம் அரசாங்கம் அதிப்படியான வருவாயைத் திரட்டியது.

[3] தனியார் கணக்கிலும், அரசாங்கக் கணக்கிலும். இந்தியாவில் அதிகப்படியான கொள்முதல் செய்யப்பெற்றதாலும், இந்தியாவின் இறக்குமதிகள் குறைந்ததாலும் இந்த நிலை ஏற்பட்டது.

செலாவணித் தாள்களுக்கு எதிராக இருந்த, உலோக இருப்பிலிருந்து (Metallic reserve) வெள்ளி விடுவிடுக்கப்பெற்றது. இந்த வெள்ளியிருப்புக்குப் பதிலாக இலண்டனில் பத்திரங்கள் வழங்கப் பெற்றன.

வாணிபம் செழிப்படைந்து, 1917, 1918ஆம் ஆண்டுகளில் வரிகளிலிருந்து கிடைத்த வருமானம் எதிர்பாராத வகையில் பெருகியது. 1918ஆம் ஆண்டின் ஆரம்பத்தில் அமெரிக்காவுடன் ஓர் ஒப்பந்தம் நடந்தேறியது. அதன்படி, இந்தியாவுக்குத் தேவையான வெள்ளியைப் பெறுவதில் இருந்த இடையூறு நீங்கியது.[1] இந்திய அரசாங்கம், புதியதும் பெரியதுமாகிய போர்க் கொடை ஒன்றை பிரிட்டனுக்குக்கொடுக்க, 1918ஆம் ஆண்டின் இலையுதிர்காலத்தில் முன்வந்தது. ஆனால் சிறிது காலத்தில் போர் நிறுத்தம் அறிவிக்கப்பட்டதால் ஒப்புக்கொண்ட தொகையில் ஓர் அளவுக்குமேல் தேவையில்லை என்ற நிலை ஏற்பட்டது.[2]

போர் நிறுத்தம் கையெழுத்தானதைத் தொடர்ந்து, நாடு முழுவதும் பருவ மழை குறைந்ததாலும், கடும் குளிர்காய்ச்சல் பரவியதாலும் ஒரு பெரிய வாணிப நட்டம் ஏற்பட்டது. இதனால், அரசாங்க வருவாயும் பாதிக்கப்பெற்றது. வாணிபத்திலும் நாணய மாற்றத்திலும் உண்டான நெருக்கடியைப் போருக்குப் பின் உண்டான பொருளாதார வீக்கம் சிறிதுகாலம் தள்ளிவைத்தது. இருந்தாலும், 1918–19ஆம் ஆண்டின் வரவு செலவுத் திட்டம், அதற்குப் பின்னர் தொடர்ந்து ஐந்தாண்டுகளுக்கிருந்த பற்றுக்குறையினை[3] முன்கூட்டி அறிவிப்பதாக இருந்தது. 1921ஆம் ஆண்டில் ஆரம்பித்து உலகெங்கும் நிலவிய வாணிப மந்தத்தினால், நிதி நிலைமை கவலைக்கிடமாகியது. 1921ஆம் ஆண்டில் சீர்திருத்தங்கள் நடைமுறைக்கு வந்தது முதல், வரவு செலவுத்திட்டத்தைச் சமனமக்குவதற்கு அரசாங்கம் எடுத்துக்கொண்ட முயற்சிகள் தோல்வியடைந்தன. அரசாங்க முயற்சிகள் தோல்வியடைந்தற்கு இரண்டு முக்கியக் காரணங்களைக் குறிப்பிடலாம். தொடர்ந்து வந்த வாணிப மந்தம் முதற் காரணமாகும்; 1922ஆம் ஆண்டின் 'இன்ச் கேப் ஆட்குறைப்புக் குழு' செய்த சிபாரிசின்மேல் சிக்கனம் கையாளப் பெற்றதால், வரிப்பளு முன்னைவிடக் குறைந்திருந்தது. இருப்பினும் வரி

[1] அத்தியாயம் 15–ஐப் பார்க்கவும்.

[2] ஒப்புக்கொண்ட தொகை ஏறக்குறைய £ 5 கோடியாகும்.

[3] ஆப்கன் போருக்கான செலவுகள், பற்றுக்குறை பெருகியதற்கு முக்கியக் காரணமாகும்.

விதிப்பிற்கு – குறிப்பாக உப்புவரியை அதிகரிக்க– அரசாங்கம் செய்த யோசனைக்கிருந்த சட்டசபையின் எதிர்ப்பு இரண்டாவது காரணமாகும். வரவுசெலவுத் திட்டத்தை சமனுக்குவதில் இன்னும் தாமதம் இருந்தால், அரசாங்கத்தின் மேலுள்ள நம்பிக்கையை இழக்கநேரிடும்என்ற நிலை 1923ஆம்ஆண்டில் ஏற்பட்டது. ஆதலால், உப்பு வரியை அதிகரிக்க வைசிராய் சான்றளித்தார். இதனால் தொடர்ச்சியாக இருந்த பற்றுக்குறைகள் நீக்கப்பெற்றதுடன், உடனடியாக சில நல்ல விளைவுகளும் கிடைத்தன. இவற்றுள் ரூபாய்ப்பத்திரங்களின் அங்காடி விலை (Market Price) உயர்ந்ததும், அரசாங்கத்தின்மேல் மக்களுக்குள்ள நம்பிக்கை வளர்ந்ததும் முக்கியமானவை யாகும்.[1]

அப்பொழுது நிலவிய வரிவிதிப்பின் அடிப்படையில் 1924–25–க்கான வரவு செலவுத்திட்டத்தில் ரூ. 3·96 கோடி உபரி இருக்குமென்று மதிப்பீடு செய்யப்பெற்றது. இந்த உபரித் தொகைக்கு இரண்டு உரிமைகள் போட்டியிட்டன. மாகாணச் செலுத்துகளைக் குறைக்கவேண்டுமென்பது ஒன்று; உப்பு வரியைக் குறைக்கவேண்டு மென்பது மற்றொன்று. இவற்றுள் முன்னது அவசரமானது. காரணம், இவைகளைக் குறைத்தால்தான் மாகாண அரசாங்கங்கள், கல்வி, விவசாயம், தொழில் இவைகளில் அதிகச் செலவு செய்யமுடியும். ஆனால், மற்றொரு கோணத்திலிருந்து நோக்கினால், மிகவும் வெறுக்கப்பட்ட உப்புவரியைக் குறைப்பதும் விரும்பத்தக்கதாக இருந்தது. நிதி மந்திரியாக இருந்த சர். பேசில் பிளாக்கட் (Sir Basil Blackett) இவை யிரண்டுக்கும் பொதுவான ஒரு கொள்கையை விரும்பினர். உப்பு வரியை மணங்குக்கு ரூ. 2–8–0–லிருந்து ரூ. 2–0–0க்குக் குறைக்கவும், மாகாணச் செலுத்துகளில் ரூ. 1·5 கோடியைக் குறைக்கவும் அவர் முடிவுசெய்தார். சட்டசபை, இதை ஏற்றுக்கொள்ளாததுடன், அரசாங்க வருவாயின் இரண்டு அச்சுகளான வருமான வரியையும், சுங்கவரிகளையும்கூட நிராகரித்தது. இதனால் ரீடிங் பிரபுவுக்கு (Lord Reading) நிதி மசோதா முழுவதற்கும் சான்றளிக்கும் நிர்ப்பந்தம் ஏற்பட்டது; அவரும், தம்முடைய பொறுப்புகளை நிறைவேற்றுவதற்குத் தேவைப்படும் அளவில் நிதி மசோதாவுக்கு சான்றளிக்க முடிவுசெய்தார். இதனால் உண்டான விளைவு, உப்புவரி மணங்குக்கு ரூ. 1–4–0 ஆகக் குறைக்கப்பட்டதும், சுங்க வரிகளில் பிரேரேபிக்கப்பெற்றமாறுதல்கள் கைவிடப்பட்டதுமே யாகும். இதற்கிடையில் வரவு செலவுத் திட்டத்தைச் சமனுக்குவதற்கு, முன்னிருந்த அடிப்படையில் மாகாணச் செல்லுகளை வசூலிக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டது.

[1] இத்தகைய நல்ல விளைவுகளைப் பற்றிய சிறந்த விளக்கத்திற்கு 'Moral and Meterial Progress of India', 1923–24, பக்கம் 108-ஐப் பார்க்கவும்.

1925 26ஆம் ஆண்டில் ஓர் உபரி கிடைத்தது. இதனால், மாகாணச் செல்லுகளைக் குறைப்பதற்கும், விரிவிதிப்பிற் சில, சிறு அபிவிருத்திகள்[1] செய்வதற்கும் ஏதுவாக இருந்தது.

மாகாணச் செல்லுகள், அதனால் உண்டாகும் தொல்லைகள் மிகக்குறைவாக இருக்கும் வழியில் ஆரம்பத்தில் நிர்ணயிக்கப் பெற்றன.[2] மாகாணச் செல்லுகளைப் பின்வரும் முறையில் நிர்ணயிக்க வேண்டுமென்று அரசாங்கம் விரும்பியது. சீர்திருத் தங்களினால், மத்திய, மாகாண அரசாங்கங்களுக்கிடையே வருவாய் புதிய முறையில் பங்கிடப் பெற்றதினால், மாகாணங் களுக்குக் கிடைக்கக் கூடிய அதிகப்படியான நிகர வருவாயையும் கவனத்தில் எடுத்துக்கொண்டு, ஒவ்வொரு மாகாணமும் செலுத்தும் தொகையும், அம்மாகாணத்தின் வரிதாங்கும் வல்ல மைக்குச்[3] (Taxable Capacity) சமமாகும் வரையில், படிப்படியாக மறுவினியோகம் செய்யப் பெறவேண்டும். இத் திட்டத்தை விளக்கும் அட்டவணையை எதிரே காணலாம்.

உறுதிப்படுத்துவதற்காக இந்தத் திட்டம் இங்கிலாந்தின் மக்கள்சபை முன்னர் வந்தபொழுது, எவ்வளவு விரைவில் முடியுமோ அவ்வளவு விரைவில் இந்தச் செல்லுகளை நீக்க வேண்டுமென்றும், செல்லுகளின் சுமையை மறுபகிர்வு செய்யும் பொழுது எந்த ஒரு மாகாணத்தின் செல்லுகளையும் அதிகரிக்கக் கூடாதென்றும், மத்திய அரசாங்கத்தின் நிதிநிலைமை, செல்லுகளைக் குறைப்பதற்கான உயர்வை அடையும்பொழுது, அதிகச் சுமையுள்ள மாகாணங்கள்தாம் முதலில் விடுவிக்கப்பட வேண்டும் என்றும் தீர்மானிக்கப்பட்டன. ஆகையால், செல்லு களைக் குறைப்பதில் எல்லா மாகாணங்களும் ஒருமுகமாக இல்லை[4]

[1] இந்த அபிவிருத்திகளில் சுங்கவரிக் குறைப்பும், ஆயத்தீர்வைக் குறைப்பும் அடங்கியிருந்தன. பருத்தி ஆயத்தீர்வையை நீக்குவது விரும்பத்தக்கது என்றாலும், அம் முடிவு ஒத்திவைக்கப்பெற்றது. 1925–26ஆம் ஆண்டில், மேலும் இரண்டு நிதிச் சீர்திருத்தங்கள் நடைமுறைக்கு வந்தன. அவையாவன : பொதுவரவு செலவுத் திட்டத்திலிருந்து இரயில்வே கணக்குகளைப் பிரித்தல் (அத்தியாயம் 6– ஐப் பார்க்கவும்) ; கடனைத் தவிர்ப்பதற்கும் குறைப்பதற்கும் வருவாயிலிருந்து ஒதுக்கப்பெற்ற தொகையை ஒரு நிலைப்படுத்தும் திட்டம். Asiatic Review, April 1925, 'The Indian Budget 1925–26,'

[2] மாகாணச் செலுத்துகளின் பூர்வாங்கத்தைப் பற்றிய தெளிவான விளக்கத்தை Moral and Meterial Progress of India, 1927–28 p. 247.ல் காணலாம்.

[3] Report of Financial Relation (i.e. the Meston Report) 1919 p 74. சுங்க வரிகள், வருமானவரிகள் இவ் விருதலைப்பின் கீழும் மத்திய அரசாங்கத்திற்கு மாகாணங் கள் செய்துவந்த மறைமுகமான செலுத்துகளுக்கு கொஞ்சம் சலுகை காட்டப்பெற்றது.

[4] Moral and Meterial Progress of India, 1926–27 ஐப் பார்க்கவும். வருமான வரியின் மூலம் பம்பாய் மாகாணத்தில் அதிகப்படியான நிதி கிடைத்தது. இந்நிதி முழு வதும் மத்திய அரசாங்கத்திற்குப் போய்ச் சேருவதால், இந்த ஏற்பாட்டிற்குப் பிறகும் கூட, நிதிக்குறைபாடுள்ள நிலையில்தான் இருப்பதாகப் பம்பாய் கருதுகிறது. பம்பாய் மாகாணத்தின் இவ் வருமானங்களைப் பெருக்க, நாடுமுழுவதிலும் தேவைப்படும் துணி யின்மீது வரிவிதிக்கப்படுகிறது என்று மற்ற மாகாணங்கள் வாதாடுகின்றன.

மாகாணம்	தொடக்கத்திலுள்ள செல்லுகள்		வரிதாங்கு வல்லமையின் அடிப்படைக்குச் சமமான சதவீதம்
	(a) இலட்சத்தில்	(b) மொத்தத்தில் சதவீதம்	
சென்னை	348	35·4	17
பம்பாய்	56	5·7	13
வங்காளம்	63	6·5	19
ஐக்கிய மாகாணம்	240	24·4	18
பஞ்சாப்	175	17·8	9
பர்மா	64	6·5	6½
மத்யமாகாணமும் பேராரும்	22	2·5	5
அஸ்ஸாம்	15	1·5	2½
பீஹாரும் ஓரிஸ்ஸாவும்	00	0·0	10

இடைக்காலம் நிதி நெருக்கடிக்குள்ளாகியிருந்ததாலும், சீர் திருத்தங்களைக்கையாண்டநேரம் அதனுடன் துரதிர்ஷ்டவசமாகச் சேர்ந்துகொண்டதாலும், வங்காள மாகாணத்தின் செல்லுகள் தள்ளிக்கொடுக்கப் பெற்றன என்பதைத் தவிர,[1] இந்நாள் வரை மாகாணச் செல்லுகளில் எந்தவிதக் குறைவும் செய்யப் பெறவில்லை. வரவுசெலவுத் திட்டத்தில் ஆண்டாண்டுக்குக் கிடைக்கக்கூடிய மீளும் உபரி (recurring surplus) ரூ. 2·5கோடி இருக்குமென்று, 1925ஆம் ஆண்டில் மதிப்பிடப்பெற்றது. இவ்வுபரியிலிருந்து, பளு அதிகமாக உள்ள சென்னை, ஐக்கிய மாகாணம், பஞ்சாப், பர்மா முதலிய மாகாணங்களின் செல்லுகளைக் குறைப்பதென்றும், வங்காள மாகாணத்திற்குச்

[1] Ibid 1923–24 p 103 ஐப் பார்க்கவும்.

செல்லுகளைத் தள்ளிக் கொடுப்பதை மீண்டும் மூன்றாண்டுகளுக்குத் தொடர்வதென்றும் அரசாங்கம் தீர்மானித்தது [1]

இப்படியாக, 1925–26ஆம் ஆண்டின் வரவுசெலவுத் திட்டம் இந்திய நிதிநிலைமை மீட்சியின் மூன்றாவது கட்டத்தைக் குறிக்கிறது. அதிகமான வரிவிதிப்பின் மூலமாகவும், சான்றளிக்கும் அதிகாரத்தை உபயோகிப்பதின் மூலமாகவும், 1923–24ஆம் ஆண்டின் வரவு செலவுத்திட்டத்தில் சமநிலை கைகூடியது; 1924–25ஆம் ஆண்டில் அதிக வரிவிதிப்பு இல்லாமல் சமநிலை காப்பாற்றப்பெற்றது; 1925–26ஆம் ஆண்டில் ஓர் உபரியும் கிடைத்தது. இந்த உபரி மாகாணச்செல்லுகளைக்குறைப்பதற்கு ஏதுவாகஇருந்தது. முடிவில் மாகாணங்களும் சற்றுத் தாராளமாகச் செலவுசெய்யும் நிலையையும் அடைந்தன. 1926–27ஆம் ஆண்டின் வரவு செலவுத் திட்டத்திற்கு சட்டசபையில் முன்னிருந்த எதிர்ப்பில்லை. இந்த ஆண்டுத் திட்டத்தில் பருத்தி ஆயத் தீர்வை[2] நீக்கப்பெற்றதுடன் மகாணச் செல்லுகளும்[3] மேலும் குறைக்கப்பெற்றன.

இவ்வாறு மாகாணச் செல்லு குறைக்கப்பெற்றதும் மற்றச் சூழ்நிலையும் சாதகமாக இருந்தாலும் 1925–26வாக்கில்[4] பெரும்பாலான மாகாணங்களின் வரவு செலவுத்திட்டங்களும்சமநிலை அடைந்தன. மாகாணச்செல்லுகளை ஓர் ஆண்டுக்கு தற்காலிகமாக நீக்கியது, 1927–28ஆம் ஆண்டு வரவு செலவுத்திட்டத்தின் சிறப்பாகும். இந்த நீக்கம் 1928–29ஆம் ஆண்டில் நிரந்தரமாக்கப் பெற்றது. 1927–28ஆம்[5] ஆண்டில் சில சிறிய வரிகள் நீக்கப் பெற்றன. 1929ஆம் ஆண்டில் புதிய நிதி அங்கத்தினரான சர் ஜார்ஜ் ஷூஸ்டர் (Sir George Schuster). 1929–30–க்கான வரவு செலவுத்

[1] சட்டப் பேரவை இந்த யோசனைகளை சற்றுத்தயக்கத்துடன் ஒப்புக் கொண்டு உப்பு வரியை மேலும் குறைக்க வேண்டும் என்ற தன்னுடைய பழைய யோசனையையும் கைவிட்டது.

[2] அத்தியாயம் XIII-ஐப் பார்க்கவும்.

[3] தொடக்க காலத்தில் ரூ. 98·31 கோடியாக இருந்த இச்செல்லுகள் தற்பொழுது ரூ 54·5 கோடியாகக் குறைக்கப்பெற்றன.

[4] 1922-23ஆம் ஆண்டிலும் கூட, ஒன்பதில் இரண்டு மாகாணங்களே வரவு செலவுத் திட்ட உபரியுடனிருந்தன.

[5] தேயிலையின் மீதுள்ள ஏற்றுமதி வரி நீக்கப்பெற்றது. (இதற்குப் பதிலாக தேயிலைக் கம்பெனிகள் மீதுள்ள மற்றவரிகள் உயர்த்தப் பெற்றும்) தேவைப்பட்ட பொழுது கொடுக்க வேண்டிய (Payable on demand) காசோலைகளிலும் (Cheques) வாணிப உண்டியல்களிலும் இருந்த முத்திரைவரி நீக்கப்பெற்றது; மோட்டார் கார்களிலும், டயர்களின் மீதும் விதிக்கப் பெற்ற இறக்குமதி வரிகள் குறைக்கப் பெற்றன. பதனிட்ட தோலின் மீதிருந்த ஏற்றுமதி வரி நீக்கத்திற்கான யோசனை நிராகரிக்கப்பட்டது. அந்த ஆண்டின் பிற்பகுதியில், பருத்தி ஆலைத் தொழில்களில் உபயோகிக்கப்பட்ட இயந்திரக் கருவிகளிலும், மற்றப் பொருள்கள்மீதும் இருந்த வரிகளைக் குறைக்க வேண்டுமென்று அரசாங்கம் தீர்மானித்தது.

திட்டத்தைத் தாக்கல் செய்தபொழுது நிதிநிலைமை அவ்வளவு திருப்திகரமாக இல்லை. நிதி ஆண்டுகளிடையே, வருவாய் சரிசமமாகப் பங்கிடப்படாததும், பின்னர் அதிகமான வரி விதிப்புக்கு அவசியம் ஏற்படும் என்று உணரப்பெற்றதுமே இதற்குக் காரணங்களாகும். இருந்தாலும் அந்த ஆண்டில் ஒரு சிறு உபரி கிடைத்தது. அதற்குப்பிறகு, உலகெங்கும் நிலவிய 'மந்தம்' இந்தியாவை மிகக்கொடுமையுடன் தாக்கியதால் 1930–31ஆம் ஆண்டிலும், 1931–32ஆம் ஆண்டிலும் பெரும்பற்றாக் குறைகள் உண்டாயின. உயர்ந்த வரி விதிப்பின் மூலமும், சிக்கனமுறைகளைத் தீவிரமாய்க் கையாளுவதன் மூலமும் வரவு செலவுத்திட்டத்தில் சமநிலை மீட்கப்பெற்றது.[1]

மந்தத்திற்கு முந்திய காலத்தை ஆராய்வதுதான் இந்த அத்தியாயத்தின் நோக்கம்.[2] மந்தகாலத்திற்கு முன்பிருந்த நிலையைப் பின்வருமாறு சுருக்கிக் கூறலாம்: சர். பேசில் பிளாக்கெட்டின் ஆறுஆண்டு நிதித் தலைமையில், சட்டப்பேரவை பல சீர்திருத்தங்களுக்கு இசைந்தது. இச் சீர்திருத்தங்களும், நாட்டின் பொருளாதார நிலையிலிருந்த அபிவிருத்தியும் ஆண்டாண்டுக்கு வரவு செலவுத் திட்டத்தில் தோன்றும் ஆபத்தான பற்றாக்குறையை உபரியாக மாற்றவும், பருத்தி ஆயத்தீர்வையையும், மாகாணச்செலுத்துகளையும் முற்றிலும் ஒழித்துக்கட்டவும், வரிவிதிப்பைக்குறைக்கவும் ஏதுவாயிருந்தன. இந்தியாவின் மதிப்பு[3] மிகவும் உயர்ந்தது. பிற்காலத்தில், மத்திய, மாகாண அரசாங்கங்கள் நேர் முகமாகவும் மறைமுக மாகவும், உற்பத்தியாக்கும் செயல்களில் அதிகப்படியான செலவு செய்ய முடிந்தது. பணவியலும் பாங்கியலும் பற்றிய சீர் திருத்தங்கள் இவற்றுள் அடங்கா. இவைகளைப் பற்றிப் பின்னர் கவனிப்போம்.[4] ஆக்க வேலைக்கான திட்டத்தைத் தொடங்கு வதற்குப் பாதை அமைத்தாகிவிட்டது என்று இவ்வாண்டு களில் எண்ணத் தோன்றியது. அஞ்சல், இந்த எண்ணங்களை 1929ஆம் ஆண்டில் ஏற்பட்ட மந்தம் சிதறடித்தது.

[1] 1929ஆம் ஆண்டில் விவசாயப் பொருள்களின் விலைகள் மிகவும் குறைந்தன். இதனால், குடியானவர்கள் கொடுத்துன்பத்திற்கு ஆளானார்கள். வரி வருமானமும் மற்ற வருமானமும் வெகுவாகக் குறைந்தன.

[2] 1929ஆம் ஆண்டுக்குப் பின்னிருந்த நிதிநிலைமை, தற்கால நிதி நிலவரம், அரசியலமைப்புச் சீர்திருத்தங்களில் நிதிபற்றிய விதிகள் இவைகளை அத்தியாயம் 18-ல் விரிவாக ஆராயலாம்.

[3] The Indian Budget, 1928–29, p. 6 et seq. 1923ஆம் ஆண்டுக்குப் பின்னர் இந்தியாவின் உற்பத்தியாக்காக் கடனில் ரூ. 76 கோடி (£ 5·7 கோடி) குறைக்கப்பெற்றது. உற்பத்தியாக்கும் கடனில் ரூ. 189 கோடி (£ 14·2 கோடி) ஏற்றமிருந்தது.

[4] சர். பேசில் பிளாக்கெட்டின் தொண்டைப்பற்றிய சிறப்புரைச் சுருக்கத்திற்கு, 'Economic Journal, September 1928, 'The Indian Reserve Bank and Sir Basil Blackett's work in India' by A.J Saunders-ஐயும், Moral and Material Progress of India, 1926–27 பக்கம் 211-ஐயும் பார்க்கவும்.

§ 5. சுருக்கமும் முடிவுரைகளும்

ஒரு பொருளாதாரப் பழமை முறையைத் தற்காலத்திற்கு ஏற்றதாக மாற்றியமைப்பதற்குத் தேவையான சீர்திருத்தங்களை அரசாங்கம் மேற்கொள்ளுவதற்கும், பொருளாதார, சமூகப் பணிகளை விரிவு படுத்துவதற்கும், இந்தியாவின் குறுகியதும், நெகிழ்ச்சியற்றதும், நம்பமுடியாததுமான நிதிச் சாதனங்கள், கடந்த காலத்தில் ஒரு பெரிய முட்டுக் கட்டையாக இருந்தன என்பது மேற்கண்ட விளக்கத்தினுல் தெளிவாகும். இந்தியாவின் நிதிப் பிரச்சினை, தடைப்பட்ட பொருளாதார வளர்ச்சிக்கு ஒரு முக்கியக் காரணமாக இருந்திருக்கிறது என்பதில் ஐயமில்லை. சில சந்தர்ப்பங்களில் அரசாங்கம் தவறுன நிதிக் கொள்கையைக் கையாண்டிருக்கலாம். இருந்தாலும், நிதிக் கொள்கையின் முழுப் பயனும் கிடைக்காததற்கு, அரசாங்கத்திற்கு நல்ல கொள்கையை உருவாக்குவதற்கான எண்ணம் இல்லை என்பதைவிட, அதற்கான சக்தி அரசாங்கத்திடம் இல்லை என்று கூறுவது பொருத்தமாகும். பல காரணங்கள் அரசாங்கத்தின் சக்தியைக் குறைத்தன. அவற்றுள் சமூக இடையூறுகளையும் (நேர்முக வரி விதிப்பைப் பரவலாக்குவதற்கு நிலவரியின் அமைப்புத் தடையாயிருந்தது போன்றவை), நிதி அதிகாரம் ஓர் அந்நிய அரசாங்கத்திடம் இருப்பதால் இயற்கையாகவே உண்டாகும் அரசியல் இடையூறுகளையும் (அரசாங்கம் கையாண்ட சீர்திருத்தங்களுக்குத் தகுந்த காரணமின்றி எழுந்த எதிர்ப்பு, இரட்டையாட்சி முறையை[1] நடைமுறையாக்குவதற்கு நாட்டில் ஒத்துழைப்பு இல்லாதது போன்றவை); அரசாங்கத்தின் சக்திக்கும் மீறி நிகழ்ந்த சில இடையூறுகளையும் (அரசாங்கம் சீர்திருத்தங்களை மேற்கொண்ட நேரத்தில் துரதிருஷ்டவசமாக நிதிநெருக்கடியும், இன்னலும் ஒன்றுகச் சேர்ந்து கொண்டது போன்றவை) முக்கியமாகக் கருதலாம்.

முன்பு இருந்ததைவிட, நிதிச் சாதனங்கள் அதிக நெகிழ்ச்சியுள்ளதாகவும், வரி விதிப்புக் குறைந்த பளுவுள்ளதாகவும் ஆகியிருக்கின்றன. இதனுல் பொருளாதார, கலாச்சாரப் பணிகளுக்கான செலவு, மிகப் பரவலாக இல்லாவிட்டாலும், குறிப்பிடத்தக்க அளவு அதிகரிக்க ஏதுவாயிற்று. 1927ஆம் ஆண்டில்

[1] 'இராணுவச் செலவுக்கு எதிர்ப்பு, இங்கிலாந்திலிருந்து தளவாடங்களையும் பண்டங்களையும் வாங்குவதில் குறை காண்பது, ஏகாதிபத்தியச் சலுகைகளைத் தழுவும் எந்தச் செயலையும் பொறுமையுடனும் சந்தேகத்துடனும் நோக்கல்—இவைகள் அரசாங்கக் கொள்கைக்கு இருந்த எதிர்ப்பிற்கு எடுத்துக்காட்டுகளாகும். இத்தகைய பிரச்சினைகளை அவைகளின் கோணத்திலேயே நோக்கி முடிவு காணவேண்டும்.' (Round Table, December 1923).

மாகாணச் சொத்துகள் நீக்கப்பெற்றதும் இத் துறைகளில் அபிவிருத்தி குறிப்பிடத்தக்கதாயிருந்தது.

ஆட் குறைப்பையே நோக்கமாகக் கொள்ளுவது, நேர்முக மாகவும் மறைமுகமாகவும் உற்பத்தியாகும் செயல்களில் அதிக மான செலவை மேற்கொள்ளுவது - இவற்றுள், எது சிறந்தது என்பதில் இன்னமும் கருத்து வேறுபாடு நிலவுகிறது. அரசாங்கம் முன்னமே அதிக அளவில் செலவை மேற்கொண்டிருந்தது என்றும், இரயில்வேக்கள், சுகாதாரத் துப்புரவை மேம்படுத்துதல், இன் னும் இவை போன்ற எத்தனையோ துறைகளில் தன் சக்திக்கும் மீறி அரசாங்கம் பணி செய்யமுயற்சி செய்திருக்கிறது. என்றும் சிலர் கூறுகிறார்கள். நாட்டில் அமைதியை நிலை நாட்டுவதற்காக அரசாங்கம் முன்னேற்றத் தியாகம் செய்திருக்கிறது;[1] அதில் அரசாங்கம் ஒரு தவறான சிக்கன முறையைக் கையாண்டிருக்கிறது என்று சிலர் கூறுகிறார்கள். இந்திய அரசாங்கத்தின் போர்க்கால நிதிக் கொள்கையைப் பலர் குறைகூறினர். போர்க் காலத்தில் அதிக வரியை விதித்து, கல்வி, சுகாதாரத் துப்புரவு, தொழில் வளர்ச்சி இவைகளைத் தொடர்ந்து வளர்க்காமல் அரசாங்கம், வீணே காலங் கழித்து வந்தது என்பது அவற்றுள் முக்கியமான தாகும். 'கல்வியைப் பரப்புவது, சுகாதாரத் துப்புரவை மேம் படச் செய்தல், தொழில்களை வளர்த்தல் போன்ற செயல்களில் எதுவும்செய்யாமல்காலங்கழித்ததற்கு ஏதுஅரசாங்கத்தின்முழுக் கவனமும் போரின் மேலிருந்தது என்று கூறுவது போதுமான காரணமாகாது.....முன்னேற்றத்தின் வேகம் தடைப்படாமல் இருப்பதற்கு மட்டுமல்லாமல், வேகத்தை விரைவாக்குவதற்கும், போரின் முதலாண்டிலேயே அரசாங்கம் அதிகவரி விதித்திருந் தால் நாம் அதைப் பாராட்டியிருப்போம்[2]' என்று பேராசிரியர் கேல் (Professor Kale) அவர்கள் கூறுகிறார்.[3]

அரசாங்கத்தின் வரவு செலவுத் திட்டத்தில் பற்றுக் குறைகள் எழுவதிலோ அல்லது உற்பத்தியாக்காக் கடன்களை அதிகரிப் பதிலோ பெரிய தவறென்றுமில்லை. சுகாதாரம், கல்வி போன்ற நலன் பயக்கும் செயல்களில் அல்லது விவசாய ஆராய்ச்சி போன்ற மறைமுகமாக உற்பத்தியாக்கும் பணிகளிலும் அதிகப்படியான செலவு செய்வதனால் பற்றுக் குறை எழுந்தாலும் அது முடிவில்

[1] B. R. Ambedkar, The Evolution of Provincial Finance in British India, p. 190.

[2] 'நாம் உண்மையிலேயே பாராட்டியிருப்போமா?' என்று ஆச்சரியப்படுகிறேன்.

[3] India's War Finance and Post-War Problems, by V, G. Kale (1919), p. 42.

அனுகூலமாகவே இருக்கும் என்று, பேராசிரியர் H. S. ஜீவான்ஸ் (Professor H. S. Jevons) குறிப்பிடுகிறார். 'கல்வி, சுகாதாரம் இவைகளில் முதலீடு செய்வது வரிதாங்கும் வல்லமையைப் படிப் படியாக அதிகரிக்கும்.'[1] பயனளிக்கும் திட்டங்கள் பல நிறைவேறு வதை, நிதியின்மை எவ்வாறு தடுத்திருக்கிறது என்று முன்னர் பல சந்தர்ப்பங்களிலும் விளக்கினேம். விவசாயத் துறையிலும் கூட (மற்றத் துறைகளைவிட இத் துறைக்கு அரசாங்கம் அதிகச் செலவு செய்தது), தலைக்கு அல்லது ஓர் ஏக்கருக்கு அரசாங்கம் செய்துள்ள செலவை மற்ற நாடுகளுடன் ஒப்பிட்டுப் பார்க்கும் பொழுது மிகக் குறைவாக இருந்திருக்கிறது என்பதைப் பின்வரும் அட்ட வணையிலிருந்து அறியலாம்:

அரசாங்கத்தின் விவசாயச்செலவு[2]

	1000 மக்களுக்கு ரூ.	சாகுபடியிலிருந்த 1000 ஏக்கருக்கு ரூ.
ஜெர்மன் (1910)	945	705
அமெரிக்கா (1919–20)	1,020	210
பிரிட்டன் (1921)	960	1,380
பஞ்சாப் (1921–21)	79	56[3]

தொழில்களுக்காக அரசாங்கம் செய்த செலவு இதைவிடக் குறைவாகும். விவசாயம், தொழில், சுகாதாரம், கல்வி[4] இத் துறைகளில் அதிகப்படியான செலவு செய்தால், முடிவில் இலாப

[1] Proceedings of the Indian Economic Association, 1923, pp. 46, 47. இத்தகைய செயல்களில் செலவிடுவதற்காக, அறிந்தும் கடன் வாங்குவது ஒரு முறை யான நிதிக் கொள்கையேயாகும் என்று கூறும் அளவுக்குப் பேராசிரியர் ஜீவான்ஸ் வற் புறுத்துகிறார்.

[2] இந்த விவரங்களை M. L. டார்லிங் (M. L. Darling) அவர்கள் தொகுத்திருக் கிறார். (Vide-The Punjab Peasant in Prosperity and Debt, p. 715), ஜெர்மனி, அமெரிக்கா, பிரிட்டன் இந் நாடுகளுக்கான புள்ளி விவரங்களை 1922ஆம் ஆண்டு ஏப்ரல் மாத Edinburgh Review-ல் வெளியான சர். ஹென்றி ரூவின் (Sir Henry Rew's) கட்டுரையிலிருந்து எடுத்திருக்கிறார். பஞ்சாப். விவசாயத் துறையில் முன்னேற்றகரமான கொள்கையைப் பின்பற்றும் மாகாணம். 1921–22ஆம் ஆண்டில் பஞ்சாப் மாகாணம் மற்ற மாகாணங்களைவிட விவசாயத்திற்காக அதிகச்செலவு செய்தது.

[3] பிரிட்டிஷ் இந்தியா முழுவதிலும், சாகுபடியான ஓர் ஏக்கர் நிலத்திற்காக அர சாங்கம் செய்த ஆண்டுச் செலவு கிட்டத்தட்ட ½ பென்சாகும், (V. Moral and Material Progress of India, 1924-25, p. 185 and P.P. Pillai, Economic Conditions in India, p. 98). அதாவது ஏறக்குறைய 1,000 ஏக்கர்களுக்கு ரூ, 31 ஆகும். இந்த சராசரி பஞ்சாப் மாகாணத்திலிருந்ததைவிட மிகக் குறைவாகும்.

[4] 1913–14ஆம் ஆண்டு முதல் கல்விக்கான செலவை, தனியாக எடுத்துக் கொண் டாலும் சரி, அல்லது அதை மற்ற இனங்களுடன் ஒப்பிட்டுப் பார்த்தாலும் சரி, செலவுத் தொகை அதிகரித்திருக்கிறது என்பதை XXஆம் அட்டவணையில் காணலாம். 1913–14ஆம் ஆண்டில் கல்விக்கான செலவு, மொத்தச் செலவில் 508 சதவீதம் இருந்தது. ஆனல்,1925–26ஆம் ஆண்டில் அது 7·2 சதவீதமாக உயர்ந்தது.

கரமாகவே இருக்கும். வீண்செலவு என்று குற்றஞ்சாட்டப் பெற்ற இனங்களில், மேலும் அதிகமான செலவு தேவைப்பட்டது என்று கூறுவது உண்மையில் பொருத்தமாக இருக்கும். சில முனிசிபல் தொகுதிகளில்,[1] அரசாங்கம் சில விலையுயர்ந்த துப்புரவுச் சாதனங்களை வழங்கியது ஒரு வீண்செலவாகும் என்று சிலர் கூறுவதில் நியாயமில்லை. இதுபோன்ற கூற்றுகளில் எள்ளளவு உண்மை இருக்கலாம்.

இத்தகைய செலவிலிருந்து, சிறிது காலம் கழித்துத்தான் பொருளாதாரப் பலனை எதிர்பார்க்கலாம். இத் துறைகளில் அரசாங்கம் மேலும் அதிகமாகச் செலவுசெய்வதை, 1929ஆம் ஆண்டில் தோன்றிய 'மந்தம்' தடுத்தது. விரிவிதிப்பைக் குறைக்க வேண்டும் என்கிற கோரிக்கைகள் இன்று பலமாக இருக்கின்றன. மக்களின் ஏழ்மை நிலையையும், ஓரளவுக்கு வசதியுள்ளவர்களிடம் இருக்கும் தொழில் ஊக்கத்தையும் வரிவிதிப்புப் பாதிக்கக்கூடாது என்பதுதான் இக் கோரிக்கைகளுக்கு முக்கியக் காரணமாகும்.

நிலவரி முறையை, மேற்கூறிய[2] வழிகளில் திருத்தியமைப்பது நடைமுறையில் செய்யக் கூடிய ஒரு காரியமாகும். ஒவ்வொரு மாகாணத்தின் தேவைகளுக்குத் தகுந்தபடி, வரி முறையை திருத்தியமைப்பது; அல்லது தற்பொழுது நடைமுறையிலிருக்கும் கட்டணங்களின் அடிப்படையில் நாடு முழுவதற்கும் ஒரு நிரந்தர நிலத் தீர்வையை ஏற்பாடு செய்வது. அதனுடன் குறிப்பிட்ட அளவுக்கு மேலான விவசாய வருமானங்களின்மீதும் வருமான வரியை விதிப்பதால், தொழில் வர்த்தக வருமானங்களும் விவசாய வருமானங்களும் ஒரே விதத்தில் நடத்தப் பெறுவதுடன், நேர்முக வரிவிதிப்பைப் பரவலாக்குவதற்கும் இவ்வேற்பாடு உதவியாக இருக்கும்.[3]

விவசாய வருமானவரி, ஓர் அடிப்படையான மாறுதலை ஏற்படுத்தி, நெகிழ்ச்சியுள்ள ஒரு நிதிமூலத்தைக் கொடுப்பதுடன் உப்பு வரியை நீக்குவதற்கும் உதவியாக இருக்கும். விவசாய வருமான வரி விதிக்கப்படும் வரையில், உப்பு வரியைக் குறைத்தால், வாழ்க்கைக்கு இன்றியமையாத பொருள்கள் மீதுள்ள வரிச்சுமை குறையும். இதனால் ஏற்படக் கூடிய நட்டத்தைத்

[1] சில முனிசிபாலிடிகள் 'தேவையில்லாத' தண்ணீர் வினியோகத்தையும், மற்றத் துப்புரவுப் பணிகளையும் நிறுத்திவிடுவதாகப் பயமுறுத்தின.

[2] இதே அத்தியாயத்தின் முற்பகுதியைப் பார்க்கவும்.

[3] 1935ஆம் ஆண்டின் இந்திய அரசாங்கச் சட்டத்தில், இந்த யோசனை உள்ளது. விவசாய வருமானவரியின் மூலம் கிடைக்கும் வருவாய் மாகாணங்களுக்கு ஒதுக்கப் பெற்றது.

தொழில் துணிவை[1] பாதிக்காத அளவில் போகப் பொருள்கள் மீது அதிக வரிவிதித்து ஈடுசெய்யலாம். வரி விதிப்பைச் சாதாரண மாகத் தேவைப்படும் போகப் பொருள்கள்மீது பரவலாக்கக் கூடாது என்கிற வாதத்தில் பொருத்தமான காரணமெதுவு மில்லை. எடுத்துக்காட்டாகப், புகையிலையின் மீதுள்ள ஆயத் தீர்வையை உயர்த்தலாம்; பாக்கின் மீது ஆயத்தீர்வையை விதிக் கலாம். இம் மாறுதல்களுக்கு ஆதரவு கிடைக்குமா என்பது சந்தேகத்திற்குரியதுதான்; ஆனால், மக்களின் வாழ்க்கைக்கு இன்றியமையாத ஒரு பொருளின் மீது (உப்பு) அரசாங்கம் வரி விதிக்கிறது என்னும் முறையீட்டைத் தவிர்ப்பதற்கு இது பெரிதும் பயன்படும்.

அரசாங்கம் செலவுசெய்த முறையில், ஊதாரித்தனத்தை விடக் கருமித்தனம்தான் இருந்தது; பல செயல்களிலும் அதிகப் படியான செலவுசெய்வதே உண்மையான பொருளாதாரக் கொள்கையாகும் என்கிற முடிவுகளைக் கடந்தகால நிகழ்ச்சிகள் வலியுறுத்துவனதாக இருந்தன. 1929-க்குப் பிறகு நிகழ்ந்த நடப்புகளை நோக்கும்பொழுது இவ் வெண்ணம் மேலும் வலுப் பெறுகிறது. அரசாங்கம் கையாண்ட நிதிக்கொள்கை பழமை நோக்குடையதாயிருந்தது. ஆட்குறைப்பிலும், உயர்ந்த வரி விதிப்பிலும், அரசாங்கம் அதிகமான நம்பிக்கை வைத்திருந்தது. மக்களின் இன்னலைப் போக்குவதற்கும், வேலையின்மையைக் குறைப்பதற்கும், உற்பத்திச் சக்தியைப் பெருக்குவதற்கும் ஏது வான மூலதனச் செலவை ஊக்குவிப்பதற்கோ அல்லது பொதுப் பணிகளை மேற்கொள்ளுவதற்கோ அரசாங்கம் எந்த வித முயற்சியும் எடுத்துக்கொள்ளவில்லை.

[1] இப்பொழுது நடைமுறையிலிருக்கும் பெரும்பான்மையான மறைமுக வரிகளும், மக்களில் வசதியுள்ளவர்களுக்குத் தேவையான பொருள்கள் மீதுதான் விதிக்கப்படு கின்றன. ஆகையால் மறைமுக வரிவிதிப்பைப் போகப்பொருள்கள் மீதுள்ள வரி விதிப்பு என்று கருதலாம். தற்பொழுது வங்காளம், பம்பாய் போன்ற மாகாணங்களில் மட்டும் கையாளப்படும் பட்டியல் வரிகளையும் (Scheduled taxes) அதாவது, கேளிக்கை வரி (Entertainment tax), பந்தயவரிகளையும் (Betting tax) மற்ற மாகாணங்களி லும் அனுசரிக்கலாம். ஆனால் இவ்வினங்களிலிருந்து பெரும் தொகையை எதிர் பார்க்க முடியாது. (இவைகள் மூலம் 1924-25ஆம் ஆண்டில் பம்பாயிலும் வங்காளத் திலும் ரூ. 24 இலட்சம் கிடைத்தது).

15. பாங்கியலும் செலாவணி முறையும்

பாங்கியல்

இந்தியாவில் தேவையான அளவுக்குப் பாங்குகளும் நாணய வசதிகளும் இல்லை—சுதேசபாங்கியல்முறை (Indigenous Banking System)—அதன் இயல்பும் பணிகளும் குறைகளும்—ஐரோப்பிய முறைப் பாங்குகளின் நான்கு முக்கியப்பிரிவுகள் : மாகாண பாங்குகள் (தற்போது ஒன்றுக இணைக்கப்பெற்று இம்பீரியல் பாங்காக உள்ளது), உள்நாட்டுக் கூட்டுப்பங்கு பாங்குகள் (Local Joint Stock Banks)—குறிப்பிட்ட துறைகளில் செயலாற்றும் பாங்குகள் (Specialised Banks); நாணய மாற்று பாங்குகள் (Exchange Banks)—முடிவுரை.

செலாவணி முறை

செலாவணிமுறை, செலாவணிக்கொள்கை இவைகளால் பொருளாதாரச் சூழ்நிலையில் உண்டான பொதுவான விளைவுகள்—19ஆம் நூற்றாண்டின் முடிவில் இருந்த முறையும் நாணயச்சாலைகள் மூடப்பெற்றமையும் (1893)—பொன்பரிவர்த்தனைத் திட்டம் (Gold Exchange Standard), காசிதச் செலாவணி—பொன்திட்டக் காப்பு நிதியும் (Gold Standard Reserve) அதன் பணிகளும்—1907ஆம் ஆண்டின் நிதி நெருக்கடி—தற்பொழுது நடைமுறையிலுள்ள அமைப்பைப்பற்றிய முறையீடுகளும் சேம்பர்லின் ஆணைக்குழுவும் (Chamberlain Commission)—செலாவணிப்பிரச்சினைகளும் போர்க்காலக் கொள்கையும்—பேபிங்டன் ஸ்மித் ஆணைக்குழுவும் (Babington-Smith Commission), நாணய மாற்று நெருக்கடிகளும் (1920)—ஒரு ரூபாய்க்கு இரண்டு ஷில்லிங் நாணயமாற்று வீதத்தைக் கைவிட்டது— (1925–26) ஹில்டன் யங் ஆணைக்குழுவும் (The Hilton Young Commission) அதனுடைய மூன்று முக்கிய சிபாரிசுகளும் : (1) பொன்திட்டத்தை மேற்கொள்ளுதல் (ஆனால், பொன் நாணயம் இல்லை); (ii) ரூபாய்க்கு 1 ஷில்லிங் 6 பென்ஸ் என்ற நாணய மாற்று வீதத்தைக் கையாளுதல் (iii) மத்திய ரிசர்வு பாங்கை நிறுவியது—அறிக்கையின்மேல் அரசாங்கம் எடுத்த நடவடிக்கையும் தற்கால நிலைமையும்—முடிவுரைகள்.

§ 1. பாங்கியல்

பொதுவாக உற்பத்தியாக்கும் செயல்களில் செலவிடவும் குறிப்பாகத் தொழில்களை வளர்ப்பதற்கும் தேவையான மூலதனத்தைப் பெறுவது இந்தியாவுக்கு எளிதாக இல்லை. இந்தியாவுக்குள்ள குறைபாடுகளில், இக் குறைபாடு முதன்மையானதாகும். இந்தக் குறைபாடு நிதிச்சாதனங்களின் பற்றாக்குறை

யினாலும், பாங்கு வசதியின்மையாலும்,[1] தற்போதுள்ள இந்திய மூலதனம்[2] முழுவதும் பயன்படுத்தப்படாமையாலும் ஏற்படுகிறது.

இந்தியப் பாங்கியல் முறையை இரண்டு பிரிவுகளாகப் பிரிக்கலாம்: அவை, (1) சுதேசபாங்கு முறையும் (2) ஐரோப்பியப் பாங்கு முறையும் ஆகும்.

இவற்றுள் முன்னதின் மூலம், தொன்மையானதும் தெளிவற்றதுமாகும். பல நூற்றாண்டுகளுக்கு முன்னர் சுதேசபாங்கர்கள் (Native Bankers) அல்லது வட்டிக்கடைக்காரர்கள் என்றழைக்கப்பட்டவர்கள் சில முக்கிய வாணிப நகரங்களில் பணம் கொடுக்கல் வாங்கல் தொழிலைப் பெரிய அளவில் செய்து வந்தனர். அவர்களுடைய வாணிப உண்டியல்கள் (Bills of Exchange) மூலம் செல்லுகை (payments) எளிதாக்கவும் செய்தனர். அவர்கள் 'முக்கிய வாணிப இடங்களிலும், சுதேச அரசவைகளிலும் பெரிய அளவில் கொடுக்கல்வாங்கல் தொழிலைச் செய்து வந்தனர். சில சமயங்களில் அவர்கள், சுதேச மன்னர்களுக்கு நிதிஅமைச்சர்களாகப் பணியாற்றும் தகுதியையும் பெற்றிருந்தனர். நாட்டில் அரசியல் நெருக்கடியும், குழப்பங்களும் மலிந்திருந்த காலங்களில்கூட அவர்களுக்குச் சாதாரணமாக நல்ல மதிப்பு இருந்தது. அவர்களுடைய உண்டியல்களுக்கு நாடு முழுவதிலும், இந்திய எல்லைகளுக்கு அப்பாலுங்கூட செலாவணித்தன்மையிருந்தது. அந்த அளவுக்கு, அவர்களுடைய மதிப்பு உயர்ந்திருந்தது.'[3] ஐரோப்பியப் பாங்குகளிடமிருந்தும் ஐரோப்பிய முறையில் அமைந்த பாங்குகளிடமிருந்தும் பண உதவி பெறும் அளவுக்கு நாணயம் இல்லாத மனிதர்களுக்கு முதலளிப்பதன் மூலம், சுதேச பாங்கர்களும் அவர்களுடைய உண்டியல்களும், நாட்டில் இன்றும் ஒரு முக்கிய அங்கம் வகித்து வருகின்றன. ஆனால், அவர்களுடைய நடவடிக்கைகளைப் பற்றிய விவரங்களை அறிவது மிகவும் கடினமாகும்.[4]

ஐரோப்பியப் பாங்குமுறை, 19ஆம் நூற்றாண்டிலேயே நிலையாக நிறுவப்பெற்றது. இருந்தாலுங்கூட, அது இன்னும் பெரிய

[1] Vide. The Banking Needs of India, by Mohanlal Tannan (pamphlet) 1919, p. 2.

[2] 'முதலிடும் பழக்கம்' (Investing habit) இன்னும் இந்தியாவில் வழக்கத்திற்கு வரவில்லை. அதனுடன் பாங்குமுறையில் பழக்கமும் நம்பிக்கையும் ஏற்படவில்லை. இதனால் மக்கள் தங்களுடைய சேமிப்புகளைத் தங்க, வெள்ளி நாணயங்களிலோ அல்லது நாணயமாகவோ, தங்கமாகவோ பதுக்கிவைக்கிறார்கள்.

[3] Imprerial Cazetteer, vol. iv, p. 522.

[4] இதைப்பற்றிய சிறந்த விளக்கத்தை, L.C.Jain's Indigenous Banking in India (1929) என்ற நூலில் காணலாம்.

நகரங்களுக்கும், புதிய முறையில் நடத்தும் வாணிபத்திற்கும் மட்டுமே செயலாற்றி வருகின்றது. இந்தியப் பாங்குத் தேவைகள் அனைத்துக்கும் பணியாற்றும் வளர்ச்சியை அது இன்னும் அடையவில்லை. பிரிட்டிஷ் ஆட்சி, உலகில் மற்ற நாடுகளுடன் தொடர்புண்டாக்கி, இந்தியாவை ஒரு வாணிப நாடாகவும் ஆக்கியது; நிலத்தின் மதிப்பையும் அதன் விளைபொருள்களின் மதிப்பையும் உயர்த்தியது. இந்நடவடிக்கைகளால் நாட்டில் கடன் தேவையைப் பெருக்கி, சுதேச பாங்கர்களையும் அவர்களுடைய நடவடிக்கைகளின் அவசியத்தையும் ஆதரிக்கச் செய்தது. இருந்தாலும் ஐரோப்பியப் பாங்கு முறை சுதேசப் பாங்கர்களின் எல்லைக்குள் புகவே இல்லை என்று கூறலாம். கடன் கொடுப்பது மட்டும் சுதேச பாங்கருடைய தொழிலன்று. பல சந்தர்ப்பங்களில் அவர் வணிகராகவும் இருக்கிறார்; விவசாயம், தொழில் உள்நாட்டு வாணிபம்[1] இவைகளுக்கும் முதலளிக்கிறார். இதனால், அவருடைய பல்வேறு தொழில்களையும் வரையிட்டுப் பாகுபடுத்துவது முற்றிலும் முடியாத ஒரு செயலாகும்.

சுதேச பாங்கு முறையில் நன்மையும் இருக்கிறது, தீமையும் இருக்கிறது. சுதேச பாங்கு முறை உடனடியாகக் கடனுதவி அளிப்பதால், கிராமப் புறங்களில் இன்றும் ஓர் இன்றியமையாத சாதனமாக இருக்கிறது. சாதாரண விவசாயிகளுக்கும், தொழிலதிபர்களுக்கும், சிறு கடனுதவி அளிக்கும் சாதனம் இது ஒன்றுதான் என்றுகூடக் கூறலாம். ஆனால், மஹாஜன் போன்ற சுதேசபாங்கர்கள் உயர்ந்த வட்டி வாங்குகிறார்கள். உயர்ந்த வட்டி கடன் வாங்குபவர்களைப் பெருந்துன்பத்திற்கு ஆளாக்கி, முடிவில் அவர்களுடைய அழிவுக்கும் காரணமாகிறது. சுதேச பாங்கர்களிடம் கடன் வாங்குபவர்கள், அவர்களுக்கடிமையாகி, அவர்களையே சார்ந்து வாழும் நிலையை அடைகிறார்கள். உடனடியாகக் கடன் கொடுப்பவர்கள் அதிகம் இருப்பதால் மக்களிடையே ஊதாரித் தனமும் ஊக்குவிக்கப்படுகிறது.

இவர்கள் வாங்கும் வட்டி, கடனின் இயல்புக்கு ஏற்றாற்போல் மாறுகிறது. நல்ல நாணயம் உள்ள வணிகர்கள், வாணிபச் செயல்களுக்கு மட்டும் கடன் வாங்கினால், வட்டி வீதம் மிகவும் அதிகமாக இல்லை. இவர்களுடைய வட்டி சில நேரங்களில் மாகாண பாங்குகளும், கூட்டுப் பங்கு பாங்குகளும்[2] விதிக்கும் வட்டிக் கட்டணத்திற்குச் சமமாக இருக்கிறது. ஐரோப்பியப் பாங்குமுறை தங்களுக்கு உதவிசெய்வதாக இருக்குமேயன்றி

[1] அத்தியாயம் 5-ஐப் பார்க்கவும்.

[2] Findlay Shirras, Indian Banking and Finance, p.342

ஊறு செய்யாது என்பதைச் சுதேச பாங்கர்கள் உணரத் தொடங்கியிருக்கிறார்கள்.[1]

ஆனால், விவசாயிகளுக்கும் சிறு தொழிலதிபர்களுக்கும் கொடுக்கப்படும் கடன்களின் வட்டி ஆண்டுக்கு 200 சதவீதம் 300 சதவீதம் என்று எல்லையற்றதாக இருக்கின்றது.

ஐரோப்பிய முறையிலான பாங்குகளை (தபால் நிலைய சேமிப்பு பாங்குகள் நீங்கலாக)[2] நான்கு முக்கியப் பிரிவுகளாகப் பிரிக்கலாம். அவையாவன: (i) மாகாண பாங்குகள். (இவைகள் 1921-ல் இந்தியாவின் இம்பீரியல் பாங்கை நிறுவதற்காக ஒன்றுக இணைக்கப்பெற்றன.); (ii) உள்நாட்டில் கூட்டுப் பங்கு பாங்குகள்; (iii) கூட்டுறவு பாங்குகள், தொழில் பாங்குகள் (Industrial Banks) போன்ற குறிப்பிட்ட துறையில் பணியாற்றும் பாங்குகள்; (iv) நாணய மாற்று பாங்குகள்.

வங்காளம், பம்பாய், சென்னை இவைகளின் மாகாண பாங்குகள், கிழக்கிந்தியக் கம்பெனியார் காலத்தில் தோன்றின. இவைகள் 1921 வரை (1876ஆம் ஆண்டில் நிறைவேறி, 1899, 1907 ஆண்டுகளில் திருத்தப்பெற்ற) மாகாண பாங்குச் சட்டத்தின் மேற்பார்வையில் இருந்தன. இந்தப் பாங்குகள் ஓர் அளவுக்கு அரசாங்கத்தின் பாங்குகளாகவும், பலவகைகளில் பாங்குகளின் பாங்காகவும் இருந்தன. இவைகள், அரசாங்கத்தின் இருப்புகளை மாகாணத் தலைநகரங்களில் வைத்திருத்தல், மற்ற பாங்குகளின் (நாணயமாற்று பாங்குகள் உட்பட) புழக்கத்திலில்லாத தொகைகளை வைத்திருத்தல், மற்ற பாங்குகளுக்கு நெருக்கடி காலத்தில் உதவுதல் போன்ற பணிகளைச் செய்துவந்தன. மேற்கூறிய சட்டங்கள், இப் பாங்குகள் நாணயமாற்றுச் செயல்களில் ஈடுபடுவதை அனுமதிக்கவில்லை; இலண்டனில் நிதிதிரட்டுவதை விரும்பவில்லை; மேலும் கடன் கொடுப்பதையும் கட்டுப்படுத்தின.[3] இந்த மாகாண பாங்குகள், அவைகளுக்கு அனுப்பப்பட்ட

[1] சுதேச பாங்கர்கள், ஐரோப்பியப் பத்திரம், வெளிநாட்டு உண்டியல்கள், ஸ்டெர்லிங் உண்டியல்கள் இக் கடவடிக்கைகளில் அதிகம் ஈடுபடுவதில்லை. இருந்தாலும் உண்டியல்கள்மேல் தள்ளுபடிசெய்து முன்பணம் தரவும், தங்க, வெள்ளிக்கட்டிக்கு எதிராகக் கடன் கொடுக்கவும் முன்வருகிறார்கள். ஆதலால் இவர்களுடைய தொழில் ஐரோப்பிய பாங்குத் தொழிலுடன் போட்டியிடாமல், குறைநிரப்புவதாக இருக்கிறது.

[2] தபால் நிலையச் சேமிப்புப் பாங்குகள் தபால் துறையினரால் 1870-லிருந்து வெற்றிகரமாக மேற்கொள்ளப்பெற்றன. 1900 வாக்கில் நாடுமுழுவதும் மாவட்டக் கிளைகள் திறக்கப்பெற்றன. ஏழை வகுப்பினர்களைச் சேமிக்கத் (பதுக்கிவைப்பதற்குப் பதில் முதலீடுசெய்யவும்) தூண்டுவதன்மூலம் இவைகள் மிகுந்த பயனளிக்கும் பணியைச் செய்துவந்திருக்கின்றன. கூட்டுறவு பாங்குகள் நாட்டில் நிறுவப்பெற்ற வரையில் 'எளியவரின் பாங்கு' என்ற நற்பெயரையும் பெற்றன. (G. Clark, The Post Office in India.) இந்த பாங்குகள் நல்ல வளர்ச்சியடைந்திருப்பதுடன், சிறு முதலீடு செய்பவர்களின் பாராட்டுதலையும் பெற்றிருக்கின்றன.

[3] Findlay Shirras, Indian Banking and Finance, p. 377.

சரக்குகளுக்கு எதிராக முன்பணம் கொடுப்பதின்மூலம் நேரிடையாகவும், இலேவாதேவிக்காரர்களால் கொண்டுவரப்படும் உண்டியல்களையும் உள்நாட்டு வாணிப உண்டியல்களையும் (இவைகள் 'உற்பத்தி' (produce) உண்டியல்களாகவோ அல்லது 'கடனுதவி' (finance) உண்டியல்களாகவோ இருந்தன.) கழிவு செய்வதன் மூலம் (Discounting) மறைமுகமாகவும் வாணிபத்திற்குக் கடனுதவி செய்தன.

இருப்பினும், இவைகள் உண்மையான பொருளில் அரசாங்கத்தின் பாங்குகள் ஆகமாட்டா. நிலவருவாய் மூலம் கிடைக்கும் நிதி இருப்புகளின் பெரும்பகுதியையும், அரசாங்கம் மூன்று ரிசர்வு கருவூலங்களிலும், நாடு முழுவதிலும் பரவிக்கிடந்த சுமார் முந்நூறு மாவட்டக் கருவூலங்களிலும், உப-கருவூலங்களிலும் வைத்திருந்தது; காகித நாணயத்தின் தனியுரிமையும் அரசாங்கத்திடமிருந்தது. மேலும், இந்தியா மந்திரியுடன் (Secretary of State) அரசாங்கத்திற்கிருந்த நடவடிக்கைகளின்மூலம் நாணய மாற்றத்தையும் கட்டுப்படுத்தியது.[1]

'கட்டற்ற கருவூலமுறை' (Independent Treasury System) என்றழைக்கப்பட்ட இந்த விஞ்ஞைமுறை, போர்திய பாங்கு வசதிகளின்மையால் வளர்ந்ததாகும். இந்த முறையில் ஒரு பெரிய குறைபாடு இருந்தது. பெருந்தொகைகள் உபயோகமின்றி மாவட்டக் கருவூலங்களில் பூட்டி வைக்கப்பட்டதற்குப் பதிலாக, பாங்குகளில் போடப்பட்டிருந்தால் அவ்வப்போது வாணிபத்தில் ஏற்படும் ஏற்றத்தாழ்வுகளுக்குக் கடனுதவி அளிக்கப் பயன் பட்டிருக்கும்.[2]

இந்த முறையில் உள்ள குறைபாட்டை J. M. கெயின்ஸ் அவர்கள் 1913ஆம் வருடத்திய இந்திய நிதியும், செலாவணியும் பற்றிய அறிக்கையின் 'குறிப்பாணை'யில் (Memorandum) குறிப்பிட்டார். ஒரு வலுவுள்ள 'மைய பாங்கை' (Central Bank) நிறுவி, அதற்குக் கட்டற்ற கருவூலங்களின்' பணிகளில் சிலவற்றை மாற்றிக் கொடுக்கலாம் என்று அவர் கூறினார். காகித நாணய வெளியீட்டை மேலும் அதிகமான நெகிழ்ச்சியுடையதாக்க வேண்டுமென்றும், நாணயக் கட்டுப்பாட்டை ஓர் அரசாங்க

[1] Imperial Gazetteer, vol. iv, p. 525.

[2] இந்தியாவில், செலாவணித் தேவை (demand for currency) பருவ கால ஏற்றத் தாழ்வுகளைப்பொறுத்து மாறியதால், இது ஒரு முக்கியப் பிரச்சினையாக இருந்தது. நிலவரி அதிகமாக வசூலிக்கப்படும் காலத்தில்தான் வாணிபமும் சுறுசுறுப்பாக இருக்கிறது. இதனால், 'அங்காடியில் மிக அதிகமான நிதி தேவைப்படும் நேரத்தில்தான் அரசாங்கம் அங்காடியிலிருந்து ரூ. 6 அல்லது 7 கோடியை வரிமூலம் (உடனடித் தேவைக்காக அன்று. கோடை அல்லது இலையுதிர்காலமாகிய தளர்ச்சிக் காலத்தில் செலவைச் சமாளிக்க) எடுத்துக்கொள்கிறது' (Final Report of the Royal Commission on Indian Finance and Currency, 1913, cd. 4236, p. 34.)

அலுவலகம்[1] செய்வதைவிட ஒரு பாங்கு சிறப்பாகச் செய்ய முடியும் என்றும், ஒருமைய பாங்கு, 'பாங்க் ஆப் இங்கிலாந்' (Bank of England)தைப் போல், 'பாங்குகளுக்கு பாங்காக'ச் செயலாற்றக்கூடும் என்றும், அதனுடன் கூட்டுறவு மைய பாங்குகளுக்கு வசதிகள் அளிப்பதன்மூலம், கூட்டுறவு இயக்கத் திற்கும், எதிர்காலத்தில் நிறுவப்படும் தொழில் பாங்குகளுக்கு வசதியளிப்பதன்மூலம் தொழில் வளர்ச்சிக்கும் மைய பாங்கு உதவியளிக்கக் கூடுமென்றும் அவர் தொடர்ந்து குறிப்பிட்டார். இதனுடன் கூட, நாடு முழுவதிலும் மைய பாங்கின் கிளைகள் திறக்கப்பெற்றால், (அரசாங்கத்திற்கு) பணம் செலுத்துவதற்கு ஏதுவாக இருக்கும். இலண்டனில் ஒரு கிளையுடன் கூடிய இம்பீயரில் பாங்கு ஒன்று இருந்தால், இலண்டனில் உள்ள 'ஸ்டெர்லிங்' இருப்புகளின் நடவடிக்கைகளுக்குச் சிறந்த ஏற்பாட்டைச் செய்யலாம்.

உலகப்போர் மூண்டது; எதையும் செய்ய முடியாதபடி தடுத்தது. ஆனால், 'இந்தியாவின் இம்பீரியல் பாங்கை' நிறுவுவதற்காக 1921ஆம் ஆண்டில் மூன்று மாகாண பாங்குகளும் இணைக்கப்பெற்றன. மாகாண பாங்குகளின் பணிகள் எவை என்று விளக்கும் விதிகளும், அவைகளின் பணிகளை வரையறுக்கும் விதிகளும் புதிய 'இம்பீரியல் பாங்குக்கு' மாற்றப் பெற்றன. இதனால் இம்பீரியல் பாங்கு, நாணயமாற்று பாங்குகளின் நடவடிக்கைகளில் தலையிடா வண்ணம் தடுக்கப்பெற்றது. அதனுடன் நான்கு முக்கியப் புதிய ஏற்பாடுகளும் செய்யப் பெற்றன. அவையாவன: (1) ஓர் இலண்டன் அலுவலகம் நிறுவப்பெற்றது; (2) அரசாங்கத் திடமிருந்த எல்லா பாங்குப்பணிகளும் 'இம்பீரியல் பாங்கினிடம் ஒப்புவிக்கப் பெற்றன: இந்த 'இம்பீரியல் பாங்கு' அரசாங்கக் கருவூலங்களின் இருப்புகளைப் படிப்படியாக எடுத்துக்கொள்ளும்; (3) புதிய பாங்கு, ஐந்து ஆண்டுகளுக்குள் 100 கிளைகளைத் திறக்கும் பொறுப்பேற்றுக் கொண்டது; (4) இம்பிரியல் பாங்கின் முக்கிய நடவடிக்கைகளைப் பற்றிக் கட்டளையிடும் அதிகாரம் கவர்னர் ஜெனரலுக்குக் கொடுக்கப்பெற்றது. 1925–26 வாக்கில் 100 புதியகிளைகள் திறக்கப்பெற்றதுடன், இம்பீரியல் பாங்கு மொத்தத்தில் 161 கிளைகளையும், இருபது பிரதிநிதித்துவக் கிளைகளையும் கொண்டிருந்தது.[3]

[1] நிதித்துறையில் அரசாங்கப் பொறுப்புகளும், பாங்குத்துறையிலும் செலாவணித் துறையிலும் அரசாங்கப் பணிகளும் இந்தியாவில் மிக அதிகமாக இருக்கின்றன. இத் தகைய முறை முரண்பாடானது என்பதோடு, முன்னேற்ற நாடுகளிலுள்ள வழக்கத்தை ஒட்டியதாகவுமில்லை.

[2] V. Memorandum by J. M. Keynes on 'Proposals for the Establishment of a State Bank in India' annexed to the Report of the Royal Commission on Indian Finance and Currency, §§ 8 and 9, and Mohanlal Tannan's Pamphlet, The Banking Needs of India.

[3] Moral and Material Progress of India, 1925–26, p. 228.

'இந்தியச் செலாவணி, நிதி ஆணைக் கழகம்' (Royal Commission on Indian Curency and Finance) தந்த சிபாரிசுகளின் மேல், மத்திய ரிசர்வு பாங்கு (Central Reserve Bank) ஒன்றை நிறுவ அரசாங்கம் முடிவு செய்தது. மிக்க கால தாமதத்திற்குப் பிறகு, ரிசர்வு பாங்குச் சட்டமும், இந்திய இம்பீரியல் பாங்குச் சட்டமும் 1934-ல் நிறைவேறின. இச் சட்டங்களினால் இம்பீரியல் பாங்கு, இனியும் அரசாங்க பாங்காகச் செயலாற்றுது என்பதோடு, முன்னிருந்த கட்டுப்பாடுகள் சிலவற்றிலிருந்தும் விடுவிக்கப் பெற்றது. இச் சட்டங்கள் நிறைவேறிய பிறகு, அது நாணய மாற்று நடவடிக்கைகளில் ஈடுபடலாம். இந்தியாவுக்கு வெளியில் கிளைகளையும் திறக்கலாம்.[1]

கூட்டுப் பங்கு பாங்குமுறை (Joint Stock Banking System) 19ஆம் நூற்றாண்டின் நடுவில் தொடங்கியது. ஆனால், அதனுடைய வளர்ச்சி ஒழுங்குபடுத்தப் பெறுததால், பல முரட்டுத் துணிச்சலான திட்டங்கள் உருவாயின. நீண்ட காலமாக இயங்கி வந்த பல பாங்குகளும் (ஐரோப்பிய நிருவாகத்தின் கீழிருந்தும்கூட) சில ஆண்டுகளில் மூடப்பெற்றதால், 1900ஆம் ஆண்டில் இந்தியாவிலிருந்த எல்லாக்கூட்டுப் பங்கு பாங்குகளின் செலுத்தப்பட்ட மூலதனமும் 82 இலட்ச ரூபாய்தான் இருந்தது.[2]

அக் காலத்தில் இருந்த 'சுதேசி' இயக்கத்தின் பொருளாதாரக் கொள்கைக்கு ஏற்றாற் போல, 1906ஆம் ஆண்டில் கூட்டுப் பங்கு பாங்குமுறை விரைந்து பெருக்கமடையத் தொடங்கியது. சில பாங்குகளின் நிருவாகமும் கட்டுப்பாடும் இந்தியர்களிடமும் மற்றும் சில ஐரோப்பியர்களிடமும் இருந்தன. முதல்வகையே பெரும்பான்மையாக இருந்தன.[3] இதனால் ஊக வாணிபமும் (Speculation) தேவையற்ற பெருக்கமும்விளைந்தன.[4] புதியகூட்டுப்பங்கு பாங்குகள் தங்கள் தொழிலை வழக்கமான 'நிதானமாக ஆனால், உறுதியுள்ள' முறையில் வளர்ப்பதில் திருப்தியடையாமல்

[1] ரிசர்வு பாங்கைப்பற்றிய விளக்கம் பின்னால் வருகிறது.

[2] Indian Year Book, 1914, p. 205. கூட்டுறவுப் பாங்குகளோ, தொழில் பாங்குகளோ இக்காலத்தில் இல்லை.

[3] V. Industrial Commission Report, கனம். பண்டித மதன்மோகன் மாளவியாவின் குறிப்பு, பக்கம். 336.

[4] 1900-ல் இந்தியாவின் கூட்டுப் பங்கு பாங்குகளின் (மாகாண பாங்குகளும், நாணய மாற்று பாங்குகளும் நீங்கலாக) மூலதனம் ரூ. 82 இலட்சமாகவும், இருப்புகள் ரூ. 45 இலட்சமாகவும், வைப்புகள் (Deposits) ரூ. 807 இலட்சமாகவும் இருந்தன. 1912 வாக்கில் இந்த எண்கள் முறையே ரூ. 285 இலட்சமாகவும், ரூ. 126 இலட்சமாகவும், ரூ. 2, 529 இலட்சமாகவும் உயர்ந்தன. (முன்னிருந்தது போல் மாகாண பாங்குகளும், தொழில் பாங்குகளும், அதனுடன் புதிய கூட்டுறவு பாங்குகளும் நீங்கலாக.) (Indian Year Book, 1923, p. 310).

பலதரப்பட்ட தொழில்களை (தொழில்களுக்குக் கடனுதவி அளிக்கும் பணி உட்பட) மேற்கொண்டனர். இதன் விளைவு ஒரு காலம் வரை கூட்டுப்பங்கு பாங்குகளின் விரைவான வளர்ச்சியும் அதைத் தொடர்ந்து 1913-15ஆம் ஆண்டில் அவற்றின் வீழ்ச்சியுமே யாகும். இந்த வீழ்ச்சியிலிருந்து, மீட்சிக்கான அறிகுறிகள் 1917ஆம் ஆண்டில்தான் தோன்றின. 1913-க்கும் 1917-க்கும் இடையில், இந்தியாவிலுள்ள எல்லாக் கூட்டுப்பங்கு பாங்குகளின் செலுத்தப் பெற்ற மூலதனத்தில் 34 சதவீதத்திற்கு மேலான தொகை இழக்கப்பெற்றது.[1] இந்த பாங்குகளில் பல, தொழில்துணிவுகளுக்குக் கடன் கொடுத்தன; ஆனால் திரும்பப் பெறவில்லை.[2] இதுவே, பல பாங்குகளின் தோல்விக்கும் காரணம் என்று கருதப்படுகிறது. பாங்குத் தொழிலில் 1918-க்குப் பிறகு, மறுமலர்ச்சியும் பெருக்கமும் தோன்றியதாயினும், கூட்டுப்பங்கு பாங்குகளில் பலவும் 1913ஆம் ஆண்டில் ஏற்பட்ட பேரழிவினால் தொடர்ந்து பாதிக்கப் பெற்றன.[3]

குறிப்பிட்ட துறையில் மட்டும் தொழில் செய்யும் பாங்கு முறை (Specialised Banking), இந்தியாவில் அண்மைக் காலத்தில் தான் தோன்றியிருக்கிறது. இம் முறை, கூட்டுறவு பாங்கு முறையில் மட்டுமே இயங்கி வருகிறது.[4] இது பற்றி மற்றொரு சந்தர்ப்பத்தில் நாம் முன்னமே ஆராய்ந்தோம்.[5] 1912 ஆம் ஆண்டில் 'டாடா இன்டஸ்டிரியல் பாங்க்' நிறுவியன் மூலம், 'தொழில் பாங்கு' முறைக்கு முயற்சி எடுக்கப்பெற்றது. ஆனால், இம் முயற்சி பயனளிக்கவில்லை. டாடா பாங்கு, டாடா சன்ஸ் (லிமிடெட்)என்ற நிறுவனத்துடன் தொடர்புடைய பல தொழில்களுக்கு மட்டும் நிதியுதவி அளிக்க இயங்கிவந்தது. ஆனால், போருக்குப்பின் உண்டான வாணிபமந்தம் அதை வெகுவாகப் பாதித்தது. 1923-ல் பம்பாயிலுள்ள 'சென்ட்ரல் பாங்கு ஆப்

[1] Findlay Shirras, Indian Banking and Finance, p. 365. இதில் மாகாண பாங்குகளும், நாணயமாற்று பாங்குகளும், கூட்டுறவு பாங்குகளும் அடங்கவில்லை. ஆனால், ஐரோப்பிய மற்றும் இந்திய நிருவாகத்தின் கீழிருந்தவை அடங்கியுள்ளன. ஐரோப்பிய நிருவாகத்தின்கீழுள்ள பாங்குகள், தோல்விக்கு விலக்கில்லை. தோல்வியின் விவரங்களுக்கு Proceedings of the Indian Economic Association, 1923 p. 91 et seq.-ஐப் பார்க்கவும்.

[2] Ibid., p. 98.

[3] Findlay Shirras, Indian Banking and Finance, p. 365.

[4] இந்தியாவில் நிலத்தில் முதலீடு செய்யும் பழக்கம் அதிகமிருந்தாலும், கூட்டுறவு நில அடைமான பாங்குகள் துவக்கப்படும்வரை, அதற்கான தனி நில அடைமான பாங்குகள் இல்லை. ஆனால், பல சாதாரணக் கூட்டுப்பங்கு பாங்குகளும் அடைமானத்தின் மேல் கடன் கொடுக்கின்றன.

[5] அத்தியாயம் 8-ஐப் பார்க்கவும்.

இந்தியா'வுடன் இது இணைக்கப்பெற்றது. இந்த இணைப்பால் அதன் மூலனதனத்தில் பாதியைத் தியாகம் செய்யவேண்டியிருந்தது.[1] 1917-க்குப் பிறகு, தொழிலுக்குக் கடனுதவி அளிப்பவை என்று கூறிக்கொண்டு பல பாங்குகள் தோன்றின. ஆனால், இவை அனைத்தும் வாணிபத்துறையிலும் தொழில்துறையிலும் செயற்படுகின்றன. ஆகவே, இவைகளைமற்றக்கூட்டுப் பாங்குகளிலிருந்து பிரித்துக்கூற முடியாது. இந்தக் கூட்டுப்பங்கு பாங்குகளும் பலவகையான பணிகளைச் செய்துவருகின்றன.[2] கூட்டுப் பங்கு பாங்குகளின் செலுத்தப் பெற்ற மூலதனம் சாதாரணமாகக் குறைவாக இருப்பதாலும், வைப்புகள் (Deposits) குறுகிய காலத்திற்கே கொடுக்கப் படுவதாலும், இத்தகைய பாங்குகள் தொழில் துறையையும், வாணிபத் துறையையும் ஒன்றுக இணைத்துக்கொள்வது குறிப்பாக, இந்தியாவில் அபாயமான தாகும். இந்தச் சூழ்நிலையில், குறுகிய கால வைப்புகளிலிருந்து நீண்டகாலக்கடன்களைக் கொடுப்பது பெரிய முட்டாள்தனம் என்று கூறலாம்[3]

முடிவாகப் பெரிய நாணயமாற்றுப் பாங்குகளின் இந்தியக் கிளைகளும், ஏஜென்சிகளும் இருக்கின்றன. மற்ற நாடுகளில் உள்ளதைப் போலவே, இந்தியாவிலும் ஏற்றுமதி, இறக்குமதி வர்த்தகம் செய்யும் வணிகர்கள் பெரிய வாணிப நடவடிக்கைகளை மேற்கொள்ளுகிறார்கள். ஆனால், இவ் வாணிபத்தில் இவர்களிட்ட முதல், உடனே திரும்பக் கிடைப்பதில்லை. இத்தகைய நடவடிக்கைகளை மேற்கொள்ளுவதற்கு வேண்டிய முதல் இவர்களிடம் இல்லாததால் வெளிநாட்டு வாணிபத்திற்காக இயங்கும் ஒரு தனி வகை பாங்கின் உதவியை இவர்கள் நாடுகிறார்கள். இந்தியாவில் இத்தொழில் முழுவதையும் பெரிய பிரிட்டிஷ் நாணய மாற்று பாங்குகள், வெளிநாட்டு நாணய மாற்று பாங்குகள், கலோனியல் நாணய மாற்று பாங்குகள் இவைகளின் கிளைகளே செய்து வருகின்றன. நாணய மாற்றுத் தொழிலை மேற்கொள்ளுவதற்கான பாங்குகள், 1850-59 வாக்கில் நிறுவப் பெற்றன. அதிலிருந்து, இத்தகைய பாங்குகளின் எண்ணிக்கையும்

[1] Moral and Material Progress of India, 1917–18, p. 78 and the Annual Review of the Trade of India, 1922–23.

[2] Proceedings of the Indian Economic Association, 1923, pp. 91, 96. பெரும்பாலும் எல்லாக் கூட்டுப் பங்கு பாங்குகளும், முதலீட்டுக் காரியங்களுக்குக் கடன் கொடுக்கின்றன; நிலையான முதலை (Fixed Capital) உற்பத்தி செய்கின்றன; பங்கு மாற்று நிலையத்தில் (Stock Exchange) விலையாகும் ஊகவாணிபம் செய்பவர்களுக்கு உதவியளிக்கின்றன; மேலும் தொழில் நிறுவனங்களுக்குக் கடனுதவி அளிக்கின்றன.

[3] Proceedings of the Indian Economic Association, 1923. p. 100.

நடவடிக்கைகளும் நிலையாக வளர்ச்சியடைந்துள்ளன.[1] முதல் உலகப் போர் மூண்டதிலிருந்து இவற்றில் விரைவான வளர்ச்சி இருந்திருக்கிறது.[2]

கூட்டுப் பங்கு பாங்கு முறையில் நல்ல வளர்ச்சி யிருந்தது என்று மேலே கண்டோம். அப்படியிருந்தும் கூட, பொருளாதார முன்னேற்றமுள்ள ஒரு நாட்டின் தேவைகளுக்குப் போதிய அளவில், இந்தியாவில் பாங்கு வசதிகள் இல்லை என்பதையும், நாட்டில் தொழில் வளர்ச்சியைப் பெருக்கவேண்டு மென்றால் பாங்கு வசதிகளைப் பரவலாக்கவேண்டு மென்பதையும் யாரும் மறுக்கமுடியாது. குறிப்பாக, இந்தியாவில், உண்டியல்களைக் கழிவு செய்வதற்கும் ஏற்றுக்கொள்வதற்கும் (Discounting and accepting of trade bills) வேண்டிய வசதிகள் மிகக் குறைவாக இருக்கின்றன. இதனால், வாணிப நடவடிக்கைகள் பெருக வழியில்லாமல் போகிறது. இந்திய இளைஞர்களைப் பாங்குகளில் வேலைக்கமர்த்தி, அவர்களுக்குப் பயிற்சி அளிப்பதற்காக அரசாங்கம் அண்மையில் எடுத்துள்ள நடவடிக்கைகள் சிறிதளவு நம்பிக்கையூட்டுவனவாக இருக்கின்றன.

§2. செலாவணி முறை

பொருளாதார வளர்ச்சியடைந்துள்ள ஒரு நாட்டின் செலாவணி முறை, ஒரு சிக்கலான இயந்திரம் ஒழுங்காக இயங்குதற்குத் தேவைப்படும் எண்ணெயை ஒப்பதாகும். தேவையான அளவு எண்ணெய் இடப்பட்டால் எல்லாம் ஒழுங்காக நடக்கிறது; ஆனால், எண்ணெய் போதுமான அளவு இல்லாவிட்டாலோ,

[1] V. Findlay Shirras, Indian Banking and Finance, pp. 355, 356. இன்றைய காணய மாற்று பாங்குகளின் பட்டியலில் கீழ்க்கண்டவைகள் அடங்கியுள்ளன, The Chartered Bank of India, Australia and China (இந்தியாவில் 8 கிளைகளுடன்); the National Bank of India (பதின் மூன்று கிளைகள்); the Mercantile Bank (ஏழு கிளைகள்); the Eastern Bank (மூன்று கிளைகள்); the Hong-Kong and Shanghai Banking Corporation (இரண்டு கிளைகள்); the Yokohama Specie Bank (இரு கிளைகள்); the International Banking Corporation (New York: இரு கிளைகள்); the P. & O. Banking Corporation (நான்கு கிளைகள்); the Sumitomo Bank (Japan); the National Bank of South Africa; the Imperial Bank of Persia; the Comptoir National d'Escompte de Paris; the Bank of Taiwan; the Banco Nacional Ultramarino; and Reuter's Bank.

[2] 'இந்தியாவில், போருக்கு முந்திய ஆண்டில், பன்னிரண்டு காணய மாற்று பாங்குகள் தொழில் செய்துவந்தன, 1922ஆம் ஆண்டுவாக்கில் அந்த எண்ணிக்கை பதினெட்டாக வளர்ந்தது. மொத்த முதலும், இருப்புகளும் போருக்குமுன் £3·8 கோடி இருந்தன. ஆனால், 1922ஆம் ஆண்டில் அவைகள் £ 11·2 கோடிக்கு உயர்ந்தன. செலுத்தப்பெற்ற மூலதனமும், ஒதுக்கப்பெற்ற முதலும் 5 இலட்சத்திற்கும் மேலாகக் கொண்ட இந்தியக் கூட்டுப் பங்கு பாங்குகளின் எண்ணிக்கை 1913ஆம் ஆண்டில் 18லிருந்து 1921ஆம் ஆண்டில் 27ஆக உயர்ந்தது. சிறிய பாங்குகளின் எண்ணிக்கை 1913ஆம் ஆண்டில் 23லிருந்து தற்பொழுது 41ஆக உயர்ந்துள்ளது.' (Moral and Material Progress of India, 1924-25, p. 145)

மிகுதியாக விடப்பட்டாலோ அல்லது எண்ணெயின் தரம் குறைவானதாக இருந்தாலோ, இயந்திரம் உடனே தவறுக இயங்க ஆரம்பிக்கிறது; அல்லது முழுவதும் வேலை செய்யாமலும் நின்று விடலாம்.

அண்மைக் காலத்துப் பல சந்தர்ப்பங்களிலும், இந்தியச் செலாவணிமுறை திறனற்றதென்று நிரூபித்திருக்கிறது. இதனால், அரசாங்கத்திற்கும் வாணிப வகுப்பினருக்கும், பொதுமக்களுக்கும் பெருத்தநட்டத்தை உண்டாக்கியிருக்கிறது. இந்தக் கோளாற்றின் உண்மையான காரணத்தையோ அல்லது அதைப்போக்க வழியையோ கண்டுபிடிப்பது அவ்வளவு எளிதன்று. ஆதலால், இவைகள் பற்றிப் பல கருத்து வேறுபாடுகள் எழலாயின. செலாவணி முறை இயற்கையான ஓர் அடிப்படையில் அமையாது. அரசாங்கத்தின் கொள்கையையும் கட்டுப்பாட்டையும் சார்ந்திருந்ததாலும் செலாவணிப் பிரச்சினைகள் செலாவணியின் உள்நாட்டு மதிப்பிற்கும் வெளிநாட்டு மதிப்பிற்கும் உள்ள தொடர்பைப் பாதிப்பதாலும் வாக்குவாதங்கள் பலமாக இருந்தன. இதனால், அரசாங்கம் கையாண்ட கொள்கை, உள்நாட்டு நலன்களை விட, வெளிநாட்டு நலன்களையே குறியாகக் கொண்டுள்ளது என்னும் குற்றச்சாட்டுக்கு அன்னிய ஆட்சியை ஆளாக்கியது.

செலாவணி முறையில் திருப்திகரமில்லாத குறிப்பான காலங்கள் (அ) 19ஆம் நூற்றாண்டின் கடைசி இருபத்தைந்து ஆண்டுகள்: அப்பொழுது ரூபாயின் பொன் மதிப்பு (Gold value of the rupee)படிப்படியாகத்தொடர்ந்து இறங்கியதால் அரசாங்க நிதிநிலைமையில் ஒரு பெரிய நெருக்கடி உண்டாயிற்று; (ஆ) போரின் கடைசி இரண்டு ஆண்டுகள்: அப்பொழுது உலகெங்கும் ஏற்பட்ட பொன்பற்றாக் குறையாலும், விலைகளிலும் நாணயமாற்றத்திலும் உண்டான மாறுதல்களாலும், இந்தியச் செலாவணி முறையும், நாணயமாற்று முறையும் உருக்குலைந்தன; (இ) போருக்குப் பின் 1925ஆம் ஆண்டுவரை: அப்பொழுது விலையிலும், நாணயமாற்றத்திலு மிருந்த ஏற்றத் தாழ்வுகள், பரவலான வாணிப இடையூறுகளை (நட்டத்தையும்) உண்டாக்கின. கையாளப் பெற்ற கொள்கை அரசாங்கத்திற்கு நேரிடையான பொருள் நட்டத்தை உண்டாக்கியதோடு அரசாங்கம் கையாண்ட கொள்கை பிரிட்டனுடைய நலன்களைப் பாதுகாப்பதற்காகச் செய்த யுக்தி என்னும் குற்றச்சாட்டு எழவும் காரணமாயிருந்தது. இங்கிலாந்து பொன் திட்டத்தி (Gold Standard) லிருந்து விலகியபோது, ரூபாயை ஸ்டெர்லிங்

நாணயத்துடன் இணைப்பதற்குச் செய்த முடிவு, நாட்டில் அதிருப்தியையும் கருத்து வேறுபாட்டையும் உண்டாக்கின.

செலாவணி பற்றிய சிக்கல்களையும் கருத்து வேறுபாடுகளையும் புரிந்து கொள்வதற்கு, 19ஆம் நூற்றாண்டில் நடைமுறையிலிருந்த செலாவணி முறை பற்றிய சுருக்கமான விளக்கம் அவசியமாகிறது. அதற்குப் பின்னர் நடந்த நிகழ்ச்சிகளைத் தொடர்ந்து ஆராய்ந்தால், செலாவணி முறையிலிருந்த குறைபாடுகள் எந்த அளவுக்குக்கையாளப்பெற்றமுறையின் இயல்பால் உண்டானவை, எந்த அளவுக்கு அவைகள் உலகெங்கும் நிலவிய குழப்பத்தின் தவிர்க்க முடியாத விளைவுகள் என்பன போன்ற தகவல்களை அறியலாம்.

கிழக்கிந்தியக் கம்பெனியாரின் ஆட்சியின் ஆரம்பகாலத்தில் நடைமுறையிலிருந்த செலாவணி முறையில் எந்தவித மாறுதலும் ஏற்படவில்லை. பலவகைப்பட்ட வெள்ளி ரூபாய்களும், பொன் நாணயங்களும், மற்ற நாணயங்களும் பல நகரங்களிலிருந்த தனித்தனியான நாணயச் சாலைகளால் (இவைகளில் சில கிழக்கிந்தியக் கம்பெனியாருக்குச் சொந்தமானவை) வினியோகிக்கப் பெற்றுப் புழக்கத்திலிருந்துவந்தன. 1835-ல் தான் பிரிட்டிஷ் இந்தியா முழுவதற்கும் பொதுவாக, ஒரு ரூபாய், அரை ரூபாய் நாணயங்கள் 'சட்டச் செலாவணி' (Legal tender) ஆக்கப்பெற்றன. பொன் மொகர்களும் (Mohurs), பல செப்புக் காசுகளும் தொடர்ந்து அச்சடிக்கப் பெற்றுப் புழக்கத்திலிருந்து வந்தன. ஆனால், இவைகள் 'சட்டச் செலாணி' யாகா.[1] கல்கத்தா, பம்பாய் நகர நாணயச்சாலைகளில் கொடுக்கப்பெற்ற வெள்ளிக் கட்டிகள் எல்லையில்லாமல் ரூபாய் நாணயங்களாக அச்சடித்துக் கொடுக்கப் பெற்றன. 1873ஆம் ஆண்டுக்குப் பிறகு 'பொன்னின் வெள்ளி மதிப்பு' தொடர்ச்சியாகவும், விரைவாகவும் இறங்கியதால் ரூபாய் நாணயங்கள் எல்லை மீறி வெளியிடப்பெற்றன. இதனால், இந்திய நிதிமுறையும் இந்திய ஆங்கிலேய வாணிபத் தொடர்பும்[2] நிதித் தொடர்பும் பாதிக்கப் பெற்றன. முடிவில், அரசாங்கம் அழிவைத் தவிர்ப்பதற்கான ஒரே வழி 'பொன் திட்டத்தைக்' கையாளுவதுதான் என்று உணர்ந்து, 'ஹெர்ஷல் குழுவின்' (Herschell committee)

[1] வெள்ளி ரூபாயுடன், பொன் சவரன்களையும் சட்டச் செலாவணியாக்குவதற்கு 1868ஆம் ஆண்டில் அரசாங்கம் எடுத்துக்கொண்ட முயற்சி, அப்பொழுது வெள்ளியின் மதிப்பு இறங்கியதால், தோல்வியடைந்தது. ஆகையால் 1970ஆம் ஆண்டில், வெள்ளி ரூபாய் மட்டுமே சட்டச் செலாவணியாக இருக்கும் என்று, அது ஒரு சட்டத்தை நிறைவேற்றியது.

[2] அத்தியாயம் 11-ஐப் பார்க்கவும்.

சிபாரிசின் மேல், இந்திய நாணயச் சாலைகளில் வெள்ளியை நாணயமாக அடித்துக் கொடுக்கும் வழக்கத்தை 1893ஆம் ஆண்டில் நிறுத்தியது. 'ரூபாயின் பொன் மதிப்பு' 1 ரூபாய்க்கு 1 ஷில்லிங் 4 பென்சுகள் என்ற வீதத்திற்கு உயரும்வரை (வெள்ளிக் கட்டியின் மதிப்புத் தொடர்ந்து குறைந்தாலும் கூட) புழக்கத்திலிருக்கும் ரூபாய் நாணயங்களின் எண்ணிக்கையைப் படிப்படியாகக் குறைத்து, அதன்பிறகு, பொன் நாணயங்களைப் புழக்கத்திற்குக் கொண்டுவந்து, அதன் மூலம் செலாவணியின் அடிப்படையை வெள்ளியிலிருந்து தங்கத்திற்கு மாற்றுவதுதான் இந்த நடவடிக்கையின் நோக்கமாகும். தற்காலிகமாக ரூபாய் நாணயம் மட்டுமே பூரண சட்டச் செலாவணியாக இருந்தது. ஆனால் அரசாங்கத்திற்குச் செலுத்தப்படவேண்டிய தொகைகளைச் 'சவரன்கள்' அல்லது அரைச் சவரன்கள் மூலமாகச் (1ரூ = 1ஷி 4பெ என்ற வீதத்தில்) செலுத்துவதற்கும், பொன் நாணயத்தையும் பொன் கட்டியையும் நாணயச்சாலைகளுக்குக் கொண்டுவந்து, அதற்குப் பதிலாக மேற்கண்ட வீதத்தில் ரூபாய்களாக மாற்றிக் கொள்வதற்கும்[1] அனுமதியளிக்கப் பெற்றது. இவ்வாறு, பொன் நாணயங்களுக்கும், பொன் கட்டிகளுக்கும் பதிலாக ரூபாய்களைப் பெறலாம். ஆனால், ரூபாய்களுக்குப் பதிலாகப் பொன் சவரன்களாகவோ அல்லது இலண்டனில் 'ஸ்டெர்லிங்' நாணயத்தில் கொடுக்கப்படவேண்டிய உண்டியல்களாகவோ மாற்றிக் கொடுக்கும் கொள்கை[2] நடைமுறைப் பழக்கத்தில் கையாளப் பெற்று வந்தாலும் ரூபாய்களுக்குப் பதிலாகப் பொன்னைக் கொடுக்க வேண்டிய நிர்ப்பந்தம் இல்லை.

ரூபாயின் பொன் மதிப்பு இறங்குவதைத் தடுப்பதற்கு இந்த நடவடிக்கைகள் பயனுள்ளனவாயிருந்தன. 1898ஆம் ஆண்டு வாக்கில் நாணயமாற்று வீதம், செலாவணி மாற்று மதிப்பின் வீதத்திற்கு (அதாவது 1 ரூ. = 1 ஷி. 4 பெ.) உயர்ந்தது. இருந்த நாணய மாற்று வீதத்தை இந்த நிலையிலேயே எப்படி நிலவச் செய்வது என்பதையும், 'பொன் திட்டத்தை' எப்படி மேற்கொள்ளுவது என்பதையும் 1898ஆம் ஆண்டின் 'ஃபௌலர் கமிட்டி' (Fowler Committee) ஆராய்ந்தது. சவரன்களை,(அரைச் சவரன்களையும்) சட்டச் செலாவணியாக்க வேண்டுமென்றும் இந்தியாவில் பொன்னைக் கொடுக்கும் எவருக்கும் 1ரூ. = 1ஷி. 4பெ என்ற வீதத்தில் ரூபாய்களைப் பெறும் உரிமையைக் கொடுக்க

[1] இவற்றுள் இரண்டாவது சலுகை ஓர் அரசாங்க அறிவிப்பின் மூலம் (சட்டத்தின் மூலம் இல்லை) தெரிவிக்கப்பெற்றது. (J. M. Keynes, Indian Currency and Finance, p.6)

[2] Ibid. இந்தப் பழக்கம் போர் மூண்டதும் நிறுத்திவைக்கப்பெற்றது. (v H. S. Jevons, The Future of Exchange, p. 9.)

வேண்டுமென்றும், பொன் செலாவணி (Gold currency) ஒன்றைப் புதிதாக மேற்கொள்ள வேண்டும் என்றும், பொன் காப்பு (Gold reserve) ஒன்றைத் தனியாக நிறுவ வேண்டுமென்றும் அக் குழு சிபாரிசு செய்தது. அதன்படி 1899ஆம் ஆண்டில் சவரன்களும், அரைச் சவரன்களும் ரூபாயுடன்கூடச் சமமாக (1 ரூ = 1ஷி 4 பெ. என்ற வீதத்தில்) சட்டச் செலாவணியாக ஆக்கப் பெற்றன.[1] இக் காலத்தில் 'ரூபாய் ஓர் அடையாள நாணயமாக' (Token coin) மாறியது. நாணயச்சாலையில் நாணயம் அச்சடித்துக்கொடுப்பது நின்றுவிட்டதால், ரூபாய் நாணயத்தின் மதிப்பு, அதனுள்ளிருந்த வெள்ளியின் மதிப்பைவிட மிக உயர்வாக இருந்தது. ரூபாயைப் பெற்றுக்கொண்டு அதற்குப் பதிலாகப் பொன்னைக் கொடுக்கும் பழக்கத்தை அரசாங்கம் இன்னும் மேற்கொள்ளாததால் 'பொன் திட்டத்'திற்கான இறுதி நடவடிக்கை எடுக்கப் பெறவில்லை. ரூபாய்களுக்குப் பதில் பொன்னைக் கொடுக்கும் பழக்கம் இல்லாதது, இந்திய முறையின் தனித் தன்மையான இயல்பாகும்.[2] அதிகப்படியான ரூபாய் நாயணங்கள் அச்சிடுவதைத் தவிர்த்து, படிப்படியாகப் பொன் திட்டத்தை மேற்கொள்ளும் நோக்கத்துடன் 1900 ஆம் ஆண்டில் அரசாங்கம் பொன் நாணயங்களைப் புழக்கத்திற்குக் கொண்டுவர ஒரு முயற்சி எடுத்தது. ஆனால், இம் முயற்சி முற்றிலும் தோல்வியடைந்தது. பொன்னில் அதிகமாகத் தள்ளுபடி செய்யவேண்டியிருந்தது. வெள்ளிக்குத் தேவை அதிகமாக இருந்ததால் அரசாங்கக் கருவூலங்களின் காப்புகள் தீர்ந்தன.[3] இதனால், 'நாட்டிலுள்ள செலாவணியின் அளவையும் தன்மையையும் வாணிபச் சூழ்நிலைக்குத் தகுந்தாற்போல, ஏற்றுமதியும் இறக்குமதியும் ஆகும் பொன்னின் அளவுக்கு ஏற்றாற்போல விட்டுவிட்டுவது'[4]

[1] 1 ரூபாய்க்கு 1 ஷி. 4 பெ. என்ற வீதத்தில் சவரன்களையும் அரைச்சவரன்களையும் சட்டச் செலாவணியாக ஆக்கிய 1899ஆம் ஆண்டுச் சட்டம்தான், உண்மையில் நாணய மாற்று வீதத்தை நிர்ணயிக்கக்கூடிய சட்டப்பூர்வமான விதியாகும். அதே சமயத்தில் சவரன்களையும், சுத்தம் செய்யப்பெற்ற பவுன்களையும் பம்பாய் நாணயச்சாலையில் கொடுத்து 1 ரூ. = 1 ஷி. 4 பெ. என்ற விகிதத்தில் ரூபாய் நாணயங்களாகவோ அல்லது செலாவணித் தாள்களாகவோ பெறலாம் என்று அரசாங்கம் ஓர் அறிவிப்பை வெளியிட்டது. இந்த அறிவிப்பை 1906ஆம் ஆண்டில் ரத்து செய்து, அதற்குப்பதிலாக பொன் சவரன்களைக் கொடுத்தால்தான் (முன்பிருந்ததுபோல் சவரன்களுக்கும் பவுன் கட்டிகளுக்கும் அல்ல) ரூபாய்களைப் பெறலாம் என்று அறிவித்தது. 1913ஆம் ஆண்டின் 'செலாவணி ஆணைக் கழகம்' (Currency Commission) முன்பிருந்த அறிவிப்பு மறுபடியும் நடைமுறைக்கு வரவேண்டும் என்று கருதியது. ஆனால் இது நடைபெறவில்லை.

[2] இருப்பினும், மேலே விளக்கப்பெற்றதுபோல, அரசாங்கம் தானாக முன்வந்து (சட்டப்பூர்வமாக இல்லாவிட்டாலும்) ரூபாய்களுக்குப் பதிலாகப் பொன்னைக்கொடுத்து வந்ததால், பொன்னையும் ரூபாயையும் ஒன்றை மற்றொன்றாக மாற்றுவதற்கு வழி இருந்தது.

[3] பல மாவட்டங்களிலும், செலாவணித்தாள்களுக்குப் பதிலாக ரூபாய் நாணயத்தை அரசாங்கத்தால் கொடுக்கமுடியவில்லை. அரசாங்கம், சவரன்கள், செலாவணித்தாள்கள் இரண்டின்மேலும் தள்ளுபடி செய்யவேண்டியிருந்தது.

[4] Imperial Gazetteer, vol. iv, p. 518. V. Chamberlain Commission Report, 1913, p. 9.

என்று அரசாங்கம் முடிவு செய்தது. ஆகவே, அரசாங்கம் 1900ஆம் ஆண்டின் தொடக்கத்தில், ரூபாய் நாணயத்தை அச்சடித்து வெளியிடுவதை மறுபடியும் மேற்கொண்டது.

இருபதாம் நூற்றாண்டில் தொடக்ககாலத்தில் இந்தத் திட்டம் நல்லமுறையில் வேலை செய்தது. ரூபாயின் மதிப்பு (நாணயமாற்று வீதமும்) செலாவணி மாற்று மதிப்பிலிருந்து அவ்வப்போது மிகக்குறைவாகவே மாறியது.[1] நடைமுறையில், காகித நாயணய வைப்புகளில் உண்டாகும் ஏற்ற இறக்கங்களுக்குத் தகுந்தபடி புழக்கத்திலிருந்த ரூபாய் நாணயத்தின் எண்ணிக்கையை அரசாங்கம் அவ்வப்போது மாற்றியது. ரூபாய் நாணயத்திற்கும் காகித நாணயத்திற்கும் உள்ள வீதத்தில் ஏதாவது மாற்றம் இருந்தால் ரூபாய்களைப் புழக்கத்திலிருந்து குறைப்பதன் மூலமாகவோ, புதிய ரூபாய் நாணயங்களை வெளியிடுவதன் மூலமாகவோ, இந்த வீதம் நிலையாக்கப் பெற்றது. தேவைக்குத்தகுந்தபடி கவுன்சில் உண்டியல்களை விற்பனை செய்வதன் மூலம், செலாவணி முறையின் நிலைப்பாடும் கைவரப் பெற்றது.

ஆகவே, ரூபாயின் பொன்மதிப்பில் பழங்காலத்திலிருந்த பெருவீழ்ச்சி 20ஆம் நூற்றாண்டின் தொடக்க காலத்தில் தடுக்கப் பெற்றது. அதனுடன், சாதாரண காலத்தில் நாணய மாற்று வீதத்தை ஒரு குறிப்பிட்ட எல்லைக்கோட்டுக்குள் நிலவச் செய்வதற்கான புதிய முறையும் கண்டுபிடிக்கப் பெற்றது.

[1] Moral and Material Progress of India, 1911–12, p. 165.

		சராசரி நாணயமாற்று வீதம் ரூபாய்க்குப் பென்சுகள்.
1862—63	முடியப் பத்தாண்டுகள்	23·920
1872—73	,,	22·754
1882—83	,,	19·525
1892—93	,,	14·984
1894—95	ஆம் ஆண்டு	13·100
1896—97	,,	14·454
1898—99	,,	15·979
1899—1900	,,	16·068
1900—1	,,	15·973
1901—2	,,	15·980

1902—3லிருந்து 1911–12வரை சராசரி வீதம் 16·002-லிருந்து 16·930-க்குள் இருந்தது.

1861ஆம் ஆண்டிலிருந்து, உலோக நாணயங்களுடன் கூட காகிதச் செலாவணியையும் அரசாங்கம் வெளியிட்டது. இந்த ஆண்டிலிருந்து கல்கத்தா, பம்பாய், சென்னை இரங்கூன் இந்த நகரங்களிலிருந்த தலைமைக் காரியாலயங்களிலிருந்தும், மற்றும் சில இடங்களிலிருந்தும்[1] அரசாங்கம் காகிதச் செலாவணியை வெளியிட்டது. இச் செலாவணிகள் அந்தந்த மாகாண எல்லைக்குள் தான் சட்டச் செலாவணியாக இருந்தன; ஆனால், நடைமுறையில் இந்தியா முழுவதிலும் இவைகளை நாணயங்களுக்கு மாற்ற முடிந்தது.[2]

இந்தியா முழுவதற்கும், காகிதச் செலாவணியை அரசாங்கம் நடைமுறைக்குக்கொண்டு வருவதற்காக 1903ஆம் ஆண்டில் ஐந்து ரூபாய்க் காகிதச்செலாவணியை பிரிட்டிஷ் இந்தியா முழுவதற் சட்டச் செலாவணியாக ஆக்கியது.[3] இச் செலாவணிகளின் மொத்தமதிப்பிற்கு எதிராகக் காகிதச் செலாவணிக்காப்பு என்று அழைக்கப்பெற்றகாப்புநிதி ஒன்றை நிறுவியது. இக்காப்பு நிதியின் ஒருபகுதி பிரிட்டிஷ் அரசாங்கத்தின் பத்திரங்களாகவும் இந்திய அரசாங்கப் பத்திரங்களாகவும், மற்றொரு பகுதி பொன், வெள்ளி நாணயங்களாகவும் பொன் வெள்ளிக் கட்டிகளாகவும் இருந்தன.[4]

உள்ளுறு மதிப்பை (Intrinsic value) விட அதிக மதிப்புடன் ரூபாய் நாணயம் ஓர் அடையாள நாணயமாக மாறியதற்குப் பிறகு, நாணயமடிப்பதின் மூலம் கிடைக்கும் இலாபத்தை ஒரு தனிக்காப்பாக ஒதுக்கி, அதை ஸ்டெர்லிங் பத்திரங்களாக

[1] அலகாபாத், லாகூர், கள்ளிக்கோட்டை, கராச்சி போன்ற இடங்கள். (Moral and Material Progress of India, 1911–12, p. 167).

[2] Imperial Gazetteer, vol. iv, p. 522.

[3] 1910ஆம் ஆண்டில் நிறைவேறிய 'இந்தியக் காகிதச் செலாவணிச் சட்டம்' (II), இந்த முறையைத் திருத்தியமைத்து, 10 ரூ, 50 ரூ, செலாவணிகளையும் இந்தியா முழுவதற்கும் சட்டச் செலாவணிகளாக ஆக்கியது. 1911ஆம் அண்டில் 100 ரூ. செலாவணியும் இந்தத் தகுதியைப்பெற்றது. (Moral and Material Progress of India, 1911–12, p. 868).

[4] 1861ஆம், ஆண்டில் 'நம்பிக்கை வெளியீட்டின்' (fiduciary issue) தொகை அதாவது அரசாங்கப் பத்திரங்களுக்கு எதிராக வெளியிடக்கூடிய செலாவணித் தொகை ரூ. 4 கோடிக்கு மேற்படக் கூடாது என்று நிர்ணயிக்கப் பெற்றது. ஆனால், இதன் மட்டம் 1871, 1890, 1896, 1905 ஆண்டுகளில் படிப்படியாக உயர்த்தப்பெற்றது. 1905ஆம் ஆண்டில் இத்தொகை ரூ. 12 கோடியாக இருந்தது (இதில் பிரிட்டிஷ் அரசாங்கத்தின் பத்திரங்கள் ரூ. 2 கோடி வரை இருக்கலாம்). 1911ஆம் ஆண்டில் இத் தொகை மறுபடியும் ரூ, 14 கோடிக்கு உயர்த்தப்பெற்றது (இதில் ரூ, 4 கோடி பிரிட்டிஷ் அரசாங்கத்தின் பத்திரங்களாக இருக்கலாம்). காகிதச் செலாவணிக் காப்பில், நம்பிக்கை வெளியீட்டினஅளவு இவ்வாறு உயர்ந்தாலும், மொத்தக் காப்பு நிதியில், முதலீடு செய்யப்பெற்ற தொகையின் வீதம் 1871–72ல் 44·9 சத வீதத்திலிருந்து, 1911–12ஆம் ஆண்டில் 28·8 சத வீதத்திற்குக் குறைந்தது. புழக்கத்திலிருந்த காகிதச் செலாவணி விரைவில் அதிகரித்ததே இதற்குக் காரணமாகும். (v. H. L. Chablani, Indian Currency and Exchange p, 19).

இலண்டனில் வைத்திருப்பது என்று அரசாங்கம் முடிவுசெய்தது.[1] இப் பத்திரங்களின் மூலம் கிடைக்கும் வட்டியைக் காப்பு நிதியுடன் சேர்க்க வேண்டும். இப் புதிய காப்பு, முதலில் 'பொன் காப்பு' (Gold Reserve) என்றழைக்கப்பெற்று, முழுவதும் இங்கிலாந்திலேயே வைக்கப்பட்டிருந்தது, ஆனால், 1906ஆம் ஆண்டிற்குப்பிறகு அது பொன் திட்டக் காப்பு (Gold Standard Reserve) என்றழைக்கப்பட்டு, அக் காப்பில் ஒரு பகுதி இந்தியாவிலும் ஒரு பகுதி இங்கிலாந்திலும் வைக்கப்பட்டிருந்தது.[2] இத் திட்டம், கவுன்சில் உண்டியல்களை வாங்குவதற்கு, இங்கிலாந்திலும் இந்தியாவிலும் ரொக்கத்தைக் கொடுக்கிறது. இதனால், ரூபாய், ஸ்டெர்லிங் இந்த நாணயங்களின் மாற்று வீதத்தை நிலைப்படுத்த உதவுகிறது.

அகச் செல்லுகளினால் ஏற்படும் கடன்களை இந்தியா அடைப்பதற்கு ஏதுவாக இருக்கும் என்பதற்காக, 1904ஆம் ஆண்டு வரை இந்திய மந்திரியால் கவுன்சில் உண்டியல்கள் இலண்டனில் விற்கப்பெற்றன. ஆண்டாண்டுக்கு இந்தியாவுக்குத் தேவைப்படும் அளவுக்குத் தகுந்தாற்போலக் கவுன்சில்உண்டியல்கள் விற்கப் பெற்றன.[3] அந்த ஆண்டுக்குப் பிறகு விற்பனைக்கு வந்த கவுன்சில் உண்டியல்களின் அளவு, இந்தியாவால் அகச் செல்லுகள் செய்வதற்குத் தேவைப்பட்ட தொகைக்கு மட்டும் குறைக்கப்படவில்லை. ஆனால், இவ் விற்பனை, 'பொன் பரிவர்த்தனைத் திட்டத்தை'[4] (Gold Exchange Standard) நிருவகிப்பதற்குத்

[1] அரசாங்கத்திற்கு, இந்தியாவில் பொன் தேவைப் படவில்லை; ஆனால், ரூபாய் நாணயத்தை அச்சிடுவதற்கான வெள்ளியை வாங்குவதற்கும், அகச் செல்லுகள் (Home charges) செய்வதற்கும் இங்கிலாந்தில் தேவைப்பட்டது. காப்பைப் பத்திரங்களின் உருவத்தில் வைத்திருக்கவேண்டும் என்று விரும்பியதின் நோக்கம், அக் காப்பு இந்தியாவில் ஒரு பயனில் சுமையாக இருப்பதைத் தடுப்பதற்காகத்தான்.

[2] இந்தியாவில் வைக்கப்பட்டிருந்த காப்பில் ஒரு பகுதி வெள்ளியாக இருந்தது. ஆகையால், நெருக்கடி காலத்தில் உதவக்கூடிய பொன் சேமிப்பை வைத்திருக்க இது உதவவில்லை என்பது தெளிவானதே. 1907ஆம் ஆண்டில், நாணயமடிப்பதன் மூலம் கிடைக்கும் இலாபத்தில் பாதியைக் காப்பிலிருந்து நீக்கி, இரயில்வேக்களில் அபிவிருத்தி செய்வதற்குப் பயன்படுத்த வேண்டும் என்று கட்டளையிடப்பெற்றது. ஆனால் காப்பு நிதியில் தேவையான வளர்ச்சியில்லாததால், இக் கொள்கை 1912ஆம் ஆண்டில் கைவிடப்பெற்றது.

[3] உண்மையில், அகச் செல்லுகள் செய்வதற்கு இந்தியாவுக்கு ஆண்டாண்டுக்குத் தேவைப்பட்ட ஸ்டெர்லிங் தொகை, அந்த ஆண்டில் இங்கிலாந்திலிருந்து இந்தியாவுக்குக் கடனாக வந்த மூலதனத் தொகையின் அளவால் குறைந்தது.

[4] இந்தியா, கவுன்சில் உண்டியல்களை 1ரூ = 1ஷி 4½ பெ. என்ற வீதத்தில் எல்லையின்றி விற்பதற்குத் தன்னுடைய ஒப்புதலைக் குறிப்பிடும் அறிவிப்பு ஒன்றை இந்தியா மந்திரி 1904ஆம் ஆண்டில் வெளியிட்டார். (J. M. Keynes, Indian Currency and Finance, p. 106).

தேவையான அமைப்பின் ஒரு முக்கிய அங்கமாக மாறிவிட்டது. அதாவது, இந்தியாவில் செலாவணிக்குத் தற்காலிகமாகத் தேவை அதிகரித்து, அதன் அறிகுறியாக ரூபாயின் ஸ்டெர்லிங் மதிப்பு உயரும் பொழுது, ரூபாய் நாணயங்களை அதிகரிப்ப தற்குப் பதிலாக (இவ்விதம் அதிகரிப்பது நீண்டகால அளவில் விரும்பத்தகாதது என்பதுடன் ரூபாய் நாணயத்தையும் பெரு மிதமாக்கும்) இலண்டனில் கவுன்சில் உண்டியல்கள் விற்கப்பட்டு, இந்தியாவில் அளிக்கப்படுகின்றன. இதனால், அரசாங்கக் காப்பு களிடமிருந்து ரூபாய்கள் புழக்கத்திற்கு வருகின்றன. இதற்கு மாறாக, ரூபாயின் மதிப்பு, செலாவணி மாற்றுமதிப்பிற்குக் குறைந்தால், அரசாங்கம், கவுன்சில்உண்டியல்களை வெளியிடு வதை நிறுத்தி, வரிகளாகச் செலுத்தப்பெற்ற ரூபாய்களை அரசாங்கக் கருவூலங்களில் சேரும்படி விட்டுவிடும்; அல்லது, எதிர்க்கவுன்சில் உண்டியல்களை கல்கத்தாவில் விற்பதன்மூலம் புழக்கத்திலுள்ள ரூபாய்களைக் குறைக்கும்.[1]

பாதக வாணிபக் கொடுப்பல்நிலை காரணமாக, ரூபாயின் நாணய மாற்று மதிப்பு வீழ்ச்சியடைய நேரிட்டால், மேற்கூறிய முறையின்படி இந்தியர் மந்திரி, இங்கிலாந்தில் எழும் செலவு களைச் சமாளிப்பதற்குப் பொன் திட்ட நிதியிலிருந்து தேவையான தொகையைப் பெறமுடியும். கவுன்சில் உண்டியல்களை விற்றால், இந்தியாவில், ரூபாய்களின் வெளியீடு அதிகரிக்குமாதலால், பொன் திட்டக் காப்புநிதி இந்த இக்கட்டைத் தவிர்க்கிறது. இவ்வாறே இந்திய அரசாங்கம், இந்தியா மந்திரிக்குப் பொன் உண்டியல்களை (Gold Bills) விற்பதன் மூலமாகவும், அவ் வுண்டி யல்களைத் திரும்பப் பெறும்பொழுது, புழக்கத்திலிருக்கும் ரூபாய் களைக் குறைப்பதன் மூலமாகவும் ரூபாயின் நாணய மாற்று மதிப்பில் அதிக ஏற்ற இறக்கம் இல்லாமல் செய்யமுடிந்தது.

போருக்கு முந்திய காலத்தில் இந்தச் சபையைத் தடங்கு லின்றிச் செயலாக்குவதற்கு ஒரேவொரு முறைதான் முயற்சி நடந்தது. இம் முயற்சியின்மூலம், நிருவாகச் செயல்முறையில் குறையிருக்கலாமே தவிர, திட்ட அமைப்பில் குறையெதுவு மில்லை என்பது தெரியவந்தது. ஐக்கிய அமெரிக்காவின் நிதி முறை 1907ஆம் ஆண்டில் சீர்குலைவுக்குள்ளாகியதால், பெரு நெருக்கடி எழுந்தது. நெருக்கடியின் விளைவால் இந்திய

1 'பொன் திட்டக்காப்பின் நிருவாகம், சட்டத்தின் மூலமாகவோ அல்லது அரசாங்க அறிவிப்பின் மூலமாகவோ கடைபெறவில்லை; நிருவாகப் பழக்கத்தை ஒட்டியே நடந்து வருகிறது. கவுன்சில் உண்டியல்களை இந்தியாவில் விற்பதும், ஸ்டெர்லிங் உண்டியல் களை இலண்டனில் விற்பதும் (அதாவது எதிர்க் கவுன்சில் உண்டியல்கள்)அறிவிப்புகளின் மூலமாகவே நடந்துவருகின்றன. இவ்விற்பனையை அப்பொழுது நிருவாகத் துறையின் விருப்பப்படி மாற்றிக் கொள்ளலாம்.' (J. M. Keynes, Indian Currency and Finance, p. 10).

உற்பத்திப் பொருள்களுக்கு இருந்த தேவை உடனடியாகக் குறைந்தது. நாட்டில் பருவமழை தவறியதாலும், நீண்டகால ஒப்பந்தங்களின்படி[1] இறக்குமதிப் பண்டங்கள் வந்திறங்கியதாலும், இருந்த நிலைமை மேலும் மோசமடைந்தது. எனவே, இந்தியாவின் 'வாணிபக் கொடுப்பல் நிலை' பாதகமாக மாறியது. ரூபாய்க்கு இருந்த தேவை விரைவில் குறைந்தது; கவுன்சில் உண்டியல்களை விற்பனை செய்ய முடியாத நிலையேற்பட்டது. இலண்டனில் பொன்னுக்கு எழுந்த தேவையை, இந்தியா மந்திரியால் சமாளிக்க முடியவில்லை. இத்தகைய சூழ்நிலையில், தேவையான தொகை பொன் திட்டக் காப்பு நிதியிலிருந்து கிடைக்கும் என்பது சாதாரணத் தத்துவம். ஆனால், காப்பு நிதியின் மூலதனங்கள் ரொக்கநிலையில் (Liquidity அதாவது, உடனே உதவக்கூடிய நிலையில்) இல்லை. ஆகவே, இந்தியா மந்திரி வெளியிடும் பொன்னின் அளவு, 'பொன் ஏற்றுமதி எல்லையில்' (gold export point) விற்பனையாகும்[2] ஸ்டெர்லிங் உண்டியல்கள் இரண்டையும் உடனடியாகக் கட்டுப்படுத்த வேண்டியதாயிற்று. இதன் விளைவால் நாணய மாற்றம் 1 ரூ = 1 ஷில்லிங் 3 11/16 பென்சுகள் என்ற வீதத்திற்குக் குறைந்தது. இந்தியா மந்திரியின் நிதிநிலைமை தற்காலிகமாக, ஆனால் கடுமையாக ஆட்டங் கண்டது. நிதிநெருக்கடியைச் சமாளிப்பதற்கும், நாணய மாற்றம்மேலும் வீழ்ச்சியடையாமல் தடுப்பதற்கும் மேற்கண்ட நடவடிக்கைகள் உதவியாயிருந்தன. சிறிது காலத்தில், இறக்குமதி மிகுதி (Excess of imports) தடுக்கப் பெற்றதுடன், ஏற்றுமதியும் படிப்படியாக மீட்சியுற்றது. இறுதியில் பழைய நிலைமை மீட்கப்பெற்றது. ஆனால், இந்த அமைப்புத் திருப்திகரமாக இல்லை என்று உணரப்பெற்றது. குறிப்பாக, 1898ஆம் ஆண்டின் 'ஃபௌலர்குழு' (Fowler Committee) பரிந்துரைத்தவாறு ஒரு பொன் செலாவணியை நடைமுறைக்குக் கொண்டுவந்திருக்க வேண்டுமென்றும், அவ்விதம் செய்திருந்தால் வாணிபத்திலும் நாணயமாற்றத்திலும் தற்காலிகமாக எழக்கூடிய இடையூறுகளைப் பொன்னைத் தடையின்றி ஏற்றுமதி இறக்குமதி செய்வதன் மூலம் தவிர்த்திருக்கலாம் என்றும் கருதப்பெற்றன. மேலும், செலாவணி முறையை எதிர்த்தவர்கள், அகச்செல்லுகளைச் (Home Charges) செய்வதற்குத் தேவைப்பட்ட தொகைக்கு மேல் இந்தியா மந்திரி கவுன்சில் உண்டியல்களை விற்றதால் இந்தியாவுக்கு மிகவும் தேவையாயிருந்த பொன் இங்கிலாந்தி

[1] Indian Year Book, 1914, p. 340. இறக்குமதிகளில் இருந்த காலதாமதம், பின்னர் ஒருமுறை 1920–21ஆம் ஆண்டில் தொல்லை கொடுத்தது.

[2] காப்பு நிதி, ரொக்கமாக இல்லாமல் பத்திரங்களிலும் (14 மில்லியன் பவுன்கள்) குறுங்காலக் கடன்களிலும் (50,000 பவுன்கள்) வைக்கப்பெற்றிருந்தது.

லிருந்து ஏற்றுமதியாவது தடைப்பட்டது என்றும்,[1] இந்தியாவில் தேவைக்கும் மிகுதியான ரூபாய் நாணயங்களைப் புழக்கத்திற்குக் கொண்டுவர வேண்டிய கட்டாய நிலைஏற்பட்டது என்றும் குறை கூறினர். அண்மைக்காலத்தில் திரு. அம்பேத்கார் அவர்கள் இதே வாதத்தை மறுபடியும் கையாண்டிருக்கிறார்.[2] சாதாரண காலங்களில்கூட, பொன் பரிவர்த்தனைத் திட்டத்தால் ரூபாயின் மதிப்பை நிலையாகப் பேண முடியாதென்றும்,போருக்கு முந்திய காலத்தில் இருந்த விலையற்றம் ரூபாய்களை அதிகமாக வெளியிட்டதின் விளைவே என்றும் அவர் வலியுறுத்துகிறார்.

திரு. அம்பேத்கார் அவர்கள், 'நாணயமாற்று நிலைபேறுக்கத்திற்கும்' (Stabilization of exchange) 'உள்நாட்டு விலைமட்ட நிலைபேறுக்கத்திற்கும்' (Stabilization of the internal price level) உள்ள வேறுபாட்டை உணரத் தவறிவிட்டார்.[3] போருக்கு முன்பிருந்த செலாவணிக் கொள்கை, நாணயமாற்றத்தை நிலை பேறுக்க நிலை செய்வதையே குறியாகக்கொண்டிருந்தது. இக் கொள்கை அக் காலத்தில் (1907-8ஆம் ஆண்டில் ஏற்பட்ட நெருக்கடியைத் தவிர) வெற்றிகரமாகவும் இருந்தது. ரூபாயின் பொன் மதிப்பில், ஏற்ற இறக்கங்கள் மிகக் குறைந்த அளவில் தான் இருந்தன. ஆனால் உலகச் சந்தையில் பொன்னின் விலை ஏற்றமடைந்து கொண்டிருந்ததால், ரூபாயின் நிலையான நாணயமாற்றுமதிப்பு என்பது ரூபாய் விலை உயர்ந்துகொண்டு வந்ததைத்தான் குறித்தது. போக்குவரத்து சாதனங்களிலிருந்த அபிவிருத்தியினால், உண்மையில் வெளிநாடுகளிலிருந்த குறைந்த விலை மட்டத்துடன் இந்திய விலைமட்டமும் ஏறக்குறைய ஒத்துத்தானிருந்தது. ஐரோப்பாவிலும், அமெரிக்காவில் இருந்ததைவிட இந்தியாவில் விலைகள் சிறிதளவு உயர்வாக இருந்தன. ஆகவே, நாணயமாற்றம் நிலையாக இருந்தது என்று வைத்துக் கொண்டால், புழக்கத்தில் அதிகமாக இருந்த ரூபாய் நாணயங்களையும் செலாவணித் தாள்களையும் விலையேற்றத்தின் விளைவாகக் கருதலாமேயன்றி, அதன் காரணமாகக் கொள்ளமுடியாது.

பொன்திட்டக் காப்புநிதியை இலண்டனில் வைத்திருப்பதைப் பற்றியும், அந்நிதியைப் பயன்படுத்திய விதத்தைப்

[1] சாதாரணமாகப் பொன்ஏற்றுமதி எல்லைக்குக் (gold export point) கீழான விலையில் கவுன்சில் உண்டியல்கள் விற்கப்பெற்றன என்றும், இதனால் பொன் இங்கிலாந்திலிருந்து இந்தியாவுக்கு இயற்கையாக ஏற்றுமதியாவது தடைப்பட்டது என்றும் குறிப்பிட்டனர்.

[2] The Problems of the Rupee, by B. R. Ambedkar (1923), chaps. VI and VII.

[3] v. The Economic Journal, March 1923 'Professor Jevons and the Indian Exchange,' by J. M, Keynes, p. 63.

பற்றியும் குற்றச்சாட்டுகள் எழுந்தன. காப்பு நிதியை இலண்டனில் வைத்திருந்தால் பொருளாதார சமூக வளர்ச்சிக்கோ அல்லது வரிப்பளுவைக் குறைப்பதற்கோ கிடைத்திருக்கக் கூடிய பெருந்தொகையை இந்தியா இழக்க நேரிட்டது என்றும், நிதியை ரொக்கமாக வைத்திருப்பதற்குப் பதிலாகக் குறுங்காலக் கடன்களில் முதலீடு செய்யப் பெற்றதால் காப்பு நிதி (அதன் முதல் பணியான) நாணயமாற்றுக்குத் துணையாக அமையவில்லை என்றும் குறை கூறப்பெற்றன. காப்பு நிதியின் நிருவாகம், இந்தியா அலுவலகத்தின் அங்கமான ஒரு சிறு நிதிக்குழுவின் கையிலிருந்தது. இக் குழுவில் இந்தியர்களுக்கு எந்தவிதச் செல்வாக்குமில்லை. தடைமுறையில் நிதிக்குழுவின் கொள்கையை இலண்டனிலிருந்த பாங்கர்களே உருவாக்கினர். இதனால், இந்தியர்களுடைய வரிப் பணத்தின் மூலம் எழுப்பப்பெற்ற காப்புநிதியின் பயனை இங்கிலாந்து வணிகர்களே அனுபவித்தனர் என்ற முறையீடும் எழுந்தது. மேற்கண்ட ஏற்பாட்டிற்குப் பதிலாகக் காப்பு நிதியை, ஒரு பகுதியைப் பொன்னாகவும், மற்றொரு பகுதியைப் பத்திரங்களாகவோ அல்லது குறுங்காலக் கடன்களாகவோ இந்தியாவிலேயே வைத்திருக்க வேண்டும் என்ற யோசனை தரப்பட்டது.

1912ஆம் ஆண்டில் நடந்த ஓர் ஏற்பாடு, இத்தகைய குற்றச் சாட்டுகளுக்கு முடிவு கட்டியது. இந்தியாவில் நாணயமடிப்பதற்கான வெள்ளியை, மாண்டேகு கம்பெனியாரின் (Montagu & Company) ஏஜெண்டாக பாங்க் ஆப் இங்கிலாந்து மூலம் வாங்குவதற்குப் பதிலாக, அக் கம்பெனியிடமிருந்து இந்தியா அலுவலகம் (India Office) நேரிடையாக வாங்குவது என்பதே அந்த ஏற்பாடாகும். இந்த ஏற்பாட்டின் முக்கிய நோக்கம், பம்பாயில் இருந்த சில ஊக வணிகர்கள் (Speculators) வெள்ளிச் சந்தையைச் செயற்கை முறையால் கட்டுப்படுத்தி,[1] வெள்ளி விலையை உயர்த்தி அரசாங்கப் பணத்தை உறிஞ்சுவதைத் தவிர்ப்பதுதான். அரசாங்கத்தின் நடவடிக்கையில் குற்றம் கண்டவர்களே இந்த ஏற்பாடும் திருப்தி செய்வதாக இல்லை; காரணம், அவர்களால் இந்த ஏற்பாட்டின் நோக்கத்தைப் புரிந்துகொள்ள முடியவில்லை. இதைத் தொடர்ந்து

[1] Indian Financial Management, by M. R. Sundaram Iyer, 1913 (pamphlet). இந்த ஏற்பாட்டின் முழுவிளக்கத்திற்கு 'Return of Correspondence with the Bank of England and Messrs. Samuel Montagu & Co. relating to the purchase of silver in 1912.'' என்ற குறிப்பின் 400ஆம் பக்கத்தைப் பார்க்கவும். வெள்ளியை இரகசியமாக வாங்கியதின் நோக்கம், இந்திய அரசாங்கத்திற்கு எதிராக வெள்ளி விலை உயர்வதைத் தடுப்பதற்காகத்தான். (v. The Economist, August 24, 1912, p. 364. 'The Silver Market').

நடந்த கிளர்ச்சியின்[1] விளைவால் சர் ஆஸ்டின் சேம்பர்லின் (Sir Austen Chamberlain) அவர்களின் தலைமையில் 'இந்தியச் செலாவணி, நிதியியல் பற்றிய ஆணைக்கழகம்' ஒன்று நியமிக்கப் பெற்றது. இந்த ஆணைக்கழகம் 1914ஆம் ஆண்டில் அறிக்கையை வெளியிட்டது.

ஆணைக் கழகத்தின் அறிக்கை, காப்புநிதி கடந்த காலத்தில் செயலிட்டு வந்த முறையையும், அதைப்பற்றியிருந்த பல குற்றச் சாட்டுகளையும், பொன் நாணயமொன்றை நடைமுறைக்குக் கொண்டுவரும் பிரச்சினையையும், காப்பு நிதியை வைத்திருக்க வேண்டிய இடத்தையும், நிதியின் நிருவாகத்தையும் விரிவாக ஆராய்ந்தது.

பொன் நாணயம் ஒன்றை நடைமுறைக்குக் கொண்டுவருவதைப் பற்றி ஆணைக்கழகம் பின்வருமாறு குறிப்பிட்டது: நாணயமாற்றத்திற்கு உதவியாக இருக்கும் என்ற நோக்கத்தில் பார்த்தால்,[2] பொன்னைக் குறைந்த அளவில் புழக்கத்திற்குக் கொண்டுவருவது பெரிய பயனைத்தராது. கூடிய விரைவில் பொன்னைப்பெருமளவில் புழக்கத்திற்குக்கொண்டுவரும் யோசனை இப்போதுள்ள காப்பு நிதிக்குப் பாதகமாகவே விளையும். இந்த யோசனை நாட்டிலுள்ள பொன்னின் அளவைப் பெருக்குவதற்குப் பதிலாக, இருக்கும் பொன்னில் நாணய மாற்றுக்கு உதவியாக இருப்பதற்குக் கிடைக்கக்கூடிய பொன்னைக் குறைக்கவே செய்யும்.[3] அதே நேரத்தில், பொன்நாணயத்தைப் புழக்கத்திற்குக் கொண்டுவருவதால் அரசாங்கத்திற்கு ரூபாய் நாணயங்களை அச்சடிப்பதைவிடச் செலவுதான் அதிகரிக்கும்.

[1] இப் பிரச்சினை தீர விசாரிக்கப் பெறவில்லை. ஆனால் எகானமிஸ்ட் (நவம்பர் 30, 1912) என்ற பத்திரிகை 'இந்திய அரசாங்கத்திடம் மக்களுக்கு இருந்த மதிப்பைப் பாராளுமன்றத்திலும், பத்திரிகைகளின் மூலமாகவும் குறைப்பதற்காகச் சிலர் எடுத்துக் கொண்ட தீவிர முயற்சிகள் இன்னும் தொடர்ந்து நடைபெறுகின்றன; இம் முயற்சிகள் யூதர்களுக்கு எதிராக எழும் கிளர்ச்சியாகவும் தோன்றுகிறது' என்று எழுதியது. சில (யூதர்களின்) நிறுவனங்கள், இந்தியா அலுவலகத்தில் கடன் வாங்குபவைகளாக எந்த ஆண்டுகளில் ஏற்றுக்கொள்ளப் பெற்றன என்ற கேள்வி பாராளுமன்றத்தில் எழுப்பப் பெற்றது. இக் நிறுவனங்கள் 1889, 1900- 1933, 1904 ஆண்டுகளில் ஏற்றுக்கொள்ளப் பெற்றன என்று தெரிகிறது. இவ்வாண்டுகளில் முறையே ஜார்ஜ் ஹாமில்டன் பிரபு, கிராஸ் பிரபு, பிராட்ரிக் பிரபு இவர்களே இந்தியா மந்திரிகளாக இருந்தனர். 'இன்றைய அரசாங்கம் அன்னிய நிறுவனங்களுக்கும், யூதர்களின் நிறுவனங்களுக்கும் நியாயமற்ற சலுகை அளிக்கிறது என்ற குவையின் (Mr. Gwynne) அவர்களுடைய குற்றச்சாட்டு அபாண்டமானது என்று எடுத்துக் காட்டவே, குவையின் அவர்கள் குறிப்பிட்ட ஒவ்வொரு நிறுவனமும் சலுகை பெறுவதற்குக் காரணமாயிருந்த இந்தியா மந்திரிகளைக் குறிப்பிட்டிருக்கிறேம்' என்று எகானமிஸ்ட் கூறியது.

[2] Report of the Royal Commission on Indian Currency and Finance, 1914. p. 17,

[3] Ibid., p. 18.

ரூபாய் நாணயங்களை அச்சடிப்பதன்மூலம் அரசாங்கத்திற்கு நல்ல இலாபம் கிடைத்து வந்தது. பொன் நாணயம் புழக்கத்தில் இல்லாத பொழுது, பொன்நாணயச் சாலையை வைத்திருப்பது ஒரு தேவையற்ற செலவேயாகும். ஆனால், சுத்தம் செய்யப் பெற்ற பொன்னையும் சவரன்களையும் பம்பாய் நாணயச்சாலையில் கொடுத்து, அதற்குப் பதிலாக ரூபாய்களையும், ரூபாய் நோட்டு களையும் 1 ரூ. = 1 ஷில்லிங் 4 பென்ஸ் என்ற வீதத்தில் பெறலாம் என்று முன்பிருந்த அறிக்கையை (இவ் வறிக்கை 1906ஆம் ஆண்டில் ரத்து செய்யப்பெற்றது)மறுபடியும் புதுப்பிக்கவேண்டும் என்று ஆணைக்கழகம் பரிந்துரைத்தது.[1] ஆகவே, பொன் பரிவர்த் தனைத் திட்டம் 'நடைமுறைக்கு ஒத்து வரும் என்பதோடல் லாமல், இத் திட்டத்திற்கு ஆகும் செலவு குறைவாதலால், நல்ல வளர்ச்சியடைந்த ஒரு பாங்குமுறை இல்லாததனால், நாட்டுக்கும் நல்ல பொருத்தமாக அமைந்திருந்தது...ஒரு பொன் செலாவணியையும், பொன் நாணயச்சாலையையும் அனுசரிக்க வேண்டிய அவசியமில்லை என்று ஆணைக்கழகம் கருதியது'.[2]

பொன் காப்புநிதி, இந்தியாவில் ரூபாய்களை மாற்றுவதற் காகத் தேவைப்படவில்லை; ஆனால், 'இந்தியாவிலிருந்து ஏற்று மதியாகவிருக்கும் ரூபாய் நாணயங்களை ஸ்டெர்லிங் நாணயங் களாக மாற்றுவதற்குத் தேவையான காப்பு நிதியைக் கொடுப்ப தற்காகவே தேவைப்படுகிறது' என்று ஆணைக்கழகம் கூறியது.[3] அதே நேரத்தில், இலண்டனுக்குப் பணம் அனுப்பும் தேவைகளை நெருக்கடி காலங்களில் சமாளிப்பதற்கும், கவுன்சில் உண்டியல் களுக்குத்தேவை இல்லாதபொழுது[4] அகச் செலவுகளைச் செலுத்து வற்காகவும் இலண்டனில் ஒரு காப்பு நிதி தேவைப்பட்டது. அத னுடன் கூட, காப்பு நிதியை இலண்டனில் வைத்திருப்பதால் இலண்டனில் அரசாங்கத்தின் உடன்பாட்டைக் குறைப்பதற்கும் (சாதாரணமாக இலண்டனில்தான் அரசாங்கக் கடன்கள் திரட் டப் பெறுகின்றன), உலகப் பணச்சந்தையின் மையமாக இலண்டன் அமைந்திருப்பதால் கிடைக்கக்கூடிய பயனை இந்தியா

[1] Report of the Royal Commission on Indian Currency and Finance 1914, p. 20. இந்த யோசனை நடைமுறைக்குக் கொண்டுவரப் பெறவில்லை.

[2] Ibid., p. 53.

[3] Report of the Royal Commission on Indian Currency and Finance 1914, p. 21.

[4] காப்பு நிதி இலண்டனில் இருக்கவேண்டுமென்று பிண்ட்லே ஷிர்ராஸ அவர்கள் குறிப்பிடுகிறார். அதற்குக் காரணம், கவுன்சில் உண்டியல்களின் விற்பனையை நாணய மாற்று தடுக்கும்பொழுது அகச் செலவுகளைச் செய்வதற்காக மட்டுமன்று; பாதக வாணிப நிலையால் நாணயமாற்று சரிவதைத் தடுப்பதற்குந்தான் என்று அவர் கூறுகிறார். (Indian Banking and Finance, p. 220).

பெறுவதற்கும் ஏதுவாக இருக்கிறது. மேலும், காப்பு நிதியை இலண்டனில் வைத்திருந்தால், நாணய மாற்று அனுகூலமாக இருக்கும்பொழுது பணத்தை இங்கிலாந்துக்கு அனுப்பமுடியும்.[1] காப்பு நிதியை இந்தியாவில் வைத்திருந்தால், பணம் அவசர மாகத் தேவைப் பட்டால் நாணய மாற்றுச் சூழ்நிலை எவ்வாறு இருந்தாலும், பணத்தை இந்தியாவிலிருந்து இலண்டனுக்கு மாற்ற வேண்டியிருக்கும்.[2] காப்பு நிதிக்காக 1908ஆம் ஆண்டில் கிட்டத் தட்ட £ 18 மில்லியன்கள் தேவைப்பட்டன என்று கணக்கிடப் பெற்றது. தேவைகளைச்சமாளிப்பதற்குச் சுமார்£ 25மில்லியன்கள் தேவைப்படும் என்று ஆணைக் கழகம் கருதியது. பாங்க் ஆப் இங்கிலாந்தின் காப்புக்கு ஆதாரமாக இருப்பதற்காக, காப்பு நிதி இங்கிலாந்தில் வைக்கப் பட்டிருந்தது என்ற யோசனை முற்றிலும் மறுதலிக்கப் பெற்றது.

காப்பு நிதியை இலண்டனில் வைத்திருப்பதை ஆணைக் கழகம் உறுதிப்படுத்தினாலும், நிதியைச் செயற்படுத்திய முறை சிறிது கூடத் திருப்திகரமாக இல்லை என்று திட்டவட்டமாகக் கூறியது. 1907ஆம் ஆண்டில் இந்தியா மந்திரி பொன்னைக் கொடுப்பதற்குத் தயங்கியதை, 'காப்பு நிதியின் உண்மையான பயனை அவர் சரி யாகப் புரிந்துகொள்ளவில்லை' என்று கூறிக் கடுமையாக இடித் துரைத்தது. 'இதைவிட முக்கியமானது காப்பு நிதியில் அடங்கி யிருந்த இனங்கள்; பொன்னுக வைத்திருந்த தொகையை ஐய மின்றிப் பெருக்க வேண்டும். ஆகவே, ஆணைக் கழகம், காப்பு நிதியை வெகுவாகப் பெருக்க வேண்டுமென்றும், காப்பு நிதி தொடர்ந்து இலண்டினிலேயே இருக்கவேண்டுமென்றும், மொத்த நிதியில் பாதிக்குக் குறையாமல் பொன்னுக வைத்திருக்கவேண்டு மென்றும் பரிந்துரைத்தது. அதனுடன், நெருக்கடி காலத்தில் இந்தியா மந்திரி பொன்னைக் கொடுக்க மறுப்பதைத் தடுப் பதற்காக, இந்திய அரசாங்கம் தேவைப்படும் பொழுது காப்பு உண்டியல்களை (Reserve Drafts) விற்பதாக உறுதியளிக்க வேண்டுமென்றும் ஆணைக்கழகம் யோசனை கூறியது.[3] இந்தியா அலுவலகத்தின் நிதிக் குழு சிறிது காலத் திற்குப் பின் இந்த யோசனையை அனுசரித்தது.[4] ஆணைக்

[1] Report of the Royal Commission on Indian Currency and Finance, 1914 p. 32.

[2] Ibid, p. 23. காப்பு நிதியை 'இந்தியாவில் வைத்திருந்தால், அதைப் பயன் படுத்துவதற்காக இலண்டனுக்கு ஏற்றுமதி செய்யவேண்டியிருக்கும்'.

[3] Findlay Shirras, Indian Banking and Finance, p. 220.

[4] Indian Year Book, 1923, p. 241. காப்பு நிதியின் இந்தியக்கிளை ரூபாயை வைத்திருக்கும் வழக்கம் 1915ஆம் ஆண்டில் கைவிடப்பட்டது.

கழத்தின் அறிக்கையில் மற்றும் பலயோசனைகள் அடங்கியிருந்தன. இத்தகைய யோசனைகள், வாணிப ஏற்றத் தாழ்வுகளுக்கு ஏற்றாற்போல் நெகிழ்ச்சியுள்ள முறையில் காகிதச் செலாவணியை வெளியிடுவதையே முக்கிய நோக்கமாகக் கொண்டிருந்தன. இதே நோக்கத்துடன், உள்நாட்டு வாணிபத்திற்கு உதவியாக இருக்கும் பொருட்டு இந்தியாவிலுள்ள காப்புநிதியைப் பயன்படுத்திக் கொள்வதில் இந்திய அரசாங்கத்திற்கு அதிக உரிமை இருக்க வேண்டுமென்று ஆணைக்கழகம் பரிந்துரைத்து'.[1] முடிவாக, இலண்டனில் வைப்புகள் மிகுதியாகத் திரண்டிருந்ததற்கு,'இந்திய வருவாய் உறுதியற்றதாக இருந்ததால், முன்னேற்பாட்டுடன் இருப்பதற்காகச் சற்று அதிகமாகவே மதிப்பீடுகள் தயாரிக்கப் பெற்று வந்தன' என்று விளக்கம் தரப்பட்டது. இதன்விளைவால், நல்ல ஆண்டுகளில் வைப்புகள் தேவைக்குமேல் மிக அதிக மாகவே இருந்தன.

ஆணைக் கழகத்தின் அறிக்கையிலிருந்த சில சில்லறை யோசனைகள் (நாணய மாற்றம் வீழ்ச்சியடையும் பொழுது எடுக்க வேண்டிய நடவடிக்கை உள்பட) உடனடியாக அரசாங்கத்தால் நடைமுறைக்குக் கொண்டுவரப் பெற்றாலும், அறிக்கை முற்றிலும் பரிசீலனை செய்வதையும், நடைமுறைக்குக் கொண்டுவருவதையும் உலகப் போர் காலங்கடத்தச் செய்தது. நாணயமாற்று முறை, 1898ஆம் ஆண்டிலிருந்து நடைமுறையிலிருந்து வந்ததைப் போலவே, போர்க்காலத்திலும் தொடர்ந்து இருந்தது. இருந்தாலும் போர்ச் சூழ்நிலையைச் சமாளிப்பதற்காகச் சில பிரத்தியேக நடவடிக்கைகளைக் கையாள வேண்டிய நிலையிருந்தது.

இந்தியாவில் நிதிச்சிக்கல் ஏற்படும்பொழுது ரூபாயின் பொன் மதிப்பு வீழ்ச்சியடையும் என்பதும், ஆகவே 1907ஆம் ஆண்டைப் போலவே பொன்மதிப்பைப் பேணுவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டு மென்பதும் எதிர்பார்த்ததே. போர் மூண்ட சிறிது காலத்தில் தேவையான நடவடிக்கைகள் மேற் கொள்ளப்பெற்றன. இலண்டனில் ஸ்டெர்லிங் உண்டியல்களுக் கான தேவை உடனடியாகப் பெருகியது. சிறிது காலதாமதத் திற்குப்பிறகு இந்த நெருக்கடி சமாளிக்கப்பெற்றது. அதே நேரத் தில், இந்தியாவில், மக்கள் காகிதச் செலாவணியை நாணயமாக மாற்றுவதற்கும், தபால் நிலைய சேமிப்பு பாங்குகளிலிருந்து தங்களு டைய தேகைகளை எடுத்துக் கொள்வதற்கும் முனைந்ததால், இந்தியச் செலாவணிச் சாலைகளில் பெரிய நெருக்கடி ஏற்பட்டது.

[1] இம்பீரியல் பாங்கைத் தோற்றுவித்ததின்மூலம், கட்டற்ற கருவூல முறையிலிருந்த குறைபாடுகள் எவ்வாறு நீக்கப்பெற்றன என்பதை முன்னமேயே விளக்கியிருக்கிறோம்.

நிலைமை நிதானத்துடனும் திறமையுடனும் சமாளிக்கப் பெற்றது. ஸ்டெர்லிங் உண்டியல்களுக்கும் காகிதச் செலவாணியை நாணயங்களாக மாற்றுவதற்கும் இருந்த தேவையும், தபால் நிலையங்களிலிருந்து பணத்தை எடுப்பதும் குறைந்தன. சிறிது காலத்திற்குப் பிறகு, இப் பிரச்சினை முற்றிலும் எதிர்பாராத வகையில் ஒரு புதிய திருப்பத்தை ஏற்படுத்தியது. ஸ்டெர்லிங் நாணயத்தையும் பொன்னையும் அனுப்புவதற்கு இருந்த தேவைக்குப் பதிலாக ரூபாய் நாணயத்தையும் வெள்ளியையும் அனுப்புவதற்குத் தேவை மிக அதிகமாக எழுந்தது. இத்தகைய புதிய இடையூறு, எதிர்பாராத வகையிலிருந்த பெருத்த சாதக வாணிப நிலையினாலும்,[1] இங்கிலாந்தில் இந்தியச் சாதனங்கள் திரண்டிருந்ததாலும், இச் சாதனங்களை இங்கிலாந்திலிருந்து இந்தியாவுக்கு மாற்றுவதில் ஏற்பட்ட இடையூற்றினாலுமே[2] எழுந்தது. இதனால், இந்தியாவின் பொன் இறக்குமதி மிகவும் குறைந்தது;[3] ஆகவே, வெள்ளிக்கிருந்த தேவை அதிகரித்தது.

வெள்ளிக்கிருந்த தேவையைத் திருப்தி செய்வது மிகவும் கடினமாக இருந்தது. மற்றப் பல காரணங்களுடன் இதுவும் சேர்ந்து கொண்டு வெள்ளியின் விலையை விரைவாக உயர்த்தியது. ரூபாயின் தோற்ற மதிப்பைவிட, அதன் உள்ளுறுமதிப்பு உயரும் போல் தோன்றியது.

1916ஆம் ஆண்டு முதற்கொண்டு வெள்ளியின் விலை விரைவாக உயரத் தொடங்கியது. இந்தியாவில் ஏராளமான ரூபாய் நாணயங்கள் அச்சடிக்கப் பெற்றதுடன், வெள்ளி மட்டுமே கிடைக்கக் கூடிய விலையுயர்ந்த உலோகமாகி விட்டதால், ஆபரணங்கள் செய்வதற்கும் செல்வத்தைப் பதுக்கிவைப்பதற்கும் அது பெரிதும் பயன்படுத்தப் பெற்றது. 1917ஆம் ஆண்டு செம்படம்பர் மாதத்தில் இந்திய அரசாங்கம் வெள்ளி வியாபாரத்தைக் கட்டுப்

[1] இந்தியப் பண்டங்களுக்கிருந்த தேவை பெருகியதாலும், இந்தியா ஐரோப்பியப் பண்டங்களைப் பெறுவதிலிருந்த இடையூற்றினாலும் இந்த நிலை ஏற்பட்டது.

[2] 1922ஆம் ஆண்டுவாக்கில் இங்கிலாந்தில் இந்திய நாணயம் கிட்டத்தட்ட £70 மில்லியன் இவ்வாறு திரண்டிருந்தது. இத் தொகை இங்கிலாந்திலுள்ள பாங்கர்களுக்குக் குறைந்த வட்டியில் கடனாகக் கொடுக்கப்பெற்றது (Indian Year Book, 1923, p. 240).

[3] பொன்னை அனுப்புவதற்கு மட்டுமல்லாமல், பொன்னை வாங்குவதே பெருஞ் செயலாக இருந்தது. 'பொன் திட்ட' நாடுகள் பலவும் தங்களிடமிருந்த பொன்னைக் கொடுக்க மறுத்தன. இந்திய அரசாங்கம், இறக்குமதியான எல்லாப் பொன்னையும் ஒரு குறிப்பிட்ட விலையில் அரசாங்கத்திடம் விற்க வேண்டுமென்று 1917ஆம் ஆண்டில் ஒரு கட்டளை பிறப்பித்தது. பொன், வெள்ளி நாணயங்களை நாணயச் செயல்களுக்காக மட்டுமின்றி, மற்றச் செயல்களுக்குப் பயன்படுத்துவதையும் தடை செய்தது. இவ்வாறு வாங்கப்பெற்ற பொன், காகிதச் செலாவணிக் காப்புடன் வைக்கப்பெற்றது. சிறிது காலத்திற்குப் பிறகு பொன் புழக்கத்திலிருந்து மறைந்தது. இடைக்காலத்தில் பொன் அதிக விலையில் விற்கப்பெற்றது.

பாட்டுக்குள்ளாக்கி, ஏற்றுமதியையும் தடைப்படுத்தியது. வெள்ளியின் உபயோகத்தை மேலும் குறைக்கும் நோக்கத்துடன், குறைந்த மதிப்புள்ள காகிதச் செலாவணியும் (ரூ. 2½, ரூ. 1 செலாவணிகள்), நிக்கல் இரண்டணு நாணயமும் அச்சடிக்கப்பெற்றன. அரசாங்கம் நாணயங்களுக்குப் பதிலாக அதிக அளவில் காகிதச் செலாவணியை அச்சடிக்கத் தொடங்கியது.[1] 1915-க்கும் 1919க்கும் இடையில் காகிதச் செலாவணியின் காப்பு மட்டம் (நம்பிக்கை வெளியீடு) ரூ. 14 கோடியிலிருந்து ரூ. 120 கோடிக்கு உயர்ந்தது.[2] 1918ஆம் ஆண்டின் தொடக்கத்தில் நிலைமை கவலைக்கிடமாகியது. உலோகக் காப்புகளைப் பொறுத்த அளவில் எல்லா நாடுகளும் மிகவும் எச்சரிக்கையான கொள்கையைக் கையாண்டன. ஐக்கிய அமெரிக்கா வெள்ளி ஏற்றுமதியை முற்றிலும் தடைசெய்தது. முக்கியமாக மெக்சிகோவில் நடந்த உள்நாட்டுப் போரினால் 1914ஆம் ஆண்டு முதற்கொண்டு உலக ஆண்டு வெள்ளி உற்பத்திக் குறையத் தொடங்கியது. மேற்கொண்டு, வெள்ளி எந்த விலைக்கும் கிடைக்காமல் போய்விடுமோ என்ற நிலை ஏற்படும்போல் தோன்றியது. இந்தியாவிலுள்ள உலோகக் காப்புகள் விரைவில் குறையத் தொடங்கியதால் காகிதச் செலாவணியை நாணயமாகவும் உலோகமாகவும் மாற்ற முடியாத முறையைக் கையாள நேரிடும் என்ற அச்சம் எழுந்தது. இதனுடன் ஐரோப்பாவிலிருந்து வந்த கெட்டசெய்தி (போர் மூண்ட செய்தி) மேலும் பரபரப்பை உண்டாக்கியது. சீர்குலைவு தவிர்க்க முடியாதது போல் தோன்றியது. அமெரிக்க அரசாங்கத்துடன் நடந்த ஓர் ஏற்பாட்டின் மூலம் நிலைமை சமாளிக்கப்பெற்றது. இந்த ஏற்பாட்டின்படி அமெரிக்க அரசாங்கம் 1918ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில், தங்களிடமிருந்த வெள்ளிக் காப்பில் ஒரு பகுதியைக் கொடுப்பதாக ஒப்புக்கொண்டு, இந்திய அரசாங்கத்திற்கு 200 மில்லியன் அவுன்சுகளுக்குக் குறையாமல் வெள்ளியை விற்றது.[3]

[1] 1918–19ஆம் ஆண்டில் புழக்கத்திலிருந்த ரூபாய்க்காகிதச் செலாவணி ரூ. 33 இலட்சத்திலிருந்து ரூ. 1051 இலட்சத்திற்கு உயர்ந்தது. 2½ ரூ. நோட்டுகள் ரூ. 18 இலட்சத்திலிருந்து ரூ. 166 இலட்சத்திற்கு உயர்ந்தது. (V. H. L. Chablani, Indian Cnrrency and Exchange, p. 23)

[2] வரவு செலவுத் திட்டப் பற்றுக்குறையிருந்த காலம் முழுவதிலும் பணவீக்கம் தொடர்ந்திருந்தது. வரவு செலவுத்திட்டப் பற்றுக்குறைகள் அரசாங்கக் கடன் பத்திரங்களை வழங்குவதன் மூலம் அடைக்கப்பெற்றன என்றும், இது பணவீக்கத்திற்கு ஓப்பானதே என்றும் பேராசிரியர் ஜேவான்ஸ் அவர்கள் விளக்குகிறார். (The Future of Exchange, pp. 52, 137). அரசாங்கம், தானே செயற்கை முறையில் உற்பத்தி செய்த கருவூல உண்டியல்களுக்கு (treasury bills) எதிராகக் காகிதச் செலாவணியை வெளியிட்டது.

[3] Report of the Committee on Indian Finance and Currency, 1919, Cmd. 527, p. 7.

இதற்கிடையில் 1915ஆம் ஆண்டில்[1] ஒரு அவுன்சு : 27¼ பென்சுகளாக இருந்த வெள்ளி விலை 1917 ஆகஸ்டு மாதத்தில் 43 பென்சுகளுக்கு உயர்ந்தது. இந்த விலையில் ரூபாய் நாணயத்திலிருந்த வெள்ளியின் மதிப்பு ரூபாயின் நாணயமாற்று மதிப்புக்கு (1 ஷில்லிங் 4 பென்ஸ்)[2] சமனாக இருந்தது. இதற்குப் பிறகு, சீனாவின் வெள்ளித்தேவை அதிகமாக இருந்ததால், வெள்ளி விலை தொடர்ந்து ஏறத் தொடங்கியது. ரூபாய்களை உருக்கி ஏற்றுமதி செய்யும் வழக்கம் இதனால் ஏற்படத் தலைப்பட்டது.[3] 1918, மே மாதத்திற்கும் 1919, ஏப்ரல் மாதத்திற்கும் இடைக்காலத்தில் வெள்ளியின் விலை அவுன்சுக்கு 47¾ பென்சுக்கும் 50 பென்சுக்கும் இடையில் ஊசலாடியது. வெள்ளிச் சந்தையிலிருந்த கட்டுப்பாட்டை ஐக்கிய அமெரிக்க அரசாங்கமும் பிரிட்டிஷ் அரசாங்கமும் 1919 மே மாதத்தில் நீக்கின. வெள்ளி விலை 1919 டிசம்பர் மாதத்தில் 79½ பென்சுக்கும், 1920 பிப்ரவரி மாதத்தில் உச்ச விலையாகிய 89½ பென்சுக்கும் உயர்ந்தது. இதற்குப் பிறகு வெள்ளி விலை இறங்கத் தொடங்கியது

ஆகவே 1917 ஆகஸ்டு மாதத்திற்குப் பிறகு, ஒரு ரூபாய்க்கு 1 ஷில்லிங் 4 பென்ஸ் என்ற வீதத்தில் ரூபாய் நாணயங்களை அச்சடித்துக் கொடுப்பது இலாபகரமாக இல்லை. போருக்கு முற்காலத்தில் நடைமுறையிலிருந்த, செலாவணி முறையையும் நாணய மாற்று முறையையும் இனியும் பேணுவது இயலாத காரியம் என்ற முடிவுக்கு அரசாங்கம் வந்தது.

இதற்கிடையில் வெள்ளி விலை ஏறினதைப்போல் நாணய மாற்று வீதமும் ஏற்றமடைவதைத் தடுக்க எடுத்துக் கொண்ட முயற்சியும் தோல்வியடைந்தது. 1917, ஆகஸ்டு மாதத்திலிருந்து நாணயமாற்று வீதம் உயரத்தொடங்கி, 1919ஆம் ஆண்டின் சராசரி வீதம் 1 ஷில்லிங் 10 3/32 பென்சை அடைந்தது.[4] இந்த நேரத்தில், இந்தியா மந்திரி அகச் செல்லுகளைச் செய்வதற்காகக் கவுன்சில் உண்டியல்களை விற்றுப் பொன்னை வாங்குவதற்குப் பதிலாக, இங்கிலாந்தில் இந்தியச் சாதனங்கள் பெருகிக் கிடைப்பதைக் கண்டார்.[5] இந்தியாவின்

[1] 1915ஆம் ஆண்டில் இருந்த விலையில் இதுதான் உயர்மட்டம்.

[2] H.L. Chablani, Indian Currency and Exchange, 1925, p. 73.

[3] 1917, ஆகஸ்டு மாதத்திற்குப் பிறகு ஏராளமான ரூபாய் நாணயங்கள் உருக்கப் பெற்றன என்பதில் ஐயமில்லை என்று பேராசிரியர் H. S. ஜேவான்ஸ் அவர்கள் குறிப்பிடுகிறார். (The Future of Exchange, p. 37).

[4] v. 'Statistical Abstract British India' for detailed figures of the rise in exchange.

[5] போர்க் காலத்தில், இந்திய அரசாங்கம் பிரிட்டிஷ் அரசாங்கத்தின் சார்பில் £ 240 மில்லியன்களுக்குக் குறையாமல் செலவழிக்கவேண்டியிருந்தது. இந்தத் தொகை இந்திய அரசாங்கத்திற்கு இலண்டனில் கொடுக்கப்பெற்றது.

வாணிபக் கொடுப்பல்நிலை மிகவும் சாதகமாக இருந்ததால், இந்தியாவுக்கு உடனடியாகப் பணம் அனுப்பவேண்டியிருந்தது. இதனால், அரசாங்கம் கவுன்சில் உண்டியல்களை விற்பதை முற்றிலும் நிறுத்த முடியவில்லை. ஆனால், விற்பனையை வாரத்திற்கு ஒரு குறிப்பிட்ட அளவுக்குக் குறைத்தது.[1] இந்த உண்டியல்கள் இந்தியா மந்திரி அவ்வப்போது நிர்ணயித்த கட்டணத்தில் விற்கப்பெற்றன. இந்தியா மந்திரி உண்டியல்களை, தேர்ந்தெடுத்த சிலருக்கு மட்டுந்தான் விற்றார். அதே நேரத்தில், இந்தியாவுக்குப் பணம் அனுப்புவதற்குப் பதிலாகப் போருக்குத் தேவையான பொருள்களை அனுப்பும்படி வர்த்தகர்களை அரசாங்கம் கேட்டுக்கொண்டது.[2] ரூபாயின் வெள்ளி மதிப்பு 1 ஷில்லிங் 4 பென்சுக்குமேல் உயரும்வரை (அதாவது 1917 ஆகஸ்டு மாதம்வரை) நாணயமாற்று வீதத்தில் பெரிய மாறுதல் எதுவும் செய்யவில்லை. ஆனால், இந்த மட்டத்தை அடைந்ததும், இந்தியா மந்திரி தம்மிடமிருந்த சிறிதளவு கவுன்சில் உண்டியல்களின் விற்கும் கட்டணத்தை உயர்த்தவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது.[3] ஆகவே, 1916ஆம் ஆண்டில் 1 ஷில்லிங் 4$\frac{1}{2}$ பென்சாக இருந்த நாணயமாற்றுச் சராசரி வீதம் 1919ஆம் ஆண்டில் 1 ஷில்லிங் 10 3/32 பென்சாக உயர்ந்தது.[4] இவ்வாறு ஏறியும் கூட, வாணிபத் தேவையைத் தணிக்க முடியவில்லை. இந்தியாவின் போர்ச்செலவும், போர்க்கடன்களும் செலாவணியை இந்தியாவில் பெருக்கவேண்டிய அவசியத்தை உண்டாக்கின. இதனுடன், வெள்ளியின் மதிப்பில் இருந்த ஏற்றமும், ரூபாயின் நாணயமாற்று வீதத்திலிருந்த ஏற்ற இறக்கங்களும் ஒன்றுசேர்ந்துகொண்டு வாணிபத்தைத் தடைப்படுத்தியதுடன், விரும்பத்தகாத ஊக வாணிபத்தை (Speculation)யும் தோற்றுவித்தன. ஆகவே, செலாவணி முறையையும், குறிப்பாக நிலைபெயரா நாணயமாற்றத்தை மறுபடியும் நிறுவும் நோக்கத்தையும், ஆராய்வதற்காக அரசாங்கம் 1919ஆம் ஆண்டில் ஒரு குழுவை நியமித்தது.

இக்குழு 1919ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் தன்னுடைய அறிக்கையை அளித்தது. இவ் வறிக்கை, நாணய மாற்றத்தை உடனடியாக நிலைபெயராமல் செய்யக்கூடியதும், தானாகவே இயங்கக் கூடியதும், நிலையான அடிப்படையாக அமையக்

[1] விற்பனையான தொகை வாரத்திற்கு ரூ. 120லிருந்து ரூ. 130 இலட்சம் வரை இருந்தது (H. L. Chablani, Indian Currency and Exchange, p. 73).

[2] Moral and Material Progress of India, 1917-18.

[3] H. L. Chablani, pp. 73, 74.

[4] Statistical Abstract, 1912-13 to 1921-22. pp. 196, 197.

கூடியதுமான நிலைபேறுக்கக் கொள்கையை உடனடியாகக் கையாள வேண்டிய அவசியத்தை உணர்த்தியது.[1]

ஆனால், நிலையான ஒரு கொள்கையை உருவாக்க வேண்டுமென்று விரும்பிய குழு, அப்பொழுதிருந்த நிதிச் சூழ்நிலை தற்காலிகமானது என்ற உண்மையைக் காணத் தவறியது போலும். ஆகவே, குழுவின் பரிந்துரைகள் இரண்டு கோட்பாடுகளைச் சார்ந்தே இருந்தன. இந்தியாவுக்கு மிகவும் சாதகமாக இருந்த வாணிபக் கொடுப்பல்நிலையும், உயர்ந்திருந்த வெள்ளி விலையும் தொடர்ந்து நீடிக்கும் என்பதே அவ்விரு கோட்பாடுகளாகும்.[2] ஆனால் இவ்விரு கோட்பாடுகளும் பின்னல் பொய்ப்பிக்கப் பெற்றன.

தன்னுடைய நோக்கங்கள் கைவரப்பெறுவதற்காக, ரூபாய்க்கும் பொன்னுக்கும் உள்ள வீதத்தை மாற்றவேண்டும் என்றும், புதிய கட்டணம் 1 ரூபாய்க்கு 2 ஷில்லிங் பொன்னுக — அதாவது ஒரு ரூபாய் நாணயம் 11·30016 குண்டுமணி சுத்தப் பொன்னுக்கு மாற்றக்கூடியதாக இருக்க வேண்டுமென்றும்[3] குழு விரும்பியது. ஆரம்ப காலத்திலிருந்தே நிலையான ஓர் அடிப்படையைக் கையாளும் நோக்கத்திற்காகவும், தனித்தியங்கும் சக்தியைப் பெறுவதற்காகவும்தான், ரூபாயை ஸ்டெர்லிங் நாணயத்திற்குப் பதிலாகப் பொன்னுடன் இணைப்பதாக முடிவு செய்யப்பெற்றது. குழு நாணயமாற்றுக் கொள்கையினால் விலை மட்டங்களுக்கு ஏற்பட்ட விளைவுகளின்மேல் அதிகக் கவனம் செலுத்தியது என்பதும்,[4] ஸ்டெர்லிங் அடிப்படையிலன்றிப் பொன்னின் அடிப்படையில் நாணயமாற்று நிலைபேறுக்கத்தை அது விரும்பியதற்கு, ஸ்டெர்லிங்கின் பொன் மதிப்பு மேலும் குறையும் என்று அக் குழு கொண்டிருந்த (தவறான) கருத்தே காரணம் என்பதும் தெளிவாகின்றன. இதைப் போன்றே,வெள்ளியின் விலை மேலும் உயரலாமேயன்றி இறங்குவதற்கு வழியில்லை என்ற எண்ணத்திலும், வாணிபக் கொடுப்பல்நிலை பாதகமாக

[1] Report of the Babington-Smith Committee on Indian Finance and Currency, 1919, Cmd. 527.

[2] v. Indian Year Book, 1923, p. 246.

[3] Report of the Committee on Indian Finance and Currency, 1919, Cmd. 527.

[4] பிரச்சினைகளை ஆராய்வதில் குழு தீவிரமாக முனையவில்லை என்பதுதான் தவருகும். அப்பொழுதிருந்த சூழ்நிலையில் குழு உள்நாட்டு விலைகளை நிலைப்படுத்துவதையே முக்கிய நோக்கமாகக்கொண்டு, ரூபாயின் நாணயமாற்று மதிப்பை நிலைப்படுத்தும் எண்ணத்தை அப்போதைக்குக் கைவிட்டிருந்தால் சிறப்பாக இருந்திருக்கும்.

மாறுது என்ற கருத்திலும்தான்,[1] குழு 1 ரூபாய்க்கு 2 ஷில்லிங் என்ற வீதத்தில் நாணய மாற்றத்தை நிர்ணயித்தது. மேலும், உயர்ந்த நாணய மாற்றுவீதம், அகச் செல்லுகளின் பளுவைக் குறைப்பதன் மூலம், இந்திய அரசாங்கத்திற்கு அனுகூலமாக அமையும் என்று குழு கருதியது.

கவுன்சில் உண்டியல்களின் விற்பனையையும், எதிர் உண்டியல் களின் விற்பனையையும் பகிரங்கமான ஏலத்தின் மூலம் மறுபடியும் தொடங்க வேண்டுமென்றும், பொன், வெள்ளி உலோகங்களின் வாணிபத்தை அனுமதிக்க வேண்டுமென்றும்[2], பம்பாய் நாணயச் சாலையை மறுபடியும் திறக்க வேண்டுமென்றும்[3], பொன்திட்டக் காப்பைப் பெருக்க வேண்டுமென்றும்,[4] காகிதச் செலாவணியின் காப்பிலிருந்த உலோக அளவை உயர்த்த வேண்டுமென்றும்[5] பல யோசனைகளைச் செலாவணிக் குழு தந்தது.

பின்னர் நடந்த நிகழ்ச்சிகளிலிருந்து குழு, கருத்தில் கொண் டிருந்த நோக்கங்கள் மிகச் சிறந்தன என்றாலும், விரும்பிய குறிக்கோளை அடைவதற்கான வழிகளைப் பின்பற்றவில்லை என்பது தெளிவாகிறது. மேலும், 1919ஆம் ஆண்டின் கன்லிஃப் அறிக்கையின்மேல்[6] (Cunliffe Report) இங்கிலாந்து கையாண்ட

1 'ரூபாயின் நேற்ற மதிப்பைவிட அதனுடைய உள்ளுறு மதிப்பு உயரும் அளவுக்கு வெள்ளியின் விலை ஏற்றமடையும்' என்ற தவருன எண்ணமே, 1919ஆம் ஆண்டின் செலாவணிக் குழுவின் கொள்கையை உருவாக்குவதற்குக் காரணமாக இருந்தது என்று கெயின்ஸ் அவர்கள் கூறுகிறார் (Economic Journal, March 1923, p. 62).

2 இவ் விரு யோசனைகளையும் அரசாங்கம் ஏற்றுக் கொண்டது.

3 போரின்போது சிறிது காலத்திற்கு பம்பாய் நாணயச்சாலை, சவரன்களை அச் சடிக்கும் அரசாங்க நாணயச்சாலையின் ஒரு கிளையாக ஆக்கப்பெற்றது. பின்னர், சில இடையூறுகள் எழுந்ததும். எடையிலும் உருவத்திலும் சவரன்களை ஒத்த பொன் மொகர்கள் அச்சடிக்கப்பெற்றன. சிறிது காலத்திற்குப் பிறகு நாணயச்சாலை மறுபடியும் மூடப்பெற்றது. பொன் நாணயங்களுக்குத் தேவை எழும்போது நாணயச்சாலை மீண்டும் திறக்கப்பெறும் என்று நிதி மந்திரி 1922ல் கூறினார் (Report of the Royal Commission on Indian Finance and Currency, 1925-26, Minute of Dissent, p. 106).

4 காப்பின் ஒரு பகுதியை (50 சத வீதத்திற்கு மேலில்லாமல்) இந்தியாவிலேயே வைத்திருக்கலாமென்று குழு கூறியது. ஆனால் இந்த யோசனையை அரசாங்கம் ஏற்றுக்கொள்ளவில்லை.

5 அரசாங்கம் இந்த யோசனையைச் சிறிது மாறுதல் செய்து நடைமுறைக்குக் கொண்டுவந்தது. இதன் முதற்படியாக, அரசாங்கம் 1920 அக்டோபர் மாதத்தில் நம்பிக்கை வெளியீட்டின் மட்டத்தை ரூ. 85 கோடிக்குக் குறைத்தது. அதைத் தொடர்ந்து, நம்பிக்கை வெளியீட்டை காப்பிலிருந்த உலோக அளவுக்கு மேற்படாம லிருக்கும் வரை படிப்படியாகக் குறைத்து, நம்பிக்கை வெளியீட்டின் அளவு புழக்கத்தி லிருந்த மொத்த காகிதச் செலாவணியில் 50 சத வீதத்திற்கு மேற்படாதபடி செய்தது. செலாவணியை நெகிழ்ச்சியுள்ளதாக ஆக்குவதற்காக, வாணிப உண்டியல்களுக்கு எதிராகவும் (90 நாட்களுக்குள் தவணை முடியும் உண்டியல்கள்) நோட்டுகளை வெளியிட லாம் என்னும் விதி சேர்க்கப்பெற்றது. (V. H. S. Jevons The Future of Exchange, pp. 15, 16, 17).

6 V. Report of the Committee on Currency and Foreign Exchange after the War, 1918-19.

பணச் சுருக்கக் கொள்கையினால் (deflationary policy) ஸ்டெர்லிங்கின் பொன் மதிப்பு உயர்ந்தது. பின்னர், இந்தியாவின் வாணிபக்கொடுப்பல் நிலையிலிருந்த மாற்றமும், வெள்ளி விலையிலிருந்த வீழ்ச்சியும் முழுத் திட்டத்தையும் பொய்ப்பித்தன. இவை போன்றநிகழ்ச்சிகளால் தடைப்படும் ஒரு திட்டம் உறுதியில்லாததாகும் என்பதில் ஐயமில்லை.

செலாவணிக்குழுவின் அறிக்கை 1919, டிசம்பர் மாதத்தில் வெளியானபோதுநாணயமாற்று 1ரூபாய்க்கு 2 ஷில்லிங் 4 29/32 பென்ஸ் (ஸ்டெர்லிங்) என்ற வீதத்தில் இருந்தது.[1] 1920 பிப்ரவரி மாதத்தில் அரசாங்கம் அறிக்கையைக் கையாண்டபோது நாணயமாற்று 1 ரூபாய்க்கு 2 ஷில்லிங் 8 5/16 பென்ஸ் (ஸ்டெர்லிங்) என்ற வீதத்திலிருந்தது. ஆனால், அதிகார பூர்வமான நாணய மாற்றுவீதம் சவரனுக்கு ரூ. 15லிருந்து ரூ. 10ஆக மாற்றப்பட்டிருக்கிறது என்ற அறிவிப்பு 1920 ஜூன் மாதம்வரை அமலுக்கு வரவில்லை. அமலுக்கு வந்தபோது நாணயமாற்று 1ரூபாய்க்கு 1ஷில்லிங் 10 11/16 பென்ஸ் (ஸ்டெர்லிங்) வீதத்திற்கு விழுந்துவிட்டது. இதற்கிடையில், கண்ணிலிப் அறிக்கையை பிரிட்டிஷ் அரசாங்கம் கையாண்டதால், டாலரின் ஸ்டெர்லிங் மதிப்பு ஒரேயடியாக விழுந்தது. அரசாங்கத்தின் 1920 ஜூன் மாத அறிவிப்பின் விளைவு, சந்தையில் நிலவிய வீதத்தைவிட அதிகாரபூர்வமான நாணய மாற்றுவீதம் ஏற்றமடைந்தது. இந்த நேரத்தில்தான், இதுவரை பல ஆண்டுகளாக மிகவும் சாதகமாக அமைந்திருந்த இந்திய வாணிபக் கொடுப்பல் நிலை, பலவீனத்தின் அறிகுறியை வெளிக்காட்டியது.[2] இந்த நிலையை அரசாங்க அறிவிப்பு மேலும் கேடுறச்செய்தது ஏற்றுமதி வாணிபம் கேடுற்றது. இறக்குமதிகள், குறிப்பாகப் பருத்தித் துணிகள் ஊக்குவிக்கப்பெற்றன.[3] ஆகவே 1920ஆம் ஆண்டில் வாணிபக் கொடுப்பல்நிலை இந்தியாவுக்கு மிகவும் பாதகமாக அமைந்தது. செலாவணிக்குழு கருத்தில் கொண்டிருந்த முதல் கோட்பாடு பொய் என்று நிரூபிக்கப்பெற்றது. நாணய மாற்று வீதத்தைப் பேணுவதற்காகக் கவுன்சில் எதிர்உண்டியல்களை நட்டத்தில் விற்பதன் மூலம் முயற்சித்தது. இதன்மூலம் ஏற்றுமதி வாணிபம் மீட்சியுறும் என்றும் அரசாங்கம் எதிர்பார்த்தது. பணச்சந்தை சீர்குலைந்தது. கவுன்சில் எதிர் உண்டியல்களை அரசாங்கம் விற்ற விலைக்கும், சந்தையில் நிலவிய

[1] குறிப்பிட்டுள்ள கட்டணங்கள் நான்குமாதக் கெடுவில் இலண்டனில் நிலவியவை ஆகும் (V. Statistical Abstract).

[2] அத்தியாயம் 13-ஐப் பார்க்கவும்.

[3] இந்தியத்துணிக்கு ஜப்பானிலிருந்த தேவையும் இதே நேரத்தில் தடைப்பட்டது.

விலைக்கும் அதிக வேறுபாடு இருந்ததால் ஊகவாணிபம் தலை தூக்கியது. சந்தை விலைக்கும் அதிக விலையில் எதிர்உண்டியல்களை விற்க அரசாங்கம் முன்வந்ததால், அதன் இலாபத்தை அடைவ தற்காகப்பெருத்த மூலதனம் இந்தியாவிலிருந்து இங்கிலாந்துக்கு மாற்றப்பெற்றது. ஒரு ரூபாய்க்கு 2 ஷில்லிங் பொன் என்ப தற்குப் பதிலாக, 2 ஷில்லிங் ஸ்டெர்லிங் என்ற வீதத்தில், நாணய மாற்ற நிலைபேறுக்கம் செய்யப்படும் என்று அறிவிப் பதன்மூலம் அரசாங்கம் மற்றொரு முயற்சி செய்துபார்த்தது. சவரன் நாணயம், 10 ரூபாய்க்குச் சமான மதிப்பில் சட்டச் செலாவணியாகும்[1] என்று அறிவித்து, சட்டமன்றம் செப்டம்பர் மாதம் 8ஆம் தேதி ஒரு சட்டத்தை நிறைவேற்றியது. இச் சட்டத்தினால் சிறிதளவும் பயனில்லை. சிறிது காலத்திற்குப் பிறகு கவுன்சில் எதிர்உண்டியல்களின் விற்பனையை அரசாங்கம் நிறுத்திவைத்து, நாணய மாற்றத்தைக் கட்டுப்படுத்தும் எல்லா முயற்சிகளையும் கைவிட்டது. ரூபாயின் நாணயமாற்று மதிப்பு 1 ஷில்லிங் 4 பென்சுக்கும் குறைவாக வீழ்ந்தது.

இச் சோதனையின் தோல்வி அரசாங்கத்தின்மீது கடுங் கோபத்தை உண்டாக்கியது. 'நாணய மாற்றத்தை நிலைப் படுத்துவதற்கென்று அரசாங்கம் அறிவித்த ஒரு கொள்கை, நாணய மாற்றங்களில் மிகப் பெரிய ஏற்ற இறக்கங்களையும், அரசாங்கத்திற்குப் பெருத்த நட்டத்தையும், வாணிபச் சீர் குலைவையும் உண்டாக்கி, நூற்றுக்கணக்கான பெரும் வணிகர் களையும் ஓட்டாண்டி நிலைக்கு உள்ளாக்கியது.[2] £ 55 மில்லி யன் பெறுமானமுள்ள எதிர் உண்டியல்கள் ரூ. 35 கோடி நட்டத்தில் விற்கப்பெற்றன.[3] இக் கொள்கையை அரசாங்கம் கையாண்டிருக்காவிட்டால், 1920ஆம் ஆண்டின் தொடக்கத்தி லேயே நாணய மாற்றம் வீழ்ச்சியடைந்திருக்கும். இவ் வீழ்ச்சி இந்தியாவின் பாதக வாணிபக் கொடுப்பல்நிலையை நிவர்த்தி செய்திருக்கும். (அதாவது இறக்குமதிகளைத் தடைசெய்து ஏற்று மதிகளை ஊக்குவித்திருக்கும்). அப்பொழுதிருந்த நிலையில் ஏற்று மதியாளர்களால் விற்பனை செய்யமுடியவில்லை. நாணய மாற்றம் மேலும் உயரும் என்ற எண்ணத்தில் இறக்குமதியாளர்கள் பண்டங்களை மேலும் மேலும் தருவித்துக்கொண்டிருந்தனர்.

[1] இச் சட்டம் 1927 மார்ச் மாதந்தான் ரத்தாயிற்று. ஆனால், உண்மையில் வெகுகால மாக ஒரு ஸ்டெர்லிங்கின் மதிப்பு ரூ. 10-ஐயும் மேலாகவே இருந்தது. V. H. S. Jevons, The Future of Exchange, p. 136.

[2] Indian Year Book, 1925, p. 244.

[3] எதிர் உண்டியல்களை விற்பதன் மூலம் கிடைத்த ரூபாய்களுக்கும், கிடைக்கக் கூடிய ரூபாய்களுக்குமுள்ள வேறுபாடுதான் ரூ. 35 கோடியாகும்.

1920ஆம் ஆண்டின் இலையுதிர் காலத்தில் நாணய மாற்றம் வீழ்ச்சியடைந்ததும்[1] இப் பண்டங்களை அவர்களால் விற்க முடியவில்லை.

இதன் விளைவுகள் மிகக் கொடுமையாக இருந்தன.[2] அரசாங்கம் நேரிடையான பெரும் வருவாய் நட்டத்திற்கு உள்ளாகியது; இந்திய ஸ்டெர்லிங் காப்புகளும் ஸ்டெர்லிங் பத்திரங்களும் விரையமாயின; வாணிபம் சீர் குலைந்தது; இக் கொள்கை நாட்டில் சந்தேகத்தையும் வெறுப்பையும் வளர்த்தது. இந்தியச் செலவில் பிரிட்டிஷ் ஏற்றுமதிகளை வளர்ப்பதற்காக உருவாக்கப் பெற்ற சதித்திட்டமே இக் கொள்கை என்றுகூடக் கூறினர்கள். சீன வாணிபத்தின் போக்கினால் வெள்ளி விலை பெரிதும் வீழ்ந்ததால் இருந்த இன்னல் மேலும் பெருகியது. செலாவணிக் காப்புகளில் ரூபாய்களின் அளவு பெருக்க மடைந்தது. இதற்கு இரண்டு காரணங்கள் இருந்தன. ஒன்று செல்வத்தைச் சேமித்து வைப்பதற்கு (பொன்னாகவும், நகைகளாகவும் வைத்திருப்பதற்கு) வெள்ளிக்குப் பதிலாகப் பொன்னைப் பயன்படுத்தும் வழக்கம் மறுபடியும் தலைப்பட்டதாகும்; இரண்டாவது காரணம், காகிதச் செலாவணி வெளியீடு நல்ல செல்வாக்குப் பெற்று வந்ததாகும்.

1920ஆம் ஆண்டு செப்டம்பர் மாதத்திற்குப் பிறகு நாணய மாற்று, தன்னுடைய போக்கிலேயே விடப்பட்டது. 1921, 1922 ஆண்டுகளில் அதன் வீதம் குறைவாகவே (அதாவது, ஆண்டுச்சராசரி முறையே 1ஷில்லிங் 4⅝பென்சாகவும், 1 ஷில்லிங் 3 27/32 பென்சாகவும் இருந்தன) இருந்தது. ஆனால் 1923 ஆம் ஆண்டில் 1 ஷில்லிங் 4⅞ பென்சுக்கும், 1924 ஆம் ஆண்டில், 1 ஷில்லிங் 5 5/8பென்சுக்கும், 1925 ஆம் ஆண்டில் 1ஷில் 6 7/16 பென்சுக்கும் உயர்ந்தது. 'இந்திய நாணய மாற்று முறையையும், செலாவணி முறையையும் அவற்றின் செயல்முறையையும் பரிசீலனை செய்யவும், இந்திய நலனுக்காக இம் முறைகளில் ஏதேனும் மாற்றந் தேவையா என்பதை ஆராயவும், அவற்றுக்கான சிபாரிசுகளைச் செய்யவும்', அரசாங்கம் 1925 ஆகஸ்டு மாதத்தில்

[1] இந்திய இறக்குமதியாளர் பலர் தாங்கள் தருவித்த பண்டங்களை ஏற்றுக்கொள்ள மறுத்ததற்கு இதுதான் காரணமாகும். நாணயமாற்றத்தை 1 ரூபாய்க்கு 2 ஷில்லிங் என்ற வீதத்தில் பேணுவதாக அரசாங்கம் வாக்களித்தது என்று அவர்கள் வாதிட்டார்கள்.

[2] 1914ஆம் ஆண்டிலிருந்து இந்தியாவில் ஏற்பட்ட கிளர்ச்சிக்குக் காரணமாயிருந்த இரட்டையாட்சி, கென்யாவில் இந்தியர்கள் நிலை போன்ற பல பெருங்குறைபாடுகளில், கவுன்சில் எதிர்உண்டியல்களை நட்டத்திற்கு விற்றதும் ஒன்றாக இருந்தது. (V. Times, September 11, 1922).

ஹில்டன் யங் (Hilton Young) என்பவர் தலைமையில் ஓர் ஆணைக் கழகத்தை நியமித்தது.

இந்த ஆணைக்கழகம் 1926 சூலை 1ஆம் தேதி அறிக்கைகையை அளித்தது. அறிக்கையில் கண்ட சிபாரிசுகள் மூன்று தலைப்புகளைக் கொண்டிருந்தன: (1) பொன் நாணயத்தை உபயோகத்திற்குக் கொண்டு வராமல், பழைய ஸ்டெர்லிங் பரிவர்த்தனைத் திட்டத் திற்குப்பதிலாக[1] (Sterling Exchange Standard) பொன் திட்டத் தைக் கையாளவேண்டும்; (2) ஒருரூபாய்க்கு 1ஷில்லிங் 6 பென்ஸ் என்று சட்டப்பூர்வமான வீதத்தைக் கையாளவேண்டும், (3) 'ரிசர்வுபாங்கு' என்று அழைக்கக் கூடிய ஒரு மத்திய பாங்கை நிறுவவேண்டும்.

ஆணைக்கழகம் முதலாவாகக் கீழ்க்காணும் மூன்று அடிப் படைகளில், இந்தியச் செலாவணிக்குப் பொருத்தமாக ஒன்றைக் தேர்ந்தெடுக்க வேண்டியிருந்தது: பழைய ஸ்டெர்லிங் பரிவர்த் தனைத் திட்டத்திற்கு மறுபடியும் திரும்புவது, பொன் நாணயத் துடன் கூடிய ஒரு பொன் திட்டத்தைக் கையாளுவது, உண்மை யான பொன் நாணயமில்லாத ஒரு பொன்திட்டத்தைக் கை யாளுவது. இவற்றுள் ஸ்டெர்லிங் பரிவர்த்தனைத் திட்டத்தை, முன்னமேயே தோல்வியடைந்துவிட்டது என்றும், 'இந்திய மக்களின் நம்பிக்கையைப் பெறவேண்டுமானால், இந்தியச் செலா வணியை வெளிப்படையாகத் தெரியும்வகையில் பொன்னுடன் இணைக்கவேண்டும்' என்றும் கர்ரணம் காட்டி, ஆணைக்கழகம் நிரா கரித்தது. உண்மையான பொன்நாணயத்துடன் கூடிய பொன் திட்டத்தைக் கையாளுவது, உலகப் பொன் வெள்ளிச் சந்தைகளில் ஏற்ற இறக்கங்கள் எழுமாதலாலும் செலவு பெருகுமாதலாலும் விரும்பத் தக்கதன்று என்றும், அப்படி விரும்பத்தகுந்தது என்றாலும்கூட இம்முறையைச் செயலாக்குவது இயலாத காரியம் என்றும் கூறி இத் திட்டத்தைக் கைவிட்டது.[2]

1 பத்தொன்பதாம் நூற்றாண்டின் முடிவில் கையாண்ட முறை சாதாரண வழக்கை யொட்டிப் 'பொன் பரிவர்த்தனைத் திட்டம் (Gold exchange standard) என்று இதுவரை அழைக்கப்பெற்றது. சர் பேசில் பிளாக்கெட் (Sir Basil Blackett) அவர்கள், ஹில்டன் யங் செலாவணிக் குழுவிற்கு அளித்த தாக்கீதில், ரூபாய் நாணயம் பொன்னோடு இல்லா மல் ஸ்டெர்லிங் நாணயத்துடன் இணைக்கபபெற்றிருந்ததால், இம் முறையை 'ஸ்டெர்லிங் பரிவர்த்தனைத் திட்டம்' (Sterling Exchange Standard) என்றழைப்பது பொருத்தமாக இருக்கும் என்று குறிப்பிட்டார். ஆகவே பின்வரும் பக்கங்களில் இப் பெயரைக் கையாண் டிருக்கிறோம்.

2 'பொன் நாணயம் புழக்கத்திலிருக்கும் என்ற எண்ணத்தில், இந்திய நிதித்துறை தயாரித்த பொன்திட்டத்திற்குப் பத்து அல்லது பதினேராண்டுக் காலத்தில் £ 103 மில்லியன் மதிப்புள்ள பொன்னைத் திரட்ட வேண்டியிருக்கும் என்று மதிப்பீடு செய்யப் பட்டிருக்கிறது. சேமித்து வைப்பதற்காகவும், ஆபரணங்களுக்காகவும் தேவைப்படும் பொன் இத் தொகையில் சேர்க்கப்பெறவில்லை' (Midland Bank, Monthly Review, August-September 1926).

இந்திய மக்கள் பலத்த ஆதரவு காட்டும் பொன் நாணயம் விரும்பத் தக்கதாகவும், நடைமுறைக்கு இயைந்ததாகவும் இருக்கும். ஆனால், இம்முறையை உடனடியாகக் கையாளுவது பெருத்த இடையூறுகளை விளைவிக்கும் என்பதும், நாட்டிலுள்ள பொன்னைப் பதுக்கிவைக்கும் வழக்கத்தை முதலில் மாற்ற வேண்டுமென்பதும் தெளிவானவை. ஆகவே, நேரிடையாகச் செலாவணியைப் பொன்னுக மாற்றிக்கொள்ளக் கூடியதும், ஆனால், பொன்நாணயம் புழக்கத்தில் இல்லாததுமான ஒரு திட்டத்தின் மூலம், செலாவணியின் மதிப்பை (பொன்னோடு ஒப் பிட்டால்) மாற்ற மடையாமல் செய்யக் கூடும்' என்று ஆணைக் கழகம் யோசனை கூறியது. இத் திட்டத்தின்படி, புதிதாக நிறுவப் பெற இருந்த மத்தியபாங்கு (ரிசர்வு பாங்கு) 'சுத்தமான பொன்னை 400 அவுன்சுகளுக்குக் குறைவில்லாத அளவுகளில்' வரையறையின்றி வாங்கவும் விற்கவும் வேண்டும் என்று விதிப்ப தால், செலாவணியைப் பொன்னுக்கு மாற்றுவது எளிதாகக் கை கூடும்.[1] செலாவணித் தாள்களும் வெள்ளி ரூபாயும் புழக்கத்தி லிருக்கும். வெள்ளி ரூபாய் தொடர்ந்து சட்டச் செலாவணியாக இருக்கும்; ஆனால், சவரன்களுக்கும் அரைச்சவரன்களுக்கும் தற் பொழுது இருக்கும் சட்டச் செலாவணித் தன்மை நீக்கப்பெறும்.

அரசாங்கம் இந்த யோசனைகளை ஏற்றுக் கொண்டது. ஆனால், 1931ஆம் ஆண்டில் இங்கிலாந்து பொன்திட்டத்திலிருந்து விலகும் வரையில் எந்த நடவடிக்கையையும் எடுக்கவில்லை.[2]

பழைய ஸ்டெர்லிங் பரிவர்த்தனைத் திட்டத்தைவிட, இத் திட்டத்தில் என்ன பலனிருந்தது என்பது தெரியவில்லை. மக் களுக்கு வெளிப்படையாகத் தெரியும் வகையில் ரூபாய்களைப் பொன்னோடு இணைக்கும் நோக்கமும் இத் திட்டத் திலுள் நிறைவேறவில்லை. மேலும், ஒரு பொன் திட்டம் கை யாளப் பெற்றது என்றாலும் கூட, அத் திட்டம் குழப்பத்தை ஏற் படுத்தும் நிபந்தனைகளைக் கொண்டே யிருந்தது. இந் நிபந்தனை களால் இத் திட்டத்தில் இருப்பதாகக் கூறிய தனிச் சிறப்பும் மறைந்தது.[3] உண்மையான பொன் நாணயத்துடன் கூடிய ஒரு பொன்திட்டத்தைக் கையாளுவதாயிருந்தால் ஒழிய, சர் பேசில் பிளாக்கெட்[4] அவர்கள் கூறிய சில திருத்தங்களையும் மேம்பாடு

[1] 400 அவுன்சுகள் சுத்தமான பொன் என்பது ரூ. 22,650 அல்லது £ 1700-க்குச் சமானமாகும்.

[2] இந்தியா அதற்குப்பிறகு ஸ்டெர்லிங் பரிவர்த்தனைத் திட்டத்திற்குத் திரும்பியது.

[3] Midland Bank, Monthly Review, August-September 1926.

[4] 'Memorandum on the Indian Currency System' (Report of the Royal Commission on Indian Finance and Currency, 1926, vol. ii, appendix 7).

களையும் கொண்ட பழைய ஸ்டெர்லிங் பரிவர்த்தனைத் திட்டம் மிகவும் பொருத்தமாக இருந்திருக்கும்.[1]

விலை மட்டம் நிலையாக இருக்கும் காலங்களில், உலக விலை மட்டத்திற்கு ஏற்ப இந்திய விலைமட்டத்தைப் பேணும் அனுகூலம் ஸ்டெர்லிங் பரிவர்த்தனைத்திட்டத்திலிருக்கிறது. போருக்கு முந்திய காலத்தில் இத் திட்டம் மொத்தத்தில் சிறந்த முறையில் செயலாற்றியது; இத் திட்டத்தினுல் அதிகச் செலவாவதில்லை; ரூபாய் இந்தியாவில் ஒரு வசதியான அளவையாகும்; இந்தியாவுக்கும் இங்கிலாந்துக்குமிடையே இருக்கும் நெருங்கிய வாணிபத் தொடர்பின் காரணத்தால், ரூபாயை ஸ்டெர்லிங்குடன் இணைப்பது சாதாரணக் காலங்களில் பயன் தருவதாகும். இதி லுள்ள கேடுகள் எவையென்றால், உலக விலைகளில் பெரு மாற்றங்கள் இருந்தால் இந்திய உள்நாட்டு விலை மட்டத்திலும் பெருத்த ஏற்ற இறக்கங்கள் எழும்; ஸ்டெர்லிங் நாணய மதிப்பு (பொன்னெடு ஒப்பிட்டால்) நிலையாக இல்லாவிட்டால் இத் திட்டம் திருப்திகரமாக இருக்காது;[2] இது ஒரு நிருவகிக்கப்பட்ட திட்டமே ஒழிய தானே இயங்கும் திட்டமன்று. ஆகவே, அதன் வெற்றி அதை நிருவகிப்பவர்களின் திறமையைப் பொறுத்தே இருக்கிறது. மேலும் இது ஒருகீழ்த்தரமான திட்டம் என்றுகருதும் இந்திய சுதந்திரவாதிகளுக்கு இத் திட்டம் வெறுப்பையூட்டும்.

வரையற்ற சட்டச் செலாவணி இயல்புகளையுடைய (Unlimited legal tender characteristics) வெள்ளி ரூபாயினுல் எழும் பிரச்சினைகள், காகிதச் செலாவணி வெளியீட்டினுல் எழுவதேயன்றி உலோகச் செலாவணியால் எழுவதல்ல. 'இப் பிரச்சினைகளை 'ரூபாய் நாணயம் ஓர் அடையாள நாணயம் என்பதற்குப்

[1] முடிவில் இந்தியாவில் பொன் நாணயத்தைப் புழக்கத்திற்குக் கொண்டுவருவதற்காகச் செலாவணிக்குழு ஒரு யோசனையைக் கூறியது. மூன்று அல்லது ஐந்தாண்டுக் கெடுவுள்ள சேமிப்புப் பத்திரங்களை வழங்குவதென்றும் இப் பத்திரங்களைக் கெடு முடிந்தும் பொன்னுகவோ அல்லது சட்டச்செலாவணியாகவோ மாற்றிக்கொள்ளலாமென்றும், கெடுமுடிவதற்குள் சட்டச்செலாவணியாக மட்டுந்தான் மாற்றிக்கொள்ளலாம் என்றும் கூறியது அந்த யோசனை. இந்தயோசனையையும் மேற்கண்டதிட்டத்தில்சேர்த்திருக்கலாம் செலாவணிக் குழுவின் யோசனைகளில் இந்தச் சேமிப்புப் பத்திரத்திட்டம் இருந்தது. (Midland Bank, Monthly Review, August-September 1926).

[2] விலைமட்டத்தில் பெருத்த மாறுதல்களிருக்கும் காலத்தில், எந்த நாடும் தன்னுடைய செலாவணி முறையைப் பெரிய மாறுதல்கள் செய்யாமல் நிருவகிக்க முடியாது என்பதை மறந்து விடக்கூடாது. குழு பொன்திட்டத்தைக் கையாண்ட நாடுகளில்கூட அண்மையில் நடந்த போரின்பொழுது, பணவீக்கத்தை ஏற்படுத்த, 'மாற்றலாகாமை முறையைக்' (Inconvertibility)கையாள வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது. இந்தியா பொன் நாணயத்துடன் கூடிய ஒரு பொன்திட்டத்தைக் கையாண்டிருக்குமானுல், அதனுடைய எல்லா செலாவணிப் பிரச்சினைகளும் தீர்ந்திருக்கும் என்று கூறமுடியாது. எந்தத் திட்டத்தைக் கையாண்டாலும் சில சமயங்களில் இந்தியச்செலாவணி இடர்ப்பாட்டுக்கு உள்ளாவது தவிர்க்க முடியாததாகும். ஆகவே, ஸ்டெர்லிங் நாணயத்தின் மதிப்பு தாழ்ச்சியடையும், அதனுல் இந்தியச் செலாவணியும் இன்னலுக்குள்ளாகும் என்று எதிர்பார்ப்பது சரியல்ல.

பதிலாக வெள்ளியில் அச்சடித்த ஒரு காகிதத்தாள் என்னும் எண்ணத்தில்' அணுகவேண்டும் என்று சர் பேசில் பிளாக்கெட் அவர்கள் குறிப்பிட்டார்,'[1] அவருடைய கூற்றின் உண்மையை உணர்ந்தால், பழைய ஸ்டெர்லிங் பரிவர்த்தனைத் திட்டத்திற்கு மறுபடியும் திரும்புவதால் எழக்கூடிய கேடுகளைக் குறைக்கலாம். மேலும், சர் பேசில் பிளாக்கெட் அவர்கள் கூறிய திருத்தங்கள், 'நிருவகிக்கப்பட்ட' பொன்திட்டத்தில் சாதாரணமாக எழக்கூடிய மிகக் கேடான தீங்குகளை நீக்குவதற்குப் பேருதவியாக இருக்கும்.

ஆனால், வெள்ளி ரூபாய் வெளியிடுவது செலவை அதிகரிக்கும். மேலும், ரூபாயின் வெள்ளி மதிப்பு, நாணயமாற்று மதிப்பைவிட அதிகமாக இருந்து, வெள்ளிவிலை இம் மட்டத்திற்குக் குறைவாக இருந்தால்தான் ரூபாயின் நாணயமாற்று மதிப்பை நிலைப்படுத்த முடியும்.[2] இக் காரணங்களினால் வெள்ளி ரூபாய் காகிதச் செலாவணியைவிடத் தரக்குறைவானது என்பதை மறந்துவிடக் கூடாது.

இரண்டாவதாக, செலாவணிக் குழு ஒரு புதிய நாணய மாற்று வீதத்தை நிர்ணயிக்க வேண்டியிருந்தது. 1920–21ஆம் ஆண்டில் நாணய மாற்று வீதம் மிகவும் சரிந்தது என்றும், 1921ஆம் ஆண்டில் 1 ரூபாய் = 1ஷில்லிங் 3 பென்ஸ் ஸ்டெர்லிங்குக்கும் (அதாவது 1 ஷில்லிங் பொன்னுக்கு) கீழாக வீழ்ந்தது என்றும் கண்டோம். 1923ஆம் ஆண்டு ஜனவரி மாதத்தில் அது மீட்சியுற்று, 1924 செப்டம்பர் அக்டோபர் மாதங்களில் 1 ஷில்லிங் 6 பென்ஸ் ஸ்டெர்லிங்கை (அதாவது 1 ஷில்லிங் 4 பென்ஸ் பொன்) அடைந்து, அதற்குப் பிறகு அதே மட்டத்தில் ஊசலாடிக் கொண்டிருந்தது. 1925ஆம் ஆண்டின் கோடைக்காலத்தில் ஸ்டெர்லிங்கின் மதிப்பும் பொன்னின் மதிப்பும் ஒன்றுக ஆக்கப் பெற்றதால், அதற்குப் பிறகு நாணயமாற்று ஸ்டெர்லிங், பொன் இரண்டிற்கும் 1 ஷில் 6 பென்ஸ் என்ற வீதத்திலேயே நிலவிவந்தது. இதற்கிடையில், செலாவணிக் குழு அறிக்கையை வெளியிட்ட பொழுது கல்கத்தாவின் மொத்தவிலைக் குறியீட்டு எண்கள்

[1] Report of the Royal Commission on Indian Finance and Currency, vol. ii, appendix 7.

[2] V. 'The Indian Currency Report of 1919 and After' (Economica, October 1921). இவ்வறிக்கையில் பர்ன்ஸ் (Fr. Burns) அவர்கள், 'அடையாள நாணயங்களின் வெள்ளிமதிப்பு பொன்திட்டத்தைப் பாதிப்பதை அனுமதிப்பதால் ஏற்படும் இடையூறுகளைக்' குறிப்பிடுகிறார்.

(1925 ஜூலையில் 157 எண்கள்) ஏறக்குறைய இங்கிலாந்தின் விலைக்குறியீட்டு எண்களின் மட்டத்தை அடைந்தது.[1]

ஆகவே செலாவணிக் குழு, இந்திய விலைகளும் நாணய மாற்றும் உலகச் சூழ்நிலையை ஒட்டிச் சமநிலை அடைந்துவிட்டன என்று முடிவுசெய்து நாணயமாற்று வீதத்தை 1ஷில்லிங் 6பென்ஸ் ஆகிய புதிய மட்டத்தில் நிலைப்படுத்த வேண்டும் என்று யோசனை கூறியது.

இக்கருத்தை சர் புருஷோத்தமதாஸ் தக்கூர்தாஸ் அவர்கள் மறுத்தார். இந்தியவிலைகள் உலகவிலைகளுக்கு 1 ஷில்லிங் 6பென்ஸ் வீதத்தில் இன்னும் முற்றிலும் சமநிலை அடையவில்லை என்றும், 1 ஷில் 6 பென்ஸ் என்ற வீதமும் அரசாங்கம் கையாண்ட நேரிடை நடவடிக்கைகளால் கைவரப் பெற்றதேயன்றி இயற்கையாக அன்று என்றும் அவர் கருதினார்.[2] ஆகவே நாணயமாற்று வீதத்தை 1ஷில்லிங் 6பென்ஸ் என்று பேணுவது நாட்டில் பணவாட்டத்தை (Deflation) உண்டாக்கும் என்றும் அவர் கூறினார். இதனுடன் கூட, எதிர்காலத்தில் உலகெங்கும் பொன்னின் விலை இறக்க மடைய ஏது இருந்தது.[3] இவ்விரண்டு காரணங்களும் விலை இறக் கத்தையே உண்டாக்கும். இக் காரணங்கள் இந்திய உற்பத்தி யாளர்களுக்குப் பெருங்கேடு விளைவிக்கும் என்பதில் ஐயமில்லை. இத்தகைய நிலை ஏற்படும் என்ற எண்ணத்தை என்னால் தவிர்க்க முடியவில்லை. இந்த நிலை இந்திய உற்பத்தியாளரை அவருடைய தாங்கும் சக்திக்கு மீறி பாதிக்கும். சுருக்கமாகக் கூற வேண்டு மானால், இந்திய மக்கள்தொகையில் விவசாயத்தை நம்பிவாழும் ஐந்தில் நான்கு பகுதியினருக்கும் இது கேடு விளைக்கும், மிகக் கொடுமையான கேடுவிளைக்கும் என்று சர் புருஷோத்தமதாஸ் தக்கூர்தாஸ் அவர்கள் கூறினார்.[4] இக் கூற்றில், பம்பாயின் எண் ணத்தையே அதுவும், குறிப்பாக ஆலை முதலாளிகளின் எண் ணத்தையே அவர் பிரதிபலித்தார். சட்டப் பேரவைக்கு உள்ளும் வெளியிலும் பலத்த எதிர்ப்பு இருந்தும் கூட, 1 ஷில்லிங்

[1] இரண்டு இனங்களும் 1914ஆம் ஆண்டினை நாணயமாற்றின் அடிப்படையாகக் கொண்டவை.

[2] ஆணைக் கழகத்தின் மாறுபாட்டுக் குறிப்பைக் காணவும். சர் புருஷோத்தமதாஸ் அவர்கள், நாணயமாற்று வீதத்தை 1 ஷி. 4 பென்ஸ் (பொன்னுக்கு) மட்டத்தில் நிலைப் படுத்த 1914 செப்டம்பர்-அக்டோபர் மாதங்களில் கிடைத்த சந்தர்ப்பத்தை அரசாங்கம் அறிந்தும் வேண்டுமென்றே நழுவவிட்டது என்றும், அதற்குப்பிறகு நாணயமாற்று வீதத்தை 1 ஷில் 6 பென்ஸ் வீதத்திற்கு உயரச்செய்தது என்றும் குற்றஞ்சாட்டினார்.

[3] Times 1926 நவம்பர் 1 இதழில் City Notes என்ற தலைப்பில் பேராசிரியர் காசல் (Cassel) அவர்களின் கருத்துச் சுருக்கத்தைக் காணவும்.

[4] ஆணைக்கழகத்தின் மாறுபாட்டுக் குறிப்பைக் காணவும் (அறிக்கையின் 130-வது பக்கம்).

6 பென்ஸ் என்ற புதிய மட்டத்தில், நாணய மாற்றை நிர்ணயித்த 'ரூபாயின் நாணய மாற்றுச் சட்டம்' முடிவில் 1927ஆம் ஆண்டில் நிறைவேறியது.[1]

1 ஷில்லிங் 6 பென்ஸ் நாணய மாற்று வீதம் இயற்கையாக அடையப் பெற்றதா அல்லது அரசாங்கம் கையாண்ட நேரிடைக் கொள்கையின் விளைவா என்பதையும் இந்த வீதம் 1926ஆம் ஆண்டில் புதிய நாணய மாற்று வீதத்தை[2] முற்றிலும் ஒட்டி அமைந்துவிட்டதா என்பதையும் தீர்மானமாகக் கூற முடியாது ஆனால், உண்மையான நிகழ்ச்சிகளின் போக்கு, நாணய மாற்று வீதத்தினால் உற்பத்தியாளர்கள் பெருங் கேட்டிற்கு ஆளாகவில்லை என்று அறிவிக்கிறது. பருத்தி ஆலைத் தொழிலில் தொடர்ந்து இருந்த மந்தத்திற்கு வேறு பல காரணங்களையும் காட்டலாம்.[3] ஆனால், நாணயமாற்று வீதத்தை 1 ஷில்லிங் 4 பென்ஸில் மறுபடியும் நிர்ணயித்திருந்தால் ஆலை முதலாளிகளுக்குப் பேருதவியாக இருந்திருக்கும் என்றாலும், அந்த அளவுக்கு ஆலைத் தொழிலாளர்களின் மெய்க்கூலிகள் (Real wages) குறைந்திருக்கும் என்பதையும் மறந்துவிடக்கூடாது.[4] ஆகவே சர் புருஷோத்தமதாஸ் தக்கூர்தாஸ் அவர்கள் 'உற்பத்தியாளர்கள்' என்ற பதத்தை ஒரு குறிப்பிட்ட பொருளில்தான் பயன்படுத்தியிருக்கிறார் என்று தெரிகிறது. மேலும், நாணயமாற்று மறுபடியும் 1ஷில்லிங் 4 பென்ஸ் என்ற வீதத்திற்குத்திரும்புவதால் அகச் செல்லுகளின் ரூபாய்ப் பெறுமானம் பெருகியிருக்கும்; வரவு செலவுத் திட்டத்திலும் உபரிக்குப் பதிலாக ஒரு பற்றாக் குறையை ஏற்படுத்தி, மத்திய, மாகாண அரசாங்கங்களின் நிதிச் சிக்கல்களை மேலும் பெருக்கியிருக்கும்.

மூன்றாவதாக, செலாவணிக் குழு மத்தியப் பாங்கு ஒன்றைப் புதிதாக நிறுவவேண்டும் என்று யோசனை கூறியது. செலாவணி

[1] ஹில்டன் யங் அறிக்கையில் கண்ட முக்கிய யோசனைகளை அரசாங்கம் ஏற்றுக் கொண்டு, அவற்றை மூன்று சட்டங்களாக நிறைவேற்றியது. இவற்றுள் ரூபாயின் நாணயமாற்று வீதத்தை 1 ஷில். 6 பென்ஸ் என்று நிர்ணயிக்கும் சட்டம் உடனடியாக நிறைவேறியது. மேலே விவரிக்கப் பெற்ற முறையில் பொன்திட்டச் செலாவணியைக் கையாளும் யோசனையும், மத்திய ரிசர்வு பாங்கு ஒன்றை நிறுவும் யோசனையும் இரண்டாவது சட்டத்தில் அடங்கியிருந்தன. மூன்றாவது சட்டம், இம்பீரியல் பாங்கினுடைய அதிகாரத்தை அதிகமாக்கும் நோக்கத்தைக் கொண்டிருந்தது.

[2] Moral and Material Progress of India 1926–27, பக்கம் 89ல் உள்ள, நாணயமாற்று வீதத்தை 1 ஷில். 6 பென்ஸில் நிர்ணயிக்க வேண்டும் என்ற சர். பேசில் பிளாக்கெட் அவர்களின் வாதத்தைக் காணவும்.

[3] அத்தியாயம் 13-ஐப் பார்க்கவும்.

[4] விலைகள் ஏற்றமடையு மாதலால் மெய்க்கூலிகள் குறைந்திருக்கும். V. Moral and Material Progress of India, 1926-27. p. 111.

பாங்குச் செலவாணி இவ் விரண்டையும் கட்டுப்படுத்தும் அதிகாரம் ஓரிடத்தில் குவிந்திருக்க வேண்டுமென்ற கருத்தைக் குழு தெளிவாக வற்புறுத்தியது. இதுவரை செலாவணி வெளியீட்டை அரசாங்கம் செய்து வந்ததால், செலாவணிப் பிரச்சினைகளில் முழு அதிகாரத்தையும் செலுத்தி வந்தது. இதனால், பாங்குச் செலாவணியில் இம்பீரியல் பாங்குக்கு இருந்த அதிகாரம் குறைக்கப்பட்டிருந்தது. இணைப்பான ஒரு கொள்கையைக் கையாளுவதற்கு 'ரிசர்வு பாங்கு' என்ற பெயரில் ஒரு புதிய அமைப்பை நிறுவ வேண்டுமென்று செலாவணிக் குழு யோசனை கூறியது. செலாவணித்தாள்களை வெளியிடும் முழு அதிகாரமும் ரிசர்வு பாங்குக்குக் கொடுக்கப் பெறவேண்டும்;[1] அரசாங்கத்தின் (இந்தியாவிலும் இங்கிலாந்திலும் உள்ள) ரொக்க இருப்புகளும் அரசாங்கத்தின் செல்லுநடவடிக்கைகளும் (Remittance operations) அதனிடம் ஒப்படைக்கப் பெற வேண்டும்; இந்தியாவில் செயலாற்றும் எல்லாப் பாங்குகளின் காப்பு நிதிகளையும் அது வைத்திருக்க வேண்டும் என்றும் குழு கூறியது.

செலாவணி வெளியீட்டைக் கட்டுப்படுத்தக் கூடியதும் நாணய மாற்று வீதத்தை ஒழுங்குபடுத்தக் கூடியதும், அரசாங்கத்தின் பாங்கு நடவடிக்கைகளையும், செல்லு நடவடிக்கைகளையும் மேற்கொள்ளக் கூடியதும், பாங்க் ஆப் இங்கிலாந்துக்கு ஒப்ப பாங்குச் செலாவணியைக்கட்டுப்படுத்தக்கூடியதுமான ஒருமத்திய பாங்கை (ரிசர்வு பாங்கு) நிறுவுவது, செலாவணித்தனியாட்சியைப் புகுத்தவும், இந்தியச் செலாவணி முறையை மேம்படுத்தவும், இந்தியாவின் மூலதனச் சாதனங்களைத் திரட்டவும் பேருதவியாக இருக்கும்.[2] இந்தியாவில் பொறுப்புள்ள அரசாங்கம் நடைமுறைக்கு வந்த பிறகு அரசாங்கத்தின் நிருவாகத் துறைக்கு 'ஓர் அளவு அரசியல் செல்வாக்குக்குச் செவிசாய்க்க வேண்டிய அவசியம் கட்டாயம் ஏற்படும்; இத்தகைய செல்வாக்கின் பிடியிலிருந்து செலாவணியும், பாங்குச் செலாவணியும் விடுபட்டுச் சுதந்திரமாக இருக்கவேண்டும்'[3] என்று அப்பொழுது உணரப் பெற்றது. ஆகவே, புதிய ரிசர்வு பாங்கு, 'பாங்க் ஆப்

[1] சிறிது காலத்திற்குப் பிறகு அரசாங்கம் வெளியிட்ட காகிதச் செலாவணியைச் சட்டபூர்வமாக வெள்ளி நாணயங்களுக்கு மாற்றிக்கொள்வது நிறுத்தப்பெறும் என்றும், ஆனால் பலவகையான சட்டச் செலாவணியை ஒன்றுக்கொன்று மாற்றிக் கொடுக்கும். கடமை ரிசர்வு பாங்குக்கு இருக்கும் என்றும் தீர்மானிக்கப்பெற்றது.

[2] உண்டியல்களைக் கழிவு செய்யும் சந்தையையும் (Discount Market) உண்டியல் ஏற்புத் தொழிலையும் (acceptance business) வளர்ப்பது இந்திய வளர்ச்சிக்காக இந்திய மூலதனத்தைத் திரட்டுவதற்கு ஏதுவாக இருக்கும். (Moral and Material Progress of India, 1926-27, p. 234)

[3] Times, February 11, 1928.

இங்கிலாந்தை'ப் போன்று ஒரு பங்குதாரர்களின் பாங்காக இருக்க வேண்டுமென்றும் தீர்மானிக்கப்பெற்றது. இந்த யோசனை தான் ரிசர்வு பாங்குச் சட்டம் நிறைவேறுவதைப் பல ஆண்டு களாகத் தடுத்தது.

இவற்றுள், புதிய நிறுவனம் ஒன்றை உருவாக்குவதற்குப் பதிலாக இம்பீரியல் பாங்கை மாற்றி அமைத்துக் கொள்ளலாம் என்ற யோசனைபற்றிப் பலத்த கருத்துவேறுபாடு இருந்தது. புதிய நிறுவனம் ஒன்றை அமைப்பது இம்பீரியல் பாங்கினுடைய தகுதியைக் குறைக்கும் என்று பலர் கூறுகின்றனர். ஆனால், ஓர் உண்மையான மத்திய பாங்கின் பணிகளை இம்பீரியல் பாங்கு மேற்கொள்ள வேண்டுமானால், இம்பீரியல் பாங்கின் அமைப்பை மாற்றியமைக்க வேண்டுமென்றும், அப்படி மாற்றியமைத்தால் தற்பொழுது செய்துவரும் சாதாரண பாங்குப் பணிகளுள் பல வற்றை அது கைவிடவேண்டுமென்றும் செலாவணிக் குழு கூறியது. ஆகவே, இந்தியாவில் ரிசர்வு பாங்கு, இம்பீரியல் பாங்கு ஆகிய இரண்டுக்கும் தேவையிருக்கிறது என்றும், இவற்றுள் இம்பீரியல் பாங்கு இந்தியாவுக்கு உடனடியாகத் தேவைப்படும் பரவலான பாங்கு வசதிகளைச்[1] செய்து கொடுப்பதற்கு உதவியாக இருக்கும் என்றும் குழு கருதியது.

(நிபந்தனைகளுக் குட்பட்ட) புதிய பொன்திட்ட மொன்றை நிறுவுவதைப் பற்றியும், ரிசர்வு பாங்கு ஒன்றை நிறுவுவதைப் பற்றியும் செலாவணிக் குழு தந்த முக்கிய சிபாரிசுகளை அரசாங்கம் மார்ச் மாதத்தில் சட்டப் பேரவையின் இரண்டு அங்கங்களையும் கொண்ட கூட்டுக் குழு ஒன்றின் பரிசீலனைக்கு அனுப்பிவைத்தது. கூட்டுக்குழு பல தீவிரமான திருத்தங்களைக் கூறியது. திருத்தப் பெற்ற மசோதா 1927 ஆகஸ்டு, செப்டம்பர் மாதங்களில் சட்ட சபையில் விவாதிக்கப் பெற்றது. கூட்டுக் குழு கூறிய முக்கியத் திருத்தங்கள் (அ) மத்திய பாங்கு ஓர் அரசாங்க பாங்காகவே இருக்கவேண்டும், பாங்குதாரர்களின் பாங்காக இருக்கக்கூடாது; (ஆ) பாங்கில் அரசியல் செல்வாக்கு முற்றிலும் நீக்கப் பெறக் கூடாது, ஆனால் மத்திய சட்டப் பேரவை மூன்று நெறியாளர் களையும், மாகாணச் சட்டப் பேரவைகள் மூன்று நெறியாளர் களையும் நேரிடையாகத் தேர்ந்தெடுக்கவேண்டுமென்று விதிக்கப் பெறவேண்டும்; (இ) பாங்கின் கவர்னர் அல்லது துணைக் கவர்னர் இந்தியராக இருக்கவேண்டும்; (ஈ) பொன் மொகர் நாணயங்கள் அச்சடிக்கப் பெறவேண்டும் என்பவையே.

[1] பாங்க் ஆப் இங்கிலாந்தைப் போன்று இம்பீரியல் பாங்கிலும் செலாவணித்துறை ஒன்றைத் தனியாக நிறுவினால் இந்த நோக்கம் நிச்சயம் நிறைவேறும்.

ரிசர்வு பாங்கு, பங்குதாரர்களின் பாங்காக இருக்கவேண்டும் என்று அரசாங்கம் விரும்பியதன் முக்கியக்காரணம், பாங்கு அரசியல் செல்வாக்குப்பிடியிலிருந்து விடுபட்டுச் சுதந்திரமாக இயங்கவேண்டும் என்பதற்காகத்தான். ஆனால்,பங்குதார்ர்களின் பாங்கு முறை நடைமுறையில், அதிகாரத்தை இந்தியா மந்திரியிட மிருந்து பம்பாய், கல்கத்தா நகரங்களிலிருந்ததொழில் நிதியாளர் களின் (Industrial Financiers) கைக்கு மாற்றிக்கொடுத்துவிடும் என்று காங்கிரஸ் கட்சி அஞ்சியது.[1] அரசாங்க மசோதாவுக்குக் காங்கிரஸ் வட்டார்ரத்திலிருந்து எழுந்த எதிர்ப்புடன், பொன் செலாவணிக்கு உற்சாகம் காட்டியவர்களும் ரிசர்வு பாங்குத் திட்டம் முழுவதையும் வெறுத்தவர்களும் சேர்ந்துகொண்டு எதிர்ப்பை வலுப்படுத்தினர்கள். இதனால், மசோதாவை நிறை வேற்ற முடியவில்லை என்பது வெளிப்படையானதே.

நிதிமந்திரியான சர் பேசில் பிளாக்கெட் அவர்கள், பல சலுகைகளை அளித்துச் சமரச முயற்சியால் மசோதாவைக் காப் பாற்ற முனைந்தார்.[2] ஆனால், அவரால் சமரச ஒப்பந்தத்தின் அடிப்படையைக் கண்டுபிடிக்கமுடியவில்லை. முடிவில்,செலாவணிக் குழுவின் கொள்கைகளுக்கு எதிர்க்கட்சியின் யோசனைகளை இணங்கச்செய்வது இயலாத காரியம் என்று தோன்றியதால் அரசாங்கம் மசோதா முழுவதையும் (1927, செம்டம்பர் 12-ல்) கைவிட்டது. ஆனால், அரசாங்கம் இந்த மசோதாவைப்பின்னர் மறுபடியும் கொண்டுவந்து 'இந்திய ரிசர்வு பாங்குச் சட்டம்' என்ற பெயரில் 1934ஆம் ஆண்டில் சட்டமாக்கியது.

செலாவணிக்குழு தந்த மற்ற சிபாரிசுகளில் காகிதச் செலா வணியையும் பொன் திட்டக்காப்புகளையும் ஒன்றுக இணைக்க வேண்டுமென்றும், இணைந்தகாப்புகளின் வீதங்களையும் இனங்களை யும் சட்டத்தால் நிர்ணயிக்கவேண்டுமென்றும் நீண்டநாட் களாக இருந்துவந்த யோசனையையும் சேர்த்துக்கொள்ளலாம். இப்படிச்செய்வதால் தற்பொழுது இருக்கும் முறையிலுள்ள

[1] இந்திய விவசாயிகளுக்கும் தொழிலதிபர்களுக்குமிடையே நிலவும் பிளவுக்கு இது ஓர் எடுத்துக்காட்டாகும்.

[2] பங்குதாரர்கள் பாங்குக்குப்பதிலாக அரசாங்க பாங்கையும், ஆறு நெறியாளர்களைத் தேர்ந்தெடுப்பதையும் ஏற்றுக்கொள்ளும் அளவுக்குச் சலுகைகளை அளிக்க சர். பேசில் பிளாக்கெட் அவர்கள் முற்பட்டார். இவ்வாறு சலுகைகளை அளிப்பதை அவருடைய ஆதரவானர்கள் விரும்பவில்லை. இந்தியா மந்திரி தலையிட்டுச் சமரச ஒப்பந்தத்தைத் தடுத்தார் என்று கூறப்படுகிறது. V. Moral and Material Progress of India 1927–28, p. 272.

அவசியமற்ற குழப்பங்களைத் தவிர்க்கலாம்.[1] மொத்தம் வைத்திருக்க வேண்டிய காப்புநிதியின் அளவையும் குறைக்கலாம்.

காப்புநிதியை எங்கே வைத்திருப்பது என்பதுபற்றிச்செலாவணிக் குழு ஒன்றும் கூறவில்லை. இப் பிரச்சினையைப்பற்றி அதிகக் கருத்து வேறுபாடு இருக்கிறது என்றாலும், உண்மையில் இப் பிரச்சினை முக்கியத்துவம் வாய்ந்ததன்று. ஸ்டெர்லிங்பரிவர்த்தனைத்திட்டத்தின்கீழ்ப் பொற்காப்பு இலண்டனில்தான் பயன்பட்டது என்றும், இக் காப்பை இந்தியாவில் வைத்திருந்தால் நாணயமாற்றுக்குத் துணையாகப் பணியாற்றுவதற்கு முன்னால், அதை இலண்டனுக்குக்கப்பலேற்றி அனுப்பவேண்டியிருந்திருக்கும் என்றும் கண்டோம். பொன்திட்டத்தைக் கையாண்டிருந்தால், ரூபாய்களுக்குப் பொன்னை விற்பதன் மூலம் நாணயமாற்றுக்கு ஆதரவு அளிக்கப்பட்டிருக்கும். இந்த நிலையில் காப்புநிதி இந்தியாவில் தேவைப்பட்டிருக்கும், ஆனால், ஹில்டன் யங் குழு தந்த பொன்திட்டத்தில், சாதாரண காலங்களில் பொன்னை வாங்குவது இலாபகரமாக இருக்காதாதலால் முன்னைப்போலவே காப்புநிதி இலண்டனில் தேவைப்படும். இந்திய எண்ணத்தைக் கலந்து ஆலோசிக்கவேண்டுமா இல்லையா என்பதுதான் பெரும் பிரச்சினையாக இருந்ததாகத் தோன்றுகிறது. இந்தியர்கள் தீர ஆலோசித்துச் சிறிது அதிகச்செலவானாலும் காப்புநிதியை இந்தியாவில் வைத்திருக்கவேண்டுமென்று விரும்பினாலோ, அல்லது காப்புநிதியின் ஒரு பாகத்தை இந்திய வணிகர்கள் பயன்படுத்திக்கொள்வதால் கிடைக்கும் அனுகூலம் இந்தச் செலவுக்கு ஈடுகட்டும் என்று எண்ணினாலோ இதை எதிர்ப்பதில் எந்தவித நியாயமும் இருப்பதாக நான் கருதவில்லை. இக் கருத்து இப் பொழுது ஏற்றுக்கொள்ளப்பெற்று பொற்காப்பில் 17/20 பங்கு இந்தியாவிலேயே வைக்கப்பட்டிருக்கிறது.

மேற்கூறிய விளக்கத்திலிருந்தும் அண்மைக் காலத்து வாணிப நிதி வளர்ச்சியைப்பற்றி முந்திய அத்தியாயங்களில்[2] கண்ட விளக்கத்திலிருந்தும், தொழில் வளர்ச்சிக்கும் வாணிபவளர்ச்சிக்கும் அரசாங்க வருவாய்க்கும் நிலையான ஒரு செலாவணியையும் நாணய மாற்றையும் பேணவேண்டியது மிகமிக அவசியம் என்பதையும், இவ் வளர்ச்சிகளும் வீலைமட்டமும் சமுதாயத்தின் வாழ்க்கைத் தரத்தையே நிர்ணயிக்கின்றன என்பதையும் அறியலாம்.

[1] அரசாங்கம் வெளியிட்ட காகிதச் செலாவணியின் அளவுக்கும் அதற்கு எதிராக வைத்திருந்த ஸ்டெர்லிங் காப்பு, பொன் காப்பு இவற்றின் அளவுக்கும் அப்பொழுது ஒரு திட்டவட்டமான வீதம் இல்லை. இவ்விரு காப்புகளின் பணிகளும் வேற்றுமைப் படுத்தி விவரிக்கப் பெறவில்லை.

[2] அத்தியாயங்கள் 13, 14-ஐப் பார்க்கவும்.

1893ஆம் ஆண்டுக்கு முன்னர் இருந்தமுறை திருப்திகரமாக இல்லை என்பதிலும் அதற்குப்பின்னர் நிறைவேறிய சீர்திருத்தங்கள் பல மேம்பாடுகளைச் செய்தன என்பதிலும் கருத்து வேறுபாடு இல்லை. பொன்பரிவர்த்தனைத் திட்டம் அல்லதுஸ்டெர்லிங் பரிவர்த்தனைத்திட்டம் இரண்டும் ரூபாயின் நாணயமாற்று மதிப்பைப் பேணுவதில் வெற்றிகண்டன;மக்களின் தேவைகளுக்கு ஏற்ப அமைந்திருந்தன; சாதாரண காலங்களில் பழுதின்றிச் செயலாற்றின. ஆனால், இத் திட்டம் ரூபாய்-ஸ்டெர்லிங் நாணய மாற்றை நிலைப்படுத்தும் அடிப்படையில் அமைக்கப்பெற்றிருந்ததால் ஸ்டெர்லிங் நாணய மாற்றில் ஏற்ற இறக்கங்கள் உண்டாகும் பொழுது (உதாரணமாகப் போர்க்காலத்தில்) இத் திட்டமும் பாதிக்கப்பெறும். மேலும், விலை மட்டத்தைக் கட்டுப்படுத்தும் விதியொன்றும் இத் திட்டத்திலில்லை. இன்றைய உலகச்சூழ் நிலையில் இத்தகைய குறைபாடுகளைத் தவிர்க்க முடியாது என்றாலும் செலாவணிக்கட்டுப்பாட்டின்முழுஅதிகாரமும்(அந்நிய) அரசாங்கத்தின் கையில் இருந்ததால் எழுந்த ஐயப்பாடு இத் திட்டத்தினால் உண்டான தீங்கான விளைவுகளை மேலும் வளர்த்தது. இத் திட்டத்தைத் தானே இயங்கும் அடிப்படையில் அமைக்க வேண்டுமென்று போருக்கு முன்னரே வலியுறுத்தப்பெற்றது.

போரினால் எழுந்த சிக்கல்கள் தீவிரநடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டிய அவசியத்தை ஏற்படுத்தின. ஆனால், போர்முடிந்ததும் அரசாங்கம் கையாண்ட நடவடிக்கைகள் சிக்கல்களைச் சரியாகப்புரிந்து கொள்ளாமல் கையாளப் பெற்றன. இந்நடவடிக்கைகளால்நாணயமாற்றிலும் விலைகளிலும் இருந்த ஏற்ற இறக்கங்களைத்தடுக்க முடியவில்லை என்பதோடு அரசாங்கத்தைப் பெருநிதி நட்டத்திற்கு உள்ளாக்கின.

இத்தகைய அனுபவங்கள், மேலும் அடிப்படையான சீர்திருத்தங்கள் அவசியம் என்ற எண்ணத்தை அரசாங்கத்திற்கு ஏற்படுத்தின. இதற்கான யோசனைகள் பாங்கு வசதிகளையும் பாங்குச் செலாவணி வசதிகளையும் மேம்படுத்தவும், பரவலாக்கவும் மேற்கொண்ட திட்டத்துடன் இணைக்கப்பெற்றன. உண்மையில் இவற்றுள் பின்னவைகளே முடிவில் செலாவணி முறையில் எந்தவிதச் சீர்திருத்தமும் இல்லாமல் கையாளப் பெற்றன. ஸ்டெர்லிங் பரிவர்த்தனைத்திட்டத்தையும் இப் பொழுது நிலவும் நாணயமாற்று வீதத்தையும் (அதாவது1ஷில் 6பென்சுகள்) தொடர்ந்து கையாளுவதற்கான விதி 1934ஆம் ஆண்டு ரிசர்வு பாங்குச் சட்டத்திலிருக்கிறது. ஆனால் ரிசர்வு பாங்கு சம்பந்தமாகத் தலைமைக் கவர்னருக்கு அளிக்கப் பெற்றிருக்கும்

தனி அதிகாரங்கள் செலாவணிமுறையில் சமீபகாலத்தில் எவ்விதத் தீவிர மாறுதலையும் உண்டாக்க வழியில்லாமல் செய்கின்றன.

பொன்நாணயத்துடன் கூடிய ஸ்டெர்லிங் திட்டத்திற்குப் பதிலாகப் பொன்திட்டத்தைக் கையாளுவதற்கு இந்திய எண்ணம் ஆதரவு காட்டியது. இதனால், உலகெங்கும் பொன்னினுடைய வாங்குத்திறன் உயரும், வெள்ளியின் மதிப்புப் பெரிதும் இறங்கும் என்பதே இந்த யோசனைக்கு இருந்த (இன்னும் இருக்கிறது) ஒரு மறுப்பாகும். இந்த யோசனை பன்னாட்டு வாணிபத்திலும், செலாவணி நடவடிக்கைகளிலும் பெருத்த இடையூறுகளை விளைவிக்கும்; பொன்னை உபயோகிக்கும் எல்லா நாடுகளிலும் கடன் பளுவை அதிகரிக்கும்; வெள்ளியை வாங்கும் எல்லா நாடுகளுக்கும் (உதாரணம் அமெரிக்கா), வெள்ளியை வைத்திருக்கும் நாடுகளுக்கும் (உதாரணம் இந்தியா) பெரும் நட்டத்தை உண்டாக்கும். இப்பொழுதுள்ள பொன்னில் பெருமளவு அமெரிக்காவிடமிருக்கிறது. உலகப் பொன்உற்பத்தியில் பெரும் பகுதியையும் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் உற்பத்தி செய்கிறது. ஆகவே இங்கிலாந்து, அமெரிக்கா இவ்விரு நாடுகளில் ஒன்றின் மனப் பூர்வமான ஒத்துழைப்பு இருந்தாலொழிய, மேற்கண்டயோசனையை நிறைவேற்ற முடியாது. முட்டாள் தனமானதும் பெருங்கேடு விளைவிக்கக் கூடியதுமான இக் கொள்கையுடன் ஒத்துழைக்கும் எண்ணத்தை இவ்விரு நாடுகளில் எதுவும் விரும்பாது. மேலும் இவ்விருநாடுகளிலும் 1931ஆம் ஆண்டில் நிகழ்ந்த நெருக்கடியும் அதைத் தொடர்ந்திருந்த நிதிச்சிக்கல்களும் இந்த யோசனை நிறைவேறுவதை முற்றிலும் தடுத்துவிட்டன.

நாம் முன்னர்க் கண்டதுபோல, சட்டப்பேரவையின் அங்கத்தினர்கள் பங்குதாரர்களின் பாங்குக்குப் பதிலாக அரசாங்க பாங்கை விரும்பியதால் 1927ஆம் ஆண்டு ரிசர்வு பாங்கு மசோதா நிறைவேறவில்லை. ஒரு மத்தியபாங்கை அரசியல் கட்டுப்பாட்டுக்கு உட்படுத்தும் எண்ணத்திற்கு வெளிநாட்டுப் பாங்கியல் நிபுணர்கள் நிதிநிபுணர்களினுடைய கோட்பாடுகள் முற்றிலும் முரண்பாடுடையனவாக இருக்கின்றன.

ஆகவே, சட்டப் பேரவையின் இச்சைக்கு அரசாங்கம் இணங்கத் தயங்கியதற்கு யதேச்சையானபோக்கு என்பது பொருளன்று. பொது நலனுக்காகத்தான் தயங்கியதேயன்றி மக்களின் விருப்பத்திற்கு மதிப்புகொடுக்கக் கூடாது என்பதாலன்று.

இறுதியாக 1935ஆம் ஆண்டில் ரிசர்வு பாங்கை நிறுவுவதற்கு வழிகோலிய நிகழ்ச்சிகளை அத்தியாயம் 18-ல் விளக்க

மாகக் காணலாம். மத்தியபாங்கு ஒன்றின் உடனடியான அவசியத்தைப் பாங்கு விசாரணைக்குழு, வட்டமேசைமாநாட்டுக்(1930) கூட்டமைப்பு உட்குழு (Federal Structure Sub- Committee) இரண்டும் வலியுறுத்தின என்று மட்டும் இங்குக்குறிப்பிட்டால் போதும். இப் பிரச்னையை இந்தியப் பிரதிநிதித்துவக்குழு ஒன்று பரிசீலனை செய்த பிறகு, சட்ட மியற்றப்பெற்று, 1914ஆம் ஆண்டில் சட்டமாகியது.

---

16. மக்களின் செழுமை

§ 1. *இந்தியாவின் வளப்பத்திலிருந்த ஏற்ற இறக்கங்களுக்கு முக்கியக் காரணங்கள்.*

வளப்பத்தின் ஏற்ற இறக்கங்களில் பருவமழை, கொள்ளைநோய்கள், நிதி நிலைமை, உள்நாட்டு அரசியல் இயக்கங்கள், வெளிநாட்டு நிகழ்ச்சிகள் ஆகியவற்றின் பங்குகள்—பொதுவேலைகள் நிருமாணித்தல், நிதிக்கொள்கை இவற்றின் முக்கியத்துவம்—பத்தொன்பதாம் நூற்றாண்டின் முடிவிலிருந்து அவ்வப்போது வளப்பத்தில் ஏற்பட்ட முக்கிய மாற்றங்களைப் பற்றிய சுருக்கம்.

§ 2. *தலா வருமானத்தில் மாறுதல்கள்.*

இந்தியாவில் தலா வருமான மதிப்பீடுகள்—இந்தியாவின் மொத்த உற்பத்தி, மக்கள் தொகையைப் பேணுவதற்குப் போதிய அளவு இருக்கிறதா இல்லையா என்னும் பிரச்சினை—மக்களின் உணவுப் பழக்கம் உணவுப் பங்கீட்டுப் பிரச்சினை—வரிப்பளுவும் வரி நிலைப்பாடும் (Incidence of Taxation).

§ 3. *விலைகளும் கூலிகளும் வாழ்க்கைச் செலவும்.*

விலைகளிலும் கூலிகளிலும் ஏற்படும் மாறுதல்கள், நாட்டின் வளப்பத்தில் ஏற்படும் மாறுதலுக்கான ஓர் அறிகுறி - இந்தியா விலைகள், வருமானங்கள் இவற்றின் போக்கைப் பற்றிய ஆய்வு-1914 வரை உலக விலைகளைவிட இந்திய விலைகளில் ஏற்றம் அதிகமாக இருந்ததும் அதன் விளைவுகளும்—போருக்கு முற்பட்ட காலத்தில், விலைமாற்றங்கள் வளப்பத்தை அதிகரித்தன; ஆனால், 1914-க்குப் பின்னர் ஏற்பட்ட மாறுதல்கள் அவற்றைக் குறைத்தன; இருந்தாலும், மற்றக் காரணங்கள் அதற்கு ஈடு செய்தன என்ற முடிவு—1929 வரை நாட்டில் வளப்பம் பெருகியது என்ற கூற்றை வலுப்படுத்தும் சந்தர்ப்பச் சான்றுகள்—பம்பாய் மாகாணத்தில் கூலிகள் பற்றிய விசாரணை—முடிவுரை.

§ 1. இந்தியாவின் வளப்பத்திலிருந்த ஏற்ற இறக்கங்களுக்கு முக்கியக் காரணங்கள்.

இந்தியாவில், அண்மைக் காலத்தில் ஏற்பட்ட பொருளாதார வளர்ச்சியின் ஒவ்வோர் அங்கத்தையும் இதுவரை ஆராய்ந்தோம். ஆனால், இவ் வளர்ச்சியினால் நாட்டின் வளப்பத்தில் பொதுவாகவும், பாமர மக்களாகிய தொழிலாள வகுப்பினரின் நிலையில் குறிப்பாகவும் ஏற்பட்ட விளைவுகளை மதிப்பிடும்

முயற்சியில் ஈடுபடவில்லை. தலாவருமானம், விலைகள், கூலிகள், வாழ்க்கைச் செலவு[1] இவைகளை முக்கியமாகக் கவனத்தில் கொண்டு, மக்களின் வாழ்க்கைத் தரத்தில் ஏற்பட்ட மாறுதல்களை இந்த அத்தியாயத்தில் ஆராய்வதன் மூலம், இக் குறைபாட்டை நீக்கலாம். ஆனால், இத்தகைய ஆராய்ச்சி செய்வதற்கு முன்னர் வளப்பத்தில் அவ்வப்போது ஏற்பட்ட ஏற்ற இறக்கங்களின் இயல்பையும், அவற்றின் முக்கியக் காரணங்களையும் கவனிக்கவேண்டும்

இத்தகைய ஏற்ற இறக்கங்களின் போக்கை, 1872–73-க்கும் 1911–12-க்கும் இடையில் வெளியிடப்பெற்ற 'Moral and Material Progress of India'வின் பத்தாண்டு அறிக்கைகள் மூலமாகவும், 1912-க்குப்பின் ஆண்டு அறிக்கைகள் மூலமாகவும் அறியலாம்.[2] இவ் வேடுகள் தந்துள்ள புள்ளி விவரங்களைக் கொடுக்க இங்கு இடவசதியில்லை. ஆனால், பொருளாதார வளர்ச்சியின் ஒவ்வோர் அங்கத்தையும் நாம் விளக்கும்பொழுது, ஆங்காங்கே இப் புள்ளி விவரங்களைக் கையாண்டிருக்கிறோம்.

பெரும்பான்மையும் விவசாயத்தையே தொழிலாகக் கொண்டுள்ள இந்தியா போன்ற ஒரு நாட்டில், விவசாயிகளின் செழிப்பில் ஏற்படும் ஏற்ற இறக்கங்களில்தான் நாம் முதலில் கவனம் செலுத்தவேண்டும் என்பது தெளிவானதே. புராதனக் கைத்தொழில்கள் செய்பவர்களும், விவசாயிகளும் ஒருவரை ஒருவர் நம்பி வாழ்வதால் இவர்களையும் சேர்த்துக் கொள்ளல் வேண்டும்.

மக்களில் பெரும்பான்மையினரும், தங்களுடைய சாகுபடியையே ('பேரளவுத் தொழி'லும், வெளிநாட்டு வாணிபமும் ஓரளவுக்கு வளர்ச்சியுற்றிருந்தாலும்) நம்பி வாழ்கிறார்கள். இதனால், பருவ மழை (இது வெள்ளத்தையும் உண்டாக்கலாம் வறட்சியையும் உண்டாக்கலாம்) மிக முக்கியத்துவம் பெற்றிருந்தது, இன்றும் பெற்றிருக்கிறது என்று நாம் காண்கிறோம். அரசாங்க வருவாய், விவசாயிகளின் நிலை, புராதனக் கைத்தொழில்களை மேற்கொண்டவர்கள், இறக்குமதிப் பண்டங்களுக்கிருக்கும் தேவை, தொழில் உற்பத்தியாளர்கள், பண்டங்களைச்

[1] திட்டவட்டமான முடிவைக்காண்பதற்குத் தேவையான புள்ளிவிவரங்கள் கிடைப்பில்லை. ஆனால், கவனத்திற்குரியசிக்கலைப்பற்றி(குறிப்பாக 1900-க்கும் 1914-க்கும் இடைக்பட்ட காலம் நேரிடையும், மறைமுகமுமான சான்றுகள் சில உள்ளன. முதல் உலகப் போர், இயல்புக்கு மாறுன மாறுதல்களை உண்டாக்கியதால், 1914-க்குப் பிற்பட்ட காலத்தைப்பற்றி எந்த விதிமான முடிவுசெய்வதும் எளிதன்று. மேலும், அப்பொழுதிருந்த குழப்பமான நிலையிலிருந்து அடிப்படையான காரணங்களைப் பிரித்தெடுப்பதும் கடினமாக இருக்கிறது.

[2] 1911–12-க்குப் பின் பத்தாண்டு அறிக்கையும், 1934-க்குப் பின் ஆண்டு அறிக்கையும் கைவிடப்பெற்றன.

சந்தைக்கும் வெளிநாட்டுக்கும் அனுப்புபவர்கள் என்பன யாவும் வேளாண்மையின் தரத்தையே பொறுத்திருக்கின்றன. பொருளாதாரக் கொள்கையில் மாறுதலோ, பேரளவுத் தொழிலின் நிலையில் மாற்றமோ, வாணிபச் சூழ்நிலையில் பரவலான மாற்றமோ, அல்லது வேறெந்தத் தனிக் காரணமும் பருவ மழையின் முக்கியத்துவத்தைப் பெற்றிருக்கவில்லை. இக் காரணத்திற்காக அரசாங்கம் மேற்கொண்ட நடவடிக்கைகள் பலவற்றிலும் (இரயில்வேக்களையும் நீர்ப்பாசன வசதிகளையும் அபிவிருத்தி செய்தல், விவசாயத்தில் விஞ்ஞான முறையைப் புகுத்த எடுத்துக் கொண்ட முயற்சிகள், மற்ற வகையில் விவசாயிகளின் நிலையை உயர்த்த–உதாரணம்மாகக் கூட்டுறவுக் கடன் சங்கங்களை நிறுவினது–எடுத்துக்கொண்ட முயற்சிகள் இவைகள் போன்ற), பஞ்சத் தடுப்புக்காக அர்சாங்கம் எடுத்துக்கொண்ட முயற்சிகளுக்கு முதலிடம் கொடுத்துப் பாராட்டவேண்டும்.

வளப்பத்தில் ஏற்பட்ட குறுகியகால ஏற்ற இறக்கங்களுக்கு, பிளேக்கு, காலரா, குளிர் காய்ச்சல் போன்ற கொள்ளைநோய்களின் கொடுமைகள் இரண்டாவது முக்கியக் காரணமாக இருந்தன; இன்றும் இருந்துவருகின்றன. இந் நோய்கள் மக்களின் நலக் குறைவுக்கும், எண்ணற்ற இறப்புகளுக்கும் காரணமாக இருந்ததோடு, துறைமுகப் பட்டினங்களிலிருந்தும் தொழில் நகரங்களிலிருந்தும் மக்களின் இடப்பெயர்ச்சிக்கும் காரணமாக இருந்தன. இவற்றின் பொருளாதார விளைவுகள், தொழிற் காரணங்களாலும் வாணிபக் கர்ரணங்களாலும் ஏற்படும் விளைவுகளைவிட அதிகமாகவிருந்தன. ஆதலால், அரசாங்கப் பணிகளில், சுகாதாரப் பணிகளுக்கு முதலிடம் கொடுக்கவேண்டும். இப் பணிகள் கொள்ளை நோய்களைத் தடுப்பதற்கு மட்டுமன்றி மக்களின் பொதுவான சுகாதார நிலையை (சுகாதார நிலை குறைந்திருந்தால் அவர்களின் வேலைத் திறனும் குறைகிறது. அதனால் மக்களின் வருவாயும், அரசாங்க வருவாயும் குறைகின்றன.) உயர்த்தவும் அவசியமாகின்றன.

மூன்றாவது, நிதிக் காரணங்களும் செலாவணிக் காரணங்களுமாகும். இவைகள் வெளிநாடுகளில் தோன்றலாம். உள்நாட்டிலும் தோன்றலாம்; அரசாங்கம் கடைப்பிடிக்கும் கொள்கையினாலும் தோன்றலாம். 1873ஆம் ஆண்டுக்குப்பின் பொன்னின் மதிப்பில் ஏற்பட்ட ஏற்றம், 1920-ல் ஏற்பட்ட நாணயமாற்று நெருக்கடி, போருக்குப்பின் வரவு செலவுத் திட்டத்திலிருந்த பற்றாக்குறைகள், 1929-க்குப்பின் ஏற்பட்ட விலை வீழ்ச்சி இவைகள் யாவும் மந்தத்திற்கும் வளக்குறைவுக்கும் முக்கியக் காரணங்களாகும்.

நான்காவதாக, உள்நாட்டு அரசியல் இயக்கங்களும், பெரிய பொருளாதார விளைவுகளை உண்டாக்கின. மக்களின் விருப்பத்திற்கு ஏற்றதாக இல்லாவிட்டால், ஒரு சிறந்த பொருளாதாரத் திட்டம் நலன் பயக்காது. ஆனால், 1905ஆம் ஆண்டிலும் அதற்குப் பின்னரும் இருந்த சுதேசி இயக்கம், மகாத்மா காந்தியின் ஒத்துழையாமை இயக்கம் (1921-ல்) போன்ற அரசியல் கிளர்ச்சிகள் பொருளாதார முன்னேற்றத்திற்கும், பேரளவுத் தொழில் அமைப்புக்கும் தடையாகவே இருந்தன என்று எண்ணுவது தவறாகும். அதற்கு மாறாக, இவைகள் நாட்டு நடவடிக்கைகளிலும், பொருளாதாரப் பிரச்சினைகளிலும் மக்களை அக்கறை கொள்ளுமாறு செய்தன எனலாம். பிற்காலத்தில் இது ஒரு பொருளாதாரப் பயனாகவே இருக்கும். பழங்காலத்தில் உடலுழைப்பும் தொழில் நுட்பமும் கொண்ட வேலைகளை, இந்தியாவில் இழிவாகக் கருதினர். கல்வி கற்றவர்களின் முற்போக்குக் கொள்கையால், இவ் வெண்ணம் குறைந்துகொண்டு வருகிறது. பொருளாதார விடுதலைக்குத் தொழில் நுட்பப் பயிற்சியும், நிதித் துறையிலும், நிருவாகத் துறையிலும் திறமையும் நேர்மையும் அவசியம் என்பதை இந்திய மக்கள் உணரத் தொடங்கியுள்ளார்கள்.

இதைப்போலவே, மேற்கண்ட அரசியல் கிளர்ச்சிகள், கல்வி கற்ற இந்தியர்களுக்குத் தல ஆட்சி அமைப்பு, கூட்டுறவு இயக்கம் போன்ற பொதுப்பணிகளில் பங்குகொள்ள வேண்டிய அவசியத்தை உணர்த்தின. பொதுநல சேவை செய்வதில் அவாக் கொண்ட இந்தியர் பலர் (மூன்று மாகாண நகரங்களிலாவது) இதற்கான அடிப்படை வேலைகளைச் செய்வதில் தங்கள் வாழ்க்கையையே அர்ப்பணிக்கிறார்கள். ஆனால் இப்பணிகளைச் செவ்வனே செய்வதற்கு இன்னும் பலர் தேவைப்படுகிறார்கள்.

பத்தொன்பதாம் நூற்றாண்டுப் போர்கள் (அமெரிக்க சிவில் போர் போன்றவை), சூயஸ் கால்வாய் திறக்கப்பெற்றது, அமெரிக்காவில் 1907-ல் ஏற்பட்ட வாணிப நெருக்கடி, எல்லாவற்றையும்விட முதல் உலகப்போர் இவை போன்ற வெளிநாட்டு நிகழ்ச்சிகளும் இந்தியாவின் வளப்பத்தை வெகுவாகப்பாதித்தன. இந் நிகழ்ச்சிகளில் பலவும் இந்திய மக்களின் சக்திக்கும், அரசாங்கத்தின் சக்திக்கும் அப்பாற்பட்டவை. ஆனால், சர்வதேச அமைப்புகளும், சர்வதேசக் கூட்டுறவும் வளர்ச்சியுற்று வருவதால், உலக நாடுகளின் சங்கத்திலும் (League of Nations), சர்வதேசத் தொழிலாளர் அமைப்பிலும் (International Labour Organisation), மற்றும் பல அமைப்புகளிலும் இடம் பெறுவதன் மூலம்

இந்தியப் பிரதிநிதிகள் சர்வதேசக் கொள்கையிலும், நோக்கத்திலும் பங்குகொள்கிறார்கள்[1].

வளப்பத்திலிருந்த ஏற்ற, இறக்கங்கள் தொழில் துறையிலும், வாணிபத் துறையிலும் உண்டான மாறுதல்களால் நேரிடையாக எழுந்தவை என்று பல சந்தர்ப்பங்களிலும் தோன்றும். ஆனால், இவைகள் மேற்கூறிய ஒன்று அல்லது அதற்கு மேலான காரணங்களால் உண்டாயின என்பது முடிவில் தெரியும்.

அரசாங்கத்தைப்பொறுத்தஅளவில்,மற்றவைகளைவிட அதன் பொதுப்பணிகள் (விவசாயம், பஞ்சப் பிரச்சினை, வாணிபம் இவைகளில் அப் பணிகளின் விளைவும்) நாட்டின் பொதுவான வளப்பத்தைப் பெருக்கின. அரசாங்கத்தின் நிதிக் கொள்கைக்கு (அதன் பரந்த பொருளில்) இரண்டாவது இடம் கொடுக்க வேண்டும். அரசாங்கத்தினுடைய மற்றச் செயல்கள், பொருளாதார வளர்ச்சியை அவ்வப்போது ஊக்குவிப்பனவாகவோ தடைப்படுத்துவனவாகவோ இருந்தன. ஆனால், வேறெதுவும் வளப்பத்தைப் பாதிக்கும் முக்கியக் காரணமாக இல்லை. மற்றவைகளுடன் ஒப்பிட்டால், இவைகள் முக்கியக் காரணங்களாக இல்லை என்று கூறுவது அரசாங்கம் கடமை தவறியதை மன்னிப்பதாக ஒருபொழுதும் ஆகாது.

மேலே வலியுறுத்தியவைகளை உண்மை என்று நிரூபிக்கப் பத்தொன்பதாம் நூற்றாண்டின் முடிவு காலத்திற்குப் பிறகு வளப்பத்தில் ஏற்பட்ட முக்கிய ஏற்ற இறக்கங்களைச் சற்று விரைவாக இப்பொழுது கவனிப்போம்.

பத்தொன்பதாம் நூற்றாண்டின் கடைசிப் பத்தாண்டுகளில், வேளாண்மைக் குறைவாலும், பிளேக்கு நோயினாலும், ரூபாயின் பொன்மதிப்புக் குறைவாலும், வருவாய்க் குறையினாலும் நாட்டில் மந்தம் ஏற்பட்டது. இருபதாம் நூற்றாண்டின் ஆரம்ப ஆண்டுகளில், வேளாண்மை செழிப்பாக இருத்தது; வாணிபமும் விரிவடைந்தது. இவைகளுக்கு உதவியாக நிலையான நாணய மாற்றும் அமைந்திருந்தது. இதனால், மந்தத்திலிருந்து இந்தியா படிப்படியாக மீட்சியுற்றது. 1905ஆம் ஆண்டில், திலகர் அவர்களின் (Mr. Tilak) தலைமையில் நடந்த சுதேசி இயக்கம், தொழி

[1] உலக நாடுகளின் சங்கத்திற்கும் அதைப்போன்ற அமைப்புகளுக்கும் இந்தியாவுக்குப் பிரதி நிதித்துவ உரிமை இருக்கிறது. சர்வதேசக் கூட்டுறவின் விளைவுகளைப் பல அத்தியாயங்களில் முன்பு விளக்கினோம். அத்தியாயம் 4,7,12-ஐப் பார்க்கவும். Moral and Material Progress of India, 1926-27, p. 259 and 1927–28, p. 205-ஐப் பார்க்க.

லுக்கும் வாணிபத்திற்கும் தீங்கிழைத்தது. பொதுவான விலை மட்டத்தில், ஏற்றமும் மிக அதிகமாக இருந்தது. இருப்பினும் தொழில் முன்னேற்றமும் வாணிப வளர்ச்சியும் தொடர்ந்து இருந்தன.

1907ஆம் ஆண்டில் மழையில்லாததாலும் (அதனால் 1908-ல் அறுவடை குறைந்தது), அதே ஆண்டில் அமெரிக்காவில்ஏற்பட்ட நிதி நெருக்கடியினாலும் 1907ஆம் ஆண்டுக்கும் 1909 ஆம் ஆண்டுக்கும் இடையில் ஒரு சிறு மந்தம் தலைதூக்கியது. 1909ஆம் ஆண்டில் மறுமலர்ச்சி இருந்தது. ஊக வாணிபத்தாலும், தவறான நிதிமுறையினாலும், 1913ஆம் ஆண்டில் ஏற்பட்ட நிதிநெருக்கடி இதற்குத் தடையாக அமைந்தது. மொத்தத்தில் பார்க்கப்போனால் பொருளாதார முன்னேற்றமும் செழிப்பும் 1900ஆம் ஆண்டுக்கும், 1914 ஆம் ஆண்டுக்கும் இடைக்காலத்தில் தழைத்தோங்கின என்று கூறலாம்.

முதல் உலகப் போர்மூண்டது முதலில் சீர்குலைவையுண்டாக்கியது. அதற்குப் பின்னர் குறிப்பிட்ட சில இந்தியப் பண்டங்களுக்குத் தேவை அதிகரிக்கவும், இந்தியச் சந்தையில் இந்திய உற்பத்தியாளர்கள் முற்றுரிமை பெறவும் போர் ஏதுவாக இருந்தது. போர் தொழிலையும் வாணிபத்தையும் சீர் குலைத்தாலும், இந்தியாவின் பூகோள அமைப்பும், போரில் ஈடுபட்ட முக்கிய நாடுகளுடன் கொண்ட தொடர்பும் இந்தியாவுக்குத் தற்செயலான பலனைத் (தற்காலிகமாக இருந்தாலும்) தந்தது. மேலும், போர் பொதுவாகத் தொழில்துணிவையும் குறிப்பாக அரசாங்கத்தின் பொருளாதார முயற்சிகளையும் ஊக்குவித்தது. போர்க்காலம் முழுவதிலும், பருவமழை ஒருபோதும் தவறவில்லை பெரிய கொள்ளைநோய் எதுவும் ஏற்படவில்லை. விலையேற்றம், அதிலும் குறிப்பாக ஏற்றுமதிகளைவிட இறக்குமதிகளின் விலையேற்றமே தொல்லைகொடுக்கும் ஒரு காரணமாக இருந்தது.

போர் முடியும்வரை இயற்கை காத்திருந்தது போலும்! போர்நிறுத்த ஒப்பந்தம் செய்த உடனேயே பருவ மழையும் தவறியது; ஒரு கொடுமையான குளிர்காய்ச்சல் நோயும் தோன்றியது. 1918ஆம் ஆண்டில் ஏற்பட்ட மழையின்மை, அதற்கு முன் இல்லாத அளவுக்குப் பரவலாக இருந்தது. திறமையான பஞ்சநிவாரண நடவடிக்கைகளை அரசாங்கம் கையாண்டதாலும், மக்களின் பொருளாதாரநிலை உயர்ந்திருந்ததால் பஞ்சத்தின் கொடுமையைத் தாங்கிநிற்கும் சக்தி அவர்களுக்கிருந்ததாலும் நாம் முன்னர்க் கண்டதுபோல்[1], பட்டினியால் இறப்பு எதுவும் ஏற்

[1] அத்தியாயம் 1–ஐப் பார்க்கவும்.

படவில்லை. ஆனால் நாட்டில் பட்டினிச் சாவு இல்லாவிட்டாலும், மழையின்மை, பெருவாரியான மக்கள் மாண்டதற்கு மறைமுகமான காரணமாயிருந்தது. 1918ஆம் ஆண்டில் அறுவடைகள் குறைந்ததினால், போர்க்காலத்தில் ஏற்றுமதிகளின்மேல் அரசாங்கம் விதித்த கட்டுப்பாடு தொடரப் பெற்றதுடன், போர்க் காலத்திலிருந்ததைவிடத் தீவிரமாகவும் (1922 வரை) அனுசரிக்கப்பெற்றது. இதற்கிடையில் குளிர்காய்ச்சல்நோயும் நாட்டில் பேரழிவை உண்டாக்கியது.

1919ஆம் ஆண்டில் மழை எப்போதும்போல் இருந்தது. ஆனால், 1920ஆம் ஆண்டில், மறுபடியும் மழை அரைகுறையாகவே இருந்தது. இதனுடன்கூட உலகெங்கும் நெருக்கடியும், மந்தமும் நிலவின. இந்தியாவில் ஒத்துழையாமை இயக்கமும் வலுப்பெற்றது. கைராட்டினம்தான் நாட்டுக்குச் சேவைதரும் என்ற கூக்குரலும், இறக்குமதியான துணிகளை ஒட்ட வெறுத்தலும் வெளிநாட்டு வாணிபத்தைத் தடைசெய்தன. நாணய மாற்றிலிருந்த ஏற்ற இறக்கங்களும், இடையூறுகளும், வாணிபக் குறைவும் வருவாயைப் பாதித்தன. இதனால், அரசாங்கம், வரவு செலவுத் திட்டத்தைச் சமன்செய்யவும், ஆக்கம்தரும் பொருளாதாரக் கொள்கையைக் கையாளவும் முடியவில்லை. ஒழுங்காக அமைக்கப்பெற்ற தொழில்கள் வெகுவாகப் பாதிக்கப்பெற்று, பொருளாதாரத் துறையில் தேக்கமும் ஏற்பட்டது. 1921ஆம் ஆண்டுக்கும்1924ஆம் ஆண்டுக்கும்உள்ள (இவ் விரண்டாண்டுகளும் உட்பட) இடைக்காலத்தில் நாட்டில் நல்ல அறுவடைகள் இருந்தன. பொருளாதார மறுமலர்ச்சி தோன்றியதுடன், விவசாயத்திலிருந்து, வாணிபத்துக்கும் சில தொழில்களுக்கும் படிப்படியாகப் பரவியது. 1929ஆம் ஆண்டில், விலை வீழ்ச்சி உலகெங்கும் தோன்றியவரை (குறிப்பாக, விவசாயப் பொருள்களிலும் மூலப் பொருள்களிலும்) இம் மறுமலர்ச்சி தொடர்ந்திருந்தது. இவ் விலை வீழ்ச்சியினால் பொருளாதார நாட்டுணர்ச்சியும், வாணிபத் தடைகளும் உலகெங்கிலும் அதிகரித்தன. இந்த அத்தியாயத்தில் மந்தத்திற்கு முந்திய காலத்தைப் பற்றியனவே முக்கியமாக விளக்கப்பெறும்[1].

மேற்கண்ட சிறு விளக்கம், வளப்பத்திலிருந்த பருவகால ஏற்ற இறக்கங்களையும், அவைகளில் பருவமழை, கொள்ளை நோய்கள், நிதி, அரசியல் இயக்கங்கள், வெளிநாட்டு உள்நாட்டு நிகழ்ச்சிகள் இவைகளின் பங்கையும் தெளிவாக்குகிறது. இவை

[1] 1931ஆம் ஆண்டுக்கு பிற்பட்டகாலத்திற்கு அத்தியாயம் 18-ஐப் பார்க்கவும்.

யன்றி, நாட்டின் வளப்பத்தையும், குறிப்பாகப் பாமர மக்களின் செழிப்பையும் பாதிக்கும் நிரந்தரமான மற்றெந்தக் காரணத்தையும் காணமுடியுமா, முடியாதா என்ற வினா இப்பொழுது எழுகிறது. இதற்குப் பதில் பின்வரும் பக்கங்களில் காணலாம்.

§ 2. தலா வருமானத்தில் மாற்றங்கள்.

பத்தொன்பதாம் நூற்றாண்டின் ஆரம்ப காலத்திலிருந்தும் 1900-க்குப் பின்னரும் இந்தியாவின் மொத்த ஆண்டு உற்பத்தியில் மிகுந்த பெருக்கம் இருந்திருக்கிறது என்பதை யாரும் மறுக்க முடியாது. ஆனால், மக்கள்தொகையில் இருந்த பெருக்கத்திற்கு ஏற்றாற்போல் உற்பத்திப் பெருக்கம் இருந்ததா என்பதை அவ்வளவு அறுதியிட்டுக் கூறமுடியாது. இந்தியாவில் வருடாந்தரத் தலா வருமானத்தை நேரிடையாகக் கணக்கிடவும், மற்ற நாடுகளின் சராசரி வருமானங்களுடன் ஒப்பிட்டுப்பார்க்கவும் அவ்வப்போது முயற்சிகள் நடந்தன. ஆனால், இத்தகைய நம்பத்தகுந்த கணக்கீடுகளைத் தோராயமாகவாவது தொகுப்பதற்கு வேண்டிய விவரங்கள் இந்தியாவில் கிடைப்பதில்லை என்பதையும், தயாரிக்கப் பெற்ற கணக்கீடுகளும் மற்ற நாடுகளில் தொகுக்கப் பெற்றவைகளுடன் ஒப்பிட்டுப் பார்க்கமுடியாத நிலையிலிருக்கின்றன என்பதையும் குறிப்பிட வேண்டுவது மிக அவசியம்.[1]

இந்தியாவின் மொத்த நாட்டு வருமானத்தைக்கணக்கிடுவதில் தனித்தன்மை வாய்ந்த சில இடையூறுகள் உள்ளன. இங்கிலாந்தில் (U.K.) கீழ்க்கண்ட முறைகளில் இக் கணக்கைத் தயாரிக்கிறார்கள். (அ) உற்பத்தியாகும் எல்லாப் பண்டங்கள், பணிகள் இவற்றின் மதிப்புகளைக் கூட்டி, அதனுடன் நிகர இறக்குமதிகளையும் சேர்த்துக்கொள்ளுதல்; (ஆ) சமுதாயத்தில் உள்ள எல்லோருடைய வருமானங்களையும் கூட்டுதல்.[2] இவற்றுள், பின்னது திருத்தமான முறை என்பதோடு, தனிப்பட்டவர்களுடைய, பல வகுப்பினர்களுடைய தராதரச் செழுமையைப் பகுத்தாராய்வு செய்ய ஏதுவாகவும் இருக்கிறது. இதற்கான கணக்கெடுப்புகள்,

[1] ஒரே வகையான நாகரிகமும், பொருளாதார வளர்ச்சியும் கொண்டுள்ள நாடுகளினுடைய பொருளாதார நிலையை ஒப்பிட்டுப் பார்ப்பதற்கும் கூட (இங்கிலாந்து, பிரான்சு, ஜெர்மனி போன்றவை) சராசரி தலா வருமானத்தை உபயோகிப்பதைப் புள்ளிவிவர நிபுணாகள் ஆமோதிப்பதில்லை, ஆகவே, உதாரணத்திற்கு இந்தியாவிலும் இங்கிலாந்திலும் உள்ள தலா வருமானங்களை ஒப்பிட்டுப் பார்க்கும் எண்ணம் நகைப்புக்கு இடமானதாகும்.

[2] *V.* A. L. Bowley, The Division of the Product of Industry, 1921, p. 14, போசிரியர் பௌலே, Report on the Census of Prodction-இன் கணக்கீட்டையும் குறிப்பிடுகிறார். p. 59.

உள்நாட்டு வருவாய் விவர அறிக்கைகளையும் (Inland Revenue Returns), ஓர் அளவுக்குப் பூர்த்திசெய்யப்பெற்ற, கூலிகள், சம்பளங்கள் இவை சம்பந்தமான பதிவுகளையும் அடிப்படையாகக் கொண்டுள்ளன[1]. ஒப்பிட்டுப் பார்ப்பதற்கு ஏதுவான புள்ளி விவரங்கள் இந்தியாவில் கிடைக்கவில்லை. இத்தகைய மதிப்பீடு ஒன்றைத் தயாரிப்பதற்கான முயற்சி எதுவும் எடுக்கப்படவும் இல்லை. நாட்டின் மொத்த உற்பத்தியின் மதிப்பைக் கூட்டிக் கணிக்கும் முறையே இதுவரை கையாளப்பட்டது. ஆனால், இந்த முறையிலும்கூட, கிடைக்கும் விவரங்கள் தரக்குறைவானவையே. மீன்துறை, குடிசைத் தொழில் இவைகளின் உற்பத்தியையும், வியாபாரிகள், சிறு விற்பனையாளர்கள் இவர்களுடைய கட்டணங்களையும், இலாபங்களையும் செப்பனிடும் வேலையையும், போக்குவரத்துக் கட்டணங்களையும் (இரயில்வே நீங்கலாக) மதிப்பிடுவது மிகவும் கடினமாகும். இவைகள் யாவும் ஒருபுறமிருக்க, ஆலைத் தொழில்களின் உற்பத்தியைத் திருத்தமான முறையில் மதிப்பீடு செய்வதற்கான முயற்சியும் இயலாத ஒன்றாகும்[2]. எல்லா மதிப்பீடுகளும் பெரும்பாலும் விவசாய உற்பத்தியை மட்டுமே கணக்கில் எடுத்துக்கொண்டு அதனுடன் தொழில் உற்பத்தியின் மதிப்பில் தோராயமாக ஓர் அளவைச் சேர்த்துக்கொண்டன[3]. ஆனால், மொத்த விவசாய உற்பத்தி மதிப்பைக் கணக்கிடுவதற்குக்கூடத் தேவையான முழு விவரங்களும் கிடைக்கவில்லை.[4] இதுவரை கணிக்கப் பெற்ற மதிப்பீடுகளின் தரத்தைப் பற்றிக் கூற வேண்டுமானால், ஓர் ஆண்டின் உண்மையான சராசரி வருமானத்தைத் திட்டவட்டமாகக் காட்டாவிட்டாலும், ஒரே அடிப்படையில் தொகுக்கப் பெற்ற மதிப்பீடுகள், சராசரி வருமானம் வளர்ச்சியடைந்திருக்கிறதா அல்லது குறைந்திருக்கிறதா என்பதை அறிவிக்கிறது எனலாம்.

ஆகையால், இந்தியாவில் அவ்வப்போது கணக்கிடப் பெற்ற சராசரித் தலாவருமான மதிப்பீடுகளை நாம் சுருக்கமாகக் காணலாம்.

தாதாபாய் நௌரோஜி அவர்கள், மக்கள் தொகையின் சராசரித் தலாவருமானம், ஆண்டுக்கு இருபது ரூபாயாக இருந்தது

[1] *V.* A. L. Bowley, The Division of the Product of Industry p. 6 and pp. 14 and 15.

[2] Report of the Indian Economic Enquiry Committee, 1925, p. 93.

[3] V. Pamphlet issued by the Publicity Bureau, Madras: 'The Agricultural Income of the Madras Presidency,' and Mr. Findlay Shirras' Report on an Enquiry into Working Class Budgets in Bombay, 1923, p. 11. தொழில் உற்பத்தியின் மதிப்பைத் தோராயமாகக் கணக்கிடுவதில், பல மதிப்பீடுகளும் மாறுபட்டன. மற்ற விவரங்களைக் கீழே காணலாம்.

[4] Report of the Indian Economic Enquiry Committee, p. 17.

என்று 1870ஆம் ஆண்டில் கணக்கிட்டார்.[1] சராசரி வருமான ரூ. 27 என்று கணக்கிட்ட அரசாங்க மதிப்பீட்டை 1882- கிரோமர் பிரபு (Lord Cromer) அவர்கள் (அப்போது மேஜ இவ்லின் பாரிங் (Major Evelyn Baring) ஆக இருந்தவ குறிப்பிட்டிருந்தார்.[2] அந்த அரசாங்க மதிப்பீடு எந்த அடி படையில் கணக்கிடப் பெற்றது என்று அறிவிக்கப்படவில்லை 1875, 1895ஆண்டுகளுக்குப் பிரிட்டிஷ் இந்தியாவுக்குமட்டும் உரி தான ஒரு கணக்கெடுப்பை, மிகவும் விளக்கமான முறையி F. J. அட்கின்சன் (F. J. Atkinson) அவர்கள் தயாரித்தார சராசரித் தலாவருமானம் 1875ஆம் ஆண்டில் ரூ. 30·5 ஆ இருந்தது என்றும் 1895 ஆம் ஆண்டில் ரூ. 39·5 ஆக இரு தது என்றும் அவர் கணக்கிட்டார். ஆனால், அவருடை புள்ளிவிவரங்கள் பலவற்றின் அடிப்படை, திருப்திகரமாக இல்லை என்பதோடு, சராசரி வருமானத்தையும் மிகைப்படுத்திக் காட் வதாக இருந்தன. இருப்பினும், இரண்டு ஆண்டுக் கணக்கெடுப் களிலும் இத்தகைய தவறுகள் நிகழ்ந்தன என்றாலும் அவருடை புள்ளி விவரங்கள் தலாவருமானத்தில் வளர்ச்சி தோன்றியத அறிவிக்கின்றன. கர்சான் பிரபுவின் (Lord Curzon) 1901-க்கா மதிப்பீடு இதைவிட நம்பத் தகுந்ததாகவும், எல்லே ராலும் பொதுப்படையாக ஒப்புக்கொள்ளப்பட்டதாக இருந்தது. அவர் சராசரித் தலாவருமானம் ரூ. 30-க்குக் குற யாது, அதைவிட மேலாகவும் இருக்கலாம் என்று கண கிட்டார்.[5] புள்ளிவிவரத் துறையின் நெறியாளர் என்ற முற யில் ஃபிண்ட்லே ஷிர்ராஸ் (Mr. Findlay Shirras) அவர்க கர்ஸான் பிரபுவின் புள்ளிவிவரங்களைத் தம்முடைய கா வரைக் கொணர்ந்து, 1921ஆம் ஆண்டு வாக்கில் சரா வருமானம் ரூபாய் ஐம்பதுக்கும் உயர்ந்துள்ளது என்ற மு வுக்கு வந்தார்.[6] இவ் விரண்டு கணக்கெடுப்புகளும், 'விவசாயிக

[1] Poverty and Un-British Rule in India, by Dr. Dadabhai Naoroji. (Shah) அவர்களும் கம்பட்டா (Khambatta) அவர்களும் அவர்களுடைய Wea and Taxable Capacity in India, (p. 62 et seq) என்ற நூலில் நௌரோஜியினுடை முடிவுகளைத் (அதனுடன் மற்றெல்லா மதிப்பீடுகளின் முடிவுகளையும்) தொகுத்த ளார்கள். தொழில் மற்றும் பல துறைகளின் உற்பத்தியை மேலிடையாக மதிப்பி செய்ய டாக்டர். நௌரோஜி முயன்றார்.

[2] V. N. Bose, The Economic Aspect of the Montagu-Chelmsf Reform Schemes, p. 9.

[3] Journal of the Royal Statistical Society, June 1902.

[4] உதாரணமாக, மொத்த விவசாய உற்பத்தியிலிருந்து விதைக்காகவும், ந நடைகளின் உணவுக்காகவும், அழிவுக்காகவும் (Wastage) ஆண்டாண்டு 10 மில்லி டன் உணவுப்பொருள்களைக் கழிக்கவேண்டும் என்ற உண்மையை அவர் முற்றி மறந்து விட்டார்.

[5] Lord Curzon in India, vol i, p. 99

விவசாயிகளல்லாதவர்கள், இவர்களுடைய வருமானம் அந்தந்த வகுப்பினரின் எண்ணிக்கைக்கு ஏற்றாற்போல் பங்கிடப் பட்டுள்ளது...ஆகவே, விவசாய உற்பத்தி அல்லது விவசாய வருமானம் 1911-ல் ரூ. 876 கோடியாக இருந்து, விவசாயிகளல் லாதவர்களுடைய எண்ணிக்கை விவசாயிகளின்எண்ணிக்கையில் எட்டில் மூன்று பங்காக இருந்தால், விவசாயமல்லாத வருமானம் ரூ. 876 கோடியில் எட்டில் மூன்றாகும்; அதாவது, ரூ. 328 கோடியாகும் என்ற எண்ணத்தில் தயாரிக்கப் பெற்றன. ஆகவே, மொத்த வருமானம் ரூ. 876 கோடி, ரூ 328 கோடி இவைகளின் கூட்டுத் தொகையான ரூ. 1204 கோடியாகும். இதை மக்கள் தொகையால் வகுத்தால் தலா வருமானம் ரூ. 49·6 அல்லது ஏறக்குறைய ரூ. 50 என்பது கிடைக்கிறது.[1] அதே காலத்தில் மேலும் திருத்தமாகவும், விளக்கமாகவும் நடந்த ஒரு கணக்கெடுப்பு, சராசரி வருமானம் ரூ. 80 என்று கூறுவது பொருந்தும் என்ற முடிவுக்கு வந்தது.[2]

ஷிர்ராஸ் அவர்களின் மதிப்பீடுகள் அடிப்படையிலேயே தயா ரிக்கப்பெற்ற ஒரு விளக்கமான கணக்கெடுப்பு,1919-20-ல்சென்னை மாகாணத்தில் சராசரி வருமானம் ரூ. 102 ஆக இருந்தது என்று அறிவிக்கிறது.[3] இதைப் போருக்கு முன்னரான மதிப்பீடுகளுடன் ஒப்பிட்டுப் பார்ப்பதற்குமுன் 'ரூபாயின் வாங்குந் திறனில்' (Purchasing power of the rupee) ஏற்பட்ட குறிப்பிடத் தகுந்த வீழ்ச்சியைக் கவனத்தில் கொள்ளவேண்டும். 1919-20-லும், இந் நூற்றாண்டின் ஆரம்ப ஆண்டிலு மிருந்த வருமானங்களை ஒப் பிட்டுப்பார்ப்பதில், விலையுயர்வினால் இழந்த இடையூறுகளை, சென்னை செய்தித்துறைக் கழகம்(The Madras Publicity Bureau) குறிப்பிட்டுள்ளது. ஆனால், 'அரிசி உற்பத்தியின் அடிப்படையில் கணக்கிட்டால் கடந்த இருபது ஆண்டுகளில் சராசரி வருமானம் ஏறத்தாழ 40 சத வீதத்திற்கு உயர்ந்திருக்கிறது' என்று அக் கழகம் கருதுகிறது.[4]

பம்பாய் மாகாணத்தில், தலா வருமானம் நகரப்புற மாவட்டங்களில் (பம்பாய் நகரம் நீங்கலாக) ரூ. 100 ஆகவும்

[1] Ibid. p. 11.

[2] Ibid.

[3] Pamphlet issued by the Publicity Bureau, Madras, in 1921 entitled: The Agricultural Income of the Madras Presidency. இந்தக் கணக்கெடுப்பு மிகச் சிறந்ததும் திருந்தமானதுமாகும். இதில் 5 சதவீதத்திற்குமேல் தவறு இருக் காது. ஆனால், தேர்ந்தெடுக்கப்பெற்ற ஆண்டு ஓர் அசாதாரண ஆண்டாகும். அதற்கு முன்னுண்டில் பற்றாக்குறை அதிகமாக இருந்ததால் அந்த ஆண்டில் எப்போதுமில்லாத உற்பத்திப் பெருக்கமும் உயர்ந்த விலைகளும் இருந்தன.

[4] Ibid. – ⁶

கிராமிய மாவட்டங்களில் ரூ. 75 ஆகவும் இருந்தன என்ற, ஆய்வு செய்த 1921 ஆம் ஆண்டின் மக்கள்தொகைக் கணக்கெடுப்பை இங்குக் குறிப்பிடலாம்.[1] முடிவாக மிகவும் விரிவாகத் தயாரிக்கப் பெற்ற பேராசிரியர்கள் ஷா, கம்பட்டா (Shah and Khambatta) அவர்களின் மதிப்பீட்டிற்கு வருவோம்.[2] ஆனால், துரதிர்ஷ்ட வசமாகத் தொழிலாள வகுப்பினர்களின் நேரிடைப் பணிகளைத் தங்களுடைய மதிப்பீட்டில் சேர்த்துக்கொள்ள அவர்கள் தவறி விட்டார்கள். இதனால், புள்ளிவிவரங்களை மற்ற நாடுகளுடன் ஒப்பிட்டுப் பார்க்க அவர்கள் எடுத்துக்கொண்ட முயற்சி பயனற்றதாயிற்று மேலும், ஷா, கம்பட்டா இவர்களின் கணக் கெடுப்புகள் மிகவும் போற்றத் தக்கவை என்றாலும், இக் கணக் கெடுப்புகளின் அடிப்படையான புள்ளிவிவரங்கள் நம்பத் தகுந்தவையல்ல.[3] போருக்கு முன்னிருந்த காலத்தில் தலா வருமானத்தில் ரூ. 2-2-0 உயர்ந்திருக்கிறது என்று அவர்கள் முடிவு செய்தார்கள். போரின் போதும், போருக்குப் பின்னரும் ஏற்பட்ட சீர்குலைவைக் கவனித்தால் உண்மைத் தலாவருமானத் தில் ரூ.2-2-0 மட்டுமே உயர்வு இருந்தது என்று கூறுவது, அப்படியொன்றும் மிகக் குறைவான தொகை அன்று. இவ் வாண்டுகளில் பல நாடுகளின் தலாவருமானத்திலும், ஓர் அள வாவது வளர்ச்சியிருந்ததா என்பது சந்தேகத்திற்குரியதாகும். இருப்பினும், ஒரு திட்டவட்டமான மதிப்பீடு செய்வது முடியாத காரியமாகும். நிலவிய சூழ்நிலையை நோக்கினால், 19ஆம் நூற்றாண்டின் இறுதிக்காலம் முதற்கொண்டு சராசரி வருமானத் தில் தெளிவான வளர்ச்சி இருந்திருக்கிறது என்ற முடிவை, ஷா, கம்பட்டா இவர்களின் கடும்உழைப்பினால் ஆய்வு செய்யப்பெற்ற கணக்கெடுப்பு உறுதிப் படுத்துவதாகவே இருந்தது. 1900–1914 ஆண்டுகளுக்கிடையே, இவ் வளர்ச்சி குறிப்பிடத் தக்க அளவு இருந்தது. அதன் பிறகு வளர்ச்சி போரினால் பாதிக்கப்பெற்றது.[4]

[1] Moral and Material Progress of India, 1922–23, p. 197. ஜாக் (Mr. Jack) அவர்களின் The Economic Life of a Bengal District என்ற நூலில் உள்ள வங்காளத்திற்கான மதிப்பிடுட்டுடன் ஒப்பிட்டுப்பார்க்கவும்.

[2] Wealth and Taxable Capacity in India, Parts II, III and IV. ஷா அவர்களும், கம்பட்டா அவர்களும் டிக்பி (Mr. Digby) அவர்கள் இந்நூற்றாண்டின் ஆரம்பகாலத்தில் கணித்த தலா வருமான மதிப்பீட்டை மேற்கொண்டுள்ளார்கள். ஆனால், 'டிக்பி' அவர்களின் கருத்துகள் ஒருமுகமானவை என்பது வெளிப்படையான தால், அவருடைய மதிப்பீட்டை (மிகவும் குறைவானது) ஆராயத்தேவையில்லை.

[3] இந்த இடர்ப்பாடு 'Report of the Indian Economic Enquiry Committee'யில் (ஷா, கம்பட்டா அவர்களின் நூலைப் பற்றிக் குறிப்பாக இல்லாவிட்டாலும்) ஆராயப் பட்டுள்ளது. இக் கூற்றை மறுக்க முடியாது என்று அவ்வறிக்கை ஒத்துக்கொள்கிறது.

[4] சராசரி தலா வருமானம் ரூ. 30 ஆகவே இன்றும் இருக்கிறது என்று கருதும் நூலாசிரியர்களின் போக்கைக் கவனிக்கவும். V. Social Service Quarterly, October 1924, p.59. புள்ளிவிவரங்கள் விவாதத்திற்குரியவையானாலும், வளர்ச்சிக்கான எல்லா அறிகுறிகளையும் மறுப்பது தவருகும். Cf. Chap. xviii.

இயற்கையாகவே, வருமானநிலை மாவட்டத்திற்கு மாவட்டம் மாறுதலடைகிறது. நகரப் புறங்களில் அது மிக உயர்வாக இருக்கிறது. ஆனால், உயர்ந்த வாடகை, மக்கள் நெருக்கடி, பண விரையத்திற்கான கவர்ச்சிகள் போன்ற அங்குள்ள குறைபாடு களையும் கவனத்தில் கொள்ளவேண்டும். மண்வளம் குறை வாகவும், மழை நிலையற்றதாகவும் உள்ள சில கிராமியமாவட்டங் களில் (தக்காணத்தின் சில பகுதிகளைப் போன்று) அது மிகக் குறைவாகவும் உள்ளது.[1]

உற்பத்தியான முக்கிய உணவுப் பொருள்களில் ஏற்றுமதி யாகாமல், உள்நாட்டிலேயே உபயோகமாகும் பொருள்களின் எடையை மதிப்பிட்டு, அதை மக்கள்தொகையின் எண்ணிக்கை யால் வகுப்பதன்மூலம், சில சமயங்களில் இந்தியாவின் தலா வருமானம் கணக்கிடப் பெற்றிருக்கிறது. இந்த முறை மக்கள் தொகையில் தலைக்குக் கிடைக்கும் உணவுப் பொருள்களின் எடையைக் காட்டுகிறது. உணவுப் பொருள்கள் சமமாகப் பங்கிடப் பெற்றன என்று வைத்துக்கொண்டாலும், மக்களை உடல்நலத்துடனும், திறமையுடனும் பேணுவதற்குப் போது மான உணவுப் பொருள்கள் நாட்டில் உற்பத்தியாகின்றனவா என்னும் வினா எழுகிறது.

லுப்டன் (Mr. Lupton) அவர்கள், பிரிட்டிஷ் இந்தியாவில் 1919–20ஆம் ஆண்டில் 70·8 மில்லியன் டன் தானியங்களும் அரிசியும், 2·5 மில்லியன் டன் பழங்களும் காய்கறிகளும், 3 மில் லியன் டன் சர்க்கரையும் உற்பத்தி செய்யப்பெற்றன என்று கணக்கிட்டார்.[2] இந்த 76·3 மில்லியன் டன்கள் உணவுப் பொருள்களில் சுமார் 3 மில்லியன் டன்கள் ஏற்றுமதி செய்யப் பெற்று, மீதம் 73·3 மில்லியன் டன்கள் உள்நாட்டில் நுகர்வதற்கு (Consumption) கிடைத்தன. இதை மக்கள் தொகையால் (247–மில்லியன்கள்) வகுத்தால் தலைக்கு, ஆண்டுக்கு 665 பவுண்டு களும், ஒரு நாளைக்கு 1·82 பவுண்டுகளும் கிடைக்கின்றன. வேலை செய்யும் ஓர் ஆண், வேலை செய்யும் ஒரு பெண், ஒரு வயதானவர், இரண்டு குழந்தைகள் (வேலை செய்யாதவர்கள்) ஆகிய ஐந்து பேர்கள் கொண்ட குடும்பம் என்ற அடிப்படையில் கணக் கிட்டால் ஒரு சாதாரண குடும்பத்திற்கு 9 பவுண்டு உணவுப் பொருள்கள் கிடைக்கின்றன. இதில், ஒருநாளைக்கு ஆணுக்கு

[1] Moral and Material Progress of India, 1922-23, p. 198. See also Dr.H. Mann, Land and Labour in a Deccan Village, 1917.

[2] Happy India, chap. xiii, D. S. டியுபே (D. S. Dubey,) அவர்கள் மேலும் விரிவாகக் கணக்கிட்டார். 'The Indian Food Problem,' Indian Journal of Economics, July 1920 and January 1921.

2 பவுண்டுகளும், பெண்ணுக்கு $1\frac{1}{2}$ பவுண்டுகளும், சார்ந்திருப்பவர்கள் (Dependents) ஒவ்வொருக்கும் $1\frac{1}{4}$ பவுண்டுகளும் போக, $1\frac{3}{4}$ பவுண்டுகள் மிஞ்சும். இக் கணக்கெடுப்பில் விதைக்காகவும் கால்நடைகளின் உணவுக்காகவும் தேவைப்படும் தானியம் சேர்க்கப் படவில்லை. மேலும், பால், இறைச்சி, முட்டை, கோழி, மீன், வேர்க் கடலை போன்றவைகளும் இதில் அடங்கவில்லை. விதைக்காகவும், கால்நடைகளின் உணவுக்காகவும் செலவாகும் தானியம் கழிக்கப்பட்டால், மக்கள் தொகையில் தலைக்குக் கிடைக்கும் 1·82 பவுண்டுகளும், தலைக்கு 1·2 பவுண்டுகளாகக் குறைக்கப்பெறும் (ஆண்கள் பெண்கள், சார்ந்திருப்பவர்கள் என்று பாகுபாடு செய்யாமல்) என்று கணக்கிடப் பெற்றிருக்கிறது.[1]

கீழ்க் காணும் அட்டவணை, சிறைச்சாலையிலும், பஞ்சகாலத்திலும் உணவுப்பங்கீட்டின் அளவையும் பம்பாயில் சில தொழிலாள குடும்பங்களின் உண்மையான 'நுகர்வை'யும் காட்டுகிறது:[2]

பம்பாயில் குடும்ப வரவு செலவுத் திட்டம்	பம்பாய் சிறைச் சாலைகள்		பம்பாயில் பஞ்சகாலப் பங்கீடு		வங்காளச் சிறைச் சாலைகள்
	கடும் உழைப்பு	சாதாரண உழைப்பு	தோண்டுபவர்கள் (Diggers)	வேலை செய்யாதவர்கள்	
உணவுத் தானியங்கள் 1·29 பவு	1·5 பவு	1·38 பவு	1·29 பவு	0·86 பவு	1·38 பவு
பருப்பு வகைகள் 0·09 பவு	0·2 பவு				

இப் புள்ளி விவரங்களில் உணவுத்தானியங்கள், பருப்பு வகைகள் இல்லாத மற்ற உணவுப்பொருள்கள் சேர்க்கப்பெறவில்லை. மற்ற உணவுப்பொருள்கள், தொழிலாளர் குடும்ப வரவு செலவுத் திட்டங்களில் குறிப்பிடத் தகுந்த அளவு உள்ளன. ஆனால், சிறைச்சாலை, பஞ்சம் இவற்றின் விதித் தொகுப்பில் இவைகள் முக்கியமாக இல்லை. அதனுடன் இறைச்சி, மீன், ஊறுகாய், வாசனைத் திரவியங்கள், பழம், பல

[1] *V.* the Madras pamphlet quoted above.

[2] Findlay Shirras, Working Class Budgets in Bombay.

வகைச் சிற்றுண்டிகள் போன்றவைகளும் நீக்கப் பெற்றுள்ளன. 'இவற்றின் அளவுக்கான மதிப்பீடுகள் கிடைக்கவில்லை'[1]

உணவுப் பொருள்கள் சரிசமமாகப் பங்கிடப்படுகின்றன என்று வைத்துக்கொண்டால், மேற்கண்ட விவரங்களிலிருந்து, நாட்டில் தலைக்கு ஒரு நாளைக்குக் கிடைக்கும் 1·2 பவுண்டுகள் ஏறத்தாழ சிறைச்சாலை, பஞ்சகால உணவுப் பங்கீட்டின் அளவு தான் இருந்தன என்ற முடிவுக்கு வரலாம். உணவுத் தானியங்களில் பம்பாய் பஞ்சவிதித் தொகுப்பில் குறிக்கப்பட்ட அளவு தான் பம்பாய் சுயேச்சைத் தொழிலாளிகளும் நுகர்கிறார்கள் என்று குடும்ப வரவு செலவுத் திட்டங்கள் காட்டுகின்றன. அதனுடன் தொழிலாளிகள் ஒரு குறிப்பிட்ட அளவு மற்ற உணவை'யும் நுகர்கிறார்கள். அதாவது வாழ்க்கைக்கு இன்றியமையாத பொருள்களை மட்டும் அதிகம் உண்பதைவிட, தங்களுடைய வருவாயை மற்ற உணவுப் பொருள்களிலும் செலவிடுவதை அவர்கள் விரும்புகிறார்கள். தலைக்கு ஒருநாளைக்குச் சராசரி 1·2 பவுண்டு தானியப் பொருள்கள் கிடைத்தன என்பது, அதனுடன் சிறு அளவு மற்ற உணவுப் பொருள்களையும் சேர்த்துக்கொண்டால், ஓர் அளவுக்கு மக்களைப் பேணுவதற்கு அது போது மானதா யிருந்தது என்ற முடிவுக்கு வரலாம்.

இந்திய மக்களின் உள்ளூரத்தை (Stamina) வளர்க்கத் தேவைப்படுவது புரதமும் கொழுப்பும் அடங்கிய அதிகப்படியான மற்ற உணவுப் பொருள்களே யன்றி, அதிகப்படியான அரிசியோ, கோதுமையோ[2] அல்லது அதைப்போன்ற பொருள்களோ அன்று. உணவுத் தானியங்களை மிகுதியாகக் கொண்ட, தற்போது பழக்கத்திலிருக்கும் சாதாரண உணவில் மாவுப் பொருளே மிக அதிகமாக உள்ளன[3]. அமெரிக்கத் தொழிலாளிகள், ஜப்பானில் அனேத்து மக்கள் தொகை, சென்னையில் கைதிகள் இவர்களுடைய உணவுப்பட்டியல்களை, தாஸ் (Mr. Das) அவர்கள் தொகுத்திருக்கிறார்.[4] இத் தொகுப்பிலிருந்து சென்னைக் கைதிகள் தலைக்கு, மற்ற இரு வகுப்பினரைவிட மிகக்

[1] Findlay Shirras, Working Class Budgets in Bombay.

[2] பிண்ட்லே ஷிர்ராஸ் அவர்களின் கூற்றுப்படி பம்பாய் நகரத்தில் 67 சத வீத குடும்பங்கள் முக்கியமாக அரிசியையும், 12·9சத வீதம் ஜோவரையும் பஜ்ரியையும் (Jowar and Bajri), 8·4சத வீதம் கோதுமையும், கோதுமை மாவையும், 10சத வீதம் இவை எல்லாவற்றின பல விகிதங்களிலுமான கலப்பையும் உட்கொள்கிறார்கள். 30 சத வீதத்தினர் சைவர்கள் (புலால் உண்ணுதவர்கள்). கிராமிய மாவட்டங்களில் சைவர்கள் அதிகம். உணவும் பல தரப்பட்டதாக இல்லை. *V.* the article by Mr. Dubey on 'The Indian Food Problem,' Indian Journal of Economics, vol. iii.

[3] அரிசியில் மாவுப் பொருள் 78·3 சத வீதம் இருக்கிறது.

[4] Factory Labour in India 1923.

குறைந்த அளவுக்கு உணவுப் பொருள்களே உட்கொண்டாலும், அவர்கள் அதிகமான மாவுப்பொருள் கொண்ட உணவையே உண்கிறார்கள் என்பதை எடுத்துக்காட்டுகின்றன.

உணவுப் பொருள்கள் ஏறத்தாழ சரிசமமாகப் பங்கிடப் படுகின்றன என்று வைத்துக்கொண்டால், ஒரு நல்ல ஆண்டில் இந்தியா அதனுடைய மக்களே ஓர் அளவுக்கு உடல்நலத்துட னும் திறனுடனும் வைத்துப் பேணுவதற்குத் தேவையான உணவுப் பொருள்களே உற்பத்தி செய்து உள்நாட்டிலேயே வைத்துக்கொள்கிறது என்னும் முடிவுக்கு வரலாம். தேவைக்கும் பற்றுக்குறைக்கும் உள்ள வித்தியாசம் மிகக் குறைவு எனலாம். நாட்டின் பெரும் பகுதியில் பருவமழை தவறினுல், பாதிக்கப் பெற்ற தொகுதிகள் ஒருபுறமிருக்க, நாடு முழுவதிலும் உண்மை யில் பற்றுக்குறை உண்டாகிறது. இயற்கையான பருவமழை இல்லாவிட்டாலும், உணவுப் பொருள்களின் ஏற்றுமதியைத் தடைசெய்து, பஞ்ச நிவாரணத்தைத் திறமையுடன் மேற் கொண்டால், பட்டினியால் மக்கள் இறப்பதைத் தடுக்கப் போதுமான உணவு எப்பொழுதும் நாட்டில் இருக்கும். உற்பத்தி யாகும் உணவுப் பொருள்களின் தரத்தையும் அளவையும் மிகுதி யாக்கக்கூடிய வழிகளில் கவனம் செலுத்தினுல் கிடைக்கக்கூடிய பலன்கள் ஒருபுறமிருக்க, கிடைக்கும் பொருள்களேயே மேலும் நல்லமுறையில் பயன்படுத்திக்கொள்ள சாதிப்புகைச்சலும் பழக்க வழக்கங்களும் அனுமதித்தால், நாட்டின் மொத்த உற் பத்தியைப் பெருக்காமலே 'நுகர்வின்' அளவை மேம்படச் செய்யலாம். தற்போதைய உணவுப் பட்டியல் விவசாயிகளைவிட, சுரங்கங்களிலும் மற்றத் தொழிற்கூடங்களிலும் வேலைசெய்யும் தொழிலாளர்களுக்குத் திருப்திகரமாக இல்லே. மேலைநாடுகளில் நகர மக்கள், கிராமிய மக்களைவிட இறைச்சியை (மேலும் புரதப்பொருளைப் பலவகையிலும்) அதிகமாக உண்கிறார்கள் என்பது எல்லோரும் அறிந்த உண்மை. ஆதலால் நகரத்து மக்களுக்கு உணவு முறைகளைக் கற்பிக்கவேண்டிய நடவடிக் கைகளை அரசாங்கம் மேற்கொள்ளவேண்டுமென்றும், உப்புவளி உணவுப் பொருள்களை உடனடியாகக் கிடைக்க வழிசெய்ய வேண்டுமென்றும் சிலர் கருதுகிறார்கள்.[1]

[1] உதாரணமாக அஸ்ஸாமில் ஒரு தோட்ட ஆய்வாளர், (Garden Inspector) 'தோட்டங்களில் (Plantations) தேவையான உப்பு வளிப்பொருள்கள் அடங்கிய உணவை (உதாரணம் இறைச்சி, பால் அல்லது பட்டாணி, பருப்பு வகைகள் முதலியன) விநியோகிக்கவேண்டிய அவசியத்தைப் பற்றி அரசாங்கத்திற்கு வலியுறுத்தினர்' (Asiatic Review, January 1928), 1928ல் ப்ரௌடன் அம்மையார் (Miss Broguhton) உணவு முறையில் கல்வியறிவின் அவசியத்திற்காக மன்றுடினர். தொழிற்பகுதிகளில் உணவுப் பட்டியலின் முக்கியமான பொருள்களே அரசாங்கம் விநியோகிக்கலாம் என்றும் அவர் யோசனை கூறினர், (Social Service Quarterly, January 1923, pp 182, 83).

உணவுப் பொருள்கள் ஏறத்தாழ சரிசமமாகப் பங்கிடப் படுகின்றன என்ற பாவனையில், நாட்டில் உணவுப் பொருள் களின் உற்பத்தி, தேவையான அளவு இருக்கிறதா என்பதை இதுவரை ஆராய்ந்தோம். மேல்நோக்காகப் பார்த்தால், இந்தியாவின் பங்கீட்டு முறை மற்ற நாடுகளில் இருப்பதைவிட, அடிப்படையில் மாறுபட்டதாக இல்லை. ஆயினும், இரண்டு மாறுதல்களைக் குறிப்பிடலாம். முதலாவதாக, செல்வர்களுக் கும் ஏழைவகுப்பினருக்கும் உள்ள இடைவெளி மற்ற நாடு களைப் போலவே அதிகமாக இருந்தாலும், இந்தியாவில் செல்வர் களின் வீதம் மற்ற நாடுகளைவிடக் குறைவாகவே இருக்கிறது. இரண்டாவதாக, மூலதனத்தைத் திரட்டுவது மேனாடுகளைவிட இந்தியாவில் உடனடியாகத் தேவைப்படுகிறது. ஆதலால், (வருமான) ஏற்றத் தாழ்வுகளைக் குறைப்பதற்காக உடனடி யாகவும் தீவிரமாகவும் எடுக்கப்பெறும் எந்த முயற்சிக்கும் பெரிய எதிர்ப்பு உண்டாகும் என்பதோடு, அத்தகைய முயற்சி மேனாடுகளைவிட இந்தியாவில் குறைந்த பலனைத்தான் அளிக்கும் என்றும் எண்ண இடமுண்டு. இந்தச் சிக்கல், இந்தியா வில் வரிப்பளுவும், 'வரி நிலைப்பாடும்' எப்படியிருக்கின்றன, வருமான ஏற்றத்தாழ்வுகளைக் குறைக்கும் வகையில் 'நிலைப் பாட்டை' மாற்ற முடியுமா என்பன போன்ற கருத்து களை ஆராயவேண்டிய அவசியத்தை நமக்கு உண்டாக்கு கிறது.[1]

நிலவரி நீங்கலாக, மக்கள் தொகையில் ஒரு நபருக்கான வரிவிதிப்பு 1891–92-ல் ரூ. 2–4–0 லிருந்து 1901–2ல் ரூ. 2–6–0 ஆக வும், 1911–12-ல் ரூ. 2–11–6 ஆகவும், 1929–30–ல் ரூ. 4–1–9 ஆகவும் உயர்ந்துள்ளது.[2] நிலவரியையும் சேர்த்துக் கொண்டால் தலைக்கு ரூ.5–5–6 ஆக இருந்தது. 1931–32ஆம் ஆண்டில் நிலவரி நீங்கலான வரிவிதிப்பு ரூ. 3–9–8 ஆகவும், நிலவரியை உள்ளிட்ட வரிவிதிப்பு ரூ. 4–13–6 ஆகவும் குறைந்தன.[3] தலாவருமானத்துடன் ஒப் பிட்டுப் பார்த்தால் 'நிலைப்பாடு' உயர்வாக உள்ளது என்றும், இந்தியாவின் தேவைக்கும் சக்திக்கும் மீறிய நிலையில் இராணுவத் தையும், சிவில் பணிகளையும் நிருவகிப்பதற்காக இந்தியாவின் மேல் வரிப்பளு அதிகமாகச் சுமத்தப்பட்டிருக்கிறது என்றும்

[1] V. Report of the Indian Taxation Enquiry Committee (1924-25).

[2] V. Moral and Material Progress in India, 1901-2 and 1911-12, and Statistical Abstract for British India.

[3] உள்துறை (Local) வரிவிதிப்பு தலைக்கு ரூ. 3லிருந்து ரூ. 4 வரை கூடுதலாக உள்ளது.

அவ்வப்போது முறையீடுகள் எழுந்தன. அண்மை ஆண்டுகளில் நிலைப்பாடு பெருவாரியாக உயர்ந்திருக்கிறது என்ருலும், மற்ற நாடுகளுடன் ஒப்பிட்டுப்பார்த்தால் இந்திய நிலைப்பாடு இன்னமும் குறைவாகவே இருக்கிறது.[1]

தலா வருமானத்திற்கான நம்பத்தகுந்த புள்ளி விவரங்கள் கிடைக்காதவரை, வருமானத்திற்கு ஏற்ருற்போல் 'வரிப் பளுவை'க் கணக்கிடுவது முடியாத காரியமாகும். மேலும், பல மாவட்டங்களிலும் தராதர 'வரிப்பளு' வெகுவாக மாறுதலடைகிறது. 'வரிப்பளுவை'ப் பற்றிய ஒரு முடிவுக்கு வரவேண்டுமாஞல், அதிக வேறுபாடுகள் கொண்ட தொகுதிகள் பலவற்றிற்கும் விளக்கமான மதிப்பீடுகளைத் தயாரிக்கவேண்டும். ஆனல், இதுபோன்ற மதிப்பீடுகள் இதுவரை தயாரிக்கப்பெறவில்லை.[2]

கிடைக்கக்கூடிய சிறிதளவு விவரங்களிலிருந்து இந்தியாவில் வரிப்பளு அதிகமில்லை என்ற வெளிப்படையான முடிவுக்குத் தான் நான் வரமுடியும்.[3] வரி விதிப்பு மனம்போன போக்கிலு மில்லை. நிலையற்றதாகவும் இல்லை. மேலும், கிடைத்த வருவாயையும், அரசாங்கம் நல்ல முறையில்தான் பயன்படுத்தியது என்றும் கூறலாம். மேலே கண்டதுபோல்[4] நேர்முகமாகவும், மறைமுகமாகவும் உற்பத்தியாக்கும் செலவுகளுக்காக அரசாங்கம் அதிகப்படியான வரிவிதித்தால், அவ் வரிவிதிப்பு முடிவில் மக்களின் உண்மையான நலன்களுக்கே பயன்படும் என்று கூறலாம்.

வரிவிதிப்பின் நிலைப்பாட்டைப் பொறுத்த அளவில், ஏழை வகுப்பினர் மேலிருந்த வரிப்பளு அண்மைக் காலத்தில்

[1] இராணுவச் செலவு, இந்தியாவில் தலைக்கு 2 ஷில் 6 பென்ஸ் ஆக இருக்கிறது என்று 1922-ல் கணக்கிடப்பெற்றது. இதே செலவு தலைக்கு ஜப்பானில் 16 ஷில் ஆகவும், இங்கிலாந்தில் 75 ஷில் ஆகவும் இருக்கின்றன. (Journal of the United Services Institution, vol. iii, October 1922)

[2] இதைப் போன்றதொரு கணக்கெடுப்பைப் போருக்குச் சற்றுமுன்னர் வங்காளத்தி லுள்ள ஃபாரிட்பூர் (Faridpur) மாவட்டத்திற்கு J. C. ஜாக் (Mr. J. C. Jack) என்பவர் தயாரித்தார். (The Economic Life of a Bengal District, p. 117). அந்த மாவட்டத்தில், செலுத்தப்பெற்ற மொத்த வரி ஏறத்தாழ வருமானத்தில் 5 சத வீதம் அல்லது 1 பவுனுக்கு (ஸடெர்லிங்) 1 ஷில்லிங் என்று அவர் கணக்கிட்டார். இவ்வாறு 'நிலைப்பாடு' குறைந்திருந்ததற்குக் காரணம் ஒருபக்கம் மத்திய அரசாங்கத்தின் திறனும், மற்றொருபக்கம் உள்துறை நிருவாகத்தின் அசட்டையுமேயாகும் என்று ஜாக் அவர்கள் குறிப்பிட்டார்.

[3] இதனுல், வரிவிதிப்புப் பங்கீட்டை (distribution of taxation) அபிவிருத்தி செய்ய வேண்டியதில்லை என்றே, அல்லது சில குறிப்பிட்ட மாவட்டங்களிலோ, குறிப்பிட்ட இனங்களிலோ வரிப்பளு மிக அதிகமாக இல்லை யென்றே பொருள்படாது.

[4] *V.* Chap. xiv, § 5, செலவை அதிகரிப்பதின் அவசியத்தை அங்கு விளக்கினேம்.

குறைக்கப்பட்டிருக்கிறது என்றையும்[1] அரசாங்கத்தின் முக்கிய வரிச் சாதனங்களின் இயல்பு அபிவிருத்தி அடைந்திருக்கிறது என்றதம் முன்னரே கண்டோம். பிரதிநிதித்துவ அரசாங்கத்தைப் பரவலாக்கினால் இச் சாதனங்களை மேலும் மேம்படச் செய்யலாம் என்பதும் நாம் கண்டோம். ஆனால், தற்போதிருக்கும் அரசியல் சூழ்நிலையில், இத்தகைய அடிப்படையான மாறுதல்களுக்கான யோசனை கூறுவது அவ்வளவு எளிதன்று.

§ 3. விலைகளும் கூலிகளும் வாழ்க்கைச் செலவும்

பல்வேறு தேதிகளில் கணக்கிடப் பெற்ற உறுதியில்லாத தலாவருமான மதிப்பீடுகளை ஆராய்வதை விட, விலைகளிலும், கூலிகளிலும் ஏற்பட்ட மாற்றங்களைக் கூர்ந்து கவனிப்பதின் மூலம். இந்தியாவின் வளத்தில் முன்னேற்றத்துக்கான அறிகுறிகள் இருந்தனவா என்பதைத் தெளிவாக அறியலாம். கவனத்திற்குரிய காலத்தில் விலைமாற்றங்கள் சிக்கலுடையனவாயிருக்கின்றன. முதலாவதாக, இக் காலம் முழுவதிலும் பொதுவான விலைமட்டத்தில் ஏற்றம் இருந்தது. இதைத் தவிர விலைகளில் குறுகியகால ஏற்ற இறக்கங்களும், குறிப்பிட்ட சில பொருள்களின் விலைகளில் மாற்றங்களும், உள்நாட்டு வெளிநாட்டு விலை மட்டங்களில் மாறுபாடுகளும் இருந்தன. இவ்வாறிருந்த பலவகையான விலைமாற்றங்களால் ஏற்பட்ட விளைவுகள் எப்பொழுதும் ஒரே தன்மையாக இல்லை. ஆகையால், இந்த விலை மாற்றங்களைத் தனித் தனியாகப் பிரித்துப் பாகுபாடு செய்ய வேண்டியது அவசியமாகும். 1929ஆம் ஆண்டுவரை பொதுவான விலைமட்டத்தில் இருந்த ஏற்றத்தால் உண்டான விளைவுகளை நாம் முதலில் காண்போம்.

ஏறும் விலைகளோ அல்லது வீழும் விலைகளோ தொழிலாள வகுப்பினரின் நிலையை[2] உயர்த்தவோ அல்லது குலைக்கவோ செய்யும் என்ற நியதி இல்லை. ஆனால், விலைமாற்றங்களின் விளைவுகளை, விலைமாற்றங்களின் காரணங்களும் சூழ்நிலையுமே நிர்ணயிக்கின்றன. விலைகளின் ஏற்ற இறக்கங்கள் பொருளாதார நட்டத்தை உண்டாக்குவதோடு, விலை மட்டத்தில் ஏற்படும் விரைவான மாறுதல் ஊறு செய்வதாகவும் இருக்கின்றது என்பதில், பொருளாதார நிபுணர்கள் பலரும் ஒருமுகமான கருத்துக் கொண்டுள்ளார்கள். முற்றிலும் நிலையான விலைகள், அல்லது மெல்ல ஏறும் விலைகள், அல்லது மெல்ல வீழும் விலைகள் (சந்தர்ப்

[1] *V.* Chap. xiv.

[2] A. C. Pigou, Essays on Applied Economics, VII.

பத்திற்கு ஏற்ருற்போல) இவைகளே விரும்பத்தக்கவை என்று பலரும் கருதுகின்றனர். விரைவான விலைமாற்றங்களால் உண்டாகும் தீங்கான விளைவுகளைத் தற்காலிகமாக ஒதுக்கிவிட்டு, இந்திய மக்களுக்குப் படிப்படியாகவும், தொடர்ச்சியாகவும் ஏறும் விலைகளினுல் ஏற்படும் விளைவுகளை நாம் காண்போம்.

விலைகளில் ஏற்படும் ஒவ்வொரு மாறுதலும், மற்றவகுப் பினர்கள் செலவில் ஒரு வகுப்பினர் மட்டும் பயனடையும்படி செய்கிறது என்பது சாதாரணமாக எல்லோரும் ஒப்புக் கொள்ளும் ஒரு கருத்து. விலைகளில் ஏற்றம் ஏற்பட்டால், கடன் தருவோர்களும் (Creditors) மற்றும் நிலையான வருமானம் உள்ள வர்களும் தீங்கிழைக்கப்படுகிறார்கள். இதற்கெதிராகக் கடனுளிகள் (Debtors) எல்லோரும் இலாபமடைகிறார்கள்; விலையேற்றத்துடன், 'வாணிபமும் சுறுசுறுப்பாயிருந்தால்' மிகுதியான இலாபமும் அடைகிறார்கள்.[1] மேலும் 'கூலிகள்', 'விலைகளுக்கு'ப் பின்தங்கியே செல்கின்றன என்றுலும், விலையேற்ற காலத்தில் அதிகமான வேலை வாய்ப்புகள் இருப்பதாலும், அதிக ஊதியம் கிடைக்கும் வேலைகளுக்கு உயர்வுபெற வாய்ப்பிருப்பதாலும், கூலியீட்டுவோர் (Wage-earning Classes) இலாப மடைகிறார்கள். ஆகையால், விலை ஏற்றத்துடன் வாணிபச் சுறுசுறுப்பும் தற்செயலாக ஒன்றியிருக்கும் காலத்தில், தொழில் துணிவு (Enterprise) ஊக்குவிக்கப்பெறுகிறது. மூலதனமும் தடையின்றி உபயோகப் படுத்துவதற்குத் திரட்டப்படுகிறது. இதற்கெதிராக விலைகள் வீழ்ந்தால், தொழில் துணிவின் ஊக்கம் தடைசெய்யப்படுகிறது. கடனுளிகளும் நிலையான வருமானம் உடையவர்களும் பாதிக்கப் பெறுகிறார்கள்.

இந்திய மக்களில் பெரும்பாலோரும், விலை ஏற்றத்தால் பயனடையும் வகுப்பினராகவே இருக்கிறார்கள்.

நிலையான வருமானம் உள்ளவர்களின் எண்ணிக்கை மிக மிகக் குறைவு. கடன்தருவோர்களில் பெரும்பான்மையினரும் வட்டிக்குக் கடன் கொடுப்பவர்கள். பயன்தரும் பணிகள் சில வற்றை இவர்கள் செய்துவந்தாலும், மொத்தத்தில் இரத்தத்தை உறிஞ்சுபவர்களாகவே இருக்கிறார்கள். இவர்கள் பெறும் வருமானம், சமுதாயத்திற்கு இவர்கள் செய்யும் தொண்டுக்கு ஏற்றதோ உரியதோ அன்று. கடனுளிகளின் எண்ணிக்கை, குறிப்

[1] Monetary Stability, by T. R. Bellerby, p. 82. இதைப்போலவே, இந்தியா ஒரு கடனுளி என்ற முறையில் ரூபாயின் எக்ஸ்சேஞ்ச் மதிப்பு இறங்குதல் (அதாவது நாணயமாற்று ஏறுதல்) நட்டமும், ஏறுதல் இலாபமும் அடைகிறது.

பாகக் குடியானவர்களிடையே மிகமிக அதிகம். நூதன விவசாய முறைகளைக் கையாளுவதை இக் கடன்பளு மட்டுப் படுத்துகிறது என்பதில் ஐயமில்லை. மக்கள் தொகையில் பெரும்பாலோரும் வாழ்க்கைக்குத் தேவையான விளைபொருள்களைச் சாகுபடி செய்து, மிகுதியை விற்கும் சிறு விவசாயிகளாகவே இன்னும் இருக்கிறார்கள். விலை ஏற்றம் எல்லாப் பொருள்களிலும் சமமாக இருந்தால், பொருள்களை வாங்குவதின்மூலம் ஏற்படும் நட்டத்தை ஈடுசெய்யும் அளவுக்கு இவர்கள் தங்களுடைய விற்பனையின் மூலம் இலாபமடைகிறார்கள். அவர்களில் பெரும்பாலோர் கடனாளிகள் என்ற முறையிலும் இலாபமடைகிறார்கள். மேலும், நிலவரிக் கட்டணம் நீண்ட காலத்திற்கு ஒருமுறைதான் மாற்றப் படுவதால், நிலவரி மூலமாகவும் அவர்கள் இலாபமடைகிறார்கள். நிலவரிக் கட்டணம் உயர்த்தப் பெற்றாலும், விவசாயிகளுக்குக் கிடைக்கும் இலாபம் அனைத்தையும் பிரித்துக் கொள்ளும் அளவுக்கு உயர முடியாது. ரொக்கவாரங்களும் (Cash rents) விலைகளுக்குப் பின்தங்கியே செல்கின்றன. அதிக மூலதனமும், தற்போதிருக்கும் மூலதனத்தை உற்பத்தியாக்கும் துறைகளில் முதலீடு செய்வதுமே இந்தியாவின் உடனடியான தேவைகள் என்பதால், விலையேற்றத்தினால் இவைகள் ஊக்குவிக்கப்படுவதை வரவேற்க வேண்டும்.

மற்ற நிலவரங்கள் நிலையாக இருந்தால் விலைகளில் ஏற்படும் நிதானமான ஏற்றம், இந்தியாவுக்குப் பயனளிக்கும் என்று முடிவாகக் கூறலாம். இவ்வித விலையேற்றத்தால் கிடைக்கும் பலன்களில் பெரும்பகுதியும் முதலில், முதலாளிகளும் தொழிலதிபர்களும் கொண்ட ஒரு சிறு வகுப்பினரின் கைக்குத்தான் போய்ச் சேரும். இருந்தாலும், இதன்மூலம் அதிக மூலதனம் தொழிலீடுபாடுகளில் முதலீடு செய்யப் பெறுவதால், தொழிலாளர் தேவையும், நாட்டின் ஆதாரங்களின் மதிப்பும் அதிகரிக்கின்றன. இவ்வாறு நாடு முழுவதும் (தொழிலாள வகுப்பினர் உள்பட) மறைமுகமாகப் பயனடைகிறது.[1] 'முதற் கருவிப் பொருள்கள்' (Capital Goods) மிகவும் பற்றாக்குறையாக உள்ள இந்தியா போன்ற நாட்டில் இவற்றை அதிகரிப்பதால் அதிகப் பயன் கிடைக்கும். இருப்பினும், வளப்பத்தின் பலன்களை உழைப்புத் திறனும், வாழ்க்கைத் தரமும் உயரும் வழிகளில் எவ்வளவு விரைவில் முடியுமோ அவ்வளவு விரைவில் தொழிலாளர்களுக்குக் கிடைக்கும்படிச் செய்ய வேண்டியது அவசியமாகும். இந்திய விலைகளிலும், வருமானங்களிலும் அண்மையில் ஏற்பட்ட

[1] பொருளாதார வளர்ச்சி பெற்றுள்ள நாடுகளுக்கு இதே கோட்பாட்டை உபயோகிப்பது சந்தேகத்திற்குரியது என்று நான் கருதுகிறேன்.

மாறுதல்கள் பற்றிய தகவலும் புள்ளிவிவரங்களும் பின்வருபவை களிலிருந்தே கிடைக்கின்றன. அவையான : விலைகள் பற்றி அரசாங்கம் வெளியிடும் புள்ளிவிவரங்கள்; கூலிகள் பற்றிப் பூர்த்தி செய்யப் பெறுத சில புள்ளி விவரங்கள்; மற்றும் இந்தியாவில் விலை ஏற்றத்திற்கு காரணம் என்ன என்று 'தத்தா' (Mr. Datta) அவர்கள் 1890–94–க்கு இடையிலும், பின்னர் 1912–லும்[1] ஆய்வு செய்தபோது திரட்டிய விவரங்களில் சில விலைகள் பற்றிய அரசாங்கப் புள்ளி விவரங்கள் விலைமாற்றங்களின் உண்மையைப் பிரதிபலிப்பனவாக இருந்தன என்று கொள்ளலாம்.[2] ஆனால் கூலிகள் பற்றிய விவரங்கள் நிறைவுபெறுமல் இருக்கின்றன. கூலிகள் பற்றிய புள்ளி விவரங்கள் அனைத்தும் இந்தியாவில் ஒரு பொழுதும் ஒழுங்காகத்திரட்டப்பெறவில்லை. ஆனால், குறிப்பிட்ட சில தொழில்களிலும் தொகுதிகளிலும் கூலிகள் பற்றிய நம்பத் தகுந்த அறிக்கைகள் ஒன்றிரண்டு வெளியிடப் பெற்றுள்ளன.[3]

இந்தியாவில் 1900–க்கும் 1914–க்கும் இடையில் விலைகள் விரைவாக அதாவது குறியீட்டு எண்கள் (Index Number) 118 லிருந்து 150–க்கு (1890–94–ல் நிலவிய விலைகளின் அடிப்படையில்) ஏறின. 1907–8–ல் தற்காலிகமாக ஏற்பட்ட 'மந்த' காலத்தைத் தவிர்த்து, 1904–5–க்குப்பின் விலைகளின் ஏற்றம் மிக விரைவாக மற்ற நாடுகளைவிட அதிகமாகவும் இருந்தது.[4] போர் மூண்டதற்குப் பின், 1920ஆம் ஆண்டில் உச்ச நிலை அடையும்வரை விலைகள் தொடர்ந்து ஏறிக்கொண்டே இருந்தன. ஆனால், இக் காலத்தில் விலையேற்றத்தின் வேகம் அயல்நாடுகளைவிடக் குறைவாக இருந்தது. போர் முடிந்ததும் உண்டான பெரிய மந்தத்தின்போது இந்தியாவில் விலைகள்

[1] Report on the Enquiry into the Rise of Prices in India (1914) five volumes. தத்தா அவர்களின் ஆராய்ச்சிமுறை தவருனதால் அவருடைய அறிக்கையைக் கவனத்தோடு உபயோகிக்க வேண்டும். அவருடைய ஆராய்ச்சியிலுள்ள குறைகளை H. L. சப்லானி (H. L. Chablani) அவர்கள் தெளிவாக எடுத்துக் காட்டுகிறார். Indian Currency and Exchange, p. 5 et seq. இருப்பினும் தத்தா அவர்களின் ஆய்வுகள், அக் காலத்தில் மக்களின் வாழ்க்கையிலேயில் உண்டான மாற்றங்களைப்பற்றி அறிந்து கொள்வதற்கு பேருதவியாக இருக்கின்றன.

[2] V. Index Numbers of Indian Prices, 1861–1918, with addenda for subsequent years, and Appendix xxiii, vol. iii, of the Committee on Indian Exchange and Currency, 1919.

[3] 1923 வரை அரசாங்கம 'இந்தியாவில் விலைகளும் கூலிகளும்' என்ற அறிக்கையை ஆண்டுதோறும் வெளியிட்டது. ஆனால், கூலிகள் பற்றிய விவரங்கள் நம்பத்தகுந்தவையாக இல்லை. இன்ச்கேப் கமிட்டி (Inchcape Committee) சிபாரிசின் மேல் இந்த வெளியீட்டை அரசாங்கம் நிறுத்தியது. V. Prices and Wages in India, 1923, No. 1719. thirty seventh issue. இந்த வெளியீட்டில் 1922 வரைக்குமான கூலிகள் பற்றிய புள்ளி விவரங்கள் தரப்பெற்றுள்ளன.

[4] அட்டவணை XXIII ஐயும் படம் IX ஐயும் பார்க்கவும்.

விழுந்தன. ஆனால், வீழ்ச்சி மற்ற நாடுகளைவிடக் குறைவாகவே இருந்தது. விலைகள் உச்ச நிலையிலிருந்த 1920ஆம் ஆண்டின் ஒரு மாதத்திலிருந்து 1921சூன் மாதம் வரைநோக்கினால், இந்தியாவில் விலைகள் 12 சத வீதமே வீழ்ச்சியடைந்தன. இதற்கெதிராக, இங்கிலாந்தில் 41 சதவீதமும், ஐக்கிய அமெரிக்காவில் 47 சத வீதமும் வீழ்ச்சி யிருந்தன என்று பேராசிரியர் H. S. ஜெவான்ஸ் (Professor H. S. Jevons) அவர்கள் எடுத்துக் காட்டியுள்ளார்.[1] 1922 வீருந்து 1924ஆம் ஆண்டின் இடைக் காலம் வரை ரூபாய் விலைகள் ஒருவாறு நிலையாக இருந்தன. அதற்குப் பின்னரான பன்னிரண்டு மாதங்களில் (சூன் 1925 முடிய) விலைகள் மறுபடியும் விழுந்தன. அதற்குப் பின்னர், சர்வதேச விலைகளுக்கு ஏற்ப அவ்வப்போது கொஞ்சம் விழுந்ததைத் தவிர, மற்றப்படி இந்திய விலைகள் நிலையாகவே இருந்தன. ஆகவே, 1914-க்கு முன்னர் இந்திய விலைமட்டம் மற்ற நாடுகளைவிட, விரைவில் மாறுத லடைந்தது (அதாவது ஏற்றமடைந்தது). ஆனால் 1914-க்குப் பின்னர் வெளிநாட்டு விலைமட்டத்தைவிட இந்திய விலைமட்டம் நிலையாகவே இருந்தது.

இவ் விலைமாற்றங்களின் முக்கியத்துவத்தை அறிந்துகொள் வதற்கு, அதற்கான புள்ளி விவரங்களைத் தெளிவாக ஆராய வேண்டியது அவசியமாகிறது. இதில் கவனிக்கவேண்டிய முக்கியக் குறிப்புகள்: முதலாவதாக, இக் காலம் முழுவதிலும் பொதுவாக விலைகள் ஏற்ற மடைந்தன; இரண்டாவதாக 1914ஆம் ஆண்டு வரை இறக்குமதிப் பொருள்களின் விலைகளைவிட உள்நாட்டு விலை களும், பெரும்பான்மையும் உள்நாட்டுச் சந்தையிலேயே விற்பனை யான பொருள்களின் விலைகளைவிட ஏற்றுமதிப் பொருள்களின் விலைகளும் அதிக விரைவில் ஏற்றமடைந்தன; மூன்றாவதாக, 1914ஆம் ஆண்டுக்குப் பின்னர் இந்திய உற்பத்திகளின் விலையை விட, இறக்குமதிகளின் விலை அதிகமாக ஏற்றமடைந்தது மேலும், வெகுவாக உள்நாட்டுச் சந்தையிலேயே விற்பனையான பொருள் களின் விலையை விட ஏற்றுமதிப் பொருள்களில் விலையேற்றம் குறைவாகவே இருந்தது. இப்படியாக உள்நாட்டுவிலைகளுக்கும், வெளிநாட்டு விலைக்கும் இருந்த தொடர்பு போர் மூண்டதற்குப் பின் திடீரென்று மாறுதலடைந்தது.

போருக்குமுன் இந்தியாவில் ஏற்பட்ட விலையேற்றம் மக் களின் கவனத்தைக் கவர்ந்ததோடு, மக்களிடையே பெரும் பரபரப்பையும் உண்டாக்கியது. இந்தியாவில் பிரிட்டிஷ் ஆட்சி யைக் குறை கூறுபவர்கள் இந்திய விலைகளில் உண்டான மிக

[1] The Future of Exchange and Indian Currency, p. 212.

அதிகமான ஏற்றம் பொருளாதார அமைப்பில் இருக்கும் ஊனத்திற்கு ஓர் அறிகுறி என்று அடித்துக் கூறினார்கள். இதற்கெதிராக உலகெங்கிலும் இருந்த விலையேற்றம் ஓர் அளவுக்குத் தவிர்க்க முடியாததென்றும் அந்த ஏற்றத்தினால் இந்தியாவிலோ அல்லது வேறெங்கோ தீங்குகொன்றும் விளையாது என்றும் ஒரு கருத்து நிலவியது.

பிரிட்டிஷ் ஆட்சியினால் உணவுப் பொருள்களிலும் மூலப் பொருள்களிலும் பற்றாக்குறை ஏற்பட்டிருக்கிறது என்றும், நிலத்தில் மக்கள் தொகையின் நெருக்கம் அதிகரித்திருக்கிறது என்றும் அதனால் மக்களின் வாழ்க்கைத்தரம் தாழ்ந்துள்ளது என்றும் பலவிதமான விளக்கங்கள் கொடுக்கப்பெற்றன. இரயில்வேக்கள் நிர்மாணிக்கப்பெற்றதால் உணவுப்பொருள்களின் ஏற்றுமதி ஊக்குவிக்கப்பெற்றது; ஆனால், அதே சமயத்தில் வரிப்பளு (நிலவரி உட்பட) தரக்குறைவான நிலத்தைச் சாகுபடி செய்ய வேண்டிய அவசியத்தை உண்டாக்கியதோடு விவசாய முறையை மோசமடையச் செய்தது; மேலும், உணவுப் பொருள்களின் விலையேற்றத்திற்கு உற்பத்தியில் பற்றாக்குறையும், நாட்டில் உற்பத்திச் செலவு அதிகமானதுமே காரணங்கள் என்றும் வலியுறுத்தப்பெற்றது.

நாட்டின் வாணிபத் தேவைகளுக்கு மீறிய அளவில் அரசாங்கம் ரூபாய்களை (நோட்டுகளையும்) அச்சிட்டுப் புழக்கத்திற்கு ஏதுவாக அமைத்திருந்த 'செலாவணி முறை'யே, இந்திய விலைகளில் உலக நியதிக்கு ஏற்பட்ட ஏற்றங்களுக்கு முக்கியக் காரணம் என்று மற்றவர்கள் வலியுறுத்தினார்கள்.

இத்தகைய முறையீடுகளின் காரணமாக, இப்பிரச்சினை முழுவதையும் கீழ்க்காணும் குறிப்புகளை முக்கியமாகக்கொண்டு விசாரணை செய்வதற்காக அரசாங்கம் தத்தா (Mr. Datta) அவர்களை அழைத்தது. (1) விலையேற்றம் எல்லா விலைகளையும் சரிசமமாகப்பாதித்ததா அல்லது உணவுத் தானியங்களை மட்டும் தனியாகப் பாதித்ததா? (2) எந்த அளவுக்கு விலையேற்றம் சர்வதேசக் காரணங்களாலும், எந்த அளவுக்கு உள்நாட்டு நிலவரங்களாலும் உண்டாயிற்று? (3) இருந்த விலையேற்றம் தற்காலிக இயல்புடையதா, நிரந்தர இயல்புடையதா? (4) அது ஏறத்தாழ நிரந்தரமானது என்று பட்டால் அதனால் பொதுவாக நாட்டிற்கும், குறிப்பாக மக்களின் பல வகுப்பினர்களுக்கும் ஏற்படக் கூடிய விளைவுகள் எவை?

இவ் விசாரணையை மேற்கொள்ள, தத்தா அவர்கள் பர்மாவும் சுதேச அரசுகளும் நீங்கலாக, இந்தியாவை இருபத்து

நான்கு பொருளாதார வட்டங்களாகப் பிரித்தார்[1]. ஒப்பிட்டுப் பார்ப்பதற்காக, அவர் 1890-94-ல்[2] நிலவிய ஒரே இனப் பொருள்களின் சராசரி விலையை (மொத்த விலை) அடிப்படையாக எடுத்துக்கொண்டார். விலைகளைப் பொறுத்த அளவில் அவருடைய முடிவுகள் அரசாங்கம் வெளியிட்ட விவரங்களுடன் ஒத்திருந்தன. அவற்றை இங்கு விளக்கமாக எடுத்துக் காட்ட வேண்டிய அவசியமில்லை.[3] தனித்தன்மை வாய்ந்த 1907, 1908 ஆண்டுகளைத் தவிர, மற்ற ஆண்டுகளின் விலைகளை 1890–94 ஆண்டுகளின் இடைக்காலத்தில் நிலவிய சராசரி விலைகளோடு ஒப்பிட்டுப்பார்த்தால், 1910–12-வாக்கில் தோல், பதனிட்ட தோல் இவைகளில் 65 சதவீதமும், கச்சாப் பருத்தி, கச்சாச் சணல் இவைகளில் 58 சதவீதமும், கட்டடப் பொருள்களில் 45 சதவீதமும், உணவுத் தானியங்களில் 30 சதவீதமும், பருத்தி ஆடைகளில் 31 சதவீதமும், உலோகங்களில் 22 சதவீதமும் விலையேற்றமிருந்தன என்று அவர் கணக்கிட்டார். இந்தப் பட்டியலில் முக்கிய ஏற்றுமதிகளும், முக்கிய நுகர்வுப் பொருள்களும் அடங்கியிருந்தன. விலையேற்றம் சென்னை, பேரார், சிந்து, பம்பாய், தக்காணம், பஞ்சாப் இவற்றின் பல பகுதிகளிலும், காராச்சியிலும் மிக அதிகமாகவும் (38 சதவீதமும் அதற்கு மேலும்), காராச்சி தவிர மற்றப் பெரிய துறைமுகங்களிலும், அஸ்ஸாமிலும் மிகக் குறைவாகவும் (33 சதவீதத்திற்கும் கீழாக) இருந்தது. பிற்காலத்தில் விலையேற்றம் மிகக் குறைவாக இருந்த இடங்களில் எல்லாம் 1890-க்கு முன்னர் ஒரே நியதியாக விலைகள் மிக அதிகமாக இருந்தன. உலகம் முழுவதிலும் விலை மட்டத்தில் ஏற்றம் இருந்தது என்றாலும், ஏற்றத்தின் அளவு மற்ற நாடுகளை விட இந்தியாவில் அதிகமாக இருந்தது என்று எடுத்துக்காட்டப் பெற்றது.[4] இத்தகைய விலையேற்றத்திற்கு எவ்வாறு விளக்கம் தருவது, இதனால், உண்டான முக்கிய விளைவுகள் என்ன என்பவைகளை விளக்கவேண்டிய பிரச்சினைகளாக இருந்தன.

[1] இருபத்து நான்கு பெரிய நிலத்தொகுதிகளாகவும், நான்கு முக்கியத்துறை முகங்களாகவும்: கல்கத்தா, பம்பாய், கராச்சி, சென்னை - பிரிக்கப்பெற்றன.

[2] அரசாங்கத்தாலும் வாணிகர் கழகங்களாலும் (Chambers of Commerce), தல அதிகாரிகளாலும் வெளியிடப்பெற்ற பதிவுகள் வர்த்தகர்களுடைய கணக்குப் புத்தகங்கள், இறக்குமதிக்கணக்குகள் இவைகளை தத்தா அவர்கள் மேற்கொண்ட விலையின் ஆதாரங்கள்.

[3] Datta Report, p. 29, இவ் வறிக்கை 1890–1912-க்கான குறியீட்டு எண்கள் கொண்ட பட்டியல் ஒன்றைத் தருகிறது. இந்தியச் செலாவணி நாணயமாற்றுக்குழு (Indian Exchange and Currency Committee) தயாரித்த (Appendix xxviii) அட்டவணை, தத்தாவின் பட்டியலோடு ஒத்திருப்பதுடன், கீண்டகாலத்தையும் உள்ளடக்கியிருப்பதால், தத்தாவின் பட்டியலுக்குப் பதிலாக (அட்டவணை xxvii-ஐப் பார்க்கவும்) இந்த அட்டவணையையே நாமும் கையாண்டிருக்கிறோம்.

[4] Datta Report, p. 50.

அதிகமான பொன் உற்பத்தி, பாங்குச் செலாவணி (Credit) முறையில் முன்னேற்றம், அண்மைக்காலத்துப் போர்களினால் செல்வத்திற்கேற்பட்ட நாசம், அமைதி காலத்திலும் போர்க் கருவிகளில் அதிகமாகச் செலவிடுதல், அதனுடன் ஒன்றிரண்டு சிறு துணைக்காரணங்கள்[1] இவைகளே உலகெங்கும் நிலவிய விலையேற்றத்திற்குக் காரணங்கள் என்று தத்தா அவர்கள் கருதினர்.

அப்பொழுது நிலவிய நாணயமாற்றுக் கொள்கையிலிருந்து, இந்திய விலைகளும், உலக விலைகளுக்கு ஏற்றாற்போல் ஏற்ற மடைந்திருக்கவேண்டும் என்று எதிர்பார்த்தது இயற்கையே. ரூபாயின் ஸ்டெர்லிங் மதிப்பு 1 ரூ. = 1 ஷி 4 பென் என்று கையாண்ட கொள்கை, இந்தியாவின் விலை மட்டமும், இங்கிலாந்தின் விலை மட்டமும் ஒரே நிலையிலிருக்கச் செய்யவேண்டிய அவசியத்தை உண்டாக்கியது. ஸ்டெர்லிங் விலைகள் உயர்ந்ததால் இந்தியச் செலவாணியை அதிகரிக்கவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது. மற்ற நிலவரங்கள் ஒரேநிலையிலிருந்து செலவாணியைப்பெருக்காவிட்டால், நாணயமாற்று வீதம் உயர்ந்திருக்கும்.[2] புழக்கத்திலிருந்த செலவாணி யதேச்சையாகவோ, தேவையில்லாமலோ அதிகரித்தது என்பதற்கு எந்தவிதமான சான்றும் இல்லை. அரசாங்கத்தின் ரூபாய்க் காப்புநிதி (Reserve) குறையத் தொடங்கியதும் ரூபாய்கள் அச்சிடப் பெற்றன. வாணிப வளர்ச்சியின் தேவைக்குமேல் அரசாங்கம் செலாவணியை அதிகரித்தது என்று எண்ண எந்தவிதமான காரணமும் இல்லை.[3] இந்திய விலைகள் வெளிநாட்டு விலைகளைவிட அதிகமாக ஏற்றங்கொண்டன என்பதைப் பின் எவ்வாறு விளக்குவது?

[1] உதாரணம்: பழைய நாடுகளிலிருந்து புதிய நாடுகளுக்கு (வாழ்க்கைத்தரம் உயர்வாக உள்ள புதிய நாடுகளுக்கு) மக்கள் குடியேறியது, புதிய நாடுகளில் மூலதனம் முதலிடப்பெற்றது, டிரஸ்டுமுறைகளின் (Trusts) வளர்ச்சி போன்றவை.

[2] இக் காலத்தில் செலாவணியின் அளவு, ரூபாய்களை அச்சடிப்பதனால் மட்டுமில்லாமல் பாங்குமுறை, பாங்குச்செலாவணி முறை இவைகளின் வளர்ச்சியினாலும் அதிகரித்தது. மாகாணபாங்குகள், கூட்டுப்பங்கு பாங்குகள் (நாணயமாற்றுபாங்குகள் நீங்கலாக) இவைகளின் செலுத்தப்பெற்ற மூலதனம், காப்புநிதியும் 1911 முடிய பத்தாண்டுக் காலத்தில் 55·7 சதவீதம் அதிகரித்தன. தனிப்பட்ட வைப்புகளும், பாங்குச்செலாவணியின் உபயோகமும் விரைவில் உயர்ந்தன.

[3] C. N. வக்கீல் (C. N. Vakil), S. K. முறயன் (Mr. S. K. Murayan) இவர்கள் உட்பட (Currency and Prices in India, pp. 328, 329.) இந்திய நூலாசிரியர்கள் பலருடைய கருத்துக்கும் இந்த முடிபு முரணானது. வக்கீல், முறையன் இவர்களுடைய கூற்று, பணவீக்கத்தின் விளைவுகள் ஒரே இனமான ஒரு சிலபொருள்களை மட்டும் பாதிக்கக்கூடும் என்ற தவருன மனப்போக்கை அடிப்படையாகக் கொண்டிருந்தது. ஆனால் உண்மையில் இத்தகைய பணவீக்கம் அதனுடைய இயல்பால் நீண்ட கால அளவில் எல்லா விலைகளையுமே பாதிக்கின்றது.

இந்த நிகழ்ச்சிக்கும், இந்திய உற்பத்திகளின்மீட இறக்குமதிகளில் விலையேற்றம் அதிகமாயிருந்தது என்பதற்கும் இந்திய விலை மட்டத்தில் உள்ள பிரத்தியேகக் கோளாறுதான் காரணம் என்பது பொருந்தாது. ஆனால், பல முக்கியப் பொருள்கள் கொண்ட பல இனங்களில், விலையேற்றம் மாறுபட்டிருந்ததே இதற்குச் சரியான விளக்கமாகும். இந்த மாறுபட்ட விலையேற்றம் உலகெங்கும் இருந்த சூழ்நிலையால் உண்டாயிற்று.[1] இவ்வாறு, உலக விலையேற்றம், 1914ஆம்ஆண்டுக்கு முன்னர் செய்யின முடிந்த பண்டங்களில் குறைவாகவும், உணவுப் பொருள்களிலும் மூலப் பொருள்களிலும் விரைவாகவும் இருந்தது. 1914ஆம்ஆண்டுக்குப் பின்னர் அதற்கு மாறுகச் செய்யின முடிந்தபண்டங்களில்விலையேற்றம்விரைவாகவும்,உணப்பொருள்களிலும் மூலப் பொருள்களிலும் குறைவாகவும் இருந்தது. இந்தியப்பண்டங்களில் (குறிப்பாக இந்திய ஏற்றுமதிகளிலும்) பெரும் பான்மையும் உணவுப் பொருள்களும், மூலப் பொருள்களுமே இருக்கின்றன. ஆனால், இங்கிலாந்து போன்ற தொழில்மயமான நாடுகளின் பண்டங்களில் (குறிப்பாக இந்தியாவின் இறக்குமதிகளிலும்) பெரும்பான்மையும் செய்யின முடிந்த பண்டங்களாகவே இருக்கின்றன. இதன் விளைவு 1914க்கு முன்னர் இந்திய விலை மட்டம் வெளிநாடுகளின்விட விரைவாகவும் 1914க்குப் பின்னர் அதற்கு நேர்மாறுகவும் ஏற்றங்கொண்டன.[2] ஆதலால் முக்கியப் பண்டங்களில் ஏற்பட்ட தராதர விலை மாற்றங்களை அறிந்து கொள்வதற்கு, 1914க்குப் பின்னர் இந்திய வெளிநாட்டு விலைகளில் ஏற்பட்ட தராதர ஏற்றத்தையும் நாம் ஆராயவேண்டும்.

உணவுப் பொருள்களில் ஏற்பட்ட விலையேற்றமே அதிகமாகக் கவனத்தைக் கவர்ந்தது; அது, மிகுந்த பரபரப்பையும் உண்டாக்கியது. போக்குவரத்துச் சாதனங்களில் ஏற்பட்ட முன்னேற்றமும் (குறிப்பாக இரயில்வேக்கள் நிர்மாணிக்கப்பட்டதும்)[3] இதனால் போக்குவரத்துச் செலவு குறைந்ததுமே,

[1] இந்தியாவின் சராசரி விலை மட்டத்திற்கும், வெளிநாடுகளில் உயர்ந்த விலை மட்டத்திற்கும் உள்ள வேறுபாட்டை, போக்குவரத்துச் சாதனங்களில் ஏற்பட்ட அபிவிருத்தி குறைத்தது இதற்கான மற்றொரு விளக்கமாகும்.

[2] இந்தப் பொதுவான கூற்றை மாற்றக்கூடிய சில காரணங்கள் 1914-க்குப் பின்னர் இருந்தன. இவைகளைக்கீழே ஆராய்வோம்.

[3] 1890-க்கும் 1912-க்கும் இடையில் இரயில்வே மைல்கள் 15,865-லிருந்து 31,961-க்கு அதிகரித்தன; பிரயாணிகளும் சரக்குகளும் மூன்று மடங்குக்குமேல் பெருகின; தூக்குக் கூலிகள் (freight charges) 28 சத வீதத்திற்குமேல் குறைந்தன; மெட்டில்ட்ரோடுகள் (Metalled roads) 36,400-லிருந்து 51,900 மைல்களுக்கு அதிகரித்தன.

19ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியிலும், 20ஆம் நூற்றாண்டின் ஆரம்ப காலத்திலும் உணவுப் பொருள்களின் விலையையும், அப் பொருள்களின் வாணிபத்தையும் பாதித்த மிக முக்கியமான காரணங்களாகும். போக்குவரத்து வசதிகள் அதிகரித்ததால் உணவுப்பொருள்களின் விலைகள் பல இடங்களிலும் ஏற்ற மடைந்தன. உணவுப்பொருள்களை மாவட்டத்திற்கு மாவட் டமும், துறைமுகங்களுக்கும் ஏற்றிச்செல்வது இலகுவாக இருந்த தால், முன்னர் நல்லபருவகாலங்களில் கிராமப்புறங்களில் நிலவிய குறைந்த மட்டத்திற்கு விலைகள், அதற்குப்பின் இறங்கவே இல்லை. உணவுப் பொருள்களின் விலைகள் நாடு முழுவதும் சமனுக்கப்பெற்றதோடு உலக விலைகளுக்கும் நெருங்கிய தொடர் புடையதாக ஆயின. விலைமட்டம் உயர்ந்ததால் கிராமப்புற மக்கள் பாதிக்கப் பெற்றனர். ஆனால், விலைமட்டம் எல்லாக்காலங் களிலும். எல்லா மாவட்டங்களிலும் சமனுக்கப் பெற்றதும், ஏற்றுமதிகள் மூலமாகவும் நகரப்புற விற்பனைகள் மூலமாகவும் கிடைத்த இலாபமும் அதற்கு ஈடு செய்தன. தத்தா அவர்கள் உணவுப்பொருள்களில்பற்றாக்குறைக்கான அறிகுறிகள் இருந்தன என்று ஒப்புக்கொண்டார். ஆனால், அத்தகைய பற்றாக்குறைக்கு, வறுமை அதிகரித்ததோ, விவசாய முறையில் தரக்கேடோ அல்லது உற்பத்திச்செலவு உயர்ந்ததோ காரணங்களாகும் என்று அவர் கருதவில்லை. அதற்குமாறாக, அப் பற்றாக்குறை வெளிப்படையாகத் தோன்றியதே தவிர, உண்மையில் அது தற் காலிகமாகமானதும் அபாயமற்றதுமாகும் என்பதுடன், நாட்டில் வளப்பம் மிருந்ததே அதற்குரிய முக்கிய காரணம் என்றும் அவர் கருதினர். இந்திய உணவுப் பொருள்களுக்கும், மூலப் பொருள் களுக்கும் இந்தியாவிலும் வெளியிலும் 'தேவை' அதிகரித்தது. வாழ்க்கைத்தரம் உயர்ந்ததால் இந்தியாவில் தேவை அதி கரித்தது. போக்குவரத்து வசதிகள் அதிகரித்ததனாலும், தொழில் மயமான நாடுகளின் தேவை எப்போதும் உயர்ந்துகொண்டே இருந்ததாலும் வெளி நாடுகளில் தேவை அதிகரித்தது. ஆகவே, உணவுப் பொருள்களின் விலையேற்றம், இவைகளின் உலக விலை யேற்றத்துடன் ஏறக்குறைய ஒத்திருந்தது. அதோடு கூட, கவனத்திற்குரிய காலத்தின் ஓரிரு ஆண்டுகளில்-உதாரணமாக நூற்றாண்டின் திருப்பத்திலும், 1908ஆம் ஆண்டிலும்-அறுவடை மிகவும் மோசமாயிருந்தது மேலும், பருத்தி, சணல், எண்ணெய் வித்துக்கள் போன்ற மூலப்பொருள்களுக்குச் சில அயல் நாடு களின் தேவை அதிகரித்ததால், உணவுப் பொருள்களுக்குப் பதிலாக உணவுப் பொருள்கள் அல்லாத பொருள்களைப் பயிர் செய்யும் பழக்கம் ஏற்படத் தொடங்கியது. மக்கள் தொகையும், விவசாயப் பொருள்களுக்குத் தேவையும் பெருக்க

மடைந்ததால், சாகுபடிக்கான நிலத்தை அதிகரிக்கவும், தரக் குறைவான நிலத்தைச் சாகுபடியின்கீழ்க் கொண்டு வரவும் வேண்டியிருந்தது என்பது உண்மைதான். ஆயினும், இது ஒரு முக்கியமான காரணமாகாது.[1] இந்த முடிவுகளை அரசாங்கம் ஒத்துக்கொண்டதுடன்[2] கீழ்க்காணும் உண்மைகளையும் எடுத்துக் காட்டியது. உணவுப் பொருள்கள் விளையும் மொத்த நிலத்தோடு ஒப்பிட்டுப் பார்த்தால்[3] உணவுப் பொருள்களுக்குப் பதிலாக வாணிபப்பயிர்கள் (Commercial Crops) சாகுபடியாகும் நிலத்தின் அளவு மிகக்குறைவு; நல்ல பருவகாலத்திலும்கூட உணவுப் பொருள்களின் மொத்த உற்பத்தியில் ஏற்றுமதிப் பொருள்கள் 4 சத வீதத்திற்கு மேலாக இருந்ததில்லை. தரக்குறைவான நிலங்கள் சில, சாகுபடியின் கீழ்க்கொண்டு வரப்பட்டன. என்றாலும், போக்குவரத்துச் சாதனங்களிலும், நீர்பாசனங்களிலும் ஏற்பட்ட அபிவிருத்தி மொத்த உற்பத்தியையும், ஓர் ஏக்கருக்கான உற்பத்தியையும், குடியானவருக்கு உற்பத்தியின் மதிப்பையும் பெருக்கின. இதையே, வேறு விதமாகக் கூற வேண்டுமானால், தரக்குறைவான நிலங்கள் சில சாகுபடிக்குள்ளாக்கப் பட்டன என்று வைத்துக் கொண்டாலும், அதனால் ஓர் ஏக்கரின் சாரசரி உற்பத்தியில்[4] பெருக்கம் இருந்ததே யன்றிக் குறைவில்லை எனலாம். நிலத்தின் வளம் பொதுவாகக் குறைந்தது என்று எண்ண எந்த விதமான சான்றுமில்லை.

எல்லாவற்றையும் சுருங்கக்கூற வேண்டுமானால், உணவுப் பொருள்கள், மூலப் பொருள்கள் இவைகளின் உற்பத்தியுடன் தொடர்புகொண்டு பார்த்தால், உலகெங்கும் செலாவணியின் அளவில் அதிகரிப்பு இருந்தது. இந்திய மொத்த உற்பத்திகளில், இத்தகைய பொருள்கள் மிகுதியாக இருந்ததால் இந்திய விலை மட்டம் மற்றவைகளைவிட அதிகமாக இருந்ததாகத்தோன்றியது. ஆனால், உண்மையில் போக்குவரத்துச்சாதனங்களின் அபிவிருத்தி

[1] தொடக்க ஆண்டிலிருந்து சாகுபடிக்கான மொத்த நிலம் 106·9 சத வீதமும், மக்கள் தொகை 103·4 சத வீதமும், உணவுத்தானியங்கள் விளையும் நிலம் 102·2 சத வீதமும் அதிகரித்தன என்று மக்கள் தொகைப்பெருக்கம், சாகுபடி நிலத்தின் விஸ்தரிப்பு இவைகளின் கணக்கெடுப்புக் காட்டுகிறது. அதாவது, மக்கள் தொகைப் பெருக்கத்திற்கு ஏற்றாற்போல், உணவு உற்பத்தி செய்யும் நிலம் அதிகரிக்கவில்லை. ஆனால், மற்றவிளைபொருள்கள் அதிகரித்தன. நீர்ப்பாசனவசதிகளும், போக்குவரத்து வசதிகளும் அதிகரிக்கப் பெற்றமை சராசரியில் அதிகப்படியான உணவு உற்பத்திக்கு ஏதுவாயிருந்தது.

[2] Government Resolution preceding the Report, p. 8.

[3] அட்டவணை ii, பக்கம் 607-ஐப் பார்க்கவும்.

[4] ஆனால், தத்தா அவர்கள் கால்நடைகளிலும், தொழிலாளர்களிலும் ஏற்பட்ட பற்றாக்குறையின் காரணமாக, சில தொகுதிகளில் விவசாயத்தின் தரம் குறைந்திருக்கக் கூடும் என்று எண்ணினார். pp. 67, 68.

இந்திய விலை மட்டத்தை உயர்த்தி, இந்திய விலைகளை உலக விலைகளுக்கு நெருங்கிய தொடர்புடையனவாகச் செய்தது.[1]

நாம் இப்பொழுது நாட்டின் பொதுவான வளப்பத்திற்கு இத்தகைய மாற்றங்களால் உண்டான விளைவுகளை மதிப்பிட முற்படலாம். இதற்கு, மக்கள்தொகையின் பல பிரிவினருடைய நிகர வருமானங்களை விலை மாற்றங்கள் எங்ஙனம் பாதித்தன என்று ஆராயவேண்டும்.

முக்கியமான விளைபொருள்களைப் பொறுத்தவரை, விவசாயிகளின் (மக்கள் தொகையில் எல்லோரையும்விட இவர்கள் முக்கிய வகுப்பினர்) வாழ்க்கைநிலை முன்னிருந்ததைவிடக் குறையவில்லை என்று கூறலாம். விலைமாற்றங்களினால் அவர்களுடைய வாழ்க்கைநிலை எவ்வாறு பாதிக்கப்பெற்றது என்பதை முடிவுசெய்வதற்கு, அவர்களுடைய வருமானத்திலும் செலவிலும் விற்பனை செய்யப்பட்ட விளைபொருள்கள், வாரம், நிலவரிக்கூலிகள் பண்டங்கள் இவைபோன்ற முக்கிய இனங்களில் ஏற்பட்ட விலைமாற்றங்களைக் கூட்டி ஒப்பிட்டுப் பார்ப்பதுதான் ஒரே வழியாகும். நிலத்திற்கான வாரம் தானியங்களாகக் கொடுக்கப்பெற்றால், அதன் ரொக்க மதிப்பும் (Cash value) விலைகளின் அளவுக்கு அதிகரித்தது. ஆனால், விவசாயியின்மேல் ஓர் அதிகப்படியான பளுவாக அது அமையவில்லை. அவருடைய உற்பத்தியில் வாரத்தின் அளவை விற்றிருந்தால் கிடைக்கக்கூடிய இலாபத்தை அடைய முடியாமல்தான் தடுத்தது. ஆனால், 'ரொக்க வாரங்கள்' (Cash rents) விலைகளது ஏற்றத்தின் அளவுக்கு உயரவில்லை அவ்வாறே, நிலவரியும் எப்போதாவது ஏற்றப்பட்டாலும் மிகக் குறைந்த அளவே இருந்தது.[2] வேலைக்கு ஆள் அமர்த்திக்கொள்ளும் விவசாயியின் கூலிச்செலவு, விலையேற்றத்தைவிடச் சற்று அதிகமாக உயர்ந்தது. இதைச் சற்று நேரம் கவனிப்போம். விவசாய வகுப்பினர் வாங்கும் முக்கியப் பண்டங்களின் விலைகள் கீழ்க்காணும் வீதத்தில்

[1] கானடா, ஆஸ்திரேலியா போன்ற விவசாய நாடுகளை விட, இந்தியாவில் விலையேற்றம் விரைவாக இருந்தது (*V.* Vakil and Murayan, Currency and Prices in India,p.324) என்பதற்குப் புது நாடுகளிலும் (New Countries) பழைய நாடுகளிலும் (Old Countries) நிலவிய மாறுபட்ட சூழ்நிலையை விளக்கமாகக் கொள்ளலாம். இந்தியாவில் போக்கு வரத்துச் சாதனங்கள் வளர்ச்சியடைவதற்குமுன் உற்பத்திப் பெருக்கம் இருந்தது. ஆஸ்திரேலியாவிலும், கானடாவிலும் அவைகளுக்குப் பின்னரே இருந்தது. இந்தியாவில் நல்ல மழையுள்ள ஆண்டுகளில் உள்நாட்டு விலைகள் தொடக்கத்தில் மிகத்தாழ்வாகவே இருந்தன; ஆனால் கானடாவிலும், ஆஸ்திரேலியாவிலும் விலைகள் மிக உயர்வாக இருந்தன. ஆகையால், உலக விலைமட்டத்திற்கு ஒத்திருந்ததின் விளைவுகள் கானடா, ஆஸ்திரேலியா இவைகளின் விலை மட்டத்தில் மாறுபட்டிருந்தன.

[2] நிலவரிக் கட்டணம் பல இடங்களில் மாற்றப்படாமலும், சில இடங்களில் குறைக்கப்பட்டுந்தான் இருந்தது.

மாறின: பருத்தி ஆடைகள் 25 சத வீதமும், உலோகங்கள் 20 சத வீதமும், சர்க்கரை 9சத வீதமும் உயர்ந்தன. மண்ணெண்ணெயில் மாற்றமெதுவுமில்லை. உப்பு விலை 3 சத வீதம் விழுந்ததுடன் கவனத்திற்குரிய காலத்தில் அதன் மேலிருந்த தீர்வையும் ரூ. 2-8-0 லிருந்து ரூ. 1 க்குக் குறைக்கப் பெற்றது. விலைபேற்றத்தினால் விவசாயிக்கு ஏற்படும் அதிகப்படியான செலவு இதனால் தெளிவாகிறது. விவசாயிக்குப் பண்டமாகவே கிடைக்கும் வருமானத்தில், விலையேற்றத்தினால் எந்தவித மாறுதலும் ஏற்படவில்லை. ஆனால், முக்கிய வாணிபப் பயிர்களின் விலைகள் கீழ்க்கண்டவாறு ஏற்ற மடைந்தன: கச்சாச் சணல் 43 சத வீதம்; கச்சாப் பருத்தி 15 சத வீதம்; தோலும், பதனிட்ட தோலும் 59 சத வீதம்; எண்ணெய் வித்துக்கள் 45 சத வீதம்; உணவுத் தானியங்கள் 42 சத வீதம்; பருப்பு வகைகள் 43 சத வீதம்.[1] சாதாரண விவசாயியின் செலவில் கூலிச்செலவு மிகக் குறைவாகவே இருப்பதால், மொத்தத்தில் விவசாயிகளில் பெரும் பான்மையினரும் 'மெய் வருமானத்தில்' (Real Income) இலாப மடைந்திருக்க வேண்டு மென்பது தெளிவாகிறது.

தத்தா அவர்கள், இக் காலத்தில் தொழிலாளர்களில் எல்லா வகுப்பினருக்கும் கூலிகள் வெகு விரைவாக உயர்ந்தன என்று எடுத்துக் காட்டியிருக்கிறார்.[2] கூலி ஈட்டுபவர்களுக்குச் சூழ்நிலை அனுகூலமாக இருந்தது. விவசாயம், பொது வேலைகள், தொழிற் சாலைகள் இவற்றில் தொழிலாளர் தேவை அதிகரித்தது. 189 பம்பாயில் முதலில் தோன்றி, தொழிற்சாலைகளில் கூலி ஈட்டுவோர்களை அதிகம் பாதித்த 'பிளேக்கு நோய்' அழிவினால் வேலைக்கு ஆட்கள் கிடைப்பது குறைந்தது.[3] கிராமப் புறத்

[1] *V.* Resolution on the Datta Report, p. 40.

[2] Report on the Enquiry into the Rise of Prices in India, 1914, vol. i, pp. 169, 170. இதற்கான புள்ளி விவரங்களைத் தொகுப்பதற்காகத் தத்தா அவர்கள், அதற்குமுன் இருந்த முயற்சியைவிடப் பெரிய அளவில் புள்ளி விவரங்களைத் திரட்ட முனைந்தார். இதுகாலம் வரை கூலி விவரங்களைப் பற்றிய முக்கியப்பதிவுகள் (record), 'விலைகளும் கூலிகளும்' (Prices and Wages) என்ற அரசாங்க வெளியீடும் 1911–12ல் தொடங்கப்பெற்ற ஐந்தாண்டுக்கு ஒரு முறையான கூலிக் கணக்கெடுப்புமே (Wage-Census) யாகும். இவற்றுள் (Prices and Wages) என்ற வெளியீடு சில குறிப்பிட்ட மாவட்டங்களில் (ஆனால் இம்மாவட்டங்கள் பொதுவான நிலையைக் காட்டா) 'திறன் பெருத் தொழிலாளிகள் (Unskilled labourers) 'திறன் பெற்ற தொழிலாளிகள்' (Skiled Labourers) என்று அழைக்கப்பட்டவர்களின் மாதாந்தர சராசரிக் கூலிகளைக் காட்டியது. ஆனால் பல கோணங்களிலிருந்தும் நோக்கினால் இந்தப் புள்ளிவிவரங்கள் திருப்திகரமாக இல்லை, உதாரணமாக சில தொழில் வகுப்பினரின் நிலையைக் காட்டும் என்ற கருத்தில் எடுத்துக் கொள்ளப்பட்ட தொழில்கள் உண்மையான நிலையைப் பிரதிபலிப்பதாக இல்லை. மேலும் நகரப்புறக் கூலிகளும், கிராமீயக்கூலிகளும் தனித்தனியாகப்பாகுபடுத்தாமல் ஒன்றுகச் சேர்த்தே கொடுக்கப்பெற்றன. இவைகளையெல்லாம் நன்றாக ஆராய்ந்த பின்னர் தத்தா அவர்கள் இந்தப்புள்ளிவிவரங்களை உபயோகிக்க முடியாது என்ற முடிவுக்கு வந்தார். இந்த முறையீட்டின் உண்மையை அரசாங்கம் அண்மையில் உணர்ந்து, கூலிப்புள்ளிவிவரங்கள் வெளியிடுவதை 1922-லிருந்து கைவிட்டது.

[3] 1896-க்கும், 1913-க்கும் இடையில் சுமார் 7,000,000 மக்கள் கொள்ளை நோயினால் இறந்தனர்.

தொழிலாளர்களின் கூலிகள் இரட்டிப்பாகவும், நகரத் தொழிலாளர்கள், கூட்டுவேலை செய்பவர்கள் இவர்களின் கூலிகள் சுமார் 75 சத வீதமும், தொழிற்சாலைகள், இரயில்வேக்கள், கால் வாய்கள் இவைகளில் வேலைசெய்யும் தொழிலாளர்களின் கூலிகள் சுமார் 40 சத வீதமும், சராசரிக் கூலிகள் 60 சத வீதமும் உயர்ந்தன. தொழிற்சாலைகளிலும், போக்குவரத்துச் சாதனத் துறைகளிலும் வேலை செய்யும் தொழிலாளர்களின் கூலிகள் மற்றெல்லாத் துறைகளையும்விடக் குறைந்த அளவே உயர்ந்தன என்பது தெளிவாகும். இதற்கு முந்திய பத்தாண்டுகளில், இவர்கள் பொது மட்டக் (General Level) கூலிக்குமேல் கூலி ஈட்டி வந்தார்கள் என்பதை இதற்கான காரணமாகக் கொள்ளலாம்.

கூலி ஈட்டுவோரின் பொருளாதார நிலையில் ஏதாவது உயர்வு இருந்ததா என்பதை முடிவுசெய்ய, வெளியிடப்பட்ட கூலிகளை 'வாழ்க்கைச் செலவுடன்' (Cost of living) தொடர்பு படுத்திப் பார்க்கவேண்டிய அவசியமேற்படுகிறது. வாழ்க்கைச் செலவு உயர்ந்ததை கவனத்திற்கு எடுத்துக் கொண்டாலும், தொழிலாளர்களில் ஒவ்வொரு வகுப்பினரின் ஊதியங்களும் குறிப்பிடத்தக்க அளவு உயர்ந்திருந்தன. இதிலும், கிராமப் புறத் தொழிலாளர்கள், நகரப் புறத் தொழிலாளர்கள் இவர்களின் கூலி உயர்வு மற்றெல்லாத் தொழிலாளர்களையும்விட அதிகமாக (அதாவது, முறையே 34 சத வீதமும், 30 சத வீதமும்) இருந்தது. நகரங்களிலும், தொழிற்சாலைகளிலும் கூடக் கூலி உயர்வு வெகுவாக (அதாவது முறையே 23 சதவீதமும் 7 சத வீதமும்) இருந்தது. ஆனால், இவற்றுள் பின்னதில், கூலி உயர்வு 1910ஆம் ஆண்டில் இருந்ததைவிட 1912ஆம் ஆண்டில் சற்றுக் குறைவாகவே இருந்தது. சில மாவட்டங்களின் நகரப் புறங்களில் வீட்டுவேலை செய்பவர்களும், குறிப்பிட்ட ஒரிரு தொழிற்சாலைகளில்[1] வேலை செய்பவர்களும் நீங்கலாக, எல்லா வகுப்பினரையும் எல்லா வட்டங்களையும் சேர்ந்த 'கூலி ஈட்டு வோர்களும்' (Wage earners) அதிகப்படியான 'மெய்' (Real) வருமானம் பெற்றனர் என்று முடிவாகக் கூறலாம்.

உயர்நிலை, மற்றும் இடைநிலை வகுப்பினர்களைப்பற்றிய முழுப் புள்ளி விவரங்களும் கிடைக்கவில்லை. ஆதலால், அவர்களின் ஊதியங்களில் ஏற்பட்ட மாறுதல்களைப் பற்றிச் சிறிதளவு தான் அறியமுடிகிறது. உள்நாட்டு வாணிபமும் வெளி

[1] அதாவது, சாராயம் வடிகட்டுதல், தேயிலை, சர்க்கரைத் தொழிற்சாலைகள்.

நாட்டு[1] வாணிபமும் விரைவாக வளர்ச்சியுற்றதாலும் விலைகளை விட வாரங்களும், நிலவரியும் குறைவாகவே உயர்ந்ததாலும் வணிகாகளும் உற்பத்தியாளர்களும், விவசாயிகளும் பயனடைந்தார்கள். ஆனால், நிலையான வருமானம் (Fixed income) பெற்று வந்தவர்கள் (மாதச்சம்பளமாகவோ அல்லது சொத்துக்களிலிருந்து வருமானமாகவோ) பாதிக்கப் பெற்றார்கள். மருத்துவத் தொழில்போன்று குறிப்பிட்ட தொழில் செய்பவர்களின் 'மெய் வருமானமும்' குறைந்தது.

போக்குவரத்துச் சாதனங்களில் முன்னேற்றம் ஏற்பட்டதால் உலகச்சந்தைகளுடன் இந்தியா நெருங்கிய தொடர்புகொண்டது. இதனால், இந்தியப் பண்டங்களுக்குத் தேவை அதிகரித்தது.[2] ஆகவே, உலகச்சூழ்நிலையே இந்திய விலையேற்றத்தை இயக்கியது என்றும், மொத்தத்தில் விலையேற்றத்தின் விளைவுகள் அனுகூலமாகவே இருந்தன என்றும் முடிவாகக் கூறலாம். 'விலை, ஏற்றம் கொண்டகாலத்தில், ஏறக்குறைய இந்தியாவின் எல்லாப் பாகங்களிலும் உண்மையான முன்னேற்றமும், செல்வத்தில் பரவலும், வளர்ச்சியும்,...விவசாயத்தில் மிதமிஞ்சிய இலாபமும், வாழ்க்கைச் செலவைவிடக் கூலி உயர்வு மிக அதிகமாகவும்'[3] இருந்தன.

இந்த முடிவைப் பல ஆசிரியர்களின் சந்தர்ப்பச் சான்றுகளும் (Circumstantial Evidence) உறுதிப்படுத்துகின்றன. மக்கள் ஆடைகளை அதிகமாக வாங்கி அணிந்து கொண்டனர்; வீடுகளைச் செப்பனிட்டனர்; மண்பாண்டங்களுக்குப் பதிலாகப் பித்தளையாலும் மற்ற உலோகங்களாலும் ஆனபாத்திரங்களை உபயோகிக்கத் தொடங்கினர்; இரயில்வேப் பிரயாணம் போன்ற காரியங்களுக்குக் கையிருப்பு அதிகரித்தது. பலவகையான பொருள்களை வாங்கும் செலவும் உயர்ந்தது.[4] வாணிபம் எல்லையின்றி வளர்ச்சியடைந்தது. நிலவருவாய் உயர்ந்ததுடன் ஆயுள் இன்ஷியூரன்சும்,[5] சேமிப்பு பாங்குகளும் வெகுவாக முன்னேற்றமடைந்தன.

[1] கோதுமை, பருத்தி, எண்ணெய்வித்துக்கள் போன்ற பொருள்களில் வெளிநாட்டு வாணிபம் அதிவிரைவில் வளர்ச்சியுற்றதைப் போலவே, தானியவகைகள், பருப்பு வகைகள் இவைகளில் உள்நாட்டு வாணிபமும் வளர்ச்சியடைந்தது என்று இரயில்வேக்களின் கணக்குகளிலிருந்து தெரிய வருகிறது.

[2] Datta Report, p. p. 184–186.

[3] செலாவணி, பெருக்கமடைந்தது என்ற எண்ணத்தையே வக்கீலும், முறயன் அவர்களும் வலியுறுத்தினாலும், அவர்கள் நூலின் பிற்குறிப்பில் (படம் 324) இவ் வளர்ச்சியை ஒப்புக்கொண்டார்கள்.

[4] சர்க்கரை, புகையிலை, வாசனைத் திரவியங்கள் போன்ற போகப்பொருள்களில் உள்நாட்டு வாணிபம் அதிகரித்தது.

[5] 1895-ல் 2,242 ஆக இருந்த பாலிசிகள் (Policies), 1912-ல் 14,723 ஆக உயர்ந்தன.

இத்தகைய முன்னேற்றங்கள் கிராமப்புறங்கள், நகரப் புறங்கள் இரண்டிலும் ஒருமுகமாகவே தோன்றின.[1] கிராமப் புறங்களில் வளப்பம் மிகுந்திருந்தது என்பதற்குப் பஞ்ச காலத்தில் குடியானவர்கள் நடந்துகொண்ட விதமே போதிய சான்றாகும். கிராமப்புறங்களில் கடன் தொல்லைகள் அதிகரித்தது தான் ஒரு குறையாகும். ஆனால், நாம் முன்னர்க் கண்டது போல், கடன் தொல்லைகள் அதிகரிப்பதை வளக் குறைவுக்கு ஒரு சான்றாகக் கொள்ளமுடியாது.[2]

நாம் இப்பொழுது 1914-க்குப் பிற்பட்டகாலத்தைக் கவனத் திற்கு எடுத்துக் கொள்ளலாம்.[3] அரசாங்கத்தைக் குறை கூறு பவர்கள் போருக்கு முன்னரும் பின்னரும் கையாளப் பெற்ற நாணய மாற்றுக் கொள்கை தவறுதலானது என்று கருதினர்கள். இக் கொள்கையினால் ரூபாயின் ஸ்டெர்லிங் மதிப்பு உயருவது தடுக்கப் பெற்றதால், அரசாங்கத்துக்குச் சுமார் 35 கோடி ரூபாய் நேரிடையான நட்டம் உண்டானதோடு, இந்தியாவினால் இங்கிலாந்தில் செய்யப்படும் செல்லுகளின் பளுவும் அதிகரித்தது. அதனுடன், 1914-க்கும் 1920-க்கும் இடையில், உலக விலைகளைவிட இந்திய விலைமட்டத்தை வேண்டுமென்றே குறைவாக வைத்திருந்ததால் நாட்டின் செழிப்புக்குத் தீங்கு உண்டாயிற்று என்றும் அவர்கள் குறை கூறினர்கள்.

1919ஆம் ஆண்டுவாக்கில், வாழ்க்கைக்கு இன்றியமையா தவைகள் உட்பட எல்லாப் பொருள்களின் விலைகளும் மிகவும் உயர்ந்தன.[4] மற்றெல்லாவற்றையும் விட, இறக்குமதியான பொருள்களில், விலையேற்றம் மிக அதிகமாக இருந்தது. இவற்றின் குறியீட்டு எண்கள் 98-லிருந்து 213-க்கு உயர்ந்தன. போட்டிக் குறைவான அல்லது போட்டியே இல்லாத ஏற்றுமதிப் பொருள் களின் சராசரிக் குறியீட்டு எண்கள் 91-லிருந்து 164-க்கு உயர்ந் தன. பெரும்பாலும், உள்நாட்டுச் சந்தைகளிலேயே விற்பனையான பொருள்கள் 90-லிருந்து 161-க்கு உயர்ந்தன. போட்டிக் குள்ளான ஏற்றுமதிப் பொருள்கள் 92-லிருந்து 152-க்கு உயர்ந்தன. 1914-க்கும் 1919-க்கும் இடையில், முக்கிய நுகர்வுப் பொருள்களின் விலையேற்றத்தை நோக்கினால், உணவுத் தானி

[1] G. Keatinge, Agricultural Progress in Western India, p 44.

[2] அத்தியாயம் 18-ஐப் பார்க்கவும்.

[3] அட்டவணை XXIII-ஐயும், படம் ix-ஐயும் பார்க்கவும்.

[4] 1900–1909 ஆண்டுகளுக்கான சராசரி விலைகள் 100 எண்கள் என்று அட்ட வணை XXIII-லும், படம் IX-லும் கையாண்டிருக்கிறோம்.

யங்கள் 93 சத வீதமும், இறக்குமதியான துணிகள் 187½ சத வீதமும், இந்தியாவில் உற்பத்தியான துணிகள் 61½ சத வீதமும் உயர்ந்தன என்று காண்கிறோம்.[1] இந்த விலை மாற்றங்களுக்கும், அரசாங்கத்தின் நாணயமாற்றுக் கொள்கைக்கும்உள்ள தொடர்பை, 1919ஆம் ஆண்டில் செலாவணிக்குழு (Currency Committee) விவாதித்தது. அக் குழு 'நாணயமாற்றிலிருந்த உயர்வு எந்த அளவுக்கு இந்திய விலைகளைக் குறைவாகவும், உலக விலைகளோடு இயைந்து முழு அளவுக்கு உயராவண்ணமும் தடுத்தது' என்பதை முக்கியமாகக் கவனத்தில் கொண்டு, கடந்த பத்தாண்டுக் காலத்தில் இந்தியாவில் ஏற்பட்ட விலைமாற்றங்கள் பற்றிய தாக்கீது ஒன்று தயாரிக்கும்படி 'ஃபிண்ட்லே ஷிர்ராஸ்' (Mr. Findlay Shirras) அவர்களைக் கேட்டுக்கொண்டது.[2]


ஃபிண்ட்லே ஷிர்ராஸ் அவர்கள், இந்த நேரிடையான கேள்விக்குப் பதிலளிக்குமுன் நாணயமாற்று வீதத்தில் ஏற்படும் மாறுதல்களால் வெளிநாட்டு வாணிபத்திற்கு ஏற்படும் விளைவுகளையும், இந்தியாவிலிருக்கும் செலாவணியினாலும், நாணய மாற்றினாலும் விலைகள் பாதிக்கப்படுவதைத் தடுக்கும் சில தனித் தன்மை வாய்ந்த காரணங்களையும் ஆராய வேண்டும் என்று குறிப்பிட்டார்.

இங்கிலாந்திலும், போரில் ஈடுபட்ட மற்றநாடுகளிலும் விலை யேற்றம் இந்தியாவைவிட அதிகமாக இருந்ததால், மற்ற நிலவரங்கள் நிலையாக இருந்தால், இந்திய ஏற்றுமதி உயர்ந்தும் இறக்குமதி குறைந்தும், இதனால் இந்தியாவுக்குப் பணம் அனுப்தல் ஊக்குவிக்கப் பெற்றுமிருக்கும், அப்படியிருந்தால், நாளடைவில் புழக்கத்திலுள்ள செலாவணியும் பெருக்க மடைந்திருக்கும். அதனால் உள்நாட்டு விலையும், சமநிலை அடையும்வரை அதாவது, உள்நாட்டு விலைமட்டம் வெளிநாட்டு விலைமட்டத்தை அடையும் வரை உயர்ந்திருக்கும்.[3] ஆனால், மற்ற நிலவரங்கள் நிலையாக இல்லை. பொன், வெள்ளிக் கட்டிகளின் இறக்குமதி வெகுவாகத் தடைசெய்யப் பெற்றது. அதே நேரத்தில் அரசாங்கத்தின்

[1] Report of the Committee on Indian Finance and Currency, 1919 Cmd. 527, p. 161.

[2] Op. cit. Appendix xxvii. p. 159. Cmd. 529, 1920.

[3] Report of the Committee on Indian Finance and Currency, Appendix, p. 162. 'இந்தியா முழுப்பொன் திட்டத்தையோ அல்லது வெள்ளித்திட்டத்தையோ (Silver Standard) கையாண்டிருந்தால் எப்படி வெளிநாட்டு விலைகள் இந்தியாவில் வெள்ளி விலையைப் பாதித்திருக்குமோ அதேபோன்று தான் 'பொன் பரிவர்த்தனைத் திட்டத்தின்' (Gold Exchange Standard) கீழும் சூழ்நிலை இருந்தது' என்று 'ஃபிண்ட்லே ஷிர்ராஸ்' அவர்கள் கூறியதை இங்குக் குறிப்பிடலாம்.



படம் IX 1900-1919 காலத்தில், இந்தியாவில் பண்டத்தொகுப்புகளின் விலைக்குறியீட்டு எண்கள்.

1900-க்கும், 1909-க்கும் இடைக்காலத்தில் இருந்த சராசரிவிலை 100 எண்களாக எடுத்துக்கொள்ளப்பட்டது.

V. Report of the Committee on Indian Exchange and Currency, 1919, vol. iii., Appendix xxxiii.

கட்டுப்பாட்டினால், ஏற்றுமதிகள் வேண்டுமென்றே குறைக்கப் பெற்றன. உணவுத் தானியங்களைப் பொறுத்தவரை அரசாங்கம் மிகவும் கண்டிப்பாக இருந்தது. அரசாங்கத்தின் அனுமதியின்றி இவற்றின் ஏற்றுமதி தடைசெய்யப்பெற்றது. இந்தியாவிலும் வெளிநாடுகளிலும் உணவுத் தானியங்களின் விலைகளில் ஏற்பட்ட பெருத்த மாறுபாடே, இதனாலுண்டான விளைவாகும். அரிசி ஒரேநேரத்தில் இலண்டனில் 1அந்தர் 39 ஷில்லிங்குக்கும், இரங்கூனில் அரசாங்கத்தால் நிர்ணயிக்கப் பெற்ற 11 ஷில்லிங்குக்கும் விற்கப்பெற்றது. சையாமிலிருந்து தருவிக்கப்பெற்ற அரிசிக்கு சிலோனில் ஒருடன் 60பவுன் (ஸ்டெர்லிங்) கொடுக்கவேண்டியிருந்தது. ஆனால், பர்மா அரிசியை ஒரு டன் 14 பவுனுக்கும் கீழாக இறக்குமதி செய்யலாம்.[1] இதனால், உயர்ந்த விலையில் அதிகப்படியான ஏற்றுமதிகள் செய்வதன் மூலம் 'சம நிலை' (equlibrium) அடைவது, செயற்கையாகத் தடுக்கப்பெற்றது என்பது தெளிவாகிறது. இந்திய ஏற்றுமதியாளர்களுக்கு (விவசாயிகளுக்கும்) உயர்ந்த விலையில் அதிகப்படியான ஏற்றுமதிகளைச் செய்வதன் மூலம் கிடைக்கக் கூடிய பயனை அடைய வாய்ப்பில்லாமல் போய்விட்டது. அதே நேரத்தில் இறக்குமதியாளர்கள் உயர்ந்த விலைகளைச் செலுத்த வேண்டியிருந்தது. 'முதன்மை முறையாலும்' (Priority System) கப்பல் கட்டணக் கட்டுப்பாட்டினாலும், மற்ற முக்கியப் பொருள்களின் ஏற்றுமதியும் தடைசெய்யப் பெற்றது.[2] இதற்கிடையில், பருத்தி, தோல் தொழிற்சாலைகளின் உற்பத்தி, டாடா எஃகு, இரும்புக் கம்பெனி உற்பத்திசெய்த பல பொருள்கள், மற்றும் பல இந்திய உற்பத்திகள் இவை அரசாங்கத்திற்கு விற்பனை செய்ய வேண்டுமென்று நிறைவேறிய ஒப்பந்தங்கள் உள்நாட்டு விலைகள் ஏற்றமடைவதை மேலும் தடுத்தன. இத்தகைய பொருள்களை வெளிநாடுகளிலிருந்து தருவித்திருந்தால் கொடுக்கப்பட்ட விலைகளுக்கு, மிகக் குறைந்த விலைகளையே அரசாங்கம் போர்க்காலம் முழுவதிலும் கொடுத்துவந்தது. ஆகவே, இத் துறையிலும் இந்திய உற்பத்தியாளர்கள் 'போர் இலாபங்களின்' முழுப்பயனையும் அடையா வண்ணம் தடுக்கப் பெற்றனர் என்பது தெளிவாகிறது. இவ்வாறு இலாபமடைவதைத் தடுப்பது முறையானதுதான் என்று தற்காலிகமாகத் தோன்றியது. ஆனால், டாடா இரும்பு எஃகு கம்பெனி போன்ற தொழில் நிறுவனங்கள் இலாபத்தின் மூலம் 'காப்பு நிதி' திரட்டுவதை இது தடுத்தது. இத்தகைய காப்புநிதி பின்னர் ஏற்பட்ட

[1] Op. cit., Appendix xxvii, p. 160.

[2] எடுத்துக்காட்டாகத் தோல், பதனிட்டதோல் இவைகளின் ஏற்றுமதி கட்டுப்படுத்தப்பெற்றன. 'காப்பி' ஏற்றுமதி முற்றிலும் தடைசெய்யப்பெற்றது.

மந்தத்தின்போது பயன்பட்டிருக்கும். இதனால், இறக்குமதியாளர்களுடன் ஒப்பிட்டுப் பார்த்தால் உற்பத்தியாளர்களின் நிலை கேடுடையதாக இருந்தது.[1]

பொன் கட்டிகளை இறக்குமதி செய்வது தடுக்கப்பெற்றதால் இந்தியாவிற்குப் பணம் செலுத்துவதற்கான தேவை மிகவும் அதிகரித்தது. இதனால் இந்திய மந்திரி, கவுன்சில் உண்டியல்கள் விற்பதைக் குறைக்கவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது. நாணயமாற்று வீதத்தைக் கட்டுப்படுத்தா திருந்தால் ரூபாயின் மதிப்பு மிக விரைவில் உயர்ந்திருக்கும். ஆனால், 'நாணயமாற்றுக் கட்டுப்பாட்டினால், வீதத்தில் (நாணயமாற்று) சிறிதளவு உயர்வு இருந்தாலும், உடனடியான ஏற்றம் தவிர்க்கப்பட்டது.'[2] அதாவது, நாணயமாற்று உயர்வு மூலம் ரூபாய்க்கு இருந்த தேவையைத் தடுப்பதற்குப் பதிலாக (அதன் மூலம் தேவையைத் திருப்தி செய்யவும்) தேவையில் சிறிதளவே அனுதிக்கப்பெற்றது. அதுவும் குறைந்த வீதத்தில் அனுமதிக்கப் பெற்றதால், இந்திய அரசாங்கத்திற்குக் கிடைக்க கூடிய வருவாயும் இல்லாமற் போனது.

1917ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதத்தில், நாணயமாற்றத்தில் ஒரு 'திடீர் ஏற்றம்' தோன்றியது. அப்போது, வெள்ளி விலையில் தீவிரமான ஏற்ற மிருந்ததால் ரூபாயின் தோற்ற மதிப்பைவிட (Face Value) அதில் உள்ள வெள்ளியின் மதிப்பு உயர்ந்தது. ரூபாய்கள் உருக்கப்பெற்று, வெள்ளி ஏற்றுமதியாகலாம் என்ற அபாயம் ஏற்பட்டது. அதனால், நாணயமாற்று வீதம் 1ரூ.-க்கு 1 ஷில்லிங் 5 பென்சுக்கு உயர அனுமதிக்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது. அதற்குப் பிறகு நாணயமாற்றத்தில் அவ்வப்போது ஏற்றங்களிருந்தன.[1] அரசாங்கம் இதில் தலையிட்டிருக்காவிடில், 1916ஆம் ஆண்டிலேயே 'நாணயமாற்று' உயரத் தொடங்கியிருக்கும். இதனால், இறக்குமதிகள் ஊக்குவிக்கப்பெற்றும், ஏற்றுமதிகள் குறைக்கப் பெற்றும், இறக்குமதிப் பண்டங்களிலிருந்த விலையேற்றம் தடுக்கப் பெற்றும் இருக்கும்.[4] நிலைமை அப்படி யிருந்திருக்குமானால், இறக்குமதிகளின் மிகுதியான விலையேற்றத்தினாலும், ஏற்றுமதிப் பொருள்

[1] Op. cit., Appendix xxvii. p. 163.

[2] Op. cit, Appendix xxvii, p. 163.

[3] அத்தியாயம் 15-ஐப் பார்க்கவும்.

[4] மற்ற நிலவரங்கள் நிலையாக இருந்தால், 'நாணயமாற்றம் உயரும் பொழுது, தற்காலிகமாக இறக்குமதிகள் ஊக்குவிக்கவும், ஏற்றுமதிகள் குறைக்கவும் பெறுகின்றன. நாணயமாற்றத்தில் வீழ்ச்சியிருந்தால் ஏற்றுமதிகள் ஊக்குவிக்கவும் இறக்குமதிகள் குறைக்கவும் பெறுகின்றன.' (Op. cit., Appendix xvii, p. 165.)

களின் உற்பத்தியாளர்களுக்குக் கிடைத்த குறைந்த இலாபத் தினாலும் உண்டான கேடுகள் இந்தியாவைப் பாதித்திருக்கா. இதனால் போர்முடிந்ததும் சீரமைப்பின் மூலதனச் செலவும் வெகுவாகக் குறைந்திருக்கும்[1] 'இக் கருத்துச் சரியான தென்றால் ரூபாயை, மதிப்பு இறங்கிக் கொண்டிருக்கும் ஸ்டெர்லிங் திட்டத்துடன்[2] (Depreciating Sterling Standard) இணைத்தது அதன் (ரூபாயின்) வாங்கும் மதிப்பு (Purchasing Value) குறைந்ததற்கு ஒரு முக்கியக் காரணமாக இருக்கிறது. அதனால், மேலே குறிப்பிட்ட[3] பொருளாதார, சமூக விளைவுகளுக் கும், அது ஓரளவு காரணமாக இருந்திருக்கிறது என்று கூறு வதும் சரியாகும்' என்று 'ஃபிண்ட்லே ஷிர்ராஸ்' (Mr. Findlay Shirras) அவர்கள் கூறினார்கள்.

ஆனால், 1916ஆம் ஆண்டு முதற்கொண்டு நாணயமாற்று விரைவில் உயர்ந்திருந்தால், போரின் முக்கியக் கட்டத்தில் வாணிபச் சீர்குலைவு ஏற்பட்டிருக்கும். இத்தகைய சீர்குலைவைத் தவிர்ப்பதற்குச் சிறிதளவு தியாகம் செய்வது முறையானதே.

1914-க்கும் 1919-க்கும் இடைக்காலத்தில் ஏற்பட்ட விலை மாற்றங்கள், சமுதாயத்தின் பல வகுப்பினரையும் எவ்வாறு பாதித்தன என்பதை ஆராய முற்படலாம். விலையேற்றத்தினால் சமுதாயத்தின் சில வகுப்பினருக்கு உண்டான கேடுகள் (நிலை யான வருமானம் உள்ளவர்களுக்குக் கொடுமை, உற்பத்திச் செலவில் அதிகரிப்பு, கூலிகள் விலைகளுக்குப் பின்தங்கியே செல் வதால் கூலி ஈட்டுவோர்களுக்குத் தற்காலிகமாக உண்டான கொடுமை போன்றவை) போருக்கு முன்னர் இருந்தது போலவே, காலம் முழுவதற்கும் பொதுவாக இருந்தன. ஆனால், அக் கேடுகளால் விவசாயிகள், தொழிலதிபர்கள், தொழிற்சாலைகளில் வேலை செய்யும் கூலி ஈட்டுபவர்கள் இவர்களுக்கு உண்டான விளைவுகள் முற்றிலும் எதிர்மாறாக அமைந்தன.

போருக்கு முந்திய காலத்தில் விலையேற்றத்தின் விளைவுகள், விவசாயிகளின் வருமானத்தை அவர்களின் செலவு உயர்ந்த அளவுக்கு அதிகரிப்பதாக இருந்தன. 1914ஆம் ஆண்டுக்குப் பின்னர், வருமானத்தைவிட, செலவு அதிகரிக்கும்படியான நிலை ஏற்பட்டது. அதாவது, விவசாயிகளுக்குக் கிடைத்த அதிகப்படி

[1] உதாரணமாக, டாடா இரும்பு எஃகு கம்பெனியாரின் புது தளவாடங்களுக்கான மூலதனச்செலவு மிகுதியாக இருந்தது. அது சற்றுக்குறைந்திருக்கும். அக்காலத்தில் இந்தியத் தொழிலதிபர்கள் தளவாடங்களையும், மற்ற முக்கியமான இயந்திரங்களையும் அதிகவிலைக்கு வாங்கிவந்தனர்.

[2] அதாவது செயற்கை முறையில் நாணயமாற்றத்தை ஒரு ரூபாய்க்கு 1 ஷில் 4பென்ஸ் வீதத்தில் நிலவச்செய்வது.

[3] Op. cit., Appendix xxvi. p. 163.

யான பணவருமானங்களை, பண்டங்களின் விலையேற்றம் விழுங்கி விடும்படியாக இருந்தது. போர்க்காலத்தில் தீங்கிழைக்கும் காரணங்கள் சில இருந்தாலும், குறிப்பிட்ட சில உற்பத்திப் பொருள்களுக்கு அதிகப்படியான தேவை யிருந்ததாலும், விற்பனைச் சர்வாதீன முறை (Monopolistic Position) நிலவிய தாலும் தொழில்துணிவு ஊக்குவிக்கப் பெற்றது. ஆனால் 1920–21–க்குப் பின்னர், தொழிலதிபர்கள் அதிகமாகப் பாதிக்கப் பெற்றதுடன், தொழில் துணிவுக்கும் வாய்ப்பில்லாமல் போ யிற்று. இந்தியப் பேரளவு உற்பத்தியாளர்கள் (Large - Scale (Manufacturers) இயந்திரங்களுக்கும், தளவாடங்களுக்கும், மற் றச்சாமான்களுக்கும் இறக்குமதியையே இன்னமும் நம்பிருந்தார் கள். போருக்குப்பின் ஏற்பட்ட சீரமைப்பின்போது அவர்கள் தொடர்ந்து தளவாடங்களைப் பெருத்த செலவில் புதுப் பித்தார்கள். பின்னர் ஏற்பட்ட மந்தத்தினாலும், விலை வீழ்ச்சி யினாலும் மூலதனச் செலவில், சாதாரண லாபமும் அவர்களுக்குக் கிடைக்காமல் போயிற்று. கூலி ஈட்டுவோர்கள், அவர்களுடைய கூலிகள் உயருவதற்கு முன்னரே, விலையேற்றத்தின் ஆழத்தை உணர்ந்தார்கள். பின்னர் ஏற்பட்ட வாணிப, தொழில் மந்தத் தினாலும் அவர்கள் பாதிக்கப் பெற்றார்கள். இதற்கிடையில் உற்பத்திச் செலவு உயர்ந்ததாலும் அரசாங்க ஊழியர்களுக்கு அதிகச் சம்பளம் கொடுக்கவேண்டி யிருந்ததாலும் அரசாங்க நிதி நிலைமையும் கேடு அடைந்தது. இதனால் வரிவிதிப்பு அதிகரித்த துடன், தொழிற்சாலைகளுக்கு அளிக்கப்பெற்ற அரசாங்க உதவித் தொகையும் குறைக்கப் பெற்றது. வாணிபமந்தம் அரசாங்க வருவாயை மேலும் குறைத்து, நிதி இக்கட்டையும் அதிகரித்தது. இதன் விளைவுகள், குறிப்பிட்ட ஒருகாலம்வரை சிறு குடியான வர்களுக்கும், கூலி ஈட்டுவோர்களுக்கும் கொடுமையும்; தொழி லாளர்களிடை அதிருப்தியும் அமைதியின்மையும், தொழில் துணிவு தடைப்பட்டதும், வரிவிதிப்பு உயர்வும் அதனுடன் பொருளாதார வளர்ச்சிக்கு அரசாங்கத்தின் அரை குறையான முயற்சியும் ஆகும். நாணயமாற்றைக் கட்டுப்படுத்த எடுத்துக் கொண்ட (1920-ல்) முயற்சி தோல்வியடைந்ததிலிருந்து இந்திய விலைகள் உலகவிலைகளுக்கு ஏற்ப மாற்றமடைந்தன. ஆகையினால் இந்திய விலைக்கும் உலகவிலைகளுக்கும் உள்ள வேறுபாட்டின் விளைவுகளும் மறையத் தொடங்கின. ஆனால், செய்வினை முடிந்த பொருள்களுடன் ஒப்பிட்டுப் பார்க்கும்போது, மூலப் பொருள் களுக்கும் உணவுப்பொருள்களுக்குமிடையிலும், இந்திய முக்கிய இறக்குமதிகளுடன் ஒப்பிட்டுப் பார்க்கும்போது ஏற்றுமதிகளிலும் சில மாறுபாடுகள் இன்னும் இருக்கின்றன. இந்தியாவில் இலங்காஷைரின் (Lancashire) பருத்தித்துணிகள்

வியாபாரத்தில் தொடர்ந்து ஏற்பட்ட மந்தத்தின் காரணத்தை இது விளக்குகிறது.

இவ்வாறு, விலைகளின் போக்கும், விலைமாற்றங்களின் விளைவுகளும் போருக்குமுன் இருந்ததைவிட, 1914-க்குப் பின்னர் அதிகக் குழப்பமுடையதாக இருந்தன. நாட்டின் வளப்பத்தை அவைகள் எவ்வாறு பாதித்தன என்பதை, உண்மையில் மதிப்பிட முடியாது. ஏற்றுமதிகளைவிட இறக்குமதிகளின் விலை உயர்ந்ததால் உற்பத்தியாளர்களுக்கு விளையும் கேடுகளுக்கு, வெளிநாட்டு விலைமட்டத்தைவிட உள்நாட்டு விலைமட்டம் நிலையாக இருப்பதால் நுகர்வோர்களுக்குக் கிடைக்கும் பயனை ஈடாகக் கொள்ளலாம். கெயின்ஸ் (Mr. Keynes) அவர்கள் பின்வருமாறு வாதாடுகிறார்: 'இந்தியா போன்ற நாட்டில் நிலையான உள்நாட்டு விலைமட்டம் மிக மிக விரும்பத்தக்கது. அண்மையில் நிகழ்ந்த வாணிபச் சகடத்திலிருந்து (Trade cycle) உள்நாட்டு விலைகளில் மிகக் குறைவான ஏற்ற இறக்கங்களுடன் அது வெளியேறியதுடன் ஒப்பிட்டால், வெளிநாட்டு வாணிபத்தில் ஈடுபட்டுள்ள வர்த்தகர்களுக்கு நாணயமாற்று ஏற்ற இறங்கங்களால் உண்டான கேடுகள் மிகவும் சாதாரணமே'.[1] இது உள்நாட்டு விலைமட்டத்தை நிலைப்படுத்துவதற்கு, புழக்கத்திலிருக்கும் செலாவணியின் அளவை மாற்றுமல் நாணயமாற்றைத் தடையின்றி ஏற இறங்க அனுமதிப்பதை ஆதரிக்கும் ஒரு வாதமாகும். ஆனால், உண்மையில், நாயணமாற்று, தடையின்றி ஏற்ற இறக்கமடைவதைத் தடுப்பதே அரசாங்கத்தின் கொள்கையாயிருந்தது. ஆதலால், எந்தக் கோணத்திலிருந்து நோக்கினாலும், அக் கொள்கை தோல்வியடைந்தது ஒரு நற்பேறேயாகும். நாணயமாற்றத்தில் மேலும் அதிகமாக ஏற்ற இறக்கங்கள் இருந்திருந்தால் வணிகர்களுக்குக் கேடும், அதனாலுண்டாகும் 'ஊக வாணிகமும்' வாணிபச் சீர்குலைவும் அதிகமாக இருந்திருக்கும்.[2]

கடந்தகால நிகழ்ச்சிகளை நோக்கினால், போருக்குமுன் கையாளப்பெற்ற நிலையான நாணயமாற்றுக் கொள்கையின் அறிவுத்திறன் பாராட்டுதலுக்குரியதாயிருந்தது. ஆனால், 1914-க்குப் பின் நிலவிய சூழ்நிலையில், நிலையான விலைமட்டத்தின் பயன்கள் விரும்பத்தக்கனவாயிருந்தன. விலைமட்டம் நிலையாக இருக்கும் காலத்தில் (போருக்குமுன் இருந்ததைப்போல்) விலைகள் சிறுகச் சிறுகத் தொடர்ந்து ஏற்றமடைந்தால், சமுதாயத்தின்

[1] Economic Journal, March 1923, p. 63.

[2] இதற்கு அவ்வளவு ஏது இல்லை. காரணம் அரசாங்கம் நாணயமாற்றை ரூபாய்க்கு 2 ஷில்லிங் விதத்திற்கு உயர்த்தக்கூடும் என்ற நம்பிக்கையினால் அவசிய மற்ற வாணிபச் சீர்குலைவு ஏற்பட்டது.

எந்த ஒரு வருப்பினரையும் அதிகக் கொடுமைக்குள்ளாக்காமல் வாணிபமும், பொருளாதார வளர்ச்சியும் ஊக்குவிக்கப் படுகின்றன. நிலையான நாணயமாற்றம் வாணிபத்தை ஒழுங்கு படுத்துவதுடன் ஊக வாணிபத்தையும், சீர்குலைவையும் தடுக் கிறது. அதற்கு மாறாக, மிகவும் நிலையற்ற ஒரு காலத்தில் (போரின் முடிவுக் காலத்தில் தொடங்கியதுபோல்) விலைகளில் ஏற்படும் பெரிய ஏற்ற இறக்கங்கள் சமுதாயத்தின் பல வகுப்பின ருக்கும் பெருங் கொடுமையை இழைக்கின்றன. நிலையான 'நாணயமாற்றை' அடைய முடிந்தாலும், அதனால், கிடைக்கக் கூடிய பயன்கள் இக் கொடுமைகளுக்கு ஈடு செய்வதாக இல்லை. தற்போதைய சூழ்நிலையில் நிலையான நாணயமாற்றை அடைவது இயலாத காரியமாகும்.

இவற்றிலிருந்து எந்தவிதமான கொள்கையைக் கையாண் டாலும் குறிப்பிட்ட கொடுமை விளைந்தே தீரும்; மேலும், தற்போதைய சூழ்நிலையில் விலையிலும், நாணயமாற் றிலும் ஏற்ற இறக்கங்களினால் உண்டாகும் கொடு மைகள் தவிர்க்க முடியாதவை என்பது பெறக் கூடிய ஒரே முடிவாகும். அரசாங்கத்தின் நாணயமாற்றுக் கொள்கை பயனற்றதாயும் கையாளப்பெற முடியாமலும் இருந்தது ஆனால் விலைகளைப் பொறுத்தவரை, அக்கொள்கையின் விளைவு (நாணயமாற்றைக் கட்டுப்படுத்த எடுத்துக்கொண்ட முயற்சியின் செலவும், 1920-ல் ஏற்பட்ட நெருக்கடியை அதிகப் படுத்தியதில் அதன் பங்கும் ஒரு புறமிருக்க) முறையே விலைகளிலும், நாணயமாற்றத்திலும் இருந்த ஏற்ற இறங் கங்களில் ஒரு திருப்திகரமான சமநிலையைக் கொடுப்பதாக இருந்தது.

சுருக்கிக் கூறவேண்டுமானால், 1900-க்கும் 1914-க்கும் இடை யில் பொதுவான விலைகளின் மட்டத்தில் ஏற்பட்ட உயர்வும், உள்நாட்டு விலைகளில் உண்டான அதிமான விலையேற்றமும், பொதுவாக நாட்டின் வளப்பற்றிற்கு, குறிப்பாகத் தொழிலாள வகுப்பினருக்கு அனுகூலமாக இருந்தன. ஆனால், 1914-க்குப் பின்னர், இந்தியாவுக்கு அனுகூலமான மற்றையக் காரணங்கள் நிலவினாலும் விலைகளில் ஏற்றமும் அதைத் தொடர்ந்து ஏற்றுமதி களைவிட இறக்குமதிகளில் அதிகமான ஏற்றமும் கேடு செய்வன வாகவே இருந்தன[1].

[1] இந்தியா ஒரு கடனாளி நாடாக இருப்பதால் உலக விலைகள் ஏற்ற மடைவதால் இலாபமடைகிறது. உற்பத்தியான பொருள்களைவிட உணவுப் பொருள்கள், மூலப் பொருள்கள் இவைகளின் விலையேற்றம் அதிகமாக இருந்தால் கிடைக்கும் இலாபம் இன்னும் அதிகமாகிறது. ஆனால், மூலப்பொருள்கள், உணவுப்பொருள்கள் இவை களின் விலையேற்றத்தைவிட, உற்பத்தியான பொருள்களின் விலையேற்றம் அதிகமா யிருந்தால் கிடைக்கக் கூடிய இலாபமும் இல்லாமல் போகிறது.

ஆனால், 1914-க்கும் 1929-க்கும் இடையில் ஏற்பட்ட விலை யேற்றம் அனுகூலமற்றதாகத் இருந்ததால், அக் காலத்தில் பொதுவாகப் பொருளாதாரத் தரக்கேடு இருந்தது என்று முடிவு செய்துவிடக் கூடாது. மற்றக் காரணங்கள் வாணிபத்தையும் உற்பத்தியையும் ஊக்குவித்ததுடன், சில நேரங்களிலாவது நாட்டின் வளப்பத்தை அதிகரித்தன. மொத்தத்தில் 1920–21 வரை அனுகூலமான சூழ்நிலை நிலவியது. ஆனால், அதற்குப்பிறகு சூழ்நிலை வளப்பத்திற்குத் தடையாக இருந்தது. இந்த நிலை 1923-ல் தோன்றி, 1929-வரை நீடித்த மீட்சிக் காலம்வரை தொடர்ந்திருந்தது. அதற்கான சான்றுகள் அதிகம் இல்லை யென்றாலும், மக்களின் பொருளாதார நிலை 1929-ம் ஆண்டில் 1914ஆம் ஆண்டுக்கு முன்னிருந்ததைவிடத் தாழ்ந்ததாக இல்லை. ஆனால், 1928-வாக்கில் நிலை வெகுவாக உயர்ந்தே இருந்தது. 1914-க்கு முன்னரே வாழ்க்கைத்தரத்தில் ஏற்றம் இருந்தது என்பது மறுக்கமுடியாத உண்மை. இந்த ஏற்றம், அதற்குப் பின்னரும் தொடர்ந்து (ஆனால், ஏற்றத்தின் வேகம் சற்றுக் குறைவாக) இருந்தது என்று உணவு, உடை, வீட்டுவசதி போன்ற சந்தர்ப்பச் சான்றுகள் எடுத்துக் காட்டுகின்றன. கல்வியைப் பரப்புவதும், பிரயாணங்களை அதிகரிப்பதும்தான், வாழ்க்கைத்தரத்தில் நிரந்தரமான ஏற்றத்தைப் பெறுவதற் கான ஒரே வழியாகும் என்று சிலர் கருதுகிறார்கள்.[1] போர், அதில் பங்கெடுத்துக் கொண்டவர்களின் கல்வியறிவை உண்மையில் வளர்த்தது. ஐரோப்பாவிலிருந்தும், மெசபொடேமியாவிலிருந்தும் திரும்பிய வீரர்கள் தங்களுடைய குடும்பங்களிலும் கிராமங்களிலும் உயர்ந்த வாழ்க்கைத் தரத்தை மேற்கொண்டார்கள். இவ் உண்மை பஞ்சாப் மாகாணத்தைப் பொறுத்த வரையிலாவது பொருந்தும் என்று விளக்கமான சந்தர்ப்பச் சான்றுகளுடன் 'டார்லிங்' (Mr. Darling) அவர்கள் நிரூபிக்கிறார்.[2]

[1] *V.* Professor H. Stanley Jevons on 'The Consolidation of Agricultural Holdings in the United Provinces' (1918), Bulletin No. 9 of the Economics Department, University of Allahabad.

[2] The Punjab Peasant in Prosperity and Debt by M. L. Darling (1925), chap. xiv. 'பஞ்சாப் குடியானவர் பத்து அல்லது இருபது ஆண்டுகளுக்கு முன் இருந்ததுபோல் இல்லை. உலக மகாயுத்தத்தில் அவர் பங்கு கொண்டார். அந்த அனுபவம் உள்ள எவரும் முன்னிருந்தவைபோல்லை. புது உலகந்தை இரயில் வேக்கள் முன்னரே அவருடைய வீட்டுமுன் கொண்டு வந்துவிட்டன. ஆனால், போர் அதை அவர் கண்முன்னேயே கொண்டுவந்தது. சுமார் ஐந்து இலட்சம் பஞ்சாபிகள் போரில் பணியாற்றினார்கள். அவர்களில் பெரும்பாலோரும் வெளிநாடுகளில் பணியாற்றினார்கள். அவர்கள் திரும்பி வந்தது கிராமப்புறங்களில் ஒரு மாற்றத்தை உண்டாக்காமல் இருக்க முடியாது. இந்தக் கிராமங்கள் வெளிப்புறத் தோற்றங்களில் மாறுதலடைய வில்லை..... ஆனால், போருக்குப்பின் உலகின் பல திக்குகளிலும் வீசிய புதுமையும், வியப்பும் கொண்ட பெருங்காற்று, இக்கிராமங்களின் குறுகி நெளிந்து செல்லும் சந்துகளையும் கடந்து சென்றது. ஆண்கள் மூலை நேரத்தில்,

இந்தியாவில் 1914-க்குபின் மெய் வருமானங்களிலும், தொழிலாளர்களின் வாழ்க்கைத் தரத்திலும் ஏற்பட்ட மாறுதல்களைப் பற்றியும், நாடு முழுவதற்குமான 'பெயரளவு' (Nominal) வருமானங்கள், வாழ்க்கைத்தரம் இவைகளைப் பற்றியும் திட்டவட்டமான கருத்தைத் தரக்கூடிய புள்ளி விவரங்கள் கிடைக்கவில்லை.[1] இருப்பினும், குறிப்பிட்ட சில தொகுதிகளிலும், தொழிற்சாலைகளிலும் கூலிகள், 'வாழ்க்கைச் செலவு' இவைகள் பற்றி மேற்கொண்ட ஓரிரு முனைப்பான ஆராய்ச்சிகளிருந்து சில உண்மைகளை அறியலாம்.[2]

அரசாங்கம் தொழிலாளர்கள் பற்றிய புள்ளி விவரங்களைத் திரட்டும் பணியைச் சிறந்த முறையில் மேற்கொள்ளலாம் என்று ஒரு நேரத்தில் தோன்றியது. தொழிலாளர்களிடையே, சமீப ஆண்டுகளில் ஏற்பட்ட அமைதியின்மையும், 'சர்வதேசத் தொழிலாளர்களின் அமைப்பு' (International Labour Organisation) இட்டபணியும் (விசாரணை நடத்துதல், விவரங்களைச் சேகரித்தல், சமூகச் சட்டங்களையும், தொழிற்சாலைச் சட்டங்களையும் நிருவகிப்பது, வளர்ப்பது இவைகள் யாவும் அடங்கிய) புள்ளி விவரங்களைத் திரட்டுவதற்கும், தொழில் தகராறுகளை முடிவு செய்யவும்[3] அரசாங்க அமைப்புகள் உருவாக்குவதற்கு ஏதுவாயிருந்தன. மத்திய அரசாங்கத் 'தொழில்துறையில் ஒரு கட்டுப்பாட்டு அதிகாரியின் மேற்பார்வையின் கீழ்த்தொழிலாளர் . பணிமனை (Lobour Bureau) ஒன்று நிறுவப்பெற்றது[4] திப்பயஞக இன்ச்கேப் குழுவின் (Inchcape Retrenchment Committee) கத்தி இதன் கழுத்தில் விழ, இப் பணிமனை மூடப்பெற்றது. சிறிது காலத்

பகலின் உழைப்பு முடிந்து ஹுக்காப்புகை பிடிப்பதற்கும், வம்புப் பேச்சு பேசுவதற்கும் கிராமப் பொதுஇடத்தில் கூடும்பொழுது, பேச்சுகள் வேளாண்மையைப்பற்றியோ, வழக்குகளைப்பற்றியோ அல்லது அண்டைவீட்டுக்காரர்களைப் பற்றியோ இனியும் இல்லை. உண்மையில் கிராமம் ஒரு புத்தெழுச்சி கொண்டிருக்கிறது.

[1] நாடுமுழுவதற்குமான கூலிகள் பற்றிய நம்பத்தகுந்த புள்ளிவிவரங்கள் கிடைக்கவில்லை என்றும், மாதாந்தரக் கூலிகளை அறிவிக்கும் அரசாங்க வெளியீடுகளும் 1923-லிருந்து நிறுத்தப்பெற்றன என்றும் நாம் முன்னரே கண்டோம்.

[2] இந்த ஆராய்ச்சிகளில் கீழ்க்காண்பவை அடங்கியுள்ளன : an 'Enquiry into Agricultural Wages in the Bombay Presidency' (1924), an 'Enquiry into Working Class Budgets in Bombay' (1923), two 'Enquiries into Wages and Labour in the Cotton Mill Industry' (1923 and 1925), and 'Provincial Wage Censuses in Madras' (1921–22), the Punjab (1921–22), and—for agricultural labour only—in Bihar and Orissa (1924). பண வருமானங்கள் பற்றிய செய்திகள் 'Provincial Annual Reports of Factory Inspectors' லும், 'வாழ்க்கைச் செலவு பற்றிய புள்ளி விவரங்கள், 'Bombay Labour Gazette'-லும் வெளியிடப்பெற்றுள்ளன. 1929-க்குப் பின்னர் ஏற்பட்ட விலைமாற்றங்களை அத்தியாயம் 18-ல் காணலாம்.

[3] R. N. Gilchrist, The Payment of Wages and Profit-Sharing

[4] இந்தப் பணிமனையில் பெண்தொழிலாளிகளின் அலுவல்களைக் கவனிக்க ஒரு பெண் ஆலோசகர் நியமிக்கப்பெற்றார் என்பது கவனத்திற்குரியதாகும்.

திற்குப்பின், அரசாங்கத் தொழிலாளர்துறை ஒன்று தொடங்கப் பெற்று, தொழிலாளர்களையும், தொழிற்சாலைகளையும் கட்டுப் படுத்தும் அதிகாரம் அதனிடம் கொடுக்கப் பெற்றது. ஆனால், தொழிலாளர்கள் பற்றிய சட்டமியற்றும் அதிகாரம் மத்திய அரசாங்கத் துறையிடமும் தொழிலாளர்களை நிருவகிப்பதும் தொழிற்சாலைகள் பற்றிய சட்டமியற்றும் அதிகாரம் மாகாண அரசாங்கங்களிடமும் ஒப்படைக்கப்பெற்றன. ஆகவே, புள்ளி விவரங்களைத் திரட்டும் பணியும் மாகாண அரசாங்கங்களிடமே விடப்பெற்றது. இதுவரை இரு 'தொழிலாளர் பணிமனை'கள் (பம்பாயிலும், வங்காளத்திலும்) நிறுவப்பெற்றுள்ளன. சென்னையில் 'ஆணையாளர், தொழிலாளர்துறை' என்று தொழிலாளர் தகராறுகளைத் தீர்த்துவைக்கும் பஞ்சாயத்தாராக ஒருவர் நியமிக்கப் பெற்றார். ஆனால், மற்ற மாகாணங்களில் இத்தகைய பணிகளை அரசாங்கத் தொழில்துறையே செய்துவருகின்றது. மாகாண அரசாங்கங்கள் துரதிர்ஷ்டவசமாக இத்தகைய பணிகளைக் கடும் ஆட்குறைப்புக் காலத்தில் மேற்கொண்டன. ஆதலால், இதற்காகும் செலவு தேவையற்றது என்ற எண்ணத்தில், ஒரு சிறிய அளவுக்குக் குறைக்கப்பெற்றது. இதன் விளைவு பம்பாய்த் தொழிலாளர் அலுவகம் மட்டுமே முக்கியப் புள்ளி விவரங்களைப் பரவலான முறையில் தொடர்ந்து சேகரித்து வருகிறது. 'பம்பாய் லேபர் கெசட்' (Bombay Labour Gazette) தொழிலாளர்கள் பற்றிய தகவல்கள் கொடுக்கும் ஒரு முக்கிய வெளியீடாகும். கூலிகள் வாழ்க்கைச்செலவு இவைகள் பற்றி இதுவரை செய்யப்பெற்ற முக்கிய விசாரணைகளில் பலவும் பம்பாய் மாகாணத்தால் மேற்கொள்ளப்பெற்று பம்பாய்த் தொழிலாளர் பணிமனையால் வெளியிடப்பெற்றன. 1921 ஆம் ஆண்டில் இந்தியா முழுவதற்குமான வாழ்க்கைச் செலவுக் குறியீட்டு எண் (Cost of living Index number) ஒன்று தயாரிக்க வேண்டுமென்ற யோசனை கூறப்பெற்றது. ஆனால், நாட்டின் அளவு பெரிதாக இருப்பதாலும், பல தொகுதிகளிலும் மாறுபட்ட சூழ்நிலை நிலவுவதாலும் அப் பணி கைவிடப்பெற்றது. நாடு முழுவதற்கும் பொதுவான ஒரு குறியீட்டு எண் நாட்டின் எந்தத் தொகுதியையும் பிரதிபலிக்காது. ஆகவே, நடைமுறைக்குப் பயன்படாது என்று சிலர் கருதினர்கள்.

ஆகவே, பம்பாய் மாகாணத்தில் கூலிகளைப்பற்றிக் கிடைக்கும் புள்ளிவிவரங்களை இப்பொழுது ஆராய்வோம். இப் புள்ளி விவரங்களை மூன்றுபிரிவுகளாகப் பிரிக்கலாம். **(i) விவசாயக் கூலிகள் (பெயரளவிலும், மெய்யாகவும் (Nominal and real); (ii) பருத்தி ஆலைகளில் கூலிகள்; (iii) பம்பாய் நகரத்தில் வாழ்க்கைச் செலவு.**

(i) பம்பாய் மாகாணத்தில் விவசாயக் கூலிகள் பற்றிய விசாரணையில், கிராமப் புறங்களில் விவசாயத்திலும் தொழிற் சாலைகளிலும் வேலை செய்யும் எல்லாக் கூலி ஈட்டுவோர்களும், நகரப்புறங்களில் கூலியைப்பெரும்பான்மையும் பணமாகப் பெற்று வந்த 'கைவினைஞர்கள்' (Artisans) எல்லாரும் (ஆலைத் தொழிலாளர்கள் அல்லர்) அடங்கியிருந்தனர். ஆதலால், அவ் விசாரணைபரவலானதாகவும், ஆலைத்தொழிலாளர்களையும், வீட்டு வேலை செய்பவர்களையும் தவிர மற்றெல்லாக் கூலி ஈட்டுவோர் களையும் உள்ளடக்கியதாகவும் இருந்தது.

இவ் விசாரணையின் முக்கிய நோக்கம், மாகாணம் முழு வதிலும் விவசாயக் கூலிகளில் 1900ஆம் ஆண்டுக்குப் பின்னர் ஏற்பட்ட வருடாந்தர மாறுதல்களை ஆராய்வதாகும். விவ சாயக் கூலியீட்டுவோர்கள், 'நிலவேலை செய்பவர்கள்', சாதா ரணத் தொழிலாளர்கள்' 'திறனுள்ள தொழிலாளர்கள்' என்ற தலைப்புகளில் பிரிக்கப்பெற்றனர்.[1] அவர்களுடைய கூலிகள் நகரப் புறத்திற்கும், கிராமப் புறத்திற்கும் முறையே தனித்தனியாக ஆராயப் பெற்றன. அந்த விசாரணையின் முடிவைக் கீழ்க்கண்டவாறு சுருக்கிக் கூறலாம்: (அ) நகரப் புறங்களில் நிலவேலை செய்பவர்களின் சாராரி தினக்கூலி 1900-ல் 3 அணாவிலிருந்து 1913-ல் 0-4-9 ஆகவும், 1922-ல் 0-9-0 ஆகவும் உயர்ந்தது. அதாவது, போருக்கு முந்திய காலத்தில் 58 சத வீதமும், 1913-க்கும் 1922-க்கும் இடையில் 89 சத வீதமும் உயர்ந்தது. 1900-க்கும் 1922-க்கும் இடையில் அது 200 சத வீதம் உயர்ந்தது. (ஆ) நகரப் புறங்களில் 'சாதாரணத் தொழிலாளர்களின்' சராசரித் தினக் கூலிகள் 1900-ல் 0-4-3 லிருந்து 1913-ல் 0-6-3 ஆகவும், 1922-ல் 0-12-0 ஆகவும் உயர்ந்தன. அதாவது போருக்கு முந்திய காலத்தில் 47 சத வீதமும்1913-க்கும் 1922-க்கும் இடையில் 92 சத வீதமும், மொத் தத்தில் 1900-க்கும் 1922-க்கும் இடையில் 182 சத வீதமும் ஏற்ற

1 உழுபவர்கள், அறுவடை செய்பவர்கள், விதைவிதைப்பவர்கள் களை எடுப்ப வர்கள், நாற்று நடுபவர்கள் போன்று தற்காலிகமாக வேலைசெய்பவர்கள் அனைவரும் 'நில வேலை செய்பவர்களாக'க் கருதப்பெற்றனர். பண்ணையில் இவர்கள் நிரந்தர ஆட்கள் அல்லர். நிரந்தர ஆட்கள் கூலியை ஓரளவு தானியமாகவும், ஓரளவு ரொக்க மாகவும் பெற்றுவந்ததால் அவர்களின் வருமானங்களை மதிப்பிடுவது கடினமாகும். கிராமப்புறங்களில் கரைகட்டுதல் (Embankment), கிணறு தோண்டுதல், கால்வாய் களின் வண்டலை அகற்றுதல் போன்ற வேலைகளில் ஈடுபட்டவர்களும் நகரப்புறங்களில் கொத்து வேலைசெய்பவர்களும் கட்டடவேலை செய்பவர்களும், உதவியாட்களும், சுமை தூக்குபவர்களும் 'சாதாரணத் தொழிலாளர்களாக'க் கருதப்பெற்றனர். கிராமப்புறக் 'கைவினைஞர்களும்' (Artisans) (இவர்கள் விவசாயத்திலும் திறனுள்ளவர்களாக இருந்தனர்) 'நகரப்புறக் கைவினைஞர்'களும் ஆலைத்தொழிலாளர்கள் அலலர்) திறனுள்ள தொழிலாளர்களாகக் கருதப்பெற்றனர். இவர்களுள் பின்னவர்கள் (நகரப்புறக் கைவினை ஞர்கள்) விவசாயத்தொழிலாளர்கள் அல்லர். ஆனல் அவர்களுடைய கூலி அருகி லுள்ள கிராமப்புறக் கைவினைஞர்களின் கூலியை ஒத்திருந்தது.

மடைந்தன. (இ) நகரப் புறங்களில் 'திறனுள்ள தொழிலாளர் களின்' சராசரித் தினக் கூலி 1900-ல் 0–10–9-லிருந்து 1913-ல் 0–13–9 ஆகவும், 1922-ல் ரூ. 1–10–9 ஆகவும் உயர்ந்தது. அதாவது, போருக்கு முந்திய காலத்தில் 28 சத வீதமும் 1913-க்கும் 1922-க்கும் இடையில் 95 சத வீதமும், மொத்தத்தில் 149 சத வீதமும் உயர்ந்தது. (ஈ) கிராமப் புறங்களில் 'நில வேலை செய்பவர்களின்' சராசரித்தினக்கூலி 1900-ல் 0–2–6லிருந்து 1913-ல் 0–4–3 ஆகவும், 1922-ல் 0–7–3 ஆகவும் உயர்ந்தது. அதாவது போருக்கு முந்திய காலத்தில் 70 சத வீதமும் 1913-க்கும் 1922-க்கும் இடையில் 71 சத வீதமும், மொத்தத்தில் 190 சத வீதமும் உயர்ந்தது. (உ) கிராமப்புறங்களில் 'சாதாரண வேலை செய்பவர்களின்' சராசரித் தினக் கூலி 1900-ல் 0–3–0 லிருந்து 1913-ல் 0–5–3 ஆகவும், 1922-ல் 0–8–6 ஆகவும் உயர்ந்தன. அதாவது போருக்கு முந்திய காலத்தில் 72 சத வீதமும், 1913-க்கும் 1922-க்கும் இடையில் 62 சத வீதமும் உயர்ந்தது. (ஊ) கிராமப் புறங்களில் திறனுள்ள தொழி லாளர்களின் வருமானம் 1900-ல் 0–9–0-லிருந்து 1913-ல் 0–11–9 ஆகவும், 1922-ல் ரூ. 1–5–0 ஆகவும் உயர்ந்தது. அதாவது போருக்கு முந்திய காலத்தில் 31 சத வீதமும், 1913-க்கும் 1922-க்கும் இடையில் 79 சத வீதமும், மொத்தத்தில் 133 சத வீதமும் உயர்ந்தது.

இந்தப் புள்ளி விவரங்களிலிருந்து 'மெய்க் கூலிகள்' (Real Wages) கணக்கிடப்பெற்றன. அந்தக் கணக்கெடுப்பிலிருந்து 'நகரப் புறங்களில் தொழிலாளர்களின் எல்லா வகுப்பினருக்கும் மெய்க் கூலி மட்டம் போருக்கு முன்னிருந்ததைவிட அதிகமா யிருந்தது என்றும் கிராமப் புறங்களில் மெய்க்கூலிகள் திறனுள்ள தொழிலாளர்களுக்கு உயர்ந்திருந்ததென்றும் ஆனால், சாதாரணத் தொழிலாளர்களுக்கும், நிலவேலை செய்பவர் களுக்கும் மட்டும் சிறிது குறைந்திருந்தது'[1] என்றும் தெரிய வருகிறது. இந்தப் புள்ளி விவரங்களை நம்பகமானது என்று வைத்துக் கொண்டால்,[2] 1913-க்குப் பின்னர், மெய்க் கூலிகளில் ஏற்பட்ட மாற்றங்கள் போருக்கு முன்னிருந்த ஏற்றத்தின் (கூலிகளில்) தொடர்ச்சியே என்றும், 1913-க்குப் பின்னர் மெய்க் கூலிகளில் ஏற்றமில்லா திருந்த சிறுபான்மை இனங்களிலும்கூட இறக்கம் வெகுக் குறைவாகவே இருந்தது என்றும் நாம் காண் கிறோம். போரினால் ஏற்பட்ட சீர்குலைவையும், போருக்குப்

[1] Enquiry into Agricultural Wages in the Bombay Presidency, p. 32.

[2] இந்தப் புள்ளிவிவரங்களை எந்த அளவுக்கு உண்மையாகக் கொள்வது என்பது சந்தேகத்திற்குரியதாகும்.

பின் ஏற்பட்ட மந்தத்தையும் கருத்தில் கொண்டால், வெளிக் காரணங்களால் மந்தம் ஏற்படாவிட்டால், மெய்க்கூலிகளில் கட்டாய ஏற்றம் இருந்திருக்கும் என்ற முடிவுக்கு வர இட மிருக்கிறது.

போருக்குமுன், விவசாய வகுப்பினர்களின் வாழ்க்கை நிலையி லிருந்த ஏற்றம், 1914-க்குப் பின்னரும் தொடர்ந்து இருந்தது என்ற உண்மையைச் சில மறைமுகமான சான்றுகளும் உறுதிப் படுத்துகின்றன. ஆனால், 1914-க்குப் பின்னருந்த ஏற்றம் அக் காலத்திலிருந்த குழப்பமான சூழ்நிலையால் தடைபட்டதாகவும், ஏற்ற இறக்கங்கள் கொண்டதாகவும் இருந்தது.[1] மக்களுடைய வீட்டு வசதிகள், பாத்திரங்கள், உடைகள், சேமிப்புத் தொகைகள் இவைகளில் போருக்குமுன் இருந்த வளர்ச்சி தொடர்ந்து இருந்தது என்பதற்குச் சான்றுகள் உள்ளன.[2] விவ சாயத்தில் விஞ்ஞான முறையும், கூட்டுறவு முறையும், நீர்ப் பாசன வசதிகளும் பெருகின; பெருகிக்கொண்டும் இருக்கின்றன. மேலும், குடியானவர்களுக்கு விவசாயத்திலிருந்து மட்டு மில்லாமல் மற்றத்தொழில்களிலிருந்தும் ஊதியம் கொடுக்கக் கூடிய 'மாற்று வேலை வாய்ப்புகள்' (Alternative Occupations) முன்னிருந்ததைவிட இப்பொழுது அதிகமாக இருக்கின்றன.

கிராமப்புற மக்களின் 'வாங்கும் திறனில்' ஏற்பட்ட மாறு தல்களைப் பற்றிக் கிடைக்கக் கூடிய மற்ற மதிப்பீடுகள்: 1922 முடிய பத்தாண்டுக் காலத்துக்குப் பஞ்சாபில் மேற்கொள்ளப் பட்டமதிப்பீடு; இந்திய வாணிப ஆணையாளரால் (Indian Trade Commissioner) குறிப்பிடப்பட்ட மதிப்பீடு[3] இவையிரண்டுமே யாகும். இவற்றுள், முன்னது பத்தாண்டுக் காலத்தில் தொழிலா ளர்களின் வாழ்க்கைநிலை சிறிதளவு உயர்ந்தது என்ற முடிவுக்கு வந்தது.[4] பின்னது, உடைவசதிகள் தவிர, மற்றவைகளில் இந்தியாவின் கிராமப்புற மக்களின் வாழ்க்கைநிலை, போருக்குச் சற்று முன்னிருந்ததைவிட, 1923-ல் சிறிது மேன்மையுடையதாக இருந்தது என்று எடுத்துக் காட்டியது. இறக்குமதி செய்யப் பெற்ற துணிகளின் விலை போருக்கு முன்னிருந்ததை விட, 150 சத வீதம் உயர்ந்திருந்தது.[5] இதனால் குடியானவர்களால்

[1] 1918-ல் நிதிப்பற்றாக்குறை எழுந்தபொழுது, பொருளாதாரச் சாதனங்களில் அபிவிருத்தி இருந்ததை முன்னமே குறிப்பிட்டோம்.

[2] Moral and Material Progress of India, 1926–27. p. 136.

[3] D.O.T. Report on the Conditions and Prospects of British Trade in India, 1923–24, p. 109.

[4] *V.* Moral and Material Progress of India, 1927–28, p. 97.

[5] எல்லாத் துணிகளும் இறக்குமதி செய்யப்பெற்றன என்பதில்லை. ஆனால் துணி களின் உள்நாட்டு விலைகள் வெளிநாட்டு விலைகளால் பாதிக்கப்படுகின்றன.

போருக்குமுன் வாங்கிய பருத்தி ஆடைகளின் அளவில், 1923 வாக்கில் மூன்றில் இரண்டு பங்குக்குமேல் வாங்க முடிய வில்லை. ஆனால், இந்தியா போன்ற நாட்டில், துணிக்காகும் செலவைச் சிறிது காலத்திற்குக் குறைப்பது மற்ற நாடுகளை விட எளிதாகும். அக் காலத்தில் பொன்னுக்கும், வெள்ளிக்கும் அதிகச் செலவிருந்ததால், விவசாயிகள் தங்களுடைய துணிச் செலவைக் குறைத்துக்கொண்டு (1914-ல் துணிக்காகச் செலவு செய்த தொகையைவிட அதிகம் செய்யாமல்) தங்கள் வருமானத்தில் செலவுபோக மிஞ்சியதைத் துணியின் விலைகள் குறையும் வரையில் பொன்னிலும், ஆபரணங்களிலும் முதலீடு செய்தார்கள் என்று கருத ஏதுவாகிறது.

(ii) பம்பாய் மாகாணம் முழுவதிலுமுள்ள பருத்தி ஆலைகளிலும் கூலிகளையும், தொழிலாளர் வேலைநேரத்தையும் பற்றிய இரண்டு விசாரணைகள் மேற்கொள்ளப்பெற்றன. அதற்கான அறிக்கைகளும் முறையே 1923-லும் 1925-லும் வெளியிடப் பெற்றன.[1]

ஒரு குறிப்பிட்ட மாதத்தில் (1921ஆம் ஆண்டு மே மாதம் முதல் விசாரணையிலும், 1923ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் இரண்டாவது விசாரணையிலும்) பருத்தி ஆலைகளில் ஈடுபட்டுள்ள எல்லாத் தொழிலாளர்களின் உண்மையான வருமானங்களையும் கணக்கெடுத்து, அவற்றை 1914ஆம் ஆண்டில் அவர்களுக்குக் கிடைத்த வருமானங்களுடன் ஒப்பிட்டுப் பார்ப்பதே இவ் விசாரணைகளின் முக்கிய நோக்கம். இவ் வருமானங்களை 'வாழ்க்கைச் செலவுக்கு' ஏற்றாற் போல மாற்றி அமைத்தால் 'மெய் வருமானங்க'ளில் (Real earnings) ஏற்பட்ட மாறுதல்களை மதிப்பிடலாம் என்பது தெளிவாகிறது.

1921ஆம் ஆண்டில் ஒரு 'வாழ்க்கைச் செலவுக் குறியீட்டெண்ணும்' ஒரு 'மெய்க் கூலிக் குறியீட்டு எண்ணும்' தயாரிக்கப் பெற்றன. பருத்தி ஆலைத் தொழிலாளர்களில் எல்லா வகுப்பினருடைய மெய்க்கூலிகளிலும், 1914-க்குப் பின், 3 சத வீதத்திலிருந்து 45 சத வீதம் வரை உயர்வு இருந்தது என்று இக் குறியீட்டெண்கள் காட்டின.[1] ஆனால், 1923-ல் கையாண்ட மேம்பட்ட முறை (குறியீட்டெண்கள் தயாரிப்பதில்), 1921-ல்

[1] Report of an Enquiry into the Wages and Hours of Labour in the Cotton Mill Industry, 1923 and 1925. 1934-ல் வெளியிடப்பெற்ற அறிக்கையை அத்தியாயம் 13-ல் காணலாம்.

[2] நூல் நூற்கும் ஆலைகளின், நேரத்தொழிலாளர்கள் (Time Workers) மட்டும் இதற்கு விலக்காகும். இவர்களின் மெய்க் கூலிகள் 1 சத வீதம் குறைந்தன.

கணிக்கப்பெற்ற மதிப்பீடுகள் நம்பத் தகுந்தவையா என்ற ஐயத்தை எழுப்பியது. ஆதலால் இவைகளை இங்கு விவரமாகக் குறிப்பிடவில்லை.[1] பொதுவாகக் கூறினால், 1914-க்குப் பின்னர், வருமானங்களில் குறிப்பிடத்தக்க அளவு ஏற்ற மிருந்தது என்று அம் மதிப்பீடுகள் காட்டுகின்றன.

மாகாணம் முழுவதற்கும், பருத்தி ஆலைகளில் வேலை செய்யும் எல்லாத் தொழிலாளர்களின் மாதாந்தரச் சராசரி வருமானங்களும் 1921-ஆம் ஆண்டுக்குப் பிறகு சிறிதளவு குறைந்தன (ரூ. 28-14-4-லிருந்து ரூ. 28-9-1-ஆக) என்று '1923-ன், பருத்தி ஆலைகளில் கூலிகளும், வேலை நேரமும் பற்றிய அறிக்கை' (Report on Wages and Hours in the Cotton Industry in 1923) முடிவு செய்தது.[2] இவ் வருமானங்கள் சில இடங்களில் சிறிதளவு குறைந்தும், மற்றும் சில இடங்களில் சிறிதளவு உயர்ந்தும் இருந்தன. பம்பாய் நகரத்தில் இவைகள் பெரும்பாலும் மாறுதலடையாமலே இருந்தன. 'கூலிகளின் இயல்புடையது' என்று கருதப்பெற்ற மாதாந்தர போனசும் (Bonus), தனிப்படிகளும் (special allowances) இக் கணக்கெடுப்பில் சேர்க்கப்பெற்றன. ஆனால், மிகைநேர ஊதியமும் (overtime pay), வருடாந்தர போனசும் தானியங்கள், உடைகள், வீட்டுவசதி இவைகளைச் சந்தை விலைக்குக் குறைவாகப் பெறுவதின்மூலம் கிடைக்கும் ஊதியமும் சேர்க்கப்படவில்லை.[3] 1920-21-ல் ஏற்பட்ட மந்தத்திற்குப் பிறகு, ஆலைகளில் அதிகநேர வேலைக்கு அவசிய மில்லாததாலும், 1918-க்கும் 1922-க்கும் இடைக்காலத்திற்கு வருடாந்திர போனசாக அனுமதிக்கப்பட்ட தொகை 1922-க்குப் பிறகு வழங்கப் படாததாலும், தொழிலாளர்கள் பாதிக்கப் பெற்றனர். அதனுடன் வேலைநிறுத்தங்களால் ஏற்பட்ட நட்டத்தையும் கவனத்திற்கு எடுத்துக்கொள்ள வேண்டும். ஆனால், 1921-ல் 164ஆக இருந்த வாழ்க்கைச் செலவுக் குறியீட்டெண் 1923-ல் 154ஆகக் குறைந்ததால் (பம்பாய் நகரத்தில்) மெய்க்கூலிகள் (மிகைநேர ஊதியமும், வருடாந்தர போனசும் ஒருபுறமிருக்க), சிறிதளவு உயர்ந்தன.

போருக்காக வழங்கப்பெற்ற போனஸ் நிறுத்தப்பெற்றதால், 1914-ல் இருந்த நிலைமையுடன் ஒப்பிட்டுப் பார்ப்பதைப் பாதிக்க வில்லை. காரணம், அந்த போனஸ் 1918ஆம் ஆண்டுவரை

[1] 'நமக்குக் கிடைக்கும் புள்ளிவிவரங்களிலிருந்து 1914ஆம் ஆண்டையோ அல்லது 1921ஆம் ஆண்டையோ 'மெய்க்கூலிக குறியீட்டெண்'ணுக்கு அடிப்படை ஆண்டாக மேற்கொள்ள முடியாது.

[2] Ibid., p. 11.

[3] Ibid., p. 6.

வழங்கப்படவேயில்லை. ஆதலினால், 1914–1923 ஆண்டுகளின் இடைக்காலத்தில் பருத்தி ஆலைகளில் வேலைசெய்யும் தொழிலாளர்களின் மெய்வருமானம் வளர்ச்சியடைந்தது என்பது தெளிவாகிறது.

1923ஆம் ஆண்டில் பம்பாய் நகரத்தில் வாழ்க்கைச் செலவைப் பற்றிச் செய்த விசாரணையிலிருந்து கிடைத்த தகவலை இனி ஆராய்வோம். 'மனம் போன மாதிரி முறை'யில் (Random Sample Method) 3,076-குடும்பங்களின் வரவு செலவுத் திட்டங்களில் ஒரு முனைப்பான விசாரணை நடந்தது. கீழ்காணும் பட்டியல் ஒவ்வொரு முக்கிய வருமானப் பிரிவின் கீழுள்ள குடும்பங்களின் எண்ணிக்கையைச் சதவீதத்தில் காட்டுகிறது:

ஒவ்வொரு வருமானப் பிரிவிலும் குடும்பங்களின் சதவீதம்	குடும்பத்தின் மொத்த வருமானம்
2·7	மாதத்திற்கு ரூ. 30-க்குக் கீழ்
11·0	,, ரூ. 30-க்கும் 40-க்கும் இடையில்
33·7	,, ரூ. 40-க்கும் 50-க்கும் இடையில்
21·8	,, ரூ. 50-க்கும் 60-க்கும் இடையில்
29·2	,, ரூ. 60-க்கும் 90-க்கும் இடையில்
1·6	,, ரூ. 90-க்கு மேல்.

மாதாந்தரச் சராசரி வருமானம் ரூ. 40-க்கு மேலுள்ள குடும்பங்கள் முக்கால் பங்கு இருந்தன என்பது தெளிவாகிறது. மாதந்தரச் சராசரி வருமானம் ரூ. 52–4–6 ஆகவும், ஆண்களின் சராசரி வருமானம் ரூ. 42–5–7 ஆகவும், பெண்களின் சராசரி வருமானம் ரூ. 16–11–6 ஆகவும், சிறுவர்களின் சராசரி வருமானம் ரூ. 13–13–5 ஆகவும் இருந்தன.

இவ் வருமானங்களை மற்ற நாடுகளின் வருமானங்களுடனே அல்லது இந்தியாவில் உள்ள மற்ற மாகணங்களிலும், நகரங்களிலும் நிலவிய வருமானங்களுடனே நேரிடையாக ஒப்பிட்டு முடிவு காண்பது முடியாத செயலாகும். உதாரணமாக, சென்னை மாகாணத்திலுள்ள ஒரு குடும்பம் (ஓர் ஆண், பெண், வருமானமில்லாத இரு குழந்தைகள் அடங்கிய), அதன் மாதவருமானம் ரூ. 17-க்குக் குறைவாயிருந்தால் ஏழ்மை நிலையிலிருக்கும் என்று 1917-ல் கணக்கிடப் பெற்றது.[1] 1917ஆம் ஆண்டுக்குப்பின்

[1] டாக்டர். கில்பர்ட் சிலேட்டர் (Dr. Gilbert Slater), திருத்தகு லேத் பாதிரியார் (Rev. D. G. M. Leith) இவர்கள் 1917 ஜனவரி 22-ல் Madras Mail என்ற இதழுக்கு எழுதிய கடிதத்தைப் பார்க்கவும்.

வாழ்க்கைச் செலவில் 10 சத வீதம் ஏற்றம் இருந்தது (சுமார் ரூ. 1–8–0 ஆகும்) என்று வைத்துக் கொண்டால்,[1] பம்பாய்த் தொழிலாளர்கள் எல்லோருடைய வாழ்க்கை நிலையும் மிக உயர்ந்ததாக இருந்திருக்க வேண்டும். ஆனால், பம்பாய் நிலவரங்களை அறிந்த எவரும் இந்த முடிவுக்குவரமாட்டார்கள்.[2] இதனால் சென்னையில், வாழ்க்கைச் செலவு பம்பாயிலிருந்ததைவிட முற்றிலும் மாறுபட்டிருக்க வேண்டும் என்பது தெளிவாகும். ஃபிண்ட்லே ஷிர்ராஸ் அவர்கள் இவற்றை ஒப்பிட்டுப் பார்ப்பதில் ஒரு புதிய முறையைக் கையாண்டார்.[3] சேகரிக்கப் பெற்ற குடும்ப வரவு செலவுத் திட்டங்களில் மொத்த வருமானத்திலிருந்து ஒவ்வோர் இனத்தின் மேலும் செய்யப்படும் செலவின் சதவீதத்தை அவர் கணக்கிட்டார். அதிலிருந்து உணவுக்காகும் செலவை, பொருத்தமான மற்ற நாடுகளுடன் ஒப்பிட்டார். அவருடைய கணக்குப்படி, பம்பாய் நகரத்தில் மொத்த வருமானத்திலிருந்து 56·8 சத வீதம் உணவிலும், 9·6 சதவீதம் உடையிலும், 7·7 சதவீதம் வீட்டு வாடகையிலும், 7·4 சதவீதம் விறகு, விளக்கு இவைகளிலும், 18·5 சதவீதம் பலதரப்பட்ட பண்டங்களிலும் செலவு செய்யப்பெற்றன. 'ஏஞ்சல் விதி'யின் (Engel's Law) அடிப்படையான உண்மையில் இருந்த நம்பிக்கையே, உணவுச்செலவின் சதவீதத்தை மற்ற நாடுகளுடன் ஒப்பிட்டுப் பார்க்கும் முயற்சிக்குக் காரணமாகும். உண்மை வருமானங்கள் மேலும் மேலும் அதிகரித்தால் மொத்தவருமானத்தில் உணவுக்காகும் செலவின் சத வீதம் மேலும் மேலும் குறையும் என்பதே 'ஏஞ்சல் விதி'.[4] ஷிர்ராஸ் அவர்கள், முதலில் அயர்லாந்தின் பொருளாதாரத்துறையின் அமைச்சரகத்தால் (Ministry of Economic Affairs) வெளியிடப்பெற்ற புள்ளிவிவரங்களுடன் ஒப்பிட்டார். அயர்லாந்தில் கூலியீட்டும் ஒரு குடும்பத்து உணவுச் செலவின் சதவீதம் 57·05 ஆக இருந்தது. இது, பம்பாயைவிடச் சற்று அதிகமாக இருந்தது.[5] பம்பாய்நகரத்தில் தொழிலாளர்களுடைய

[1] பம்பாய் நகரத்தின் வாழ்க்கைச் செலவுக் குறியீட்டெண் 1918-க்கும் 1922-க்கும் இடையில் 10 சத வீதம் ஏறியது.

[2] *V.* Labour and Housing in Bombay, by A. R. Burnett-Hurst.

[3] சர்வதேசத் தொழிலாளர் அலுவலகம் (International Labour Office) வெளியிட்ட Wage Changes in Various Countries No. 2-லிருந்து அவர் புள்ளி விவரங்களைக் குறிப்பிடுகிறார். அப் புள்ளிவிவரங்கள் 1914-க்கும் 1921-க்கும் இடையில் பல நாடுகளிலும், பொதுளவில் கூலிகளும் 'மெய்க்கூலிகளும்' உயர்ந்தன என்று காட்டின. இப் புள்ளிவிவரங்களின்படி, 'மெய்க்கூலிகள்' பம்பாய் நகரத்தில் 114 எண்களுக்கும் (100 = 1914), மாகாணம் முழுவதற்கும் 117 எண்களுக்கும் உயர்ந்தன. ஆனால், இவைகள் இங்கிலாந்தில் (U.K.) 110 எண்களுக்குத்தான் உயர்ந்தன.

[4] 'ஏஞ்சல் அவர்கள் பெர்லினில் 1860–62-ல் புள்ளிவிவரத் துறையின் நெறியாளராக இருந்தார்.

[5] உணவுப் பொருள்கள் பலவற்றில் செய்யப்பெற்ற செலவு மாறுபாடு உடையதாக இருந்தது. அயர்லாந்து மக்கள் கொழுப்புப் பண்டங்களிலும், இறைச்சியிலும் அதிகச் செலவு செய்தார்கள்.

உணவுச் செலவின் சதவீதம் ட்ரினிடாட் (Trinidad), எகிப்து, சைனு இவைகளிலிருந்ததைவிடக் குறைவாகவும், அமெரிக்கா, இங்கிலாந்து, ஆஸ்திரேலியா இவைகளிலிருந்ததை விடக் குறைவாகவும், இத்தாலி அர்ஜென்டீனு இவைகளிருந்ததற்கு ஏறக்குறைய சமனுகவும் இருந்ததாக ஷிர்ராஸ் அவர்கள் கணக்கிட்டார். பழைய ஆண்டுகளுக்காகத் தொகுக்கப் பெற்ற புள்ளிவிவரங்களுடன் இவற்றை அவர் ஒப்பிட்டார்.[1] அப் புள்ளி விவரங்களின்படி 1914-ல்[2] பம்பாய் நகரத்தில் உணவுச் செலவின் சதவீதம் 68·7 ஆக இருந்தது. இதற்கெதிராகப் பிரான்சில் 67·1 சதவீதமும், அயர்லாந்தில் 65·2 சதவீதமும், இங்கிலாந்தில் 62·5 சத வீதமும், டோக்கியோவில் 55·1 சத வீதமும், பெர்லினில் 42·4 சத வீதமும் இருந்தன இந்தியாவுக்கு இது எதிர்பார்த்ததைவிட, அனுகூலமாக இருந்தது என்பது தெளிவாகும். இதைப்போலவே ரோனல்டு ஷே பிரபுவும் (Lord. Ronaldshay) சென்னை மாகாணத்தில் சராசரி வருமானம் 10 பவுன்களும் (ஸ்டெர்லிங்), இங்கிலாந்தில் 30-லிருந்து 40 பவுன்களும் இருந்தது என்று ஒப்பிட்டார். இந்த ஒப்பீட்டிலிருந்து நோக்கி, இங்கிலாந்தின் தட்பவெட்ப நிலைமையையும், சமூகச் சூழ்நிலையையும், உயர்ந்த வரிவிதிப்புக் கட்டணத்தையும் கருத்தில் கொண்டால், இவ் விருநாடுகளின் சில தொகுதிகளிலாவது, மெய் வருமானங்களில் எண்ணியது போல அதிக மாறுதல்கள் இல்லை என்று முடிவுக்கு வரலாம் என்ற தோன்றுகிறது.

ஆனால், தலைக்கான சராசரி வருமானங்களை நேரிடையாக ஒப்பிட்டுப்பார்ப்பது எப்படிப்பொருந்தாதோ, அதைப்போலவே இத்தகைய ஒப்பீடும் நம்பகமானதல்ல என்றுதான் நான் கருதுகிறேன். மக்களின் வாழ்க்கைத்தரம், மக்களின் தேவைகள், பொதுவான சமூகச் சூழ்நிலை இவையாவும் ஒன்றுக்கொன்று முற்றிலும் மாறுபட்டவையாகும். இவற்றிலிருந்து தொழிலாளர்களின் வாழ்க்கை நிலையைப்பற்றிய பொதுவான குறியீட்டு எண்கள் தயாரிப்பது முடியாத ஒரு செயலாகும். உதாரணமாக, ஒரு ஜப்பானியருடையவும், ஜெர்மானியருடையவும் பொருளாதார நிலை, ஒரு வெள்ளையரின் (Englishman) தரத்துக்கு உயர்ந்திருந்தது என்று முடிவுசெய்வது நகைப்பிற்குரியதாகும். வீட்டு வாடகைச் செலவிலிருந்து கணக்கிடுவதும் இதைப்போன்றதே. இங்கிலாந்து போன்ற நாட்டில், பல குடும்பங்களின் பொருளாதாரநிலையை அறிவதற்கு இம் முறை பயன்படலாம்; ஆனால், பல

[1] See Table XXI, p. 121, of Mr. Shirra's Report.

[2] கணக்கெடுப்பு அதிகாரிகளால் 1921ஆம் ஆண்டில் தொகுக்கப் பெற்றபடி.

நாட்டுத் தொழிலாளர்களின் வாழ்க்கை நிலையை ஒப்பிடுவதற்கு இது நம்பத் தகுந்ததல்ல. இந்தியாவில்கூட வீட்டுவாடகை கிராமப்புறங்களிலும் நகரப் புறங்களிலும் வெகுவாக மாறுதலடைகின்றன. உதாரணமாக, பஞ்சாப் மாகாணத்தில் கிராமப்புறங்களில் வீட்டுவாடகை மாதத்திற்கு 4அணாக்கள் இருக்கலாம். ஆனால், நகரப்புறங்களில் மாதத்திற்கு ரூ. 3-க்குக் குறைந்து வீடு கிடைக்காது.[1] இந்த மாறுபாடுகள் கூலிகளில் உள்ள மாறுபாட்டினை ஈடுசெய்வதாக இருக்கின்றன என்று எடுத்துக் காட்டப்பெறுகிறது.

(iii) மேனாடுகளில் அளவுக்குமீறிய மக்கள் நெருக்கத்தைப் (Over Crowding) பொறுத்துக்கொள்ளமாட்டார்கள். பம்பாயின் வெப்பத்தால், அங்கு அதிக இடைவெளி வேண்டும் என்று ஒருவர் எதிர்பார்த்தாலும், பம்பாயில் மக்கள் நெருக்கத்தைப் பற்றி அதிக அக்கறை செலுத்தப் பெறவில்லை. அதே நேரத்தில் பம்பாயில் சடங்குகளுக்கும், விழாக்களுக்கும் செய்யப்படும் செலவு மேனாடுகளைவிட மிக அதிகமாக இருக்கிறது. பம்பாய் நகரத்தில் (ஷிர்ராஸ் அவர்களின் கூற்றுப்படி) ஒரு திருமணத்திற்காகும் சராசரிச் செலவு ரூ. 214, ஒரு சவ அடக்கத்திற்கு ரூ. 35, ஒவ்வொரு முக்கிய விழாவுக்கும் ஆண்டுவிழாவுக்கும் ரூ. 18. வீட்டுவசதிகளை அபிவிருத்தி செய்துகொள்வதற்குப் பதிலாக, மேற்கண்ட செயல்களுக்காக வாங்கப்படும் கடன் தொகையின் வட்டியை அடைப்பதற்கே பம்பாய்த் தொழிலாளர்களின் வருமானம் செலவிடப் பெற்றால், அவர்களின் செலவிடும் முறையைவிட, வருமானத்தை யார் குறைகூற முடியும்? மற்றொரு முக்கிய செலவினத்தையும் இங்குக் குறிப்பிடவேண்டும். பம்பாய்த் தொழிலாளர்களால் கிராமப் புறங்களிலிருக்கும் அவர்களின் குடும்பங்களுக்கு அனுப்பப்படும் தொகையே அது. சராசரியில் தனிப்பட்ட ஆட்கள்[2] தங்கள் வருமானத்தில் 26·2 சதவீதத்தை அனுப்புகிறார்கள். தங்களைச் சார்ந்திருப்பவர்களுடன் வசிப்பவர்கள் 3·2-சத வீதத்தை அனுப்புகிறார்கள். மேலும், பம்பாயில் உணவுச் செலவின் சத வீதம் 1914-ல் 68·7சதவீதத்திலிருந்து 1923-ல் 56·8 ஆகக் குறைந்தது. அதனால், அவர்களுடைய நிலை வளர்ச்சியடைந்திருக்கிறது என்னும் கூற்று கேள்விக்குரியதாகும். மக்கள்

[1] Punjab Wage Census, 1922 (1923). கிராமப்புறங்களில் சாதாரணமாக வாடகை கொடுக்கும் பழக்கம் இல்லாததால், இந்த நாலணாத் தொகையும் வீட்டைக் கவனித்துக் கொள்வதற்கும், பழுதுபார்ப்பதற்குமானதுதான் என்று கருதலாம்.

[2] அதாவது தங்களைச் சார்ந்தவர்களை ஊரில் விட்டுத் தனியாக வாழ்க்கை நடத்துபவர்கள்.

நெருக்கமும், அதனால் ஏற்பட்ட வாடகை உயர்வும் தொழிலாளர்கள் உணவுக்காகச் செய்யும்செலவைக் குறைக்க வில்லையா ?[1]

தொழிலாளர்களில் குறிப்பிட்ட வகுப்பினருக்கோ அல்லது நாடுமுழுவதிலும் ஒரு குறிப்பிட்ட தொழிலே செய்பவர்களுக்கோ வழங்கப்பெற்ற 'பணக்கூலிகளை'ப் பற்றி விளக்கம்தர இயலாது. அதில் மாறுபாடுகள் வெகுவாக இருப்பதால், சராசரிக் கணக் கெடுப்பதில் உள்ள இடையூறே இதற்குக்காரணம். 1916-ல் நகரப் புறங்களில் சாதாரணத் தொழிலாளர்களின் கூலிகள் ரூ. 0–4–0 லிருந்து ரூ. 0–13–4 வரை இருந்தன; நகரப்புறங்களில் தச்சுவேலை செய்பவர்களின் கூலிகள் ரூ. 0–5–4 லிருந்து ரூ. 1–8–0 வரை இருந்தன. நகரப்புறங்களில் இரும்புவேலை செய்பவர்களின் கூலிகள் ரூ. 0–5–4 லிருந்து ரூ. 2–4–0வரை இருந்தன[2] இது பற்றி ஒரு முடிவுக்கு வருவதற்குமுன், மேலே குறிப்பிட்ட முறையில் நாட்டின் பலபகுதிகளிலும் முனைப்பான விசாரணைகளைக் கையாள வேண்டும். இந்தியா முழுவதிலுமுள்ள கூலி ஈட்டுவோர் களின் மெய்வருமானங்களில், சமீபத்தில் ஏற்பட்ட மாறுதல் களைப்பற்றி அறிவிக்கும் புள்ளிவிவரங்கள் தற்சமயம் கிடைக்க வில்லை.

நாம் கவனத்திற்கு எடுத்துக்கொண்ட காலம் முழுவதையும் நோக்கினால், பொதுவாக நாடு முழுவதிலும் குறிப்பாகத் தொழி லாள வகுப்பினரைப் பொறுத்த அளவிலும் பொருளாதார முன்னேற்றம் இருந்தது என்பது மறுக்க முடியாத உண்மை யாகும். 1900-க்கும் 1914-க்கும் இடைக்காலத்தில் முன்னேற்றம் குறிப்பிடத்தகுந்ததாக இருந்தது. 1914ஆம் ஆண்டிலிருந்து, வளப்பம் ஏற்ற இறங்கங்கள் கொண்டதாக இருந்தது. சில திசைகளில் விரைவான வளர்ச்சியிருந்தாலும் மற்றவைகளில் வளர்ச்சி மிகவும் குறைவாகவோ அல்லது முற்றிலும் இல்லா மலோ இருந்தது. மொத்தத்தில் 1929–30-க்குப் பின் ஏற்பட்ட பெருமந்தம் வரை முன்னேற்ற மிருந்தது. விவசாயம், காப்பி, தேயிலைத்தோட்டங்கள், பேரளவுத் தொழில்கள் (Large-scale Industries) இவைகள் வெகுவாக வளர்ந்தன. வெளிநாட்டு வாணிபமும், மந்தத்திலிருந்து மீட்சியுற்று 1914-லிருந்த மட்டத்தை அடைந்தது. இந்திய மக்களின் ஏழ்மை நிலை

[1] ஜெர்மனியில் உணவுச் செலவின் சதவீதம் குறைந்திருப்பதற்கு வீட்டு வாடகைகள் அதிகமாக இருப்பது ஒரு காரணமாகக் காட்டப்படவில்லையா ?

[2] **Prices and Wages in India, 1923, p. 172 et seq.** கிராமப்புறத் தொழி லாளர்களின் கூலிகளும் இதைப்போன்றே மாறுதலடைந்தன.

உலகெங்கும் ஒரு வழக்குச்சொல்லாக இனியும் இருந்தாலும்,[1] தொழிலாள வகுப்பினரின்நிலை ஐயமின்றி உயர்வடைந்திருந்தது. இந்த அத்தியாயத்தில் 1929-ல்தொடங்கிய மந்தத்திற்கு முன் காலத்தையே ஆராய்ந்தோம். அந்த மந்தத்திற்குப் பிறகு, குறிப்பாக விவசாயப் பொருள்களின் விலைவீழ்ச்சி மிகுதியாகவும், உற்பத்தி செய்யப்பெற்ற பண்டங்களைவிட அதிகமாகவும் இருந்தபோது இந்தியப் பாமர மக்கள் மிகவும் பாதிக்கப் பெற்றனர். வாழ்க்கைத்தரமும் தாழ்ந்தது. மந்தத்தின் விளைவுகளை அத்தியாயம் 18-ல் விரிவாக ஆராய்வோம்.

[1] இதற்கு முந்திய காலத்தில் வாழ்க்கைத் தரத்தில் ஏற்பட்ட முன்னேற்றத்தைப் பற்றிய ஒரு நல்ல விளக்கத்திற்கு Times, March 11, 1930-ஐப் பார்க்கவும்.

17. முடிவுரைகள்

§ 1. அண்மைக்காலத்துப் பொருளாதார வளர்ச்சியும் கொள்கையும்

மேலே, மேற்கொண்ட ஆய்வினுல் எழும் வினுக்களின் சுருக்கம்—தடைப்பட்ட பொருளாதார வளர்ச்சி இன்னும் இந்தியாவில் காணக்கிடக்கிறது. ஆனுல், சமூக வாழ்க்கையில் மாறுதலுக்கான அறிகுறிகள் தோன்றுவதால், பொருளாதார முன்னேற்றம் ஏற்படலாம் என்ற முடிவு—இந் நூற்றுண்டின் தொடக்க காலத்திலிருந்து பல துறைகளில் ஏற்பட்ட வளர்ச்சியின் சுருக்கம், அதிலிருந்து மொத்த உற்பத்தியில் வளர்ச்சியும், மக்களின் வாழ்க்கைத்தரத்தில் சிறிதளவு (ஆனுல், நிச்சயமாக) உயர்வும் இருந்தென்ற முடிவு—அதே காலத்தில் பொருளாதாரக் கொள்கையிலிருந்த அபிவிருத்தி—ஆதலால் தடைப்பட்ட பொருளாதார வளர்ச்சிக்கு, பொருளாதாரக்கொள்கை ஒரு காரணமாகாது என்ற முடிவு.

§ 2. எதிர்காலப் பொருளாதார நிலவரம்

இந்தியாவின் எதிர்காலப் பொருளாதார வளர்ச்சிக்கு உண்மையான தடையாக இருப்பது, மூலதனமோ தொழில் நுட்பமோ அல்ல; இந்தியாவின் சமூக அமைப்புத்தான்—மூன்று அடிப்படையான தடைகள்: மக்கள் தொகையின் விரைவான பெருக்கம்; பொருளாதார வளர்ச்சியில் மக்களுக்கு அக்கறை இல்லாதது; ஆள்வோர், ஆளப்படுவோரிடையே ஒத்துழைப்பின்மை.

§ 3. முன்னேற்றத்துக்கான வழிகள்

தொழிலையும், விவசாயத்தையும் சமநிலையாகவுள்ள பொருளாதார முறையைக் குறிக்கோளாகக் கொள்ளவேண்டும் என்ற அடிப்படையில், தொழில் வளர்ச்சியை ஊக்குவிக்க இந்தியா முயலவேண்டும்—உற்பத்தியில் விஞ்ஞான முறையைக் கையாளுதல், அதிகப்படியான வருவாயைப் பெறுதல் (அதன் மூலம் உற்பத்தியாக்கும் செலவிடுதல்), கல்வி முறையை மேம்படச்செய்தல், விரிவடையச்செய்தல் இவைகளே இந்தியாவின் அடிப்படைத் தேவைகள்—பொருளாதாரக் கொள்கையை ஒருமைப்படுத்த (Coordination) வேண்டியதின் அவசியம்—தல வாழ்க்கையையும் முயற்சியையும் புதுப்பிக்கவேண்டிய அவசியமும் அதனுல் பெறக்கூடிய பயன்களும்.

§ 4. இந்தியாவின் பொருளாதார இணைப்பு; முடிவுரைகள்

இந்தியாவில் தற்போது எந்த அளவுக்குப் பொருளாதார இணைப்பு நிலவுகிறது—இந்திய சுதேச அரசுகளின் நிலைமை—பொருளாதார இணைப்பின் அவசியம்—பொருளாதார இணைப்புப் பாதையில் இந்தியா இருப்பதாகக் கொள்ளலாம்.

§ 1. அண்மைக் காலத்துப் பொருளாதார வளர்ச்சியும் கொள்கையும்

இதுவரை இந்தியப் பொருளாதார வாழ்க்கையின் ஒவ்வோர் அங்கத்தையும், அவ் வாழ்க்கையைச் சமூக அமைப்பு எங்ஙனம் பாதிக்கிறது என்பதையும் கண்டோம். அத்தியாயம் ஒன்றில் சில தலைப்புகளைத் தனி ஆய்வுக்காக ஒதுக்கி வைத்தோம். இப் பொழுது இத் தலைப்புகளிலிருந்து முடிவுகள் பெறவேண்டும். இத்தகைய ஆய்வு, கீழ்க்காணும் எட்டுத் தலைப்புகளைக் கொண்டதாகும். அவையாவன: (1) இந்தியா, தடைப்பட்ட பொருளாதார வளர்ச்சியினால் எந்த அளவுக்கு இனியும் பாதிக்கப்படுகிறது? அதற்கான காரணங்கள் யாவை? (2) 1900-க்குப்பின் ஏற்பட்ட பொருளாதார மாறுதல்களின் இயல்பும், அளவும், அவற்றின் விளைவுகளும்யாவை? (3) வாழ்க்கைத் தரத்தில் பொதுவாக ஏதாவது உயர்வு இருந்ததா, இல்லையா? (4) தற்போதைய பொருளாதார நிலையில் உள்ள கேடுகளுக்கு அரசாங்கக்கொள்கை எந்தஅளவுக்குப் பொறுப்பாகும்? (5) மேனாடுகளின் நிலையை (பொருளாதாரத் துறையில்) அடையும்படியான முன்னேற்றப் பாதையில் இந்தியா இருக்கிறதா, இல்லையா? (6) மேலும் விரைவான பொருளாதார முன்னேற்றத்திற்குள்ள முக்கியத்தடைகள்; (7) தற்போதைய குறைபாடுகளை நீக்குவதற்கான வழிகள்; (8) பொருளாதார இணைப்புக் கிட்டுமா?

முதல் நான்கு வினாக்களும் இப் பிரிவில் விளக்கப்பெறும். வினாக்கள் ஐந்தும் ஆறும் பிரிவு (2)ல் விளக்கப்பெறும். அதைத் தொடர்ந்து (பிரிவு 3-ல்) முன்னேற்றத்துக்கான முக்கிய வழிகள் விளக்கப்பெறும். நான்காம் பிரிவில் பொருளாதார இணைப்புக்கான வழிகள் விளக்கப்பெறும். இந்த அத்தியாயத்தில் பொதுவான முடிவுகளைத்தான் பெறுவோம். 1929ஆம் ஆண்டுக்குப் பிறகு ஏற்பட்ட மாபெரும் மந்தத்தினால் ஏற்பட்ட சிக்கல்களைத் தனியாக 18ஆம் அத்தியாயத்தில் ஆராயலாம்.

இந்தியா இன்னும் தடைப்பட்ட பொருளாதார வளர்ச்சியினால் பாதிக்கப்படுகிறது என்றும், பல துறைகளிலும் இன்னும் பழைய முறைகளையே கையாண்டு வருகிறதென்றும் அத்தியாயம் ஒன்றில் வலியுறுத்தினோம். நம்முடைய ஆய்வின் ஒவ்வொரு கட்டத்திலும் எழுந்த முடிவுகளும் இவ் வுண்மையை நிரூபிப்பனவாக இருக்கின்றன. ஆனாலும், சமூக அமைப்பில் பொருளாதார முன்னேற்றத்திற்கு ஏதுவான சில அறிகுறிகள் தோன்றுகின்றன சில மதக் கருத்துகளும், பழக்கங்களும், சமூக அமைப்பின்

கட்டுப்பாடுகளும், இவற்றுல் விளையும் பழைமைக் கொள்கையும் இந்திய வாழ்க்கையின் ஒவ்வொரு அங்கத்தையும் பாதிப்பதுடன் ஒவ்வொரு கட்டத்திலும் பொருளாதார வளர்ச்சியைத் தடைப் படுத்துகின்றன என்பதை முன்னரே கண்டோம்[1] இந்த அமைப் பினுல்மக்களிடம் பொருளாதார நோக்கமும், தொழில் துணிவும் இல்லாமல் போகின்றன. இதனுல், தற்போது நிலவும் அறிவின் முழுப்பயனும் கிடைக்காமற் போவதுடன், இந்தியாவின் பெரும் வளப்பொருள்களும் முழுவதும் உபயோகப்படாமல் போகின் றன. இந்தியாவின் பிறப்பு இறப்பு வீதங்கள் இரண்டும் இன்றும் மிக அதிகமாக இருப்பதுடன், அடிக்கடி மாறுதலுமடைகின்றன.[2] இந்த நிலை தொடர்ந்து மக்கட் பெருக்கத்தை உண்டாக்குகிறது. மக்கள் தொகையில் பெரும்பான்மையினரும் நிலத்தையே நம்பி வாழ்வதால், நிலத்தில் அதிக நெருக்கம் ஏற்படுகிறது. இவர்கள் நிரந்தரமான கடன்தொல்லையாலும் வருந்துகிறார்கள்.[3] மக்களின் சுகாதார நிலையும் (ஆகையால் அவர்களின் திறனும்) மிகவும் வருந்தத்தக்கதாயுள்ளது. சமூகத்தில் பெண்களுக்குக் கொடுக்கப் பட்டிருக்கும் இடம் கண்டனத்திற்குரியதாகும்.[4] விவசாயம், தொழில் இவையிரண்டிலும் (சில விலக்காகும்) பழைமையான முறைகளே இன்றும் கையாளப்படுகின்றன.[5] பேரளவுத் தொழில் களின் தொழிலாளர்கள் நலிந்த வாழ்க்கையே வாழ்கிறார்கள். மக்களின் வாழ்க்கைத் தரத்தில் சிறிது முன்னேற்றமிருந்தாலும், இன்னும் வாழ்க்கைத்தரம் தாழ்வானதாகவே இருக்கிறது.

வெகுகாலமாகத் தன்நிறைவு கொண்ட கிராமங்கள் இந்தியப் பொருளாதார வாழ்க்கையின் அடிப்படையாகத் தனித்தியங்கி வந்தன. இரயில்வேக்கள் நிருமாணிக்கப் பெற்ற பின் இந்த முறை சிறிது மாறுதலடைந்தது. இருப்பினும் விவ சாயிகளில் பெரும்பான்மையோரும் தங்களுக்குத் தேவையான தையே இன்னும் விளைவிக்கிறார்கள். போக்குவரத்துச் சாதனங் களில் ஏற்பட்ட முன்னேற்றத்தால் சாதிப்பிடிப்பும் கொஞ்சம் தளர்ந்திருக்கிறது. ஆனுலும், அதிலிருந்து விடுபட்டவர்களின் எண்ணிக்கை மிகக்குறைவே யாகும்.[6] பெரிய தொழில்கள்

[1] குறிப்பாக 3ஆம் அத்தியாயத்தைப் பார்க்கவும்.

[2] 3ஆம் அத்தியாயத்தைப் பார்க்கவும்.

[3] 8ஆம் அத்தியாயத்தைப் பார்க்கவும்.

[4] 3, 4ஆம் அத்தியாயங்களைப் பார்க்கவும்.

[5] 7, 9ஆம் அத்தியாயங்களைப் பார்க்கவும்.

[6] சாதி முறைக்குப் பலத்த எதிர்ப்பு இருக்கிறது. இருந்தாலும் பின்வரும் கூற்றுக் கவனத்திற்குரியதாகும். 'கடந்த இரண்டு மூன்று தலைமுறைகளில், இந்தியப் பொரு ளாதார வாழ்க்கையிலும், சமூக வாழ்க்கையிலும் பெரிய மாறுதல்கள் இருந்தாலும், சாதி முறை சரிந்து வருகிறது என்று எண்ணுவதற்கு நம்பகமான காரணங்கள் எதுவு மில்லை' (Moral and Material Progress of India, 1925-26, p. 237).

பலருக்கு வேலை தருகின்றன. ஆனால், பழங்காலச் சிறு தொழில்களும் கைத்தொழில்களும் பாதிக்கப் பெறுகின்றன.[1] இதனால் நிலத்தில் மிகுதியாக உள்ள மக்கள்தொகைக்குப் புதிய வேலைகள் அளிக்க வழியில்லை. உடலுழைப்பைக் குறைக்கும் புதிய முறைகளை (Labour saving devices) ஊக்குவிப்பதற்கும் வழியில்லாமல் போகிறது. தற்போது நிலவும் நிலவரி முறையினால், நிலத்தின் முழுப்பயனையும் பெறமுடியவில்லை. நிலத்தை நம்பி வாழ்பவர்களுக்குப் போதுமான வருவாயும் கிடைப்பதில்லை. அன்பில்லா இவ்வுலகிலிருந்து அற்ப ஆயுளில் மடிவதற்குமுன், நோயால் தாக்குண்டு, சிறிது காலம் உப்பில்லா வாழ்க்கை வாழ்ந்து, குடும்பத்தின் பற்றாக்குறையான உணவில் ஒரு பங்கு கேட்க, முன்னரே நெருக்கமான குடும்பங்களில் ஆயிரமாயிரம் குழந்தைகள் இன்னமும் பிறக்கின்றன.

பொருளாதாரத் துறையில் அதிக முன்னேற்ற மடைந்துள்ள நாடுகளுடன் நெருங்கிய தொடர்பு இருந்தும், கிடைக்கும் தொழிலறிவிலிருந்து முழுப்பயனையும் பெறத்தவறியது 'தடைப்பட்ட பொருளாதார' வளர்ச்சிக்கு நிச்சயம் ஓர் அறிகுறியேயாகும்.

இருப்பினும், இந்நூற்றாண்டின் தொடக்கத்திலிருந்து நம்பிக்கை தரும் சில அறிகுறிகள் தோன்றியிருக்கின்றன. இணைப்புகள் சிறந்த முறையில் இல்லாவிட்டாலும், நாடுமுழுவதும் போக்குவரத்துச் சாதனங்களால் இணைக்கப்பெற்றுள்ளது. விவசாயத்தில் நூதன முறைகளைக் கையாளுவதுடன், பலவிதமான பயிர்களும் சாகுபடியாகின்றன. நூதன முறைகளைக் கையாளுபவர்களின் எண்ணிக்கை குறைவாக இருந்தாலும், இவ் வெண்ணிக்கை நாளாவட்டத்தில் உயர்ந்து கொண்டே இருக்கிறது. நூதன முறைகளைக் கையாளுவதற்கும், கடன் தொல்லைகளுக்கு நிவாரணம் அளிப்பதற்கும் கூட்டுறவு இயக்கம் நல்ல உதவி அளித்து வருகிறது. சில சுதேசக் கைத்தொழில்களும் திருத்தியமைக்கப்பெற்றுப் புத்துயிர் பெற்றுள்ளன. 'பேரளவுத் தொழில்கள்' பலவும் நல்ல முன்னேற்ற மடைந்துள்ளன. அவைகளில் வேலை செய்யும் தொழிலாளர்களுக்கும் நல்ல பாதுகாப்பு அளிக்கப்பட்டிருக்கிறது. வெளிநாட்டு வாணிபம் செழிப்படையவும், விரிவடையவும் ஏதுவான அறிகுறிகள் உள்ளன. பொதுமக்களின்மேலுள்ள வரிப்பளு (நிலவரி உள்பட)வும் இலகுவாக்கப் பெற்றுள்ளது. குறைந்த பளுவுள்ளதும், தேவைக்கு ஏற்றாற்போல மாறும் நிலை உடையதும்

1 3ஆம் அத்தியாயத்தைப் பார்க்கவும்.

ஆன புதிய நிதிமூலங்கள் கண்டுபிடிக்கப் பெற்றுள்ளன.[1] போர்க் காலத்தில் அரசாங்கக் கடன்கள் அதிகரித்தாலும், நிரந்தரமான உற்பத்தியாக்காச் செலவு (Unproductive expenditure) வெகு வாகக் குறைக்கப்பெற்றுள்ளது. இதற்குப்பதில் உற்பத்தி யாக்கும் செலவும், பண்பாட்டை வளர்க்கும் செலவும் அதிகரித்திருக்கின்றன. பாங்குச் செலாவணி வசதிகளும், தேவை யான அளவுக்கு இல்லாவிட்டாலும், ஓர் அளவுக்கு விரிவடைந் திருக்கின்றன. போரின் சூழ்நிலையால் பெரிய நீலமாற்றம் ஏற் பட்டாலும், செலாவணிமுறை (Currency system) நிலையானதாக வும் திறனுள்ளதாகவும் அமைக்கப்பெற்றுள்ளது.[2]

இத்தகைய மாறுதல்களின் விளைவில் நாட்டின் மொத்த உற்பத்தியில் பெருமளவுக்கு அதிகரிப்பும், மக்களின் பொதுவான வாழ்க்கைத் தரத்தில் சிறிதளவு (ஆனல், நிச்சயமான) மேம்பா டும் ஏற்பட்டுள்ளன.[3]

இதைப் போன்றே, 1900-க்குப் பிறகு அரசாங்கத்தின் பொருளாதாரக் கொள்கையும் நல்ல முறையில் மாறுதலடைந் துள்ளது. அரசாங்கக் கொள்கை பழங்காலத்தில் எப்படியிருந் தாலும், தற்சமயம் மக்களின் நலன்களையும், விருப்பங்களையுமே (இவ் விருப்பங்களைப் புரிந்துகொள்ள முடிந்தவரை) முக்கிய நோக்கமாகக் கொண்டுள்ளது. கையாண்ட கொள்கையைப் பற்றி எந்த முறையீடுகள் இருந்தாலும் (எந்த அரசாங்கம்தான் இத்தகைய முறையீடுகள் இல்லாமல் இருக்கிறது?) தொழில் வளர்ச்சி, வேண்டுமென்றே தடைசெய்யப் பெற்றுள்ளது, அயல் நாட்டார் பயனடையும் வழியில் அறிந்தே, இந்திய வர்ணிபம் அமைக்கப் பெற்றுள்ளது, அரசாங்கத்தின் வரிகள் பொதுமக்கள் மேல் தாங்க முடியாத பளுவாக உள்ளன என்பன போன்ற முறையீடுகளை இனியும் உண்மையென நிரூபிக்க முடியாது. இதற்கெதிராக, மக்களுக்குச் சாகுபடியில் புதிய முறைகளை அறிவிப்பதில், மத்திய, மாகாண அரசாங்கங்கள் இரண்டினுடைய விவசாயத்துறைகளும் கூட்டுறவு இயக்கமும் முக்கியக் கருவி களாக இருக்கின்றன.[4] இதைப்போலவே ஆனல் சிறிதுகுறைந்த அளவில், மாகாணத் தொழில்துறைகளும் பணியை மேற்கொண் டுள்ளன.[5] நியாயமற்ற சுரண்டலிலிருந்து ஏழை வகுப்பினரை

[1] 14, 17ஆம் அத்தியாயங்களைப் பார்க்கவும்.

[2] 15, 18ஆம் அத்தியாயங்களைப் பார்க்கவும்.

[3] 16, 18ஆம் அத்தியாயங்களைப் பார்க்கவும்.

[4] 7, 8ஆம் அத்தியாயங்களைப் பார்க்கவும்.

[5] 9 ஆம் அத்தியாயத்தைப் பார்க்கவும்.

(விவசாயம், தொழில் இரண்டிலும் ஈடுபட்டுள்ளவர்களை)ப் பாது காக்கச் சட்டத்தின் மூலம் நல்ல பணிகள் செய்யப் பட்டிருக்கின் றன. இவர்கள் வேலைசெய்யும் தொழிலாலைகளிலும், குடியிருக் கும் வீடுகளிலும் தேவையான வசதிகள் செய்யப் பெற்றுள்ளன. மருத்துவத் துறையில் புதிய கண்டுபிடிப்புகளுக்கும், சுகாதாரத் துறையிலும் துப்புரவுத் துறையிலும் ஏற்பட்ட அபிவிருத்திக்கும் அரசாங்க முயற்சிகளே முக்கியக் காரணங்கள். ஆங்கிலேய ஏற்றுமதியாளர்களைப் பாதிக்கக் கூடிய வழியில், சில இந்தியத் தொழில்கள் 'தொழிற் காப்பு' வசதிகள் பெற்றுள்ளன.[1] விலை மட்டத்தில் ஏற்பட்ட மாறுதல்களைக் கழிவுசெய்து பார்த்தால், ஏழை மக்களின் தலைக்கான செல்லுகள் (அரசாங்கத்திற்கு) குறைக்கப்பெற்றுள்ளன என்பது தெரியும்.[2] பொருளாதார வளர்ச்சியை ஊக்குவிப்பதற்கு அரசாங்கம் மேலும் பலபணிகளைச் செய்யலாம். ஆனால், அரசாங்கக் கொள்கையில் முன்னர் இருந்த கறைகள் இப்பொழுது நீக்கப்பெற்றன. தற்போது நடை முறையிலிருக்கும் கொள்கை, மக்களின் நலன்களையும் விருப் பங்களையும், புறக்கணிப்பதாகும் என்று கூறுவது பழிச்சொல்லே யாகும். தற்போதைய அரசாங்கக் கொள்கையை, இந்தியாவின் தடைப்பட்ட பொருளாதார வளர்ச்சிக்கு ஒருமுக்கியக் காரண மாகவோ அல்லது பொருளாதார நிலையிலுள்ள தீமைகளுக்கு அடிப்படையான காரணமாகவோ கருத முடியாது.

§ 2. எதிர்காலப் பொருளாதார நிலவரம்

கடந்த கால வளர்ச்சியையும் கொள்கையையும் பற்றிய வினுக்களுக்கு இதற்கு முந்திய பிரிவில் விடை கண்டோம். தற் காலத்தையும், எதிர்காலத்தையும் பற்றிய வினுக்களை இங்குக் கவனிப்போம். இவ் வினுக்களில் முதன்மையானது, தொழில் வளர்ச்சியுள்ள மேனுடுகளின் பொருளாதார நிலையை இந்தியா அடைவதற்கான பாதை செப்பனிடப் பட்டிருக்கிறதா, இல்லையா என்பதாகும்.

இந்தியாவின் வளப்பொருள்களையும், தொழில் நுட்ப அறிவையும் நோக்கினால்,விரைவான முன்னேற்றம் ஏன் ஏற்படக் கூடாது என்றுதான் நானும் கருதுகிறேன். இந்தியாவும் தனக்குத் தேவையான வளப்பொருள்களைப் பெற்றிருக்கிறது. தகுந்த சூழ்நிலையிருந்தால் இந்தியத் தொழிலாளர்களும்—மேற் பார்வை செய்பவர்கள், தொழில் நுட்ப அறிவுள்ளவர்கள்,

1 13, 18ஆம் அத்தியாயங்களைப் பார்க்கவும்.
2 14, 18ஆம் அத்தியாயங்களைப் பார்க்கவும்.

உடலுழைப்பு செய்பவர்கள் யாவரும்—மற்ற நாட்டினரைப் போலத் திறனுள்ளவர்கள் ஆகமாட்டார்கள் என்று கூறமுடியாது. இந்தியாவின் தட்பவெப்ப நிலையில் சில நன்மைகளும் இருக்கின்றன; தீமைகளும் இருக்கின்றன. விஞ்ஞான ஆராய்ச்சிகள் நன்மைகளை அதிகரித்தும், தீமைகளைக் குறைத்தும் இருக்கின்றன. இந்தத் துறையில் ஆராய்ச்சி மூலம் இன்னும் அதிகம் செய்ய வேண்டியிருக்கிறது. சமூக அமைப்பு மாற்றியமைக்கப்படும்வரை விரைவான பொருளாதார முன்னேற்றம் இருக்காது என்று நான் மனமார நம்புகிறேன். பொருளாதார வளர்ச்சிக்குத் தடையாக உள்ள சில அடிப்படைக் குறைபாடுகள் நீக்கப்படும்வரை, புதுத்தொழில்களைத் தொடங்கவும், போக்குவரத்துச் சாதனங்களையும், பொது இயல் பணிகளையும் செம்மையுறச் செய்யவும் அரசாங்கம் அளிக்கும் 'தொழிற்காப்பும்', மேற்கொள்ளும் விஞ்ஞான ஆராய்ச்சியும், பிரசாரமும் மக்களின் பொருளாதார நிலையை உயர்த்துவதில் எந்தவிதப் பயனையும் அளிக்கா. மூன்று வகைத் தடைகளை இங்குக் குறிப்பிடலாம்.

ஒரு தனி நபருடைய வருவாய் உயர்ந்தால், அது அவருடைய வாழ்க்கைத்தரத்தை உயர்த்தாமல், மக்கட் பெருக்கத்தால் உறிஞ்சப்படுகிறது. இந்த நிலை நீடிக்கும்வரை நாட்டின் செழிப்பு மிக விரைவாகவோ அல்லது தேவையான அளவுக்கோ அதிகரிக்காது என்பதை முதலாவதாக உணரவேண்டும்.[1] எதிர்காலப் பொருளாதாரப்பிரச்சினைக்கு, மக்கள்தொகை மூலகாரணமாக உள்ளது. இவ் வுண்மையை மறுக்க முயலுவதில் யாதொரு பயனும் இல்லை. நாட்டில் உற்பத்தி பெருகலாம், பொருளாதார அமைப்பு அபிவிருத்தி அடையலாம், சுகாதார நிலை உயரலாம், தொழில்கள் வளர்ச்சி அடையலாம்; ஆனால், மக்கள் தொகையின் அளவைப் பொருளாதாரச் சாதனங்களுக்கு ஏற்றவாறு அமையுமாறு செய்யும்வரையில், பொதுமக்களின் வாழ்க்கைத்தரம் விரும்பிய நிலைக்கு உயராது; உயர்த்தவும் முடியாது. இது மறுக்கமுடியாத ஒரு முடிவாகும். தற்போதுள்ள சமூகப்பழக்க வழக்கங்களினால் மக்கள் தொகையின் அளவைத் தேவையானபடி மாற்றமுடியாது. இக் குறைபாட்டை நீக்க, சமூகச் சீர்திருத்தங்கள் தேவைப்படுகின்றன. இன்றைய அரசாங்கம் (அன்னிய அரசாங்கம் என்ற காரணத்தால்) இத்துறையில் அதிகம் செய்யமுடியாது. பொதுமக்களின் நலத்துக்காக ஒரு சில சீர்திருத்தங்களை மட்டும் அரசாங்கம் புகுத்த

[1] 3ஆம் அத்தியாயம் 2ஆம் பிரிவைப் பார்க்கவும்.

முயன்றால், அம் முயற்சி இந்தியாவில் ஆங்கில ஆட்சிக்கு முடிவு காலத்தை உண்டாக்கும். இது ஒரு விஞ்ஞதமான நிலையே. பிறப்பு வீதம் (Birth rate) குறைக்கப்பெற்றால்,[1] மக்களின் தலாவருமானம் ஐயமின்றி உயரும். தலா வருமானம்உயர்ந்தால் ஒவ்வொரு நபரும் அதிகமான கல்வியையும் மூலதனத்தையும் பெறவும் பயன்படுத்தவும் ஏதுவாக இருக்கும். அரசாங்கத் திற்கும் அதிகப்படியான வருவாய் கிடைக்கும். இவ் வருவாய் அரசாங்கம், பொதுஅறிவையும் பொருளாதார அறிவையும் பரப்பவும், புதிய பொருளாதாரத் திட்டங்களைத் தொடங்கவும் ஏதுவாக இருக்கும்.

வெள்ளம்போல் குழந்தைகள் பெருக்கமடைவதை இடித்துப் பேச இந்தியாவில் ஒரு மால்தஸ் (Malthus) இல்லையா?[2] இவ் வெள்ளத்தை எப்படித் தடுப்பது என்பது ஒரு பொருளாதாரப் பிரச்சினை இல்லை. ஆகையால், அதை இங்கு விளக்கவேண்டிய அவசியமுமில்லை. ஆனால், இவ்விதப் பெருக்கத்தினால் ஏற்படும் விளைவுகள் பொருளாதார முக்கியத்துவம் வாய்ந்தவை என்பதை நினைவில் கொள்ளவேண்டும். பிறப்பு வீதம் இதே ரீதியில் தொடர்ந்து இருந்தால், அறியாமை,நோய், அசுத்தம் இவைகளை எதிர்த்து நடக்கும் இயக்கங்களால் யாதொரு பலனும் கிடைக்காது.[3]

பொருளாதாரக் கருத்துகளில் மக்களுக்கு அக்கறையில்லாதது, பொருளாதார முன்னேற்றத்திற்குள்ள இரண்டாவது முக்கியத் தடையாகும். பொருளாதார நடவடிக்கைகளின் விளைவுகள், நடவடிக்கைகளின் சூழ்நிலையையே பொறுத்திருக்கின்றன. இந்தியாவின் சூழ்நிலை மாறுபட்டிருப்பதால், இங்குப் பொருளாதார விதிகளை ஆராயும் பொழுது, அமெரிக்கா

1 சில தொகுதிகளிலோ அல்லது சில வகுப்பினரிடையோ மட்டும் பிறப்பு வீதம் குறைந்தால் போதாது. பிறப்பு வீதத்தைக் குறைப்பதற்கான அறிகுறிகள் கிராமப்புற மாவட்டங்களின் வசதியுள்ள குடும்பங்களில் காணப்படுகின்றன என்று நான் நம்பகமாக அறிகிறேன்.

2 அமிதமான மக்கள் தொகை இருப்பதாக ஒப்புக்கொள்ளாவிட்டாலும், இந்தியாவில் உள்ள மிக உயர்ந்த இறப்பு வீதத்தாலும் (Death-rate), உயர்ந்த பிறப்பு வீதத்துடன், உயர்ந்த சிசு மரண வீதம் இருப்பதாலும் பொருளாதாரக் கேடுகள் ஏற்படுகின்றன என்பதை மறுக்க முடியாது. கருத்தடை இயக்கம் ஒன்று அண்மையில் தொடங்கப்பெற்றுள்ளது.

3 மனிவியையும் குடும்பத்தையும் நல்ல முறையில் பேணுவதற்குத் தேவையான வருமானத்தை ஈட்டும் வரை திருமணத்தை ஒத்திப்போடுவது சிறந்த வழியாகும். ஆனால், திருமணம் இந்தியாவில் ஒரு மதச் சம்பிரதாயமாகும். அதன் விளைவை எண்ணுமல் மற்றச் சம்பிரதாயங்களைப் போலவே, இதுவும் ஏற்றுக்கொள்ளப்படுகிறது என்று டார்லிங் (Mr. Darling) அவர்கள் கூறுகிறார். (The Punjab Peasant in Prosperity and Debt, p. 287).

வுக்கோ (ஐக்கிய) அல்லது மேற்கு ஐரோப்பாவிற்கோ பொருத்தமான 'எடுகோள்களை'க் (Assumptions) கையாள முடியாது. இவ்வுண்மையை உணராமல், மேலுடுகளில் மிக்க பயனத்தந்தது என்ற எண்ணத்தில், சில பொருளாதார நடவடிக்கைகளை இந்தியாவிலும் புகுத்தினால் ஏமாற்றம்தான் கிட்டும். 'அளிப்பு', தேவை இவைகளின் விதிகளும்கூட (Laws of supply and demand) சமூகச் சூழ்நிலை, மனிதனின் பொருளாதார இயல்பு இவைகள்பற்றிய சில எடுகோள்களையே பொறுத்திருக்கின்றன. இந்த எடுகோள்கள் அனைத்தும் உண்மையென்று ஒத்துக்கொள்ளப் பெறுவதில்லை.[1] எடுத்துக்காட்டாக, கூலிகள் உயர்ந்தால், தொழிலாளர்களின் அளிப்பு (Supply of Labour) அவசியம் அதிகரிக்கும் என்று இந்தியாவில் (எல்லா நாடுகளிலும் இல்லை) கருதமுடியாது. நல்ல திறனுள்ள தொழிலாளர்களைத் தேவையான அளவுக்குக் கவர்ந்தால்தான் புதிய தொழில்கள் வெற்றிகரமாக இருக்க முடியும். ஆனால், இந்தியாவில் தொழிலாளர்கள் அதிக ஊதியத்திற்காக இடம் பெயருவதில்லை. இந்த நிலை இந்தியாவில் இருக்கும்வரை பேரளவுத் தொழில்கள் விரிவடைவது முடியாத செயலாகும்; அல்லது மிகக் கடினமாகவாவது இருக்கும். 'தொழிலாளர்கள் தங்களுடைய வருமானங்களைப் பயனுள்ள வழிகளில் செலவிடுவதற்கு ஆதாரக் கல்வியைப் பரவலாக்க வேண்டும். அப்படிச் செய்யும்வரை, அவர்களுக்கு அதிக ஊதியம் ஈட்டவேண்டும் என்கிற அவா இருக்காது'. இது மறுக்க முடியாத ஓர் உண்மை.[2]

இந்தியாவில் அரசாங்கம் செயலற்று இருந்தால், தனிப்பட்டவர்கள் தங்களுடைய ஊக்கத்தினால் இலாபகரமான புதிய துறைகளை மேற்கொள்வார்கள் என்று எண்ணுவதற்கும் இடமில்லை. இந்திய மூலதனம், தொழிலாளர்கள் இவையிரண்டும் இடம் பெயரும் தன்மையுடையனவாக இல்லை. உழைப்பு, மூலதனம் இவற்றின் இறுதி நிலையான இடுமானங்களிலிருந்து (Marginal doses), போட்டியால் கிடைக்கும் விளைவுகள் (Returns) சமமானவையாக இருப்பதில்லை. பொருளாதாரத் தோற்றம் (Economic outlook) இந்தியாவில் நிலவவில்லை என்பதுதான்

[1] G. Cassel Fundamental Thoughts in Economics, 1 ஆம் அத்தியாயத்தைப் பார்க்கவும்.

[2] 'Proceedings of the Third Conference of Directors of Industries Bulletin of Indian Industries and Labour, No. 18, p. 14 (1921). சுரங்கங்கள் உள்ள மாவட்டங்களில், சில ஆண்டுகளுக்குமுன் மது அருந்துவதை எதிர்த்து ஒரு கிளர்ச்சி இருந்தது. இக் கிளர்ச்சியினால் நல்ல பலன் கிடைத்தது என்று இங்குக் குறிப்பிடவேண்டும். அங்குள்ள சுரங்கத் தொழிலாளர்கள் தங்கள் வருமானத்தில் மிகுதியை என்ன செய்வதென்று தெரியாமல், அதை ஒழுங்கீனச் செயல்களிலும், விரும்பத்தகாத செயல்களிலும் உடனடியாகச் சிதறவிட்டனர்.

உண்மை. மேலும், மக்களின் பொருளாதார நோக்கம் நம்பக் கூடியதாக இல்லாததால், பொருளாதார நடவடிக்கைகளின் விளைவுகளை எதிர்நோக்குவதும், பொருளாதார வளர்ச்சிக்கான செயல்கள் செய்வதும் மிகக் கடினமாக இருக்கின்றன. பொருளாதார முயற்சி இருந்தால்தான், பொருளாதாரத் துறையில் வெற்றி கிட்டும். சமூகக் கட்டுப்பாட்டையும், பழக்க வழக்கங்களையும் பொருளாதார வளர்ச்சிக்காக மாற்றிக்கொள்ளும் துணிச்சலும், பொருளாதார நோக்கமும் இருந்தால்தான், பொருளாதார முயற்சி எடுக்கப் பெறும். தேங்கிக்கிடக்கும் நிலையான சமூகக் கொள்கையும், முன்னேற்றகரமான பொருளாதாரக் குறிக்கோளும் ஒருங்கே இணைந்திருக்கமுடியாது. இன்பம் துறந்த ஒரு துறவி தன்னுடைய அறையை அலங்கரிக்க மின்சார வெளிச்சத்தை எதிர்பார்க்கமாட்டார். புதிய உற்பத்தி முறைகள் தொழில் முறைப் பகுப்பு (Division of Labour), பேரளவு உற்பத்தி, உற்பத்தியில் விஞ்ஞான முறைகளைக் கையாளுதல் இவைகளையே சார்ந்திருக்கிறது. இவைகள் யாவும் வேண்டுமானால், நாட்டில் கல்வி வளர்ச்சியும், மக்களின் கட்டுப்பாடான உழைப்பும், இவைகளை விட மக்களுக்குப் பொருளாதார அவாவும்[1] அவசியம் இருக்க வேண்டும். சமுதாயத்தில் பொருளாதார நோக்கமும், சமூகத்தின் அங்கத்தினர்களிடையே ஒத்துழைப்பும் இருந்தால்தான் நாட்டில் செழிப்பை எதிர்பார்க்கலாம். பொருளாதார நோக்கத்தை வலியுறுத்துவதால், மற்ற நோக்கங்களெல்லாம் அழிக்கப் பெற்றுப் பொருளாதார நோக்கம் மட்டுந்தான் நிலவவேண்டும் என்று பொருள் கொள்ளக்கூடாது.[2]

மக்களின் பொருளாதார நோக்கத்தில் சமூகப் பழக்க வழக்கங்களையும், கட்டுத் திட்டங்களையும் மாற்றியமைக்கக்கூடிய மாற்றம் ஏற்படவேண்டும். இவ்வித மாற்றம், இந்தியப் பொருளாதார வளர்ச்சிக்கு ஓர் அடிப்படையான நிபந்தனையாகும். பொருளாதார வளர்ச்சிக்கு ஏதுவான முக்கியச் சமூக சீர்திருத்தங்களைப்பற்றி முந்திய அத்தியாயங்களில் கண்டோம்.[3] அவைகள் பின்வருபவையாகும்: தொழில் உற்பத்திக்கும்

[1] பொருளாதார நோக்கம் வெறுக்கத்தக்கதும், இழிவானதும் என்றால், பொருளாதார முயற்சியின் விளைவுகளும் இழிவானவைதான் என்று முடிவு செய்ய வேண்டாவா? அப்படியானால், நாட்டின்வளம் தாழ்ந்த நிலையிலிருப்பதைக் குறைகூறுவதில் எந்தவித நியாயமும் இல்லை.

[2] தற்போது பல இந்தியர்கள் இரண்டையும் விரும்புகிறார்கள். அவர்கள் ஒரு பக்கம் பொருள் வள நலத்தைக் குறை கூறுகிறார்கள். ஆனால், அதே சமயத்தில் பொருள்வள நலம் உயரவில்லை என்றும் குறை கூறுகிறார்கள்.

[3] 3, 4 ஆம் அத்தியாயங்களைப் பார்க்கவும்.

தொழிலாளர் இடப்பெயர்ச்சிக்கும், அவர்களின் திறமைக்கும், 'நுகர்வி லும்' செலவிலும் சிக்கனத்திற்கும் பாதகமாக உள்ள சாதி, மதத் தடைகளை நீக்கும் சீர்திருத்தங்கள்; சமூகத் தொண்டு புரிவதில் அவா ஊட்டும் வகையில் சமூகக் கருத்துகளில் சீர்திருத் தங்கள்; பெண்களின் சமூக நிலையிலும் பொருளாதார நிலையிலும் சீர்திருத்தங்கள்.[1]

பொருளாதார முன்னேற்றத்திற்கு இந்தியாவிலிருக்கும் மூன்றுவது முக்கியத்தடை, ஆள்வோருக்கும் ஆளப்படுவோருக்கு மிடையே ஒத்துழைப்பின்மையாகும். அடிப்படையான அரசியல் அமைப்புச் சீர்திருத்தங்கள் ஒருபுறமிருக்க, ஒரு நல்ல கொள்கையைத் தொடர்ந்து கையாளுவதன்மூலம்தான் அர சாங்கம் ஒத்துழைப்பை வளர்க்கமுடியும். கொள்கை நல்லதாக இருப்பதுடன், அதைச் சந்தேகிப்பதற்கு ஏதுவான காரணங்களும் இருக்கக்கூடாது. பொருளாதாரப் பிரச்சினைகளில் மக்களின் கருத்துக்கு மதிப்புக் கொடுத்து, அவர்களுக்குச் சமாதானம் கூறும் செயலில் கடந்தகாலத்தில் அதிக கவனம் செலுத்தப் பெற வில்லை. இக் கொள்கை அண்மையில் மாற்ற மடைந்திருக்கிறது. உதாரணமாக, 'பேதங்காட்டும் தொழிற்காப்' பளித்தது, பருத்தி ஆயத் தீர்வையை ரத்து செய்தது, நேரிடையான நிதி உதவி அளிப்பதை இந்தியாவில் பதிவு செய்யப்பெற்ற நிறுவனங் களுக்குமட்டும் அளித்தது, 'ரிசர்வு பாங்கை' நிருமாணித்தது இவைகள் யாவும் மக்களின் விருப்பத்திற்கிணங்கவே செய்யப் பெற்றன. புதிய அரசியலமைப்பு, மாகாணங்களுக்குச் சுயாட்சி கொடுப்பதன்மூலம், சமுதாய வளர்ச்சியிலும், பொருளாதார வளர்ச்சியிலும் மக்கள் அக்கறை கொண்டு ஒத்துழைப்பைத் தருமாறு செய்யவேண்டும். இப் பிரச்சினைகள் 18ஆம் அத்தியா யத்தில் மேலும் தெளிவாக விளக்கப்பெறும். பொருளாதார வளர்ச்சியை உண்டாக்குவதில், அரசாங்கத்திற்குள்ள சக்தி மிகக் குறைவே. ஆகவே, தனிப்பட்டவர்கள் தாங்களாகவே முன்வந்து பெருமுயற்சி எடுக்கவேண்டியது மிகவும் அவசியம் என்னும் உண் மைகளை மக்கள் உணர்ந்தால், ஒரு பெரிய பொருளாதார எழுச் சியே உண்டாகும். எடுத்துக்காட்டாக, தொழிற்காப்பு அங்கங் களைக் கையாண்டால் அல்லது உற்பத்திக்கு அரசாங்கக் கொடைகள் அளித்தால் இந்தியாவில் தொழில் வளர்ச்சி ஏற்பட்டுவிடும் என்று எண்ணுவது, நிலைமையைத் தவறுகப் புரிந்துகொண்டதால் எழுந்தது என்பதுடன், அரசாங்கத்தின்

[1] எதிர்கால இளைஞர்களின் பயிற்சியும் குடும்பத்தை நிருவகிக்கும் பொறுப்பும் பெண்கள் கையில்தான் இருக்கின்றன. ஆதலால், சமுதாயத்தில் இவர்களின் முக்கியத் துவத்தை விளக்கவேண்டிய அவசியமில்லை.

பொருளாதாரக் கொள்கையையும் சக்தியையும் அளவுக்குமீறி மதிப்பிடுவதுமாகும்.

அரசாங்கத்தின் சக்தி மிகைப்படுத்தப்பட்டிருந்தாலும் பொருளாதார வாழ்க்கையைச் செப்பனிடுவதில் மற்ற நாடுகளை விட, இந்திய அரசாங்கத்தின் பாகம் அதிகமாகும். இந்திய அரசாங்கமே இக் குறிக்கோளை மேற்கொண்டிருப்பதுடன், இந்தியாவில் பொருளாதாரத் துறையில் தலைவர்களும் அதிகமில்லாததுமே இதற்குக் காரணமாகும். மேனாடுகளுக்கும் இந்தியாவுக்கும் நெருங்கிய பொருளாதாரத் தொடர்பு ஏற்பட்டதற்கும், இந்தியா வெளி நாடுகளுக்கு அறிமுகமானதற்கும், பேரளவுத் தொழில்களும், தோட்டச் சாகுபடிகளும் தொடங்கப்பெற்றதற்கும் இந்தியாவில் உள்ள காலப் பொருத்தமில்லாத பொருளாதார முறைக்கும், இங்கிலாந்துடன் இந்தியா கொண்ட தொடர்பே காரணமாகும். தற்போதைய பொருளாதாரப் பிரச்சினைகளில் பலவும் இத் தொடர்பால் எழுந்தவையே. ஆதலால், இப்பிரச்சினைகளுக்கு முடிவுகாண அரசாங்கமும் ஓரளவுக்காவதுபொறுப்பு ஏற்கவேண்டும். இதிலுள்ள இன்னல் என்னவென்றால், பொது மக்களின் மனப்பூர்வமான ஒத்துழைப்பு இல்லாமல் இப் பிரச்சினைகளைத் தீர்க்கமுடியாது. மக்களின் ஒத்துழைப்பைப் பெறுவதும், பொருளாதாரப் பணிகளையும், சமூகப் பணிகளையும் பரந்த முறையில் மேற்கொள்வதற்குத் தேவையான வருவாயைத் திரட்டுவதும் ஓர் அன்னிய அரசாங்கத்திற்கு அவ்வளவு எளிதல்ல. இந்தியாவுக்குச் சுயாட்சி கொடுக்கப்படும் வரையில், ஒருபுறம் அரசாங்கத்தின் கொள்கைக்குக் கடும்தாக்குதல் இருக்கத்தான் செய்யும்; மற்றொருபுறம், அக் கொள்கையிலிருந்து அதிகப் பலனும் எதிர்பார்க்கப்பெறும்.

§ 3. முன்னேற்றத்துக்கான வழிகள்

ஒரு நாட்டில் பொருளாதார முன்னேற்றத்துக்கான வழிகள் அந் நாட்டின் பொருளாதார நிலைமைக்கும் அதன் பொருளாதாரக் குறிக்கோளுக்கும் உள்ள தொடர்பைப் பொறுத்துத்தான் இருக்கின்றன. வாழ்க்கைக்குத் தேவையான விவசாயப் பொருள்களையும், தொழில் பண்டங்களையும் அளிக்கும் 'தன் நிறைவு' (Self-Sufficiency) நிலைகொண்ட பொருளாதார முறையையே, இந்தியா நோக்கமாகக் கொள்ளவேண்டுமென்பதை மேலே கண்டோம். இந்தியா இன்னும் ஒரு விவசாய நாடாகவே இருப்பதுடன், செய்வினை முடிந்த பண்டங்களுக்கும் தொழில்

உற்பத்திக்குத் தேவையான சாதாரணக் கருவிகளுக்கும் இறக்கு மதியையே எதிர்பார்த்திருக்கிறது. ஆகையால், 'தன் நிறைவு நிலை' அடைவதைக் குறிக்கோளாகக் கொண்டால், தொழில் வளர்ச்சியை ஊக்குவிக்கவேண்டியது மிகவும் அவசியம் என்பது வெளிப்படையாகும். தொழில் வளர்ச்சி, சமநிலையான பொருளாதார முறையை உண்டாக்குவதுடன், விவசாயத்தையே நம்பி வாழும் மிகுதியான தொழிலாளர்களுக்கு வேலையும் கொடுக்கும். பலரும் விவசாயத்தையே சார்ந்திருப்பதால், வாரங்களும், நில மதிப்பும் மிகவும் அதிகமாக உள்ளன. இவைகளும் தொழில் வளர்ச்சியால் குறையும். ஆகையால், விவசாய வளர்ச்சியும், தொழில் வளர்ச்சியும் ஒன்றுக்கொன்று முரண்பட்டன என்று கருதுவது தவறாகும். அதற்கு மாறாக, இவ்விரண்டிலும் வளர்ச்சியை ஒரே நேரத்தில் ஏற்படுத்தவேண்டும். 'மக்களில் பெரும் பான்மையோர் வேலையே இல்லாமலும் அல்லது போதிய அளவுக்கு வேலையில்லாமலும், அதனால் ஏழையாகவும் இருக்கிறார்கள். இவர்களுக்கு ஏதாவது வேலைகொடுப்பது.....சிக்கலிலும், பெரிய சிக்கலாகும்'[1] என்று கூறப்படுகிறது. தொழில்கள், வளர்ச்சியுறப்பெற்றால் இவர்களுக்குக் கட்டாயம் வேலை கிடைக்கும். அதனால், நிலத்தின்மேலுள்ள அழுத்தமும் குறைந்து, விவசாயத்தில் இயந்திரங்களும் உபயோகிக்கப்படும். மற்றக் குடியானவர்களின் நிலையும் உயரும். விவசாயிகள் செழிப்படைவதால், தங்களுடைய அதிகப்படியான வருமானத்தை நிலத்தில் முதலீடு செய்து மேலும் சிறந்த முறையில் விவசாயம் செய்வார்கள். இவ்வாறு, நிலத்தின் உற்பத்தி பெருகும் அதே நேரத்தில் செய்வினைமுடிந்த பண்டங்களுக்கும் தேவை (விவசாயிகள் மூலமாக) அதிகரிக்கும்.[2]

தொழில் வளர்ச்சியை ஊக்குவிப்பது விரும்பத்தக்கது என்று ஒத்துக்கொண்டால், அதை எவ்வாறு அடைவது என்ற வினா எழுகிறது. இந்தியாவிலேயே தயாரிக்கவேண்டும் எனப்படும் பொருள்களின் இறக்குமதியைத் தடைசெய்வதால் மட்டும் தொழில் வளர்ச்சி ஏற்படக்கூடிய நிலையை இந்தியா இன்னும் அடையவில்லை என்றுதெரிகிறது.[3] இத்தகைய தொழிற்காப்பின் மூலம் பயனடையும் தொழில்களின் எண்ணிக்கை மிக மிகக் குறைவு. இறக்குமதிக்குத் தடை விதிப்பதைவிட, வாணிபத்திற்கு

[1] B. G. Sapre, The Essentials of Indian Economics, p. 113.

[2] மேனாடுகளில் தொழில்வளர்ச்சி ஏற்பட்ட பிறகு பிறப்பு வீதம் குறைந்தது தொழில் வளர்ச்சியால், இந்தியாவில் மக்களின் வாழ்க்கைத் தரம் நிரந்தரமாக உயரும இல்லையா என்பது, முடிவில் தொழில்வளர்ச்சியுடன் பிறப்பு வீதமும் குறைந்ததா இல்லையா என்பதைப் பொறுத்துத்தான் இருக்கிறது.

[3] 13ஆம் அத்தியாயத்தைப் பார்க்கவும்.

(வெளிநாட்டு வாணிபம், உள்நாட்டு வாணிபம் இரண்டுக்கும்) அதிக வாய்ப்பு வசதிகள் அளித்துப் பொருளாதாரத் துறையில் முன்னேற்றமடைந்துள்ள நாடுகளுடன் நெருங்கிய தொடர்பு கொள்வதன்மூலம்தான் இந்தியத் தொழில்களில் காணப்படும் குறைபாடுகள் நீக்கப்பெறும்.

விஞ்ஞான அறிவு வளர்ச்சி, சீரிய முறைகளைக் கையாள அதிகப்படியான வருவாய், பொதுக்கல்வியையும் தொழில் நுட்பக் கல்வியையும் மேலும் வளர்ப்பது-இவைகளே இந்தியாவின் விவசாய உற்பத்தியையும் தொழில் உற்பத்தியையும் பெருக்குவதற்கான முக்கியத் தேவைகள்.

விவசாயத்துறையில் விஞ்ஞான அறிவு தற்காலத்தில் மிகமிக அவசியமாகிறது. செடிகளையும் விதைகளையும் தேர்ந்தெடுத்தல், கால்நடைகளை வளர்த்தல், விதைவிதைத்தல், பயிர்களைக் காப்பாற்றுதல், அறுவடைசெய்தல், விளைபொருள்களை விற்பனைக்காகத் தயாரித்தல், பண்டங்களை விற்பனைக்கு அனுப்புதல், விற்பனை செய்தல் இவைகள் அனைத்தையும் விஞ்ஞான முறையில் செய்தால்தான் விவசாயம் முன்னேறும். விதை விதைப்பதிலிருந்து பண்டங்கள் சந்தைக்கு வரும்வரை, விஞ்ஞான முறையைக் கையாளவேண்டுமென்று கண்டோம். இந்தப் பொருளாதார வட்டம் பூர்த்தியாகவேண்டுமானால், கலப்படமில்லாத, சத்துள்ள, புதிய பண்டங்களை மக்கள் உண்ணவேண்டும்.

சுரங்க வேலை, உலோகங்களைப் பிரித்தெடுத்தல், தொழில் உற்பத்தி இவைகளிலும் விஞ்ஞான அறிவு மிகவும் அவசியமாகிறது. இத் துறைகளில் இயந்திரங்களின்மூலம் பண்டங்களைப் பெருமளவில் உற்பத்திசெய்து, பண்டங்களைத் தரப்படுத்தி, உற்பத்திமுறையைத் திருத்தமாகவும் ஒழுங்காகவும் அமைத்து, சுத்தப்படுத்த இரசாயனங்களை உபயோகித்து, இரசாயனத் தன்மையுள்ள துணைப்பொருள்களையும் பயன்படுத்திஞல்தான் உற்பத்தி இலாபகரமாக இருக்கும் இவ்வாருக, இந்தியாவில் தொழில் பிரச்சினைகள் எல்லாம் பெரும்பாலும் விஞ்ஞானப் பிரச்சினைகளாகவே இருக்கின்றன. முன்னமே மேற்கத்திய நாடுகளில் கண்டுபிடிக்கப்பெற்ற தத்துவங்களை இந்தியச் சூழ்நிலைக்கு ஏற்ற வாறு மாற்றவும், தொழிலமைப்பு முறைகளில் இந்தியாவுக்கு ஏற்றவைகளைக் கண்டுபிடிக்கவும் விஞ்ஞான ஆராய்ச்சி தேவைப்படுகிறது.

நாட்டின் சுகாதார நிலையையும், துப்புரவையும், மக்களின் குடும்ப வாழ்க்கையையும், சுற்றுப்புறங்களையும் அபிவிருத்தி செய்ய விஞ்ஞான அறிவு தேவைப்படுகிறது.

விஞ்ஞான ஆராய்ச்சிகளைத் தொடர்ந்து நடத்தவும், விஞ்ஞானத் தத்துவங்களையும் விஞ்ஞான முறைகளையும் பரப்பவும், பரிசோதனை நிலையங்களை நிறுவவும், புதிய முறைகளைத் தொடங்கும் தனிப்பட்டவர்களுக்கு உதவவும் கடந்த காலத்தில் அரசாங்கத்திற் கிருந்த நிதிக் கட்டுப்பாடுகள் நீக்கப்பெறவேண்டும். அரசாங்கத்திற்குத் தன்னிச்சைபோல் தொழில் வளர்ச்சியை ஊக்குவிக்கவும், விரைவான தொழில் வளர்ச்சியால் ஏற்படக் கூடிய தீமைகளைத் தடுக்கவும் தேவையான அதிகாரத்தைக் கொடுக்கவேண்டும்.[1] நிலைமாறு காலத்தில் (transitional period) பல தீமையான விளைவுகள் ஏற்படுவது உண்மையென்றாலும், இவைகளுக்கு எதிராக அதிகப் பயன்கள் கிடைப்பதால், தீங்கான விளைவுகளை வலியுறுத்தவேண்டிய அவசியமில்லை. கைத்தொழில்கள் நலிந்ததை மிகைப்படுத்தியும், 'வசதியான இடங்களில் தொழில்கள் குவிந்ததனாலும், வானிலையும் நிலவளமும் அனுகூலமான பகுதிகளில் விளைச்சல் பெருகியதாலும் கிடைத்த பயன்களைக் குறைத்தும்' கூறுவது எளிதாகும்என்று சர். ஆல்ஃபிரட் சாட்டர்டன் (Sir Alfred Chatterton) கூறுகிறார்.[2]

மேற்கூறிய விஞ்ஞான முறை வேலைகளை (அது மேற்பார்வை வேலையானாலும்சரி, உடலுழைப்பு வேலையானாலும் சரி) இந்தியத் தொழிலாள வகுப்பினரிடமிருந்தோ அல்லது தற்போதையக் கல்விமுறையில் உயர்நிலைப் பள்ளிகளிருந்தும், இடைநிலைப் பள்ளிகளிலிருந்தும் வெளியேறும் இளைஞர்களிடமிருந்தோ எதிர்பார்க்க முடியாது. விஞ்ஞான முறையில் திறமையான உற்பத்தியை வளர்ப்பதற்கும் மக்களின் சமூகக் கருத்துகளை மாற்றுவதற்கும் புதியமுறையில் ஆதாரக் கல்வி மிகவும் அவசியமாகும். இக் கண்ணோட்டத்தில் நோக்கினால், பொருளாதார முன்னேற்றத்திற்குத் தேவையானவைகளைச் சுருக்கி ஒரு வாக்கியத்தில் கூறலாம். அது—கல்வி, அதிகப்படியான கல்வி, சிறந்தமுறைக் கல்வி—அவசியம் தேவை என்பதுதான்.[3]

தற்போதைய கல்வி முறையும் சிறந்ததாக இல்லை. மக்களில் பெரும்பான்மையோரும் கல்வியறிவு இல்லாதவர்களாகவே இருக்

[1] Asiatic Review, April 1923. p. 270.

[2] Asiatic Review, 1926, review of D. R. Gadgil's book, The Industrial Evolution of India.

[3] 'மக்கள் தொன்றுதொட்டுப் பரம்பரை பரம்பரையாகக் குறுகிய மனப்பான்மை கொண்டுள்ளார்கள். அவர்களுடைய கருத்தையும் மனப்பான்மையையும் பரந்ததாகச் செய்யாவிட்டால், மக்கள் அறியாமையிலும், ஏழ்மை நிலையிலும்தான் இருக்கவேண்டும்; பெண்கள் வீட்டுப் பூச்சிகளாகவே இருக்கவேண்டும்; சுகாதார முன்னேற்றத்தையும், நோயை ஒழிப்பதையும் நிரந்தரமாகத் தள்ளிவைக்கவேண்டும்'. (Moral and Material Progress of India, 1924–25, p. 276.)

கிறார்கள்.[1] மத்தியதரக் குடும்பங்களிலிருந்து இடைநிலைப் பள்ளிக்குச்செல்லும் ஆண் மாணவர்களின் எண்ணிக்கை, இங்கிலாந்திலும் வேல்சிலும்[2] (Wale) இருந்த அதே வகுப்பினரின் எண்ணிக்கையைவிட அதிகமாகத்தான் இருக்கிறது. இருந்தாலும் அவர்களுக்கு அளிக்கப்பெறும் கல்வி, ஒன்று அதிகமாக இலக்கியத்தைப்பற்றியோ அல்லது அவர்களைக்குமாஸ்தாக்களாக[3] ஆக்கும் தன்மையுடையதாகவோ இருக்கிறதே ஒழிய, கல்வி கற்போரின் தேவைகளுக்கு ஏற்ப இல்லை. மேலும், பள்ளிக்குச் செல்லும் சில குழந்தைகளும், வயதுவந்த பிறகும் கல்வி கற்பதற்காக, அங்கேயே பல ஆண்டுகள் தங்கிவிடுகின்றன. 1918ஆம் ஆண்டில் கட்டாயக் கல்வியை நடைமுறையாக்க, தல ஆட்சி மன்றங்களுக்கு (Local bodies) அதிகாரத்தைக் கொடுக்கும் 'ஆதாரக் கல்விச் சட்டங்கள்' ஏறக்குறைய எல்லா மாகாணங்களிலும் நிறைவேறியுள்ளன.[4] ஆகையால், ஆதாரக்கல்வியை விரைவில் பரவலாக்கவேண்டும். ஆனால், கட்டாயக் கல்வி கொள்கையளவில் எங்கும் கையாளப்பெற்றாலும், நடைமுறையில் ஒருசில மாவட்டங்களில் மட்டும்தான் நிறைவேறியது. பஞ்சாப் மாகாணத்தில்மட்டும்தான் சிறிதளவாவது வெற்றி கிட்டியது என்று விவசாயத்தை விசாரணை செய்த அரசாங்க ஆணைக்கழகம் (Royal Commission on Agriculture) அறிவித்தது.[5] கல்வி முறையை அபிவிருத்தி செய்ய அண்மையில் பல முயற்சிகள் நடந்தன. புதிய முறையில் ஆய்வு (inspection), சிப்பந்திகளுக்குச் சம்பள உயர்வு, உடற்பயிற்சி, சாரணர்படை இயக்கம் இவைகளை ஊக்குவித்தல் இவைகள் அனைத்தும் இந்தியாவின் பலபாகங்களிலும் புதிய ஆட்சியைப்

[1] 1931ஆம் ஆண்டில் ஐந்தும் அதற்கு மேற்பட்ட வயதுமுள்ள சிறுவர்களில் ஆண்களில் 15·6 சதவீதமும், பெண்களில் 2·9 சதவீதமுமே கல்வியறிவு உள்ளவர்களாக இருந்தார்கள். வயதுவந்த ஆண்களில் கல்வி கற்றவர்களின் சதவீதம் 56 லிருந்து (பர்மாவில்) 9·4 வரை (ஐக்கிய மாகாணங்களில்) இருந்தது. வயது வந்த பெண்களில் கல்வி கற்றவர்களின் சதவீதம் 16·5 லிருந்து (பர்மாவில்), 0·8 வரை (பீஹாரிலும், ஒரிஸ்ஸாவிலும்) இருந்தது.

[2] Moarl and Material Progress of India, 1924-25, p. 276.

[3] A. Mayhew, The Education of India.

[4] Moral and Material Progress of India, 1924-25, 279, 1923ஆம் ஆண்டின் பம்பாய்ச் சட்டப்படி, ஒருகுறிப்பிட்ட காலத்திற்குள் ஆரம்பக் கல்வியைக்கட்டாயமாக்கும் ஒரு திட்டத்தைத் தல ஆட்சி மன்றங்கள் வகுக்கவேண்டியிருந்தன. அதற்காக ஆகும் அதிகப்படியான செலவில் மூன்றில் இரண்டு பங்கை பம்பாய் அரசாங்கம் ஏற்றுக் கொண்டது. *V.* Social Service Quarterly, October 1923 and, *V.* Times Educational Supplement, February 9, 1929, "Indian Education."

[5] p. 64 of the Abridged Report of the Royal Commission on Agriculture in India. இருப்பினும் ஒவ்வொரு மாகாணத்திலும் சில தொகுதிகளில் கட்டாயக் கல்வி, முறை கையாளப்பட்டு வருகிறது.

பிரதிபலிப்பதாக இருந்தன என்று கூறப்படுகிறது[1]. பெண்கள் கல்விதான் முன்னேறவே இல்லை. பெண்கள் கல்விக்குத் தேவையேயில்லை என்ற கருத்து நாட்டில் இருக்கிறது.[2] பெண்கல்விக்குத் தேவையை உண்டாக்க முடியும் என்று ப்ரெயின் அவர்கள் (Mr. Brayne) முன்னரே எடுத்துக்காட்டியுள்ளார்.[3] பெண்கள் கல்வி வளராமல் இருப்பதற்கு, தேவையான ஆசிரியைகள் கிடைக்காததே அடிப்படையான காரணமாகும். வயதுவந்த பெண்கள் எல்லோரும் திருமணம் செய்து கொள்ள வேண்டும் என்ற முறையிருப்பதாலும், குடும்பப் பெண்கள் (விதவைகளும்கூட) வேலையேற்கக்கூடாது என்ற பழக்கமிருப்பதாலும், ஆசிரியைத் தொழிலில் கிடைக்கும் ஊதியம் கேவலமாக இருப்பதாலும், சமூக அமைப்பு, பெண்களின் சுதந்திரத்திற்குத் தடையாக இருப்பதாலும் பெண்கள் ஆசிரியத் தொழிலை மேற்கொள்ளுவதில்லை.[4] இந்தச் சிக்கல் நீங்கும் வரை, இந்தியாவின் எதிர்காலத்திற்கு ஊறுவிளையும். பெண்கள் வலுவற்ற இனத்தவர் என்று கூறுபவர்கள், ஒரு சங்கிலித் தொடரின் வலு அதனுடைய பலமில்லாத இணைப்பைப் பொறுத்துத்தானிருக்கிறது என்பதை நினைவில் கொள்வது நல்லது.

கிராமீயக் கல்வியை ஆதாரமாகக் கொண்டு, புதிய கல்வி முறையைப் பல மாகாணங்களும் கையாளத் தொடங்கியிருக்கிறது. இது நம்பிக்கை ஊட்டுவதாக இருக்கிறது.[5]

இந்திய மக்களின் வாழ்க்கைத்தரம் மிகவும் தாழ்ந்திருப்பதால், விஞ்ஞானத் துறைகளில் திறமையை வளர்ப்பதற்கும் இயலவில்லை. குறிப்பாகத் தொழிற் பகுதிகளில் உயர்ந்த கூலிகள், வீட்டு வசதிகள், சத்துள்ள உணவு, கடன் தொல்லையிலிருந்து விடுதலை இவைகள் ஒரு திறன்வாய்ந்த தொழிலாளர் படையைத் திரட்டுவதற்கு அடிப்படைத் தேவைகளாகும். செல்வத்தை உற்பத்தி செய்யக் காரணமாயிருந்த தொழிலாளர்களுக்கு அதில் ஒரு பங்கு கிடைக்காவிட்டால் பொருளாதார முன்னேற்றத்தை எதிர்பார்க்க முடியாது.

[1] Moral and Material Progress of India, 1924-25, p. 280, and Times Educational Supplement, February 9, 1929, India, Women's Education'.

[2] Moral and Material Progress of India, 1924-25, p. 280, and Times Educational Supplement, February 9, 1929, 'India, Women's Education'.

[3] 7 ஆம் அத்தியாயத்தைப் பார்க்கவும்.

[4] *V*, Times Educational Supplement, July 7, 1928, 'Compulsory Education'

[5] Indian Educational Supplement of The Times, November 26, 1927, 'Indian School Gardens'.

ஆகவே, பொருளாதார வாழ்க்கையின் ஒவ்வொரு துறையிலும் ஒரு குறிப்பட்ட கொள்கையைக் கையாளுவதால் மட்டும் முன்னேற்றகரமான ஒரு பொருளாதார இயக்கத்தை உருவாக்க முடியாது என்பது வெளிப்படையாகும்.[1] இப்பொழுது தேவைப்படுவது, நேரிடையாகவும் மறைமுகமாகவும் பொருளாதாரம் சம்பந்தமான கொள்கைகள் அனைத்தையும் இணைத்து ஒருமைப்படுத்துவதே. இத்தகைய ஒருமைப்பாட்டுக் கொள்கையின் ஒவ்வொரு அங்கமும் அதனுடைய சூழ்நிலையில் தனித்தியங்குவதாகவும் இருத்தல்வேண்டும். இந்தியப் பொருளாதார வாழ்க்கையின் பல அங்கங்களைப் பற்றிப் பலருடைய கருத்துகளைப் பெறவும், விருப்பங்களை அறியவும் அரசாங்கம் அடிப்படையான பல நடவடிக்கைகளை மேற்கொண்டிருக்கிறது. 'பொருளாதார விசாரணைக் குழு', 'இந்திய வரி விதிப்பு விசாரணைக் குழு', 'நிதி, செலாவணிபற்றிய அரசாங்க ஆணைக்கழகம்', 'விவசாயம், தொழிலாளர்பற்றிய அரசாங்க ஆணைக்கழகம்', 'பாங்கியல் விசாரணைக் குழு'[2] போன்றவைகள் இதற்கு எடுத்துக்காட்டுகளாகும். இவ் விசாரணைகள்மூலம் கிடைக்கும் தகவலைக்கொண்டு அரசாங்கம் முன்னிருந்ததைவிட, மேலும் சமனுள்ள கொள்கையை உருவாக்கவேண்டும். விவசாயத்துறை, தொழில்துறை, நிதித்துறை இவைகளிடையே ஒத்துழைப்பும், ஒருமைப்பாடும் இருக்கவேண்டிய அவசியத்தை நாம் முன்னரே வலியுறுத்தியிருக்கிறோம்.[3] விவசாயத்திலும் தொழிலிலும் ஈடுபாடுள்ள அரசாங்கத் துறைகளினிடையே ஒத்துழைப்பை உண்டாக்கவும், கூட்டுறவுச் சங்கங்களைத் தொடங்கவும் பல மாகாணங்களிலும் வளர்ச்சிக் கழகங்கள் தனியாக நிறுவப்பெற்றுள்ளன.[4]

அறிந்த முறைகளை மக்களிடம் பரப்புவது எப்பொழுதும் பிரசாரத்தின்மூலம்தான் கைகூடும். அதிகாரமும், நிருவாகமும்

1 விவசாயம், தொழில், வாணிபம், நிதி நித் துறைகளிலும், சமூக அமைப்பு, தொழிற்சாலைகள், சுகாதாரம் இவைகளை மேம்படச் 'செய்யவும் அரசாங்கம் இதுவரை கையாண்ட கொள்கைகளையும், கையாளக் கூடிய கொள்கைகளையும் முன்னரே விளக்கியுள்ளோம். ஆகையால் அவைகளை இங்கு மறுபடியும் விளக்கவேண்டிய அவசியமில்லை.

2 12, 18 ஆம் அத்தியாயங்களைப் பார்க்கவும்.

3 7, 9, 13 ஆம் அத்தியாயங்களைப் பார்க்கவும்.

4 'Third Conference of Directors of Industries,' Bulletin No. 13 (1921), pp. 136-139. வளர்ச்சிக் கழகம் (Development Board) ஒன்றைத் தனியாக நிறுவ வேண்டுமா, அல்லது துறைத் தலைவர்களிடையே ஒத்துழைப்பும், அவ்வப்போது மாநாடு மட்டும் இருந்தால் போதுமா என்பதில் கருத்து வேறுபாடு இருந்தது. இவைகளில் பின்னதுதான் ஏற்றுக்கொள்ளப்பெற்றது. 1934-ல் ஒரு 'மாகாணப் பொருளாதார மாநாடு' நடைபெற்றது. பல சீர்திருத்தங்களைப் புகுத்துவதற்கு (குறிப்பாகப் பண்டங்களை விற்பதில்) இம் மாநாடு காரணமாயிருந்தது. (18 ஆம் அத்தியாயத்தைப் பார்க்கவும்). பல மாகாணங்களின் தொழிற் பணிகளை ஒருமைப்படுத்துவதற்காக, 'தொழில் புலனுய்வு, ஆராய்ச்சி நிலையம்' ஒன்றை நிறுவவேண்டுமென்று தீர்மானம் நிறைவேற்றியது.

ஒரே இடத்தில் குவிந்திருந்தால், இந்தியா போன்ற நாட்டில் பிரசாரம் சிறந்த முறையில் இருக்கமுடியாது.

மேனாடுகளின் அறிவுத்திறனை ஏதாவது ஒரு வழியில் இந்தியாவில் புகுத்தி இந்தியச் சமுதாயத்திற்குப் புத்துயிர் அளிக்க வேண்டும். இப்படிச் செய்வதன்மூலம் மேனாடுகளின் முன்னேற்றத்துக்கே உரித்தான விஞ்ஞான முறையையும் தொழில் நுட்பத்தையும் கிழக்கத்திய நாடுகளின் சூழ்நிலைக்குப் பரவலாகப் பயன்படுத்தலாம். இந்தியா மாறுபட்ட பழக்க வழக்கங்களையும், வேறுபாடுடைய கருத்துகளையும் கொண்ட தனித்தனி வகுப்பினர்களைக் கொண்டிருந்தாலும், இவைகளினிடையே சகிப்புத்தன்மையும், மேனாடுகளின் தொழில் திறமையின் உதவியால் ஒருமைப்பாடும் கொண்ட நவ இந்தியாவின் தோற்றம்எழுகிறது. 'கூர்காவ்'[1] (Gurgaon) என்னுமிடத்திலும், 1919ஆம் ஆண்டில் 'கிராமச் சுயாட்சிச் சட்டம்' நிறைவேறிய பிறகு சில மாவட்டங்களிலும் இதற்கான சில நற்பணிகள் நடைபெற்றன. இவைகளைப்பற்றி அறிவது நவ இந்தியாவை உருவாக்குவதற்கு ஏதுவாக இருக்கலாம்.

நடைமுறைக்கான கல்வியைப் பரப்பவும், சுகாதாரத்தையும் உற்பத்தி முறைகளையும் மேம்படச்செய்யவும், மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தவும் 'பிரெயின்' அவர்கள் கூர்காவ் என்னுமிடத்தில் ஒரு புதிய திட்டத்தைக் கையாண்டார். இத் திட்டம் கிராம வாழ்க்கையில் மறு மலர்ச்சி உண்டாக்குவதாகஇருந்தது. சடங்குகளில்அவசியமற்றசெலவுகள் அதிகமாக வழக்காடுதல், சேமிப்புகளைப் புதைத்து வைத்தல், பயனில்லாத நகைகளில் முதலீடு செய்தல் போன்ற தீமைவிளைக்கும் சமூகப் பழக்க வழக்கங்களும், கட்டுப்பாடுகளும் தாமாகவே கைவிடப்பெற்றன. இவற்றைத் தொடர்ந்து சில மேம்பாட்டுச் செயல்கள்(சிறு நில உடைமைகளை ஒன்று திரட்டல் (Consolidation of holdings) காடுகளை வளர்த்தல், மேய்ச்சல் நிலத்தையும், கால்நடை வளர்ப்பையும் அபிவிருத்தி செய்தல் போன்றவை) இயற்கையாகவே நடைபெற்றன. சிறந்த பிரசார முறை இல்லை என்ற குறையை இத் திட்டம் தீர்த்துவைத்தது. அரசாங்கத்தின் பல துறைகளிலும் கண்டுபிடிக்கப்பெற்ற பல நூதன முறைகளைத் தனிப் பயிற்சி பெற்ற பிரசாரகர்கள்மூலம் மக்களிடம் பரவச் செய்வது இத் திட்டத்திலுள்ள ஒரு சிறப்பியல்

[1] 'பிரெயின்' அவர்கள் (Mr. Brayne) 'கூர்காவை' விட்டுச் சென்ற பிறகு அங்கிருந்த நற்பணிகள் கைவிடப்பெற்றன.

பாகும்'.[1] ஓர் ஐந்தாண்டுக் காலத்திற்கு இடைவிடாத பிரசாரம் செய்தால் 'நம்மையெல்லாம் இதுவரை திகைக்க வைத்த சிக்கனமற்றதும், சுகாதாரமற்றதுமான மூடப் பழக்க வழக்கங்களுக்கு முடிவுகாலம் ஏற்படும்'[2] என்று 'பிரெயின்' அவர்கள் வலியுறுத்துகிறார். இதைத் தழுவி எதிர்காலத்தில் சாரணர் இயக்கத்தையும், கிராமங்களில் ஒலிபரப்பு வசதிகளையும் பரவலாக்கவேண்டுமென்றும் அவர் குறிப்பிடுகிறார்.

இத் திட்டத்தை பிரிட்டிஷ் இந்தியா முழுவதுக்கும் பரப்ப வேண்டுமானால், கிராம அபிவிருத்திப் பிரிவு ஒன்றைத் தனியாக நிறுவவேண்டும். அதற்கான சிப்பந்திகளையும், பயற்சிக் கூடங் களையும், பணவசதியையும் அரசாங்கம் செய்து தரவேண்டும். இவைபோன்ற பணிகள், சில மாகாணங்களில் முன்னரே நடை பெற்று வருவதால், இவற்றை மேற்கொள்ளுவதில் அதிக இடை யூறும் இல்லை.[3]

'கூர்காவ்' திட்டத்தின் மூன்று அங்கங்களைப்பற்றி முறை யீடுகள் இருக்கின்றன என்று 'பிரெயின்' அவர்கள் குறிப்பிடு கிறார்.[4] அவை (1) பணியாளர்களைத் தொடர்ந்து பெறு வதில் உள்ள இடையூறு, (2) நிதி வசதி, (3) மக்கள் தொகைப் பிரச்சினை ஆகும். பணியாளர்களுக்காக ஒரு தனிப் பிரிவை ஏற்படுத்தினால், பணியாளர்களைத் தொடர்ந்துபெறலாம். இருந்தாலும், இடைவிடாத உழைப்பும் உற்சாகமும் உள்ள அரசாங்க அலுவலர்களையும், தனிப்பட்டவர்களையும் தேடிப்பெற வேண்டிய அவசியம் ஏற்படுகிறது. கிராமவாசிகள் பயனிறை வுடைய இத்திட்டத்தை நல்ல முறையில் புரிந்துகொண்ட பிறகு, 'இந்தியக் கிராமநல வசதிச்சங்கம்'[5] போன்ற இயக்கங்களிலிருந்து ஓரளவுக்கு நிதி உதவி கிடைத்தால், எஞ்சிய செலவுக்குக் கிராம வாசிகளே முன்வந்து, விரும்பி நிதி உதவி அளிப்பார்கள் என்று பிரெயின் அவர்கள் கருதுகிறார். ஆனால், மற்றவர்கள் இதில் ஐயப்பாடு கொண்டுள்ளார்கள். தேவையான நிதியை, இந்தியச் செல்வந்தர்கள் கொடுத்து உதவலாம் என்று இவர்கள் கருது கிறார்கள்.[6] 'வாழ்க்கைத்தரம் உயர்ந்த இடங்களில், பிறப்புவீதம்

[1] Asiatic Review, January 1929, p. 125.

[2] Asiatic Review, January 1929, p. 122.

[3] எடுத்துக்காட்டாக, பஞ்சாபில் உள்ள 'கிராம சமுதாயக் கழகமும்', 'கிராம சமுதாய மன்றங்களும்' இதற்கு அடிப்படையாக அமையும்.

[4] Asiatic Review, January 1929, p. 124.

[5] 7ஆம் அத்தியாயத்தைப் பார்க்கவும்.

[6] Asiatic Review, January 1929, pp. 135, 137.

இதுவரை ஒருபோதும் அதிகமாகவில்லை' என்று பிரெயின் அவர்கள் கருதுகிறார்.[1] ஆனால், இது மக்கள் தொகைப் பிரச்சினையைத் தீர்த்து வைக்காது. ஏனென்றால், இத் திட்டத்தினால் 'இறப்பு வீதம்' நிச்சயம் குறையும். ஆதலால் 'பிறப்பு வீதம்' உயராவிட்டாலும், 'மக்கள் தொகை' பெருக்கமடையும். இதனால் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவது கடினமான செயலாகும்.

சில தொகுதிகளில் உள்ள யூனியன் கழகங்களின் பணிகளை 'ரோனல்டுஷே பிரபு'[2] (Lord Ronaldshay) தெளிவாக விவரிக்கிறார். இத்தகைய உள்ளாட்சி மன்றங்களுக்கு வரி விதிக்கும் உரிமை கொடுக்கப்பெற்றதால், உற்பத்தியாக்கும் செயல்கள் கிராமங்களில் மேலும் மேலும் மேற்கொள்ளப்படுகின்றன என்று அவர் குறிப்பிடுகிறார்.[3] சமயச் சார்பில்லாத செயல்களுக்குத் தனிப்பட்டவர்களின் நன்கொடைகள் ஏராளம் வந்ததிலிருந்து, ஊர்ப்பற்றும், பொதுநல உணர்ச்சியும் பெருகியது என்பது தெளிவாகிறது. கிராமக் கூட்டம் ஒன்றில், ஒரு பெரிய குளத்தை அல்லது நீர்த்தேக்கத்தைக் கட்டுவதற்குத் தேவையான நிதிவசதியைப் பற்றிச் சர்ச்சை நடந்தபோது, வயது முதிர்ந்த கிழவரொருவர் தன் ஆயுள் சேமிப்பு முழுவதையும் நன்கொடையாகக் கொடுக்க முன்வந்த நிகழ்ச்சியை, ரோனல்டுஷே அவர்கள் குறிப்பிடுகிறார்.

இல்லாவிடில், மேனாடுகளின் முறைகளையும், அமைப்புகளையும் கருத்துகளையும் ஜப்பானில் நடந்ததுபோல், முழு மனதோடு இந்தியாவிலும் மேற்கொள்வது ஒன்றுதான் மாற்று வழியாகும். ஆனால், இந்திய நாகரிகத்தின் சிறப்பியல்புகளில் பற்றுக்கொண்டவர்களுக்கு இவ் வழி கவர்ச்சியாக இருக்காது. மேனாடுகளில் அவரவர்களுடைய தொழிலுக்கு ஏற்பச் சமூகம் அமையவேண்டும் என்ற கருத்துத் தோன்றும் இந் நேரத்தில், இந்தியாவின் சமுதாய அமைப்பு கவனத்தைக் கவர்வதாக இருக்கிறது. கீழை நாடுகளில் அவரவர்களுடைய தொழிலுக்கு ஏற்றாற் போலச் சமுதாயம் அமைந்துள்ளது. மேனாடுகளில் இவ்வாறில்லாமல் அதிக நெகிழ்ச்சியுடையதும், அதிகாரக் குவிப்பும், ஒற்றைத் தன்மையுடையதுமான சமுதாயம் அமைந்துள்ளது. இவை இரண்டுக்கும் இடைநிலையிலான கொள்கையே சிறந்த குறிக்கோளாகத் தற்

[1] Ibid., p. 124.

ndia : A Bird's Eye View, அத்தியாயம் 12.

உதாரணமாக, இம் மன்றங்கள் கிராமங்களில் கிணறுகளைத் தோண்டின. இதற்குக் கிராமவாசிகள் தாமாக முன்வந்து உழைப்பைக் கொடுத்ததால் நடுவிலுள்ளவர்களின் செலவு தவிர்க்கப்பெற்றது.

சமயம் கருதப்பெறுகிறது. இந்தியாவில், அவரவர்கள் தொழிலுக்கு ஏற்ப அமைந்துள்ள சமுதாய அமைப்பைக் கைவிடாமல் அதிகாரப் பரவலான நிருவாக முறையை மேலும் வளர்க்க வேண்டும். ஆனால், அதே சமயத்தில் ஒவ்வொரு வகுப்பினருக்கும் இடையே உள்ள சமூகத் தடைகளையும் நீக்கவேண்டும். இது ஒரு பெரிய பிரச்சினையே ஆகும். ஆனால், மேனாடுகளில் உள்ள பிரச்சினை, அவரவர்களின் தொழிலுக்கு ஏற்ப, சமுதாய அமைப்பை வளர்க்கவேண்டும்; ஆனால், இவ்வித அமைப்பினால் ஒவ்வொரு வகுப்பினரும் தனித்தனியான வேண்டுகோள் செய்வதால் ஏற்படக்கூடிய தேக்கத்தையும் தவிர்க்கவேண்டும் என்பதே.[1] கடந்த இரு நூற்றாண்டுகாலத்திலும், இந்தியாவின் வெளி உலகத் தொடர்பு ஒரு நாட்டோடு மட்டும்தான் இருந்தது. அந்த நாட்டின் சமூக அமைப்பு இந்தியாவிலிருந்து தற்கு முற்றிலும் முரண்பாடானதாக இருந்தது. மேனாட்டு இயக்கமும், கீழைநாட்டு இயக்கமும் செயற்கைமுறையில் ஒன்றுக இணைந்ததால் ஏற்பட்ட தீமையான கலாசார விளைவுகளுக்கு இவ்வுண்மைமூலம் விளக்கம் காணலாம். ஆகவே, இந்தியப் பிரச்சினைகள் இனி ஒரு புதிய கோணத்திலிருந்து கவனிக்கப் பெறும் என்று அறிவிப்பது, பிரச்சினையைத் தீர்ப்பதற்கு வழி கோலுவதாக இருக்கும்.

§ 4. இந்தியாவின் பொருளாதார இணைப்பு; முடிவுரைகள்

நாம் இப்பொழுது ஆய்வின் முடிவுக் கட்டத்தில் இருக்கிறோம்.[2] இந்தியா 'பொருளாதார இணைப்பை அடையும் நிலையில்' இருக்கிறது என்று கூறுவது பொருத்தமாகுமா ?

இந்தியாவின் பெரிய அளவும், அரசியல் (நிலப்) பிரிவுகளும், மாறுபட்ட சமூக அமைப்புகளும் இந்தியா இணைப்பை அடைவதற்குத் தடங்கல்களாக உள்ளன. ஆனால், பூகோள ரீதியாக இந்தியா ஒரு தனிநாடாக இருக்கிறது.[3] மேலும், இதற்கு முன்னரே ஓரளவுக்கு இணைப்பு ஏற்பட்டிருப்பதுடன், இணைப்பைப் பெறுவதற்கான பலமான சக்திகளும் வேலை செய்து கொண்டிருக்கின்றன.

[1] *V.* M. Ginsberg, The Psychology of Society, p. 150

[2] 18ஆம் அத்தியாயத்திற்கு இது பொருந்தாது,

[3] பர்மா நீங்கலாக. பொருளாதாரத் துறையிலும் சமுதாய அமைப்பிலும் பர்மா தனித்தன்மை வாய்ந்ததாக இருப்பதால் புது அரசியலமைப்பின்படி பர்மா பிரிவினையாயிற்று.

நாட்டில் போக்குவரத்துச்சாதனங்கள் வளர்ச்சியடைந்ததும் இணைப்பான நிருவாக முறையும் ஏற்பட்டது என்று முன்னரே கண்டோம்.[1] பிரிட்டிஷ் இந்தியா முழுவதிலும் (சுதேச அரசுகளிலும்கூட) செலாவணி முறை, சுங்கவரி முறை, இரயில்வேக்கள் போன்ற பொருளாதாரச் செயல்கள் ஒரு மத்தியக் கட்டுப் பாட்டுக்குள்தான் இருக்கின்றன. பிரிட்டிஷ் இந்தியாவிலும், பிரிட்டிஷ் இந்தியாவிற்கும் சுதேச அரசுகளுக்கும் இடையிலும், வாணிபத்திற்கும் போக்குவரத்துக்கும் தடைகள் அதிகமாக இல்லை. ஆயினும், வாணிபத்தையும் தொழிலையும் ஒழுங்குபடுத்து வதில் இன்னும் சில இடையூறுகள் உள்ளன.[2] 'இந்தியக் கண்டத் தின் பாதுகாப்பிற்கும் நலத்திற்கும் மிகவும் அவசியமான போக்குவரத்து நாடிகள், சுதேச அரசுகளினிடையே ஊடுருவிச் செல்லும் வகையில்' இந்தியச் சுதேச அரசுகள் அமைந்துள்ளன என்று இரயில்வேக்களைப்பற்றிக்கூறும் சந்தர்ப்பத்தில் பொருத்த மாகக் குறிப்பிடப்பட்டிருக்கிறது.[3] சுதேச அரசுகளின் இரயில் வேக்களில் பெரும்பான்மையும், சுதேச அரசுகளுக்குச் சொந்த மானவும், பிரிட்டிஷ் இந்திய இரயில்வேக் கம்பெனியாளர் களாலேயே நிருவகிக்கப்பெற்று வருகின்றது.

தற்சமயம், பல, சுதேச அரசுகளும், சுங்கத்தீர்வைகளை விதிக்கும் உரிமையைப் பெற்றிருக்கின்றன. ஆனால், இவை களினுடைய வெளிநாட்டு வாணிபம் பிரிட்டிஷ் இந்தியத் துறை முகங்கள்மூலமாகவே வெளியேற வேண்டியிருப்பதால், மேற் காணும் உரிமைகளால் யாதொரு பயனும் இல்லை. பண்டங்களை ஏற்றிச் செல்லும்போது விதிக்கப்பெறும் வரிகளும், உள்நாட்டுத் தீர்வைகளும், உள்நாட்டுத் தங்கத் தடைகளும் பெரும்பான்மை யான சுதேச அரசுகளாலும் நீக்கப்பெற்றன.[4]

பிரிட்டிஷ் இந்தியத் துறைமுகங்களிலும், சுதேச அரசுகளில் உள்ள துறைமுகங்களிலும் நடைமுறையிலிருக்கும் தீர்வை களிலும், விதிகளிலும் அதிக மாறுபாடுகள் இருக்கின்றன.[5]

[1] 2 ஆம் அத்தியாயத்தைப் பார்க்கவும்.

[2] எடுத்துக்காட்டாகத் தொழில்களை ஒழுங்குபடுத்தும் சட்டங்கள், ஒவ்வொரு சுதேச அரசிலும் மாறுபட்டனவாக இருக்கின்றன. ஆனால், எடைகளும் அளவைகளும் சுதேச அரசுகள்மட்டுமல்லாமல் பிரிட்டிஷ் இந்தியாவின் பல தொகுதிகளிலும் ஒரே முறையில்தான் உபயோகத்திலிருக்கின்றன.

[3] Asiatic Review, October 1928, 'The Indian States and the Crown', by H.H. the Maharaja Dhiraj of Patiala.

[4] Asiatic Review, October 1928, 'Fiscal Inter-Relation of Indian States and the Empire, by Col. K. N. Haksar.

[5] சுதேச அரசுகளில் சில, பிரிட்டிஷ் இந்தியச் சுங்க வரிகளைக் கையாளுவதில்லை. *V.* Indian Trade Journal, July 14 and July 21, 1927.

இதனால் சில இடையூறுகள் ஏற்படுகின்றன. பிரிட்டிஷ் இந்தியாவிலுள்ள இறக்குமதித் தீர்வைகள் உயர்த்தப் பெற்றதால், பண்டங்களின் விலைகள் சுதேச அரசுகளிலும் அதிகரித்தன. ஆனால் அதிகப்படியான தீர்வைகள்மூலம் கிடைக்கும் வருவாயில் சுதேச அரசுகளுக்குப் பங்கொன்றும் கொடுக்கப்படவில்லை. இது நியாயமற்றதாகும் என்று கருதப்பெறுகிறது. இந்தியாவுடன் சேரவிரும்பும் சுதேச அரசுகளை[1] உள்ளடக்கி, முழு இந்தியக் கூட்டரசாங்கத்தை (All-India Federation) நிருமாணிப்பதற்கு, 1935ஆம் ஆண்டில் நிறைவேறிய இந்திய அரசாங்கச் சட்டம் (Government of India Act, 1935) இந்த நிலைமையை மாற்றியமைப்பதாக உறுதியளித்தது. கூட்டரசாங்கம் சம்பந்தமான அரசியல் பிரச்சினைகளும் அரசியல் அமைப்புப் பிரச்சினைகளும் நாம் எடுத்துக்கொண்டுள்ள ஆய்வுக்கு அப்பாற்பட்டவையாகும். இந்தக் கூட்டரசாங்கம் தொடங்கினால் (1935ஆம் ஆண்டுக்குப் பிறகு ஏற்பட்ட எதிர்பாராத அரசியல் குழப்பத்தினால், கூட்டரசாங்கம் தொடங்குமா என்பது உறுதியில்லாமல் இருக்கிறது), தற்போது நிலவும் அரசியல் (நிலப்) பிரிவுகள் குறைக்கப்படுவதுடன், நெருங்கிய ஒத்துழைப்புக்கும் ஏதுவாக இருக்கும். புதிய அரசியலமைப்பினால் ஏற்பட்ட பொருளாதார மாறுதல்களையும், நிதிமுறை மாறுதல்களையும் 18 ஆம் அத்தியாயத்தில் விவாதிப்போம். ஆனால், சுதேச அரசுகளுக்கும், பிரிட்டிஷ் இந்தியாவுக்கும் இடையே இருந்த பொருளாதாரத்தொடர்பும் நிதித்தொடர்பும் கூட்டரசாங்கத்தால் எவ்வாறு பாதிக்கப்பெறும் என்று இங்குக் குறிப்பிடுவது பொருத்தமாக இருக்கும். கடந்த காலத்தில் இத் தொடர்புகள், சுதேச அரசுகளுக்கும் பிரிட்டிஷ் அரசாங்கத்துக்கும் இடையே வெவ்வேறு காலங்களில், வெவ்வேறு அடிப்படையில் நடந்த உடன்படிக்கைகளையும் ஒப்பந்தங்களையுமே சார்ந்திருந்தன. இந்த ஒப்பந்தங்களின்படி, பொதுவாகச் சில சுதேச அரசுகள் நேரிடையான அல்லது மறைமுகமான செல்வுகள் செய்யவேண்டியிருந்தன. சில அரசுகளுக்குத் தனிச் சலுகைகள் கிடைத்தன. இதனால் சில அரசுகள் இலாபம் பெற்றன. சில அரசுகள் கடனாளிகளாக இருந்தன.[2] இச் சிக்கலைத்

[1] கூட்டரசாங்கம் நிருமாணிக்கப்படுவதற்கு முன், சுதேச அரசுகளின் மன்னர்கள் கூட்டரசாங்கத்துடன் சேரத் தங்களுடைய விருப்பத்தை அறிவிக்க வேண்டும். இவ்விதம் சேர விரும்பினால், இம் மன்னர்களுக்குத் தங்களுடைய அரசின் மொத்த மக்கள் தொகையில் பாதிக்குக் குறையாத மக்களின் ஆதரவு இருக்க வேண்டும். அதனுடன் கூட்டரசாங்கத்தின் மேல்சபைக்காக (Upper Chamber) அவ்வரசுகளில் ஒதுக்கப்பட்டதில், பாதிக்குக் குறையாத இடங்களுக்கும் (Seats) அவர்கள் (மன்னர்கள்) உரியவர்களாக இருக்கவேண்டும்.

[2] 1929ஆம் ஆண்டிற்குப் பிறகு இதைப்பற்றித் தொடர்ச்சியாகப் பல விசாரணைகள் நடந்தன. இந்நூலின் பிற்சேர்க்கையைப் பார்க்கவும்.

தனித்தனியாகக் கவனித்துத் தேவையான நிதிச் சரிக் கட்டலும் (Financial adjustment) செய்யப்பெற்றன. ஆனல், புதிய அரசியல் அமைப்பின் பொதுவான கொள்கை என்ன வென்றால், கூட்டரசாங்கத்தில் சேர விரும்பும் அரசுகளின் ஊக்கத்தைக் குறைக்காமல் இருப்பதற்காகக் கடனுளிகளாக இருக்கும் அரசுகள் எதிர்காலத்தில் செல்லுகள் செய்யவேண்டா என்பதும், இலாபகரமான அரசுகள், இதுவரை பெற்றுவந்த சலுகைகளைக் குறைக்காமலும் இருக்கத் தகுந்த ஏற்பாடு செய்ய வேண்டுமென்பதுமே. இந்த ஏற்பாட்டினல் கூட்டரசாங்கத்திற்கு ஆண்டாண்டுக்கு ஒரு கோடி ரூபாய் செலவாகும். பிரிட்டிஷ் இந்தியாவிலிருந்து வரும் பண்டங்களின்மேல் சுங்கத் தீர்வைகளை விதிக்கும் உரிமையை வைத்துக்கொள்ளும் அரசுகளே அவ்வாறு செய்யாதிருக்க வேண்டிக்கொள்ளப்பெறும். ஆனல், அவைகள் கட்டாயத்திற்கு உள்ளாக்கப்பட மாட்டா. அவைகளுக்குக் கொள்கையை உருவாக்குவதில் பங்கிருப்பதால் அவைகளின் நிலைமையும் மற்ற மாகாணங்களின் நிலைமையைப் போன்றே சாதகமாக இருக்கும். சுதேச மன்னர்களுக்கு பிரிட்டிஷ் மன்ன ருடன் நேரிடையான தொடர்புகொள்ளும் உரிமை இருந்தது. புது அரசியல் அமைப்பில் இது ஒரு சிக்கலை உண்டாக்கியது. ஆனல், இச் சிக்கல், இராசப் பிரதிநிதி (Viceroy) பதவியையும் கவர்னர் ஜெனரல் பதவியையும் தனித்தனியாகப் பிரிப்பதன் மூலம் நிவர்த்தி செய்யப்பெற்றது. ஆகவே சுதேச மன்னர்களின் சலுகைகளையும் உரிமைகளையும் பாதிக்கும் பிரச்சினைகள் பிரிட்டிஷ் அரசின் பிரதிநிதி என்ற முறையில் இராசப் பிரதி நிதியின் கவனத்திற்கு வருமே அன்றி, கூட்டரசாங்கத்தின் தலைவர் என்ற முறையில் கவர்னர் ஜெனரல்முன் வரா.

பொருளாதார இணைப்பைப்பற்றி விவாதிக்கும்பொழுது, கடந்தகாலத்தில் அரசியல் இணைப்புஇல்லாவிட்டாலும் இந்தியச் சமுதாயத்தில் வெவ்வேறு படிகளில் உள்ளவர்களிடையே, மதம், கல்வி, சாதிமுறை இவைகளில் பிணைப்பால் ஒரு கலாச்சார இணைப்பு இருந்தது என்பதை நினைவில் கொள்ளவேண்டும். ஆங்கிலேய ஆட்சி, மேனாட்டுக் கல்விமுறைமூலமாகவும், ஆங்கில மொழியின் மூலமாகவும், அதிகாரக் குவிப்பான நிருவாக முறை யின் (Centralised administration) மூலமாகவும், பொருளாதாரப் பணிகளின் மூலமாகவும் இந்த இணைப்பை மேலும் வளர்ப்ப தாகவே இருக்கிறது.

இந்தியா, பலதரப்பட்ட இயற்கை வளங்களையும் சமூக அமைப்புகளையும் கொண்டிருக்கிறது. இதன் காரணமாகவே, அமெரிக்க ஐக்கிய நாடுகளுக்கு ஒப்பான நிலையில் இந்தியாவைத்

தன்னிறைவுகொண்ட ஒரு தனிப்பொருளாதாரப் பகுதியாக இணைக்கவேண்டியது விரும்பத்தக்கதாகவும், நியாயமானதாகவும் (இதுமட்டும் கைகூடுமாஞல்) இருக்கிறது. ஒரு சிறு பகுதிக்காக மட்டும் உற்பத்தி செய்வதும் (Localised Production) விற்பனை செய்வதும், இயற்கைவளப் பொருள்களை விஞ்ஞான முறையில் பயன்படுத்துவதற்கு ஏற்றதாக இல்லை. இந்தியப் பொருளாதார வாழ்க்கையைச் சீரிய முறையில் திருத்தி அமைக்காவிட்டால், அஃது ஒரு பொருளாதாரப் பாவ காரியமாகும். ஆகவே, இணைப்பைப் பெறும் நிலையில் இந்தியா இருக்கிறது; இத்தகைய இணைப்பு மிகவும் விரும்பத்தக்கது; அரசியல் குழப்பம் ஏற்படாவிட்டால் இணைப்புக் கட்டாயம் கைகூடும்; புதிய அரசியல் அமைப்பு பிரிட்டிஷ் இந்தியாவுக்கும், சுதேச அரசுகளுக்கும் இடையே நெருங்கிய ஒத்துழைப்பை ஏற்படுத்தவேண்டும்; அதன் மூலம் பொருளாதார இணைப்புக்கு ஒருபடி அருகில் கொண்டுவர வேண்டும் என்பதே நம்முடைய முடிவுகள்.

குறிப்பிட்ட ஒரு வளர்ச்சித் திட்டத்தையோ அல்லது குறிப்பிட்ட ஒரு கொள்கையையோ கையாளுவதைப் பொறுத்து இந்தியாவின் பொருளாதார எதிர்காலம் அமையாது. மக்கள் தொகைப் பெருக்கத்தை மட்டுப்படுத்துவதற்கும், கட்டுமானமாக உள்ள சாதி முறைகளை உடைப்பதற்கும், சக்தியையும் தொழில் துணிவையும் ஊக்குவிப்பதற்கும், கல்வியை வளர்ப்பதற்கும், சாதிமதச் சடங்குகளுக்குப் பதிலாக நம்பிக்கை ஊட்டுவதற்கும் ஏதுவான சமூகச் சீர்திருத்தங்களை மேற்கொள்வதைப் பொறுத்துத்தான் எதிர்காலம் அமையும் என்று முடிவாகக் குறிப்பிட வேண்டும். பரம்பரை, சாதி, மூடப் பழக்கம் இவற்றின் பிணைப்புகளைத் தளர்த்தி, கடந்த காலக் கசப்பான நிகழ்ச்சிகளை நினைவிலிருந்து நீக்கி, எதிர்காலம் நலமாயிருக்கும் என்ற உணர்ச்சியால் உந்தப்பட்டு ஆண்கள், பெண்கள் அனைவரும் தளராத உழைப்பையும், இடைவிடாத முயற்சியையும் அளிப்பார்கள் என்று இந்தியா எதிர்நோக்கி நிற்கிறது. இந்த முறையில்தான், இந்தியா—ஆங்கிலேயப் பேரரசு நாடுகளில் மட்டும் இல்லாமல் உலக நாடுகளிடையேயும்—ஒரு சுதந்திர நாடாகவும், செல்வமுள்ள நாடாகவும், காமன்வெல்த்தில் அங்கத்தினராக அதற்கு உரித்தான தகுதியையும் பெறமுடியும்.

18. பொருளாதார வளர்ச்சி (1929-1939)

§ 1. முகவுரை

§ 2. மாபெரு மந்தமும் (Great Depression) அதன் விளைவும் : மந்தத்தின் தாக்குதலும் அதன் தனித்தன்மைகளும்

§ 3. வெளிநாட்டு வாணிபம்

§ 4. வாணிபக் கைக்கோள்

§ 5. தொழில் விவசாயப் பிரச்சினைகளும் அரசாங்கக் கொள்கையும்

§ 6. உள்நாட்டு வாணிபமும் உள்நாட்டுப் போக்குவரத்தும்

§ 7. பங்கு முறையும் செலாவணி முறையும்

§ 8. பொது நிதியியல் (Public Finance)

§ 9. மக்களின் வாழ்க்கைநிலை

§ 10. 1935ஆம் ஆண்டின் அரசியல் அமைப்புச் சீர்திருத்தங்களின் நிதி மற்றும் பொருளாதார இயல்புகள்

§ 11. மாகாண சுயாட்சி (Autonomy)

§ 12. முடிவுரைகள்.

அட்டவணைகள்:

(1) 1913–14-க்கும் 1938–39-க்கும் இடையில், பிரிட்டிஷ் இந்தியாவில் (சில சுதேச அரசுகள் உள்பட) விலைபொருள்களின் மதிப்பீடு.

(2) 1920-க்கும் 1939-க்கும் இடையில் கல்கத்தாவில் மொத்த விலைகளின் குறியீட்டு எண்கள் (Index Number).

(3) 1918–19-க்கும் 1938–39-க்கும் இடையில் பிரிட்டிஷ் இந்தியாவில் பதிவு செய்யப் பெற்றதும் இயங்கிவந்ததும் ஆன பங்கு முதலீட்டுக் கம்பெனிகளின் (Joint Stock Companies) எண்ணிக்கை.

(4) இந்தியாவில் முதலீடு செய்யப்பெற்ற வெளிநாட்டு மூலதனத்தின் (Foreign Capital) மதிப்பீடுகள்.

(5) 1927–28-க்கும் 1936–37-க்கும் இடையில் ஏற்றுமதி இறக்குமதிப் பண்டங்களின் விலை மட்டங்கள்.

(6) 1925, 1931, 1937ஆம் ஆண்டுகளில் முக்கியத் தொழில்களின் 'வெளிப்பாடு' (Output) பற்றிய குறியீட்டு எண்கள்.

(7) 1928-க்கும் 1939-க்கும் இடையில் தொழில் இலாபங்கள்.

(8) 1928–29-க்கும் 1938–39-க்கும் இடையில் உள்நாட்டு வாணிபம்; இரயில்வேப் போக்கு வரத்துகளும் இரயில்வேக்களின் ஊதியங்களும்.

(9) 1928–29-க்கும் 1938–39-க்கும் இடையில் அரசாங்க இரயில்வேக்களின் நிதி விளைவுகள்.

(10) மத்திய, மாகாண அரசாங்கங்களின் வருவாயும் செலவும்.

(11) 1937-க்கும் 1939-க்கும் இடையில் மாகாண அரசாங்கங்களின் செலவுகளில் சராசரி ஆண்டு உயர்வு.

(12) 1936–37-க்கும் 1939–40-க்கும் இடையில் மாகாண அரசாங்கங்களின் புதிய வருவாய்ப் மூலங்கள் (Revenue Sources).

(13) 1936–37-க்கும் 1939–40-க்கும் இடையில் சமுதாயத் தொண்டுக்கு ஆன செலவு.

படம் X. 1929–30-க்கும், 1938–39-க்கும் இடையில் பிரிட்டிஷ் இந்தியாவில் ஏற்றுமதி இறக்குமதி வாணிபத்தின் மதிப்பு.

படம் XI. 1913–14-க்கும் 1938–39-க்கும் இடையில், பிரிட்டிஷ் இந்தியாவில் ஏற்றுமதி இறக்குமதி அளவுகளின் குறியீட்டு எண்கள்.

§ 1. முகவுரை

முந்திய அத்தியாயங்களில், 1939ஆம் ஆண்டுவரை இருந்த இந்தியப் பொருளாதார வளர்ச்சியைப்பற்றி ஆராய்ந்தோம். ஆனல், 1929-க்கும் 1939-க்கும் இடையிலான பத்தாண்டுக்காலம் ஆழ்ந்து ஆராயவேண்டிய தனிப் பிரிவாக இருந்தது. இக் காலத்தில் இரண்டு மிக முக்கிய நிகழ்ச்சிகள் நடந்தன. ஒன்று, இக்காலத்தில் தோன்றிய பெரிய 'வாணிபச் சுழல்' (trade cycle) ஆகும். இந்த வாணிபச் சுழலினல் 1929–30-ல் ஒரு பெரிய நெருக்கடி ஏற்பட்டு, அதைத் தொடர்ந்து பல ஆண்டுகளுக்குக் கொடுமையான பொருளாதார மந்தமும் ஏற்பட்டது; அதற்குப் பிறகு, பொருளாதாரநிலை ஓரளவுக்கு மீட்சியுற்று, 1937ஆம் ஆண்டில் சிறு பொருளாதார 'வீக்கத்தில்' (boom) முடிந்தது. இந்த வீக்கத்தைத் தொடர்ந்து ஒரு 'பின்னிறக்கம்' (recession) இருக்கும்போல் தோன்றியது. ஆனல், பல நாடுகளும் இரண்டாவது உலகப் போருக்காகப் போர்க்கருவிகளையும் பொருளாதாரப் பண்டங்களையும் சேகரிக்கத் தொடங்கியதால் இந்தப் 'பின்னிறக்கம்' தவிர்க்கப் பெற்றது. இரண்டாவது முக்கிய நிகழ்ச்சி, இந்தியாவில் அரசியல், அரசியலமைப்பு, சமூக அமைப்பு இவைகளில் ஏற்பட்ட மாறுதல்கள். இம் மாறுதல்களால் முக்கியப் பொருளாதார விளைவுகளும் நிகழ்ந்தன. இவ்விரண்டு நிகழ்ச்சிகளும் பொருளாதாரப் புதிய சிக்கல்கள் எழவும் புதிய கொள்கைகள் உருவாகவும் காரணமாயிருந்தன. பிரிட்டிஷ் ஆட்சியின்கீழ், இந்தியாவில் பதினெட்டாம் நூற்றாண்டிலிருந்து, படிப்படியாக வளர்ந்து வந்த பொருளாதார வாழ்க்கையின் அமைப்பும் பொருளாதார முன்னேற்றமும் இதனல் தடைப்பட்டன.

இக் காலத்தில் நடந்த அரசியல் புரட்சிகளும் அரசியல் அமைப்பு மாற்றங்களும் பின்னர் நாட்டுப் பிரிவினைக்கும் நாடு சுதந்திரம் அடைவதற்கும் காரணமாயிருந்தன. வாணிபச் சுழலில் இந்தியாவில் நடந்த பொருளாதார விளைவுகளுக்கும், உலக வாணிபச் சுழலுக்கும், இந்திய அரசியல் புரட்சிகளுக்கும் நெருங்கிய தொடர்பு இருந்தது. ஆகவே, இந்தியாவின் விலைகள், வெளி நாட்டு வாணிபம், தொழில் வளர்ச்சி, பொது நிதியியல் போன்ற வைகளில் ஏற்பட்ட முக்கிய மாறுதல்களை ஒன்றுக இணைத்து ஆராய்வதற்காக ஒரு தனி அத்தியாயத்தை ஒதுக்குவது அவசியமும் பொருத்தமும் ஆகும்.[1]

1935ஆம் ஆண்டின் இந்திய அரசாங்கச் சட்டத்தின்படி, பர்மா பிரிவினையாயிற்று; இரு புதிய மாகாணங்கள் (ஒரிஸ்ஸாவும், சிந்துவும்) உருவாக்கப்பெற்றன; மாகாணச் சுயாட்சியும் கிடைத்தது. அச் சட்டம் இந்தியாவுக்கு ஒரு கூட்டரசாங்கத்தை உருவாக்கக் கருதியது. இந்திய சுதேச அரசுகள் இக் கூட்டரசாங்கத்துடன் இணைந்துகொள்ளும் என்று எதிர்பார்க்கப்பெற்றது. கூட்டரசாங்கம் சிறிதுகாலத்தில் 'தனியுரிமை ஆட்சி'யைப் பெற்று, தன்னுடைய அரசியல் ஈடுபாடுகளையும் தானே முடிவு செய்து கொள்ளும் என்பதே இந்த ஏற்பாட்டின் நோக்கம். மக்களின் பிரதிநிதித்துவ மன்றங்களின்மூலம் மக்களாட்சி முறை வளர்ந்து, முடிவில் ஒரு பொறுப்புள்ள சுயாட்சியும் கைகூடும் போல் இருந்தது. இதற்காகப் பொருளாதார அமைப்பிலும், நிதி அமைப்பிலும், நிதிக் கொள்கையிலும் அடிப்படையான மாறுதல்கள் செய்யவேண்டிய அவசியம் ஏற்பட்டது. பொது நிதியியலையும் கூட்டரசு நிதியியல் முறையில் (Federal basis) மாற்றி அமைக்கவேண்டியிருந்தது. பொருளாதாரம், அரசியல், மற்றும் அரசியல் அமைப்பு இத் துறைகளில் புரட்சிகரமான மாறுதல்களுக்கான அறிகுறிகள் இருந்தன.

ஏகாதிபத்திய ஆண்டையிடமிருந்து, இதுவரை குடியாள்களாக இருந்த மக்களுக்கு ஆட்சியுரிமையை (Sovereignty) அமைதியான முறையில் மாற்றிக் கொடுப்பதற்குத் தேவையான ஏற்பாடுகள் 1935-லும் அதற்குப் பின்னரும் தொடங்கின. இதற்கு முன்னேற்பாடாக 'ரிசர்வு பாங்கு' 1935ஆம் ஆண்டில் நிறுவப்பெற்றது. இதற்குப் பிறகு, ஒரிஸ்ஸாவும் சிந்துவும் (Sind) தனி மாகாணங்களாக உருவாக்கப்பெற்றன இதைத் தொடர்ந்து 1937-ல் பர்மா பிரிவினையாகி, மாகாண சுயாட்சியும் நிறுவப்பெற்றது.

[1] இந்நூலின் ஆராய்ச்சி 1939ஆம் ஆண்டுடன் முடிகிறது.

1935ஆம் ஆண்டில் சட்டம் முழுவதும் நடைமுறைக்கு வருவதற்குள், அரசியல் குழப்பமும் சாதிச் சச்சரவுகளும் அடர்ந்த மேகங்களாக அடிவானத்தில் தோன்றின. முதல் வட்டமேசை மாநாட்டில் பேச்சு நடந்தபொழுது, இந்திய சுதேச அரசுகள் கூட்டரசாங்கக் கொள்கையையே சந்தேகிக்கத் தொடங்கின. பல காரணங்களால் ஹிந்து முஸ்லிம் கலவரம் மறுபடியும் தோன்றி, மேலும் அதிகமான வெறுப்புணர்ச்சியையும் உண்டாக்கியது. பிரிட்டிஷ் இந்தியாவில்மட்டுமாவது அரசியலமைப்புக்கு இருந்த ஒத்துழைப்பின் நம்பிக்கையும் இதனால் மறையத் தொடங்கியது. இதற்கிடையில் ஏற்பட்ட மாபெரு மந்தம் 1930வாக்கில் இந்தியாவில் சில தழும்புகளை ஏற்படுத்தியது.வாணிபச் சுழலின் மேலேற்றத்தில் (Upswing) இந்தியாவின் பங்கு மிகக் குறைவாக இருந்தது. இதனால், இந்தியாவின் புதிய அரசியல் சூழ்நிலையில்,பொருளாதாரச் சிக்கல்களைத் தீர்ப்பது மேலும் கடினமாக இருந்தது. மேலும், இதுவரை வாளாவிருந்த குடியானவ வகுப்பினருக்கும், பெண்களுக்கும், விவசாயத் தொழிலாளர்களுக்கும், ஆலைத்தொழிலாளர்களுக்கும், ஏனைய வகுப்பினருக்கும் இவரெல்லோரையும்விட வகுப்புவாதக் கட்சிகளின் தலைவர்களுக்கும் எண்ணக் கிளர்ச்சியும் புரட்சி மனப்பான்மையும் எழத் தொடங்கின. இந் நாள்வரை இந்தியாவில்சாதாரணமாக ஒத்துக் கொள்ளப்பெற்ற சமூகப் பழக்க வழக்கங்களுக்கும், பொருளாதார வாழ்க்கைக்கும் எதிராகக் கிளர்ச்சிகள் தோன்றின. இந்தியாவில் நிலவிய தலைவிதிக் கோட்பாட்டின் அடிப்படையே ஆட்டங் கண்டது. தாழ்ந்துகொண்டே போகும் மக்களின் ஏழ்மை நிலையும், வருமானத்திலும், பொருளாதாரச் சக்தியிலும், உரிமையிலும் இருந்த ஏற்றத் தாழ்வுகளும், குறிப்பிட்ட வகுப்பினர் சமுதாயத்தைச் சுரண்டுவதும் கொடுமைப்படுத்துவதும் தவிர்க்க முடியாதவை என்று இனியும் மக்கள் ஒப்புக்கொள்ளமாட்டார்கள். மேலேயிருந்து திட்டத்துக்கான அமைப்புகளைத் தருவதும் [1938-ல் 'காங்கிரஸ் திட்டக்குழு' (Congress Planning Committee) நியமிக்கப்பெற்றது குறைநல்ல எடுத்துக்காட்டாகும்], கீழே இருந்து புரட்சி செய்வதும் (ஒத்துழையாமை இயக்கம், சாத்வீக மறியல், வரி செலுத்த மறுத்தல், ஆங்கிலேயப் பண்டங்களைப் புறக்கணித்தல் போன்றவை) அக் காலத்தில் சாதாரண இயல்புகளாக இருந்தன.

முன்னரே புரட்சிகரமாயிருந்த நிலைமையை, 1939ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் மூண்ட போர் மேலும் கொடுமையாக்கியது. நாட்டு நடவடிக்கைகளின் போக்கு மாற்றமடைந்தது அல்லது தலைகீழாக மாறியது. புதிய சிக்கல்கள்

எழுந்தன. ஒரு சகாப்தம் முடிந்து மற்றொரு சகாப்தம் தொடங்கியது. 1929-க்கும் 1939-க்கும் இடையிலான பத்தாண்டுக்காலத்தில் நடந்த மூச்சியப் பொருளாதார நிகழ்ச்சிகளைத் தொடர்ச்சியாகப் படம் பிடித்துக் காட்ட முயலுவதே இந்த அத்தியாயத்தின் பிற்பகுதியின் நோக்கம்.

§ 2. மாபெரு மந்தமும் அதன் விளைவும் : மந்தத்தின் தாக்குதலும் அதன் தனித்தன்மைகளும்

1930-க்கும் 1940-க்கும் இடையில் ஏற்பட்ட மாபெரு மந்தத்தின் தனித் தன்மையான இயல்புகளைப் புரிந்துகொள்வதற்கு, போர்களின் இடைக்காலத்தில் (Inter-war period) ஏற்பட்ட வாணிப ஏற்ற இறக்கங்களின் (trade fluctuations) மேல் ஒரு சிறு கண்ணோட்டம் செய்வது அவசியமாகும்.

போர் முடிந்த உடன் (1918–20) தோன்றிய 'வீக்கம்', ஒரு 'பண்டங்களின் வீக்கமே' (Commodity boom) ஆகும். அவ் வாண்டுகளில் பண்டங்களில் மிக அதிகமான விலையேற்றம் இருந்தது. இவ் விலையேற்றத்திற்குப் பல காரணங்கள் இருந்தன. போர்க்காலத்தில் உலகின் உற்பத்திச் சக்தி அதிகரித்திருந்தாலும், ஒவ்வொரு நாட்டிலும் பண்டங்களுக்குப் பற்றுக்குறை இருந்தது, ஒரு முக்கிய காரணமாகும். போர்க்காலத்தில் மக்கள் தங்களுடைய தேவைகளைத் தள்ளிப்போடுவார்கள். ஆகவே, போர்முடிந்ததும் பண்டங்களுக்கு அதிகப்படியான தேவை ஏற்படும். போர்க்காலத்தில் 'இருப்புச் சரக்குகள்' (stocks) தீர்ந்துவிடுமாதலால், போர் முடிந்ததும் அதை நிரப்ப வேண்டிய அவசியம் ஏற்படுகிறது. இதனாலும் தேவை அதிகமாகிறது. 1920–21-ல் ஏற்பட்ட வாணிப நெருக்கடியிலிருந்து மீட்சியுறப் பல ஆண்டுகள் ஆயின. 1925ஆம் ஆண்டில்தான் உலக வாணிபத்தின் அளவு போருக்குமுன் இருந்த நிலையைவிட அதிகமாக இருந்தது. 1925, 1929ஆம் ஆண்டுகளின் இடைக் காலம், வெளிப்பாடும் (Output) வாணிபமும் விரிவடையும் காலமாக இருந்தது.

இக் காலப்தில் உலகம் முழுவது செழிப்பு இருந்தது; ஆனால், கடந்தகாலத்தில் தோன்றிய 'வீக்கங்களுக்கு' மாறுக. இக் காலத்தில் பண்டங்களில் விலையேற்ற மில்லை. உலகின் பல நாடுகளிலும் செழிப்பு சமனாக ஏற்பட வில்லை. இக் காலம் முழுவதிலும் உணவுப் பொருள்களின்

விலைகள் இறங்கின. இதற்கு முக்கிய காரணம் போர்க்காலத்தில் அதிகமான நிலம் விவசாயத்தின்கீழ்க் கொண்டுவரப்பெற்றதாலும், விவசாயத்தில் தொழில் நுட்ப முன்னேற்றம் ஏற்பட்டதாலும் [குறிப்பாக அமெரிக்காவிலும் ஐக்கிய, ஆங்கிலேய டொமினியன் நாடுகளிலும்] உணவு உற்பத்தி சக்தி பெருகியது. மேலுடுகளில் மக்கள் தொகைப் பெருக்கத்தின் வேகம் குறைந்ததால், வாழ்க்கைக்கு இன்றியமையாத பொருள்களுக்கு இருந்த தேவையும் குறைந்தது மற்றொரு காரணமாகும். அதே நேரத்தில் தொழில்கள் வளர்ச்சியடையவும், விரிவடையவும் செய்ததால் மூலப் பொருள்களுக்கு இருந்த தேவையும் அவைகளின் விலைகளும் குறையவில்லை. வாணிபமும் தொழிலும் நல்ல இலாபகரமாகவே இருந்தன.

ஆனால், அப்பொழுது இருந்த செழிப்பில், இந்தியா தனக்குரித்தான முழுப்பங்கையும் பெறவில்லை. 'பேரளவுத் தொழில்கள்' விரிவடைந்து, நல்ல இலாபத்தையும் பெற்றன; சிறு தொழில்கள் முன்னேற்றமடைந்தன; வெளிநாட்டு வாணிபத்தின் அளவும் மதிப்பும் பெருகின; சணல், சணல் உற்பத்திகள், தோட்டப் பயிர்கள், விவசாய மூலப் பொருள்கள், உலோக மூலப் பொருள்கள் இவைகளின் ஏற்றுமதி வாணிபமும் செழிப்புற்றது. இவை அனைத்தும் உண்மை என்றாலும், இந்தியப் பொருளாதாரத்தில் ஒரு சிறு அளவையே கொண்டிருந்தன. விவசாயமும், குறிப்பாக உணவுப் பொருள்களின் உற்பத்தியும் மிக முக்கியமாகவே இருந்தன. ஆனால், இந்தத் துறையில் முன்னேற்றம் திருப்திகரமாக இல்லை. இந்தியாவில் சாகுபடியின்கீழ் இருந்த நிலப்பகுதி 1913–14-க்கும் 1920–21-க்கும் இடையிலும், பின்னர் 1920–21-க்கும் 1938–39-க்கும்[1] இடையிலும் சிறிதளவுதான் அதிகரித்தது. 1920–21-வரையில், உணவுத் தானியங்களும் பருப்பு வகைகளும் சாகுபடியான நிலப்பகுதியின் அதிகரிப்பு, சாகுபடியின்கீழிருந்த நிலப் பகுதியின் அதிகரிப்பைவிடச் சற்று அதிகமாக இருந்தது. ஆனால், 1920–21-க்கும் 1939-க்கும் இடையில் இந்த நிலப்பகுதி அதிகமாகவில்லை. உலோக உற்பத்திகளும், விவசாய மூலப் பொருள்களும் சிறப்பான முன்னேற்றமடைந்தன[2] பாசன வசதிகள் அதிகரித்ததாலும், தரமான விதைகளும் செடிகளும் விவசாயத்தில் பயன்படுத்தப் பெற்றதாலும், தொழிற்காப்புச் சுங்கவரிகள் விதிக்கப்பெற்றதாலும், விவசாயத்தில் விஞ்ஞானமுறை கையாளப்பெற்ற

[1] II ஆம் அட்டவணையைப் பார்க்கவும்.

[2] II B, III ஆம் அட்டவணைகளைப் பார்க்கவும்.

அட்டவணை (1)

பிரிட்டிஷ் இந்தியாவில் (சில சுதேச அரசுகளும் உள்பட) விளைபொருள் உற்பத்தியின் மதிப்பீடு

பயிர்கள்	1913–14	1918–19	1919–20	ஐந்தாண்டு சராசரி 1920–21 1924–25	ஐந்தாண்டு சராசரி 1926–25 1929–30	ஐந்தாண்டு சராசரி 1930–31 1934–35	1935–36	1936–37	1937–38	1938–39
அரிசி (மில்லியன் டன்கள்)	27·8	24·3	32·0	30·7	30·3	31·4	23·2	27·8	26·6	23·9
கோதுமை (மில்லியன் டன்கள்)	8·3	7·5	10·1	8·9	8·8	9·3	9·4	9·7	10·7	9·9
தேயிலை (மில்லியன் பவுண்டுகள்)	307·2	380·4	377·0	336·3	396·8	400·4	394·4	395·1	430·2	451·8
பருத்தி (மில்லியன் பேல்கட்டுகள்)	5·9	3·9	5·3	5·9	6·2	6·0	6·8	7·3	5·5	6·9
சணல் (மில்லியன் பேல்கட்டுகள்)	8·8	6·9	8·4	6·3	10·2	8·0	7·2	9·6	8·6	6·8
வேர்க்கடலை (மில்லியன் டன்கள்)	0·4	1·4	1·5	1·5	2·1	2·5	2·1	2·7	3·5	3·2
சுத்தம் செய்யப்படாத சர்க்கரை (மில்லியன் டன்கள்)	2·2	2·4	2·9	2·9	2·9	4·3	5·9	6·4	5·4	3·3
காப்பி (மில்லியன் பவுண்டுகள்)	n.a.	n.a.	23·5	23·5	31·7	33·3	41·1	34·0	33·5	40·1
ரப்பர் (மில்லியன் பவுண்டுகள்)	n.a.	n.a.	13·6	12·9	24·7	33·3	27·5	30·4	32·2	31·0

மூலம் : Statistical Abstract for British India.

பி. கு. :—1935–36ஆம் ஆண்டிலிருந்து பர்மாவுக்கான புள்ளிவிவரங்கள் சேர்க்கப்படவில்லை. பர்மாவின் அரிசி உற்பத்தி 1935–36-லும் 1936–37 லும் முறையே 4·9 மில்லியன் டன்களும், 4·7 மில்லியன் டன்களும் இருந்தன. பர்மாப் பிரிவினையால் மற்றப்பயிர்கள் அதிகமாக மாறவில்லை.

n.a. = விவரம் கிடைக்கவில்லை.

தாலும், சில தொகுதிகளில் சில விளைபொருள்களில் நல்ல முன்னேற்றமிருந்தது. இருந்தாலும் போர்களின் இடைக்காலம் முழுவதிலும் ஓர் ஏக்கரின் சராசரி உற்பத்தியில் அதிகரிப்பு எதுவு மில்லை. 1913–14-க்குப் பிறகு சில முக்கிய இந்திய விளைபொருள் களின் மதிப்பீட்டை, எதிரேயுள்ள அட்டவணை (1) காட்டுகிறது.[1] சாகுபடியின்கீழ் இருந்த நிலத்தில் எந்தவித அதிகரிப்பும் இல்லை யென்றும், விளைபொருள்களின் உற்பத்தியிலும் எந்தவித அதிகரிப்பு இல்லையென்றும் இந்த அட்டவணை காட்டுகிறது. ஆகவே, ஏக்கரின் சராசரி உற்பத்தியிலும் எந்தவித அதிகரிப்பும் இருந்திருக்க முடியாது என்பது தெளிவாகிறது.

ஆகவே, சில தொகுதிகளில் கிடைத்த விவசாய முன் னேற்றம், விவசாய அபிவிருத்திகள் நடைபெறுத மற்றும் சில பகுதிகளில் நிலவளம் குறைந்ததற்கு ஈடுசெய்திருக்கவேண்டும் என்று தோன்றுகிறது. எனவே, விவசாயம் விரிவடைந்ததன் மூலமாகவோ அல்லது, ஏக்கரின் சராசரி உற்பத்தி மிகுந்ததன் மூலமாகவோ இந்தியா முழுவதும் பயனடையவில்லை ஆனால், மற்றநாடுகளில் உணவுத் தானியங்களின் விலைகள் குறைந் தாலும் தொழிற்பொருள்களைவிட, விவசாயப் பொருள்களின் விலை அதிகமாகக் குறைந்தாலும், விவசாய வருமானங்கள் குறையவில்லை.

அட்டவணை (2) 1920-க்கும் 1939-க்கும் இடையில் கல்கத்தா வில் பண்டங்களின் தொகுதிக்கான மொத்தவிலைக் குறியீட்டு எண்களைக் காட்டுகிறது.

1920-லிருந்து 1929 வரை பொதுவிலைக் குறியீட்டு எண்கள் (General price index) 202-லிருந்து (அடிப்படை ஆண்டு 1914) 141-க்குக் குறைந்தன. குறியீட்டு எண்கள் ஒவ்வோர் ஆண்டும் தொடர்ச்சியாகக் குறைந்தன. குறிப்பிட்ட பண்டங்களின் விலைகளில் ஏற்ற இறக்கங்கள் இருந்தாலும், அவையெல்லா வற்றின் விலைகளும் 1920-ல் அல்லது 1921-ல் இருந்ததைவிட 1929-ல் குறைவாகத்தான் இருந்தன. 'வீக்கம்' உள்ள ஆண்டு களிலும் (1925–1929) கூட, 'பொதுவிலைக் குறியீட்டு எண்கள்' 159-லிருந்து 141-க்கு விழுந்தன. இதைப் போன்றே, உணவுத் தானியங்கள், சர்க்கரை, கச்சாப் பருத்தி, கச்சாச் சணல், சணல்

1 இந்த மதிப்பீடுகள் திருத்தமானவை அல்ல. ஒருவேளை இவைகள் உற்பத்தியைக் குறைத்து மதிப்பிடலாம். ஆனால், இந்தக் குறைந்த மதிப்பீட்டை அதிகரிக்கவேண்டும் என்று எண்ண எந்தவித நியாயமான காரணமும் இல்லை.

அட்டவணை (2)

கல்கத்தாவில் மொத்த விலைகளின் குறியீட்டெண்கள் (சூலை 1914 = 100)

காலம் (ஆண்டுச் சராசரி)	உணவுத் தானியங்கள்		சர்க்கரை	எண்ணெய் வித்துக்கள்	ஆலை உற்பத்திகள்				தோலும் பதனிட்ட தோலும்	உலோகங்கள்	மொத்தம் (25 மற்ற இனங்கள் உள்பட)
	உணவு வகைகள்	பருப்பு வகைகள்			கச்சாச் சணல்	சணல் உற்பத்திகள்	கச்சாப் பருத்தி	பருத்தித் துணிகள்			
அடங்கியுள்ள [1] இனங்களின் எண்ணிக்கை	8	6	5	3	3	4	2	7	3	6	76
1920	153	166	407	173	104	149	152	325	147	236	202
1921	144	160	270	135	83	104	143	280	108	236	179
1922	136	152	221	147	110	144	191	239	120	172	176
1923	112	112	246	138	90	138	244	221	135	163	172
1924	121	114	239	144	102	159	272	228	124	159	173
1925	135	128	179	146	154	177	205	210	104	125	159
1926	139	149	178	134	120	147	147	173	112	137	148
1927	139	155	171	143	93	146	167	159	119	131	148
1928	133	157	165	142	100	150	167	159	134	124	145
1929	125	152	162	155	95	122	146	160	113	128	141
1930	100	119	149	127	63	88	91	139	87	114	116
1931	78	89	135	82	49	76	83	123	67	109	96
1932	68	92	146	76	45	75	92	119	50	106	91
1933	66	84	131	74	41	77	80	113	59	99	87
1934	69	84	125	92	39	77	73	115	51	101	89
1935	75	85	128	107	50	74	78	117	59	100	91
1936	79	77	121	101	50	64	89	111	70	101	91
1937	77	89	102	115	56	67	89	117	81	144	102
1938	72	88	132	106	49	62	67	106	64	140	95
1939	86	99	164	106	80	102	75	106	67	147	108

[1] இத் தலைப்பில் அவ்வப்போது சிறுமாறுதல்கள் இருந்தன.

மூலம் : Statistical Abstract for British India, 1939.

உற்பத்திகள் ஆகிய இவைகளின் குறியீட்டு எண்களும் குறைந்தன.[1] 1920-க்குப் பின்னர், காலம் முழுவதிலும், தொழில் பொருள்களைவிட (இப் பொருள்களின் விலை 1920–21-க்குப் பிறகு உச்ச நிலை அடைந்தது) உணவுப் பொருள்களில், இறக்கம் அதிகமாகவும் தொடர்ச்சியாகவும் இருந்தது என்பதை அறியலாம். ஆனால், சணல் உற்பத்திகளின் விலைகள் 1925ஆம் ஆண்டில் உச்சநிலை அடைந்து 1928ஆம் ஆண்டுவரை (1928 உள்பட) அதே நிலையில் இருந்தன. எனவே, 'வீக்கம்' இருந்த காலத்திலும்கூட இந்திய விவசாயிகளில் பெரும்பான்மையோரும் தங்களுடைய (அதிகரிக்காத) மொத்த உற்பத்திகளை, 1920வாக்கில் இருந்ததை விடக்குறைந்த விலையில்தான் விற்றார்கள். இந்தியாவில் மாபெரு மந்தத்தின் விளைவுகளை மதிப்பிடும்பொழுது விலைகள் உச்ச நிலையிலிருந்து வீழ்ச்சியடையவில்லை. ஆனால், முன்னரே குறைந்திருந்த மட்டத்திலிருந்துதான் மேலும் விழுந்தன என்பதை எப்பொழுதும் நினைவில் கொள்ளவேண்டும்.

1928–29-ல் உலகெங்கும் இருந்த 'வீக்கம்', தொழில், வாணிபம், இலாபங்கள் இவைகளின் வீக்கமுமாகும். அஃது ஒரு 'விலை வீக்கமோ' அல்லது 'பண்டங்களின் வீக்கமோ' அன்று. அமெரிக்க பாங்குமுறை 1929ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் சீர்குலைவுக்குள்ளானதும், இவ் வீக்கம் முடிவுக்கட்டத்தை அடைந்தது. விலைகளின் 'கீழ் இறக்கம்' (down swing) 1930-ல் தற்காலிகமாகத் தடைப்பட்டது. அதற்குப்பிறகு விலைகள் கீழ் இறக்கப் பாதையில் தொடர்ந்து வந்து, அண்மைக்காலச் சரித்திரத்திலேயே மிகக் கொடுமையானதும், நீண்டதுமான பொருளாதார 'மந்தத்தை' உண்டாக்கியது. பெரு நாடுகளின் உள்நாட்டு உற்பத்தியிலும் உள்நாட்டு வாணிபத்திலும் திருப்புக் கட்டம் 1933–34ஆம் ஆண்டில் ஏற்பட்டது. அப்போதும்கூட மீட்சி, தாமதமாகவும் ஏற்ற இறக்கங்கள் கொண்டதாகவும் தான் இருந்தது. 1935 வரை வெளிநாட்டு வாணிபத்தில், போதுமான அளவு முன்னேற்றம் ஏற்படவில்லை. ஆனால், 1936–37-ல் ஒரு சிறு 'வீக்கம்' இருந்தது. 1937ஆம் ஆண்டில், அளவைப் பொறுத்தவரையில் உலக வாணிபம் 1929-ல் இருந்த நிலையை அடைந்தது. ஆனால், வெளிநாட்டு வாணிபப் பண்டங்களின் விலைகள் 1929-ல் இருந்ததைப்போல ஏற்றமுறுமல் மிகவும் குறைவாகவே இருந்தன. 1937ஆம்

[1] உணவுப் பண்டங்களின் (1873 = 100) சில்லறை விலைக் குறியீட்டெண்கள் (சிறு ஏற்ற இறக்கங்கள் இருந்தன) 1921-ல் 375-லிருந்து, 1929-ல் 311-க்கும், 1934-ல் 148-கும் (இக்காலம் முழுவதற்கும் இதுதான் குறைவான எண்கள்) விழுந்தன. பின்னர் 1937-ல் 175-க்கும், 1938-ல் 162-க்கும் உயர்ந்தன. *V.* Statistical Summary of Social and Economic Trends in India, p. 38.

ஆண்டின் முடிவில் 'வீக்கம்' ஏற்பட்டது. ஆனால், மறுபடியும் தோன்ற இருந்த 'மந்தம்'போர்க் குழிப்பால் தவிர்க்கப்பெற்றது. வாணிபச் சுழலின் இயல்பான போக்கு, முடிவில் 1939ஆம் ஆண்டில் உலகப்போர் மூண்டதும் தடைப்பட்டது.

வீக்கம். 1929–30–ல் ஏற்பட்ட நெருக்கடி இரண்டும் (ஐக்கிய) அமெரிக்காவில்தான் முதலில் தொடங்கியது. உலக வாணிபத்தில் இந்தியாவின் பங்கு மிகக் குறைவாக இருந்தாலும், அதன் பொருளாதாரமும் அமெரிக்காவைப் போன்றே சமநிலை இல்லாததாகவும், நிலையற்றதாகவும் (unstable) ஆகிவிட்டது என்பதை இங்குக் குறிப்பிடவேண்டும். 1929ஆம் ஆண்டில் நவம்பர் மாதத்தில்[1] ஏற்பட்ட அமெரிக்க நெருக்கடிக்குக் காரண மாயிருந்தவை என்று பேராசிரியர் லூவிஸ் (Professor Lewis) குறிப்பிட்டுள்ள ஆறு அறிகுறிகளையும், சில மாறுதல்களுடன் இந்தியாவிலும் காணலாம். முதலாவதாக, அமெரிக்காவிலிருந் ததைப்போல் இந்தியாவில் 'பங்குப்பத்திர மாற்றுநிலைய வீக்கம்' (stock exchange boom) ஏற்படவில்லையென்றாலும்கூட இந்தியாவில் குறிப்பாகத் தொழில்துறையில், 'பணவீக்கத்திற்கான' (inflation) தோற்றம் கட்டாயம் இருந்தது; இரண்டாவதாக, இந்தியப் பேரளவுத் தொழில்கள் அனைத்தும் (சணல் ஆலைகளைத் தவிர) தங்களுடைய உற்பத்திகளை உள்நாட்டுச் சந்தையிலேயே (Home Market) விற்பனை செய்வன. இத் தொழில்களிலுள் மிகுந்த அளவில் தொழில் முதலீடும் (Industrial investment), வெளிப்பாடும் (output) இருந்தன. ஆனால், இதைத்தொடர்ந்து மக்களின் 'வாங்குந்திறன்' (Purchasing power) பெருக்கமடைய வில்லை. இதனால் நாட்டில் 'நுகர்வுக்குறைவு' (Under consuption) ஏற்பட்டது; மூன்றாவதாக, இந்தியாவில், 'முதலீடு வாய்ப்புகள் தற்காலிமாகக் குறைந்துவிட்டன'. இதற்குக் காரணம், இக் காலத்தில் அரசாங்கம் அளித்த தொழிற்காப்பு சுங்கவரிகளின் பாதுகாப்பில்தான் இந்தியத் தொழில்கள் வளர்ச்சியடைந்தன; ஆனால், 'தொழிற்காப்பை'ப் பயன்படுத்திக்கொண்டு புதிய தொழில்களைக் கண்டுபிடிப்பது மேலும்மேலும் கடினமாகிக் கொண்டே வந்தது; நான்காவதாக, தொழில்களைப் போன்று விவசாயம் இலாபகரமாயில்லாததால் நிதி இடையூறுகள் உண் டாயின; ஐந்தாவதாக, மக்களுக்குக் (குறிப்பாக விவசாயி களுக்கு) கடன் தொல்லைகள் அதிகம் இருந்தமையால், நெருக் கடியின் உக்கிரம் இந்தியாவில் அதிகமாக இருந்தது. ஆறுவதாக, அமெரிக்காவில் இருந்ததைப்போல் இந்தியாவில் கூலிக்

[1] *V.* W. A. Lewis, Economic Survey, 1919–1939. pp. 52–55.

கொள்கை (Wage policy) என்று ஒன்றில்லாவிட்டாலும் [முதலீட்டுப் போக்கை (Investment trend) மாற்றுவதற்கு இது ஒரு முக்கியக் கருவியாகும்] 1928-லும் 1929-லும் தொழிலாளர் தகராறுகளும் தொழிலாளர்களிடையே அமைதியின்மையும் அதிகமாக இருந்தமையால், இவைகளும் அதே விளைவை உண்டாக்கின.

அமெரிக்காவில் தோன்றிய மந்தம் அயல்நாடுகளிலும் அதன் விளைவுகளை உண்டாக்கின. இஃது இயல்பே யாகும். இந்த மந்தம் வெளிநாடுகளில் இந்தியாவின் கச்சாச் சணலுக்கும், சணல் உற்பத்திகளுக்கும் இருந்த தேவையைக்குறைத்தது. அயல் நாடுகளில் இந்தியாவின் ஏற்றுமதிகளுக்குப் பொதுவாக இருந்த தேவையும் குறைந்தது. செல்வ நாடுகள் வெளி நாடுகளுக்குக் கடன் கொடுப்பதைச் சுருக்கின. இதனாலும் இந்தியப் பொருளாதார முன்னேற்றம் தடைப்பட்டிருக்க வேண்டும். வெளிநாட்டுக் கடன் வசதிகள் குறைந்ததால் இந்தியாவின் தொழில் முதலீடு நிறுத்தப்பெறவில்லை. அதற்குப் பதிலாக வளர்ந்துவந்த வாணிப மூலதனத்தைத் தொழில் முதலீடு செய்வதற்கு ஊக்குவிப்பதாக இருந்தது. இதன் விளைவால் சர்க்கரை ஆலை, சிமெண்டுத்தொழிற்சாலை காகிதத்தொழிற்சாலை போன்று பேரளவுத் தொழில்களெல்லாம் பெரும்பான்மையும் இந்திய மூலதனத்தைக்கொண்டே அண்மையில் நிறுவப்பெற்றன.

அட்டவணை (3)

பிரிட்டிஷ் இந்தியாவில் பதிவு செய்யப்பெற்றதும், இயங்கிவந்ததுமான பங்கு முதலீட்டுக் கம்பெனிகளின் எண்ணிக்கை

ஆண்டு	எண்ணிக்கை	ஆண்டு	எண்ணிக்கை	ஆண்டு	எண்ணிக்கை
1918–19	2,713	1925–26	4,926	1932–33	7,252
1919–20	3,500	1926–27	5,156	1933–34	8,346
1920–21	4,283	1927–28	5,388	1934–35	8,934
1921–22	4,781	1928–29	5,795	1935–36	9.467
1922–23	4,785	1929–30	6,069	1936–37	10,061
1923–24	4,820	1930–31	6,387	1937–38	9,677
1924–25	4,822	1931–32	6,805	1938–39	10,074

பிரிட்டிஷ் இந்தியாவில் பதிவு செய்யப்பெற்று, இயங்கிவந்த 'பங்கு முதலீட்டுக் கம்பெனிகளின்' (Joint stock companies) எண்ணிக்கை, போர்களின் இடைக்காலத்தில் (மந்த ஆண்டு

களிலும்கூட) படிப்படியாகத் தொடர்ந்து அதிகரித்து வந்தது என்பதை முன்பக்கத்திலுள்ள அட்டவணை (3) காட்டுகிறது.[1]

பத்தொன்பதாம் நூற்றாண்டின் பெரும்பாகத்திலும், இருபதாம் நூற்றாண்டில் முதல் உலகப்போருக்கு முன்னரான செழிப்பான காலத்திலும், பின்னர் 1925-க்கும் 1930-க்கும் இடைக்காலத்திலும்,[2] இந்தியாவின் பொருளாதார வளர்ச்சியில், வெளிநாட்டு மூலதனமும், 'தொழில் துணிவும்' பெரும் பங்கு கொண்டிருந்தன என்பது வெளிப்படையானதே. புதிதாக நிறுவப்பெற்ற பேரளவுத் தொழில்களை விரிவடையச் செய்வதில் ஒரு பக்கம் இந்திய மூலதனம், நாம் முன்னரே கண்டதுபோல் முக்கியப் பங்கெடுக்கத் தொடங்கிற்று. (டாடா நிறுவனங்கள் நல்ல எடுத்துக்காட்டாகும்). மற்றொரு பக்கம் அரசாங்கம் அளித்த தொழிற்காப்பு, வெளிநாட்டு மூலதனக்காரர்கள் இந்தியாவில் '(இந்தியா) லிமிடெட்' என்ற அலங்காரத்தலைப்பில் கம்பெனிகளைப் பதிவுசெய்து கொள்வதற்கு ஊக்கமளித்தது. இவைகள் உண்மையில் வெளிநாட்டு நிறுவனங்களின் கிளைகளே ஆகும். 1930-லிருந்து 1939-வரைக்கும் ஆன இடைக்காலத்தில், மந்தம் உக்கிரமாக இருந்த காலத்திலும்கூட அரசாங்கமும் அதனுடைய பாகத்திற்கு, ஸ்டெர்லிங் கடனை நீக்கவோ அல்லது குறைக்கவோ பெருமுயற்சி (வெற்றிகரமாகவும்) எடுத்துக் கொண்டது. இம் முயற்சியால் ஸ்டெர்லிங் கடனும் 1933-ல் £379 மில்லியனிலிருந்து 1938–39-ல் £350 மில்லியனுக்குறைந்தது. இந்தியாவிலுள்ள அயல்நாட்டுத் தனியார் முதலீட்டின் (Foreign private investment) அளவை மதிப்பிடப் பல முயற்சிகள் பல தேதிகளில் நடந்தேறின. இம் மதிப்பீடுகள் வெவ்வேறு அடிப்படையில் மேற்கொள்ளப்பெற்றதுடன் அம் மதிப்பீடுகளில் அடங்கியிருந்த இனங்களும் மாறுபட்டிருந்தன. இம் மதிப்பீடுகள் நம்பத் தகுந்தவைகளாக இல்லை. அதனுடன் போர்களின் இடைக்காலத்தில், முதலீட்டின் போக்கையும் அவைகள் தெளிவாகக் காட்டுவதில்லை. மதிப்பீடு செய்வதில் உள்ள பெரிய இடையூறு என்னவென்றால், இந்தியாவில் மூலதனத்தை முதலீடு செய்துள்ள வெளிநாட்டு நிறுவனங்கள் இந்தியாவை அன்றி மற்ற நாடுகளிலும் முதலீடு செய்துள்ளன. ஆனால், ஒவ்வொரு

1 *V.* Statistical Abstracts. வெளிப்படையான ஒரே தடை 1937–38-ல் ஏற்பட்டது என்பதைக் கவனிக்கவும். ஆனால், இதற்குக் காரணம், 1933–34-லிருந்து 1936–37 வரை 'கலைப்பில்' (liquidation) இருந்த (ஆனால், முடிவாகக் கலைக்கப்படாத) அனேக கம்பெனிகளும் 1937–38-ல் சேர்க்கப்பெற்றமைதான்.

2 *V.* D. H. Buchaman, The Development of Capitalist Enterprise in India. ஆனால், இந்தியாவில் அவ்வப்போது முதலீடு செய்யப்பெற்ற வெளிநாட்டு மூலதனத்தின் அளவை மதிப்பிடப் புகானன் அவர்கள் முயற்சி செய்யவில்லை.

நாட்டிலும் முதலீடு செய்யப்பெற்றுள்ள மூலதனக் கணக்குகளைத் தனித்தனியாகப் பிரித்துவைக்கவில்லை. அதனுடன் பல இந்தியர்களும் ஐரோப்பிய நிறுவனங்களின் பங்குகளை (Shares) (சில நிறுவனங்களின் பெரும்பான்மையான பங்குகளும் இந்தியர்கள் வசம் இருந்தன) வாங்கியிருந்தனர். அதேபோல, இந்திய நிறுவனங்களின் பங்குகளை ஐரோப்பியர்கள் வாங்கியிருந்தனர். பங்குதாரர்களின் பெயர்களைப் பதிவு செய்யாமல் 'கொணர்பவர் பத்திரங்களை' (Bearer bonds) விற்கும் பழக்கம் இந்தியாவில் நிலவியதால், அப் பத்திரங்கள் எந்த நாட்டவரிடம் இருக்கின்றன என்று தீர்மானிக்க முடியாமல் இருந்தது.

இதுவரை செய்யப்பெற்றுள்ள முக்கியமான மதிப்பீடுகளைப் பின்பக்கமுள்ள அட்டவணை (4) காட்டுகிறது. பட்டியலில்உள்ள எல்லா மதிப்பீடுகளும் அரசாங்கம் முதலீடு, தனியார் முதலீடு இரண்டையும் உள்ளடக்கிக் கணக்கிட முனைந்துள்ளன. இருந்தாலும், மதிப்பீடுகள் எல்லாம், ஒன்றுக்கு மற்றொன்று மாறுதலுடையனவாக இருப்பதை அறியலாம். இவற்றை நோக்கும் போது, மதிப்பீடுகள் தயாரிப்பதில் உள்ள இன்னல்களை இன்னும் நீக்க முடியவில்லை என்றுதான் முடிவுசெய்யவேண்டியிருக்கிறது.

பண்டங்களின் விலைகள் ஒரேஅடியாக விழுந்தது பொருளாதார மந்தத்தின் தனி இயல்பாக இருந்தது. இவ் வீழ்ச்சியினால், மூலப்பொருள்கள் உற்பத்தியை நம்பியிருந்த இந்தியா போன்ற நாடுகள், நேரிடையாகத் தாக்கப்பெற்றன. உலக வாணிபப் பொருள்களுடைய விலைகளின் குறியீட்டு எண்கள் (Index of prices of commodities entering into world trade) 1929-க்கும் 1932-க்கும் இடையில், மூலப்பொருள்களில் 56 சத வீதமும், உணவுப் பொருள்களில் 48 சத வீதமும், உற்பத்தியான பொருள்களில் 37சத வீதமும் குறைந்தன. இந்தியாவில் மொத்த விலைக் குறியீட்டெண்கள் (1929-ல் 141 எண்களாக இருந்தன) 1933-ல் அடிமட்டத்தை (87எண்கள்) அடைந்தன. அதேஆண்டில் உணவுத் தானியங்களின் குறியீட்டெண்களும் (66 எண்கள்), பருப்பு வகைகளின் எண்களும் (84 எண்கள்), எண்ணெய் வித்துக்களின் எண்களும் (74 எண்கள்) கீழ் மட்டத்தை அடைந்தன.[2]

[1] அட்டவணையில் உள்ள விவரங்களில் ஏறக்குறைய அனைத்தும்கீழ்க்காணும் அரிய நூலிலிருந்து (நூல் இதுவரை வெளிவரவில்லை), முதலில் எடுக்கப்பெற்றன. B. Datta : Under-employment and Industrialization: a study of the basic problems with special reference to India.

[2] கல்கத்தாவில் மொத்த விலைகளின் குறியிட்டு எண்களுக்கு அட்டவணையை (2)ப் பார்க்கவும். அடிப்படை ஆண்டு 1914 ஆகும்.

அட்டவணை (4)

இந்தியாவில் முதலீடு செய்யப்பெற்ற வெளிநாட்டு மூலதனத்தின் மதிப்பீடுகள்

ஆசிரியர்	ஆண்டு	மதிப்பீடு (மில்லியன்கள்)	மதிப்பீட்டில் உள்ளடங்கியவை	குறிப்பு நூல்கள்
சர். G. பெயிஷ் (Sir. G. Paish)	1911	£ 365	இந்தியாவிலும் சிலோனிலும் பிரிட்டிஷ் முதலீடுகள்	J. R. Statistical Society, 1911, p. 186
H. F. ஹோவார்டு (H. F. Howard)	1911	£ 450	இந்தியாவில் பிரிட்டிஷ் முதலீடுகள்	India and the Gold Standard
G. பிண்ட்லே ஷிர்ராஸ் (G. Findlay Shirras)	1918	£ 570	,, ,, ,,	Indian Finance and Banking.
சர். L. ஆப்பிரகாம் (Sir L. Abraham)	1918	£ 400	,, ,, ,,	Babington-Smith Report, 1919.
The Economist.	1928-29	£ 354	இந்தியாவில் உள்ள பிரிட்டிஷ் உடைமைகள்	Economic Journal, Sept. 1937, p. 571.
F. G. D. பிர்லா (F.G.D. Birla)	1929	£ 1,000	இந்திப்வில் வெளிநாட்டு மூலதனம்.	Economic Journal, Sept. 1932, p. 485.
G. பிண்ட்லே ஷிர்ராஸ்	1929-30	£ 500	இந்தியாவில் பிரிட்டிஷ் முதலீடுகள்	Poverty and Kindred Economic Problems in India (1935), p. 22.
,,	1929	£ 481	,, ,, ,,	Economic Journal, Sept. and Dec. 1933
V. K. R. V. ராவ் (V. K. R. V. Rao)	1929	£ 575	,, ,, ,,	Economic Journal, March 1933.
Financial Times	1929-30	£ 700	,, ,, ,,	Wadia and Merchant, Our Economic Problem, p. 481.
R. M. கிண்டர்ஸ்லி (R. M. Kindersley)	1931	£ 458	இந்தியாவிலும் சிலோனிலும் பிரிட்டிஷ் முதலீடுகள்	Economic Journal, June 1933.
,, ,,	1936	£ 436	,, ,, ,,	Economic Journal, Dec. 1937.
British Associated Chambers of Commerce (India)	1933	£ 1,000	இந்தியாவில் பிரிட்டிஷ் முதலீடுகள்	Wadia and Merchant, op cit., p. 481
B. R. ஷெனாய் (B. R. Shenoy)	1939	£ 830	இந்தியாவில் வெளிநாட்டு மூலதனம்.	The Sterling Assets of the Reserve Bank of India.

இதனால், கிராமப்புற மக்கள் பெருந்துன்பத்திற்கு ஆளாயினர். குடியானவர்கள் தங்களுடைய நிலையான பொறுப்புகளை (Liabilities–வாரம், நிலவரி, வட்டிப்பணம், கூலிகள், விவசாயக் கருவிகள், விதைகள், பழுதுபார்த்தல் இவைகள் போன்றவை) நிறைவேற்ற, முயற்சி செய்யக்கூட முடியாதநிலையில் இருந்தனர். அதே நேரத்தில், கடன் தொல்லைகளின் பளுவும் இரட்டிப் பாகியது.[1] இந்தியாவில் சாதாரண காலத்திலும்கூட ஏழ்மை யான குடியானவர்கள் பலரும் உணவுப் பொருள்களை வாங்கு வதற்கு (அறுவடைக்குச் சற்றுமுன்), வட்டிக்குக் கடன் கொடுப் பவர்களின் தயவை நாடவேண்டியிருந்தது என்றால், மேலே விவரிக்கப்பெற்ற சூழ்நிலையில் அவர்கள் அடைந்த துன்பம் எவ்வளவு கொடுமையாக இருந்திருக்கும் என்பதை எளிதில் அறியலாம். பல குடியானவர்களும், தங்களுடைய நிலவுடைமை களைக் கடன் கொடுத்தவர்களிடம் இழந்தனர். இன்னும் பலர் கடன் கொடுப்பவர்களின் பிடியிலிருந்து தப்பிக்க முடியாத படி சிக்கிக்கொண்டனர்.

பண்டங்களின் விலைகள் வீழ்ந்ததால், 'நுகர்வுப் பொருள் களு'க்கு இருந்த தேவையும் பாதிக்கப்பெற்றது. இதனால் தொழில் நடவடிக்கைகளும் வாணிபமும் நலிந்தன. இதைத் தொடர்ந்து சில 'தொழில் நாடுகளில்' (Industrial Countries) நிதிநிலைமை நொடித்துப்போனதுடன், வேலையில்லாத் திண்டாட் டமும் அதிகரித்தது. (வாணிபச்) சகடத்தின் (Cycle) பொருந்தாப் பொருளாதார அமைப்பு (mal-adjustment) இந்தியாவில் வேலைக்குறைவின் (under employment) உருவத்தில் வந்ததே ஒழிய 'வேலையின்மை' (unemployment) உருவத்தில் இல்லை. இவை தவிர மற்ற வகைகளில், 'மந்தத்தின்' விளைவுகள் மற்ற நாடுகளில் இருந்ததைப் போலவே இந்தியாவிலும் இருந்தன. ஆனால், இந்தியாவில் உயிர் பிழைத்திருக்கத் தேவை யான நிலைக்கும், சாதாரண வாழ்க்கைத்தரத்திற்கும் அதிக வித்தியாசம் இல்லை. இதனால், பொருளாதார வளர்ச்சியுள்ள நாடுகளைவிட இந்தியாவில் மந்தத்தின் விளைவுகள் அதிகக் கொடு

[1] 'மத்திய பாங்குத் தொழில் குழுவின்' (Central Banking Committee) கணக் குப்படி, விவசாயக் கடன் 1929-ல் (நெருக்கடிக்கு முன்) ரூ. 881 கோடியாக இருந்தது. அதே ஆண்டில், முக்கிய விளைபொருள்களின் மதிப்பு ரூ. 1,018 கோடியாக இருந்தது. 1933 வாக்கில் இவ் விளைபொருள்களின் மதிப்பு ஏறக்குறையப் பாதியாகக் (சுமார் 534 கோடிகள்) குறைந்தது. மந்தத்தின்போது கடன்கள் திருப்பிக் கொடுக்கப்படவில்லை என்பதுடன், அதற்கான வட்டிப் பணத்தையும் கொடுக்கமுடியவில்லை, இதனால், புதிய கடன்கள் வாங்கப்படா விட்டாலும் (அல்லது கொடுக்கப்படாவிட்டாலும்) நிலுவையாக இருந்த கடன் குறைந்திருக்க முடியாது. ஆகவே, கடன் பளு இரட்டிப்பாக இருக்க வேண்டும். Cf. P. J. Thomas, 'India in the World Depression' (Economic Journal, September 1935).

மையாக இருந்தன. பன்னாட்டு வாணிபமும் (International Trade) சுருங்கியதால், கடனாளி நாடுகள் கடன்களை அடைக்க முடியாத நிலையில் இருந்தன. இதனால், பன்னாட்டுத் துறையில் ஒரு நிதிநெருக்கடி ஏற்பட்டது. கடன்களை அடைக்க முடியாதநிலை மற்றநாடுகளுக்கும் பரவியது. ஏற்றுமதிகளுக்கும் இறக்குமதி களுக்கும் உள்ள வித்தியாசத்தை வெளிநாட்டுக் கடன்கள் மூலமாகவோ அல்லது வெளிநாட்டு முதலீடுகளின் மூலமாகவோ இனியும் சரிக்கட்ட முடியாதநிலை ஏற்பட்டது. இந்த நிலை 1930-க்குப் பிறகு கடனாளிநாடுகள், கடன்கொடுக்கும் நாடுகள் இரண்டிலும் விவரிக்கமுடியாத வாணிபக் கட்டுப்பாடுகளும், நிதிக் கட்டுப்பாடுகளும் ஏற்படக் காரணமாயிருந்தது. ஆனால் மீட்சிக்காலம் வந்த பின்னரும்கூட, இக் கட்டுப்பாடுகள், கையாளப் பெற்றதால் மந்தம் நீட்டிக்கப்பெற்றது.[1]

§ 3. வெளிநாட்டு வாணிபம்

மந்த காலத்தில் இந்தியாவின் வெளிநாட்டு வாணிபத்தின் அளவும் மதிப்பும் குறைந்ததையும், இந்தியாவின் 'பண்டங்களின் கொடுப்பல்நிலை' (Merchandise Balance of Trade) கேடுற்ற தையும் படங்கள் X-ம் XI-ம் காட்டுகின்றன.

இந்திய ஏற்றுமதியின் மதிப்பு 1932–33-ல் அடி மட்டத்தை அடைந்தது என்பதைப் படம் Xகாட்டுகிறது. இங்கிலாந்துக்கு இந்தியா செய்துவந்த செல்லுகளுக்கும், வட்டிப்பணத்துக்கும் ஈடுசெய்யும் வகையில், இறக்குமதியைவிட ஏற்றுமதி சாதாரண மாக மிகுதியாக இருந்தற்குப் பதிலாக 1933–34-ல் இந்தியாவின் ஏற்றுமதிகள், ஏறக்குறைய இறக்குமதிகளின் அளவே இருந்தன. 1932–33-க்குப் பிறகு ஏற்றுமதிகள் படிப்படியாக மீட்சியுற்றன. ஆனால், 1936–37ஆம் ஆண்டின் 'வீக்கத்தின்' உச்சநிலையிலும்கூட, ஏற்றுமதிகள் 1929-ல் இருந்த மட்டத்தைவிடக் குறைவாகவே இருந்தன. இறக்குமதிகளின் மதிப்பு 1933–34-வரை தொடர்ந்து இறங்கிக்கொண்டே வந்தது; அதற்குப் பிறகு, ஏற்றுமதிகளைவிட அதிக முன்னேற்றம் (ஏற்ற இறக்கங்கள் கொண்ட முன்னேற்றம்) கொண்டிருந்தது. மந்தகாலத்தில் இயற்கையான நிலைக்கு மாறுக, இந்தியா பொன் வெள்ளிக் கட்டிகளை நிகர ஏற்றுமதி[2] செய்ய வேண்டியிருந்தது என்பதையும் படம் Xகாட்டுகிறது.


[1] 'நாடுகள் இழைத்த தவறு, சுங்கவரிகளை 1930-ல் உயர்த்தின என்பதல்ல; ஆனால், 1933-க்குப் பிறகு அவற்றைக் குறைக்கத் தவறியதுதான்' W. A Lewis.

[2] பொன் வெள்ளிக்கட்டிகளும் செலாவணித்தாள்களும் உட்பட.

இவ்வாண்டுகளில் இந்தியாவிலிருந்து பேரளவுப்பொன் ஏற்றுமதியானது, இந்தியாவில் மந்தத்தின் தீமையான விளைவுகளைத் தணிப்பதற்கு முக்கியக் காரணமாக இருந்தது. இந்த ஏற்றுமதியைப் பலரும் குறை கூறினர். இந்தியா தன்னுடைய மூலதனத்திலேயே வாழ்ந்து வருகிறது. வாழ்க்கைக்கு இன்றியமையாத பொருள்களை வாங்குவதற்கு மக்கள் தங்களுடைய சிறு சேமிப்புகளையும் (சேமிப்புகள் பெரும்பாலும் நகைகளாகவே இருந்தன) விட்டுப்பிரிய வேண்டியிருக்கிறது; இந்தச் சேமிப்புகளும் தீர்ந்து விட்டால், ஏழ்மையால் நலிந்த குடியானவர்களுக்குச் சோற்றுக்குக்கூட வழி இருக்காது என்பதே அவர்களின் வாதம் இந்தியாவிலிருந்து ஏற்றுமதியான பொன் எங்கிருந்து வந்தது என்று கண்டுபிடிப்பது முடியாத செயலாகும். ஆனால், அதில் ஓரளவு விவசாயிகளிடமிருந்தே வந்தது. இதன் காரணமாகத்தான் அதற்கு 'துன்பப் பொன்' (Distress gold) என்று பெயரிடப் பெற்றது. ஆனால், 1936 வாக்கில் இத்தகைய ஏற்றுமதி மிகவும் குறைந்துவிட்டது. இந்தியாவின் மொத்த இருப்பில், இப்போது ஏற்றுமதியாகும் மொத்தப் பொன் சிறிதளவே இருக்கிறது. இவ்வாறுபொன்னைச் சேமிப்பதின் முக்கிய நோக்கம், நெருக்கடி காலத்தைச் சமாளிக்க அது உதவியாக இருக்கும் என்பதுதான். மந்தகாலத்தில் பொன் ஏற்றுமதி செய்யப்பெற்றது, மிகவும் நெருக்கடியான காலத்தில் மக்களுக்கு உணவையும் உடைகளையும் அளிக்கப் பெருந்துணையாக இருந்தது.[1] மேலும், பொன் ஏற்றுமதியான அதேகாலத்தில், ரூபாயின் பொன்விலையும், ஸ்டெர்லிங் விலையும் (1931-ல் இங்கிலாந்து 'பொன் திட்டத்திலிருந்து' விலகியபிறகு) அதிகரித்தன. மந்தத்தினால் ஏற்பட்ட இன்னல்கள் இதனால் தணிக்கப் பெற்றன. மக்களிடமிருந்த 'ரொக்க நிலையான ஒரே சொத்து' (Liquid asset) பொன்தான். மந்த காலத்தில் அதன்மதிப்பு இரக்கத்தோடு உயர்ந்தது. உலகச் சந்தையில் இந்திய உற்பத்திகளுக்கு இருந்த தேவை விழுந்து விட்டது. ஆனால், அதே நேரத்தில், இதற்குமுன் சேமித்து வைத்திருந்த பொன் (இதுவரை இந்தப் பொன் வேலையில்லாமல் இருந்தது) அதிகமான விலையில் (ரூபாய்க் கணக்கில்) ஏற்றுமதியாவதற்கு வாய்ப்பளித்தது.

பிரிட்டிஷ் இந்தியாவின் ஏற்றுமதி இறக்குமதி அளவுகளினுடைய, ஒன்றன்மீது ஒன்று படிந்துள்ள (Over lapping) மூன்று வகைக் குறியீட்டு எண்களைப் படம் XI காட்டுகிறது. வெவ்வேறு


[1] உணவும் உடையும் இலவசமாக அளிக்கப்பெற்றது என்பது பொருளில்லை. பொன் ஏற்றுமதியாகாவிட்டால் இறக்குமதிகளை மேலும் குறைத்திருக்க வேண்டும். இதனால், உணவுப்பற்றுக்குறையும் உடைப்பற்றுக்குறையும் மேலும் அதிகரித்திருக்கும்.



(1)பர்மா நீங்கலாக (2) மறு ஏற்றுமதிகள் நீங்கலாக (3) நிகர இறக்குமதிகள்.

படம் X. 1929-30க்கும் 1938-39க்கும் இடைக் காலத்தில் பிரிட்டிஷ் இந்தியாவின் இறக்குமதி ஏற்றுமதி வாணிபத்தின் மதிப்பு.

ஆண்டுகளை அடிப்படையாகக் கொண்டால், வாணிபத்தின் போக்கும் மாறுபட்டதாக இருக்கிறது. அடிப்படை ஆண்டிலிருந்து புறப்பட்டால், மதிப்பீடுகள் எவ்வளவு நம்ப முடியாதனவாக இருக்கின்றன என்று இதிலிருந்து தெரிகிறது, 1913-14-க்குப் பிறகு எண்ணிக்கையற்ற மாறுதல்கள் ஏற்பட்டுள்ளன. ஆகவே, அதை (1939-14) அடிப்படை ஆண்டாக வைத்துக் கொண்டு குறியீட்டு எண்களைத் தயாரித்தால் அது உண்மையான நிலைமையைக் காட்டுவதாக இருக்காது. ஏற்றுமதிகளின் அளவும் இறக்குமதிகளின் அளவும் முறையே, 1932-33-லும், 1931-32-லும் அடிமட்டத்தை அடைந்தது என்று, 1927-28-ன்



படம் XI. 1913–14க்கும் 1938–39க்கும் இடைக் காலத்தில் பிரிட்டிஷ் இந்தியாவின் இறக்குமதி ஏற்றுமதி வாணிப அளவின் குறியீட்டெண்கள்.

A. ஏற்றுமதி வாணிபத்தின் குறியீட்டெண்கள்.

B. 1913–14ஆம் ஆண்டில் விலைகளில் மறுமதிப்பிடப்பட்ட இறக்குமதி வாணிபத்தின் குறியீட்டெண்கள்.

C. ஏற்றுமதி வாணிபத்தின் குறியீட்டெண்கள்.

D. 1927–28ஆம் ஆண்டின் விலைகளில் மறுமதிப்பிடப்பட்ட இறக்குமதி வாணிபத்தின் குறியீட்டெண்கள்.

E. பர்மா நீங்கலாக இந்திய ஏற்றுமதிவாணிபத்தின் குறியீட்டெண்கள்.

F. பர்மா நீங்கலாக, 1927–28ஆம் ஆண்டின் விலைகளில் மறுமதிப்பிடப்பட்ட இறக்குமதி வாணிபத்தின் குறியீட்டெண்கள்.

மூலம் : Annual Reviews of the Trade of India.

விலைகளை அடிப்படையாக்கக் கொண்ட குறியீட்டு எண்கள் (படம் XI-ல் C, D கோடுகள்) காட்டுகின்றன. இவ்வாறு, ஏற்றுமதிகளின் அளவு, மதிப்பு இரண்டும் 1932–33-ல் அவைகளின் அடிமட்டத்தை அடைந்தன. ஆனால், இறக்குமதிகளின் அளவு 1931–32-லும், இறக்குமதிகளின் மதிப்பு 1933–34-லும் அடிமட்டத்தை அடைந்தன. 1931–32-ல் இறக்குமதிகளின் அளவு மிகவும் குறைந்ததற்குப் பண்டங்களின் விலைகள் மிகவும் வீழ்ச்சியுற்றதால், இந்தியாவின் 'வாணிப மாற்று வீதம்' (Terms of trade) மிகவும் கேடுற்றது ஓரளவுக்குக் காரணமாக இருந்திருக்கலாம்.[1] ஆனால், 'ஒத்துழையாமை இயக்கம்' வலுப்பெற்ற இக்காலத்தில் ஆங்கிலேயப் பண்டங்கள் குறிப்பாகப் பருத்தித் துணிகள், முற்றிலும் வெறுக்கப்பெற்றதால், இவ் வீழ்ச்சிக்கு அரசியல் காரணமும் இருந்தது. ஏற்றுமதிவிலைகள் தொடர்ந்து இறங்கின என்றாலும், 1932–33-ல் இறக்குமதிகளின் அளவு, ஏன் ஏற்றுமதிகளின் அளவைவிட அதிகமாக உயர்ந்தது என்பதை விளக்குவது முதலில் கடினமாகத் தோன்றும். ஆனால், 1931–32-ல் இறக்குமதிகளின் அளவு மிகக் குறைவாக இருந்ததால் அவ் வாண்டில் 'அடக்கி வைக்கப்பெற்றிருந்த தேவை' (Pent-up demand), 1932–33-ல் வெளிப்பட்டதை இறக்குமதிகளின் அளவு தற்காலிகமாக உயர்ந்ததற்குக் காரணமாகக் கொள்ளலாம்.

அட்டவணை (5)

1927–28-க்கும் 1936–37-க்கும் இடையில் ஏற்றுமதி இறக்குமதிப் பண்டங்களின் விலை மட்டங்கள்.

	ஏற்றுமதிகளின் விலைமட்டம்	இறக்குமதிகளின் விலைமட்டம்	ஏற்றுமதியின் ஓர் அளவுக்குக் கிடைத்த இறக்குமதிகளின் குறியீட்டெண்கள்.
1927–28	100·0	100·0	100·0
1928–29	97·5	96·4	100·1
1929–30	90·2	93·2	96·8
1930–31	71·5	80·0	89·4
1931–32	59·2	71·7	82·6
1932–33	55·3	65·2	84·8
1933–34	53·5	63·5	84·3
1934–35	54·1	63·0	85·9
1935–36	56·9	62·1	91·6
1936–37	57·2	62·8	91·0

[1] ஏற்றுமதிப் பண்டங்களின் விலைகள், இறக்குமதிப்பண்டங்களின் விலைகளைவிட அதிகமாக வீழ்ச்சியுற்றதால், அதே அளவு இறக்குமதிகளைத் தருவிக்க இந்தியா அதிக அளவு ஏற்றுமதிப் பொருள்களைக் கொடுக்கவேண்டியிருந்தது. இந்த நிலையைத்தான் 'வாணிப மாற்றுவீதம்' கேடுற்றது என்று அழைக்கப்பெற்றது. ஆகவே, வாணிப மாற்றுவீதம் என்பது, குறிப்பிட்ட ஓரளவு இறக்குமதிகளை வாங்குவதற்குத் தேவையான ஏற்றுமதிகளின் அளவு என்று விளக்கலாம்.

ஏற்றுமதி, இறக்குமதிப் பண்டங்களின் விலைமட்டங்களில் மந்த காலத்தில் ஏற்பட்ட மாறுதல்களை எதிரேயுள்ள அட்டவணை (5) காட்டுகிறது.[1]

இந்தியாவிலும், மூலப் பொருள்களை உற்பத்தி செய்யும் எல்லா நாடுகளிலும் 'வாணிப மாற்று வீதம்' மந்தகாலத்தில் பாதகமாகவும் 'பொருளாதார வீக்க'காலத்தில் சாதகமாகவும் இருக்கிறது என்பதை இங்குக் குறிப்பிடவேண்டும். இவ்வாறு வாணிபச்சுழலின் (Trade cycle) விளைவுகள் இந்த நாடுகளில் மிகையாக இருக்கின்றன. இங்கிலாந்தைப் போன்ற தொழில் நாடுகளில் இதற்கு எதிர்மாறான நிலைமை ஏற்படுகிறது. அதாவது, 'வாணிப மாற்று வீதத்தில்' ஏற்படும் மாறுதல்கள் 'வாணிபச் சுழலின்' விளைவுகளை மட்டுப்படுத்துவனவாக இருக்கின்றன.

1937-ல் பர்மா பிரிவினை ஆனதால், வாணிபப் பதிவுகளில் (Trade records) தொடர்ச்சியில்லாமல் போனதுடன், வாணிபத்தின் போக்கை ஆராய்வதும், நிகழ்கால நிலைமையைக் கடந்த கால நிலைமையுடன் ஒப்பிட்டுப்பார்ப்பதும் கடினமாயிருக்கின்றன. அதனுடன் பிரிவினையால் இந்தியாவின் வாணிபக் கொடுப்பல்நிலையும் வெகுவாக மாறிவிட்டது. பர்மாப் பிரிவினையின் விளைவுகளுக்காகத் தள்ளுபடிசெய்து, சில செயல்களில் கணக்குகளை மதிப்பிட முடியும். ஆனால், மற்றும் சில செயல்களில் இது சிக்கலை உண்டாக்குகிறது.

படம் VI-ல் (அத்தியாயம் 13-ஐப்பார்க்கவும்), பழைய அடிப்படையில் வாணிபத்தின் பொதுவான போக்கை 1938–39 வரையிலும் காட்டுவதற்காகப் பர்மாவின் புள்ளிவிவரங்களையும் (பர்மா பிரியவில்லை என்ற எண்ணத்தில்) சேர்த்துக்கொண்டு மதிப்பீடுகள் தயாரிக்கப்பெற்றன. பொன் வெள்ளிக் கட்டிகள் தொடர்ந்து ஏற்றுமதியானாலும், முன்னர் இருந்த 'ஏற்றுமதி உபரி நிலை' (Export surplus) மந்தத்திற்குப் பிறகு மீட்சியுற்று, 'சாதக வாணிபக் கொடுப்பல்நிலை' (Favourable balance trade) யும் கைகூடியது என்பதை இப்படத்தில் காண்கிறோம். படம் VII (அத்தியாயம் 13-ஐப் பார்க்கவும்) இந்திய வாணிபத்தின் போக்கில் ஏற்பட்ட மாறுதல்களைக் காட்டுகிறது. இப் படத்தில்

[1] *V.* Annual Reviews of the Trade of India. 1936–37-க்குப் பிறகு திருத்தமான புள்ளி விவரங்கள் கொடுக்கப்படவில்லை. படங்களே தரப்பட்டுள்ளன. மந்தகாலத்தில் ஏற்றுமதிகளின் விலைகள் அதிகமாகவும் விரைவாகவும் வீழ்ந்தன என்றாலும், 1937–38-ல் அவைகள் இறக்குமதிகளின் விலைகளைவிட விரைவாக ஏறின. 1937–38-க்குப் பிறகு இறக்குமதிவிலைகள், ஏற்றுமதிவிலைகள் இரண்டும் ஒரேவிதமாக மாற்றமடைந்தன.

மேற்கண்ட முறையில் பர்மா, விவரங்களையும் சேர்த்து மதிப்பீடு தயாரிக்க முடியவில்லை. பிரிவினைக்குமுன்னர் இந்தியாவின் மொத்த வாணிபத்தில் பர்மா பெரும்பங்கு கொண்டிருந்தது. உலகில் ஒவ்வொரு நாட்டுடனும் இந்தியா கொண்டிருந்த வாணிப வீதங்கள் பிரிவினைக்குப்பிறகு பெரிதும் மாற்றமடைந்தன. ஆகவே, இத்தகைய மதிப்பீடுகளை 1937ஆம் ஆண்டுடன் நிறுத்திவிடுவது நல்லது என்று முடிவு செய்யப்பெற்றது. பர்மாப் பிரிவினையால், இந்தியா ஏற்றுமதி, இறக்குமதி இரண்டின் அளவுக்கும் மதிப்புக்கும் ஏற்பட்ட விளைவுகளைப்படம் Xஉம், படம் XIஉம் காட்டுகின்றன. 1936–37ஆம் ஆண்டுக்கு ஒன்றன்மீது ஒன்று படிந்துள்ள (Over lapping) எண்கள், ஓர்இணை பர்மாவை உட்படுத்தியும், மற்றோர் இணை உட்படுத்தாமலும் கொடுக்கப் பட்டிருக்கின்றன. இந்தியாவின் ஏற்றுமதிகளை, பர்மாப்பிரிவினை குறைத்தது என்று இப் படங்களிலிருந்து அறிகிறோம். அதாவது, உலகின் மற்ற நாடுகளுக்கு பர்மாவிலிருந்து 1936–37 ஏற்றுமதியானது, அதேஆண்டில் இந்தியாவிலிருந்து பர்மாவுக்கு ஏற்றுமதியானதைவிட அதிகமாக இருந்தது. அதேநேரத்தில், பர்மாப் பிரிவினையால் இந்தியாவின் இறக்குமதி உயர்ந்தது. அதாவது, 1936–37ல் பர்மாவிலிருந்து இந்தியாவில் இறக்குமதியானது, இந்தியா நீங்கலாக உலகின் மற்ற நாடுகளிலிருந்து பர்மாவில் இறக்குமதியானதைவிட அதிகமாக இருந்தது. பர்மாவிடம் இயற்கையாகவே செழிப்பான ஏற்றுமதி வாணிபமும் இறக்குமதிகளைவிட ஏற்றுமதி மிகுதியான நிலையும் இருந்ததால், பர்மாப் பிரிவினையால் மேற்கண்ட விளைவுகளைத் தான் எதிர்பார்க்கலாம். பிரிவினையால் இந்தியாவின் மொத்த வாணிபம் அதிகரிக்கத்தான் செய்தது. அதாவது, பர்மாவிடம் இருந்த இந்தியாவின் மொத்தவாணிபம், உலகின் மற்ற நாடுகளுடன் பர்மா கொண்டிருந்த மொத்த வாணிபத்தைவிட அதிகமாகவே இருந்தது. ஆனால், பிரிவினையால் பண்டங்களின் 'வாணிபக் கொடுப்பல்நிலை' இந்தியாவுக்குப் பாதகமாகவே அமைந்தது. ஆதலால், 'அகச்செல்லுகள்' (Home Charges) செய்வதற்கு வேண்டிய வழிகளைக் கண்டுபிடிப்பதில் இந்தியாவுக்கு இருந்த சிக்கலைப் பர்மாப் பிரிவினை மேலும் அதிகமாக்கியது. ஆனால், இந்தத் துறையில் பர்மாவின் நிலைமை சாதகமாக அமைந்தது. இதிலிருந்து, இந்தியாவுக்கு அவசியமாயிருந்த ஏற்றுமதி உபரிக்கு (Export Surplus), பர்மா தன்னுடைய நியாயமான பங்குக்குமேல் அளித்துவந்தது என்று தெரிகிறது.

பொருளாதார மந்தம் தொடங்கியதிலிருந்து, இந்திய வாணிபத்தின் போக்கில் பின்வரும் மாறுதல்கள்

ஏற்பட்டன :[1] இந்திய ஏற்றுமதி, இறக்குமதி வாணிபத்தில் இங்கிலாந்துக்கு இருந்தபங்கு சிறிது அதிகரித்தது; (இந்தியாவில் இறக்குமதிகளில் இருந்த சுங்கவரிகள் அதிகரித்தன. 1934ஆம் ஆண்டின் இந்திய-ஜப்பானிய வாணிப ஒப்பந்தத்திற்குமுன் இந்தியாவுக்கும் ஜப்பானுக்கும் இடையே வாணிபப்போர் (trade war) நடந்தது. இவ்விதத்தடைகள் இருந்தும்கூட) ஜப்பானின் பங்கு அதிகரித்தது; (இந்தியாவில் சர்க்கரையின்மேல் 'தொழிற் காப்பு'த்தீர்வைகள் விதிக்கப்பெற்றதால்) இந்திய இறக்குமதி களில் ஜாவாவின் பங்கு குறைந்தது. வருடாந்தரப்புள்ளி விவரங் களைப் பாகுபாடு செய்துபார்த்தால் (ஐந்தாண்டுச் சராசரிகளில் இவைகள் தெரிவதில்லை)ஏகாதிபத்தியச்சலுகைமுறை கையாளப் பெற்றபிறகு, இந்தியாவுக்கும் ஆங்கலேயப் பேரரசுக்கும் (Empire) இடையே இருந்த வாணிபத்தில் அனேக ஏற்ற இறக் கங்கள் இருந்தன என்று தெரிகிறது. குறிப்பாக, இங்கிலாந் துடன் இருந்த வாணிபத்தில், தொடக்கத்தில் பெருவாரியான அதிகரிப்பு இருந்தது. ஆனால், பிந்திய ஆண்டுகளில் இந்த அதி கரிப்புத் தொடர்ந்து இல்லை.

மொத்தத்தில் முக்கியமான மாறுதல் எதுவும் ஏற்படவில்லை. ஒட்டாவா ஒப்பந்தத்தின் இடைக்கால விளைவுகளும் மிகக் குறை வாகவே இருந்தன.

பொருளாதார மந்தம், ஏற்றுமதி இறக்குமதியான பண் டங்கள் அனைத்தையும் பாதித்தது.[2] ஆனால், ஏற்றுமதிகளில் நூல், மூறுக்கிய நூல், பருத்தித் துணிகள், தானியங்கள் இவைகள் மிகுதியாகப் பாதிக்கப்பெற்றன. இந்தியாவின் பருத்தி நூலையும், பருத்தித் துணிகளையும் பர்மா மிகுதியாக உபயோகித்தது. ஆகவே, பர்மாப் பிரிவினைக்குப் பிறகு இவைகளின் ஏற்றுமதியில் சிறிதளவு அதிகரிப்பு இருந்தது. 1935–36ஆம் ஆண்டில் சிறிதளவு மீட்சி இருந்தாலும் கூட, தூரக்கிழக்கு நாடுகளின் போட்டியால் பருத்தி நூல், பருத்தித் துணிகள் இவைகளுக்கு எஞ்சி இருந்த சந்தைகளையும் இந்தியா இழக்கத் தொடங்கியது என்பது தெளி வாகத் தெரிகிறது. உணவுத் தானியங்களின் ஏற்றுமதி குறைந்த தற்கு முக்கியக் காரணம், பல ஆண்டுகளாகக் கோதுமை ஏற்று மதி நிறுத்தப்பெற்றதே. பர்மாப் பிரிவினையானதால், இந்தியத் தானிய ஏற்றுமதியிலிருந்து பர்மாஅரிசி நீக்கப்பெற்றது; ஆனால், சில ஆண்டுகளில் மறுபடியும் கோதுமையில் ஏற்றுமதிக்கான உபரி இந்தியாவிடம் இருந்தது. கச்சாப்பருத்தி கச்சாச்சணல்

[1] 13ஆம் அத்தியாயத்தில் படம் VII-ஐப் பார்க்கவும்.

[2] XVI, XVIIஆம் அட்டவணைகளைப் பார்க்கவும்.

இவையிரண்டிலும், 1937–38-லும் 1938–39-லும் ஏற்றுமதிகள் வெகுவாகக் குறைந்தன. சீன–ஜப்பானியப் போரினால், இந்தியப் பருத்திக்கு இருந்த ஜப்பானியத்தேவை குறைந்தது. கச்சாச் சணல் ஏற்றுமதி 1936–37-ல் தற்காலிகமாக மீட்சியுற்றது. ஆனால், அதற்குப்பிறகு மந்தகாலத்தில் இருந்த அடிமட்ட நிலையை அடைந்தது.

இறக்குமதிகளில் பருத்தித் துணிகள், இரும்பு, எஃகுச் சாமான்கள் இவைகளின் இறக்குமதி மிகவும் குறைந்தது. இவையெல்லாவற்றையும்விட, சர்க்கரையின் இறக்குமதி மிக அதிகமாகக் குறைந்தது. இந்தியாவில், இறக்குமதித் தீர்வைகள் விதிக்கப்பெற்ற பண்டங்களே இவைகள். இவைகள் ஒவ்வோர் இனத்திலும், உள்நாட்டுச் சந்தைக்குத் தேவையானவற்றை இந்தியா படிப்படியாக உற்பத்திசெய்யத் தொடங்கியது. ஆனால், இந்தியப் பருத்தி ஆலைத்தொழில் வளர்ச்சியடைந்ததால் நீண்ட, இழைப் பருத்திக்குத் தேவை அதிகரித்தது. ஆனால், இப் பருத்தி போதுமான அளவுக்கு இந்தியாவில் விளைவதில்லை. ஆகவே, கச்சாப்பருத்தியின் இறக்குமதி உண்மையில் அதிகரித்தது. கச்சாப்பருத்தியின் இறக்குமதி, 1936–37-ல் 66 ஆயிரம் டன்களிலிருந்து 1937–38-ல் 134 ஆயிரம் டன்களுக்கும், 1938–39-ல் 96 ஆயிரம் டன்களுக்கும் உயர்ந்தன. இதே ஆண்டுகளுக்கான பருத்தி ஏற்றுமதிகள் முறையே 739, 488, 483 ஆயிரம் டன்கள் ஆகும்.

பல நுகர்வுப் பொருள்களையும், தொழில் உற்பத்திகளையும் பொறுத்தவரையில், இந்தியா தன்நிறைவு நிலையை அடையப் பொருளாதார மந்தமும், அதேகாலத்தில் விதிக்கப்பெற்ற தொழிற் காப்புத் தீர்வைகளும் உதவியாயிருந்தன. இதனால், செய்வினை முடிந்த பண்டங்களுக்கு இந்தியா ஒருமுக்கியச் சந்தையாக இருந்தநிலை முழுவதும் மறைந்துவிடும் என்று முடிவு செய்வது தவறுனதாகும்.

இந்திய இறக்குமதிகளில், பலவகையான செய்வினை முடிந்த பண்டங்களே இனியும் அதிகமாக இருந்தன. ஆனால், இப்பொழுது அவைகளில் ஒரு சிறுமாற்றம் தோன்றியது. இயந்திரங்கள், தளவாடங்கள், ஆலைக் கருவிகள், மோட்டார்கள், பல வகையான கருவிகள், இரசாயனப் பொருள்கள் மற்றும் வளர்ச்சியடைந்துவரும் தொழில்களுக்குத் தேவையான பொருள்கள் இவைகள் அனைத்திலும் தரக்குறைவான பொருள்களின் இறக்குமதி குறையவும், உயர்ந்த தரமுள்ள பொருள்களின் இறக்குமதி அதிகரிக்கவும் தொடங்கின. தொழில் வளர்ச்சி ஏற்பட்டாலே

தேவைகளும் அதிகரிக்கும். உள்நாட்டில் சில பொருள்களுக்கு இருக்கும் தேவையைவிட, உற்பத்திசக்தி பெருகினால், மற்றத் துறைகளில் புதிய தேவைகள் தோன்றும். மேலும், மக்கள் தொகைப் பெருக்கமும் தேவையை அதிகரிக்கும். அதனுடன், மக்களின் வாழ்க்கைத்தரம் ஒரு சிறிதளவாவது உயர்த்தப் பெற்றால், நாகரிக வாழ்க்கைக்குத் தேவையான 'வழக்கத்தால் இன்றியமையாத பொருள்களுக்கும்' (conventional necessities) 'போகப் பொருள்களுக்கும்' (luxuries) தேவை மிகவும் அதிகரிக்கும்.

§ 4. வாணிபக் கைக்கோள்

இந்தியச் சுங்கவரி முறை (Tariff system) 1931ஆம் ஆண்டில் பின் வருமாறு அமைந்திருந்தது: முதலாவதாக, பலவகையான வருமானத்தீர்வைகள் (Revenue duties) இருந்தன. (இப் பிரிவில் தீர்வையில்லாத பட்டியலும், கட்டணத்திற்கு ஏற்றாற்போல அமைந்த பண்டங்களின் பிரிவுகளும் இருந்தன); அடுத்ததாக, தொழிற்காப்புக்காகக் கோரிக்கைகள் செய்யப்பெற்று, விசாரணை செய்து, அவைகளை அரசாங்கம் ஏற்றுக்கொண்ட பொருள்கள் இருந்தன. இப் பண்டங்களின்மேல் தொழிற்காப்புத் தீர்வைகள் பல கட்டணங்களில் விதிக்கப்பெற்றன; அடுத்ததாக, இங்கிலாந்திலிருந்து இறக்குமதியான பருத்தி, இரும்பு, எஃகுச் சமான்களின் மேல் சலுகைமுறையில் (Preferential rates) தீர்வைகள் விதிக்கப் பெற்றன; இறுதியாக, ஏற்றுமதித்தீர்வைகளும், ஸெஸ் வரிகளும் குறைந்த எண்ணிக்கையில் இருந்தன.[1] பொருளாதார 'மந்தம்' தோன்றியபோது, வரவுசெலவுத் திட்டங்களில் பற்றுக் குறைகள் எழுந்ததால், புதிய வருவாய் மூலங்களைக் கண்டுபிடிக்கவேண்டிய அவசியம் ஏற்பட்டது. இதனால், 1931ஆம் ஆண்டின் வரவு செலவுத் திட்டத்தில், மற்ற நடவடிக்கைகளுடன், அப்பொழுது நடைமுறையில் இருந்த (2½ சத வீதத்திற்கு மேலான) எல்லாத் தீர்வைகளிலும் 'மேல் வரிகள்' (Surcharges) விதிக்கப்பெற்றன. இவ்வாறு, பொதுவான தீர்வைக்கட்டணம் 15 சதவீதத்திலிருந்து (இந்த வீதம் 1922-ல் நிர்ணயிக்கப்பட்டது) 20 சத வீதத்திற்கு உயர்த்தப்பெற்றது. 1931ஆம் ஆண்டு செப்டம்பர் மாதத்தின் 'நெருக்கடி கால வரவுசெலவுத் திட்டம்' (Emergency Budget) அப்பொழுது நடைமுறையில் இருந்த தீர்வைகளின்மேல், மேலும் 25 சதவீத 'மேல் வரி'யை விதித்தது. இதனால், பொதுவான தீர்வைக் கட்டணம் 25 சதவீதத்திற்கு உயர்ந்தது.

[1] 13ஆம் அத்தியாயத்தைப் பார்க்கவும்.

1934ஆம் ஆண்டில், ஐம்பதுக்கு மேலான பழைய சட்டங்களை ரத்து செய்து, எல்லாத் தீர்வைகளையும் ஒன்றுகத் தொகுத்த ஒரு சட்டம் நிறைவேறியது. இதைத்தவிர 1931-க்குப் பிறகு வருவாய்த் தீர்வைகளில் எந்தவித முக்கிய மாறுதலும் ஏற்பட வில்லை. 1934ஆம் ஆண்டின் சட்டப்படி, சுங்கவரிப் பட்டியல்கள் அனைத்தும் (ஒரு பன்னூட்டு ஒப்பந்தத்திற்கு இணங்க) சீரிய முறையில், புதிதாகத் திருத்தி அமைக்கப்பெற்றன. பழைய முறைப்படி,ஒவ்வொருபட்டியலிலும் ஒரே வகையான தீர்வைகள் அல்லது ஒரே கட்டணத் தீர்வைகள் விதிக்கப்பெற்ற பலவகை யான பொருள்கள் அடங்கியிருந்தன. ஆனால், புதிய முறையில் ஒவ்வொரு பட்டியலிலும், உலோகப் பொருள்கள், இரசாயனப் பொருள்கள், பருத்திஆலைக் கருவிகள் போன்ற ஒரேவகையான பண்டங்கள் அடங்கியிருந்தன. வருமானத் தீர்வைகள் உயர்ந்தால் தொழிற்காப்பு விளைவுகளும், அதனால் வருவாய்க் குறைவும் ஏற்படும். இந்த நட்டத்தினை ஓரளவு ஈடுசெய்ய அதேஆண்டில் (1934) 'தொழிற் காப்பு'ப் பெற்ற பொருள்களின்மேல் 'ஆயத்தீர்வைகள்' விதிக்கப்பெற்றன.[1]

1931ஆம் ஆண்டுக்குப் பிறகு சுங்கவரிகளில் ஏற்பட்ட முக்கிய மாறுதல்கள், 'தொழிற் காப்பு'த் தீர்வைகளைப் பரவ லடையச் செய்ததும் ஏகாதிபத்தியச் சலுகை முறையைக் (Imperial preference) கையாண்டதுமேயாகும். மந்த காலத்தில் ஜப்பானியப்போட்டி மிகவும் முனைப்பாக இருந்ததாலும், இங்கிலாந்து தலையிடாவாணிபக் கொள்கையை 1931-ல் கை விட்டதும் 'சலுகை' முறையை அனுசரிப்பது மிகவும் பயனுள்ள தாக இருந்ததாலும்தான் மேற்கண்ட இரு நடவடிக்கைகளையும் அரசாங்கம் கையாண்டது.

பருத்தித்துணிகள் வாணிபத்தில் ஜப்பானியப்போட்டி மிகவும் கடுமையாக இருந்தது. பருத்தித்தொழில் அரசாங்கத் திடமிருந்து பல வகையான சிறு உதவிகளைப்பெற்று வந்தாலும், 1920-க்கும் 1929-க்கும் இடையில் பருத்திஆலை முதலாளிகள் தொழிற்காப்புத்தீர்வைகள் விதிக்கும்படிக் கேட்டுக்கொண்டனர். ஆனால், 'பருத்தித்தொழில் நல்லமுறையில் வளர்ச்சி யடைந் திருக்கிறது; அதைச் 'சிற்றிளந் தொழிலாக'ப் பாவிக்கமுடியாது என்று கூறி அரசாங்கம் கோரிக்கைகளை மறுத்தது.' இப் பிரச் சினையை நாம் முன்னரே கண்டோம்.[2] 1929–30-ல் ஏற்பட்ட

[1] இந்த ஆயத்தீர்வைகள் மூலம்கிடைத்த வருவாய், சுங்கத்தீர்வைகள் மூலம் கிடைத்த வருவாயுடன் ஒன்றுக இணைக்கப்பெற்றது.

[2] 11ஆம் அத்தியாயத்தைப் பார்க்கவும்.

நெருக்கடியால், அரசாங்கம் தன்னுடைய போக்கை மாற்றிக் கொண்டு, பருத்திப் பொருள்கள் மேலும் 'தொழிற்காப்பு'த் தீர்வைகள் விதித்தது. இங்கிலாந்திலிருந்து வரும் பருத்திப் பொருள்கள் மேல் சலுகைக் கட்டணம் (Preferred rate) விதிக்கப்பெற்றது.[1] ஆகவே 1930-க்குப் பிந்திய ஆண்டுகளில் பருத்தித்தொழிலுக்குத் 'தொழிற்காப்பு முறையையும்', 'ஏகாதிபத்தியச் சலுகை முறையை'யும் அரசாங்கம் ஏற்றுக்கொண்டது. (இவைகள் பின்னர் முனைப்பாகவும் ஆக்கப்பெற்றன). முடிவாக 1934ஆம் ஆண்டின் இந்திய-ஜப்பானிய வாணிப ஒப்பந்தம் இந்தியாவுக்கும் ஜப்பானுக்கும் இடையே இருந்த பருத்தி வாணிபத்தை ஓர் 'அளவு முறையில்' (quantitative basis) ஒழுங்கு படுத்தியது.

ஜப்பானிலிருந்து இறக்குமதியான குறைந்த விலையுள்ள பொருள்களின்மேல் 'பெறுமான வீதத் தீர்வைகளும்' (ad-valorem duties) 'எண்ணிக்கை வீதித் தீர்வைகளும்' (Specific duties) விதிப்பதன் மூலம் ஜப்பானியப் போட்டி குறைக்கப்பட்டது.[1] 1933ஆம் ஆண்டில் நிறைவேறிய 'தொழில்களைப் பாதுகாக்கும் சட்டத்தின்'படி (The Safeguarding of Industries Act, 1933), நெருக்கடி ஏற்பட்டால், சட்டமியற்றுமல் தீர்வைகளை மாற்றும் அதிகாரம் அரசாங்கத்திற்குக் கிடைத்தது. இந்தச்சட்டம் நிறைவேறியதும், உதவி தேவை என்று 1433-க்கும் மேலான விண்ணப்பங்கள் அரசாங்கத்துக்கு வந்தன. அரசாங்கம், இச் சட்டத்தைப் பயன்படுத்தினால் ஜப்பானுடன் நடந்து வந்த பேச்சு வார்த்தைகளைப் பாதிக்கும் என்று கருதி, இதற்காகத் தனிச் சட்டமியற்றுவதாக முடிவு செய்தது. ஆகவே, '1934ஆம் ஆண்டின் இந்தியச் சுங்கவரிச் சட்டம்' (The Indian Tariff Amendment Act 1934), மிகக் குறைந்த விலையில் விற்பனை செய்யப்பெற்ற பீங்கான் சாமான்கள், சோப்புகள் போன்ற பொருள்களில் இருந்த 'பெறுமான வீதத் தீர்வைகளுடன்' (ad valorem duties) 'எண்ணிக்கை வீதத் தீர்வைகளையும் (Specific duties) ஒன்றாக இணைத்தது (இவற்றில் எது உயர்வாக இருக்கிறதோ அது நடைமுறைக்கும் வரும்). 'ஒட்டாவா ஒப்பந்தத்தின்படி' (Ottawa Agreement) (இங்கிலாந்து நீங்கலாக) எல்லா அயல்நாடுகளிலிருந்து வரும் பொருள்களின் மேலும் இத் தீர்வைகள் விதிக்கப்பெறும். ஆனால், இத் தீர்வைகள்

[1] பருத்தித்துணிகளுக்கான சலுகைக் கட்டணம் 1930ஆம் ஆண்டுச் சட்டத்தின் சேர்க்கப்பெற்றது.

[2] இதைப் பற்றிய மற்ற விவரங்களைப் பின்வரும் பக்கங்களில் காணலாம்.

குறிப்பாக, ஜப்பானிலிருந்து இறக்குமதியான பொருள்களைத் தான் முக்கியமாகப் பாதித்தன.

1931ஆம் ஆண்டிற்குப்பிறகு, உப்பு, வெள்ளிஇழை, வெள்ளிக்கம்பி, நிலக்கரித் தொட்டிகள், இரயில்வே வாகன்கள், சிலவகைக் காகிதங்கள், காகிதக்குழம்பு, பட்டு, பட்டும் நூலும் கலந்த துணிகள் இவைகளுக்கும் (சுங்கவரிக் கழகம் விசாரணை செய்த பிறகு) 'தொழிற்காப்பு' வசதி அளிக்கப்பெற்றன. 1938ல் முடிவாக, மக்னீசக் கிளோரைடின் மேலும் தொழிற் காப்புத் தீர்வை விதிக்கப் பெற்றது. காகிதத் தொழிலுக்கும் இந்தச் சலுகை அனுசரிக்கப்பெற்றது. சர்க்கரை, பட்டுத்தொழில் இவைகளிலிருந்த தீர்வைகளைச் சுங்கவரிக் கழகம் மறு ஆய்வு செய்ய வேண்டியிருந்தது. இதன்படி சர்க்கரையின் மீதிருந்த தீர்வைகள் புதுப்பிக்கப்பெற்றன. ஆனால், பட்டுத்தொழிலின் ஆய்வு 1939ஆம் ஆண்டுவரை முடிவுபெறவில்லை.

மந்தத்தின் ஆரம்பகாலத்தில், கோதுமை (கோதுமை மாவும் உள்பட), உடைத்த அரிசி, கச்சாப்பருத்தி, கச்சாப்பட்டுப் போன்ற உணவுப் பொருள்களுக்கும் மூலப் பொருள்களுக்கும் தொழிற்காப்பு வசதி அளிக்கப்பெற்றது. மந்தகாலத்தில் விவசாயப் பொருள்களின் இறக்குமதிவிலை மிகவும் தாழ்ந்து விட்டதால், விவசாயிகள் மிகவும் பாதிக்கப்பெற்றனர். ஒரு வகையில் இவர்களுக்கு உதவியளிக்கவும், மற்றொருவகையில் வருவாய் பெறும் நோக்கத்துடனும்தான் தொழிற்காப்பு வசதி, உணவுப் பொருள்களுக்கும் மூலப்பொருள்களுக்கும் பரவலாக்கப் பெற்றது. உயர்தரத்துணிகளை உற்பத்திசெய்ய இந்திய ஆலைகளுக்கு நீண்ட இழைப் பருத்தி (Long-stapled cotton) தேவையாயிருந்தது. இந்தவகைப் பருத்தியை இந்தியாவிலேயே உற்பத்திசெய்வதை ஊக்குவிப்பதற்காகத்தான் பருத்தியிலும் தொழிற்காப்பு வரிகள் விதிக்கப்பெற்றன.[1] இப் பொருள்களின் மேலிருந்த தீர்வைக்கட்டணமும், அதேபோன்று சர்க்கரை, உப்பு, வெள்ளி இவைகளின் மேலிருந்த தீர்வைக் கட்டணமும் அவ்வப்போது மாறுதலடைந்தன. கோதுமை, கோதுமை மாவு, உடைத்த அரிசி இவைகளின் மேலிருந்த தீர்வைகள் 1937–38–ல் ஓரர்ண்டுக் காலத்திற்கு நீக்கிவைக்கப் பெற்றன.

[1] இந்த அத்தியாயத்தின் பிற்பகுதியில், மந்தகாலத்தில் ஏற்பட்ட விவசாய வளர்ச்சியையும் தொழில் வளர்ச்சியையும்பற்றி ஆராய்வோம். அப்போது இந்த நடவடிக்கைகளும் இரும்பு எஃகுத் தீர்வைகளில் ஏற்பட்ட மாறுதல்களும் மேலும் விளக்கப்பெறும்.

பரம்பரை வழிவந்த தலையிடா வாணிபக்கொள்கையை, இங்கிலாந்து 1931ஆம் ஆண்டில் கைவிட்டதால் உண்டான ஒரு துணைப் பொருள்தான் (By-Product) 'ஏகாதிபத்தியச் சலுகை முறை'யாகும். இந்தச்சலுகை முறைக்கு இரண்டு காரணங்களால் இதுநாள் வரை இந்தியாவில் எதிர்ப்பு இருந்தது. இந்தியச் சுங்க வரிக் கொள்கையில் இலங்காஷைரின் விருப்பமும் நலனுமே முதலிடம் பெறும் என்ற சந்தேகம் முதல்காரணம்; இந்தச் சலுகை முறையினால் இந்தியா அடையும் பலனைவிட, இழப்பு அதிகமாக இருக்கும் என்ற எண்ணம் இரண்டாவது காரண மாகும். இங்கிலாந்து ஒரு தலையிடா வாணிப நாடாக இருந்த வரையில் இரண்டாவது காரணத்தில் நிறைய உண்மையிருந்தது. ஆனால், 1931-ல் இங்கிலாந்தின் வாணிபக்கொள்கை முற்றிலும் மாற்றமடைந்ததால், அதனுடைய நிலைமையும் மாறிவிட்டது. இங்கிலாந்தின் புதிய சலுகைமுறையிலிருந்து இந்தியாவின் பொருள்களை நீக்கினால் இந்திய வாணிபம் மிகவும் பாதிக்கப் படும்.

ஒட்டாவாவில் நடந்த இந்தியஒப்பந்தம் டொமினியன் நாடு களுடன் நடந்த ஒப்பந்தங்களைப்போன்றே இருந்தது. ஆனால், இந்தியச் சூழ்நிலைக்கும், இந்திய நலன்களுக்கும் பொருத்தமான சில விதிகள் வகுக்கப்பட்டன. பொதுவாக, இந்த ஒப்பந்தத் தின்படி, இந்தியப்பொருள்கள் இங்கிலாந்துச்சந்தைகளில் தீர்வை யின்றியோ அல்லது சலுகைக் கட்டணத்திலோ நுழையலாம் என்றும், அதற்குப்பதிலாக ஒரு நீண்ட பட்டியல்கொண்ட இங்கிலாந்தின் பொருள்களை இந்தியாவில் சலுகைமுறையில் அனுமதிக்கவேண்டும் என்றும் குறிப்பிடப்பட்டது. ஒப்பந்தத்தை உருவாக்கியபொழுது இந்தியத் தூதுக்குழு விதித்த பின்வரும் நிபந்தனைகள் ஒத்துக்கொள்ளப்பட்டன: இந்தியாவின் தற்போதைய வரிஅமைப்பை மாற்றமுடியாது; இந்தியாவுக்குக் கிடைக்கக்கூடிய சுங்கவரிகள் பாதிக்கப்படக்கூடாது; இந்த ஒப்பந்தம் இந்தியாவைப் பல ஆண்டுகளுக்குக் கட்டுப்படுத்தக் கூடாது. சுயாட்சி இல்லாத காலனிநாடுகளுடனும் டொமி னியன் நாடுகளுடனும் இந்தியா சலுகைமுறை ஏற்பாடுகளைச் செய்துகொள்ள ஒட்டாவா ஒப்பந்தம் அனுமதித்தது. இந்தவிதி இந்தியாவுக்குப் பேருதவியாக இருந்தது. பருத்தி வாணிபத்தை அயல்நாட்டுச் சந்தைகளில் (கிழக்கு ஆப்பிரிக்கா, மேற்கு ஆப்பிரிக்கா, பிரிட்டிஷ் மேற்கிந்தியத் தீவுகள், மலேயா, போன்றவை) பெருக்கிக் கொள்ளவும், புதிய சந்தைகளைப் பெறவும் இது துணையாக இருந்தது.

பிரிட்டிஷ் எஃகுப் பொருள்களையும், பருத்திப் பண்டங்களையும் பற்றி அப்பொழுது சுங்கவரிக் கழகம் விசாரணை நடத்தி வந்ததால், ஒட்டாவா ஒப்பந்தம் இவை பற்றி ஒன்றும் குறிப்பிட வில்லை. ஆனால், வருமானத் தீர்வைகளுக்குட்பட்ட எஃகுப் பண்டங்கள், நிலையான 20 சதவீதத் தீர்வைகள் செலுத்தவேண்டு மென்றும், பிரிட்டிஷ் பண்டங்கள் (எஃகு) 10 சதவீதச் சலுகைக் கட்டணம் செலுத்தவேண்டுமென்றும் பொதுவாக விதிக்கப் பெற்றது. இங்கிலாந்திலிருந்து இறக்குமதியாகும் மின்உரம் பாய்ச்சிய தகடுகளுக்கு இந்தியா தனிச்சலுகை அளிக்கவேண்டு மென்றும், இதற்குப் பதிலாக இந்திய வார்ப்பு இரும்பும் எஃகும் தீர்வையின்றித் தொடர்ந்து இங்கிலாந்தில் அனுமதிக்கப் பெறும் என்றும் ஒரு துணை ஒப்பந்தத்தின்படி ஏற்பாடாயிற்று.

சிறிது காலத்திற்குப்பிறகு, சுங்கவரிக் கழகத்தின் அறிக்கைகள் வெளியிடப் பெற்றன. எஃகுப் பண்டங்களுக்கும், பருத்தி ஆடைகளுக்கும் சலுகை அளிக்கும் சட்டமும் இயற்றப் பெற்றது. 1934ஆம் ஆண்டில் நிறைவேறிய எஃகுத் தொழிற்காப்புச் சட்டத்தின் மூலம், இங்கிலாந்திலிருந்து இறக்குமதியான மின் உரம் பாய்ச்சிய தகடுகளும் (இதற்குப் பதிலாக இந்தியாவிலிருந்து இறக்குமதியான வார்ப்பு இரும்பை வரியின்றி அனுமதிப்பதாக இங்கிலாந்து உறுதியளித்தது), சலுகைமுறைத் தீர்வைகளின்கீழ் வந்தன. இச்சட்டம் நிறைவேறியதும், மேலே குறிப்பிட்ட துணை ஒப்பந்தம் ரத்தாயிற்று. அதே நேரத்தில், ஒரு சட்டம் எஃகுப் பாளங்களின்மீதும், சுத்தி செய்யப்பெற்ற சர்க்கரை, கைக்கடி காரங்கள் இவைகளின்மீதும், ஆயத் தீர்வையை விதித்தது. போதுமான தொழிற்காப்பு அளிக்கும் வகையில், எல்லா இனங் களிலும் ஆயத்தீர்வையின் அளவுக்கு இறக்குமதித் தீர்வைகள் உயர்த்தப்பெற்றன. தேவையான வருவாயைத் திரட்டவும் (தொழிற்காப்புத் தீர்வைகளால் ஏற்படக்கூடிய நட்டத்தை ஈடு செய்வதற்கு), தொழில் அமைப்பையும் திறனையும் வளர்ப் பதின் அவசியத்தைத் தொழிற்காப்புப்பெற்ற தொழிலுக்கு உணர்த்தவும் இம் முறை சிறந்தது என்று அரசாங்கம் கருதியது. முடிவாக, தொழிற் காப்புத் தீர்வைகளை (அதேபோன்று வருவாய்த் தீர்வைகளையும்) உள்ளடக்கி, 1935ஆம் ஆண்டு, ஜனவரி 9-ல் நிறைவேறிய வாணிப ஒப்பந்தம், ஒட்டாவா ஒப்பந் தத்தை நிரப்புவதாக இருந்தது. இவ்வொப்பந்தம், அப்பொழுது நிலவிய தீர்வைக்கட்டணங்களில் எந்த மாற்றமும் செய்ய வில்லை; ஆனால், பிரிட்டிஷ் பண்டங்களின்மீது தொழிற் காப்புத் தீர்வைகளை விதிக்கும்பொழுது, பின்வரும் கொள்கைகளைக் கையாளவேண்டும் என்று குறிப்பிட்டது. அக் கொள்கைகள்

(அ) இப்பொழுது நிலவும் ஏகாதிபத்தியச் சலுகை முறையின் மட்டத்தை அப்படியே நிலவச் செய்யவேண்டும்; (ஆ) இந்தியத் தொழிற் காப்புத் தீர்வைகள், இந்தியப் பண்டங்களின் நியாயமான விலைக்கு இறக்குமதிப் பண்டங்களின் விலைகளைச் சமனுக்குவதற்குத் தேவையான அளவுக்குமேல் இருக்கக் கூடாது[1]; (இ) 1931ஆம்ஆண்டில் விதிக்கப் பெற்ற நெருக்கடிக்கால மேல்வரிகள் (Emergency Surcharges) மற்றப் பண்டங்களிலிருந்து நீக்கும் பொழுது அவ் வரிகளைப் பருத்தி ஆடைகளிலிருந்தும் நீக்க வேண்டும்[2]; (ஈ) எந்த ஒரு பிரிட்டிஷ் தொழிலுக்கும், தன்னுடைய குறைகளை இந்தியச் சுங்கவரிக் கழகத்தினிடம் முறையிட்டு விளக்க வாய்ப்புகள் அளிக்கவேண்டும்; மேலும், சுங்கவரிக் கட்டணத்தில் அடிப்படையான மாறுதல்கள் செய்ய விருந்தால், பிரிட்டிஷ் அரசாங்கத்தின் வேண்டுகோளுக்கு இணங்க ஒரு விசாரணை நடத்தவேண்டும். இவைகளுக்கு எதிராக இங்கிலாந்தில் கச்சாப் பருத்தியின் உபயோகத்தை ஊக்குவிப்பதற்கும், மற்ற இந்தியப் பண்டங்களுக்கும் இவ்வித நடவடிக்கையை மேற்கொள்வதற்கும்; பிரிட்டஷ் எஃகுப் பண்டங்களுக்குச் சலுகைகள் கிடைக்கும்வரை இந்திய வார்ப்பு இரும்பைத் தீர்வையின்றி அனுமதிப்பதற்கும், கலோனியச் சந்தைகளில் பிரிட்டிஷ் பண்டங்களுக்குக் கிடைக்கும் சலுகைகள், இந்தியாவுக்கு அளிப்பதற்கும் வேண்டிய முயற்சிகள் தொடர்ந்து நடைபெறும் என்று பிரிட்டிஷ் அரசாங்கம் வாக்களித்தது.

இவ்வொப்பந்தத்திற்கு, பிரிட்டிஷ் அல்லது இந்தியச் சட்டப்பேரவைகளின் ஒப்பம் தேவையில்லை என்றாலும், இந்தியச் சட்டசபை, 1935ஆம் ஆண்டு ஜனவரி 29-ல் ஒப்பந்தத்தைக் கைவிட வேண்டும் என்று ஒரு தீர்மானம் நிறைவேற்றியது. இத் தீர்மானம், நடந்தேறிய தீர்மானத்தை எந்த வகையிலும் பாதிக்கவில்லை; ஆனால், இந்திய அரசாங்கத்தின் வாணிபக் கைகோளைப் பற்றிக் காங்கிரஸ்கட்சி கொண்டிருந்த போக்கை வெளிப்படுத்தியது.

ஏறக்குறைய 1935ஆம் ஆண்டுக்குப் பிறகு, உலக வாணிபம் மீட்சியுற்ற பொழுது, ஏகாதிபத்திய நாடுகளைவிட மற்ற நாடுகளுடனும், சலுகைபெற்ற பண்டங்களைவிடச் சலுகைபெறுத

[1] ஆஸ்டிரேலியாவுடனும் கானடாவுடனும் நடந்தேறிய ஒப்பந்தங்களிலும் இக் கொள்கை கையாளப்பெற்றது.

[2] 1937ஆம் ஆண்டில், பருத்தி ஆடைகளிலிருந்து மேல்வரிகள் நீக்கப்பெற்றன; ஆனால், மற்றப்பண்டங்களிலிருந்து நீக்கப்பெறவில்லை. இவ் வத்தியாயத்தின் 5ஆம் பிரிவைப்பார்க்கவும்.

பண்டங்களிலும்[1] இந்தியவாணிபம் விரைவான பெருக்க முற்றிலும்கூட மந்தகாலத்தில் ஏகாதிபத்திய நாடுக ளுடன் இந்தியவாணிபத்தை வளர்ப்பதற்கு ஒட்டாவா ஒப் பந்தம் பேருதவியாக இருந்தது என்பதில் ஐயமில்லை[2]. பல மூலப் பொருள்களின் வாணிபத்திலும், குறிப்பாகக் கச்சாப் பருத்தி, வார்ப்பு இரும்பு இவைகளிலும் பிரிட்டிஷ் சந்தையில் இந்தியாவுக்கு இருந்தநிலை கட்டாயம் மேம்பாடடைந்தது. அதே போன்று கயிறு, பாய், தாவரஎண்ணெய், பிண்ணாக்கு, மெழுகு (பர்மாவிலிருந்து), கம்பளங்கள், விரிப்புகள் போன்ற செய்வினைமுடிந்த பண்டங்களின் ஏற்றுமதியும் பெருகியது. இந்தியா, பிரிட்டிஷ் பண்டங்களுக்கு (எப்பொழுதும்) மிகச் சிறந்த சந்தையாக இருப்பதைப் போன்றே, இங்கிலாந்தும் இந்தியப் பண்டங்களுக்கும், மிகச்சிறந்த சந்தையாக இருக்கிறது என்பது எப்போதும் கவனத்திற்கு வருவதில்லை. பிரிட்டிஷ் பண்டங்களின்மீதிருந்த கட்டணங்களைக் குறைப்பதற்குப்பதிலாக மற்றநாட்டுப் பண்டங்களின் மீதிருந்த தீர்வைகளை உயர்த்து வதன் மூலம்தான் இந்தியாவில் ஏகாதிபத்தியச் சலுகைமுறை அளிக்கப்பெற்றது. இப்படி இருந்தாலும் கூட, இந்தியச் சந்தையில் செய்வினைமுடிந்த பிரிட்டிஷ் பண்டங்களுக்கிருந்த நிலையை உயர்த்துவதற்கு சலுகைமுறை உதவியாக இருந்தது. யென் நாணயம் (yen) மதிப்பிறக்கமடைந்ததால், ஆடை, பல வகையான பருத்தித் துணிகள், குடைகள், சைக்கிள் வண்டிகள் போன்ற சில பண்டங்களுக்குச் சலுகைமுறையினால் கிடைக்கக் கூடிய பயனும் இல்லாமல் போயிற்று. இவ்வாறுக, மந்த காலத்தில் வாணிபம் பரவலடைந்ததால் உடனடியாகக் கிடைத்த பயனையும், வாணிபம் மீட்சியுற்றதும் இழக்க நேரிட்டது. வாணிபச் சுழலின் போக்கு, நாணய மாற்றுச் செலாவணி மாற்றங்கள், சுங்கவரி மாற்றங்கள் அறுவடை களில் ஏற்ற இறக்கங்கள் போன்ற மற்றக் காரணங்களும் வாணிபத்தைப்பாதித்தன. இவற்றின் விளைவுகளிலிருந்து சலுகை

[1] ஒட்டாவா ஒப்பந்தத்திற்குப் பிறகு, இந்திய வாணிபத்தின் இயல்பையும் போக்கை யும் பற்றிய விளக்கமான பகுப்பாராய்ச்சிக்கு, B. Madan, India and Imperial Preference என்ற நூலைப்பார்க்கவும்.

[2] *V*, Reports on the Working of the Scheme of Preference resulting from the Trade Agreements concluded at Ottawa, 1934 and 1935. 1932-33, 1934-35 இவ்வாண்டுகளுக்கு இடையே, இந்திய இறக்குமதிகளில் இங்கிலாந்தின் பங்கு 37 சதவீதத்திலிருந்து, 40·6 சதவீதத்திற்கு உயர்ந்தது; இந்திய ஏற்றுமதிகளில் இங்கி லாந்து எடுத்துக்கொண்டது 28 சதவீதத்திலிருந்து 31·6 சதவீதத்திற்கு உயர்ந்தது. இந்திய இறக்குமதிகளில் இங்கிலாந்தின் பங்கு 1935-36-ல் 38·8 சத வீதத்திற்கும், 1936-37-ல் 38·4 சதவீதத்திற்கும், 1938-39-ல் 30·5 சதவீதத்திற்கும் மறுபடியும் குறைந்தது. இந்திய ஏற்றுமதிகளில் இங்கிலாந்தின் பங்கும், 1935-36-ல் 31·5 சத வீதத்திற்குக் குறைந்தது. ஆனால், 1936-37-ல் 32·1 சதவீதத்திற்கும், 1938-39-ல் 34·3 சதவீதத்திற்கும் உயர்ந்தது.

முறையினால் ஏற்பட்ட விளைவுகளைப் பிரித்தெடுப்பது மிகவும் கடினமான செயலாகும்.

சலுகை முறையினால் இங்கிலாந்தைவிட இந்தியர் அதிகப் பயனடைந்தது (இவ்வுண்மை இந்தியாவில் மறுதளிக்கப் பெற்றது) என்பது உண்மையென்றாலும், இந்தியச் சட்டசபை, ஒட்டாவா ஒப்பந்தத்திற்கு முடிவுகட்டவேண்டும் என்று 1936ஆம் ஆண்டு மார்ச் 30-ல் ஒரு தீர்மானத்தை நிறைவேற்றியது. இதனால், புதியஒப்பந்தம் ஒன்றுக்குப் பேச்சுவார்த்தைகள் தொடங்கி, அடுத்த மூன்றாண்டுக் காலத்திற்குத் தொடர்ந்து நடந்துகொண்டிருந்தன. இந்தியாவில், ஏகாதிபத்தியச்சலுகை முறையைவிட 'இருமுக வாணிப ஒப்பந்தங்கள்' (Bilateral trade agreements) இந்தியாவுக்கு ஏற்றனவாக அமையுமென்ற கருத்து நிலவியது. ஆகவே, ஐரிஷ் டியரசுநாடு, ஆஸ்டிரேலியா உள்படப் பலநாடுகளுடனும் பேச்சுவார்த்தைக்கான நடவடிக்கைகள் தொடங்கின.[1]

முடிவில், 1939ஆம் ஆண்டில் ஒரு புதிய ஒப்பந்தம் நிறைவேறியது. பிரிட்டிஷ் பண்டங்களுக்குக் கிடைத்துவந்த சலுகையை இந்த ஒப்பந்தம் தீவிரமாகக் குறைத்தது; சலுகை பெற்ற பொருள்களின் எண்ணிக்கை 106-லிருந்து 20-க்குக் குறைக்கப்பெற்றது. இருந்தாலும், பிரிட்டிஷ் பருத்தித் துணிகளுக்குச் சில சலுகைகள் கிடைத்தன. ஆனால், பிரிட்டிஷ் இறக்குமதிகள் இந்தியாவில் வரையறுக்கப்பெற்ற ஓர் எல்லைக்குள்ளாக இருக்கவேண்டும். குறிப்பிட்ட அளவுகளில் இந்தியக் கச்சாப் பருத்தியை இங்கிலாந்து இறக்குமதி செய்யவேண்டும் என்கிற நிபந்தனைகளின் மேல்தான் இச் சலுகைகள் அளிக்கப்பெற்றன. இந்தியாவைப் பொறுத்தஅளவில், ஒட்டாவா ஒப்பந்தத்தின் சலுகைகள் அனைத்தையும் அதனுடன் மேற்கொண்டு சில உறுதிகளையும் நிறுத்திக்கொண்டது. ஆனால், அன்னிய நாட்டுக் கோதுமையிலிருந்த பிரிட்டிஷ் இறக்குமதித் தீர்வை 1938ஆம் ஆண்டில் ரத்தானதும், கோதுமைக்கு இருந்த சலுகை நீங்கியது; அரிசிக்கு இருந்த சலுகையும் குறைந்தது.[2]

ஒட்டாவா ஒப்பந்தம் ஓர் அளவுக்கு ஏமாற்றத்தை அளித்தாலும், இலங்காஷைர் பிரதிநிதிகளுடன் நடந்த பேச்சுவார்த்தை

[1] பர்மாப் பிரிவினைக்குப்பிறகு, வாணிபத் தொடர்புகளைக் கட்டுப்படுத்த, பர்மாவுடன் நடந்த வாணிப ஒப்பந்தத்தின் விளக்கத்தை இவ்வத்தியாயம் 10ஆம் பிரிவில் காணலாம்.

[2] இந்தியா, கோதுமையை மிகக்குறைந்த அளவில் ஏற்றுமதி செய்து வந்ததாலும், அரிசியை நிகரத்தில் இறக்குமதி செய்து வந்ததாலும் இவ்விரு விலக்குகளும், இந்திய நலன்களை அதிகம் பாதிக்கவில்லை என்பது வெளிப்படையாகும்.

களும் ஒப்பந்தங்களும் இவற்றின் விளைவால் இந்திய இங்கிலாந்து வாணிபம் வளரவேண்டும் என்று இரு நாடுகளிலும் வளர்ந்து வந்த எண்ணமும், இரு நாடுகளினுடைய வணிகவகுப்பினரிடையே சிறந்ததொடர்பை வளர்க்க உதவின. ஆனால், இந்திய அரசியல் தலைவர்கள், ஒட்டாவா ஒப்பந்தம் இந்தியாவின்மேல் திணிக்கப்படுகிறது என்றும், அவ்வாறு திணிக்கப்படும் பொழுது நிதி சுயாட்சிக்கு என்ன பொருள் என்றும் வினவினர். வாணிபத்தில் பேதங்காட்டுவதைத் தடுப்பதற்காக, 1935ஆம் ஆண்டின் அரசியலமைப்பில் சேர்க்கப்பட்டிருந்த முக்கிய விதிகளை அவர்கள் கண்டித்தனர்.[1] நிதிச் சுயாட்சியைப் பற்றி இருந்த கருத்து வேறுபாட்டுக்கு, அதன் விளக்கமே காரணமாகும். இந்தியச் சுங்கவரிக் கொள்கையை 'இந்தியா' (இந்தியப் பிரதிநிதிகளால் என்ற பொருளில்) முடிவு செய்யவேண்டும் என்பதே நிதி சுயாட்சி என்று இந்தியர்கள் கருதினர்கள். இந்திய அரசாங்கமும், இந்தியச் சட்டப்பேரவையும் முடிவுசெய்த கொள்கையில் பிரிட்டிஷ் அரசாங்கம் தலையிடக்கூடாது; இதுவே நிதி சுயாட்சி என்பது என்று இந்திய அரசாங்கம் கருதியது. மந்தகாலத்தில் இருந்த உயர்ந்த கட்டணங்களும், மந்தம் மறைந்ததும் இருந்த வாணிபச் சுறுசுறுப்பும், தீர்வைகளினால் ஏற்பட்ட தொழிற்காப்பு விளைவுகளை மாற்றுவதாக இருந்தன. ஆதலால் தொழிற்காப்பு அதிகரிப்பினால் ஏற்பட்ட வருவாய் நட்டத்தை (உயர்ந்த இறக்குமதித் தீர்வைகளினால் ஏற்பட்ட தொழிற்காப்பு விளைவுகளையும்), ஒவ்வொரு தீர்வையிலும் உண்டான இறக்கத்தை கணக்கிடுவதாலன்றி,[2] மதிப்பிடுவது எளிதன்று. மொத்தத்தில், இறக்குமதித் தீர்வைகளினால் கிடைத்த வருவாய் இறக்கமடையாமல் இருந்தது வியப்பையூட்டியது. அவ் வருவாய் 1926–27ஆம் ஆண்டில் ரூ. 41 கோடியிலிருந்து 1928–29ஆம் ஆண்டில் உச்சநிலையான ரூ. 42 கோடியை அடைந்தது; 1930–31ஆம் ஆண்டில் கீழ்மட்டமான ரூ. 31 கோடிக்கு இறங்கியது; 1932–33ஆம் ஆண்டில் ரூ. 44 கோடிக்கு உயர்ந்தது; 1936–37ஆம் ஆண்டில் ரூ. 37 கோடிக்குக் குறைந்தது; ஆனால், 1937–38ஆம் ஆண்டில் ரூ. 43·9 கோடிக்கு உயர்ந்தது.[3]

[1] இவ்வத்தியாயத்தின் 5ஆம் பிரிவைப் பார்க்கவும்.

[2] இவ்வத்தியாயத்தின் 5ஆம் பிரிவைப்பார்க்கவும்.

[3] *V.* The Burden of the Indian Tariff, p. 15 (Studies in Indian Economics; Office of the Economic Adviser; First Series, No. 1). இப் புள்ளி விவரங்கள், இவ்வத்தியாயத்தின் 8ஆம் பிரிவில் அட்டவணை 10-ல் கொடுக்கப்பட்டுள்ள விவரங்களைவிட, குறைந்த இனங்களையே உள்ளடக்கியுள்ளன. அட்டவணையில் உள்ள புள்ளி விவரங்கள், ஏற்றுமதித் தீர்வைகள் ஆயத்தீர்வைகள் இவற்றின் விவரங்களையும் காட்டுகின்றன.

தேயிலை, சர்க்கரை இவற்றின் உற்பத்தியைக்கட்டுப்படுத்தும் பன்னாட்டுத் திட்டங்களில், இந்தியா பங்கெடுத்துக் கொண்டதைப்பற்றி இச் சந்தர்ப்பத்தில் குறிப்பிடவேண்டும்.[1] தேயிலைக்கான ஒப்பந்தம் இந்தியா, சிலோன், டச்சுக் கிழக்கிந்தியத் தீவுகள் இந்த நாடுகளிடையே 1933ஆம் ஆண்டில் உருவாகியது. தேயிலையின் விலையையும் உற்பத்தியையும் பன்னாட்டு அடிப்படையில் நிலைப்படுத்தும் முயற்சிகளுள் இவ்வொப்பந்தம் மிகுந்த வெற்றிகரமானதாகும். இது, பல்வேறு தேயிலைச் சங்கங்களின் முயற்சியால் ஏற்படாயிற்று; ஆனால், அச்சங்கங்களின் அரசாங்கங்கள் இந்த ஏற்பாட்டை ஆதரித்தன; ஒப்பந்தத்தைச் செயலாக்கவும் அரசாங்கங்கள் உதவின. இவ்வொப்பந்தத்தின் வெற்றிக்கு இரண்டு காரணங்கள் இருந்தன. முதலாவதாக, தேயிலை அறுவடைகள் (அளவில்) ஆண்டாண்டுக்கும் வெகு குறைவாகவே மாறுதலடைகின்றன. இரண்டாவதாக, உற்பத்தியின் பெருமளவும், குறைந்தளண்ணிக்கையுள்ள பெரிய கும்பெனிகளின் கையில் இருப்பதால் இவைகள் எளிதில் ஒத்துழைக்கமுடிகிறது. உற்பத்தியைச் சிறிதளவு மட்டுப்படுத்த எடுத்துக்கொண்ட முயற்சி, ஓரிரு ஆண்டுகளுக்கும் நல்ல இலாபமடையும் அளவுக்கு விலைகளை உயர்த்தியது. அதற்குப் பிறகு, உற்பத்தி வீதப் பங்குகளும் (Output quotas), விலைகளும் குறுகிய வரம்பிற்குள் நிலைப்படுத்தப்பெற்றன. 1938ஆம் ஆண்டில் நிறைவேறிய இந்தியத் தேயிலைக் கட்டுப்பாட்டுச் சட்டம் (The Indian Tea Control Act of 1938), தேயிலைத் திட்டத்தில் இந்தியாவின் அங்கத்தினர் பதவியைப் புதுப்பிப்பதற்கான விதியை உள்ளடக்கியிருந்தது.

1931ஆம் ஆண்டில் நிறைவேறிய சாட்போர்ன் சர்க்கரைக் கட்டுப்பாட்டுத் திட்டத்தில் (Chadbourne Sugar Restriction Scheme), சர்க்கரை ஏற்றுமதி செய்யும் முக்கிய நாடுகள்தாம் அங்கத்தினர்களாக இருந்தன. இத் திட்டத்தில் இந்தியா அங்கத்தினராக இல்லை. ஆனால், 1938ஆம் ஆண்டின் பன்னாட்டுத் திட்டம், பன்னாட்டுச் சர்க்கரைவாணிபத்தில் அக்கறை கொண்டஎல்லா நாடுகளையும் திட்டத்தின் அங்கத்தினர்களாக ஆக்குவதையும், தொழிற்காப்பின் மூலமாகவோ அல்லது உதவித் தொகையின் மூலமாகவோ அல்லது இரண்டின் மூலமாகவோ இறக்குமதி நாடுகளிலிருந்த சர்க்கரை உற்பத்திப் பெருக்கத்தைத் தடுப்பதையும் நோக்கங்களாகக் கொண்டிருந்தது. இக் காலத்தில் தொழிற்காப்பின் உதவியால் இந்தியா தன்நிறைவு நிலையை அடைந்ததுடன், சர்க்கரையை ஏற்றுமதி செய்யக்கூடுமென்று எதிர்பார்க்கப்பெற்றது. இவ் வொப்பந்தத்தின்படி, இறக்குமதி

1 V. P. L, Yates, Commodity Control.

நாடுகள் தங்களுடைய உற்பத்தியை மேலும் பெருக்குவதில்லை யென்று உறுதியளித்தன. இந்தியா, பர்மா நீங்கலாக மற்ற நாடுகளுக்குச் சர்க்கரையை ஏற்றுமதி செய்வதில்லை என்று உறுதியளித்தது. இதற்கெதிராக இந்தியா, பிரிட்டிஷ் பேர ரசுக்குள் நிலவிய சலுகை ஏற்பாட்டினைத் தொடர்ந்து நீடிக்க அனுமதிக்கப்பெற்றது.

1933ஆம் ஆண்டின் பன்னாட்டு ரப்பர்க் கட்டுப்பாட்டுத் திட்டத்தில் இந்தியா அதிகாரபூர்வமாகச் சேரவில்லை. ஆனால், தோட்ட முதலாளிகள் (இவர்களில் பெரும்பான்மையினரும் ஐரோப்பியர்கள்) தாமாகவே முன்வந்து திட்டத்தின் விதப் பங்குக் கட்டுப்பாடுகளுக்கு இணங்கினர்.

மேற்கூறியவற்றிலிருந்து, இந்திய சுங்கவரிக் கொள்கை 1939ஆம் ஆண்டு வாக்கில் எந்தவித அறிவிப்போ விசாரணையோ இன்றி 1923ஆம் ஆண்டில் கையாளப்பெற்ற கொள்கையிலிருந்து வெகுவாக மாற்றமடைந்திருந்தது. என்பதை அறியலாம். எச்சரிக்கையுடன் கையாளப்பெற்ற பேதங்காட்டும் தொழிற் காப்புக் கொள்கையிருந்த இடத்தில், பொதுவான தொழிற் காப்புக் கொள்கை கையாளப் பெற்றது. இத்தொழிற் காப்புப் பெரும்பாலும் வருவாய்த் தீர்வைகளை உயர்த்தியதன் மூலமாகவே கைவரப்பெற்றது. சுங்கவரிக் கொள்கையில், ஏகாதிபத்தியச்சலுகைமுறை ஒருமுக்கிய அங்கம் வகிக்கலாயிற்று. இந்தியா பல நாடுகளுடன் இருமுக வாணிப ஒப்பந்தம் செய்து கொண்டது. 'பன்னாட்டுப் பண்ட ஒப்பந்தங்களி'லும் (International Commodity Agreements) முக்கிய பாகமேற்கத் தொடங்கியது.

இத்தகைய தொழிற்காப்பு இந்தியாவுக்கு மிகுந்த செலவை உண்டாக்கும் என்று மேலே குறிப்பிட்டோம்.[1] ஆனால், உள்நாட்டு, வெளிநாட்டுச் சூழ்நிலைகள் இரண்டும் 1920-க்குப் பிறகும், 1930-க்குப் பிறகுங்கூடப் பெரிதும் மாறுதலடைந்தன. பொருளாதார மந்தம், உள்நாட்டுத்தேவை (Internal Demand) குறையச் செய்யாமலிருக்கவேண்டிய அவசியத்தையும், பன்னாட்டு வாணிபத்திற்குப் பரவலான திட்டம் வகுக்கவேண்டிய அல்லது அதைக் கட்டுப்படுத்தவாவது வேண்டிய அவசியத்தையும் உண்டாக்கியது. இவைகளுடன் கூட, இந்தியாவின் தொழிற் சக்தியிலும் பெருக்கமிருந்தது. தொழிற்காப்புக் கொள்கைக்கு இக் காரணங்கள் ஆதரவளிப்பனவாக இருந்தன. பின்னர்[2], இந்தியா

[1] 13ஆம் அத்தியாயத்தைப் பார்க்கவும்.

[2] இதே அத்தியாயத்தின் §5ஆம் பிரிவைப் பார்க்கவும்.

வின் தொழில் வளர்ச்சியையும், மந்தகாலத்தில் எழுந்த பிரச்சினைகளையும் சீர்தூக்கிப் பார்க்கும்பொழுது, இந்தியாவுக்குத்தொழிற் காப்பின் செலவு மிகக்குறைவாகவே இருந்தது என்பதும், அதனால் கிடைத்த பயன்கள் மிக அதிகமாக இருந்தன என்பதும் தெரியவரும்.

§ 5. தொழில், விவசாயப் பிரச்சினைகளும் அரசாங்கக் கொள்கையும்.

இந்த அத்தியாயத்தின் முற்பகுதியில், இந்தியாவின் மாபெரு மந்தத்தின் தாக்குதலையும் அதன் இயல்புகளையும் ஆராயும்போது, 1929–30-ல் ஏற்பட்ட நெருக்கடியினாலும் அதன் பின்னர்த் தோன்றிய மந்தத்தினாலும் இந்திய விவசாயத்திற்கும் தொழில் வளர்ச்சிக்கும் ஏற்பட்ட விளைவுகளைக் கண்டோம். மந்தகாலத்தில் அரசாங்கம் கையாண்ட 'வாணிபக் கைக் கோள்'ப் பற்றிக் கூறினோமேதவிர, மற்றத்துறைகளில் கையாண்ட கொள்கைகளைப் பற்றியோ அல்லது தொழில் துறையிலும், விவசாயத் துறையிலும் ஏற்பட்ட தனித்தன்மையுள்ள பிரச்சினைகளைப் பற்றியோ ஒன்றும் கூறவில்லை.

இந்தியாவின் முக்கிய நவீனத்தொழில்கள் பலவும் உள் நாட்டில் உற்பத்தியாகும் மூலப்பொருள்களையே நம்பியிருப் பதால், விவசாயத் துறைச் சிக்கல்களும் தொழில் துறைச் சிக் கல்களும் ஒன்றோடொன்று இணைந்திருக்கின்றன. ஆகவே, இந்தியாவின் தொழில் பிரச்சினைகள், விவசாயப் பிரச்சினைகள், இப்பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு அரசாங்கம் கையாண்ட கொள் கைகள் இவைஅனைத்தையும் ஒன்றுக இணைத்து ஒரு பிரிவில் ஆராய்வது பொருத்தமாக இருக்கும்.

பொதுவாக இக் காலம் முழுவதிலும் விவசாயத் துறையின் முன்னேற்றம் மிகவும் வருந்தத்தக்க நிலையில்தான் இருந்தது. இதனால், விவசாயத்தை வளர்க்க அரசாங்கம் எந்தவித முயற் சியும் எடுக்கவில்லை என்றோ, அல்லது அரசாங்கம் எடுத்த முயற் சிகள் சிறிதளவேனும் வெற்றிகரமாக இல்லை என்றோ எண்ணு வது தவறாகும். ஆனால் விவசாயத்தை செம்மையுறச் செய்யவும் அடிப்படையான சீர்திருத்தங்களை மேற்கொள்ளவும் அரசாங் கம் முனையவில்லை என்பது உண்மைதான். குறிப்பாக, மக்கள் தொகை இந்தியாவின் விவசாய உற்பத்தியை விஞ்சும் அள வுக்குப் பெருக்கமடைந்ததால் ஏற்பட்ட சிக்கலைத் தீர்ப்பதற்கு அரசாங்கம் எந்தவித நடவடிக்கையும் மேற்கொள்ளவில்லை.

வாழ்க்கைக்கு இன்றியமையாத உணவுப்பொருள்களை உற்பத்தி செய்வதிலோ அல்லது மற்றநாடுகளிலிருந்து பெறுவதிலோ இந்தியாவுக்கு இருக்கும் சக்தியை மீறி மக்கள்தொகை பெருக்க மடைந்திருக்கிறது என்பதில் சிறிதளவேனும் ஐயமில்லை. மக்கள் தொகைப் பெருக்கத்தினால், இந்தியாவின் உணவுத்தேவை அதனுடைய சாதனங்களையும் மீறி அதிகரித்துவந்தது.[1] அதே நேரத்தில் இந்தியா உணவுப் பொருள்களை ஏற்றுமதி செய்து, பதிலாக அயல்நாட்டுப் பொருள்களைத் தருவிக்கக் கடந்த காலத்தில் இருந்த திறனையும் இழந்தது. இந்தியாவின் தொழில் உற்பத்தி தொடர்ந்து வளர்ச்சியடைந்து வந்தது என்பது உண்மைதான். ஆனால், நவீனத் தொழில்கள் உள்நாட்டுத் தேவைகளையே உற்பத்தி செய்வனவாக இருந்தன. மேலும், தொழில் வளர்ச்சியால், தளவாடங்களையும் இயந்திரங்களையும் இயந்திரக் கருவிகளையும் அதிகஅளவில் இறக்குமதி செய்ய வேண்டியிருந்தது. பர்மாப் பிரிவினையால் 1937ஆம் ஆண்டுக்குப் பிறகு இந்தப் பிரச்சினை மேலும் சிக்கலடைந்தது. பிரிவினையால், பற்றாக்குறையுள்ள மாகாணங்களுக்கு அரிசி அளித்துவந்த பகுதியை இந்தியா இழக்க நேரிட்டதோடு, வெளிநாட்டு வாணிபத்தில் இதுவரையில் பண்டங்களின் இறக்குமதியைவிட ஏற்றுமதியில் மிகுதியாக இருந்த நிலையையும் இழந்தது.

நாட்டின் மொத்த உற்பத்தியையும் சராசரி ஏக்கரின் உற்பத்தியையும், விவசாயிகளின் தலா உற்பத்தியையும் எவ்வாறு பெருக்குவது என்பது, இந்திய விவசாய அபிவிருத்தியின் முக்கியப் பிரச்சினையாகும். விவசாய அமைப்பிலும், நிலவரி முறைகளிலும் ஓரளவுக்கு மாறுதல் செய்யாமல் இந்தப் பிரச்சினையைத் தீர்க்க முடியாது. ஆனால், இந்திய அரசாங்கம் இந்தியாவில் பரம்பரை பரம்பரையாக நிலவும் முறைகளிலும், பழக்க வழக்கங்களிலும் தலையிட மிகவும்தயங்கியது. 1928ஆம் ஆண்டில் நியமிக்கப்பெற்ற 'விவசாய ஆணைக்கழகம்' (Agricultural Commission of 1928) செய்த சிபாரிசுகளின் மேல்தான் மந்தகாலத்தில், அரசாங்கக் கொள்கையில் மாற்றங்கள் ஏற்பட்டன. ஆனால் நிலவரி, முறையை ஆராயும் அதிகாரம் ஆணைக்கழகத்திற்குக் கொடுக்கப்படவில்லை. இதன்விளைவால், அடிப்படையான சீர்திருத்தங்கள் எதுவும் கையாள முடியாமல் போயிற்று. இரட்டை ஆட்சியின்கீழ் (Dyarchy)ப் பல மாகாணங்களும், விவசாயிகளின் கடன்களைக் குறைப்பதற்கும், நிலவரிமுறையை

[1] 1940 வாக்கில் மக்கள்தொகை ஆண்டாண்டுக்கு 4 அல்லது 5 மில்லியன் அதிகரித்துவந்தது. 1931-க்குப் பிறகு மக்கள்தொகை வளர்ச்சியின் வீதம் 1921-க்கும் 1931-க்கும் இடைக்காலத்தில் இருந்ததற்குக் குறையாமல் இருந்தது.

மாற்றியமைக்கவும் முனைந்தன என்பது உண்மைதான். இருப்பினும் மாகாணசுயாட்சி கிடைக்கும்வரை இத்தகைய அடிப்படையான பிரச்சினைகளில் அதிகக் கவனம் செலுத்தவில்லை.

1928ஆம் ஆண்டின் விவசாய ஆணைக் கழகத்துச் சிபாரிசின் மேல் 'விவசாய ஆராய்ச்சிக்கு ஏகாதிபத்தியக் குழு' (Imperial Council of Agricultural Research) ஒன்று நியமிக்கப் பெற்றது. விவசாயத்தில் நடக்கும் ஆராய்ச்சிகளை ஒருமைப் படுத்துவதே இக் குழுவின் முக்கியப் பணியாகும். இந்தத் துறையில், குறிப்பாகச் சர்க்கரை, கோதுமை, பருத்தி இவைகளின் ஆராய்ச்சியில் குழுவின் பணி சிறந்த பயனைத்தந்துள்ளது. பிரிட்டிஷ் இந்தியாவின் எல்லா மாகாணங்களும், சுதேச அரசுகளில் (ஹைதராபாத்) மைசூர், பரோடா, திருவாங்கூர், கொச்சி, போபால் இவைகள் உள்பட) பலவும்ஆராய்ச்சிக் குழுவுடன் ஒத்துழைத்தன. விவசாய உற்பத்தியையும் விற்பனையையும் மேம்படச் செய்யவும், விவசாயக் கடன்களுக்கு நிவாரணம் அளிக்கவும், கிராமிய வாழ்க்கைக்குப் புத்துயிர் அளிக்கவும் ஏதுவான ஒரு கொள்கை உடனடியாகத் தேவைப்படுகிறது என்பதைப் பொருளாதார மந்தம் உணர்த்தியது. விவசாய விற்பனையைப் பற்றியும், விவசாயக் கடன் தொல்லைகளைப் பற்றியும், 'மத்திய பாங்கு விசாரணைக் குழு', 1931 (Central Banking Enquiry Committee) தந்த முடிவுகளும் இத்தகைய கொள்கையின் அவசியத்தை வலியுறுத்துவனவாக இருந்தன. விவசாயம் ஒரு மாகாண இனமாக இருந்தாலும், விவசாயக் கொள்கையை ஒருமைப்படுத்த மத்திய அரசாங்கம் ஆவன செய்யவேண்டுமென்று கருதப்பெற்றது. ஆகவே மத்திய அரசாங்கம் 1934-ஆம் ஆண்டில் ஒரு மாகாணப் பொருளாதார மாநாட்டைக் கூட்டியது. இந்த மாநாட்டில் மாகாண விற்பனை அலுவலர்களையும் (Provincial Marketing Officers) மத்திய விற்பனை அலுவலர்களையும் நியமிக்க வேண்டுமென்றும், விற்பனை ஆய்வுகளை மேற்கொள்ள வேண்டுமென்றும், (சிறந்த பயிர்களைத் தேர்ந்தெடுப்பதிலும், புதிய பயிர்களைச் சாகும்படி செய்வதிலும் குடியானவர்களுக்கு உதவ) பயிர்களைப் பற்றிய மாநாடுகளை அவ்வப்போது கூட்டவேண்டுமென்றும் விவசாய ஆராய்ச்சிக்கு ஏகாதிபத்தியக் குழுவின் ஆதரவில் விவசாயப் பொள்களைத் தரப்படுத்தும் செயலை மேற்கொள்ள வேண்டுமென்றும் தீர்மானங்கள் நிறைவேறின. இத் தீர்மானங்களுக்கு இணங்க, விற்பனை அலுவலர் நியமிக்கப் பெற்றனர்; பல விற்பனை ஆய்வுகள் நடந்தேறின.[1] சந்தைகளில்

[1] விற்பனை அறிக்கைகளின் பட்டியலுக்கு, இந் நூலின் கடைசிப்பக்கங்களில் உள்ள நூலாசிரியர்களின் தொகுப்பைப் பார்க்கவும்.

நிறுவைகளை ஒரு தரமாக்க வேண்டுமென்று சட்டம் இயற்றப் பெற்றது. முட்டை, பழம், நெய் முதலியவைகளிலும், மற்றப் பொருள்களிலும் தரப்படுத்தும் முறை (grading) நல்ல முன்னேற்றமடைந்தது.[1]

இச் சந்தர்ப்பத்தில் வானொலியின் முக்கியத்துவத்தை மறந்துவிடக் கூடாது. கிராமப்புற மக்கள் நவீன கருத்துகளையும் முறைகளையும் அறிந்து கொள்வதற்கு வானொலி அரிய வாய்ப்புகளைத் தருகின்றது. பல மத்திய நிலையங்களும், சில மாவட்ட நிலையங்களும் (மொழிவாரியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டு) நிறுவப்பெற்றன. நாடுமுழுவதையும் வானொலிமூலம் இணைக்க வேண்டுமென்று திட்டமும் வகுக்கப் பெற்றது. சுகாதாரம், விவசாயஅபிவிருத்தி, விவசாயவிற்பனை போன்ற தலைப்புகளில் தாய்மொழியில் அன்றுடம் உரை நிகழ்ச்சி ஏற்பாடு செய்யப்பெற்றது.

மாகாண அரசாங்கங்கள், சுதேசஅரசுகள் இவைகளின் கிராம அபிவிருத்தித் திட்டங்களுக்கு மத்திய அரசாங்கத்திடமிருந்து வருடாந்தர உதவித் தொகை கிடைத்தது. தண்ணீர் வசதி,வடிகால் (Drainage), கிராமச் சாலைகள், துப்புரவு, சிறு நில உடைமைகளை இணைப்பது, மலேரியாக்காய்ச்சல் தடுப்புத்திட்டம் இவைகளை அபிவிருத்தி செய்வதே சிறந்தபணிகள் என்று மத்தியஅரசாங்கம் அறிவித்தது. பம்பாய் மாகாணத்தில் கிராம அபிவிருத்தித் திட்டத்துடன், கிராமஆட்சி முறையைப் புதுப்பிக்கவும் பல முயற்சிகள் நடந்தன. சிலதொகுதிகளில் நிலவளம் குறைந்து வந்ததைத் தடுப்பதற்காக வங்காளத்தில் ஒருதிட்டம் வகுக்கப்பெற்றது. இத் திட்டத்திற்கு ஆகும் செலவுக்காக அந்த நிலங்களை அனுபவிப்பவர்கள்மேல் ஒரு மேம்பாட்டுத்தீர்வை விதிக்கப்பெற்றது. ஐக்கிய மாகாணத்திலும், வடமேற்குஎல்லை மாகாணத்திலும், பாசன வசதிக்கும் மற்றஅபிவிருத்திகளுக்கும் அடிப்படையாக நீர்மின்சாரத் திட்டம் (Hydro Electric Scheme) கையாளப் பெற்றது. திருவாங்கூரில், கூட்டுறவு முறையில் விற்பனை செய்தல், பாசன வசதியைப் பரவலடையச்செய்தல், பிற்போக்கான தொகுதிகளில் நிலவரியைத்தள்ளுபடி செய்தல் போன்றவைகளை ஒன்றுக இணைத்து ஒரு பொருளாதாரத் திட்டம் இருந்தது.[2]

[1] 1939-ஆம் ஆண்டுவாக்கில் 130-க்கு மேலான தரப்படுத்தும் நிலையங்கள் திறக்கப் பெற்றன.

[2] *V.* Asiatic Review, June 1934; Insuranc and Finance Review, April 1935;. Times, September, 7, 1939 and Industrial and Labour Information (I.L.O.) March 11, 1935.

விவசாயிகளின் கடன்பிரச்சினையைப் பற்றிப் பல மாகாணங்களிலும், சுதேச அரசுகளிலும் தனிவிசாரணைகள் நடந்தன. இவ் விசாரணைகளின் விளைவால் விவசாயிகளின் கடனையும், வட்டித் தொகையையும் நியாயமான அளவுக்குக் குறைக்கவும், இவர்கள் கடன்களைத் திருப்பிக்கொடுக்க உதவவும், பலவகையான திட்டங்கள் உருவாயின[1] விவசாயிகளின் பழைய கடன்களை மட்டும் அடைத்தால் போதாது. எதிர் காலத்தில் புதிய கடன்கள் ஏற்படுவதையும் தடுக்க வேண்டும் என்று கருதப்பெற்றது. இதற்காக, விவசாயிகளின் நீண்டகாலத் தேவைகளுக்கு நிதிஉதவி அளிப்பதற்காகப் பல நிலஅடைமான பாங்குகள் நிறுவப்பெற்றன.

இக் காலத்தில் விவசாயம், பொருளாதார மந்தத்தால் பாதிக்கப்பட்டதுடன், தனித்தன்மையுள்ள சில பிரச்சினைகள், குறிப்பிட்ட தொகுதிகளையும், பயிர்களையும் பாதித்தன. சணல் உற்பத்தியையும், சணல் ஏற்றுமதியையும் வங்காளம் பெரிதும் நம்பியிருந்ததால், சணல் தொழிலில் மந்தம் ஏற்பட்டபொழுது, வங்காளத்தின் நிலைமை மிகவும் நலிவுற்றது. 1930–31-ல் வங்காளச்சணல் உற்பத்தியின் மொத்தமதிப்பு 1926-ல்இருந்ததில் ஐந்தில் ஒரு பங்குக்குமேல் இல்லை. இதன் விளைவால் நிதி நெருக்கடி ஏற்பட்டு, சணல் உற்பத்தியாளர்கள் தாங்களாகவே சணல் உற்பத்தியைக் குறைத்துக்கொண்டு, அரசாங்க உதவியையும் நாடினர். 'சணல் ஆலைகளின் சங்கம்' 1921ஆம் ஆண்டிலிருந்து சணல் உற்பத்தியை மட்டுப்படுத்தும் கொள்கையைக் கடைப்பிடித்து வந்தாலும், சணல் தொழில் மிகவும் பாதிக்கப்பெற்றது. சணல் உற்பத்தியைக் குறைக்கும் கொள்கை செழிப்பான காலத்தில் தொடங்கியது. சணல் உற்பத்தியாளர்கள் 'முற்றுரிமை' பெற்றிருந்ததால், உற்பத்தியைக் குறைப்பதன்மூலம் சணலின் விலையை மாற்றும் சக்தி கல்கத்தாவிலிருந்த ஆலைகளுக்குக் கிடைத்தது.

இக் காலத்தில் சணல் தொழில் பாதிக்கப்பட்டதற்கு இரண்டு முக்கியக் காரணங்கள் கூறலாம். முதலாவதாக, சாமான்களைக் கட்டுவதற்கு உபயோகமாகும் சணல் பண்டங்களுக்குத் தேவை (குறிப்பாக அமெரிக்காவின் தேவை) குறைந்தது. இரண்டாவதாக, சணல் பதிலிகளிடமிருந்து (Substitutes) சணலுக்குப் போட்டி எழுந்தது. பொருளாதார மந்தமும், பல நாடுகளிலும்

[1] பவாகர் அரசியல் நடைமுறையில் இருக்கும் திட்டத்தைப்பற்றிய சுவையான விளக்கத்திற்கு Asiatic Review, January 1936ஐப் பார்க்கவும்.

வலுப் பெற்று வந்த பொருளாதார தேசிய உணர்ச்சியும் (Economic Nationalism) இவைகளை மேலும் கேடுறச்செய்தன. சணலுக்குப் பதிலாகக் காகிதப் பை, (சிமென்டை மூட்டைகட்ட) பருத்தி, பலவகை நார்கள் இவைகள் உபயோகத்திற்கு வந்தன. அதனுடன், உலகம் முழுவதிலும் தானியங்களை ஏற்ற (கப்பல் களில்) இயந்திரக்கருவிகள் உபயோகிக்கப் பெற்றதால் சணல் பைகளுக்கு இருந்த தேவை குறைந்தது. கல்கத்தாவில் உள்ள சணல் உற்பத்தியாளர்கள் எச்சரிக்கையோடு இல்லாததுடன், தங்களுடைய 'முற்றுரிமை'யைத் தவறான வழிகளில் பயன்படுத் தினர்கள் என்றும் குற்றம் சாட்டப்பெற்றனர்.

1932-ல் நியமிக்கப் பெற்ற 'வங்காளச் சணல் விசாரணைக்குழு' 1934ஆம் ஆண்டில் சணல் உற்பத்தியை மேலும் சிறந்த முறையில் கட்டுப்படுத்த வேண்டுமென்றும், விற்பனை முறையை மேம்படச் செய்யவேண்டுமென்றும், 'மத்தியப் பருத்திக் குழுவை'ப் போன்று சணலுக்கும் ஒரு குழு நியமிக்க வேண்டுமென்றும் சிபாரிசுகள் செய்தது. வங்காள அரசாங்கம், சணல் உற்பத்தியை மட்டுப்படுத்தவும், சணல் உற்பத்தியில் ஆராய்ச்சிகள் நடத் தவும், விற்பனைமுறையை மேம்படச் செய்யவும் ஒரு திட்டத்தை வகுத்தது. மேலும், சணல் உற்பத்திசெய்யும் மாகாணங்களில் (வங்காளம், பீஹார், அஸ்ஸாம் முதலியன) சணலின்மேல் விதிக்கப்பட்டிருந்த ஏற்றுமதித் தீர்வையிலிருந்து கிடைத்த வரு வாயில் பாதி 1934-ல் வங்காளத்திற்கு உதவியாக மாற்றிக் கொடுக்கப்பெற்றது. வங்காளத்திலிருந்து மிகுந்த அளவில் ஏற்றுமதியாவதால், ஏற்றுமதித்தீர்வையிலிருந்து வங்காளத் திற்குக் கிடைத்த பங்கு மிகுதியாகவே இருந்தது.

மத்திய அரசாங்கத்தின் நிதிஉதவியுடன் 1936-ல் ஒரு 'மத்திய சணல் குழு' நிறுவப்பெற்றது. 'விவசாயத் துறையில் ஆராய்ச்சி நடத்துவதும் விசாரணை செய்வதும், இந்தியாவிலுள்ள சணல் தொழிலின் பொருளாதாரப் பிரச்சினைகளையும், தொழில் நுட்பங்களையும் ஆராய்வதும், அதனுடன் மாகாண அரசாங் கங்கள் வேண்டும்போது இத்தகைய பிரச்சினைகளைப் பற்றித் தகுந்த ஆலோசனை கூறுவதும்' இக் கழகத்தின் முக்கியப் பணிக ளாகும்.[1]

இதற் கிடையில், 'சணல் ஆலைகளின் சங்கத்தி'ல் அங்கத் தினர்கள் அல்லாத ஆலைகளின் எண்ணிக்கை பெருகியது. சங்கத் தின், சணல் உற்பத்தியை மட்டுப்படுத்தும் கொள்கையை

[1] *V.* Annual Report of Indian Central Jute Committee, 1938–39.

இவைகள் பின்பற்ற மறுத்ததால், 'சணல் ஆலைகளின் சங்கத்தின்' நிலைமை கவலைக்கிடமாகியது. ஆலைகளின் வேலை நேரத்தைக் குறைத்து, புதிய ஆலைகளின் நிறுவனம் செய்வதற்காகச் சட்டம் இயற்ற வேண்டுமென்று வேண்டிய சங்கத்தின் கோரிக்கையை மத்திய அரசாங்கம், மாகாண அரசாங்கம் இரண்டும் நிராகரித்தன. அதன்பேரில் 1936ஆம் ஆண்டு பிப்ரவரி மாதத்திற்குமேல் உற்பத்தியை மட்டுப்படுத்த வேண்டாமென்று சணல் ஆலைகளின் சங்கம் தீர்மானித்தது. இதனால், ஆலைகளில் வேலைநேரம் அதிகரித்தது. வங்காள அரசாங்கம் தன்னுடைய அதிகாரத்தை உபயோகித்துச் சணல் உற்பத்தியாளர்களிடையே ஓர் ஒப்பந்தத்தை ஏற்படுத்தவேண்டிய அளவுக்கு நிலைமை மிகவும் குழப்பமடைந்தது. ஆலைகளில் வேலைநேரத்தை வாரத்திற்கு 45மணிகளாகக் குறைக்கவும் இயந்திரங்களின் உபயோகத்தைக் கட்டுப்படுத்தவும் வங்காள அரசாங்கம் 1938ஆம் ஆண்டு செப்டம்பர் மாதத்தில் ஓர் அவசரச்சட்டத்தை (Ordinance)வெளியிட்டது. ஆனால், புதிய ஆலைகளைத் தொடங்குவதை இச் சட்டம் தடுக்கவில்லை. இதன் விளைவு, எல்லாச் சணல் ஆலைகளுக்கும் ஐந்தாண்டு அடிப்படையில் தாமே விரும்பியமுறையில் (Voluntary Scheme) ஒரு திட்டம் உருவாகியது. அத் திட்டத்தின்படி வேலைநேரம் வாரத்திற்கு 40 மணிகளுக்குக் குறையாமலும்,54மணிக்களுக்குமேற்படாமலும் இருக்கவேண்டும். என்றும் உற்பத்திமுறையில் ஏதாவது மாற்றம் வேண்டுமானால், அந்தமாற்றத்தை எல்லா ஆலைகளிலும் ஒரு முகமாகக் கையாளவேண்டும் என்றும் நிர்ணயிக்கப்பெற்றன. இதனால் அமிதஉற்பத்தி (Over production) நிலைஏற்படும் என்ற பயம் நீங்கியது. இதற்கான சட்டமியற்றுதலும் தள்ளி வைக்கப்பெற்றது. 1939ஆம் ஆண்டின் ஆரம்பகாலத்தில் போரின் அறிகுறி தோன்றியதால், சணல் சாக்குகளுக்குத் தேவை மிகுதியாக இருந்தது. இதனால், சணல் தொழிலில் ஓர் அளவுக்கு உற்சாகம் நிலவியது. ஆனால் உற்பத்திக் கட்டுப்பாடு சணல் தொழிலின் நிரந்தர இயல்பாக ஆகிவிட்டது.

பொருளாதார மந்தத்தினால் விவசாயவிலைகள் வீழ்ந்ததால், இறக்குமதிகளில் போட்டி இருந்த விளைபொருள்கள், குறிப்பாகக் கோதுமை, சர்க்கரை, பருத்தி முதலியன கேடுற்றன.[1] நாம் மேலே கண்டது போல்[2] இவ் வினங்களின்மீது தொழிற் காப்புச் சுங்கங்கள் விதிக்கப்பெற்றன.

[1] இறக்குமதிகளின் போட்டியிருந்த பொருள்களுடன், சணல்போன்ற பொருள்களுக்கு வெளிநாடுகளில் போட்டியிருந்ததால் அவைகளும் பாதிக்கப்பெற்றன.

[2] இதே அத்தியாயத்தின் முற்பகுதியைப் பார்க்கவும்.

கோதுமையைப் பொறுத்தவரையில், அதன் சாகுபடிக்கு உள்ளான நிலத்தின்அளவு குறையாவிட்டாலும், அதன் ஏற்றுமதி போருக்குமுன் இருந்தமட்டத்தைத்திரும்பவும் அடையவில்லை. அதனுடன், 1928-29க்கும் 1930-31-க்கும் இடையில் உண்மையில் கோதுமை நிகர இறக்குமதி இருந்தது. ஆனால் கோதுமையின்மேல் தொழிற்காப்புத் தீர்வை விதிக்கப்பெற்றதால், இந்தியாவுக்குத் தேவையான கோதுமை கிடைத்ததுடன் பல ஆண்டுகளில் குறிப்பிடும் அளவுக்கு ஏற்றுமதியும் இருந்தது. பல மாவட்டங்களில் மற்ற உணவுத் தானியங்களுக்குப் பதிலாக கோதுமையை அன்றுட உணவுப்பொருளாக உபயோகிக்க ஆரம்பித்தனர். இந்த மாற்றத்தினால் இரண்டுவிதப் பயன்கள் கிடைத்தன. முதலாவதாக, நுகர்வோர்களின் (Consumers) உணவுத்தரம் உயர்ந்தது. இரண்டாவதாக, கோதுமைக்கு இருந்த வெளிநாட்டுத்தேவை குறைந்த நேரத்தில் உள்நாட்டில்தேவை உயர்ந்தது அதன்விற்பனைக்கு ஏதுவாக அமைந்தது.

பயிர்களைப் பொறுத்தவரை கரும்புச் சாகுபடி 1933-34 வரையில் வெகு குறைவாகவே அதிகரித்தது. ஆனால், மந்தம் தோன்றியபின் ஜாவாவிலிருந்து மிகவும் மலிவான விலையில் இறக்குமதியாகும் சர்க்கரையிலிருந்து முதலில் உயர்ந்த அளவில் வருவாய்த் தீர்வைகள் (Revenue duties) மூலமாகவும், 1932ஆம் ஆண்டிற்குப் பிறகு, தொழிற்காப்புத் தீர்வைகள் மூலமாகவும் இந்தியச்சந்தைக்குநல்லபாதுகாப்பு அளிக்கப்பெற்றது.[1] இவ்வாறு அரசாங்கம்அளித்த பாதுகாப்பினால் நாட்டில், குறிப்பாக வட மாகாணங்களில், உயர்ந்தரகக் கரும்பு பயிரிடப்பெற்றதுடன்சர்க்கரை சுத்தம் செய்வதில் நவீனமுறைகளும் கையாளப் பெற்றன. இதனால், ஓர் ஏக்கரின் சராசரிக் கரும்பு விளைச்சலும், கிடைக்கக்கூடிய சுத்தம்செய்த சர்க்கரையும் பெருமளவுக்கு அதிகரித்தன. கரும்பிலிருந்து நேரிடையாகச் சர்க்கரையை எடுக்கும் (நாட்டுமுறையில் சர்க்கரைஎடுப்பதற்கும், வெல்லத்திலிருந்து சர்க்கரையைக் காய்ச்சுவதற்கும் பதிலாக) தொழிற் சாலைகளின் எண்ணிக்கை மிகவும் அதிகரித்தது. 1931-32-ல்

1 1930ஆம் ஆண்டில் எல்லாவிதச் சர்க்கரையின் மேலும் ஓர் அந்தருக்கு ரூ. 6 வருவாய்த் தீர்வை இருந்தது. இதுவரையிருந்ததில் இதுதான் மிகஉயர்ந்த கட்டணம். 1931ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில் அத் தீர்வை அந்தருக்கு ரூ 7-4-0 ஆகவும் 1931 செப்டம்பரில் ஒரு மேல்வரியின் மூலம் ரூ 9-1-0 ஆகவும் உயர்த்தப்பெற்றது. 1932-ல் தொழிற்காப்புத் தீர்வை ரூ 7-4-0ஆக நிர்ணயிக்கப்பெற்று, அதனுடன் ரூ 1-13-0 வருவாய் மேல்வரி (Revenue Surcharge) யும் சேர்க்கப்பட்டது. இதனால், மொத்தத்தீர்வை 1931-ல் ரூ 9-1-0 ஆகவே (முன்னிருந்தது போலவே) ஆகியது. ஆனால், தீர்வையை வருவாய்த்தீர்வைப் பட்டியலிலிருந்து, தொழிற்காப்புத் தீர்வைப் பட்டியலுக்கு மாற்றியது உற்பத்தியாளர்களுக்கு நம்பிக்கை ஊட்டுவதாக இருந்தது.

31 ஆக இருந்த இத் தொழிற்சாலைகள், 1933–34-ல் 112-க்குக் குறையாமலும், 1933–39-ல் 140 ஆகவும் இருந்தன. சர்க்கரை இறக்குமதியும் விரைவில் குறைந்து, இந்தியா 'தன் நிறைவு, நிலையையும் அடைந்தது. சர்க்கரைத் தொழில் வளர்ச்சிக்கு அரசாங்கம் ஆதரவு அளித்ததற்குப் பல காரணங்கள் இருந்தன. சர்க்கரைத்தொழில் நல்ல முன்னேற்றமடையக்கூடிய 'சிற்றிளந் தொழிலாக' இருந்தது. அதனுடன் சர்க்கரையைப் பொறுத்த வரையில் நாடு 'தன் நிறைவு' நிலையை அடையவேண்டும் என்ற அவா இருந்தது. சாகுபடியில் பயிர்களை மாற்றுவதற்குச் சர்க்கரைக்கரும்பு ஒரு சிறந்த பயிராக இருப்பதுடன், கால்நடை களுக்கும் அதிகப்படியான தீனியைக் கொடுக்கிறது. மேலும், இதுநாள் வரை பெட்ரோல் இறக்குமதிக்குப் பர்மாவையே நம்பி யிருந்ததற்குப் பதிலாக, எதிர்காலத்தில் மோட்டார் வாகனங் களுக்குத் தேவையான பவர் அல்காஹாலை சர்க்கரையிலிருந்து பெறலாம் என்ற எண்ணம் இருந்ததும் ஒரு காரணமாகும்.

மேலும், பல சர்க்கரைத் தொழிற்சாலைகளை நிறுவ ஏற்பாடுகள் நடந்தன. அதனுடன் சர்க்கரையின் நுகர்வு தற் காலிகமாகக் குறைந்ததாலும், சர்க்கரையில் அமித உற்பத்தி ஏற்படும் என்ற அச்சம் எழுந்தது. மேலும், சில ஆலைகள் கரும் பைச் சாகுபடி செய்பவர்களுக்கு நியாயமான விலையைக் கொடுக் காமல், நியாயமற்ற இலாபங்களைப் பெற்றுவந்தன என்னும் முறையீடுகள் எழுந்தன. சர்க்கரைத்தொழிலில் உள்ளதீமைகளைக் குறிப்பாக, எண்ணிக்கையற்ற புதிய தொழிற்சாலைகள் தொடங்கு வதை மட்டுப்படுத்துவதற்கும், தொழில் திறமையை வளர்ப் பதற்கும் 1934ஆம் ஆண்டில், சுத்தம் செய்த சர்க்கரையின்மேல் ஓர் அந்தருக்கு ரூ. 1–5–0 ஆயத்தீர்வை விதிக்கப்பெற்றது. சர்க்கரை இறக்குமதி முழுவதும் நின்று விட்டதால் ஏற்பட்ட பெருத்த வருவாய் நட்டத்திற்கு இந்த ஆயத்தீர்வை ஈடுசெய்யும் என்று அரசாங்கம் கருதியது.[1] அதேநேரத்தில், சர்க்கரைத் தொழிலுக்கு நிச்சயம் பாதுகாப்புக் கிடைப்பதற்கான, சர்க்கரை இறக்குமதியிலிருந்த தொழிற் காப்புத் தீர்வையும் உயர்த்தப் பெற்றது.[2] 'கரும்புச்சட்டம்' (Sugar Cane Act) மாகாண

[1] சுத்தம்செய்த சர்க்கரையின் இறக்குமதிமூலம் கிடைத்த வருவாய் : 1930–31-ல் (உச்சக் கட்டம்) ரூ 10¾ கோடியிலிருந்து 1937–38-ல் ரூ 27 இலட்சமாகக் குறைந்தது. 1937–38-ல் ஆயத் தீர்வைமூலம் கிட்டத்தட்ட ரூ 2½ கோடி கிடைத்தது.

[2] 1934ஆம் ஆண்டில் ஏற்பட்ட மாறுதல்கள் : (i) ரூ 1–5–0 கட்டணத்தில் ஓர் ஆயத்தீர்வை விதித்து, அதேஅளவில் இறக்குமதி சுங்கத்தீர்வையும் உயர்த்தப்பெற்றது ; (ii) சர்க்கரை இறக்குமதியில் இருந்த வருவாய் மேல்வரி (1–13–0) தள்ளிவைக்கப் பட்டது ; (iii) தொழிற்காப்புத் தீர்வையும் ரூ 7–4–0-லிருந்து ரூ 7–12–0-க்கு உயர்த்தப் பெற்றது. அதாவது, மொத்த இறக்குமதித்தீர்வை 1932-ல் இருந்ததைப் போலவே ரூ 9–1–0 ஆக இருந்தது. ஆயத் தீர்வைமூலம் கிடைத்த வருவாயின் ஒருபகுதி சர்க்கரைத் தொழிலின் ஆராய்ச்சிக்காகச் செலவிடப்பெற்றது.

அரசாங்கங்களுக்கு, ஒரு குறிப்பிட்ட மாவட்டத்தைக் 'கட்டுப் பாட்டுக்கு உள்ளான தொகுதி' (controlled area) என்று அறி விக்கும் அதிகாரத்தைக் கொடுத்தது. இவ்வாறு, குறிப்பிட்ட தொகுதியில் தொழிற்சாலைகள் கரும்புச் சாகுபடி செய்பவர் களுக்கு நிர்ணயிக்கப்பெற்ற விலைக்குக் குறையாமல் கொடுக்க வேண்டும். மேலும், கரும்பு ஆலைகள் அந்தத் தொகுதியில் குடி யானவர்களிடமிருந்து நேரிடையாகவோ அல்லது உரிமம் பெற்ற (Licensed) வியாபாரப் பிரதிநிதிகளிடமிருந்தோதான் கரும்பை வாங்கவேண்டும். ஐக்கிய மாகாணம் இதற்கிணங்க உடனடி யான நடவடிக்கை எடுத்து, கொள்முதல் பிரதிநிதிகளுக்குக் (Purchasing agent) கொடுக்கவேண்டிய கட்டணம், தள்ளுபடி (commission) இவை நீங்கலாக (இவர்களுக்குச் சர்க்கரை ஆலைகள் ஊதியம் கொடுத்தன) குடியானவர்களுக்குக் கொடுக்கவேண்டிய விலையை நிர்ணயித்தது. கரும்பிலிருந்து நேரிடையாகச் சர்க்கரை உற்பத்தி செய்வதில் திறனுள்ள சர்க்கரை ஆலைகளின் உற்பத்தி பெருக்கமடைய இத்தகைய நடவடிக்கைகள் ஏதுவாக இருந்தன; சர்க்கரைத் தொழிற்சாலைகளின் எண்ணிக்கை அபாய கரமாகப் பெருகிவந்ததும் தடைப்பட்டது. இருப்பினும், கரும்பின் விலையும் சர்க்கரையைச் சுத்தம் செய்பவர்களின் இலாபமும் தொடர்ந்து குறைந்துகொண்டே வந்தது. மேலும், 1937ஆம் ஆண்டில் ஆயத்தீர்வை ரூ. 2-0-0-க்கு உயர்த்தப்பெற்று, தொழிற் காப்புத்தீர்வை 1934-ல் இருந்த ரூ. 7-12-0 மட்டத்திலிருந்து, பழைய வீதமாகிய ரூ. 7-4-0-க்குக் குறைக்கப்பெற்றது. இதனால், மொத்த இறக்குமதித் தீர்வை ரூ. 9-4-0 ஆகியது. ஆனால், ஆயத்தீர்வை உயர்த்தப்பெற்று, தொழிற்காப்புத் தீர்வை குறைக்கப்பெற்றதால் சர்க்கரைத் தொழிற்சாலைகளின் இன்னல்கள் அதிகரித்தன.[1] இதனால், இந்தியச் சர்க்கரை ஆலை களின் சங்கம் 1937ஆம் ஆண்டில் ஒரு கூட்டு (Syndicate) அமைத்தது. அக் கூட்டு 1938 முதல் செயல்படத்தொடங்கியது. சர்க்கரைக் கூட்டு, அதனுடைய அங்கத்தினர்களுக்குக் குறைந்த விற்பனை விலையையும், மொத்த விற்பனையில் அவர்களுடைய வீதப் பங்கையும் (quota) நிர்ணயித்தது. ஐக்கிய மாகாண அரசாங் கமும், பீஹார் அரசாங்கமும் சர்க்கரை உற்பத்தி செய்யும் உரிமங்களைக் (Licenses) கூட்டின் அங்கினத்தினர்களுக்கு மட்டும் வழங்கியதால், இவ்விரு மாகாணங்களிலும் எல்லாச் சர்க்கரை உற்பத்தியாளர்களும் கூட்டில் கட்டாயமாகச் சேரவேண்டியிருந்தது. அப்பொழுது இயங்கிவந்த தொழிற்

[1] *V.* Tariff Board Report on the Sugar Industry, 1938; and B. N Adarkar, The Indian Tariff Problem (with special reference to Sugar Production), 1936.

சாலைகளின் நிலைமை இதனால் வலுவுற்றது. 1938ஆம் ஆண்டில் கரும்புச் சாகுபடி மிகவும் குறைந்ததால், சர்க்கரையின் விலையும் அதிகரித்தது. இதனால், கரும்புத் தொழிற்சாலைகள் பயனடைந்தன. சர்க்கரையின்விலை 'சர்க்கரைக் கூட்டினு'ல் நிர்ணயிக்கப்பெற்ற குறைமட்ட விலைக்குமேல் உயர்ந்ததால், அந்தக் குறைமட்ட விலையும் உயர்த்தப்பெற்றது.

இதற்கிடையில் 1937ஆம் ஆண்டில் சுங்கவரிக் கழகம் மற்றொரு விசாரணையை நடத்தி 1938ஆம் ஆண்டில் அதனுடைய அறிக்கையைச் சமர்ப்பித்தது. அரசாங்கம் சுங்கவரிக்கழகத்தின் முடிவுகளுக்கு இணங்காததுடன், அறிக்கையை வெளியிடுவதையும் 1939வரை தாமதப்படுத்தியது, 1938-லும் 1939-லும் எந்த மாற்றமும் இல்லாமல், தொழிற் காப்புத்தீர்வைகள் புதுப்பிக்கப் பெற்றன. 1939-ல் வெல்லச்சர்க்கரை (Khandsari Sugar) யில் இருந்த தீர்வை மட்டும் குறைக்கப்பெற்றது.[1]

உள்நாட்டில் சர்க்கரைக்குத்தேவை நிச்சயமாக இருந்ததால், கரும்பு பயிரிடுவதிலும் சர்க்கரை உற்பத்தி செய்வதிலும் தேவைக்கு மீறிய அளவில் மூலதனமும் சாதனங்களும் முதலீடு செய்யப்பெற்றன. கரும்பு பயிராக்குபவர்கள், சர்க்கரை ஆலைகள் இரண்டுக்கும் கிடைக்கக்கூடிய இலாபம் அச்சுறுத்தும் அளவுக்குக் குறைந்தது. இந்தநிலை சர்க்கரைத் தொழிலில் உள்ள ஒரு முக்கியப் பிரச்சினை என்று கருதலாம். இந்தியாவின் சாதனங்களுக்கு வேலைக்குறைவு (Under-employment) இருக்கிறது என்பதற்கு இந்தப் பிரச்சினை ஒரு சரியான எடுத்துக்காட்டாகும்.

1937ஆம் ஆண்டின் பன்னாட்டுச் சர்க்கரை ஒப்பந்தத்தில் (International Sugar Agreement of 1937), இந்தியா சேர வேண்டும் என்ற தீர்மானம், மிகுந்த அதிருப்தியை ஏற்படுத்தியது. இந்த ஒப்பந்தத்தின்படி இந்தியா சர்க்கரையை (பர்மாவைத்தவிர மற்ற நாடுகளுக்கு) ஏற்றுமதி செய்வது தடைப்பட்டது. ஆனால், அதேநேரத்தில் இந்தியா ஒரு 'தடையிலாச்சந்தை' (Free Market) என்றும் குறிப்பிடப்பட்டது. ஒப்பந்தத்தின்படி சர்க்கரையை ஏற்றுமதி செய்யும் எந்தநாடும் அதனுடைய சர்க்கரையை ஆண்டுக்கு 50,000டன்களுக்கு மேற்படாமல் இச் சந்தையில் எந்த விலையிலும் விற்கலாம்.[2]

[1] வெல்லச் சர்க்கரை சிறு தொழிற்சாலைகளில் நாட்டுமுறையில் தயாரிக்கப்படுகிறது.

[2] *V.* P. A. Wadia and K. T. Merchant, Our Economic Problem pp. 412-414.

இறக்குமதியான கச்சாப்பருத்தி, நீண்ட இழைப்பருத்தி யாகவே இருந்தது. இந்தவகைப் பருத்தி பெரும்பாலும் கிழக்கு ஆப்பிரிக்காவிலிருந்தும், எகிப்திலிருந்துந்தான் இறக்குமதியானது. போருக்குமுன் இருந்த இந்த இறக்குமதியின் சரர்சரி 12,000டன்கள். போர்க்காலத்தில் இந்தச்சராசரி 58,000 டன்களுக்கு உயர்ந்தது. ஆனால், போருக்குப்பிறகு பழைய மட்டத்திற்குக் குறைந்தது. 1930-ல் தொடங்கிய பத்தாண்டு களில் இந்தச்சராசரி மறுபடியும் 1935-36-ல் 77,000டன்களுக்கும் 1938-39-ல் 96,000டன்களுக்கும் உயர்ந்தது. இந்த ஆண்டுகளில் ஏற்றுமதி முறையே 606,000 டன்களும், 483,000டன்களும் இருந்தன. 1931-ல் இறக்குமதியான பருத்தியின்மேல் 1பவுண் டுக்கு 6 பைசாத்தீர்வை விதிக்கப்பெற்றது. ஆனால், அத் தீர்வை 1939-ல் இரட்டிக்கப்பெற்றது (1பவுண்டுக்கு 1அணா). நாம் முன்னரே கண்டது போல், ஒரு காரணம் வருவாய் பெறு வதும், மற்றொரு காரணம் இந்தியாவில் நீண்ட இழைப்பருத் தியின் உற்பத்தியை ஊக்குவிக்க வேண்டுமென்பதும் ஆகும். இவையே அத் தீர்வையின் முக்கிய நோக்கங்களாகும்.

மிக அதிமாகச்செலவீடாமலும், நில அமைப்பையும், நிலவரி முறையையும் சீர்திருத்தம் செய்யாமலும், பெரிய அளவில் பொருளாதாரத் திட்டத்தைக் கையாளாமலும், எந்த அள வுக்கு மேலும் முன்னேற்றம் கிடைத்திருக்கும் என்றும் அர சாங்கம் மேலும் என்ன செய்திருக்கக் கூடும் என்றும் மதிப் பிடுவது அவ்வளவு எளிதன்று. அரசாங்கம் இத்தகைய அடிப் படையான சீர்திருத்தங்களை மேற்கொண்டிருந்தால் சமுதாய அமைப்பில் கட்டாயம் ஒரு புரட்சியே ஏற்பட்டிருக்கும். அதனால், ஏற்படும் நிதி விளைவுகளையும், சமூக விளைவுகளையும் பற்றிக் கவலைப்படாமல் தன்னுடைய கொள்கையை நடை முறையாக்கும் மனத்திறனும் சக்தியும் இருந்தாலன்றி ஓர் அன்னிய அரசாங்கம் இத்தகைய சீர்திருத்தங்களை ஒருபொழுதும் மேற்கொள்ள முடியாது.

1918-க்கும் 1939-க்கும் இடையில் புள்ளி விவரங்கள் மூலம் தொழில் வளர்ச்சியைக் கணக்கெடுக்கவில்லை. இக் காலத்தில் தொழில் கணக்கெடுப்பு நடைபெறவில்லை; தொழில் உற்பத் தியின் குறியீட்டெண்களும் தயாரிக்கப்படவில்லை; பேரளவு நிறுவனங்களின் வேலை (Employment) யின் அளவைப் பற்றி ஒப்பிட்டுப் பார்ப்பதற்கான புள்ளி விவரங்கள்கூட இல்லை.[1]

[1] அட்டவணை vii-ஐப் பார்க்கவும்

ஆனால், 1928–29ஆம் ஆண்டுக்குப் பிற்பட்டகாலத்தில் பல பேரளவுத் தொழில்களுக்குத் தொழில் உற்பத்திக் குறியீட்டெண்களும் (Index of industrial production), தொழில் இலாபங்களின் குறியீட்டெண்களும், ஆலைத் தொழில் பண்டங்களின் விலைக் குறியீட்டெண்களும் தனித்தனியாகத் தயாரிக்கப் பெற்றன.[1] 1927–28ஆம் ஆண்டை அடிப்படையாகக் கொண்டு, தொழில் இலாபங்களின் பொதுவான குறியீட்டெண்கள் தொடர்ச்சியாக மதிப்பிடப்பெற்றன. இவைகளன்றி பொருத்தமான ஆனால், அரைகுறையானதும் முற்றுப் பெறுததுமான அரசாங்கப் புள்ளிவிவரங்கள் பலவும், அரிய தனியார் மதிப்பீடுகள் பலவும் கிடைப்பதால் இக் காலத்தில் தொழில் வளர்ச்சியின் போக்கைப் பற்றி ஓரளவுக்குத் தெளிவான கருத்தைப் பெறலாம்.

டாக்டர் N. S. R. சாஸ்திரி அவர்களின் புள்ளிவிவர மதிப்பீடுகள் மற்ற மதிப்பீடுகளைவிட, எல்லா விவரங்களையும் உள்ளடக்கி இருக்கின்றன.[2] தொழில் முன்னேற்றத்தின் வேகம் (உற்பத்தியின் அளவிலிருந்து கணக்கிட்டால் 1900-க்கும் 1914-க்கும் இடையிலிருந்ததைவிட 1919–1938-ன் இடைக்காலத்தில் அதிகமாக இருந்தது என்று இம் மதிப்பீடுகள் எடுத்துக்காட்டுகின்றன. ஆனால், போருக்குமுன் பருத்தி ஆலைகள், நிலக்கரி, சணல் தொழில்களில் வளர்ச்சி மற்றவைகளைவிட மிக அதிகமாக இருந்தது. போருக்குப் பிறகு, மற்றத் தொழில்களைவிட, புதிய தொழில்களில் வளர்ச்சி மிக அதிகமாக இருந்தது. 1925ஆம் ஆண்டுக்குப் பின் இருந்த தொழில் முன்னேற்றத்தை அடுத்த பக்கத்தில் காணும் அட்டவணையிலிருந்து அறியலாம்.

சிறிதளவு பின்னேற்றம் உள்ள ஒரே தொழில் சணல் தொழிலாகும். பொருளாதாரமந்தம் மிகவும் உக்கிரமாக இருந்தபொழுது இரும்பு எஃகுத் தொழில்களும், நிலக்கரித் தொழில்களும் தற்காலிகமாகத் தடைப்பட்டன. 1937ஆம் ஆண்டில் குறியீட்டெண்களிலிருந்து, மொத்தத்தில் தொழில்கள் குறிப்பிடத்தக்க வகையில் முன்னேற்றமடைந்தன என்று அறியலாம்.

[1] இக் குறியீட்டெண்களில், ஒருசில நிறுவனங்களின் இலாபங்கள் மட்டுமே சேர்க்கப்பட்டிருப்பதால், இக் குறியீட்டெண்கள் ஓரளவுக்குத்தான் உண்மையைப் பிரதிபலிப்பனவாக இருக்கும்.

[2] N. S. R. Sastry, A Statistical Study of India's Industrial Development (அத்தியாயம் 5). P. J. தாமஸ் அவர்களின் Population and Production என்ற மதிப்பீட்டையும் பார்க்கவும்.

அட்டவணை (6)

முக்கியத் தொழில்களின் வெளிப்பாடு (Output) பற்றிய குறியீட்டெண்கள்

	1925	1931	1937
பருத்தி ஆலைத் தொழில் ..	100	111	152
சணல் ஆலைத் தொழில் ...	100	81	90
சர்க்கரை சுத்தம் செய்யும் தொழில்...	100	128	584
இரும்பு எஃகுத் தொழில் ...	100	84	113
காகிதத் தொழில் ...	100	119	168
சிமென்டுத் தொழில் ...	100	121	222
நிலக்கரித் தொழில் ...	100	92	103

வெவ்வேறு தொழில்களில் ஏற்பட்ட தராதர முன்னேற்றத்தை எளிதில் விளக்கலாம். நல்ல தொழிற்காப்பின் உதவியால் சர்க்கரைத்தொழில் உள்நாட்டுச் சந்தை முழுவதையும் கைக்கொண்டது; இரும்பு எஃகுத்தொழிலும், காகிதத் தொழிலும் தொழிற்காப்புப் பெற்ற புதிய தொழில்களாக இருந்தன; உள்நாட்டில் போக்குவரத்துச்செலவு மிக அதிகமாக இருந்ததால் 'தொழிற் காப்பு'ப் பெற்ற புதிய தொழில் சிமிட்டித் தொழிலாகும்; நிலக்கரித் தொழில் இந்நூற்றாண்டின் தொடக்க காலத்தில் விரைவான வளர்ச்சியடைந்தது. ஆனால், வெளிநாட்டுச் சந்தைகளில் மற்றநாடுகளின் போட்டியினாலும், உள்நாட்டுச்சந்தையில் நீர்மின்சாரத் திட்டங்களின் போட்டியினாலும், பிற்காலத்தில் நலிவுற்றது. தொழிலாளர் பிரச்சினைகளாலும், நிலக்கரித்தொழில்நலிவுற்றது. மந்தகாலத்தில் மற்றநாடுகளின் தேவை குறைந்ததால் முக்கிய ஏற்றுமதித் தொழிலாக இருந்த சணல்தொழில் நலிவுற்றது. போர் முடிந்தவுடன் (முதல் உலகப்போர்) பருத்தித்தொழில் மிகுந்த இன்னலுக்கு ஆளாகியது. ஆனால், பின்னர்த் தொழிற் காப்புச் சுங்கத்தீர்வைகளின் ஆதரவில், பருத்தித்தொழில் பம்பாய் நகரம் நீங்கலாக மற்ற இடங்களில் விரைவில் மீட்சியுற்றது.

உற்பத்தியின் அரசாங்கக் குறியீட்டெண்களும் (Official Index of prodiuction) சர்க்கரை, பருத்தித்துணிகள், செய்வினை முடிந்த எஃகு, சிமிட்டி, காகிதம், நிலக்கரி இத் தொழில்களிலும் வெளிப்பாடு அதிகரித்தது (நிலக்கரித் தொழிலில் மட்டும் சில ஆண்டுகளில் அதிகரிப்பு இல்லை) என்றுதான் காட்டுகின்றன.[1]

[1] சணல் தொழில் இதில் சேர்க்கப்படவில்லை என்பதைக் கவனிக்கவும்.

ஆனால், 1928–29-க்கும் 1936–37-க்கும் இடைக் காலத்தில் கீழிறக்கம் இருந்தாக (நிலக்கரி, இரும்பு, எஃகு, சர்க்கரை, பருத்தி, சணல் பொருள்களுக்காகத் தொகுத்த) விலைக் குறியீட்டெண்கள் காட்டுகின்றன. சர்க்கரைத் தொழிலைத் தவிர (அமித உற்பத்தியினால் சர்க்கரைத் தொழில் நலி வுற்றது) மற்றவைகளில் 1936–37-க்குப்பிறகு மேலேற்றம் (upward trend) இருந்தது.[1]

தனிப்பட்ட தொழில்களின் இலாபங்களைப் பற்றிய அரசாங்கக் குறியீட்டெண்கள் (1928ஆம் ஆண்டில் 100 எண்களை அடிப்படையாகக் கொண்டது) கீழ்க்காணும் விவரங்களை அறி வித்தன: கிட்டத்தட்ட 1930–31-வரையில் பருத்தி, சணல், தேயிலைத் தொழில்களின் இலாபங்கள் செங்குத்தாக விழுந்தன; 1930–31-க்குப்பிறகு இவைகள் மீட்சியுற்றன என்றாலும், 1928-ல் இருந்த மட்டத்தை அடையவில்லை; நிலக்கரித் தொழிலின் இலாபங்கள் 1930 வரை உயர்ந்தன. 1930-க்குப் பிறகு இலாபங்கள் குறைந்து 1928-ல் இருந்த மட்டத்திற்குக் கீழேயே இருந்தன; சிமென்டுத் தொழிலின் இலாபங்கள் சிறிதளவு மேலேற்றம் இருந்ததைத்தவிர, மற்றப்படி நிலையாகவே இருந்தன; பொருளாதார மந்தம் கடுமையாக இருந்த காலத்தில் இரும்பு எஃகுத் தொழிலின் இலாபங்கள் (மற்ற நாடுகளைப் போல) மிகவும் குறைந்தன. ஆனால், 1934ஆம் ஆண்டில் 1928-ல் இருந்த மட்டத்திற்கு மேலே உயர்ந்தன. 1934-ல் தான் இரும்பு எஃகுத் தொழிலின் இலாபங்கள் உயர்ந்த நிலையில் (169·2) இருந்தன. அதற்குப்பிறகு 'தொழிற்காப்பு' வசதி குறைக்கப் பட்டாலும், குறியீட்டெண்கள் தொடர்ந்து உயர்ந்துகொண்டே சென்று 1938-ல் உச்சமட்டத்தை (316·7 எண்கள்) அடைந்தன. ஆனால், சர்க்கரைத் தொழிலின் இலாபங்கள், நிலையான இரண்டு ஆண்டுகளுக்குப்பிறகு, அதிகமாக உயர்ந்து 1932ஆம் ஆண்டில் உச்ச நிலையை அடைந்தன. 1932-க்குப் பிறகு சர்க்கரைத் தொழிலின் இலாபங்கள் படிப்படியாகக் குறைந்தாலும், 1928-ல் இருந்த மட்டத்திற்கு உயர்வாகவே இருந்தன.

கீழ்க்காணும் அட்டவணை, தொழில் இலாபங்களின் (Industrial profits) 'சங்கிலிக்குறியீட்டெண்களை'[2] (Chain Index)க் காட்டுகின்றது. இத்தகைய குறியீட்டெண்கள் 1937–38-ல் முதன்முறையாகத் தயாரிக்கப்பெற்றன.[3] இந்த அட்டவணையில்

[1] *V.* Annual Review of the Trade of India.

[2] முந்திய ஆண்டை அடிப்படை ஆண்டாக (Base year)க்கொண்டு தயாரிக்கப் படும் எண்கள்தான் 'சங்கிலிக் குறியீட்டு எண்கள்' எனப்படும்.

[3] *V.* Review of Trade.

ஓர் ஆண்டுக்கான எண்கள், அதற்குமுந்திய ஆண்டின் நிலைமையை ஓரளவுக்குப் பிரதிபலிப்பனவாக இருக்கின்றன. இந்த எண்களின்படி 1930ஆம் ஆண்டுதான் மிகவும் கேடான ஆண்டாகும். ஆனால், 1935ஆம் ஆண்டுக்குப் பிறகு இலாபங்கள் திருப்திகரமாக இருந்தன.

அட்டவணை (7)

1928–39-க்கு இடைக்காலத்தில் தொழில் இலாபங்கள்

ஆண்டு	கணக்கில் அடங்கிய நிறுவனங்களின் எண்ணிக்கை	இலாபங்களின் சங்கிலிக் குறியீட்டு எண்கள்	ஆண்டு	கணக்கில் அடங்கிய நிறுவனங்களின் எண்ணிக்கை	இலாபங்களின் சங்கிலிக் குறியீட்டு எண்கள்
1928	308	100·0	1934	327	62·6
1929	308	78·0	1935	335	69·2
1930	310	47·1	1936	332	63·1
1931	317	27·8	1937	334	61·1
1932	320	34·6	1938	329	68·1
1933	324	44·2	1939	293[1]	80·1

[1] முற்றும் பெறவில்லை.

தொழில்களின் கடன் பத்திரங்கள் (Securities) பங்குப் பத்திர மாற்று நிலையங்களில் விலையாகின்றன. இப் பத்திரங்களில் ஏற்படும் விலைமாற்றங்களைத் தொழில்களின் இலாபமீட்டும் சக்திகளில் அவ்வப்போது ஏற்படும் மாறுதல்களை அறிவிப்பனவாகக் கொள்ளலாம். விலைகளின் போக்கையும் இலாபங்களின் போக்கையும் ஆராய்வதைவிட, மேற்கண்ட பத்திரங்களில் ஏற்படும் மாறுதல்களைக் கவனிப்பதன்மூலம் இலாபங்களிலிருந்த ஏற்ற இறங்கங்களை மேலும் தெளிவாக அறியலாம். இதற்கான அரசாங்கக் குறியீட்டெண்கள் (1927–28 = 100) பின் வரும் விவரங்களை அறிவிக்கின்றன: 1928–29ஆம் ஆண்டைவிட 1927–28 சிறந்த ஆண்டாக இருந்தது; 1928–29-க்குப் பிறகு 1932–33 வரை கீழிறக்கம் இருந்தது; 1932–33-ல் குறியீட்டு எண்கள் 58·1-க்கு விழுந்தன. 1932–33-க்குப் பிறகு அவைகள் உயர்ந்து, 1935–36-க்கும் 1938–39-க்கும் இடையில் (இரண்டு ஆண்டுகளும் உட்பட), 1927–28-ல் இருந்த மட்டத்தைவிட உயர்ந்தன. 1937ஆம் ஆண்டு மார்ச்சு மாதத்தில் அவைகள் உச்சக் கட்டத்தை அடைந்தன.[1]

[1] *V.* Annual Review of Trade of India, 1938–39.

மேற்கண்ட புள்ளிவிவரங்கள் அனைத்தும், பொருளாதார மந்தகாலத்தில், இந்தியத் தொழில்களின் வளர்ச்சி பெரிதும் கேடுறவில்லை என்று அறிவிக்கின்றன. ஏனெனில், இக் காலத்தில் இலாபங்களும் விலைகளும் குறைந்தன என்றாலும், தொழில் வெளிப்பாடு (Output) பெருகியது. அதனுடன் இந்தியாவில் நவீன பேரளவுத் தொழில்களின் எண்ணிக்கையும் அதிகரித்தது. குறிப்பிடத் தகுந்த இத்தகைய முன்னேற்றத்திற்கு இரண்டு முக்கியக் காரணங்கள் இருந்தன. முதலாவதாக, இந்திய நவீனத் தொழில்களில் பலவும் உள்நாட்டுச் சந்தைக்காகவே இயங்கி வந்தன. இரண்டாவதாக, உள்நாட்டுச் சந்தையும் அயல்நாடுகளின் போட்டியிலிருந்து நல்ல முறையில் பாதுகாக்கப்பெற்றது. அரசாங்கம், சில இனங்களுக்குத் தொழிற்காப்பு அளிப்பதோடு மற்ற நடவடிக்கைகளையும் மேற்கொண்டது. எடுத்துக்காட்டாக, பருத்தி, சணல் தொழில்களில் ஆராய்ச்சியை ஊக்குவிப்பதற்காக அரசாங்கம் உதவித் தொகையை அளித்தது. சில எஃகுப் பொருள்களுக்குச் சில ஆண்டுகளுக்கு அரசாங்கம் உதவிக்கொடை (Subsidy) அளித்தது. இருந்தாலும், தொழில்களுக்கு உதவவும் தொழில் வளர்ச்சியை ஊக்குவிக்கவும், தொழிற்காப்புச்சுங்கங்களே சிறந்த முறையாகக் கையாளப்பெற்றன. தொழில் பயிற்சியையும், தொழில் நுட்பப் பயிற்சியையும் ஊக்குவிப்பது இரண்டாவது முக்கிய முறையாக இருந்தது. பல தொழில் நுட்பக் கல்லூரிகள் நிறுவப்பெற்றன என்றாலும், இந்தத் துறையில் இதுவரை செய்ததைவிட, இன்னும் அதிகமாகச் செய்யவேண்டியிருக்கிறது. இதை அவசியம் செய்யவும் வேண்டும். 'உடன் துய்ப்புக்குரிய பொருள்கள்' (Consumers' goods)க் கடந்த காலத்தில் இறக்குமதி செய்து வந்ததற்குப்பதிலாக, இந்தியா தற்போது இவைகளில் 'தன்நிறைவு' நிலையை அடைந்து வருகிறது. ஆனால், 'முதலீட்டுக்குரிய பண்டங்கள்' (Producers goods) ப் பொறுத்த அளவில் முனனேற்றம் எதுவுமில்லை. உடன் துய்ப்புக்குரிய பொருள்களை உற்பத்தி செய்யும் தொழில்களில், இந்தியப்பருத்தி ஆலைத் தொழில் ஒருசிறந்த எடுத்துக்காட்டாகும். இத் தொழில் முன்னர் இறக்குமதியான துணிகளில் பெருமளவை அப்புறப்படுத்திவிட்டது. 1928-க்கும் 1934-க்கும் இடைக்காலத்தில் பருத்தித் துணிகளின் உற்பத்தி 41 சதவீதம் பெருகியது. இதே காலத்தில் ஜப்பான் நாட்டின் உற்பத்தி 34 சதவீதம்தான் பெருகியது. மற்றும், பல போட்டி நாடுகளின் உற்பத்தியும் குறைந்தது.[1] சுத்தம் செய்த சர்க்கரை, தீப்பெட்டி இவைகளைப் பொறுத்தஅளவில், இந்தியா 'தன் நிறைவு'

[1] Cf. Indian Finance Member's Budget Speech, 1934–35.

நிலையை அடைந்தது. பலவகைக் காகிதம், கண்ணாடி, சோப்பு, இரும்புச்சாமான்கள் இவைகள் உள்நாட்டுத் தேவையை நாளாவட்டத்தில் தானே பூர்த்தி செய்யும் நிலையும் அடைந்தன. புதிய தொழில்கள் (இவைகளில் பலவும் முற்றிலும் நவீன முறையில் ஆனவை) பலவும் அண்மையில் தோன்றியுள்ளன. இவற்றுள் மின்சார விளக்குகள், மின்சாரத் துணைக் கருவிகள், ரப்பர்ப் பயிர்கள், தண்ணீரைப் பக்குவமாக்கும் இயந்திரங்கள் (Water-softening plants), சமைக்க உதவும் ஸ்டௌவ் அடுப்புகள், கல்நார்த் தகடுகள், (Asbestos), சிமிட்டிப் பொருள்கள், வர்ணங்கள், மெருகிடும் பொருள்கள் (Enamels) இவைகளை உற்பத்திசெய்யும் தொழில்களும் அடங்கியிருந்தன. இரசாயனப்பொருள்களைப் பொறுத்தவரையில் நிலைமை திருப்திகரமாக இல்லை. பல கனரக இரசாயனங்களை உற்பத்தி செய்யும் பேரளவுத் தொழில்களுக்குத் தேவையான வளப் பொருள்கள் இந்தியாவில் இருந்தன. ஆனால், சில இனங்கள் நீங்கலாக மற்றவைகளை வளர்க்கும் முயற்சிகள் தோல்வியடைந்தன. 1928–1934-ன் இடைக்காலத்தில் கனரகத்தொழில்களில், எஃகு உற்பத்தி 75 சதவீதம் பெருகியது. இதேகாலத்தில் ஜப்பானில் 55 சதவீத அதிகரிப்பும், அமெரிக்காவில் 54 சதவீதக் குறைவும், இங்கிலாந்தில் 20 சதவீதக் குறைவும் இருந்தன. சிமிட்டியைப் பொறுத்த அளவில், 1924 ஆம் ஆண்டில் உள்நாட்டு தேவையான 387, 932 டன்களில், 263, 746 டன்களைத்தான் இந்தியா உற்பத்தி செய்தது. ஆனால், 1933ஆம் ஆண்டில் 689, 515 டன்கள் தேவையில், 625, 860 டன்கள் இந்தியாவே உற்பத்தி செய்தது.[1] சணல் தொழில், ஏற்றுமதி வாணிபத்தையே சார்ந்திருந்தது. ஆகவே மந்தத்தின் வேகத்தால் சணல் தொழில்தான் மிகவும் கேடுற்றது.[2] இக் காலத்தில் பருத்தித் தொழில் நல்ல வளர்ச்சியடைந்தது. ஆனால், பம்பாய் நகரத்தில் இருந்த பருத்தி ஆலைகளின் ஒரு பிரிவு இப் பயனை அடையவில்லை. அது மந்தத்தினால் தாக்குண்டது.

இந்தியாவில் தொழிலிட அமைப்பில் (Location of Industry) சிறிதுமாற்றம் ஏற்பட்டது. பம்பாய் நகரத்தில் பருத்தி ஆலையின் முக்கியத்துவம் குறைந்துவந்தது இதற்கு ஒரு சிறந்த எடுத்துக் காட்டாகும். 1925–1937-ன் இடைக்காலத்தில் இந்தியாவின் பலபகுதிகளிலும் ஏற்பட்ட தராதர முன்னேற்ற வீதத்தை

[1] Cf. Indian Finance Member's Budget Speech, 1934–35.

[2] *V.* N. S. R. Sastry, A Statistical Study of India's Industrial Development, pp, 42 43.

டாக்டர் சாஸ்திரி அவர்கள் 1925ஆம் ஆண்டை அடிப்படை ஆண்டாகக் கொண்டு மதிப்பீடு செய்தார். அந்த மதிப்பீட்டிலிருந்து பின்வரும் விவரங்கள் தெரியவந்தன: முன்னேற்றம் சில சுதேச அரசுகளிலும், அரசுகளின் தொகுதிகளிலும் தான் வெகுவிரைவாக இருந்தது; பிரிட்டிஷ் இந்திய மாகாணங்களில் மத்திய மாகாணம் நீங்கலாக மற்றவைகளில் முன்னேற்றம் இருந்தது. முன்னேற்றத்திற்கு ஏற்றாற்போல மாகாணங்களை வரிசைப்படுத்தினால் ஐக்கியமாகாணம் 194 எண்களும், சென்னை 150உம், வங்காளம் 124உம், பீஹார் 105உம், வங்காளம் 104உம், மத்தியமாகாணம் 81உம் பெற்றன. ஆனால், இங்ஙனம் வரிசைப்படுத்துவது, இதுவரை கிடைத்த தொழில் வளர்ச்சிக்கு இணக்கமாக இல்லை. பெரிய நகரங்களில், தல கட்டணங்களும், வரிகளும், வாரங்களும் (Rents) அதி உயர்வாக இருந்ததுடன், தொழிலாளர் பிரச்சினைகளும் அதிகமாக இருந்ததால், உற்பத்திச்செலவு மிகவும் உயர்ந்தது. இந்திய சுதேச அரசுகளில் தொழிலாளர் சட்டங்களும், தொழிற்கூடச் சட்டங்களும் அவ்வளவு கடுமையாகஇல்லை. ஆகவே, பல தொழில்களும் பெரிய நகரங்களிலிருந்து, சுதேச அரசுகளுக்கு இடப்பெயர்ச்சியுற்றன. பிரிட்டிஷ் இந்திய மாகாணங்களில் ஐக்கியமாகாணம் முதல் இடத்தை வகித்தது என்பதை இங்குக் குறிப்பிடவேண்டும். இதற்குக் காரணம், இந்தியாவில் மிகவிரைவாக முன்னேறிவந்த சர்க்கரைத் தொழிலின் பெரும்பகுதி இம் மாகாணத்தில்தான் இருந்தது. ஆனால், வங்காளம் பட்டியலில் மிகவும் பின்தங்கியிருந்தது. இதற்குக் காரணம், வங்காளத்தின் முக்கியத்தொழில்கள் இரண்டும் (சணல், நிலக்கரி) 1925-க்கு முன்னர் நல்ல வளர்ச்சியடைந்தன; ஆனால், அதற்குப்பிறகு பொருளாதார மந்தத்தினால் நலிவுற்றன. இவைகளைத் தொழிற் காப்பின் மூலம் ஊக்குவிக்கவும் முடியவில்லை. மற்றநகரங்களுடன் ஒப்பிட்டால், பம்பாய் நகரம் தொழில் வளத்தை இழந்தது. ஆனால், பம்பாய் மாகாணத்தில் உள்ள மற்ற நகரங்கள் (குறிப்பாக அகமதாபாத்) இலாபமடைந்தன.

'தொழிலிட அமைப்பை' (Industrial Location) அரசாங்கம் கட்டுப்படுத்த வேண்டுமென்ற எண்ணம் அண்மையில் பரவியது. ஒவ்வொரு மாகாணத்திலும் அல்லது பகுதியிலும் நவீனத் தொழில்களை வளர்க்கவேண்டுமென்று இதற்குக் காரணம் காட்டப்படுகிறது. ஆனால், இத்தகைய காரணங்கள் பொருளாதாரக் கொள்கைக்கு அப்பாற்பட்டனவாகவோ அல்லது முற்றிலும் பொருத்தமில்லாக் காரணங்களாகவோ இருக்கின்றன.

தொழிலிட அமைப்புக்குச் சிறந்த இடங்கள் எவை என்று 'தனியார் தொழில் முனைவர்களைவிட' (Private entrepreneurs) அரசாங்கம் நல்லமுறையில் முடிவு செய்யும் என்பதும், தொழிலும் விவசாயமும் சமநிலையில் இருப்பதே (இந்தச் சமநிலை எதைக்குறித்தாலும்) குறிக்கோளாக இருக்க வேண்டும் என்பதும் மேற்கண்ட கொள்கையின் உட்கருத்துகளாகும். தங்களுடைய மூலதனத்தை நீண்ட காலத்திற்குத் தொழிலில் முடக்கிவைக்கும் சக்தி, தனியாருக்கு இல்லை; (2) போக்குவரத்துச் சாதனங்கள், குடிதண்ணீர் வசதிகள், குடியிருப்பு வசதிகள் போன்ற பொதுவசதி நிறுவனங்களையும் (Public utilities) பணிகளையும் தனியார் மேற்கொள்ள முடியாது; (3) தொழில்களுக்குத் தேவையான பொருள்களையும், துணைத் தொழில்களையும் (By-industries) பலவகையான தொழிலாளர்களையும் உடனுக்குடன் அளிக்கத் தனியாரால் முடியாது; இவைபோன்ற காரணங்களைக் காட்டிச் செயற்கை முறையில் தொழில் வளர்ச்சியை ஊக்குவிப்பதையும் தொழிலிட அமைப்பைக் கட்டுப்படுத்துவதையும் ஒன்றுக இணைக்கும் ஒரு கொள்கையை இங்கு வலியுறுத்தலாம். நாளா வட்டத்தில் தொழில்திறமை வளரவும், உற்பத்திச் செலவுகளைக் குறைக்கவும் வேண்டுமானால் மேற்கூறிய மூன்று தேவைகளையும் நிரப்பவேண்டும்.[1] சுதேசஅரசுகளும் வட்டார ஆட்சி மன்றங்களும் (Local Authorities) போக்கு வரத்து வசதி செய்துகொடுத்தல், மற்றப் பொதுவசதி நிறுவனங்களை (public utilities) ஏற்படுத்தல் இவைகளைப்பற்றித் தங்களுடைய கொள்கைகளின் மூலமாகவும், கட்டணங்கள், வரிகள், சுங்கங்கள் இவைகளை நிர்ணயிப்பதன் மூலமாகவும், தொழில் ஓரிடத்தில் செறிவதை (Localisation of industry) மறைமுகமாகத் தூண்டுகின்றன என்று டாக்டர் சாஸ்திரி அவர்கள் குறிப்பிடுகிறார்.[2] ஆகவே, தனியாரைவிட அரசாங்கம் சிறந்த வழியில் முடிவு செய்யும் என்று கூறுவது, தொழிலிட அமைப்பை அரசாங்கம் கட்டுப்படுத்துவதற்கு ஒரு பொருளாதாரம் காரணமாகாது; தனியாருடைய சக்திக்கு மீறிய அளவில், அரசாங்கமும், வட்டார ஆட்சி மன்றங்களும் தொழில் வளர்ச்சியை மேற்கொள்ளத் தயாராக இருக்கின்றவா, இல்லையா என்பதைப் பொறுத்துத்தான் தொழிலிட அமைப்பைக் கட்டுப்படுத்தும் கொள்கை இருக்கிறது.

[1] தத்துவார்த்த முறையில் கூறவேண்டுமானால், இந்த வாதம் 'சிற்றிளந்தொழில்கள்' (Infant Industries), 'புறச்சிக்கனங்கள்' (External economics) இவை இரண்டுக்கும் ஆதரவான விதங்களை ஒன்றுக இணைத்தது ஆகும்.

[2] *V.* N. S. R. Sastry, op. cit., p. 47.

இந்தியாவில், தொழில் காப்பின் விளைவுகளை ஆராயும் பொழுது, முன்னர் இருந்ததைவிட 'தற்காப்பின்' கீழ்த்தொழில் வெளிப்பாடு (output) விரைவாகப் பெருகியது என்றே, அல்லது விவசாயத்துறையைவிட, தொழில் வெளிப்பாடு மிகுதியாக இருந்தது என்றே குறிப்பிட்டால் மட்டும் போதாது. தொழிற் காப்பையன்றி மற்ற மாற்றுவழிகளையும், நீண்ட காலத்திற்கு ஏற்றதான ஒரு நடுநிலைமையையும் இங்கு அவசியம் ஆராய வேண்டும்,[1] 'தொழிற்காப்பு' அளிப்பதால் பின்வரும் தீமைகள் ஏற்படுகின்றன: உற்பத்தி மிகுதியாக உள்ள துறைகளிலிருந்து உற்பத்திக் குறைவான துறைகளுக்கு நாட்டின் பொருளாதாரச் சாதனங்கள் திருப்பப்பட்டு, அதனால் உள்நாட்டு விலை மட்டமும் உயரும்; இந்தியப் பொருள்களின் விலைகள் உயர்வாக இருப்பதுடன், அயல்நாட்டு வணிகர்களின் விற்பனையும் இந்தியாவில் குறைவதால், அவர்களுடைய 'வாங்குதிறனும்' (purchasing power) குறையும். இதனால் அயல்நாட்டுச் சந்தைகளில் இந்தியாவின் விற்பனை செய்யும் சக்தியும் குறையும்; சுங்க வரிகள் மூலம் கிடைக்கும் வருவாயும் குறைந்துவிடும். தொழிற் காப்பு இலாபகரமாக இருக்கவேண்டுமானால், தொழிற்காப்பினால் ஏற்படக்கூடிய பயன்கள் மேற்கண்டவைகளை ஈடுசெய்வனவாக இருத்தல் வேண்டும். அதனுடன் தொழில்களின் இளமைப் பருவத்தில் முடங்கிக் கிடக்கும் மூலதனத்திற்கு வட்டியும் கிடைக்கவேண்டும். 'தொழிற் காப்பின்' நன்மை, தீமைகளை ஆராய்ந்து முடிவாக நிகரத்தில் இலாபமா, நட்டமா என்று மதிப்பிடுவது சாதாரணமாக எளிதன்று ஆனால், இந்தியாவைப் பொறுத்தவரையில், நிகரத்தில் இலாபம் இருந்தது என்பதற்கான அறிகுறிகள் சில காணக்கிடக்கின்றன.

முதலாவதாகத் தொழிற்காப்புப் பெற்ற ஓர் இந்தியத் தொழிலில் (இரும்பு எஃகுத் தொழில்) சாதாரண இயல்புக்கு மாறான வகையில், வளர்ச்சிக்கான அறிகுறிகள் இருந்தன. இத் தொழிலில் தொழிற்காப்புத்தீர்வைகள் குறைக்கப்பெற்றன. இன்னும்சிறிது காலத்தில் இத் தொழிலுக்கு அரசாங்கத்திடமிருந்து எந்தவித உதவியும் கிடைக்காது. இருப்பினும் சிறிது காலத்தில் இரும்புத்தொழில் அயல் நாடுகளுக்கு ஏற்றுமதியும் செய்யலாம்.[2] இரண்டாவதாக இந்தியாவில் தொழிலாளர்களிடையே 'வேலைக்குறைவு' (under employment) நிரந்தரமாக நிலவுகிறது.

[1] H. L. Day, The Indian Tariff problem.

[2] தீர்வைகளைக் குறைத்தது இயல்புக்கு மாறான முறையாகக் கருதலாம். இந்தியாவுக்கு, தனி ஆட்சி உரிமை இல்லாததால் இங்ஙனம் குறைக்கப்பெற்றது என்றும் கூறலாம். மிகுந்த செல்வாக்குள்ளவர்கள் தொழிற்காப்பைத் தொடர்ந்து நீடிக்க வேண்டும் என்று கோரினால் தனியுரிமை ஆட்சியில் அத்தகைய கோரிக்கைகளை மறுப்பது அவ்வளவு எளிதன்று.

இதனால், தொழிற்காப்புப் பெற்ற தொழில்களுக்கு, கூலிச்செலவு உயராமல் தொழிலாளர்களைப் பெறுவதற்கு ஏதுவாகிறது. மூன்றாவதாகத் தொழிற்காப்பு, அயல்நாட்டிலிருந்து கிடைக்கும் மூலதனத்தை (அதற்காக செலவு அதிகரிக்காமல்) பெருக்குகிறது உள்நாட்டு மூலதனக்காரர்களுக்கும் முதலீடு செய்யும் வாய்ப்புக் கிடைக்கிறது. தொழிற்காப்பு இல்லாவிட்டால் இந்த (உள் நாட்டு) மூலதனம் உற்பத்தியாக்கச் செயல்களில் செலவிடப் பட்டிருக்கும். 1936–37 வரை (அதற்குப்பிறகு பர்மா பிரிவினை யானதால் ஒப்பிட்டுப் பார்க்கும் அடிப்படை மாறுதலடைந்தது) வாணிபப் போக்கினையும், தொழிற்காப்பினால் ஏற்றுமதியிலும், இறக்குமதியிலும் ஏற்பட்ட விளைவுகளையும் ஆராய்ந்தால் பின் வரும் விவரங்கள அறியலாம்:[1] உடன்துய்ப்புக்குரிய பொருள் களின் (consumers' goods) இறக்குமதியில் ஏற்பட்ட இறக்கத் திற்கு, மூலப்பொருள்கள், முதற்கருவிப் பொருள்கள் (capital goods) இவைகளின் இறக்குமதியிலிருந்த ஏற்றம் ஈடு செய்வதாக வாவது இருந்தது. இக்காலத்தில் ஏற்றுமதி குறைந்ததற்குத் 'தொழிற்காப்பு' இல்லாத மற்றக் காரணங்களை எடுத்துக் காட்ட முடியும். சுங்க வருவாய் குறைந்தது என்பது உண்மையானாலும், வருவாய் நட்டத்தில் பாதி, (சர்க்கரை, தீப்பெட்டி, எஃகு போன்ற) தொழிற்காப்புப் பெற்ற பொருள்களின்மேல் 1934-ல் விதிக்கப் பெற்ற ஆயத் தீர்வைமூலம் கிடைத்தது. அதனுடன், தொழிற்காப்பினால் பயனடைந்த தொழில்களின் உற்பத்தி சக்தி பெருகியதாலும், வருவாய்த்தீர்வைகள் (Revenue duties) மூலம் பெருவாரியான தொகை கிடைத்ததால் அரசாங்கத்தின் வருவாய் பெருகியது.[2] இதை வேறுவிதமாகக் கூறவேண்டு மானால், சில இந்தியத் தொழில்களில் வளர்ச்சிக்கான அறிகுறிகள் காணப்படுகின்றன எனலாம். தொழிற்காப்பின் செலவும், பல காரணங்களால் மிகக் குறைவாகவே இருந்தது. ஆனால், வளர்ச்சிக்கான அறிகுறிகள் உள்ள சிற்றிளந் தொழில்களைக் கண்டுபிடிப்பது போகப் போகக் கடினமாக இருந்தது என்பதை

[1] *V.* N S R Sastry, op. cit. pp. 168 et seq.

[2] பருத்தித் துணிகள், சர்க்கரை, இரும்பு, எஃகுப் பொருள்கள், தீப்பெட்டிகள் இவைகளின் இறக்குமதித் தீர்வைகள் மூலம் கிடைத்த வருவாய் 1926–27-க்கும் 1937–38-க்கும் இடையில் ரூ 16 கோடியிலிருந்து ரூ 5 கோடிக்குக் குறைந்தது, இந்த இடைக் காலத்தில் இப்பொருள்களின் மொத்த மதிப்பும் ரூ 85 கோடியிலிருந்து ரூ 16 கோடிக்குக் குறைந்தது. இதனால் 11 கோடி ரூபாய் வருவாய் நட்டம் ஏற்பட்டது. சர்க்கரை, தீப்பெட்டிகள், எஃகுப்பொருள்கள் இவைகளின் ஆயத்தீர்வையிலிருந்து 1936–37-ல் 5 கோடி ரூபாய் கிடைத்தது. ஆகவே, இந்த இனங்களினால் ஏற்பட்ட நிகர நட்டம் கோடி ரூபாய். *V.* N. S. R. Sastry, op. cit., p. 165. இறக்குமதித்தீர்வைகள், 1913-ல் மத்திய அரசாங்கத்தின் மொத்த வருவாயில் 17 சத வீதத்தையும். 1926–27-ல் 58 சதவீதத்தை யும், 1931–32-ல் 51 சத வீதத்தையும், 1936–37-ல் 49 சதவீதத்தையும். 1937–38-ல் 58 வீதத்தையும் கொடுத்தன. *V.*. N. S. R. Sastry, op. cit , 165, 165 and The Burden of Indian Tariff : (Studies in Indian Economics, Office of the Economic Adviser No. 1), p. 46.

யும், சில தொழில்களில், தொழிற்காப்புச் சுங்கங்களைவிட மற்ற வகையில் உதவி அளிப்பது (உதாரணமாக உதவித் தொகை அளித்தல்) சிக்கனமாக இருந்திருக்கும் என்பதையும் மறந்துவிடக் கூடாது. ஆகவே, தொழிற்காப்பினுல் எந்த அளவுக்குச் சாதிக்க முடியும் என்பதற்கும், ஓர் எல்லை (அந்த எல்லை மாறும் இயல் புடையதாக இருந்தாலும்) இருக்கிறது. பொதுவரி நிறுவனங் களையும் (public utilities), இணைப்பான தொழில்களையும் (Associated Industries), ஒன்றோடு ஒன்று பிணைப்பான தொழில் களையும் (Interlocking industries) உடனுக்குடனுக வளர்ப்பதற் கான சிறந்த திட்டங்களைத்தீட்டினுல், ஒருவேளை எதிர்காலத்தில் சீரிய முறையில் 'புறச் சிக்கனங்கள்' (external economics) கை கூடலாம்.

தொழில் நுட்பப் பயிற்சி, தொழில் நிருவாகத் திறமை இவைகளின், அவசியம் தீராத பிரச்சினையாகவே இருந்தன. இப் பிரச்சினைகள் தொழிற்காப்பினுல் நிவர்த்திக்கப் பெறவில்லை. தற்போதையத் தொழில் அமைப்புமுறையில் மாறுதல் செய்தால் இத் துறைகளில் மேம்பாடுசெய்ய ஏதுவாக இருக்கலாம். மேற் கண்ட தொழில் வளர்ச்சிக்கு ஏற்றாற்போல் தொழில் அமைப்பும் நிதிவசதியும் படிப்படியாக மாறுதலடைந்தன என்பது உண்மை தான். அயல்நாட்டு மூலதனமும், தொழில் துணிவும் இந்தியத் தொழிலின் கழுத்தை இறுக்குகின்றன என்று கூறுவது இனியும் பொருந்தாது. அவர்களின் 'முற்றுரிமை' நிச்சயமாக மறைந்து விட்டது. 'நெறியாளர் கழகங்களிலும்' (Boards of Directors) 'நிருவாகப் பதிலாள்களாகவும்' (Managing Agents) பணியாற்றி வந்த அயல்நாட்டு வணிகர்களின் எண்ணிக்கை முன்னர் மிகக் குறைவாக இருந்த நிலைபோய்ப் படிப்படியாகப் பெருகிவந்தது. ஆனுல், 'முற்றுரிமை' இயல்பு முற்றிலும் மறைந்துவிட்டது அல்லது குறைந்துகொண்டு வருகின்றது என்று கூறுவது உண் மைக்குப் புறம்பானதாகும். ஒரு பக்கம் வேலை அளிப்பவர் களுக்கும் (Employers) மேலாளர்களுக்கும் (Managers), மற்றொரு பக்கம் தொழில் நுட்பப் பயிற்சி பெற்ற தொழிலாளர்களுக்கும் அனுபவம் வாய்ந்த தொழிலாளர்களுக்கும் இடையே அடைக்க முடியாத இடைவெளி இனியும் இருக்கிறது.

இந்தியாவின் தொழில் அமைப்பிலும் தொழில் நிருவாகத் திலும் இருந்த குற்றங்களையும், குறைபாடுகளையும் நீக்குவதற்கு 1936ஆம் ஆண்டின் இந்தியக் கம்பெனிகள் சட்டம் (Indian Companes Act., of 1936) பெரிதும் உதவியாக இருந்தது. எஞ்சி இருந்த குறைபாடுகளை நீக்க, அச் சட்டத்தில் சிறு திருத்தங்கள் கொண்டு வரப்பெற்றன. 1936ஆம் ஆண்டுச் சட்டத்தின் முக்கிய

விதிகள் பின் வருமாறு: இருபது ஆண்டுக்காலத்திற்கு மேல் எந்த நிருவாகப்பதிலாளி (Managing Agent) யையும் நியமிக்கக் கூடாது (இச் சட்டம் இயற்றியபோது இயங்கிவந்த நிருவாகப் பதிலாளிகளுக்கும் இவ்விதி பொருந்தும்); நிருவாகப் பதிலாளியை நியமிப்பதையும், நீக்குவதையும், நியமிப்பதற்கான நிபந்தனைகளை நிர்ணயிப்பதையும், பங்குதாரர்களின் (Share holders) ஒப்பு தலுடன்தான் செய்யவேண்டும்; ஒரு நிருவாகப் பதிலாளிக்குக் கொடுக்கப்படும் கைம்மாறு, இக் கம்பெனியின் நிகர லாபத்தில் ஒரு குறிப்பிட்ட சதவீதத்திற்கு உள்ளாகத்தான் (ஆனால், ஒரு குறைமட்டசதவீதமும், அலுவலகப்படிகளும் (Office Allowances) கொடுக்கப்படவேண்டும்) இருத்தல் வேண்டும்; ஒரு நிருவாகப் பதிலாளின்கீழ் இருக்கும் ஒரு கம்பெனி, அதே பதிலாளியின் கீழ் இருக்கும் மற்றொரு கம்பெனிக்குக் கடன் கொடுப்பதோ அல்லது கடனின் பொறுப்பை ஏற்பதோ (Guarantee Loan) கூடாது; அதே நிருவாகப் பதிலாளியின்கீழ் இருக்கும் மற்றொரு கம்பெனியின் பங்குகளையோ அல்லது கடன்ஈட்டுப் பத்திரங்களையோ (Debentures) வாங்கவும் கூடாது; எந்த நிருவாகப் பதிலாளியும், கம்பெனியின் நெறியாளர்களின் மொத்த எண்ணிக்கையில் மூன்றில் ஒரு பங்குக்குமேல் நியமிக்கமுடியாது; ஒவ்வொரு கம்பெனியும் குறைந்தது மூன்று நெறியாளர்களையாவது கொண் டிருக்கவேண்டும், இவர்களில் மூன்றில் இரண்டு பங்கைப் பங்கு தாரர்கள் தேர்ந்தெடுக்கவேண்டும்; கம்பெனி நெறியாளர் களுக்குக் கடன்கள் கொடுக்கக்கூடாது. பங்குதாரர்களின் சம்மதம் திட்டமாக இருந்தால் ஒழிய, ஒரு நெறியாளர் அக் கம்பெனியில் ஊதியம் உள்ள எந்தப் பதவியையும் ஏற்கக் கூடாது. கம்பெனியின் முக்கியத் தகவல்களையும், கணக்குகளையும், அறிக்கைகளையும் பங்குதாரர்களுக்கு அளிக்கவேண்டும் என்ற விதிகள் பங்குதாரர்களின் நலன்களைப் பாதுகாப்பதாக இருந்தன. பம்பாயிலும் கல்கத்தாவிலும் பங்குதாரர்களின் சங்கங்கள் நிறுவப்பெற்றன. இது ஒரு நல்ல அறிகுறியாகும்.

1930-ல் தொடங்கிப் பத்தாண்டுக்காலத்தில் பருத்தி ஆலைத் தொழில் இருந்த நிலையை, மந்தத்தினால் உண்டான சிக்கல்களைத் தவிர்ப்பதற்கு அரசாங்கம் கையாண்ட சுங்கவரிக் கொள்கையின் சூழ்நிலையில்தான் அறியமுடியும். பருத்தி ஆலைத்தொழிலில் 1927ஆம் ஆண்டுக்குப்பிறகு இருந்த முன்னேற்றத்தை,அட்டவணை XIV A-காட்டுகிறது. இந்த அட்டவணையிலிருந்து, நூலின் உற்பத்தி, தொடர்ந்து பெருகிவந்தது என்று அறியலாம். ஆனால், (பர்மாவின் ஏற்றுமதி ஒருபுறமிருக்க) அதனுடைய ஏற்றுமதியும் இறக்குமதியும் குறைந்துகொண்டே வந்து அதனுடையமுக்கியத்

துவத்தையும் இழந்தது. இந்தியப் பருத்தி ஆலைகள், உள்நாட்டுச் சந்தையைக் கைப்பற்றின. இந்திய இறக்குமதி வாணிபத்தில் இலங்காஷையரின் பங்கு தொடர்ந்து குறைந்துவந்தது. 1913–14-ல் பருத்திநூலின் இறக்குமதி மிக அதிகமாக இருந்தது.[1] அந்த இறக்குமதியில் 80 சதவீதம் இலங்காஷையரிலிருந்து வந்தது. இதனுடன் ஒப்பிட்டால், 1936–37-ல் மொத்த இறக்குமதியில் இலங்காஷையரின் பங்கு 27 சதவீதமும், ஜப்பான், சீனா இவைகளின் பங்குகள் முறையே 56 சதவீதமும் 17 சதவீதமும் இருந்தன. ஆலைகளின் திறன் வளர்ந்ததாலும், தொழிற்காப்புச் சுங்கவரிகளின் ஆதரவினாலும், சுதேசிஇயக்கம், அன்னியப் பொருள்களைப் புறக்கணித்தல் போன்ற அரசியல் காரணங்களாலும் பருத்தித் துணிகளின் வாணிபத்தில் இந்தியஆலைகளின் நிலை, இக் காலம் முழுவதிலும் பொதுவாக நல்ல முன்னேற்றமடைந்தது. பெருமளவில் வேலைநிறுத்தங்கள் இருந்ததால், பருத்தி ஆலைகளின் நிலைமை அவ்வப்போது பாதிக்கப்பெற்றன. குறிப்பாகப் பம்பாய் நகரத்தில், 1923ஆம் ஆண்டில் தோன்றிய மந்தம் முழுவதும் மறையவில்லை; அங்குப் பல ஆலைகளும் மூடப்பெற்றன. பம்பாய் நகரத்தில் பருத்தி ஆலைகளின் நிலைமையும், 1929–30-ல் உண்டான நெருக்கடியின் பொதுவான விளைவுகளும் (இவைகள் தற்காலிகமாக இருந்தாலும்) பருத்தி இறக்குமதிகளின் மேலிருந்த வருவாய்த் தீர்வைகளுக்குப் பதிலாகத் தொழிற்காப்புத் தீர்வைகள் விதிக்க வேண்டுமென்ற பலமான கோரிக்கைகளுக்கும் பருத்தித் தொழிலின் பிரச்சினைகளையும், அதன் போட்டியிடும் வல்லமையையும் ஆய்வதற்கான விசாரணைகளுக்கும் காரணமாயிருந்தன.

நாம் முன்னர்க் கண்டதுபோல்[2], 1927ஆம் ஆண்டின் சுங்கவரிக்கழகம் சிபாரிசுசெய்த தொழிற்காப்புத் தீர்வைகளை விதிக்க அரசாங்கம் மறுத்தது. ஆனால், G. S. ஹார்டி (G. S. Hardy) அவர்கள் இப் பிரச்சினையைப் பற்றிய ஒரு தனி விசாரணையை மேற்கொண்டு, விசாரணையின் அறிக்கையை 1929-ல் அரசாங்கத்திற்கு அளித்தார். இந்தியச் சந்தையில் இலங்காஷையரின் துணிகளை அகற்றியே ஜப்பானின் வாணிபம் முன்னேற்றமடைந்ததுஎன்று அவர்குறிப்பிட்டார். இருப்பினும்,1929–30ஆம் ஆண்டில் மந்தம் மிகவும் கொடுமையாக இருந்ததால், ஆலை அதிபர்களின் கோரிக்கைகளுக்கு அரசாங்கம் இணங்கவேண்டியிருந்தது. 1930ஆம் ஆண்டில் அரசாங்கம் பருத்திப்பொருள்களைத் தொழிற்காப்புப் பட்டியலுக்கு (Protective Schedule) மாற்றியது.

[1] *V. G. E. Habbard*, Eastern Industrialisation (1938 Ed., p. 282). பர்மா பிரிவினையால் ஒப்பீடுகள் 1936-37 வரையில்தான் செய்யப் பெற்றுள்ளன.

[2] 12-ம் அத்தியாயத்தைப் பார்க்கவும்.

பருத்தித்துணிகளில் இருந்த 11 சதவீதத் தீர்வைகளை, இங்கிலாந்திலிருந்து இறக்குமதியான சாம்பல் நிறமுள்ள சாதாத்துணிகளுக்கு (Plain grey) 15சதவீதமாகவும் (அல்லது ஒரு பவுண்டுக்கு 3½ அணா. இவைகளில் எது உயர்வாக இருக்கிறதோ அதைக் கையாளுவது), இங்கிலாந்து அல்லாத மற்ற நாடுகளிலிருந்து இறக்குமதியான சாம்பல் நிறமுள்ள துணிகளுக்கு 20 சதவீதமாகவும் (அல்லது ஒரு பவுண்டுக்கு 3½ அணாத்தீர்வை) அரசாங்கம் உயர்த்தியது. மற்றவகைத் துணிகளும் இதே அளவில் பெறுமான வீதத் தீர்வைகளைச் (ad volerum duties) செலுத்தவேண்டும்; ஆனால், இவைகள் அளவு வீதத்தீர்வைகளை (Specific duties) செலுத்தவேண்டியதில்லை. இத்தகைய ஏகாதிபத்தியச் சலுகைமுறை, ஒரு கொள்கையாகக் கையாளப்படவில்லை. இங்கிலாந்தின் பண்டங்களையும் 20 சதவீதத் தீர்வைகளுக்குள்ளாக்கியிருந்தால், இலங்காஷையரின் பொருள்களுக்கு இந்திய நுகர்வோர்கள் அதிகவிலைகள் கொடுக்கவேண்டியிருக்கும். இத்தகைய பொருள்கள் இந்தியாவில் உற்பத்தி செய்யப் பெறுததால் இந்தியத்தொழிலுக்கும் இதனால் பயன் இருந்திருக்காது. ஆனால், ஜப்பானியத் துணிகள் இந்தியத் துணிகளுடன் நேரிடையாகப் போட்டியிட்டன.

1931ஆம் ஆண்டில் அரசாங்கத்திற்கு அதிகப்படியான வருவாய் தேவைப்பட்டதால், இங்கிலாந்திலிருந்து இறக்குமதியான பருத்தித்துணிகளில், தீர்வைகள் 15 சதவீதத்திலிருந்து 20 சதவீதமாகவும், இங்கிலாந்து அல்லாத மற்ற நாடுகளிலிருந்து இறக்குமதியான துணிகளில் 20 சதவீதத்திலிருந்து 25 சதவீதமாகவும் (அளவு வீதத் தீர்வைகள் மாறுதலடையவில்லை) உயர்த்தப்பெற்றன. 1931ஆம் ஆண்டில் செப்டம்பர் மாத நெருக்கடி வரவுசெலவுத் திட்டம் (Emergency budget) அப்பொழுது இருந்த தீர்வைகளில், மேலும் 25 சதவீத மேல்வரியை விதித்தது. இதனால்,இங்கிலாந்திலிருந்து இறக்குமதியான பருத்தித்துணிகளில் இருந்த தீர்வைகள் 25 சதவீதமாகவும், இங்கிலாந்து அல்லாத மற்ற நாடுகளிலிருந்து இறக்குமதியான துணிகளிலிருந்த தீர்வைகள் 31¼ சதவீதமாகவும் (இந்த மாறுதல்களுக்கு ஏற்றவாறு அளவு வீதத்தீர்வைக் கட்டணங்களும் மாற்றப்பட்டன) உயர்ந்தன. பொதுவான இறக்குமதித் தீர்வைகள் ஏற்றமடைந்தபொழுது, பருத்தி, செயற்கைமுறைப் பட்டுநூல், செயற்கைமுறைப் பட்டுத் துணிகள், கலப்புப்பட்டு இவைகளின்மேலும் உயர்ந்த தீர்வைகள் விதிக்கப்பெற்றன.[1]

[1] *V.* Report of the Special Tariff Board on the Cotton Textile Industry 1936, chapter ii.

1930ஆம் ஆண்டில் பருத்தித் தீர்வைகளைத் தொழிற்காப்புப் பட்டியலுக்கு மாற்றிய பொழுது, அதன் விளைவுகளை மற்றொரு சுங்கவரிக் கழகம் பின்னர் விசாரணை செய்யும் என்று அரசாங்கம் உறுதி கூறியது. அந்தச் சுங்கவரிக் கழகம் 1932ஆம் ஆண்டில் நியமிக்கப்பெற்றது.[1] ஆனால், கழகம் தன்னுடைய அறிக்கையை அரசாங்கத்திற்கு அளிப்பதற்குமுன்னர், அரசாங்கம் அவசர நடவடிக்கை எடுக்கவேண்டிய அளவுக்கு ஜப்பானியப்போட்டி பலமாக வளர்ந்தது. எனவே, இங்கிலாந்து அல்லாத மற்ற நாடுகளிலிருந்து இறக்குமதியான துணிகளின்மீது தீர்வை 50 சத வீதமாக உயர்த்தப்பெற்றது (அளவு வீதத் தீர்வையிலும் இதைப்போன்ற ஏற்றம் இருந்தது). உயர்ந்த இறக்குமதித் தீர்வைகளும், மேலும் மேலும் வளர்ந்துவந்த ஜப்பானிய இறக்குமதிகளுக்குத் தடையாக இல்லை. இக் காலத்தில் யென் நாணயத்தின் (yen: ஜப்பானிய நாணயம்) மதிப்பு இறங்கியதே இதற்கு முக்கியக் காரணமாகும். ஆகவே, ஒன்றுக்கு ஒன்று மிகஅதிகமான சலுகைகாட்டும் முறையில் (Mutual 'most-favoured-nation' treatment) அமைந்த 1904ஆம் ஆண்டின் இந்திய–ஜப்பானிய வாணிப ஒப்பந்தத்தை இந்திய அரசாங்கம் 1933-ல் கைவிட்டு இங்கிலாந்து அல்லாத மற்ற நாடுகளிலிருந்து இறக்குமதியான துணிகளிலிருந்த தீர்வையை 75 சதவீதத்திற்கு உயர்த்தியது.

ஜப்பான் இதற்கு எதிராக, இந்தியாவிலிருந்து இறக்குமதியாகும் கச்சாப்பருத்தியைப் புறக்கணிப்பதாக அறிவித்தது. ஆனால், இந்திய அரசாங்கம் விட்டுக்கொடுத்து உடன்படிக்கை செய்துகொள்ளும் கொள்கையைக் கையாண்டது. 1933ஆம் ஆண்டு செம்படம்பர் மாதத்தில் ஒரு புதிய உடன்படிக்கைக்கான பேச்சுவார்த்தைகள் தொடங்கின. இதற்காக, ஜப்பான் ஒரு தூதுக்குழுவை இந்தியாவுக்கு அனுப்பியது. முடிவாக ஓர் ஒப்பந்தம் (இந்த ஒப்பந்தத்தில் மேம்போக்கான விதிகள் மட்டும்தான் அடங்கியிருந்தன. வாணிப சம்பந்தமான மற்ற விவரங்களைப் பின்னர் முடிவுசெய்வதாக இருந்தது.) நிறைவேறியது. இந்த ஒப்பந்தத்தின்படி, ஜப்பான் எந்தவித நிபந்தனையுமின்றி இந்தியாவில் 125 மில்லியன் கெசத்துணிகளை இறக்குமதி செய்யலாம். இந்தியாவிலிருந்து ஜப்பான் 1மில்லியன் பேல் பருத்தியை வாங்கினால், 325 மில்லியன் கெசத்துணிகளையும், 1½ மில்லியன் பேல் பருத்தியை வாங்கினால் 400 மில்லியன் கெசத்

[1] கழகம் தன்னுடைய அறிக்கையை 1933-ல் அளித்தது. அந்த அறிக்கையில் ஏகாதிபத்தியச் சலுகைமுறைக்கு எ.திர்ப்பைத் தெரிவித்திருந்தது. ஆனால், அரசாங்கம் கழகத்தின் முடிவுகளைக் காலத்திற்குப் பொருந்தாதவை என்று கருதிக் கழகத்தின் சிபாரிசுகளில் எந்தவித அக்கறையும் செலுத்தவில்லை.

துணிகளையும் இந்தியாவில் இறக்குமதி செய்யலாம்.[1] அதே நேரத்தில், இந்த ஒப்பந்தத்தின் ஒரு விதியாக, இங்கிலாந்து அல்லாத மற்ற நாடுகளிலிருந்து இறக்குமதியான துணிகளில் இருந்த தீர்வை 75 சதவீதத்திலிருந்து 50 சதவீதத்திற்குக் குறைக்கப்பெற்றது. மிக அதிகமான சலுகை முறையின் (Most favoured nation basis) அடிப்படையில் இந்த ஒப்பந்தம் அமைந்தது. வாணிப ஒப்பந்தம் 1937ஆம் ஆண்டுவரை நடைமுறையில் இருக்குமென்று முடிவுசெய்யப்பட்டது. ஆனால் 1933ஆம் ஆண்டின்முடிவில் இருந்த நிலையைவிட, யென் நாணயத்தின் (Yen) மதிப்பு இறங்கினால், ஜப்பானியப் பொருள்களின்மேல் அதிகப்படியான தீர்வைகளை விதிக்கலாம். யென் நாணயம் ஸ்டெர்லிங் நாணயத்துடன் இணைக்கப்பெற்றதால் இந்த விதியை உபயோகிக்க வேண்டிய அவசியம் எழவில்லை. இந்த ஒப்பந்தம் காலாவதி ஆவதற்கு முன், புதிய பேச்சு வார்த்தைகள் நடந்து, 1937ஆம் ஆண்டில் ஒரு புதிய ஒப்பந்தமும் உருவாகியது. இந்த ஒப்பந்தத்தின்படி, நடைமுறையிலிருந்த ஜப்பானிய வீதப்பங்கில் சில மாற்றங்களும், வீதப்பங்கிலிருந்த துணிவகைகளில் (இந்திய நலன்களுக்குச் சாதகமான) சில சிறு மாறுதல்களும் ஏற்பட்டன. இதைத்தவிர 1937ஆம் ஆண்டு ஒப்பந்தத்தின் விதிகள் 1934ஆம் ஆண்டு விதிகளிலிருந்து மாறுதலடையவில்லை. இதற்கிடையில் இந்திய ஆலை அதிபர்களுக்கும், இலங்காஷைர் ஆலை அதிபர்களுக்குமிடையே பேச்சுவார்த்தைகள் நடந்துவந்தன ஜப்பானியத் தூதுக்குழு இந்தியாவுக்கு வந்த அதேநேரத்தில் சர் வில்லியம் கிளேர் லீஸ் (Sir William Clare Lees) அவர்களின் தலைமையில் இங்கிலாந்திலிருந்து ஒரு பருத்தித் தூதுக் குழுவும் இந்தியாவுக்கு வந்தது. இந்தத் தூதுக்குழுவின் வருகையால் 1933ஆம் ஆண்டு, அக்டோபர் மாதத்தில் லீஸ்-மோடி உடன் படிக்கை உருவாகியது.

இந்த உடன்படிக்கையில் பின்வரும் நிபந்தனைகள் இருந்தன: இங்கிலாந்திலிருந்து இறக்குமதியாகும் பொருள்களுக்கு எதிராகத் தொழிற்காப்புத் தீர்வைகளை உயர்த்தக் கூடாது; நிதிநிலை வளர்ச்சியடைந்து அரசாங்கம், 1931ஆம் ஆண்டில் விதித்த மேல்வரிகளை நீக்க முடிவுசெய்யும்பொழுது, இங்கிலாந்திலிருந்து இறக்குமதியாகும் பருத்தித் துணிகளின் மேல் புதிய தீர்வைகளை விதிக்கவேண்டும் என்று இந்திய ஆலை அதிபர்கள் வற்புறுத்தக்கூடாது; ஏகாதிபத்தியச் சலுகை முறை தொடர்ந்து நடைமுறையில் இருக்கவேண்டும்; செயற்கைப்

[1] ஜப்பானியத் துணிகள் பலவகைகளாகப் பிரிக்கப்பெற்று ஒவ்வொரு வகைக்கும் ஒரு வீதப்பங்கு நிர்ணயிக்கப் பெற்றது. ஆனால், வெவ்வேறுபிரிவுகளில் மாறுதல்கள் அனுமதிக்கப்பெற்றன.

பட்டு, கலப்புப் பருத்தித்துணிகள் இவைகள் மேலுள்ள தீர்வைகளைச் சலுகைமுறையின் அடிப்படையில் மறுஆய்வு செய்யவேண்டும். இந்த நிபந்தனைகளுக்குப் பதிலாகக் குடியேற்ற நாடுகளின் சந்தைகளில் கிடைக்கும் பலன்களை இந்தியாவுடன் பங்கிட்டுக்கொள்வதாகவும், ஒட்டாவா ஒப்பந்தத்தில் குறிப்பிட்ட வழிகளில் இந்தியப்பருத்தியின் உபயோகத்தை ஊக்குவிப்பதாகவும் இலங்காஷைர் ஆலை அதிபர்கள் உறுதியளித்தனர். முடிவாக, இவை சம்பந்தமாக எழும் பிரச்சினைகளுக்கு இருதரப்பினரும் நேரிடையான பேச்சுவார்த்தைகள் மூலம் முடிவு காண்பதாகத் தங்களைக் கட்டுப்படுத்திக்கொண்டனர்.

ஜப்பானுடனும், இலங்காஷைருடனும் நடந்த ஒப்பந்தங்களின் விதிகள் 1934ஆம் ஆண்டின் 'இந்தியப் பருத்தித் தொழிற் காப்புச் சுங்கச் சட்டத்'தின்படி (The Indian Tariff Textile protection Act of1934)சட்டத்தின் தகுதியைப் பெற்றன. இந்திய ஆலை அதிபர்களுக்கும் இலங்காஷைர் ஆலை அதிபர்களுக்கும் நடந்த ஒப்பந்தத்தின் விதிகளை, 1935ஆம் ஆண்டில் அரசாங்கம் செய்துகொண்ட, இந்திய ஆங்கிலேய வாணிப ஒப்பந்தம் அங்கீகரித்தது.

1934ஆம் ஆண்டுச் சட்டம், இங்கிலாந்தின் பொருள்களுக்குச் சலுகை அளிக்கும் முறையில் தீர்வைகளை விதித்தது. வெவ்வேறு வகையான பருத்திப் பொருள்களில், பெறுமான வீதத் தீர்வைகளுக்குப் பதிலாகச் சரிசமனான அளவு வீதத்தீர்வைகளையும் இச் சட்டம் கொண்டிருந்தது. உதாரணமாக ஜப்பானிய ஒப்பந்தத்தின்படி இங்கிலாந்திலிருந்து இறக்குமதியான பருத்தித் துணிகளின்மேல் 25 சதவீதமும், இங்கிலாந்து அல்லாத நாடுகளிலிருந்து இறக்குமதியானவற்றில் 50 சதவீதமும் இருந்த தீர்வைகளை இச் சட்டம் கையாண்டது. செயற்கைப் பட்டுப் பொருள்களை (இங்கிலாந்தின் பொருள்களுக்குச் சலுகைஅளிக்கும் முறையில்) இச் சட்டம் தொழிற்காப்புப் பட்டியலுக்கு மாற்றியது.

இந்தியப் பருத்தியின் உபயோகத்தை இலங்காஷையரில் வளர்க்கும் எந்தத் திட்டத்துடனும் ஒத்துழைப்பதாக இங்கிலாந்து அரசாங்கம் ஒட்டாவா மாநாட்டில் உறுதியளித்தது. அதற்கு இணங்க இலங்காஷைர் பருத்தித்தொழில் ஒரு 'இந்தியப் பருத்தி விசாரணைக் குழுவை' நியமித்து, இந்தியப் பருத்தியை உபயோகிப்பதில் சிறந்தமுறை எதுவென்ற ஆராய்ச்சியை மேற்கொண்டது. இந்தியச் சூழ்நிலையை அறியவும், பருத்திப் பயிர்களைப்பற்றி அறிவிக்கவும், இலங்காஷைருக்கு இந்தியப்பருத்

தியை அனுப்புவதற்கும் விற்பனை செய்வதற்கும் 'பருத்தி ஆணையாளர்கள்' (Cotton Commissioners) இந்தியாவுக்கு அனுப்பப் பெற்றனர். இந்நடவடிக்கைகளால் குறிப்பிடத்தக்க வெற்றி கிடைத்தது. (முதல் உலகப்) போருக்கு முற்காலத்தில் ஆண்டுச் சராசரி 122 ஆயிரம் பேல்களாகவும், போருக்குப் பிற்காலத்தில் சராசரி 212 ஆயிரம் பேல்களாகவும் இருந்த இந்தியப் பருத்தி ஏற்றுமதி, 1938-39-ல் 434 ஆயிரம் பேல்களாக உயர்ந்தது.

1930ஆம் ஆண்டிலும், அதற்குப் பிறகும் ஏற்பட்ட சுங்க வரி மாற்றங்களினால் உண்டான விளைவுகளை அறியவும், இந்தியப் பொருள்களின் நியாயமான விலைகளுக்கு இறக்குமதியாகும் பொருள்களின் விலைகளைச் சமனுக்குவதற்கும் மேலாக இந்தியத் தொழிற்காப்புத் தீர்வைகள் இருத்தல் கூடாது என்ற ஒட்டாவா ஒப்பந்தத்தின் விதியை மீறுமல், இந்தியத் தொழில்களுக்குத் தொழிற்காப்பளிக்கும் தீர்வை மட்டம் என்ன என்று ஆராயவும், 1936ஆம் ஆண்டில் மூன்றாவது சுங்கவரிக் கழக விசாரணை மேற் கொள்ளப் பெற்றது. இந்தியாவிலும் இங்கிலாந்திலும் நிலவும் விலைகளையும், உற்பத்திச் செலவுகளையும் பரவலான முறையில் ஆராயச் சுங்கவரிக் கழகம் முனைந்தது. இங்கிலாந்து அல்லாத நாடுகளிலிருந்து இறக்குமதியாகும் பொருள்களில் தற்பொழுது நிலவும் (50 சதவீதத்) தீர்வைகளும், இங்கிலாந்தின் பருத்தி நூலிலும், [1] இங்கிலாந்தின் அச்சிட்ட பருத்தித் துணிகளிலும், இங்கிலாந்தின் செயற்கைப்பட்டுப் பொருள்களிலும் தற்பொழுது உள்ள தீர்வைகளும் நீடிக்க வேண்டுமென்றும்; ஆனால், இங்கிலாந்திலிருந்து இறக்குமதியான சாம்பல் நிறமுள்ள பருத்தி சாதாத்துணிகளின் மேலுள்ள 25 சதவீதம் பெறுமான வீதத்தீர்வையை (அல்லது 1 பவுண்டுக்கு 4$\frac{8}{9}$ அணாவாக உள்ள தீர்வை, இவைகளில் உயர்வாக உள்ளதை) 20 சதவீதமாகக் (அல்லது ஒரு பவுண்டுக்கு 3$\frac{1}{2}$ அணாக்களாக) குறைக்கவேண்டுமென்றும்; கரைபோட்ட (Bordered) துணிகள், சாம்பல் நிறத் துணிகள், சலவை செய்த துணிகள், வர்ணத்துணிகள் இவைகளிலிருந்த தீர்வையை 25 சதவீதத்திலிருந்து 20 சதவீதத்திற்குக்

[1] 1896-லிருந்து 1922 வரை பருத்திநூல் தீர்வையின்றி இறக்குமதியாயிற்று. 1922-ல் ஒரு 5 சதவீதம் பெறுமான வீதத்தீர்வை விதிக்கப்பெற்று, அதனுடன் 1927-ல் ஓர் அளவுவீதத்தீர்வை சேர்க்கப்பெற்றது. 1931-ல் பெறுமான வீதத்தீர்வை, அளவு வீதத்தீர்வை இரண்டும் உயர்த்தப்பெற்றன. இங்கிலாந்து அல்லாத நாடுகளிலிருந்து இறக்குமதியான பொருள்களில் இருந்த 1931ஆம் ஆண்டின் தீர்வைக் கட்டணம் (6$\frac{1}{4}$ சதவீதம், அல்லது ஒரு பவுண்டுக்கு 1 7/8 அணாக்கள்) 1934-ல் நீடிக்கப்பெற்றது. ஆனால், இங்கிலாந்திலிருந்து இறக்குமதியான நூலின் தீர்வை 5 சதவீதம் அல்லது ஒரு பவுண்டுக்கு 1$\frac{1}{4}$ அணாக்களுக்குக் குறைக்கப்பட்டது. 1936ஆம் ஆண்டின் சுங்கவரிக் கழகம் ஒரு பயன்தரும் அட்டவணையைக் கொடுத்திருக்கிறது. அதிலிருந்து, பருத்தி நூல், பருத்தித்துணிகள், செயற்கைப்பட்டு நூல், கலப்புப்பட்டு இவைகளில் வெவ்வேறு காலத்தில் நடைமுறையிலிருந்த தீர்வைகளை அறியலாம்.

குறைக்க வேண்டுமென்றும் முக்கியமாகச் சுங்கவரிக் கழகம் பரிந்துரை வழங்கியது. இப் பரிந்துரைகளை அரசாங்கம் ஏற்றுக் கொண்டதுடன் நடைமுறைக்கும் கொண்டு வந்தது. இதனால், பொதுவான சுங்கவரிக் கட்டணம் 25 சதவீதத்திலேயே நீடித்தாலும், இங்கிலாந்திலிருந்து இறக்குமதியான சாம்பல் நிறத்துணிகள், சலவை செய்த துணிகள், வர்ணத்துணிகள் இவைகளில் 1931ஆம் ஆண்டு செப்டம்பர் மாதத்தில் விதிக்கப் பெற்ற மேல்வரிகள் நீக்கப்பெற்றன.

ஆகவே, பொருளாதார மந்தத்திலிருந்து மீட்சியுற்று நல்ல முன்னேற்றம் கைகூடும் வரையில் தொழிற்காப்புச் சுங்கங்கள் தேவைப்பட்டன என்பது தெளிவாகிறது. ஆனால், 'பருத்தி நூலையும், பருத்தித் துணிகளையும் நுகர்வோர்கள் (இந்தியாவில்) தீர்வைகளின் முழு அளவுக்கும் தண்டிக்கப்படவில்லை'[1] என்று 1936ஆம் ஆண்டுச் சுங்கவரிக் கழகம் தன்னுடைய அறிக்கையில் குறிப்பிட்டது. இந்தியப் பருத்தி ஆலைத் தொழில், உள்நாட்டுச் சந்தையை மறுமுறையும் படையெடுத்தது. போருக்கு முன்னர், இந்தியாவில் நுகர்வுக்குக் கிடைத்த மொத்தப் பருத்தித் துணிகளில் முக்கால்பங்கு இறக்குமதியானது; எஞ்சிய கால்பங்கை இந்திய ஆலைகள் அளித்தன. ஆனால், 1938 வாக்கில் இந்த நிலை தலைகீழ் மாற்றமடைந்தது. 1938–39-ல் மொத்தத் துணியில் இறக்குமதி 133 சதவீதம்தான் இருந்தது. ஆனால், பருத்தித் துணிகளின் ஏற்றுமதியில் ஏற்ற இறக்கங்கள் இருந்தாலும், (பர்மாவுக்கு ஏற்றுமதியானது நீங்கலாக) மொத்தத்தில் ஏற்றுமதி வெகுவாகக் குறைந்தது. இக் காலம் முழுவதிலும் இந்திய (குறைந்து கொண்டுவந்த) இறக்குமதியில் இலங்காஷைரின் பங்கு 1913–14-ல் 97·1 சதவீதத்திலிருந்து, 1928–29-ல் 75·9 சதவீதமாகவும் 1936–37-ல் 43·7 சதவீதமாகவும் குறைந்தது. இதே ஆண்டுகளில் ஜப்பானின் பங்கு 0.3 சதவீதத்திலிருந்து 18.8 சதவீதத்திற்கும், 54.6 சதவீதத்திற்கும் உயர்ந்தது.[2] இந்தியப் பருத்தித் தொழிலின் இட அமைப்பில், இருந்த மாற்றத்திலிருந்து – குறிப்பாகப் பம்பாய் நகரத்தின் முக்கியத்துவம் குறைந்து, அகமதாபாத் நகரத்தினுடையவும், உள்நாட்டு மாவட்டங்களினுடையவும் முக்கியத்துவம் உயர்ந்ததிலிருந்து—உள்நாட்டுச் சந்தையில் கடுமையான போட்டியிருந்தது என்பதை அறியலாம். இத்தகைய போட்டியின் மூலம் தொழில் திறன் வளர்ச்சியடையும் வரை, தொழிற்காப்பின் பளு மிக அதிகமாக இருக்கமுடியாது.

[1] *V*, Tariff Board Report 1936, p. 110.

[2] *V*. G. E. Hubbard, op. cit., p. 283.

இந்திய ஆலைகளின் வெளிப்பாடும், இந்தியாவில் நுகர்வுக் காகக் கிடைக்கும் ஆலைத் துணிகளின் அளவும் பெருவாரியாக வளர்ச்சியடைந்தது. ஏற்றுமதிக்கும் இறக்குமதிக்கும் தள்ளுபடி செய்து நோக்கினால், போருக்கு முன்னர் 3582 மில்லியன் கெசங் களாக இருந்த இந்த அளவு, 1938–39–ல் 4734 மில்லியன் கெசங்களாகப் பெருகியது [1] இவ்வாறு பெருக்கம் இருந்தாலும், மக்கள்தொகை பெருகியதால் தலைக்குக் கிடைத்த துணியின் அளவு குறைந்தது. ஆனால், கைத்தறி உற்பத்தியையும் கணக்கில் எடுத்துக் கொண்டால், எல்லாவகைப் பருத்தித் துணிகளிலும் தலைக்கான நுகர்வு (Per capita consumption) போருக்கு முன் னிருந்த அளவைவிட (1932–33 நீங்கலாக) இருபது ஆண்டு களுக்குக் குறைந்து, பின்னர் மீட்சியுற்று, 1938–39 வாக்கில் போருக்கு முன்னிருந்த நிலையை (16, 17 கெசங்களுக்கு இடையில்) அடைந்தது.[2]

1930 ஆம் ஆண்டு தொடங்கிப் பத்தாண்டுக் காலத்தில் இரும்பு எஃகுத் தொழில் முன்னேற்றத்தைப்பற்றி முன்னரே கண்டோம்.[3] அதனுடன், சில விளக்கங்களும் புள்ளிவிவரங் களும்தான் சேர்க்கப்படவேண்டும். மந்தகாலத்தின் மிகக் கேடான ஆண்டுகளில் இரும்பு எஃகுத் தொழிலின் வெளிப் பாடும் விலைகளும் இலாபங்களும் வீழ்ச்சிஅடைந்தாலும், அதற் குப் பின்னர் மீட்சி, குறிப்பாக இலாபத்தைப் பொறுத்த அளவில் மிக விரைவாக இருந்ததையும் குறிப்பிட்டோம். இலாபங்கள் 1934 முதற்கொண்டு அதிகமாகவும், போர் ஆயத்த காலத்தில் ஏற்பட்ட பொருளாதார வீக்கத்தின்பொழுது, மிக அதிகமாக வும் இருந்தன. வாணிபச் சுழலினால் இரும்பு எஃகுத் தொழிலில் ஏற்படும் விளைவுகள் எல்லா நாடுகளிலும் கொடுமையாகவே இருக்கின்றன. இந்த விதிக்கு இந்திய இரும்பு எஃகுத் தொழில் ஒரு விலக்கு அன்று.

பொருளாதார மந்தம் இருந்தாலும்கூட, இந்திய இரும்பு எஃகுத் தொழிலில் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் இருந்தது என்றும், உற்பத்திச் செலவுகளும் 1926 ஆம் ஆண்டின் சுங்க வரிக் கழகம் எதிர்பார்த்ததைவிட, அதிகமாகக் குறைந்தது என்றும் 1934 ஆம் ஆண்டின் சுங்க வரிக் கழகம் முடிவு செய்தது. பொதுவாக மந்தத்தினாலும், குறிப்பாக இரயில்வே வசதிகள் குறைந்ததாலும் பொறியியல் நிறுவனங்களின்

[1] XIV A அட்டவணையைப் பார்க்கவும்.

[2] 1938–39-ல் தலைக்கான நுகர்வு 17·94 கெசமாக இருந்தது. ஆனால், இது ஒரு விதிவிலக்காகும்.

[3] அத்தியாயம் 10, பின் இணைப்பு F, அத்தியாயம் 18 இவைகளைப் பார்க்கவும்.

இரும்புத் தேவை குறைந்ததாலும், 1928 ஆம் ஆண்டில் நடந்த தொழிலாளர் வேலை நிறுத்தத்தினாலும், வார்ப்பு இரும்பு ஏற்று மதியின் இலாபங்கள் குறைந்ததாலும் இரும்பு எஃகுத் தொழிலின் இலாபங்கள் மிகவும் பாதிக்கப்பெற்றன. ஆகவே, 1926 ஆம் ஆண்டின் சுங்கவரிக் கழகம் நியாயமானது என்று கருதிய 8 சதவீதத்திற்கு எதிராக, ஆண்டுச் சராசரி இலாபங்கள் 2½ சதவீதம்தான் இருந்தன. இரும்புத் தொழிலின் தொழில் நுட்பத்துறையை, நடைமுறையில் இருந்த முறைகளுக்குப் பதிலாகப் பின்வரும் வழிகளில் திருத்தியமைக்க வேண்டுமென்று சுங்கவரிக் கழகம் பரிந்துரைத்தது: இரும்பைத் திறந்த உலையில் (Open-hearth furnaces) காய்ச்சும் பழைய முறைக்குப்பதிலாக, புதிய திறந்த முறை உலைக் காய்ச்சலைக் கையாளவேண்டும்; டியூபிளக்ஸ் இயந்திரத்தில் (Duplex Plant) பஸ்ஸமர் செய் முறையை (Bessemer Converter) உபயோகிப்பதை முற்றிலும் கைவிட வேண்டும்; டியூபிளக்ஸ் கூடத்தில் (Duplex Shop) இருக்கும் மூன்று திறந்த உலைகளுடன் நான்காவதாக ஒன்றையும் சேர்க்க வேண்டும். அதே நேரத்தில், 'போருக்கு (முதல் உலகப் போர்) முற்பட்ட காலத்தில் தொடங்கிய இரும்பு எஃகுத் தொழில்களுடன் ஒப்பிட்டுப் பார்த்தால், டாடா இரும்பு எஃகுத் தொழில் திறனுடையதாக இருந்தது. எஃகை உருக்கும் பிரிவுதான் மிகவும் பலவீனமான பிரிவாகும். ஆனால், இப் பிரிவையும் திருத்தியமைத்து, மற்றப் பிரிவுகளிலும் அபிவிருத்தி கிள் செய்தால் ஏழு ஆண்டுகளுக்குப் பிறகு (1934-ல் தொழிற்காப்புத் திட்டத்தை மறுஆய்வு செய்யும்பொழுது) இரும்பு எஃகுத் தொழிலைப்பற்றி அதிகமாகக் குறைகூற முடியாது' 'என்றும் கழகம் கூறியது. கழகத்து மதிப்பீட்டின்படி 1927 ஆம் ஆண்டின் விசாரணைக்குப்பிறகு, இந்திய எஃகுப்பொருள் சந்தையில் டாடா இரும்பு எஃகு நிறுவனத்தின் பங்கு 30 சதவீதத்திலிருந்து 72 சதவீதத்திற்கு உயர்ந்தது.[1] குறிப்பிட்ட சில (இரும்பு எஃகுப்) பொருள்களுக்கு அரசாங்கஉதவி தேவைப்பட்டது என்று கழகம் கருதியது;[2] ஆகவே, இவைகளுக்குத் தொழிற்காப்பை, ஆனால், (சில இனங்களில்) குறைந்த அளவில் நீடிக்கவேண்டும் என்றும், இங்கிலாந்திலிருந்து இறக்குமதியாகும் பொருள்களுக்குச் சலுகை முறையை அதிகரிக்கவேண்டும் என்றும் பரிந்துரைத்தது. ஒவ்வோர் நிறுவனமும் ஒவ்வொரு இனத்தில் ஈடுபட்டு, சிறப்புப்

[1] அதற்குப்பிறகு டாடாவின் பங்கில் மாற்றம் எதுவும் இல்லை. இதிலிருந்து டாடாவின் வெளிப்பாடு (output) பெருகப்பெருக உள்நாட்டுத் தேவையும் உயர்ந்தது என்று கொள்ளலாம்.

[2] சில எஃகுப் பொருள்கள் 'தொழிற் காப்பை'ப் பெறவில்லை என்பதையும், ஆனால் இறக்குமதிகள் குறைந்த அளவில் வருவாய்த் தீர்வையைச் செலுத்தின என்பதையும் நினைவில் கொள்ளவேண்டும்.

பயிற்சிபெற்று, ஒரே தரமான பொருள்களை உற்பத்தி செய்யும் வழிகளில் இரும்பு எஃகுத் தொழிலைத் திருத்தியமைக்க வேண்டும் என்றும் கழகம் பரிந்துரைத்தது. இந்தியாவில் விரைவான முன்னேற்றம் இருந்தது. ஆகவே, மற்றோர் எஃகு உற்பத்தி செய்யும் கம்பெனியை நிறுவ இடம் இருக்கிறது. அங்ஙனம் நிறுவுவதால் தொழில்திறன் வளர்ச்சியடையும் என்று கழகம் கருதியது. கழகத்தின் இந்தப் பரிந்துரை, 'வங்காள இரும்பு எஃகுத் தொழில்,' 'இந்திய இரும்பு எஃகுத் தொழில்' (இரண்டும் அப்பொழுது இரும்பை மட்டும்தான் உற்பத்தி செய்து வந்தன) இவையிரண்டும் ஒன்றுக இணைய (Amalgamation) ஏதுவாக இருந்தது. இந்த இணைப்பின் விளைவால் 'இந்திய எஃகுக் கார்ப்பரேஷன்' (Indian Steel Corporation) உருவாகி, 1939 ஆம் ஆண்டுவாக்கில் திருத்தியமைக்கவும், எஃகு உற்பத்தியைத் தொடங்கவும் முனைந்தது. ஆனால், 1938–39 வாக்கில் இந்தியாவில் எஃகு உற்பத்திசெய்யும் கம்பெனிகள் டாடா கம்பெனி, மைசூர் கம்பெனி (இது 1923-ல் தொடங்கப் பெற்றது. ஆனால், இதன் உற்பத்திச் சக்தி மிகக் குறைவானது) ஆகிய இரண்டு மட்டும்தான் இருந்தன. இவைகளைத் தவிர எஃகுத்தகடுகளை உற்பத்திசெய்யும் சிறு ஆலைகளும், திறனற்ற பல ஆலைகளும் இருந்தன.

1934–35-க்குப் பின்னர், வெளிப்பாடு வெகுவாகப் பெருகியது.[1] 1938–39-ல் இந்தியாவில் மொத்தத்தில் 1.5 மில்லியன் டன்களுக்கு மேலான வார்ப்புஇரும்பு உற்பத்தியாயிற்று; டாடாவிலிருந்து உற்பத்தியான எஃகுப்பாளங்கள் (1934–35-ல் 834,000 டன்களிலிருந்து 1 மில்லியன் டன்களுக்கு உயர்ந்தன. இதேகாலத்தில், செய்வினை முடிந்த எஃகின் வெளிப்பாடு 604,000 டன்களிலிருந்து 700,000 டன்களுக்கு உயர்ந்தது. வார்ப்புஇரும்பின் உள்நாட்டு நுகர்வு (Consumption) அதிகரித்தாலும், அதன் ஏற்றுமதிஅளவு குறையவில்லை; இரும்பு எஃகுப் பொருள்களின் ஏற்றுமதிகள் வெகுவாகஇருந்தன; இரும்பு எஃகுப்பொருள்களின் இறக்குமதிகள் மிகவும் குறைந்தன. இந்திய எஃகுக் கம்பெனியின் எல்லாவகையான பங்குகளுக்கும் 1921ஆம் ஆண்டுக்குப் பிறகு 1936 ஆம் ஆண்டு ஜூலை மாதத்தில்தான் முதன்முறையாக வீதப்பங்கு (Dividend) அறிவிக்கப்பட்டது. இதிலிருந்து தொழிற்காப்புத் தீர்வைகள் குறைவாக இருந்தாலும், கம்பெனி வளர்ச்சியடைந்தது என்பதை அறியலாம்.

[1] பின்இணைப்பு F-ஐப் பார்க்கவும்.

(முதல்)போருக்கு முற்பட்ட காலத்தில், இந்தியாவில் இறக்கு மதியான எல்லாவகையான இரும்பு எஃகுப் பொருள்களின் (12,000 டன்கள் வார்ப்பு இரும்பும், கழிவான இரும்பும் உள்பட) ஆண்டுச் சராசரி 820,000 டன்கள் ஆகும். ஆனால், 1935 வாக்கில் இறக்குமதியின் ஆண்டுச்சராசரி 400,000 டன்களுக்குக்(1936-37-ல் 360,000 டன்கள், 1938–39-ல் 272,000 டன்கள்தான் இறக்குமதி யாயின) குறைந்துவிட்டது. இதிலிருந்து இரும்பு எஃகுத் தொழிலின் வளர்ச்சியால் இறக்குமதி வாணிபத்தில் ஏற்பட்ட விளைவுகளைத் தெளிவாக அறியலாம். அதே நேரத்தில் ஏற்றுமதி (குறிப்பாக வார்ப்பு இரும்பின் ஏற்றுமதி சாதாரணமாக மொத்த நிறுவை ஏற்றுமதியில் (Exports by weight) 80 சத வீதம் இருந்தது) வெகுவாகப் பெருகியது. போருக்கு முற்பட்ட காலத்தில் ஆண்டுக்கு 42,000 டன்களாக இருந்த ஏற்றுமதி, 1936-37-ல் 683,000 டன்களாகப் பெருகியது. ஆனால், 1938–39-ல் 598,000 டன்கள்தான் ஏற்றுமதியாயின.

ஆகவே, 1938 ஆம் ஆண்டு வாக்கில் ஏற்றுதியான (வார்ப்பு இரும்பு உள்பட) இரும்பு எஃகுப் பொருள்களின் நிறுவை, இறக்குமதி நிறுவையைவிட அதிகமாக இருந்தது. ஆனால், இறக்குமதியில் விலையுயர்ந்த செய்வினை முடிந்த பொருள்கள் மிகுதியாக இருந்ததால். இறக்குமதியின் மதிப்பு ஏற்றுமதியைப் போல ஐந்துமடங்கு இருந்தது. பொருளாதார மந்தம் தோன்றியதும்தான் இறக்குமதியும் குறையத் தொடங்கியது. அதுவரை, உள்நாட்டு உற்பத்தியின் பெருக்கம், உள்நாட்டு நுகர்வின் பெருக்கத்திற்கு இணையாக இருந்தது. ஆகவே, இந்திய உற்பத்தி விரைவாகப் பெருகினாலும், இந்தியத் தேவைகளைப் பூர்த்தி செய்யும் அளவுக்கு இன்னும் வளரவில்லை என்று கூறலாம். அதற்கிடையில் வார்ப்பு இரும்பு, மற்றும் சில பொருள்களில் இந்தியாவில் தேவைக்கு மிகுதியான உற்பத்தி இருந்ததுடன் இவை தொடர்ந்து ஏற்றுமதியும் ஆயின. இந்த இனங்களின் உற்பத்தியில் இந்தியாவுக்குத் தனித்தன்மையான சில அனுகூலங்கள் இருந்தன.

இரும்பு எஃகுத் தொழிலின் சிலதுறைகளுக்குத் தொழிற்காப் பின் உதவி இன்றும் தேவைப்பட்டாலும், இலாபகரமானதும், முன்னேறக்கூடியதுமான இந்தியத் தொழில்களில் இரும்பு எஃகுத் தொழில் முக்கியமான ஒன்றாக இருந்தது என்றும் எதிர்காலத்தில் சில வகை இரும்பு எஃகுப் பொருள்களின் ஏற்றுமதியில் இந்தியா முக்கிய அங்கம்வகிக்கும் என்றும் முடிவாகக் கூறலாம்.

இதற்கு எதிர்மாறாக, நிலக்கரித் தொழில், போருக்கு (முதல் போர்) முற்பட்ட காலத்தில் இருந்த செழிப்பை மீண்டும் பெறவில்லை. இதற்குப் பல காரணங்கள் இருந்தன. பொருளாதார மந்தத்தினால் நிலக்கரிக்கு இருந்த தேவை, குறிப்பாகச் சணல் ஆலைகள், இரயில்வேக்கள், கப்பல்கள் இவைகளின் தேவை மிகவும் குறைந்தது. எண்ணெய், மின்சாரம் போன்ற பதிலிகளின்(Substitutes)போட்டியாலும் நிலக்கரித் தொழில் நலிந்தது. தொழில் திறனை வளர்த்துக்கொள்ளத் தவறியதும் ஒரு முக்கியக் காரணமாகும்.

இந்தியாவின் நிலக்கரிச் சுரங்கங்கள் முற்றிலும் தீர்ந்து விடலாம் என்று கருதப்பெற்றது. இந்த எண்ணம் பர்மாப் பிரிவினையால் இந்தியாவுக்கும் அதன் எண்ணெய்ப் பகுதிக்கு மிடையே அரசியல் சுவர் எழுந்ததால், இந்தியாவின் நீர் மின்சார சாதனங்களுக்கான வழிகளை ஆராய வேண்டிய அவசியத்தை மேலும் வலியுறுத்தியது.

§ 6. உள்நாட்டு வாணிபமும் போக்குவரத்தும்

பொருளாதார மந்தத்தினால் வெளிநாட்டு வாணிபத்திற்கு விளைந்த கேடுகளைவிட, உள்நாட்டு வாணிபத்திற்கு ஏற்பட்ட தீமைகள் குறைவாக இருந்தன என்றாலும், இந்தியாவின் உள்நாட்டு வாணிபமும் போக்குவரத்தும் மந்தத்தினால் பாதிக்கப்பெற்றன. இது இயல்பேயாகும். கிராமப்புற மக்கள், வெளிநாட்டு வாணிபத்தில் ஈடுபட்டவர்கள் இவர்களின் வாங்குந் திறனும், தொழில் இலாபங்களும் குறைந்ததால் பலவகையான பொருள்களுக்கு இருந்த தேவை குறைந்தது. ஆனால் தொழிற்காப்பின் ஆதரவில், தன் நிறைவும், தொழில் வெளிப்பாடும் தொடர்ந்து பெருகிவந்ததால், வெளிநாட்டு வாணிபத்துடன் ஒப்பிட்டால் உள்நாட்டு வாணிபம் பழைய நிலையிலேயோ அல்லது பெருகியோ இருந்தது.

இரயில்கள் மூலமாகவும், ஆறுகள் மூலமாகவும் ஏற்றிச் செல்லப்பெற்ற குறிப்பிட்ட சில முக்கியப் பொருள்களின் அளவுகளைப் பற்றிய புள்ளிவிவரங்கள் மட்டும்தான் உள்நாட்டு வாணிபத்தைப் பற்றிக் கிடைக்கும் புள்ளிவிவரங்கள்.[1] போருக்கு

[1] முக்கியப்பொருள்கள் : கச்சாப்பருத்தி, பருத்தித்துணிகள், உணவுதானியங்கள், பருப்பு வகைகள், மாவு வகைகள், பதனிடாத ஆட்டுத்தோல், மாட்டுத்தோல், கச்சாச் சணல், சணல் சாக்குகள், கித்தான், எண்ணெய் வித்துகள், சர்க்கரை (வெல்லம் உட்பட) முதலியன.

(முதல் போர்) பிற்பட்டகாலத்தில் அரசாங்கம் சிக்கன முறையைக் கையாண்டதால், பல ஆண்டுகளுக்கு இந்தப் புள்ளிவிவரங்கள்கூட கணக்கிடப்பெறவில்லை. ஆனல் 1933–34 முதல் திரும்பவும் கணக்கிடப்பெற்றன. இரயில் வேக்கள் ஈட்டிய மொத்த வருமானங்களிலிருந்தும், சரக்குகளை ஏற்றிச் சென்ற இரயில்வே வேகன்களின் எண்ணிக்கையிலிருந்தும் உள்நாட்டு வாணிபத்தின் நிலைமையை அறியலாம் என்ற கருத்துத் தரப்பட்டது. ஆகவே, பின்வரும் அட்டவணை, கணக்கிடப் பெற்ற உள்நாட்டு வாணிபத்தின் மொத்த அளவையும் இரயில்வேக்களின் வருமானங்கள், ஏற்றிச்சென்ற சரக்குகளின் அளவு இரண்டையும் காட்டுகிறது:[1]

அட்டவணை (8)

உள்நாட்டு வாணிபம்

	உள்நாட்டு வாணிபத்தின் மொத்த எடை (மில்லியன் மணங்குகள்)	இரயில்வேக்களின் மொத்த வருமானங்கள் (கோடி ரூபாய்கள்)	ஏற்றிச்சென்ற வாகன்களின் மொத்த எண்ணிக்கை (ஆயிரங்கள்)
1928–29		99·6	6,993
1929–30	விவரங்கள்	97·5	6,898
1930–31	கிடைக்கவில்லை	90·4	6,632
1931–32		82·5	6,098
1932–33		82·1	5,996
1933–34	252·1	84·6	6,489
1934–35	255·9	87·2	6,850
1935–36	252·0	88·3	6,962
1936–37	299·6	92·0	6,900
1937–38	282·2	94·8	7,161
1938–39	289·4	94·3	7,225

அட்டவணையில் காணும் எண்கள், 1930 தொடங்கிப் பத்தாண்டுக்காலத்தின் தொடக்க ஆண்டுகளில் இருந்த மந்தத்தையும், முடிவு ஆண்டுகளில் இருந்த மீட்சியையும் எடுத்துக்காட்டுகின்றன. ஆனல், அக் காலத்தின் உச்சநிலை ஆண்டுகளில் (Peak years) புள்ளிவிவரங்கள் ஒரே வகையில் அமையவில்லை. உள்நாட்டு வாணிபப் புள்ளிவிவரங்கள் 1936–37-ல் உச்சநிலையில் இருந்தன. ஆனல், இதற்குக் காரணம், பட்டியலிலுள்ள பொருள்கள் அந்த ஆண்டில் அதிகமாகப் பதிவாயின என்பதேஅன்றி ஒன்றிரண்டு முக்கியப் பொருள்

[1] *V.* Annual Reviews of the Trade of India.

களில் வாணிபப் பெருக்கம் இல்லை என்பதை இங்குக் குறிப்பிட வேண்டும். மேலும், பட்டியலில் உள்ள பொருள்களில் பெரும் பான்மையும் விவசாயப் பொருள்களே. உள்நாட்டு வாணிபத்தின் மதிப்பு கணக்கிடப்படுவதில்லை. அப்படிக் கணக்கிட்டாலும் அவைகள் அளவுகளின் மதிப்பீட்டைவிடத் தரக்குறைவானவை யாகவே இருக்கும்.[1]

சரக்குகளை ஏற்றிச்சென்ற வேகன்களின் எண்ணிக்கையி லிருந்த இறக்கத்தைவிட இரயில்வே வருமானத்திருந்த இறக்கம் அதிகமாக இருந்தது என்பதை அட்டவணையில் தெளிவாகக் காணலாம். இதிலிருந்து அதிக மதிப்புள்ள பொருள்களை ஏற்றிச்செல்வதில் வீழ்ச்சி அதிகமாக இருந்தது என்பது தெரிகிறது. இந்த வீழ்ச்சி இரயில்வேக்களின் நிதி நிலைமையை இயற்கையாகப் பாதித்தது.

நிதிப் பொறுப்பை அரசாங்கம் ஏற்றுள்ள இரயில்வேக்களின் நிகர இலாபங்களை அல்லது நட்டங்களை அட்டவணை VIII-B காட்டுகிறது. ஆனால், அதிலுள்ள புள்ளிவிவரங்களைக் கவனத்துடன் விளக்காவிட்டால், அவைகள் இரயில்வேக்களைப் பற்றிய தவறான தகவல்களைக் கொடுக்கும். மந்தகாலம் முழுவதிலும் அரசாங்கத் திற்குச் சிறிதளவு நிகர லாபம் இருந்ததாக இந்த அட்டவணை காட்டுகிறது. 1930–31-லிருந்து 1935–36 (இவ்வாண்டுகள் உட்பட) வரை உண்மையில் பற்றுக்குறைகளே இருந்தன. ஆனால், முதலில் இரயில்வேக் காப்புநிதியிலிருந்தும் (அந்த நிதி தீரும் வரை), பின்னர் இரயில்வே தேய்மானக்காப்பு நிதிகளி லிருந்தும் (Railway Depreciation Reserves) நிதியை மாற்றிக் கொடுப்பதன்மூலம் இந்தப் பற்றுக்குறைகள் அடைக்கப் பெற்றன.[2] ஆனால், 1936–37-ல் ஒரு சிறுதொகை தேய்மானக் காப்பு நிதிக்குத் திருப்பிக்கொடுக்கப்பட்டது. இதைவிட இரயில் வேக்கள் ஈட்டிய நிகர வருமானத்திலிருந்து வட்டிச் செலவையும் (தேய்மானத்தையும்) தள்ளுபடி செய்து, ஆண்டாண்டுக்கு உண்மையில் கிடைத்த இலாபத்தை அல்லது நட்டத்தை ஆராய்வதன்மூலம் இரயில்வேக்களின் நிலைமையைப் பற்றிய மேலும் தெளிவான கருத்தைப் பெறலாம். இதை எதிரே காணும் அட்டவணை (9)-யில் காணலாம்.

[1] அத்தியாயம் 17-ஐப் பார்க்கவும், இந்தியாவின் முக்கிய விளைபொருள்களின் மதிப்பு 1929-ல் ரூ. 1,018 கோடியிலிருந்து, 1932-ல் ரூ. 534 கோடிக்குக் குறைந்தது என்ற P. J. தாமஸ் அவர்களின் மதிப்பீடு அந்த அத்தியாயத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

[2] இக்காரணத்தினால், VIII XIV, XX அட்டவணைகளில் இவ் வாண்டுகளுக்காக இரயில்வேக்களின் புள்ளிவிவரங்களைக் காணமுடியாது.

அட்டவணை (9)

அரசாங்க இரயில்வேக்களின் நிதிவிளைவுகள்

	1929–30	1930–31	1931–32	1932–33	1933–34	1934–35	1935–36	1936–37	1937–38	1938–39
நிகர வருவாய்	34·5	27·5	23·8	22·6	24·6	26·7	27·4	32·0	32·0	30·3
வட்டிச் செலவுகள்	30·4	32·7	33.0	32·9	32·5	31·8	31·3	30·8	29·2	29.3
உபரி அல்லது பற்றுக் குறை	+4·0	—5·1	—9·2	—10·2	—7·9	—5·0	—3·9	+1·2	+2·7	+1·3

1929–30ஆம் ஆண்டில் இரயில்வேக்களின் நிகர வருமானங்கள் மத்திய நிதிக்குச் செலுத்தவேண்டிய (அந்த ஆண்டுக்கு ரூ. 6·1 கோடி) தொகைக்குக்கூடக் கட்டிவரவில்லை. ஆனால், 1930–31-லிருந்து 1935–36 (இவ்வாண்டுகள் உட்பட) வரையில் கிடைத்த நிகர நட்டங்கள் வட்டிச்செலவுக்குக் கூடக் கட்டிவரவில்லை. மந்த காலத்திலேயே 1932–33ஆம் ஆண்டுதான் மிகக் கொடுமையான ஆண்டாகும். அதற்குப் பிறகு மொத்த வருவாய், நிகரவருவாய் இரண்டும் படிப்படியாக உயர்ந்தன. ஆனால், 1936–37, 1937–38, 1938–39 ஆண்டுகளிலும் கூட நிகர வருவாயில் வட்டிச்செலவு போக மீதம் மிகக் குறைவாகவே இருந்தது. இதனால், 1924ஆம் ஆண்டின் ஒப்பந்தத்தை மாற்றியமைக்க வேண்டிய அவசியம் ஏற்படும் என்ற ஐயம் எழுந்தது. ஆனால், இரயில்வேக்களின் மூலதனம், கடன் ஈட்டுப் பத்திரங்களை (Debentures) வழங்குவதன்மூலம் எழுப்பப்பெற்றது என்பதை நினைவில் கொள்ள வேண்டும். இப் பத்திரங்களுக்கு நிலையான வட்டிகளைச் செலுத்த வேண்டியிருந்தது. இந்த நிலையில், மற்ற நாடுகளாயிருந்தால் வீதப்பங்கு (Dividend) வழங்குவதைக் குறைத்தோ அல்லது தள்ளிவைத்தோ இருக்கும். அரசாங்க இரயில்வேக்களின் நிலைமையை ஆராயவும், அவைகளின் நிகர ஈட்டங்களை உயர்த்துவதற்கான (இரயில்வேப் போக்குவரத்தையும், சாலைப் போக்குவரத்தையும் ஒருமைப்படுத்தும் நோக்கத்துடன்) வழிகளைக் கூறவும், இரயில்வேக்களின் நிதிநிலைமையைச் செப்பனிடவும்[1] அரசாங்கம் வெட்ஜ்வுட் குழு (Wedgwood Committee) என்று ஒரு

[1] *V.* Report of the Indian Railway Enquiry Committee, 1937, pp. 9. 10.

குழுவை 1936–37-ல் நியமித்தது. இங்கிலாந்து, அமெரிக்கா போன்ற பல அயல்நாடுகளில் இருந்ததைவிட மந்தகாலத்திலும், மீட்சிக் காலத்திலும் இந்திய இரயில்வேக்கள் நல்ல நிலையில் தான் இருந்தன என்று அக் குழு முடிவு கூறியது. மந்த காலத்தில் இங்கிலாந்திலும் அமெரிக்காவிலும் இருந்ததைவிட, இந்தியாவில் மூலதனத்திற்குக் கிடைத்த வீத லாபம் மிக அதிகமாகவே இருந்தது. இங்கிலாந்து இரயில்வேக்களும், அமெரிக்க இரயில் வேக்களும் (மந்தகாலத்தில்) தேய்மானத்திற்காகத் தகுந்த ஏற்பாடு செய்யவில்லை. ஆனால், இந்தியா செய்திருந்தது. மந்தத்தின் கொடுமையான ஆண்டுகளிலும் கூட, இரயில்வேக்களின் ஈட்டங்கள் நடைமுறைச் செலவுகளுக்கு (Working expenses) அதிகமாகவே இருந்தன. இரயில்வே அதிகாரிகள், சிப்பந்திகள் இவர்களின் சம்பளங்களைக் குறைப்பது முதலாகப் பல சிக்கனங்களும் கையாளப் பெற்றன.

'போக்கு வரத்தை, செயல் திறனேடும், சிக்கனமான முறையிலும் மேற்கொள்ளுவதில் இந்திய இரயில்வேக்களின் அமைப்பு நல்ல முறையில் இருக்கிறது; ஆனால், வாணிபக் கண்ணோட்டத்துடன் நோக்கினால், அதாவது போக்குவரத்தை (Trafic) ஏற்படுத்துவதிலும், அதிகமாக வளர்ப்பதிலும், வணிகர்களுடனும், வாணிப நிறுவனங்களுடனும் நெருங்கிய தொடர்பை ஏற்படுத்திக் கொள்வதிலும், பொதுவாக, மக்களிடம் தொடர்பை வளர்த்துக்கொள்வதிலும் அவைகளின் அமைப்பு சிறந்தமுறையில் இல்லாததுடன் அதற்குத் தேவையான வசதிகளும் அவைகளிடம் இல்லை'[1] என்று வெட்ஜ்வுட் குழு கூறியது. 1936–37ஆம் ஆண்டின் வரவு செலவுத் திட்டம் பிரயாணிகள் கட்டணத்தையும், சரக்குகளின் தூக்குக் கூலியையும் சிறிதளவு உயர்த்தியது. ஆனால், அந்த நேரத்தில் பொது நிதிக்குச் செய்யவேண்டிய (தள்ளிவைக்கப்பட்டிருந்த) செல்லுகளின் தொகையும், தேய்மான நிதியிலிருந்து வாங்கிய கடன் தொகையும் ரூ. 61 கோடிக்கு இருந்தன கூடிய சீக்கிரம் கடன் தொகையைத் திருப்பிக் கொடுக்கவும், பொது நிதிக்குச் செல்லுகள் செய்யவும்கூடிய நிலையில் இரயில்வேக்களின் நிதி நிலைமை அமையாது என்பது தெளிவாக இருந்தது. ஆகவே, (நீமியர் தீர்ப்புக்கு (Niemeyer award) இணங்க) வருமானவரி மூலம் மத்திய அரசாங்கத்திற்குக் கிடைத்த வருவாயிலிருந்து மாகாண அரசாங்களுக்குச் சிறிதளவு பங்கைக் கொடுப்பதற்காக மேற்கண்ட தலைப்புகளுக்கு இரயிவேக்கள் செய்யவேண்டிய செல்லுகளை 1942ஆம் ஆண்டுவரை தள்ளிவைக்க வேண்டும்

[1] *V.* Report of the Indian Railway Enquiry Committee, 1937. p. 69.

என்று 1937ஆம் ஆண்டில் முடிவு செய்யப்பட்டது. தள்ளி வைக்கப்பெற்ற செல்லுகளையும் தேய்மான நிதிக் கடன்களையும் முற்றிலும் தள்ளுபடி செய்ய வேண்டுமென்று கருத்துத் தரப் பட்டது.[1] இதனால், 1937-38-க்கும் 1939-40-க்கும் இடையில் இரயில்வேக்கள் பொதுநிதிக்குச் செல்லுகள் செய்வதற்கு ஏது வாக இருந்தது.

சாலைப் போக்குவரத்தின் (Road Transport) போட்டி வளர்ந்து வருவதால், இரயில்வேக்களின் நிதிப்பிரச்சினை மேலும் சிக்கலுக்குள்ளாகி இருக்கிறது. சாலைப் போக்குவரத்து இது வரையில் குழப்பமான முறையிலும், சிக்கனமற்ற முறையிலும் தான் நடந்துவந்தது. 'சாலைகளில் நம்பிக்கையான பணியைச் செய்ய முடியாத இச் சாதனம், இரயில்வேக்களை அச்சுறுத்துவ தாக'[2] இருக்கிறது. அனுபவம் இல்லாதவர்கள் பழைய வாக னங்களைவாங்கி, அவைகளை மிக அதிகமான போக்குவரத்து உள்ள பாதைகளில் (Roads) போட்டிக் கட்டணங்களில் ஓட்ட முனைந்து, சிறிது காலத்திற்குள் அத் தொழிலைக் கைவிட்டனர். இவர்கள் கைவிட்ட தொழிலை வேறு சிலர் ஏற்றுக்கொண்டு திரும்பவும் அவ்வாறே கைவிட்டனர். இத் தொழிலினால் இரயில் வேக்களுக்கு 1933ஆம் ஆண்டில் 2 கோடி ரூபாயும், 1936ஆம் ஆண்டில் 4½ கோடி ரூபாயும் நட்டம் ஏற்பட்டது என்று மதிப்பிடப் பெற்றது.[3] எனவே, சாலைப் போக்குவரத்துக்கு உரிமை வழங்குவதிலும், அதை ஒழுங்கு படுத்துவதிலும் அரசாங்கம் கண்டிப்பாக இருக்கவேண்டும் என்றும் இரயில்வேக்களே சாலைப் போக்குவரத்தையும் நடத்த இரயில்வேக்களுக்கு முழு அதிகாரம் கொடுக்கப்பட வேண்டும் என்றும் 'வெட்ஜ்வுட் குழு' பரிந்துரைத்தது. இவ்விரண்டு பரிந்துரைகளையும் அரசாங்கம் ஏற்றுக் கொண்டு அவற்றைப் படிப்படியாக நடைமுறையாக்கவும் தொடங்கியது.

இரயில்வேக்களைக் கட்டுப்படுத்துவதற்காகச் சட்ட முறையில் அமைந்த ஓர் அதிகாரியைத் தனியாக நியமிக்கவும் இரயில்வே வரவு செலவுத் திட்டத்தை விவாதத்திற்காகச் சட்டப் பேரவையில் தாக்கல் செய்யவும், பொது நிதியிலிருந்து இரயில்வேக்களுக்குச் செல்லுகள் அவசியமானால் ஒழிய இரயில்வே வரவு செலவுத் திட்டத்தில் ஓட்டு எடுக்கக்

[1] Cf. Vakil and Patel, Finance under Provincial Autonomy, p. 107.

[2] Report of the Wedgwood Committee, 1937, p. 88.

[3] by the Mitchell Kirkness Report of 1933, and by the Wedgwood Committee,

கூடாது எனவும் விதிகள், புதிய அரசியல் அமைப்பில் இருந்தன. நெருக்கடி எழுந்தால், இரயில்வேக்களைக் கட்டுப்படுத்தும் அதிகாரத்தை ஏற்றுக்கொள்ளும் உரிமை தலைமைக் கவர்னருக்கு இருந்தது. நாட்டில் போக்குவரத்தின் முழுப் பொறுப்பையும் ஏற்றுக் கொள்ளும் ஒரு தனி அதிகாரப் பதவியை ஏற்படுத்தும் வாய்ப்புப் பயன்படுத்தப்படவில்லை.

வான் போக்குவரத்தின் விரைவான வளர்ச்சியும் (இதைப் பற்றி முன்னரே சுருக்கமாகக் குறிப்பிட்டோம்)[1] கவனத்திற்கு எடுத்துக்கொள்ளவேண்டிய ஒரு முக்கியத் துறையாகும். ஆனால், வான் போக்குவரத்து இதுகாலம்வரை அரசியல், வாணிப, மற்றும் சமூகத் தொடர்புகளுக்கு ஒரு விரைவான (செலவு அதிகமாக இருந்தாலும்) போக்குவரத்துச் சாதனமாக இருந்ததேஅன்றி, உள்நாட்டில் பிரயாணிகளையும் சரக்குகளையும் ஏற்றிச் செல்வதைப் பொறுத்த அளவிலாவது, தற்பொழுதுள்ள மற்றப் போக்குவரத்துச் சாதனங்களுக்கு ஒரு போட்டியாக அமையவில்லை.

§ 7. பாங்கு முறையும் செலாவணி முறையும்

இந்தியாவின் பாங்கு முறையையும் கடன் முறையையும் (Credit system) ஆய்வு செய்ய வேண்டியதின் அவசியம் நீண்டகாலமாகவே உணரப்பெற்றது. 1929ஆம் ஆண்டில் அரசாங்கம் ஒரு திட்டத்தை நடைமுறைக்குக் கொண்டுவந்தது. அத் திட்டத்தின்படி, நடைமுறையில் இருக்கும் விவசாயக் கடன் முறைகளையும், சிறு தொழில்களுக்கும் உள்நாட்டு வாணிபத்திற்கும் நிதி உதவிகளைப் பற்றியும் ஆய்வு செய்ய, அந்தந்த வட்டாரங்களின் தகவல்களை அறிந்த மனிதர்களைக் கொண்டமாகாணக் குழுக்கள் நியமிக்கப்பெற்றன. பாங்கு முறை முழுவதையும், பேரளவுத் தொழில்களுக்கு நிதி உதவியையும் பற்றி ஒரு அகில இந்தியக்குழு ஆய்வு செய்தது. மத்தியக் குழு முடிவுகள் எடுப்பதிலும் பரிந்துரைகள் வழங்குவதிலும், அயல் நாட்டு வல்லுநர்கள் கொண்ட ஒரு சிறு குழு,மத்தியக் குழுவுடன் ஒத்துழைக்கும் என்று ஏற்பாடாயிற்று.

1931ஆம் ஆண்டில் வெளியிடப்பெற்ற அறிக்கைகள், இந்தியாவில் நடைமுறையிலிருந்த கடன் முறையைப் பற்றியும், விற்பனை முறையைப் பற்றியும் ஏராளமான செய்திகளைக் கொண்டிருந்தன. மத்தியக் குழுவின் தீர்மானங்கள், இந்தி

[1] 2ஆம் அத்தியாயத்தைப் பார்க்கவும்.

யாவுக்கு ரிசர்வு பாங்கு ஒன்றை நிறுவவேண்டிய அவசியத்தை வலியுறுத்தியதுடன், பின்வரும் பரிந்துரைகளையும் கொண்டிருந்தன: கூட்டுப்பங்கு பாங்குகளுக்கும், சுதேசப் பாங்குகளுக்கு மிடையில் நெருங்கிய தொடர்பை ஏற்படுத்தவேண்டும்; அகில இந்தியப் பாங்கர்களின் சங்கம் ஒன்றை நிறுவவேண்டும்; பாங்கு முறையில் கல்வி அறிவை வளர்க்கவேண்டும்; விற்பனை முறையைச் சீர்திருத்தி, கூட்டுறவு இயக்கத்தையும் பரவச் செய்ய வேண்டும்; தற்போதைய பாங்கு முறையில் நிலவும் தவறான வழிகளைத் தடுக்கச் சட்டமியற்றி, மேன்மையான பாங்குப் பழக்கங்களையும் புகுத்தவேண்டும்; பொது வசதி நிறுவனங்கள் (Public utility undertakings) வளர்ப்பதற்காகத் தொழில் கூட்டு நிறுவனம் (Industrial Corporation) ஒன்றை நிறுவவேண்டும்.

அறிக்கையை நடைமுறையாக்க, அரசாங்கம் விற்பனைத் திட்டம் ஒன்றைக் கையாண்டதுடன் ரிசர்வு பாங்கையும் நிறுவியது.

ரிசர்வு பாங்கு மசோதா 1928ஆம் ஆண்டில் விருப்பமின்றிக் கைவிடப்பட்டது.[1] ஆனால், நடைபெறவிருந்த அரசியல் அமைப்பு மாறுதல்கள் இந்தப் பிரச்சினைக்குப் புத்துயிர் அளித்தன. இந்தியாவில் நிதிப்பொறுப்பை எந்த வகையிலும் மாற்றிக் கொடுப்பதற்கு முன்னர், நல்லமுறையில் ரிசர்வு பாங்குஒன்றை நிறுவவேண்டும் என்ற கருத்தைப் 'பாங்கியல் விசாரணைக் குழுவும்' (Banking Enquiry Committee), வட்ட மேசை மாநாடுகளும் ஆதரித்தன. கூட்டரசாங்கம் அமைப்பதற்கு வேண்டிய நிபந்தனைகளை, 1933ஆம் ஆண்டில் அரசாங்கம் வெளியிட்ட வெள்ளை அறிக்கை (White paper) குறிப்பிட்டிருந்தது. ரிசர்வு பாங்கு ஒன்றை நிறுவவேண்டியதும் அந்த நிபந்தனைகளுள் ஒன்றாகச் சேர்க்கப்பட்டிருந்தது.[2] 'இலண்டன் குழு' ஒன்று ரிசர்வு பாங்கை நிறுவும் பிரச்சினையை ஆராய்ந்து, தன்னுடைய அறிக்கையை 1933ஆம் ஆண்டு ஜூலை மாதத்தில் அரசாங்கத்திற்குச் சமர்ப்பித்தது. அதற்குப்பிறகு ரிசர்வு பாங்கு மசோதா (இந்த மசோதாவுக்கும் 1927ஆம் ஆண்டின்

[1] 15ஆம் அத்தியாயத்தைப் பார்க்கவும்.

[2] வெள்ளை அறிக்கையில் அடங்கியிருந்த மற்றப் பொருளாதார நிபந்தனைகள் பின்வருமாறு: 'வரவு செலவுத்திட்டம் கல்லமுறையில் இருத்தல் வேண்டும்; கடை முறையிலிருந்த குறுகிய காலக்கடன்களை முறையான அளவுக்குக் குறைத்தல் வேண்டும்; ரிசர்வு பாங்கு, போதிய அளவுக்குக் காப்புநிதியைத் திரட்டவேண்டும்; இயற்கையாக இந்தியாவில் இருந்த ஏற்றுமதி உபரிநிலையை மீண்டும் பெறவேண்டும். சில ஆண்டுக்காலத்தில் எல்லா நிபந்தனைகளும் பூர்த்தி செய்யப்பெற்றன. ஆனால், முன்னர் இருந்த ஏற்றுமதி உபரிநிலையைத் திரும்பவும் அடைய முடியவில்லை.

மசோதாவுக்கும், மிகக்குறைவான மாறுதல்களே இருந்தன. பாராளுமன்றத்தின் இரு சபைகளிலும் தாக்கல் செய்யப் பெற்றது. இந்த மசோதாவைப் பரிசீலனை செய்வதற்குத் தெரிந்தெடுத்த கூட்டுக் குழு (Joint Select Committee) ஒன்று நியமிக்கப்பெற்றது.

ரிசர்வு பாங்கின் மூலதனம், பங்குதாரர்களாகிய தனியார் வசம்விடப்பட்டால், ஆங்கிலேயச் செல்வர்கள் பாங்கில் ஆதிக்கம் செலுத்த ஏதுவாக இருக்கும் என்று அரசியல் கட்சிகள் அஞ்சியதால், 1927–28-ல் இருந்ததைப்போல 1933-லும் ரிசர்வு பாங்கின் இந்த விதியைப் பற்றியே பெரும்பாலும் குற்றஞ் சாட்டின. பத்திரிகைகளின் பிரசார பலத்துடன் ரூபாய் மாற்று வீதத்தை (Rupee ratio) மாற்றக்கூடிய அதிகாரம் சட்டப் பேரவைக்குக் கொடுக்கப்படவேண்டுமென்று எதிர்க் கட்சி வாதிட்டது. இத்தகைய குற்றச்சாட்டுகளைத் தவிர்ப்பதற்காக, அரசாங்கம் மசோதாவில் பல மாறுதல்களை உண்டாக்கியது. பாங்கின்மேல் அரசாங்கத்திற்கு இருந்த அதிகாரம் அதிகரிக்கப் பெற்றது. ஆனால், ரிசர்வு பாங்கு ஒரு 'பங்குதாரர்கள் பாங்கின்' தன்மைகளையே பெற்றிருந்தது. ரிசர்வு பாங்கின் கொள்கையை உருவாக்கும் உரிமை சட்டப் பேரவைகளுக்கு இருந்தாலும், பாங்கின் நடவடிக்கைகளைச் சட்டப் பேரவைகள் கட்டுப்படுத்த முடியாது.[1]

ரிசர்வு பாங்கின் (5 கோடி ரூபாய்) மூலதனம், தனியான பங்குதாரர்களிடம் (செலுத்தப்பட்ட பங்குகள் ஒவ்வொன்றும் ரூ. 100) இருந்தது. பங்குகள், ஐந்து பதிவேடுகளிலிருந்து (Register) பம்பாய், கல்கத்தா, டெல்லி, சென்னை, இரங்கூன்[2] ஆகிய நகரங்களுக்குத் தனித்தனியாக விற்கப்பெற்றன. ரிசர்வு பாங்கின் விதிப்படி எந்தப்பங்குதாரருடைய பெயரும் ஒன்றுக்கு மேற்பட்ட பதிவேடுகளில் இருக்கக்கூடாது. எந்த ஒரு பங்குதாரருக்கும் பத்து வாக்குகளுக்கு (Votes) மேல் இல்லை. பாங்கின் நிருவாகப் பொறுப்பு ஒரு மத்தியக் கழகத்திடம் (Central Board) இருந்தது. கழகத்தின் பாதி அங்கத்தினர்கள் அரசாங்கத்தால் நியமிக்கப்பெற்றனர். கழகம் மொத்தத்தில் பதினெறு நெறியாளர்களைக் கொண்டிருந்தது. அவர்களில் எட்டு நெறியாளர்களைப் பங்குதாரர்கள்தேர்ந்தெடுத்தனர். அரசாங்க அதிகாரி ஒருவரை நெறியாளராக அரசாங்கம் நியமித்தது. நெறியாளர் கழகத்தின் ஆலோசனையின்மேல் அரசாங்கம் ஒரு

1. V. K. N. Raj, 'The Monetary Policy of the Reserve Bank of India' p. 67.

2 பர்மாப் பிரிவினைக்குப் பிறகும்கூட, இரங்கூனில் பங்குகள் விற்கப்பட்டன.

கவர்னரையும், இரண்டு துணைக் கவர்னர்களையும் நியமித்தது அட்டவணைப் பாங்குகளின் (Scheduled Banks) பட்டியல் ஒன்றை ரிசர்வு பாங்கு வைத்திருக்கவேண்டும். இந்த அட்டவணைப் பாங்குகள் தங்கள் நடப்புக் கடன்களில் (Demand Liabilities) 5 சதவீதத்திற்குக் குறையாமலும், கால வரம்புக் கடன்களில் (Time Liabilities) 2 சதவீதத்திற்குக் குறையாமலும் ஒரு காப்புத் தொகையை (Reserve) வட்டியின்றி ரிசர்வு பாங்கிடம் வைத்திருக்கவேண்டும். இதற்குப்பதிலாகத் தங்களுடைய உண்டியல்களை ரிசர்வு பாங்கிடம் கழிவு செய்து கொள்ளும் (Discounted) சலுகை, அட்டவணைப்பாங்குகளுக்குக் கிடைக்கும். ரிசர்வு பாங்கு, சுதேசப் பாங்குகளுக்கு (பணம்) அனுப்பும் வசதிகளையும் (Remittance facilities) மறு கழிவு செய்து கொடுக்கும் வசதிகளையும் (Rediscount facilities) அளிப்பதன்மூலம், நாளா வட்டத்தில் சுதேசப் பாங்குகள் ரிசர்வு பாங்குடன் தொடர்பு கொள்ளத் தூண்டப்பெறும் என்று எதிர்பார்க்கப் பெற்றது. உள்நாட்டு வாணிபம் ரொக்கக் கடன்கள் (Cash Credits) மூலமாக நடந்தன; வர்த்தக உண்டியல் (Trade Bills) முறை கையாளப் பெறவில்லை. இதனால், சுதேசப் பாங்குகளை ரிசர்வு பாங்குடன் இணைப்பது கடினமாக இருந்தது. உள்நாட்டில் உண்டியல் மாற்றுச் சந்தை ஒன்றைத் தோற்றுவித்து வளர்க்க முடிந்தால், நவீனபாங்கு முறைக்கும், சுதேசப்பாங்கு முறைக்கும் உள்ள இடைவெளியை நாளாவட்டத்தில் குறைக்கலாம்.

கடனையும் செலாவணியையும் கட்டுப்படுத்துவது; நாணயத்தை வெளியிடும் நிலையமாக இயங்குவது; அரசாங்கத்திற்கும் வாணிபப் பாங்குகளுக்கும் (Commercial Banks) பாங்கராக இயங்குவது; ரூபாய் நாணயத்தின் வெளிநாட்டு மதிப்பை ஒருநிலைப் படுத்துவது[1]– இவைகளே ரிசர்வு பாங்கின் முக்கியப் பணிகளாகும். இங்கிலாந்து முறையைப் பின்பற்றிப் பாங்குத் தொழில் துறையும்(Banking department),நாணயத்தை வெளியிடும் துறையும் (Issue department) தனித்தனியாக இருந்தன. இவ்வாறு ரிசர்வு பாங்கு ரொக்கக் காப்புகளை (Cash reserves) மையப்படுத்தியதுடன்,[2] நாட்டின் கடன்,

[1] அப்பொழுது இருந்த குழப்பமான சூழ்நிலையில் இந்தியாவுக்குப் பொருத்தமான பணமுறை எது என்று முடிவுசெய்ய முடியாததால், அப்பொழுது நடைமுறையிலிருந்த ஸ்டெர்லிங்திட்டத்தையே(Sterling Standard) ரிசர்வு பாங்கு தற்காலிகமாகக் கையாள வேண்டும் என்று ரிசர்வு பாங்கு சட்டத்தின் முன்னுரையில் குறிப்பிடப்பட்டிருந்தது. (K. N. Raj, op. cit., p. 69).

[2] சட்டப்படி ரிசர்வு பாங்கில் ஒரு காப்பு நிதியும் நிறுவப்பெற்றது. அதில் ரிசர்வு பாங்கு தன்னுடைய பொறுப்புகளில் 40 சதவீதத்திற்குக் குறையாமல் ரொக்கக் காப்பாக வைத்திருக்க வேண்டும். (காப்பில் உள்ள பொன் வெள்ளிக்கட்டிகளில் 20-ல் 17 பாகத்தை இந்தியாவிலேயே வைத்திருகவேண்டும்). 40 சதவீதம் ரொக்கக் காப்பாக வைத்திருக்கவேண்டும் என்ற விதியைத் தற்காலிகமாகத் தள்ளிவைக்கும் உரிமையைப் பெறலாம்; ஆனால், இதற்காகத் தனிக் கட்டணம் செலுத்தவேண்டும்.

நாணயக் கட்டுப்பாட்டையும் ஒருமைப்படுத்த முனைந்தது. சாதாரணப் பாங்குத் தொழிலில் ரிசர்வு பாங்கு போட்டியிடக் கூடாது. ஆனால், அதற்கு அதிகார பூர்வமான ஒரு (வட்டிக்) கட்டணம் இருந்தது. அக் கட்டணத்தை அவ்வப்போது வெளியிட்டு, அக் கட்டணத்தில் பத்திரங்களையும், உண்டியல்களையும் மறு கழிவு செய்யலாம். (சில நிபந்தனைகளின் மேல்) முன்பணம் கொடுக்கவும், கடன் கொடுக்கவும் ரிசர்வு பாங்குக்குப் பரவலான அதிகாரங்கள் இருந்தன. (ஒன்பது மாத காலத்திற்கு மேற்படாத) உண்டியல்களையும், புரோ நோட்டுகளையும் வாங்குவதிலும் விற்பதிலும் ஈடுபடலாம். வெளிச்சந்தை நடவடிக்கைகளையும் (Open market operation) பாங்கு மேற்கொள்ளலாம். பங்குதாரர்களுக்கு வீதப் பங்காக வழங்கியது போக, எஞ்சிய உபரி அரசாங்கத்தைச் சேரும்.

மேற்கண்ட பணிகளுடன் விவசாயக் கடன் துறை ஒன்றையும் ரிசர்வு பாங்கு திறக்கவேண்டும். கூட்டுப் பங்கு பாங்குகளுடன் சுதேசப் பாங்குகளை இணைப்பதற்கான வழிகளைப் பற்றி ஓர் அறிக்கையை, ரிசர்வு பாங்கு நிறுவிய மூன்றரை ஆண்டு காலத்திற்குள் அரசாங்கத்திற்குச் சமர்ப்பிக்க வேண்டும். இதைப்பற்றிய முதல் அறிக்கையை 1936-லும் முழு அறிக்கையை 1937-லும் பாங்கு வெளியிட்டது. இதைத் தொடர்ந்து ரிசர்வு பாங்கு முறைக்குச் சுதேசப் பாங்குகளைக் கவருவதற்காகக் கடுமையான, ஆனால் பயனில்லா முயற்சிகளை எடுத்துக் கொண்டது. ரிசர்வுபாங்கு அட்டவணைப் பாங்குகளின் வழியாக, உரிமம் பெற்ற கடன்கொடுப்பவர்களின் உண்டியல்களை சலுகைக் கட்டணத்தில் (மறு கழிவு) செய்யலாம் என்று ஒரு யோசனை கூறப்பட்டது. [1]

ரிசர்வு பாங்குக்கும், இம்பீரியல் பாங்குக்கும் இடையில் பதினைந்து ஆண்டுக் காலத்துக்கான ஓர் ஒப்பந்தம் நடந்தது. அதன்படி ரிசர்வு பாங்குக் கிளைகள் இல்லாத இடங்களில் அதன் பிரதிநிதியாக இம்பீரியல் பாங்கு இயங்க வேண்டுமென்றும், இதற்காக இம்பீரியல் பாங்குக்குத் தரகு கொடுப்பதென்றும் முடிவாகியது. 1934ஆம் ஆண்டின் இம்பீரியல் பாங்குச் (திருத்த)ச் சட்டம், இந்த ஏற்பாட்டை உள்ளடக்கியிருந்ததோடு, ரிசர்வு பாங்கு நிறுவப்பெற்றதால், இம்பீரியல் பாங்கின்

[1] இதைப்பற்றிய விளக்கத்திற்கு K. N. Raj 'The Monetary Policy of the Reserve Bank of India' p. 88–91-ஐப் பார்க்கவும். திருவாங்கூர் நாஷனல் பாங்கும், கொய்லான் பாங்கும் 1938-ல் முறிந்த பிறகு, அட்டவணைப் பாங்குகளிடம் ரிசர்வு பாங்கு கடன்துகொண்டவிதம் உதவியளிப்பதாக இல்லை. ஆகையால் அட்டவணைப் பாங்குகள் தங்களுடைய உண்டியல்களை மறு தள்ளுபடிக்காக ரிசர்வு பாங்கை நாடுவதில் விழிப்புடனிருந்தன.

தகுதியிலும் பணிகளிலும் செய்யவேண்டிய மாறுதல்களையும் நிறைவேற்றியது. ஆகவே, இம்பீரியல் பாங்கின் நடவடிக்கைகளில் முன்னர் இருந்த சில தடைகள், குறிப்பாக நாணயமாற்று நடவடிக்கைகளில் இம்பீரியல் பாங்குப் பங்கெடுக்கக் கூடாது என்ற தடை நீங்கிற்று.

ரிசர்வு பாங்கு தன்னுடைய கடன் கொடுக்கும் தொழிலையும், உண்டியல்களில் கழிவு செய்யும் தொழிலையும், அரசாங்கத்துடனும், அரசாங்கத்திற்காகவும்தான் அதிகமாகச் செய்து வந்ததே அன்றித் தொழில்களைப் பரவலடையச் செய்யத் தவறியது. இந்தியக் கடன்முறையைக் கட்டுப்படுத்துவதிலும் ஒருமைப்படுத்துவதிலும்கூட, ரிசர்வுபாங்கு முன்னேற்றமடையவில்லை. இருந்தாலும், ரிசர்வு பாங்கு நிறுவப்பெற்றது மொத்தத்தில் இந்தியாவில் திருப்தியை அளித்தது. இந்திய அரசாங்கச் சட்டத்தில் இருந்த பாதுகாப்பு விதிகளில் பலருக்கு நம்பிக்கையில்லை. ஸ்டெர்லிங் பரிவர்த்தனைத் திட்டத்தைத் (Sterling Exchange Standard) தொடர்ந்து நீடிப்பதற்கும், ஒரு ரூபாய்க்கு 1 ஷில்லிங் 6 பென்ஸாக இருந்த நாணயமாற்றுவீதத்திற்கும் பலமான எதிர்ப்பு இருந்தது. இந்த வீதம் 1926ஆம் ஆண்டிலிருந்து நடைமுறையில் இருந்து வந்தது. தனியாகச் சட்டம் இயற்றித் தலைமைக் கவர்னரின் ஒப்பம் பெற்றுல்தான் இந்த வீதத்தை மாற்றமுடியும்.

ரிசர்வு பாங்கின் கவர்னரையும், துணைக்கவர்னர்களையும் நியமிக்கவும், பதவியிலிருந்து நீக்கவும் அதிகாரம் இருந்ததோடு, நெருக்கடி காலத்திலும், அதனிடம் ஒப்படைக்கப் பெற்ற பொறுப்புகளை நிறைவேற்றத் தவறினாலும், ரிசர்வு பாங்கைத் தள்ளிவைக்கும் அதிகாரமும் தலைமைக் கவர்னருக்கு இருந்தது. கவர்னர் ஜெனரலின் சம்மதம் இன்றி நாணயம் அச்சிடுதல், காகிதச் செலாவணியை வெளியிடுதல் முடியாது; பாங்கின் அமைப்புத் திட்டம், பாங்கின் பணிகள் இவைகளைப் பாதிக்கும் எந்த மசோதாவையும் தாக்கல்செய்ய முடியாது. இத்தகைய பாதுகாப்பு விதிகள் இருக்கும் வரையில், ஆங்கிலேய அரசாங்கத்தின் விருப்பம் இருந்தாலன்றி, ரூபாயின் நாணயமாற்று வீதத்தையோ அல்லது ஸ்டெர்லிங்குக்கும் ரூபாய்க்கும் இருந்த இணைப்பையோ மாற்றுவதென்பது முடியாத செயலாகும் என்ற அச்சம் இருந்தது.

1931ஆம் ஆண்டு, செப்டம்பர் மாதத்தில், ஸ்டெர்லிங் பரிவர்த்தனைத் திட்டத்தைக் (ஆகையால், ஸ்டெர்லிங் நாணயத்துடன் இணைந்து ரூபாயின் மதிப்பையும் குறைப்பது என்றும்)

கையாளுவது என்று முடிவெடுத்தபொழுது, ஒரு ரூபாய்க்கு ஒரு ஷில்லிங் ஆறு பென்ஸ் வீதத்தைப் பற்றிய வாத, எதிர்வாதம் மறுபடியும் தலைதூக்கியது. இந்திய எண்ணம், பொன் திட்டத்திற்கு ஆதரவர்களும், இந்தியச் செலாவணிமுறை இங்கிலாந்தின் செலாவணி முறையைச் சார்ந்திருப்பது இழிவானது என்று கருதுவதாகவும், ரூபாய்க்கு ஒரு ஷில்லிங் நான்கு பென்ஸ் வீதத்திற்கு, நாணயமாற்று வீதத்தை மாற்ற வேண்டுமென்பதாகவும் இருந்தது. இத்தகைய கருத்துக் கொண்டவர்கள், ஒரு ரூபாய்க்கு 1 ஷில்லிங் 6 பென்சுகள் என்ற நாணயமாற்று வீதம் இயற்கையாக அமையவில்லை; இந்திய விலை அமைப்பு இந்த வீதத்திற்கு இணக்கமாக இன்னும் அமையவில்லை; ஆகவே, பணவாட்டத்துடன்[1] (Deflation) கூடியபலகேடுகளினால் (1925-க்கும் 1931-க்கும் இடைக் காலத்தில் இதைப்போன்ற கேடுகள் இங்கிலாந்தில் தோன்றிய பொழுது அதற்குப் பலத்த எதிர்ப்பு இருந்தது) இந்தியா வருந்தியது என்று வாதிட்டார்கள்.

இந்திய வாணிபத்தின் பெருமளவும் ஸ்டெர்லிங் நாணயத்துடன் இணைந்த நாடுகளுடனேயே நடந்து வந்ததால், ஸ்டெர்லிங் திட்டத்தைத் தொடர்ந்து கையாளுவது இந்தியாவுக்கு நன்மை பயப்பதாகவே இருக்கும். ஸ்டெர்லிங் நாணயத்திலும், ரூபாய் நாணயத்திலும் மதிப்பிறக்கம் (Depreciation) ஏற்பட்டதால், பொன் திட்ட நாடுகளில் இந்தியப் பொருள்களின் விற்பனை பெருகியது. ஒரு ரூபாய்க்கு ஒரு ஷில்லிங் ஆறு பென்சுகள் என்ற வீதத்தினால் ஏற்படக்கூடிய (அவ்வாறு ஏற்பட்டால்) பணவாட்ட விளைவுகளுக்கு இந்த விற்பனைப் பெருக்கம் ஈடு செய்வதாக இருந்தது. இந்தியாவில் போதிய பொன் இருப்பு இல்லாத அந்த நேரத்தில், பொன் திட்டத்தைக் கையாளுவது என்பது முடியாத ஒரு செயல் என்பதோடல்லாமல் அதனால் ஸ்டெர்லிங் நாணயத்துடன் இணைந்த நாடுகளுக்கு இந்தியாவின் ஏற்றுமதி பெரிதும் குறைந்து, அந்த நாடுகளிலிருந்து இறக்குமதிப் போட்டியும் பெருகி இருக்கும். ஒரு ரூபாய்க்கு ஒரு ஷில்லிங் ஆறு பென்சுகள் என்ற வீதத்தை 1926ஆம் ஆண்டில் நிறுவக் குயுக்தி முறைகள் கையாளப்பட்டனவா இல்லையா என்ற பிரச்சினை ஒருபுற மிருக்க, 1931ஆம் ஆண்டு வாக்கில் அந்த வீதத்திற்கு இணங்க, விலை அமைப்பு அமையவில்லை என்று எண்ண இடமே இல்லை. இதற்கிடையில், இந்தியத் தொழில்கள் பலவும் தொழிற்காப்பைப் பெற்றன. பின்னர், அத் தொழிற்

[1] பண வாட்டத்தினால் ஏற்படக்கூடிய கேடுகள் பின்வருமாறு: கடனாளிகள் தீங்கிழைக்கப்படுவார்கள். ஆனால், கடன் கொடுப்பவர்கள் பயனடைவார்கள்; ஏற்றுமதி குறைந்து இறக்குமதி ஊக்குவிக்கப்படும்; விலைமட்டத்துடன் ஒப்பிட்டால் உற்பத்திச் செலவுமட்டம் உயர்வாக இருக்கும்.

காப்புத் தீர்வைகளும் உயர்த்தப்பெற்றன. உள்நாட்டுச் சந்தையில், 'தொழிற்காப்பு'க் கிடைக்காத பொருள்களின் விற்பனையும் பெருக்கமடைந்தது. இதிலிருந்து இறக்குமதிப் பொருள்களுடன் ஒப்பிட்டால் இந்தியப் பொருள்கள் அதிகமாகக் கேடுறவில்லை என்பது தெளிவாகிறது. மேலும், உயர்ந்த நாணயமாற்று வீதத்தினால் (1ரூ. = 1ஷி 6 பென்சு) குறைந்த ரூபாய்ச் செலவிலேயே, அகச் செலவுகளைச் (Home Charges) செய்யமுடிந்தது. ஆனால், பணவாட்டத்தினால் மாறுச் செலவுகளின் (fixed charges) பளு அதிகரித்ததால் குடியானவர்கள் பாதிக்கப் பெற்றார்கள். ஒரு ரூபாய்க்கு ஒரு ஷில்லிங் ஆறு பென்சுகள் என்ற நாணயமாற்று வீதத்தினால் ஏற்பட்ட விளைவுகளைச் சுருங்கக் கூற வேண்டுமானால் அந்த வீதத்தைப் பலமாக எதிர்த்துப் போராடினவர்களுக்கு எந்தவிதத் தீங்கும் ஏற்படவில்லை. ஆனால், அதன் பளுவை (அப்படி ஏதாவது பளு இருந்திருந்தால்) விவசாயக் குடிமக்களே முழுதும் தாங்கினர் எனலாம்.

§ 8. பொது நிதி இயல்

1929–30, 1936–37 இவ்வாண்டுகளின் இடைக்காலத்துக்கான மத்திய, மாகாண அரசாங்கங்களின் மொத்த வருவாய், மொத்தச் செலவு, உபரி (அல்லது பற்றுக்குறை), (மத்திய மாகாண அரசாங்கக் கணக்குகளை ஒன்றுக இணைத்த) முக்கிய வருவாய் இனங்கள், செலவினங்கள் இவைகளைப் பின்வரும் அட்டவணை (10) காட்டுகிறது.

1929ஆம் ஆண்டில் அமெரிக்காவில் நிதி நெருக்கடி (Wall Street crash) ஏற்பட்டதைத் தொடர்ந்து, இந்திய முக்கியப் பொருள்களின் விலைகளும், இந்திய ஏற்றுமதிகளுக்கான தேவையும், அதனால் இலாபங்களும், இந்திய மக்களின் வாங்குதிறனும் வீழ்ச்சியுற்றன. இந்த விளைவுகள் இந்தியாவின் பொதுநிதிகளையும்பெரிதும் பாதித்தன. சுங்கத் தீர்வைகள் (குறிப்பாகப் பருத்தித் துணிகள், சர்க்கரை இவற்றின் இறக்குமதியால் கிடைக்கும் தீர்வைகள்), வருமானவரி, உப்புவரி, ஆயத்தீர்வை, அபின் இவைகள்மூலம் கிடைக்கும் வருவாய் குறைந்ததாலும், இவற்றையெல்லாம் விட, இரயில்வேக்கள் மூலம் கிடைக்கும் வருவாய் முதலில் குறைந்து, பிறகு அறவே நின்றுவிட்டதாலும் மத்திய அரசாங்கத்தின் வருவாய் வெகுவாகக் குறைந்தது. மாகாண அரசாங்கங்கள், சில மாவட்டங்களில் நிலவரியைத் தள்ளிக் கொடுக்க வேண்டியிருந்தது. மது பானங்களிலிருந்த ஆயத்தீர்வை, வில்லைக் கட்டணங்கள், பதிவுக் கட்டணங்கள்

அட்டவணை (10)

1929–30-க்கும் 1936–37-க்கும்[1] இடைக்காலத்தில் மத்திய, மாகாண அரசாங்கங்களின் வருவாயும் செலவும்

	1929–30	1930–31	1931–32	1932–33	1933–34	1934–35	1935–36	1936–37	1936–37	1937–38	1938–39	1939–40
நிகர வருமானம்												
நில வருவாய் ...	29·2	26.1	29·0	27·4	26.5	30·0	28·4	28·3				
சுங்கங்கள் ...	50·3	45.9	45·5	51·0	46·2	52·7	52·2	52·0				
வருமான வரி ...	16·0	15·3	16·8	17·2	16·3	17·5	17·1	14·5				
உப்பு ...	6·5	5·6	7·4	9·0	7·7	8·0	8·4	7·7				
ஆயத்தீர்வை ...	18·2	14·6	13·0	13·1	13·2	12·6	13·2	13·5				
அபின் ...	2·6	1·8	1·3	0·1	0·9	0·7	0·6	0·2				
இரயில்வேக்கள் ...	6·1	5·8	0·0	0·0	0·0	0·0	0·0	0·0				
செலவு (மொத்தம்)												
இராணுவம் ...	55·1	54·3	51·8	46·7	44·2	44·3	45·0	45·5				
போலீஸ் ...	13·1	13·6	13·4	12·9	12·9	12·7	12·9	13·0				
சட்டமும் நீதியும் ...	8·8	9·0	8.1	7·6	7·8	7·7	7·9	8·0				
பொது நிருவாகம் ...	13.9	14·1	13·7	12·6	12·0	12·1	12·5	13·1				

கல்வி ...	13·6	13·8	12·8	11·8	12·0	12·1	12·3	12·6				
சுகாதாரம் ...	7·2	6·7	6·3	5·4	5·5	5·6	5·7	6·2				
சிவில் வேலைகள் ...	13·0	12·9	8·7	7·6	7·7	10·0	10·4	8·8				
விவசாயம் ...	3.1	3·1	2·7	2·4	2·5	2·6	2·8	3·1				
கடன் செலவுகள் ...	19·4	20·2	23·0	22·3	16·1	16·4	17·1	15·5				
மத்திய அரசாங்கம்[2]												
மொத்த வருவாய் ...	132·7	124·6	121·6	125·4	119·4	122·1	121·1	117·8		122·4	121·0	125·7
மொத்தச் செலவு ...	132·4	136·2	133·4	123·9	119·4	121·8	121·1	119·6		122·4	121·7	125·7
உபரி (+) அல்லது பற்றுக்குறை (—) ...	+0·3	−11·6	−11·8	+1·5	0·0	+0·3	0·0	−1·8		0·0	−0·7	0·0
மாகாண அரசாங்கங்கள்[2]									—பர்மா			
மொத்த வருவாய் ...	94·6	83.1	83·2	84·3	82·8	86·3	89·0	92·3	82·7	85·8	85·0	91·3
மொத்தச் செலவு ...	93·8	94·2	86·7	85·7	85·9	85·4	88·7	91·6	82·2	83·2	85·8	89·2
உபரி (+) அல்லது பற்றுக்குறை (—) ...	+0·8	−11·1	−3·5	−1·4	−3·1	+0·9	+0·3	+0·7	+0·5	+2·6	−0·8	+2·1

[1] *V.* P. J. Thomas, The Growth of Federal Finance in India, pp. 496 et seq.. இந்நூலிலிருந்து இந்த அட்டவணை தொகுக்கப்பட்டுப் பர்மா நீங்கலாக 1937-38–1939-40-க்கான புள்ளி விவரங்கள் சேர்க்கப்பட்டன. [2] மொத்த எண்கள்.

பி. கு:- மத்திய அரசாங்கத்தின் நேரிடையான நிருவாகத்தில் இருந்த தொகுதிகள் நீங்கலாக, மற்றவைகளின் நிலவருவாய் மாகாணங்களுக்கு மாற்றிக் கொடுக்கப்பட்டது ஞாபகமிருக்கலாம். ஆயத் தீர்வை மாகாண இனமாகவே இருந்தது (1934ஆம் ஆண்டின் ஆயத் தீர்வை, சுங்கங்களுடன் சேர்க்கப்பட்டது); சுங்கங்கள், வருமான வரி, உப்பு, அபின் இரயில்வேக்கள் இவைகள் அனைத்தும் முற்றிலும் அல்லது பெரும்பாலும் மத்திய அரசாங்கத்தின் வருவாயைச் சேர்ந்தன. 1937-38 லிருந்து வருமான வரி பங்கிடப்பட்டது.

மூலம் கிடைத்த வருவாய் குறைந்ததால், மாகாண அரசாங்கங்களின் நிதிநிலைமையும் கேடுற்றது. மேலும், 1930ஆம் ஆண்டு தொடங்கிப் பத்தாண்டுக்காலத்தின் தொடக்க ஆண்டுகளில் அன்னியப் பொருள்கள் புறக்கணிக்கப் பட்டமையாலும், கார்டல்கள் (Cartels) வலுப்பெற்று வந்தமையாலும், சட்ட மறுப்பு இயக்கம் வளர்ந்துவந்ததாலும், அரசாங்கத்தின் நாணயமும்[1] வர்த்தகர்களின் (குறிப்பாக, இந்தியாவில் முதலீடு செய்த அன்னியர்களின்) நம்பிக்கையும் ஆட்டங்கண்டன. உள்நாட்டில் நடந்த (வெள்ளங்கள், பீஹார் பூகம்பம் போன்ற) நாசங்கள் மாகாண அரசாங்களுக்கு இருந்த இன்னல்களை அதிகமாக்கின. ஆகவே, 1930–31, 1931–32 ஆண்டுகளில், மத்திய அரசாங்க வரவு செலவுத் திட்டங்களில் முறையே 11·6 கோடி, 11·8 கோடி ரூபாய்ப் பற்றுக்குறைகளும், மாகாண மொத்த வரவு செலவுத் திட்டங்களில் முறையே 11·1 கோடி, 3·5 கோடி ரூபாய்ப் பற்றுக் குறைகளும் இருந்ததில் வியப்பொன்றுமில்லை.

1931ஆம் ஆண்டில் இறக்குமதித் தீர்வைகளிலும் ஆயத்தீர்வைகளிலும் மேல்வரிகளை விதிக்கத் தேவையான விதிகளை அரசாங்கம் மாமூலான வரவு செலவுத் திட்டத்தில் ஏற்படுத்தியதுடன், இளவேனிற் காலத்தில், கடுமையான ஆட்குறைப்பையும், புதிய வரிகளையும் கொண்ட துணை வரவு செலவுத்திட்டம் ஒன்றை (அதே நேரத்தில் இங்கிலாந்து பொன் திட்டத்தைக் கைவிட்டது. அதைத்தொடர்ந்து 'மதிப்பு இறக்கம்' உள்ள ஸ்டெர்லிங் நாணயத்துடன் ரூபாய் இணைக்கப்பெற்றது)[2] தயாரிக்கவேண்டிய அளவுக்கு, நிலைமை கவலைக்கிடமாகியது. அரசாங்கம் இராணுவச் செலவைக்குறைத்து, அரசாங்கத் துறைகளில் ஆட்குறைப்பையும் கையாண்டு, அரசாங்க ஊழியர்களின் சம்பளத்தையும் குறைத்தது. வருமான வரி விலக்கு மட்டத்தைக் குறைத்து, வருமான வரிக்கட்டணங்களையும், வருமான மேல்வரிக் (Super-tax) கட்டணங்களையும் உயர்த்தியது. உள்நாட்டுத் தபால் தந்திக் கட்டணங்களும் உயர்ந்தன. இறக்குமதித் தீர்வைகளின்மேல் புதிய மேல்வரிகள் விதிக்கப்பெற்று, பல புதிய இறக்குமதித் தீர்வைகளும் உயர்ந்த அளவில் விதிக்கப்

[1] எடுத்துக்காட்டாக, 3½ சத வட்டியுள்ள இந்தியாவின் ஸ்டெர்லிங் கடன் பத்திரங்களின் விலைகள் 1929-ல் 69-லிருந்து 1931, ஏப்ரல் மாதத்தில் 60-க்கும், 1931 செப்டம்பர் மாதத்தில் 43½-க்கும் குறைந்தன.

[2] ஸ்டெர்லிங் நாணயத்துடன் ரூபாயை இணைக்கும் கொள்கைக்குக் குற்றச்சாட்டுகள் இருந்தாலும், இந்த இணைப்பினால் இந்தியா பயனடைந்தது என்று பேராசிரியர் P. J. தாமஸ் அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார். பொருளாதார மந்தத்திலிருந்து பொன்திட்ட நாடுகளைவிட ஸ்டெர்லிங் தொகுதி (Sterling area) விரைவில் மீட்சியுற்றது. *V.* The Growth of Federal Finance in India, p. 361.

பெற்றன. (எடுத்துக்காட்டாக, இறக்குமதியான இயந்திரக் கருவிகள், சாயங்கள், கச்சாப் பருத்தி இவைகளின்மேல் தீர்வைகள் விதிக்கப் பெற்றன). இந்த நடவடிக்கைகள் தற்காலிகமானவை என்றும், நெருக்கடி நீங்கியதும் இவைகளும் நீக்கப் பெறும் என்றும் எதிர்பார்க்கப்பட்டன.

அரசாங்கம் இத்தகைய கடுமையான கொள்கையைக் கையாண்டதால் இந்தியாவின் நாணயம்.[1] உயர்ந்தது. பணவீக்கமும் தவிர்க்கப்பட்டது; வரவு செலவுத் திட்டத்தைப் பொறுத்த அளவில் பெரிதும் பயனுடையதாகவும் இருந்தது 1932–33ஆம் ஆண்டில், கடனைக் குறைப்பதற்காக 6·84 இலட்ச ரூபாயை ஒதுக்கிய பிறகு[2] 1·55 இலட்ச ரூபாய் உபரியும் கிடைத்தது. 1933–34-ல் சம்பளக் குறைப்பும் ஓரளவுக்கு நீக்கப் பெற்றது. இந்த ஆண்டிலும் ஓர் உபரி கிடைத்தது. ஆனால், 1933ஆம் ஆண்டில் பீஹாரில் தோன்றிய பூகம்பத்தினால் பாதிக்கப்பெற்ற தொகுதிகளுக்கு உதவியளிப்பதற்காக அரசாங்கம் இந்த உபரியை ஒரு காப்பு நிதியுடன் சேர்த்தது. இதனால், அந்த ஆண்டின் வருவாய்க் கணக்கும் செலவுக் கணக்கும் சமநிலையைக் காட்டின. அரசாங்கக் கடனை அடைக்கும் முறையிலும் ஒரு மாறுதல் செய்யப்பட்டது. 1924–25ஆம் ஆண்டில் கையாளப் பெற்ற கடன் அடைக்கும் முறைக்குப்பதிலாக, ஒவ்வோர் ஆண்டுக்கும் இச் செயலுக்காக 3 கோடி ரூபாய் மொத்தமாக ஒதுக்கப் பெற்றது.

1933ஆம் ஆண்டு முடிவுக்குள்ளாக, உலக வாணிபம் குறிப்பிடும் அளவுக்கு மீட்சியுறும் என்றும், அதனால் 1934ஆம் ஆண்டின் வரவு செலவுத் திட்டத்தில் நெருக்கடி காலத்தில் கையாண்ட வெட்டுகளைக் (Cuts) குறைக்கவும், மேல்வரிகளை நீக்கவும் இயலும் என்றும் அப்பொழுது எதிர்பார்த்தனர். ஆனால், சில நாடுகளின் உள்நாட்டுச் சூழ்நிலையில் முன்னேற்றம் இருந்தது என்றாலும், பன்னாட்டு வாணிபத்தில் பொதுவான மீட்சிக்கான அறிகுறி ஒன்றும் இல்லை. ஆகவே, 1934ஆம் ஆண்டில் சர் ஜார்ஜ் ஷுஸ்டர் (Sir George Schuster) அவர்கள், 1931ஆம் ஆண்டின் நெருக்கடி நடவடிக்கைகளை 1935 வாக்கில் நீக்கும் நோக்கத்துடன், தன்னுடைய இறுதியான வரவு செலவுத் திட்டத்தில் நிரந்தரமான வருவாய் நடவடிக்கைகளைப் (குறிப்பாக

[1] நாபணமாற்று நடவடிக்கைகளை அரசாங்கம் வெற்றிகரமாக நடத்திவந்ததால் இந்தியாவின் நீண்டகாலக் கடன்பளு குறைந்ததுடன், குறுங்காலக் கடன்களும் (floating debts) குறைந்தன. 3½ சதவீத வட்டியுள்ள இந்திய ஸ்டெர்லிங் கடன் பத்திரங்களின் விலை 1933 மார்ச் மாதத்தில் 89-க்கும் 1935 ஜனவரி மாதத்தில் 98-க்கும் உயர்ந்தது. *V. P. J. Thomas, op. cit., p. 364.*

[2] 1930–31, 1931–32 ஆண்டுகளிலும் இதைப்போன்று சில தொகைகள் ஒதுக்கப் பெற்றன.

சர்க்கரை, தீப்பெட்டிகள், எஃகு[1] இவைகளின்மேல் தீர்வைகளை விதிக்கும் நடவடிக்கைகளைப் புகுத்தினர். நேரத்தில் சணல் ஏற்றுமதித் தீர்வை மூலம் கிடைக்கும் வருயில் 50 சதவீதத்தைச் சணல் விளைவிக்கும் பகுதிகளின் இன்னல்களைப் போக்க ஒப்படைக்கவேண்டும் என்ற விதியும் ஏற்பாடாயிற்று[2] முதலீட்டுச் செலவு (Capital expenditure) மந்த காலத்தில் தாழ்மட்டத்திற்குக் குறைக்கப்பட்டது. ஆனால், சர் ஜார்ஜ் ஷுஸ்டர் அவர்கள், பொதுப் பணிகள், கிராம அபிவிருத்தி போன்ற செயல்களில் முதலீட்டுச் செலவை மீண்டும் அதிகரிக்க வேண்டும் என்று முன்கூட்டியே அறிவித்தார். இரயில்வேக்களில் முதலீட்டுச் செலவு(மந்தகாலத்தின் தொடக்க ஆண்டுகளைவிட) சிறிதளவு அதிகரிக்கப் பெற்றது.

1935ஆம் ஆண்டில் சர் ஜேம்ஸ் கிரிக் (Sir James Grigg) அவர்கள் தம்முடைய முதல் வரவு செலவுத் திட்டத்தைச் சமர்ப்பித்தார். 1934-35ஆம் ஆண்டுக்கான திருத்திய மதிப்பீடுகள் (Revised estimates) எதிர்பார்த்த அளவுக்குமேல் திருப்திகரமாக இருந்தன. தனித்தன்மையான சில காரணங்களாலேயே அந்த ஆண்டின் நிதிநிலைமையில் அபிவிருத்தி இருந்தது என்பதால், வருவாய் அதிகரிப்பு, மீளவரும் (Recurring) தன்மையுடையது அன்று என்று கருதப்பெற்றது. இதனால், உபரியில் ஒரு பாகத்தையே வரிகளைக் குறைப்பதற்காகப் பயன்படுத்த முடியும். மீளவாரா வருவாயை (Non-recurring revenue) கிராம அபிவிருத்திச் செயல்களை மேற்கொள்ளுவதற்காக மாகாண அரசாங்கங்களுக்குத் தனி உதவித் தொகையாகக் கொடுப்பதாக முடிவு செய்யப் பெற்றது. அரசாங்க ஊழியர்களின் சம்பளத்தில் இருந்த வெட்டுகள் முற்றிலும் நீக்கப்பெற்றதுடன், வருமான வரியில் இருந்த மேல்வரிகளும் ஓரளவுக்கு நீக்கப் பெற்றன. சாலைகள், ஒலிபரப்பு, சிவில் வான் போக்குவரத்து இவைகளை வளர்க்க அதிகப் படியான உதவித் தொகைகளும் கொடுக்கப் பெற்றன.

நிலைமை முன்னேற்றமடைவதற்கான அறிகுறிகள் 1936-ல் இருந்தன. அந்த ஆண்டின் வரவு செலவுத் திட்டத்தின்படி நெருக்கடி காலத்தில் வருமான வரியின்மேல் விதித்த மேல்வரிகள் (சிறு வருமானங்களில் இருந்த மேல்வரிகள் முற்றிலும் நீக்

[1] இந்த அத்தியாயத்தின் முற்பகுதியைப் பார்க்கவும். இந்த ஆயத்தீர்வைகள் தனி மசோதாக்கள் மூலம் விதிக்கப்பட்டன.

[2] சுங்கத் தீர்வைகளில் மற்றும் பல சிறுமாறுதல்களும் செய்யப்பெற்றன. பதனிடாத தோலின்மீதிருந்த ஏற்றுமதித் தீர்வை நீக்கப்பெற்றது. வெள்ளியின் மேலிருந்த இறக்குமதித் தீர்வை குறைக்கப்பெற்றது. புகையிலையின் மேலிருந்த இறக்குமதித் தீர்வை உயர்த்தப்பெற்றது.

கப் பெற்றன) மேலும் குறைக்கப்பட்டன. தபால் கட்டணங்களும் குறைந்தன; கிராமப் புனருத்தாரணம், சுகாதாரம், விவசாய ஆராய்ச்சி, ஒலிபரப்பு இவைகளுக்காக அதிகப்படியான தொகைகள் ஒதுக்கப் பெற்றன; மாகாண சுயாட்சியின் தொடக்க ஆண்டுகளில் மாகாணங்களுக்கு உதவியளிப்பதற்காக ஒரு காப்புநிதி நிறுவப்பட்டது; மாகாண அரசாங்கக் கட்டடங்களைக் கட்டுவதற்காக ஓர் உதவித் தொகையும் கொடுக்கப் பெற்றது. பீஹார் பூகம்பத்தினாலும் அரசாங்கச் செலவு அதிகரித்தது. ஆனால், சுங்கவரிகளில் இருந்த மேல்வரிகளை அரசாங்கம் குறைக்கவே இல்லை. இந்த மேல்வரிகளுக்கு இலங்காஷையில் இருந்த எதிர்ப்புகளும் குறையவில்லை. இங்கிலாந்திலிருந்து இறக்குமதியான பருத்தித் துணிகளின்மேல் 1931ஆம் ஆண்டில் விதிக்கப்பெற்ற மேல்வரிகள் முடிவாக ஒரு தனிச்சட்டத்தின் மூலம் நீக்கப்பெற்றன. இதை நாம் முன்னரே கண்டோம்[1].

பொருளாதாரமீட்சி மகிழ்ச்சியூட்டுவதாக இருந்தது. ஆனால், வாணிபமீட்சி எந்த அளவுக்குப் பொன் ஏற்றுமதியின் மூலம் கைவரப்பெற்றது என்பதை மறந்துவிடக் கூடாது. மந்த காலத்தில் இந்தியா, பொன் ஏற்றுமதியின் மூலம்தான் இறக்குமதிகளைத் தொடர்ந்து செய்யமுடிந்தது. இந்த வசதி இல்லாதிருந்தால் இந்தியா அயல் நாடுகளிலிருந்து பண்டங்களைத் தருவித்திருக்கவே முடியாது. 1936ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் வரையில் 270 கோடி ரூபாய் மதிப்புள்ள பொன்னை இந்தியா ஏற்றுமதி செய்தது. அளவு வீதத்தில் நோக்கினால், 1922–1931 ஆண்டுகளின் இடைக்காலத்தில் இந்தியா இறக்குமதி செய்த 43 மில்லியன் அவுன்சுகளில் இந்த ஏற்றுமதி மூன்றில் இரண்டு பங்காக இருந்தது.[2]

அண்மையான எதிர்காலத்தில் இந்தியாவின் கடன்களை அடைப்பதற்கான வழிகளைக் கையாளுவதை சர் ஜேம்ஸ் கிரிக் அவர்கள் அதிகமாக வற்புறுத்தினார். இருந்தாலும் மொத்தத்தில் அவர் கையாண்ட கொள்கையை, சர் ஜார்ஜ் ஷூஸ்டர் அவர்கள் கடைப்பிடித்த கொள்கையின் ஒரு தொடர்ச்சியாகக் கருதலாம்.

மாகாண அரசாங்கங்களுக்கு மத்திய அரசாங்கம் நிதி உதவி அளிக்கும் கொள்கையில் நல்ல மாறுதல் இருந்தாலும் கூட, சில மாகாணங்களின் நிதிநிலைமைகள் செப்பனிட முடியாதனவாகவே இருந்தன.

[1] இந்த அத்தியாயத்தின் முற்பகுதியைப் பார்க்கவும்.

[2] *V.* P. J. Thomas, op. cit., p. 365.

1921ஆம் ஆண்டில் இரட்டையாட்சி தொடங்கியது முதற் கொண்டு, மாகாணங்களின் நிதி நடவடிக்கைகளை மாகாணங் களே கவனித்துக் கொள்ளும் கொள்கைதான் கையாளப் பட்டு வந்தது. மாகாணச் செல்லுகளை முதலில் குறைத்தும் முடிவில் முற்றிலும் தள்ளுபடி செய்ததும்தான் மாகாணங் களுக்கு இரட்டை ஆட்சியின் மூலம் கிடைத்த ஒரே சலுகை யாகும். ஆனால், மந்தகாலத்தில் பல காரணங்களாலும் தங்களு டைய வரவு செலவுத் திட்டங்களைச் சரிக்கட்ட முடியவில்லை. ஆக்கம் தரும் பணிகளை மேற்கொள்ளுவதைப் பற்றி நினைக்கக் கூட முடியவில்லை. ஆகவே, மாற்றிக் கொடுக்கப்பெற்ற இனங் களின் (Transfered Subjects) பொறுப்பை ஏற்ற மந்திரிகள் ஏமாற்றமும் மனக்கொதிப்பும் அடைந்தனர்.

ஒவ்வொருமாகாணத்திலும் சூழ்நிலை ஒவ்வொரு விதமாக இருந்தது. பம்பாய்மாகாணமும் ஐக்கியமாகாணமும் பொருளா தார மந்தத்தை நல்ல முறையில் சமாளித்தன. பம்பாய் மாகாணம் விவசாயத்தையே முற்றிலும் சாராதிருந்ததும், ஐக்கிய மாகாணத்தில் தொழிற்காப்பு வசதி பெற்ற சர்க்கரைத் தொழில் வீரைவில் முன்னேற்றம் அடைந் ததுமே இதற்குக் காரணங்களாகும். மந்தத்திலும் வங்காளம் (சணல் தொழில் நலிந்ததாலும், கொள்ளைக் கூட்டத்தினரின் நாசத்திலும் வங்காளம் பாதிக்கப் கப் பெற்றது), அஸ்ஸாம், பீஹார், ஒரிஸ்ஸா மாகாணங்கள் தாம் மிக அதிகமாகக் கேடுற்றன. இந்த மாகாணங்களால் பல ஆண்டுகளில் (வங்காளத்திற்கும் பீஹாருக்கும் தனி நிதிஉதவி அளிக்கப்பட்டும் கூட) வரவு செலவுத் திட்டங்களைச் சரிக்கட்ட முடியவில்லை. வரவு செலவுத் திட்டங்களைச் சரிக்கட்டிய சென்னை போன்ற (1930–31ஆம் ஆண்டு நீங்கலாக) மாகாணங்களிலும், கஞ் சத்தனமான சிக்கன முறைகளினால்தான் இது கைகூட்டியது.

விவசாய மந்தத்தினால் மாகாணங்களின் நிலைமை கேடுற்றது. அதனுடன் சில மாகாணங்களில் தனித்தன்மையான இன்னல் களும் இருந்தன. குறிப்பாக, சணல் தொழில் நலிந்ததால் வங் காளமும், 1933-ல் தோன்றிய பூகம்பத்தினால் பீஹாரும் நலிந் தன. நாம் முன்னரே கண்டதுபோல்,[1] மத்திய அரசாங்கம் தன்னுடைய கொள்கையைப் படிப்படியாக மாற்றிக்கொள்

[1] மத்திய அரசாங்கம், சணல் விளைவிக்கும் மாகாணங்களுக்கு சணல் ஏற்றுமதித் தீர்வைகள் மூலம் கிடைக்கும் வருவாயில் 50 சதவீதத்தைக் கொடுத்ததையும், பூகம்பம் தோன்றியதற்காக பீஹார் மாகாணத்திற்கு அளித்த உதவியையும், கிராம அபி விருத்திக்காக 1934–35 முதற்கொண்டு உதவித் தொகைகள் கொடுத்ததையும் இதே அத்தியாயத்தின் முற்பகுதியில் குறிப்பிட்டுள்ளோம்.

வதற்கும், மாகாணங்களுக்குப் பொதுவாகவும், தனிக்காரணங்களுக்காகவும் நிதி உதவி அளிக்க முன்வருவதற்கும் இத்தகைய விளைவுகள் காரணமாயிருந்தன. மாகாணச் சுயாட்சி நிறுவுவதற்கு முன், மாகாணங்களின் நிதிநிலைமையையும், ஒவ்வொரு மாகாணத்திற்கும் தேவையான தனி உதவியையும் ஆராய்வதற்காக, சர் ஆட்டோ நீமியர் (Sir Otto Niemeyer) அவர்கள் இந்தியாவுக்கு அழைக்கப்படும் நேரத்தில், மாகாணங்களுக்கு நிதி உதவி அளிக்கவேண்டும் என்ற கொள்கை முற்றிலும் ஏற்றுக் கொள்ளப் பெற்றது.[1]

மந்தகாலம் முழுவதிலும் மத்திய, மாகாண அரசாங்கங்களின் நிதிக்கொள்கை எச்சரிக்கையானதாகவும், வழிவழிவந்த முறையைப் பின்பற்றுவதாகவும், ஆட் குறைப்பையும் அதிகப் படியான வரிவிதிப்பதையுமே முற்றிலும் சார்ந்திருந்தது என்று முடிவாகக் கூறலாம். மந்தகாலம் மறையும் வரையில், கிராமப் புனருத்தாரணச் செயல்களுக்கு, மீள வாரா அடிப்படையிலும் கூட உதவித் தொகைகள் கொடுக்கப்படவில்லை. இக் கொள்கை ஜப்பான் நாட்டில் கையாளப்பட்டதற்கு நேர்மாறுனதாக இருந்தது. இந்தியாவில் எந்தவித உதவித் தொகையோ அல்லது பொருளாதார மந்தக் கடன்களோ கொடுக்கப்படவில்லை. பொதுப் பணிகளுக்காகவும் நிவாரணத்திற்காகவும் செலவிடப் படவில்லை. மந்தகாலம் முழுவதிலும் கடன்களை அடைப்பதற்கான ஏற்பாடுகள் தொடர்ந்து செய்யப்பெற்றதுடன், வரவு செலவுத் திட்டங்களைச் சரிக்கட்டுவதே கொள்கையின் முக்கிய நோக்கமாகவும் இருந்துவந்தது.

ஆனால், அரசாங்கக் கொள்கையின் நோக்கங்கள் நிறைவேறத்தான் செய்தன. 'கடன் இன மாற்றுகை' (Debt Conversion) வெற்றிகரமாகக் கைவரப்பெற்றது. இக் காலம் முழுவதிலும் பண மலிவுக் கொள்கை (Cheap money policy) கையாளப்பட்டு வந்தது. 1935ஆம் ஆண்டில் பாங்கு வீதம் (Bank rate) 3 சத வீதத்திற்குக் குறைக்கப்பெற்றது. இந்த வீதம் இந்தியாவுக்கு மிகத் தாழ்வான மட்டமாகும். 1936ஆம் ஆண்டில் அரசாங்கம் மிகக் குறைவான $2\frac{3}{4}$ சதவீதத்தில் கடன் பத்திரங்களை வெற்றிகரமாக வெளியிட்டதிலிருந்து, அரசாங்கத்தின் நாணயம் மீட்கப் பெற்றது என்பது தெளிவாகிறது. மேலும் நாட்டின் கடன் நிலைமையும் மிகவும் திருப்திகரமாக இருந்தது. 1939ஆம் ஆண்டு, மார்ச் 31ஆம் தேதியில் இங்கிலாந்தில் 348·7

[1] இதே அத்தியாயத்தின் பிற்பகுதியைப் பார்க்கவும்.

மில்லியன் பவுன்களும், இந்தியாவில் 484 கோடி ரூபாய்களும் (363 மில்லியன் பவுன்கள்) தாம் கடன் நிலுவையாக இருந்தன. மற்ற நாடுகளுடன் ஒப்பிட்டால் இந்தக் கடன் நிலுவைகள் மொத்தத்திலும்சரி, தலைக்கான கடனிலும் சரி [1] மிகக் குறைவானவையே. மேலும், இந்தியாவின் மொத்தக் கடன்களில் 80 சதவீதத்தை (இங்கிலாந்து, இந்தியா இரண்டு நாடுகளிலும்) உற்பத்தியாக்கும் கடன்களாக வகைப்படுத்தலாம்.

கூட்டரசாங்கம் நிறுவுவதற்கான வரவு செலவுத் திட்டம் சமனாக இருத்தல் வேண்டும், குறுங்காலக் கடன்கள் நியாயமான அளவுக்குள் இருத்தல் வேண்டும், (போதிய காப்புகளுடன்) நிசர்வு பாங்கை நிறுவுதல் வேண்டும், இந்தியாவின் இயல்பான ஏற்றுமதி உபரி நிலையைத் திரும்பப் பெறல் வேண்டும் என்பன போன்ற நிதி நிபந்தனைகள் அனைத்தும் 1936ஆம் ஆண்டு வாக்கில் நிறைவேற்றப் பெற்றன. மாகாணச் சுயாட்சி நிறுவுவதாலும், அரசியல் அமைப்புச் சீர்திருத்தங்களை மேற்கொள்ளுவதால் ஏற்படும் அதிகச் செலவுகளைச் சமாளிக்கவும், மாகாண அரசாங்கங்கள் தங்களுடைய மிகக் குறைவான பணிகளை நிறைவேற்றுவதற்கு ஏதுவாக இருக்கவும் சர் ஆட்டோ நீமியர் அவர்களின் அறிக்கைக்கும், பரிந்துரைகளுக்கும் (இவைகள் பின்னர் விளக்கப் பட இருக்கின்றன)[2] இணங்கத் தனி ஏற்பாடு செய்யப் பெற்றது ஆகவே 1937-38, 1938-39, 1939-40 ஆண்டுகளுக்கான மத்திய அரசாங்க வரவு செலவுத் திட்டங்களின் சிறப்பியல்புகளை மட்டும்தான் இக் கட்டத்தில் விரித்துரைக்கவேண்டி இருக்கிறது.

பன்னாட்டுக் கண்ணோட்டத்திலிருந்து நோக்கினால் இந்த ஆண்டுகள் பொருள் நிறைந்தனவாகவும் ஊக்க மூட்டுவனவாகவும் இருந்தன. ஆனால், வரவு செலவுத் திட்டத்தின் கண்ணோட்டத்திலிருந்து நோக்கினால் இந்த ஆண்டுகள் குளத்து நீரைப் போன்று தேக்கமுற்றனவாக இருந்தன.

வாணிப மீட்சி, 1937ஆம் ஆண்டின் குறுகியகால வீக்கம் (Boom), அதைத் தொடர்ந்து ஓர் இறக்கமும் மீட்சியும், 1937ஆம் ஆண்டில் மாகாண சுயாட்சி முறை தொடங்கியது, போரின் (இரண்டாம் உலகப் போர்) அச்சம் முதலியவைகளே இக் காலத்தின் சிறப்பியல்புகள் ஆகும். இவைகள் அனைத்தும்

[1] Cf. P. J. Thomas, The Growth of Federal Finance in India, p. 434 'அரசாங்கக் கடனில் இத்தகைய சாதகமான நிலையை உலகின் மற்றெந்த நாடும் பெறவில்லை என்று கூறலாம்'.

[2] இந்த அத்தியாயத்தின் பிற்பகுதியைப் பார்க்கவும்.

அரசாங்கத்தின் செலவையும் வருவாயையும் பாதித்தன. ஆனால், அரசியல் அமைப்பு மாறுதல்களால் ஏற்படக் கூடிய அதிகப்படியான செலவையும், அச் செலவை ஏற்கும் வழிகளையும் முன்னேற்பாடுடன் மதிப்பீடு செய்திருந்ததால், நிறை வேற்ற இருந்த மூன்று நிதிச் சட்டங்களில் மிகக் குறைவான மாறுதல்களையும், புதுமைகளையும் தான் புகுத்த வேண்டியிருந்தது.

வரவு செலவுத் திட்டங்கள், 1934-35லிருந்து 1936–37 [1] வரை ஏறக்குறைய சரிக்கட்டப்பெற்றன என்று அட்டவணை (10)லிருந்து அறியலாம். இருந்தாலும் 1936–37ஆம் ஆண்டுஏமாற்றத்தை அளித்தது. சுங்கத்தீர்வைகளின் மூலமாகவும், வருமான வரி மூலமாகவும், கிடைத்த வருவாய் எதிர்பாராத விதமாகக் குறைந்ததே இதற்குக் காரணமாகும். இதனால் 'வருவாய்க் காப்பு நிதியிலிருந்து' (Revenue Reserve Fund) எதிர்பார்த்த அளவுக்கு மேலாக எடுக்கவேண்டியிருந்தது. 1937ஆம் ஆண்டில் ஒரு பெரிய மாறுதல் வர இருந்தாலும், அரசியல் அமைப்பு மாறுதல்களால் 1936ஆம் ஆண்டில் அதிகப்படியான செலவு தொடங்கியது. ஆகவே, சுயாட்சி பெற்ற புதிய மாகாணங்களுக்கு உதவி அளிப்பதற்கும், பர்மாப் பிரிவினையால் ஏற்பட்ட நட்டத்திற்கு ஈடு செய்வதற்கும் தேவையான நிதி ஏற்பாட்டைச் செய்ததும், கணக்கு வைக்கும் முறைகளில் ஏற்பட்ட (இந்த மாறுதல்களின் அவசியமும் அரசியல் அமைப்பு மாறுதல்களால்தான் எழுந்தது) பல மாறுதல்களும்தாம் 1937ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்டத்தின் சிறப்பியல்புகள். இந்த ஆண்டில் இரயில் வேக்களின் வருவாய் மீட்சியுற்றது மகிழ்ச்சியூட்டும் செயலாகும். நீமியர் தீர்ப்பின்படி (Niemeyer award) வருமான வரிமூலம் கிடைக்கும் வருவாயிலிருந்து மாகாணங்களுக்கு ஒரு பங்கு கொடுப்பதற்குமுன், இரயில்வேக்களின் வருவாய், வருமான வரி வருவாய் இரண்டையும் சேர்த்து 13 கோடி ரூபாய் கிடைக்க வேண்டும். நாட்டின் பொதுவருவாய்க்கு இரயில்வேக்கள் செலுத்திய தொகையும், வருமானவரி வருவாயும் 1937ஆம் ஆண்டில் இந்த மட்டத்தைத் தாண்டின. இந்த வழியில் மாகாணங்களுக்குப் பகிர்ந்தளிப்பதற்காக 1.38 இலட்ச ரூபாய்த் தொகை ஒன்று கிடைத்தது. பண்டங்களின் விலைகள் உயர்ந்ததும், 'மொத்த ஏற்றுமதியும், பண்டங்களின் ஏற்றுமதியும் வியப்புக்குரிய வகையில் பெருகியதும்' [2] உற்சாக மூட்டுவனவாக இருந்

[1] மாகாணங்களுக்கு மீளவராத (non-recurring) உதவித்தொகைகளைக் கொடுத்திருக்கா விட்டால், வரவு செலவுத்திட்டங்களில் உபரி கிடைத்திருக்கும்.

[2] *V.* Finance Member's Speech, 1938-39.

தன. ஆனல், விவசாயக் கடன்களுக்கு நிவாரணம் அளிக்கப் பல சட்டங்கள் இயற்றப் பெற்றதால்[1] கிராமப் புறங்களில் கடன் வசதிகள் குறைந்ததும், பண்டங்களுக்குப் பதிலாக அதிகமான வெள்ளி இறக்குமதியானதால் சுங்க வருவாய் குறைந்ததும், சுங்கவரிகள் உயர்ந்த மட்டத்தில் இருந்ததால் வாணிபம் தடைப் பட்டதும்[2] கவலேயூட்டுவனவாக இருந்தன. சர்க்கரையின் மேலிருந்த ஆயத்தீர்வையை ரூ. 1—5—0-லிருந்து ரூ. 2—0—0-க்கு உயர்த்தியது[3], வெள்ளியின் மேலிருந்த தீர்வையை உயர்த்தியது ஆகிய இவ்விரண்டுமே வருவாயைப் பெருக்க அரசாங்கம் மேற் கொண்ட நடவடிக்கைகளாகும்.

நிதி மந்திரி, 1938–39ஆம் ஆண்டின் வரவு செலவுத் திட்டத்தை ஒரு மாறு இயல்புள்ள (Status quo) திட்டம் என்று அழைத்தார். வரி விதிப்பில் எந்த மாற்றமும் இல்லே. ராயல் இந்தியக் கடற்படை ஒரு போர்ப்படையாக மாற்றி அமைக்கப் பெற்றதால், கடற் படைத் தற்காப்புக்காகக் கடந்த காலத்தில் இந்தியா இங்கிலாந்துக்கு செய்து வந்த செலவிலிருந்து (ஆண்டுக்கு 100,000 பவுன்கள்) நிவாரணம் கிடைத்தது. 1938ஆம் ஆண்டில் வருமான வரி (திருத்தச்) சட்டம் ஒன்று புதிதாக நிறைவேறியது. இச் சட்டத்தின்படி வரி நிர்ணயிக்கும் முறை, படி முறையிலிருந்து (Step system) பலகை முறைக்கு (Slab system) மாற்றப்பட்டது. இந்த முறையினல், உயர்ந்த வருமானங்களில் கட்டணங்கள் உயர்த்தவும், குறைந்த வருமானங்களில் கட்டணங்கள் குறைக்கவும் பெற்றதால் நிகரத்தில் அரசாங்கத்திற்குக் கிடைத்த வருவாய் சிறிதளவு அதிகரித்தது. வாணிபத்தில் பின்னிறக்கம் (Recession) இருந்ததால் அரசாங்க வருவாய் எதிர்பார்த்த அளவுக்கு உயரவில்லே, கடனேக் குறைப் பதற்காகவும், தவிர்ப்பதற்காகவும் தனியாக நிதி ஒதுக்கப் பெறு ததால்தான், ஏற்பட இருந்த வரவு செலவுத் திட்டப் பற்றுக் குறை தவிர்க்கப்பெற்றது.[4] ஆகவே, 1939–40ஆம் ஆண்டின் வரவு செலவுத் திட்டத்தில், வருவாயை அதிகரிப்பதற்கான வழி களே ஏற்படுத்த வேண்டியிருந்தது. கச்சாப் பருத்தியில் இருந்த இறக்குமதித் தீர்வையை இரட்டிப்பாக்குவதன் மூலம் இந்த ஏற்பாடு நிறைவேறியது.

[1] இந்த அத்தியாயத்தின் பிற்பகுதியைப் பார்க்கவும்.

[2] *V.* Finance Member's Speech, 1938–39.

[3] இதே அத்தியாயத்தின் முற்பகுதியைப் பார்க்கவும்.

[4] கடனேக் குறைப்பதற்காக ஆண்டுக்காண்டு 3 கோடி ரூபாய்த்தொகையை ஒதுக்கி வைப்பது என்ற கொள்கை கையாளப்பெற்றது.

இந்த நேரத்தில், சர் ஜேம்ஸ் கிரிக் அவர்களின் ஐந்தாண்டுக் கால நிதிஅங்கத்தினர் பதவி முடிவுக்கு வந்தது. பதவிக் காலத்தின் இறுதி ஆண்டுகளில், போரின் அச்சமும், அரசியல் அமைப்பைப் பற்றி இந்திய மக்களுக்கு இருந்த அதிருப்தியும் தான் அவருடைய முழுக் கவனத்தையும் கவர்ந்தன. இந்தியச் சட்டப் பேரவை ஐந்தாண்டுக் காலத்தின் ஒவ்வோர் ஆண்டிலும், ஏற்றுக் கொள்ள முடியாத நிதிச் சட்டத் திருத்தங்களே இயற்றியது. ஆகவே, தலைமைக் கவர்னர் நிதிச்சட்டத்திற்கு ஒவ்வோர் ஆண்டும் சான்றளிக்க வேண்டியிருந்தது. இந்த நிலைமையில், எதிர் காலத்தில் நிலைமை அபிவிருத்தி அடையும் என்ற நம்பிக்கையுடன் காலம் கடத்துவதே சர் ஜேம்ஸ் கிரிக் அவர்களின் கொள்கையாக இருந்தது. அரசியல் அமைப்புச் சீர்திருத்தங்களுக்குத் தேவையான நிதியை அளிப்பது, கிராம அபிவிருத்திக்காக ஒதுக்கிய தொகையை அதிகரிப்பது இவை இரண்டும் அவர் மனத்தில் கொண்ட முக்கியப் பணிகளாகும். இவையிரண்டையும் நிறைவேற்றுவதில் அவர் வெற்றி கண்டார்.

§ 9. மக்களின் வாழ்க்கை நிலை

இந்திய மக்களின் வாழ்க்கைத் தரத்தில் ஏற்பட்ட மாறுதல்களை அளவிடுவதற்குத் தேவையான புள்ளி விவரங்கள் கிடைப்பதில்லை. வெவ்வேறு பகுதிகளில் நிலவும் சூழ்நிலைகளும் ஒன்றுக்கொன்று மாறுபட்டிருப்பதுடன், பொருளாதார மந்தத்தினால் வெவ்வேறு வகுப்பினரும், வெவ்வேறு பகுதிகளும் வெவ்வேறு வகையில் பாதிக்கப்பெற்றனர். இதனால் இந்தியாவுக்கும் பொதுவான குறியீட்டெண்களைத் தயாரித்துக் கையாண்டாலும், அது இந்திய மக்களின் உண்மையான நிலையைப் பிரதிபலிப்பதாக இருப்பதில்லை. அரசாங்கம், வாழ்க்கைத்தரத்தைப் பற்றிய திருத்தமான புள்ளி விவரங்களின் அவசியத்தை நீண்ட காலமாகவே உணர்ந்து, இதைப் பற்றிய அறிக்கை ஒன்று தயாரிப்பதற்காகப் பேராசிரியர் பௌலி அவர்களையும் இராபர்ட்சன் அவர்களையும் 1933ஆம் ஆண்டில் நியமித்தது.[1] பஞ்சாப் பொருளாதார விசாரணைக் கழகம், பம்பாய்த்தொழிலாளர் அலுவலகம், கிராமக் கணக்கெடுப்புகள், பம்பாயில் நடந்த ஒரு கூலிக் கணக்கெடுப்பு, குடும்ப வரவு செலவுத் திட்டங்களின் விசாரணைகள் இவைகளின் மூலம் பல அரிய புள்ளிவிவரங்கள்

[1] *V.* A Scheme for an Economic Census of India, 1934. உள்நாட்டு வாணிபத்தைப் பதிவுசெய்யும் வழக்கம் 1935ஆம் ஆண்டில் மறுபடியும் தொடங்கப் பெற்றது; 1934ஆம் ஆண்டில் 'புள்ளிவிவர ஆராய்ச்சிக் கழகம்' ஒன்று வாணிபப் புலனுய்வுத்துறையில் நிறுவப்பெற்றது; இவையிரண்டும்தாம் 1934ஆம் ஆண்டின் அறிக்கையால் நிறைவேறிய செயல்கள்.

திரட்டப்பெற்றன. ஆனால், பொதுவான விதிகளைத் தொகுக்கக் கூடிய அளவுக்கு இவைகள் பரவலாக இல்லை. மேலும், இந்த விவரங்களிலிருந்து வாழ்க்கைத் தரத்தின் போக்கையையும் மதிப்பிட முடியவில்லை.

இந்திய மக்களின் வாழ்க்கைத்தரத்தை மதிப்பிட, கடந்த காலத்தில் நடந்த ஆய்வுகளை அத்தியாயம் 16-ல் விளக்கினேம். அதற்குப்பின்னர் ஓரிரு முக்கிய ஆய்வுகள் மேற்கொள்ளப் பெற்றன. பேராசிரியர் V. K. R. V. ராவ் அவர்கள் முதலில் 1925-க்கும் 1929-க்கும் ஆன இடைக்காலத்திற்கும், பின்னர் 1931–32ஆம் ஆண்டுக்கும் பிரிட்டிஷ் இந்தியாவின் நாட்டு வருமானத்தையும் தலா வருமானத்தையும் மதிப்பிட்டார்.[1] இரண்டாவது மதிப்பீட்டில் சில புதிய முறைகளையும், புதிய விவரங்களையும் அவர் கையாண்டார். இரண்டாவது மதிப்பீடு செய்யும் பொழுது 1925-க்கும் 1929-க்கும் இடைக் காலத்துக்கான தலா ஆண்டு வருமானம் மிகக் குறைவாக மதிப்பிடப்பெற்றது என்று அவர் கருதினர், ஆகவே, அவைகளை 1931–32ஆம் ஆண்டுப் புள்ளிவிவரங்களுக்கு இணையாக அமையும்படி மாற்றி அமைத்தார். 1931–32ஆம் ஆண்டுக்கான தலாவருமானம் ரூ. 65 என்று மதிப்பிடப்பெற்றது (கணக்கெடுப்பதில் தவறுகள் இருந்தால் இந்தத் தொகையில் ரூ. 6 கூடுதலோ அல்லது குறைவோ இருக்கலாம்). இதற்கு முன்பு செய்யப்பெற்ற மதிப்பீடுகளைவிட, இந்த மதிப்பீடு அதிகத் திருத்தமானதாக இருந்தது. ஆனால், முந்திய மதிப்பீடுகளில் கிடைக்காத தகவல்களைப் பேராசிரியர் அவர்களே தோராயமாகக் கணக்கிட்டார். விவசாய வெளிப்பாடும், வருமான வரிநிர்ணயிப்புக்காக எடுத்துக் கொண்ட வருமானங்களும் அந்த மதிப்பீடுகளில் குறைவாக மதிப்பிடப் பெற்றன என்று பேராசிரியர் கருதியதால் அதற்கான விவரங்களையும் தோராயமாகச் சேர்த்துக் கொண்டார். இதனால், 1931–32ஆம் ஆண்டின் மதிப்பீட்டையும் முந்திய ஆண்டுகளுடன் ஒப்பிட்டுப் பார்க்க முடியவில்லை. பல வகுப்பினரின் வருமானங்களிலும் மிகுந்த ஏற்றத் தாழ்வுகள் (எடுத்துக்காட்டாக கிராமப்புறத் தொழிலாளர்களுக்கும், நகரப்புறத் தொழிலாளர்களுக்கும் இடையே) இருந்தன என்பதை அவர் குறிப்பாக எடுத்துக்காட்டினர். ஆகவே, சராசரி வருமானம் ரூ. 65 ஆக இருந்த தென்றாலும், குடியானவர்களில் பெரும்பாலோரின் வருமானங்களும், திறன் பெறுத

[1] *V.* V. K. R. V. Rao, An Essay in India's National Income, 1925–29, and The National Income of British India, 1931–32.

தொழிலாளிகளின் (Unskilled labourers) வருமானங்களும் இதை விடக் குறைவாகவே இருந்தன என்பது தெளிவாகிறது.

R. C. தேசாய் அவர்கள் மற்றொரு முறையைக் கையாண்டார். புதிய புள்ளி விவரங்களை நேரிடையாகப் பெறுவதிலும், கிடைக்காத தகவல்களைத் திறமையான முறைகளில் மதிப்பிடுவதிலும் பேராசிரியர் ராவைப் போன்று இவரும் வெற்றிகண்டார். 1931–32-க்கும் 1940–41-க்கும் இடைக்காலத்துக்கான ஆய்வுகளை இவர் மேற்கொண்டார்.[1] வருமானங்களுக்குப் பதிலாகச் செலவுகளை மதிப்பிட இவர் முனைந்தார். அரசாங்கச் செலவு, நேர்முக வரிவிதிப்பு, சேமிப்புகள் (பதுக்கிவைத்த செல்வம் உட்பட), முதல் ஆக்கம் (Capital Formation) இவைகளைத் தள்ளி விட்டு, நுகர்வோர் செலவை மட்டும் இவர் கணக்கில் எடுத்துக் கொண்டார் ஆகவே, பத்தாண்டுக் காலத்தின் ஒவ்வோர் ஆண்டிலும் நுகர்வுக்காக ஆன மொத்தச் செலவையும், தலைக்கான செலவையும்தான் இவருடைய மதிப்பீடுகள் காட்டுகின்றன. இதனால், இந்த மதிப்பீடுகளை மற்ற மதிப்பீடுகளுடன் நேரிடையான முறையில் ஒப்பிட்டுப் பார்க்க முடியாது. விலை மட்டத்தில் ஏற்பட்ட மாறுதல்களுக்கும், மக்கள் தொகையில் உண்டான மாறுதல்களுக்கும் தகுந்தபடி இவர் கழிவு செய்திருந்தார். பின்னர் ஆண்டாண்டுக்குப் புள்ளிவிவரங்கள் கிடைக்காத இனங்களையும் திருத்தமான விவரங்கள் கிடைக்காத இனங்களையும் நீக்கிவிட்டு, பத்தாண்டுக் காலத்தில் தலைக்கான செலவில் (per capita expenditure) ஏற்பட்ட மாறுதல்களை எடுத்துக்காட்ட முனைந்தார். இத்தகைய ஆய்வுகளிலிருந்து அவர் பின்வரும் முடிவுகளைக் கண்டார்: (1) 'பொருளாதார மந்தம் இருந்தும் கூட, மந்தகாலத்தில் (1932–33ஆம் ஆண்டு நீங்கலாக) நுகர்வோரின் மொத்தச் செலவு (total consumer expenditure) மெல்ல உயர்ந்து வந்தது'. 'ஆனால், மக்கள் தொகை விரைவாகப் பெருகியதற்கு ஈடு செய்யும் அளவுக்கு ஏற்றம் இல்லை. இதனால் தலைக்கான செலவு குறைந்து வந்தது'; (2) தலைக்கான செலவில் இருந்த வீழ்ச்சிக்கு ஈடு செய்யும் அளவுக்கு முதல் ஆக்கம், அரசாங்கச் செலவு போன்ற மதிப்பீட்டில் சேர்த்துக் கொள்ளப் பெறுத இனங்களில் விரைவான வளர்ச்சி இருந்ததா என்று முடிவாகக் கூற முடியாது; (3) மக்கள் தொகை விரைவாகப் பெருக்கமுற்றாலும், உணவின் மொத்த நுகர்வு ஒரே நிலையாக இருந்தது 'ஒரு கவலைக்கிடமான செயலாகும்' (இதனால் உணவின் தலைக்கான நுகர்வு குறைந்தது என்பது தெளி

[1] R. C. Desai, 'Consumer Expenditure in India, 1931–32 to 1940–41,' Journal of the Royal Statistical Society, May 1948.

வாகிறது); (4) ஆனல், வாழ்க்கைக்குத் தேவையான வசதிப் பொருள்கள் பலவற்றிலும் விரைவான வளர்ச்சி இருந்தது. 'ஆடை, மோட்டார்க்கார்கள், தட்டு முட்டுப் பொருள்கள், செய்தித்தாள்கள், நூல்கள், போக்குவரத்துச் சாதனங்கள், கல்விக்கான மக்களின் செலவு இவை எல்லா இனங்களிலும் மக்கள் தொகையின் பெருக்கத்தை விட, விரைவான வளர்ச்சி யிருந்தது'.

வாழ்க்கைக்கு இன்றியமையாத பொருள்களைப் பொறுத்த அளவில் மக்கள் தொகையின் பெருக்கம் ஒரு பளுவாகவே இருந்தது என்றும், மக்களின் வருமானங்களில் ஏற்றத்தாழ்வு களும் அதிகரித்ததால் மக்கள் தொகைப் பெருக்கம் கொடிய விளைவுகளை உண்டாக்கியது என்றும் முடிவாகக் கூறலாம்.

அக் காலத்தைப்பற்றிக் கிடைத்த சான்றுகளிலிருந்து (இவற்றுள் பலவும் நேரிடையான சந்தர்ப்பச் சான்றுகளாகும்), தொழில் வருமானங்களைவிட, விவசாயவருமானங்கள் குறை வாகத்தான் இருந்தது என்பதோடு மந்தத்திலுல் ஆலைத் தொழி லாளர்களைவிட விவசாயிகளே அதிமாகப் பாதிக்கப் பெற்றனர் என்றும் அறிகிறோம். மேலும், வேலைகளை இழக்காத சில ஆலைத் தொழிலாளர்களின் வாழ்க்கைத்தரம் உயர்ந்தது என்று எண்ண இடமிருக்கிறது. ஆகவே, ஆலைத்தொழிலாளிகளின் வாழ்க்கை நிலையையும், விவசாயத் தொழிலாளர்களின் வாழ்க்கை நிலையை யும் தனித்தனியாக விளக்க வேண்டியது அவசியமாகிறது.

பொதுவாக, விவசாய வகுப்பினர் அனைவருடைய நிலையும் கேடுற்றிருலும், எல்லா வகுப்பினரும் ஒரே அளவில் பாதிக்கப்பெற வில்லை. கேட்டின் அளவு அவர்களின் இயல்பான நிலைக்கும், அவர்கள் நம்பி வாழ்ந்த பயிர்களுக்கும் ஏற்றவாறு மாறியது. வாணிபப் பயிர்களைச் சாகுபடி செய்த விவசாயிகளும், தொகுதி களும், குறிப்பாக ஏற்றுமதிப்பயிர்களைச்சாகுபடி செய்தவர்களும் தம்நிறைவுக்கான பலவிதப்பயிர்களையும் சாகுபடி செய்தவர் களைவிட அதிகமாகத் தீங்கிழைக்கப் பெற்றனர். வங்காளம், பீஹார், ஒரிஸ்ஸா போன்ற மாகாணங்களின் முக்கியப் பயிர் களின் மதிப்பு மிக அதிகமாக வீழ்ச்சியுற்றதால், இம் மாகாணங்கள் மிகக் கொடுமையாகப் பாதிக்கப்பெற்றன. 1920–21-க்கும் 1932–33-க்கும்[1] இடைக்காலத்தில் வங்காளக் குடி யானவர்களின் வாங்குந்திறனில் ஏற்பட்ட மாறுதல்களைக் கைத் தான் அவர்கள் (Mr. Khaitain) மதிப்பீடு செய்தார். இம் மதிப் பீடுகளிலிருந்து வங்காளக்குடியானவர்களின் அவல நிலையை ஒரு

[1] *V.* Report of the Bengal Jute Inquiry Committee, 1934, pp. 153 et seq

வாறு அறியலாம். 1920–21-க்கும் 1929–30-க்கும் இடைக்காலத்தில் வங்காள மாகாணத்தில் சாகுபடியான விற்பனைப்பயிர்களின் மொத்த மதிப்பின் ஆண்டுச் சராசரி 72·4 கோடி ரூபாயாக இருந்தது. இது 1932–33ஆம் ஆண்டில் 32·7 கோடிக்குக் குறைந்தது. ஆனால், விவசாயிகளின் செலவு சிறிதளவு (27·9 கோடியிலிருந்து, 28·3 கோடிக்கு) உயர்ந்ததால், அவர்களின் வாங்குந்திறன் 44·5 கோடியிலிருந்து 4·4 கோடிக்குக் குறைந்தது. இதே காலத்தில், வாங்குந்திறனில் இருந்த 90 சதவீத இறக்கத்திற்கு எதிராக, கல்கத்தாவின் வீலைக் குறியீட்டெண்கள் 40 சதவீதந்தான் குறைந்தன.

இருந்தாலும், குடியானவர்களின் வாழ்க்கைத்தரம் எதிர்பார்த்த அளவுக்குக் கேடு அடையவில்லை என்று எண்ண இடமிருக்கிறது. எடுத்துக்காட்டாக, மந்தகாலத்தின் கொடுமையான ஆண்டில் (1930-ல்) உப்பு, பருத்தி ஆடைகள், மண்ணெண்ணெய் போன்ற எல்லோருக்கும் தேவையான பொருள்களின் நுகர்வு, 1920-க்கும் 1930-க்கும் இடைக்காலச் சராசரியைவிட அதிகமாக இருந்தது என்று மதிப்பிடப்பெற்றது. 1933ஆம் ஆண்டிலும், பருத்தித் துணிகளின் நுகர்வு சற்று உயர்ந்தது; மண்ணெண்ணெயும் உப்பும் மட்டும் சிறிதளவு குறைந்தன.[1]

இதைப்போன்ற மதிப்பீடுகள் சில அண்மையில் கணிக்கப்பெற்றன. இவைகள், 1920–21-க்கும், 1938–39-க்கும் இடைக்காலத்துக்கான, பருத்தி ஆடைகள், மண்ணெண்ணெய் (பர்மாவின் புள்ளிவிவரங்கள் இம் மதிப்பீடுகளில் சேர்க்கப்படவில்லை), சர்க்கரை, தேயிலை முதலிய இனங்களின் மொத்த நுகர்வையும், தலைக்கான நுகர்வையும் காட்டுகின்றன. [2]உச்ச ஆண்டான 1929-30[3] நீங்கலாக, இக் காலத்தில் மேற்கண்ட இனங்களின் மொத்த நுகர்வும், தலைக்கான நுகர்வும், வெகுவாகக் குறையவில்லை என்று இம் மதிப்பீடுகள் அறிவிக்கின்றன. 1929-30ஆம் ஆண்டினை, மந்தத்திற்கு முந்திய காலத்தின் பொதுவான நிலையை எடுத்துக்காட்டும் மாதிரி ஆண்டாகக் கருதமுடியாது. 1930 தொடங்கி பத்தாண்டுக் காலத்தின் இறுதி ஆண்டுகளின் (இவ்வாண்டுகளில் மக்கள் தொகைப் பெருக்கம் விரைவாக இருந்தாலும் கூட) நிலைமை, முந்திய ஆண்டுகளைவிட திருப்திகரமாக இருந்தது. பருத்தித் துணிகளின் தலைக்கான

[1] *V.* P. J. Thomas, Population and Production, 1935.

[2] *V.* Statistical Summary of the Social and Economic Trends in India, by S. Subramanian, p. 40.

[3] முந்திய ஆண்டுகளை விட 1929–30ஆம் ஆண்டின் புள்ளி விவரங்கள் உயர்வாக இருந்தன.

நுகர்வு 1935–36ஆம் ஆண்டிலும் (16·23 கெசங்கள்), 1938–39ஆம் ஆண்டிலும் (17·58 கெசங்கள்) 1929–30ஆண்டில்(16·02 கெசங்கள்) இருந்ததைவிட அதிகமாக இருந்தது. அதே போன்று தேயிலையின் தலைக்கான நுகர்வும் 1934–35ஆம் ஆண்டிலும் அதற்குப் பிந்திய ஆண்டுகளிலும் (1938–39ஆம் ஆண்டில் 0·25 பவுண்டு), 1929–30 ஆம் ஆண்டில் (0–19 பவுண்டு) இருந்ததை விட அதிகமாக இருந்தது. மண்ணெண்ணெயின் தலைக்கான நுகர்வு 1931–32-ல் 0,69 காலனும், 1932–33-ல் 0.61 காலனும், 1937–38-ல் 0.64 காலனும் ஆக இருந்தது. மந்தத்திற்கு மிகவும் முற்பட்ட ஆண்டுகளுடன் ஒப்பிட்டால், (1923–24-ல் 0-64; 1924–25-ல் 0-64; 1928–29-ல் 0·65) இந்த அளவு ஒன்றும் அதிகமாகக் குறையவில்லை. இதைப்போன்றே மந்தத்திற்கு மிகவும் முற்பட்ட ஆண்டுகளுடன் (1927–28, 1928–29, 1929–30 ஆண்டுகள் நீங்கலாக) ஒப்பிட்டால், சர்க்கரையின் தலைக்கான நுகர்வு மந்த காலத்தில் (1934–35-லும், 1335–36-லும், 1938–39-லும் 6·4 பவுண்டுகள்; 1936–37-ல் 7·1 பவுண்டுகள், 1937–38-ல் 7·0 பவுண்டுகள்) அதிகமாகக் குறையவில்லை.

இவையெல்லாவற்றையும் விட, மக்கள்தொகைப் பெருக்கம் 1931-ஆம் ஆண்டுக்கு முந்திய காலத்தில் இருந்ததைவிட அந்த ஆண்டுக்குப் பிந்திய ஆண்டுகளில் குறையவில்லை என்னும் உண்மையே, மக்களின் வாழ்க்கைத் தரத்திலும் நுகர்விலும் மிகுந்த இறக்கம் இருந்திருக்க முடியாது என்பதற்குப் போதிய சான்றாகும்.

மந்த காலத்தின் தொடக்க ஆண்டுகளில் குடியானவர்களில் சிலராவது தங்களுடைய மூலதனத்திலிருந்து வாழ்க்கை நடத்தினர் என்ற உண்மையாலும், காலத்திற்கு ஏற்றவாறு முறைகளை மாற்றிக்கொள்ளும் சக்தி இந்தியாவுக்கு இருந்தது என்பதாலும் மேற்கண்ட முடிவை விளக்கலாம். பெருமளவில் 'துயரப் பொன்' (Distress gold) இந்தியாவிலிருந்து ஏற்றுமதியானது என்பதிலிருந்தும், குடியானவர்களில் பலரும் வாரங்களையும் நில வரியையும் கடனின் வட்டிப் பணத்தையும் கடனத் தவறினவர்கள் என்பதிலிருந்தும், குடியானவர்கள் தங்களுடைய வருமானக் குறைவைச் சரிக்கட்டவும் வாழ்க்கைத் தரம் குறையாமல் இருக்கவும், தங்களுடைய மூலதனப் பொருள்களைப் பயன்படுத்தினர்கள் என்பது தெளிவாகிறது. குடியானவர்கள் தங்களுடைய நகைகளையும், கால்நடைகளையும் விற்றனர்.[1]

[1] கால்நடைகளை விற்பதால் முடிவில் விவசாயம் பாதிக்கப்பெறும். ஆனால், குடியானவர் அதிகமான கால்நடைகளை (ஆனால், சக்தியில்லாத) வைத்திருப்பதும், அவைகளை விற்றுவிட்டால் சாகுபடி காலத்தில் மறுபடியும் வாங்குவதும், வாடகைக்குப் பெறுவதும் யாவரும் அறிந்ததே.

குடியானவர்களில் சிலருடைய நிலவுடைமைகளும் கடன் கொடுத்தவர்களின் கைகளுக்கு மாறின.[1] விவசாயக் கடன்களின் பளுவும், விவசாயக் கடன்களின் மொத்த ரொக்க மதிப்பும் அதிகரித்தன. நற்பயனுகப் பொன்னின் ஸ்டெர்லிங் விலை (ஆகவே ரூபாய் விலையும்) 1931 ஆம் ஆண்டுக்குப் பிறகு உயர்ந்ததால், குடியானவர்களின் முக்கிய உடைமைகளுள் ஒன்ருன நகைகளின் மதிப்பும் உயர்ந்தது.

ஆனல், இவ்வாறு உடைமைகளே விற்று, வாழ்க்கை நடத்துவதை முடிவில்லாமல் செய்ய முடியாது. 1934 ஆம் ஆண்டுக்குப் பிறகு விலைகள் அபிவிருத்தி அடைந்தாலும், மந்தத்தின் கொடுமையான ஆண்டுகளே விட, பிந்திய ஆண்டுகளில் மக்களின் நிலை மிகவும் கேடுற்றது எனலாம்.

சில தொகுதிகளில் பண்டமாற்று முறையே தொடர்ந்து நடைமுறையில் இருந்து வந்ததாலும், தங்களுக்குத் தேவையான பொருள்களைக் குடியானவர்கள் தாங்களே பயிர்செய்து வந்ததாலும், பல தொகுதிகளிலும் பலவகையான பயிர்கள் சாகுபடி ஆனதாலும், நிலவுடைமைக்காரர்களுடைய போக்கும், கடன் கொடுப்பவர்களின் போக்கும், சாதகமாக இருந்ததாலும், இந்திய விவசாயிகளுக்குச் நிலைமையைச் சமாளிக்கும் சக்தி இருந்தது எனலாம். கிராமப் புறங்களில் பண்டங்களின் மூலமாகவே விற்பனை செய்வதும் வாங்குவதும் இன்னும் சாதாரணப் பழக்கமாக இருந்து வந்தது. வங்காளத்தில் 'நெல் கடன்கள்' (அதாவது குடியானவர்கள் கடனை வாங்கிக்கொண்டு, பின்னர் அக்கடனை நெல்லாகக் கொடுத்து அடைப்பது) இன்னும் வழக்கில் இருந்து வந்தது. இந்த முறையால், நெல்விலை இறங்கும்பொழுது குடியானவர்களுக்கு நஷ்டமேற்படுவதில்லை. சில சமயங்களில், வாரங்கள் தானியங்களாகவே கொடுக்கப் பெற்றன. இதனல், விலை இறக்கத்தால் ஏற்படக் கூடிய நட்டம் நிலக்கிழாருக்குத் தான் போய்ச் சேருகிறது. குடியானவர்களில், தங்களுடைய மொத்தச் சாகுபடியில் பெருமளவு தானியங்களே விற்பனை செய்பவர்களே விட, மொத்தத்தில் சிறிதளவே விற்பனை செய்பவர்கள் அதிகமாக பாதிக்கப்படுவதில்லை. ஏனெனில் இவர்களுடைய மொத்த வருமானத்தில், பண்ணையிலிருந்து விற்பனையாகும் பொருள்களின் மதிப்பு ஒரு சிறிதளவாகவே இருக்கிறது, சாதா

[1] எடுத்துக்காட்டாக, அரிசியை ஏற்றுமதி செய்யும் முக்கியத்தொகுதியான கீழ் பர்மாவில், செட்டியார்கள் (தென் இந்தியாவிலிருந்து குடியேறிய கடன் கொடுக்கும் செட்டியார்கள்) வசம் இருந்த நிலம் 1930-ல் 6 சதவீதத்திலிருந்து 1934-ல் 22 சதவீதத்திற்கு உயர்ந்தது. *V.* Review of Economic Studies, February 1936 : 'Three Economic Systems Clash in Burma,' by J. T. Andrews.

ரணமாகக் குடியானவர் கூலிக்கு ஆள் அமர்த்திக் கொள்வதில்லை. அவர் செலுத்தும் தண்ணீர்த் தீர்வையும் நிலவரியும் குறைவானவையே. நெருக்கடி காலத்தைச் சமாளிக்க அவர் வெளிப்பாட்டைக் (Output) குறைப்பதில்லை. தானே உற்பத்தி செய்யாத பொருள்களின் நுகர்வைக் குறைத்துக் கொள்வதன் மூலமும், கூலிக்கு ஆள் அமர்த்தாமல் தானே கடுமையாக உழைப்பதன் மூலமும்தான் நெருக்கடியைச் சமாளிக்க முனைகிறார். இதே முறைகளில், சாகுபடியின் பெருமளவை விற்பனை செய்யும் குடியானவர்களும், ஆனால் சற்றுக் குறைந்த அளவில் நிலைமையைச் சமாளிக்க முடியும். எடுத்துக் காட்டாக, இக் குடியானவரும் அவரது மனைவியும், உயர்ந்த ரக ஆடைத் துணிகளை வாங்குவதற்குப் பதிலாக, தாங்களே பயிர் செய்யும் பருத்தியிலிருந்து நூல் நூற்று மோட்டாத் துணிகளை நெய்யலாம்.[1] ஆனால், மொத்தச் சாகுபடியின் பெரும் பகுதியையும் விற்ற குடியானவர்கள், மந்த காலத்தில் தங்களுடைய பயிர்களின் மதிப்புத் தாழ்மட்டத்திற்கு வீழ்ச்சி அடைந்ததையும், அதே நேரத்தில் பணச் செலவு ஒரு சிறிதே குறைந்ததையும் கண்டனர். (அரசாங்கம் தீர்வைகளைத் தள்ளுபடி செய்யும் அளவுக்கு நிலைமை கேடுற்றால் அன்றி) நிலவாரமும், நிலவரியும், தண்ணீர்த் தீர்வைகளும், வட்டிப் பணமும் ஏறக்குறைய நிலையான செலவினங்களாகவே இருக்கின்றன. விலைகள் குறைந்த அளவுக்கு விவசாயத் தொழிலாளர்களின் கூலிகளும் குறைவதில்லை. தொடக்க காலத்தில், உணவுப் பொருள்களின் விலை இறக்கத்தை விட, விவசாயக் கருவிகள், பண்ணைச் சாதனங்கள், வீட்டுச் சாமான்கள், உடை இவைகளின் விலைஇறக்கம் குறைந்த அளவில்தான் இருந்தது. விலைஇறக்கத்துடன் ஒப்பிட்டால், நிலவரியையும் மற்றத் தீர்வைகளையும் அரசாங்கம் தள்ளுபடி செய்ததும், ஒத்தி வைத்ததும் குறைவாகத்தான் இருந்தன. ஆகவே கடந்த காலத்தில் மிகவும் செழிப்பான நிலையிலிருந்த பஞ்சாப்போன்ற தொகுதிகளில்தான் குடியானவர்களின் இன்னல்கள் மிகக் கொடுமையாக இருந்தன. இத் தொகுதிகள் வாணிபத்திற்காகவே பயிர்களை விளைவித்து வந்தது இதற்கு முக்கியக் காரணமாகும். விவசாயப் பொருள்களில் வெவ்வேறு விதமாக விலைமாற்றம் இருக்கும்பொழுது குடியானவர்கள் பலவகையான பொருள்களை உற்பத்தி செய்து வந்தால், தராதர விலைமாற்றத்திற்கு ஏற்றவாறு சாகுபடிப் பயிர்களையும் மாற்றிக்கொள்ளும் வாய்ப்பு இருக்கும். இந்த முறையில்

[1] சில ஆண்டுகளில், வெல்லத்தின் நுகர்வு குறையாவிட்டாலும் தலைக்கான சர்க்கரை நுகர்வு குறைந்தது என்று பேராசிரியர் தாமஸ் அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார். இக்காலத்தில் விலையுயர்ந்த, உயர்தரக் பொருள்களுக்குப் பதிலாக, சுகாதாரத்திற்கும் உடல் திறனுக்கும் கேடுசெய்யாத விலை மலிவான மோட்டாப் பொருள்களைப் பெரும்பாலும் மக்கள் உபயோகித்தனர்.

மலேயா, ஜாவா, மேற்கு ஆப்பிரிக்கா போன்ற நாடுகளுடன் ஒப்பிட்டால், இந்தியா சாதகமான நிலையில் இருந்தது.

கடன் கொடுப்பவர்களும் (ஓர் அளவுக்கு நிலக்கிழார்களும் கூட) தங்களுடைய போக்கை நல்ல முறையில் மாற்றிக்கொண்டார்கள் என்பதையும் முடிவாகக் குறிப்பிடவேண்டும். கடன்கள் அதிகமாக வற்புறுத்தினால், குடியானவர்கள் முற்றிலும் மறுக்கக்கூடிய நிலை ஏற்படும் என்பதை உணர்ந்து, கடன் தொகையையோ அல்லது வட்டிப் பணத்தையோ குறைத்துக் கொள்ளும் ஓர் ஏற்பாட்டிற்குத் தாங்களாகவே முன்வந்தனர். ஆனால், கடன் கொடுப்பவர்கள் வழக்கமான, கண்டிப்பான முறையிலிருந்து, சிறிதளவு தாராள மனப்பான்மைக்குத் தங்களுடைய போக்கை மாற்றிக்கொண்டார்கள் என்ற உண்மையே மந்தத்தின் கொடுமையை எடுத்துக் காட்டுவதற்கு ஒரு சிறந்த சான்றாகும்.

விவசாயப் பொருள்களில் விலை வீழ்ச்சி இருக்கும்பொழுது, எல்லா நாடுகளிலுமே விவசாயிகள் தங்களுடைய உற்பத்தியைப் பெருக்க முயலுவார்களே அன்றிக் குறைக்க முற்படமாட்டார்கள் என்று கருதப்படுகிறது. சாகுபடிக்கான நிலப்பரப்பும் வெளிப்பாடும் (சணல் நீங்கலாக) பொதுவாகக் குறையவில்லை என்றுதான் இந்தியப் புள்ளி விவரங்கள் அறிவிக்கின்றன. சில நிலங்கள் சாகுபடியிலிருந்து கைவிடப்பட்டதாகவும் விவசாயம் செய்வதில் முனைப்புக் குறைந்ததாகவும் ஒருசில சான்றுகள் எடுத்துக் காட்டப்படுகின்றன. ஆனால் இம்முறையில் சிறிதளவு நிலமே பாதிக்கப்பெற்றது. இவை யெல்லாவற்றையும் சீர்தூக்கிப் பார்க்கும் பொழுது, மந்தத்தின் கொடுமையை விவசாயிகளே தாங்கினார்கள் என்றாலும், உடல் நலமும் திறனும் கேடுறுத வழிகளில் தங்களுடைய வாழ்க்கைத் தரத்தை மாற்றிக் கொள்ளவோ அல்லது குறைத்துக் கொள்ளவோ அவர்களால் முடிந்தது என்பதை முடிவாகக் கூறலாம்.

இதற்கு மாறாக, தொழிலாளர்களின் வாழ்க்கைத்தரமும், வாழ்க்கை நிலையும் மந்தகாலத்திலும் கூட முன்னேற்றமடைந்ததாகத் தெரிகிறது[1]. சில சந்தர்ப்ப சான்றுகளிலிருந்தும், அண்மைக் காலத்திய முக்கியப் புள்ளி விவரங்களிலிருந்தும், குடும்ப

1 தொழில் வெளிப்பாடு பெருகினாலும் கூட, மக்கள் தொகையில் தொழிலை நம்பி வாழ்ந்தவர்களின் சதவீதம் (1921-க்கும், 1931-க்கும் இடையில்) குறைந்தது. சில தொழில்களில் வேலையில் இருந்த தொழிலாளர்களின் எண்ணிக்கையும் குறைந்தது. இதிலிருந்து விவசாயத்தொகுதிகளிலும், கிராமப்புறங்களிலும் நெருக்கம் அதிகமாக இருந்தது என்று அறியலாம்.

வரவு செலவுத் திட்டங்களைப் பற்றி நடந்த விசாரணைகளின் முடிவுகளிலிருந்தும், மெய்க் கூலிகளிலிருந்தும் இவ்வுண்மை தெளிவாகிறது. தொழிலாளர்கள் பிரச்சினையைப் பற்றி அரசாங்க ஆணைக்கழகம் (Royal Commission) ஒன்று ஆராய்ந்து, அதனுடைய அறிக்கையை 1931ஆம் ஆண்டு வெளியிட்டது.[1] இவ்வறிக்கையின்மேல் அரசாங்கம் பல சட்டங்களை இயற்றியதால் தொழிலாளி, முதலாளி தொடர்பும் நல்ல முறையில் இருந்தது. இக்கழகம் 1929ஆம் ஆண்டுக்கும் 1930ஆம் ஆண்டுக்கும் இடையில் நடந்த தொழிலாளர் பிரச்சினைகளைப் பற்றிய புதிய தகவல்கள் பலவற்றைக் கொடுத்தது. பொருளாதார மந்தம் தோன்றியதற்குப் பின்னர் இயற்றப் பெற்ற சட்டங்களை விளக்குவதற்கு முன்னர், ஆணைக்கழகத்தின் அறிக்கையில் கண்ட முடிவுகளை ஆராய்தல் அவசியமாகும்.

பிரிட்டிஷ் இந்தியாவில் உள்ள தொழில் நிறுவனங்களிலும், தோட்டச் சாகுபடிகளிலும் உள்ள தொழிலாளர்களின் நிலைமையும், அவர்களின் உடல், நிலம், தொழில் திறமை, வாழ்க்கைத்தரம் இவைகளையும், வேலை அளிப்பவர்களுக்கும் தொழிலாளர்களுக்கு மிடையேயுள்ள தொடர்பையும் விசாரணைசெய்து அரசாங்கத்திற்கு அறிக்கை சமர்ப்பிப்பதற்காக, 1929ஆம் ஆண்டில் ஆணைக்கழகம் நியமிக்கப் பெற்றது. இந்த ஆணைக் கழகத்தின் அங்கத்தினர்களில் பாதிப் பேர் இந்தியர்களே. இவர்களில் சிலர் நல்ல அறிமுகமான தொழிலாளர்களின் தலைவர்களாகவும் இருந்தனர். ஒரு பெண் அங்கத்தினரும் இருந்தார். அந்தந்த வட்டாரங்களின் சூழ் நிலையை நன்றாக அறிந்து மதிப்பிடுபவர்கள் (Assessors) (இவர்களில் சிலர் பெண்கள்) ஆணைக் கழகத்திற்கு உதவியாக இருந்தனர். எல்லாவகையான தொழில்களிலும் (தோட்டச் சாகுபடிகளிலும்) தொழிலாளர்களின் வாழ்க்கை நிலையைப்பற்றியும், தொழிலாளர் இயக்கங்களின் நடவடிக்கைகளைப் பற்றியும் விளக்கமான தகவல்கள் ஆணைக் கழகத்தின் அறிக்கையில் அடங்கியிருந்தன. தற்பொழுதுள்ள தொழிலாளர் சட்டங்களிலும், அவற்றின் நிருவாகத்திலும் பின்வரும் முக்கியக் குறைபாடுகள் காணக் கிடக்கின்றன என்று ஆணைக் கழகம் எடுத்துக்காட்டியது: அரசாங்கக் கட்டுப்பாடு, சட்டத்தின் கீழ் வராதவை என்று வகைப்படுத்தப் பெற்ற தொழிற் கூடங்கள் பலவற்றிற்கும் அனுசரிக்கப் பெறவில்லை; பருவ காலத்தில் மட்டும் இயங்கி வந்த தொழிற் கூடங்களுக்குச் சட்டத்திலிருந்து மிகச்சாதாரணமாக விலக்கு அளிக்கப் பெற்றது; தொழிற் கூடங்களை மேற்பார்

[1] Cmd. 3883. Cf. pp. 306, 324 above.

வையிடும் முறை திருப்திகரமாக அமையவில்லை; சட்டங்களை நடைமுறைக்குக் கொண்டுவருவதில் மாகாண அரசாங்கங்கள் தங்களுக்கிருந்த அதிகாரங்களை முழு அளவுக்கும் பயன்படுத்த வில்லை என்பதே இக் குறைபாடுகள். மின்சாரத்தை உபயோகித்து, ஆனால் இருபது நபர்களுக்குக் குறைவாக வேலையில் அமர்த்தியுள்ள தொழிற்கூடங்களும், மின்சாரத்தை உபயோகிக்காமல் ஆனால் 700 அல்லது 800 தொழிலாளர்களை வேலையில் அமர்த்தியுள்ள தொழிற்கூடங்களும் சட்டத்தின்கீழ் வராத தொழிற்கூடங்கள் என்று பிரிக்கப்பெற்றன. மிகுதியான மணிகள் வேலை வாங்குவது, ஐந்து வயது முதற்கொண்டு குழந்தைகளிடம் வேலை வாங்குவது, அசுத்தமான நிலையில் தொழிற் கூடங்களை வைத்திருப்பது போன்ற பல குறைபாடுகள் இத்தகைய தொழிற் கூடங்களில் சாதாரணமாக இருந்தன. கடந்த பத்தாண்டுக் காலத்தில், நிலைமை ஐயமின்றி அபிவிருத்தி அடைந்திருக்கிறது என்றும், பேரளவுத் தொழிற் கூடங்கள் (இவைகளில் சில மற்ற எந்த நாட்டிலும் உள்ளவைகளுடன் ஒப்பிடக்கூடிய நிலையில் இருந்தன) மிகவும் நல்ல முறையில் அமைந்திருந்தன என்றும், சட்டத்தின் கீழ் வராத தொழிற் கூடங்களே மிகவும் கேடுற்ற நிலையில் இருந்தன என்றும் ஆணைக் கழகத்தின் அங்கத்தினர்கள் முடிவு செய்தனர். ஆணைக் கழகத் தினர் கண்ட மற்ற முக்கிய முடிவுகள் பின்வருமாறு: தொழில் களில் வேலைக்கமர்ந்த தொழிலாளர்களின் நிலை வேலையில் அம ராத அதே வகுப்பினரின் நிலையைவிட மேன்மை யுடையதாக இருந்தது; கடந்த முப்பது ஆண்டுக் காலத்தில் தொழிலாளர் களின் ஊதியங்களும், வாழ்க்கைத் தரமும் நிச்சயமாக உயர்ந் துள்ளன; ஆனால் பெரிய தொழில் தொகுதிகளில் வாழ்க்கை நிலை மிகவும் கேடுற்றதால், மெய் வருமானங்கள் உயர்வதால் கிடைக்கக் கூடிய பயன்கள் ஓரளவுக்குக் குறைந்தன. கிராமப் புறங்களில் வேலை வாய்ப்புகள் கிடைக்காததாலும், ஊதியங்கள் குறைவாக இருந்ததாலும் தொழிலாளர்கள் தொழில் ஈடுபாடு களில் 'தள்ளப்பட்டார்களே அன்றிக் கவரப் பெறவில்லை'. தொழில்களில் வேலையில் அமர்ந்த பின்னரும் இவர்கள் தங்க ளுடைய கிராமங்களுடன் தொடர்பு கொண்டிருந்தனர். கிரா மங்களில் வாழ்க்கைக்குப் போதுமான ஊதியம் கிடைக்க வழி யிருந்தால் இவர்கள் கிராமங்களுக்கு அவ்வப்போதும், நிரந்தர மாகவும் திரும்பினர். இத்தகைய தொடர்பு தொழிலாளர் களுக்கு உடல் நலத்தை அளிக்கும் என்று கருதி இத் தொடர்பை நீடிக்கவும், பரவலடையச் செய்யவும் முனைந்தனர். இதற்காகத் தொழிலாளர்களுக்கு அவ்வப்போது விடுப்புகள் அளிக்கவேண்டும் என்றும், அவ்விதம் அளிப்பது தற்போதுள்ள

முறையின் பயன்களை இழக்காமல் ஒரு நிரந்தரமான தொழி வாளர் சமுதாயத்தை உருவாக்க ஏதுவாக இருக்கும் என்றும் ஆணைக்கழகம் கருதியது.

தொழிற் கூடங்களுக்காக ஆணைக் கழகம் பின்வரும் பரிந் துரைகளையும் செய்தது: பருவ காலங்களில் இயங்கிவந்த தொழிற்கூடங்களிலும் சட்டங்களைக் கண்டிப்பான முறையில் அனுசரிக்க வேண்டும்; சட்டத்தின்கீழ் வராத தொழிற்கூடங்களி லும் சட்டங்களை அனுசரிக்க வேண்டும்; மேற்பார்வையிடும் முறையை அபிவிருத்தி செய்யவேண்டும். சர்தார்களின் (Sardars) அதிகாரங்களைக் குறைக்க வேண்டும். ஆணைக் கழகத்தின் மற்றப் பரிந்துரைகள் சுரங்கங்கள், தோட்டச்சாகுபடிகள், இவைகளைப் பற்றியும், தொழிலாளர்களுக்கும் தொழில் அளிப்பவர்களுக்கும் உள்ள தொடர்பைப் பற்றியும் இருந்தன.

ஆணைக் கழகத்தின் பரிந்துரைகளின்மேல் அரசாங்கம் எடுத்துக்கொண்ட நடவடிக்கைகளில் 1934 ஆம் ஆண்டின் தொழிற்சாலைச் சட்டத்தை இயற்றியது மிக முக்கியமான தாகும். இச் சட்டம் முன்னர் நடைமுறையில் இருந்தவைகளை நீக்கி, சட்டங்களை ஒன்றுகத் தொகுத்தது; நிரந்தரமான தொழிற்சாலைகளில் வேலை நேரத்தை ஒருநாளைக்கு 10 மணிகளுக் கும், ஒரு வாரத்திற்கு 54 மணிகளுக்கும் மேற்படக்கூடாது என்றும், பருவகாலத்தில் இயங்கிய தொழிற்சாலைகளில் ஆண் களுக்கு,[1] வேலைநேரம் ஒருநாளைக்கு 11 மணிகளுக்கும், ஒரு வாரத்திற்கு 60 மணிகளுக்கும் மேற்படக்கூடாதென்று நிர்ணயித்தது; இடை நேரங்களுக்கும், உடல் நலத்திற்கும், பாது காப்பிற்கும் தேவையான வசதிகளை ஏற்படுத்தியது; சிறுவர் களை வேலைகளில் அமர்த்துவதற்குமுன், அவர்கள் உடல் நிலைச் சான்றுகள் பெறவேண்டும் என்றும் வற்புறுத்தியது. இச்சட்டம் நிறைவேறுவதற்குமுன்னரும்கூட பருத்தி ஆலைகள் நீங்கலாக மற்றத் தொழிற்சாலைகளில் சட்டம் அனுமதித்த அளவுக்குத் தொழிலாளர்களிடமிருந்து வேலை வாங்கப்படவில்லை. வாரத் திற்கு 54 மணி நேர வேலை அல்லது 48 மணி நேர வேலைகூட சாதாரணமாக வழக்கில் இருந்தது. ஆனால் இச்சட்டம் தேவையான தொழில்களில், நிலைமையை அபிவிருத்தி செய்தது என்பதில் ஐயமில்லை. 1935 ஆம் ஆண்டின் பம்பாய்க் கூலிக் கணக்கெடுப்பு, பம்பாய் மாகாணத்தில் 1935-க்கு முன்னர் வார வேலை நேரம் 33½ மணியிலிருந்து 60 மணிகள் வரை இருந்தது

[1] நிரந்தரமான தொழிற்சாலைகள், பருவகாலத்தில் இயங்கிய தொழிற்சாலைகள் இரண்டிலும் ஒரே வகையில் பெண்களுக்கும் சிறுவர்களுக்கும் வேலை நேரம், முறையே 10 மணிகளுக்கும் 9 மணிகளுக்கும் குறைக்கப்பெற்றது.

என்று கணக்கிட்டது. ஆய்வுக்கு எடுத்துக்கொண்டவைகளில் 60 சதவீதத் தொழிற்சாலைகளில் 48 மணி நேரங்களும், 15 சதவீதத்தொழிற்சாலைகளில் 48 மணிகளுக்குக் குறைவாகவும், 10.6 சதவீதத் தொழிற்சாலைகளில் 48-க்கும் 54 மணிகளுக்கும் இடையிலும், 6.7 சதவீதத் தொழிற்சாலைகளில் 54 மணிகளுக்கும், 8.1சதவீதத் தொழிற்சாலைகளில் 54-க்கும் 60 மணிகளுக்கும் இடையிலும் வேலை வாங்கப்பட்டது என்று அக் கணக்கெடுப்பிலிருந்து தெரிய வருகிறது. இத்தகைய கணக்கெடுப்புகள் அவ்வப்போது மேற்கொள்ளப் பெற்றால் வருங்காலத்தில் கூலிகளின் போக்கைப் பற்றிய பல அரிய தகவல்கள் கிடைக்கும்.

1934 ஆம் ஆண்டின் சட்டம் பிரிட்டிஷ் இந்தியாவுக்குமட்டும் தான் பொருந்தும். சுதேச அரசுகளில் சாதாரணமாகத் தொழிற் சாலைக் கட்டுப்பாட்டுச் சட்டங்கள் அவ்வளவு கண்டிப்பாக இல்லை. இந்தநிலை புதிய தொழிற்சாலைகள் பிரிட்டிஷ் இந்தியாவிற்குப் பதில் சுதேச அரசுகளில் நிறுவுவதை ஊக்குவிப்பதாக இருந்தது. 1935 ஆம் ஆண்டின் புதிய அரசியல் அமைப்பு இந்த முறையில் எந்தவித மாற்றத்தையும் ஏற்படுத்தவில்லை.

1935 ஆம் ஆண்டில் இந்தியச் சுரங்கங்கள் (திருத்தச்) சட்டம் நிறைவேறியது. 15 வயதிற்குக் குறைந்த சிறுவர்களைச் சுரங்கங்களில் வேலைக்கு அமர்த்தக் கூடாதென்றும், சுரங்கங்களின் மேல் தளத்தில் வேலைநேரம் ஒரு நாளைக்கு 10 மணிகளுக்கும், ஒரு வாரத்திற்கு 54 மணிகளுக்கும் மேற்படக் கூடாதென்றும், அடித் தளத்தில் ஒரு நாளைக்கு 9 மணிக்கு மேற்படக்கூடாதென்றும் இச் சட்டம் வேலைநேரங்களை நிர்ணயித்தது. பலவகையான இரயில்வேத் தொழிலாளர்களின் வேலை நேரங்களும் 1931 ஆம் ஆண்டிலும், 1932 ஆம் ஆண்டிலும் நிறைவேறிய சட்டங்களின் மூலம் வாரத்திற்கு 60 மணிகளுக்கு மேற்படக் கூடாதென்று நிர்ணயிக்கப்பெற்றன. ஆனால், ஒரு நாளைக்கான வேலைநேரம் நிர்ணயிக்கப்பெறவில்லை. ஒரு வாரத்திற்கு 24 மணி நேர ஓய்வு கொடுக்கப்படவேண்டும் என்றும் குறிப்பிட்டிருந்தது. 1933 ஆம் ஆண்டில் தொழிலாளர் நட்ட ஈட்டுச் சட்டம் ஏறக்குறைய எல்லாத் தொழிலாளர்களுக்கும் அனுசரிக்கப் பெற்றது. 10 நாட்களுக்குள் நட்ட ஈடு கொடுக்கப்பட வேண்டும் என்றிருந்தது 7 நாட்களுக்குக் குறைக்கப் பெற்றது. நட்ட ஈடு கொடுக்க வேண்டிய பொறுப்பு, தொழில் அளிப்பவர்களிடம் இருந்தது. நட்ட ஈட்டை அளிக்கும் சக்தி அவர்களுக்கு இல்லாமல் இருக்கலாம். இந்த முறை, சட்டத்திலுள்ளஒருகுறைபாடாகும். ஈட்டுறுதிமுறையிலோ, அல்லது தொழில் அளிப்பவர்கள் கட்டாய

மாக ஈட்டுறுதி செய்யவேண்டும் என்ற முறையிலோ அமைத்திருந்தால், தொழிலாளர்களுக்கு அதிகப் பாதுகாப்பு அளிப்பதாக இருந்திருக்கும்.[1] தொழில் தகராறுகள் சட்டம் 1933 ஆம் ஆண்டில் திருத்தப்பெற்றது. மத்திய அரசாங்கத்தின் சட்டம் அளித்த வசதிகளை, பம்பாய் மாகாணத்தின் தொழில் தகராறுகள் சமாதானச் சட்டம் பரவலடையச் செய்தது.

கப்பல் தொழிலாளர்களின் நலன்களைப் பாதுகாக்கும் பல சட்டங்களும், 1928 ஆம் ஆண்டில் ஒன்றுகத் தொகுக்கப் பெற்றன. விபத்துகளைத் தடுக்கவும், தலைச்சுமையை நிர்ணயிக்கவும் பல புதிய விதிகளைத் துறைமுகத் தொழிலாளர் சட்டம் (1934) புகுத்தியது. தேயிலை மாவட்டங்களின் குடியேற்றத் தொழிலாளர் சட்டம் – 1932 (Tea Districts Emigrant Labour Act 1932) பின்வரும் புதிய விதிகளை ஏற்படுத்தியது: தேயிலைத் தொழிலாளர்களைப் பொறுக்கி எடுப்பதிலும், அவர்களைத் தேயிலைத் தோட்டங்களுக்கு அனுப்பிவைப்பதிலும் இருந்த கட்டுப்பாட்டை அதிகரித்தது; குடியேற்றத் தொழிலாளர் கட்டுப்பாட்டு அதிகாரி அலுவலகம் (Office of Emigrant Labour Controller) ஒன்றை ஏற்படுத்தியது; தொழிலாளர்களைத் தாய் நாட்டுக்கு அனுப்பும் (Repatriation) உரிமையையும் ஏற்படுத்தியது. நீண்ட காலமாக வழக்கத்தில் இருந்துவந்து சிறுவர்களின் உழைப்பை அடைமானம்வைக்கும்முறையை 1933ஆம் ஆண்டில் நிறைவேறிய ஒரு சட்டம் தடை செய்தது. 1939 ஆம் ஆண்டில் நிறைவேறிய 'சிறுவர்கள் வேலைச் சட்டம்' (Employment of Children Act 1939) சில குறிப்பிட்ட வேலைகளுக்குச் சிறுவர்களை அமர்த்துவதைக் கட்டுப்படுத்தியது. தொழிலாளர்களின் சம்பளங்களில் பிடிமானம் செய்வதையும், அபராதங்கள் விதிப்பதையும், சம்பளங்கள் கொடுப்பதில் காலதாமதம் செய்வதையும் 1939 ஆம் ஆண்டில் நிறைவேறிய கூலிகள் வழங்கு சட்டம் (The Payment of Wages Act) கட்டுப்படுத்தியது. 1938 ஆம் ஆண்டில் நிறைவேறிய கடைச்சட்டம் (Shops Act) கடைகளிலும், (உணவுச்சாலைகள், சினிமா அரங்குகள் உட்படப்) பல வகையான வாணிப நிறுவனங்களிலும் வேலை நேரத்தை ஒழுங்குபடுத்தியது. திறம் பெறுத தொழிலாளர்கள் இந்திய எல்லைக்கு அப்பால் குடியேறுவதைத் தடுக்கும் அதிகாரத்தை மத்திய அரசாங்கத்திற்குக்கொடுப்பதற்காக1922 ஆம் ஆண்டின்சட்டத்தை, 1938 ஆம் ஆண்டில் நிறைவேறிய இந்தியக் குடியேற்றச் (திருத்தச்) சட்டம் திருத்தி அமைத்தது. ஆகவே, பொருளாதார

[1] *V.* Ed. A. N. Agarwala, Indian Labour Problem.

மந்தம், தொழிலாளர்களின் நிலையைச் சட்டத்தின் மூலம் உயர்த்தும் முயற்சிகளுக்குத் தடையாக இல்லை.

தொழிலாளர்களின் கூலிகளும், ஊதியங்களும் தொகுதிக்குத் தொகுதியும், தொழிலுக்குத் தொழிலும் மாறுபட்டிருந்ததால், தொழிலாளர்களின் கூலிகள், ஊதியங்கள், வாழ்க்கைத்தரம் இவைகளில் இருந்த மாறுதல்களைப்பற்றிப் பொதுவான விதிகளைக் குறிப்பிடவில்லை. இருப்பினும், சில புள்ளி விவரங்களை ஆராய முனையலாம். பல நகரங்களிலும்,[1] இறப்பு வீதமும் சிசு மரண வீதமும் குறிப்பிடத்தக்க அளவில் குறைந்தன. பம்பாய் நகரத்தில் தொழில் மந்தம் தொடர்ந்து இருந்தாலும் கூட, இத் துறையிலும் மற்றவைகளிலும் அங்கு முன்னேற்றம் வெகுவாக இருந்தது. 1932–33-ஆம் ஆண்டில் பம்பாய் நகரத்தில் தொழிலாள வகுப்பினரின் குடும்ப வரவு செலவுத் திட்டங்களில் ஓர் ஆய்வு நடைபெற்றது. 1921 – 22 ஆம் ஆண்டில் இருந்ததைவிட, தொழிலாளர்களின் சராசரி மெய் வருமானம் (Real Income) உயர்வாக இருந்ததாகவும், செலவை விட, வருமானம் அதிகமாக உள்ளவர்களின் வீதம் அதிகரித்தது என்றும், தொழிலாளர்களின் வீட்டு வசதிகளிலும், கடன்களிலும்[2] நல்ல அபிவிருத்தி இருந்தது என்றும் மேற்கண்ட ஆய்விலிருந்து தெரியவருகின்றன. உணவுக்கு ஆன செலவு தனி இனமாயிற்று; மொத்தச் செலவின் வீதமும் குறைந்தது.[3] இக் காலத்தில் விலைகள் – குறிப்பாக உணவுப் பொருள்களின் விலைகள் வீழ்ச்சியுற்றதால், வாழ்க்கைச் செலவும் குறைந்தது. இதனால், தொழிலாளர் குடும்பங்களின் நிலைமை 1921 – 22 - ல் இருந்ததைவிட, 1932 – 33 - ல் மேன்மையுடையதாக இருந்தது என்று ஆய்வு அறிக்கை கூறியது. மந்த காலத்தில் பல இடங்களிலும் கூலிகள் குறைக்கப்பெற்றன. ஆனால், பொதுவாக வாழ்க்கைச் செலவு குறைந்த அளவுக்குக் கூலிகள் குறைக்கப் பெறவில்லை.[4] கூலிகளில் இருந்த மாற்றங்கள் வேலையின் தன்மைக்கு ஏற்றவாறு இருந்தன.

1 இந் நூலின் முதல் பாகத்தில் உள்ள அட்டவணை V-ஐப் பார்க்கவும்.

2 *V.* Report on an Enquiry into Working Class Family Budgets in Bombay City, for 1931-32 (1935.) See also G. Slater, Southern India chap ii.

3 உணவுச் செலவு மொத்தச் செலவில் 56·8 சதவீதத்திலிருந்து 50 சதவீதத்திற்கும் குறைவாக வீழ்ந்தது.

4 எடுத்துக்காட்டாக, பருத்தி ஆலைத் தொழிலில் கூலிக் கட்டணங்கள் குறைக்கப் பெற்றாலும், 1926 ஆம் ஆண்டுக்கும் 1934 ஆம் ஆண்டுக்கும் இடைக்காலத்தில் மெய்க் கூலிகள் பம்பாயில் 11 சதவீதமும், அகமதாபாத்தில் 54 சதவீதமும், ஷோலாப்பூரில் 25 சத வீதமும் உயர்ந்ததாக மதிப்பீடு செய்யப்பெற்றது, Wages and Unemployment in the Bombay Cloth Textile Industry, 1935.

திறம்பெறுத தொழிலாளர்களின் கூலிகள் வழக்க மரபால் ஒரே நிலையில் இருந்தன. தொழிலாளர் சங்கம் வலுவாக இருந்த தொழில்களில் கூலிகள் குறைக்கப் பெற்றுல் பலமான எதிர்ப்பு இருக்கும். விவசாயத் தொகுதிகளிலிருந்து தொழிலாளர்களைச் சேர்க்கவேண்டிய நிலையிலிருந்த தொழில்களில்தான் (உ – ம் தேயிலைத் தோட்டங்கள், நிலக்கரிச் சுரங்கம், மற்றச் சுரங்கங்கள்) ஏற்ற இறக்கங்கள் அதிகமாக இருந்தன. இத்தகைய தொழில்களில் செழிப்பான ஆண்டுகளில் அதிகமான தொழிலாளர்களைக் கவருவதற்காகக் கூலிகளை உயர்த்த வேண்டிய அவசியம் ஏற்பட்டது. ஆனல், மந்தகாலத்தில் மிக எளிதாகக் கூலிகளைக் குறைக்க முடிந்தது.[1]

வாழ்க்கைச் செலவுக் குறியீட்டெண்கள், (போருக்கு முற்பட்ட காலத்தின் அடிப்படையில்) பம்பாய், ஜாரியா, ஜாம்ஷெட்பூர் நகரங்களுக்கும், (போருக்கு பிற்பட்டகாலத்தின் அடிப்படையில்) அகமதாபாத் நகரத்திற்கும் தயாரிக்கப் பெற்றன. எல்லாக் குறியீட்டெண்களும் 1928–29ஆம் ஆண்டுக்குப்பிறகு வாழ்க்கைச் செலவு குறைந்ததாகக் காட்டின. ஆனல், இந்த வீழ்ச்சி 1933–34ஆம் ஆண்டு அல்லது 1934–35ஆம் ஆண்டில் தடைப்பட்டது.

பொதுவாக, வாழ்க்கைச் செலவு குறைந்ததைவிடப் பணக் கூலிகள் குறைந்த அளவில்தான் வீழ்ச்சியடைந்தன. தொழிற் பகுதிகளில் தொழிலாளர்களின் வாழ்க்கைநிலை நல்ல அபிவிருத்தி அடைந்தும் இருந்தது. இதனல், நாட்டில் உள்ள தொழிலாளர்கள் அனைவருடைய நிலையும் மேன்மையடைந்தது என்று கூறுவது பொருத்தமற்றதாக இருந்தாலும், தொழிற் சாலைகளில் ஈடுபட்டுள்ளவர்களுடைய வாழ்க்கைத்தரம் உயர்வாகத்தான் இருந்தது. இந்தியத் தொழில்களுக்கு அளிக்கப்பட்டத் தொழிற் காப்பு (Protection), தொழிலாளர்களிடையே வேலையில்லாத் திண்டாட்டத்தைத் தடுக்கவும் குறைக்கவும், அவர்களுடைய மெய்வருமானங்கள் குறையாமல் இருக்கவும் பேருதவியாக இருந்தது. மந்தகாலத்தில் இந்தியத் தொழில்கள் அயல்நாட்டுப் போட்டிக்கு உள்ளாயிருந்தால் தொழிலாளர்களும் பல கேடுகளுக்கு ஆளாயிருப்பார்கள். வேலையில்லாத் திண்டாட்டம் நடுநிலை வகுப்பினருக்குத்தான் ஒரு பெரும் பிரச்சினையாக இருந்தது. இருந்தாலும், கூலியீட்டும் தொழிலாளர்களிடையேயும் சிறிதளவு வேலையில்லாத் திண்

[1] *V.* Statistical Summary of the Social and Economic Trends in India by S. Subramaniam, p. 39.

டாட்டம் இருக்கத்தான் செய்தது. ஆனல், தொழிற்காப்பின் பளுவை நாட்டின் நுகர்வோர்கள்தாம் சுமக்க வேண்டியதா யிருந்தது என்பதையும், இந்த நுகர்வோர்களில் பெரும்பான்மை யினர் விவசாயிகள் என்பதையும் மறந்துவிடக்கூடாது.

மேலே விளக்கப்பெற்ற தொழிற் சட்டங்கள் காலப்போக் கில், பிற நாடுகளில் இயற்றும் சட்டங்களையும் அனுபவத்தையும் பின்பற்றுவனவாக இருந்தன. பன்னாட்டுத் தொழிலாளர் அமைப்பு (I. L. O.) பல முக்கிய நாடுகளின் பிரதிநிதிகளை ஒன்றுக இணைக்க ஒரு சாதனமாக இருந்ததுடன், தொழிலாளர் நலத்தைப் பேணுவதற்கு அந் நாடுகள் பின்பற்ற வேண்டிய வழி களையும் வகுத்தது.

மேலும், ஆசியாவின் சூழ்நிலையும், தொழிலாளர் பிரச்சினைகளும் தனித்தன்மை வாய்ந்தவை என்று கருதிய தால், 'ஆசியத் தொழிலாளர் மாநாடு' (Asiatic Labour Congress) ஒன்று இரண்டாண்டுக்கு ஒருமுறை நடை பெற்றது. ஆசியத் தொழிலாளர்களுக்கு, மேனாட்டுத் தொழிலா ளர்களுக்கு இருந்ததைவிடத் [1] தாழ்வான விதிகளைப் பன் னாட்டுத் தொழிலாளர் அமைப்பின் ஒப்பந்தங்கள் விதித்தன இத்தகைய உட்பிரிவுகள் ஆசிய நாடுகளுக்கு இழிவானவை என்ற காரணத்தால், 1937 ஆம் ஆண்டில் டோக்கியோவில் நடந்த இரண்டாவது ஆசிய மாநாட்டில் இந்தப் பிரிவுகளை நீக்க வேண்டும் என்று கூறி ஒரு தீர்மானம் நிறைவேறியது.

தொழிலாளர் பிரச்சினைகளைத் தீர்க்க மத்திய அரசாங்கம் கையாண்ட நடவடிக்கைகளையும் சட்டங்களையும்தவிர, மாகாண சுயாட்சியை நிறுவிய பிறகு,[2] ஏராளமான விசாரணைகள் மேற் கொண்டு, சட்டங்களையும் நிறைவேற்றின. இச் சட்டங்கள் நிறைவேறின காலத்தில்தான், 1928 – 29 ஆம் ஆண்டின் வீக்கம் தோன்றியபொழுது இருந்ததைப்போல், தொழிலாளர்களி டையே அமைதியின்மையும் தகராறுகளும் தோன்றின

தொழிலாளர் சங்கங்களின் எண்ணிக்கை 1929 ஆம் ஆண்டில் 74 - லிலிருந்து, 555-க்குப் பெருகிற்று. மொத்த அங்கத்தினர்கள் தொகையும் 181 ஆயிரத்திலிருந்து 399 ஆயிரத்திற்குவளர்ந்தது.[3]

[1] *V.* Bombay Labour Gazette, 1937-38, p. 35.

[2] மாகாண சுயாட்சியைப் பற்றிய விளக்கங்களுக்கு இதே அத்தியாயத்தின் பிற் பகுதியைப் பார்க்கவும்.

[3] *V.* Statistical Summary of the Social and Economic Trends in India, by S. Subramaniam, p. 6.

மற்ற நாடுகளில் இருந்ததைப்போல, இந்தியாவிலும் தொழிலாளர் இயக்கத்தின் வளர்ச்சியை, தொழில் வளர்ச்சிக்கு ஒரு காரணமாகவும், தொழில் வளர்ச்சியின் விளைவாகவும் கருதலாம். மாகாண சுயாட்சியும் தொழிலாளர் இயக்கத்தை ஊக்குவிப்பதாக அமைந்தது.

இதுவரை கண்ட விளக்கங்களில், மந்தத்தினால் மக்களின் வாழ்க்கை நிலையில் ஏற்பட்ட மாறுதல்களையே முக்கியமாக ஆராய்ந்தோம். 1930 ஆம் ஆண்டு தொடங்கிப் பத்தாண்டுக் காலத்தின் பிற்பகுதியில் விலைகளும், சில முக்கியப் பொருள்களின் தேவைக்கான நுகர்வும் உயரத் தொடங்கின. இவ்வாறு உயர்ந்தது விவசாயிகளின் நிலை உயர்ந்ததற்கு ஓர் அறிகுறியாகும். இக் காலத்தில் வெளிநாட்டு வாணிபம் மீட்சியுற்று, பேரளவுக்கு தொழில்கள் வளர்ச்சியுற்று, பொதுவாக வாணிபச் சூழ்நிலையும் சுறுசுறுப்பாக இருந்தது. வாணிபச் சுழலின் 'மேல் ஏற்றத்தால்' ஏற்பட்ட விளைவுகள் ஒரு புறமிருக்க, மாகாண சுயாட்சியை நிறுவியதால், பொதுவாக மக்களுக்கும், குறிப்பாக விவசாய வகுப்பினருக்கும் பயன்தரும் நடவடிக்கைகளை மேற்கொள்ள ஏதுவாக இருக்கும் என்று எதிர்பார்க்கப் பெற்றது. மக்களின் இன்னல்களைப் போக்கப் பல சட்டங்கள் நிறைவேறின என்றாலும், [1] சீர்திருத்தங்களின்மூலம் மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த வேண்டுமானால் உண்மையில் சிறிது அவகாசம் தேவைப்படுகிறது.

விவசாய வகுப்பினரிடையே 1939 ஆம் ஆண்டுவரை இருந்த முக்கிய முன்னேற்றம் மாகாணச் சட்டங்களின் மூலமாகவும், சமரச நடவடிக்கைகள் மூலமாகவும் மற்ற வழிகளாலும் கடன்களையும், வட்டிப் பணத்தையும், வாரங்களையும் குறைத்ததாகும். மந்தகாலம் நீங்கியதும், தொழில்களும் வாணிபமும் வளர்ச்சி அடைந்ததால், தொழிலாளர்களுக்குத் தேவை அதிகரித்தது. இதனால் விவசாயிகளைவிட தொழிலாளர்தாம் அதிகமாகப் பயனடைந்தார்கள். 1937 ஆம் ஆண்டில் வாணிபம் மீட்சியுற்றதாலும் அதற்குப்பின்னர் 1939 ஆம் ஆண்டுவரை இருந்த ஏற்ற இறக்கங்களாலும் இந்தியப் பொருளாதார நிலையில் ஏற்பட்ட மாறுதல்களை இந்த அத்தியாயத்தின் முடிவில் ஆராயலாம்.

[1] இதே அத்தியாயத்தின் பிற்பகுதியைப் பார்க்கவும்,

§ 10. 1935 ஆம் ஆண்டின் அரசியலமைப்புச் சீர்திருத்தங்களின் நிதி, மற்றும் பொருளாதார இயல்புகள்

1935 ஆம் ஆண்டின் இந்திய அரசாங்கச் சட்டம், பிரிட்டிஷ் இந்திய மாகாணங்களையும் இந்திய சுதேச அரசுகளையும் ஒன்றுக இணைத்து, மத்திய அரசாங்கத்தில் ஓர் இரட்டை ஆட்சிமுறையைத் தொடங்கி, மாகாணங்களிலிருந்த இரட்டையாட்சி முறைக்குப் பதிலாகத் தகுந்த பாதுகாப்புகளுடன் பொறுப்புள்ள மாகாண அரசாங்கத்தை நிறுவுவதை நோக்கமாகக் கொண்டிருந்தது.

இச் சட்டம் கூட்டரசாங்கத்தின் பணிகளை இரு பிரிவுகளாகப் பிரித்தது. இவற்றுள் முதல் பிரிவு, தலைமைக் கவர்னர், அவரால் நியமிக்கப்பெற்று அவருக்குப் பொறுப்புள்ளவர்களான அதிகாரிகள், இவர்களுடைய கூட்டு அதிகாரத்திற்கு உட்பட்டதாகும். கூட்டரசாங்கத்தின் ஒதுக்கப்பெற்ற இனங்களில் தற்காப்பு, அயல்நாட்டு நடவடிக்கைகள், மத சம்பந்தமான நடவடிக்கைகள், பின்தங்கிய தொகுதிகள் முதலிய தலைப்புகள் அடங்கியிருந்தன. மாற்றிக் கொடுக்கப்பெற்ற இனங்களில் பின்வரும் தலைப்புகள் அடங்கியிருந்தன : பொதுக் கடன், வெளிநாட்டு வாணிபம், பாங்கித் தொழிலும் செலாவணியும், தபால் தந்தி, கூட்டரசாங்க இரயில்வேக்கள், கப்பல் போக்குவரத்து, முக்கியத் துறைமுகங்கள், வேன்போக்கு வரத்து, அபினி பயிரிடுவதும் ஏற்றுமதியும் (அவசியம் என்னும் பொழுது) தொழில்கள், சுரங்கங்கள், எண்ணெய்க் கிணறுகள் இவற்றின் வளர்ச்சி, சுரங்கங்களிலும் எண்ணெய்க் கிணறுகளிலும் பாதுகாப்பு, ஈட்டுறுதி முதலியன.

மாகாண இனங்களில் பின்வரும் தலைப்புகள் அடங்கியிருந்தன : சட்டமும் ஒழுங்கும், மாகாணப் பொதுக் கடன், கூட்டரசாங்கத்தினுடைய கட்டுப்பாட்டின்கீழ் இல்லாத போக்குவரத்து, தண்ணீர் வினியோகம், பாசனம், விவசாயம், நிலம், காடுகள், மீன் பண்ணைகள், சுரங்கங்கள், எண்ணெய்க் கிணறுகள், தொழில் வளர்ச்சி இவைகளை ஒழுங்குபடுத்தல், ஏழை மக்களுக்கு நிவாரணமளித்தல், வேலையின்மைப் பிரச்சினை, தல ஆட்சி, கல்வி, சுகாதாரம் முதலியன. குற்றச் சட்டம் (Criminal Law), சிவில் நடைமுறை, தொழிற் கூடங்கள், தொழிலாளர் நலவசதி, பொதுநலப் பாதுகாப்பு, தொழிலாளர் சங்கங்கள் முதலிய தலைப்புகள்; கூட்டரசாங்கம், மாகாண அரசாங்கங்கள் இவை

களின் இருதிறப் பொது அதிகாரத்தின் (Concurrent powers) கீழிருந்தன.

கூட்டரசாங்கத்தின் ஒதுக்கப்பெற்ற இனங்களைப் பற்றிய கொள்கையையும், அவற்றின் செலவுகளையும் தீர்மானிக்கும் உரிமை சட்டப் பேரவைக்கு இல்லை. கடன் பணிகளுக்கான செலவும், ஓய்வூதியங்களும், சம்பளங்களும் சட்டம் பேரவையின் தயவுக்காகக் காத்திருக்க வேண்டியதில்லை. ஆகவே, இச் செயல்களுக்காகும் செலவுக்கு வழிசெய்வதற்காகவும் இந்தியாவின் நாணயத்தையும், நிதியாளர்கள் வர்த்தர்கள் இவர்களின் நம்பிக்கையையும் பேணுவதற்காகவும் வரவு செலவுத் திட்டத்தின் ஒரு பாகத்தின்மேல் (கிட்டத்தட்ட மொத்தச் செலவின் 80 சதவீதத்தை),[1] விவாதத்திற்கு உரியதென்றூலும் வாக்கெடுக்க முடியாது என்ற ஏற்பாடு செய்யப்பெற்றது. நெருக்கடி காலங்களில் விதிகளை மீறக்கூடிய அதிகாரங்களும் தலைமைக் கவர்னருக்குக் கொடுக்கப் பெற்றது. இந்தியாவில் பிரிட்டிஷ் நலனைப் பாதிக்கக் கூடிய நடவடிக்கைகளைத் தடுப்பதற்கும் அவருக்குத் தனி அதிகாரம் இருந்தது. எடுத்துக் காட்டாக 1935 ஆம் ஆண்டுச் சட்டத்தின், அத்தியாயம் 111, பிரிவு V, பிரிட்டிஷ் குடிகள், கப்பல் தொழில், விமானத் தொழில் உட்படப் பல கம்பெனிகள் அவைகளின் உரிமைகளிலும், நடவடிக்கைகளிலும் பேதங் காட்டுவதையும், இங்கிலாந்திலோ அல்லது பர்மாவிலோ வசிக்கும் பிரிட்டிஷ் குடிகளின்மேல் பேதங்காட்டும் வகையில் வரி விதிப்பதையும், இந் நாட்டுச் சட்டங்களின்கீழ் நிறுவப்பெற்ற கம்பெனிகளின்மேல் பேதங்காட்டும் வகையில் வரி விதிப்பதையும் தடை செய்ததுடன் இத்தகைய கம்பெனிகள் முன்னமேயே இந்தியாவில் இயங்கிவந்தால் அவைகளுக்கும் அரசாங்கம் கொடைகளும், உதவித் தொகைகளும் அளிக்க வேண்டுமென்றும் விதித்தது. சட்டம் நிறைவேறுவதற்கு முன்னர் தொழில் செய்துவராத கம்பெனிகள், நெறியாளர் கழகத்தில் இந்தியர்களைச் சேர்த்துக்கொள்ள வேண்டும், இந்தியர்களுக்குப் பயிற்சியளிக்க வசதிசெய்து தரவேண்டும் என்னும் நிபந்தனைகளைப் பூர்த்தி செய்தாலன்றி, அரசாங்கக் கொடைகளுக்கு தகுதிபெற மாட்டா. அதனுடன் 1935 ஆம் ஆண்டின் ஆங்கிலோ-இந்திய வாணிப ஒப்பந்தம் ஒன்றுக்கொன்று இருந்த சலுகைகளை நீடிப்பதற்கு வழிகோலியது. மேலும் ரிசர்வு பாங்குச் சட்டம் சில

[1], இந்த விகிதம் மிக அதிகம் போல் தோன்றுகிறது. ஆனால், மத்திய அரசாங்கத்தின் வருவாயில் ஏறக்குறைய 60 சதவீதத்தை இராணுவ வரவு செலவுத்திட்டம் மட்டுமே விழுங்கி விடுகிறது என்பதையும் நீனைவு படுத்திக் கொள்ளவேண்டும். (*V.* P. J. Thomas, Population and Production, p. 393).

வகையான சட்டங்கள் இயற்றுவதற்கு (ரூபாயின் மாற்று வீதத்தைப் பாதிக்கக் கூடிய சட்டமும் உட்பட) தலைமைக் கவர்னரின் ஒப்பளிப்பு (Sanction), தேவை என்று விதித்தது. முடிவாக, சுயேச்சையான அதிகாரத்துடன் இயங்கக் கூடிய கூட்டரசாங்க இரயில்வே அமைப்பு ஒன்றை நிறுவவேண்டும் :என்று இந்திய அரசாங்கச் சட்டத்திலிருந்த விதி, கூட்டரசாங்கத்தின் சட்டப் பேரவைக்கு இருந்த நிதி அதிகாரத்தை மேலும் குறைப்பதாக இருந்தது.

மத்திய அரசாங்கத்தின் இனங்களில் சிலவற்றை ஒதுக்கப் பெற்ற இனங்களில் உள்ளிட்டதற்கும், மத்திய அரசாங்கத்திலும் மாகாண அரசாங்கங்களிலும் இருந்த பாதுகாப்பு விதிகளுக்கும் இந்தியாவிலுள்ள பிரிட்டிஷ் நலன்களுக்குப் பாதுகாப்பு அளித்ததற்கும்[1] இருந்த அரசியல் எதிர்ப்புகள் ஒருபுறமிருக்க, நிதியுரிமை பற்றிய தனிவிதிகள் கூட்டரசாங்க மந்திரிகளின் நிதிப் பொறுப்பையும் அதிகாரத்தையும் வெகுவாகக் குறைத்துவிடும் என்றும், (இந்தியச் சட்டப் பேரவையில் எதிர்ப்பு இருந்தும் கையெழுத்திடப்பெற்ற) 1935ஆம் ஆண்டின் வாணிப ஒப்பந்தம், இந்திய வாணிபக் கைக்கோளைப் பேதங் காட்டும் தொழிற்காப்புக் கொள்கையிலிருந்து (Discriminating Protection) தாறுமாறான சலுகைகளை அளிக்கும் கொள்கைக்கு மாற்றிவிடும்[2] என்றும் குற்றச்சாட்டுகள் எழுந்தன. இதற்கு எதிராக, இந்திய அரசாங்கச் சட்டத்தைப் பிரிங்டிஷ் பாராளுமன்றத்தில் நிறைவேற்றி வைப்பதற்குச் சட்டத்திலிருந்த பாதுகாப்பு விதிகள் தேவைப்பட்டன என்றும், தலைமைக் கவர்னருக்கு அளிக்கப் பெற்ற தனி அதிகாரங்களை உபயோகிக்க வேண்டிய அவசியம் எழாது என்றும், வரவு செலவுத் திட்டத்தில் வாக்கெடுப்புக்கு உட்பட்டிருந்த 20 சத வீதம் நிதி அதிகாரத்தைப் பயன்படுத்திக் கொள்வதற்குப் போதிய வாய்ப்பை அளித்தது என்றும் வாதிடப்பெற்றது. இந்திய அரசாங்கச் சட்டத்தின்கீழ்ச் சட்டப் பேரவைக்கு இருந்த நிதி அதிகாரத்திற்கும், மற்ற நாடுகள் பலவற்றின் சட்டப்பேரவைகளுக்கிருந்த அதிகாரத்திற்கும் அதிக மாறுபாடு இல்லை என்றும் பதிலிறுக்கப் பெற்றது. எல்லா நாடுகளிலும் வரவு செலவுத் திட்டச் செலவின் பெரும் பகுதியும் குறிப்பிட்ட சில அவசியமான செயல்களுக்காகவே ஒதுக்கப் பெறுகிறது; திட்டத்தின் மாறுதலுக்குரிய ஒரு சிறு பகுதியே

[1] 1935ஆம் ஆண்டுச்சட்டம் இந்தியாவில் யாருக்கும் திருப்தி அளிக்கவில்லை என்று கூறப்பட்டது. (Vakil and Patel, Finance under Provincial Autonomy, p. 34).

[2] *V.* Economic Journal, March 1935, 'Economic Aspects of the Indian Constitution,' by B. P. Adarkar.

நடைமுறையில் கொள்கைக்கு ஏற்றாற்போல் மாறுதலடை கிறது.[1] கூட்டரசாங்கத்திற்கும், மாகாண அரசாங்கங்களுக்கு மிடையே நிதிச்சாதனங்களைப் பங்கிடுவது, 1921 ஆம் ஆண்டின் மான்ட்போர்டு அரசியலமைப்பின் (Montford Constitution) அடிப்படையையே முற்றிலும் சார்ந்திருக்க வேண்டியிருந்தது. மத்திய அரசாங்கமும் மாகாண அரசாங்கங்களும் ஒரே வகை யான வரி செலுத்துவோரிடமிருந்தே வருவாயைத் திரட்ட வேண்டியிருக்கிறது. சுயேச்சையான இவ்விரு அதிகாரங்களுக்கு மிடையே நிதிச் சாதனங்களை எவ்வாறு நியாயமான முறையில் பங்கிடுவது என்பது கூட்டரசாங்கத்திலுள்ள ஒரு பிரச்சினை யாகும். அதுவும் இந்தியாவில் மக்களின் வரிதாங்கு வல்லமை குறைவாக இருப்பதால் இப் பிரச்சினை மேலும் சிக்கலடைகிறது. பங்கீட்டு முறையில் 1925 ஆம் ஆண்டுச் சட்டம் சில முக்கியமான மாற்றங்களைப் புகுத்தின. கூட்டரசாங்கப் பட்டியலில் சுங்கத் தீர்வைகள், வருமான வரியில் ஒருபங்கு (விவசாய வருமான வரி நீங்கலாக), சில ஆயத்தீர்வைகள், கூட்டு நிறுவன வரி (Corporation tax) (சுதேச அரசுகளில் பத்தாண்டுக் காலத்துக்கு இவ் வரியை விதிக்கக்கூடாது), உப்புத் தீர்வைகள், சொத்துப் பெறு மானங்களில் விதிக்கப்பெறும் வரிகள் (நிலம் நீங்கலாக) முதலி யன அடங்கியிருந்தன. மாகாணப்பட்டியலில் நிலத் தீர்வை, விவசாய வருமானம், நிலம் கட்டடங்கள் முதலியவற்றிலுள்ள வரிகள், விவசாய நிலத்திற்கு வழியுரிமை பெறுவதிலுள்ள வரி; மதுபான வகைகள், அபினி, மருந்து தயாரித்தல் இவைகளி லுள்ள ஆயத்தீர்வை; கனிப்பொருள் உரிமைகளில் உள்ள வரிகள் (கூட்டரசாங்கத்தின் அதிகாரத்திற்கு முரண்படாத வகையில்); தொழில்கள், வாணிபம், வேலைகள் இவைகளிலுள்ள வரிகள்; பண்டங்களின் விற்பனையிலும், பண்டங்களின் உள் துறைப் போக்குவரத்திலுமுள்ள வரிகள்; போக வரிகள் (உ - ம் கேளிக்கை வரி); முத்திரைத் தீர்வைகளில் சில; நிலுவைகள், சாலைச் சுங்கங்கள் (Tolls), கட்டணங்கள்; வருமான வரியில் ஒருபங்கு; சணல் ஏற்றுமதித் தீர்வையில் 50 சதவீதம் அல்லது அதற்கு மேலான பங்கு (சணல் பயிராகும் மாகாணங்களுக்கு மட்டும் அளிக்கப்பட வேண்டியது) முதலியன அடங்கியிருந்தன. கூட்டரசாங்கத்திற்கு வாணிப முத்திரைகள், வழியுரிமைத் தீர் வைகள் (விவசாய நிலம் நீங்கலாக), இரயில்வேக் கட்டணங்கள்

1. சுயேச்சை நாடுகளிலும் கூட, அயல் நாட்டுத் தொடர்புகள், சமூகச் சீர்திருத் தங்கள் போன்ற துறைகளில் பழைய செலவைத்தொடர்ந்து செய்யவேண்டியிருப்பதால் மத்திய வரவுசெலவுத்திட்டத்தின் பெருமளவையும் மாற்றமுடிவதில்லை என்று தேர்ந் தெடுத்த குழு (Joint Select Committee) குறிப்பிட்டது.(Report, vol. I, Part 1 p. 22).

போன்ற சில இனங்களில், மாகாண அரசாங்கங்களின் சார்பில் வரிவிதித்து வசூலிக்கவும், கூட்டரசாங்கச் செயல்களுக்காக வரி விதிக்கவும் அதிகாரம் கொடுக்கப் பெற்றது.[1]

வருமான வரியைப் பங்கிடுவதில் கருத்து வேறுபாடு அதிகம் இருந்தது. இறுதியில், வருமான வரியில் ஒரு குறிப்பிட்ட சதவீதத்தை (ஒரு சிறிய விசாரணை நடத்திய பிறகு இந்த சதவீதம் நிர்ணயிக்கப் பெறவேண்டும்) மாகாணங்களுக்கும், சுதேச அரசுகளுக்கும் கொடுக்கவேண்டுமென்றும், ஆனால் கூட்டரசாங்கத்திற்கு நேரிடக்கூடிய பற்றுக்குறையைத் தவிர்ப்பதற்காகச் சதவீதத்தின் ஒரு பகுதியை ஒரு குறிப்பிட்ட காலத்திற்குக் கூட்டரசாங்கம் நிறுத்தி வைத்துக் கொள்ள வேண்டுமென்றும் முடிவாகியது. நிலவரியின் முழு அதிகாரத்தையும், தன்னுடன் மாகாணங்கள் விரும்பினால் விவசாய வருமானங்களின்மீதும் வரிவிதிக்கும் உரிமையை மாகாணங்களுக்கு அளிப்பதன் மூலம், விவசாய வருமானவரியைப் பற்றியிருந்த வாக்குவாதத்திற்கு முடிவு கட்டலாம் என்ற நோக்கத்தைக் கொண்டிருந்தது.[2]

1921 ஆம் ஆண்டின் அரசியலமைப்பு மாகாண அரசாங்கங்களின் நிதிச்சாதனங்களில் பற்றுக்குறையை உண்டாக்கியது. இதனால் மாகாணங்கள் ஆக்க வேலைக்கான செலவுகளை மேற்கொள்ள முடியவில்லை. 1935 ஆம் ஆண்டின் சட்டத்திற்குப் பிறகும் இதே நிலைதான் தொடர்ந்து இருக்கும் என்றும் குற்றச்சாட்டுகள் எழுந்தன. நிதியியல், தொழில் துறை, செலாவணி முறை இவைகளில் இந்தியாவுக்கு மிகக்குறைவான சுதந்திரமே இருக்குமென்றும், இதனால் பாமர மக்களின் வாழ்க்கை நிலையை மேம்படச் செய்வதற்குரிய ஆக்கமான கொள்கையை உருவாக்க முடியாதென்றும் அச்சம் எழுந்தது.[3] 1935ஆம் ஆண்டின் அரசியலமைப்பின்கீழ், அதிகப்படியான செலவு தேவையான பணிகள் மாகாணங்களுக்குக் கொடுக்கப்பெற்று, நல்ல ஆண்டுகளில் வருவாய்ப் பெருக்கம் இருக்கக்கூடிய இனங்களை (வருமான வரியிலிருந்து மாகாணங்களுக்குக் கொடுக்கப்பெற்ற பங்கு நீங்கலாக) கூட்டரசாங்கம் தன்னிடம் நிறுத்த வைத்துக் கொண்டது என்பது உண்மைதான். இத்தகைய ஏற்பாடு, தவிர்க்க முடியாதது என்று வாதிட்டனர். கூட்டரசாங்கத்திற்கு, வரவு செலவுத் திட்டத்தைச் சமனுக்க உதவவேண்டும்; கூட்டரசாங்கம் நிறுவுவதே அதிகச் செலவை ஏற்படுத்துகிறது.

[1] *V.* P. J. Thomas Population and Production. 1935 pp. 400, 401.

[2] இவ்வத்தியாயத்தின் முற்பகுதியில் § 3 ஆம் பிரிவைப் பார்க்கவும்.

[3] *V.* Economic Journal March 1935, 'Economic Aspects of the Indian Constitution' by B. P. Adarkar.

என்பது அவர்களுடைய கருத்து. மேலும், கடந்த காலத்தில் கையாண்ட நிதிக் கொள்கையினால், கடனைத் திரட்ட வேண்டிய அவசியமில்லாமல் வரவு செலவுத் திட்டத்தைச் சமனுக்க முடிந்தது; ஆகவே, உலகச் சூழ்நிலை அபிவிருத்தியடைந்தால் அதிகப்படியான வருவாய்த் தேவையைச் சமாளிக்கக்கூடிய அளவுக்கு நாட்டின் வருமானமும், வரிதாங்கு வல்லமையும் உயரும் என்று கூறப்பெற்றது. அதேநேரத்தில் மாகாணங்களில் சுயாட்சி நிறுவப் பெற்றதால், கடந்தகாலத்தில் கையாள முடியாத வழிகளின் மூலம் மாகாண அரசாங்கங்கள் வருவாயைத் திரட்ட முடிந்தது.

மாகாணங்களின் நிதிநிலைமையையும், ஒவ்வொரு மாகாணத்திற்கும் தேவைப்பட்ட தனி உதவியையும், 1935 ஆம் ஆண்டுச் சட்டத்தின் (இச் சட்டம் மாகாணங்களுக்கு சுயாட்சியை அளித்தது) III ஆம் பாகம் நடைமுறைக்கு வரும் வரையில் வரும்மான வரியிலிருந்து மாகாணங்களுக்குக் கிடைக்கும் பங்கை எந்தவகையில் பங்கிடுவது என்பதையுப் பற்றி விசாரணை செய்ய, சர் ஆட்டோ நீமியர் (Sir Otto Niemeyer) அவர்கள் 1936 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் நியமிக்கப் பெற்றார். இந்தியாவில் அவர் விசாரணை நடத்தியபிறகு, 1936 ஏப்ரல் மாதத்தில் அரசாங்கத்திற்கு அறிக்கையைச் சமர்ப்பித்தார். அரசாங்கம் அவருடைய யோசனைகளை ஏற்றுக்கொண்டு, 1936 ஆம் ஆண்டு ஜூலை 3-ல் ஓர் அவரச் சட்டத்தின் மூலம் செயலாக்கியது.

இத் திட்டத்தின்படி மாகாணங்களுக்குப் பின்வரும் மூன்று வகைகளில் உதவிஅளிக்கப் பெற்றது: கடனை இரத்துசெய்வதும், தொகுத்தலும்; சணல் பயிரிடும் மாகாணங்களுக்குச்சணல் ஏற்றுமதி வரியிலிருந்து மேலும் 12½ சதவீதத்தைக்கொடுத்து, இத் தீர்வையின் மாகாணப் பங்கை 62½ சதவீதத்திற்கு உயர்த்துவது; ஆண்டாண்டுக்கும் ரொக்கத்தில் உதவித்தொகை அளிப்பது. இதன்மூலம் ஒவ்வொரு மாகாணத்திற்கும் கிடைத்த உதவியைப் பின்னர் மாகாண சுயாட்சியின் செயல்முறையை ஆராயும் பொழுது காணலாம்.[1] வெவ்வேறு மாகாணங்களுக்கும் தேவையான உதவித்தொகை பெரிதும் மாறுதலடைந்தது என்று மட்டும் இங்குக் குறிப்பிடலாம்; ஐக்கிய மாகாணத்திற்கு ஐந்தாண்டு காலத்துக்குத்தான் உதவித்தொகை அளிக்கப் பெற்றது. வடமேற்கு எல்லைப்புற மாகாணத்திற்கு ஐந்தாண்டு கழித்து அவசியம் இருந்தால்தான் கொடுக்கப்பட இருந்தது.

[1] இவ்வத்தியாயத்தின் § 11ஆம் பிரிவிலுள்ள 11ம் அட்டவணையைப் பார்க்கவும்

சிந்து மாகாணத்திற்கு அளிக்கப் பெற்ற உதவித் தொகை பத்தாண்டுக் காலத்திற்குப் பிறகு படிப்படியாகக் குறைக்கப்பட இருந்தது; வங்காளம், பீஹார், அஸ்ஸாம், வ. வே. எ. மா, ஓரிஸ்ஸா, மத்திய மாகாணம் இவைகளில் மட்டும்தான் கடன் இரத்து செய்யப்பெற்றது. மற்ற மாகாணங்களில் கடன் ஒன்றுகத் தொகுக்கத்தான் பெற்றது.[1]

வருமான வரிப் பங்கீட்டைப் பொறுத்த அளவில், மாகாணங்களின் பங்கு முழுவதையுமோ அல்லது அதில் ஒரு பாகத்தையோ மத்திய அரசாங்கம் நிறுத்தி வைத்துக் கொள்ளவேண்டுமென்றும், அதன் பிறகு மாகாணங்கள் நிகர வருவாயில் 50 சதவீதத்தைப் பெற வேண்டுமென்றும் சர் ஆட்டோ நீமியர் அவர்கள் சிபாரிசு செய்தார். வரையறுக்கப் பெற்ற இக் காலத்தில் (ஐந்தாண்டுக் காலம்), மத்திய அரசாங்கம் மாகாணங்களுக்குச் சேரவேண்டிய முழுப் பங்கையோ அல்லது மத்திய அரசாங்கத்தின் 50 சதவீதப் பங்கையும், அத்துடன் மத்திய அரசாங்கத்திற்குச் செய்யப்பெறும் இரயில்வே செல்லுகளையும் சேர்த்து 13 கோடி ரூபாயாக ஆக்குவதற்கு எவ்வளவு தேவைப்படுகிறதோ அத்தொகையையோ (இவையிரண்டில் எது குறைவாக இருக்கிறதோ அதை) நிறுத்தி வைத்துக் கொள்ளவேண்டுமென ஏற்பாடாயிற்று. 1935 ஆம் ஆண்டுச் சட்டத்தில் இரண்டாவது "வரையறுக்கப் பெற்ற காலம்' ஒன்று குறிப்பிடப்பட்டிருந்தது. மாகாண அரசாங்கங்களின் பங்கில்மத்தியஅரசாங்கம் முதல் 'வரையறுக்கப் பெற்ற காலத்தின் முடிவில்' நிறுத்தி வைத்துக் கொண்டிருந்த பாகத்தை, இரண்டாவது காலத்தில் படிப்படியாக மாகாணங்களுக்கு விட்டுவிட வேண்டும் என்று குறிப்பிட்டிருந்தது. இரண்டாவது வரையறுக்கப் பெற்ற காலமும் ஐந்தாண்டாக இருக்க வேண்டுமென்றும், அதற்குப் பிறகு (மொத்தத்தில் 10 ஆண்டுகளுக்குப் பிறகு) மாகாணங்கள் தங்களுடைய முழுப்பங்கையும் பெற வேண்டுமென்றும் சர் ஆட்டோ அவர்கள் யோசனை கூறினர். இறுதியாக, வருமானவரியை மாகாணங்களுக்கிடையே, ஓரளவுக்கு வருமானவரி செலுத்துவோரின் எண்ணிக்கையின் பேரிலும், ஓரளவுக்கு மக்கள் தொகைக்கு ஏற்றாற்போன்றஅடிப்படையிலும் பங்கிடு செய்யவேண்டுமென்று அவர் யோசனை கூறினர்.[2] இத்தகைய ஏற்பாடுகள் 1937 ஆம் ஆண்டு ஏப்ரல் 1 ம் தேதி மாகாண சுயாட்சியை நிறுவுவதற்கு ஏதுவாக அமைந்தன.

[1] இந்த முறை (தொகுத்தல்) ஒருவகையில் வட்டச் செலவைக்குறைக்கச் செய்தது.

[2] சர் ஆட்டோ நீமியரின் யோசனைப்படி வருமானவரி பின்வருமாறு பங்கிடப் பெற்றது: சென்னை 15 சதவீதம்; பம்பாய் 20 சதவீதம்; வங்காளம் 20 சதவீதம்; ஐக்கிய மாகாணம் 15 சதவீதம்; பஞ்சாப் 8 சதவீதம்; பீஹார் 10 சதவீதம்; மத்திய மாகாணம் 5 சதவீதம்; வ. மே. எ. மா 1 சதவீதம்; ஓரிஸ்ஸா 2 சதவீதம்.

அரசியலமைப்பு மாற்றங்களுக்கான செலவைப் பல வழிகளிலும் மதிப்பிடலாம். ஆனல், இவ் வழிகளில் ஒன்றுகூட முற்றிலும் திருத்தமாக இல்லே. 1937 ஆம் ஆண்டில் நிதி அங்கத்தினர் வரவு செலவுத் திட்டத்தைப் பற்றிப் பேசுகையில், பர்மாப் பிரிவினேயாலும், மாகாண சுயாட்சியை நிறுவியதாலும் மத்திய அசாங்கத்தில் 1937 – 38 ஆம் ஆண்டின் வரவு செலவு இவைகளில் ஏற்படக்கூடிய விளேவுகளே மட்டுந்தான் குறிப்பிட்டார். நிதிச் செயலாளர் அளித்த அறிக்கையில் ஒரு தனிப்பட்டியல் சேர்க்கப்பட்டிருந்தது. இத்தகைய மாறுதல்களால் வரவு செலவுத் திட்டத்தின் ஒவ்வொரு வரவு செலவு இனத்திலும் ஏற்பட்ட விளேவுகளே அப் பட்டியல் எடுத்துக் காட்டியது. நிகர விளேவு பின்வருமாறு இருந்தது:[1]

பர்மாப்பிரிவினேயால் எழுந்தநிகரச்செலவு ரூ 233 இலட்சம்

மாகாண சுயாட்சி நிறுவியதால் எழுந்த நிகரச்செலவு ரூ 185 இலட்சம்

மொத்தம் ரூ 418 இலட்சம்

இதுதான் மத்திய அரசாங்கத்திற்கு 1937–38 ஆம் ஆண்டில் ஆன:மதிப்பீடு செய்யப் பெற்ற செலவு. முந்திய ஆண்டுகளில் ஆன செலவு இதில் சேர்க்கப்படவில்லே. 1937, ஏப்ரல் 1ஆம் தேதிக்கு முன்னர் மத்திய அரசாங்கத்திற்கு ஏற்பட்ட செலவு மாகாணங்களுக்குக் கொடுக்கப்பெற்ற ;சணல் தீர்வையின் 50 சத வீதத் தொகையும், 1936ஆம் ஆண்டில் வ. மே. எ. மா, சிந்து ஒரிஸ்ஸா முதலிய மாகாணங்களுக்கு அளிக்கப்பெற்ற உதவித் தொகையுமேயாகும். இவ் விரண்டு இனங்களேயும் ஒன்றுகச் சேர்த்தால், 1937ஆம் ஆண்டில் ஆன அதிகப்படியான செலவுக்குச் சமனுக இருக்கிறது என்று நிதி மந்திரி குறிப்பிட்டார். ஆகவே மத்திய அரசாங்கம் அளித்து வந்த உதவித் தொகைகள் சணல் தீர்வையில் பங்கு இவற்றுக்கான செலவு கிட்டத்தட்ட ரூ. 840 இலட்சம் ஆகும்.

1937 ஆம் ஆண்டிலும் அதற்குப்பிறகும் மாகாணங்களுக் கிடைத்த அதிகப்படியான சாராசரி வருவாயைப் பேராசிரியர் வக்கீல் அவர்கள் மதிப்பீடு செய்தார். மாகாண சுயாட்சி நிறுவப் பெற்றதும் மாகாணங்களின் செலவுத்திறனில் ஏற்பட்ட

[1] *V.* Finance Member s Budget Speech: Budget for' 1937-38, pp. 6, 7.

உயர்வை எடுத்துக் காட்டும் அட்டவணை (11)-ல் வக்கீல் அவர்களின் மதிப்பீட்டையும் காணலாம். மத்திய அரசாங்கத்தின் செலவில் மாகாண அரசாங்கங்களின் செலவுத் திறனில் ரூ 883 இலட்சம் வளர்ச்சியிருந்தது என்று அட்டவணை அறிவிக்கிறது. நிதிமந்திரி, பேராசிரியர் வக்கீல் இவ்விருவருடைய மதிப்பீடுகளை ஒப்பிட்டுப் பார்க்க வேண்டுமானால், நிதிமந்திரி தந்த விவரங்களிலிருந்துபர்மாப்பிரிவுக்கான செலவை (ரூ 233இலட்சம்) குறைக்க வேண்டும். அப்படிக் குறைத்தால் செலவு ரூ607 இலட்சங்களாகும் அதேபோலப் பேராசிரியர் வக்கீல் அவர்களின்மதிப்பீட்டிலிருந்து வருமான வரியிலிருந்து மாகாணங்களுக்குக் கிடைத்த பங்கைக் குறைக்க வேண்டும். அப்படிக் குறைத்தால் செலவு ரூ 7.38 இலட்சமாகும்.[1] எஞ்சியிருக்கும் வித்தியாசம் ரூ 131 இலட்சமாகும். இந்த வித்தியாசம் பேராசிரியர் வக்கீல் அவர்கள் கையாண்ட அடிப்படையில் (அதாவது வக்கீல் அவர்கள் மூன்றாண்டுச் சராசரியைக் கையாண்டார்) எழுந்தது என்று கொள்ளலாம். நிதி மந்திரி அவர்களும் தம்முடைய புள்ளி விவரங்கள் தோராயமானவையே என்று குறிப்பிட்டார்.[2]

அரசாங்கத்திற்கு 1937 ஆம் ஆண்டில் ஆன அதிகப்படியான செலவு முழுவதும் அரசியலமைப்புச் சீர்திருத்தங்களினாலேயே[3] எழுந்தது என்று கருதுவது தவறாகும். அரசியலமைப்பு மாற்றங்கள் இல்லாதிருந்தாலும் கூட, மாகாணங்கள் ஆக்கம் தரும் சமூக, பொருளாதாரக் கொள்கைகளை நிறைவேற்ற வேண்டுமானால், ஏதாவதொரு வழியில் மாகாணங்களின் நிதிநிலைமையை அபிவிருத்தி செய்யவேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்கும்.

யோசனையில் இருந்த கூட்டரசாங்க அமைப்பை நிறுவுவதற்கு ஆன செலவோ அல்லது கூட்டரசாங்கத்துடன் சேர விரும்பிய சுதேச அரசுகளுடன் நடந்த நிதி ஒப்பந்தங்களுக்கான செலவோ மேற்கண்ட மதிப்பீடுகளில் அடங்கவில்லை. இவ் விரண்டு இனங்களுக்கும் முறையே ரூ1.5 கோடியும் ரூ 1 கோடியும் செலவாகுமென்று மதிப்பிடப்பெற்றது.[4] இதனுடன்

[1] 1937—38ஆம் ஆண்டின் வரவு செலவுத்திட்டத்தை அளித்தபொழுது, இத் தலைப்பின் கீழ் (வருமானவரி) மாகாணங்களுக்கு ஏதேனும் நிதியளிக்க முடியும் என்று அரசாங்கம் எதிர்பார்க்கவில்லை.

[2] வக்கீல் அவர்கள் அட்டவணையின் விளக்கத்திற்கு இவ் வத்தியாயத்தின் § 11ஆம் பிரிவைக் காணவும்.

[3] நிதிமந்திரி அரசியல் மாறுதல்களால் ஆன செலவை மதிப்பீடு செய்யவில்லை புதிய ஏற்பாடுகளினால் மத்திய அரசாங்கத்திற்கு ஆன செலவைத்தான் அவர் கணக்கிட்டார்.

[4] Economic Journal, March 1935.

கூட மாகாணங்களின் நிருவாகச்செலவும் அதிகமாயிற்று.[1] இதுபற்றிய மதிப்பீடு ஒன்றும் கிடைக்கவில்லை. அரசியலமைப்பு மாற்றங்களால் ஆன நேரிடைச் செலவும் தோராயமாக மதிப்பிடலாம். யோசனையிலிருந்த கூட்டரசாங்க அமைப்பினுல் கிடைக்கக்கூடிய பயன்களை நோக்கும்பொழுது இச் செலவு ஒன்றும் மிகஅதிகமாகத் தோன்றவில்லை. புதிய மத்திய அரசாங்க நிருவாகத்துறைக்கு 1.5 கோடி ரூபாய் செலவாகும்; இரண்டு புதியமாகாணங்களை அமைப்பதற்குக் கிட்டத்தட்ட 1. 5 கோடி ரூபாய் செலவாகும்; கூட்டரசாங்கத்துடன் சேர விரும்பிய சுதேச அரசுகளுடன் செய்து கொள்ளவேண்டியிருந்த நிதி ஒப்பந்தங்களுக்குக் குறைந்தது 1 கோடிரூபாய் செலவாகும்; பர்மாப் பிரிவினையால் 2. 33 கோடிரூபாய் செலவாகும். அரசியலமைப்பு மாற்றங்களால் சில மறைமுகமான விளைவுகள் இருந்தன. மத்திய, மாகாண அரசாங்கங்கள் நிதிச்சாதனங்களைப் பகிர்ந்துகொள்வதில் மாற்றம் இருந்ததால் மத்திய அரசாங்கத்திற்கு 8 கோடிரூபாய், செலவாயிற்று[2]. இச்செலவை ஓர் அதிகப்படியான பளு என்று கருதுவதைவிட, உடனடியாகத் தேவைப்பட்ட சமூக, பொருளாதாரச் சீர்திருத்தங்களை மாகாண அரசாங்கங்கள் மேற்கொள்ளமுடியாதபடி செய்த ஓர் ஏற்பாட்டிலிருந்த குறைபாடுகளை நீக்குவதற்கு ஆனது என்று கொள்ளலாம்.

பர்மாப் பிரிவினையால் இந்தியாவுக்குச் செலவு ஏற்பட்டது என்பதோடு, இந்தியாவுக்கும் பர்மாவுக்குமிடையே இருந்த நெருங்கிய பொருளாதாரத் தொடர்பினுல் பல புதிய ஏற்பாடுகளையும் செய்யவேண்டியிருந்தது. இரு நாடுகளின் வாணிபமும் நீண்டகாலமாக ஒன்றுக்கொன்று துணையாக இருந்தது. அரிசி, உலோக எண்ணெய், தேக்கு இவைகளின் இறக்குமதிக்கு இந்தியா பர்மாவை நம்பியிருந்தது. பர்மா இவற்றிற்கு எதிராக இந்தியாவிலிருந்து செய்வினை முடிந்த பண்டங்களுக்குறிப்பாகப் பருத்தி, சணற் பண்டங்கள், வங்காள நிலக்கரி, பீஹார் சர்க்கரை இவற்றைத் தருவித்தது. பிரிவினையால் இந்திய வெளி நாட்டு வர்ணிபத்தின் அளவிலும்[3] மதிப்பிலும் ஏற்பட்ட விளைவுகளையும் குறிப்பாக இந்திய வாணிபக் கொடுப்பல்நிலை எவ்வாறு கேடுற்றது என்பதையும் பற்றி முன்னரே குறிப்பிட்டோம். இந்தியச் செலாவணி முறையின் கீழேயே பர்மா இருக்கும்வரை இப் பிரச்சினை முக்கியமானதன்று. பர்மா தற்காலிகமாகஇந்திய

1 இதே அத்தியாத்தின் § 11ஆம் பிரிவைப் பார்க்கவும்.

2 இவ் வினங்கள் பேராசிரியர் வக்கீல் அவர்களின் அட்டவணையில் உள்ளன.

3 இதே அத்தியாயத்தின் § 3ஆம் பிரிவைப்பார்க்கவும்.

செலாவணியைத் தொடர்ந்து உபயோகிக்க வேண்டுமென்றும், ரிசர்வு பாங்கியின் அங்கத்தினராகத் தொடர்ந்திருக்க வேண்டுமென்றும் 1935 ஆம் ஆண்டில் ஏற்பாடாயிற்று. ஆனால் இது ஓர் இடைக்கால ஏற்பாடுதான் என்பது தெளிவாக இருந்தது. தனக்கென ஒரு செலாவணி முறையையும், பாங்குச் செலாவணி முறையையும் நிறுவுவதில் தனக்கிருக்கும் உரிமையைப் பர்மா பிரயோகிக்க முனைந்தால் இந்தியாவின் வாணிபக் கொடுப்பல் நிலை மிகவும் கேடுறும்; தன்னுடைய வெளிநாட்டுச் செல்லுகளைச் சமாளிக்கவும் தேவையான இறக்குமதிகளைப் பெறவும் பர்மாவின் ஏற்றுமதி மிகுதியை உபயோகித்து வந்ததற்குப் பதிலாகப் புதிய வழிகளைத் தேட வேண்டியிருக்கும்.

இந்தியா, பர்மா இந் நாடுகளின் வாணிபப்போக்கு முற்றிலும் மாறுபட்டிருந்தது. தொழிற்காப்பின் உதவியைத் தேடக் கூடிய புதிய தொழில்கள் பர்மாவில் இல்லை. இதனால், செய்வினை முடிந்த பண்டங்களை மிகக் குறைந்த விலையில் பெறுவதிலும், தன்னுடைய மிகுதியான உணவுப் பொருளுக்கும், கச்சாப் பொருள்களுக்கும் இருந்த வெளிநாட்டுச் சந்தையைப் பெருக்குவதிலும் பர்மா மிகவும் ஆவலாக இருந்தது. ஆதலால் அப்பொழுது நடைமுறையிலிருந்த தொழிற்காப்புச் சுங்கவரிக் கொள்கையை பர்மா ஆதரிக்கவில்லை. 1935ஆம் ஆண்டின் இந்திய–பர்மிய வாணிப ஒப்பந்தத்தின்படி தற்காலிக ஏற்பாடு செய்யப்பெற்றது. இந்த ஏற்பாட்டின்படி இந்தியா, பர்மா இருநாடுகளும் ஒன்றிலிருந்து மற்றொன்றுக்கு வரும் இறக்குமதிகளை (சில குறிப்பிட்ட விலக்குகள் நீங்கலாக) தீர்வையின்றித் தொடர்ந்து அனுமதிப்பது என்று ஒத்துக்கொண்டன. பிரிவினையின்போது நடைமுறையிலிருந்த சுங்கவரிகளை ஒப்பந்தக் காலம்வரை தொடர்ந்து கடைப்பிடிப்பதாகப் பர்மா ஒத்துக் கொண்டது. முடிவில் செய்வினை முடிந்த பண்டங்களைத் தீர்வையின்றி அனுமதிப்பதாகப் பர்மா முடிவு செய்யுமேயானால் இந்தியா பர்மியச்சந்தையில் தனக்கிருந்த சலுகையை நிச்சயம் இழக்க நேரிடும். ஆனால், பர்மாவிலிருந்து வந்த இறக்குமதிகளின்மேல் தீர்வை விதித்தால் இந்தியாவுக்கு வருவாய் கிடைக்கலாம். இருந்தாலும், பர்மாவிலிருந்து வந்த அரிசி, உலோக எண்ணெய், தேக்குப்போன்ற முக்கிய இறக்குமதிகளின் நுகர்வை மட்டுப்படுத்துவதையும் அவற்றின் விலைகளை உயர்த்துவதையும் இந்தியாவின் சுயநலன் தடுத்தது. நாம் ஆய்வுக்கு எடுத்துக் கொண்டுள்ள காலம் முழுவதிலும் இரு நாடுகளிடையேயும் தடையிலா வாணிபம் நிலவியது. பர்மாவும் ரிசர்வு பாங்கியின்

அங்கத்தினராகத் தொடர்ந்து இருந்து இந்தியச் செலாவணி முறையில் பங்கெடுத்துக்கொண்டது. இவ்வாறு பிரிவினையால் எழுந்த முக்கியப் பொருளாதாரப் பிரச்சினைகளின் (அதாவது இந்தியாவின் வாணிபக் கொடுப்பல்நிலை கேடுற்றதும் அதை யொட்டி எழுந்த செலாவணிப் பிரச்சினைகளும்) வீரியம் சிறிது காலத்திற்குத் தள்ளிவைக்கப்பெற்றது.

1935ஆம் ஆண்டின் இந்திய – பர்மிய வாணிப ஒப்பந்தத்தில், ஒப்பந்தக்காலம் முழுவதிலும் இரு நாடுகளிடையேயும் மக்கள் குடியேற்றத்திற்குத் தடைகள் இருக்கக்கூடாதென்று விதிக்கப்பெற்றிருந்தது. இந்தியாவிலிருந்து பர்மாவுக்குக் குடியேறியிருந்த பெருவாரியான தொழிலாளர்களும், மூலதனமும் இரு நாடுகளிடையேயும் ஒரு தனிச்சிறப்பான தொடர்பை ஏற்படுத்தியிருந்தன.

பிரிட்டிஷ்ஆட்சியின்கீழ் இந்திய இலேவாதேவிக்காரர்களும் (குறிப்பாகத் தென்னிந்திய நாட்டுக்கோட்டைச்செட்டியார்கள்), வர்த்தகர்களும்,சில்லறைவியாபாரிகளும், விவசாயிகளும், தொழிலாளர்களும், தோட்டவேலை செய்வோரும் கீழ்ப் பர்மாவுக்குக் குடியேறினர். இவர்களில் வளமான நிலம்கிடைத்தவர்கள், சில்லறை வியாபாரிகள் போன்ற சிலர் தங்களுடைய தாய்நாட்டை விட வாழ்க்கைத்தரமும் வாய்ப்புகளும் அதிகமாக இருப்பதைக் கண்டு பர்மாவிலேயே நிரந்தரமாகத் தங்கிவிட்டனர். இலேவாதேவிக்காரர்கள், வர்த்தகர்கள் உட்பட மற்றவர்கள் தொழில் செய்யும்வரை பர்மாவில் தங்கிவிட்டு இறுதியில் இந்தியாவுக்குத் திரும்பினர். தொழிலாளர்கள், குறிப்பாகத் தோட்டச் சாகுபடித் தொழிலாளர்கள் சாதாரணமாக இரண்டு அல்லது மூன்றாண்டுக் காலத்திற்குத்தான் பர்மாவுக்குச் சென்றனர். இவர்கள் இந்தியாவுக்குத் திரும்பியதும் புதிய தொழிலாளர்கள் சென்றனர். இத்தகைய தொழிலாளர்களின் எண்ணிக்கை காலநிலைக்கு ஏற்ப அவ்வப்போது மாறியது. இந்திய இலேவாதேவிக்காரர்களும், பெருத்த மூலதனத்தைத்திரட்டமுடிந்தவர்களும் பர்மாவில் நிலம் வாங்குவதில் முனைந்தனர். இதனால் கீழ்ப் பர்மாவிலிருந்த நிலத்தின் பெருமளவும் இந்திய நிலச்சுவான்தாரர்களின் கைக்கு மாறியது. இந்திய நிலச்சுவான்தாரர்கள் தங்களுடைய நிலத்தைப் பர்மிய விவசாயிகளுக்கோ அல்லது இந்திய விவசாயிகளுக்கோ குத்தகைக்கு விட்டனர். இந்தியத் தொழிலாளர்கள் துறைமுகங்கள், இரயில்வேக்கள், சில்லறை வியாபாரம், கட்டடவேலை, எண்ணெய்க்கிணறுகள், தேக்குமரவாணிபம், தோட்டச்சாகுபடி

இத்துறைகளில் வேலையேற்று இரங்கூனிலும் மற்றும் பல பகுதிகளிலும் பெருவாரியாக இருந்தனர். ஆகவே, இந்தியர்கள், பர்மிய நிலத்திற்கும் தொழிலுக்கும் வாணிபத்துக்கும் பெருமளவி, மூலதனத்தையும் தொழில் திறமையையும் உடலுழைப்பையும் கொடுத்தனர்.

இருபதாம் நூற்றாண்டில் பர்மாவில் இந்தியர்களுக்கு எதிர்ப்பாக ஒரு பெருங்கிளர்ச்சி தோன்றியது. இந்தியர்களை, ஏழை வகுப்பினரைச் சுரண்டினர் என்றும் போட்டியின் மூலம் பர்மியத் தொழிலாளர்களுக்குக் கிடைக்கக்கூடிய கூலிகளைக் குறைத்தனர் என்றும் பர்மியர்கள் குறைகூறினர். சாதாரணமாக, இந்தியர்கள் பர்மியர்களைவிடக் கடுமையாக உழைத்தனர்; அவர்களுடைய வாழ்க்கைத்தரமும் குறைவாக இருந்தது. ஆகவே அவர்கள் குறைந்த கூலிக்கு உழைக்க இணங்கினர்.

ஆகவே, பர்மா பிரிவினையடைந்ததும், 'பர்மா, பர்மியர்களுக்கே' என்ற கூக்குரல் எழுந்தது. இந்தியர்களின் குடியேற்றப்பிரச்சினை முழுவதையும் ஆராய ஒரு விசாரணை நடத்தப் பெற்றது. ஆனால், 1939ஆம் ஆண்டுவரையில் குடியேற்றத்தைத் தடுக்க எந்தவித நடவடிக்கைகளும் எடுக்கப்பெறவில்லை.

அரசியலமைப்புச் சீர்திருத்தங்களாலும், புதிய மாகாணங்கள் (சிந்து, ஒரிஸ்ஸா) இரண்டு நிறுவப்பெற்றதாலும் இந்தியப் புள்ளிவிவரங்கள் பெரிதும் குழப்பமடைந்தன. ஆதலால் இப் புள்ளி விவரங்களைத் துணையாகக்கொண்டு பொருளாதாரப் போக்கை ஒப்பிட்டுப்பார்ப்பதையும், கணிப்பதையும் மிக்க கவனத்துடன் செய்யவேண்டியிருக்கிறது.

புதிய அரசியலமைப்பில், பொருளாதார வளர்ச்சியைத் தூண்டுவதற்கும், மக்களின் வாழ்க்கைநிலையை உயர்த்துவதற்கும், சமூகச் சீர்திருத்தங்களை மேற்கொள்ளுவதற்குமான தனி விதிகள் இல்லை என்று குறைகூறினர். கூட்டரசாங்கச் சட்டப் பேரவையின் அரசியலமைப்பும் (இந்த அரசியலமைப்பு சட்டசபைக்குரிய இடங்களில் மூன்றில் ஒரு பங்கைச் சுதேச அரசுகள் நியமித்தவர்களுக்குக் கொடுத்தது), வகுப்பு வாரிப் பிரதிநிதித்துவ முறையைத் தொடருவதும் வகுப்புவாதப் பிளவுகளை மேலும் வளர்க்குமென்றும், சமூகப் பொருளாதாரத் திட்டங்களுடன் அரசியல் கட்சிகள் உருவாவதற்குத் தடையாக இருக்குமென்றும், வாக்குரிமை மிகக்குறைந்த எண்ணிக்கையாளருக்கே கிடைக்குமென்றும், இதனால் அரசாங்கம் முன்னிருந்ததைவிட எந்த விதத்திலும் பிரதிநிதித்

துவ அரசாங்கமாகாது என்பதோடு முன்னிருந்ததை விட முதலாளித்துவ அரசாங்மாகவே அமையும் என்றும் குற்றஞ் சாட்டினர்.

அரசியலமைப்பு, இந்திய சமூக, பொருளாதாரப் பிரச்சினைகளுக்கு நேரிடையான முடிவுகாண முயற்சிக்கவில்லை என்பது உண்மைதான். அதுசெய்த முயற்சியெல்லாம், கடந்த காலத்தில் மக்களின் சக்தியை, சமூக, பொருளாதார சீர்திருத்தங்களிலிருந்து அரசியல் கிளர்ச்சிக்குத் திருப்பிவிட்ட சில அரசியல் மற்றும் அரசியலமைப்புச் சிக்கல்களைஎப்படித் தீர்த்து வைப்பது என்பதுதான்.

மாதர் இயக்கம் அடைந்த குறிப்பிடத்தக்க வளர்ச்சி ஊக்கமளிப்பதாக இருந்தது. எண்ணிக்கையற்ற இந்தியப் பெண்கள் சாதிமதத் தளைகளை அறுத்தெறிந்துவிட்டுச் சமூக முன்னேற்றத்தைக் குறிக்கோளாகக் கொண்ட இயக்கங்களில் பணியாற்ற முன்வந்தனர். தேவைப்பட்டதெல்லாம் சமூக, பொருளாதார வளர்ச்சியில் பொதுமக்களின் அக்கறையும் ஒத்துழைப்பும் தான். இந்தியத்தாய்க்குப் பணிபுரிவதில் மக்களுக்கு அது எந்த அளவுக்கு உணர்ச்சியூட்டமுடியும் என்பதில்தான், இந்தியாவில் இனி எந்த அரசியலமைப்பின் சிறப்பும் இருக்கிறது.

§ 11. மாகாண சுயாட்சி

நிறுவுவதற்கு இருந்த கூட்டரசாங்கத்தின் பல இயல்புகளுக்கும் காங்கிரஸ் கட்சியின் எதிர்ப்பிருந்தாலும், காங்கிரஸ்உள்பட 1937ஆம் ஆண்டில் நடந்த மாகாணத் தேர்தல்களில் முக்கிய அரசியல் கட்சிகள்அனைத்தும் பங்கெடுத்துக்கொண்டன. இருந்தாலும், தேர்தல் முடிந்து சில மாதங்கள்வரை காங்கிரஸ்கட்சியார் பதவி ஏற்பார்களா என்பது சந்தேகமாகவே இருந்தது.[1] தேர்தலில் காங்கிரசுக்குப் பெரும்பான்மை வெற்றிகிட்டியது; பதினொரு மாகாணங்களில் ஏழில் தலையான கட்சி என்று நிரூபித்தது. காங்கிரசுக்கட்சி பதவியேற்குமா என்றிருந்த நிலை மாறிப் பிறகு, காங்கிரசு மந்திரிகள் பதவி ஏற்றனர். காங்கிரசுக்குப் பெரும்பான்மை கிடைக்காத நான்கு மாகாணங்களில் (வங்காளம், பஞ்சாப், அஸ்ஸாம், சிந்து) கூட்டுக்கட்சி

[1] காங்கிரஸ் கட்சியின் செயற் குழுத்தலைவராக இருந்த பண்டித நேரு, தேர்தலில் காங்கிரஸ்காரர்கள் கட்டாயம் போட்டியிடவேண்டும் என்றும்; ஆனால் 'காங்கிரஸ் கட்சி பதவியேற்பது பெருந்தவருகும், அவ்வாறு பதவியேற்றல் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்துடன் ஒத்துழைக்கவேண்டிய இக்கட்டில் முடியும் என்றும் 1936 ஆம் ஆண்டில் கூறினர். Sir R. Coupland, India : A Restatement, p. 152.

அரசாங்கங்கள் (Coalition Governments) அமைக்கப் பெற்றன 1935ஆம் ஆண்டின் இந்திய அரசாங்கச் சட்டத்தைக் காங்கிரஸ் கட்சி தொடர்ந்து எதிர்த்ததுடன், ஓர் அரசியல் நிர்ணயசபை (Constituent Assembly) அமைத்து, அதன்மூலம் இந்தியாவில் அமைக்க இருக்கும் அரசாங்கம் எத்தகையதாக இருக்கவேண்டும் என்பதைத் தீர்மானிக்கும் உரிமை இந்தியர்களுக்கு இருக்க வேண்டும் என்றும் கோரியது. இதனால் காங்கிரசாட்சியில் இருந்த மாகாணங்களில், சட்டமுறைகள் (Constitutional Position) நிலையற்றனவாகவே இருந்தன. காங்கிரசாட்சியிலிருந்த மாகாணங்களின் எல்லா அரசாங்கங்களும், அரசியலமைப்பை எதிர்த்துப் போராடுவதென்றும்,[1] சமூக சீர்திருத்தங்களை மேற்கொள்ளுவதென்றும் தேர்தல் உறுதியளித்திருந்தன. அரசியலமைப்புப் பற்றிய ஒரு முக்கியமான செய்தியை இங்கு வலியுறுத்தவேண்டும். ஏனெனில், எதிர்கால நடவடிக்கைகளின் போக்கை நிர்ணயிப்பதில் இது முக்கியப் பங்கு கொண்டது. புதிய அரசியலமைப்பு, காங்கிரஸ் ஆட்சியிலும் காங்கிரஸ் ஆட்சியில்லாத மாகாணங்களிலும் நடைமுறைக்கு வந்தபோதிலும், காங்கிரஸ் ஆட்சியின் கீழிருந்த மாகாணங்களில் அரசியலமைப்பை உருவாக்கியவர்கள் எதிர்பார்த்த வகையில் அது செயற்படவில்லை என்பதே அந்த முக்கியச் செய்தியாகும். மாகாணசுயாட்சி, பொறுப்புள்ள பாராளுமன்ற அரசாங்கம் இவையிரண்டும் மாகாணசுயாட்சியின் முக்கியத் தத்துவங்கள். காங்கிரஸ் கட்சியின் 'ஒருமைக் கோட்பாடு' (Unitarian Policy) இவ்விரண்டு இயல்புகளையும் மீறியது.[2] மாகாண அரசாங்கங்களில், காங்கிரஸ் கட்சியின் மத்தியச் செயற்குழு செலுத்திய கட்டுப்பாடு, சில காலமாகக் குறைந்திருந்த சாதிமத வெறுப்புணர்ச்சியை மீண்டும் எழுப்பியது. இது, 1935ஆம் ஆண்டில் நிறைவேறிய இனப்பாகுபாடு ஒப்பந்தத்தைத் தகர்த்தெறிந்தது; இந்து முஸ்லீம் ஒற்றுமைக்குப் பெரும் இடையூறாக நின்றது; மாகாணங்களில்கூட சிறிது காலத்தில் புதிய அரசியலமைப்பு செயல்பட முடியாத பயங்கரச் சூழ்நிலையைக் கருத்தில்கொண்டு, 1937ஆம் ஆண்டுக்கும் 1939ஆம் ஆண்டுக்கும் இடைக்காலத்தில் மாகாண சுயாட்சியின் கீழ் ஏற்பட்ட பொருளாதார வளர்ச்சியை நாம் காண முற்படலாம். பொருளாதாரத் துறையில், காங்கிரஸ் ஆட்சியின் கீழிருந்த மாகாணங்களுக்கும், மற்ற மாகாணங்களுக்கும் குறிப்பிடத்தக்க வேறுபாடு எதுவும் இல்லை. எல்லா மாகாணங்

[1] *V.* Sir R. Coupland, India : A Restatement, p. 156.

[2] *V.* Sir R. Coupland, India : A Restatement, p. 161.

களும், சமூக, பொருளாதாரச் சீரமைப்பு வேலைகளுக்கே முதலிடம் தந்தன. மாகாணசுயாட்சியின் முதலிரண்டு ஆண்டுகளில், பொருளாதார முன்னேற்றம், சமூகவளர்ச்சி, சீரமைப்பு இவைகளைத் துரிதப்படுத்த பலதரப்பட்ட மாகாணச் சட்டமன்ற நடவடிக்கைகளும், சட்டங்களும் நடைமுறைக்கு வந்தன. இச் சட்டங்களையும் கொள்கைகளையும் விளக்க வேண்டுமானால் ஒவ்வொரு மாகாணத்திற்கும் தனித்தனியான விளக்கம் தர வேண்டிநேரிடும். ஆதலால், மாகாண அரசாங்கங்களுக்கு ஏற்பட்ட பொருளாதார நிதிப்பிரச்சினைகளின் இயல்பைப்பற்றியும், இப் பிரச்சினைகளுக்கு முடிவுகாணவும் சமூக நலனை வளர்ப்பதற்கும் அம் மாகாண அரசாங்கங்கள் மேற்கொண்ட நடவடிக்கைகளைப்பற்றியும் ஒரு மேலோட்டமான விளக்கத்தைக் கொடுக்கவே இங்கு முயற்சிசெய்யப்பெறும். உடனடியான பிரச்சினைகள் யாவை, அவைகளை எவ்வாறு சமாளிப்பது என்பதில் சாதாரணமாகக் கருத்தொற்றுமை நிலவியதால் நாம் மேற்கொண்டுள்ள முயற்சி சற்று எளிதானதே.

மாகாண அரசாங்கங்கள் மேற்கொண்ட உடனடியான பணிகளுள், சட்டத்தையும் ஒழுங்கையும் பேணுவது முதன்மையானதாக இருந்தது. இரண்டாவதாக வரவு செலவுத் திட்டங்களை, பொதுநலச்செயல்களுக்குப் போதிய நிதி கிடைக்கும் வகையில் சரிக்கட்டும் நிதிப்பிரச்சினை வந்தது. மூன்றுவதாக சமூக சீர்திருத்தத் திட்டமொன்றைத் தீட்டி நடைமுறைக்குக் கொண்டுவந்து நிருவகிக்கும் பிரச்சினை வந்தது. பர்மா மக்கள் மாகாண சுயாட்சியிடமிருந்து அதிகப்பலன் கிடைக்கும் என்று எதிர்பார்த்ததால், சீர்திருத்தத்திட்டம் சிறந்ததாக இருப்பதோடு பர்மா மக்களைத் திருப்தி செய்வதாகவும் இருக்க வேண்டியிருந்தது.

சட்டத்தையும் ஒழுங்கையும் பேணுவதைப்பற்றிய விளக்கம் நம்முடைய கவனத்திற்கு அப்பாற்பட்ட பிரச்சினையாகும். ஆனால், சிலவற்றை மட்டும் இங்குக் குறிப்பிடலாம், கடந்த காலத்தில் காங்கிரஸ்காரர்களே சட்டத்தையும் ஒழுங்கையும் மீறியதால் தாங்களே அவமதித்த சட்டத்திற்கு மதிப்பையும் கீழ்ப்படியும் தன்மையையும் நாட்டில் மீட்க வேண்டியிருந்தது ஆகையால், சட்டத்தையும் ஒழுங்கையும் பேணுவதில் காங்கிரஸ் அரசாங்கங்களுடைய வேலை அவ்வளவு எளிதாக இல்லை. அரசாங்கம் சமாளிக்க வேண்டியிருந்த கிளர்ச்சிகளில் பெரும்பான்மையும் பொருளாதார அடிப்படையிலேயே எழுந்தன.[1] சீர்திருத்

[1] எடுத்துக்காட்டாக விவசாயிகளின் கிளர்ச்சிகள்பல, குறிப்பாக பீஹார் மாகாணத்தில் (பீஹார் விவசாய சீர்திருத்தங்களின் வேகம் குடியானவர்களைத் திருப்தி செய்வதாக இல்லை) எழுந்தன. ஆலைத்தொழிலாளர்களும் அமைதியின்றிக் கிளர்ச்சி செய்தனர்.

தத்திட்டத்தில் மதுவிலக்கு முக்கிய இனமாக இருந்த இடங்களில், சட்டத்தை மீறுவதைத் தடுப்பதற்காகப் போலீஸ் படையினைப் பெருக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டது.

மாகாணங்களுக்குச் சுயாட்சி கிடைத்ததாலோ அல்லது அவைகளின் நிதிப்பளுவைக் குறைப்பதற்காகச் செய்யப்பெற்ற தனி ஏற்பாடுகளினாலோ அல்லது வளர்ந்து வரும் நிதிச்சாதனங்கள் அவைகளுக்கு கிடைத்ததாலோ நீண்ட காலமாகவே இருந்துவந்த மாகாண நிதிச்சிக்கல் ஒருவகையிலும் தீர்ந்தபாடில்லை. புதியதாக நடைபெற்ற சில நிதி ஏற்பாடுகளினால் மாகாணங்களின் செலவிடும் சக்தி அதிகரித்திருந்தது. இதை அட்டவணை (11)-ல் காணலாம். அப்படியிருந்தும்கூட மாகாண சுயாட்சி நிறுவிய சிலகாலத்தில் மாகாண வருவாயில் பெருக்கம் எவ்வளவு குறைவாக இருந்தது என்பதை அட்டவணை (12)-ல் காணலாம்.[1]

மத்திய அரசாங்கத்திடமிருந்து மாகாண அரசாங்களுக்குக் கிடைத்த நிதிச் சலுகைகளைப் பயன் தரும் வகையில் சுருக்கமாக எடுத்துக் காட்டும் நோக்கத்துடன் இந்த அட்டவணை தரப்பெற்றுள்ளது. அட்டவணையில் காணும் புள்ளி விவரங்களின் அடிப்படையைப் பேராசிரியர் வக்கீல் அவர்கள் விளக்கவில்லை. சில இனங்களில் திருத்தங்கள்கூடச் செய்ய வேண்டியிருக்கும்[2]. மேலும், 1937-38ஆம் ஆண்டின் வரவு செலவுத் திட்டத்தைத் தாக்கல் செய்யும்பொழுது, திட்டத்தில் காணும் புள்ளி விவரங்களில் பலவும் வெறும் மதிப்பீடுகளே என்று சர். ஜேம்ஸ் கிரிக் (Sir. James Grigg) அவர்கள் எச்சரித்ததையும் நினைவுபடுத்திக் கொள்ளவேண்டும்.

மாகாண சுயாட்சியால் ஏற்பட்ட மற்ற நிதி மாற்றங்கள் பின்வருவனவாகும்: (1) கடந்த காலத்தில் மாகாண அரசாங்கங்களின் பெயரில் மத்திய அரசாங்கம் வைத்திருந்த இருப்புத்

[1] ஓர் ஆண்டில் கிடைக்கும் வருவாய், அந்த ஆண்டிலிருக்கும் வாணிப நடவடிக்கையைப் பொறுத்திருக்கிறதேயன்றி, வருவாய் மூலத்திலிருக்கும் கட்டுப்பாட்டை மட்டும் பொறுத்தில்லை என்பது வெளிப்படையானதாகும். மேலும் 1938 ஆம் ஆண்டில் வாணிபச் சூழலில் பின்னிறக்கம் இருந்தது என்பதையும் மறந்துவிடக்கூடாது.

[2] அவருடைய புள்ளி விவரங்கள் வரவு செலவுத் திட்டங்களிலிருந்து எடுக்கப்பெற்றனவா அல்லது மதிப்பீடுகளிலிருந்து எடுக்கப்பெற்றனவா என்பதைப் பேராசிரியர் வக்கீல் அவர்கள் தெளிவாகக் கூறவில்லை. ஓரிஸ்ஸாவுக்கும் சிந்துவுக்கும் கொடுக்கப்பெற்ற உதவித் தொகை 1937 ஆம் ஆண்டுக்குமட்டும்தான் நீக்கியிருப்பதால் அட்டவணையின் முதல் வரிசை திருத்தமற்றதாகும். குடகுக்குக் கொடுக்கப்பெற்ற ரூ 2 லட்சமும் வரவு செலவு திட்டத்தில் மாகாணங்களுக்கு கொடுக்கப்பெற்ற உதவித் தொகை என்ற இனத்தில் சேர்க்கப் பெற்றுள்ளது. ஆனால் அட்டவணையிலிருந்து நீக்கப்பெற்றுள்ளது.

தொகைகள் (ஒரு பகுதி ரொக்கமாகவும் மற்றொரு பகுதி மாகாணக் கடன்களைக் குறைப்பதன் மூலமாகவும்) மாகாணங்களுக்கு மாற்றப்பெற்றன. இவை (வட்டியின்றி) ரிசர்வு பாங்கியிடமும் மாகாணக் கருவூலங்களிலும் இருப்புகளை வைத்திருக்க வேண்டிய கடமையை மாகாணங்களுக்கு ஏற்படுத்தின; (2) மாகாணங்களுக்கு, கடன்களை எழுப்பவும் நிருவகிக்கவும் உரிமை கிடைத்தது. உண்மையில் மாகாணக் கடன் நிலைமை திருப்திகரமாக இருந்தது. ஆண்டு வருவாயுடன் ஒப்பிட்டால் மாகாணக் கடன் மிகக் குறைவாக இருந்ததுடன், கடனின் பெரும்பகுதியும் உற்பத்தியாக்கும் கடனாகவே இருந்தது[1]. ஆகவே, வளர்ச்சித் திட்டங்களில் முதலீடு செய்வதற்குக் கடன்கள் ஒரு முக்கிய நிதி மூலமாக இருக்கின்றன. இத்துறையில் மேலும் துணிகரமான கொள்கையைக் கையாளலாம்; (3) மாகாணங்களுக்குச் செலவிடும் சக்திபெருகியது. ஆனால், அதே நேரத்தில், புதியநில மாகாணங்களைப் புதிய பொறுப்புகளுக்கும், செலவுகளுக்கும் உள்ளாக்கியது. ரொக்க இருப்பு வைத்திருக்க வேண்டிய அவசியத்தை முன்னமே குறிப்பிட்டோம். அதே போன்று அரசியலமைப்பு மாறுதல்கள், ஊதியம்பெறும் மாகாண மந்திரிகளின் எண்ணிக்கை அதிகரித்தது, சில மாகாணங்களில் இரண்டாவது சட்ட மன்றம் (மேல்சபை) நிறுவியது, அலுவலக உதவியாளர்கள் பலர் நியமிக்கப் பெற்றது, மாகாண சுயாட்சியின் ஆரம்பகால உற்சாகத்தில் சட்டசபை தொடர்ந்து நடந்தது இவைபோன்ற பல காரணங்கள், மாகாணங்களுக்கு அதிகமான நிருவாகச் செலவை உண்டாக்கியது.

மாகாணங்களின் பேரவாத் திட்டங்களை நிறைவேற்ற, மாகாண நிதிச் சாதனங்கள் இடம் கொடுக்கவில்லை: என்பது விரைவில் தெளிவாகியது. குறிப்பாக மதுவிலக்குக் கொள்கையை நடைமுறையாக்க சோதனைகள் செய்யப் பெற்ற மாகாணங்களின் (எல்லா மாகாணங்களும் மதுவிலக்குத் திட்டத்தைக் கொண்டு வந்தன. சென்னை, பம்பாய், பீஹார் முதலிய மாகாணங்களில் தீவிர நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பெற்றன) நிதிநிலைமை மிகவும் கேடுற்றது. மதுவிலக்கு ஒரு வகையில் ஆய்த்தீர்வை மூலம் கிடைக்கும் வருவாயைக் குறைத்ததாலும்

[1] பேராசிரியர் வக்கீல் அவர்கள் 1939ஆம் ஆண்டின் வரவு செலவுத் திட்ட மதிப்பீடுகளின் அடிப்படையில் கணக்கிட்டு, 1939-40ஆம் ஆண்டின் முடிவில் மொத்த மாகாணக் கடன் ரூ 150 கோடி இருக்குமென்றும், மொத்த ஆண்டு வருவாய் ரூ 90 கோடி இருக்குமென்றும் கூறினர். இக் கடனின் பெரும்பகுதியும் உற்பத்தியாக்கும் கடனாகும். ரூ 140 கோடிக்குக் குறைவில்லாத் தொகை பாசன வேலைகளுக்காக வாங்கப்பெற்றதாகும்.

அட்டவணை (11)

1937-க்கும் 1939-க்கும் இடையே மாகாண அரசாங்கங்களின் செலவுகளில் சராசரி ஆண்டு உயர்வு

மாகாணங்கள்	உதவித் தொகை	சணல் தீர்வையில் 62½ சதவீதம்	கடன்களைத் தொகுத்தல் அல்லது தள்ளுபடி செய்தல்	வருமான வரியில் 50 சதவீதப் பங்கு	ஓரிஸ்ஸாவும் சிந்துவும் பிரிக்கப் பெற்றதால் நிவாரணம்	செலவிடும் சக்தியிலிருந்த மொத்த ஏற்றம்
வங்காளம்	—	233	33	30	—	296
ஐக்கிய மாகாணம்	25	—	13	22·5	—	60·5
சென்னை	—	—	26	22·5	20	68·5
பீஹார்	—	14	22	15	8	59
பஞ்சாப்	—	—	2	12	—	14
பம்பாய்	—	—	14	30	90	134
மத்திய மாகாணம்	—	—	21	7·5	—	28·5
அஸ்ஸாம்	30	11·5	16	3	—	60·5
ஓரிஸ்ஸா	43	1·5	10	3	—	57·5
சிந்து	105	—	1	3	—	109
வடமேற்கு எல்லை மாகாணம்	100	—	12	1·5	—	113·5
மொத்தம் ..	303	260·0	170	150·0	118	1001·0

மூலம் : Vakil and Patel, Finance under Provincial Autonomy, p. 172-ஐத் தழுவியது. மக்கள் தொகை (1931)க்குத் தகுந்தாற் போல் மாகாணங்கள் வரிசைப்படுத்தப் பெற்றுள்ளன. எண்கள் இலட்சத்தில் இருக்கின்றன. மொத்தத் தொகையில் ரூ. 883 இலட்சம் (அதாவது ஓரிஸ்ஸாவும், சிந்துவும் பிரிவினையானதால் கிடைத்த நிவாரணத் தொகை நீங்கலாக) மத்திய அரசாங்கத்திடமிருந்து கிடைத்தது.

மற்றொரு வகையில் போலீஸ் துறையின் செலவைப் பெருக்கிய தாலும் நட்டத்தை ஏற்படுத்தியது[1].

ஆட் குறைப்பின் மூலமாகவும், நிருவாகத் துறைகளைப் பல வழிகளிலும் திருத்தியமைப்பதன் மூலமாகவும் செலவைக் குறைக்கப் பல முயற்சிகள் நடந்தன. தங்களுடைய சம்பளங்களைத் தாமாகவே மாதத்திற்கு ரூ. 500-க்கு குறைத்துக் கொள்வதன் மூலம், காங்கிரஸ்காரர்கள் ஓர் எடுத்துக் காட்டாக விளங்கினர்[2].

இறுதியில் புதியவரிகளைத் தேடிப்பிடிப்பதில் ஒரு முனைப்பான முயற்சி நடந்தது. அம் முயற்சியில், விற்பனைவரி வெற்றிகரமானதாகவும் பயனளிப்பதாகவும் (குறிப்பாகச் சென்னை மாகாணத்தில்) இருந்தது.

மாகாண வருவாயில் நீண்ட காலமாக நடைமுறையிலிருந்து வந்த நிதிச்சாதனங்கள் பின்வருபவையாகும்: நிலவருவாய், ஆயத்தீர்வை (மது வகைகளிலும் மட்டும்), முத்திரைத் தீர்வைகள் (நிதித் துறையிலும், வணிகத் துறையிலும்), காடுகளிலிருந்து வரும் வருவாய், பதிவுத் துறைக் கட்டணங்கள் இவைகளாகும். இவற்றுள் பின்னிரண்டு இனங்களிலிருந்தும் மிகக் குறைந்த வருவாயே கிடைத்தது. நில வருவாயைப் பொறுத்த அளவில், நிலவரியைக் குறைக்கும் கொள்கையே கடைப்பிடிக்கப் பெற்றது. மதுவிலக்கைக் கையாண்டதால் ஆயத் தீர்வையைக் கைவிட வேண்டியிருந்தது. வாணிப மந்தத்தின் காரணமாக 1947ஆம் ஆண்டுக்குப் பிறகு முத்திரைகள் மூலம் கிடைத்த வருவாய் வீழ்ச்சியடைந்தது. இத்தகைய சாதனங்கள் நெகிழ்ச்சியற்றனவாக ஆகிவிட்டன.

பின்வரும் அட்டவணை (12) புதிய மூலங்களிலிருந்து கிடைத்த வருவாயை, 1936–37ஆம் ஆண்டுக்கும் 1939–40ஆம் ஆண்டுக்கும் ஒப்பிட்டுக் காட்டுகிறது.

(12)ஆம்அட்டவணையில்காணும் புதியநிதிமூலங்கள்,1937ஆம் ஆண்டிலும் அதற்குப் பின்னரும் நடைமுறையிலிருந்த அல்லது புதிதாகக் கையாளப் பெற்ற இனங்களை மட்டும் உள்ளடக்கி இருக்கவில்லை. 1935ஆம் ஆண்டுச் சட்டத்தின் மூலம் எழுந்த இனங்களும், சணல் ஏற்றுமதித் தீர்வையிலிருந்தும் வருமான

[1] *V.* P. J. Thomas, Federal Finance in India, p. 426 மாகாண சுயாட்சி நடைமுறைக்கு வருவதற்கு முன்னர் மொத்த வருவாயில் ஆயத்தீர்வை பம்பாயில் 30சதவீதமும், சென்னையில் 25சதவீதமும், பீஹாரில் 30 சதவீதமும், வங்காளத்தில் 11சதவீதமும் இருந்தது.

[2] *V.* Vakil and Patel, Finance under Provincial Autonomy, pp. 47, 48.

அட்டவணை (12)

புதிய வருவாய் மூலங்கள்

மாகாணங்கள்	1936–37					1939–40 வரவு செலவுத் திட்ட மதிப்பீடுகள்								
	சுங்க வரிகள் (சணல்)	மோட்டார் போக்கு வரத்துச் சட்டங்கள்	வேடிக்கைகள்	மற்றவை	மொத்தம்	சுங்க வரிகள் (சணல்)	வருமான வரி 1	மோட்டார் போக்கு வரத்துச் சட்டங்கள்	வேடிக்கைகள்	விற்பனை வரி	வேலைக்கு அமர்த்தல்	சொத்துவரி	மற்றவை	மொத்தம்
வங்காளம் ...	190	21	17	20	248	230	32	21	17	20	12	—	—	332
ஐக்கிய மாகாணம் ...	—	—	—	—	—	—	26	11	5	8	30	—	40	120
சென்னை ...	—	50	1	—	51	—	24	82	2	32	—	—	1	141
பீஹார் ...	11	—	—	—	11	14	36	—	1	கி.வி.	—	—	12	63
பஞ்சாப் ...	—	7	—	—	7	—	13	8	2	8	—	—	—	31
பம்பாய்	—	41	20	29	90	—	32	43	22	76	—	127	5	305
மத்திய மாகாணம் ...	—	4	—	—	4	—	9	5	—	7	2	—	—	23
அஸ்ஸாம் ...	10	1	—	3	14	12	28	3	கி.வி.	கி.வி.	—	—	—	43
ஓரிஸ்ஸா ...	1	1	—	—	2	1	3	1	—	—	—	—	—	5
சிந்து	—	2	1	2	5	—	3	2	1	2	—	—	—	8
வடமேற்கு எல்லைப்புற மாகாணம்	—	1	—	—	1	—	2	2	1	கி.வி.	—	—	—	5
மொத்தம் ..	212	128	39	54	433	257	208	178	51	153	44	127	58	1076

மூலம் : Vakil and Patel, Finance under Provincial Autonomy, p. 177. மக்கள் தொகையின் அளவுக்கு ஏற்றாற்போல் மாகாணங்கள் வரிசைப்படுத்தப் பெற்றுள்ளன. எண்கள் இலட்சத்தில் கொடுக்கப்பெற்றுள்ளன.

1 விவசாய வருமானவரி உள்பட (பம்பாய், பீஹார், அஸ்ஸாம் மாகாணங்களில்). கி.வி.—கிடைக்கவில்லை.

வரியிலிருந்தும் மாகாணங்களுக்குக் கிடைத்த பங்கும் அவற்றுள் அடங்கியிருந்தன. மாகாணங்களின் செலவிடும் சக்தியிலிருந்த பெருக்கத்தை எடுத்துக் காட்டும் அட்டவணை (11)-லும், சணல் ஏற்றுமதித் தீர்வையையும், வருவான வரிப் பங்கையும் காண லாம். அட்டவணையிலுள்ள வருமான வரி என்னும் தலைப்பு, இதுவரை பம்பாய், பீஹார், அஸ்ஸாம் மாகாணங்களில், மட்டும் கையாளப் பட்டிருக்கும் விவசாய வருமான வரியையும் அடக்கி யிருக்கிறது. 1936-37ஆம் ஆண்டைவிட 1939-40ஆம் ஆண்டில் இருந்த வருவாய்ப் பெருக்கத்தின் பெரும்பகுதியும் மத்திய அரசாங்கத்தின் சலுகையால் கிடைத்ததாகும்.[1] மாகாண அர சாங்கங்களின் முயற்சியால் நடைமுறைக்கு வந்த நிதிமூலங்களில் விற்பனைவரி மட்டுந்தான் குறிப்பிடத்தக்க அளவுக்கு வரு வாயைக் கொடுத்தது. பம்பாய் மாகாணத்தில் சொத்துவரி பயனுள்ளதாக நிரூபித்தது. ஆனால், மற்ற மாகாணங்களில் இவ் வரி கையாளப் பெறவில்லை.[2]

விற்பனை வரி இரண்டு வகையில் வசூலிக்கப் பெற்றது; ஒன்று (சென்னை மாகாணத்தைப்போல) எல்லாப் பொருள் களின்மீதும் விற்பனை வரி விதிப்பது; மற்றொரு வகை, மோட் டார் ஸ்பிரிட், எண்ணெய்கள், புகையிலை, மின்சாரம், துணிவகை கள், வாஞ்லிப் பெட்டிகள், மோட்டார்க் கார்கள், சைகிள் வண்டிகள் போன்ற சில குறிப்பிட்ட பொருள்களில் மட்டும் வரி விதிப்பது. 'மாகாண வரவுக்கும் செலவுக்கும் இடையே வளர்ந்து கொண்டே இருக்கும் இடைவெளியை அடைக்கக்கூடிய சாதனங்களில் விற்பனை வரி முக்கியமான இனமாகும்' என்று சிலர் கருதுகின்றனர்.[3] ஆனால் மாகாணங்கள் இவ்வரியைக் கையாளும்பொழுது, 'நிலைப்பாடு' 'இரட்டிப்பு வரிவிதிப்பு' (Double Taxation) பற்றிய பிரச்சினைகளை எழுப்புகிறது. ஆகவே வரிப் பளுவை வெவ்வேறு வருமானங்களுள்ள வகுப்பினரிடையே யும், தனிப்பட்டவர்களிடையேயும் சமமாகப் பங்கிடும் வகை யில் இப் பிரச்சினைகளைப்பற்றி ஒரு முழு விசாரணை நடத்துவது விரும்பத் தக்கதாகும்.[4]

[1] அதாவது சுங்கவரிகள், வருமானவரி, மோட்டார் வாகனவரி இவைகளிலிருந்து கிடைத்ததாகும்.

[2] பம்பாய், அகமதாபாத் நகரங்களில் நிலையான சொத்துகளின் வாரமதிப்பில் 10 சத வீதமாக இவ்வரி விதிக்கப்பெற்றது.

[3] *V.* Vakil and Patel, Finance under Provincial Autonomy, Appendix I, p. 164.

[4] *V.* Vakil and Patel, Finance under Provincial Autonomy, p. 169, and P. J. Thomas, Federal Finance in India, p. 428.

ஆகவே, மாகாண வருவாய்க்குத் தேவையான அளவில் நிதியைக் கொடுப்பதும் நெகிழ்ச்சி யுள்ளதுமான மூலங்களைத் தேடிப் பிடிக்கும் பிரச்சினை 1939ஆம் ஆண்டில் ஒரு தீராப் பிரச்சினையாகவே இருந்தது. ஆனால், சமூக சீர்திருத்தங்களை நடைமுறையாக்குவதற்குத் தேவையான பொறுப்புகளை ஏற்பதற்கான வழி வகுக்கப்பட்டிருந்தது. வாணிபத்துறைத் திட்டங்களைப் பொறுத்த அளவில், துணிச்சலான கடன் கொள்கையைக் கையாளும் அளவுக்கு, மாகாணங்களின் நாணயம் உயர்ந்திருந்தது.

இறுதியாக, கணக்கின் செலவினத்தைக் காணலாம். செலவினத்திற்கான விவரங்கள் மாகாணத்திற்கு மாகாணம் மாறுதலடைகின்றன. இவ் வினத்தைப்பற்றி மேல்நோக்காக ஆராய்வதாலும், பல மாகாணங்களும் மேற்கொண்ட செலவு, சீர்திருத்தங்கள் இதற்றைத்தான் விவரிக்கமுடியும்.

விவசாயச் சட்டமியற்றல், விவசாயக் கடன்களுக்கு நிவாரணம் அளித்தல், கிராம வளர்ச்சி, ஆலைத் தொழிலாளர்களின் வாழ்க்கை நிலையை மேம்படச் செய்தல், சுகாதார நடவடிக்கைகளைப் பரவலடையச் செய்தல், இவையெல்லாவற்றையும்விட ஆரம்பக் கல்வியை வளர்த்தல் இவைகளே பெரும்பான்மையான மாகாணங்களின் பொருளாதார, சமூக நோக்கங்களாக இருந்தன. இந் நோக்கங்கள் ஒன்றும் புதியன அல்ல. ஆனால், மாகாண சுயாட்சி, சீர்திருத்த வாதிகளுக்கு ஒரு புதிய ஊக்கத்தைக் கொடுத்து; சீர்திருத்தங்களிலிருந்து உடனடியான பலனை எதிர்பார்த்த குடியானவர்களுக்கும், தொழிலாளர்களுக்கும் புதிய நம்பிக்கைகளைக் கொடுத்தது; சில இனங்களில் பழைய ஆட்சியில் இருந்ததை விடத் தீவிரமான நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் தூண்டியது.

பேராசிரியர் வக்கில் அவர்களின் அரிய ஆய்வினைத்தழுவிப் பின்வரும் அட்டவணை (13) தயாரிக்கப் பெற்றுள்ளது. 1936–37, 1939 ஆண்டுகளின் வரவு செலவுத் திட்டங்களில் முக்கிய சமூக நல வேலைகளுக்கான செலவை இந்த அட்டவணை காட்டுகிறது.

இந்த இனத்திலும் செலவுப் பெருக்கம் கவர்ச்சியூட்டுவதாக இல்லை. மொத்தச் செலவு ரூ. 4½ கோடிதான் ஆயிற்று. ஆனால், நிதிச் சாதனங்கள் இல்லாததால் செலவையும் குறைக்க வேண்டியிருந்தது; அத்துடன் 1939ஆம் ஆண்டில் மாகாணங்களின் வரவு செலவுத் திட்டங்களில் மொத்தத்தில் பற்றுக்குறையே இருந்.

அட்டவணை (13)

சமூக நலத் தொண்டுகளின் செலவு

மாகாணம்	கல்வி		மருத்துவ உதவி		சுகாதாரம்		விவசாயம்		கால்நடை மருத்துவம்		கூட்டுறவுத் துறை		தொழில்கள்		மொத்தம்		1936–37க்கும் 1939–40க்கும் இடையே இருந்த பெருக்கம்
	1936–37	1939–40	1936–37	1939–40	1936–37	1939–40	1936–37	1939–40	1936–37	1939–40	1936–37	1939–40	1936–37	1939–40	1936–37	1939–40	
வங்காளம் ...	132	168	49	59	34	49	27	17	—	6	—	36	14	21	256	356	100
ஐ. மாகாணம் ...	206	215	34	37	22	24	27	80	4	5	5	7	15	29	313	397	84
சென்னை ...	256	265	93	97	24	29	22	21	10	13	12	14	23	26	440	465	25
பீஹார் ...	69	78	21	26	10	14	18	11	—	4	—	5	9	11	127	149	22
பஞ்சாப் ...	157	165	44	55	11	24	55	40	—	19	—	19	14	21	281	343	62
பம்பாய் ...	160	210	42	48	22	31	14	13	4	4	6	53	6	13	254	372	18
ம. மாகாணம் ...	53	57	15	17	4	6	9	11	5	5	3	3	3	3	92	102	10
அஸ்ஸாம் ...	35	36	14	14	7	9	5	6	1	2	1	1	2	3	65	71	6
ஓரிஸ்ஸா ...	25	27	8	9	2	3	3	2	—	1	—	2	1	2	39	46	7
சிந்து ...	28	31	7	8	2	3	6	9	1	1	1	1	—	2	45	55	10
வ. மே.எ.மா. ...	21	24	7	7	1	2	5	3	—	2	—	1	—	2	34	41	7
மொத்தம் ...	1142	1276	334	337	139	194	191	213	25	62	28	142	87	133	1946	2397	451

மூலம் : C. N. Vakil and M. H. Patel, Finance Under Provincial Autonomy, p. 173. மக்கள்தொகையின் அளவுப்படி (1931ஆம் ஆண்டுக் கணக்கெடுப்பு) மாகாணங்கள் வரிசைப்படுத்தப்பெற்றுள்ளன. மொத்த மக்கள் தொகை 255·4 மில்லியன்கள் ; வங்காளத்தின் மக்கள் தொகை 50 மில்லியன்கள் ; வ. மே. எ. மா. 2·4 மில்லியன்கள் ; செலவு இலட்ச ரூபாயில் தரப்பெற்றுள்ளன. 1936–37ஆம் ஆண்டின் விவரங்கள் அரசாங்கக் கணக்குகளிலிருந்தும், 1939–40 ஆம் ஆண்டின் விவரங்கள் வரவு செலவுத் திட்ட மதிப்பீடுகளிலிருந்தும் எடுக்கப்பெற்றுள்ளன.

தது என்பதையும் மறந்துவிடக்கூடாது. இந்த இனத்தைப் பற்றிச் சில பொதுவான கருத்துகளைக் கூறலாம். செலவுப் பெருக்கம் மாகாணத்திற்கு மாகாணம் மாற்றமுடையதாக இருந்தது. சமூக நலச் செயல்களுக்கான மொத்தச் செலவும் செலவின் பெருக்கமும் அந்தந்த மாகாணத்தில் மக்கள் தொகையின் அளவுக்கு ஏற்றாற்போல மாற்றமடைந்தன. இருந்தாலும் இத்தகைய போக்குக்குக் குறிப்பிடத் தகுந்த சில விலக்குகள் இருந்தன. எடுத்துக் காட்டாக, 1936-37ஆம் ஆண்டில் சென்னை மாகாணம் மற்றெல்லா மாகாணங்களையும்விட சமூகநலச் செயல்களுக்காக அதிகச் செலவு செய்தது என்றாலும், அதன் செலவிலிருந்த பெருக்கம் குறைவாகவே இருந்தது. பம்பாய் மாகாணம், மக்கள் தொகையின் அளவில் ஆறாவது இடத்தை வகித்தாலும், செலவுப் பெருக்கத்தில் முதலிடத்தைப் பெற்றது. இந்த அட்டவணையுடன் (அட்டவணை 13), மாகாணங்களின் செலவிடும் சக்தியிலிருந்த பெருக்கத்தைக் காட்டும் (11) ஆம் அட்டவணையை ஒப்பிட்டுப் பார்த்தால், உதவி மிகவும் தேவையான மாகாணங்களுக்கு (மக்கள் நெருக்கடி மிகக்குறைவான, நிருவாகச் செலவு அதிகம் உள்ள சிறு மாகாணங்களும், வங்காளம் போன்று தனித்தன்மையான குறைபாடுகள் உள்ள மாகாணங்களும்) உதவி செய்வதற்கான ஒரு முயற்சி எடுத்துக் கொள்ளப் பெற்றது என்றாலும், நடைமுறையில், சிக்கனத்தைக் கையாண்டு, தங்களுடைய விதிகளைக் கொண்டே சமூக நலச் செயல்களை வளர்ப்பதில் அக்கறை காட்டிய மாகாணங்களுடன் மத்திய அரசாங்கம் தாராள மனப்பான்மையுடன் நடந்துகொள்ளவில்லை போல் தோன்றுகிறது. ஒருவேளை இதைத் தவிர்க்க முடியவில்லை போலும். இரண்டாவதாக, பொருளாதார முன்னேற்ற மடைந்துள்ள நாடுகளுடன் ஒப்பிட்டால், இச் செயல்களுக்கான தலைக்கான மொத்தச் செலவு குறைவாக இருந்தது என்பதும் தெளிவானதே. பேராசிரியர் வக்கீல் அவர்கள் கூறியிருப்பது போல், 1939–ஆம் ஆண்டிலும், 'அரசாங்கம் பயன்தரும் உற்பத்தியாக்கும் பல நடவடிக்கைகளிலும் அதிகப் படியான செலவு செய்ய எல்லையற்ற வாய்ப்பு இருந்தது.'[1]

ஆனால், இக்காலத்தில் இயற்றப்பெற்ற மாகாணச்சட்டங்கள் விவசாயத் துறையில்தான் மிக அதிகமாக இருந்தன. முன்னிருந்த அரசாங்கம், குடியானவர்களின் உரிமைகளைப் பாதுகாக்கவும், வாரங்களை மட்டுப் படுத்தவும் முயற்சி எடுத்துக்

[1] Vakil and Patel, Finance under Provincial Autonomy, p. 144. அவர்கள் கொடுத்திருக்கும், பலநாடுகளிலும் தற்காப்பு, சமூக நலச்செயல்கள் இவைகளுக்கான செலவைக்காட்டும் பட்டியலைப் பார்க்கவும்.

கொண்டது. ஆனால், காங்கிரஸ் மந்திரிகளுக்குக் (குறிப்பாக) 'காங்கிரசில் பெருந்தலைவர்களாகவும், சட்ட மன்றங்களில் உறுப்பினர் பலராகவும் இருந்த நிலச்சுவான்தாரர்களை முற்றிலும் பகைத்துக் கொள்ளாத வகையில், குடியானவர்களுக்கு உரிமைகளைக் கொடுக்கவும், வாரங்களை வரையறுக்கவும், கொடுமைகளை நீக்கவும், முடிந்தது.[1] இத் துறையில் மிகவும் முன்னேற்றகரமான சீர்திருத்தங்கள் ஐக்கிய மாகாணத்திலும், பீஹாரிலும் நடந்தேறின[2]. விவசாயக்கடனாளிகளுக்கு நிவாரணம் அளிப்பதற்கான நடவடிக்கைகள் மிக விரைவில் மேற்கொள்ளப்பெற்றன. சமாதான முறையில் கடனைக் குறைக்கும் பழைய முறையுடன் விவசாயக் கடன்களைக் கட்டாயமாகக் குறைக்கும் புதிய முறையும் கையாளப்பெற்றது.[3]

கிராமப்புனருத்தாரணச் செயல்களுக்கும், வளர்ச்சிச்செயல்களுக்குமான பரவலான பல திட்டங்களை ஐக்கிய மாகாணம் முதலிலும், மற்றும் பல மாகாணங்கள் அதைப் பின்பற்றியும் மேற்கொண்டன. இதனால் கிராம வளர்ச்சியை வளர்ப்பதற்கும் ஊக்குவிப்பதற்கும், எண்ணிக்கையற்ற ஊதிய ஊழியர்களை நியமிக்க வேண்டியிருந்தது. இத் தலைப்பின்கீழ்: குடிசைத் தொழில்களுக்கும், கூட்டுறவு இயக்கத்திற்கும், தரம் உயர்ந்த விதைகளைப் பங்கீடு செய்வதற்கும், கால்நடைகளை வளர்ப்பதற்கும், நில உடைமை ஒருங்கிணைப்பு (Consolidation of holdings) செய்வதற்கும் அரசாங்கம் அளித்த உதவியையும் சேர்த்துக்கொள்ளலாம். ஆனால், நடைமுறையில் மருத்துவம் துப்புரவு மேம்பாடு, அறியாமையை ஒழிப்பது போன்ற செயல்களுக்கான திட்டங்களும் கிராம வளர்ச்சித் திட்டங்களுடன் இணைத்தே செயலாக்கப் பெற்றன. 1934–35ஆம் ஆண்டிலும் அதற்குப் பின்னரும் கிராம வளர்ச்சிக்கும், விவசாய வளர்ச்சிக்கும் அளிக்கப்பெற்ற மீளவாரா உதவித் தொகைகளின் மூலம் மேற்கூறிய செயல்களில் பலவும் முன்னமே ஊக்கம் பெற்றிருந்தன. மாகாண சுயாட்சியின்கீழ், ஆலைத்தொழிலாளர்களின் வாழ்க்கைநிலை, தொழிலாளி முதலாளித் தொடர்பு இப்பிரச்சினைகளிலும் மாகாண அரசாங்கங்கள் நல்ல கவனம் செலுத்தின. இவைகளைப் பற்றியும், இவைகள் சம்பந்தமான மற்றப்

[1] Sir Reginald Coupland, India : A Restatement, p. 159.

[2] *V.* B. R. Misra, Land Revenue Policy in the United Provinces.

[3] *V.* N. G. Abayankar, Provincial Debt Legislation. அபயங்கார் அவர்கள் 1929க்கும் 1939க்கும் இடைக்காலத்தில் நிறைவேறிய மாகாணச்சட்டங்களின் பட்டியலைக் (பின்இணைப்பு1) கொடுத்திருக்கிறார். 1938ஆம் ஆண்டிலும் 1939ஆம் ஆண்டிலும் நிறைவேறிய சட்டங்களின் எண்ணிக்கை மனத்தில் பதிவதாக இருக்கிறது.

பிரச்சினைகளைப் பற்றியும், 1937ஆம் ஆண்டுக்கும் 1939ஆம் ஆண்டுக்கும் இடைக்காலத்தில் வெள்ளம்போல் எண்ணிக்கையற்ற மாகாண விசாரணைகளும், சட்டங்களும் நடைமுறைக்கு வந்தன. இவற்றுள், 1937ஆம் ஆண்டின் பம்பாய்ப் பருத்தி ஆலைத்தொழிலாளர் விசாரணைக் குழுவும், 1937ஆம் ஆண்டின் கான்பூர்த் தொழிலாளர் விசாரணைக் குழுவும், 1938ஆம்ஆண்டின் மத்திய மாகாணப் பருத்தி ஆலைத் தொழிலாளர் விசாரணைக் குழுவும், பீஹார், சென்னை, அஸ்ஸாம் மாகாணங்களில் இவை போன்று மேற்கொள்ளப் பெற்ற விசாரணைகளும் சில வாகும். இவற்றைத் தொடர்ந்து, குறைமட்டக் கூலியை நிர்ணயிக்கவும், தொழிற்கூட சூழ்நிலையை மேம்படச் செய்யவும் வேலை நேரத்தை மட்டுப்படுத்தவும், தொழில் தகராறுகளில் சமாதானம் செய்யவும் தீர்த்து வைக்கவும், மாகாணச் சட்டங்கள் விரைவில் ஒன்றன்பின் ஒன்றாக வந்தன.[1]

கட்டாய ஆரம்பக் கல்வியையும், முதியோர் கல்வியையும் சில மாவட்டங்களில் புகுத்துவதற்கான சோதனைத் திட்டங்களும் முயலப் பெற்றன. ஆனால் இவைகள் நம் கவனத்திற்கு அப்பாற்பட்டவைகளாகும்.

மக்களுடைய தலைவர்களிடமும், ஆட்சியாளர்களிடமும் இருந்த ஆர்வத்திற்குக் குறைவில்லை என்றும், மேற்கண்ட துறைகளில் கையாண்ட நடவடிக்கைகள்தாம் மாகாண சுயாட்சி தொடங்கப்பெற்றதை மெய்ப்பிப்பனவாக இருந்தன என்றும் பொதுவாகக் கூறலாம். 'காங்கிரஸ் மந்திரிகள், விவசாயச் சட்டங்களை மனத்துணிவுடன் உருவாக்கி, அச் சட்டங்களை மிக விரைவில் செயலாக்கியது, மொத்தத்தில் ஒரு குறிப்பிடத் தகுந்த வெற்றியாகும்' என்று சர் ரெஜினால்டு கூப்லாண்டு குறிப்பிட்டார்.[2] மற்றத் துறைகளிலும் அவர்களுடைய பணிகளை இவ்வாறு கூறினால் அது மிகையாகாது.

ஆனால், நிதிப் பற்றுக்குறையையும், வெளிப்பாட்டையும், உற்பத்தி சக்தியையும் உயர்த்துவதின் அவசியமும், மக்களின் வரி தாங்கு வல்லமையும் கவனிக்கப்பெறுத பிரச்சினைகளாகப் பின்னணியில் இருந்தன. வறுமைத் தொல்லைக்கும், இந்தியப்

[1] இச் சட்டங்கள்பற்றிய சிறந்த சுருக்கத்திற்கு India Year Book, 1939-40 p. 525-ஐப் பார்க்கவும். Bombay Labour Gazette, Shiva Rao, B, B, The Industrial Worker in India; Rastogi, T. N., Indian Industrial Labour என்ற நூல்களையும் பார்க்கவும்.

[2] Sir Reginald Coupland, India: A Restatement, p. 159.

பாமர மக்களின் நிலைக்கும் சமூக, பொருளாதார வாழ்க்கை நிலைக்கும், அரசாங்க அமைப்பைச் செப்பனிடுவதால்மட்டும் தீர்வுகாணமுடியாது. இதற்கு, எல்லா மக்களுடைய உள்ளத்தையும் தொடுகின்ற வகையில், அவர்களுடைய எண்ணத்தைக் கவர்ந்து, ஒத்துழைப்பைப் பெறக்கூடிய பல அடிப்படைத் திட்டங்கள் தேவைப்படுகின்றன.

§ 12. முடிவுரைகள்

1929ஆம் ஆண்டுக்கும் 1939ஆம் ஆண்டுக்கும் இடையிலான பத்தாண்டுக் காலத்திலிருந்த பொருளாதார வளர்ச்சிகளையும், குறிப்பாக உலகெங்கும் நிலவிய மந்தத்தினாலும் இந்தியாவிலிருந்த அரசியலமைப்பு மாற்றங்களினாலும், இந்தியப் பொருளாதார வாழ்க்கையிலும், மக்கள் நிலையிலும் ஏற்பட்ட விளைவுகளையும் இதற்கு முந்திய பக்கங்களில் ஆராய்ந்தோம்.

இனி, 1939ஆம் ஆண்டுவரை இந்தியாவிலிருந்த பொருளாதாரப் போக்குகளையும், அவ் வாண்டிலிருந்த பொருளாதார நிலவரத்தையும் மதிப்பிட முற்படலாம். இம் முயற்சியில் முற்படுமுன், 1935ஆம் ஆண்டுக்குப் பிறகு பொதுவாகவும், குறிப்பாக இந்தியாவிலும் இருந்த மறுமலர்ச்சி, ஏற்ற இறக்கங்கள் இவைகளின் பொதுவான இயல்புகளைப் பற்றிச் சிறிது கூறவேண்டியது அவசியமாகிறது.

பொருளாதார மந்தத்திலிருந்து மீட்சிக்காலம் உலகெங்கிலும் பொதுவாக, 1934ஆம் ஆண்டிலிருந்து தொடங்கியது. அவ்வாண்டுக்குப் பிறகு உற்பத்தியும், விலைகளும், வர்ணிபமும் பெருகத் தொடங்கின. வேலையின்மையும் (தொழில் மயமான நாடுகளில்) குறையத் தொடங்கியது. ஆனால் பன்னாட்டு வாணிபம் உற்பத்திக்குப் பின்தங்கியே இருந்தது. அதே போன்று முதலீடும் நுகர்வுக்குப் பின்தங்கியே இருந்தது. 1937ஆம் ஆண்டில்கூட உலக வாணிபத்தின் அளவு 1929ஆம் ஆண்டில் இருந்த மட்டத்தைத் திரும்பப்பெறவில்லை. விலை மட்டமும்—மந்தத்தின் கேடான ஆண்டுகளிலிருந்ததைவிட உயர்வாக இருந்தாலும் வெகு குறைவாகவே மீட்சியுற்றது. இதனால் உலகவாணிபத்தின் மொத்த அளவு 1929ஆம் ஆண்டிலிருந்ததைவிடக் குறைவாகவே இருந்தது.

மீட்சிக்கு உதவ ஒவ்வொரு நாட்டிலும் பலவகையான கொள்கைகள் கையாளப்பெற்றன. ஆனால், பேராசிரியர்

லெவிஸ் அவர்கள் குறிப்பிட்டிருப்பதைப்போல்[1] எந்த ஒரு தேசியக் கொள்கையையும் மீட்சிக்குக் காரணமாகக் கொள்ளலாமா என்பது சந்தேகத்திற்குரியதாகும். வாணிபம் ஏன் உற்பத்திக்குப் பின்தங்கியிருந்தது என்பதற்கு இரண்டு காரணங்களிருந்தன. முதலாவது முக்கியக்காரணம் பன்னாட்டு வாணிபத்திலும் பல நாடுகளிடையே பணம் அனுப்புவதிலும் இருந்த தடைகள், மந்தத்தின் கொடுமையான ஆண்டுகளிலிருந்தவைகளுடன் ஒப்பிட்டால் சற்றுத் தளர்த்தப் பெற்றிருந்தாலும், ஒருபொழுதும் முற்றிலும் அகற்றப்பெறவில்லை; இரண்டாவது காரணம், பன்னாட்டுவாணிபத்தின் முக்கியப்பொருள்களோ இறக்குமதிசெய்யும் நாடுகளில் மக்கள் தொகைப்பெருக்கம் குறைந்திருந்ததால், அந்நாடுகளில் இப்பொருள்களுக்கு இருந்த தேவை பெருகவில்லை. உள்நாட்டு வாணிபமும், உற்பத்தியும் தேசியக் கொள்கைகளால் பேணி வளர்க்கப்பெற்றன. இக் கொள்கைகளில் சிறு மாறுதல்கள் இருந்தாலும்கூட, இவை அனைத்தும் நுகர்வையும் செலவையும் பேணுவதையும் தன்நிறைவு நிலையை அடைவதையுமே நோக்கமாகக் கொண்டிருந்தன. இக்கொள்கைகள், 1938ஆம் ஆண்டில் தொடங்கி 1939ஆம் ஆண்டிலும் தொடர்ந்த போர் ஆயத்த வீக்கத்தினால் (Rearmament Boom) (அந்த ஆண்டில் நிகழவிருந்த மந்தம், இவ்வீக்கத்தினால் தவிர்க்கப்பெற்றது) மேலும் வலுப்பெற்றன.

வாணிப, தொழில் நடவடிக்கைகளில் இருந்த மீட்சியில் இந்தியாவுக்கு இலாபகரமான பங்கு கிடைத்தது. நம்பிக்கையும் ஊக்கமும் அளித்த 1935க்கும் 1937க்கும் இடைக்காலத்தில் திட்டமான மேலேற்றம் இருந்தது. பாமர மக்கள், எதிர்பார்த்ததை விட நல்லமுறையில்புயலை (மந்தத்தை) எதிர்த்துநின்றனர். நிதி நிலைமையும் நல்ல முறையில் இருந்தது; செலாவணியும் உரமுள்ளதாக இருந்தது; தன்னாட்சியும் கிட்டும்போலிருந்தது; மாகாண சுயாட்சியும் தொடங்கப்பெற்றது. ஆனால் மொத்த விலைப் பொதுக்குறியீட்டெண்களிலும், குறிப்பிட்ட தனிப்பண்டங்களின் விலைகளிலும் (உணவு வகைகள், தொழில் மூலப் பொருள்கள், பருத்தி உற்பத்திப் பொருள்கள், சணல் உற்பத்திப் பொருள்கள், இவைகள் உட்பட) உயர்வு குறைவாகவே இருந்தது; இவ்விலைகளும் 1928–29ஆம் ஆண்டிலிருந்த மட்டத்தைவிட மிகக்குறைவாகவே இருந்தன.[2] உலோகவிலைகள் மட்டும்தான் 1928லும்

[1] W. A. Lewis, Economic Survey, 1919–1939, p. 69.

[2] இவ் வத்தியாயத்திலுள்ள அட்டவணை 2-ஐப் பார்க்கவும். 1928ஆம் ஆண்டில் 145 எண்களாக இருந்த கல்கத்தாவின் மொத்த விலைக்குறியீட்டு எண்கள் 1933ஆம் ஆண்டில் 87 எண்களாகக் குறைந்தன. பின்னர் 1937ஆம் ஆண்டில் 102 எண்களுக்கு உயர்ந்தன. 1938ஆம் ஆண்டில் 95 எண்களுக்கு வீழ்ச்சியடைந்தன.

1929லும் இருந்த மட்டத்திற்கு மேலாக உயர்ந்தன. இருந்தாலும் தொழில் இலாபங்கள் குறிப்பிடத்தக்க வகையில் உயர்ந்தன. பின்தங்கிய நாடுகளில் அந்நிய முதலீடு இல்லாவிட்டாலும்கூட, தொழில் மயமாக்கும் நடவடிக்கைகளே மேற்கொள்ளலாம் என்று பேராசிரியர் லெவிஸ் அவர்கள் வலியுறுத்தினர். இவ்வாறு தொழில் மயமாக்குவதால், உள்நாட்டு வேலை வாய்ப்புகளும் திறனும் ஊக்குவிக்கப் பெறுவதால், செழிப்பை வளர்க்கவும், உள்நாட்டுப் பண்டங்களுக்கும் இறக்குமதிப் பண்டங்களுக்கும் இருக்கும் தேவையைப் பெருக்கவும் எளிதில் முடியும் என்று அவர் கருதினர். தொழில் இலாபங்களிலிருந்த பெருக்கம் பேராசிரியருடைய இக்கொள்கையை வலியுறுத்துவதாக இருந்தது. மீட்சியின் பயனே மக்களின் உயர்வகுப்பினரும் (வருமானத்தில்), சுரங்க வேலைகளிலும், நவீன பேரளவுத் தொழில்களிலும் நேரிடையாக ஈடுபட்டவர்களுமே முக்கியமாகப் பெற்றனர். விவசாயிகளைப் பொறுத்த அளவில், சில முக்கியப் பொருள்களின் தலைக்கான நுகர்வு மந்தகாலத்திற்கு முன்பிருந்த மட்டத்திற்கு உயர்ந்தது என்று மதிப்பிடப்பெற்றாலும், பொன் தொடர்ந்து ஏற்றுமதியானதிலிருந்து அவர்களுடைய நிலை உறுதியற்றதாகவே இருந்தது என்பது தெரிய வருகிறது.

இவ்வத்தியாயத்தின் முற்பகுதியில் குறிப்பிட்ட சான்றுகளிலிருந்து மாபெரும் மந்தம் இந்தியப் பொருளாதாரத்தில் (மூலப் பொருள்களை உற்பத்திசெய்யும் நாடுகளில் ஒன்று என்றவகையில்) தாங்கமுடியாத ஒரு பளுவைச் சுமத்தியது என்றும் அரசாங்கம் கையாண்ட பழமைக் கொள்கையினால் (குறிப்பாகப் பொது நிதியியல் துறையில்) இப் பளுவைக் குறைக்க முடியவில்லை என்றும் முடிவாகக் கூறலாம். இருப்பினும், நாம் முன்னர்க் கண்டது போல், பொதுவாக இந்தியப் பொருளாதாரம் (குறிப்பாக விவசாயிகளும்) இப்பளுவை வியப்பூட்டும் வகையில் தாங்கி நின்றது. இதனால் பொருளாதார முன்னேற்றமும் வளர்ச்சியும் தடைப்பட்டாலும், மக்களின் வாழ்க்கைத்தரம் எதிர்பார்த்ததைப்போல் மிகவும் கேடுறவில்லை. முன்னமே மிகவும் எளியவாழ்க்கை நடத்தும் பாமர மக்களின் வாழ்க்கைத்தரம் மேலும் குறைந்திருந்தால், ஊட்டக்குறைவினால் (Mal-nutrition) இறப்புவீதம் பெருகியிருக்கும். இறப்புவீதம் முன்னர் மெல்லக் குறைந்து வந்ததில் மாற்ற மெதுவுமில்லை. ஆனால் மந்தத்தின் அடித்தளத்திலிருந்து மக்கள் தொகைப் பெருக்கம் தடைப்படாமல் இந்தியா வெளியேறியதால், அதனுடைய சாதனங்

களிலும், வாழ்க்கைத் தரத்திலும் இருந்த பளு பெருகியதே ஒழியக் குறையவில்லை. நாட்டின் அடிப்படைப்பிரச்சினை–அதாவது மக்கள் தொகைப் பிரச்சினை–தலைதூக்கத் தொடங்கியது. தேசாய் அவர்களின் மதிப்பீடுகள்[1] இக் காலத்தில் நாட்டின் மொத்த சாதனங்கள் (பன்னாட்டுவாணிபத்திலிருந்து கிடைத்த இலாபம் உட்பட) தொடர்ந்து பெருகிவந்தன என்றாலும் இப் பெருக்கம் மக்கள் தொகைப் பெருக்கத்திற்கு ஏற்றாற் போல இல்லை என்றும், இதனால் மக்களின் சராசரி வாழ்க்கைத் தரத்தில் மேம்பாடு ஒன்றையும் காணமுடியவில்லை என்றும் ஆனால் தலைக்கான செலவில் (ஆகவே தலைக்கான சாதனங்களிலும்) படிப்படியான, ஆனால் மிகக் குறைவான இறக்கம் இருந்தது என்றும் தெளிவாகவும் சுருக்கமாகவும் நேரிடையாகவும் எடுத்துக்காட்டுகின்றன.

நாட்டின் நிலை இப்புள்ளி விவரங்கள் அறிவிப்பதுபோல் அவ்வளவு கேடுற்றதாக இல்லை. அரசியலமைப்பு மாற்றங்கள் மேற்கொண்டு சில செலவுகளை உண்டாக்கினாலும், பொருளாதாரத்துறையிலும் அரசியல் துறையிலும் மக்களின் மனநிலையிலும் மேம்பாடு இருக்கும் என்ற நம்பிக்கைக்கு இம் மாற்றங்கள் காரணமாக இருந்தன. மாகாண சுயாட்சியின் முழு விளைவுகளையும் 1939ஆம் ஆண்டுவாக்கில் மதிப்பிடமுடியாது. இருந்தாலும் மாகாணசுயாட்சி தொடங்கப் பெற்றது இந்திய சீர்திருத்தவாதிகளுக்கும், சீர்திருத்தங்களையும் சமூக சீரமைப்பையும் நோக்கமாகக் கொண்ட இயக்கங்களுக்கும் புதிய நம்பிக்கையையும் வாய்ப்பையும் கொடுத்தது. முன்னிருந்த அந்நிய அரசாங்கத்தை மக்கள் சந்தேகக்கண்ணுடன் நோக்கினர். அரசாங்கமும் எச்சரிக்கையான கொள்கையைத்தான் கையாண்டது. இதனால் அதிகப்படியான வருவாய் திரட்டுவது, விவசாயத் துறையிலும், சமூகத்துறையிலும், அடிப்படையான சீர்திருத்தங்களைப் புகுத்துவதுபோன்ற நடவடிக்கைகளை மேற்கொள்வதில் பல தடைகள் இருந்தன. இத் தடைகள் யாவும் மாகாண சுயாட்சி அமைக்கப்பெற்றதும் நீக்கப்பெற்றன. மக்களுடைய எண்ணத்திற்கும், நாட்டில் இருக்கும் நிலவரங்களுக்கும் உகந்த வகையில் தேவையான இயக்கங்களையும், கொள்கைகளையும் உருவாக்கிச் செயலாக்குவதில் மக்கள் தலைவர்கள் முடிவில் முழுஉரிமையையும் பெற்றனர்.

இந்தியச்சூழ்நிலையில், சிறந்த பயன்கள் கிட்டவேண்டுமென்றால் பொருளாதாரத் திட்டம் வகுக்கவேண்டியது (இத்திட்டம்

[1] இவ்வத்தியாயத்தின் § 9 ஆம் பிரிவைக் காணவும்.

'திட்டம்' என்னும் நுட்பமான பொருளில் அழைக்கப்படும் தோற்றத்தைப் பெற்றாலும் பெறாவிட்டாலும்) அவசியம் என்பது தெளிவானதே. இந்தியா ஒரு பொருளாதார மத்திய யத்திட்டத்தின்கீழ் வரும் என்பதற்கான அறிகுறிகள் 1939ஆம் ஆண்டில் இருந்தன. மாகாண அரசாங்கங்கள், பொருளாதார சமூக அமைப்புகளில் அடிப்படையான மாற்றங்களைப் புகுத்துவதில் தங்களுக்கிருந்த அவாவையும், உறுதியையும் வெளியிட்டன. காங்கிரஸ் கட்சி ஓர் இணைப்பான கொள்கை நடைமுறைக்குக் கொண்டுவருமுன் இந்தியப் பொருளாதார வாழ்க்கையின் எல்லா அங்கங்களைப்பற்றியும் பரவலான முறையில் தகவல்களைத் திரட்டுவதற்காகத் திட்டக்குழுவை (1938ல்) நியமித்தது.

ஆகவே, 1939ஆம் ஆண்டிலிருந்த இந்திய நிலவரத்தைப் பின்வருமாறு சுருங்கக் கூறலாம்: பன்னாட்டுத் துறையில் போர்மேகம் அடிவானத்தை இருட்டடையச் செய்தது. இந்த நிலை நிகழாவிருந்த வாணிபப் பின்னிறக்கத்தைத் தடுத்தது என்றாலும் அதே நேரத்தில் ஓர் உறுதியில்லாத நிலையை உண்டாக்கிப்பன்னாட்டுப்பொருளாதாரச்சேர்க்கையின்(International Economic Collaboration) வளர்ச்சியையும், வாணிபப்பெருக்கத்தையும், சமுதாயச் சீரமைப்பு வேலைகளையும் தடுத்தது. உள்நாட்டுத் துறையில் அரசியலமைப்பு நிலைமை நிலையற்றதாக இருந்தது; 1935ஆம் ஆண்டில் எதிர்நோக்கிய கூட்டரசாங்கம் அமைப்பதற்குத் தேவையான ஒத்துழைப்பைப் பெறுவதற்கு வழியிருப்பதாகத் தோன்றவில்லை. இக்காரணங்கள் பொருளாதார முன்னேற்றத்தை அல்லது முக்கியமான சமூக, பொருளாதார சீர்திருத்தங்களைத் தொடங்குவதைத் தடுத்தன. ஆனால், மாகாணசுயாட்சி, சில துறைகளில் நிலையான முன்னேற்றத்தை உண்டாக்கியதுடன், ஏமாற்றத்தை அளிக்கும் பழைய எண்ணத்தை அகற்றுவதன் மூலமாகவும், திட்டமிடுவதிலும் கொள்கைகளை உருவாக்குவதிலும் இந்திய அரசியல்வாதிகளுக்கு அதிகமான வாய்ப்பை அளிப்பதன்மூலமும் மேலும் பல காரியங்களைச் சாதிக்கக்கூடும் என்பதையும் நிரூபித்தது. இந்தியர்களுக்கு அதிக உரிமை கொடுக்கப்பெற்றதால் மக்களின் பொதுவான வாழ்க்கைத்தரம் உயர்ந்துவிட்டது என்று கருதமுடியாது. இதற்கு நேர்மாறாக இந்தியப்பொருளாதாரத்திலிருந்த மிகக்கேடான குறைபாடுகள் வெளிக்கொணரப் பெற்றன. இக் குறைபாடுகளில், மூலதனப் பற்றாக்குறை, மேலாளர்கள் தொழில் நுட்பப்பணியாளர்களின் பற்றாக்குறை, இந்தியப் பாமர மக்களின் வாழ்க்கைநிலை உயர்த்துவதற்குத் தேவையான நட

வடிக்கைகளில் மக்களின் ஊக்கமின்மை இவைகளைக் குறிப்பாகக் கூறலாம்.

நாட்டில் ஆக்கவேலை செய்வதற்கான பொறுப்பு, சுயாட்சி பெற்ற மாகாணங்களுக்கிருந்தது என்ருலும் பூரண சுயாட்சி—குறிப்பாக மத்திய அரசாங்கத்திற்கு—இல்லாதவரை செய்ய விருந்த மாற்றங்களின் முழுப்பயனையும் பெறமுடியாது. பொருளாதார ஜனநாயக முறையைத் தோற்றுவிப்பதற்கு நீண்ட காலம் பிடிக்கும். ஆனல் 1930 தொடங்கிப் பத்தாண்டுக் காலத்தில் அரசாங்கம் கையாண்ட் கொள்கைகளும் மக்களின் ஒத்துழைப்பும் இத்தகையதான ஒரு முறைக்கு வித்திடுவதாக இருந்தது. உலகச் சூழ்நிலையும் இந்தியச் சூழ்நிலையும் அனுகூலமாக விருந்தால் இம்முறை தொடர்ந்து வளரும் என்று தோன்றியது. பழமை முறைகளையும் வழக்கங்களையும், எதிர்த்துப் போராட இதுவரை அட்ங்கிக்கிடந்த மக்களிடையே எண்ணக்கிளர்ச்சியையும், எழுச்சியையும் உண்ட்டாக்குவதற்கான பாதை செப்பனிடப்பட்டிருந்தது.

பின் இணைப்பு G.

இந்தியாவின் மூலதனம் இங்கிலாந்துக்குச் செல்கிறது என்ற குற்றச்சாட்டு

இங்கிலாந்துடன் இந்தியா கொண்டுள்ள அரசியல், நிருவாகம், மற்றும் வாணிபத் தொடர்புகள் காரணமாக இந்திய அரசாங்கம் இந்தியாவில் மட்டுமின்றி இலண்டனிலும் சில செலவினங்களை ஏற்கவேண்டியிருக்கிறது. இச் செலவினங்கள் அகச் செலவுகள் (Home Charges) என்று அழைக்கப்படுகின்றன. அகச்செலவுகளில் பின்வரும் இனங்கள் அடங்கியுள்ளன : கடன் (எல்லாவகைக் கடன்களும்) நிருவாகத்தின் வட்டித்தொகை; இரயில்வேக்களுக்காகவும் பாசனவேலைகளுக்காகவும் ஆண்டுத்தொகைகள் (Annuities); இந்தியாவில் உள்ள சிவில் துறைகள் சம்பந்தமான செலவுகள்; (ஓய்வூதியம் உட்பட) இந்திய அலுவலகத்தின் (India office) செலவுகள்; தரைப்படை, கடற்படைச்செலவுகள்; ஓய்வூதியமும் பணிக் கொடைகளும் (Gratuities); இங்கிலாந்தில் வாங்கிய இரும்புப் பொருள்களுக்கான செலவுகள், ஆங்கில அதிகாரிகள் விடுமுறையில் இங்கிலாந்துக்குச் செல்லும்போது அளிக்கப்பெறும் படிகள் முதலியன. முதல் உலகப் போருக்குச் சற்றுமுன்னர், இத்தகைய செலவுகளின் மொத்தத்தொகை ஆண்டுக்கு 20 மில்லியன் பவுன்களாக இருந்தன; தற்காலத்தில் 30அல்லது 35மில்லியன்களாக இருக்கின்றன.

இத்தகைய செலவுகளை இந்திய அரசாங்கத்தின் வருவாயிலிருந்து இங்கிலாந்துக்கு அனுப்பவேண்டியிருந்ததால், இங்கிலாந்துடன் இந்தியா கொண்டுள்ள தொடர்பின் காரணமாக இந்திய மூலதனம் ஆண்டாண்டுக்கும் இங்கிலாந்துக்கு அனுப்பப்படுகிறது; இதற்கு எதிராக இந்தியாவுக்குப் பயன் கிடைப்பதில்லை. இதனால் இந்தியாவின் சாதனங்கள் குறைவடைகின்றன. இந்தியாவிலேயே ஆக்க வேலைகளுக்காகச் செலவிடப்பட்டிருக்கும் பணம் இங்கிலாந்துக்கு ஏற்றுமதியாகிறது; இத்தகைய செலவுகள் இந்தியாவை அவசியமற்ற ஏழ்மைநிலையில் வைத்திருக்கின்றன என்னும் குற்றச்சாட்டுகள் எழுந்தன.

இப்பிரச்சினையைப்பற்றிப் பல ஆண்டுகளாக எழுந்த கருத்து வேறுபாடுகளையும் வாக்குவாதங்களையும் விளக்க வேண்டு

மானால் ஒரு தனி நூலே எழுதலாம். இப் பிரச்சினையை இந்தியக் கண்ணோட்டத்திலிருந்து அண்மையில் வக்கீல்[1] அவர்கள் ஆராய்ந்திருக்கிறார். இப் பிரச்சினையைப்பற்றிக் கடந்த காலத்தில் நடந்த வாக்குவாதங்களில் பலவற்றையும் இவர் குறிப்பிடுகிறார். மூலதனம் இங்கிலாந்துக்குச் செல்கிறது என்ற தத்துவத்திற்கு சர் தியோடோர்மாரிசன் (Sir Theodore Marison) அளித்த மறுப்பை இவர் ஆதரித்து எழுதியிருக்கிறார்.[2] செலவுகளுக்கு எதிராக இந்தியாவுக்குக் கிடைத்த பலன்களை, இருப்புச்சரக்குகள் (Stocks) நீங்கலாக மற்ற இனங்களில் மதிப்பிடுவது எளிதான செயலன்று.[3] ஆகவே, இந்தியாவின் செலுத்துகளுக்கும், இவைகளுக்கு எதிராக இந்தியாவுக்குக்கிடைத்த பலன்களுக்கும் ஆன முற்றிலும் திருத்தமான ஐந்தொகைக் குறிப்பை (Balance Sheet) தயாரிப்பது என்பது முடியாத செயலாகும்.

உற்பத்தியாக்கும் கடன்களுக்கான வட்டித்தொகையே, இத்தியச் செலுத்துகளின் பெருமளவு ஆகும். 1900ஆம் ஆண்டுக்குப்பிறகு இத்தகைய கடன்கள் அதற்கான வட்டிச்செலவைவிட அதிகமான வருவாயை அரசாங்கத்திற்குக் கொடுத்துவந்ததால் இந்த இனத்தினால் இந்திய மூலதனம் வற்றவில்லை என்பது தெளிவாகிறது. இதனுடன் இரயில்வேக்களும், பாசனவேலைகளும் நாட்டுக்கு நல்ல பயனைத்தான் தந்துள்ளன. இத்தகைய கடன்களை இந்தியாவிற்குப் பதிலாக இங்கிலாந்தில் திரட்டுவதால், இந்திய நலன்களுக்குத் தீங்குண்டாகுமா இல்லையா என்பதுதான் சந்தேகத்திற்குரிய பிரச்சினையாகும். இத்தகைய மூலதனத்தைத் திரட்டுவதில் இந்தியாவிற்குப் பல இடையூறுகள் உள்ளன; எந்த வட்டி கொடுத்தாலும் தேவையான முழுத்தொகையையும் இந்தியாவிலேயே திரட்டலாம் என்பது முடியாத ஒரு காரியமாகும்; உயர்ந்த வட்டிவீதம் கொடுத்தால் அன்றி, இந்தியாவில் மூலதனம் திரட்டமுடியாது என்பதுதான் இதற்கான விடை. இலண்டனைத்தவிர மற்றெந்த இடத்திலும் இத்தகைய குறைந்த கட்டணத்தில் பணத்தைத் திரட்டமுடியாது என்பது மறுக்க முடியாத உண்மையாகும்.

[1] Financial Developments in Modern India, by C. N. Vakil.

[2] The Economic Transition in India, by Sir Theodore Morison, chap. viii.

[3] இருப்புச் சரக்குகளைப் பொறுத்த அளவில், இந்தியாவில் உற்பத்தியான பொருள்களை அதிகமாக வாங்கியிருக்கலாம் என்று வாதாடலாம். நாம் முன்னரே கண்டது போல், முடிந்தவரையில் இந்தியாவில் உற்பத்தியான பொருள்களையே வாங்குவது என்கிற கொள்கை இப்பொழுது கையாளப்பட்டு வருகிறது.

உற்பத்தியாக்காக் கடன்களுக்கான வட்டிச் செலவு போருக்கு முற்பட்ட காலத்தில் மிகக்குறைவாகவே இருந்தது. இங்கிலாந்துக்கு இந்தியா அளித்த போர்க் கொடைகளிஞல்தான், போர்க்காலத்தில் இந்தியாவின் உற்பத்தியாக்காக் கடன்கள் அதிகரித்தன. போர்க்கொடைகள் ரூபாய்க்கடன்களாகவே கொடுக்கப்பெற்றதால், இங்கிலாந்தில் கொடுக்க வேண்டிய தொகை அதிகரிக்கவில்லே. இங்கிலாந்துடன்இந்தியா கொண்டுள்ள அரசியல்மற்றும் நிருவாகத்தொடர்புகள் காரணமாகப் பின்வரும்இனங்கள்எழுகின்றன: உற்பத்தியாக்காக்கடன்களுக்காக இங்கிலாந்தில் கொடுக்கப்பட வேண்டிய வட்டித் தொகை; ஓய்வுபெற்ற ஆங்கிலேய அதிகாரிகளுக்கு அளிக்கப்பட வேண்டி ஓய்வூதியச் செலவு; ஆங்கிலேய அதிகாரிகள் விடுமுறையில் செல்லும்போதுஅளிக்கப்பெற வேண்டிய சம்பளமும் மற்றச் செலவுகளும்; இந்தியஅலுவலகத் (India Office) தின்செலவுகள். இத்கைய செலவுகளுக்குப்பதிலாக இந்தியாவிற்குக் கட்ற்படைத் தற்காப்பும், உள்நாட்டில் அமைதியும் பாதுகாப்பும் பேணுவதற்கும்.[1] இங்கிலாந்து உதவியாக இருந்தது. ஆங்கிலேய அதிகாரிகளின் பலவகையான பணிகளேயும் பெறும் வாய்ப்பு இந்தியாவுக்குக்கிடைத்தது. கடற்படைத் தற்காப்பு, தரைப் படையின் பெருமை, பாதுகாப்பு இவைகளிஞல் கிடைக்கும் பயன்களும், இந்திய ஆட்சிப்பணியாளர் தொகுதி (ஐ. சி. எஸ்) இந்தியக் கல்விப் பணியாளர் தொகுதி இவற்றின் பயிற்சியும் திறமையும் உள்ள ஆங்கிலேய அதிகாரிகளின் பணிகளும், ஐரோப்பியப் போலீஸ், பாசன வேலேகள் மற்றைய ஆங்கிலேய அதிகாரிகள் இவர்களால் இந்தியாவுக்குக் கிடைத்த பலன்களே விட இவையெல்லாவற்றிற்கும் ஆன செலவுகள் அதிகமாக இருந்தன என்று ஒருபக்கம் வாதிடப்பட்டது. மற்றொரு பக்கம், சிவில் துறையிலும், இராணுவத்துறையிலும் சில இனங்கள் நியாயமில்லாமல் இந்தியக்கணக்கில் சேர்க்கப் பெற்றன. சிவில் இராணுவப் பொறியியல் துறைகளில் ஆங்கிலேயர்களுக்குப்பதிலாக இந்திய அதிகாரிகளே நியமித்திருந்தால் அதே பணிகள் குறைந்த செலவில் கிடைத்திருக்கும் என்றும் கூறப்படுகிறது. செலவுகள் மூலம் இந்தியாவுக்குப்பல நன்மைகள் கிடைத்தன என்ற முடிவுக்கு வருவதும், எந்தவித நிதித் தவறும் இழைக்கப்படவில்லே அதோடுகூட எந்த ஒரு செல

[1] எல்லேப்புறப் போர் போன்ற அவசியமில்லாத போர்கள் தொடுக்கப் பெற்றன என்று வாதிடலாம். இது உண்மையாக இருக்கலாம். இத்தகைய நடவடிக்கைகளில் எந்த ஓர் அரசாங்கமும் அப்பழுக்கில்லாமல் நடந்து கொள்வதில்லே. ஆனுல், ஆங்கிலேய ஆட்சி இந்தியாவுக்கு வருவதற்குமுன் பல நூற்ருண்டுகளாக இருந்ததை விட, இந்தியாவுக்கு ஆங்கிலேய ஆட்சியின் மூலம் பாதுகாப்பு அதிகமாகக் கிடைத்தது என்பது மட்டும் திண்ணம்.

வினமும் நியாயமற்றமுறையில் இந்தியக் கணக்கில் சேர்க்கப் படவில்லை என்று கூறுவதும் ஒன்றுகா. எடுத்துக்காட்டாக இந்தியாவைக் கைப்பற்றுவதற்கான இராணுவச் செலவையும் கிழக்கிந்தியக் கம்பெனியாரின் கடன் ஈட்டுப்பத்திரங்களுக்கான வட்டிச்செலவையும், கிழக்கிந்தியக் கம்பெனியாரிடமிருந்து ஆங்கிலேய அரசாங்கம் ஏற்றுக்கொண்டபிறகும்கூட இவை களை இந்திய அரசாங்கத்தின் செலவுகளாக நடத்தியிருக்கக் கூடாது என்கிற வாதம் நியாயமானதே. இந்தியர்களுக்கு, உயர்தரக் கல்வியும், தொழில் நுட்பப்பயிற்சியும் அளிக்க வசதிகள் ஏற்படுத்தப்படும்வரையில் சிவில் துறையிலும் இராணுவத் துறையிலும் பணியாற்றுவதில் ஆங்கிலேய இந்திய அதிகாரிகளுக்குள் எவர் திறன்வாய்ந்தவர் என்னும்பிரச் சினையில் எண்ண வேறுபாடு நிலவத்தான் செய்யும். ஆனால் ஆங்கிலேய அதிகாரிகளின் பணிகளை முற்றிலும் தவிர்க்கமுடி யாது. அல்லது அவர்களுடைய சிறந்த பணிகளைப்பெறுவதற் காக இந்தியர்களைவிட அவர்களுக்கு அதிக ஊதியம் கொடுக்க வேண்டும் என்பதையும் யாரும் மறுக்கமுடியாது. ஆங்கிலேய அதிகாரிகளின் மட்டு மிஞ்சிய செலவுக்கும், அட்டூழியங்களுக் கும் போதுமான அல்லது சற்று அதிகமாகவே தள்ளுபடி செய்து பார்த்தாலும், இந்தியாவுக்கு பலன்கள் கிடைக்கவில்லை என்று யார்தான் ஐயமுற முடியும்? இந்தியாவுக் கென்று ஒரு கடற்படை அமைக்கவேண்டுமானால் என்ன செலவாகியிருக் கும்! இந்தியச் செலவுகளின் (Home Charges) ஒவ்வோர் இனத் திலும் இருந்த நாட்டுப்பற்றை ஒத்துக்கொண்டாலும் இந்திய மூலதனம் வற்றுகிறது என்று முறையீடு செய்யும் அளவுக்கு இந்தத்தொகை இல்லை என்பது தெளிவாகும். வேண்டுமானால் சாதாரணக் கடன்கள் எல்லாவற்றையும் தள்ளுபடி செய்து, இந்திய அதிகாரிகளையே முற்றிலும் நியமித்து இந்திய அலு வலகத்தைப் பேணுவதற்காக எந்தத்தொகையும் கொடுக்காமல் தேவையான எல்லாக் கடன்களையும் இந்தியாவிலேயே திரட்டுவதாகக் கற்பனை செய்துபார்த்தால், சேமிப்புக்கிடைத் திருக்கலாம். ஆனால் இந்தியாவின் தற்காப்புக்குத்தேவையான இராணுவத்தையும், கடற்படையையும் தானே அமைத்து நிரு வகிக்கும் சக்தி இருந்தால்தான் இந்தச் சேமிப்பும் கிடைக்கும். இவை அனைத்தையும் செய்திருந்தால் சேமிப்புக்குப் பதிலாக அதிகச் செலவுதான் ஆகியிருக்கும்.[1]

[1] சிலவகைச் சிவில் செலவுகள் நியாயமற்ற முறையில் இந்திய அரசாங்கத்தின் கணக்கில் சேர்க்கப்பட்டு வந்தன. இது தவறு என்று பின்னர் உணர்ந்து, இலண்டனில் உள்ள இந்திய அலுவலகத்தின் செலவுகளை இந்திய அரசாங்கக் கணக் கிலிருந்து இங்கிலாந்து அரசாங்கத்தின் கணக்குக்கு மாற்றி வைக்கப்பெற்றது.

[1] *V.* Modern India, ed. Sir John Cumming, chap. xvi.

அட்ட

1900-1 க்குப் பிறகு

A. முக்கிய இறக்குமதிகளின் மதிப்பு.[1]

பொருள்கள்	1900–1 ஆம் ஆண்டில்	1899–1900[2]—1903–04க்கான ஐந்தாண்டுச் சராசரி	1904-5க்கும் 1908-9க்குமான ஐந்தாண்டுச் சராசரி	1909-10 1913–14 கான ஐந்தாண்டுச் சராசரி	1914-15 1918–19க்கான ஐந்தாண்டுச் சராசரி
பருத்தி :					
கச்சா	70	31	57	102	44
நூலும், முறுக்கிய நூலும் ...	248	240	329	377	494
துணிகள் }	2734	2832	3819	4523	4440
மற்ற உற்பத்திகள் }				468	305
மொத்தம் ..	3052	3103	4206	5470	5283
இருப்பு எஃகுப் பொருள்கள் ...	457	480	792	1248	1011
சர்க்கரை	565	512	879	1317	1470
இயந்திரங்களும் ஆலைக் கருவிகளும் ..	225	279	558	561	513
உலோக எண்ணெய் ...	369	354	330	394	423
மண்ணெண்ணெய் உட்பட ...	345	346	300	271	237
இரும்புச் சாமான்கள் ...	184	189	267	317	279
இரயில்வே தளவாடங்களும் வேகன்களும் ...	134	173	220	611	348
கம்பள நூலும், கம்பள உற்பத்திகளும் ...	219	222	254	324	199
மளிகைச் சாமான்களும் எண்ணெய்ப் பொருள்களும் ...	197	199	265	205	214
இயந்திர வாகனங்களும் அதன் கருவிகளும் ...	புள்ளி விவரம் கிடைக்க வில்லை		464	1795	111
இரசாயனங்களும், மருந்து வகைகளும் ...	60	61	70	193	321
பட்டு (கச்சாப்பட்டும் உற்பத்தியும்)	267	254	285	394	393

1 இந்த அட்டவணையில் பொருள்கள் அவைகளின் 1925–26ஆம் ஆண்டின் முக்கியத்துவத்திற்கு ஏற்ப வரிசைப்படுத்தப்பட்டுள்ளன.

3 மோட்டார்க் கார்கள், மோட்டார் சைகிள், பஸ் வண்டிகள் இவைகளின் பாகங்கள், கருவிகள் இவை அனைத்தும் உட்பட.

5 ஐந்தாண்டுச் சராசரி கிடைக்காததால், 1913–14 ஆம் ஆண்டின் புள்ளி விவரங்கள் மட்டும் கொடுக்கப்பட்டுள்ளன.

வேண (16)

முக்கிய இறக்குமதிகள்

(இலட்ச ரூபாயில்) தனியார் வாணிபம்.

1919–20 1923–24 க்கான ஐந்தாண்டுச் சராசரி	1924–25 1928–29 க்கான ஐந்தாண்டுச் சராசரி	1929–30 1933–34 க்கான ஐந்தாண்டுச் சராசரி	1934–35 ஆம் ஆண்டில்	1935–36 ஆம் ஆண்டில்	1936–37 ஆம் ஆண்டில்	1936–37 ஆம் ஆண்டில்[7]	1937–38 ஆம் ஆண்டில்[7]	1938–39 ஆம் ஆண்டில்[7]
200	471	553	528	674	584	587	1212	850
932	742	368	310	371	254	244	250	292
5825	5692	2346	1693	1578	1336	1195	1169	1027
356	394	253	187	166	159	117	135	94
7315	7299	3520	2704	2789	2333	2144	2768	2266
2135	1907	909	638	722	594	525	821	667
1998	1737	796	211	190	23	19	18	45
2164	1619	1336	1264	1368	1413	1276	1714	1904
828	1014	919	616	601	599	1505	1757	1478
443	516	407	260	216	195	714	762	645
578	536	343	305	326	289	263	331	257
1207	4776	—	—	—	—	—	—	—
261	472	274	386	278	281	265	414	281
295	510	391	269	311	320	227	260	248
479	541	431	469	455	455	469	618	438
394	429	465	484	523	489	452	568	525
573	466	364	337	277	241	238	285	194

[2] ஐந்தாண்டுச் சராசரி.

[4] நான்கு ஆண்டுச் சராசரி. இதற்குமுன் இந்த இனம் தனியாகப் பதிவாகவில்லை.

[6] நான்கு ஆண்டுச் சராசரி. 1927–28–ல் இந்த இனம் மற்றத் தலைப்புகளில் பங்கிடப்பட்டிருந்தது.

பி. கு. Annual Review of the Trade of India என்ற வெளியீட்டின் உதவியால் இந்தப் பட்டியலைத் தற்காலத்திற்கு பொருத்தமாக அமைக்கலாம்.

அட்ட

1900–1-க்குப் பிறகு

A. முக்கிய ஏற்றுமதிகளின் மதிப்பு

பொருள்கள்	1900–1 ஆம் ஆண்டில்	1899–1900 1903–04 க்கான ஐந்தாண்டுச் சராசரி[2]	1904–5 1908–9க் கான ஐந்தாண்டுச் சராசரி	1909–10 1913–14க் கான ஐந்தாண்டுச் சராசரி
பருத்தி :				
கச்சா	1012	1472	2124	3327
துணிகள்	153	169	229	227
முறுக்கிய நூலும் நூலும் ...	417	755	1022	913
மொத்தம் ...	1583	2396	3375	4468
சணல் :				
கச்சா	1086	1071	1874	2220
உற்பத்திகள்	786	828	1442	2025
மொத்தம் ...	1873	1899	3316	4245
தானியம், பருப்பு வகைகள் மாவு ...	1404	2169	2964	4581
எண்ணெய் வித்துக்கள்	901	1305	1330	2436
தேயிலை	955	854	928	1306
தோல், பதனிட்ட தோல்	1148	950	1248	1460
அரக்கு	106	254	323	220
உலோகங்களும் உற்பத்தியான உலோகப் பொருள்களும் ..	புள்ளி விவரங்கள் கிடைக்கவில்லை		82	54
கம்பள நூலும் ஆடைகளும் ...	114	137	266	294
உலோகக் கனி	புள்ளி விவரம் கிடைக்கவில்லை		114	114
அபின்	945	893	948	996
எண்ணெய் (உலோக எண்ணெயும் தாவர எண்ணெயும்	65	82	186	91

[1] இந்த அட்டவணையில் பொருள்கள் அவைகளின் 1925–26 ஆம் ஆண்டின் முக்கியத்துவத்திற்கு ஏற்றவாறு வரிசைப்படுத்தப்பட்டுள்ளன.

[2] ஐந்தாண்டுச் சராசரி.

வணை (17)

முக்கிய ஏற்றுமதிகள்

(இலட்ச ரூபாயில்)[1]. தனியார் வாணிபம்

1914-15 முதல் 1918-19 வரை ஐந்தாண்டுச் சராசரி	1919-20 முதல் 1923-24 வரை ஐந்தாண்டுச் சராசரி	1924-25 முதல் 1928-29 வரை ஐந்தாண்டுச் சராசரி	1929-30 முதல் 1933-34 வரை ஐந்தாண்டுச் சராசரி	1934-35 ஆம் ஆண்டில்	1935-36 ஆம் ஆண்டில்	1936-37 ஆம் ஆண்டில்	1936-37 ஆம் ஆண்டில்	1937-38 ஆம் ஆண்டில்	1938-39 ஆம் ஆண்டில்
3363	6473	7190	3634	3495	3377	4440	4316	2902	2385
453	800	686	376	175	200	252	505	614	456
718	905	271	127	63	47	58	110	202	187
4535	8180	8147	4137	3734	3624	4750	8932	3721	3030
1280	1952	3136	1438	1087	1370	1477	1477	1471	1359
4019	4312	5486	2976	2147	2349	2794	2910	2907	2626
5299	6268	8622	4414	3234	3719	4271	4387	4379	3985
3741	3282	4179	2257	1484	1240	1538	656	948	774
1217	2353	2763	1677	1054	1033	1846	1859	1418	1509
1754	2692	2972	2120	2013	1982	2003	2021	2438	2342
1707	1569	1972	1064	861	413	443	427	504	384
257	841	1602	316	330	158	234	233	162	126
82	255	711	469	319	405	493	220	358	342
410	408	537	362	219	292	373	376	372	384
189	303	534	208	272	368	308	146	254	148
216	232	25	87	7	0	0	0	0	0
187	377	155	57	55	63	69	104	101	103

[1] பர்மா நீங்கலாக.

பி.கு.:=Annual Trade of India என்ற வெளியீட்டின் உதவியால் இந்த அட்டவணை தற்காலத்திற்குப் பொருத்தமாக அமைக்கலாம்.

அட்டவணை (16) தொடர்ச்சி

B. முக்கிய இறக்குமதிகளின் அளவு. தனியார் வாணிபம்.

பொருள்கள்	1900-1 ஆம் ஆண்டில்	1909-10 முதல் 1913-14 வரை ஐந்தாண்டுச் சராசரி	1914-15 முதல் 1918-19 வரை ஐந்தாண்டுச் சராசரி	1919-20 முதல் 1923-24 வரை ஐந்தாண்டுச் சராசரி	1924-25 முதல் 1928-29 வரை ஐந்தாண்டுச் சராசரி	1929-30 முதல் 1933-34 வரை ஐந்தாண்டுச் சராசரி	1934-35 ஆம் ஆண்டில்	1935-36 ஆம் ஆண்டில்	1936-37 ஆம் ஆண்டில்	1936-37 ஆம் ஆண்டில்[3]	1937-38 ஆம் ஆண்டில்[3]	1938-39 ஆம் ஆண்டில்[3]
பருத்தி :												
கச்சா (1000 டன்கள்) ...	11	12	2	12	36	57	61	77	65	66	134	96
நூலும் முறுக்கிய நூலும் 1,000,000 பவுண்டுகள்) ...	34	41	34	44	50	36	34	44	28	27	21	36
துணிகள் (1,000,000 கெசங்கள்) ...	2004	2616	1810	1335	1752	1094	943	946	762	698	590	647
இரும்பு எஃகுப் பொருள்கள் (1000 டன்கள்) ...	262	808	422	661	992	522	370	449	363	330	369	272
சர்க்கரை (1000 டன்கள்)[2] ...	263	634	472	444	798	637	223	201	23	19	14	36
உலோக எண்ணெய் (1,000,000 காலன்கள்) ...	80	90	82	138	209	217	200	232	238	410	481	444

[1] ஐந்தாண்டுச் சராசரி.

[2] சர்க்கரைப் பாகு, இனிப்புப் பண்டங்கள், செயற்கைச் சர்க்கரை இவைகள் நீங்கலாக. இவைகளும் உட்பட 1926–27 ஆம் ஆண்டில் மொத்த அளவு 924,000 டன்கள் இருந்தது.

[3] பர்மா நீங்கலாக.

பின் குறிப்பு : இக் காலத்தில் பின்வரும் பொருள்களின் முக்கியத்துவம் வளர்ந்து, முக்கிய இறக்குமதிகளின் இடத்தையும் பெற்றன: கருவிகள், செயற்கைக் கருவிகள், தூணைக் கருவிகள், செயற்கைப்பட்டு, சாயங்கள், காகிதம், காகித அட்டைகள். Annual Reveiw of the Trade of India வெளியீட்டின் உதவியால் இந்தப் பட்டியலைத் தற்காலத்திற்குப் பொருத்தமாக அமைக்கலாம்.

அட்டவணை XVII (தொடர்ச்சி)

B. முக்கிய ஏற்றுமதிகளின் அளவு. தனியார் வாணிபம்.

பொருள்கள்	1900/1 ஆம் ஆண்டில்	1909/10-1913/14க் கான ஐந்தாண்டுச் சராசரி	1914/15-1918/19க் கான ஐந்தாண்டுச் சராசரி	1919/20-1923/24க் கான ஐந்தாண்டுச் சராசரி	1924/25-1928/29க் கான ஐந்தாண்டுச் சராசரி	1929/30-1933/34க் கான ஐந்தாண்டுச் சராசரி	1934/35 ஆம் ஆண்டில்	1935/36 ஆம் ஆண்டில்	1936/37 ஆம் ஆண்டில்	1936/37 ஆம் ஆண்டில்[1]	1937/38 ஆம் ஆண்டில்[1]	1938/39 ஆம் ஆண்டில்[1]
பருத்தி :												
கச்சா (1,000 டன்கள்)	178	430	391	521	610	514	625	606	762	759	488	483
நூலும் முறுக்கிய நூலும் (1,000,000 பவுண்டுகள்).	118	192	129	81	31	20	12	9	12	21	40	37
துணிகள் (1,000,000 கஜங்கள்)	69	90	156	237	171	78	57	69	96	183	225	166
சணல் :												
கச்சா (1,000 டன்கள்)	620	764	464	554	768	665	752	771	821	821	747	690
தானியம், பருப்பு வகைகள், மாவு (1,000 டன்கள்) ...	1,630	4,411	3,141	2,009	2,967	2,332	1,765	1,553	1,878	621	878	742
தேயிலை (1,000,000 பவுண்டுகள்)	190	266	322	320	347	354	324	312	301	305	334	350
எண்ணெய் வித்துகள் (1,000 டன்கள்) ...	549	1,453	708	923	1,191	1,015	875	673	1,156	1,162	951	1,199
தோல், பதனிட்ட தோல் (1,000 டன்கள்)[2] ...	73	50	57	53	56	40	40	49	51	45	52	39
உலோகங்களும் உலோக உற்பத்திகளும் (1,000 டன்கள்)	136	52	72	133	543	641	631	769	860	713	724	605
உலோகக் கனிகள் (1,000 டன்கள்)		619	495	681	679	433	515	793	748	737	1,180	904

[1] பர்மா நீங்கலாக.

[2] பதனிட்ட தோலின் ஏற்றுமதி 1914ஆம் ஆண்டிலிருந்து பெருகி, போர்களின் இடைக்காலத்தில் பதனிடாத தோலின் ஏற்றுமதியைவிட அதிகமாக இருந்தது.

பி.கு.—'Annual Trade of India.' என்ற வெளியீட்டின் உதவியால் இந்த அட்டவணையைத் தற்காலத்திற்குப் பொருத்தமாக அமைக்கலாம்.

அட்டவணை XVIII

1891-92, 1901-02, 1911-12, 1920-21[1] ஆண்டுகளில் இந்திய அரசாங்கத்தின் நிகர வருவாயும் செலவும் (இலட்ச ரூபாயில்)

வருவாய்		1891-92	1901-2	1911-12	1920-21
I. நிலவருவாயும் பிறவும்	நிலவருவாய்	22,89	26,26	30,00	30,74
	காடுகள்	1,45	1,73	2,91	1,66
	சுதேச அரசுகளின் கப்பங்கள்	72	83	59	60
II. அபின்		6,14	4,86	7,84	2,30
III. வரிவிதிப்பு ...	உப்பு	8,18	8,51	4,70	5,80
	முத்திரை	4,21	5,11	7,13	10,82
	ஆயத்தீர்வை	5,05	6,02	11,29	20,14
	மாகாணக் கட்டணங்கள்	3,49	1,55	82	6
	சுங்க வரிகள்	1,63	5,60	9,43	30,95
	நிர்ணயிக்கப்பட்ட வரிகள்[2]	1,63	2,04	2,46	20,91
	பதிவுக் கட்டணம்	39	46	66	1,11
	மொத்தம் ...	24,62	29,31	36,52	89,81
IV. வாணிபத் துறைகள் ...	இரயில்வேக்கள்	—	1,26	5,68	5,63
	பாசனங்கள்	நிகரச்	25	1,20	1,17
	தபால் தந்தி நிலையங்கள்	செலவு	20	17	18
	மொத்தம் ...	—	1,72	7,06	7,60
V. பலவகையான வரவுகள் (நாணயச்சாலை உட்பட)		24	7	37	44
VI. நாணயமாற்று		1,06	3	15	7,61
	நிகர வருவாய் ...	57,17	64,85	85,48	140,78

[1] புள்ளிவிவரங்களைக் கணக்கிடுவதிலும், பாகுபாடு செய்யும் முறையிலும் அவ்வப்போது மாறுதல்கள் இருந்ததால், வரவுசெலவுத் திட்டங்களில் குறிப்பிட்ட விவரங்களும், அரசாங்க வெளியீடுகளில் குறிப்பிட்ட விவரங்களும் ஒத்தனவாக இல்லை. ஒப்பிட்டுப் பார்க்கும் புள்ளிவிவரங்களைப் பெறுவதற்காக, 1891-92, 1901-02, 1911-12 ஆம் ஆண்டுகளுக்கு 'Moral and Material Progress of India' என்கிற அறிக்கைகளில் வெளியான புள்ளி விவரங்களை எடுத்துக்கொண்டு, அவற்றை ஸ்டெர்லிங்கிலிருந்து (1 ரூ.=1 ஷில். 4பென்சு என்ற வீதத்தில்) ரூபாய்க்கு மாற்றியிருக்கிறேன். 1911-12ஆம் ஆண்டுக்கு 'Moral and Material Progress of India' வெளியிட்ட புள்ளிவிவரங்கள், 'புள்ளிவிவரச் சுருக்கம்' (Statistical Abstract) என்ற அரசாங்க வெளியீட்டுடன் முற்றிலும் ஒத்திருந்தன. ஆகவே, 1920-21 ஆம் ஆண்டுக்கான புள்ளிவிவரங்களையும் புள்ளிவிவரச் சுருக்கத்திலிருந்தே கையாண்டிருக்கிறேன். காடுகளிலிருந்து கிடைத்த வருவாயில் ஒரு திருத்தம் செய்யவேண்டியிருந்தது. புள்ளிவிவரச் சுருக்கத்தில் காடுகளிலிருந்து நிகர வருவாய்க்குப் பதிலாக மொத்த வருவாய் தவருகக் கொடுக்கப்பட்டிருக்கிறது.

[2] நிர்ணயிக்கீப்பட்ட வரிகள் என்பன வழமான வரிக்குச் சமனளவை.

அட்டவணை XVIII (தொடர்ச்சி)

செலவு		1891–92	1901-2	1911-12	1920–21
I.	கடன் பணிகள் (பயனில் சுமைக் கடன்)	3,60	1,73	88	12,07
II.	இராணுவச் செலவு	23,58	24,24	29,33	87,38
III.	வருவாய் திரட்டல் செலவு	5,90	6,77	9,57	16,09
IV.	வாணிபத் துறைகள் — இரயில்வேக்கள்	68			
	பாசனங்கள்	67	நிகர	வருவாய்	
	தபால்-தந்தி நிலையங்கள்	—1			
	மொத்தம்	1,34			
V.	சிவில் துறைகள் — சிவில் துறைகள்	12,22	12,94	22,84	42,00
	பலவகைச் சில்லறை வேலைகள்	4,44	5,41	6,28	—1,43
	சிவில் வேலைகள்	4,58	3,48	7,69	12,02
	மொத்தம்	21,25	21,83	36,81	52,59
VI.	பஞ்ச நிவாரணமும் பஞ்சத் தடுப்பும்	1,26	1,32	1,50	1,50
VII.	மாகாணச் சரிக்கட்டல்கள் :				
	உதவித் தொகைகளில் செலவிடப்படாத தொகையை மாகாண இருப்புகளுடன் சேர்க்கவும்	—	1,48	1,45	86
	மாகாணச் செலவில் மாகாண இருப்புகளிலிருந்து செலவிடப் பட்டதைக் கழிக்கவும்	24	—	—	—
	நிகரச் செலவு	56,71	57,43	79,57	170,52
	நிகர உபரி	46	7,42	5,91	—
	நிகரப் பற்றுக்குறை	—	—	—	26,00[1]

[1] புள்ளிவிவரக் கணக்குப்படி பற்றுக்குறை 29,74 ஆக இருந்தது. ஆனால், வரவுசெலவுத் திட்டத்திலும், புள்ளிவிவரச் சுருக்கத்திலும் 26,00 என்று குறிப்பிடப்பட்டது. இராணுவச் செலவு, கடன் பணிகள் இவைகளுக்கான செலவுகள் புள்ளிவிவரச் சுருக்கத்தைவிட வரவுசெலவுத் திட்டத்தில் குறைவாகக் குறிப்பிடப்பட்டிருந்தது. ஆகவே, இந்த இரண்டு தலைப்புகளிலும் சிறு தொகையைக் கழிக்கவேண்டும். இதைத் தவிர இரண்டுவகைப் புள்ளிவிவரங்களும் ஒத்திருந்தன.

பி.கு.—சில இனங்களில், மொத்தத் தொகைக்கும் தனி எண்களுக்கும் உள்ள சிறிதளவு வித்தியாசம் எண்களை ஆயிரங்களிலிருந்து இலட்சத்திற்கு மாற்றுவதால் எழுந்ததாகும்.

அட்டவணை XIX

1921ஆம் ஆண்டின் சீர்திருத்தங்களுக்குப் பிறகு மத்திய அரசாங்கத்தின் நிகர வருவாயும் செலவும்

(i) நிகர வருவாய் (இலட்ச ரூபாயில்)

வருவாய்த் தலைப்புகள்	1921–22	1922–23க்கும் 1926–27க்கும் இடைக்கால சராசரி	1927–28	1928–29	1929–30	1930–31	1931–32	1932–33	1933–34	1934–35	1935–36	1936–37	1937–38
முக்கிய வருவாய்த் தலைப்புகள் :													
சுங்கங்கள் ...	33,75	43,63	47,37	48,34	50,30	45,91	45,53	51,02	46,18	51,56	51,08	50,03	49,49
வருமானங்களின் வரிகள்...	18,51	16,17	14,41	16,01	15,99	15,26	16,75	17,19	16,30	16,70	16,16	14,45	13,83
உப்பு	4,77	6,15	5,37	6,37	5,49	5,57	7,42	8,96	7,71	6,85	7,24	7,73	7,33
அபின்	1,27	2,08	3,07	2,72	2,55	1,79	1,27	7	88	37	27	19	26
மற்றத் தலைப்புகள் ...	1,17	1,71	1,75	1,62	1,63	1,35	1,62	1,27	1,26	65	52	44	51
மொத்தம் ...	59,49	69,74	71,97	75,07	75,96	69,88	72,59	78,51	72,33	76,13	75,27	72,84	71,52
வர்ணிபத் துறைகள்:													
இரயில்வேக்கள்	—	5,19	6,28	5,23	6,12	5,73	—	—	—	—	—	—	2,76
தபால்-தந்தித் துறை	—	76	—	—	—	—	—	—	—	37	—	10	53
பாசனம்	—	—	—	—	—	—	—	—	—	—	—	—	—
மொத்தம் ...	—	5,95	6,28	5,23	6,12	5,73	—	—	—	37	—	10	3,29
செலாவணியும் நாணயச்சாலையும் ...	3,30	3,06	1,90	2,17	1,99	27	1,03	1,65	74	75	75	81	38
பலவகையான சிவில் பணிகள் ...	5,79	—	—	—	—	—	—	—	—	2,72	2,73	3,12	2,93
மாகாண உதவித் தொகைகளும் பலவகையான சரிக்கட்டல்களும்	12,98	7,60	2	3	—	—	—	—	—	—	—	—	—
வழக்கமீறிய செலவினங்கள்	—	53	—	1,03	1,89	84	18	—	—	2,01	88	41	4,55
ஆக மொத்தம் ...	81,56	86,88	80,17	83,53	85,96	76,72	73,80	80,16	73,07	81,98	79,63	77,28	82,67

அட்டவணை XIX (தொடர்ச்சி)

(ii) நிகரச் செலவு (இலட்ச ரூபாயில்)

செலவுத் தலைப்புகள்	1912–22	1922–23க்கும் 1926–27க்கும் இடைக்காலச் சராசரி	1927–28	1928–29	1929–30	1930–31	1931–32	1932–33	1933–34	1934–35	1935–36	1936–37	1937–38
வாணிபப் பணிகள் :													
இரயில்வேக்கள்	9,08	—	—	—	—	—	—	—	—	—	—	—	—
பாசனம்	8	6	8	13	20	31	9	4	4	5	4	15	8
தபால்-தந்தித் துறை	1,09	—	47	74	81	1,55	41	47	57	—	—	—	—
உப்பு, காடுகள், மற்றும் வருவாயிலிருந்து செலவான மூலதனச் செலவு ...	—	6	13	4	5	4	1	2	1	1,41	1,50	1,66	1,61
மொத்தம் ...	10,25	12	68	91	1,06	1,90	51	53	62	1,46	1,54	1,81	1,69
கடன் பணிகள்	14,88	14,24	11,99	12,82	12,18	14,04	17,31	16,58	10,66	10,25	10,50	9,56	12,48
சிவில் நிருவாகம்	8,63	9,53	10,23	10,43	11,50	12,37	11,23	8,82	8,77	11,10	10,59	11,27	10,44
பலவகையான சிவில் துறைகள் (வயது முதிர்வு ஓய்வூதியம், பஞ்ச நிவாரணம் முதலியன உட்பட).	4,18	3,82	3,23	3,16	3,50	3,34	2,77	3,30	3,42	4,37	4,21	3,90	3,84
சிவில் வேலைகள்	1,42	1,48	1,42	1,42	2,36	2,35	1,96	1,54	1,71	1,23	90	1,06	1,09
இராணுவச் செலவு	69,81	57,82	54,79	55,10	55,10	54,30	51,76	46,74	44,43	44,34	44,98	45,45	7,35
வழக்கமீறிய செலவினங்கள்	—	—	4	—	—	—	—	1,10	3,46	8,86	6,91	6,02	5,78
ஆகமொத்தம் ...	109,16	87,01	82,38	83,84	85,70	88,30	85,54	78,61	73,07	81,62	79,63	79,07	82,67
உபரி ...	—	—	30	—	26	—	—	1,55	—	36	—	—	—
பற்றுக்குறை ...	27,65	13	—	31	—	11,58	11,74	—	—	—	—	1,79	—

பி.கு.—'Annual Budget for British India' என்கிற வெளியீட்டின் உதவியால் இந்த அட்டவணையைத் தற்காலத்திற்குப் பொருத்தமாக அமைக்கலாம். சில இனங்களில், மொத்தத் தொகைக்கும் தனி எண்களுக்கும் உள்ள சிறிதளவு வித்தியாசம், எண்களை ஆயிரங்களிலிருந்து இலட்சத்திற்கு மாற்றுவதால் எழுந்தது.

அட்டவணை XX

1921-22க்குப் பிறகு முக்கிய வருவாய் மூலங்களும் செலவினங்களும்

(i) முக்கிய வருவாய் மூலங்கள் (மத்திய, மாகாண அரசாங்கங்கள் இரண்டுக்கும்) (இலட்ச ரூபாயில்)

வருவாய்த் தலைப்பு (நிகரம்)	1921–22	1922–23	1923–24	1924–25	1925–26	1926–27	1927–28	1928–29	1929–30	1930–31	1931–32	1932–33	1933–34
I. நிலவருவாய்[1] மா.அ. ...	28,53	30,37	30,31	32,58	32,67	32,52	31,44	27,85	29,20	26,10	28,99	29,74	28,89
II. வரிவிதிப்பு:													
சுங்கங்கள் ம.அ.	33,75	40,64	38,98	44,98	46,96	46,57	47,37	48,34	50,30	45,91	45,53	51,02	46,18
ஆயத்தீர்வை[1] மா.அ. ...	21,24	17,28	18,12	18,19	17,26	17,44	17,51	17,79	18,22	14,51	12,98	13,04	13,11
உப்பு ம.அ.	4,77	5,31	8,65	6,12[2]	4,90	5,50	5,37	6,37	5,49	5,57	7,42	8,96	7,71
அபின் ம.அ.	1,27	1,92	1,66	1,62	2,03	3,33	3,07	2,72	2,55	1,79	1,27	7	88
வருமானவரி[3] ம.அ., மா.அ. ...	23,32	18,30	18,30	15,89	15,87	15,72	14,81	16,44	16,39	15,58	17,18	17,59	16,70
முத்திரைகள், பதிவுக் கட்டணம்[1] மா.அ.	10,47	11,95	13,10	14,57	13,96	13,64	14,02	14,11	14,42	12,21	12,12	13,00	12,27
மொத்தம் ...	94,82	95,40	98,81	101,37	100,98	102,20	102,15	105,77	107,37	95,57	96,50	103,68	96,85
III. வாணிபத் துறைகள்:													
இரயில்வேக்கள்[4] ம.அ. ...	—9,08	1,21	6,44	6,78	5,49	6,01	6,28	5,23	6,12	5,73	—	—	—
தபால்-தந்தி ம.அ.	—1,09	45	70	80	1,18	— 5	— 47	— 74	— 81	— 1,55	— 41	— 47	— 57
பாசனம்[1] மா.அ.	— 48	1,45	1,12	1,15	1,23	34	1,46	2,03	1,97	1,14	1,76	— 59	1,12
காடுகள்[5] ம.அ., மா.அ. ...	1,35	1,40	1,63	1,99	2,16	2,34	2,69	2,45	2,65	1,33	1,69	79	14
மொத்தம் ...	—9,30	4,51	9,89	10,72	10,06	8,64	9,96	8,97	9,93	6,65	3,04	— 27	69
ஆக மொத்தம் I, II, III ...	114,05	130,28	139,01	144,67	143,71	143,46	143,55	142,59	146,50	128,32	128,53	113,15	126,43

ம.அ.—மத்திய அரசாங்கம். மா.அ.—மாகாண அரசாங்கம்.

[1] இரட்டை ஆட்சி நடைமுறைக்கு வந்துள்ள மாகாணங்களில் நிலவருவாய், ஆயத்தீர்வை, முத்திரைகள், பதிவுக் கட்டணம், பாசனம் இவைகள் மூலம் கிடைக்கும் வருவாய் முற்றிலும் மாகாணங்களேச் சார்ந்ததே. மற்றைய மாகாண்ங்களின் வருவாயிலிருந்து மத்திய அரசாங்கம் ஒரு பங்கைப் பெறுகிறது. இந்தப் பங்கு இந்த அட்டவணையில் மாகாண வருவாயுடன் சேர்க்கப்பட்டிருக்கிறது.

[2] 1924–25லும், அதற்குப் பிந்திய ஆண்டுகளிலும் உப்புத் தொழிலுக்கு அதிகமான மூலதனச் செலவு வருவாயிலிருந்து செலவிடப்பட்டது.

[3] அட்டவணை வரிகளிலிருந்து கிடைத்த வரவுகள், இங்கு வருமான வரியிலிருந்து மாகாணங்களுக்குக் கிடைத்த வரவுகளுடன் சேர்க்கப்பட்டுள்ளன.

[4] உதவித் தொகை பெற்ற இரயில்வேக்களுடன் மாகாண அரசாங்கங்கள் கொண்டிருந்த நடவடிக்கைகள் இதில் சேர்க்கப்படவில்லே. இந்த நடவடிக்கைகளும் மிகக் குறைவானவையே. இதில் சம்பந்தப்பட்ட மாகாணங்கள் வங்காளம், ஐக்கிய மாகாணம், பர்மா, அஸ்ஸாம்.

[5] மத்திய அரசாங்கத்தின் சார்பில் ஒவ்வோர் ஆண்டிலும் ஒரு சிறிய நிகர பற்றுக்குறை இருந்தது.

பி.கு.—ஒவ்வோர் இனத்திலும் நிகர வருவாயே கொடுக்கப்பட்டிருக்கிறது. இந்த அட்டவணை, தனித்தனியாக வெளியிடப்பட்ட மத்திய அரசாங்கக் கணக்குகளிலிருந்தும், மாகாண அரசாங்கக் கணக்குகளிலிருந்தும் தொகுக்கப்பட்டது.

அட்டவணை XX (தொடர்ச்சி)

(ii) முக்கியச் செலவினங்கள் (மத்திய, மாகாண அரசாங்கங்கள் இரண்டுக்கும்) (இலட்ச ரூபாயில்)

செலவினங்கள் (நிகரம்)	1921–22	1922–23	1923–24	1924–25	1925–26	1926–27	1927–28	1928–29	1929–30	1930–31	1931–32	1932–33	1933–34
I. கடன் பணிகள்[1] ம.அ. ...	14,88	15,00	14,16	15,27	14,12	12,66	11,99	12,82	12,18	14,04	17,31	16,58	10,66
II. இராணுவப் பணிகள் ம.அ. ...	69,81	65,26	56,21	55,63	56,00	55,97	54,79	55,10	55,10	54,30	51,76	46,74	44,43
III. சிவில் வேலைகள் ம.அ., மா.அ. ...	11,20	9,26	9,01	8,02	8,95	11,51	12,68	12,75	12,79	12,71	8,72	7,07	7,27
IV. சிவில் நிருவாகம் :													
(i) பொது நிருவாகம் ம.அ., மா.அ. ...	10,96	11,22	11,30	11,83	13,09	11,55	12,89	13,37	13,93	14,12	13,65	12,36	11,71
(ii) நீதி, போலீஸ், சிறைகள் ம.அ., மா.அ. ..	18,80	18,72	17,78	18,02	18,09	17,46	18,67	19,07	19,52	19,39	19,61	18,43	18,55
(iii) வயது முதிர்வு ஓய்வூதியம் ம.அ., மா.அ.	5,61	5,84	5,32	5,32	5,79	4,97	5,73	5,73	6,14	6,48	7,19	7,43	7,67
(iv) கல்வி ம.அ., மா.அ.	8,38	8,53	9,15	9,38	10,53	12,22	11,88	12,42	12,67	12,89	11,90	10,78	10,97
(v) மருத்துவமும் சுகாதாரமும் ம.அ., மா.அ.	4,40	3,74	3,64	4,36	4,90	5,16	5,25	5,57	5,57	5,55	4,82	5,14	4,44
(vi) விவசாயம் ம.அ., மா.அ. ..	1,65	1,58	1,53	1,64	1,78	1,92	2,07	2,20	2,44	2,53	2,18	1,90	2,00
(vii) தொழில்கள் ம.அ., மா.அ. ...	36	39	37	95	1,28	1,31	67	64	72	63	53	41	44
(viii) விஞ்ஞானத் துறைகள்[2] ம.அ., மா.அ. ...	1,14	93	87	79	84	93	99	99	99	99	91	70	70
(ix) துறைமுகங்களும் கப்பல் செலவும்[3] ம.அ., மா.அ.	23	34	30	30	18	23	23	16	15	16	7	17	11
மொத்தம் ம. அ., மா.அ. ...	51,53	51,29	50,26	52,59	56,48	55,75	58,38	60,15	62,11	62,74	60,86	57,32	56,59
V. பஞ்ச நிவாரணம் ம.அ., அ. மா. ...	1,12	89	1,57	1,20	1,15	59	7	— 5	—28	—17	—7	21	—20
I, II, III, IV, V ஆகமொத்தம் ...	148,54	141,70	131,21	132,71	136,70	136,48	137,91	140,77	141,9	143,62	138,58	127,92	118,75

1. மத்திய அரசாங்கத்தின் கடன் செலவுகள்மட்டுமே பயனில் சுமைக் கடன்களாக இருப்பதால், அதற்கான நிகரச் செலவுகள்மட்டுமே இந்த அட்டவணையில் சேர்க்கப்பட்டிருக்கின்றன.

2 இந்த இனத்தின் பெரும்பாலான செலவும் மத்திய அரசாங்கத்தைச் சேர்ந்ததே.

3. இந்த இனங்களில் மத்திய அரசாங்கத்தின் வரவும் செலவும் சமமாக இருந்தன. ஆகவே, மாகாண அரசாங்கத்தின் நிகரச் செலவில், மத்திய அரசாங்கத்திற்குக் கிடைத்த சிறிதளவு நிகர உபரியைக் கழித்தது போகக் கிடைத்த தொகையே இத்தலைப்பில் காணும் எண்கள். இந்த இனங்களிலிருந்து மாகாண அரசாங்கங்களுக்குக் கிடைத்த வருவாய் மிகச் சொற்பமே.

இந்த அட்டவணைக்குப் பிந்திய அண்மைய ஆண்டுகளுக்கான புள்ளிவிவரங்களை 18ஆம் அத்தியாயத்தில் காணலாம்.

பி.கு.—மத்திய அரசாங்கம் ம.அ. என்றும். மாகாண அரசாங்கம் மா.அ. என்றும் குறிப்பிடப்பட்டுள்ளன.

அட்டவணை XXI

1913-14ஆம் ஆண்டில் இருந்த (ஏகாதிபத்திய) மத்திய அரசாங்கத்தின் நிகர வருவாய், நிகரச் செலவு இவைகளுடன், 1925-26ஆம்[1] ஆண்டில் மத்திய அரசாங்கத்திற்கும், ஒன்பது முக்கிய மாகாணங்களுக்கும் ஆன நிகர வருவாயையும் செலவையும் ஒப்பிட்டுக்காட்டும் அட்டவணை.

(i) நிகர வருவாய் (இலட்ச ரூபாயில்)

	1913-14-ல்[2] (ஏகாதிபத்திய) மத்திய அரசாங்கத்தின் வருவாய்	மத்திய, மாகாண அரசாங்கங்கள்	
		1925-26	1914 ஜூலை மாதத்தில் நிலவிய விலைகளின் அடிப்படையில் 1925-26-ல் வருவாய்
I. நிலவருவாய்: :	24,95	32,67	20,54
மாகாணக் கட்டணங்கள் ...	27	—	—
சுதேச அரசுகளிலிருந்து கப்பங்கள்	62	84	52
II. வரி விதிப்பு :			
சுங்கங்கள்	10,62	46,96	29,53
ஆயத்தீர்வை	12,53	17,26	10,85
வருமானங்களின்மேல் வரிகள் ...	2,86	15,87[3]	9,98
உப்பு	4,22	4,90	3,08
அபின்	91	2,03	1,28
முத்திரையும் பதிவும் ...	8,02	13,96	8,78
மொத்தம் ...	39,16	100,98	63,50
III. வாணிகத் தொழில்கள்			
இரயில்வேக்கள்	7,18	5,49[4]	3,45
பாசனம்	1,77	1,23	77
தபால் தந்தி	49	1,18	74
காடுகள்	1,57	2,16[5]	1,36
மொத்தம் ...	11,01	10,06	6,32
IV. பலவகையான வரவுகள் ...	—	75[6]	47
V. செலாவணியும் நாணயச்சாலையும் :			
செலாவணியும் நாணயச்சாலையும்...	31	3,94	2,51
நாணயமாற்று	18	—	—
ஆக மொத்தம் ...	76,50	149,24	93,86

[1] 1923-24-ல் இரட்டை ஆட்சி பெற்ற ஷான் அரசுகள் (Shan States), 1925-26க்கு ஆன எண்களிலிருந்தும், அதேபோன்று 20 (i), (ii) அட்டவணைகளிலிருந்தும் முற்றிலும் நீக்கப்பட்டுள்ளன. 1925-26-ல் அவைகளின் நிகர வருவாய் 43,3 இலட்சங்களும், நிகரச் செலவு 43,7 இலட்சங்களும் ஆக இருந்தன.

[2] 1915-16ஆம் ஆண்டின் நிதி அறிக்கையின் எக்ஸ்பெர்லிங் பதிப்பிலிருந்து தொகுக்கப்பட்டது. அறிக்கையின் எண்கள் ஒரு பவுனுக்குப் பதினைந்து ரூபாய் என்ற வீதத்தில் மாற்றப்பட்டன.

[3] அட்டவணை வரிகளிலிருந்து (Scheduled Taxes) மாகாணங்களுக்குக் கிடைத்த வரவுகளும் சேர்க்கப்பட்டுள்ளன.

[4] உதவித் தொகை பெற்ற மாகாண இரயில்வேக்களின் இருப்பு நீங்கலாக (இந்த இனமும், பலவகையான வரவுகள் IV என்ற தலைப்பும் மிகக் குறைவான வையே).

[5] 1925-26-ல் இத்தலைப்பின்கீழ் மத்திய அரசாங்கத்திற்கு 11 இலட்ச ரூபாய் நிகர நட்டம் ஏற்பட்டது.

[6] மத்திய அரசாங்க வரவுசெலவுத் திட்டத்தில் தனிப்பட்ட இனங்கள் என்று கணக்கிடப்பட்ட 38 இலட்ச ரூபாயும், மாகாண அரசாங்கங்களின் பலவகையான வரவுகளான 37 இலட்ச ரூபாயும் இதில் அடங்கியுள்ளன.

அட்டவணை XXI (தொடர்ச்சி)

(ii) நிகரச் செலவு (இலட்ச ரூபாயில்)

	1913–14-ல் (ஏகாதிபத்திய) மத்திய அரசாங்கத்தின் செலவு	மத்திய, மாகாண அரசாங்கங்கள்	
		1925–26	1914 ஜூலை மாதத்தில் நிலவிய விலைகளின் அடிப்படையில் 1925–26ஆம் ஆண்டுக்கான செலவு
I. கடன் பணிகள்	24	15,63[1]	9,83
II. இராணுவச் செலவும், தற்காப்புச் செலவும்	31,76	56,00	35,22
III. சிவில் வேலைகள்	10,07	8,95	5,63
IV. சிவில் நிருவாகம் :			
பொது நிருவாகம் ...	2,97	13,09	8,23
நிதி, போலீஸ், சிறைகள் ...	12,21	18,09	11,38
வயது முதிர்வு ஓய்வூதியம் ...	4,79	5,79	3,64
கல்வி	4,39	10,53	6,62
மருத்துவமும் சுகாதாரமும் ...	1,89	4,90	3,08
விவசாயம்	70	1,78	1,12
தொழில்கள்	—	1,28	81
விஞ்ஞானத் துறைகள் ...	61[2]	84	53
துறைமுகங்களும் கப்பல் போக்குவரத்தும்	8	18	11
மொத்தம் ...	27,64	56,48	35,52
V. பலவகையான சிவில், அரசியல் செலவு	4,40[3]	6,05[4]	3,80
VI. பஞ்ச நிவாரணமும் தடுப்பும் ...	1,50	1,15	72
ஆக மொத்தம் ...	75,61	144,26	90,72

[1] மாகாண அரசாங்கங்களால் கொடுக்கப்பட வேண்டியிருந்த 1,51 இலட்ச ரூபாய் நிகர வட்டிப் பணமும் உட்பட.

[2] 1913–14 ஆம் ஆண்டில் பலவகையான துறைகளும் (Miscellaneous Departments) விஞ்ஞானத் துறைகளும் இதில் அடங்கியிருந்தன.

[3] மதச் செயல்கள், அரசியல், பலவகையான சிவில் செலவு இவைகளுக்கான 1,30 இலட்ச ரூபாயும், இராணுவ ஓய்வூதியம், அரசியல் ஓய்வூதியம், ஆங்கிலேய அதிகாரிகளின் விடுமுறைச் செலவு, வராதவர் படிகள் (Absentee Allowances), எழுது பொருள், அச்சுத்துறை இவைகளுக்கான 2,10 இலட்ச ரூபாயும் உட்பட.

[4] மாகாணங்களின் பலவகைத் துறைகளுக்கான (எழுதுபொருள், அச்சுத்துறையும் உட்பட) 1,25 இலட்ச ரூபாய்; பலவகையான 'சிவில் பணிகளுக்காக' (எழுது பொருள், அச்சுத் துறை, இராணுவ ஓய்வூதியம், அரசியல் ஓய்வூதியம் உட்பட) மத்திய அரசாங்கம் செலவிட்ட 1,06 இலட்ச ரூபாயும்; காடுகள், மற்றும் வருவாயில் கணக்கிடப்பட்ட மூலதனச் செலவு இவைகளுக்காக மத்திய அரசாங்கம் செலவிட்ட 7 இலட்ச ரூபாய்; அரசியல், மதச் செயல்களுக்காகவும், வான் போக்குவரத்துக்காகவும் மத்திய அரசாங்கம் செலவிட்ட 3,67 இலட்ச ரூபாய்—இவை அனைத்தும் அடங்கியுள்ளன.

அட்டவணை

1925–26–ல் மாகாணங்களின் வருவாயும் செலவும்

மாகாணங்கள்	காடுகள்		பாசனம்
வங்காளம் :			
மொத்த வருவாய் ...	28	வருவாய்	0·4
நிகர வருவாய் ...	15	செலவு	31
		நிகர வருவாய்	–31[1]
பம்பாய் :			
மொத்த வருவாய் ...	75	வருவாய்	42
நிகர வருவாய் ...	32	செலவு	94
		நிகர வருவாய்	–52
சென்னை :			
மொத்த வருவாய் ...	51	வருவாய்	–36
நிகர வருவாய் ...	8	செலவு	47
		நிகர வருவாய்	–83
பஞ்சாப் :			
மொத்த வருவாய் ...	41	வருவாய்	457
நிகர வருவாய் ...	15	செலவு	115
		நிகர வருவாய்	342
ஐக்கிய மாகாணம் :			
மொத்த வருவாய் ...	64	வருவாய்	85
நிகர வருவாய் ...	27	செலவு	75
		நிகர வருவாய்	10
மத்திய மாகாணம் :			
மொத்த வருவாய் ...	49	வருவாய்	1
நிகர வருவாய் ...	14	செலவு	27
		நிகர வருவாய்	–26
பர்மா :			
மொத்த வருவாய் ...	210	வருவாய்	44
நிகர வருவாய் ...	121	செலவு	69
		நிகர வருவாய்	–25
அஸ்ஸாம் :			
மொத்த வருவாய் ...	30	வருவாய்	0
நிகர வருவாய் ...	14	செலவு	0·7
		நிகர வருவாய்	–0·7
பீஹார், ஓரிஸ்ஸா :			
மொத்த வருவாய் ...	10	வருவாய்	22
நிகர வருவாய் ...	2	செலவு	25
		நிகர வருவாய்	–3
நிகர வருவாயின் கூட்டுத் தொகை	2,38	நிகர வருவாய்	1,31

[1] நிகரத்தில் பற்றுக்குறையாகும்.

XXII

(குறிப்பிட்ட சில இனங்களில்) (இலட்ச ரூபாயில்)

	கல்வி	விவசாயம்	தொழில்கள்	மருத்துவம்	சுகாதாரம்
மொத்தச் செலவு	133	20	11	59	24
நிகரச் செலவு	121	18	5	51	24
மொத்தச் செலவு	196	27	1	47	25
நிகரச் செலவு	186	24	1	41	20
மொத்தச் செலவு	187	30	17	59	33
நிகரச் செலவு	181	27	6	55	32
மொத்தச் செலவு	142	38	7	35	16
நிகரச் செலவு	130	31	6	32	15
மொத்தச் செலவு	180	27	10	29	45
நிகரச் செலவு	170	23	10	28	44
மொத்தச் செலவு	52	14	2	11	4
நிகரச் செலவு	47	12	2	10	1
மொத்தச் செலவு	97	20	4	38	11
நிகரச் செலவு	92	20	4	36	11
மொத்தச் செலவு	25	5	1	11	10
நிகரச் செலவு	23	5	1	11	9
மொத்தச் செலவு	77	11	9	28	13
நிகரச் செலவு	72	9	9	20	13
நிகரச் செலவு	10,22	1,69	43	2,84	1,69

அட்டவணை XXIII

இந்தியாவில் விலைக் குறியீட்டு எண்கள்

A. 1873ஆம் ஆண்டில்[1] நிலவிய இந்திய விலைகளின் அடிப்படையில் தயாரிக்கப்பட்ட குறியீட்டு எண்கள்

[நிறையிடாத (unweighted) முப்பத்தொன்பது பொருள்களுக்கு ஆனது]

1873	100	1907	137	1916	184	1925	227	1934	119
		1908	138	1917	196	1926	216	1935	127
1900	116	1909	124	1918	225	1927	202	1936	125
1901	110	1910	122	1919	276	1928	201	1937	136
1902	106	1911	129	1920	281	1929	203	1938	132
1903	99	1912	137	1921	236	1930	171	1939	134
1904	101	1913	143	1922	232	1931	127		
1905	110	1914	147	1923	215	1932	126		
1906	129	1915	152	1924	221	1933	121		

B. 1914ஆம் ஆண்டில்[2] நிலவிய விலைகளின் அடிப்படையில் தயாரிக்கப்பட்ட, கல்கத்தாவிற்கு ஆன மொத்த விலைக் குறியீட்டு எண்கள்.

1914	100	1919	196	1924	173	1929	141	1934	89
1915	112	1920	201	1925	159	1930	116	1935	91
1916	128	1921	178	1926	148	1931	96	1936	91
1917	145	1922	176	1927	148	1932	91	1937	102
1918	178	1923	172	1928	145	1933	87	1938	95
								1939	108

[1] உணவுத் தானியங்கள் நீங்கலாக மற்றப் பொருள்களின் மொத்த விலைகளின் அடிப்படையில் இக்குறியீட்டு எண்கள் தொகுக்கப்பட்டுள்ளன. 1897ஆம் ஆண்டுக்கு முற்பட்ட காலத்திற்கு உணவுத் தானியங்களின் மொத்த விலைகள் கிடைக்கவில்லை. 'பிரிட்டிஷ் இந்தியாவின் புள்ளிவிவரச் சுருக்கம்' என்ற வெளியீட்டின் உதவியால் இந்த அட்டவணையைத் தற்காலத்திற்குப் பொருத்தமானதாக அமைக்கலாம். தொடக்க ஆண்டுகளுக்கான புள்ளிவிவரங்கள் 1861-க்கும் 1918-க்கும் இடையில் வெளியான இந்திய விலைகளின் குறியீட்டு எண்களிலிருந்து (Index Numbers of Indian Prices) திரட்டப்பட்டன. பிற நாடுகளுக்கான குறியீட்டு எண்களையும் இவ்வெளியீடுகள் தருகின்றன.

[2] 'Annual Review of Trade' அல்லது 'The Indian Trade Journal' இவற்றின் உதவியால் இந்த அட்டவணையைத் தற்காலத்திற்குப் பொருத்தமாக அமைக்கலாம். 1913ஆம் ஆண்டின் அடிப்படையில் பிற நாடுகளின் புள்ளிவிவரங்களை உலக நாடுகளின் சங்கம் வெளியிட்ட 'Bulletin Mensuel de Statistique' என்ற வெளியீட்டிலிருந்து பெறலாம்.

அட்டவணை XXIII (தொடர்ச்சி)

C. இந்தியப் பண்டங்களின் தொகுப்புக்கான (Group) விலைக் குறியீட்டு எண்கள்.[1]

	1900–4	1905–9	1910–14	1915–19
பிரிவு I. விலை நிர்ணயத்தில் வெளிநாட்டுத் தேவையே முக்கியக் காரணமாக இருந்த பொருள்கள்.				
(a) பிற நாட்டுப் போட்டிக்கு ஆளான ஏற்றுமதிப் பொருள்கள்.				
பண்டத் தொகுப்பின் சராசரி	92	107	124	152
பின்வருபவை உட்பட :				
உணவுத் தானியங்கள்	89	111	111	136
கச்சாப் பருத்தி	96	104	132	195
பருத்தி நூல்	92	108	128	210
பருத்தித் துணிகள்	101	99	110	121
(b) பிற நாட்டுப் போட்டி குறைவாகவும், போட்டியில்லாமலும் இருந்த பொருள்கள்.				
பண்டத் தொகுப்பின் சராசரி	91	109	117	164
பின்வருபவை உட்பட :				
கச்சாச் சணல்	83	117	143	144
சணல் உற்பத்தி	89	111	127	207
பதனிட்ட தோல்	91	109	123	227
தேயிலை	90	110	134	146
பிரிவு II. பெரும்பாலும் உள்நாட்டுச் சந்தையிலேயே விலையான பொருள்கள்.				
பண்டத் தொகுப்பின் சராசரி	90	110	112	161
பின்வருபவை உட்பட :				
தானியங்களும் பருப்பு வகைகளும் ...	87	113	107	152
சுத்தம் செய்யப்படாத சர்க்கரை ...	89	111	107	140
நிலக்கரி	80	120	122	134
பிரிவு III. இறக்குமதியான பொருள்கள்.				
பண்டத் தொகுப்பின் சராசரி	98	102	106	213
பின்வருபவை உட்பட :				
பருத்தித் துணிகள்	91	109	116	206
கம்பளத் துணிகள்	96	104	105	243
ஜாவா சர்க்கரை	103	99	102	176
மின் உரம் பாய்ச்சிய இரும்புத் தகடுகள்	99	101	98	281

[1] 'The Report of the Committee on Indian Exchange and Currency,' vol. iii, Cmd., 529, 1920, p. 159-ல் உள்ள xxviii-ஆம் பின்னிணைப்பிலிருந்து தொகுக்கப்பட்டது. இந்த அட்டவணையில் காணும் புள்ளிவிவரங்கள், ஒவ்வோர் ஆண்டின் ஜனவரி, ஜூன் மாதங்களின் விவர அறிக்கைகளை அடிப்படையாகக் கொண்டது. 1900-க்கும் 1909-க்கும் இடையிலான பத்தாண்டுக் காலச் சராசரி விலை 100 எண்களாக எடுத்துக்கொள்ளப்பட்டன.

துணைநூல்கள் பட்டியல்

(BIBLIOGRAPHY)

V. FINANCE : INCLUDING CURRENCY, BANKING AND PRICES.

(A) Books and Works of Reference.

Ambedkar, B. R., 'The Problem of the Rupee' (1922); 'Evolution of Provincial Finance in British India' (1925).

Bhatnagar, B. G., 'Currency and Exchange in India' (1924).

Chablani, H. L., 'Indian Currency and Exchange' (1924).

Howard, H. F., 'India and the Gold Standard' (1911).

Indian Currency and Finance (1913), Times of India Press.

Jain, L. C., 'Indigenous Banking in India' (1929).
Jevons, H. S., 'The Future of Exchange and Indian Currency' (1922); 'Money, Banking and Exchange in India' (1922).

Kale, V. G., 'India's War Finance and Post-War Problems' (1921).
Keynes, J. M., 'Indian Currency and Finance' (1914).

Madon, B. F., 'India's Exchange Problem' (1925). Two vols.

Ramaiya, A., 'National System of Taxation' (1924).

Shah, K. T., 'Sixty Years of Indian Finance' (1921); 'Federal Finance in India' (1929).
Shah and Khambatta, 'Wealth and Taxable Capacity of India' (1924).
Shirras, G. Findlay, 'The Science of Public Finance' (1924); 'Indian Banking and Finance' (1920).
Sinha, H., 'Early European Banking in India' (1997).

Turle, H. B., 'An Outline of Indian Currency' (1927, Calcutta).

Vakil, C. N., 'Financial Developments in Modern India' (1924).
Vakil, C. N., and Muranjan, S. K., 'Currency and Prices in India' (1927).

Wacha, D. E., 'Indian Currency Commission' (1913).
Wadia, P. A., and Joshi, G. N., 'Money and the Money Market in India' (1926).
Wattal, P. K., 'System of Financial Administration in British India' (1923).

(B) Official and Periodical Publications, etc.

'Banking Needs of India': pamphlet by Mohanlal Tannan, 1919.
Budget: Railway and General, Annual.
Economica, October 1921, 'The Indian Currency Report,' by A. R. Burns.
Explanatory Memorandum, by the Under-Secretary of State for India, relating to the Accounts of the Government of India. Annual.
Income Tax: Provincial Administrative Reports.

Prices[1]

Appendix XXVII (Vol. III of the Report of the Committee on Indian Exchange and Currency. Cmd. 529 of 1920), 'Memorandum on Indian Price Movements,' by G. Findlay Shirras.

Index Numbers of Indian Prices, 1861 to 1918; with Addenda for subsequent years.

Journal of the Royal Statistical Society, 'Rupee Prices in India,' March 1897, 1898, and (revised figures) September 1909.

Prices and Wages in India. Annual publication upto 1921.

Report on the Rise of Prices in India. Five vols., 1912 (by K. L. Datta).

Report of the Bombay Excise Committee, 1922-23.

Report of the External Capital Committee, 1925.

Report of the (Inchcape) Retrenchment Committee; 1922–23.

Report of the Indian Taxation Enquiry Committee, 1924–25 (1926).

Report of the Royal Commission on the Administration of the Expenditure of India, 1895–1900. Cd. 131 of 1900.

Report of the Herschell Committee on Indian Currency, 1893.

Report of the Fowler Committee on Indian Currency, 1898.

Report of the (Chamberlain) Royal Commission on Indian Finance and Currency, 1913. Cd. 7236 of 1914.

Report of the (Babington-Smith) Committee on Indian Finance and Currency, 1919. Cmd. 527 (1920).

Report of the (Hilton Young) Royal Commission on Indian Currency and Finance. 1925–26. Cmd. 2687 of 1926.

Report on Financial Relations ('Meston Report'). Cmd. 724 of 1920.

Return of the Net Income and Expenditure for Eleven Years (in India), P.P. 1923.

[1] Note also the references for earlier years, and the criticisms thereof, mentioned in *Currency and Prices in India*, by C. N. Vakil and S. K. Muranjan (1927), p. 134 *et seq.*

துணை நூல்கள் பட்டியல்—பின்னிணைப்பு

(SUPPLEMENTARY BIBLIOGRAPHY)

(The following publications were either written in, or before 1939, or refer primarily to pre-1939 conditions)

I. BOOKS, PAMPHLETS AND ARTICLES

ABHYANKAR, N. G., 'Provincial Debt Legislation' (1940).
ADARKAR, B. N., 'The Indian Tariff Problem' (1936).
ADARKAR, B. P., 'The Principles and Problems of Federal Finance' (1933) 'Economic Aspects of the Indian Constitution' (*Economic Journal*, March 1935); 'The Indian Monetary Policy' (1939).
ANDREWS, E. J. L., 'Indian Labour in Rangoon' (1933).

BALAKRISHNA, R., 'Industrial Development of Mysore' (1940).
BANERJEA, P., 'Provincial Finance in India' (1929); 'A History of Indian Taxation' (1930).
BASU, S. K., 'Industrial Finance in India' (1939).
BHAN, R. K., 'Prices in India between the Two Great Wars' (1940).
BHATTACHARYYA AND NATESAN (Ed.), 'Some Bengal Villages' (1932).
BLUNT, Sir Edward (Ed.), 'Social Services in India' (1938).
BRAILSFORD, H. N., 'Rebel India' (1931).
BUCHANAN, D. H., 'The Development of Capitalist Enterprise in India' (1934).

CATON, A. R. (Ed.), 'The Key of Progress' (1930).
CHAND, GYAN 'The Essentials of Federal Finance' (1930); 'India's Teeming Millions' (1939).
COUPLAND, Sir REGINALD, 'India: A Restatement' (1946).
COYAJEE, J. C., 'The Indian Currency System' (1931).
CUMMING, Sir J. (Ed.), 'Modern India' (1931).

DANTWALA, M. L., 'Marketing of Raw Cotton in India' (1936).
DARLING, M. L., 'Rusticus Loquitur' (1930); 'Wisdom and Waste in the Punjab Village' (1934).
DAS, N., 'Industrial Enterprise in India' (1938).
DAS, R. K., 'Child Labour in India' (1934).
DESAI, R. C., 'Consumer Expenditure in India, 1931-32 to 1940-41.' *Journal of the Royal Statistical Society* (1948).
DEY, H. L., 'The Indian Tariff Problem' (1933).
DUBEY, D. L., 'The Indian Public Debt' (1930).

EDDY, J. P., and LAWTON, F. H., 'India's New Constitution' (1935).

FURNIVAL, J. S., 'Political Economy of Burma' (1931).

GANDHI, M. P., 'The Indian Cotton Textile Industry' (1930); 'The Indian Sugar Industry' (Annual).
GANGULEE, N., 'Health and Nutrition in India' (1939).
GARRATT, G. T., 'An Indian Commentary' (1928).
GHOSH, B. B., 'Indian Economics and Pakistani Economics' (1949).
GHURYE, G. S., (Ed.), 'Indian Population Problems' (1938).
GHURYE, G. S. 'Caste and Race in India' (1932).
GUPTA, J. N., 'Foundations of National Progress' (1926).
GUPTA, R. B., 'Labour and Housing in India' (1930).

HOUGH, E. M., ' The Co-operative Movement in India ' (1932).
HUBBARD, G. E. (Ed.), ' Eastern Industrialization and its Effect on the West ' (1935).
HUQUE, M. AZIZUL, ' The Man Behind the Plough ' (1939).

JAIN, L. C., ' Monetary Problems of India ' (1933).

KAJI, H. L. (Ed.), ' Co-operation in Bombay ' (1930).
KARVE, D. G., ' Poverty and Population in India ' (1936).
KHAN, S. A. WAJID, ' Financial Problems of Indian States Under Federation ' (1935).

LEWIS, W. A., ' Economic Survey 1919–1939 ' (1949).
LOKANATHAN, P. S., ' Industrial Welfare in India ' (1929) ; ' Industrial Organization in India ' (1935).

MADAN, B , ' India and Imperial Preference ' (1939).
MALHOTRE, D. R., ' History and Problems of Indian Currency, 1835–1943' (1944).
MEEK, D. B., ' Some Measures of Economic Activity of India ' (*Journal of the Royal Statistical Society*, 1937, p. 363).
MISRA, B. R., ' Indian Provincial Finance ' (1942) ; ' Land Revenue Policy in the U.P. and Benares ' (1942).
MUKERJEE, R., ' Land Problems of India ' (1933) ; ' Food Planning for Four Hundred Millions ' (1938).
MUKERJEE, R., (Ed.), ' Economic Problems of Modern India' (vol. i, 1939).
MUKHTAR, A., ' Factory Labour in India ' (1933) ; ' Trade Unionism and Labour Disputes in India ' (1935).

NIYOGI, J. P., ' The Evolution of the Indian Income Tax ' (1939).

O'MALLEY, L. S. S., ' India's Social Heritage ' (1934).
O'MALLEY, L. S. S. (Ed.), ' Modern India and the West ' (1941).

PANANDIKAR, S. S., ' Industrial Labour in India ' (1933).
PANDIT, Y. S., ' India's Balance of Indebtedness ' (1937).
PANT, S. D., ' The Social Economy of the Himalayas ' (1935).
PARSHAD, L. D., ' Some Aspects of Indian Foreign Trade ' (1932).
PEARSE, ARNO S., ' The Cotton Industry of India ' (1930).
PILLAI, P. P., ' India and the International Labour Office ' (1932).

QURESHI, A. I., ' State Banks for India ' (1939).

RAJ, K, N., ' The Monetary Policy of the Reserve Bank of India, (1948).
RANADIVE, B. T., and VAKIL, C. N., ' The Population Problem of India' (1930).
RANGA, N. G., ' The Economic Organization of Indian Villages' (2 vols., 1926 and 1929).
RANSOM, C. W., ' A City in Transition ' (1938).
RAO, V. K. R. V., ' Taxation of Income in India ' (1931) ; ' An Essay on India's National Income, 1925–1929' (1939) ; ' The National Income of British India, 1931–32' (1940).
RASTOGI, T. N., ' Indian Industrial Labour ' (1949).
RATHBONE, E. F., ' Child Marriage ' (1934).
RAU, B. R., ' Present Day Banking in India ' (1930).
RAY, P., ' India's Foreign Trade Since 1870 ' (1934).
RUTNAGUR, S, M. ' Bombay Industries : The Cotton Mills' (1927).

SAMANT, D.R., and MULKY, M.A., 'Organization and Finance of Industries in India' (1937).
SANYAL, N., 'The Development of Indian Railways' (1930).
SASTRY, N. S. R., 'Statistical Study of India's Industrial Development' (1947).
SCHOENWALDT, M., 'Die Wettbewerbslage der vorderindischen Haupthafen' (1928).
SHENOY, B. R., 'The Sterling Assets of the Reserve Bank of India' (1946).
SHIRRAS, G. FINDLAY, 'Poverty and Kindred Economic Problems in India' (1935).
SHIVA RAO, B., 'The Industrial Worker in India' (1939).
SHROFF, A. A., 'A Study of the Reserve Bank Bill' (1933).
SINHA, J. C., 'Indian Currency Problems in the Last Decade, 1926–36' (1938).
SIVASWAMY, K. G., 'Legislative Protection and Relief of Agriculturalist Debtors in India' (1939).
SLATER, G., 'Southern India' (1936).
SONI, H. R., 'Indian Industry and its Problems' (1932).
SUBRAMANIAN, S., 'Statistical Summary of the Social and Economic Trends in India' (interwar period) (1945).

THOMAS, P. J., 'The Problem of Rural Indebtedness' (1934); 'Population and Production 1920–32' (1935); 'India in the World Depression' (*Economic Journal*, September 1935); 'The Growth of Federal Finance in India' (1939).
THOMAS, P. J., and SASTRY, N. S., 'Indian Agricultural Statistics' (1939).

VAKIL, BOSE and DEOLALKAR, 'The Growth of Trade and Industry in Modern India' (1931).
VAKIL, C. N. and MALUSTE, D. N., 'Commercial Relations between India and Japan' (1937).
VAKIL and MUNSHI, 'Industrial Policy in India' (1934).
VAKIL, C. N., and PATEL, M. H., 'Finance under Provincial Autonomy' (1940).

WADIA and MERCHANT, 'Our Economic Problem' (1943).
WATTAL, P. K., 'The Population Problems in India' (1934).

YATES, P. L., 'Commodity Control' (1943).

II. REPORTS AND PERIODICALS

Census of India, 1931.
Report of the Royal Commission on Labour in India. Cmd. 3883, 1931.
Report of the Indian Central Banking Enquiry Committee and Reports of the Provincial Banking Committees, 1931.
Reports of the Imperial Economic Conference at Ottawa. Cmd. 4174 and 4175, 1932.
Reports on the Working of the Scheme of Preference resulting from the Trade Agreement Concluded at Ottawa, 1934 and 1935.
Tariff Board Reports: Cotton Textile Industry, 1936; Woollen and Worsted Industry, 1936; Sugar, 1938; Magnesium Chloride, 1938; Paper and Paper Pulp, 1938; Sericulture, 1939.
Studies in Indian Economics: Office of the Economic Adviser, Ist Series. Aspects of the Indian Tariff: No. 1: 'The Burden of the Indian Tariff.' By T. E. Gregory and W. R. Natu.

Report on an Inquiry into the Wages and Hours of Labour in the Cotton Mill Industry (Bombay Labour Office), 1935.
Report on Wages and Unemployment in the Bombay Cotton Textile Industry (Bombay Labour Office), 1935.
Bombay Textile Labour Inquiry Committee, 1937.
Cawnpore Labour Inquiry Committee, 1937.
C. P. Textile Labour Inquiry Committee, 1938.
Report of the Indian Coal Committee, 1937.
General Wage Census Part I Engineering Industry (Bombay Labour Office), 1935 : Part II.
Report of the Mitchell-Kirkness Committee on Road-Rail Competition, 1933.
Report of the Indian Railway Enquiry Committee (Wedgewood), 1937.
Report of the Bengal Jute Enquiry Committee, 1934.
Indian Central Jute Committee ; Annual Report, 1938–39.
Reports of the Agricultural Marketing Adviser on Wheat (1937), Cold Storage (1937), Linseed (1938), Eggs (1938), Tobacco (1938), etc.
International Labour Review (April 1935) : 'Agricultural Indebtedness in India : the Bhavnagar Scheme.'
A Scheme for the Economic Census of India. Bowley and Robertson, 1934.
'The British Crown and the Indian States' : Report by the Directorate of the Chamber of Princes' Special Organization, 1929.
Report of the Indian Statutory (Simon) Commission. Cmd. 3568 and 3569, 1930.
Report of the Indian States (Butler) Committee. Cmd. 3302, 1929.
Report of the Federal Finance (Percy) Committee. Cmd. 4069, 1932.
Report of the Indian States Enquiry (Davidson) Committee. Cmd. 4103, 1932.
Proposals for Indian Constitutional Reform. Cmd. 4268, 1933.
Report of the Joint Committee on Indian Constitutional Reform, 1934.
The Government of India Act, 25 and 26 George V, c. 42, 1935.
Anglo-Indian Trade Agreement. Cmd. 4779, 1935.
Trade Agreement between India and Burma. Cmd. 4985, 1935.
Indian Finance.
Insurance and Finance Review.
Indian Journal of Statistics.
Indian Financial Enquiry Report, by Sir Otto Niemeyer. Cmd. 5163, 1936.
Reserve Bank of India : Annual Reports.

கலைச் சொற்கள்

(தமிழ்—ஆங்கிலம்)

அ

அடையாள நாணயம்	Token coin
அமித உற்பத்தி	Over production
அயன் குடிமுறை	Ryotwari system
அளவுவீதத் தீர்வை	Specific duty

ஆ

ஆயத்தீர்வை	Excise duty

இ

இந்தியா மந்திரி	Secretary of State for India
இரட்டிப்பு வரிவிதிப்பு	Double taxation
இன்ச்கேப் ஆட்குறைப்புக் குழு	Inchcape Retrenchment Committee

உ

உதவித் தொகை	Subsidy
உரிமம்	License

ஊ

ஊகவாணிபம்	Speculation

ஏ

ஏகாதிபத்தியச் சலுகை முறை	Imperial preference
ஏற்றுமதி உபரி	Export surplus

ஓ

ஓய்வூதியம்	Pension

க

கடன் பணிகள்	Debt services
கடன் கழிவு நிதி	Sinking Fund
கட்டற்ற கருவூல முறை	Independent Treasury System
கவுன்சில் பத்திரங்கள்	Council drafts

கு

குறியீட்டு எண்கள்	Index numbers

கூ

கூட்டுப் பங்குக் கம்பெனிகள்	Joint Stock Companies

கொ

கொணர்பவர் பத்திரம்	Bearer draft

ச

சங்கிலிக் குறியீட்டு எண்கள்	Chain index numbers
சமநிலை	Equilibrium
சமனுக்கு ஆயத் தீர்வை	Counterveiling excise duty

சி

சில்லறை விலைக் குறியீட்டு எண்கள்	Index numbers of retail prices
சிற்றிளந் தொழில்கள்	Infant industries

சு

சுங்கவரிக் கொள்கை	Tariff policy
சுதேச பாங்குகள்	Indigenous banks

த

தடையிலா வாணிபம்	Free trade
தலா வருமானம்	Per capita income
தன்னிறைவு	Self-sufficiency

தே

தேக்கம்	Stagnation

தொ

தொழிற் காப்பு	Protection
தொழிற் காப்புத் தீர்வைகள்	Protective duties
தொழிலாளி இடப்பெயர்ச்சி	Mobility of labour
தொழிலிட அமைப்பு	Industrial location
தொழில் இலாபக் குறியீட்டு எண்கள்	Index numbers of industrial profits
தொழில் உற்பத்திக் குறியீட்டு எண்கள்	Index numbers of industrial production

தோ

தோற்ற மதிப்பு	Face value

நா

நாணயமாற்று பாங்குகள்	Exchange Banks

நி

நிதிச் சுயாட்சி	Fiscal autonomy
நிர்வாகப் பதிலாளி	Managing Agent

நு

நுகர்வு	Consumption

நே

நேர்முக வரி	Direct tax

ப

பங்குமாற்று நிலையங்கள்	Stock Exchange
படிமுறை	Step system
பயனில் சுமைக் கடன்	Dead weight debts
பணமலிவுக் கொள்கை	Cheap money policy
பலகை முறை	Slab system

பி

பின்னிறக்கம்	Recession

பு

புறச்சிக்கனங்கள்	External economies

பெ

பெறுமான விகிதம்	Ad valorem

பே

பேதங்காட்டும் தொழிற் காப்பு	Discriminating protection
பேரளவுத் தொழில்கள்	Large scale industries

பொ

பொது நிதியியல்	Public Finance
பொன் திட்டம்	Gold Standard
பொன் பரிவர்த்தனைத் திட்டம்	Gold Exchange Standard

ம

மக்கள்தொகை	Population
மந்தம்	Depression
மறைமுக வரி	Indirect tax

மா

மாகாண சுயாட்சி	Provincial autonomy

மு

முதல் ஆக்கம்	Capital formation
முற்றுரிமை	Monopoly

மெ

மெய்க்கூலிகள்	Real wages
மெய்க்கூலிக் குறியீட்டு எண்கள்	Index number of real wages
மெய்வருமானம்	Real income

மொ

மொத்த விலைக் குறியீட்டெண்கள்	Wholesale index numbers

வ

வரிச்சுமை	Tax burden
வரிதாங்கு வல்லமை	Taxable capacity
வரையற்ற சட்டச் செலாவணி	Unlimited legal tender currency

வா

வாங்குந் திறன்	Purchasing power
வாணிபக் கைக்கோள்	Commercial policy
வாணிபக் கொடுப்பல்நிலை	Balance of trade
வாணிபச் சகடம்	Trade cycle
வாழ்க்கைச் செலவு	Cost of living
வாழ்க்கைச் செலவுக் குறியீட்டு எண்கள்	Cost of living index numbers

வெ

வெளிச்சந்தை நடவடிக்கைகள்	Open market operations
வெள்ளித் திட்டம்	Silver Standard

வே

வேலைக்குறைவு	Underemployment
வேலையின்மை	Unemployment

ஸ்

ஸ்டெர்லிங் பரிவர்த்தனைத் திட்டம்	Sterling Exchange Standard

கலைச் சொற்கள்

(ஆங்கிலம்—தமிழ்)

A

Ad valorem	பெறுமான விகிதம்

B

Balance of trade	வாணிபக் கொடுப்பல்நிலை
Balance of trade, favourable	சாதக வாணிபக் கொடுப்பல் நிலை
Balance of trade, adverse	பாதக வாணிபக் கொடுப்பல் நிலை
Bearer draft	கொணர்பவர் பத்திரம்

C

Capital formation	முதல் ஆக்கம்
Chain index numbers	சங்கிலிக் குறியீட்டு எண்கள்
Cheap money policy	பணமலிவுக் கொள்கை
Commercial policy	வாணிபக் கைக்கோள்
Consumption	நுகர்வு
Cost of living	வாழ்க்கைச் செலவு
Cost of living index numbers	வாழ்க்கைச் செலவுக் குறியீட்டு எண்கள்
Council drafts	கவுன்சில் உண்டியல்கள்
Counterveiling excise duty	சமனுக்கு ஆயத்தீர்வை

D

Debt services	கடன் பணிகள்
Dead weight debt	பயனில் சுமைக் கடன்
Deflation	பணவாட்டம்
Depression	மந்தம்
Discriminating protection	பேதங்காட்டும் தொழிற் காப்பு
Direct tax	நேர்முக வரி
Double taxation	இரட்டிப்பு வரிவிதிப்பு

E

Equilibrium	சமநிலை
Exchange Banks	நாணயமாற்று பாங்குகள்
Excise duty	ஆயத்தீர்வை
Export surplus	ஏற்றுமதி உபரி
External economies	புறச்சிக்கனங்கள்

F

Face value	தோற்ற மதிப்பு
Fiscal autonomy	நிதிச் சுயாட்சி
Free trade	தடையிலா வாணிபம்

G

Gold Standard	பொன் திட்டம்
Gold Exchange Standard	பொன் பரிவர்த்தனைத் திட்டம்

I

Imperial preference	ஏகாதிபத்தியச் சலுகை முறை
Inchcape Retrenchment Committee	இன்ச்கேப் ஆட்குறைப்புக் குழு
Independent Treasury System	கட்டற்ற கருவூல முறை
Index numbers	குறியீட்டு எண்கள்
Index numbers of industrial production	தொழில் உற்பத்திக் குறியீட்டு எண்கள்
Index numbers of industrial profits	தொழில் இலாபக் குறியீட்டு எண்கள்
Index numbers of real wages	மெய்க்கூலிக் குறியீட்டு எண்கள்
Index numbers of retail prices	சில்லறை விலைக் குறியீட்டு எண்கள்
Index numbers of wholesale prices	மொத்த விலைக் குறியீட்டு எண்கள்
Indigenous Banks	சுதேச பாங்குகள்
Indirect tax	மறைமுக வரி
Industrial location	தொழிலிட அமைப்பு
Infant industries	சிற்றிளந் தொழில்கள்

J

Joint Stock Companies	கூட்டுப் பங்குக் கம்பெனிகள்

L

Large scale industries	பேரளவுத் தொழில்கள்
License	உரிமம்

M

Managing Agent	நிருவாகப் பதிலாளி
Mobility of labour	தொழிலாளி இடப்பெயர்ச்சி
Monopoly	முற்றுரிமை

O

Open market operations	வெளிச்சந்தை நடவடிக்கைகள்
Overproduction	அமித உற்பத்தி

P

Pension	ஓய்வூதியம்
Per capita income	தலா வருமானம்
Population	மக்கள்தொகை
Protection	தொழிற் காப்பு
Protective duties	தொழிற் காப்புத் தீர்வைகள்
Provincial autonomy	மாகாண சுயாட்சி
Public finance	பொது நிதியியல்
Purchasing power	வாங்குந் திறன்

R

Real income	மெய்வருமானம்
Real wages	மெய்க்கூலிகள்
Recession	பின்னிறக்கம்
Ryotwari system	அயன் குடிமுறை

S

Secretary of State for India	இந்தியா மந்திரி
Self-sufficiency	தன்னிறைவு
Silver Standard	வெள்ளித் திட்டம்
Sinking Fund	கடன் கழிவு நிதி
Slab system	பலகை முறை
Specific duty	அளவுவீதத் தீர்வை
Speculation	ஊகவாணிபம்
Stagnation	தேக்கம்
Step system	படிமுறை
Sterling Exchange Standard	ஸ்டெர்லிங் பரிவர்த்தனைத் திட்டம்
Stock Exchanges	பங்குமாற்று நிலையங்கள்
Subsidy	உதவித் தொகை

T

Tariff policy	சுங்கவரிக் கொள்கை
Tax burden	வரிச்சுமை
Taxable capacity	வரிதாங்கு வல்லமை
Token coin	அடையாள நாணயம்
Trade cycle	வாணிபச் சகடம்

U

Underemployment	வேலைக்குறைவு
Unemployment	வேலையின்மை
Unlimited legal tender	வரையற்ற சட்டச் செலாவணி

பொருள் குறிப்பு அகரவரிசை

அ

அகச்செலவுகள், 392
அடையாள நாணயம், 83, 104, 152
அட்கின்சன், எப். ஜெ., 171
அதிகாரப் பரவலாக்கல், 60, 62
அமித உற்பத்தி, 287
அமெரிக்கா (ஐக்கிய), 5, 7, 18, 20, 21, 22, 44, 45, 101, 132, 134, 141, 142, 176, 184, 214, 225, 242, 254, 320
அம்பேத்கார், பி. ஆர்., 60, 62, 64, 111, 134
அயர்லாந்து, 214, 277
அயன்குடிமுறை, 69, 72, 73, 74
அரசாங்கக் கொடை, 36, 38, 52
அரசியல் நிர்ணய சபை, 373
அரசினர் தொழில், 55
அர்ஜெண்டினு, 214
அளவுவீதத் தீர்வை, 43, 271, 306, 307, 309, 310

ஆ

ஆசியத் தொழிலாளர் மாநாடு, 357
ஆப்கன் போர், 97
ஆப்பிரிக்கா (தென்), 19
ஆப்பிரிக்கா, (கிழக்கு) 273, 292
ஆப்பிரிக்கா (மேற்கு), 273 349
ஆயத் தீர்வை, 26, 27, 28, 29, 30, 33, 41, 61, 64, 66, 76, 77, 89, 94, 114, 270, 274, 278, 289, 290 302, 329, 332, 334, 378
ஆயத் தீர்வை (சமனுக்கு), 26, 28, 32, 41
ஆல்ஃபிரட் சார்ட்டர்டன், 232
ஆஸ்டின் சேம்பர்லின், 136
ஆஸ்டிரியா, 5, 7, 18
ஆஸ்திரேலியா, 19, 191, 214, 275, 277

இ

இங்கிலாந்து, 7, 9, 18, 32, 33, 44, 52, 53, 68, 125, 140, 150, 169, 184, 214 265, 267, 320
இத்தாலி, 18, 214
இந்திய அரசாங்கச் சட்டம், 1919., 65
இந்திய அரசாங்கச் சட்டம், 1935., 113, 241, 246
இந்திய அரசாங்க மசோதா, 32
இந்தியக் கம்பெனிகள் சட்டம், 303
இந்தியச் செலாவணி நிதி ஆணைக் கழகம், 121, 136
இந்திய வாணிப ஆணையாளர்,
இந்திய அலுவலகம், 58, 67
இந்திய மந்திரி, 57, 58, 59, 67, 119, 132, 133, 138, 142, 143, 157, 199
இம்பீரியல் பாங்கு, 115, 120, 139, 154, 155, 156, 326
இம்பீரியல் பாங்கு சட்டம், 121, 326
இரட்டிப்பு வரிவிதிப்பு, 380
இராபர்ட்சன், 341
இரட்டையாட்சி, 91, 148, 282, 336, 359
இரட்டையாட்சி வரவு செலவுத் திட்டம், 91, 110
இலங்காஷைர், 4, 6, 26, 27, 201, 273, 277, 305, 306, 308, 309, 311, 335
இலண்டன், 46, 103, 104, 118, 120, 127, 131, 132, 134, 135, 137, 138, 139

இறக்குமதித் தீர்வை, வரி, 26, 28, 29, 30, 36, 38, 41, 77, 89, 101, 108, 241, 274, 290, 302, 306, 307, 332, 340
இன்சேகேப் ஆட்குறைப்புக் குழு, 97, 98, 104, 183, 205
இன்றியமையாத பொருள்கள், 56

உ

உகாந்தா, 20
உண்டியல் (வாணிப), 116, 325
உண்டியல் மாற்றுச் சந்தை, 325
உதவித் தொகை, 27, 34
உப்பு வரி, 78, 103, 105, 108, 113, 329
உலக நாடுகள் சங்கம், 165
உள்நாட்டு வாணிபம், 316, 317
உற்பத்திவீதப் பங்கு, 279

ஊ

ஊகவாணிபம், 10, 121

எ

எகிப்து, 8, 214, 292
எல்லைப்புற வாணிபம், 1, 23

ஏ

ஏகாதிபத்தியச் சலுகை முறை, 1, 29, 33, 41, 52, 53, 110, 267, 270, 271, 273, 274, 276, 277, 306, 307, 308
ஏஞ்சல் விதி, 213
ஏற்றுமதி உபரி, 323, 338
ஏற்றுமதித் தீர்வை, வரி, 1, 26, 28, 29, 31, 32, 40, 42, 44, 108, 269, 278, 286, 334

ஐ

ஐரோப்பா, 9, 44, 45, 134, 141
ஐரோப்பா (மத்திய), 7, 20

ஒ

ஒட்டாவா, 273
ஒட்டாவா ஒப்பந்தம், 18, 19, 53, 267, 271, 273, 274, 277, 278, 309, 310
ஒதுக்கப்பெற்ற இனங்கள், 63, 64, 66
ஒத்துழையாமை இயக்கம், 79, 165, 168, 247, 264

ஓ

ஓய்வூதியம், 7, 59

க

கட்டற்ற கருவூல முறை, 119
கடன், உற்பத்தியாக்கும் கடன், 87, 109, 338, 393
உற்பத்தியாக்காக் கடன், 86, 109, 111
போர்க் கடன், 87
ப்யனில் சுமைக் கடன், 86, 99, 100
கடன் கழிவு நிதி, 87, 103
கடன் பணிகள், 54, 59, 88, 89, 90, 99
கண்லிப் அறிக்கை, 145, 146
கரும்புச் சட்டம், 289
கர்சான் பிரபு, 28, 54, 92, 102, 171
கல்வி, ஆதாரக் கல்வி, 232
கட்டாயக் கல்வி, 233
பெண்கள் கல்வி, 234

கா

காங்கிரஸ் திட்டக் குழு, 247
காலவரம்புக் கடன்கள், 325
கானடா, 19, 191, 275

கி

கிரிமியன் போர், 4
கிரோமர் பிரபு, 63, 171

கு

குறியீட்டு எண்கள், 183, 214, 251, 295
வாழ்க்கைச் செலவுக் குறியீட்டு எண்கள், 206, 210, 211, 213, 356
மெய்க் கூலிக் குறியீட்டு எண்கள், 210
மொத்த விலைக் குறியீட்டு எண்கள், 244, 251, 257, 387
சில்லறை விலைக் குறியீட்டு எண்கள், 253
உலக வாணிபப் பொருள்களின் விலைக் குறியீட்டு எண்கள், 257
தொழில் உற்பத்திக் குறியீட்டு எண்கள், 292, 293
தொழில் இலாபக் குறியீட்டு எண்கள், 293
சங்கிலிக் குறியீட்டு எண்கள், 295

கூ

கூட்டுக் கிராம முறை, 70, 72, 74
கூட்டுப் பங்கு பாங்கு முறை, 115, 118, 121, 122, 123, 124, 187, 323, 328
கூட்டுறவுப் பாங்கு, 118, 121, 122
கூட்டுறவு இயக்கம், 165, 323
கூட்டுக் கட்சி அரசாங்கம், 373
கூர்காவ் கிராமம், 236, 237
கூலிகள், 162, 163, 170, 183
கூலிக்கணக்கெடுப்பு, 192, 205, 206
கூலிகள், மெய்க்கூலிகள் 154, 350
கூலிகள் வழங்கு சட்டம், 354

கெ

கெயின்ஸ், ஜே. எம். 119, 202
கென்யா, 19, 148

கே

கேல் (பேராசிரியர்), 111
கேளிக்கை வரி, 114

கை

கைவினைஞர்கள், 207

கொ

கொணர்பவர் பத்திரம், 257

ச

சட்டச் செலவாணி, 126, 127, 128, 130, 147, 150, 151
சட்ட மறுப்பு இயக்கம், 332
சப்லானி, எச். எல்., 183
சமநிலை, 198
சர்வதேசத் தொழிலாளர் அமைப்பு, 165, 205

சா

சாதக வாணிபக் கொடுப்பல் நிலை, 7
சாட்போன் சர்க்கரைக் கட்டுப்பாட்டுத் திட்டம், 279
சார்லஸ் இன்ஸ், சர்., 41
சான்ஃபிரான்சிஸ்கோ, 22
சாஸ்திரி என். எஸ். ஆர்., 293, 299, 300

சி

சிப்பாய்க் கலகம், 25, 57, 58, 100
சிறுவர்கள் வேலைச் சட்டம், 354
சிற்றிளந் தொழில்கள், 1, 50, 270, 289, 302

சீ

சீனா, 8, 14, 18, 27, 142, 148, 214, 305

சு

சுங்கவரி, 1, 25, 27, 36, 52, 59, 61, 66, 77, 88, 89, 90, 93, 94, 96, 103, 242, 260, 267, 270, 273, 289, 329, 339
சுங்கவரிக் கழகம், 33, 36 37, 38, 39, 52, 53, 79

சுங்கவரிக் கொள்கை, 6, 25, 27, 28, 51, 94, 273, 278, 280, 304
இந்தியச் சுங்கவரித் திருத்தச் சட்டம், 1934., 271
சுங்கவரி முறை, 240
சுதேச அரசுகள், 76, 77, 240, 241, 242, 244, 247, 250, 284, 285, 299, 300, 359
சுதேசி இயக்கம், 121, 165, 166, 365.
சுதேசப் பாங்குகள், 323, 325, 326

சூ

சூயஸ் கால்வாய், 4, 100, 165

செ

செய்வினை முடிந்த பண்டங்கள், 2, 4, 5, 6, 10, 13, 14, 15, 39, 48, 188, 201, 229, 230, 268, 276, 315
செலாவணி ஆணைக் கழகம், 128
செலாவணிக் குழு, 30, 145
செலாவணிக் கொள்கை, 115, 134
செலாவணிச் சட்டம், 130
இந்தியச் செலாவணி, நாணய மாற்றுக் குழு, 86, 197
செலாவணிச் சீர்திருத்தங்கள், 101
செலாவணி முறை, 115, 125, 126, 133, 142, 143, 148, 222, 240, 244, 322

சே

சேம்பர்லின் ஆணைக் குழு, 115

சொ

சொத்து வரி, 380

ட

டச்சுக் கிழக்கிந்தியத் தீவுகள், 279

ட

டார்லிங் எம். எல்., 70, 112, 204, 225

டி

டிக்பி அவர்கள், 173
டிரினிடாட், 214

டொ

டொமினியன் நாடுகள், 19, 20 43, 47

டோ

டோர்க்கியோ, 214, 357

த

தடையிலா வாணிபக் கொள்கை, 1, 6, 50, 51, 53, 68, 88, 273, 369
தத்தா அவர்கள், 183, 185, 186, 189, 190, 192
தலசுயாட்சி, 64
தலா வருமானம், 162, 163, 170, 172, 173, 178, 179, 180
தலைமைக் கவர்னர், 322, 360
தலையிடாக் கொள்கை, 25, 26, 270
தற்காப்பு, 59
தனியார் தொழில், 55
தன்னிறைவு, 18, 48, 50, 51, 79, 229, 230, 389

தா

தாதாபாய் நௌரோஜி, 170
தாமஸ் பி. ஏ., 2
தாமஸ் பி. ஜெ., 318
தாஸ், 176

தி

தியோடர் மாரிசன் (சர்), 393
திலகர், 166

து

துயரப் பொன், 261, 346
துய்ப்போர், 51, 52

தூ

தூதுவர் ஆலயம் (இந்தியத்), 67

தே

தேக்கம், 168
தேசாய், ஆர். சி., 343
தேய்மான நிதிக் கடன், 321

தொ

தொழிலாளர் சட்டம், 299
தேயிலை மாவட்டங்களின்குடியேற்றத் தொழிலாளர் சட்டம், 1932., 354
தொழிலாளர் தகராறு, 64, 255
தொழிலாளர் இடப்பெயர்ச்சி, 49, 228
தொழில் ஓரிடத்தில் செறிதல், 300
தொழிற் கூட்டு நிறுவனம், 323
தொழில் இட அமைப்பு, 299, 300
தொழில் இட அமைப்பு (பருத்தித் தொழில்), 311
தொழில் பாங்கு, 121,122
தொழில் முன்னேற்றம், 293
தொழில் வளர்ச்சி, 1, 18, 51, 268,272, 281, 282,297
தொழிற் காப்புக் கொள்கை,1, 32, 33, 35, 51, 52, 223, 224, 256, 310
பேதங்காட்டும் தொழிற் காப்புக் கொள்கை, 53, 228, 280, 361
தொழிற்காப்புத்தீர்வைகள்,13, 19, 30, 38, 39, 249, 254 267, 268, 269,270, 271 272, 274, 275, 288,290 291, 294, 301. 305,369
தொழிற் பாதுகாப்புச் சட்டம், 1933., 271

தோ

தோற்ற மதிப்பு, 199

ந

நடப்புக் கடன்கள் 325

நா

நாணய மாற்று பாங்கு 115, 123, 124, 187

நி

நிதி ஆணைக் கழகம் (இந்திய), 1, 32, 33, 34, 41, 44, 47
நிதிக்கட்டுப்பாடு, 54
நிதிக்கொள்கை, 32, 54, 56, 57, 63, 68, 100, 110, 111, 162, 166, 246
நிதிச்சாதனங்கள், 57
நிதி, செலாவணிபற்றி அரசாங்க ஆணைக் கழகம், 235
நிதிச் சுயாட்சி 1, 32, 43
நிதிமுறை, 55, 57,126, 167
நியூ யார்க் 22, 23
நிருவாகப் பதிலாளி, 303, 304
நிலவுடமை ஒருங்கிணைப்பு,384
நிலைப்பாடு, 380
நிலவரி, 61, 64, 70, 73, 74, 92, 100, 110, 178, 185, 191, 221, 282,284, 348 363
நிலவரியின் நிலைப்பாடு, 75
நிலவருவாய், 54, 57, 64, 66, 69, 71, 74, 76, 88, 92, 93, 119, 378
பஞ்சாப் நிலவருவாய்ச் சட்டம், 64

நீ

நீமியர் சர் ஆட்டோ, 337, 338, 364, 365
நீமியர் தீர்ப்பு, 320, 339

நு

நுகர்வு, 26, 78,177, 228, 289, 314
தலைக்கான நுகர்வு, 312, 386, 387
நுகர்வுப் பொருள்கள், 259, 268
நுகர்வோர், 15, 17, 35, 40, 42, 44, 76, 286, 306, 311

நெ

நெருக்கடி (வாணிப), 29, 101, 165
நெருக்கடி (நிதி), 48, 55, 62, 68, 79, 97, 107, 115, 167, 260

நே

நேர்முக வரி, 56, 94, 100, 110, 113

ப

பங்குமாற்று நிலையம், 123
பங்கு முதலீட்டுக் கம்பெனிகள், 10, 244
பஞ்சம், 101
பஞ்சத்தடுப்பு, நிவாரணம், 54, 85, 86
படிமுறை, 82, 340
பதிலி, 285
பணச்சுருக்கக் கொள்கை, 146
பணமலிவுக் கொள்கை, 337
பணச்சுருக்கம், பணவாட்டம், 153, 328, 329
பந்தய வரி, 114
பருத்தி ஆயத் தீர்வை, 63, 106, 108, 228
பருத்தி ஆலைகளில் கூலிகளும் வேலை நேரமும் பற்றிய அறிக்கை, 211
பருத்தி—இந்தியப் பருத்தித் தொழிற் காப்புச் சட்டம், 309
இந்தியப் பருத்தி விசாரணைக் குழு, 309
பருத்தி ஆலைத் தொழிலாளர் விசாரணைக் குழு, 385
பருத்தி—மத்தியப் பருத்திக் குழு, 31, 46, 286
பர்மா, 3, 13, 18, 21, 25, 40, 96, 266, 277
பர்மாப் பிரிவினை, 17, 91, 239, 246, 265, 266, 267, 277, 282, 302, 316, 339, 366
பலகை முறை, 82, 340
பன்னாட்டுச் சர்க்கரை ஒப்பந்தம், 291
பன்னாட்டுத் தொழிலாளர் அமைப்பு,
பன்னாட்டுப் பண்ட ஒப்பந்தம், 280
பன்னாட்டு வாணிபம், 160, 260, 333, 386, 387

பா

பாங்கு தொழில் முறை, 55, 244, 322
பாங்கியல் விசாரணைக் குழு, 235, 325
பால்டன், 22

பி

பிண்டிலே ஷிர்ராஸ், 171, 172, 176, 200, 213, 214, 216
பிரான்சு, 18, 166, 214
பிரஸ்ஸல்ஸ், 27
பிரஸ்ஸல்ஸ் சர்க்கரை ஒப்பந்தம், 27
பிரெயின், 234, 236, 237, 238
பிரௌடன் அம்மையார், 177
பிள்ளை, பி. பி., 5
பின்னிறக்கம், 340

பு

புருஷோத்தம தாஸ் தக்கூர் தாஸ், 153, 154
புலனுகும் இறக்குமதி, 7
புறச்சிக்கனம், 303

பெ

பெர்லின், 214
பெறுமான வீதத் தீர்வைகள், 271, 306, 309, 310

பே

பேசில் பிளாக்கட், 105, 109, 149, 150, 152, 154, 157
பேடன் பவல், 72, 73
பேபிங்டன் ஸ்மித் ஆணைக் குழு, 115

பேரளவுத் தொழில்கள், 14, 51, 163, 164, 165, 216, 220, 221, 226, 229, 241, 254, 255, 256, 293, 298, 322, 351

பொ

பொது நிதியியல், 244, 246
பொது வசதி நிறுவனங்கள், 300, 303, 323
பொருளாதாரக் கொள்கை, 164, 218, 222, 290
பொருளாதார மீட்சி, 335
பொருளாதார வளர்ச்சி, 40, 55, 57, 124, 162, 163, 166, 182, 218, 219, 220, 223, 222, 244, 245, 256, 259, 386
பொருளாதார விசாரணைக் குழு, 235
பொறியியல் தொழில், 39
பொன்திட்டம் 24, 125, 127, 128, 140, 149, 150, 152, 154, 156, 158, 160, 196, 261, 328
பொன் பரிவர்த்தனைத் திட்டம், 115, 131, 134, 137, 159, 196

போ

போகப்பொருள்கள், 56
போர் இழப்பீடுகள், 13

பௌ

ஃபௌலர் குழு, 127, 133

ம

மகாத்மா காந்தி, 165
மக்கள் தொகை, 18, 162, 169, 170, 174, 178, 179, 185, 189, 191, 218, 220, 221, 237, 238, 281, 312
மக்கள் தொகைக் கணக்கெடுப்பு, 100, 173
மக்கள் தொகைப் பெருக்கம், 17, 190, 243, 249, 269, 282, 344, 345, 388
மதுவிலக்குக் கொள்கை, 376
மத்திய சணல் குழு, 286
மத்திய பாங்கு விசாரணைக் குழு, 283
மத்திய மாகாணப் பருத்தி ஆலைத் தொழிலாளர் விசாரணைக் குழு, 285
மத்திய வருவாய்த் துறைக் கழகம், 79
மந்தம், 12, 13, 29, 39, 41, 57, 83, 95, 105, 113, 154, 167, 168, 183, 201, 211, 244, 247, 248, 253, 254, 255, 256, 259, 260, 261, 265, 272, 276, 278, 280, 281, 283, 294, 298, 304, 312, 316, 318, 355, 385
பொருளாதார மந்தம், 1, 91, 94, 245, 266, 267, 268, 269, 285, 293, 295, 297, 299, 311, 315, 336, 386
வாணிப மந்தம், 104
விவசாய மந்தம், 336
மலேயா, 19, 273, 349
மறு ஏற்றுமதி, 11, 24, 29
மறைமுக வரி, 56, 71, 100, 114

மா

மாகாண இனங்கள், 63
மாகாணக் கடன் நிதி, 67
மாகாண சுயாட்சி, 64, 91, 244, 246, 283, 337, 338, 357, 358, 366, 381, 385, 389
மாகாண நிதி நிர்ணயங்கள், 62
மாரிஷியஸ், 5
மாற்றிக் கொடுக்கப் பெற்ற இனங்கள், 63, 64, 66, 67
மான்செஸ்டர், 23
மால்தஸ், தாமஸ், 225

மில்னர், 46

மு

முதல் ஆக்கம், 343
முதன்மை முறை, 198
முத்திரை வரி, 59, 66, 378
முறையன், எஸ். கே., 187, 194

மெ

மெய்வருமானம், 358
மெர்க்கண்டலிசக் கொள்கை, 2

மே

மேயோ பிரபு, 60, 81
மேல்வரி, 31, 32, 73, 269, 275, 288, 289, 306, 308, 332, 333, 335
மேற்கிந்தியத் தீவுகள் (பிரிட்டிஷ்), 273

மை

மைய பாங்கு, 119

ரா

ராவ், வி. கே. ஆர். வி. (பேராசிரியர்), 342, 343

ரி

ரிசர்வு பாங்கு, 115, 121, 149, 150, 154, 155, 156, 157, 159, 160, 228, 246, 323, 324, 326, 327, 338, 369
ரிசர்வு பாங்கு சட்டம், 156, 157, 159, 360
ரிசர்வு பாங்கு மசோதா, 323, 364

ரீ

ரீடிங் பிரபு, 105

ரு

ருஷ்யா, 4, 5, 18

ரெ

ரெஜினல்டு கூப்லாண்டு, 385

ரொ

ரோனல்டு ஷே, 214, 238

லி

லிஸ்டு, பிரடெரிக், 50

லீ

லீஸ் மோடி உடன்படிக்கை, 306

லு

லுப்டன், 174

லூ

லூயிஸ்; ஆர்தர், 254, 387, 388

வ

வக்கீல், சி. என்., 59, 60, 187, 194, 376, 381, 393
வங்காளச் சணல் விசாரணைக் குழு, 286
வட்டமேசை மாநாடு, 247, 323
வரவு செலவுத் திட்டம், 58, 65, 66, 68, 78, 79, 85, 90, 99, 100, 102, 104, 105, 107, 108, 109, 111, 141, 154, 168, 269, 306, 320, 323, 333, 334, 338, 340, 360, 381
குடும்ப வரவுசெலவுத் திட்டம், 175, 176, 212, 355
இரயில்வே வரவு செலவுத் திட்டம், 321
வரிச்சுமை, வரிப்பளு, 63, 71, 75, 162, 178, 179, 185, 380
நிலவரிச் சுமை, 92, 221
உப்பு வரிச் சுமை, 92
சுங்கவரிச் சுமை, 93
வரிவிதிப்பு, இந்திய வரிவிதிப்பு விசாரணைக் குழு, 1924-25., 73, 75, 79, 82, 93, 94, 235

வரி தாங்கும் வல்லமை, 106, 112, 385
வருமான வரி, 67, 76, 81, 82, 89, 90, 94, 96, 103, 310, 329, 339, 380
வருமான வரித்திருத்தச் சட்டம் 340
வருமான வரி, (விவசாய), 113
வருவாய்த் தீர்வை, 1, 19, 38, 39, 52, 269, 270, 274, 280, 286, 302, 305, 313
வரையற்ற சட்டச் செலாவணி, 151

வர்த்தகக் கழகம், 40, 46
வழியுரிமைத் தீர்வை, 75

வா

வாங்குந் திறன், 13, 94, 172, 209, 264
வாணிப ஆணையாளர் (இந்திய), 44, 45, 209
வாணிப ஆணையாளர் அலுவலகம், 44
வாணிப ஒப்பந்தம், 21, 52, 53, 267, 271, 277, 360
இந்திய ஜப்பானிய வாணிப ஒப்பந்தம், 307
இந்திய பர்மிய வாணிப ஒப்பந்தம், 369, 370
இருமுக வாணிப ஒப்பந்தம், 277, 280
வாணிபக் கைக்கோள், 1, 23, 25, 28, 47, 48, 50, 269, 275, 281

வாணிபக் கொடுப்பல்நிலை, 12, 24, 101, 146, 147, 265, 266, 370
சாதக வாணிபக் கொடுப்பல் நிலை, 7, 140, 143, 144, 265
பாதக வாணிபக் கொடுப்பல் நிலை, 132, 133, 137, 144, 147
வாணிபச் சகடம், 202, 245, 246, 247, 254, 259, 265 276, 312
வாணிப மாற்று வீதம், 264, 265
வாணிப மீட்சி, 335, 338
வாழ்க்கைத் தரம், 18, 74, 163, 185, 187, 189, 204, 205, 219, 224, 230, 234 269, 388
வாழ்க்கைச் செலவு, 162, 163, 193, 205, 206, 210, 212, 213, 214

வி

விலைகள், 162, 163, 182, 183, 186, 195
வில்லியம் கிளேர் வீஸ், 308
விவசாய வளர்ச்சி, 64, 272
விவசாய விசாரணை ஆணைக் கழகம், 233, 282, 283
விற்பனை வரி, 378, 380

வீ

வீக்கம், 251, 253, 254, 260, 387.
பணவீக்கம், 141, 187, 254
பண்டங்கள் வீக்கம், 248
பொருளாதார வீக்கம், 10, 91, 94, 104, 245, 265

வெ

வெட்ஜ்வுட் குழு, 319, 320, 321
வெல்லச் சர்க்கரை, 291
வெளிச்சந்தை நடவடிக்கை, 336
வெளிநாட்டுக் கடன், 260
வெளிநாட்டு மூலதனம், 244, 256
வெளிநாட்டு வாணிபம், 1, 2, 4, 6, 8, 163, 260, 282
வெள்ளித் திட்டம், 196

வே

வேலைக்குறைவு, 259, 291, 301
வேலையின்மை, 259, 386

ஜ

ஜப்பான், 7, 14, 18, 20, 21, 22, 52, 53, 146, 176, 238, 297, 305, 306, 311
ஜமீன்தாரி முறை, 69, 72

ஜா

ஜாக், ஜெ. சி. 173, 179
ஜார்ஜ் ஷூஸ்டர், 108, 333, 335
ஜாவா, 20, 267, 286, 349

ஜெ

ஜெர்மனி, 5, 7, 18, 20, 21, 22, 169
ஜெனிவா ஒப்பந்தம், 77

ஜே

ஜேவான்ஸ், எச். எஸ், 112, 141, 184
ஜேம்ஸ் கிரிக், 334, 335, 341, 375

ஹ

ஹங்கேரி, 18

ஹா

ஹாங்காங், 8, 18
ஹாமில்டன் பிரபு, 136
ஹாம்பர்க், 46
ஹார்டி, ஜீ. எஸ்., 305
ஹார்டின்ச் பிரபு, 32, 41

ஹி

ஹில்டன் யங் அறிக்கை, 154
ஹில்டன் யங் ஆணைக் குழு, 115, 149, 158

ஹெ

ஹெர்ஷல் குழு, 126

ஸ்

ஸ்லேடர் (டாக்டர்), 70
ஸ்டெர்லிங் திட்டம், 325
ஸ்டெர்லிங் பரிவர்த்தனைத் திட்டம், 149, 150, 151, 152, 158, 159, 327

ஷா

ஷாவும் கம்பட்டாவும், 171, 173

பிழைதிருத்தம்

பக்க எண்	வரி	பிழை	திருத்தம்
26	6	நிகர்வை	நுகர்வை
29	10	ஏகாதிபத்தியச் சலுகை முறையினை வளர்க்கும்	ஏகாதிபத்தியச் சலுகை முறையினை வளர்க்கும் என்பதுமாகும்.
31	7	போகப்பொருள்கள், ஏறக்குறைய எல்லாப் பண்டங்களிலும்	போகப் பொருள்களும் நீங்கலான மற்ற எல்லாப் பண்டங்களிலும்
31	36	இவைகளின்மேல் வரியும்	இவைகளின்மேல் மேல்வரியும்
39	16	மக்ஷியம்	மக்ஷீஷியம்
47	3	பொருளாராய்ச்சி	பொருளாதார ஆராய்ச்சி
62	28	விதிக்கவும்	விதிக்கும்
80	9	மிகக் குறைந்த குடிகளிடத்திருந்து,	மிகக் குறைந்த நுகர்விலிருந்து,
87	35	அமர்த்தப்பட வில்லை.	சுமத்தப்பட வில்லை.
91	39	100 எண்களில்	100 எண்களர்க
111	2	மாகாணச் சொத்துகள்	மாகாணச் செலவுகள்
111	13	முன்னேற்றத் தியாகம்	முன்னேற்றத்தைத் தியாகம்
111	22	ஏது அரசாங்கத்தின்	அரசாங்கத்தின்
130	13	முழுவதற்	முழுவதற்கும்
132	29	இந்தச் சபையைத்	இத் திட்டத்தைத்
134	26	அமெரிக்காவில்	அமெரிக்காவிலும்
141	15	உலக ஆண்டு வெள்ளி	உலக வெள்ளி
172	25	இழந்த	நிகழ்ந்த
222	12	விளைவில்	விளைவால்
230	38	உயரும்	உயருமா
253	3	பின்னர்,	பிந்திய
300	40	விதங்களை	விவாதங்களை
301	3	'தற்காப்பின்'கீழ்	'தொழிற்காப்பின்' கீழ்
303	7	பொது வரி நிறுவனங்களையும்	பொது வசதி நிறுவனங்களையும்
350	17	உடல், நிலம்	உடல் நலம்
359	22	வேன் போர்க்கு வரத்து;	வான் போக்கு வரத்து
365	4	வ. வே. எ. மா	வ. மே. எ. மா.

தமிழ் வெளியீட்டுக் கழகம்

சென்னை-9

இதுவரை வெளியிட்டுள்ள நூல்கள்

பொருளாதாரம்

			ரூ. பை.
*1.	பொருளாதாரம்-II	சி. வேலாயுதம் ...	9—00
2.	புதுமைப் பொருளாதாரக் கூறுகள் ...	டாக்டர் திருமதி ஆர். தாமரஜாட்சி	12—00
3.	பொருளாதாரம் ஓர் அறிமுகம்-I ...	தி. சி. மோகன் ...	12—00
4.	பொருளாதாரம் ஓர் அறிமுகம்-II ...	எம். ஏ. அபூர்வசாமி பி. வி. ஸ்ரீநிவாசன் ...	10—75
5.	பொருளாதாரக் கோட்பாடு வளர்ந்த வரலாறு ...	க. முத்தையன் ...	7—00
*6.	பணவியலும் பாங்கியலும்-II ...	சி. வேலாயுதம் ...	11—50
7.	நவீன பாங்கு இயல்	க. வெற்றிவேல் ...	7—50
8.	இந்தியச் செலாவணியும் பாங்கு முறையும் ...	பி. வி. ஸ்ரீநிவாசன் ...	5—50
*9.	அரசாங்க நிதி இயல்	அர. சேஷாசலம் ...	4—75
10.	இந்தியப் பொருளியல்-I	எம். பாலசுப்பிரமணியன் ...	10—00
11.	இந்தியப் பொருளியல்-II	எம். லூர்துநாதன் ...	4—25
12.	நமது பொருளாதாரப் பிரச்சினை-I ...	சி. சுந்தரராஜன் ...	10—75
13.	நமது பொருளாதாரப் பிரச்சினை-II ...	எஸ். குழந்தைநாதன் ...	10—50
14.	இங்கிலாந்தின் பொருளாதார வரலாறு-I ...	கீ. சீ. இராமசாமி ...	6—00
15.	இங்கிலாந்தின் பொருளாதார வரலாறு-II ...	கீ. சீ. இராமசாமி ...	6—00
16.	அமெரிக்காவின் நவீன பொருளாதார வளர்ச்சி ...	தி. சி. மோகன் ...	5—00
17.	அமெரிக்கப் பொருளாதார வரலாறு-I ...	மு. க. சுப்பிரமணியம் ...	11—00

					ரூ. பை.
18.	அரசாங்க நிதியியலின் பொருளாதாரம்-I	...	மா. குமார்சாமி	...	10—00
19.	இந்தியாவின் பொருளாதார வளர்ச்சி-I	...	தே. வேலப்பன்	...	10—00
20.	பணம் சிறு விளக்கம் ...	...	கோ. இராதாகிருஷ்ணன்	...	10—00
*21.	வணிக இயலின் தத்துவங்கள்	...	கு. ஆளுடைய பிள்ளை	...	9—50
22.	பத்தொன்பதாம் நூற்றுண்டில் கிரேட் பிரிட்டனில் தொழில் வாணிபப் புரட்சி	...	சூ. ரா. கருப்பண்ணன்	...	11—00

வரலாறு

*23.	பிரிட்டன் வரலாறு-I ...	...	கி. ர. அனுமந்தன்	...	10—00
*24.	பிரிட்டன் வரலாறு-II ...	...	கி. ர. அனுமந்தன்	...	9—75
*25.	ஐரோப்பிய வரலாறு-I ...	...	டி. வி. சொக்கப்பா	...	4—50
26.	ஐரோப்பா-கடந்த ஐந்து நூற்றுண்டு காலச் சரித்திரம்	...	வை. விருத்தகிரீசன்	...	15—00
27.	இங்கிலாந்து வரலாறு-I ...	...	இரா. அண்ணாமலை	...	13—00
28.	இங்கிலாந்து வரலாறு-II ...	...	பா. மாணிக்கவேலு	...	13—00
29.	இங்கிலாந்தின் வரலாறு-I ...	...	க. த. திருநாவுக்கரசு	...	15—00
30.	இந்தியாவின் சிறப்பு வரலாறு-I	...	தி. வெ. குப்புசாமி	...	7—50

அரசியல்

*31.	இந்திய அரசியலமைப்பு ...	...	வீ. கண்ணய்யர்	...	4—75
32.	அரசியலுக்கு ஓர் அறிமுகம்	...	டி. செல்லப்பா	...	8—50
33.	தற்கால அரசியல் அமைப்புகள்	...	மோ. வள்ளுவன் கிளாரன்சு	...	8—50
34.	பன்னாட்டு அரசியல்-I ...	...	திருமதி நூர் ஜஹான் பாவா	...	16—00
35.	பொதுத்துறை ஆட்சி இயல்-I	...	வீ. கண்ணையா	...	9—00
36.	பொதுத்துறை ஆட்சி இயல்-II	...	அ. ஜெகதீசன்	...	7—25

உளவியல்			
37. குழந்தை உளவியல்-I	கி. ர. அப்புள்ளாச்சாரி	...	8—00
38. குழந்தை உளவியல்-II	கி. ர. அப்புள்ளாச்சாரி	...	7—00
39. உட்கவர் மனம்	கி. ந. வைத்தீஸ்வரன்	...	7—0
40. இளையோர் உளவியல்-I	தி. இரா. அரங்கராசன்	...	12—00
41. இளையோர் உளவியல்-II	தி. இரா. அரங்கராசன்	...	9—00
42. சமூக உளவியல்	என். வேதமணி மானுவேல்	...	9—25
43. பிறழ்நிலை உளவியல்	அ. பெசன்ட் கிரீப்பர்ராஜ்	...	11—00
44. பித்தரின் உள்ளம்	அ. பெசன்ட் கிரீப்பர்ராஜ்	...	3—00
தத்துவம்			
45. இந்து சமயத் தத்துவம்	ஞா. ராஜாபகதூர்	...	5—50
அறவியல்			
46. அறவியல்—ஓர் அறிமுகம்	கோ. மோ. காந்தி	...	8—50
அளவையியல்			
47. அளவை இயல்—தொடக்க நூல்	கி. ர. அப்புள்ளாச்சாரி	...	2—50
மானிடவியல்			
*48. மானிடவியல்	ம. சு. கோபாலகிருஷ்ணன்	...	4—75
49. பண்பாட்டுக் கோலங்கள்	கி. பூ. சுப்பிரமணியன்	...	5—50
சமூகவியல்			
50. சமூகவியலின் அடிப்படைக் கோட்பாடுகள்	ஜெ. நாராயணன்	...	10—00
புவியியல்			
* 51. ஆசியா-I	கொ. சேஷ. நரசிம்மன்	...	9—50
* 52. ஆசியா-II	கொ. சேஷ. நரசிம்மன்	...	8—75
* 53. ஐரோப்பாக் கண்டத்தின் புவியியல்	ஏ. எஸ். நாராயணன்	...	8—50

					ரூ.	பை.
*54.	வட அமெரிக்கா	...	...	குமாரி இரா. அலமேலு	...	8—25
*55.	தென்கண்டங்கள்—ஆஸ்திரேலியா	...	...	திருமதி எச். நியூமன்	...	4—00
*56.	புவிப்புறவியல்–II	...	...	நா. அனந்தபத்மநாபன்	...	6—00
*57.	செய்முறைப் புவியியல்	...	...	சு. ஜெயச்சந்திரன்	...	9—00
*58.	மக்கட் பரப்பியல்	...	...	வி. எஸ். அனந்தபத்மநாபன்	...	6—25
*59.	சமுத்திரவியல்	...	...	கோ. இராமசுவாமி	...	6—50
60.	காலநிலை இயல்—I	...	...	கொ. சேஷ. நரசிம்மன்	...	10—00
61.	வளியியலுக்கு ஓர் அறிமுகம்	...	...	கோ. இராமசாமி	...	11—00
*62.	புவி அமைப்பு இயல்	...	...	சி. விசுவநாதன்	...	4—75
புள்ளியியல்						
*63.	புள்ளியியல்—அறிமுகம்	...	...	சு. வைத்தியநாதன்	...	10—00
64.	புள்ளியியல் முறைகள்–I	...	...	கோ. சண்முகசுந்தரம்	...	10—00
65.	நம்மைச் சுற்றியுள்ள பேரண்டம்		...	தி. வி. லட்சுமிநரசிம்மன்	...	6—50
விலங்கியல்						
*66.	விலங்கியல்	...	...	பெ. மா. அண்ணாமலை இரா. முருகேசன்	...	12—00
பௌதிகவியல்						
67.	ஒளி நூல்	...	...	ச. சம்பத்து	...	10—00
பொது நூல்கள்						
68.	மகாத்மா காந்தி	...	...	சரஸ்வதி தங்கையன்	...	3—25
69.	இந்தியாவில் குடியானவர் வாழ்க்கை		...	எஸ். இலட்சுமி	...	3—50
70.	விவசாயப் புரட்சி	...	...	வி. கார்த்திகேயன்	...	8—00
71.	சேமக் கை–நூல்	...	...	ஆ. சுப்பிரமணியன்	...	2—50
72.	நீரிழிவு–க்ஷயரோகம்		...	ஜி. வேங்கடசாமி, ஏ. கதிரேசன்	...	2—50

* மூலநூல் (Original Book)